# Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*2nd to 4th, 6th, 8th and 9th April* 1970.

*Volume XXXI (Nos. 1 to 6.)*

TABLE OF CONTENTS.

*Thursday, 2nd April* 1970.


| | *Pages* |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | **1-27** |
| 2. Adjournment Motion— | |
| Strike by workers and hunger-strike by Workers' Union Secretary in Kanya Spinning Mill, Kanyakumari ... ... ... | 27-31 |
| 3. Announcements— | |
| (*a*) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1970 ... ... ... ... ... | 31 |
| (*b*) Nomination to Business Advisory Committee ... ... ... ... | 31-32 |
| (c) Nomination to Committee on Subordinate Legislation ... ... ... ... | 32 |
| (*d*) Nomination to Rules Committee ... ... | 32-33 |
| 4. Voting on Demands for Grants for 1970-71—*cont.* | |
| Demand No. XIX—Co-operation ... ... | 33-105 |
| 5. Papers laid on the Table ... ... ... | 105-106 |


*Friday, 3rd April* 1970.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... | 165-189 |
| 2. Announcements— | |
| (*a*) Nomination to Committee on Government Assurances ... ... ... ... | 189-190 |
| (*b*) The Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1970 ... ... ... ... | 190 |
| (c) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1970 ... ... ... | 276 |

*Friday, 3rd April* 1970—cont.


| | Pages |
|---|---|
| 3. Government Bills— | |
| (a) The Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1970 ... ... ... ... | 191 |
| (b) Tne Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1970 ... ... ... ... | 275-276 |
| 4. Voting on Demands for Grants for 1970-71—*cont.* | |
| (a) Demand No. 12—Police ... ... | 190-191 192-275 |
| (b) Demand No. 10—Administration of Justice ... ... ... ... ... | 276 |
| (c) Demand No. 11—Jails ... ... ... | 276 |
| 5. Point of Order— | |
| Restriction to allow more than one Member from the same party to move cut motions | 191-192 |
| 6. Papers laid on the Table ... ... ... | 277 |


*Saturday, 4th April* 1970.


| | |
|---|---|
| 1. Point of Order— | |
| Delay in the commencement of Assembly meeting ... ... ... ... | 303-327 |
| 2. Questions and Answers ... ... ... | 303-327 |
| 3. Adjournment Motion— | |
| Fast by Cane-growers of Madurai district in front of Madurai Collectorate ... ... | 327-328 |
| 4. Statement by Chief Minister— | |
| Reduction in Agricultural power tariff ... | 328-329 |
| 5. Personal Explanation— | |
| By Thiru K. Ramamoorthy regarding his Membership in Tindivanam Land Mortgage Bank ... ... ... ... | 329 |
| 6. Call Attention— | |
| (a) Refusal of permission to students who were admitted late in the Medical Colleges to appear for the University Examinations ... ... ... ... ... | 329-331 |
| (b) Failure of monsoon in Alankulam Constituency and relief measures ... ... | 331 |




*Saturday, 4th April* 1970—cont.


| | Pages |
|---|---|
| 7. Government Bills— | |
| (a) The Tamil Nadu Land Reforms (Fixation of Celing on Land) Amendment Bill, 1970 ... | 331-332 |
| (b) The Tamil Nadu Entertainment Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1970 ... ... ... ... ... | 332 |
| (c) The Tamil Nadu Entertainment Tax Bill, 1970 ... ... ... ... ... ... | 332-333 |
| (d) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1970 ... ... ... ... ... | 333-391 |
| 8. Announcements— | |
| (a) The Tamil Nadu Entertainment Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1970 ... ... ... ... ... | 332 |
| (b) The Tamil Nadu Additional Sales Tax Bill, 1970 ... ... ... ... ... | 332 |
| (c) Expunction of certain portions from the Official Reports ... ... ... ... | 391 |
| 9. Papers laid on the Table ... ... ... | 392 |


*Monday, 6th April* 1970.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 389-409 |
| 2. Privilege Matters— | |
| (a) Alleged remarks about the Tamil Nadu Legislative Assembly Members by Thiru S. S. Mariswamy, M. P. in the Rajya Sabha ... ... ... ... ... ... | 401-404 |
| (b) Prior consultation with Planning Commission and Union Ministry on the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on land) Bill, 1970, before its introduction in the House and failure to maintain the secretary about the Bill ... ... ...... | 414-417 |
| (c) Remarks made by Thiru T. Martin about the invalid votes in the Rajya Sabha election ... ... ... ... ... | 417-418 |
| (d) Publiction of expunged portions of Assembly Proceedings in Nava Sakthi ... | 418-420 |

Monday, 6th April 1970—cont.


| | Pages |
|---|---|
| 3. Adjournment Motions— | |
| (a) Deatn and nijury to workers employed in the Sholayar Dam area in Coimbatore district ... ... ... | 420 |
| (b) Death of Corporation worker and swooning of two workers while engaged in sewage cleaning in Triplicane ... ... | 420 |
| 4. Government Motions— | |
| (a) Suspension of Rule 41 (3) ... ... | 420 |
| (b) Change in the order of business ... ... | 429-430 |
| (c) Fixation of maximum amount of loan that Electricity Board may have ... ... | 435-437 |
| 5. Call Attention— | |
| (a) Failure of monsoon in Madurai, Ramanathapuram and Tirunelveli districts and relief measures ... ... ... | 421-423 |
| (b) Destruction of fishermen's houses in Colachel by fire and their consequent plight ... ... ... ... | 423-424 |
| (c) Hardships to agriculturists in Kanyakumari and Tirunelveli districts due to the collection of four years' taxes together ... | 424-426 |
| (d) Damages to the parts of bottling plant of Madhavaram Milk Project, non-availability of spare parts and the consequent distribution under unhygienic conditions ... | 427 |
| (e) Alternative jobs to those working in Parambikulam-Aliyar Project on its comple tion. | 428-429 |
| 6. Government Resolutions— | |
| (a) Enhancement of tax for mofussil route buses ... ... ... ... ... | 430-431 |
| (b) Collection of additional tax from goods vehicles carrying more than permitted weight ... ... ... ... ... | 431-434 |
| 7. Point of Order— | |
| Passing of a Resolution without giving opportunity to speak before voting ... | 435 |




Monday, 6th April 1970—cont.


| | Pages. |
|---|---|
| 8. Government Bills— | |
| (a) The Tamil Nadu Industrial Establishment (National and Festival Holidays) (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 6 of 1970) ... | 438-451 |
| (b) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No 7 of 1970) ... ... ... | 451-457 |
| (c) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No 8 of 1970) ... ... ... ... | 458-466 |
| (d) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 10 of 1970) ... | 466-483 |
| 9. Papers Laid on the Table ... ... ... | 483 |


Wednesday, 8th April 1970.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 489-510 |
| 2. Privilege Matters— | |
| (a) Publication in the daily 'Nathigam' ... | 511 |
| (b) Ramarks made by Thiru T. Martin about the invalid votes in the Rajya Sabha election ... ... ... ... | 511 |
| (c) Alleged in correct information given by the Industries Minister (Thiru S. Madhavan) ... ... ... ... ... | 511 |
| (b) Publication of expunged portions of the Assembly Proceedings in Nava Sakthi. | 511-512 |
| (e) Allegation by Thiru N. S. V. Chithan against the Industries Minister about acquisition of lands ... ... ... | 512-518<br>519-528<br>529-532 |
| (f) Allegation made by Thiru R. Ramachandra Dorai against the Minister for Local Administration ... ... ... | 532-545 |
| 3. Points of Order— | |
| (a) Speaker's right to hold enquiry on an allegation made by a member and *ex-parte* judgment by the Chair ... ... | 519 |
| (b) Speaker's right to hold enquiry on an allegation made by a Member against a Minister ... ... ... | 528-529 |
| (c) Validity of the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 | 567-574 |

*Wednesday, 8th April* 1970—cont.


Pages.

4. Statement by Chief Minister—

Admission of non-Hindus inside the temples 545-546

5. Point of Information—

Distribution of Mao's photos in Vepery area ... 546

6. Personal Explanation—

By Thiru K. Vinayakam about a correction in his statement of Assets and Liabilities ... 546

7. Government Bills—

(*a*) The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 15 of 1970) ... 548-552

(*b*) The Tamil Nadu Additional Sales Tax Bill, 1970 (L.A. Bill No. 16 of 1970) ... 552-562

(c) The Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1970 (L.A. Bill No 12 of 1970). 562-563

(*d*) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1970 (L.A. Bill No 14 of 1970) ... ... ... 563-566

(e) The Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970) ... ... ... ... 574-637

8. Announcement—

The Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No 11 of 1970) ... ... ... ... ... 567

9. Papers Laid on the Table ... ... ... 637-638


*Thursday, 9th April* 1970.


1. Government Motions—

(*a*) Suspension of Rule 22 ... ... ... 651

(*b*) Suspension of Rule 23 (1) ... ... 651

(c) Constitution of a Joint Committee to examine the exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 ... ... 711-713




*Thursday, 9th April 1970*—cont.


*Pages*

2. Point of Order—

Delay in the commencement of Assembly meeting ... ... ... ... ... 651

3. Privilege Matter—

Publication by 'Nathigam' daily commenting on the ruling of the Chair ... ... ... 652

4. Government Bills—

The Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No 11 of 1970) ... ... ... ... 653-711

5. Announcement—

Statistics of business transacted in the Assembly from 25th February to 8tn April 1970 714-715

6 Papers Laid on the Table ... ... ... 715-716

*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers Laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| **A.M./Ad. Motion** | .. | Adjournment Motion. |
| **Ann.** | .. | Announcement. |
| **B.O.H.** | .. | Business of the House. |
| **C. A.** | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| **C. A. St.** | .. | Calling Attention Statement |
| **Consid.** | . | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate; |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | .. | Demands for Supplementary Grants. |
| G. A. | .. | Governor's Address. |
| G. D. | .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | .. | Half-hour Discussion. |
| Int. | .. | Introduction stage of a bill. |
| L. A. | .. | Legislative Assembly. |
| L. C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| P. M. | .. | Privilege Motion. |
| R/Res. | .. | Resolution. |
| St. | .. | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

2. மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் . தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர் : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை அரிசன நல அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா.

5. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுது பொருள்-அச்சுத்துறை, அரசாங்க அச்சகம்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு வணிக வரித் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் ( Waqfs ), போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். கூட்டுறவு, வேளாண்மை, மறுநிதி உதவி, துறைமுகங்கள்

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் சின்கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர். எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அநாதை இல்லங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### SARDAR UJJAL SINGH

---

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister): Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collector's Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production, Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

The HON. THIRU V. R. NADUNCHAZHIYAN (Minister for Education and Health): Minister in-charge of Education including Technical Education, Official Lalngnage, Public Health and Medicine and Legislature.

3. The HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance): Minister in-charge of Finance, Planning, Revenue Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees

4. The HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare): Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare Fisheries and Tourism.

5 The HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes): Minister in charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6 The HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes): Minister in-charge of Food, Commercial Taxes Animal Husbandry and Milk.

7. The HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons

8. The HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9 The HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration): Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex servicemen and Prosperity Brigade.

10. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Agricultural Refinance and Ports.

11. The Hon. Thiru K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ந. தருமலிங்கம்.
திரு. ஆர். என். அரங்கநாதன்.
திரு. என். எஸ். வி. சித்தன்
திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வி. டி. அண்ணாமலை.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

### தொகுதிகள் உள்ளிட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பட்டியல்.

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை |
| 2 | ஆதித்தனார், சி. பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ், | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்) | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ. வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர். (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ் | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ. வி. பி. | எழும்பூர், (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், எ. கோ. | வானூர் (செ. வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 23 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர் |
| 24 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 25 | பூபதி, எம். | கோயம்புத்தூர்—கிழக்கு. |
| 26 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 27 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 28 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 29 | சின்னராஜ், சி. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ. வா.) |
| 32 | சித்தன், என். எஸ். வி. | திருமங்கலம் |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ. வ.) |
| 34 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில். |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இரா. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.) |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | பரமத்திவேலூர். |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 74 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 76 | கருத்திருமன், பி. ஜீ. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 77 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 78 | கதிரவன், க. மு. .. .. .. | தென்காசி. |
| 79 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 80 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 81 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 82 | கோதண்டராமன், வி. கே. .. .. | குடியாத்தம். |
| 83 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 84 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ.வ.). |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. .. | பேராவூரணி. |
| 87 | கிருஷ்ணன், அ. .. .. .. | மங்களூர் (செ.வ.) |
| 88 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. .. | சேலம்-2. |
| 89 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 90 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. .. | அவினாசி. |
| 91 | குமாரசாமி, கே. என். .. .. .. | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) .. .. | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. .. .. .. .. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே.பி.எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மணி, வி. எஸ். எஸ். .. .. .. | ஆத்தூர். |
| 00 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 101 | மணியன், பி.எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 102 | மாரிமுத்து, அ. .. .. .. .. | ஆடுதுறை. |
| 103 | மாரிமுத்து, எ.ஆர். .. .. .. | பட்டுக்கோட்டை. |
| 104 | மாரிமுத்து, மூ. .. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 105 | மார்டின், டி. .. .. .. .. | சாத்தான்குளம். |
| 106 | மருதாசலம், என். .. .. .. | பேரூர் (செ.வ.). |
| 107 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) .. | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 108 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 109 | மேத்தா, எம். .. .. .. .. | பெரியகுளம். |
| 110 | மூக்கையா தேவர், பி.கே. .. .. | உசிலம்பட்டி. |
| 111 | முனுசாமி கௌண்டர், பி.எம். .. | கிருஷ்ணகிரி. |
| 112 | முனுசாமி, ரா.ரா. .. .. .. | மேல்மலையனூர். |
| 113 | முனியாண்டி, எ. .. .. .. | நிலக்கோட்டை [செ.வ.]! |
| 114 | முனு. ஆதி .. .. .. .. | திருப்போரூர். |
| 115 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர் | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | [illegible] |
| 116 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம் |
| 117 | முருகேசன், க. .. .. .. .. | பாலக்கோடு |
| 118 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி. |
| 119 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர். |
| 120 | முத்தையா, மு. .. .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ. |
| 121 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ.வ. |
| 122 | முத்துசாமி, பா. கசி. .. .. .. | பெண்ணாகரம். |
| 123 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. .. | நாமக்கல் |
| 124 | முத்துச்செல்வன், பு.செ. .. .. | முசிறி. |
| 125 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 126 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 127 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 128 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 129 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர். |
| 130 | நஞ்சன், சி. .. .. .. .. | கடலூர் (செ.வ.) |
| 131 | நரசிம்மன், எ. சி. .. .. .. | ஆரணி. |
| 132 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர். |
| 133 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி. |
| 134 | நடராஜன், ஜி. .. .. .. .. | காட்பாடி. |
| 135 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 136 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம். |
| 137 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம். |
| 138 | பத்மாவதி, திருமதி, ஜி. .. .. | முகையூர். |
| 139 | பழனி, சி. .. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ.வ.) |
| 141 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி. |
| 142 | பன்னீர்செல்வம், எம். .. .. .. | ஆம்பூர் (செ.வ.) |
| 143 | பரமசிவம் பி. என். .. .. | பொங்களூர். |
| 144 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 145 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். .. .. | தஞ்சாவூர். |
| 146 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம் |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி. ம. மு. .. .. | மேலப்பாளையம். |
| 148 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம். |
| 149 | பெருமாள், எ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி. |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம். |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு. |
| 152 | பொன்னு மலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 153 | இராஜா, வ. எம். .. .. .. .. | பவானி. |
| 154 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர். |
| 155 | ராஜமன்னார், எஸ். எ. .. .. .. | வாணியம்பாடி. |
| 156 | இராசாங்கம், மா. .. .. .. | கம்பம். |
| 157 | [illegible], என். .. .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

## வியாழக்கிழமை, 1970 ஏப்ரல் 2.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 638, 639 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Cardiac Unit in Royapettah Hospital*

* 640 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether an intensive cardiac care unit has been installed in Government Royapettah Hospital, Madras; and

(*b*) what are its potentialities to cure the Cardiac patients?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இந்தப் பிரிவினால் அளிக்கப்படும் சிகிச்சை இருதய நோயாளிகளின் மரண விகிதத்தை குறைவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, since the deaths that occur on account of heart disease have been on the increase in our State recently and whereas some experts have been sent from our Tamil Nadu Health Department to Australia, like Dr. C. S. Senthilnathan who seems to have undergone a better type of training in Cardiology in Australia, will the Government come forward to avail of the knowledge and training acquired by such experts and take steps to install this kind of latest equipment in all the Hospitals in Madras apart from the Royapettah Hospital?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்னை பெரிய மருத்துவ மனையில் மட்டும்தான் இந்தப் பிரிவு இருந்தது. இப்பொழுது 27—10—1969 அன்று இராயப்பேட்டை மருத்துவ மனையில் இந்தப் பிரிவு துவக்கப்பட்டது. ஆக, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று,

இதற்கென டாக்டர்கள் தனியாகப் பயிற்சி பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவிற்கு ஒரு டாக்டர் அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் வந்தவுடனே அவருக்கேற்ற இடம் பார்த்து அதிலே போட வேண்டிய அவசியம் ஏற்படும். இந்தப் பிரிவு வைத்ததற்குப் பிறகு மரண விகிதம் ஓரளவு குறைந்திருக்கிறது என்பதை நாம் நன்றாகக் காண்கிறோம். மாரடைப்பு ஏற்பட்ட நான்கு நாட்களுக்குள்ளாக கார்டியக் ஃபெயில்யூர்ஸ் அண்டு கண்டக்‌ஷன் டிஸ்டர்பன்ஸஸ் ஏற்பட்டால் அவர்களுக்குச் சாவு ஏற்பட்டுவிடும் என்றும், இந்தக் குறைகள் ஏற்படாத அளவு தவிர்ப்பதற்கு இந்தப் பிரிவு பெரிதும் பயன்படும் என்றும் கூறப்படுகிறது. இந்த வகையில் சிகிச்சை அளிப்பதற்கான பிரிவு இல்லாத நேரத்தில் 33 சத விகிதத்தினர் இறந்துவிட்டனர் என்றால், இந்தப் பிரிவு துவக்கப்பட்டதற்குப் பிறகு, இந்தப் பிரிவின் மூலம் சிகிச்சை அளித்ததன் காரணமாக அது 19 சத விகிதமாகக் குறைந்திருக்கிறது. அந்த அளவுக்கு இந்தப் பிரிவு பெரிதும் பயன்பட்டு வருகிறது. வேறு பல மருத்துவ மனைகளில் இந்தப் பிரிவைத் துவக்குவதைப் பொறுத்தவரையில், நிதி வசதியைப் பொறுத்துத்தான் நாம் மேற்கொண்டு வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டிவரும்.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, இருதய நோயைக் குணப்படுத்தத் திறமையான டாக்டர்கள் இருந்தாலும், எலெக்ட்ரோ-கார்டியோகிராம் போன்ற சில முக்கியமான கருவிகள் இருந்தால்தான் இம்மாதிரி இருதய நோய்களைக் குணப்படுத்த முடியும். ஆகவே, இராயப்பேட்டை மருத்துவ மனையில் வைப்பதைப் போன்று மற்ற சர்க்கார் மருத்துவ மனைகளிலும் இம்மாதிரி முக்கியமான கருவிகளை வாங்கி வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் கருவிகளின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்துதான், சென்னை பெரிய மருத்துவ மனையிலும் இராயப்பேட்டை மருத்துவ மனையிலும் இது நிறுவப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மாரடைப்பு நோய் வந்தவுடனேயே, அங்கேயே போய் முன்சிகிச்சை அளித்து, வருகின்ற வழியில் மொபைல் வேனிலேயும் சிகிச்சை அளித்துக்கொண்டே வந்து, மருத்துவ மனையில் சேர்க்க ஏற்பாடு செய்யவேண்டும் என்ற முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே சில இடங்களில் மாரடைப்பு வந்து, தகவல் கொடுத்து, அவர்களை எடுத்துக்கொண்டு மருத்துவ மனைக்குச் செல்வதற்கிடையிலே கூட அவர்கள் இறந்துபடுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்கும் பொருட்டு, மொபைல் வேனிலேயே முதல் சிகிச்சை அளித்துக் கொண்டே வந்து மருத்துவ மனையில் சேர்த்துச் சிகிச்சையைத் தொடருவதற்கு வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. 'டீன்' அவர்கள் அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.



**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, இந்தச் சென்னை அரசு மருத்துவ மனையில், இருதய நோய் ஏற்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு வேண்டிய கருவிகள் இன்னும் பற்றாக்குறையாக இருக்கின்றன. அங்கே திறமையான டாக்டர்கள் இருந்தாலும் அறுவை சிகிச்சை முறையைக் கையாளப் பயப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மேலும் தேவையுள்ள கருவிகளை ஒரே இடத்தில் வாங்கி, நம்முடைய வேலூர் ஸி.எம்.ஜி. ஆஸ்பத்திரியில் இருப்பது போன்று, இதை விரிவுபடுத்தி, அறுவை சிகிச்சை இங்கேயே செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, என்னென்ன கருவிகள் தேவைப்படுகின்றன, என்னென்ன கருவிகள் அங்கே இல்லை என்ற விவரக் குறிப்பு நமக்குத் தெரியாது. அந்தப் பிரிவில் இருக்கும் உயர்ந்த டாக்டர்கள் அதற்கான கருவுருக்களை (ப்ரபோஸல்ஸ்) அரசுக்கு அனுப்பி வைத்ததற்குப் பிறகு தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பிரிவு அரசாங்க மருத்துவ மனைகளில் இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்தப் பிரிவு செம்மையாக அமைக்கப்பட்டுச் செயல்படவேண்டும் என்பதில் அரசு அக்கறை கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know the major causes for this disease in our State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதற்கு டாக்டர்களைத்தான் கேட்கவேண்டும்.

**திரு. எம். சண்முகம்:** நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதிலில் மொபைல் வேன் மூலமாக இந்த மருத்துவ வசதிகள் அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது மாநகராட்சி எல்லைக்குட்பட்டு நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மட்டிலும்தான் அளிக்கப்படுமா? மாநிலம் முழுவதுக்குமே தேவைப்படுமானால் அந்த சிகிச்சை அளிக்கப்படுவதற்கு வகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது முயற்சி கட்டத்திலேதான் இருக்கிறது. அப்படி வந்தால் மாநகராட்சிக்கு மட்டும் தான் பயன்படும் அளவுக்கு அமையும்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, எல்லா வியாதிகளும் நின்று கொல்லும்; இது அன்றே கொல்லும் என்ற நிலையில் இருக்கும்படியான இப்படிப்பட்ட வியாதி அதிகமாகி மரணம் அதிகமாகிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மாவட்ட மருத்துவ மனைகளில்—குறிப்பாக, கோயமுத்தூர், மதுரை, திருச்சி மாவட்டப் பெரிய மருத்துவ மனைகளில்—இருதய நோய்க்கு வேண்டிய வைத்திய வசதி செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டபடி, படிப்படியாக, பெரிய மருத்துவ மனைகளில் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இப்பொழுது சென்னையில்தான் விரிவுபடுத்தும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் இப்படிப்பட்ட வசதிகள் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கான படிப்படியான முயற்சிகளிலே அரசு ஈடுபடும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas it is said that the method adopted in treating this heart disease is almost archaic in nature and whereas latest developments have been taking place in foreign countries and if foreign countries come forward to help us with the modern equipment, will the Government subsidise them through our Doctors who have been sent abroad for special training in this branch of medicine?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே; மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று வெளிநாட்டவர்கள் யாரும் அப்படி உதவி செய்ய முன்வருவார்களானால் அதை ஏற்றுக்கொள்ளுவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கலாம். அதனைப் பார்த்து எந்த எந்த வகையில் மக்களுக்கு நன்மை பயக்கும் முயற்சியில் ஈடுபட முடியுமோ அதிலே நாம் ஈடுபடலாம். அதற்கான அளவுக்கு விண்ணப்பங்களோ மற்றவைகளோ வந்தால் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

### *Death of baby in Children's Hospital, Egmore*

* 641 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the then Chief Minister has ordered an enquiry into the circumstances under which a three day old baby died on December 23rd 1968 at the Children's Hospital, Egmore, Madras?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விசாரணை நடத்தப் பட்டது. மனுக்கள் அரசாங்கத்திற்கோ, முதல் அமைச்சருக்கோ வரவில்லை.

**திரு. கே. விநாயகம் :** குழந்தையைப் பறிகொடுத்தவர் ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர். அவர் முதல் அமைச்சரைக் கண்டு, குழந்தை பிறந்த பிறகு, அதைத் தொட்டிலில் காணாமல் போய் விட்டது என்று புகார் செய்தார்கள். அதன் விளைவாக விசாரணை நடத்தப் பட்டது என்று தெரிகிறது.

Under what circumstances was the child missing? Who exactly was responsible for the missing of the child? Was it restored to the parents?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதல் அமைச்சருக்கு அல்லது அரசாங்கத்திற்குக் குறிப்பு எதுவும் வரவில்லை. 23-12-1968 அன்று மூன்று நாள் குழந்தை இறந்துவிட்டதாக தகவல். 11-1-1969 அன்று 'இந்து' பத்திரிக்கையில் ஒரு செய்திக் குறிப்பு வந்தது. அதைச் செய்தியின் மேல். மருத்துவக் கல்லூரி இயக்குனரை விசாரிக்கும்படி, அதன் கட்டிங்கை அனுப்பி, விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டார். இயக்குனர் விசாரித்தபோது, முதலிலே அந்தக் குழந்தை கே. ஜி. ஹாஸ்பிடலில் மருத்துவ மனையில் பிறந்தது. மூன்றாவது நாளில் குழந்தைக்கு நோய் கண்டு சிகிச்சை அளிக்க, அந்த மருத்துவ மனையில் வசதியில்லாத காரணத்தால், எக்மோர் மெடர்னிடி ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் சென்றால்தான் முடியும் என்ற அளவில் சொல்லி, அந்தக் குழந்தையை அங்கே அனுப்ப முயற்சி எடுத்துக் கொண்டார்கள். தாய் மட்டும் இங்கேயே இருந்தார்; அவரிடமிருந்து பிரித்து குழந்தையைத் தனியாக எடுத்துச் சென்றார்கள். பிறகு தாயின் வேண்டுகோளின்படி, அவர்களும் கூட கே. ஜி. ஹாஸ்பிடலிலிருந்து விடுவிக்கப்பட்டார். அன்று 2-45 மணிக்கு விடுவிக்கப்பட்டு, கே. ஜி. ஹாஸ்பிடலிலிருந்து எழும்பூர் மருத்துவ மனைக்கு 1-30 மணிக்கு உறவினர்களுக்கு அறிவித்து விட்டு, எழும்பூர் மருத்துவ மனையின் 'நியூ பார்ன் பேபிஸ் வார்ட்'-ல் சேர்க்கப்பட்டு, 'ஆக்ஸிஜன்' கொடுக்கப்பட்டது. நர்ஸ் இல்லை என்று சொல்ல முடியாது. யாருமே இல்லை என்பதில்லை. பெரிய டாக்டர்கள் அப்பொழுது அங்கே இல்லை. டாக்டருக்கு மெமோ அனுப்பினார்கள். பெரிய டாக்டரைப் பார்க்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் திரு. ஏகாம்பரம் இருக்கிற இடம் தெரியவில்லை. மறுபடியும் ஒரு மெமோ கொடுத்திருக்கிறார்கள். ஏகாம்பரம் வருவதற்குள்ளாக 3-40 மணிக்கு குழந்தை இறந்து விட்டது. 'நெக்லிஜன்ஸ்' என்கிற சார்பில் எந்தவிதமான சூழ்நிலையும் ஏற்படவில்லை. குழந்தைக்கு ஏற்பட்ட சிக்கின் தன்மை தீவிரமாக இருந்ததால் இறந்துவிட்டது. இது பெற்றோர்களுக்கு டாக்டர்களால் அறிவிக்கப்பட்டது.

**திரு. கே. விநாயகம் :** அரசாங்கத்தை குறை கூறுவது என்பது என்னுடைய எண்ணம் இல்லை. அந்தக் குழந்தைக்கு தகுந்த நேரத்தில் சிகிச்சை கொடுக்காமல், மூன்று நாள் வரையில் தகுந்த பிறகு அப்படி இருந்ததன் விளைவாக இந்தச் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. கடைசி நேரம் வரையில் எந்த விதமான சிகிச்சையும் கொடுக்காததன் விளைவாகத்தான் இந்தக் குழந்தை இறந்தது என்ற புகார் செய்யப்பட்டதாகப் பத்திரிகையில் வந்ததே. உண்மை என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூன்று நாள் அல்ல; கே. ஜி. ஹாஸ்பிடலிலிருந்து எழும்பூர் ஹாஸ்பிடலுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மூன்றாவது நாள் சிக்கின் 'சீரியஸ்னஸ்' காரணமாக, அந்த ஆஸ்பத்திரியில் வசதிகள் இல்லை என்பதைக்

கண்டு, எழும்பூருக்கு அனுப்பியிருக்கிறார்கள். உடனே உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஸிஜன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு பெரிய டாக்டர்கள் இல்லை என்றாலும், சிறிய டாக்டர்களும், நர்ஸுகளும் இருந்திருக்கிறார்கள். பெரிய டாக்டருக்கு செய்தி அனுப்பி, அவர் வருவதற்கு அரை மணி முன்தான் காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. அதற்குள் 3-40 மணிக்கு குழந்தை இறந்திருக்கிறது. சீக்கின் தன்மை அப்படிப்பட்டதாக இருந்திருக்கிறது. குழந்தை மூன்று நாட்கள் சீக்கின் தன்மையைத் தாங்க முடியாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சியே அல்லாது, நெக்லிஜென்ஸ் காரணமாக இறந்து விட்டது என்கிற தன்மைகள் இல்லை. எழும்பூர் மருத்துவ மனை பெரிய மருத்துவ மனை, பல டாக்டர்கள் உலாவிக்கொண்டு இருக்கும் இடம். ஆகவே நெக்லிஜென்ஸ் எதுவும் இல்லை. சீக்கின் தீவிரத்தின் காரணமாக இந்த நிகழ்ச்சி ஏற்பட்டு விட்டது.

### எட்டாம் வகுப்பில் பொதுத் தேர்வு.

* 642 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டாம் வகுப்பில் அரசாங்கப் பொதுத் தேர்வு நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களின் தரம் குறைவாக இருக்கிறது. நகர்ப்புறங்களில் அவர்களுக்கு போதிய வசதிகள் கிடையாது. பள்ளிகளின் தரத்தை உயர்த்த, 8-வது வகுப்பில் ஒரு பரீட்சை வைக்க புனராலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எட்டாவது இறுதியில் மாநிலம் முழுவதும் பரீட்சை வைப்பதில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. சிறியவர்களை பொதுத் தேர்வு வைப்பதன் மூலம் கடினத்திற்கு உள்ளாக்கி, பலரை நிறுத்தி, சிலரை மேலே அனுப்புவது என்பது பொருந்தி வராது, இறுதி வகுப்பில்தான் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுகிறதே. ஆகவே, அதுவே போதும் என்கிற ஒரு கருத்தும் இருக்கிறது, கல்வி வல்லுநர்களிடையில். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல், 8-வது வகுப்பில் ஒரு பொதுத் தேர்வு இருந்தால், அதன் மூலமாக மறுபடியும் ஒரு பரீட்சை வைத்து எடுத்துக் கொள்ளும் இடர்ப்பாடு இருக்காது என்றும், அதோடு 8-வது வகுப்பில் ஒரு பொதுத் தேர்வ என்றால் ஒரேவிதமான கல்வித் தரம் ஏற்படும், அலட்சியப் போக்கில் இல்லாமல், கடினமாகச் சொல்லிக் கொடுப்பார்கள், சொல்லிக் கொடுக்க ஊக்கம் ஏற்படும் என்கிற கருத்தும் இருக்கிறது. சிறிய வயதில் இப்படிப் பொதுத்



தேர்வு வைத்து, நடுக்கத்தையும், பயத்தையும் ஏற்படுத்தி வெறுப்பு உணர்ச்சி ஏற்படுத்துவானேன், பல பரீட்சைகளை எழுதாமலே இருக்க வேண்டும், கடைசி பரீட்சை, ஆண்டுப் பரீட்சை கூட எழுத வேண்டாம் என்கிற நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இது நடுக்கத்தின் காரணமாக வருகிறது என்ற கருத்தும் இருக்கிறது. மற்றொன்று, பொதுத் தேர்வு வைக்க வேண்டுமானால், 4, 4½ லட்சம் பேர்களுக்கு வைக்க வேண்டும். இப்பொழுது 2 லட்சம் மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை வைக்கவே, அதிகமான பல இடங்கள், சென்டர்கள் வேண்டியிருக்கிறது, கண்காணிப்புக்கு ஏராளமான செலவுகள் ஏற்படுகிறது. இதிலும் அப்படித்தான் ஆகும். அப்படி மற்றொரு கருத்து. ஆகவே, மாநிலம் முழுவதும், பொதுத் தேர்வு வைத்து பேப்பர்கள் தயாரிப்பதில் 'காமன் க்வெஸ்சின்' பேப்பர்களை மட்டும் தயாரித்து, மாவட்ட அளவில் தரலாம். அதன் மூலம் இடர்பாடுகளைக் குறைக்க முடியும், அந்த வகையில் பயன் படுத்தலாம் என்கிற கருத்தும் இருக்கிறது. எதுவும் திட்டவட்டமாக முடிவு எடுக்க வில்லை. ஆராய்ச்சியில் தான் இருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, உயர் துவக்கப் பள்ளி மாணவர்களை உயர்நிலைப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப் புதிதாகத் தேர்வு வைத்துத்தான் சேர்த்துக் கொள்கிறார்கள். அதில் தவறிவிட்டால், ஒரு ஆண்டு கல்வியில் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, உயர்நிலைப் பள்ளியில், உயர் துவக்கப் பள்ளியில் படித்து சேர்த்துக் கொள்ளும்போது, தேர்வு இல்லாமலே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவு போடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கப் பள்ளியில் அப்படிப் பட்ட தேர்வு எதுவும் இல்லை. தனியார் பள்ளிகளில் இருக்கிறது. அப்படி வைப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணம் தரம் உள்ளவர்களைத்தான் சேர்த்துக் கொள்கிறோம் என்று இப்படிப் பட்ட பொதுத் தேர்வு வைக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும், தக்க நேரத்தில்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, தேர்வினால் மட்டும் படிப்பில் அறிவாளிகள் என்று ஆகிவிடாது என்கிற எண்ணமும், பரவலாக கல்வியின் தரம் குறைந்திருக்கிறது. அந்தக் குறையைத் தீர்க்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கூறுவதாகத் தெரிகிறதே. அதன்மேல் அமைச்சர் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்க இருக்கிறார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எட்டாவது வகுப்பில் தேர்வு வைப்பது பற்றியது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, இருக்கிற முறைகளிலே மிகவும் குறைந்த குறைபாடுள்ள முறை என்று தான் அது கையாளப்படுகிறது. அதை விடக் குறைபாடு அற்ற முறை கண்டுபிடிக்கப்பட்டால் அதை மேற்கொள்ளலாம். அமெரிக்கா போன்ற மேல்நாடுகளில் 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' என்ற முறையில் ஆண்டு முழுவதும் படிக்கும் திறமையைக் கணக்கிட்டு, ஆண்டு இறுதியிலே இருக்கும் திறமையைக் கணக்கிட்டு, இந்த இரண்டு நிலைகளிலும் கிடைக்கும் மதிப்பெண்களைக் கணக்கெடுத்து, தகுதி, திறமை பார்த்து; மேல் வகுப்புகளுக்கு மாணவர்களை அனுப்புகின்ற நிலை இருக்கின்றது. இங்கு அந்த முறையை கண்டுபிடிக்க வழியில்லை. இந்த முறையை இங்கே கொண்டு வந்தால், ஆசிரியர்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற நிலைமை உருவாகும். நன்றாகப் படிக்கக் கூடிய மாணவனாக இருந்தாலும், வேண்டாதவனாக இருந்தால், ஆசிரியருக்குக் கீழ்படியவில்லை, மரியாதை காட்டவில்லை, தகுதி இல்லை என்று சொல்லி மேல் வகுப்புக்கு அனுப்பாத நிலைமை ஏற்படலாம். ஆசிரியருக்கு வேண்டிய மாணவர்களை மேல்வகுப்புக்கு அனுப்ப முடியும். ஆகவே, இப்படிப்பட்ட சங்கடங்கள் எழலாம். ஆகவே, இருப்பதிலே இப்பொழுதுள்ள முறையே குறைந்த குறைபாடுள்ள முறை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. நமது கல்வி வல்லுநர்கள் ஆலோசித்து ஒரு சிறந்த முறையை உருவாக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அதைக் கையாளலாம்.

**திரு. பி. துரைராஜ்** : தலைவர் அவர்களே, மாநில அளவில் இப்பேர்ப்பட்ட பொதுப்பரிட்சையை ஏற்படுத்தாவிட்டாலும், மாவட்ட அளவிலாவது இந்தத் தேர்வை ஏற்படுத்தி, அங்குள்ள ஆசிரியர்களைக் கொண்டே பரிட்சைத் தாள்களைத் திருத்த தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முற்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே அதைப்பற்றித்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அப்படிப்பட்டவை யோசனையில் இருந்து வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, தனியார் பாடசாலைகளிலே நல்ல தகுதி, திறமைக்காக வேண்டி, இப்படி தேர்வு வைத்து தேர்ந்தெடுப்பதாகச் சொல்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் துறை பாடசாலைகளுக்கு மட்டும் தகுதி, திறமை இருக்கிறதா? பொதுத் துறை பாடசாலைகளுக்கு அப்படிப்பட்ட தகுதி, திறமை இல்லையா? தனியார் துறையினர் சொல்வதை நாம் நம்ப வேண்டுமா? ஆகவே, பொதுத் துறைப் பாடசாலைகளில் எப்படி தேர்ந்தெடுக்கிறார்களோ அதுபோலவே தனியார் பாடசாலைகளிலும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, 'இப்படிப்பட்ட முறையில்தான் மாணவர்களைச் சேர்க்க வேண்டும்' என்று நாம் தனியார் துறை பாடசாலைகளை வற்புறுத்தமுடியாது.



இதைப் பல்கலைக் கழகம் தான் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும். சில தனியார் பள்ளிகளில் பரிட்சை இல்லாமலே சேர்த்துக்கொள்கிறார்கள். சில பள்ளிகளில் மட்டும்தான் பரிட்சை எழுத வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களைக் கேட்டால் திறமையான மாணவர்களைத்தான் நாங்கள் சேர்த்துக்கொள்வோம், தரமான மாணவர்களை உருவாக்க வேண்டுமென்றால் இப்படி தேர்வு வைத்து எடுத்தால்தான் மாணவர்களின் தகுதி, திறமையை அதிகரிக்க முடியும் என்று சொல்கிறார்கள். சில தனியார் பள்ளிகளில் பரீட்சை இல்லாமல் சேர்க்கிறார்கள். சிபாரிசின்பேரிலும் சேர்த்துக்கொள்கிறார்கள். எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரசாங்கப் பள்ளிகளில் நாம் பரீட்சை இல்லாமலே சேர்த்துக்கொள்கிறோம். இதனால் ஏழை எளியவர்கள் எல்லோரும் கல்வி கற்க வழி ஏற்படும் என்ற கருத்தில்தான் இப்படிச் செய்திருக்கிறோம். சென்னை போன்ற நகரங்களில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணமாகத்தான் மாநகராட்சி மூலமாக சில உயர்நிலைப்பள்ளிகளைத் துவக்கியிருக்கிறோம். இதனால் ஏழை எளிய மாணவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதுதான் அரசினுடைய கருத்து. தனியார் பள்ளிகளில் சிலவற்றில்தான் தேர்வு முறை இருக்கிறது. ஒரு மாணவன் எட்டாவது வகுப்பு படித்தான் என்றால், பரீட்சை எழுதிவிட்டு சேரட்டுமே, இப்படிச் செய்யாவிட்டால் திறமையற்றவர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டி வருமே, தரம் குறைந்துவிடுமே என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை, சட்டப்படி நாம் தடுத்து நிறுத்த முடியாது. ஆகவேதான் ஆங்காங்கே ஏழை எளிய மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடக் கூடாதே என்பதற்காக அரசினர் பள்ளிகளைத் துவக்கியிருக்கிறோம்.

### திருவையாற்றில் உள்ள தமிழ்க்கல்லூரி விடுதி.

* 643 வினா.—**திரு. வை சுவாமிநாதன்** : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாற்றில் உள்ள தமிழ்க்கல்லூரி உணவு விடுதியை மூடிவிட அரசு உத்தேசித்துள்ளதின் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : உணவு விடுதியை மூடிவிட உத்தேசமில்லை.

**திரு. வை. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, அந்த உணவு விடுதியை மீண்டும் திறக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அங்கு ஒரு கிளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக உண்ணாவிரதம் போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டதன் காரணமாக கல்லூரியின்

விடுதி மூடப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டு கல்லூரி திறக்கப்படும்போது, விடுதியும் திறக்கப்பட்டு நடைமுறைக்கு வரும். தற்காலிகமாகத்தான் மூடப்பட்டிருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே, அந்தக் கல்லூரியின் முதல்வரை, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சஸ்பென்ட் செய்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அதன் விவரங்களை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் கல்லூரி முதல்வர் மீது பல குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் தான் நிர்வாகம் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் டி. ஆர். ஓ.வை அனுப்பி விசாரணை செய்தார்கள். மாணவர்கள் கல்லூரி முதல்வரை நீக்க வேண்டுமென்று, கிளர்ச்சி, உண்ணாவிரதம் போன்றவைகளை நடத்தினார்கள். இதன் காரணமாக முதல்வரை விடுமுறையில் போகச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார். மறுபடியும் மாணவர்கள் முதல்வரை நீக்கினாலொழிய கிளர்ச்சி நிற்காது, முதல்வரை நீக்க வேண்டும் என்று சொன்னார்கள். மீண்டும் டி. ஆர். ஓ. அங்கு போய் விசாரித்து, கல்லூரி முதல்வர்மீது இரண்டு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று அறிவித்தார். அதாவது ஒன்று முதல்வர் பெண்களிடத்தில் சரியாக நடந்து கொள்ளவில்லை. இரண்டாவதாக, கேள்வித்தாள்களில் அவர் தவறு இழைத்திருக்கிறார் என்று சொல்லப்பட்டு அதற்காக அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். அதன்மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பிறகு மாணவர்கள் எல்லாம் சேர்ந்து, பரீட்சை இல்லாமலே அடுத்த ஆண்டு மேல் வகுப்புக்கு அனுப்ப வேண்டுமென்று கூறி, வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆகவே, கல்லூரி மூடப்பட்டு, கல்லூரி திறந்த பிறகு பரீட்சை உண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### சென்னை சட்டக் கல்லூரி

*644 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக் கல்லூரியில் மறைந்த மாநில முதல்வர் திரு. அண்ணாதுரை அவர்களின் சிலையைத் திறப்பதற்கு மறுப்புத் தெரிவித்து பெரும்பாலான மாணவர்களிடமிருந்து அரசுக்கு குறிப்பு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மாணவர் சங்கத் தலைவர் இந்தச் சிலை திறப்பது கூடாது என்று பதவியை



ராஜினாமா செய்தாரா ? அரசியல்வாதிகளின் சிலைகளைத் திறந்து வைத்து, அதன்பேரில் பிரச்னைகளை உருவாக்காமல் இருக்க, இனி மேலாவது இந்த அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாணவர்கள் வந்து கேட்டுக் கொண்டார்கள் என்பது இருக்கட்டும் நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களை ஒரு அரசியல் வாதி, அரசியல் தலைவர் என்று யாரும் கருதவில்லை. அவர் பெரும் இலக்கிய வல்லுநர், தமிழ் மொழிக்குப் பாடுபட்டவர் என்றெல்லாம் கருதப் படுகிறார். 1969-ம் ஆண்டு பிப்ரவரி 10-ம் தேதியன்று மாணவர்கள் சங்கம் ஒன்று தீர்மானம் நிறைவேற்றி அண்ணா அவர்களின் சிலை வைக்க வேண்டுமென்று முடிவெடுத்து, அனுமதி கோரி அரசுக்கு அனுப்பியது. அந்த கோரிக்கை 1969-ம் ஆண்டு பிப்ரவரி 11-ம் தேதியன்று அரசாங்கத்திற்கு அனுமதிக்காக வந்தது. 1969-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதியன்று அரசு அனுமதி கொடுத்தது. 1969-ம் ஆண்டு மார்ச் 1-ம் தேதியன்று மாணவர்கள் சங்கத்தின் தலைவர் கல்லூரி முதல்வருக்கு ஒரு விண்ணப்பம் தந்திருக்கிறார். அதில் அவர் மட்டுமே கையெழுத்திட்டிருக்கிறார். சிலை திறக்க வேண்டுமென்று பெரும்பாலான மாணவர்கள் முடிவு எடுத்து, சங்கமே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியது. சங்கமே ஏற்கனவே முடிவெடுத்து, அரசு அனுமதியளிக்கப்பட்ட காரணத்தால் முறைப்படி சிலை திறக்கப்பட்டது. மாணவர்கள் சங்கத்தின் தலைவர் ராஜினாமா செய்தாரா, இல்லையா என்ற விவரக் குறிப்பு இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கம்பரிலிருந்து காமராஜர் வரைக்கும் சிலை வைக்கின்ற நேரத்தில், தமிழக வானில் ஒளிமயமாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு சிலை வைப்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லையென்பதும், ஆட்சேபிக்கும் வகையில் அரசியல் லாப நோக்கத்திற்காக சிலர் தூண்டினார்கள் என்றும் சொல்லப்படுகிறதே. அது உண்மையா ?

(விடை இல்லை.)

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, without meaning any disrespect to the departed soul of the late Chief Minister, Thiru Annadurai, may I request the Hon. Minister to state whether this Government will put a ceiling on erecting statues in educational institutions at least in future?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தரவு போட வேண்டிய அவசியம் இல்லை. சிலை திறப்பது, படம் திறப்பது போன்றவை எல்லாம் உலகத்திலே எல்லா பாகங்களிலும் நடைபெற்று வரும் நிகழ்ச்சியாகும். மேலே

நாடுகளிலேகூட கல்லூரிகளில் கல்வித் துறைக்காகப் பாடுபட்ட பெரியார்கள், பெரிய வல்லுநர்கள், மக்களால் போற்றப் பட்டவர்கள் போன்றோர்களுடைய சிலைகள் வைக்கப்பட்டிருக் கின்றன, படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கேயும்கூட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை நினைவில் கொள்ள பல வகையான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். அந்த மாண வர்கள் சில யோசனைகள் கொடுத்திருக்கிறார்கள். அவர் கொடுத் திருப்பதாவது,

'At this juncture I would like to bring to your kind notice the humble admiration of the greatness of the late Chief Minister by the student community at large. But the principle that we uphold is that whatever the tribute we give to the late Chief Minister should be in the student way. In keeping with this principle, I propose on behalf of the signatories that the most fitting and rewarding tribute to the late Chief Minister would be to create scholarships in his name which would enable the memory of the late Chief Minister to be green in the minds of the students'.

ஒருவரைப் போற்றுவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. சிலை வைப்பது ஒருவகை. அவருடைய பெயரால் ஸ்காலர்ஷிப் வழங்குவது ஒருவகை, அவருடைய படத்தைத் திறந்து வைப்பது ஒருவகை. ஆகவே, இந்த விஷயத்தில் பெரும்பான்மையான மாணவர்களின் தீர்மானத்தையொட்டித்தான் நிறைவேற்றப்பட் டிருக்கிறது. அவரும் தங்களுடைய கருத்தைச் சொல்லி யிருக்கிறார். நாட்டுவிடுதலைக்காகப் பாடுபட்ட அண்ணல் காந்தி யடிகளுக்கும் சிலைகள் வைக்கப்படுகின்றன; படங்கள் திறக்கப் படுகின்றன. ஆகவே, இதற்கு ஒரு தடை விதிக்க முடியாது. வேறுவகையில் இப்படிச் சிலைகள் வைப்பதானால், படங்களை திறப் பதனால் பாதகம் ஏற்படுகிறது என்பது சுட்டிக்காட்டப்படுமானால் அப்பொழுது அதுபற்றி யோசிப்பது அவசியம்.

**திரு. நா. வீராசாமி** தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில்
மு.ப. 9.30. பெரும்பாலான மாணவர்கள் அறிஞர் அண்ணாவின் சிலை வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பி, அனுமதியும்பெற்று சிலை வைக்க முன்வந்தபோது சில அரசியல் கட்சித்தலைவர்கள் ஒருசில மாணவர்களைத் தூண்டிவிட்டு ஆட்சேபணை தெரிவித்தார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெஞ்செழியன் :** அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசுக்கு வரவில்லை.

**திரு. கே. விநாயகம் :** பொதுவாக பெரும் தலைவர்களுக்குச் சிலை வைப்பது தவறு என்பதற்காக இந்தக் கேள்வி போடவில்லை. மொத்தம் நூற்றுக்கு நூறு பேர் சொன்னால்தான் எதையும் செய்வது என்று அண்ணா அவர்களே கடைப் பிடித்து வந்தார் களே, ஒருசிலர்தான் எதிர்த்தார்கள் என்றாலும் அதைக் கைவிட் டிருந்தால் ராஜதந்திரம் ஆக இருக்காதா ? கைவிடாமல்





தொடர்ந்து செய்வோம் என்று பொறுப்பில் உள்ளவர்களே சென்று திறந்து வைத்தார்கள் என்பது உண்மைதானா? அது நியாயம்தானா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒருவர் எதிர்த் தாலும் கைவிடவேண்டும் என்பதில்லை. பெரும்பான்மையோர் சிறுபான்மையோருடைய கருத்துக்கும் அன்பு இருந்தால் இணங்கி வருவார்கள். அன்பு வடிவத்தில் இல்லாமல் வீம்பு வடிவத்தில் இருந்தால் அதையே நிலைநாட்ட வேண்டியது அவசியமாகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அரசியல் மரியாதை, கண்ணியம் ஆகியவை இன்றி பேசுகின்ற நண்பர்களுடைய வாய் சீல் வைக்கப்படுமா ?

THIRU K. VINAYAKAM : I move that the question may be deleted or expunged from the proceedings. It should not find a place. At that rate, I can also criticise.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'ஐ மூவ்' என்று சொல்வதற்கே தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் சொல்லவேண்டும்.

THIRU K. VINAYAKAM : With your permission only I move it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முறைகேடைப்பற்றிச் சொல் லும்போது என் அனுமதியைப்பெற்றே with your permission only என்று முறையோடு சொல்ல வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** எழுந்திருப்பதே with your permission தான்.

### நக்ஸல்பாரி-இடதுசாரி கம்யூனிஸ்டுகள் மோதல்

* 638 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பணங்குடி கிராமத்தில் நக்ஸல்பாரி கம்யூனிஸ்ட்டுகளுக்கும், இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்குமிடையே 1969 மே திங்கள், மூன்றாவது வாரத்தில் மோதல் ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) (தீவிரப்) பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் (மார்க் சிஸ்ட்) பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்களைத் தீவிர பொது வுடைமையாளர்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு தூண்டினார்.

றிது, இரண்டு பிரிவினரிடையேயும் கசப்புணர்ச்சியை உருவாக்கியது. இதன் விளைவாக, 14—5—69-ல் பொதுவுடைமைக் கட்சியினர் சிலர், மார்க்சிஸ்ட் பொதுவுடமைக் கட்சியினருடன் தகராறை வைத்துக்கொண்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படிப்பட்ட தகராறு செய்தவர்கள் மீது வழக்கு தொடரப்படுமா ? இந்த இரண்டு கோஷ்டிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் யாராவது இறந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யாரும் இதில் இறந்துவிடவில்லை. உத்தண்டி என்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக்கு சிறு காயம் ஏற்பட்டிருக்கிறது. நன்னிலம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கும் பதியப்பட்டு பட்டியலில் இருந்த 8 பேர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டது. குற்றவாளிகள் அந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

திரு. என். வரதராஜன் : நக்சல்பாரிகளைப் பற்றித் தொடர்ந்து பல கேள்விகள் வருகின்றன. இது அவர்களை ஊக்குவிப்பதற்காகவே அனுப்பி வைக்கிறார்களோ என்கிற சந்தேகம் ஏற்படுவதற்கு ஆதாரம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுடைய நடவடிக்கைகளை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ யாரும் ஊக்கப்படுத்தமாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : நக்சல்பாரிகளா ? நக்கல்பாரிகளா ? அந்தச் சொல்லுக்கு என்ன பொருள் ?

(விடை இல்லை.)

திரு. கொ. இ. ஞானசம்பந்தன் : பனங்குடி நக்சல்பாரிகள் இப்போது வலதுசாரி கட்சியில் சேர்ந்துவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த விவரங்களை நான் கவனித்துக் கொண்டிருப்பது இல்லை.

திரு. ஆ. மாரிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவருவதைக் கவனித்து இனி மேலாவது நடைபெறாமல் இருக்க இந்த அரசு அக்கறை காட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அசம்பாவிதம் எந்தத் தரப்பில் இருந்தும் நடக்கக்கூடாது என்பதில் இந்த அரசு அக்கறையாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். பெருமாள் : பெண்ணாடம் பகுதியில் நக்சல்பாரிகள் நடமாட்டம் அதிகம், அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் கூட அதில் இருக்கிறார்கள் என்பது உண்மையா ? அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பகுதியிலேயே இவர்கள் இருப்பதாகக் கூறுவதும் உண்மையா ?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்பகுதியில் வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்ட தகவல் வந்திருக்கிறது. வெடிகுண்டு வெடித்ததில் இறந்துபோனவர்களுடைய உடல் புதைக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மேலும் புலன் விசாரணை தீவிரமாக நடந்து வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி : நக்சல்பாரிகள் பொதுக்கூட்டத்தில் பேசும்போது போலித் துப்பாக்கியை வெடித்துக் காட்டி இதேமாதிரி அரசியல் தலைவர்களைச் சுட்டுத் தள்ளுவோம் என்று பேசுகிறார்களே, அதன்மீது இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட குறிப்பிட்ட தகவல் அரசுக்கு வருமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, some time back the Hon. Chief Minister said that Naxalbari volunteers were going to North India to get trained in Naxalbari activities. The Central Government has denied it. May I request whether any correspondence passed between the Central Government and the State Government in this regard?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் சமீப காலத்தில் நக்சல்பாரிகள் வடமாநிலத்திற்குப் பயிற்சிபெறுவதற்காகப் போயிருக்கிறார்கள் என்கிற எந்தத் தகவலும் தரவில்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : நக்சல்பாரி என்ற சொல் கிராமத்தின் பெயரா ? கட்சியின் பெயரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் முதலில் தோன்றிய இடத்தின் பெயர்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி : தஞ்சை மாவட்டத்தில் போலீஸ் தீவிர நடவடிக்கையின் பொருட்டு இந்த நக்சல்பாரிகளுடைய நடவடிக்கை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்திருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தங்களுக்குத் தெரிந்ததே சர்க்காருக்குத் தெரிந்ததாக அர்த்தம்.

[1970 எப்ரல் 2

## சென்னை உருக்கு உருளை ஆலையில் சோதனை

* 639 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 ஏப்ரல் திங்கள் 19-ம் நாள் அளவில், சென்னை மாநகரில் உள்ள உருக்கு உருளை ஆலையின் வளவுகளில் ஏதேனும் திடீர் சோதனை செய்யப்பட்டதா ?

(இ) மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் எவையேனும் கைப்பற்றப்பட்டனவா ?

(உ) இம்மாநிலத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) கைப்பற்றப்பட்டன.

(உ) இம்மாநிலத்தில், மாநில அரசின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போல் இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசின் சொத்துக்களனைத்திற்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாநில அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் களவாடப்பட்டாலும் அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் களவாடப்பட்டாலும், அக்களவுகள் குறித்து பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு செய்யப்பட்டு, அவற்றின் தகுதிக்கேற்ப முடிவு செய்யப்படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எந்தத் தகவல் மீது எங்கெங்கே சோதனை செய்யப்பட்டன ? எந்த எந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன ? அவற்றின் மதிப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செங்கல்பட்டு காவல் நிலையத்தில் செங்கல்பட்டு ரயில்வே நிலையத்திற்குச் சொந்தமான துண்டு துண்டு தண்டவாளங்கள் களவாடப்பட்டிருப்பதாக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சென்னை எழும்பூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சென்னையைச் சேர்ந்த சாகுல்அமீது என்பவரைப் பிடித்து அவர் சென்னையில் அந்தத் துண்டுத் தண்டவாளங்களை விற்றிருப்பதாகக் கண்டுபிடித்தார்கள். கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த உருக்கு ஆலையைச் சோதனையிட்டு 79 பவுண்டு 59 துண்டு தண்டவாளங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** பொதுவாகச் சில சமூக விரோதிகள் அரசாங்கச் சொத்துக்களைக் களவாடுகிறார்கள். மத்திய அரசாங்கப்



பொருள்களுக்குப் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. மாநில அரசின்
1970 எப்ரல் 2]

சொத்துக்களுக்கும் அதுபோல குறிகளைப் போட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெயர் போடப்பட்டவைகள் மத்திய அரசாங்க சொத்து என்றால் பெயர் போடப்படாதவைகள் மாநிலத்தவை.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, ஸ்டீல் ரோலிங் மில்லினுடைய அதிபர் யார் என்பதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விநாயகர் உருக்கு உருளை ஆலை என்று இருக்கிறது, யார் என்று தெரியவில்லை.
**with your permission,I Want, to put qustion Sir.** இந்த விநாயகர் உருக்குத் தொழிற்சாலைக்கு

**திரு. கே. விநாயகம் :**
கே. விநாயகம், எம்.எல்.ஏ. அதிபர் அல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்பற்றி ஆராய வேண்டும்.

## *Leper prisoners*

* 645 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether separate provision has been made in jails in the State for keeping leper prisoners; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு சிறையிலும் தொழுநோய்க் கைதிகளுக்கென தனித் தொகுதிகள் அல்லது அறைகள் உள்ளன. ஒரு மாதத்திற்குட்பட்ட சிறைத் தண்டனை பெற்ற தொழுநோய்க் கைதிகள், அவர்கள் அனுப்பப்படும் சிறையில் மற்ற கைதிகளினின்று தனித்து வைக்கப் பெறுவர். ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை பெற்ற தொழுநோய்க் கைதிகள் வேலூரிலுள்ள மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டுள்ள தொழுநோயினர்க்கான கட்டிடப் பிரிவில் வைக்கப்படுவர்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, இம்மாதிரி தொழுநோய்க்கு ஆளான கைதிகளைத் தனியாக வைத்து மனிதாபிமானத்தின் பேரில் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1970 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த அரசாங்கம் எப்போதும் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்கிற அரசாங்கம்தான்.

**திரு. எம். எஸ். மணி :** தொழுநோய் உள்ள கைதிகளைச் சிறைச்சாலையில் வைப்பதற்குப் பதிலாக தொழுநோய் பற்றிக்கொண்டவர்களுக்காக உள்ள தனி விடுதியில் வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது சிறைச்சாலையிலே அவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கோயம்புத்தூர் மத்திய சிறையில் குடிநீர்ப் பற்றுக்குறை.

*** 646 வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மத்திய சிறையில் கோடை காலங்களில் குடிநீர் பற்றுக்குறை ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்டு வருவதைச் சமாளிக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோவை மத்திய சிறைக்குத் தேவைப்படும் தண்ணீரை நகராட்சி வழங்கும் தண்ணீர் குழாய் மூலம் பெறுவதோடு அல்லாமல் லாரிகள் மூலமும் பெறப்படுகிறது. மேலும், தண்ணீர் வசதியை அதிகப்படுத்துவதற்காக நான்கு அதிகப்படியான குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டில் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு வருகின்றன. மேலும் தோட்ட வேலைகளுக்குப் பயன்பட்டு வந்த குழாய்க் கிணறு ஒன்றும் கைதிகள் உபயோகத்திற்காக திருப்பப் பட்டிருக்கிறது. இந்த சிறையில் மற்றவிடங்களில் அதிகப்படியான குழாய்க் கிணறுகள் வைப்பதுபற்றியும் தற்போது இருந்து வரும் நகராட்சி தண்ணீர் வழங்கும் தெருக் குழாய்க்கு பதில் பெரிய குழாய் அமைப்பது பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, 12 ஆண்டுகளுக்கு முன்பே கோவை மத்திய சிறையில் பெரிய குழாய் போடப்பட்டுள்ளது. வேண்டிய அளவுக்குத் தண்ணீர் விநியோகம் இல்லை. குறைவாகத்தான் இருக்கிறது என்று அதிகாரிகள் பலமுறைகள் ரிப்போர்ட் செய்திருந்தும் இன்னும் போதுமான அளவுக்குத் தண்ணீர் சப்ளை செய்யவில்லையென்பதை அரசாங்கம் அறியுமா ? வேண்டிய, தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோவைச் சிறைச்சாலையிலே தண்ணீர் பற்றுக்குறை இருப்பது உண்மை. அதைப் போக்குவதற்குத்தான் அந்த முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு இருக்கின்றன.



1970 ஏப்ரல் 2]

### *Vacant space in jails*

*** 647 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether vacant space available in jails are used to grow vegetables;

(*b*) if so, the area so used in the various Central and Sub Jails;

(*c*) the types of vegetables grown. and

(*d*) the nature of their disposal?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 323.18 ஏக்கர்கள்.

(உ) கீரை, வெண்டை, கேரட் ( carort ), முள்ளங்கி, மொச்சை, பப்பாளி, கத்தரி, சீமைத்தக்காளி, "பீட்ரூட்" கிழங்கு, வாழை, பூசணி, "நூல்கோல்", முருங்கை, நாட்டு அவரை, அகத்தி, கொடிப்பசலை, கொத்தவரை முதலிய காய்கறிகள் பயிரிடப் படுகின்றன.

(எ) பயிரிடப்படும் காய்கறிகள் கைதிகளின் உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. உபரியாகவுள்ள காய்கறிகள் சிறை இலாகா அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், மற்ற அரசாங்க இலாகா அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் விற்கப்படுகின்றன. சில சமயங்களில் சிறை இலாகா ஊழியர்களுக்கு சிறை கண்காணிப்பாளரின் அனுமதியின் பேரில் விலை பெருமலும் விநியோகிக்கப்படுகின்றன.

**திரு. பெ. சீனிவாசன் :** சார், மதுரைச் சிறைச்சாலையில் அமைச்சர் அவர்களும் நானும் ஒரு காலத்திலே இருந்தோம். அந்தச் சிறைச்சாலையிலே உள்ள தோட்டத்திற்கு விடப்பட்ட தண்ணீர் அங்கிருக்கின்ற கக்கூஸ்களிலிருந்து வருகின்ற கழிவு நீரை விட்டு அதிலே பயிர்செய்த காய்கறிகளைத் தான் அப்பொழுது உணவாகப் போட்டார்கள். அந்த நிலை மாறி இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிலத்திற்கு உரம் போடுவதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

**Thiru B. VENKATASWAMY :** May I know whether there is any proppsal to have fruit planations like Vineyards, Sapota, etc., in the jails?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காய்கறிகளைப்பற்றித்தான் என்னிடத்திலே விவரம் இருக்கிறது.

[1970 ஏப்ரல் 2

## அன்னசமுத்திரம் கண்மாய்

*648 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கொடைரோட்டில் உள்ள அன்ன சமுத்திரம் கண்மாய் பொதுமக்களுக்கு உரிமையானது என்று ஹைக்கோர்ட்டில் தீர்ப்பாகியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) லேட் ஜெயராஜ் நாடாரும் அவரது குடும்பத்ினரும் அன்னசமுத்திரம் கண்மாய் உள்வாயில் உள்ள சில நிலங்களுக்கு ரயத்துவாரிப் பட்டா கோரி ஐகோர்ட்டில் 1954-ம் ஆண்டு வழக்கு தொடர்ந்துள்ளனர். அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

(இ) வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதால் வேறு நடவடிக்கை எழவில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, அந்த அன்னசமுத்திரம் கண்மாய் அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களுடைய கால்நடைகளுக்கு குடிதண்ணீருக்காக உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. ஆனால், அது குறிப்பிட்ட ஒருவருடைய ஆக்கிரமிப்புக்கு வந்தபிறகு கால்நடைகளுக்கு குடிதண்ணீர் வசதி வேறு இல்லாத காரணத்தினால் இதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தக் கண்மாயில் அங்குள்ள கிராம மக்களுக்கு உதவியாக அவர்களின் கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நீதிமன்றமே அவர்களுக்கு சம்பந்தமில்லாதது என்று தீர்ப்பளித்திருக்கிறது. தற்போது அந்தப் பகுதி நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியின் சிறிய நீர்ப்பாசன ஏரிப்பகுதியாக உள்ளது. புறம்போக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. நடைபாதையாகவும் ஏரிப்படுகையாகவும், பயன்பட்டுவருகிறது. இப்பொழுது ஒன்றும் தகராறு இல்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: அன்னசமுத்திரம் கண்மாய்க் கரை கொடைக்கானல் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே ரோடு ஓரமாக இருக்கின்ற கரை தனக்குச் சொந்தம் என்று எடுத்துக் கொண்டு அதிலே கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டு சுவான்தார் ஆக ஆகிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதைப்பற்றி அரசு ஆலோசனை செய்து ஒரு விசாரணை நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: திண்டுக்கல்-மதுரை சாலையின் இடையே ஏரியின் மேற்குக் கரையில் உள்ள நிலங்களும் கொடைக்கானல் ரெயில்வே நிலையத்திற்கு எதிரில் ஏரிப்படுகையில் உள்ள நிலங்களும் தனியார் பட்டா நிலங்களாகக் கருதப்பட்டுள்ளன. ஆகவே செட்டில்மெண்ட்படி 25.02 ஏக்கர் புறம்போக்கு நிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலைமையிலே அதை எதிர்த்துத் தான் அவர்கள் உயர்நீதி மன்றத்திலே வழக்குப் போட்டார்கள். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: இந்த நிலங்கள் பொதுமக்களுக்குச் சொந்தமானவை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொது மக்களுக்கு இடையூறு கிடையாது என்றும் சொன்னார்கள். அங்கு அதே பஸ் முதலாளி பம்ப்செட் போட்டு கரும்புத் தோட்டமும் வைத்துச் சொந்தமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார் என்பது அரசுக்குத் தெரியுமா? அதைப் பொதுமக்களுக்குச் சொந்தமாக ஆக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அத்தகைய தகவல் இல்லை. நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியாகத்தான் இது பேணிக் காக்கப் பட்டுவருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

## பழனி கோயில் திருப்பணி.

* வினா 649—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி கோயிலில் திருப்பணி செய்ய தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) பழனி கோயிலில் திருப்பணி செய்வதற்குரிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(இ) திரு. என். மகாலிங்கம் தயாரித்த பெருந்திட்டத்தின் படி, செலவு மதிப்பீடு ரூ. 35 லட்சமாகும்.

திரு. வை சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது துவங்கப்படும்? இதற்கு நம்முடைய அரசாங்கம் ஏதாவது பணம் கொடுக்கிறதா அல்லது பழனி தேவஸ்தானத்திலிருந்து பணம் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இன்னும் அப்ரூவ் செய்யப்படவில்லை. அந்தக் கோயில் நிதியிலிருந்து இந்தத் திருப்பணிக்கு வேண்டிய பணத்தைக் கொடுப்ப

தாகச் சொல்லியிருக்கிறார்கள் பொதுமக்களிடமிருந்தும் வசூல் செய்யப்படும். மதிப்பிற்குரிய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் கூட இதற்காக 1 லட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்துள்ளார்கள் இந்தத் திருப்பணி வேலை 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகளுக்கு நடைபெறும் என்று கருதி கோயில் நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தால் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Religious Endowments whether this Government has prepared a list of temples which are in a deteriorating condition and which require repairs? If so, may I know the number of such temples?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இந்த அரசாங்கத்தின் மூலமாகத் திருப்பணிகள் செய்யப்படுவது கிடையாது. பூவர் அன்ட் நீடி டெம்பிள்ஸ் என்று சொல்லக்கூடிய வருமானமில்லாத கோயில்களுக்கு ஏதாவது கொடுக்கலாம் என்று கொடுத்துவரப்படுகிறது. அதற்காக அரசாங்கத்தின் மூலம் 4 அல்லது 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதற்குள்ளாகத்தான் செலவு செய்யப்பட்டு வருகிறது.

## வீட்டு மனைக்கு கோயில் நிலங்கள்.

* **வினா 650 திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில் தரிசு நிலங்களை வீட்டடி மனைகளாக வீடில்லாத ஏழைகளுக்கு விநியோகம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமிருக்கிறதா?

(இ) ஆம் எனில், விபரமென்ன ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை

**திரு. பெ. சீனிவாசன் :** கோயிலுக்குச் சொந்தமான காலி இடங்களை ஏழைகளுக்கு இலவசமாக விடாவிட்டாலும் கோயில் சொத்தில் வீடு கட்டி குறைந்த வாடகைக்கு விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** கோயில்களில் இருந்து வீடுகளை வாடகைக்கு கட்டி விடலாம். ஆனால் கோயில்களில் அதற்கான நிதி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கோயில்கள் ஒரு சிலதான் இருக்கின்றன. வருகின்ற பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக அதற்கான விடுதிகளையும்



கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கோயில்களுக்கு உரிய நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பது அறங்காவலர்களுக்கே தெரியவில்லை, நிர்வாக அதிகாரிகளுக்குக் கூடத் தெரியவில்லை. தமிழ்நாடு முழுவதும் உள்ள கோயில்களுக்கு உரிய சொத்துக்கள், நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை அறிவதற்காக பழைய ரெக்கார்டுகளை எல்லாம் எடுத்து சர்வே செய்து கண்டு பிடிப்பதற்காக தனிஅதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அந்தச் சொத்துக்களை யார் அனுபவிக்கிறார்கள், குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் பார்த்து அதற்குப் பிறகு குத்தகைக்கு விடலாமா, அல்லது மனைக் கட்டுகளாக கிரயத்துக்குக் கொடுக்கலாமா என்பது பற்றி எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளுடைய ரிப்போர்ட் வந்த பிறகு அதுபற்றி முடிவு செய்யப்படும்.

## கோயில் ஊழியர்கள்

* **வினா 651 திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் ஊழியர்களின் பதவி, ஊதியம் ஆகியவற்றை Regularis மறு பரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வை. சுவாமிநாதன்:** இப்போது அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. வைத்திய வசதி போன்ற இதர சலுகைகளும் இல்லை. அவர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட்டால் நிறைய சம்பளம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலேமேல் வேலை செய்பவர்கள் கீழே வேலை செய்பவர்கள் என்று பல பிரிவுகளுக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்க வேண்டும். ஆகவே, அவர்களை அரசாங்க ஊழியர்களாகச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** அந்தக் கோயில் சிப்பந்திகளில் இரண்டுவிதமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். உள்துறை சிப்பந்திகள், உள்துறை அல்லாத சிப்பந்திகள், கோயில் பூசாரிகள் அர்ச்சகர்கள், குருக்கள் போன்றவர்கள் உள்துறை சிப்பந்திகள் குமாஸ்தாக்கள், மானேஜர்கள், டிரைவர்கள், எலக்ட்ரிஷியன்கள், எஞ்சினியர்கள் ஆகியோர் உள்துறை அல்லாத சிப்பந்திகள். உள்துறை சிப்பந்திகள் தவசுக்கு வேலை செய்கிறார்கள். அதாவது

நெல் போன்ற தானியங்களை வாங்கிக்கொண்டு வேலை செய்கிறார்கள். அதோடு சம்பளம் வாங்குகின்றவர்களும் இருக்கிறார்கள். சிலபேர் அங்கே கிடைக்கின்ற நெய் வேத்தியத்தை——சோறு முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அங்கே இருப்பவர்கள் மூன்று ரூபாயிலிருந்து முந்நூறு ரூபாய் வரை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த உள்துறை சிப்பந்திகளை ப்ரொவின்ஷியலைஸ் பண்ணுவது என்பது கஷ்டமான காரியம். அவர்கள் பாரம்பரியத்தில் வேலை பார்க்கிறவர்கள். ஆகவே, கோயில்களை ஏ, பி, சி, டி என்று நான்கு கிரேடுகளாகப் பிரித்து ஒவ்வொரு கிரேடு கோயிலுக்கும் சிப்பந்திகளை மாற்றும் நிலையை ஏற்படுத்தலாம். இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்களை அரசாங்க சிப்பந்திகளாக ஆக்க முடியாது. ஒரு கோயிலில் இருக்கும் மானேஜர், கிளார்க் ஆகியவர்கள் அங்கு இருக்கும் நிர்வாக அதிகாரிகளுக்குக் கூடக் கட்டுப்பட்டு நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். அங்கிருக்கும் டிரஸ்டியை பிடித்துக்கொண்டு நிர்வாக அதிகாரியை மாற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் எந்தவிதமான தவறுக்கும் தயாராக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருப்பதால் கோயில்களை கிரேடு வாரியாகப் பிரித்து சிப்பந்திகளை அவ்வப்போது மாற்றுவது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்:** கொஞ்ச நாட்களுக்கு முன்பு புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் இந்தக் கோரிக்கைகளுக்காக மனுக் கொடுத்தார்களே, அது அரசாங்கத்திற்கு வந்ததா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. புதுக்கோட்டை நிலைமையே தனி. அங்கு கோயில்கள் இருக்கின்றனவே தவிர, பணம் கிடையாது. குருக்கள் கூட வசூல் செய்துதான் பூஜை செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். அங்கு ஆயிரத்தி சொச்சம் சிப்பந்திகள் இருப்பதால் இந்த ரூபாயைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது குறைவாகத்தான் வருகிறது. அவர்கள் அங்கிருக்கும் நிலங்களைத் தங்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**கோயில் நிதியைக் கொண்டு தொடங்கப்பட்ட கல்லூரிகள்.**

* **வினா 652 திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அறநிலைய பாதுகாப்புக்கு உட்பட்ட ஆலய வருமானத்திலிருந்து கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எத்தனை கல்லூரிகள்?





**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம்.

(இ) இந்து சமயநிலை நிதியிலிருந்து ஐந்து கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**திரு. ஆலடி அருணா:** இந்த கோயில்களில் எல்லாம் குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் இவ்வளவு சதவிகிதம் பொதுப் பணிக்காகச் செலவு செய்ய வேண்டுமென்று உத்தரவிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா:** இத்தனை பர்சன்ட் அப்படிச் செலவிட வேண்டுமென்று சொல்லுவதற்குச் சட்டத்தில் இடம் கிடையாது. பொதுப்பணிக்கும் செய்யலாம் என்று சட்டத்தில் இடம் இருக்கிறது. பொதுப்பணிகளுடைய தன்மையைக் கருதியும் அத்தியாவசியத்தைக் கருதியும் இந்தப் பணிகள் நடந்து வருகின்றன.

**திரு. ஈ. எம். நடராசன் :** கோவை மாவட்டம் பன்னாரி மாரி அம்மன் கோயில் வருமானத்தில் இருந்து கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்ததா ? அங்கு கல்லூரி விரைவில் ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** பன்னாரி அம்மன் கோயில் நிதியிலிருந்து கல்லூரி கட்டப் பணம் கொடுக்க வேண்டுமென்று நான் கோவை சென்றிருந்தபோது கேட்டுக் கொண்டார்கள். அந்த கோரிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு வரவில்லை. எங்களைப் பொறுத்தவரை கோயில் நிதியிலிருந்து பணத்தைக் கொடுப்பதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றால் கல்வியமைச்சருக்குக் கோரிக்கை கொடுக்க வேண்டும். அதை பன்னாரி அம்மன் கோயில் இருக்கும் பகுதியிலேயே ஏற்படுத்துவதா அல்லது பவானியில் அதிக நிலங்கள் இருப்பதால், கட்டடங்கள் இருப்பதால் அங்கு ஏற்படுத்துவதா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. கல்வியமைச்சரை முதலில் அணுகிய பிறகு இந்தக் கோயிலுக்கு வந்தால் நல்லது.

**சமயநல்லூர் அனல் மின் நிலையம்.**

* **வினா 653 திரு. கே. போஜன்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சமயநல்லூரிலுள்ள அனல் மின்சார நிலையம் கடந்த ஓராண்டு காலமாக செயல்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) 15—7—1968-லிருந்து சமயநல்லூர் அனல் மின்சார நிலையம் இடைவெளிவிட்டுச்

[1970 ஏப்ரல் 2

சில நாட்களே இயங்கியது. கீழ்க்கண்ட காரணங்களுக்காகச் சமயநல்லூரிலுள்ள அதன் சாதனங்களை விற்றுவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(1) சமயநல்லூரில் வழங்கப்படும் நிலக்கரியின் விலை அதிகமாயுள்ளதாலும், அங்குள்ள 'டர்போ ஆல்டர்னேட்டர்' (turbo alternator) குறைந்த செயல் திறனையே பெற்றுள்ளதாலும் சமயநல்லூர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அனுப்பப்படுகிற ஒவ்வொரு யூனிட் மின்சக்திக்கும் உரிய செலவு 12 காசிற்கு மேல் ஆகின்றது. மின்சக்தி அதனைவிட மிகக் குறைந்த செலவில் கேரளத்தினின்றும் நெய்வேலியினின்றும் கிடைக்கிறது.

(2) சமயநல்லூரிலுள்ள மின்சக்தி நிலையத்தின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறனளவாகிய 14 மெகாவாட் மின் இணைப்பில் நிறுவப்பட்ட மொத்தத் திறனளவில் 1 சதவீதமே ஆகின்றது. எனவே, இந்த மின்நிலையச் சாதனங்களை விற்றுவிடுவதால் மின் இணைப்பின் திறனளவு மிகச் சொற்ப அளவே பாதிக்கப்படும்.

(3) நெய்வேலியிலுள்ள அனல் மின்சார நிலையத்துடனும் கேரள மின் இணைப்புடனும் மதுரை இணைக்கப்பட்டுள்ளதால், சமயநல்லூர் மின் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு பாபநாசம், பெரியாறு மின் உற்பத்தியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, சமயநல்லூரில் இருக்கும் அனல் மின் நிலையத்தை மூடிவிடுவதற்கான காரணங்களைச் சொன்னார்கள். அங்கே விலை மதிக்கக்கூடிய இயந்திரங்கள் இருக்கின்றன. அவற்றை பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசுக்குக் கொண்டு வந்து பயன்படுத்தும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** சமயநல்லூர் மின் உற்பத்தி நிலையம் 14 மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடியது. இப்போது நிலக்கரி விலை அதிகமாக இருப்பதால் நாம் உற்பத்திக்காகச் செய்யக்கூடிய செலவை விட குறைந்த செலவில் கேரளத்திலிருந்தும், நெய்வேலியிலிருந்தும் கிடைப்பதால் இதை மூடிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

மு.ப. 10.00. **திரு. எஸ். இராமச்சந்திரன்:** இந்த சமயநல்லூர் அனல் மின் நிலையம் மூடப்படுவதால் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிற வகையில் விநியோகப்பகுதிகளுக்கு அவர்களை மாற்றிப் போடுவதற்கு மதுரை திட்டம் போன்றவற்றிற்கு மாற்றிப் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** பின்னால் அங்கு ஒரு பெரிய வொர்க்ஷாப் ஆரம்பிக்க செயற்குறிப்பு இருக்கிறது. அதில் வேலை பார்க்கிறவர்களுக்கு, நெடுநாள் வேலை பார்க்கிறவர்களுக்கு வேலை உறுதி அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1970 ஏப்ரல் 2]

**மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்**

*654 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில், 1969 ஜூன் திங்கள், முதல் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** (அ) & (இ) பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்தத் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் மதுரை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளுக்கு இப்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது? எந்தெந்தப் பகுதிகள் விஸ்தரிக்கப்பட இருக்கிறது

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தொழிலாளர்களுக்கு 1956-ம் ஆண்டு முதல் மதுரை, மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. 3–6–1969 முதல் தொழிலாளர் குடும்பங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அவர்களுக்கும் அந்த மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 29,000 தொழிலாளர் குடும்பங்கள் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயன்பட்டு வருகின்றனர். அதில் அரசு மருந்தகங்கள் திருநகர், பொன்னகரம், பழங்காநத்தம், முனிச்சாலை ரோடு, பரவை மணி நகரம், தல்லாகுளம் போன்ற இடங்களில் மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

**(2) ஒற்றி வைப்புத் தீர்மானம்.**

**கன்னியாகுமரி கன்யா ஸ்பின்னிங் மில் தொழிலாளர் வேலை நிறுத்தமும், தொழிற்சங்க செயலாளர் உண்ணாவிரதமும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எ. பாலசுப்பிரமணியம், திரு. சி. கோவிந்தராஜன் ஆகிய மூன்று உறுப்பினர்களும்

* 107-108-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

'The dangerous condition of Thiru M. M. Ali, Secretary of the Kanya Spinning Mill Workers Union in Kanyakumari district on the 5th day of the hunger strike undertaken by him demanding

the management of the Kanyakumari Co-operative Spinning Mill to implement the 4th Stage Wage Scale awarded by the Labour Commissioner.'

என்ற காரியத்தைப் பற்றி விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு இது எப்படி முக்கியத்துவம் உள்ளது என்பதைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் கன்யா ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் கழிந்த சில நாட்களாக நிறுவனத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் ஃபோர்த் ஸ்டேஜ் வேஜ் பற்றி லேபர் கமிஷனர் நடுவர் என்ற முறையில் கொடுத்த தீர்ப்பை அரசாங்கம் அமுல் நடத்தத் தவறியதால் அதை வலியுறுத்துவதற்காக வேலைநிறுத்தம் செய்தார்கள். அதற்கும் பயன் கிடைக்காத காரணத்தினால் தொழிற் சங்கக் காரியதரிசி திரு. எம். எம். அலி உண்ணாவிரதத்தை மேற்கொள்வது என்ற முடிவிற்கு வந்து கலெக்டர் அலுவலகத்தின் முன்பாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்று ஆறாவது தினமாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களது உடல் நிலை மிக மோசமாக, பயப்படக் கூடிய நிலையில் இருப்பதால் அந்தப் பிரதேசத்தில் முக்கியமாக தொழிலாளர்கள் இடையில் இது ஒரு பெரிய அமைதியின்மையை உருவாக்கியிருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னை பற்றி விவாதித்து முடிவு எடுப்பதற்கு இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதில் கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய் மொழி கூட்டுறவு நூற்பு ஆலை நிர்வாகம் சட்டப்படி கட்டுப்படுத்தும் நடுவர் தீர்ப்பை அமுல்படுத்த மறுப்பதால் அங்குள்ள தொழிலாளர் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருவதும், அவர்களின் தலைவர் எம். எம். அலி என்பவர் உண்ணாவிரதம் மேற்கொண்டு 6 தினங்களுக்கு மேலாகி அவர் ஆபத்தான நிலையில் இருப்பதாலும் எழுந்துள்ள அவசரமும், பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த பிரச்னையை விவாதிக்க சபையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுகிறேன் என கொடுத்திருக்கிறேன். சுருக்கமாக சபையை ஒத்திவைக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். இது நம் அரசாங்கம் நடத்தும் ஆலை. அந்த ஆலை நிர்வாகத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கும் ஏற்பட்ட இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் 12/3-ன் கீழ் ஏற்பட்ட ஒரு செட்டில்மென்ட். அந்த செட்டில்



மென்ட்படி லேபர் கமிஷனர் நடுவராக இருந்து தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு சட்டப்படி legally binding on both the parties' அதை மீற யாருக்கும் உரிமை கிடையாது. அந்த நிலையில் அந்தத் தீர்ப்பு என்ன கூறுகிறது என்றால் 15—4—1968-ல் தீர்ப்பு. 1—1—1968 முதல் முதல் சம்பளக் கமிஷன் இரண்டாம் கட்டம் அமுலாகவேண்டுமென்றும், 1—1—1969-ல் மூன்றாவது கட்டமும், 1—1—1970-ல் நான்காவது கட்டமும் அமுலாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம்:** அதைப்பற்றி விளக்கினால்தான் ஒத்தி வைக்கவேண்டியதன் அவசியம் புரியும். நான் சாதாரணமாக அனாவசியமாக நேரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்பது தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

THIRU K. VINAYAKAM: Sir, it is an insult to all of us. நான் அனாவசியமாக நேரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்றால் நாங்கள் எல்லாம் எடுத்துக் கொள்கிறோம் என்றுதான் பொருள். Including the Chief Minister.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன்:** அப்படிக் கொடுக்கவேண்டுமென்றால் புள்ளி ஒன்றுக்கு 26 பைசா கூட கொடுக்கவேண்டும் பஞ்சப்படியில். ஆக 75 ரூபாய் இன்று வாங்குவதை விட அதிகமாகக் கிடைக்க வேண்டும். சட்டப்படி கிடைக்கவேண்டும். அப்படியிருக்க, பேச்சுவார்த்தை நடத்தி பார்த்து கூட்டுறவுமில்லாக இருக்கிறது என்று தொழிலாளர்கள் இணக்கமாக இருக்கவேண்டுமென்று சொல்லி எவ்வளவோ இணக்கமாக தொழிற் சங்கம் இருந்தும் பிடிவாதமாக நடுவர் தீர்ப்பை மீறும் நிலையில் அரசு நிற்கிறது. நஷ்டம் என்ற காரணம் சொல்லப்படுகிறது. ஆனால் 55 லட்சம் ரூபாய் சர்க்கார் கடன் கொடுத்திருக்கிறார்கள். வட்டி எவ்வளவு ஆகுமோ அதைவிட குறைவாகத்தான் தொழிலாளர்கள் கேட்கிறார்கள். 1—1—1970 முதல் 26 காசு பெற உரிமை உண்டு. இருப்பினும் 20 காசுதான் கேட்கிறார்கள். 1—1—71 முதல் 23 காசு கேட்கிறார்கள். 1—1—72 முதல் 26 காசு கொடுத்தால் போதும் என்று தொழிலாளர்கள் இணக்கமாக இருந்தும்கூட பிடிவாதமாக அப்படிக் கொடுக்க முடியாது என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. அரசு நடத்தும் தொழிற்சாலையில் சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடிய ஒரு தீர்ப்பை மீறுவது என்ற நிலை ஏற்படுமானால் அதைவிட பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயம் வேறு இருக்கமுடியாது. இது அவசரமான விஷயம். தொழிலாளர்கள் நல அரசு என்று இருக்கக்கூடிய நேரத்தில் அரசே கட்டுப்படுத்தக்கூடிய ஒரு தீர்ப்பை மீறுவது என்றால் அதைவிட முக்கியத்துவம் உள்ள விஷயம் வேறு இருக்கமுடியாது. அப்படி செய்வது சாதாரணமாக உள்ளவர்கள் சட்டத்தை மீற முழு உரிமை அளிக்கக் கூடிய காரியமாகும். தனிப்பட்ட முதலாளிகளைப் பற்றி கேட்க வேண்டாம். ஏற்கனவே செய்து வருகிறார்கள்.

இது இன்னும் அவர்களுக்கு ஊக்கம் அளித்துவிடும். ஆகவே தொழிலாளர்கள் இணக்கம் காட்டியும்கூட இடம் அளிக்காமல் இருக்கும் போக்கைப் பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பாலசுப்ரமணியம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களும் கொண்டு வந்துள்ள இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை மீது நான் விரிவாக எதுவும் பேச விரும்பவில்லை. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிலுள்ள பல பிரச்சினைகள் பற்றியும், கோரிக்கைகள் என்ன என்ன என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்த அங்குத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிற கிளர்ச்சியின் அடிப்படையில் திரு அலி அவர்கள் கடந்த ஐந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார் என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். இந்த அவசரத் தீர்மானத்தின் வாயிலாக அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு நான் அந்தத் தொழிலாளர் நண்பர்களுக்கு விடுக்கிற வேண்டுகோள், உடனடியாக அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திவிடவேண்டும் என்பதாகும். நிறுத்திவிட்டு அந்த யூனியன் தலைவர்கள் என்னோடு வந்து பேச வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுக்கிறேன். பேசி ஒரு நல்ல முடிவை இரண்டொரு நாட்களில் எடுக்கலாம் என்ற வேண்டுகோளை விடுத்து உடனடியாக அலி அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் அரசு சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். நல்ல ஒரு முடிவை இரண்டொரு நாட்களில் நாம் எடுக்கலாம் என்ற உறுதியையும் நான் தருகிறேன். இந்த அளவில் இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற கருத்தைக் கூறி அமர்கிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** முதல் அமைச்சர் அவர்கள் கூறியது நம்பிக்கை அளிக்க இடமிருப்பதாக இருந்தபோதிலும் 1—1—70-ல் பேச்சு வார்த்தைகள் நடந்து பல மட்டங்களில் கன்ஸீலியேஷன் ப்ரொஸீடிங்ஸ் நடந்து பலன் அளிக்காது போகவே தான் மார்ச் மாதத்தில்தான் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. இது திடீரென்று ஏற்பட்டுவிடவில்லை. இந்த நிலையில் அவர்கள் பக்கத்திலிருந்து 1—1—70-லிருந்து 20 காசுகள் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கை அளிக்கும் வார்த்தையை முதல் அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இரண்டொரு நாட்களில் பேசி முடிவு எடுப்போம் என்றால் அது நம்பிக்கை அளிக்கக் கூடிய வார்த்தைதான். நம்பியவர்களை நிச்சயமாக நட்டாற்றில் இந்த அரசு விடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாக வேலைநிறுத்தம், கதவடைப்பு, உண்ணாவிரதம் ஆகியவை பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கிற நிகழ்ச்சி ஏற்பட்ட



தில்லை. இக்காரணங்களுக்காக ஒத்திவைக்கக் கூடாது என்று சட்டப் பேரவை விதிமுறைகள் பொதுவாக எடுத்துக் கூறியிருப்பதனாலும், முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற உறுதிமொழி விளக்கத்தையொட்டியும், இதைப் பற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவை இல்லை என்று நான் கருதுகிற காரணத்தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** உண்ணாவிரதம், வேலை நிறுத்தத்திற்காக மட்டுமல்ல இந்த ஒற்றிவைப்புப் பிரச்னை, நடுவர் தீர்ப்பை அரசு மீறியது பற்றியும்தான்.

## (3) அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 9/70) சட்ட மேலவையில் 30–3–1970 அன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை என்று சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர்
3. மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர்
4. மாண்புமிகு நிதி அமைச்சர்
5. திரு. ஆ. ப. அழகமுத்து
6. திரு. பி.ஜி. கருத்திருமன்
7. திரு. கே. விநாயகம்
8 திரு. கரு. சீமைச்சாமி
9. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்
10. திரு. கோ. பூவராகன்
11. திரு. பி. கே. மூக்கையா தேவர்
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து

13. திரு. க. ர. நல்லசிவன்
14. திரு. ஆ. கு. சுப்பையா
15. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது
16. திரு. ம. பொ. சிவஞானம்

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

### (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் 1970–71-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. ஜி. ஆர். எட்மண்ட், பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. இரெ. இளம்வழுதி
3. திரு. எல். கணேசன்
4. திரு. செஞ்சி வெ. முனுசாமி
5. திரு. ஈ. எம். நடராசன்
6. திரு. க. ந. சிவபெருமாள்
7. திரு. கே. ஆர். கோவிந்தன்
8. திரு. ஜே. ஜேம்ஸ்
9. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி
10. திரு. எம். பூபதி
11. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்
12. திரு. பி. வேலுசாமி

சட்டப் பேரவையின் 202-வது விதியின் கீழ், திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### (ஈ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றுமோர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1970–71-க்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி, முதலமைச்சர்
2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன், கல்வி, சுகாதார அமைச்சர்.





3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழில் அமைச்சர்
4. திரு. ஜி. ஆர். எட்மண்ட், பேரவைத் துணைத் தலைவர்
5. திரு. பழனிவேல் ராஜன்
6. திரு. வி. ஆலடி அருணா
7. திரு. பெ. சீனிவாசன்
8. திரு. எம். சி. பாலன்
9. திரு. பி. எஸ். மணியன்
10. திரு. என். எஸ். வி. சித்தன்
11. திரு. க. இராமமூர்த்தி
12. திரு. கரு. சீமைச்சாமி
13. திரு. வி. கே. கோதண்டராமன்
14. திரு. அ. சேனாபதி
15. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
16. திரு. ஆ. கு. சுப்பையா

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

### (4) 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

#### கோரிக்கை எண் 19—கூட்டுறவு

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,08,53,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, விலைவாசிகள் ஏற்றத்தினால் அவதிப்படும் மக்களுக்கு, மலிவு விலையில் பண்டங்கள் விற்க, கிராமங்கள் தோறும் கூட்டுறவு பண்டகசாலைகள் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** தலைவரவர்களே, சந்தானம் கமிட்டி அடிப்படையில், கூட்டுறவுச் சட்டத்தை மாற்றித் திருத்திக் கொண்டு வராததால் ஊழல் வளர்ந்து போவதைப் பற்றி விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் Lxxternal Audti) வெளியார் தணிக்கை முறையைப் புகுத்துவது பற்றி விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, விவசாயிகளின் முன் கடன்களைத் தீர்க்க நில வள வங்கிகளில் கடன் வழங்குவதிலுள்ள தடையை நீக்கவேண்டுமென்று விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**Dr. H. V. HANDE :** To discuss the irregularities of misappropriation and mismanagement noticed in the working of Central Co-operative Printing Works in the audit reports 1961 to 1968 prepared by District Co-operative Audit, I move the following cut motion—

" That the allotment of Rs. 4,08,53,500 under Demand 19—Co-operation be reduced by Rs. 100 ".

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, மேட்டூர் மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை குறித்து நடவடிக்கை எடுக்காதது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

***-மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே. 1969-70-ல் கூட்டுறவுத் துறையில் உள்ள முன்னேற்றத்தைக் குறித்து ஆய்வுரை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுரை 23 பக்கங்கள் கொண்டது. அதையெல்லாம் வரி விடாமல் படித்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் கருதி,

@-109-132-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

133-162-ம் பக்கங்களில் கைத்தறித் தொழில் வளர்ச்சி குறித்த ஆய்வுரை அச்சிடப்பட்டுள்ளது.





அவர்களின் கருத்துக் கருவூலங்களை வழங்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பேரவையின் வரலாற்றில் கூட்டுறவுத் துறைக்கு என்று ஒரு நாள் முழுவதும் விவாதத்திற்கு ஒதுக்குவது இதுவே முதல் தடவை. ஆகவே, உறுப்பினர்கள் அதை நன்கு பயன்படுத்திக்கொண்டு, நல்ல கருத்துகளைக் கூறுமாறு கேட்டுக்கொண்டு, இறுதியில் ஏதாவது பதில் சொல்லத் தேவைப்படுமானால் முடிவுரை கூறு வதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் களே, இந்தக் கூட்டுறவு மானியத்தின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கருத்துக்களுக்குப் போவதற்குமுன் இந்தக் கூட்டுறவுத் துறையின் முக்கியத்துவம் கருதியும், இதிலே நடைபெறும் முன்னேற்றங்கள், செயல்கள் இவைகளுக்காகவும் ஒருநாள் தேவை என்று கருதி இதற்காக ஒருநாள் ஒதுக்கியதற்காக முதலிலே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

23 பக்கங்கள் அடங்கிய இந்த அறிக்கையிலே ஒன்றை நான் தேடித் தேடிப் பார்த்தேன். நம்முடைய கூட்டுறவுச் சட்டம் திருத்தப்பட்டபிறகு, திருத்தப்பட்ட சட்டத்திற்குப் பிறகு இன்றையதினம் விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் வாங்கும் கடன்கள், பொதுவாகக் கூட்டுறவுக் கடன்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. அந்தக் கூட்டுறவுக் கடன்களாக யிருந்தாலும், வேறு மாற்றுக் கடன்களாகயிருந்தாலும் முன்பு இருந்த ரெவின்யூக் கடன்களைப் போல வசூலிக்க அதிகாரம் இருக்கிறது கூட்டுறவுத் துறைக்கு. அந்த அதிகாரம் வந்த பிறகு இன்னமும் விவசாயிகளிடமிருந்து வில்லங்க சர்ட்டிபிகேட் தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த சர்ட்டிபிகேட் வாங்குகின்ற அந்த நிலத்தின்மீதோ, அல்லது வீட்டின்மீதோ அல்லது வேறு பொருள்களின்மீதோ முன் கடன்கள் இருந்தால் நாம் கூட்டுறவுத் துறையில் தரும் கடன் களைக் குறைத்துக் கொள்ளலாமா, இதற்கு இது போதுமா, அல்லது அதிகப்படியான கடன் கேட்கிறார்களா என்பதை ஆராயத்தான் இந்த வில்லங்க சர்ட்டிபிகேட் கேட்கிறோம். இது தேவையில்லை, எந்தக் கடன் கொடுத்தாலும் முன் கடனாகக் கூட்டுறவுத் துறை கடன்தான் நிற்கும், நாம் வசூலித்துக்கொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டபிறகு இந்த வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்ற முறையை வைத்திருப்பதால் அதன் விளைவாக கடன் பெறும் விவசாயிகளுக்கும், கூட்டுறவுத் துறையிலே கடன் பெறும் அத்தனை பேர்களுக்கும் சங்கடமும், பண நஷ்டமும், வீண் விரயமும் வரவேண்டிய அவசியம் வருகிறது என்பதைக் கூட்டுறவுத் துறை சிந்திக்க வேண்டும். இந்த நிலைமையை அரசு உணர வேண்டுமென்று விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1970 ஏப்ரல் 2

இந்த நிலவள வங்கிகளைப்பற்றிப் போதுமான அளவிற்கு இந்தச் சபையிலே பேசியிருக்கிறோம். அமைச்சரவர்கள் மிகப் பெருமையாக, 67 நிலவள வங்கிகளை ஆரம்பித்திருக்கும் நிலைமைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரியது, வரவேற்கத்தக்கது. எல்லா பிளாக்குகளிலும், எல்லாப் பஞ்சாயத்து பெருமன்றங்களிலும், ஓராண்டிற்குள்ளாக நிலவள வங்கிகளை அமைத்தே தீருவேன், இல்லாவிட்டால் பதவியை விட்டே போய்விடுவேன் என்று சொன்னவர்கள் 67 நிலவள வங்கிகளை மட்டும் அமைத்துவிட்டு, இதிலே பெருமைப்பட முடியும் என்று சொல்வது, கேலியாக நான் இதைச் சொல்ல விரும்பவில்லையென்றாலும்கூட, சூளுரைகள் முழுமையாக, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறைவேற்ற முடியாதவை என்பதை இந்த நேரத்தில் அறிவுறுத்த விரும்புகிறேன்.

நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில் புரமோட்டர்கள் கிடையாது, டைரக்டர்கள் கிடையாது. டைரக்டர்கள் நியமிக்கப்பட்டாலும் அரசாங்கத்திற்கு நேரடியாகத் தொடர்பு கிடையாது. இதில் நான் அதிகம் போக விரும்பவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நியமிக்கப்பட்ட டைரக்டர்களெல்லாம், தகுதியற்றவர்கள் டைரக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இன்று அரசு அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும், அல்லது அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும், இல்லையென்றால் நம்முடைய நிர்வாகத் திறமை மிகக் குறைந்திருக்கிறது என்று அர்த்தமாகும்.

டீஃபால்ட்டர்ஸ், கூட்டுறவுத் துறையின் கடனைக் கொடுக்க முடியாமல், அதன் விளைவாக கோர்ட்டு நடவடிக்கையெடுத்து, அவர்கள் கூட்டுறவுத் துறையிலே இந்தப் பதவியை வகிப்பதற்கு லாயக்கற்றவர்கள் என்ற நிலை ஏற்பட்டபிறகு அவர்களையே நியமனத்தின் மூலமாக டைரக்டர்களாகப் போடுவது என்பது, வகித்துக் கொண்டிருக்கும் துறையை, சட்டத்தை அதிகமாக இதைவிட அவமானப்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒரு பகுதியிலே நிலவள வங்கி அமைந்திருந்தால், திண்டிவனம், வானூர், மரக்காணம், ஸ்ரீபெரும்புத்தூர் போன்ற எந்தப் பகுதியிலேயிருந்தாலும், அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் டைரக்டர்களாக, நிர்வாகிகளாக அமைவதுதான் அந்தத் துறை சிறப்பு பெறுவதற்கு, குறிப்பிட்ட நிலையில் வளர, வாழ தேவைப்பட்டதாகும். இன்றையதினம், ஊர்விட்டு ஊர் மாறி, ஒரு பஞ்சாயத்துப் பெருமன்ற எல்லையைவிட்டு எல்லை மாறி, தாலூக்காவிட்டு தாலூக்கா மாறி, மாவட்டம் விட்டு மாவட்டம் மாறி, இன்று ஒரு மாவட்டத்திலேயிருப்பவர் இன்னொரு மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியனில் அமைந்திருக்கும் நிலவள வங்கியின் தலைவர் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் அது எந்த அளவிற்கு



1970 ஏப்ரல் 2] [திரு. க. இராமமூர்த்தி]

நியாயமாகும் என்று கேட்க விரும்புகிறேன். அப்படிச் செய்வது அந்தத் துறையை வளர்ப்பதாக ஆகாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இதற்கு ஒரு சாதாரண விளக்கம் சொல்லப்படுகிறது. அந்தப் பகுதியிலே நிலம் வைத்திருந்தாலோ அல்லது பயிரிடுகிற விவசாயியாகவோ அவர் இருந்தால் போதும். அந்தப் பகுதியில் நிரந்தரமாக வசிக்கத் தேவையில்லை என்பதாகச் சொன்னார்கள். நான் முன்பு ஒரு முறை பேசுகிற நேரத்தில் நான் கூறிய குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செங்கற்பட்டில் ஸ்ரீபெரும்புதூர் பிளாக்கில் என்ன நடந்திருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அங்கே நிலவள வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர் இந்த விவாதத்திற்குப் பிறகு 20 செண்டு நிலத்தை அந்தப் பகுதியிலே வாங்கியிருக்கிறார். வேறு ஒன்றுக்குமில்லை. தான் ஒரு விவசாயி என்பதை நிலைநிறுத்துவதற்காகவும், அங்கே தனக்கு நிலம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தவும் அவர் அதைச் செய்திருக்கிறார். இது நியாயமா? இந்தச் சட்டத்தை மதிப்பதாக அர்த்தமா? கூட்டுறவுத் துறை இந்த முறையில்தான் வளர்ந்துவருகிறது என்பதை மீண்டும் இந்த அவை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே கிரீன் ரெவல்யூஷன், பசுமைப் புரட்சியைப் பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். பசுமைப் புரட்சி நடக்கிறதோ இல்லையோ, அதில் அமைச்சர் அவர்களுக்கு எந்த அளவு பொறுப்பு இருக்கிறதோ இல்லையோ, அவர்கள் செல்கின்ற இடங்களிலெல்லாம் இந்தப் பசுமைப் புரட்சியை கூட்டுறவுத் துறையோடு இணைத்துப் பேசுவதிலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. கூட்டுறவு வளர வளர பசுமையும் வளரும் என்றாலும், இதற்காக எந்த அளவிலே நாம் அதைப் பயன்படுத்தியிருக்கிறோம், நிதி செலவழித்திருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். இதுபற்றி புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. 1967-68-ல் ரூ. 37 கோடி 26 லட்சம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக என்பதாகக் காட்டியிருக்கிறார்கள். 1968-69-ல் ரூ. 44 கோடி 12 லட்சம், 1969-70 டிசம்பர் 31 முடிய ரூ. 35 கோடி 37 லட்சம். இதிலே என்ன முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்பது எனக்குப் புரியவில்லை. நாம் விளம்பரப்படுத்துகிறோம், பேசுகிறோம், செல்கின்ற இடங்களில், "இது உங்கள் அரசு, விவசாயிகள் அரசு, பசுமைப் புரட்சிதான் உங்களுடைய முன்னேற்றமாகும்" என்று சொல்லிகொண்டு பணத்தைச் செலவழித்தாலும், எந்த அளவுக்கு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். சொல்லுக்கும், செயலுக்கும் இருக்கிற ஒத்துவராத தன்மையை வெளிப்படுத்துவதாகத்தான் இருக்கிறது நிலைமை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

புதியதாக பெருத்த அளவிலே ரைஸ் மில்ஸ் கூட்டுறவுத் துறையிலே துவக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். தொழில் என்ற முறையிலே இது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். கூட்டுறவு அரிசி ஆலைகளைப் பொறுத்தவரையில் இவைகள் என்ன காரணங்களுக்காக இயங்குகின்றன, எப்படி இயங்குகின்றன என்பதை நாம் தெளிவுபடுத்திப் பார்க்கவேண்டும். இந்த அரசு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன், அதாவது உணவு விற்பனையை ஏற்றுக் கொண்டு முழுமையாக நடத்திவருமானால் பெரிய ஆலைகளின் மூலமாக பயன் இருக்கிறது. அது இல்லாத நிலையிலே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனை முழுமையாக நாம் கொண்டு வராத நிலையிலே, இன்னமும் சொல்லப்போனால், இதிலே அரசுக்கு நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்திவிட்டு, இன்றைய சூழ்நிலையில் புதிய பெரிய அரிசி ஆலைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது ?

அதுமட்டுமல்ல. இந்த அரிசி ஆலைகளைப் பொறுத்தவரையில் பல ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரிசி ஆலைகள் இயங்குவதற்கு, ப்ரொக்யூர்மெண்டு செய்வதற்கு, நெல்லை வாங்குவதற்கு ஆங்காங்கு ப்ரொக்யூர்மெண்டு ஏஜெண்டுகளை நியமிக்கிறார்கள். இவர்கள் அரசாங்க ஊழியர்கள் அல்ல, அரசாங்க நியமனம் பெற்றவர்கள் அல்ல, தனிப்பட்டவர்களை அழைத்து, அவர்களிடம் முன்பணத்தைத் தந்து, "நீங்கள் அந்த ஊருக்குச் சென்று நெல்லை வாங்குங்கள், இந்த ஊருக்குச் சென்று நெல்லை வாங்குங்கள்" என்ற நிலைமையைச் சொல்லி, அந்த ஏஜெண்டுகளின் மூலம், இன்னும் கொச்சையாகச் சொன்னால் இடைத்தரகர்கள் மூலம், அரசு வியாபாரத்தைச் செய்து கொண்டிருக்கிறது. இந்த இடைத்தரகர்களிடத்தில் முன்பணம் கொடுப்பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலே நடைபெறுகிற பல அரிசி மில்கள் இப்படிப்பட்டவர்களுக்கு முன்பணம் கொடுத்து, அதை வசூல் செய்ய முடியாத நிலைமையில் கோர்ட்டுக்குச் செல்லுகின்ற நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த அளவிலே இந்த அரிசி மில்களினுடைய நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய நிகழ்ச்சி திண்டிவனத்தில் நடைபெற்றிருக்கிறது என்பது, அது சம்பந்தமான ரிகார்டுகளை வாங்கிப்பார்த்தால் தெரியும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் இந்தக் கணக்குகளை தணிக்கை செய்கின்ற முறையைவிட ஒரு மோசமான முறை வேறு எந்தத் துறையிலும் இருக்கமுடியாது என்று நான் நினைக்கிறேன். பல நேரங்களில், ஆடிட்டர் வருகின்ற



நேரங்களில், அந்தக் கூட்டுறவு நிறுவனத்தின் தலைவர் அல்லது பொறுப்பில் இருப்பவர்கள் கணக்கைத் தருவதில்லை. கணக்கைத் தருவதில்லை என்பது மட்டுமல்லாமல், ஆடிட் ஆண்டுக்கு ஆண்டு நடைபெறாத நிலையும் இருக்கிறது. பல நேரங்களில் 3, 4 ஆண்டுகள் ஆடிட் நடைபெறாமலே இருக்கிறது. இந்த ஆடிட்மீது பல ஆண்டுகள் ஆகியும், 8 ஆண்டுகள் வரையிலும் நடவடிக்கை எடுக்காத நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. ஆடிட் என்று ஒன்றை வைத்துக்கொண்டு, அதன் விளைவாக ஏற்படுகிற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்தத் தணிக்கையில் என்ன பொருள் இருக்கிறது ? இதற்காக கூடுதல் மான்யம் கேட்கிறார்கள். இதை எப்படி பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குச் சொல்லித் தீரவேண்டும்.

இதற்கு மேலாக ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப் பேற்றவுடன் சொன்ன சொற்கள் நன்றாக நினைவிருக்கிறது. அவர்கள் சொன்னதெல்லாம் "இன்று இருக்கிற கூட்டுறவு சட்டத்தின் வாயிலாக நல்லதைச் செய்துவிட முடியாது, நாம் நினைப்பதைச் செய்ய முடியாது, தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்துவிட முடியாது, இந்தச் சட்டம் திருத்தப் பட்டு இன்னும் நல்ல முறையில் புரட்சிகரமாக அமைக்கப்பட வேண்டும், அதற்காக திரு. சந்தானம் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறோம்" என்றெல்லாம் சொன்னார்கள். திரு. சந்தானம் கமிட்டி அமைக்கப்பட்டது, அந்தக் கமிட்டியினர் சுற்றிவந்தார்கள், அவர்கள் வேண்டியதையெல்லாம் கோரினார்கள், அவர்கள் கேட்ட பதிலும் கிடைத்தது, அறிக்கையும் சமர்ப்பிக்கப் பட்டு விட்டது. அது அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. எங்கே புரட்சிகரமான புதிய சட்டம் என்பது எனக்குப் புரியவில்லை. பழைய சட்டம் வாயிலாக காங்கிரஸ்காரர்கள் இதையெல்லாம் செய்தார்கள், அவர்கள் பதவியில் இருப்பதற்கு வழிவகுத்துக் கொண்டார்கள் என்ற முறையில் பொருள்பட வெளியே சொல்லிவிட்டு, இன்று அந்தச் சட்டத்தையே இவர்கள் பயன்படுத்திக்கொண்டு, தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் பதவியிலே இருந்துகொள்வதற்கும், அவர்கள் அதிலே அமர்ந்து கொள்வதற்கும் வழிவகை செய்துகொண்டிருக்கிறார்கள். புதிய சட்டம் வந்தால் அதற்கு இடம் கொடுக்காது என்ற நிலைமையில் இப்படிச் செய்கின்றார்களா என்று புரியவில்லை. சந்தானம் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் ஒரு சட்டம் இந்த சட்டமன்றம் முடிவடைகின்ற காலத்திற்குள், 1972-க்குள் கொண்டுவரப் போவதில்லை என்பதாக எனக்குத் தனியாக தகவல்கள் கிடைத்திருக்கிறது. அப்படி ஒரு சட்டம் வந்தாலும், அது 1972-க்கு முன்னால் இந்த மன்றத்தில் நிறைவேறப்போவதில்லை. செலக்ட் கமிட்டி, அந்தக் கமிட்டி இந்தக் கமிட்டி என்று சொல்லி போய்க் கொண்டே இருக்கப்போகிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

[திரு. க. இராமமூர்த்தி] [1970 ஏப்ரல் 2

அமைச்சர் அவர்கள் இதைப் பொய்யாக்க உண்மையாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கி றேன்

கிராமப்புறங்களில் இந்தப் பசுமைப் புரட்சியின் விளைவாக நவரைப் பயிருக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. அது ஷார்ட் டெர்ம் லோன், குறுகியக் காலக் கடன் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குறுகிய காலக் கடனைவிட விவசாயிகளுக்கு தீமை செய்கின்ற கடன் வேறு இருக்க முடியாது. இந்தக் குறுகிய காலக் கடன் ஐ.ஆர். 8 நெல்லை மட்டும் பயிரிடுவதற்கு தென் ஆற்காடு மாவட்டத்தில் கொடுக்கிறார்கள். அந்தக் கடன் வாங்கியவர்கள் அத்தனை பேர்களும் ஐ.ஆர். 8 நெல்லை விவசாயம் செய்ததின் மூலம் லாபத்தைப் பெறவில்லை, கூட்டுறவுத் துறை கடனாளிகளாக நின்றுகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "ஐ.ஆர் 8 நெல்லைப் பயிரிடுங்கள், உங்களுக்குக் கடன் கொடுப்போம்" என்று சொல்லி, விவசாயிகள் கடன் வாங்கப் போகின்ற நேரத்தில், "கூட்டுறவுத் துறையில் முந்திய கடன் கொடுத்த தொகை தீர்க்கப் படவில்லை, ஆகவே கடன் கிடையாது" என்று கூறிவிட்டார்கள். முந்திய இரண்டு ஆண்டுகள் வறட்சி ஏற்பட்டதன் விளைவாக விவசாயிகள் அப்பொழுது தாங்கள் வாங்கிய கடனை திருப்பித்தர முடியாத நிலைமை இருந்தது. இந்த நிலைமை அரசுக்கும், அவைக்கும், நாட்டிற்கும் தெரியும். பெரிய அளவில் மழை பெய்திருக்கிறது, விவசாயப் புரட்சி ஏற்படவேண்டும், பசுமைப் புரட்சி ஏற்படவேண்டும், ஐ.ஆர். 8 நெல்லைப் பயிரிடுங்கள் என்று சொல்லி, கடன் கோரி விண்ணப்பத்தை விவசாய மக்கள் கொடுத்தால், பழைய கடன் பாக்கியிருக்கிறது, ஆகவே கடன் தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். விவசாயிகளுக்கு இதைவிட வேறு பாதகம் செய்வது ஒன்று இருக்க முடியாது என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மு.ப. கடைசியாக, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.
10.30. "கூட்டுறவுத் துறையில் வீடுகட்டும் சங்கங்களைப் பொறுத்த வரையில் கொடுக்கிறோம், கொடுக்கிறோம், வாங்க மறுக்கிறார்கள் என்கிற பல்லவியையே பாடிக் கொண்டு இருந்தாலும், கடன் கோரி மனுக்கள், விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டு, அவர்களெல்லாம் கடன் தரவேண்டும் என்று கூட்டுறவுச் சங்கங்கள் அனுப்பியிருக்கின்றன. இன்னமும் கடன் தொகை கொடுக்கப் படவில்லை, ஆகவே கடன் கிடையாது" என்று கூறிவிட்டார்கள். சொல்லுகிறார்கள். பணம் இல்லை என்று ஒரு புறம் சொல்வதும், அதே நேரத்தில் புதிய புதிய சங்கங்களை துவங்குவதும், எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு துவங்குவதும், பணம் இல்லை என்பதும் தெரிந்தும், இந்தத் துறைக்குத் தவிர வேறு எந்தத் துறைக்கும் அந்தத் தைரியம் வராது, இருக்க முடியாது என்று எண்ணுகிறேன். இதற்கும் மேலாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையில் இருக்கும் மிகப் பெரிய குறை, அவர்களுடைய குறைகளை எடுத்துச் சுட்டிக் காட்டி கடிதத்தை எழுதினால், அதற்கு உடனடியாக பதில் கிடையாது. உடனடியாக பதில் வாராததால் பலப்பல எண்ணங் களை நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். யாராவது குறுக் கிட்டார்களா, வேறு யாராவது தொடர்பு கொண்டுள்ளாரா, இப்படியெல்லாம் எண்ணம் வருகிறது.



1970 ஏப்ரல் 2] [திரு. க. இராமமூர்த்தி]

உதாரணமாக, திண்டிவனத்தில் இருக்கும் கூட்டுறவு அர்பன் பாங்கு பற்றி ஒன்றை அமைச்சர் அவர்கள் சென்ற முறை ஒப்புக் கொண்டார்கள். ஊழல்களைப்பற்றி இந்த மன்றத்திலே பேசும் போது, அமைச்சர் ஒப்புக் கொண்டார்கள். மிகுந்த மகிழ்ச்சி யோடு இருந்தேன், உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களென்று. எதிர்பார்த்தேன். வழக்கு நீதி மன்றத்திற்குச் சென்றது. அந்தத் துறைக்கு எதிராக முடிவு இருந்தது என்றாலும், அதன் விளைவாக அந்தத் துறை அடுத்து அடுத்து நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்தேன். அப்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்ததா என்றால், இல்லை என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. அதற்குக் காரணம், 20—11—1969-ல் அதைப்பற்றி அந்தத் துறை யின் டைரக்டர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன், டி.ஓ. லெட்டர், தனி முறைக் கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் 22-ம் தேதியே கிடைத்தது. அந்தப் பதிலில்,

I am directed to inform you that your letter is receiving attention and a reply will be sent to you early.

அந்தப் பதிலில், என்று சொல்லியிருந்தார்கள். அந்த 'எர்லி', 'சீக்கிரம்' என்ற பதம் இன்னமும் செயல் படுத்தப் படவில்லை'. சீக்கிரமாக, ஏப்ரல் முடிந்த பிறகும் அந்தச் சீக்கிரம் என்கிற நிலை முடியுமா என்பது புரியவில்லை. என்னுடைய கடிதத்தில் ஒன்றை மட்டும் படித்துவிட்டு முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

Apart from the judgment order of the High Court, the other aspects of the order of supercession remain the same. Various misdeeds and imperfections indulged by the Directors form the basis of order of supercession.

அந்த பாங்கை சூபர்சீட் செய்வதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவை இன்றும் இருக்கின்றன. ஆனால் கோர்ட்டிலே சில டெக்னிகல் டிபெக்ட்ஸ் காரணமாக அந்த வழக்கு அந்தத் துறைக்கு மாறாக அமைந்துவிட்டிருந்தாலும், மேற்கொண்டு அந்தத் துறை தைரியமாக நடவடிக்கை எடுக்க வில்லை. நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால், எடுக்காத அளவுக்கு தயாரித்து வருகிறதோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. இதற்கெல்லாம் இடங்கொடுக்காமல், அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் செயல்படுவார்கள் என்று நம்பி, நல்ல முறையில் செயல் பட்டு இந்தத் துறையை விரிவாக்க வேண்டும், வளமாக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்களுக்கு விடை அளிக்க எவ்வளவு நேரம் வேண்டியிருக்கும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முக்கால் மணி நேரம் வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது 15 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். முக்கால் மணி எதிர்க் கட்சித் தலைவருக்கு முடிவில் வேண்டும் என்றால், ஒன்றரை மணி போய்விடுகிறது. மீதமுள்ள ஒன்றரை மணிநேரத்தில், 90 நிமிஷங்கள் இருக்கின்றன. அதில் 13 பேர்கள் பேசியாக வேண்டுமென்றால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் 6 நிமிஷத்திற்கு மேல் வராது. அதற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முன்னாலே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. இராமமூர்த்தியும், இன்னும் மற்றும் உறுப்பினர்களும் அரசாங்கத்தின்மீது குற்றச் சாட்டைச் சாட்டினார்கள், நிலவள வங்கியை கட்சிக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அவர்களுக்கு எந்த அளவில் சட்டம் வளைந்து கொடுத்தது என்பதற்கு ஒரே ஒரு மாதிரியை மட்டும் எடுத்துக் காட்ட முன்வருகிறேன். சிம்சன் கூட்டுறவு சொசைடியில் அதன் தலைவராக பேறிஞர் அண்ணாவை எதிர்த்து பாராளுமன்றத்திற்கு போட்டியிட்ட ஒருவர் இருக்கிறார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அதன் பை-லாவைப் பார்த்தால், வேடிக்கையாக இருக்கிறது. சட்டம் அந்த அளவுக்கு வளைந்து கொடுத்திருக்கிறது. பொதுவாக அந்த சொசைடியைப் பொறுத்தவரையில் எப்படியிருக்க வேண்டும் என்றால், யார் சிம்சன் க்ரூப்பில், தொழிலாளியாக இருக்கிறாரோ அவர் சங்கத்தில் இடம் பெறலாம் என்று இருக்க வேண்டும். ஆனால், இப்பொழுது இருப்பது என்னவென்றால், சிம்சன் க்ரூப்பில், அந்த காங்கிரஸ் தொழில் சங்கத்தில் உறுப்பினராக இருந்தால்தான் இந்தச் சொசைடியில் இடம் பெறலாம் என்றிருக்கிறது. இது கூட்டுறவு ஆக்டுக்கே பும்பானது என்று கருதுகிறேன். இதற்காக சிம்சன் தொழிலாளிகள், அரசாங்கத்திடம் அந்த பை-லாவை நீக்க வேண்டுமென்று ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்த 5 (1) (எ) பை-லாவை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று, 'ஷோ காஸ் நோட்டீஸ்' அந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு கொடுத்திருக்கிறது. அதன்பேரில் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். கோர்ட்டிலே ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அரசாங்கம் அந்த ஸ்டேயை வெகேட் செய்ய அட்வான்ஸ்மெண்ட் பெட்டிஷன் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன்மீது சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் நண்பர்கள் சொல்வது, திராவிட முன்னேற்றக் கழக



அரசு கூட்டுறவுக் கட்சிக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது என்கிறார்கள். ஆனால், குருமூர்த்தி யார் ? காங்கிரஸ் தொழில் சங்கத்தில் உறுப்பினராக யார் இருக்கிறாரோ அவர்தான் சொசைடியில் உறுப்பினராக இருக்கலாம் என்று 'பை-லா'வை உருவாக்கி இருப்பவர். தொழிற் சங்கத்திற்கு ஆள் பிடிக்க கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இன்னும், கணக்குகளைப் பார்த்தால் பல ஊழல்கள் இருக்கின்றன. தொழிலாளிகளுடைய சந்தாவையும் சம்பளத்தில் பிடிக்க ஏற்பாடு செய்கிறார்கள். கூட்டுறவு சொசைடி பாக்கியோடு சந்தாவையும் பிடிக்க மானேஜ்மெண்டார் கேட்டுக் கொள்ளப்பட்டு, அப்படி நடக்கிறது. காங்கிரஸ் தொழில் சங்கத்திற்கு எந்த அளவுக்கு கூட்டுறவைப் பயன் படுத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இப்படி அவர்கள் கூட்டுறவை பயன்படுத்தியிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை வைக்க விரும்புகிறேன். இதற்குத் தனியாக ஒரு ஆடிட்டரைப் போட்டு, பத்து ஆண்டுகளுக்கு கணக்குகள் எப்படி எப்படி வைக்கப்பட்டன என்பதைப் பார்க்க வேண்டும். அங்குள்ள தொழிலாளர் நண்பர்கள் சொசைடியில் இருக்கிற பணம் தொழில் சங்கத்திற்கு டைவர்ட் செய்யப் பட்டிருக்கிறது என்கிற குற்றச் சாட்டையும் என்னிடத்தில் தந்திருக்கிறார்கள். அதற்கு ஆதாரமானவற்றை எடுத்துச் சொல்ல, ஒரு ஸ்பெஷல் ஆடிட்டரைப் போட்டால், நான் தயாராக இருக்கிறேன்.

இன்னும், தொழில் சங்கத்தில் இருக்கிறவர்கள் பை-லா வேண்டும் என்று ஜூன் மாதத்தில் கேட்டார்கள், இன்று வரையில் தரப்படவில்லை. ப்ரிண்டில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். யாராவது சொசைட்டி உறுப்பினர்கள் தொழில் சங்கத்தை எதிர்க்கிறார் என்ற தகவல் கிடைத்தால், பலாத்காரமாக, சர்வாதிகார முறையில் சொசைடியிலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டையும் வைக்க விரும்புகிறேன். ஆகவே, விரைவில் கூட்டுறவு அமைச்சர், சட்டம் தெரிந்தவர்கள், ஒரு ஸ்பெஷல் ஆடிட்டரைப் போட்டு, எப்படி எப்படியெல்லாம் பணம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று விசாரணை செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்யும்போது, என்னிடத்தில் உள்ள ஆதாரங்களைத் தர நான் தயாராய் இருக்கிறேன் என்றும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உங்கள் பேச்சைக் கேட்டால் ஊர் உருப்பட்டு விடும் என்பதும் நன்றாகத் தெரியும்.

இன்னும் நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு சாதனைகளை இந்த அக்ரிகல்ச்சுரல் துறையில் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைப் பற்றிச் சொல்லுகிறேன்.

நெல்லையைப் பொறுத்தவரையில் சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு மேலும் சூப்பர் மார்க்கெட்

இருக்கிற இடம் பத்தாயிரம் சதுர அடியும் இருந்தால், ரூ. 3 லட்சம் ஷேர் கேபிடல் போடவேண்டும் என்று விதி இருக்கிறது. எங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் பத்தாயிரம் சதுர அடி இடத்தைப் பிடித்திருக்கிறோம். ஏற்கனவே தந்தது போக மீதி உள்ள ரூ. 1.5 லட்சத்தை விரைவில் அரசு தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு இன்றைக்கு கூட்டுறவுத் துறை மூலமும் நிலவள வங்கியின் மூலமும் கிணறு அடிப்பதற்கும் பம்பு செட்டுகள் போடுவதற்கும் ஏற்பாடு செய்கிறோம். ஆனால் கூட்டுறவுத் துறையில் பணத்தைப் பெற்றுக் கொண்டு விவசாயத்துறையை நாடித்தான் கிணறு தோண்டவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இந்த இரண்டையும் இணைத்து வைக்க விவசாயத்துறை கிணறு தோண்டுகிற பகுதியையும் பம்பு செட்டு பகுதியையும் கூட்டுறவுத் துறையுடன் இணைத்து வைத்து ஒன்றாகச் செயல்பட்டால், இதற்கென்று ஒரு தனி விங் ஏற்படுத்தினால் விவசாயிகளுக்கு சாதகமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட நல்ல சாதனைகள் மூலம் நிலவள வங்கிகளின் மூலம் விரைவில் நாட்டிலுள்ள உணவுப் பஞ்சத்தை போக்குவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டு, விரைவில் இந்த சிம்ப்சன் கம்பெனி சம்பந்தமாக விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

* திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டிலே ஏற்பட்டு சுமார் 50, 60 வருஷங்கள் ஆகின்றன. அந்தக் கால அளவிலே கூட்டுறவு ஸ்தாபனங்களிலே குறைகள், ஊழல்கள் நிறைந்து விட்டன என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தக் குறைகள் பரவலாக இருந்து வருவதால் ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தை எடுத்துக் கொண்டு குறைகளைச் சொல்லுவதைவிட, அவைகள் வராது தடுக்க வழிவகைகள் வகுக்கவேண்டும். **Preveetien is better than cure.** சந்தானம் கமிட்டி ரிபோர்ட் சென்ற வருஷம் மே மாதம் வெளிவந்தது. பத்து மாதங்கள் கழிந்து விட்டன. இது இன்னும் சர்க்காரின் ஆலோசனையில் இருந்து வருவதாக இந்த அறிக்கை கூறுகிறது. சந்தானம் கமிட்டி ரிபோர்ட் உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான ரிபோர்ட். அந்த ரிபோர்ட்டிலுள்ளவைகளை அமுல் செய்ய நமது கூட்டுறவு சட்டத்தைத் திருத்தவேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ள பல குறைகளையும் நிவர்த்தி செய்ய முடியும். அந்த கமிட்டியின் ஆலோசனைகள் எல்லாவற்றையுமோ அல்லது குறிப்பிட்ட சிலவற்றையோ எடுத்து நமது கூட்டுறவு சட்டதிருத்த மசோதா விரைவில் கொண்டுவரப்பட வேண்டும்.



எனக்கு முன் பேசிய திரு. க. ராமமூர்த்தி அவர்கள், 1972 வரையில் அந்தத் திருத்த மசோதா வராது என்று சொன்னார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. ஒரு சமயம் இந்தக் கூட்டத்திலே அவசரமாக இந்த மசோதாவைத் தயாரிக்க முடியவில்லையென்றாலும் ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்திலே கூடுகிற கூட்டத்திலாவது அந்த மசோதாவை கனம் கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் அவர்கள் அவசியம் கொண்டுவருவார்கள் என்று நம்புகிறேன்.

1958-59-ல் கொண்டுவந்த கூட்டுறவு மசோதா செலெக்ட் கமிட்டியில் நான் ஒரு அங்கத்தினராக இருந்தேன். அப்போது அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சர் ஒரு முக்கியமான, புரட்சிகரமான திருத்தத்தை முதலில் கொண்டு வந்திருந்தார்கள். எந்த ஒரு சங்கத்திலும் எந்த ஒரு டைரக்டரும் இரண்டு முறைக்கு மேல் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதுதான் அந்தத் திருத்தம். ஆனால், அந்தத் திருத்தத்தை மாற்றி ஒரு ஸ்தாபனத்தின் டைரக்டர்கள் ரொட்டேஷனில் ஒவ்வொரு வருஷமும் மூன்று மூன்று பேராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றார்கள். அந்த முறை இன்னும் அதிகமான ஊழல்களைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. ஒரு சிலருடைய ஏகபோக பாத்தியமாக கூட்டுறவு ஸ்தாபனங்களை வைத்திருக்க உதவுகிறது.

கூட்டுறவு ஸ்தாபனங்களின் தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறாததால், பாரம்பரிய பாத்தியம் அப்பனுக்குப்பின் மகன் என்ற வாரிசு முறையில், நடக்கிறது. கனம் அமைச்சர்களைப் பற்றிச் சொன்னார்கள், கட்சிக் கண்ணோட்டத்தோடு கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பார்க்கிறார்கள் என்று. நியமன டைரெக்டர்களைக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதிக்கம் கூட்டுறவுத் துறையில் ஓங்குவதற்கு அவர்கள் பார்க்கிறார்கள் என்று. உண்மையிலேயே அந்த முறை கையாளப்படுவதைத் தவிர்க்க வேண்டும். ஜனநாயக முறைப்படி நடக்க வேண்டிய ஸ்தாபனங்கள் அந்த முறையில் நடக்காமல் அதில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுபபதற்கு ஒரு பஞ்சாயத்துக்கோ, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கோ தேர்தல் நடக்கிற முறையில், சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டு இந்தத் தேர்தல்கள் நடத்துவதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவு சங்க பஞ்சாயத்து தேர்தல் "பூல்ப்ரூப்" என்று சொல்ல முடியும். எந்த வித ஊழலும் இருக்க முடியாது. புக் மீட்டிங் இருக்க முடியாது. நல்ல முறையில் தேர்தல்களை நடத்த முடியும். அதையும் கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் திருத்த மசோதாவில் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன்.

இப்போது நிலவள வங்கி அந்தந்த வளர்ச்சி வட்டாரத்தோடு இணைக்கப்பட்டுக் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி அதன் நிர்வாகி ஆக்கப்பட்டிருப்பது போல் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் நல்ல தொடர்பு வேண்டும். கிராமப்

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1970 ஏப்ரல் 2

பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்கள் இணைந்து நடக்க பஞ்சாயத்து எக்சிகியூட்டிவ் ஆபீசர்களை கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் ஆக்கிவிட வேண்டும். அதற்குக் கூட்டுறவுச் சட்டமும் பஞ்சாயத்துச் சட்டமும் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கத்தினர்கள் நேற்று இரவு 9 மணிக்குத்தான் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட 23 பக்கம் கொண்ட அறிக்கையைப் படித்திருப்பார்கள் என்று சொன்னார்கள். இந்த அறிக்கை இவ்வளவு நீளமாக இருக்க வேண்டுமா? அதில் ஓரளவு விஷயங்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. இந்தத் துறையில் வளர்ச்சி இருப்பது உண்மைதான். 10 ஸ்தாபனங்கள் இருக்கின்ற இடத்தில் 15 ஸ்தாபனங்கள் என்றால் வளர்ச்சிதானே. உதாரணமாக அறிக்கையின் 3-ம் பக்கத்தில் சிறப்பு அங்காடிகள் வளர்ச்சிப் பற்றிக் கூறும்பொழுது இத்துறையில் பண்டகசாலைகள் 1968-69-ம் வருஷத்தில் செய்த மொத்த விற்பனை ரூ. 4.63 கோடி. 1969-70-ல் டிசம்பர் 1969 முடிய செய்த விற்பனை ரூ. 4.64 கோடிதான். இது சென்ற ஆண்டைவிட 0.01 தான் அதிகம். இதற்கு இரண்டு மூன்று வரிகள் செலவு. இப்படிப்பட்ட ஒரு நீண்ட அறிக்கை, இதைப் படிக்க அவகாசம் இல்லாத நிலை, தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அறிக்கை ரத்தினச் சுருக்கமாக, சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையில் இருந்து இருந்தால், உறுப்பினர்கள் படித்துப் பயன் பெற நலமாக இருந்து இருக்கும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு 1969-70-ம் ஆண்டு மானியத்தை ஆதரித்து எனது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாக, கூட்டுறவு, நாட்டில் இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதற்கு இந்த 1969–70 ஆண்டு அறிக்கையில் இருக்கிற புள்ளி விவரங்கள் சான்றாகும். நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த வரையில் 1966–67-ல் 3 கோடி ரூபாய். 1967–68-ல் 7 கோடி ரூபாய். 1968–69-ல் 14 கோடி ரூபாய். அதாவது சரி பங்கு உயர்வு. அதைப்போல் 1969–70-ல் இன்றைய தினம் 15—3—1970வரை 12.5 கோடி ரூபாய் நீண்டகாலக் கடனைக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் குறுகிய காலக் கடனைப் பொறுத்தவரையில் 1967–68-ல் 37.26 கோடி ரூபாய், 1968–69-ல் 44.12 கோடி ரூபாய், 31—12—1969 முடிய 35.37 கோடி ரூபாய் என்ற அளவில் வழங்கியிருக்கிறோம். எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் கடன் வழங்குதல் குறைவாக இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். 1968-69-ல் 44.12 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 31—12—1969 முடிய 35.37 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொச்சம் இருக்கிறது. அந்த சொச்சத்தையும் சேர்த்தால் இந்தத் தொகை உயர்ந்துவிடும்.



1970 ஏப்ரல் 2] [கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி]

கிராமப்புறங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்களாக முன்பு இருந்ததைவிட இப்போது மக்களுக்கு நல்ல பலன் அளிக்கக் கூடிய அளவில் தீவிரமாக முனைந்து செயல்பட்டு வருகிறது. ஓராண்டுக் காலத்தில் நமது கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கூட்டுறவுத் துறையிலே ஒரு தீவிரமான மாறுதலைக் கண்டு வருகிறோம். சிறப்பாக கூட்டுறவு மானியத்திற்காக தனியாக ஒருநாள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதுவே ஒரு பெரிய மாற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். கூட்டுறவு ஸ்தாபனத்திற்கென்று ஒரு செயலாளர் ஏற்பட்டிருக்கிறார். கூட்டுறவு நாணயச் சங்கங்களிலுள்ள கணக்குகளைப் பரிசோதனை செய்து தணிக்கை செய்வதற்காக கூடுதல் அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். பல ஆண்டுகளாக கிராமப் புறங்களில் தணிக்கை சரியாக நடைபெறவில்லையென்ற குறைபாடு இருந்து கொண்டுவந்தது. இந்த அரசு நல்ல முறையில் எல்லா சங்கங்களிலும் உள்ள கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்ற முன்னேற்றத்தைக் காண்கிறோம்.

அடுத்தபடியாக, கடன் கொடுக்கின்ற முறையிலும் நாம் கோடிக் கணக்கான ரூபாய்களை அதிகப்படுத்தியிருக்கிறோம். நிர்வாகத் துறையிலும் பல சீர்திருத்தங்களைச் செய்து வருகிறோம்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் 12 நவீன அரிசி ஆலைகளைத் துவக்குவதற்கான திட்டமிட்டு அதற்காக 115.73 லட்சம் ரூபாய் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக ஒதுக்கியிருக்கிறார்கள். பசுமைப் புரட்சிக்காக 59 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்களில் கடந்த ஓராண்டுக் காலத்தில் கிராமப் புறங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதைப் பார்க்கிறோம். 1966-லே விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தார்கள், 1966-லே விவசாயிகளுக்கு உரம் கொடுத்தார்கள். 1966-லும் விவசாயிகள் கடன் வாங்கினார்கள், 1969-லும் விவசாயிகள் கடன் வாங்கினார்கள். இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசத்தை விவசாயிகள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். முன்பு கடன் வேண்டுமென்று ஆடி மாதத்திலே கேட்டால் விவசாயிக்கு தீபாவளி மாதத்திலேதான் கடன் கிடைக்கும் நிலைமை இருந்தது. இன்றைக்கு இருக்கும் நிலவரம் முற்றிலும் எதிர்மாறானது. இன்றைக்குத் தேவையான கடனைக் கொடுக்கிறார்கள், தேவையான நேரத்தில் கொடுக்கிறார்கள், விவசாயிகளுக்கு வேண்டிய காலாகாலத்தில் கடன் கொடுக்கிறார்கள். விவசாயிகள் கேட்ட கடனைக் கொடுக்கிறார்கள்.

முன்பு என்னுடைய மாவட்டத்திலே கூட்டுறவு ஸ்தாபனத்தில் கடலைப் பிண்ணாக்கு வேண்டுமென்று கேட்டால், கடலைப் பிண்ணாக்கு இல்லை, சல்பேட் இருக்கிறது என்று சொல்வார்கள். சல்பேட் கேட்டால், சல்பேட் இல்லை, யூரியா இருக்கிறது என்பார்கள். யூரியா கேட்டால் யூரியா இல்லை, அம்மோனியம் சல்பேட் இருக்கிறது என்பார்கள். இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போது 1969-ல் கிராமப் புறங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் தேவையான உரத்தை ஸ்டாக்

செய்து வைத்திருக்கிறார்கள். காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இதன் காரணமாகவே நாம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறோம். இன்றைய தினம் நிலவள வங்கிகளைத் திறந்திருக்கிறார்கள். பசுமைப் புரட்சியை செய்துவரும் அமைச்சர் அவர்கள் குறுகிய காலக்கடன், நடுத்தரக்காலக் கடன் என்று கொண்டு வருவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு 50 மில்களை இந்த மாநிலத்தில் திறக்க இருக்கிறார்கள், என்னுடைய தொகுதியில் நன்னிலம் தாலுகாவில் ஒரு மில்லை அவசியம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்னிலம் தாலுக்கா தஞ்சை மாவட்டத்தின் இருதயமாக அமைந்திருக்கிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக என்னுடைய தொகுதியில் கொடவாசலில் ஒரு மில்லை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கொள்முதல் விஷயத்தில் நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட விற்பனைச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்வதில் காலதாமதம் உண்டாகிறது. அறுவடை செய்த வுடனேயே நெல்லை கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலம் துரிதமாக கொள்முதல் செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று பிரசாரம் செய்யப்படுகிறதேயொழிய, உண்மையிலே நடைமுறையில் 'கூட்டுறவு, கூட்டுக் கொள்ளை' என்ற அடிப்படையில்தான், இன்றைக்கு மட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து இம்மாதிரி நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலைமை தாங்கக்கூடியவர்கள் நிலப் பிரபுக்கள், பெரும் பணக்காரர்கள் ஆகியோர் ஆதிக்கக்காரர்களாக இருந்து செயல்படக்கூடிய காரணத்தினால் தான் இந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் சாதாரண மக்களுக்குப் பாதகமாகவும் வசதி படைத்த மக்களுக்குச் சாதகமாகவும் இருந்து வருகிறது. தேர்தல் காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறிக்கையிலேகூட, 'ஏழைகளின் நலனுக்காக கூட்டுறவுத் துறையை ஆதிக்கக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்க, தேவையான முயற்சிகளை எடுக்க கழகம் விரும்புகிறது' என்று அழகாகப் போடப்பட்டிருக்கிறது.

அளித்த கடன் எவ்வளவு? என்பதைப் பார்க்க வேண்டும். பல இடங்களில் கையாடல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏதோ வயிற்றுக்கு இல்லாது ஐந்து ரூபாயையோ, பத்து ரூபாயையோ திருடிவிட்டால் உடனே அவனை லாக்கப்பில் வைத்து, அடித்து உதைக்கிறார்கள். அவன் சில சமயங்களில் தூக்கு போட்டுக் கொண்டான் என்று கொலை செய்து விடுகிறார்கள். லட்சக் கணக்கில் கையாடல் செய்கின்ற பெரிய மனிதர்கள் சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போய்





தப்பித்துக் கொள்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை மாற்றி, திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறை மாண்புமிகு திரு. மாதவன் அவர்களிடத்தில் இருந்தபோது 'சந்தானம் கமிட்டி' என்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, இதைத் திருத்தியமைக்கப் போகிறேன் என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுக்கு இது பிடிக்கவில்லையென்று கருதுகிறேன். உதாரணத்திற்கு எத்தனையோ கையாடல்களைச் சொல்லமுடியும்.

வட ஆற்காடு மாவட்டத்திலே செங்கம் தாலுக்கா தென்கரும்பலூர் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏறக்குறைய 1¼ லட்சம் ரூபாய் கையாடல் செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டு, வழக்கும் போடப்பட்டு, அதற்குப் பிறகு வழக்கை வாபஸ் வாங்கக்கூடிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதைவிட மோசமான போக்கு ஏதாவது இருக்க முடியுமா என்பதைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அந்த ஊழலுக்குக் காரணமாக இருந்தவர்கள் இரண்டு பேர்கள். ஒருவர் கோவிந்தசாமி நாயுடு, மற்றொருவர் சுப்பானு நாயுடு. சுப்பானு நாயுடு கிராம மணியக்காரர். அவர், நாற்பது ஆயிரம் ரூபாய் வரைக்கும் கையாடல் செய்யப்பட்டு, டிஸ்மிஸ் செய்யப்பட்டார். பிறகு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, மீண்டும் கிராம மணியக்காரராக வருவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருகிறார்.

அடுத்து, கொட்டையூர் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் கையாடல் செய்யப்பட்டது. அப்படியிருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்து, போளூர் தாலுகாவில் வெங்கடம்பாளையம் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் தலைவர் குப்புசாமி உடையார். அவர் ஊர்பேர் தெரியாதவர்களுக்கெல்லாம் பணம் கொடுத்ததாகக் கணக்கெழுதி, அந்தப் பணத்தை அவரே ஆண்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார். இதுவரையில் ஐந்து வருஷத்திற்கும் மேலாக எந்த விதமான நடவடிக்கையும் அதன்பேரில் எடுக்கவில்லை. அடுத்து, காங்கியனூர் கூட்டுறவுச் சங்கத்தில் திரு. கே. ஜி. வேடியப்பன் என்பவர் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் கையாடல் செய்திருக்கிறார். அவர் இன்றைக்கு ரைஸ் மில் கட்டிவிட்டிருக்கிறார். அந்தப் பணத்தை அவர் திருப்பிக் கொடுத்தாரா, இல்லையா என்று தெரியவில்லை. ஆறு வருஷத்திற்கு மேல் ஆகிறதாகத் தெரிய வருகிறது. ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதைவிட இன்னும் மோசமான ஊழல்—பிரதானமாக நெல்லை மு.ப. 11.00.
மாவட்ட கூட்டுறவு சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொசைட்டியில் 9½ லட்சம் ரூபாய் கையாடல் ஊழல் நடந்திருக்கிறது. அதன் தலைவர் ஏ.பி.சி. வீரபாகு. அவர் சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்தவரா, இண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்தவரா என்று

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1970 ஏப்ரல் 2

தெரியாது. ஆனால் காங்கிரஸ்காரர். ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் போர்டில் வைத்து 23—6—1963-க்குள் போர்டு அபிப்பிராயத்தை தெரியப்படுத்த வேண்டும் என்று சொல்லியும்கூட போர்டில் இது வரை வைக்கப்படவில்லை.

அதுமாத்திரம் அல்ல. போன மாதம் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த சி. எஸ். ஆர். செக்ஷன் 65-ன் அடிப்படையில் விசாரணை நடத்தச் சென்றார். 3 நாட்களுக்குள்ளாக ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவரை அவரிடத்தில் எந்தவிதமான ரெக்கார்டும் கொடுக்கப்படவில்லை. கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல. அங்குள்ள செக்ரடரி உண்மையானவர், நேர்மையானவர், தலைவருக்கு உடந்தையாக இல்லாமல் இருப்பவர். சம்பந்தப்பட்ட ரெக்கார்டுகளை எல்லாம் வைத்திருக்கிறார். அவரையே அந்த இடத்தில் இருந்து மாற்றுவதற்கு முயற்சி நடந்து வருகிறதென்று அறிகிறேன் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவேதான் இதுபோன்ற ஊழலுக்கு உறைவிடமாக இருக்கக்கூடிய நிலைமை இருக்குமானால் உண்மையான அதிகாரிகளும் கூட நேர்மையற்ற தன்மையில் நடத்தப்படுகிற நிலைமைதான் வளரும்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் நேர்மையாக நடக்கக்கூடிய ரிஜிஸ்திரார் ஒருவர் இருக்கிறார் என்றால் ஐந்து மாதத்தில், ஏழு மாதத்தில் அவர் தூக்கி வேறு இடத்திற்கு எறியப்படுகிறார். அல்லது வேறு இன்னொருவரை அடிஷனல் ரிஜிஸ்தரார் என்று போட்டு இவரிடம் இருந்த அதிகாரங்கள் அவருக்கு மாற்றப்படுகின்றன. மந்திரி என்ன சொன்னாலும் அப்படியே கேட்க வேண்டும். இல்லையென்றால் இந்த நிலைதான். இப்படி இருந்தால் உண்மையாக, நேர்மையாக இருக்கக்கூடிய அதிகாரிகளையும் தவறாக நடக்கத் தூண்டுவதாக ஆகாதா ? இதை எல்லாம் போக்குவதற்கு மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டாமா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பேர்ப்பட்ட ஊழல்களுக்குக் காரணமாக இருக்கக்கூடிய நபர்கள் மீது ஒரு வருடம் அல்ல, 1½ வருடம் அல்ல பல வருட காலம் ஆகியும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. பணத்தைக் கையாடல் செய்திருப்பது ஆடிட் ரிப்போர்ட் மூலம் கண்டுபிடிக்கப்பட்டும் கூட ஸ்டே ஆர்டர் கொடுத்து நிறுத்தி வைப்பது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்றால் இது கொள்ளை அடிக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற தன்மையில்தான் இந்த இலாக்கா அமைச்சரின் செயல் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அமைச்சரை உடனடியாக எடுக்க வேண்டும். அல்லது அவராகவேயாவது கண்ணியமாக, கௌரவமாக ராஜிநாமாச் செய்துவிட்டுச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அமைச்சரவைக்கு நல்ல பெயர் ஏற்படவேண்டுமென்றால், இந்த அமைச்சரவை சார்ந்த கட்சிக்கு நல்ல பெயர் ஏற்படவேண்டுமென்றால் தொடர்ந்து அவரை அமைச்சராக வைத்திருக்கக்கூடாது.



1970 ஏப்ரல் 2]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு அமைச்சரை வைத்திருப்பது என்பது என்னைப் பொறுத்த விஷயம். திரு. கோதண்டராமன் புத்திமதியைக் கேட்க வேண்டியதில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** என் புத்திமதியைக் கேட்க வேண்டுமென்ற முறையில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இருந்த காங்கிரஸ்காரர்கள் தம்முடைய கட்சியைச் சார்ந்தவர்களே சொல்லுவதைக் கேட்காததாலும் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதையும் கேட்காததாலும் அவர்கள் என்ன ஆனார்கள் என்பதை நாம் அறிவோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உங்கள் பேச்சைக் கேட்டால் ஊர் உருப்பட்டுவிடும் என்பதும் நன்றாகத் தெரியும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்படி சொல்லிச் சொல்லி வந்தவர்கள் எப்படி உருப்பட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உங்கள் பேச்சைக் கேட்டு இந்தியாவில் எந்த எந்த பாகம் உருப்பட்டு இருக்கின்றன என்பதும் தெரியும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தமாதிரி சொன்னவர்களுடைய நிலைமை எல்லாம் என்ன ஆயிற்று, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே எங்கே இன்றைக்கு இருக்கிறார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். சரித்திரம் படித்த உங்களுக்கும் நன்றாக தெரியும்.

நான் யாரும் கெட்டுப் போகச் சொல்லவில்லை. நல்லதற்குத்தான் சொல்கிறோம்.

காவேரி கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டை எடுத்துக்கொண்டால் மாதம் ஒன்றுக்கு பத்தாயிரத்திற்கு மேல் நஷ்டம் வருகிறது. அந்த இடத்தில் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசை வைக்கலாம். இன்றைக்கு அவர்கள் மாதம் ஒன்றுக்கு சுமார் 10 ஆயிரம் கொடுத்துக்கொண்டு வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறார்கள். மாதம் பத்தாயிரம் நஷ்டம் ஏற்படுவதற்குப் பதிலாக மாதம் 15 ஆயிரம் லாபம் செய்ய வேண்டுமென்றால் செய்ய முடியாதா ? தனிப்பட்டவர்களுக்கு வாடகை என்பதாக உதவி செய்யவேண்டும் என்பதுதான் நோக்கம். தனியாருக்குப் பணம் வாடகையாகப் போக வேண்டும், அதற்காகவே இந்த யோசனை கவனிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையில் ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காக அண்ணா அவர்கள் காலத்திலேயே 25 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தயவுசெய்து இன்னும் பத்து நிமிடம் கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு 6 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திரு. கோதண்டராமன் இப்போதே பத்து நிமிடத்திற்கும் அதிகமாகப் பேசிவிட்டார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் பான் ப்ரோக்கர்ஸ் கடைகள் வைக்க அனுமதி வழங்கப்படுகிறது. தனியார் துறைக்கு இப்படிக் கொடுப்பதற்குப் பதிலாக கூட்டுறவு அடமான வங்கிகளை அங்கங்கே ஏற்படுத்தினால், இந்த வட்டிக் கடைகளை கூட்டுறவுத்துறையினரே நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்குமானால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்.

அடுத்து, பஸ், லாரி அடமான கூட்டுறவு பாங்குகள் மற்ற மாநிலங்களில் இருக்கின்றன. அதைப்போலவே இங்கும் ஏற்படுத்தினால் பெரிய அளவுக்கு ஆதாயம் இருக்கும்.

அடுத்து, கூட்டுறவு சர்க்கரை ஆலை, நூற்பாலைகளில் பெரிய அளவு ஊழல் இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இதுவரை லாபகரமாக நடந்து வந்த நிலைமை மாறி இப்போது மிக மிக மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது.

விவசாயிகளை எடுத்துக்கொண்டால் பிறக்கும்போதே கடன்காரன். வாழும்போதும் கடன்காரன். இறக்கும்போதும் கடன்காரன் என்ற நிலைமைதான் இருக்கிறது. காரணம் தனியார் பணம் கடன் கொடுத்து அப்படியே அவர்களைக் கடன்காரர்களாக்கிவிடுகிறார்கள். கூட்டுறவுத்துறையிலேயே கடன் கொடுத்து அவனுடைய உற்பத்திப் பொருள்களை எல்லாம் வாங்கி மார்க்கெட்டிங் பண்ணுகிற நிலை வந்தாகவேண்டும். 75 சதவிதம் விவசாயிகளுக்கு முன்பணமே கொடுக்கலாம்.

கடைசியாக வட ஆற்காடு கூட்டுறவு வங்கியில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது என்றால் பாதித் தொகை பணமாகவும், பாதித் தொகை உரமாகவும் தான் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று. உரத்தை கூட்டுறவு சங்கங்களில் இருந்துதான் வாங்கவேண்டும், இல்லையென்றால் தனியாரிடம் வாங்கவேண்டும் என்று. கூட்டுறவு சங்கங்களில் ஏராளமான உர மூட்டைகள் தேங்கிக் கிடக்கிறது என்றாலும் இன்றுள்ள நிலைமை என்ன ? நூற்றுக்கு பத்து ரூபாய் கமிஷன் கிடைக்கிறது என்று தனியார்களிடமே வாங்கப்பட்டு, அதன்காரணமாக 4 லட்சத்திற்கு மேல் ஊழல் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றிய புகாரைக் கொடுத்தும் கூட அந்த அதிகாரியை வேறு இடத்திற்கு மாற்றவோ, சஸ்பெண்டு செய்யவோ இல்லை. விசாரணை நடக்கும்போது அவர் அங்கேயே இருந்தால் விசாரணை செம்மையான முறையில் நடக்குமா என்பதை இந்த நேரத்தில் கேட்கிறேன்.

அடுத்து, சீர்காழி தாலுக்கா, சோதியக்குடி கூட்டுறவு நாணயச் சங்கத்தின் தலைவர் மார்க்கண்டய்யர், அவரே காரியதரிசி. பல பேர்களுக்குக் கடன் கொடுத்ததாகக் கணக்குகளில் எல்லாம் கைநாட்டு போட்டு ஏராளமான பணத்தைக் கையாண்டுவிட்டார். பிறகு தலைமறைவாகியும் விட்டார். இன்றையதினம் தம் பெயரை கண்ணன் என்று மாற்றிக்கொண்டு உத்தரப்பிரதேசத்தில் இருக்



கிறார். அவரை விட்டுவிட்டு இங்குள்ள விவசாயிகளை எல்லாம் நெருக்கி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருவது நியாயமா ?

ஏற்கனவே பல சங்கங்களை ஏற்படுத்தியும் சர்க்கார் அனுமதி கொடுத்தும் பணம் கொடுக்காத நிலைமையும் இருக்கிறது. மதுரை மாவட்டம், வேடசந்தூர் பகுதியில் இதுபோல பணம் கொடுக்காத நிலைமை இருக்கிறது. அந்தச் சங்கம் மட்டும் அல்ல வேறு எந்தச் சங்கம் எங்கிருந்தாலும் உடனடியாக உத்தரவுப்படி செயல்பட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. நடராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1969-70-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல முனைகிறேன்.

நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களில் இருந்த குறைபாடுகளை நீக்கி ஆங்காங்கு நல்ல அதிகாரிகளை நியமனம் செய்து ஆடிட் செய்ததன் பேரில் குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டு வருவது கண்கூடாக எல்லோரும் அறியக்கூடிய ஒன்று. குறைகள் நீக்கப்படுவதை மறந்துவிட்டு இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன என்று சிலர் பேசிவருவதையும் காண்கிறோம். கிராம மக்களுக்கு நல்ல முறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் கடன்கள், உரங்கள் இவற்றைக் கொடுப்பதற்குத் திட்டத்தை வகுத்து உரங்களையும், கிணறு வெட்டவும், பம்ப் செட் வழங்கவும் கடன் உதவிகள் செய்து வருவதை எல்லோரும் வரவேற்கிறார்கள், மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். கிராமங்களிலே உள்ள ஏழை எளியவர்களுடைய குறைபாடுகள் நீங்க வேண்டுமென்ற முறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அங்காடிகள் ஏற்படுத்த நல்ல திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். தொழில் வளர்ச்சி பெறவும் விவசாயிகளுடைய குறைகள் நீங்கவும் சிறப்பு அங்காடிகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நிலவள வங்கி ஆரம்பிப்பதாகக் குறிப்பிடப்பட்டது. இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை, விரைவிலே திறந்தால் அங்குள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவவும், ஏழை எளியவர்கள் தொழில் வாய்ப்புகள் பெறவும் வாய்ப்பு இருக்கும் என்பதால் அமைச்சர் அவர்கள் உடனடியாக அதை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களிலே உரம், மருந்து இவற்றைச் சேமித்து வைப்பதற்கு கட்டடம் கட்டவும் அலுவலகம் ஏற்படுத்தவும் சர்க்கார் மானியமாக 50 சதவீதமும் கடனாக 50 சதவிதமும் கொடுக்கிறது. மானியத்தை 75 சதவீதமாகவும் கடனை 25 சதவீதமாகவும் கொடுத்து உதவவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலே பழ ரச தொழிற்சாலை ஏற்படுத்தி பழ ரசத்தை ஏற்றுமதி செய்ய பண்டக சாலைகளை அமைத்து

தொழில் வளர்ச்சி ஏற்படச் செய்து அதன் மூலம் அங்காடி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது அரசாங்கத்தின் மூலமாக அரிசி ஆலை ஒன்று நிறுவத் திட்டமிட்டு இருப்பதை காட்பாடியிலே--தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக வட ஆற்காடுதான் நெல் உற்பத்தியில் அதிகமாக உற்பத்தி செய்கிறது என்ற காரணத்தினால்---அந்த ஆலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழம் ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்திலே வாழைப் பழம் உற்பத்தி செய்யக் கூடிய மண்வளம் நல்ல நிலைமையில் இருக்கிற காரணத்தினால் அதை ஊக்குவித்து நிறைய பழங்களை ஏற்றுமதி செய்யக்கூடிய முறையிலே சங்கங்களை கூட்டுறவுத் துறையில் அமைத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ரா. கனகசபை :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னதாக அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு ஒரு வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்து ஒவ்வொரு ப்ளாக்கிலும் மத்திய பாங்குக் கிளைகள் திறக்கப்படுமென்று இங்கே அறிவித்தார்கள். அதை அறிவித்தவுடனே மத்திய பாங்குகளுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக அவற்றிற்கெல்லாம் இந்த ஆண்டு மானியத் தொகை கொடுக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்து எல்லா மத்திய பாங்குகளும் கிளைகளைத் திறப்பதற்கு ஊக்கம் கொடுத்திருப்பதற்காக நான் இந்த அரசையும் அமைச்சர் அவர்களையும் முதலிலே பாராட்டி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையெல்லாம் திறக்கப்படும்பொழுது எந்த முறையிலே நடந்துகொள்ள வேண்டும், எப்படிக் கிளைகள் எல்லாம் வேலை செய்யவேண்டும் என்பதெல்லாம் மத்திய பாங்குகளைச் சேர்ந்தது. அரசாங்கத்தினுடைய கடமை அதோடு முடிந்துவிட்டது. மற்ற விஷயங்களைப்பற்றிச் சொல்வதற்கு முன்பு திரு. கோதண்டராமன் அவர்கள் அதிகமாக ஊழல்களைப்பற்றி இந்தத் துறையிலே சொன்னார்கள். அவர்கள் சொன்னது 10, 12 சங்கங்களைப்பற்றி இருக்கலாம். ராஜ்யத்திலே வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய மொத்த சங்கங்கள் 15 ஆயிரத்திற்கும் மேலாக இருக்குமென்று நம்புகிறேன். அதிலே பலர் நல்லமுறையிலே சங்கங்கள் நடக்க வேண்டுமென்ற முறையிலே கடமையாற்றி வருகிறார்கள். சில சங்கங்களிலே ஊழல்கள் செய்யக்கூடிய நிலைமை இருக்கலாம், அப்படி ஊழல்களில் ஈடுபட்டவர்கள்மீது நடவடிக்கை கடுமையாக எடுக்கவேண்டியதுதான், வேண்டாமென்று சொல்லவில்லை. இந்த நிலைமை இருப்பதாலே இந்தத் துறையிலே நடப்பதெல்லாம் ஊழல் என்று சொன்னால் எங்களுடைய கூட்டுறவாளர்களிடையே குறை இருக்கிறது என்று கருதக்கூடும். மற்றத் துறைகளிலே உள்ள



வற்றைப்போல் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் பப்ளிக் ரிலேஷன்ஸ் அதிகமாக இல்லை. பத்திரிக்கைகள் எல்லாம் முதலாளிகளுடைய பத்திரிகைகள், பல துறைகளில் ஊழல்கள் நடந்தால் அவை அதிகமாக வெளிவரவில்லை. இந்த ஆண்டு 44 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனுக்காக என்றும் நீண்டகாலக் கடன் என்ற முறையிலே 14, 17 கோடி ரூபாயும் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே மக்கள்தான் வந்து சேர்கிறார்கள். கூட்டுறவாளர்கள் என்று யாரும் பிறந்து வருவதில்லை. மக்கள் என்று உள்ளவர்கள்தான் இதிலே சேர்கிறார்கள். அதிலே நல்லவர்களும் வருகிறார்கள், கெட்டவர்களும் வருகிறார்கள். கூட்டுறவுதான் ஊழல், மற்றவையெல்லாம் சரியாக நடக்கின்றன என்று நினைத்தால் அதிலே ஈடுபட்டுள்ளவர்களின் மனதை அது புண்படுத்துவது ஆகும், அவர்களுடைய உற்சாகத்தை அது கெடுத்துவிடும். உண்மையிலேயே ஊழல்களில் ஈடுபட்டவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்ல முறையிலே பலர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எனவே எப்பொழுது பார்த்தாலும் கூட்டுறவுக் கொள்ளை என்ற மாதிரியெல்லாம் பேசிக்கொண்டே போவது கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டிலே வளர்வதற்குப் பொருத்தமாக இருக்காது என்பதை அழுத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பரவலாக சில கருத்துக்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குறுகிய காலக் கடன் என்பதற்காக ரிசர்வ் பாங்கிலிருந்து பணம் கொடுக்கிறார்கள். 3 சதவீதம் வட்டி என்ற அளவிலே அவர்கள் கொடுத்து கடைசியிலே அது விவசாயியின் கைக்குச் சேரும் பொழுது 7, 8 சதவீதத்துக்கு வட்டி போய் விடுகிறது. ஆனால் இந்த சென்னை ராஜ்யத்திலேதான் இந்தியாவிலேயே குறைந்த வட்டி இருந்துவருகிறது. 4 சதவீதம் என்று நிர்ணயம் இருந்தாலும் இந்தியாவிலேயே சென்னை ராஜ்யத்திலேதான் குறைந்த அளவுக்கு வட்டியில் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதிலே பலருக்குச் சந்தேகம் வருகிறது. 3 சதவீதம் என்று ரிசர்வ் பாங்கிலே வாங்கி 7¾ சதவீதம் என்ற அளவில் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறார்கள். 44 கோடி ரூபாய் மத்திய காலக் கடன், குறுகிய காலக் கடன் இவற்றிற்காக என்று ஒதுக்கப்படும்பொழுது அதிலே பாதியைத்தான் அதாவது 22 கோடி ரூபாயைத்தான் ரிசர்வ் பாங்க் கொடுக்கிறார்கள். அதை 3 சதவீதத்துக்கு வாங்கி மத்திய பாங்குக்கு கொடுக்கிறபொழுது அவர்கள் 6 சதவீதம், 7 சதவீதம் என்று பிக்ஸட் டெபாசிட் வாங்கியிருக்கிற பணத்தையும் சேர்த்து ஆவரேஜ் பாரோயிங் ரேட் என்ற அளவிலே 5½ சதவீதம் அல்லது 6 சதவீதத்துக்கு கொடுக்கிறார்கள். ரிசர்வ் பாங்க் 3 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுத்தாலும் மத்திய பாங்கு பிக்ஸட் டெபாசிட் பணத்தையும் சேர்த்து 7½ சதவீத அளவுக்கு சங்கங்களுக்குப் பணத்தைக் கடனைக் கொடுக்கிறார்கள். அதனால்தான் வட்டி உயர்ந்துவிடுகிறது. சங்கங்கள் எடுத்துக்கொள்கின்றன என்ற தவறான கருத்து பொது மக்களிடையே ஏற்படுவது சரியான கருத்தல்ல.

[திரு. ரா. கனகசபை] [1970 ஏப்ரல் 2

சாதாரணமாக சென்ட்ரல் பாங்கை எடுத்துக் கொண்டால் நான்கு பாங்குகளைத் தவிர மற்ற பாங்குகளால் 6 சதவீதம் கூட டிவிடென்ட் கொடுக்க முடியவில்லை; அவ்வளவு அதிகமாக லாபம் வருவதில்லை. வாங்குகின்ற தொகைக்கு 7½ சதவீதம் கொடுப்பது என்பதால் செலவு போக டிவிடென்ட் கூடக் கொடுக்க முடிவதில்லை.

இப்போது நிலவள வங்கிகளைப் பற்றி அதிகமாகப் பேச்சு அடிபடுகிறது. புதிய நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பழைய பாங்குகளும் இருந்து கொண்டிருக்கின்றன. சாதாரண சங்கங்களைப் போல் நிலவள வங்கிகளை அதிகமாக ஏற்படுத்திக் கொண்டே போனால் அதற்கு ஆகும் செலவு அதிகமாகும். அதற்கு என்ன செய்வது என்பதையும் யோசித்து திட்டத்தை வகுக்க வேண்டும். சாதாரண சங்கமாக இருந்தால் ஒரு காரியதரிசி பார்த்துக் கொள்ளுவார். ஆனால் இதிலே அதிகமான சிப்பந்திகள் தேவை. வேண்டிய ரெக்கார்டுகளை வைத்துக் கொள்ள வேண்டும். இதை எந்த எந்த இடத்தில் வைக்க வேண்டுமென்று பார்த்து வைக்க வேண்டும். தஞ்சை ஜில்லாவில் எங்கள் தாலுகாவை எடுத்துக் கொண்டால் நிலத்தைச் சீர்திருத்தி, பம்புசெட் வைத்து விவசாயம் செய்யக் கூடிய நிலை அதிகமாக இல்லாததால் சிறுசிறு பாங்குகளாக ஆக்கினால் ஒவ்வொன்றும் நஷ்டம் அடையக் கூடிய நிலைதான் வரும். ஆகவே, எந்தெந்த இடத்தில் அதிகமாகத் தேவை என்று பார்த்து பாங்குகளைத் திறப்பது நல்லது. புதுச் சட்டத்தின்படி ஒவ்வொரு பாங்கியிலும் ஒரு மானேஜரைப் போடவேண்டுமென்று அரசாங்கத்தில் இருந்து நோட்டீஸ் வந்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த பாங்குகளைவிட அதிகமாக ஏற்படுத்திய பிறகு, பழைய பாங்குகள் இருக்கும் இடத்தில், வருமானம் குறைந்த நிலையில் மானேஜரையும் போட்டு விட்டால் செலவு மேலும் அதிகமாகும். ஆகவே, எங்கெங்கு தேவையோ, அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்ட இடங்களில் மட்டும், பிற்போக்காக இருக்கும் இடங்களில் மட்டும் மானேஜரை நியமித்தால் போதும் என்று அரசு கூற வேண்டும். எல்லா பாங்குகளுக்கும் மானேஜரைப் போட வேண்டுமென்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல.

*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். பழைய வங்கிகளில் எல்லாம் மானேஜரைப் போட வேண்டுமென்று உத்தரவு போடவில்லை. எந்த வங்கியில் நிலுவைப் பணம் வசூல் செய்யப்படாமல் இருக்கிறதோ அங்கு மட்டுந்தான் போட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். 15 சதவிகிதத்திற்கு மேல் நிலுவை இருந்தாலே ரிசர்வ் பாங்க் கடன் தர ஆட்சேபனை செய்கிறது. 25 சதவிகிதத்திற்கு மேல் நிலுவை இருந்தால் அவர்கள் கடுமையான ஆட்சேபனை செய்கிறார்கள். ஆகவே, அந்த வங்கிகளின் நன்மையைக் கருதி, ரிசர்வ் வங்கியிலிருந்து பணத்தை வாங்கிக் கொடுப்பதற்காக, அப்படி நிலுவை இருக்கிற வங்கிகளுக்கு மட்டும் மானேஜரைப் போட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். 'ஓவர்டியூ' இல்லாத வங்கிகளில் மானேஜரைப் போடவேண்டுமென்று கூறவில்லை.



1970 ஏப்ரல் 2]

**திரு. ரா. கனகசபை:** கூட்டுறவுத் துறை திறம்பட வேலை செய்யவேண்டும் என்றால் 'ஆடிட்' 'வெய்யிங்' இரண்டுந்தான் முக்கியம். இப்போது ஆடிட் முன்னைவிடத் துரிதமாகத்தான் நடைபெற்று வருகிறது. பழைய காலத்தில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆடிட் இல்லாமல் இருந்தது, இப்போது ஓராண்டுக்கு மேல் போவதில்லை. இப்போது இருக்கிற ஆடிட் முறையே போதுமா அல்லது இன்னும் கொஞ்சம் மாற்றலாமா என்பதைப்பற்றியும் அரசுக்கு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஜில்லா ரீதியில் உள்ள சங்கங்களை ஆடிட் செய்வதற்கு வெளியில் பிராக்டிசிங் ஆடிட்டர்களாக இருப்பவர்களின் பேனலைத் தயார் செய்து அப்ரூவ் செய்து வைத்தார்களானால் அந்தச் சங்கங்கள் ஆடிட் செய்ய அவர்களை நியமித்துக் கொண்டால் நல்ல முறையில் இருக்கும். டிபார்ட்மெண்டில் இருந்து வரும் ஆடிட்டர்களுக்கு இப்போது இருக்கும் சட்டச் சிக்கல்களை எல்லாம் சமாளிக்க முடிவதில்லை. அவர்களுக்கு கோவாப்பரேடிவ் ஆக்ட் மட்டுந்தான் தெரியும். சென்ட்ரல் பாங்கை எடுத்துக் கொண்டால் பாங்கிங் ஆக்ட், கம்பெனிஸ் ஆக்ட் எல்லாம் தெரிந்த பிராக்டிசிங் ஆடிட்டர்கள் ஆடிட் செய்வது நல்லது. ஆகவே, இந்த ஆடிட் முறையை மாற்றி வெளியில் இருக்கும் சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் ஆடிட் செய்யும் முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிறகு 'வெய்யிங்'. இது மிக முக்கியமான காரியம். 1951-1952-ம் ஆண்டுகளில் இந்த ராஜ்யத்தில் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் விவசாயக் கடன்கள் கொடுக்கப்படவில்லை. இப்போது 40, 45 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்கிறோம். அதே மாதிரி ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வியாபித்திருக்கின்றன. கன்ஸ்யூமர்ஸ் ஆர்கனைசேஷன் ஆகிவிட்டது. மார்க்கெட்டிங், மாடன் ரைஸ் மில் பற்றி எல்லாம் பேசினார்கள். அதில் நிர்வகிப்பதற்கு வேண்டிய அலுவலர்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, டிரெய்னிங் ப்ரோகிராமைச் சரியான முறையில் செய்து அதற்கு வேண்டிய அலுவலர்களைத் தயார் செய்தால் திறம்பட நடக்க முடியும். இருக்கிறவர்கள் எல்லாம் ஊழல் செய்து கொண்டு போவதில் பயனில்லை. டிரெயினிங் புரோகிராமைச் செய்யும்போது அதிலே ஒரு நம்பிக்கையோடு திறம்படச் செய்ய வேண்டுமென்பதில் அரசு முழு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது டிரெயினிங் காலேஜில் அதிகமாக இலாகா அலுவலர்கள் வேலை செய்கிறார்கள். அரசாங்கத்தில்கூட எஜுகேஷன் டிப்பார்ட்மெண்டில் இருப்பவர்களுக்கு அவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றும் போது ஓய்வு பெறும் வயது 58 என்றும், நிர்வாகத்தில் பணியாற்றும்போது 55 வயது என்றும் வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி கூட்டுறவு இலாகாவில் நல்ல முறையில் ட்ரெயினிங் காலேஜில் ஆசிரியர் தொழில் செய்பவர்களுக்கு 58 வயது வரை பணியாற்றுவதற்கு வாய்ப்பளிக்க அரசாங்கம் அனுமதி தரவேண்டும்.

[திரு. ரா. கனகசபை] [1970 ஏப்ரல் 2

சில சமயங்களில் ஒரு கோர்ஸ் நடக்கும்போது பேர்பாதியிலேயே ஆசிரியர்கள் போய்விடுகிற நிலை இருக்கிறது. சாதாரண பள்ளிக்கூடங்களில்கூட அந்த ஆண்டு முழுவதும் எக்ஸ்டன்ஷன் கொடுக்கிறார்கள். ஆகவே, நடுவிலே வேலை தெரியாதவர்களை நியமித்து கஷ்டப்படுவதைவிட, அந்த கோர்ஸ் முடியும் வரை எக்ஸ்டன்ஷன் கொடுக்க வேண்டும். அதே போன்று ஸ்தாபனங்களில் நல்ல முறையில் பணியாற்றுபவர்களுக்கு, அனுபவம் பெற்றவர்களைவிட பதவியைவிட்டு விலகிய பிறகு கூட அவர்களை ரீ-எம்ப்ளாய் செய்வதற்கு அந்தச் சங்கங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். ஐ.சி.எஸ். ஆபீசர்கள் ஓய்வு பெற்ற மறுநாளே பெரிய கம்பெனிகளில் அதிகச் சம்பளத்திற்கு வேலைக்குப் போகிறார்கள். ஆகவே, நல்ல முறையில் ஸ்தாபனத்தில் பணி செய்கிறவர்களுடைய அனுபவம் அந்த ஸ்தாபனத்திற்குப் பயனுடையதாக இருக்குமானால் 55 வயது என்று வரையறை இல்லாமல் அவர்களுடைய அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. சகாதேவ கண்டர்: மதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது
மு. ப 11-30 எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, தமிழ்நாட்டில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் இன்றையதினம் 90 சதவீதம் சங்கங்களிலும் ஊழல்கள் மலிந்து விட்டன. ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திலும் பினாமி லோன்கள் போடப்படுகின்றன. அதற்குக் காரணம் சரியான முறையில் தணிக்கை செய்யப்படுவதில்லை என்பதுதான். ஆகவே இந்த ஆடிட் முறையை சீரிய முறையில் மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமச் சங்கத்திலும் பினாமி லோன்கள், செத்தவன் பெயரால் லோன் போட்டு, அப்பாவிகளின் பெயரால் லோன் போட்டு வாங்குவதும் இன்றைய தினம் அதிகப்படியான அளவில் இருக்கிறது. இப்போது கூட கூட்டுறவுத் துறையினால் இவை கண்டுபிடிக்கப்படவில்லை. பினாமி லோன் என்பது மூன்று, நான்கு லட்சம் என்ற அளவிற்கு உயர்ந்து கொண்டே போகிறது. இப்படி லட்சக்கணக்கில் ரூபாய் போகும்போது அதை கண்டு பிடிக்க அந்தத் துறையினால் முடியவில்லை. அப்படி பொது மக்கள் அவற்றைக் கண்டுபிடித்துக் கொடுத்தாலும்கூட சர்க்கார் நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுத்து தீவிர தண்டனைகள் கொடுக்க இந்த சர்க்கார் முன்வரவில்லை. அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறார்களே தவிர அவர்களின் மேல் தக்க நடவடிக்கைகள் எடுக்க இந்த சர்க்கார் தயாராயில்லை.

எனக்கு முன் பேசிய திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். 1¼ லட்சம் ரூபாய் கையாடல் செய்யப்பட்டு பிடித்து அரஸ்ட் செய்து மறுநாள் விடுதலை செய்யப்பட்டு



1970 ஏப்ரல் 2] [திரு. கே. சகாதேவ கண்டர்]

கேஸ்களைவாபஸ் வாங்க என்னென்ன வழிகள்உண்டோ அவற்றையெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று. உடனடியாக அவற்றை வாபஸ் வாங்கவும் செய்வார்கள். இப்படி லட்சக் கணக்கில் கொள்ளை அடித்தவர்களின் கேஸ்களை வாபஸ் வாங்குவது என்றால் எப்படி இந்த நிர்வாசம் நல்ல முறையில் செயல்பட முடியும் என்று கேட்கிறேன்.

தணிக்கையாளர்கள் கிராமங்களுக்குச் சென்றால் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெற்றவர்களின் கணக்குகளை தணிக்கை செய்து அவர்களிடம் நேரிடையாக ஒப்புதல் வாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் அப்படிச் செயல்படுவது இல்லை. அங்குள்ள தலைவர், நூறு பேர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் லிஸ்டை எழுதி அவரே கையெழுத்து போட்டுக் கொடுக்கக்கூடிய ஒரு நிலைதான் இன்று இருக்கிறது. ஆகவே ஆடிட்டர்கள் கடன் பெற்றவர்களிடம் நேரிடையாகச் சென்று நீங்கள் எவ்வளவு வாங்கி இருக்கிறீர்கள், எவ்வளவு செலுத்தியிருக்கிறீர்கள் என்று விசாரணை செய்து அவர்களிடம் கையெழுத்து வாங்கும் பழக்கம் இல்லை. ரிக்கார்ட் செய்கிற முறையில் அந்தத் திட்டம் இருக்கிறது. அப்படியிருப்பினும் அது சரியாக செயல்படுத்தப்படுவதில்லை. ஆகவே ஆடிட் செய்பவர்கள் நேரிடையாக கடன் வாங்கியுள்ள ஒவ்வொரு விவசாயியின் வீட்டுக்கும் சென்று நேரடியாக விசாரணை செய்து பார்த்தால் உண்மை நிலை விளங்கும். அப்படிச் செய்தால் 50 சதவீதம் சொசைட்டிகள் சர்க்காரிடம் அகப்பட்டு விடும். ஆகவே இந்த ஆண்டிலாவது ஆடிட்டர்கள் கிராமங்களுக்குச் சென்றால் கடன் வாங்கியிருக்கும் விவசாயிகளின் வீட்டிற்கு நேரடியாகச் சென்று விசாரித்து அவர்களிடம் கையெழுத்து வாங்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சொஸைட்டிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, இரண்டு மூன்று சங்கங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு 11,000 கூட்டுறவு சங்கங்கள் என்றிருந்தது இப்போது 6,000 சங்கங்கள் என்ற அளவிற்கு குறைக்கப்பட்டு விட்டன. அப்படிக் குறைக்கப் பட்டிருப்பதால் மக்களுக்கு அது பாதகமாகத்தான் இருக்கிறதே தவிர ஒருவித நன்மையும் இல்லை. ஆக, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருந்தால்தான் விவசாயிகள் அவற்றை அணுகி கடன் வசதி பெற்று நல்லமுறையில் விவசாயம் செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட முடியும். இதனால் சர்க்காருக்கு சிறிது செலவு ஏற்படும் என்றாலும் அதனால் விவசாயிகள் பயன் அடைய வாய்ப்பிருப்பதால் இப்போது அப்படி ஒன்றாகச் சேராத கூட்டுறவு சங்கங்கள் இருந்தால் அவை தனியாக இயங்க அனுமதி கொடுத்து அவை நல்ல முறையில் இயங்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. அது நல்ல முறையில் நல்ல லாபத்தோடு நடந்துவந்தது. இவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அங்கு அவர்கள் கட்சிக்காரர்களைப் புகுத்தி அந்தக் கூட்டுறவு ஆலை இப்போது நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. காரணம் கட்சிதான் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒரு காரணமும் இல்லை. அவர்கள் கட்சிக்காரர்கள் நுழைந்து எந்தவித வேலைகளையும் நாம் செய்யலாம், நாம் என்ன செய்தாலும் தப்பித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் அவர்களுக்கு ஏற்பட்டு அது நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போகிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் பெற்றவர்கள் ஒழுங்காக இரண்டு மூன்று ஆண்டுகள் கடன் தொகையைச் செலுத்திக் கொண்டிருந்தும்கூட அதை வரவு வைக்காமல் நல்லமுறையில் பரிசீலனை செய்யாமல் கோர்ட்டுகளில் கேஸ்கள் தாக்கல் செய்து அவர்களுக்கு சம்மன்ஸ் அனுப்பப்பட்டு கோர்ட்டுக்குப் போக வேண்டியநிலை இந்த ஆட்சியில் இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் தாளிப்பாடி சங்கத்தில் ஒருவர் கடன் வாங்கி 1968-69-க்கு உரிய பணத்தைச் செலுத்த ரசீது ன்வத்திருக்கிறார்கள். இன்று அவர்கள் பேரில் கேஸ் போடப்பட்டு அவர்கள் கோர்ட்டில் ரசீதுகளை தாக்கல் செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஊழல்களை எல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்காக சந்தானம் கமிட்டி சிபார்சுகளை இந்த வருடம் அமுலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கடைசியாக, கிராம சங்கங்களில் கடன் வாங்கும் நபர்கள் 10 சதவீதம் டெப்பாஸிட் கட்டவேண்டியிருக்கிறது. ஏழைகள் அப்படி பத்து ரூபாய் கட்டவேண்டுமென்பது அதிகமாக இருப்பதால் அந்தக் கட்டணத்தை பத்திலிருந்து ஐந்து ரூபாயாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. கே. மூர்த்தி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முன்னால் இருந்த அரசு செய்த சாதனைகளைவிட இந்த அரசு கூட்டுறவுத் துறையில் எத்தகைய முன்னேற்றகரமான சிறந்த சாதனைகளைச் செய்திருக்கிறது, செய்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இந்த கூட்டுறவு மானியத்தின் மீதான அறிக்கை அமைந்திருக்கிறது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதில் 1966-67-ல் கொடுக்கப்பட்டதைவிட, 1967–68-ல், 1968–69-ல். 1969-70-ல் கொடுத்ததைவிட இப்போது 12.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு விவசாயிகளுக்கு நல்லமுறையில் கடன் வசதி அளிக்க இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. தமிழ்நாடு பூராவும் ஒரு திட்டத்தை, பசுமைப் புரட்சி என்ற திட்டத்தை





நிறைவேற்றுகிறவகையில் தமிழ்நாடு பூராவும் நிலவள வங்கிகளை ஏற்படுத்தி அந்த வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கும், பம்ப் செட்கள் வாங்குவதற்கும், கிணறுகள் தோண்டுவதற்கும் கடன் உதவி வழங்க இந்த அரசு முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

இதற்கு முன்னால் இருந்த அரசு கூட்டுறவுத் துறையிலிருந்து கிராம மக்களுக்கு கடன்கள் வழங்கி வந்ததைப் பார்க்கும்போது உண்மையில் அது விவசாயிகளைப் பாதிக்கிற அளவிற்குத்தான் இருந்தது. எனக்கு முன்பேசிய திரு. சகாதேவ கண்டர் அவர்கள் சொன்னார்கள், இந்த ஆட்சியில் ஊழல்கள் மலிந்து விட்டதாக. இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் சங்கத் தலைவர், டைரெக்டர்கள் இவர்கள் சொந்தக் காரர்களுக்கும், உறவினர்களுக்கும்தான் கடன் வசதிகள் அளிக்கப் பட்டு வந்தனவே தவிர பொதுவாக எல்லோருக்கும் கொடுக்கப் படவில்லை. ஆனால் கழக அரசு அந்நிலையைப் போக்கி எல்லோருக்குமே பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தில் நல்ல முறையில் கடன் வசதி செய்து கொடுத்து வருகிறது.

அடுத்து, சிறப்பாகவும், குறிப்பாகவும், தமிழகத்திலுள்ள ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்களின் நலனுக்காக இந்த அரசு 1969-70-ல் 161 லட்சம் ரூபாய் ஒதுக்கி, 1970-71-க்கு ரூ. 202 லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். கைத்தறி நெசவாளர்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் அது தகும். ஏனென்றால் இந்த நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கைத்தறி ஆடைகளை தலையில் தூக்கிக் கொண்டு துணி வாங்கலையோ, துணி வாங்கலையோ என்று கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்த நேரத்தில் அவர்களுடைய கண்ணீரைத் துடைத்த நேரத்தில் அன்று வேறு யாரும் அதற்காக முன்வராத நேரத்தில் இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இவ்வளவு தொகை ஒதுக்கி கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்து வருவதை கைத்தறி நெசவாளர்கள் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறி நூல் விற்பனை செய்கிற வகையில் உள்ள விற்பனை வரியில் சிறிது தளர்த்தி அதைக் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கு கூட்டுறவு முறையில் இன்றைய தினம் அரசு பஸ் தொழிலை நடத்திக் கொடுக்கிறது. இது எந்த ஒரு அரசும் செய்யாத ஒரு காரியமாகும். தாழ்த்தப் பட்டவர்களின் முன்னேற்றம் பற்றி காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கவனிக்கப்படாமல் இருந்து வந்தது. அதை மாற்றியமைத்து

அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டும் என பஸ் தொழிலை கூட்டுறவு முறையில் அவர்களுக்கு ஏற்படுத்தித் தந்திருப்பது, அப்படி பெரும்பாலான மாவட்டங்களில் அமைத்துத் தந்திருப்பது என்பது பாராட்டுக்குரியதாகும். தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் அதுகுறித்து பாராட்டுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, விவசாய வங்கிகளிலே டைரக்டர்களாகப் பணியாற்றுகின்றவர்களிலே சிலபேர் நீண்ட நாட்களாக அதாவது ஒன் தேர்ட் ரிடையின்மென்ட் என்ற வகையில் நீடித்து, அவர்களாகவே எந்தெந்த ஊழல்களைச் செய்யமுடியுமோ அவைகளைச் செய்வதற்குச் சாதகமாக அந்த முறை இருக்கிறது. எனவே, இந்த முறையை மாற்றி, எல்லா டைரக்டர்களுக்கும் தேர்தல் வைத்து புதியவர்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வயபிள் யூனிட் அடிப்படையில் சங்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சில கோளாறுகள் இருக்கின்றன. பல கிராமங்களை இணைத்து ஒருவரைத் தலைவராக்கி அவருக்கு அந்தச் சலுகையைக் கொடுப்பதைவிட, பரவலாகக் கொடுத்தால், சலுகைகளும் பரவலாக்கப்படும் என்று சொல்லிக்கொண்டு பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இன்றைக்குச் சபை முன்னால் வைத்திருக்கிற கூட்டுறவுத் துறை மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு என்று சொல்லும்பொழுது முதலிலே மனிதக் கூட்டுறவு மட்டும்தான் கருதப்பட்டது. ஆனால் இன்றைக்கு கால்நடைகள், பறவைகள், பொருள்கள், வீடுகள், நிலங்கள் இது போன்ற எல்லாவற்றையும் கூட்டுறவு செய்வதற்கான காரியங்கள் நடந்துகொண்டு வருவது பாராட்டுதலுக்குரியது என்று கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய இராஜ்யத்திலே எல்லாவிதமான இலாக்காவையும் வேறுபடுத்தி, இந்தக் கூட்டுறவு இலாக்கா ஒன்றுக்கு மட்டும் ஒரு அமைச்சரை வைத்திருப்பது, இன்னும் கூட்டுறவைத் துரிதப்படுத்துவதற்கான காரியங்களிலே இந்த அரசு மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறது. ஆனாலும்கூட இந்தக் கூட்டுறவுத்துறை இப்பொழுது விரிவடைந்து, வளர்ந்து வந்திருந்தாலும்கூட இது ஏதோ லேவாதேவி ஸ்தாபனம் போன்றுதான் இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் கடன் கொடுப்பது, வட்டி போட்டு வாங்குவது என்ற முறைதான் அதிகமாக இதிலே இருக்கிறதே தவிர மற்ற அம்சங்கள் இரண்டாம்தரமாக, மூன்றாம்தரமாகக் கருதப்படுகின்றன என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



கூட்டுறவு என்று சொல்லும்பொழுது அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் ஒன்றுகூடி, அவர்களின் தேவை என்னென்ன இருக்கிறதோ அவ்வளவையும் கூட்டுறவு முறையிலே உருவாக்கி வளப்படுத்தச் செய்வதற்கான முறையிலே இந்தக் கூட்டுறவுத்துறை அமைந்து வளர வேண்டுமென்பது என்னுடைய கருத்து. அது மட்டுமின்றி, கூட்டுறவுத்துறை எந்த இடத்திலே அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதிலே ஒரு அடிப்படையான கருத்தைக் கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் அப்படிப்பட்ட ஒரு அடிப்படையான கருத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை.

கூட்டுறவுத் துறையிலே, நிலத்தை வளப்படுத்தி, விரிவுபடுத்தி, நிலத்தைப் பண்படுத்தி, நிலத்தைச் செப்பனிட்டு ஒழுங்காக உற்பத்தி செய்வதற்கான முறையிலே அதிகக் கவனம் செலுத்தப்படுகிறதா என்றால் அப்படி அதிகக் கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. எங்கே வளமாக இருக்கிறதோ, அந்தப் பகுதியையே மீண்டும் வளப்படுத்த அமைந்திருக்கிறதே தவிர, வளமில்லாத பகுதிகளை அதிகமாக வளப்படுத்தக்கூடிய முறையிலே அது அமையவில்லை. ஏனென்றால், வளமில்லாத பகுதி என்று சொல்லும்பொழுது, புஞ்சை நிலப் பகுதி என்று குறிப்பிட விரும்புகிறேன். புஞ்சை நிலப் பகுதிகளை நாம் எடுத்து, கூட்டுறவு முறையிலே அதிகமாக அதிலே கவனம் செலுத்தி, வளப்படுத்த வேண்டியது இன்றைய தேவையாக இருக்கிறது. ஆங்காங்கிருக்கும் வளம் பொருந்திய பகுதிகளிலே, டிராக்டர்கள் வாங்கித் தருவது, நல்ல விதைகளை அளிப்பது, தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்பதெல்லாம் இருந்தாலும்கூட, மற்றப் பகுதிகளிலேயிருப்பவர்களுக்கு, அதிகமாகத் துன்பத்திற்கு, கஷ்டத்திற்கு ஆளாகியிருப்பவர்களுக்கு, அங்கே தான் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

அப்படிக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லும்பொழுது, இப்பொழுது நில வள வங்கிகளை ஆங்காங்கு துவக்கியிருக்கிறார்கள். அந்த நில வள வங்கிகள் துவங்குவது என்ன முறையிலே துவங்கப்பட்டது, எந்தப் பகுதியிலே நில வள வங்கிகள் தேவை என்ற அடிப்படையைப் பார்த்துத் துவங்கியிருக்கிறார்களா என்றால் அப்படிப் பார்த்துத் துவங்கவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஏதோ சில இடங்களிலே நில வள வங்கிகளைத் துவங்க வேண்டுமென்ற முறையிலே துவங்கப்பட்டிருக்கிறதே தவிர அதற்கான அடிப்படையான, நியாயமான இன்னின்ன காரணங்கள் இருந்தால், இன்னின்ன முறைகளிருந்தால் முதலாவதாக ஆரம்பிக்க வேண்டும், இரண்டாவதாக ஆரம்பிக்க வேண்டும், மூன்றாவதாக ஆரம்பிக்க வேண்டும் என்று வரிசைப் படுத்தி, ஏதாவது முறைபடுத்தி செய்யப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக மேட்டூரிலே ஒரு நில அடைமான வங்கி வைப்பது என்று ஒரு ப்ரப்போசல் இருந்து. அங்கேயிருந்து முடிவெடுக்கப்

பட்டு அதற்கான ப்ரமோட்டரும் நியமிக்கப்பட்டு, இப்பொழுது அங்கே அது இல்லை. நிலவள வங்கி வருவதால் நில அடைமான வங்கி வைக்கத் தேவையில்லை என்று விட்டுவிட்டார்கள் போலத் தெரிகிறது. அப்படியிருந்தால், முழுவதும் புஞ்சைப் பகுதிகளாக விருக்கும் அந்தப் பகுதியிலே முதன்முதலாக நிலவள வங்கியை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி ஆரம்பிக்கவில்லை. ஏற்கெனவே நில அடைமான வங்கி வைக்க ஏற்பாடு நடந்த அந்த இடத்திற்கு முதலிடம் அளித்து, மற்ற இடங்களுக்கு இரண்டாவதாக அளித்திருக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. புஞ்சைப் பகுதிகளில் நில வள வங்கிகள் வைப்பது என்று முடிவு செய்திருந்தால் அதிலும் அந்தப் பகுதிக்கு முதலிடம் தந்திருக்க வேண்டும், ஆனால் அப்படி அந்த இரண்டாவதா வகையிலும் முதலிடம் தராததைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம். தஞ்சை மாவட்டம் மிகவும் வளமான பகுதி என்பது தெரியும். அங்கே ஒரு நிலவள வங்கிகூடத் துவங்கவில்லை. மேட்டூர், மேய்ச்சேரி போன்ற புஞ்சைப் பகுதியிலே துவங்கி, அவைகளை நஞ்சையாக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சரவர்கள் கூறியதற்கு நன்றி. நான் கூறுவதெல்லாம் புஞ்சைப் பகுதி என்று சொல்லுவது, என்னுடைய தொகுதியிலே நங்கவல்லி யூனியன், கொளத்தூர் யூனியன் என்ற இரண்டு பகுதிகளையும் வைத்துச் சொல்லுகிறேன். அந்த இரண்டு பகுதிகளிலும் நில வள வங்கிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மேட்டூரில் நில அடைமான வங்கி ஏற்படுத்துவது என்று முடிவெடுத்து, அது இல்லாமல் போயிருந்தாலும்கூட, நிலவள வங்கி துவங்குவதற்கு அதற்கு முதலிடம், முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பண்டகசாலைகள் இருக்கின்றன. இவைகள் ஆங்காங்கு துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்தப் பண்டகசாலைகள், கிராமத்திலிருக்கும் ஆரம்பப் பண்டகசாலைகள், மத்திய பண்டகசாலையிடம் பொருள்கள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று விதியிருக்கிறது, முறை இருக்கிறது. ஆனால் மத்திய பண்டகசாலைகளில் வாங்கக்கூடிய பொருள்கள் தகுதியான பொருள்களாக இருப்பதில்லை. கெட்டுப்போன பொருள்களாக, மோசமான பொருள்களாக இருக்கின்றன. அதைவிட நல்ல பொருள்களை வெளியிலே கடைகளில் வாங்கிக்கொள்ளலாம் என்று பல பண்டகசாலைகள் வெளியிலிருந்து வாங்குகிறார்கள். அப்படியிருக்கின்ற நிலைமை மாறவில்லை என்று சொன்னால், ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் இன்னொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் இருக்கும் உறவு சரியாக இல்லாமல்போனால் அது முறையாக இயங்காமல் அதனால் பெரும் நஷ்டம் ஏற்படுகிறதே தவிர, லாபமாக இருப்பதற்கான வழிமுறைகள் தென்படவில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். மத்தியக் கூட்டுறவுப் பண்டகசாலை ஏன் அப்படி நடக்கிறது என்று சொன்னால், ஆயிரக்கணக்கான மூட்டைகள் பொருள்களைக் கொண்டுவந்துபோடுகிறார்கள். அந்தப் பொருள்கள் சரியாக இருக்கிறதா என்று பரிசிலித்து, இது நல்லது, இது கெட்டது என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



பல பண்டகசாலைகளில் ஆங்காங்கு வியாபாரம் செய்யும் பொழுது கடன் அளித்து வியாபாரம் நடக்கிறது. கட்டுப்பாடு உள்ள பொருள்கள் இருந்தால்தான் வியாபாரம் நடக்கிறது, இல்லாவிட்டால் வெளியிலே உள்ள கடைகளிலே விற்கும் சாமான்களை வாங்குகிறார்கள். வெளியிலே உள்ள கடைகளில் விற்கும் சாமான்களுக்கும் பண்டகசாலைகளில் விற்கும் சாமான்களுக்கும் விலையில் பெரும் வித்தியாசம் மேற்படுவதால் பண்டக சாலைகளில் வியாபாரம் நடக்காமல் போகிறது. அதனால் பெரும் நஷ்டம் உண்டாகிறது. அப்படி நஷ்டம் ஏற்படாமலிருப்பதற்கு, பெரும் கூட்டுறவுப் பண்டக சாலைகளில் முறையாக பரிசிலித்து முறையாக திருத்தி வைப்பதற்கான முறை இன்னும் ஏற்படவில்லை என்று கருதுகிறேன். உதாரணமாக, மேட்டூரிலே ஒரு தொழிலாளர் பண்டகசாலை இருக்கிறது. அங்கே பல மாதங்களுக்கு முன்பு அங்கிருக்கும் அங்கத்தினர் எல்லாம் 40,000 ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்படுத்தி விட்டார்கள் நிர்வாகத்தில் பொறுப்பாளிகளாக இருப்பவர்கள். ஆகவே, நிர்வாகத்தை மாற்றி பண்டகசாலையைக் கூட்டுறவுத் துறையே எடுத்துக்கொண்டு நடத்த வேண்டுமென்று கோரி அங்கத்தினர்களில் அதிக படசமானவர்கள் கையெழுத்துபோட்டு அமைச்சரவர்களுக்கு அனுப்பினார்கள். அது சம்பந்தமான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. பல மாதங்களாகிவிட்டன.

ஆங்காங்கிருக்கும் பண்டகசாலைகளின் கணக்குகள், வரவு செலவுகளைப் பார்க்கும்பொழுது, ஆடிட் செய்தபிறகு ஒரு வருஷம் கழித்துதான் எவ்வளவு நஷ்டமாகியிருக்கிறது என்று சொல்லக்கூடிய முறையிருக்கிறது. நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்தவுடனே அதைச் சீர்திருத்துவதற்கான முறைகள் இன்னும் பண்டகசாலைகளிலே இல்லை என்று சொல்லிக் கொள்ளுகின்றேன். இம்மாதிரி கூட்டுறவுத்துறை விரிவடைந்து வரவர அதனுடைய ஊழல்களின் அளவும், நஷ்டத்தின் அளவும் விரிவடைந்து வரக்கூடாது என்று கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விரிவடைய விரிவடைய அதனுடைய திறமை, ஜனங்களின் எல்லாவிதமான தேவைகளை நிறைவேற்றும் முறையிலே வளர வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(திரு. த. தருமலிங்கம் தலைமை)

**திரு. பி. வெங்கடசாமி அவர்கள்** தெலுங்கில் உரையாற்றினார்கள்.

**திரு. எம். சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையின் மீது எனது இரண்டொரு கருத்துக்களை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கூட்டுறவு இயக்கம் மக்கள் சமுதாயத்திலே மிகவும் தேவைப்பட்ட, முக்கியத்துவம் வாய்ந்த, ஒரு இயக்கமாகும். சமத்துவமும், சகோதரத்துவமுமான நிலைமையில் மக்கள் வாழ்விற்கு உண்மையான வழிவகைகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு இயக்கம் அது என்றால், அது மிகையாகாது. எதிர்காலத்தில் மக்கள் சமுதாயம் சமத்துவ, சகோதர உணர்சியோடு வாழ்க்கையை நடத்துவதற்கு பல திட்டங்களை இந்த இயக்கத்தின் மூலமாக மேற்கொண்டிருக்கிறார்கள் இந்த ஆட்சியாளர்கள் கடமை உணர்ச்சியோடு, பொறுப்பு வாய்ந்த நிலைமையில் என்பதை நாம் அறிவோம். ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள், கடமை உணர்ச்சியோடு, பொறுப்பு வாய்ந்த நிலைமை செலுத்தாததன் காரணமாகத் தான் இந்தக் கூட்டுறவுத் துறையில் நல்ல முன்னேற்றம் அடிப்படையில் ஏற்படவில்லை என்று சொன்னால், அது மிகையாகாது . . . .

**திரு. கி. ஜயராமன் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், எதிர்க்கட்சி வரிசையில் தலைவர்கள் யாருமே இல்லை என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(இத் தருணத்தில் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எதிர்க்கட்சி முன்வரிசையில் வந்து உட்கார்ந்தார்.)

**திரு. எம். சண்முகம் :** ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள் கூட்டுறவு இயக்கத்தில் அதிக கவனம் செலுத்தியிருப்பார்களேயானால், இன்று எதிர்க்கட்சியிலுள்ள நண்பர்கள் சிலர், தோழர் இராமமூர்த்தி, தோழர் கோதண்டராமன் போன்றவர்கள், கூட்டுறவு இயக்கத்தில் பல ஊழல்கள் நடந்துவிட்டன என்று குறைபாடுகளைச் சொல்வதற்கு இடம் ஏற்பட்டிருக்காது. இதற்கு முன்பு இருந்த ஆட்சித் துறையினர் கூட்டுறவு இயக்கத்தில் தங்களுடைய கவனத்தை அதிகமாகச் செலுத்தவில்லை, கூட்டுறவு இயக்கம் முன்னேற வழிவகைகளைக் காணவில்லை, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அதன் காரணமாகத் தான் சில ஊழல்கள் அங்கும், இங்கும் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை மூலமாக மக்கள் வாழ்க்கைக்கு எல்லாத் துறைகளையும் செயல்படச்செய்வது மிக முக்கியம். கூட்டுறவுத் துறையின் மூலம் ஒவ்வொரு துறையும் இயங்குவது என்பதை நடைமுறைக்குக் கொண்டுவந்தால், மக்கள் அன்றாட தேவைக்கு, எல்லா வகைகளிலும் கூட அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மக்கள் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வற்ற, உயர்வு தாழ்வற்ற நிலைமை ஏற்பட்டு, சமத்துவ சகோதரத்துவ முறையில் மக்கள் வாழ்வதற்கு அடிப்படையான இயக்கம்



கூட்டுறவு இயக்கம் என்பதை இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டிருக்கிற ஊழல்கள் என்று குறிப்பிட்ட அந்த நிலைமை இன்னும் நீடித்துக்கொண்டு இருக்கக்கூடாது என்ற ஒரு நிலைமை உணர்ந்து தான், அறிஞர் அண்ணா அவர்கள் பசுமை புரட்சி என்ற ஒரு திட்டத்தை வகுத்துக்கொடுக்க, அதன் வழியிலே நமது முதல் அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர் சென்று, ஒரு புரட்சிகரமான திட்டத்தை கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உணவுப் பொருள் உற்பத்தி மிகவும் கவலைக்கிடமான நிலையில் பல ஆண்டுகளாக இருந்துவந்ததை நாம் கண்டிருக்கிறோம். விவசாயத் துறையிலுள்ள கிராம மக்கள் தங்களுக்கென்று ஒரு நிலையான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாமல் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். அவைகளை எப்படி நீக்குவது என்பதைக் கண்டறிந்து, பசுமைப் புரட்சித் திட்டத்தை தீட்டியிருக்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள். மக்கள் வானத்தை எதிர்பார்த்து வாழ்வதைவிட, பூமியில் கிடைக்கக் கூடிய நீரை விவசாயிகள் பெற்று, அதன் மூலம் விவசாயம் செய்து, தங்களுக்கு நிலையான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு திட்டத்தை இந்த அரசு வகுத்திருக்கிறது என்றால், எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இந்தத் திட்டம் எப்படிப் பயன்பட்டு வருகிறது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். குழாய் கிணறுகளை அமைத்து, பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை விசையேற்றங்களின் மூலமாக விவசாயிகள் பெற்று, இதுகாறும் வசதியற்ற நிலைமையில் இருந்த விவசாயிகள், கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வந்த விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதற்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு அரசாங்க நிர்வாகத்தில் இதைவிட விவசாயத்திற்கு பயன்படக்கூடிய ஒரு இயக்கம் இருக்க முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அளவில் நிலவள வங்கிகள் ப 1-00
முன்னேற்றம் விரிவுபடக்கூடிய அளவில் இன்றைக்கு ஆட்சியினர் கவனத்தை நிலவள வங்கிகளின் மூலமாக விவசாயிகள் கடன் பெற்று தங்களுக்கு நிலையான வாழ்வைத் தேடிக் கொள்வதற்கு ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு திட்டத்தை இன்று வகுத்திருக்கிறது. சுலபமான வழியில் கடன் பெறுவதற்கும் நிலவள வங்கிகளின் மூலம் சுலபமாக கடன் பெறக்கூடிய முறையில் உள்ள குறைகளை சிந்தித்துப் பார்த்து அவைகளை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளை வகுத்து சுலபமான கடன் பெறுவதற்கும், உடனுக்குடன் கடன் பெறுவதற்கும் உண்டான திட்டத்தை ஏற்படுத்தி இன்று நிலவள வங்கிகளின் சீரமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நிலவள வங்கியில் கடன் பெறுவதற்கு என்கம்பரன்ஸ் சர்ட்டிபிகேட் இன்றைய நிலையில் தேவையில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். நிலவள வங்கி முதல் கடனாக கருதப்படும்

என்ற சட்டம் வந்தபிறகு என்கம்பரன்ஸ் சர்ட்டிபிகேட் காரணமாக கால தாமதம் ஏற்படக்கூடிய ஒரு கட்டத்தை நாம் நிவர்த்திக்கலாம் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து கூட்டுறவு இயக்கங்கள் மூலமாக கிராமங்களில் சிறு கைத்தொழில்கள் ஏற்படுவதற்கான நிலையான திட்டத்தை நம் அரசினர் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சிறு கைத் தொழில்களை ஒவ்வொரு விவசாய குடும்பத்திலும் கூடுமான வரையில் கூட்டுறவு இயக்க முறையில் மேற்கொள்வதற்கான ஒரு திட்டத்தை வகுத்து சிறு கைத்தொழில்களை கிராமங்களில் புகுத்தி அவர்களுடைய நிதி வருவாயை பெருக்கி கிராமப்புற மக்கள் நகரங்களுக்குச் சென்று வேலை தேடித் திரியும் நிலைமை ஒழிக்கப்பட்டு கிராமங்களிலே அவர்கள் குடும்பங்கள் பிழைக்க வழிவகையை ஏற்படுத்தி அதற்கான சிறு கைத் தொழில்களை கிராமப்புறங்களில் துவக்குவதற்கான வழி வகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தவிர கூட்டுறவு ஸ்தாபனங்களை ஆடிட் செய்வது சீனியர் இன்ஸ்பெக்டர் ஆப் கோ-ஆபரேடிவ் சொசைட்டிஸ் இவர்களைக் கொண்டு நடத்துவது அவ்வளவு நியாயமானதாகத் தோன்றவில்லை. அதற்கென்று தனியாக ஆடிட்டிங் இலாகா ஏற்படுத்தி அதன் மூலம் கிராம நாணயச் சங்கங்களை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கங்கள் மூலமாக விலைவாசியின் முறையை சீர்படுத்தவேண்டுமென்றால் சிறப்பு அங்காடிகளை ஆதரவு உள்ள இடங்களில் நியமித்து அவைகளுக்கு கட்டட வசதிகளை அரசினரே தேடிக் கொடுத்து பிறகு சங்கங்கள் மூலம் திரும்ப பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

இந்தக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கிராமப்புறங்களில் இன்று விவசாயிகளுக்கு ஓரளவு தேவையான கடன்கள் கிடைத்து வருகின்றன என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்கிறோம். அதே நேரத்தில் ஒரு சில இடங்களில் அது சம்பந்தமாக ஊழல்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவைகளைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் அவ்வப்போது எடுக்கவேண்டும். வேறு பல இலாக்கா, ஸ்தாபனங்களில் இல்லாத ஊழல் இதில் இருப்பதாக நான் கருதவில்லை. இருந்தாலும்கூட இன்று நம்முடைய கிராமப்புறங்களில் கடன்கள் கொடுக்கக் கூடிய அந்த ஸ்தாபனங்கள் இதற்கு முன்னால் 1966-67-ல் 31 கோடி ரூபாய் கொடுத்தது. இன்று ரூ. 44 கோடி வரையில் கொடுக்கப்





பட்டிருக்கிறது. இனி 1969-70-ல் அதைவிட அதிகமாக கொடுக்கப்பட திட்டம் இடப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் காணப்படுகிறது.

நீண்ட காலக் கடன் 1966-67-ல் ரூ. 3கோடியாக இருந்தது இன்று ரூ. 14 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இவ்வாறு விவசாயிகள் கடன் அளவு உயர்ந்து கொண்டே போவது நல்லதா என்று சிந்திக்க வேண்டும். கடன் வாங்கி தொழிற்சாலைகள் ஏற்படுத்தி லாபம் அடைவது போல் அல்ல கடன் வாங்கும் விவசாயிகள் நிலைமை விவசாயிகள் கடன் வாங்கினால் அவர்களுடைய கடன் பளு அதிகரித்துக் கொண்டே போகிறது. அவன் திருப்பி தரக் கூடிய சக்தி குறைகிறது. குறிப்பாக இந்தக் கடன் வழங்குவதில் சென்ற காலத்தில் இருந்த வட்டி விகிதம் இன்று உயர்ந்திருக்கிறது. முன்பு 6¼ சதவிகிதம் வட்டி, இன்று 7.50 முதல் 8.40 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அது போல பங்குத் தொகையும் ரூ. 100 கடன் வாங்கவேண்டுமானால் முன்பு பங்குத் தொகை ரூ. 10, இது இப்போது ரூ. 20 வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. பங்கு கூட ரூ. 11 கோடியாக இருந்தது. 1969-70-ல் கிராமச்சங்கங்களில் ரூ. 12 கோடி பங்கு தொகையாக விவசாயிகள் செலுத்தியிருக்கின்றனர். பங்குத் தொகையின் அளவு ரூ. 10 க்கு மேல் போகக் கூடாது என்று வரையறை செய்யவேண்டும்.

அதே நேரத்தில் விவசாயிகள் வாங்கும் கடனுக்கு வட்டி விதம் அதிகமாகக் கூடிக்கொண்டே போவதால் அவர்களால் வட்டியும் கடனும் திருப்பி தரமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. பொதுவாக கிராமச்சங்கங்களில் கடன் வாங்குகிற விவசாயி நிலை அவர்களுடைய கடன் பளு ஒவ்வொரு வருஷமும் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரம், இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் என்று உயர்ந்து கொண்டே போகிறது. வாங்கிய கடனைத் திருப்பி செலுத்த முடியாத காரணத்தால் வேறு ஒரு லேவா தேவிக்காரரிடம் கந்துவட்டிக்கு கடன் வாங்கி செலுத்துகிறார்கள். அது முடிந்தவுடன் பாங்கியில் பணம் எடுத்து அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். குறைந்த வட்டி என்றாலும் கடனைத் திரும்பச் செலுத்த முடியாத சூழ்நிலை கிராமங்களில் இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் கடன் வழங்கும் காலத்தில் ஒவ்வொரு மகசூலுக்கும் ஒரு காலத் தவணை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பருத்தி என்றால் ஒரு வருஷம் தவணை. நிலக்கடலை என்றால் ஆறு மாதம் தவணை. வேறு ஒரு பொருள் என்றால் மூன்று மாதம். சோளம் என்றால் 4 மாதத் தவணை. அப்படி 4, 5 விதமான பயிர்களை செய்யும் விவசாயிகளுக்கு 4, 5 விதமான கடன்களை வழங்கினால் அவன் திரும்ப 3, 4 தவணைகளில் செலுத்தவேண்டும் என்பது அவ்வளவு பொருத்தமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் எத்தனை விதமான பயிர்கள் செய்தாலும் அவைகளை மொத்தமாகக் கணக்கில் கொண்டு ஒரு வருஷத்திற்குத் தேவையான கடனை மொத்தமாகக் கணக்கிட்டு அந்தக் கடனை

மொத்தமாக பாஸ் புக் முறையில் சாங்ஷன் செய்துவிட்டு தேவைப் படும்பொழுது வாங்கிக் கொண்டு எப்போது வேண்டுமானாலும் ஒருவருடத்திற்குள் செலுத்தக்கூடிய முறையில் வழங்க வேண்டுமே தவிர ஒவ்வொரு பயிருக்கும் ஒரு மாத தவணை ஏற்படுத்தி அந்த தவணைக்குள் குறிப்பிட்ட பயிர் விளையவில்லை என்றால் செலுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அபராதவட்டி செலுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே ஒரு விவசாயிக்கு ஒரு வருஷத்திற்கு தேவையான மொத்த கடனைக் கணக்கிட்டு பாஸ் புக் சிஸ்டம் மூலம் கடனை வழங்கி ஒரு வருஷத்திற்குள் திருப்பி செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும், என்று யோசனையை சொல்லுகிறேன்.

அடுத்து இன்று ரிசர்வ் பாங்கு நம்முடைய கூட்டுறவு பாங்குக்கு 3 சதவீதம் வட்டிக்கு கடன் கொடுக்கிறது. ஆனாலும் நம்முடைய விவசாயிகளின் கைக்கு வரும்போது அது 8 சதவீதம் வட்டியாக உயர்ந்துவிடுகிறது. 5 சதவீதம் இடையில் உள்ள பாங்கு களுக்கு கமிஷன் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது.. இது தேவைதானா என்று ஆலோசித்து, இப்படி ரிசர்வ் பாங்கு வழங்கும் கடனை கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தாலூகா மட்டத்தில் ஒரு அமைப்பின் மூலம் கிராம சங்கங்களுக்கு ரிசர்வ் பாங்க் கடனை வழங்கும் ஒரு ஏற்பாட்டை செய்தால் 3% வட்டிக்கு கிடைக்கும் கடனுக்கு 4½ சதவீதம் மேல் விவசாயிகள் வட்டி கொடுக்கவேண்டிய நிலை வராது. இடையில் போகிற 5% வட்டி விவசாயிகள் தலையில் விழாமல் ஓரளவுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் கூட்டுறவு மேல் பார்வை யூனியன் அமைப்பு தனியாக அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இன்று நிலவள வங்கிகளில் பழைய கடன் களைத் தீர்க்க கடன் வழங்கப்படுவது இல்லை. ஏற்கனவே ரிசர்வ் பாங்கு கண்டிஷனை சொல்லுகிறார்கள். இதனால் அவர்கள் சர்க்கார் கடனை இருந்தாலும், அடைமானமாக இருந்தாலும், ஒத்தியாக இருந்தாலும் அவர்கள் லேவாதேவிக் காரர்களிடம் போய் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. இதனால் விவசாயிகள் என்றைக்கும் பழைய கடன்களிலிருந்து மீளமுடியாத துர்பாக்கிய நிலைமை ஏற்படும்.

அடுத்தபடியாக இன்று வேளாண்மை மறு நிதி கழகத்தின் உதவி பெற்ற சிறுபாசன அபிவிருத்தி திட்டம் இருக்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் தாலூகா சேர்க்கப் பட்டிருக்கிறது. கோவில்பட்டி தாலூகாவும் பின் தங்கிய பிரதேசம். அதையும் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கின்றேன்.

வீடு அடமான சங்கங்கள் நகரங்களில் அமைக்கப்படுகின்றன. கிராமங்களில் இவைகள் இல்லை. பல சங்கங்கள் இருந்தன. செயல் படாமல் ஸ்தம்பித்துப் போய்விட்டன. அந்த சங்கங்களுக்கு நிதி உதவி கிடைக்கவில்லை. அந்த சங்கங்களை உயிர்ப்பிக்க செய்து





ஒவ்வொரு தாலூகாவிலும் யூனியனில், 3, 4 சங்கங்களை அமைத்து, அப்பகுதி கிராமங்களை இணைத்து கிராமங்களில் வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று தெரிவித்துக் கொண்டு . . . (அடுத்த அங்கத்தினர் அழைக்கப்பட்டார்).

* **திரு. கி. ஜயராமன் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், each for all, all for each என்ற உன்னதமான தத்துவத்தைக் கொண்டது இந்த கூட்டுறவுத் துறை.

மேலை நாடுகளிலெல்லாம் உண்மையாகவே முன்னேறியிருக் கிறார்கள். நம் நாட்டில், பஞ்சாப் மாநிலத்திலும், குஜராத் மாநிலத்திலும் நம்மைக்காட்டிலும் அதிகமாக முன்னேறியிருக் கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் இங்கே நாம் கூட்டுறவு என்று சொன்னதுமே, நம்மில் பலருக்கு ஒரு 'அலர்ஜி', பீதி ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அதனால் நிர்வாகம் சரியில்லை, அந்த இயக்கமே சரியில்லை என்று சொல்லுகிறார்கள். இயக்கம் சரியில்லை என்று சொல்வதும் சரியில்லை. அதைப் பொறுத்துத்தான் கூட்டுறவு இயக்கம் இருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத் திலேயே எல்லை மாநில மாகிய பஞ்சாப் மாநிலத்தில் இந்த இயக்கம் வெற்றிபெற முடியும் என்றால், நாம் இங்கே குறைகூறிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. நிர்வாகம், செய்பவர்களைப் பற்றி தான் நாம் சொல்ல வேண்டும். இயக்கம் தவறானது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் இந்த இயக்கமே அழிந்து விடவேண்டும் என்றார்கள். அவர்களுடைய கட்சிப் பாடம், நாம் பேரறிஞர் அண்ணாவிடம் கற்றது, ஆக்கி செப்ப னிட்டு, முன்னேறுகின்ற பாடம் ஆகவே, நாம் கூட்டுறவில் அக்கறை கொண்டு, செயல்படுகிறோம்.

இந்தச் சங்கங்களெல்லாம் கடன் கொடுக்கும் சங்கங்கள் மட்டு மல்ல, கடனைத் திரும்பப் பெறாத சங்கங்கள் என்பதை மாற்றிப் புதுமையாக மாற்றங்களைச் செய்து, இதற்காக தனியாக காவல் துறையையும் ஏற்படுத்தியிருக்கிறோம். கடந்த காலத்தில், நடந்த குற்றங்கள் இப்பொழுது வெளியே கொண்டுவரப் பட்டிருக் கின்றன. நம்மைப்போல செயல்படுவதைக் கண்டு, நிர்வாகி களும் தவறுகள் ஏற்படாமல், நாம், அஞ்சும் முறையில், படிப் பினையைப் பெற்று வருகிறோம். ஆகவே, இயக்கத்தைத் தவறு சொல்வது சரியில்லை.

மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். கடன்களை ஏராளமாகக் கொடுக்கிறோம். ஊழல்கள் அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்கிறார் கள். நிலுவைகள் அதிகமாக இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டதன் பிறகுதான் அதிகம் என்கிறார்கள். குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வர்கள் சொன்னார்கள். உண்மையில் அதுவல்ல நிலைமை. இந்திய துணைக் கண்டத்தில் கடன் நிலுவைகளைப் பார்த்தால்,

இந்திய சர்க்காரின் அறிக்கை பிரகாரம், கடன் நிலுவை சராசரி மொத்தம் 34 சதவீதம். அதில் நாம் பல்வேறு மாநிலங்களை பாக்கும் போது, அஸ்ஸாம் மாநிலத்தில் கடன் நிலுவை 46%, பீகாரில் 44%, மைசூரில் 40% இப்படி வரிசையாக வந்து கொண்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலமும், தமிழ்நாடும் தான் 27%, கடைசியாக வருவது குஜராத் மாநிலம். ஆக நம்முடைய மாநிலத்தைப் பாக்கும்போது, நாம் மற்றவர்களைக்காட்டிலும் முன்னேறி இருக்கிறோம் என்பது தெளிவு. குஜராத் நம்மைவிட முன்னேறியிருக்கிறது என்றாலும், அங்கே கூட்டுறவு இயக்கம் நல்ல முறையிலே நடந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம், இயக்கத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் இருப்பதால்தான் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது நாம் கடன் நிலுவையில் பின் தங்கவில்லை.

அரிசி ஆலைகளைப் பற்றி காங்கிரஸ் உறுப்பினர் திரு. ராமமூர்த்தி பாராட்டத்தான் செய்தார்கள். நம்பிக்கையில்லாமலேயே செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 50 ஆலைகளை அரசினர் நிறுவியிருக்கிறார்கள் என்றால் அது எதனால் என்பதைப் பார்க்கவேண்டும். பல்வேறு மாவட்டங்களில் ஏறத்தாழ, 12 நவீன மில்கள் நிறுவுவது பற்றிப் பாராட்டினாலும், அது மக்களுக்கு அளிக்கும் காணிக்கையாகப் பாராட்டினாலும், என்னுடைய சேலம் மாவட்டத்தில் ஒரு ஆலையும் ஏற்படவில்லை என்பதை எடுத்துக்காட்டி, அரசு அதற்கான வழி வகை செய்ய வேண்டும் என் றுகேட்டுக் கொள்கிறேன். சொல்லலாம், விற்பனை சங்கங்களுக்கு 115 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று. விற்பனை சங்கம் ஆரம்பித்தால் ஆட்சேபனையில்லை என்று சொல்லலாம்; விற்பனை சங்கம், சேலத்தில் மாற்றானிடம் இருக்கிறது. அதனை அரசு வலியுறுத்தும் என்று நம்புகிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கடன்கள் கொடுக்கிறோம். நிலவள வங்கிகள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். அதையும் கவனித்து அரசு செய்ய வேண்டும்.

முன்னாலே பேசிய திரு. எ. கே. மூர்த்தி அரசு கைத்தறி மக்களுக்கு அதிகமான அளவில் சேவை செய்துவருகிறது, ஆகவே மேலும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என்று விளக்கமாகச் சொன்னார்கள். தரமுள்ள ஆடைகளை, வண்ண வண்ண ஆடைகளை உண்டு பண்ணுகிறோம், பருத்தி நூலை மட்டும் நாம் நம்பியிருக்கக் கூடாது. நார் பட்டு, ஸ்டேபில் ஃபைபர், பட்டு நூல் இவற்றிலும் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று, பயிற்சி நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி 12 நிலையங்களை ஏற்படுத்தி கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி அளித்திருக்கிறது.

கடைசியாக, நம்முடைய மாநிலத்தில் வண்டி தெளிவாக ஓடுகிறது. கவிழாது. ஆனாலும் விசைத்தறி பற்றி நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இங்கே மாநில அரசு பார்த்து நெச





வாளர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும், மாஸ்டர் வீவர்களுக்கு அல்ல. அப்படிக் கொடுக்கும்போது, இந்த ரகம் தான் என்று சொல்ல வேண்டும். கலர் சேலையும், கரைபோட்ட வேஷ்டியும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்கிற உன்னதமான கருத்தை மத்திய சர்க்கார் மூலமாக வலியுறுத்த வேண்டும். அகமதாபாத்திலிருந்து, மகாராஷ்ட்ரத்திலிருந்து, ஏராளமான மில், விசைத்தறித் துணிகள் வந்துகொண்டிருக்கின்றன. அதை தடுக்க வேண்டும் என்று தொழில் அமைச்சர் கூடச் சொன்னார்கள். உண்மையிலேயே அந்த வகையான உற்பத்தி நடக்காமல் மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நீண்ட நாளாக விவசாயிகளுடைய குறை, ஒரே இடத்தில் இருந்து அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்பதுதான். ஏழை விவசாயிகளுக்கு அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய கடன்களை வட்டார அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று மாற்றி அந்த அளவில் 67 நில வள வங்கிகளை ஏற்படுத்தியிருப்பதற்காக, முதல்வருக்கும், கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதை நிச்சயமாக விவசாயிகள் பாராட்டுவார்கள். அதே போல, இந்தத் துறைக்கு தனியாக செயலாளர் ஏற்படுத்தி, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நல்ல பல காரியங்களை நடத்த வேண்டும் என்று ஏற்படுத்தியதற்காகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல மாநில நிலவள வங்கி மாவட்ட அளவில் கடன்களை அளிக்க வசதி செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதையும் உறுப்பினர்கள் மறந்து விடமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இப்படிப் பலப் பல காரியங்களைச் செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், இவற்றைப் பாராட்டாவிட்டாலும் அதிலே ஓட்டை, உடசல்களைத் தேடிப்பார்த்து. 67 வங்கிகளை ஏற்படுத்தியிருப்பதற்கு ஒரு பாராட்டும் தெரிவிக்க முடியாமல் இருந்த நிலைக்கு வருத்தப்படுகிறேன். செய்யப்பட்டிருக்கிற காரியம், ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளாக செயற்குறிப்பு உருவாக்கப் பட்டிருந்தும், செய்யமுடியாமல் இருந்தது. இன்றைய தினம் பொறுப்பேற்றிருக்கிற அரசு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறது. இது விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு பயன் அளிக்கிறது என்பதை இந்த ஆய்வுக் குறிப்பைப் பார்த்தாலே தெரியும். நல்ல முறையிலே, 1966-67-ல் ரூ. 3 கோடியாக இருந்தது, 1967-68-ல் 7 கோடி ரூபாயாகி, 1968-69-ல் 14 கோடி என்று உயர்ந்திருக்கிறது. சாதாரண விவசாயிகள் இதை மாநில அளவில் பெற வட்ட அளவில் முடியாது என்று வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பெறுவதற்கான வாய்ப்புகளைக் கொடுத்திருக்கிறது. அப்படிக் கொடுத்திருப்பதுமட்டுமல்லாமல்.

பெறுவதற்கான வசதிகளையும் செய்துகொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாக இந்த மாமன்றத்தில் பேசும் போது சங்கடங்கள் தவிர்க்கப் படவேண்டும் என்று சொல்லி வந்திருக்கிறேன். அந்த வகையில் பலப் பல சங்கடங்கள் தவிர்க்கப் பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய கடன்கள் கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது, என்பதெல்லாம் இந்த ஆய்வுக் குறிப்பில் தெளிவாக இருக்கிறது.

கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ட்ராக்டர்கள் ரிப்பேர் செய்ய ஒரு நிறுவனத்தை தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது கூட்டுறவுத் துறையில் பெரும் சாதனை என்பதை நிச்சயமாக உழவர் பெருமக்கள் அறிவார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலும் மட்டுமல்லாமல், எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட டிராக்டர்கள் பழுது பார்க்கும் நிறுவனத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த காஞ்சிபுரத்தில் சிறப்பு அங்காடி ஏற்படுத்துவதற்காக பணத்தை ஒதுக்கீடு செய்ததற்காகவும், உத்தரவு பிறப்பித்ததற்காகவும், அமைச்சர் அவர்களுக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கிறேன். குறிப்பாக இப்படி நிலவள வங்கிகள் நாட்டிலே ஏற்பட்டு விட்டாலும் நீண்டகாலக் கடனைப் பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன்வசதிகளைச் செய்து கொடுத்தால் அவர்கள் விவசாயத்தைப் பெருக்க வழி ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இப்பொழுது மாவட்டத் தலைநகரங்களில் தான் சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. நாம் சிறிய சிறிய அளவிலே வட்ட அளவிலே, தாலுகா அளவிலே 'மினி சூப்பர் மார்க்கெட்' ஏற்படுத்தினால், நகர மக்களுக்கு மட்டுமின்றி, கிராமப்புற மக்களுக்கும் அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்க வழி ஏற்படும். சில பொருள்கள் சில சமயங்களில் தட்டுப்பட்டு கிடைக்காமல் போய் விடுகின்றன. தட்டுப்பாட்டில் தட்டுப்பட்டு கிடைக்காமல் போய் விடுகின்றன. அப்படி தட்டுப் பாட்டில் இருக்கும் பொருள்கள் விற்பனைச் சங்கங்கள் மூலமாக கிராமங்கங்களிலே இருப்பவர்களுக்குக் கிடைக்க வழி செய்யலாம்

அடுத்தப்படியாக, கூட்டுறவுத் துறையில் நஷ்டம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். தனியார் துறைக்கும் பொதுத்துறைக்கும் பொதுவாக போட்டி இருக்கின்றன. பொதுத் துறையில் அதிகாரிகள், பொறுப்பு ஏற்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒருசில சட்டத்திற்குட்பட்டு நடக்க வேண்டும், பொதுத் துறையில் சிலவற்றில்தான் நஷ்டம்



ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அதிலுள்ள முட்டுக்கட்டைகளை அகற்றி, வியாபாரத்தில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்தால் நல்லபடியாக முன்னேற்றம் அடையும் என்பதை சொல்லிக் கொள்ளுகிறேன். கூட்டுறவு துறை தனி யாருடன் போட்டி போட்டு நல்ல லாபத்தையும் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் வங்கிகள், கூட்டுறவுத் துறை வங்கிகள் என்று இருக்கின்றன. தனியார் துறையிலே கடன் கொடுப்பதற்குச் சுலபமான முறைகள் கையாளப்படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் கடன் பெற வேண்டுமானால் பல சிக்கல்கள் இருக்கின்றன. பங்குத் தொகையைப் பொறுத்த வரையில், முதலில் பங்குத் தொகையைக் கட்டிவிட்டு, அதற்குப் பிறகுதான் கடன் வாங்கவேண்டும் என்று இருக்கிறது. இதை மாற்றி, கடன் வாங்கும்போது பங்குத்தொகையை அட்ஜஸ்ட் செய்துகொள்ளும் நிலைமையை உருவாக்க வேண்டும்.

அடுத்து, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதுப்பற்றி ஒரிரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது கூட்டுறவுத் துறையிலே விவசாயி கடன் வாங்க வேண்டுமென்று விரும்பினால் அவன் விவசாய காரியத்திற்கு மட்டும்தான் கடன் பெற முடியும். அவனுக்குத் தேவையான மற்ற காரியங்களுக்கு, அவனுடைய மகன் படிப்பிற்காக, அல்லது அவனுடைய மகன் அல்லது மகளின் திருமணத்திற்காக கடன் வாங்க வேண்டுமென்றால் அவன் வெளியிடங்களில் அதிக வட்டிக்கு கடன் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கூட்டுறவுத் துறையிலும் விவசாயக் காரியங்கள் அல்லாது மற்றக் காரியங்களுக்கும்--திருமணம் அல்லது மக்களின் கல்வி—கடன் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். விவசாயியின் குடும்பச் செலவுக்கு வேண்டிய கடன் கொடுக்கவும், திருமணம் போன்ற செலவுக்கு நீண்டகாலக் கடன் அளிக்கவும் வகை செய்ய வேண்டும். 'கல்டிவேடிங் லோன்' என்பதை 'கல்டிவேட்டர்ஸ் லோன்' ஆக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 4,08,53,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளதற்கு என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தி ஒருசில கருத்துக்களை மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கூட்டுறவுத் துறை வளர வேண்டும், மேலும் விரிய வேண்டும், அதனுடைய விழுமிய பணிகள் சமுதாயத்திலே அடித்தளத்திலே

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஏப்ரல் 2

இருக்கின்றவர்களுக்கு எட்ட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். இதிலே இருவேறு கருத்துகள் இருக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறோம். பொதுவாகவே, சோஷலிச சமுதயத்தை ஜனநாயக முறையில் உருவாக்குவதற்கு கூட்டுறவு ஓர் அத்தியாவசியமான கருவியாகும் என்றால் அதுமிகையாகாது. சமுதாயத்தின் சோஷலிச மேம்பாட்டுக்கு கூட்டுறவு இயக்கம் ஒரு சிறந்த ஏஜென்சி என்பதை சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளிலேயே பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருஜி அவர்களின் தலைமையிலான திட்டக் குழு முழுமனதாக ஏற்றுக்கொண்டது.

சுதந்திரத்திற்கு முன்னாலே வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு இயக்கத்தைத் தங்களின் ஆதிக்க அரசுக்கு துணை செய்யக்கூடிய ஒரு பலவீனமான துணையாகத்தான் கருதினர். 1904-ம் ஆண்டில் முதல் கூட்டுறவுச் சட்டம் வரையறுக்கப்பட்ட நேரத்தில் சர் பிரடரிக் நிக்கல்சன் என்ற ஐ.சி.எஸ். அதிகாரி கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் கூட்டுறவு நாணயச் சங்கங்களை வெள்ளையர்கள் நாடு முழுவதும் ஆரம்பித்தனர். இவையே கிராமங்களில் சிறிய அளவில் கடன் கொடுப்பதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சிகளாகும். அவை மிகச் சிறிய அளவில் இருந்ததால், மிகக் குறைந்த விவசாயிகளுக்கே கடன் உதவி செய்துகொடுக்க முடிந்தன. எனவே, அவற்றின் நிர்வாகம் ஊதியம் இன்றி இருந்தது. கிராமத் தலைவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை அத்தகைய சங்கங்களை நடத்துவதில் செலவிட்டனர்.

மேலும் வரையறுக்கப்படாத பொறுப்பு (அன் லிமிடெட் லயபிலிட்டி) என்ற தத்துவமும் கிராமநாணய சங்கத்திற்கு வகுக்கப்பட்டது. நாள் செல்லச் செல்ல கூட்டுறவு இயக்கம் நகரங்களிலும் விரிவடைய ஆரம்பித்தது. பண்டகசாலைகள், கூட்டுறவுத் தொழில்கள் எனப் பலவாறாக விரிவடைந்தன. 1932-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் கூட்டுறவுச் சட்டம் வகுக்கப்பட்டது. ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்திற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரம்தான் இரண்டாவதாக வருகிறது. சிறப்பாக முன்னேறியுள்ளது. என்றாலும் இன்னும் பல துறைகளில் முன்னேற்றம் அடையாமல் நம் மாநிலம் தடைப்பட்டுக் கிடக்கிறது. நிர்வாகத்தில் பல குறைபாடுகள் மலிய ஆரம்பித்தன. 1932-க்குப் பின் 1936-ல் சர் டி. விஜய ராகவாச்சாரியார் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்து மாநிலக் கூட்டுறவு இயக்கத்தை ஆராய்ந்தது. அந்தக் குழு பல அரிய யோசனைகளைக் கூறியது. ஆங்கில அரசு அரைகுறையாக நிறைவேற்றிய சட்டத்தால் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள விவசாயி, தொழிலாளி ஆகியோருக்கு எண்ணிய பயன் கிடைக்கவில்லை. சின்னஞ்சிறிய விவசாயிகளுக்கும் கூட்டுறவு இயக்கத்தினால் எந்தவிதமான பலனும், உதவியும் கிடைக்கவில்லை. பெரிய நிலச்சுவான்தார்கள் பலன் பெற்றனர். அதைப்போல் நகரங்களிலும் ஏழைமக்களுக்கு இந்த கூட்டுறவு இயக்கம் எந்தவித பலனும் அளிக்கவில்லை.



1970 ஏப்ரல் 2] [திரு. என். எஸ். வி. சித்தன்]

1947-க்குப் பின்னர், நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர், இந்தக் குறைகள் நம் நாட்டுத் தலைவர்கள் நேருஜி போன்றவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. சோஷலிச சமுதாயத்தைக் காணத் துடித்த அந்த லட்சிய வீரர் கூட்டுறவு இயக்கத்தை சிறந்த முறையில் திருத்தியமைக்க, ஏழைப்பங்காளனாக அந்த இயக்கம் மிளிர வேண்டும் என்று முயற்சிகள் செய்தார். அவருடைய தீர்க்கதரிசனத்தின் விளைவாக ரிசர்வ் வங்கி கிராமக் கடன் சர்வே அறிக்கை வெளியிட்டது. விவசாயிகள் தங்கள் கடன் தேவைகளில் 3 சதவீதம் கூட, ஐம்பது ஆண்டுகளாக பணியாற்றிய கூட்டுறவு இயக்கத்தால் பெற முடியவில்லை என்ற கசப்பான உண்மையை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது. மேலும் கூட்டுறவு இயக்கம் கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி மேட்டுக்குடி மக்களுக்கே பயன்படக்கூடிய வகையில் இயங்கிக் கொண்டிருந்தது. வருவாய் இல்லாதோர், வசதியற்றோர் கூட்டுறவு இயக்கத்தால் பலனைப் பெற முடியவில்லை. குறிப்பிட்டவர்களுக்குத்தான் கூட்டுறவு இயக்கம் பயன்பட்டு வந்தது. எல்லோருக்கும் பயன்படும் வகையில் இதில் அரசாங்கம் பங்கு பெற வேண்டும் என்பதற்காக திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் 1955-ம் ஆண்டில் ஆய்வுக்குழு அறிக்கை சமர்ப்பித்தது. அதன் பேரில் புதிய கூட்டுறவுச் சட்டம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஒரு சட்டத்தை 1961-ம் ஆண்டு கொண்டு வந்தார்கள். பன்னெடுங்காலமாக கூட்டுறவுத் துறையில் நிர்வாகஸ்தர்களாக இருந்தவர்கள் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அவர்கள் தொடர்ந்து இரண்டு தடவைகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று கொண்டுவரப்பட்டது. பிற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் சிறப்பாக கூட்டுறவு இயக்கம் நடைபெறுகிறது என்பது உண்மை. இருப்பினும் அடிப்படையான கோட்பாட்டை எந்த முறையில் அறிந்துள்ளது என்ற வினாவிற்கு நம்மால் திருப்தியான பதில் அளிக்க முடியாது.

உதாரணமாக, தமிழகத்தில் 166 லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. இதில் கிட்டத்தட்ட 60 லட்சம் பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். அவற்றுள் 80 சதவீத பட்டாதாரர்கள் 30 சதவீதம் உள்ள நிலங்களைக்கூட வைத்திருக்கவில்லை. கூட்டுறவு இயக்கம் இவ்வளவு ஆண்டிற்குப் பிறகும் கணிசமாக உதவ முடியவில்லை. முக்கியமாக அடித்தளத்தில் இருக்கக்கூடிய சிறிய விவசாயிகளுக்கு உதவிபுரிய ஏன் கூட்டுறவு இயக்கத்தால் முடியவில்லை என்ற வினாவிற்கு அமைச்சர் அவர்கள் விடை காணவேண்டும். கிராமத்தில் உள்ள சங்கங்கள் சிறிய அளவில் இருப்பதால் அவைகளால் திறமையாக இயங்கமுடியவில்லை. சிறந்த பயிற்சிபெற்ற முழுநேர ஊழியர் ஒவ்வொரு சங்கத்திற்கும் இலவசமாக அல்லது மானிய உதவியுடன் அளிக்க வேண்டும்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஏப்ரல் 2

ஒவ்வொரு சங்கமும் அந்த கிராம மக்களுக்குத் தேவையான கடன் வசதி, விற்பனை வசதி, விவசாயப் பொருள்வழங்கும் வசதி ஆகிய அனைத்து வசதிகளையும் அளிக்கவல்ல திறமையான பொருளாதார ஜனநாயக நிர்வாகமாக மிளிர ஏற்றவகையில் கூட்டுறவு இயக்கம் திருத்தியமைக்க வேண்டும். கிராம மக்களின் முழு பொருளாதார தேவைகளை வழங்கவல்ல முறையில் கிராமக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பினை மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். ஏதோ நாங்களும் சங்கம் அமைத்திருக்கிறோம். 1967-ல் இத்தனை சங்கங்கள் இருந்தன, இப்பொழுது இத்தனை சங்கங்கள் இருக்கின்றன. நாங்கள் இவ்வளவு சங்கங்களை அதிகரித்துவிட்டோம் என்று புள்ளிவிவரங்களை அள்ளி வீசுவதால், கிராமத்தின் பொருளாதார வாழ்வு வளர்ச்சி பெறாது, வளர்ச்சி பெறவில்லை.

உதாரணமாக 1970-71ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது, இந்த அரசு 1966-67-ல் கூட்டுறவு இயக்கத்திற்கு 31.44 கோடி ரூபாய் கடனைக் கொடுத்தது. நாங்கள் 1969-70-ல் 62½ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று பறைசாற்றினர். கேட்க இனிமையாக இருந்தாலும், புள்ளிவிவரங்களில் கசப்பான
பி.ப. 2-30 உண்மை மறைந்துள்ளது என்ற அடிப்படை உண்மையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1966-67-ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் காஸ்ட் ஆப் லிவ்விங் இண்டெக்ஸ் 180 புள்ளியாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் 1969-70-இல் 230 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த நிலைக்கேற்பப் பார்த்தால் கொடுக்கிற உதவி ஒன்றும் பிரமாதமாக இல்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது.

மொத்த உதவியில் 2 சதவீதம் மேட்டுக்குடி மக்களுக்குத்தான் கடன் உதவி கிடைக்கிறதே தவிர சமுதாயத்தில் கீழ் நிலையில் உள்ளவர்கள யாருக்கும் கிடைக்கவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவுத்துறை பல ஆண்டுகளாக ஒருசிலரின் கைப்பாவையாகத்தான் இருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். அதன் தலைவராக இருக்கக்கூடியவர்களில் பலர் நல்லவர்களாக இருக்கிறார்கள், நிர்வாகத் திறமை படைத்தவர்களாக இருக்கிறார்கள். என்றாலும் அது ஒரு பாரம்பரை சொத்தாகத்தான் இருந்து வருகிறது. அதை மாற்றவேண்டும். இரண்டு முறைக்கு மேல் யாரும் நிர்வாகப்பொறுப்பை வகிக்கக் கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். வாழையடி வாழையாக தொடர்ந்து சிலர் தலைவராகவே இருந்து வருவதனால் பல கூட்டுறவு சங்கங்கள் நல்லமுறையில் நடக்கவில்லை. தங்களுக்குச் சார்பாக இருக்கிறவர்களை போட்டுவிட்டு அவர்கள் வேறுபல பணிகளிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



1970 ஏப்ரல் 2] [திரு. என். எஸ். வி. சித்தன்]

கூட்டுறவு மானியக் கோரிக்கை விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய என்னுடைய கட்சியைச் சேர்ந்த என் அருமை நண்பர் திரு இராமமூர்த்தி அவர்கள் இதை நன்றாக எடுத்துச் சொன்னார்கள். "அரசாங்கம் சந்தானம் கமிட்டியைப் போட்டதே, அந்தக் கமிட்டியும் தன் அறிக்கையைக் கொடுத்து எத்தனையோ நாள் ஆயிற்றே, ஏன் அதை இன்னமும் அமல் படுத்தவில்லை" என்ற கேள்வியைப் போட்டார்கள்.

சந்தானம் கமிட்டியை நியமிக்கிற நேரத்தில் திரு. அண்ணாதுரை அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஊழல்களை எல்லாம் அறிந்து அவற்றை உடனடியாக அகற்றியாக வேண்டும் என்றே அவசரம் அவசரமாக தன்னுடைய ஆட்சிக் காலத்திலேயே நியமித்தார்கள்.

அப்படி நியமிக்கிறபோது உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள விரும்புவதுபோன்றே 2 மாதத்திற்குள் இடைக்கால அறிக்கை ஒன்றை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். திரு சந்தானம் கமிட்டியும் 1968-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதி அன்றே இடைக்கால அறிக்கை கொடுத்தது. அந்த இடைக்கால அறிக்கையின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது? ஒன்றும் இல்லை.

மேற்கொண்டும் வெகு பிரயாசைப்பட்டு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் சந்தானம் கமிட்டி தன்னுடைய பைனல் ரிப்போர்ட்டையே கொடுத்து விட்டார்கள். இதுவரை அந்த ரிப்போர்ட்டின் மீதும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கிறபோது இந்தக் கமிட்டியை இவ்வளவு அவசரம் அவசரமாக ஏன் நியமித்தார்கள் என்பதே கேள்விக் குறியாகி விட்டது. பொதுவாக இந்த அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால் சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் விரிவான ஒரு கூட்டுறவு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டில் 2 முறைக்கு மேல் யாரும் பதவி வகிக்கக் கூடாது என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவர டெல்லிக்கு அனுமதி கேட்டிருப்பதாக திரு. குருபாதசாமி அவர்களே பாராட்டினார்கள். ஆனால் நாம் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன்னால் மகாராஷ்டிரா மாநிலத்தில் அதை அமல்படுத்தி நல்ல பெயரை முதலாவதாக தட்டிக்கொண்டு போய்விட்டார்கள். இனியாவது உடனடியாக 2 முறைக்கு மேல் நிர்வாகஸ்தர்கள் தொடர்ந்து பதவியில் இருக்கக் கூடாது என்ற திருத்த சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருத்தச் சட்டம் வரும் என்று வாயால் சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர கொண்டு வரப்படும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.

அமைச்சர் அவர்கள் எப்போது கொண்டு வரப்படும் என்பதை தம்முடைய உரையிலாவது குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்றைய தினம் கூட்டுறவுத் துறை நியமனத்தை எடுத்துக்கொண்டால் ஆளும் கட்சியில் உள்ளவர்களே நியமனம் செய்யப்படுகிறார்கள். எங்களுக்கு வேண்டும் என்று சொல்ல வில்லை. தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கூட கொடுப்பதில்லை.

இதுபற்றி சந்தானம் கமிட்டி, நியமனம் செய்வதாக இருந்தால் அரசாங்க உத்தியோகப் பொறுப்புள்ளவர்களையே போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். காரணம் 2 முறைக்குமேல் பதவியில் இருக்கக் கூடாது என்கிறபோது கொல்லைவழியாக நியமன முறையில் யாரும் உள்ளே வந்துவிடக் கூடாது என்பது தான். உண்மையில் சர்க்கார் அதில் அக்கறை கொண்டிருக்கு மானால் அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் முன்பு 62 வங்கிகள்தான் இருந்தன, இப்போது 106 வங்கிகள் இருக்கின்றன, ஒரு யூனியனுக்கு ஒரு வங்கி என்று இந்தச் சர்க்கார் செயல்பட்டு வருவதை பாராட்டக் கூடாதா, பாராட்டாவிட்டாலும் குறை சொல்லாமலாவது இருக்கக் கூடாதா? என்று வேதனையோடு சொல்லிக் கொண்டார்கள். ஆனால் இந்த 67 வங்கிகளை எதற்காகத் திறந்தார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும். இந்த 67 வங்கிகளைத் திறந்து மூன்று நான்கு மாதமாகிறது. இவற்றின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு எத்தனை லட்சம் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். மத்திய வங்கித் தேர்தல் வருகிறது, மத்திய வங்கிக் கோட்டையைப் பிடிக்க வேண்டும் என்றே இந்த வங்கிகளை எல்லாம் அவசரம் அவசரமாகத் திறந்து நியமனம் செய்திருக் கிறார்களே தவிர, ஏழை எளிய விவசாய மக்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் அல்ல. நிலவள வங்கியில் 22 டைரெக்டர்கள்—நிர்வாகஸ்தர்கள் அந்த எண்ணிக்கையை 46 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். 35 தேர்தல், 11 நியமனம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பளிக்கவே இப்படிச் செய்திருக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்தக் கருத்து உயர்நீதி மன்றத்திற்கே கொண்டு போகப்பட்டு அவர்கள் இது சரியான முறை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நியமன உறுப்பினர்கள் பற்றியும் எந்தவித ஆட்சேபணையும் சொல்லவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால் நியாயப்படி சரிதானா? நடைமுறைப்படி சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.





அடுத்ததாக, பதவி உயர்வுக்காக நேர்முகத் தேர்வு செய்கிறார்கள். ஸி.எஸ்.ஆர். பதவி நான் கெஜடெட் டி. ஆர். போஸ்ட் கெஜடெட். இந்த நேர்முகத் தேர்வை முன்பு அதிகாரிகளே நடத்தி வந்தார்கள். இப்போது அமைச்சர் அவர்களே நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையா? இப்படி நேர்முகத் தேர்வு என்று தங்களுக்கு வேண்டியவர்களைக் கொண்டு வரவே இந்த முறை கையாளப்படுகிறதோ என்று சந்தேகப்படுகிறேன்.

அடுத்து, பொதுவாக கூட்டுறவுத் துறையில் ஊழல் மலிந்திருப்பதை எல்லோரும் குறிப்பிட்டார்கள். இந்த ஊழல்கள் எல்லாம் புதிய கட்டிடங்களைக் கட்டுவதில் டெண்டர் முறையைப் பின்பற்றுதிருப்பது, தன்னிச்சையாக டெண்டர்களை உயர்த்திக் கொள்வது, பர்சேஸ் முறையில் விலை கூடுதலாகப் பில்லை போடச் செய்வது. "பாட் டெட்ஸ்" ஆகும்படியாக கடனை வசூல் செய்யாது விட்டுவிடுவது, போன்றவைகளில்தான் ஏற்படுகின்றன. இத்தகைய குறைபாடுகள் வராதிருக்க தக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக கூட்டுறவுச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் ஆடிட் பிரிவு 64, விசாரணைப் பிரிவு 65, மேற்பார்வைப் பிரிவு 66, சர்சார்ஜ் பிரிவு 71 ஆக இந்த நான்கைந்து பிரிவுகளை அரசாங்கம் உடனடியாகத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரிவுகள் ஆண்டாண்டு காலமாகத் திருத்தப்படவில்லை, நாங்கள் வந்து 3 ஆண்டுதானே ஆகிறது என்று சொல்லித் தப்பித்துக் கொள்வதில் பயன் இல்லை.

பொதுவாக இப்போது கூட்டுறவுத் துறையில் சிங்கிள் என்டரி சிஸ்டம்தான் இருக்கிறது. ஊழல்கள் ஏற்படுவதற்கே இது ஒரு உதவியாக அமைந்துவிடுகிறது. அட்ஜஸ்மெண்டு என்று சொல்லி பெருந் தொகையை மறைக்கவும் பயன்படுத்திக் கொள்ளப் படுகிறது. ஆகவே டபிள் என்டரி சிஸ்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தணிக்கை முறையை எடுத்துக்கொண்டாலும் வெளியார் தணிக்கை முறையைத்தான் கொண்டு வந்தாக வேண்டும். கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களே ஆடிட் செய்துகொள்வது என்பது சரியல்ல. இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் பண்ட்ஸ் அக்கவுன்ட்ஸ் இன் கீழேயே இந்தத் தணிக்கை முறை வந்தாக வேண்டும்.

அடுத்ததாக, இந்த ஆர்பிட்ரேஷன், மத்தியஸ்தம் என்பதிலே மிகக் காலதாமதம் ஆகிறது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும். 1966-67-ம் ஆண்டு மட்டும் 47 ஆயிரம் கேஸ்கள் மத்தியஸ்திற்கு விடப்பட்ட கேஸ்கள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்று சந்தானம் கமிட்டி அறிக்கையிலே சொல்லப்

பட்டிருக்கிறது. ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் அல்ல, ஏழு ஆண்டுகளுக்கு மேலாக இதேமாதிரி வழக்குகள் பைசலாகாமல் இருக்கின்றன. உதாரணத்திற்காக ஒன்று சொல்கிறேன், ஏ.ஆர்.சி. 464/64-65 என்ற வழக்கு சென்னை துணைப் பதி வாளரிடத்தில் இருக்கிறது இன்னும் முடிவு செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. துணைப் பதிவாளர்கள் சட்ட அறிவு பெற்றவர்களாக இல்லை, சட்டத்திற்கு ஒவ்வாத சட்டத்திற்குப் புறம்பான முடிவுகளை அவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள் என்றும், சந்தானம் கமிட்டி அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். மத்தியஸ்தம், ஆர்பிட்ரேஷன் வலுவாக இயங்க வேண்டும் என்பதில் யாருக்கும் இங்கே கருத்துவேறுபாடு இல்லை. நீதியும் நிர்வாகமும் தனித்தனியாக இயங்க வேண்டுமென்றுதான் நாம் எல்லாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம் கொள்கையளவிலே. அரசியல் சாஸனத்தில் 50-வது பிரிவில் இதையேதான் சொல்லி யிருக்கிறார்கள். எனவே வழக்குகளைப் பதிவு செய்கிற அதிகாரத்தைப் பதிவாளரிடமிருந்து மாற்ற வேண்டும். இதற்காக கூட்டுறவுச் சட்டத்தின் 73-வது விதியைத் திருத்த வேண்டும்.

தமிழகத்திலே இந்த ஆண்டு மழையில்லை, வறட்சி நிலைமை இருக்கிறது, கடந்த ஆண்டும் சரியாக மழையில்லாததால் வறட்சி நிலைமை இருந்தது. கூட்டுறவுத் துறையின்மூலம் ஷார்ட் டெர்ம் லோன், மீடியம் டெர்ம் லோன், லாங் டெர்ம் லோன் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக் காலத்திற்கு அந்த கடன் பாக்கிகளை வசூல் செய்வதை ஒத்தி வைப்பதை அக்ரிகல்சுரல் கிரடிட் ஸ்டெபிலைசேஷன் பண்ட் மூலமாகச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவள வங்கிகள் கொடுத்திருக்கின்ற கடன்கள் வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று சொன்னால் அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை என்று கூறினார்கள். அதற்குக் காரணம் என்ன என்றால், எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி, அக்ரிகல்சரல் கிரடிட் ஸ்டெபிலை சேஷன் பண்டிலிருந்து 4, 5 லட்சம் ரூபாயை அரசாங்கம் எடுத்துக் கொண்டுவிட்டதாக ஜெனரல் பாடி மீட்டிங்கில் சொன்னார்கள். ஏன் எடுத்துக் கொண்டார்கள், கடன் நிவாரணம். அதன் மூலமாகக் கொடுக்க ஏன் உத்திரவு போடக் கூடாது என்பதை அவர்கள் விளக்க வேண்டும்.

அதிகாரிகளைப் போடுவதைப் பொறுத்தவரையில் அரசாங்க அதிகாரிகளைப் படிப்படியாக எடுத்து விட்டு, அந்தத் துறை யிலே உள்ள பாங்கு ஊழியர்களைப் போட வேண்டுமென்று அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். நிலவள வங்கிகளில் மானேஜர்களைப் போட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டி இருக்கிறது. அவர்களைப் போட்டுவிட்டால் தவணை பாக்கிகளை வசூல் செய்து விடலாம் என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் திருமங்கலம் பாங்கிலே இவ்வளவு பாக்கி யிருக்கிறது, ஏன் மானேஜரைப் போடக் கூடாது என்று கேட்டு



இருக்கிறார்கள். நான் கேட்கிறேன், மானேஜரைப் போட்டால் மாத்திரம் கடன் வசூல்களை வசூலித்துவிட முடியுமா? அந்தத் துறையிலே ஏற்கனவே பல ஆண்டுகளாகப் பணியாற்றி அனுபவம் பெற்ற செயலாளர், மேற்பார்வையாளர் இருக்கிறார்கள், அவர்கள் நன்றாகத் திறம்பட வேலை செய்கிறார்கள். அவர்கள் இருக்கும்பொழுது மானேஜரைப் போட்டால் எப்படி நிலைமை சீராகும்? வேண்டுமானால் வேண்டியவர்களைப் போட்டுக்கொள் வதற்காகச் செய்யலாம்.

மாவட்டத்திலே டெபுடி ரிஜிஸ்திரார் அளவிலே சீப் எக்ஸிக்யூடிவ் ஆபிஸர் போட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரியைப் போட்டதினால் என்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன? என்ன முன்னேற்றம் கண்டு இருக்கிறார்கள்? அதிகாரியைப் போட்டுச் சம்பளம் கொடுக்கிறார்களே தவிர எந்தவிதமான முன்னேற்றமும் அதனால் ஏற்படவில்லை.

கூட்டுறவுத் துறையைப்பற்றி சில நல்ல ஆலோசனைகளைச் சொல்வதற்காக ஸ்டேட் கோவாப்ரேடிவ் அட்வைசரி கவுன்சில் இருக்கிறது. பல இலாக்காக்களில் இருப்பதைப் போல் இந்த இலாகாவைப் பொறுத்தவரையிலும் அப்படிப்பட்ட குழு ஒன்று இருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு ஒரு முறைகூட அந்தக் குழு கூடவில்லை என்று கேள்விப்படுகிறேன். அரசாங்கம் அந்தக் குழுவினை அடிக்கடி கூட்டி, அதனுடைய கருத்துக்களைக் கேட்டறிவது நல்லது, எனவே அடிக்கடி கூட்ட வேண்டும்.

நில வள வங்கிகளுக்கு வாகன வசதிகள் கிடையாது. தவணைக் கடன் பாக்கிகள் வசூலிப்பதற்கும் கடன்களைக் கொடுப் பது சம்பந்தமாகவும் அவர்கள் கிராமங்களுக்குச் செல்ல வசதிகள் கிடையாது. அதோடு அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு வேறு பதவி உயர்வுகள் கிடையாது. அந்தந் துறையிலே காரிய தரிசி அல்லது சூபர்வைசர் அளவிலே தான் உயர்வு கிடைக்க கிடைக்கிறது. எனவே அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வழி செய்ய வேண்டும், அதோடு அவர்களுடைய பணிகளை ஒழுங்கு படுத்த வேண்டும்.

ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நில வள வங்கி திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படித் திறக்கின்ற நேரத்திலே ஏற்கனவே தனியாக நிலவள வங்கியிலிருக்கும் பணியாளர்களை எடுத்துக்கொள் வேண்டும். அவர்களுக்கு ப்ரையாரிடி கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும், புதிதாகப் போட்டால் நிர்வாக அனுபவம் அவர்களுக்கு இருக்காது. எனவே 10, 16 ஆண்டுகள் வரையில் வேலை செய்திருக்கின்ற அந்தப் பணியாளர் களை வீட்டுக்கு அனுப்புவது சரியாகாது, அவர்களுக்கு முக்கியத் துவம் கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கூட்டுறவு நில வள வங்கியில் கடன் மனுக் கொடுத்தால் கால தாமதம் ஆகிறது என்ன காரணம் என்று கேள்வி நேரத்திலே கேட்கப்பட்டபொழுது அமைச்சர் அவர்கள் எவ்வளவு பணம் கொடுக்கப்பட போகிறது என்ற விவரத்தைச் சொன்னார்கள்.

அதற்குமேல் நான் கேட்கமுடியவில்லை. அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே 30, 31 நாட்களிலே கொடுக்கலாம் என்று சொன்னார்கள். மனுக் கொடுத்து 3 ஆண்டுகாலம் ஆகியும் கடன் கொடுக்காமல் இருக்கிறார்கள். எப்பொழுது கொடுக்க முடியும் என்ற விவரம் அவர்கள் சொல்லவில்லை. நிலவள வங்கிகள்மூலம் கடன் பெறுவதாக இருந்தால் பஞ்சாயத்து ஒன்றியத்தின் விஸ்தரிப்பு அதிகாரியும் (கூட்டுறவு) பொறியியல் வல்லுநரும் தான் எஸ்டிமேட் போட வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு இருக்கின்ற வேலையோடு சேர்ந்து இதுவும் வேலை பளுவாக அதிகமாகும். எனவே அப்படிச் செய்யாது கூட்டுறவு வங்கிகளில் உள்ள பணியாளர்களே அதைச் செய்யக்கூடிய முறையில் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாலே ஒரு நண்பர் பேசியபொழுது முன்கடன் தீர்ப்பதற்கு வழியில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது அதற்காக 5 சதவிகிதம் கொடுத்துக் கொண்டுவருகிறார்கள். அது போதாது. அதை 20 சதவிகிதம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமே தனியாருடைய கடன் பிடியிலிருந்து விவசாயிகளை விடுவித்துப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான். அவர்கள் அதிக வட்டிக்குப் பணம் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். எனவே இந்த முன்பணத் தொகையை உயர்த்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது ரிசர்வ் பாங்கியின் அதிகாரமாக இருந்தாலும் அதற்கு மாநில அரசு சிபாரிசு செய்ய வேண்டும்.

பணம் பெறுகிற நேரத்திலே கிணறு ஆழப்படுத்துவதற்காகவும், நிலத்தை வளப்படுத்துவதற்காகவும் கடன் கோரினால் சர்க்கார் கடனுகவும் முன் கடனுகவும் இருக்கிற தொகையைக் கட்டிவிட்டு வந்தால்தான் கொடுக்கப்படும் என்ற நிலைமை இருக்கிறது. சர்க்கார் கடனுக இருந்தால் சர்க்கார் கடனை மதிப்பீட்டுத் தொகையில் கழித்துவிட்டு கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோன்று பாங்கியிலிருந்தே அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். கடன்களுக்காக கிராம முன்சீப், கர்ணம் போன்றவர்களை எல்லாம் அடங்கல், பிளான் இவற்றிற்காக விவசாயிகள் போய்ப் பார்த்து அலைந்து அதற்காக 200, 300 ரூபாய் செலவாகிறது என்ற நிலைமை இருந்து வருகிறது. இதைத் தவிர்ப்பதற்காக அந்த கிராமத்தைப் பொறுத்தவரையில், அந்த நிலத்தைப் பொறுத்தவரையில் நில வள வங்கியே நேரடியாக அவர்களோடு தொடர்பு கொண்டு அவற்றைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அப்படிக் கொடுக்கப்பட்ட நிலத்தினை வளப்படுத்துவதற்கு நிலவள வங்கியில் கடன் கொடுக்க மறுக்கிறார்கள்.





'அடைமான உத்திரவிடப்பட்ட தேதியிலிருந்து 10 வருட காலத்திற்குள் பிரஸ்தாப நிலத்தை விற்பனை செய்யவோ அல்லது பராதீனம் செய்யவோ கூடாது. ஆனால் நில அபிவிருத்திச் சட்டம் அல்லது விவசாயிகள் கடன் சட்டம் அல்லது அரசியல் தியாகிகள் தவிர்த்து நேரடியாக விவசாயத்தில் ஈடுபடுபவர்களாக உள்ள நிலமில்லாத ஏழைகளாக உள்ளவர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்கத்திற்கோ நிலத்தை ஈடுகாட்டும்பொருட்டு சர்க்காருக்கு அடமானம் செய்து கொடுக்கலாம்' என்று அரசாங்கத்தின் உத்தரவிலே இருக்கிறது. திருமங்கலத்திலே ஒரு அரசியல் தியாகி அரசியலில் தனது உடலை உருக்குலைத்துக் கொண்டவர், என் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல, மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர். ஏழையாக இருந்தார் என்ற காரணத்தினால் நிலம் கொடுத்திருந்தார்கள். அதற்குக் கடன் கொடுக்கமுடியாது என்று சி. எஸ். ஆர், திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இது தனிப்பட்ட முறையிலே இருக்கிறதா? அல்லது மாநில முழுவதும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்ற விவரம் தெரியவில்லை. நிலமில்லாத ஏழைகள் தரிசு நிலங்களை வளப் படுத்துவதற்காக அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக திரு. கோதண்டராமன் அவர்கள் ரிஜிஸ்தரார் ஆப் கோவாப்ரேடிவ் சொசைடீஸ் இருப்பதோடு அடிஷனல் ரிஜிஸ்திரார் போட்டு இருக்கிறார்கள். அவர்களிடத்திலே கடன் கொடுக்கிற பொறுப்பையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். நாங்கள் அறிந்த வரையிலே அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு அவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்ற காரணத்தினால், வேறு ஒரு பதவியை அடிஷனல் ரிஜிஸ்திரார் என்ற பதவியை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

(பேரவைத் தலைவர்—தலைமை)

அந்த அடிஷனல் ரிஜிஸ்திரார் கூட மாநிலத்தில் இருக்கும் சீஃப் செகரடரிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகி விட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன்: 20 நிமிடந்தான் பேசியிருக்கிறேன்; இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதைப் பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்று டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் என்று தொழிலுக்கும், டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் என்று கைத்தறிக்கும், டைரக்டர் ஆப் ஷுகர் என்று சர்க்கரைக்கும் பல அதிகாரிகளை வைத்திருக்கிறார்கள். இவ்வாறு பல அதிகாரிகள் இருப்பதாக

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஏப்ரல் 2

'கோ-ஆர்டினேஷன்' இல்லாமல் இருக்கிறது. டைரக்டர் ஆப் கோவாப்பரேடிவ்ஸ் என்ற பதவியை போர்டு மெம்பர் நிலையில் உருவாக்கினால் அவர் தலைமையில் அரசாங்க நிர்வாக செயல் படுவது பொருத்தமாக இருக்கும்.

கூட்டுறவுத் துறையில் சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்களுக்குக் கால் பங்கு ஊதியம் கூடக் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஸ்ரீபெரும்புதூர் தாலுகா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடியின் குமாஸ்தா ஆர். கோபாலகிருஷ்ணன் என்பவர் 31—3—1967-ல் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். அவர் மீது சில புகார்கள் சொல்லப்பட்டதற்கு அவர் பதில் கூறி சுமார் மூன்று ஆண்டுகள் ஆகியும் இதுவரை மீண்டும் வேலைக்கும் எடுத்துக் கொள்ளவில்லை; குற்றங்களுக்கு ஏற்ப நடவடிக்கையும் எடுக்கவில்லை. சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஊழியர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய கால் பங்கு ஊதியத்தையும் கொடுக்கவில்லை. இதுபற்றி அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிங்கம்புணரியிலுள்ள கூட்டுறவு வீடு கட்டும் சங்கம், சட்ட அமைச்சர் மாதவன் அவர்களின் குடும்பத்துக்குச் சொந்த மான 1.54 ஏக்கர் புஞ்சை நிலத்தை நில ஆர்ஜித சட்ட நடவடிக்கை மூலம் 34,000 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். அதே கூட்டுறவுச் சங்கத்தில் 25,000 ரூபாய் கடன் வாங்கியுள்ள தால் அமைச்சரின் குடும்பத்துக்கும், அந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்துக்கும் தொடர்பு உள்ளது. அமைச்சர் அவர்கள் 28—9—1969-ல் இம்மன்றத்திற்கு அளித்துள்ள சொத்துக் கணக்கு விவரத்தில் அந்த நிலத்துக்கு மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்று கொடுத்துள்ளார். இந்த விவரம் அவர் அறிந்த வரையில் உண்மையானதென்றும், முற்றமைவானதென்றும் உறுதி கூறியிருக்கிறார். சட்ட அமைச்சர் அவர்கள் நில ஆர்ஜித நட வடிக்கையை நன்றாக அறிந்தவர்கள். அவர்களே ஏக்கர் 1,000 ரூபாய் என்று மதிப்பிட்டுள்ள அந்த இடத்தைச் சர்க்காரின் நில ஆர்ஜித அதிகாரிகள் சுமார் ரூ. 23,000 என்று அவார்டு பாஸ் செய்து மொத்தம் 1.54 ஏக்கருக்கு ரூ. 34,000 சிங்கம்புணரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திடம் பெற்று நில ஆர்ஜிதம் செய்து, அந்தச் சங்கம் கொடுத்துள்ளது. அந்த நிலத்தின் நியாயமான மார்க்கெட் விலை என்ன? அமைச்சர் குறிப்பிட்டுள்ளபடி ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்தான் மதிப்பா? அல்லது நில ஆர்ஜிதச் சட்டப் படி சர்க்கார் நிர்ணயம் செய்த மதிப்பான ஒரு ஏக்கருக்கு ரூபாய் இருபத்தி மூவாயிரமா? இதில் எது உண்மை? அமைச்சர் கொடுத்துள்ளபடி ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் நியாயமான மார்க்கெட் விலை என்று வைத்துக் கொண்டு பார்த்தால் சர்க்கார் எப்படி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 23.000 என்று விலை நிர்ணயம் செய்தது என்ற விவரத்தை அறிய இந்த மன்றம் விரும்புகிறது, தமிழகமே அறிய விரும்புகிறது.



1970 ஏப்ரல் 2] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள சொத்துக் கணக்கு பற்றியும், சிங்கம்புணரி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்துக்கு நிலம் வாங்கியது குறித்தும் அரசாங்கமோ, பேரவைத் தலைவரோ விசாரணை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற விதிகளில், ஒருமுறை பேசி அதிலே ஒரு முடிவு எடுக்காதிருக்கும்போது மறுபடியும் திருப்பித் திருப்பி அதைப் பேசக்கூடாது என்று இருக்கிறது. ஒருமுறை பேசி பதில் சொல்லியிருக்கிறோம்; மறுபடியும் பேசினால் நாங்களும் மறுபடியும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் என்ன தவறு என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும். கூட்டுறவுச் சங்கம் வீடு கட்டிக் கொண்டிருக்கிறது. அவர்கள் நிலம் வாங்க வேண்டுமென்பதற்காக அரசாங்கத்தை அனுமதி கேட்டார்கள். அரசாங்கத்திடம் அனுமதி கேட்டால் அரசாங்கம் அனுமதி கொடுக்கிறது.. அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. அதற்காக மதிப்புப் போட வேண்டும். அரசாங்கம் அதிகாரிகள் மதிப்புப் போடுகிறார்கள். அவர்கள் போட்ட மதிப்பு தவறு என்று உறுப்பினர் கூறுகிறாரா? மீண்டும் மீண்டும் உறுப்பினர் நான் கொடுத்த சொத்து விவரத்தைப் பற்றியே சொல்லுகிறார்கள். அதை நன்றாகப் படித்து பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். அதிலே 'சுமார்' என்று போடப்பட்டிருக்கிறது. அவ்வாறு போட்டதற்குக் காரணம் என்ன என்று கேட்டு, அதற்குப் பிறகு பிரச்சினையைக் கிளப்பி இருக்கலாம். அவ்வாறு கேட்காமல் குழப்புவது சரியல்ல.

அன்றே சொல்லப்பட்டிருக்கிறது, புஞ்சை என்று போடப் பட்டிருக்கிறது. புஞ்சை என்றால் என்ன விலை என்பதை உறுப் பினர்கள் புரிந்து கொள்ள முடியும். ஆனால் வருங்காலத்தில் என்ன நிலைமை என்று சொல்ல முடியாது. எதிர்காலத்தில் அது ஹவுசிங் சைட் ஆக மாறும். இந்த விலை கிடைக்கும் என்று அன்றே எதிர்பார்த்திருக்க முடியாது; ஊகத்திலே போட முடியாது. சாதாரண அறிவுக்கே இது எட்ட வேண்டும். அதிலே திருப்பித் திருப்பி உறுப்பினர் பேசுவது வேடிக்கையாக இருக் கிறது. அதிகாரி விலையை நிர்ணயித்தது தவறு என்றால் எப்படித் தவறு என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்கலாம். அதைப்பற்றி விசாரித்து அறிந்து பிறகு பேசலாம். இந்த நிலத்திற்குப் பக்கத்திலே, அடுத்த இடம், எட்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்ட் ஒன்றுக்கு 100 ரூபாய் போயிருக்கிறது. அதிலிருந்து 100 கஜம் தள்ளி உள்ள புஞ்சை நிலம் வீட்டு மனைக்காக வாங்கப் பட்ட நேரத்தில் ஒரு சென்ட் 3,500 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக் கிறது. இன்னும், கொஞ்சம் தள்ளி எல்லாம், ஊருக்குப்

பக்கத்தில்தான் ஒரு சென்ட் 750 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அந்த அதிகாரிகள் விவரமாக விசாரிக்கிறார்கள். விசாரித்த பிறகு முடிவு கட்டுகிறார்கள்.

இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அதிகாரிகள் என்ன விலை கொடுக்கலாம் என்று நிர்ணயித்தார்களோ, அதையும் விடக் கூடுதலாக அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குச் சங்கத்தினர் கொடுத்திருக்கிறார்கள். விசாரித்துப் பார்த்தால் இதை எல்லாம் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் மாசு கற்பிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் உறுப்பினர் இவ்வாறு பேசுகிறார். அந்தப் பக்கத்திற்குப் போனவுடனேயே இங்கே இருப்பவர்கள் எல்லாம் அயோக்கியத்தனம் செய்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார். இதைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் கேள்வி கேட்டு விவரங்களைப் பெற்றிருக்கலாம். அவருக்கு அச்சமாக இருந்தால் நண்பர் விநாயகத்தை விட்டு கேள்வி கேட்கச் செய்து, பதிலைத் தெரிந்து கொண்டு பிறகு தாக்கலாம். விவரத்தைத் தெரிந்து கொள்ளாமல் குற்றம் சாட்டுவது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அந்தப் பகுதியில் இந்தமாதிரி நிலத்தை எடுத்ததில் 'இதற்குக் கொடுக்கப்பட்ட தொகை போதாது' என்று உயர்நீதிமன்றத்திற்கு ஒரு நிலச் சொந்தக்காரர் போயிருக்கிறார். அவர் உயர்நீதி மன்றத்திலே 'அபிடவிட்'டுக்குப் பதில் சொல்லும்போது என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்க்க வேண்டும். 'ஒரு சென்ட் 3,500 ரூபாய்க்கும், ஒரு சென்ட் 750 ரூபாய்க்கும் விலை போயிருக்கிறது. அந்த விலையை எனக்கும் கொடுக்க வேண்டும்; கூட்டுறவுச் சங்கத்தினர் என்னை ஏமாற்றுகிறார்கள்' என்று கூறியிருக்கிறார். அவர் அரசாங்கத்தின் மீதும் குற்றம் சுமத்தியிருக்கிறார். நீதி மன்றத்திலே இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்தியிருக்கிறார். கனம் அங்கத்தினர் அவ்வளவு பெரிய குற்றச் சாட்டை அங்கே வைத்துக் கொண்டு எங்கள் மீது குற்றம் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. இதிலே என்ன தவறு என்பதை அவர்கள் விளக்க வேண்டும்.

1961-ம் ஆண்டு இந்தப் பகுதியிலுள்ள புஞ்சை நிலம் வீட்டுக்காக வாங்கப்பட்டபோது 100 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது; அதே நேரத்தில் புஞ்சையாக வாங்கப்பட்ட நேரத்தில் செண்டுக்கு 20 ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி யார் என்ன விலைக்கு வாங்குவார்கள் என்பதை யோசித்து எழுத முடியாது. அப்படி அவர் சொவதானால் அவர் கொடுத்திருப்பது பெரும்பாலும் பொய்யாக இருக்குமோ என்ற சந்தேகம் வருகிறது. யாராவது ஒருவர் லட்சக் கணக்கில் இருக்கிறது என்று போட்டால் பெரிய பணக்காரன் ஆகும் வாய்ப்பு இருக்கிறது என்று பொருள், ஏமாற்றுவதற்காக அவ்வாறு கொடுக்கவில்லை. பின்னால் உண்மையைக் கூறியதன் காரணத்தைப் புரிந்து கொள்ள





வேண்டும். புரிந்து கொள்ளாமல் மாசு கற்பிப்பது தவறு. இந்த அங்கத்தினருக்கு இப்படி மாசு கற்பிக்க வேண்டுமென்றே பேசுவது வாடிக்கையாகப் போய்விட்டது என்பதை அறியும் போது வேதனையாக இருக்கிறது.

மேலவையிலே இதைப்பற்றிப் பேசப் போகிறேன் என்று ஒரு சவால். என்ன காரணமோ மேலவை உறுப்பினர் அன்றைக்குப் பேசவில்லை. அதைப் பற்றிக் குறிப்பிட்டபோது நான் பேசப் போகிறேன், அந்த மந்திரிக்குத் தெரிந்தே பேசப் போகிறேன் என்று ஒரு சவால். திட்டமிட்டு மாசு கற்பிக்க முனைகிறார்கள். 'பிளாக் மெய்லிங்' என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்கள். இங்குள்ள அமைச்சர்கள் அங்கத்தினரைப் போன்ற எவ்வளவோ பேரைச் சந்தித்திருக்கிறோம். இந்த மன்றத்தில் அவர் எப்படி ஒரு அங்கத்தினரோ, அதே போன்று நாங்களும் அங்கத்தினர்கள். அதற்குரிய மதிப்பைக் கொடுத்துப் பேசினால் அழகாக இருக்கும்.

திரு. விநாயகம் அவர்கள் குற்றம் சொல்லுவதையே தடுத்து விடலாமா என்று கேட்டார்கள். ஒருகாலும் தடுக்க மாட்டோம். விசாரித்து, உண்மையை அறிந்து பேச வேண்டும். குற்றம் சாட்டுவதற்குத்தான் எதிர்க் கட்சி இருக்கிறது. இந்த உரிமையை மறுக்க மாட்டோம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு குற்றம் சாட்டிப் பழக்கப்பட்டவர்கள்தான் நாங்கள். குற்றஞ்சாட்டும் போது பொருள்படச் சொல்ல வேண்டும்.

முதலமைச்சருக்கு வேண்டியவருக்கு நிலம் கொடுக்கப்பட்டது என்று முதலில் கூறுவது. உடனே என்ன நினைக்கிறார்கள்? முதலமைச்சருக்குச் சொந்தக்காரருக்குக் கொடுத்து விட்டாரோ என்று நினைக்கிறார்கள். யாருக்குக் கொடுக்கப்பட்டது என்று கேட்டதும் அவருடைய டிரைவருக்குக் கொடுக்கப்பட்டது என்று கூறுகிறார். பிறகு ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது என்று கூறுகிறார்; விசாரித்தால் ஒரு செண்டுக்கும் குறைவு. இதைப் பற்றியெல்லாம் கூறுவதற்கு ஒரு வழி இருக்கிறது. 'மவுண்ட் ரோடுக்குப் பக்கத்தில் யாருக்காவது நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அதிலே முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் யாராவது இருக்கிறார்களா " என்று கேள்வி கேட்டால் பதில் வருகிறது. ஆனால் அப்படிச் செய்வதில்லை. அங்கத்தினர் திட்டமிட்டு இப்படி வாடிக்கையாகச் செய்து வருகிறார். அதற்கு அவர் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதிலே ஒரு முடிவுக்கு வரும் வரையில் இந்தப் பேச்சுக்களை வெளியிடாதவாறு ஒத்தி வைக்க வேண்டும். அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் எல்லா விவரங்களையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

[திரு. செ. மாதவன்] [1970 ஏப்ரல் 2

இன்னொன்றையும் அப்போதே குறிப்பிட்டேன். அரசாங்கத்
பி. ப. 1·00 திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. எங்கள் கையிலிருந்து கொடுக்கிறோம். எனக்கு வந்திருப்பது ரூ. 225 என்று. தனிப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது ரூ. 451. அன்று ரூ. 450 என்று சொன்னேன். அது ரூ. 451. இதில் தவறு நடந்திருப்பதாகச் சொல்வது, இதைப்பற்றி முழுமையாக விசாரணை செய்தால் உறுப்பினரின் தரம் எல்லோருக்கும் தெரியும். இதற்கு தலைவர் அவர்கள் ஒரு முடிவு எடுப்பதுதான் நியாயம். ஏனெனில் இது வளர்ந்து கொண்டே வருகிறது. ஒன்று சொல்வது, பின்னர் விளக்கம் கேட்டேன் என்று சொல்வது. இதுதான் விளக்கம் கேட்பதா? எதற்கும் ஒரு வழி முறை இருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னிடம் தனியாகக் கேட்கலாம். ரிக்கார்ட்கள் வேண்டுமென்றால் கொடுக்கிறோம். அந்த ஊரிலே சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிஸ் இருக்கிறது. அங்கு கேட்டால் பட்டியலைத் தருவார்கள். ஆகவே இவையெல்லாம் விளக்கம் கேட்பதற்காக அல்ல. திட்டமிட்டே இந்த மன்ற உறுப்பினர்களை அவமானப்படுத்த வேண்டுமென்ற முயற்சியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அதற்குரிய தண்டனையை வழங்க நீங்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I am not holding any brief for the hon. Member belonging to my party nor I am opposed to the concerned Hon. Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதற்காக நிற்கிறீர்கள்?

THIRU K. VINAYAKAM : Sir, I have got to explain the position from the point of view of my party.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் என்றால் திரு. சித்தன் அவர்கள் சொல்ல வேண்டும். திரு. விநாயகத்தைப் பற்றி அப்படி ஏதாவது சொல்லப்பட்டிருந்தால், அவர்கள் தன்னிலை விளக்கம் சொல்லலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, in the absence of my Leader I have got to take up the cause of my party.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. . .



1970 ஏப்ரல் 2]

THIRU K. VINAYAKAM : You had better order an enquiry and he will take up the responsibility.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருகிற 5-ம் தேதி அன்று 1 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் சித்தன் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையையும், திரு. ராமச்சந்திர துரை அவர்கள் எம்.எல்.ஏ. மினிஸ்டர் அவர்கள் மீது எழுப்பியிருக்கிற பிரச்சினையையும், இரண்டையும் அவரவர்களை அழைத்து விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு முறை இந்த மன்றத்தில் இதைப்பற்றி எழுப்பி பேசியாகிவிட்டது. கூறியது கூறல் இலக்கணப்படி ஒரு குற்றமாகும். சித்தன் அவர்கள் ஒரு முறை இந்த மன்றத்தில் கூறி அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்து, அது என் ஆய்வில் இருக்கிறது என்று நான் சொல்லிய பிறகும் மீண்டும் அதே கருத்தைச் சொல்லி, இந்த அவையின் பொன்னான நேரத்தை வீணாக்கலாமா? அதுதான் பிரச்சினை. ஆகவே. பத்திரிக்கைகளில் திரு. சித்தன் அவர்கள் சொல்லியதைப் பற்றிப் போடுவதில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையொட்டி ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விளக்கத்தையும் போடுகிற நிலையில் இரு தரப்பு நிகழ்ச்சிகளும் வர வேண்டும். பத்திரிக்கைகளில் இரண்டுக்கும் ஒத்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தூத்துக்குடியிலுள்ள திருநெல்வேலி ஜில்லா கூட்டுறவு சப்ளை அன்ட் மார்க்கெட்டிங் சொஸைட்டி பற்றி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கிருக்கிற முறைகேடுகள் பற்றியும், அங்குள்ள செயலாளரை மாற்றுவதற்கான முயற்சிகள் பற்றியும் சொன்னார்கள். எனக்கு முழு விவரமும் கிடைத்திருக்கிறது. அதை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். இதில் ஏறத்தாழ 9,33,000 ரூபாய் அளவில் ஏற்பட்டிருக்கிற சில ஊழல்கள், முறைகேடுகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்த விவாதம் கூடியவரையில் மிகவும் நல்ல முறையில் நடந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இவ்வளவு உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டது மிகவும் பாராட்டுதற்குரியது. உறுப்பினர்கள் எழுப்பியுள்ள பல

பிரச்சினைகளுக்குப் பதில் கூறுவதற்கு முன்பாக, கூறப்பட்ட குறைபாடுகளை பதில் சொல்ல முதலில் எடுத்துக் கொள்கிறேன். இந்தத் துறை என்னென்ன முறையில் செயல்படுகிறது என்பதைப் பற்றி முதலில் விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறை மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒன்று வங்கிகள் பற்றியது, லேவாதேவி பற்றியது, பணம் கொடுக்கல் வாங்கல்—ஆங்கிலத்தில் சொல்வது என்றால் க்ரெடிட் பற்றியது. இரண்டாவதாக, ரைஸ் மில்ஸ் போன்ற தொழிற்சாலைகள், ஜின்னிங் போன்ற தொழிற்சாலைகள், அல்லது ஆயில் எக்ஸ்பெல்லர் போன்ற ப்ரோஸஸிங் தொழில்கள், பின்னர் வியாபாரம். இந்த மூன்றையும் பார்க்க வேண்டும். இன்று முக்கியமாக லேவாதேவி பற்றி அல்லது பணம் கொடுக்கல் வாங்கல்பற்றிப் பேசினார்கள்.

திரு. சித்தன் அவர்கள் நல்ல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். அவர்கள் கூறிய கருத்துக்கள், மிக நல்ல கருத்துக்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் வாழையடி வாழையாக பலர் இருந்து கொண்டு வருகிறார்கள். அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று சொல்லும்போது எங்கள் தேர்தல் அறிக்கை தான், பேறிஞர் அண்ணா அவர்கள் எழுதியது, என் நினைவிற்கு வந்தது, அதில் எழுதியிருக்கிறார்கள், கூட்டுறவுத்துறை பற்றி. 'ஏழைகளின் நலனுக்காக என்று அமைக்கப்பட்ட கூட்டுறவுத் துறையை ஆதிக்கக்காரர்கள் கரத்திலிருந்து விடுவிக்கும் முயற்சியை திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ள விரும்புகிறது.' அவர்கள் சொன்னதும் தேர்தல் அறிக்கையில் உள்ளதும் ஒன்றாக இருக்கிறது. திரு. சித்தன் அவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் வாழையடி வாழையாக இருக்கக்கூடாது என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். (ஆரவாரம்). அவரது தந்தையார் நில அடமான வங்கியின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் அதில் பல வருடங்களாக இருந்து, இப்போது அந்த நில அடமான வங்கிக்கு இவர்கள் தலைவராக இருந்து கொண்டு வருகிறார்கள். (திரு. என். எஸ். வி. சித்தன்: அதில் என்ன குற்றம் இருக்கிறது?). வாழையடி வாழை என்பதற்காகச் சொல்கிறேன், அது தவறு என்று சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும். திரு. சித்தன் அவர்களைப் போன்று நல்ல அனுபவம் உடையவர்கள் வாழையடி வாழையாக இருந்தால் அதை வரவேற்கிறேன். (ஆரவாரம்). வாழையடி வாழையாக யாருமே இருக்கக் கூடாது என்றால் திருமங்கலம் என்னாவது (ஆரவாரம்).

இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் வங்கிக்கு ஏதோ கட்சிக் கண்ணோட்டத்தோடு நான் ஏதோ நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும், அவர்கள் வங்கியில் ஏன் ஒரு



மானேஜரை நியமிக்கக்கூடாது என்று நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். (குறுக்கீடு) டிப்பார்ட்மெண்டிலிருந்து கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். என்னை நம்புங்கள், இன்று அவர்கள் சொல்லும்வரை அது எனக்குத் தெரியாது. டிபார்ட்மெண்டிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். கட்சிக் கண்ணோட்டத்துடன் செய்யப்படவில்லை என்பதற்காகச் சொல்கிறேன் இதை. எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்பதை விளக்கிச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நில அடமான பாங்க் அல்லது நில வள வங்கியில் தவணை தவறிய கடன் இருந்தால், அது 15 சதவீதத்துக்கு மேல் இருக்குமானால் ரிசர்வ் பாங்க் பரிவுரைப்படி அதற்கு கடன் கொடுப்பது குறைக்கப்படும். வங்கி முழுமையாக செயல்படுவது தடைப்படும். 25 சதவீதத்துக்கு மேல் தவணை தவறிய கடன் இருந்தால், ரிசர்வ் பாங்க் இன்னும் கடுமையான பல கட்டுப்பாடுகளை விதித்து அவர்களுக்கு கொடுக்கக் கூடிய கடன் தொகையை குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களது வங்கி இருக்கிறது. அதற்குப் பணம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதைக் கொண்டு அவர்கள் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து வருகிறார்கள். அதிகப்படியான நிலுவை இருக்குமானால் அந்தக் கஷ்ட நஷ்டத்தை யார் அனுபவிப்பது? ரிசர்வ் பாங்கின் டயாக்டீவ் கடன் தவணையை செலுத்த தவறினால், 15 சதவீதத்துக்கு மேல் யார் நிலுவை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் குறைவாகவும் கடன் வழங்க வேண்டும் என்பது. 25 சதவிகிதத்துக்கு மேல் கடன் பாக்கி வைத்துக் கொண்டிருந்தால் அதைச் சுட்டிக் காட்டி ரிசர்வ் பாங்கிலிருந்து வரும் பணம் வராது, என்ன செய்வது என்று கேட்க வேண்டும். இவர்கள் வங்கிக்கு 7½ லட்சம் ரூபாய் கடன் கொடுப்பதாக அறிகிறேன். கட்சிக் கண்ணோட்டம் எனக்கு ஏதாவது இருந்தால் 7½ இலட்சம் ரூபாய், இவர்கள் தலைவராக இருக்கின்ற திருமங்கலம் பேங்கிற்கு அனுப்பி விவசாயிகளுக்குக் கொடுங்கள் என்று சொல்லியிருப்பேனா? தமிழக அரசு அனுப்புகிறது. ரிஜிஸ்தரார் அனுப்புவது இல்லை. (குறுக்கீடு) திரு. விநாயகம் அவர்கள் சொல்வதைப்போல் ரிஜிஸ்தரார் அனுப்புவதில்லை. யார் அனுப்புவது என்று என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

THIRU K. VINAYAKAM : I object to this kind of insinuation. According to practice it is the Registrar who disburses the loan to societies. Let him correct himself or let him refer to the department.

திரு. ரா. கனகசபை: ரிஜிஸ்தரார் அனுப்புவதில்லை ரிஜிஸ்தரார் அனுப்பியதாகச் சொன்னால் அது தப்பு.

திரு. நா. வீராசாமி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் இப்படி உட்கார்ந்து கொண்டே பேசிக் கொண்டிருப்பது சரியா? அமைச்சரவர்களைக் குறை

சொல்லுகிறார்கள், அவர்கள் மட்டும் குறை சொல்லுகிறார்கள், ஆனால் அவர்கள் அப்படிச் செய்வது முறையா என்பதற்குத் தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் சொல்லுகிறேன், உட்கார்ந்து கொண்டே சொல்வது தப்புதான். உட்கார்ந்து கொண்டே திரு. விநாயகம் அவர்கள் வாய்க்கு வந்ததைச் சொல்லுவார்கள், அது தப்புதான்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ரிஜிஸ்தரார் அனுப்பியதாகச் சொன்னால் அதுவும் தவறு என்பதையும், நடைமுறையில் அப்படிக் கிடையாது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கனகசபை அவர்கள் தெளிவாக்கினார்கள். ரிஜிஸ்தரார் அனுப்புவது அல்ல. மத்திய நிலவள வங்கியே அனுப்புகிறது. திரு. சித்தன் அவர்களிடத்தில் கேட்டால்கூடச் சொல்லுவார்கள். ஆனால் ஏழரை இலட்சம் ரூபாய் திரு. சித்தன் அவர்கள் தலைவராக இருக்கின்ற வங்கிக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னால், ஒவ்வொரு பைசாவிற்கும், ஒவ்வொரு ரூபாய்க்கும் இந்த அரசு கையெழுத்திட்டு, கியாரண்டி கொடுத்து, வாக்குறுதி கொடுத்து, ஒருவேளை திரு. சித்தன் அவர்களின் வங்கி தவறாகப் போய், அவர்கள் திரும்பக் கொடுக்கத் தவறினால் இந்த அரசு கொடுக்கும் என்று சொல்லி ரிசர்வ் பேங்கிலிருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

ஆனாலும் அவர்கள் சொன்ன கருத்து வரவேற்கக் கூடிய கருத்து என்பதிலே உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒன்றைச் சொன்னார்கள், முன்கடன்களைப் பற்றிச் சொன்னார்கள். முன்னாலே இந்த வங்கியில் ஒருவர் கடன் வாங்கியிருந்தால் அந்தக் கடன்களைத் தீர்ப்பதற்காக நாம் கடன் கொடுக்க வேண்டுமென்று திரு. அழகர்சாமி அவர்களும், இன்னும் பலரும் சொன்னார்கள். முன்னாலே அப்படி நடந்து வந்தது. முன்னாலே நில அடைமான வங்கியாக இருந்தது. ஆனால் இப்பொழுது நில அடைமான வங்கி கிடையாது, இப்பொழுதிருப்பது நிலவள வங்கி, நிலத்தை வளப்படுத்த மட்டும் அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று செயல்படுகிறது.

தேர்தல் அறிக்கையில் இருந்ததை வாசித்தால் மன்னித்து விடுவார்கள் என்று கருதுகிறேன். தேர்தல் அறிக்கையில் உள்ளதைச் செயல்படுத்தவில்லை என்று பல நாட்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தேர்தல் அறிக்கைப்படி செயல் பட்டார்களா என்று இன்றைக்குக் கேட்கவில்லை என்னிடம். அப்படிக் கேட்டிருந்தால் நன்றாகச் சொல்லியிருப்பேன். முன் கடன் என்பதைக்கூட பூராவும் நிறுத்தி விடவும் இல்லை. முன் கடன் என்று யாராவது வங்கிக்கு வந்து அதனைத் தீர்க்க அந்தக் கடன் வேண்டுமென்று, குறைந்த வட்டிக்கு வேண்டுமென்று கேட்டால், இப்பொழுதுள்ள விதியின்படி முன்னால் வாங்கிய கடனுக்காக, நிலவள வங்கியில் கேட்கலாம். ஆனால் திருமணம் நடத்துவதற்கு, பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கு, அல்லது வேறு நல்ல காரியங்களுக்காக இருந்தால் அந்தக் கடன்களை இப்பொழுது நிலவள வங்கியிடம் வந்து கேட்க வேண்டாம். எங்குமே கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை. திருமணம் என்றால் எல்லோருக்கும் ஆதரிக்க வேண்டிய காரியம், படிப்பது என்றால் ஆதரிக்க வேண்டிய காரியம், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்தக் கடன்களுக்கு வேறு வங்கிகள் இருக்கின்றன, அர்பன் பேங்க் என்று தனியாக வைத்திருக்கிறோம், கூட்டுறவில் வேண்டுமானாலும் இருக்கிறது, அங்கே போய் வாங்க வேண்டும்.



திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள் அடிஷனல் ரிஜிஸ்தரார் என்ற அதிகாரியை நியமித்திருக்கிறது என்று. அவர்கள், அதிகாரிகளை நியமித்ததன் காரணமாக அதிகச் செலவு ஆகிறது என்ற கருத்தைச் சொல்லியிருந்தால் நான் ஏற்றுக் கொள்வேன். அடிஷனல் ரிஜிஸ்தராரை இவ்வளவு குறைந்த சம்பளத்தில் நியமிப்பதை விட இன்னும் டைரக்டர் ஆஃப் ரிஜிஸ்தரார் என்ற பெரிய அதிகாரியை நியமிக்கக் கூடாதா? என்று சொன்னார்கள் பெரிய அதிகாரியாக நியமித்தால் அதிகச் சம்பளம்தான் கொடுக்க வேண்டும். அடிஷனல் ரிஜிஸ்தரார் என்று நியமிக்கக் காரணம், முன்னாலே சிறியதாக இருந்த இந்தத் துறை, ரூ. 3 கோடி மட்டும் கடனைக் கொடுத்து வாங்கியது, இப்போது 14 கோடி, 15 கோடி என்று ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய அளவிற்கு, இன்னும் அடுத்தடுத்த வருஷங்களில் இன்னும் அதிகமாக ஆகும் என்ற அளவிற்கு, மறு நிதிக் கார்ப்பொரேஷன் கொடுக்கும் தொகை 15 கோடி அளவிற்கு நிச்சயமாக வரக்கூடும் என்ற நிலையில் கூட்டுறவுத் துறையில் வங்கித் துறையைக் கவனிக்கத் தனியாக அதிகாரி தேவைப்படுகிறது, அவருக்கு அதிக வேலை இருக்கிறது என்று சொல்லுமளவிற்கு இருக்கிறது. இன்னும் அடிஷனல் ரிஜிஸ்தரார்கள் மற்ற பகுதிகளுக்குத் தேவைப்படும் என்றுகருதுகிறேன். ரைஸ் மில் மற்றும் தொழிற்சாலைகள், மேலும் பண்டகசாலைகள் ஆகியவற்றிற்குத் தேவைப்படலாம். எனவே தேவையற்ற ஒருவரை நியமித்து விட்டோம் என்று கொஞ்சங்கூட எண்ணத் தேவையில்லை.

திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். நானும் உட்கார்ந்து கொண்டுதான் இருந்தேனே தவிர, குறுக்கிடவில்லை. அவர்கள் பேசும்பொழுது, விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்வதில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்று

[திரு. சி. பா. ஆதித்தனர்] [1970 ஏப்ரல் 2

அவர்கள் சொல்லிக்கொண்டு போகின்றபொழுது, அவ்வளவு ஆர்வத்தோடு, ஆனந்தத்தோடு சொல்லிக் கொண்டு போவதைப் பார்த்து, அந்த நேரத்தில் எனக்குக் குறுக்கிட மனமில்லை. அவர்கள் முகத்திலே பூத்த புன்னகை மான் பதில் சொல்லும் வரையிலாவது இருக்கட்டும் என்று அப்போது குறுக்கிடவில்லை, இப்போது சொல்லுகிறேன். அவர்கள், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லையென்று சொன்னார்கள். அது உண்மையல்ல. கடன் உதவி விவசாயிகளுக்குக் கொடுப்பதில் முன்னேற்றம் இல்லை என்று சொன்னார்கள். அது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. 3 கோடி ரூபாய் அளவில் 1966-67 இல் நீண்ட காலக் கடனைக் கொடுக்கப்பட்டு வந்தது, அடுத்த ஆண்டில் 7 கோடியாக ஆகி, அதற்கடுத்த வருஷம் 7 கோடி என்பது 14 கோடியாக ஆகி உள்ளது. டபில், ரீ டபிள் என்று ஒரு விளையாட்டிலே உண்டு என்று கருதுகிறேன். அதைப்போல 1967-68-இல் 7 கோடியாக இருந்தது, அடுத்து 7 என்பது 14 ஆக இன்னும் விரிவாகி, வருகின்ற வருஷத்தில் இன்னும் விரிவாக வரும் என்று எதிர் பார்க்கும் நேரத்தில், கடன் உதவி செய்வதிலே கொஞ்சமும் முன்னேற்றமில்லை என்று சொல்வது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள், கொஞ்சமாவது பாராட்டக் கூடாதா என்று சொன்னார்கள். அவர்கள் பாராட்டுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. திரு. கொளத்தூர் கோதண்டம் வேண்டுமானால் பாராட்டை எதிர்பார்த்திருக்கலாம், ஆனால் நான் அவர்கள் பாராட்டுச் செய்யவில்லையே என்று வேதனையடையவில்லை. அவர்கள் பாராட்டினால் இந்த அரசுக்கு மக்களிடத்திலே கொஞ்சம் செல்வாக்கு உயர்வாகி, அதனால் அவர்களுக்கு மனக் கஷ்டம் ஏற்படும் என்பதற்காக அவர்கள் பாராட்ட மாட்டார்கள் என்று எதிர்பார்த்துத்தான், இவ்வளவு செய்திருக்கிறோம் என்ற உண்மையைச் சொல்லுகிறேன். திண்டிவனத்தில் அவர்கள் உறுப்பினராக இருக்கும் நிலவள வங்கிக்கு அவர்களுக்கே தெரியாது என்று கருதுகிறேன் 25,000 ரூபாய் பங்கு முதலாகக் கொடுத்திருக்கிறோம். பங்கு முதல் என்று 20 ஆண்டுக் காலத்தில் எந்த அரசாவது கொடுத்திருக்கிறதா? நில அடைமான வங்கிக்காவது எந்த அரசாவது கொடுத்திருக்கிறதா?

THIRU K. RAMAMOORTHI: The Hon. Minister is giving wrong information. I am not a member of any bank or land mortgage bank.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களை உறுப்பினர் என்று சொல்லவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: உறுப்பினர் என்று சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திண்டிவனத்திற்கு, வங்கிக்கு உறுப்பினர் இல்லை.



1970 ஏப்ரல் 2]

THIRU K. RAMAMOORTHI: I am a member of the Tindivanam Urban Co-operative Bank. He may get himself corrected. Regarding loans to agriculturists, let him refer to page 9 Paragraph 24 of his own statement. That is there.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அவர்கள் உறுப்பினராக இருக்கும் திண்டிவனம் தொகுதியிலிருக்கும் வங்கிக்கு நாங்கள் முதலாக 25,000 ரூபாய் கொடுத்திருக்கிறோம். அதேபோல் நமது திரு. கனகசபை அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தலைவராக இருக்கும் பேங்கிற்கு 25,000 ரூபாய் முதல் வேண்டுமென்று ரிசர்வ் பேங்கிலேயிருந்து பெற்றுக் கொடுக்கவிருக்கிறோம். கட்சிக் கண்ணோட்டம் என்பது இருக்குமானால் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கனகசபை அவர்கள் தலைவராக இருக்கப்பட்ட அந்த வங்கிக்கு ஏறக்குறைய ஐந்தரை இலட்சம் ரூபாய் கடன் உதவி செய்து கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்திருப்போமா? எனவே, கட்சிக் கண்ணோட்டம் என்று சொல்லி வினை இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

புரமோட்டர், சீப் புரமோட்டர் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். ஆகவே அதற்காக மீண்டும் நான் பதில் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். கட்சிக் கண்ணோட்டம் என்று சொல்கிறபொழுது, கட்சிக்காரர்களுக்காக ஒரு நன்மையைச் செய்யலாம் என்ற அர்த்தத்தில் ஒருவேளை அவர்கள் சொல்லுகிறார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. அப்படிச் சொல்வார்களானால், நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் . . .

திரு. க. இராமமூர்த்தி: மறுபடியும் நான் சொல்லாததை நான் சொன்னதாகச் சொல்கிறார். இன்றைக்கு "I was very cautions" கட்சிக் கண்ணோட்டத்துடன் நியமித்தார்கள் என்று சொல்லவில்லை. விதிகளுக்குப் புறம்பாக நியமித்தார்கள் என்றுதான் சொன்னேன். மாவட்டம் விட்டு மாவட்டம் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். நான் கூட்டுறவு விதிகளுக்குப் புறம்பாக நியமித்திருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக நினைத்துக் கொண்டு, அதற்குப் பதில் சொல்லிக்கொண்டு போவதென்றால் அதற்கு இடம் இது அல்ல. வேறு எங்கேயாவது வைத்துக் கொள்ளட்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கட்சிக் கண்ணோட்டத் தோடு என்று ஒருவேளை அவர் பக்கத்தில் இருப்பவர் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். திரு. சித்தன் அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். அந்த அளவுக்கு எனக்கு ஒரு மன நிறைவு இருந்தது என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் பேசுகிற பொழுது அமைச்சர் விலகினால் நன்றாக இருக்கும் என்று சொன்னார். அதே சமயத்தில் இந்த அமைச்சர் அவர்கள் கட்சிக்கு வேண்டியவர்களுக்கு . . .

[1970 ஏப்ரல் 2

THIRU K. RAMAMOORTHI : I do not want him to resign. Let him remain and spoil the department as far as possible. நான் சொல்லாததைச் சொல்லி, he is answering me. I did not

இன்றைக்கு நல்ல காலமாக யாரும் அவரை ரிசைன் பண்ணச் சொல்லவில்லை.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நீங்கள் சபையில் பேசி விட்டுச் சென்ற பிறகு, நீங்கள் சபையில் இல்லாதபொழுது, மற்றைய உறுப்பினர்கள் பேசியதுபற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளாமல் சொல்கிறீர்கள். அவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்று திரு. வி. கே. கோதண்டராமன் பேசினார். கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்கிறார் என்று திரு. இராமமூர்த்தி சொன்னதாகக் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. நீங்கள் சபையில் இல்லாத நேரத்தில் இங்கு பேசிய உறுப்பினர்கள் சிலர் கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். சுதந்திராக் கட்சி உறுப்பினர் கூட அப்படியிருந்தால் தவறு, கட்சிக் கண்ணோட்டத்தோடு இருக்கக் கூடாது என்று சொன்னார். மாண்புமிகு அமைச்சர், திரு. இராமமூர்த்தி அவர்கள் அப்படிச் சொன்னார் என்பதாகச் சொல்லவில்லை. இங்கே பேசப்பட்டதை பொதுவாக விமர்சிக்கிறார். அவ்வளவு தான்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நிலவள வங்கியைப் பற்றிப் பலமுறை பலபேர் கண்டனம் செய்தும், சில பேர் ஆதரித்தும் பேசினார்கள். இந்த நிலவள வங்கியைப்பற்றி ஒரு அடிப்படையான உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இது நில அடைமான வங்கி அல்ல. இது லேவாதேவி அல்ல. கூட்டுறவுத் துறையில் லேவாதேவி செய்வதாயிருந்தால் கூட்டுறவு துறை எதற்கு? செட்டி நாட்டு நகரத்தார்கள் மிக நல்ல முறையில் லேவாதேவி செய்ய முடியும். லேவாதேவி செய்வதாயிருந்தால் கூட்டுறவுத் துறை அதில் அவர்களை மிஞ்ச முடியாது. நகரத்தார்களை, செட்டியார்களை, நாம் மிஞ்ச முடியாது. லேவாதேவி செய்வதில் அவர்கள் கடல் கடந்து சிங்கப்பூர், பினாங்கு, கோலாலம்பூர், ஃபீஜித் தீவு, மொரீஷியஸ் ஆகிய இடங்களுக்குச் சென்று உலகமே மெச்சக்கூடிய வகையில் லேவாதேவி செய்தவர்கள். கூட்டுறவுத் துறை வேறு, லேவாதேவி வேறு. அந்த அடிப்படையில் நமது லட்சியத்தை அடைவது முடியாது. கூட்டுறவுத் துறையில் நாம் எதற்காக இருக்கிறோம்? கூட்டுறவுத் துறையில் நிலவள வங்கி மூலம் என்ன செய்கிறோம்? நிலத்தை வளப்படுத்துகிறோம். எப்படி வளப்படுத்த வேண்டும் என்று நாங்கள் ஏதோ ரகசியமாகச் சொல்லவுமில்லை, பேசவுமில்லை. தேர்தல் அறிக்கையிலே முன்னாலேயே சொல்லியிருக்கிறோம். 1967-வது வருட தேர்தல் அறிக்கையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கைப்பட எழுதியது :

"பருவ மழை தவறும் என்ற குறிகள் தென்படும்போது, இயற்கை கெடுத்து விட்டது என்று கூறிக்கொண்டிருந்து விடாமல்



[திரு. சி. பா. ஆதித்தனார்]

மறைந்து கிடக்கும் நீர்வளத்தை விஞ்ஞான முறைப்படி, நீர் பெறும் முறையை செம்மைப்படுத்தி, வறட்சி நிலையைத் தடுத்திடும் திட்டத்தை தி.மு.க. மேற்கொள்ள விரும்புகிறது". பசுமைப் புரட்சி என்று சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். இல்லையென்றால், மறைந்து கிடக்கும் நீரை விஞ்ஞான முறைப்படி மேலே கொண்டு வருகிற திட்டம் என்று வைத்துக்கொள்ளுங்கள் அதோடு இந்த அறிக்கை மேலே சொல்கிறது :

"நீர் ஊற்றுக்களைக் கொண்டும், ஆழ் கிணறுகளைக் கொண்டும் குறையைப் போக்கிடும் திட்டம் வகுத்துச் செயல்பட கழகம் விழைகிறது." அரசுக்கு வந்தால், எங்களிடம் அரசைக் கொடுத்தால், நாங்கள் இன்னின்ன வகையில் செய்வோம் என்ற அளவுக்குத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் தேர்தல் அறிக்கையில். இன்னும் இதைவிட தெளிவாக எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்கள்.

நிலவள வங்கி என்பது ஒரு கருவி. நிலவள வங்கி என்பது லட்சியம் அல்ல. நிலவள வங்கியை வட்டாரந்தோறும் நாங்கள் வைத்துவிட்டாலேயே எங்கள் லட்சியம் நிறைவேறிவிட்டது என்று யாராவது சொல்லத் துணிவார்களேயானால், அது எங்கள் லட்சியம் அல்ல, அது நோக்கம் அல்ல. அது லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு கருவி, ஆயுதம் என்பதைத் தவிர, வேறு அல்ல.

திரு. சித்தன் அவர்களே சொன்னார்கள். பணக்காரர்களுக்கே பண உதவி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள், ஒரு சிலருக்கே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மேல்தட்டில் இருப்பவர்களுக்கே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று கூறினார்கள். அப்படியில்லாமல் ஏழை எளிய விவசாயிகள் பெற்றுக் கொள்ளும் வகையில் நிலவள வங்கிகள் செயல்படும். தமிழ் நாட்டின் பெரிய செல்வம் என்று நாம் சொல்லக் கூடியது எது? சேலத்து இரும்புக் கனியைச் சொல்லலாம், வட ஆர்க்காடு அலுமினியத்தைச் சொல்லலாம், தென் ஆர்க்காடு பழுப்பு நிலக்கரியைச் சொல்லலாம். என்னைக் கேட்டால், தமிழ் நாட்டிற்கு பெரும் செல்வம் மறைந்து கிடக்கும் அந்த நீர்வளம். விஞ்ஞான முறையில் ஆழ்கிணறுகளின் மூலம் அந்த நீரை மேலே கொண்டுவந்து விவசாயிகளுக்கு, ஏழையானாலும், கொடுப்பதற்கு, அவர்களுக்கு உதவி செய்ய, நிலவள வங்கி கருவியாக இருக்கிறது.

நான் குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முன்பிருந்த நில அடைமான வங்கி செயல்பட்ட விதம் வேறு, நோக்கம் வேறு. ஆனால், இப்பொழுது உள்ள நிலவள வங்கியின் நோக்கமும், திட்டமும் வேறு. முன்னாலிருந்தவர்கள் யாராவது ஒருவருக்கு கடன் வேண்டுமென்றால், நிலத்தை வளப்படுத்துவதற்கு என்றே வைத்துக் கொள்வோம், வேறு ஒரு காரியத்திற்கும் அல்ல, ரூ. 10,000 தேவை என்றால், [illegible] இருக்க நில [illegible]

வங்கியில் ரூ. 20,000, ரூ. 25,000 மதிப்புள்ள நிலத்தை அடைமானம் வைக்க வேண்டும். நில அடைமானம் வங்கி எப்படி மதிப்பிடுவார்கள்? ஐந்து வருடங்களுக்குள்ளாக பக்கத்து நிலங்கள் என்ன விலைக்கு போயிற்றோ, அந்த விலையை வைத்துக்கொண்டு, ரூ. 20,000; ரூ. 25,000 மதிப்புள்ள நிலம் இருந்தால் மேலும் ரூ. 10,000 தருகிறோம் என்று சொல்வார்கள்.

பணக்காரர்களாக இருப்பவர்கள் மேலும் பணக்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு பெருந் தலைவர் குறைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு நாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு கட்சித் தலைவர், பெருந் தலைவர் சொல்கிறார்கள்: "மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி விட்டோம், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகிறார்கள், ஏழையாக இருப்பவர்கள் ஏழையாகவே இருக்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். அந்தப் பக்கம் கை காட்டுகிறார்கள். அந்தப் பக்கத்திலே இருக்கிற தலைவர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக ஆகிறார்கள், ஏழையாக இருந்தவர்கள் ஏழையாகவே இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தப் பக்கம் என்றால், பழைய காங்கிரஸ், புதிய காங்கிரஸா, சிண்டிகேட்டா, இண்டிகேட்டா, என்ன பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. முன்பிருந்த நிலை யாராவது ஒருவருக்கு, கிணறு வெட்டுவதற்கு, பம்பு செட்டு வைப்பதற்கு பணம் வேண்டுமென்றால், அவருக்கு தரிசு நிலம் 2 ஏக்கர், 3 ஏக்கர்தான் இருக்கிறது என்றால், அவர் நில அடைமான வங்கியின் உள்ளே போய் நுழையக் கூட முடியாது. "தரிசு நிலமா, என்ன பொறும், ஒரு ஏக்கர் ரூ. 500 என்றால், மூன்று ஏக்கர் ரூ. 1,500 பொறும், உங்களுக்கு ரூ. 750 கடன் கொடுக்கிறோம்", என்று சொல்வார்கள். ரூ. 750-ஐ வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஆகையினால்தான் ஏழைகளின் நலனுக்காக என்று அமைக்கப்பட்ட கூட்டுறவுத் துறை ஆதிக்கக்காரர்களின் கரங்களில் சிக்கித் தவிப்பதை மீட்க வேண்டும் என்று சொன்னதை ஒட்டி, ஏழை எளியவர்களுக்குப் புதியதாக நாங்கள் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறோம்.

பை-லாவை குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நான் எடுத்துவாசிக்க முடியும். பை-லா 21 என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது இந்தப் புதிய பை-லாவின்படி, பை-லாவைத் திருத்திக் கொள்ளுங்கள் என்று பழைய வங்கிகளை எத்தனையோ முறை கேட்டுக் கொண்டிருக்கிறோம். திருத்தாமல் இருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். புதியதாக பை-லாவை ஏற்படுத்தி, இப்படித் திருத்துங்கள் என்று சொல்லியிருக்கிறோம். புதியதாக ஏற்படுத்தப்பட்ட வங்கிகள் இந்த பை-லாவை, துணை விதியை அமைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் துணை விதி என்ன சொல்லுகிறது





என்றால், விலை மதிப்பு என்று போடும்பொழுது, விவசாயிடம் தரிசாகக் கிடக்கின்ற நிலமாக இருந்தால் அது மூன்று போகம் விளைவிக்கின்ற தன்மையில் இருக்குமானால் என்ன விலை இருக்க வேண்டுமோ அதை விலையாகக் கொண்டு, அதோடு சேர்த்து, கிணற்றின் விலையையும் சேர்த்து, பம்பு செட்டு விலையையும் சேர்த்து அதை மூலதனமாகக் கொண்டு [illegible] கொடுக்க வேண்டும். கிட்டத் தட்ட ஒரு கிணற்றுக்கு, பம்பு செட்டுக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவையும் பெறக்கூடிய நிலைமையில் வழி வகுத்திருக்கிறோம், ஏழை பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில், முன்னாலிருந்த முறை அடியோடு மாற்றப்பட்டிருக்கிறது. 21-வது பை-லாவை எடுத்துப் பார்த்தால் மிகவும் நன்றாகத் தெரியும்.

61488

முன்னால் இருந்தபடியேதான் இருக்கிறது என்று திரு. சுரேந்திரன் அவர்கள் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். லேவா தேவியா நடைபெறுகிறது என்று கேட்டார். லேவாதேவி நடைபெறவில்லை. நிலத்தை வளப்படுத்த நில வள வங்கிகளைத் தொடங்கியிருக்கிறோம். எல்லா வட்டாரங்களிலும் நாங்கள் விரைவிலே தொடங்குவதற்கு இருக்கிறோம். யாரையும், எந்த பி.ப. 1-30.
ஒரு வட்டாரத்தையும் புறக்கணிக்க வேண்டுமென்பது நோக்கமல்ல. யாரையும் புறக்கணிக்க வேண்டுமென்ற நோக்கமல்ல. அது காங்கிரஸ் வெற்றி பெற்ற இடமாக இருக்கலாம், அல்லது சுதந்திரா கட்சி வெற்றி பெற்ற இடமாக இருக்கலாம். ஆனால் அங்கு வாழ்கிற மக்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள்தானே? தமிழக மக்கள் தானே? ஆகவே அவர்களுக்கும் அந்த நன்மை கிடைக்க வேண்டும். அதில் எந்தவித கட்சி வேற்றுமையில்லை என்று சொல்லுகிறேன். நிலவள வங்கி என்று சொன்னால் கேலியும் கிண்டலும் செய்து, தி.மு. கழக வள வங்கி என்று சொன்னார்கள். செயல்படும்போது எந்தவிதமான கட்சி வித்தியாசம் இருக்காது என்று உறுதியோடு சொல்ல முடியும், அந்த வழியில் வந்தவர்கள்.

எடுத்துக் காட்டாக ஒன்று சொல்ல முடியும். காங்கிரஸ் தியாகிகளுக்கு, முன்னால் இருந்த அரசு 67 பேர்களுக்குப் பென்ஷன் கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் படத்தின் கீழே 'கண்ணியம்' என்று எழுதப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தியாகிகளாக இருந்தாலும் கூட 67 பேர் மட்டுமா நாட்டுக்காக இன்னல்கள் அனுபவித்தார்கள், காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள், ஆகையால் மூவாயிரம் பேர்களுக்கு மாதா மாதம் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கையெழுத்திட்டார். அந்தப் பரம்பரையில் நாங்கள் வந்தவர்கள். ஆகையால் அவர்கள் காட்டிய வழி இது. எந்தவிதமான வேற்றுமையும் இருக்காது என்று நிச்சயமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பல காரியங்களைப் பற்றிக் கேட்டார்கள், சந்தானம் கமிட்டி சிபார்சுகள், பரிந்துரைகள் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்று கேட்டார்கள். பலமுறை சொல்லியிருக்கிறேன். அரசு

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 எப்ரல் 2

எல்லாப் பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்ளுவதாக இல்லை. குறிப்பிட்ட நான்கு வகையான பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல. ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். நிர்வாக வசதிக்காக ஏற்றுக் கொள்ள முடியாதது ஒன்று. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒரு அமைப்பின் கீழ் இருக்க வேண்டுமென்று ஒரு சிபாரிசு இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் வரக் கூடிய பகுதிக ள்பல பிரிவுகளாக இருக்கின்றன. சந்தானம் கமிட்டி எல்லாம் ஒன்றாகச் சேர வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. அது நிர்வாகத்திற்கு வசதியில்லை என்ற காரணத்தால் இந்த சிபார்சை ஏற்றுக் கொள்ளவில்லை. இரண்டாவது அவர்கள் செய்த சிபாரிசுகள் வேறு பல முக்கியமான மகாநாடுகளில் எடுத்த முடிவுகளுக்கு மாறாக இருக்கின்றன. குறிப்பாக, எல்லா மாநில அமைச்சர்களும் காங்கிரஸ் மாநிலங்கள் உள்பட எல்லா மாநில கூட்டுறவு அமைச்சர்களும் கூடி எடுத்த சில முடிவுகள், பங்களூரிலும் சென்னையிலும் எடுத்தோம், அந்த முடிவுகளுக்குப் புறம்பாக சந்தானம் கமிட்டி சிபாரிசுக்கள் இருக்கிறபடியால் அவைகளை ஏற்றுக் கொள்வதாக இல்லை. அடுத்து ரிசர்வ் பாங்கு பரிவுரை, டிரக்டிவ், ஒன்று சொல்லுகிறது. உண்மையிலேயே அதனுடைய விதிகளுக்குக் கட்டுப்பாடுகள் என்று பொருள். அதற்குப் புறம்பாக சந்தானம் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே ,அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக சில சிபாரிசுகள் இருக்கின்றன. அவைகளைச் சட்ட நிபுணர்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்து,, அவை அரசியல் சட்டத்திற்கும் புறம்பாக இருந்தால், அந்த சிபாரிசுகளை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இந்த நான்கு வகையான சிபாரிசுகளைத் தவிர மற்ற சிபாரிசுகளை நாம் ஏற்றுக் கொள்வதாக இருக்கிறோம்.

நண்பர் எம். சண்முகம் பேசும்பொழுது 'கன்சுமர்ஸ்' மார்க்கெட்டிங் சொசைட்டி பற்றிச் சொன்னார்கள். அவை மிகவும் முக்கியமானது என்றும், விலைவாசியைக் குறைக்க முடியும் என்றும் சொன்னார்கள். அவர்கள் படித்து, அனுபவம் உள்ளவர்கள். ஆயினும், அவர்கள் சொன்னது முழுக்க முழுக்க ஒத்துக் கொள்ளக் கூடியதாக இல்லை. காரணம். பண்டகசாலையில் என்ன பொருள்களை விற்கிறோம்? உணவுத் தானியத்தை மட்டுமா விற்கிறோம்? கண்ட்ரோல் சாமான்கள் மட்டுமா விற்கிறோம்? எத்தனையோ சாமான்கள் விற்கிறோம். எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. விலைவாசி ஏற்றம் பற்றி தெளிவான கருத்துத் தேவை என்பதற்காகச் சொல்லுகிறேன். மாம்பட்டையின் விலை ஏறியிருக்கிறது, ஆடு, மாடு, வீடு அத்தனையின் விலையும் ஏறியிருக்கிறது, காய்கறி விலை ஏறியிருக்கிறது. ஒன்றின் விலை மட்டும் ஏறவில்லை. ஒரு மாடு ரூ. 200 என்றால் இப்போது ரூ. 300 கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. விலை ஏறியது ; ரூபாயின் மதிப்பு குறைந்திருக்கிறது. பொருளாதாரத்தில் 'லா ஆப் சப்ளை அண்டு டிமாண்டு என்று ஒரு விதியிருக்கிறது. அதிகமாக உற்பத்தி இருந்தால் விலை குறையும் என்று. எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. பணத்தின் மதிப்பு மட்டும் குறைந்து



1970 எப்ரல் 2] [திரு. சி. பா. ஆதித்தனார்]

வருகிறது என்றால் காகித பணம் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று பொருள். இது முற்றிலும் நம் கையில் இருக்கிற துறையாகக் கருதக் கூடாது. கூடுமானவரையில் விலைவாசியை குறைக்க என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து வருகிறோம்.

வேறு சில முக்கியமான காரியங்களைப் பற்றிச் சொன்னார்கள். இனிமேல் வரக்கூடிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. சில தவறுகளைப்பற்றி திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். 22 ஆயிரம் சங்கங்கள் இருக்கின்றன. ஒரு சில சங்கங்களில் தவறுகள் நடக்கிறது என்பது உண்மை. குறிப்பாக எங்களுடைய கவனத்திற்கு, ஆடிட் தணிக்கை தாமதமாக நடப்பதால், 1967-ம் வருஷம் வரையில் வந்திருக்கின்றன. ஆனால், சில சங்கங்களில் மட்டும்தான் குறைகள் நடந்திருக்கின்றன, தவறுகள் ஏற்பட்டு விட்டன, அல்லது அவைகளைப் பற்றித்தான் புகார்கள் வந்திருக்கின்றன என்பது உண்மை அல்ல.

குடியாத்தத்தில், டெக்ஸ்டைல் தொழிற் சங்கம் பற்றிக் குறை வந்திருக்கிறது. அதன் தலைவர் யார் என்பது தெரியாது. திரு. கோதண்டராமன் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். தவறுகள் நடக்கின்றன என்று சொன்ன பிறகு, தவறுகளை தவிர்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் சகித்துக் கொண்டிருக்க வேண்டும்? தவறுகளைத் தவறு என்று சொன்னால் எங்களுக்கு என்ன கேடு ? இன்ன இடத்தில் தவறு நடந்திருக்கிறது என்பதால் எங்களை யாரையும் குறையாக நினைக்க முடியாது. தவறு என்று எண்ணினால் அரசு வழக்குப் போடுகிறது. திரு. சகாதேவ கண்டரைப் போன்றவர்கள் இது தவறான வழக்கு, பொய்யான வழக்கு என்று சொல்லுகிறார்கள். இரண்டு பக்கத்தையும் பார்க்க வேண்டும். தவறு என்று தெரிந்து அதை மன்னிப்பது என்பது அல்லது தவறை விட்டு வைப்பது என்பது கிடையாது என்று உறுதியாகச் சொல்ல முடியும். தவறு கண்ட இடத்தில் 'குற்றம் குற்றமே' என்று சொல்லுகிற அளவுக்குப் பின் வாங்கவே வேண்டியது அரசின் கடமை. குற்றத்தைத் தண்டிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் சிலர் வருந்துகிறார்கள், சிலர் கவலைப்படுகிறார்கள். குற்றம் யார் செய்தாலும் குற்றம் குற்றமே, என்று சொல்லுகிற அளவுக்குப் பின் வாங்கவே இல்லையென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

வேறு சில கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். நண்பர் அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். ரிசர்வ் பாங்கு கடன் கொடுக்கிறது. விவசாயிகளுக்கு ஒரு வருஷத்திற்குள்ள மொத்த கடனையும் கொடுக்கலாம் என் றுரிசர்வ் பாங்கிலிருந்து அரசின் உத்தரவாதத்தின்பேரில் அரசின் கூட்டுறவுத் துறை கையெழுத்திட்ட பிறகுதான் கொடுக்கப்படுகிறது. ரிசர்வ் பாங்கு 3 சத விகிதம் வட்டி தான் போடுகிறது. கடைசியாக விவசாயிகளுக்கு வரும்பொழுது 7, 8 அல்லது 9 சத விகிதம் ஆகிறது. அதை குறைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். இது அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதை உறுதியாகச் சொல்லுகிறேன்.

அடுத்தாற்போல் வீட்டுவசதிகளைப்பற்றி உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமியும் மற்றவர்களும் பேசினார்கள். கூட்டுறவுத் துறையில் இரண்டு விதமான வீட்டுவசதிச் சங்கங்கள் இருக்கின்றன. ஒன்று, நமது நண்பர் சுப்பையா அவர்களிடம் உள்ளது. வீடுகளைக் கட்டி உறுப்பினர்களுக்குக் கொடுப்பது அது. மற்றொன்று, என்னுடைய கையில் இருப்பது கடன் கொடுப்பது. ஒரு லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் அதைக் கொண்டு ரிசர்வ் வங்கியில் இன்னொரு லட்சம் ரூபாய் கடன் வாங்க வசதி செய்துள்ளோம். மறுகடன் வசதிக்கு ஏற்பாடு செய்துள்ளோம். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தினால் வீட்டு வசதிக் குறைகள் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** புதிதான பை-லாக்களையும், விதிகளையும் போட இருக்கிறோம். 1968-ம் ஆண்டிலே ஏற்கெனவே சட்டம் ஒருமுறை திருத்தப்பட்டது. என்கம்ப்ரன்ஸ் சர்டிபிகேட் எதற்காகத் தேவைப்படுகிறதென்றால், முன்னால் அடைமானம் இருக்கிறதா என்பதற்காக அல்ல. நில உடைமையைத் தெரிந்துகொள்ள. என்கம்ப்ரன்ஸ் சர்டிபிகேட் முக்கியமாகத் தேவையில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். எந்தவிதமான காலதாமதமும் இல்லாமல் மேற்கொண்டு வசதிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் துறை முன்னேற்றமான பல காரியங்களைச் செய்ய இருப்பதால், நண்பர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கை ஒருமனதாக நிறைவேற வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, வேறு கடன்களைப் பெறுகின்ற வசதி நகரத்தில்தான் இருக்கிறது. கிராமத்தில் இருப்பவர்கள் ஒரு சங்கத்தில் கடன் வாங்கிவிட்டால், அவர்களுக்கு மீண்டும் வேறு கடன்கள் அளிப்பதில்லை. தன்னுடைய நிலத்தை வளப்படுத்த வேண்டுமென்றாலும் கடன் கிடைப்பதில்லை. நிலத்திற்கு மதிப்பு இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1968-ம்** ஆண்டு செய்த சட்ட திருத்தத்தின் காரணமாக, ஏற்கனவே கடன் வாங்கியிருந்தாலும் நிலத்தை வளப்படுத்துவதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. நிலத்தின் மதிப்பு மீது கடன் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். மதிப்பு என்பது இனிமேல் கிடையாது. முன்காலத்தில்தான் மதிப்பு இருந்தது. இப்பொழுது 'காஸ்ட் பெனிபிட் ரேஷியோ' என்பதன்பேரில் கொடுக்கப்படுகிறது. அந்த நிலத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால் அதிலிருந்து





வருவாய் 2 ஆயிரம் அதிகமாகக் கிடைக்குமா என்பதையெல்லாம் பார்க்க வேண்டுமென்று விதிகளிலே சொல்லியிருக்கிறோம். புத்தகத்தில் 22-வது பக்கத்தில் இதுபற்றிச் சொல்லியிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சந்தானம் குழுவின் அறிக்கையைப் பரிசிலனை செய்வதாகச் சொன்னார்கள். அரசாங்கம் அதன்பேரில் திருத்த சட்ட மசோதாவை எப்போது இந்த அவையில் சமர்ப்பிக்கும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தத் திருத்த மசோதா ஆய்வில் இருக்கிறது. சட்டத் துறையில் கூட்டுறவுத் துறைக்கென்று தனியாக ஒரு செல், பிரிவு அமைக்கப்பட்டு, சில அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, வேண்டிய திருத்தங்களைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. சோ. அழகர்சாமி, திரு. எம். சுரேந்திரன், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,08,53,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பி.ப. 1-45.

## 5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

@ 187. Notification issued with G.O. Ms. No. 2822, Revenue, dated the 26th November 1969 in regard to amendments to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryot-

wari) Rules, 1965 and the Tamil Nadu Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965. [Laid on the Table of the House under Section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

188. Notification issued with G.O. Ms. No. 140, Co-operation, dated the 17th March 1970 making the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970 in supersession of the Tamil Nadu Co-operative Land Development Banks (Special Provisions) Rules, 1970. [Laid on the Table of the House under Section 38A (2) of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]

*B. Reports, Notifications, and other papers.*

@ 127. Notification issued with G.O. Ms. No. 861, Revenue, dated the 22nd April 1968, making the Tamil Nadu Stamp (Prevention of Undervaluation of Instruments) Rules, 1968, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

@ 128. Notification issued with G.O. Ms. No. 3103, Revenue, dated the 23rd December 1969 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of mortgage deed to be executed by the Tamil Nadu Electricity Board for taking a loan from the Life Insurance Corporation of India during the current year 1969-70.

@ 129. Notification issued with G.O. Ms. No. 1743, Revenue, dated the 25th August 1969 in regard to concessional levy at reduced rate of stamp duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of mortgage deeds executed in connection with the loans advanced under the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923).

† 130. Annexure to the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 8 of 1970).

† 131. Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970).

@ Laid on the Table of the House on 1—4—1970.
† Despatched to Members on 31—3—1970.



## இணைப்பு 1.

*[27-ஆம் பக்கத்தில் 654-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]*

*(அ) ஈட்டுறுதி செய்துகொண்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே பொருந்தும்வகையில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் முதலில் மதுரை மாவட்டத்தில் 1956 அக்டோபர் திங்களில் செயல்படுத்தப்பட்டது. அதையடுத்து, 3—6—1969 முதல் மதுரையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள ஈட்டுறுதி செய்துகொண்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் இத் திட்டம் நீட்டிக்கப்பட்டது.*

*(இ) மதுரையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவது உட்பட முழு மருத்துவ வசதியைப் பெற உரிமையுண்டு. ஆனால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு, மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் வசதிகள் நீங்கலாக கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அடங்கிய விரிவுபடுத்திய மருத்துவ வசதியைப் பெற உரிமையுண்டு :—*

*1. பொது மருத்துவ வசதிகள்—இவற்றில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களில் சிகிச்சை பெறுவது உட்பட, பின்வருபவை அடங்கும் :—*

*சிறப்புத்திறனும் அனுபவமும் தேவைப்படுகிற சிகிச்சையைத் தவிர எல்லா சிகிச்சையும் ;*

*அம்மைத் தடுப்பு ஊசி போடுதல், பிற நோய்த் தடுப்பு ஊசி போடுதல் போன்ற நோய்த் தடுப்புச் சிகிச்சை ;*

*தேவையெனக் கருதப்படுகின்ற எல்லா மருந்துகளும், கட்டுப்போடும் சாதனங்களும் இலவசமாக வழங்குதல் ;*

*தேவையான நேர்வுகளில் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று பார்த்தல்.*

*2. ஈட்டுறுதி செய்துகொண்டவரின் மனைவிக்குக் கொடுக்கப்படும் இலவச மகப்பேறு வசதிகளில் பின்வருவன அடங்கும் :—*

*தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் பேறுகாலத்திற்கு முன்பும், பேறுகாலத்திற்கு பின்பும் சிகிச்சை அளித்தல் ;*

*ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் வீடுகளுக்குப் பேறுகாலத்தில் பேறுகால உதவியாளர் சென்று கவனித்தல் ;*

ஆம்புலன்ஸ் அல்லது மற்ற ஏற்பாட்டின்மூலமாக, தேவையான காலத்தில் நோயாளிகளை மருத்துவ மனைக்கு இலவசமாக எடுத்துச் செல்வதற்கான வசதிகள் ;

குறிப்பிட்ட நோய் சிகிச்சையில் வல்லுநரைக் கலந்தாலோசித்தல், அவரிடம் சிகிச்சை பெறுதல், அத்தகைய தன்மையிலும் அளவிலும் சிறப்பு ஆய்வு.

(a) The Employees State Insurance Scheme was first implemented in Madurai district in October 1956, covering the insured workers only. Subsequently, the Scheme was extended to the families of insured workers, in Madurai and suburbs, with effect from the 3rd June 1969.

(b) The insured workers in Madurai and suburbs are entitled to full medical care, including hospitalisation. But their family members are entitled to expanded medical care, which consists of the following arrangements, *except hospitalisation facilities*—

I. General Medical Services, which shall include treatment at the State Insurance dispensaries and shall consist of—

(i) all treatments other than treatment involving the application of special skill and experience;

(ii) such preventive treatment as vaccination and inoculation;

(iii) free provision of all drugs and dressings that may be considered necessary;

(iv) Domiciliary visits where necessary.

II. Free maternity services to the wife of an insured person consisting of—

(i) ante-natal and post-natal treatment at the State Insurance dispensary;

(ii) attendance by a Maternity Assistant on confinement at the residents of the insured persons;

(iii) facilities for the removal, free of charge to hospital where necessary, by ambulance or otherwise;

(iv) specialist consultation and treatment and special investigation of such nature and such scale.



## இணைப்பு 2.

[34-ஆம் பக்கத்திற்குள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் 1969-70-ஆம் ஆண்டில் எய்திய முன்னேற்றம்பற்றிய அறிக்கை.**

1969-70-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் வேளாண்மைக் கடன், கூட்டுறவு விற்பனை, வேலை முறைக்குட்படுத்துதல், துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய துறைகளில் மேலும் ஓராண்டு முன்னேற்றம் அடைந்துள்ளது.

2. நிலங்கள் வளப்படுத்தும்பொருட்டு நிலவள வங்கிகள்மூலம் நீண்டகாலக் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மனநிறைவுதரும் வகையில் அமைந்துள்ளது. உழவர் பெருமக்களுக்குத் தேவைப்படும் நீண்டகாலக் கடன்களை வழங்குவது குறித்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றிய நிலவள வங்கிகள் அரசு தம்மிடத்தே வைத்த நம்பிக்கை முற்றிலும் நியாயமானதே என்று மெய்ப்பித்தன. நிலவள வங்கிகள் 1966-67-ல் ரூ. 3கோடிவரை நீண்ட காலக் கடன்கள் வழங்கின. 1967-68-ல் இக்கடன் தொகை ரூ. 7 கோடியாகவும், 1968-69-ல் ரூ. 14 கோடியாகவும் அதிகரித்தது. 1970 மார்ச் 15-ம் நாள் வரையில் 1969-70-ல் ரூ. 12. 5 கோடி அளவுக்கு நிலவள வங்கிகள் நீண்டகாலக் கடன் வழங்கியுள்ளது. இந்த வகையில் இந்த ஆண்டின் சாதனை 1968-69-ஆம் ஆண்டைக் காட்டிலும் அதிக அளவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைக் கடன் வசதிகள் எளிய வகையில் கிடைக்க வகைசெய்வது அரசின் கொள்கையாகும். இக் கொள்கையையொட்டியும் நிலவள வங்கிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பிடத்தைக் கருத்திற்கொண்டும் இம் மாநிலத்தில் நடப்பு ஆண்டில் வட்டார நிலையில் 67 தொடக்க நிலவள வங்கிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 60 வங்கிகளில், சம்பந்தப்பட்ட சமுதாய வளர்ச்சி வட்டாரத்தின் (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரி அந்தந்த வங்கியின் மேலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அந்த வங்கிகள் திறம்படச் செயல்படுவதற்கும், விரைவில் தனித்து இயங்க வழி ஏற்படுவதற்கும் வகைசெய்வதே இதன் நோக்கமாகும். இந்த 60 புதிய வங்கிகளில் ஒவ்வொன்றுகுறித்தும் ரூ. 25,000 என்ற அதிக அளவு வரையில் பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணையாக தொகை வசூலிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் இந்த உதவி வழங்கப்படுகிறது. தொடக்க நிலவள வங்கிகள், மாநில நிலவள வங்கி ஆகியவற்றில் பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக தேசிய வேளாண்மைக் கடன் வழங்கு (நீண்ட காலக் கடன்கள்) நிதியிலிருந்து கடன் உதவி பெறுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு கடிதம் எழுதியுள்ளது. மாநில அரசு,

[1970 ஏப்ரல் 2

கீழ்க்காணும் வங்கிகளிலும், கடன் வழங்கு சங்கங்களிலும் பங்கு மூலதன முதலீடு செய்ய இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய வேளாண்மைக் கடன் வசதி (நீண்டகாலக் கடன்கள்) நிதியிலிருந்து கீழ்க்காணும் கடன்களை மாநில அரசுக்கு வழங்கியுள்ளது :—

ரூ. 50 லட்சம் : மாநில நிலவள வங்கியில் பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக.

ரூ. 16.055 லட்சம்: 55 தொடக்க நிலவள வங்கிகளில் முதலீடு செய்வதற்காக.

ரூ. 13.05 லட்சம் : 226 தொடக்க கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக.

4. நாட்டில், அண்மையில் ஏற்பட்டு வரும் "பசுமைப் புரட்சி"யை ஒட்டி, ஊற்று நீரைப் பயன்படுத்தும் திட்டத்தை, ஏராளமான பணித் திட்டங்களை வகுப்பதன் மூலம், கணிசமான அளவுக்கு விரைவுபடுத்த வேண்டும் என்று கருதப்படுகிறது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் தனிப் பகுதி வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இக்கழகம், இதற்கான மாநில நிலவள வங்கி வெளியிட்டுள்ள சிறப்புக் கடனீட்டு ஆவணங்களில் (சிறுபாசனத் திட்டங்களுக்காக வெளியிடப்பட்டவை) 90 சதவீதத்தை வாங்கியுள்ளது. இதுகுறித்து அரசு அடங்கல் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இதில் சிறு பாசனத் திட்டப் பணிகளுக்காக ரூ. 59 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணித் திட்டங்கள் மூன்று ஆண்டுகால அளவில் நிறைவேற்றப்படவேண்டும். பல்வேறு பகுதிகளின் வளர்ச்சிக்காக விரிவான திட்டங்கள் வகுக்கப்பட்டு தமிழ் நாட்டில் பசுமைப் புரட்சி வளங்கொழு முறையில் வளர்ச்சி அடைவதற்காக மும்முரமாக நிறைவேற்றப்படுகின்றன.

5. வேளாண்மை உற்பத்திக்காகக் கடன் வாங்குவதுகுறித்து ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்திலும் பாராட்டத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் 1967–68-ல் ரூ. 37.26 கோடி கடன் வழங்கியிருக்க 1968–69-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 44.12 கோடியாக அதிகரித்தது. அதாவது, வழங்கப்பட்ட கடன் தொகை 1967-68-ம் ஆண்டைக் காட்டிலும் 1968-69-ம் ஆண்டில் ரூ. 7 கோடி அதிகரித்தது. நடப்பாண்டில் 31—12—1969 முடிய வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் வழங்கியுள்ள கடன் தொகை ரூ. 35.37 கோடியாகும்.

6. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நவீன அரிசி ஆலைகளை நிறுவியது கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் ஏற்பட்ட பெரும் புரட்சிகரமான திட்டமாகும். அரிசி அரைவைமூலம் மேலும் அதிக அளவு அரிசி கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். நவீன அரிசி ஆலைகளை முதலீடு செய்வதற்காக 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மூலதன முதலீடு செய்வதற்காக ரூ. 115.73 லட்சம் வழங்கியுள்ளது. இதற்குத் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தாராளமாக நிதி உதவி கிடைக்கின்றது.



1970 ஏப்ரல் 2]

1970-71-ம் ஆண்டில் மேற்கொண்டு 50 நவீன அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு நிதி உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

7. எண்ணெய்ச் செக்கு ஒன்றை நிறுவுவதற்காகத் திண்டுக்கல் விற்பனை கூட்டுறவுச் சங்கத்திற்கு அதன் நடைமுறை மூலதனத்தை அதிகரிப்பதற்காக ரூ. 40,000 வழங்கப்பட்டுள்ளது.

8. வட ஆற்காடு மாவட்டத்தில் பழங்களை டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கும், பழங்கள், காய்கறிகள் உற்பத்தியாளர், விற்பனை வேலை முறைக்கு உட்படுத்தும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தனியாக அமைப்பதற்கும் வகைசெய்யும் திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப் பிரிவு விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9. தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து ஜப்பானுக்கு வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்வதைக் கவனிப்பதற்காக வாழைப்பழ ஏற்றுமதி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடிப் பகுதியில் வாழைப்பழ உற்பத்தி முனைப்புத் திட்டம் ஒன்று செயலில் இருந்து வருகிறது. ஏற்றுமதி செய்யப்படத்தக்க வாழைப்பழ வகை இந்த ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து ஏற்றுமதிக்காகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவும் பொதுமக்களுக்குப் பயன்படும் பொருள்கள் நியாய விலையில் கிடைக்கும் பொருட்டும் 50,000-மும் அதற்கு மேற்பட்டுள்ள மக்கள் தொகை கொண்டுள்ள நகரங்களிலும், மாநகரங்களிலும் மொத்த வணிக, தொடக்க வணிகப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன. தற்போது 30 மொத்த வணிகப் பண்டகசாலைகள் உள்ளன. இவற்றுடன் 660 சில்லரை விற்பனைப் பண்டகசாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் 1,667 தொடக்கப் பண்டகசாலைகளும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக் கூட்டுறவு மொத்த வாணிகப் பண்டகசாலைகள் 1969–70-ம் ஆண்டு முதல் ஒன்பது திங்களில் ரூ. 24.51 கோடி மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளது. இம் மாநிலத்தில் 1968–69-ல் 8 இடங்களில் துறைப் பண்டகசாலைகள் அல்லது சிறப்பு அங்காடிகள் செயல்பட்டு வந்திருக்க, 1969–70-ம் ஆண்டில் 10 இடங்களில் இத்தகைய துறைப் பண்டகசாலைகள் அல்லது சிறப்பங்காடிகள் செயல்பட்டு வந்தன. இத் துறைப் பண்டகசாலைகள் 1968-69-ல் விற்பனை செய்த பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 4.63 கோடியாக இருக்க, 1969–70-ல் (31—12—1969 வரையில்) விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 4.64 கோடியாக அதிகரித்தது. கூட்டுறவு மொத்த வாணிகப் பண்டகசாலைகள் சோப்பு தயாரித்தல், ரொட்டி தயாரித்தல், சமையலுக்குதவும் மசாலாப் பொடிகள் தயாரித்தல், காகித உற்பத்தி செய்தல், எழுது பொருட்கள் உற்பத்தி செய்தல், பாலித்தின் பைகள் தயாரித்தல் போன்ற பொதுமக்களுக்குப் பயன்படும் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்கள் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளினால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 1969-70-ல் இத்தகைய பல தொழில்கள் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1970 ஏப்ரல் 2

11. தணிக்கைப் பணிக்காகக் கூடுதல் பணியாளர்களையும், களப் பணித் தணிக்கையாளர்களை மேற்பார்வையிடுவதற்கான பணியாளர்களையும் நியமித்ததன் காரணமாகத் தணிக்கைப் பணியில் நிலுவையாக நின்ற பணி கணிசமாகக் குறைந்துள்ளது.

12. திரு. கே. சந்தானம் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 1968–69-ம் ஆண்டு இறுதிக்குள் தனது பணியை முடித்துக் கொண்டு 1969-ம் ஆண்டு மே மாதத்தில் தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. இக் குழுவின் பரிவுரைகள் அரசின் ஆலோசனையில் உள்ளன.

13. 1968–69-ம் ஆண்டிலும், 1969-70-ம் ஆண்டிலும் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஏற்பட்ட மொத்தச் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| பணித்திட்டங்கள். | 1968-69-ம் ஆண்டில் ஆன செலவு. | நான்காவது திட்டச் செலவு. | 1969–70 வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கம் (நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு.) | 31-1-1970 வரை ஏற்பட்ட செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| மத்திய நில அடமான வங்கிகளின் ஈட்டுறுதி ஆவணங்கள், புதிய கிணறு உதவித் தொகைத் திட்டம், கூட்டுறவு விற்பனை, வேலைமுறைக்குட் படுத்தல் திட்டம், துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு கல்விப் பயிற்சித் திட்டங்கள், பல்வகை பணிகுறித்த திட்டங்கள், மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டங்கள் பல்வகைத் திட்டங்களில் மாநில அரசின் பங்கு ஆகியவை உட்பட கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங்கள். | 543·42 | 2,984·77 | 437.23 | 118·20 |

பல்வேறு திட்டங்களின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அடுத்து வரும் பத்திகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.



1970 ஏப்ரல் 2]

1. வேளாண்மைக் கடன்.

14. வேளாண்மைக் கடன் வழங்குதல் நிதி வாயில்களைத் திரட்டுதல் ஆகியவற்றில் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் எய்தியுள்ள முன்னேற்றத்தைக் கீழே கொடுத்துள்ள விவர அறிக்கையிலிருந்து தெரிந்துக்கொள்ளலாம் :—

| | 1968-69 ஆண்டில் நிலைமை. | 1969–70-ம் ஆண்டுக்கான திட்ட இலக்கு. | 1969–70-ல் எய்திய சாதனை. (31-12-1969. வரையில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமங்களின் சதவீதம். | கிராமங்கள் அனைத்திலும் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. | | |
| | | (ரூ. கோடியில்.) | |
| 2 கடன் வழங்குதல்— குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள். | 44·12 | 62·50 | 35·37 |
| நீண்டகால கடன்கள் .. | 13·69 | 16·40 | 10·38 |
| | | (எண்ணிக்கை.) | |
| 3 கூட்டுறவு மத்திய வங்கியால் திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை. | 117 | 50 | 40 |
| 4 இந்த ஆண்டு இறுதியில் எய்தப்படவிருக்கிற பங்கு மூலதன வசூல்—அரசின் பங்கு மூலதனம் நீங்கலாக— | | | |
| | | (ரூ. கோடியில்.) | |
| தொடக்கக் கடனுதவி சங்கங்கள். | 11·25 | 12·11 | 12·09 |
| மத்திய வங்கிகள் .. .. | 7·92 | 8·82 | 8·32 |
| மாநிலக் கூட்டுறவு வங்கி .. | 2·14 | 2·74 | 2·17 |
| 5 வைத்து வரப்படும் வைப்பு நிதி— | | | |
| தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள். | 3·55 | 4·61 | 3·75 |
| மத்திய வங்கிகள் .. | 12·87 | 24·88 | 23·65 |
| மாநிலக் கூட்டுறவு வங்கி .. | 11·19 | 12·20 | 11·55 |

1 2817—15

[1970 ஏப்ரல் 2

கடன் வழங்கும் நிறுவனங்கள், தங்கள் கடனளிக்கும் திட்டத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாகக் கடன் வழங்கு நிறுவனங்களின் பங்கு மூலதனத்திலும், தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களிலும் முதலீடு செய்தல், நிர்வாகப் பணியாளர்களின் செலவை ஈடு செய்ய அவற்றுக்கு உதவித் தொகை அளித்தல், தமிழ் நாடு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களின் மீதும், பருவகால வேளாண்மைத் தொழில் முதலியவற்றுக்காக, இந்திய ரிசர்வ் வங்கி அளித்த கடன் மீது அசலும் வட்டியும் செலுத்தப்படுவதற்கு உத்தரவாதம் அளித்தல் ஆகிய முறைகளில் ஆண்டுதோறும் அரசு அவற்றுக்குப் போதிய உதவிகள் வழங்கி வருகிறது.

15. கடன் வழங்கும் நிறுவனங்களின் கடன் வாங்கும் சக்தியைப் பெருக்கும்பொருட்டு, அவற்றின் பங்கு மூலதனத்தில் கீழே குறிப்பிட்டுள்ளபடி மொத்தம் ரூ. 488 லட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| தமிழ்நாடு கூட்டுறவு வங்கி .. .. .. .. .. | 126 |
| மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் .. .. .. | 195 |
| தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள் .. .. .. | 122 |
| தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி .. .. .. | 45 |

இந்தக் கடன் வழங்கு நிறுவனங்களில் செலுத்திய பங்குகளுக்கு ஈவுத் தொகையாக 1968–69-ல் அரசுக்குக் கிடைத்துள்ள தொகை ரூ. 25.83 லட்சமாகும்.

16. உழவர்களில் வறிய பிரிவினர்க்கு அதாவது வசதி குறைந்த, வசதியற்ற உழவர்கள், நிலமற்ற குத்தகைக்காரர்கள் ஆகியோர்க்குப் போதுமான அளவு கடன் வழங்குவதற்காக, கடனுதவி நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பதன்பொருட்டு, தொடக்கக் கடனுதவிச் சங்கங்களும், கூட்டுறவு மத்திய வங்கிகளும் உண்டாக்கிய மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு அரசு நேரடியாக மானியம் வழங்கி வருகிறது. அதாவது, உழவர்களில் மிகவும் வறிய நிலையிலுள்ளவர்களின் கடன் நிலுவைக்காக, தொடக்கச் சங்கங்களுக்கு 12 சதவீத மானியமும், கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு 4 சதவீத மானியமும் அரசு வழங்கி வந்துள்ளது. 1968–69-ல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கடனுதவிச் சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு 1968-69-ல் ரூ. 5.35 லட்சம் வழங்கப்பட்டிருக்கையில் 1969-70-ம் ஆண்டில் ரூ. 4.99 லட்சம் அரசால் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

17. ஆதாயமற்ற, நிதி வசதியற்ற சங்கங்களைக் கலைத்துவிட்டு, அவை ஆண்டுதோறும் குறைந்த அளவு ரூ. 2 லட்சம் கடன் தொகை பற்று வரவு வைத்திருக்குமாறு தனித்தியங்கும் பிரிவுகளாக அவற்றை மாற்றும் திட்டம் 1969-70-ல் தொடர்ந்து நிறை



1970 ஏப்ரல் 2]

நிறைவேற்றப்பட்டது. இம்மாநிலத்தில், இத்திட்டம் செயல்படுத்தப் படுவதற்கு முன்னர் 11,000 கடன் உதவிச்சங்கங்கள் இருந்தன. அவை இப்போது 6,815 ஆக குறைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3,381 சங்கங்கள் தனித்தியங்கும் வல்லமை உடையனவாகும். நிதி வசதியற்ற சங்கங்கள், நிதி வசதி மிக்க சங்கங்களுடன் இணைய விருப்பமில்லாத காரணத்தினால், எதிர்பார்த்த அளவுக்கு இச்சங்கங்களை ஒன்று சேர்ப்பதில் முன்னேற்றம் இல்லை. மத்திய சங்கங்களை ஒன்றாக இணைக்கும் அதிகாரம் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்க்கு அளிக்கப்படும்வகையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று திரு. க. சந்தானம் அவர்கள் தலைமையில் அமைந்த "கூட்டுறவுக் குழு" அரசுக்குப் பரிந்துரை வழங்கியுள்ளது. இக் கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

18. உழவர்களின் தேவைகள் அனைத்தும் அளிக்கப்படும்வகையில் உண்மையான செப்பனிடும் தொழில் கூட்டுறவுகளாக இயங்கும் பொருட்டு, கிராமக் கடன் உதவிச் சங்கங்கள் தனித்தியங்கும் வன்மை உடையனவாகத் திருத்தி அமைக்கப்பட்டன. அவை, உறுப்பினர்களுடைய கூடுதல் உற்பத்தி அனைத்தையும் சேமித்து வைக்கும் வசதிகள் உடையனவாகவும், அவற்றோடு, உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கென பூச்சிக்கொல்லி மருந்துகளையும், இரசாயன உரங்களையும், சேமித்து வைக்கும் வசதிகள் உடையனவாகவும் இருக்க வேண்டும். அச்சங்கங்களின் அன்றாட வேலைகளை மேற்கொள்ளுவதற்கு ஒரு அலுவலக அறை தேவைப்படும்; மற்றும் தெளிப்பான்கள் முதலியனபோன்ற வேளாண்மைக் கருவிகளை வைப்பதற்கு ஒரு பணிக் கொட்டகையும் தேவைப்படும். ஆகவே, அச்சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும், கிடங்கு அலுவலக அறை, பணிக் கொட்டகை ஆகியவைகளை ஒன்றாக அமைத்துக்கொள்ளும் பொருட்டு ரூ. 25,000 அளவுக்கு (50 சதவீதம் மானிய உதவி 50 சதவீதம் கடன்) அரசு கடனாகவும் மானியமாகவும், நிதி உதவி அளிக்கிறது. 1969-70-ல் அத்தகைய பத்துக் கட்டடங்கள் அமைப்பதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

19. கிராமங்கள் நிலையில், குடியானவர்களுக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்தியதரக் காலக் கடன்கள், 6,845 தொடக்க வேளாண்மைக் கடன் உதவிச் சங்கங்களால் அளிக்கப்படுகின்றன. தொடக்க வேளாண்மைக் கடன் உதவிச் சங்கங்கள் மாவட்ட அளவில் 15 கூட்டுறவு மத்திய வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு ஆண்டு பெருமளவில், வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான கடன் தேவைகளை இந்தக் கடன் உதவி கூட்டுறவுச் சங்கங்கள் நிறைவேற்றி வருகின்றன என்றும், அதன் மூலம் இம்மாநிலத்தில் அதிக அளவு உணவு உற்பத்திக்குப் பெரிதும் பணியாற்றி வருகிறது என்றும் கடந்த சில ஆண்டுகளாக இந்த நிறுவனங்கள்

வழங்கி வந்துள்ள உற்பத்திக் கடன்கள் எடுத்துக் காட்டுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளிலும் மற்றும் நடப்பு ஆண்டில் இதுவரையிலும் வேளாண்மைக் கடன் உதவிச் சங்கங்கள் வழங்கியுள்ள உற்பத்திக் கடன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | (ரூ. கோடியில்.) |
|---|---|---|
| 1965–66 | .. .. .. .. .. .. .. | 30·95 |
| 1966–67 | .. .. .. .. .. .. | 31·41 |
| 1967–68 | .. .. .. .. .. .. .. | 37·26 |
| 1968–69 | .. .. .. .. .. .. .. | 44·12 |
| 1969–70 | (-31—12—1969 வரையில்) .. .. | 35·37 |

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் கடைசி ஆண்டில் குறைந்த அளவு ரூ. 80 கோடி ஆகிலும், கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குவதற்கு இயலுமாறு ஆண்டுக்கு ஆண்டு கடன் வழங்கும் தொகையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் வேளாண்மை உற்பத்திக் குழு மதிப்பிட்டுள்ள மொத்த வேளாண்மைக் கடன் உதவித் தொகையாகிய ரூ. 160 கோடியில் மேற்சொன்ன தொகை (ரூ. 80 கோடி) 50 சதவீதமாகும். தமது கடன் தேவைகளை முழுமையாகப் பெறுவதற்கு உழவர்களுக்கு உதவும்பொருட்டு, உறுப்பினர்கள் வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களில் கடன்பெறும் உயர் அளவு கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| பதிவு பெற்ற கரும்பு பயிரிடுவோருக்குக் குறுகிய காலக் கடன். | 20,000 |
| கரும்புதவிர, பிற பயிர்களைப் பயிரிடுவோருக்குக் குறுகிய காலக் கடன். | 15,000 |
| ஏனைய பயிர்களையும் உடன் பயிரிடுகின்ற, பதிவு பெற்ற கரும்பு பயிரிடுவோருக்குக் குறுகிய காலக் கடன். | 35,000 |
| நடுத்தரக் காலக் கடன் .. .. .. | 10,000 |

20. கிராம, நகர்புறச் சேமிப்புகளைத் திரட்டும்பொருட்டும், பெருகிவரும் உற்பத்திக் கடன் தேவைகளைச் சரிக்கட்ட மத்திய வங்கிகளின் நிதி வாயில்களைப் பெருக்கவும், எல்லா வட்டத் தலைமையிடங்களிலும் பிற முக்கியமான இடங்களிலும் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள், கிளைகளைத் தொடங்கி வருகின்றன. நடப்பாண்டில் (31—12—1969 வரை) மத்திய வங்கிகள் தொடங்கியுள்ள கிளைகளின் எண்ணிக்கை 40 ஆகும். இத்துடன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 157 ஆகிறது.

உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பங்கு மூலதனத் தொகையை கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் உயர்த்தியுள்ளன. அவற்றின் வைப்பு நிதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன :—



| | 1968–69 | 1969–70 (31–12–1969 வரை.) |
|---|---|---|
| | | ரூ. கோடியில்.) |
| பங்கு மூலதனம் .. .. .. | 21.31 | 22·58 |
| சேகரிக்கப்படும் வைப்பு நிதி .. .. | 37·61 | 38·95 |

21. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில், நவரைப் பயிர் பயிரிடுதலை மேம்படுத்தும் இயக்கம் ஒன்றைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது. திட்டத்தில் கூட்டுறவுகள் வகிக்கும் பங்கு, ஐ.ஆர். 8 திட்டத்தில் பங்கு கொண்ட உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உரிய காலத்தில் போதுமான கடன் வசதி அளிப்பதாகும். திட்டத்தின் சிறப்பான முக்கியத்துவம், இரசாயன உரங்களை அதிகமான அளவில் அளிப்பதாகும். ஏக்கர் ஒன்றுக்கு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ள கடனுதவியின் அளவு கீழே காட்டப் பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| உரங்கள் .. .. .. .. .. .. .. | 250 |
| விதைகள் .. .. .. .. .. .. .. | 12 |
| பூச்சிக்கொல்லி மருந்து .. .. .. .. .. | 38 |
| ரொக்கம் .. .. .. . .. .. .. | 110 |
| மொத்தம் .. | 410 |

செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் இத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 7.50 லட்சம் நிலப்பரப்பைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுகளிடமிருந்து பெறப்படும் கடன் தேவைகள் ரூ. 6.75 கோடி என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்குக் கடன் வழங்குவதில் 1970, ஜனவரி இறுதிவரை அடைந்துள்ள முன்னேற்றம் கீழே காட்டப் பட்டுள்ளது :—

| மத்திய வங்கியின் பெயர். | ஒப்பளிக்கப்பட்ட கடன் தொகை. | வழங்கிய கடன் தொகையளவு. | | |
|---|---|---|---|---|
| | | ரொக்கம். | பொருள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கூட்டுறவு மத்திய வங்கி, வேலூர். | 143·27 | 18·90 | 33·01 | 51·91 |
| 2. கூட்டுறவு மத்திய வங்கி லிமிடெட், காஞ்சிபுரம். | 50·10 | 3·59 | 9·16 | 12·75 |
| 3. தென் ஆர்காடு கூட்டுறவு மத்திய வங்கி லிமிடெட், கடலூார். | 42·44 | 2·07 | 1·93 | 4·00 |

22. சிறிய அளவில் நிலம் வைத்துள்ள உழவர்கள் தங்கள் பண்ணைத் தொழிலையும் பிற பணிகளையும் மேம்படுத்திக்கொண்டு உபரி விளைச்சலைப் பெற்று மேற்கொண்டு வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு உதவும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென “ சிறு உழவர்கள்

மேம்பாட்டு முகவர் நிறுவனம்" Small Farmers Develepment Agencsy" ஒன்றை அமைக்க வேண்டும் என்று அனைத்திந்திய கிராமக் கடன் ஆய்வுக் குழு பரிந்துரைத்துள்ளது. தகுதியுள்ள உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களையும், நடுத்தரக் காலக் கடன்களையும், நீண்டகாலக் கடன்களையும் தாராளமாகக் கிடைக்க வகை செய்வதே இப்பணித் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கத்தின் பங்காகும். இத் திட்டத்தை தென் ஆற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளதால், கூட்டுறவு நிறுவனங்களில் உழவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கான உடனடி ஆய்வை நடத்தவும், அம் மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்படவிருக்கிற பகுதியில் உள்ள உழவர்கள் அனைவரும் கூட்டுறவு நிறுவனங்களில் சேர்வதற்குத் தூண்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

23. இம்மாநிலத்தில் உள்ள உழவர்களின் நீண்டகாலக் கடன் தேவையைத் தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள வட்ட அளவிலான 106 தொடக்க நில அடைமான வங்கிகள் நிறைவு செய்கின்றன. இந்த நில அடைமான வங்கிகள் நிலவள வங்கி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. வட்டார அளவில் 67 புதிய தொடக்க நிலவள வங்கிகளும் திறக்கப்பட்டுள்ளன. புதுக் கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்களை நிறுவுதல், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், நிலங்களைப் பண்படுத்துதல், டிராக்டர்கள் வாங்குதல் முதலியவைபோன்ற உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவும் பணித் திட்டங்களுக்காகக் கடன் வழங்கும் திட்டத்தின் ஒரு பெரும் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் வாங்குவதற்கான விண்ணப்பங்கள்குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முறை வங்கிகள் கடனை ஏற்பளித்து, அதை வழங்கும் முறை ஆகியவற்றிற்குத் தொடர்பான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. கடன் வாங்குவதற்கான வரம்புகுறித்துச் சலுகை உழவர்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. வில்லங்கச் சான்றிதழ்களுக்காகக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இவற்றால் உழவர்களுக்குக் கடன்கள் மேலும் எளிதாகக் கிடைக்கிறது. பல உழவர்கள் இக்கடன்களைப் பெற முன்வருகின்றனர். அவற்றின் விளைவாக கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கடன்களை வழங்குவதில் திடீரென அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு நில அடைமான வங்கிகள் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட புதிய விதித் துறையின்படி வங்கிகள் 1968, ஜூலை 4-ம் நாளன்று அல்லது அதற்குப் பிறகு தங்கள் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானம்குறித்து பிற எல்லா உரிமைக் கோரிக்கைகளைக் காட்டிலும் (அரசுக்குச் சேர வேண்டிய நிலவரி நிலுவைகள் நீங்கலாக) முன்னுரிமை பெற வேண்டும். இந்த விதித்துறை காரணமாக வங்கிகள் கடன்களைத் தாராளமாக வழங்க முன்வந்தன. தமிழ்நாடு கூட்டுறவு நில வள வங்கியால் வெளியிடப்பட்ட கடன் ஈட்டுறுதி ஆவணங்கள்





குறித்து, அசல் தொகையும் அதன்மீதான வட்டியும் திருப்பிச் செலுத்தப்பட மாநில அரசு உத்தரவாதம் அளிக்கிறது. உத்தரவாதத்தின் பேரளவை ரூ. 75 கோடியாக அரசு வரையறுத்துள்ளது. கிணறுகள் வெட்டுவதற்காகவும், விசையேற்றங்களை நிறுவுவதற்காகவும் டிராக்டர்களை வாங்குவதற்காகவும் நிலவள வங்கியிடமிருந்து ஒருவர் வாங்கக்கூடிய கடனின் பேரளவு, ரூபாய் 40,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மற்றக் காரியங்களுக்காக வாங்கப்படும் கடனின் பேரளவு ரூ. 10,000 ஆகும். விரைவில் கடன்களை ஒப்பளிக்க வசதி செய்யும் பொருட்டு, கன்னியாகுமரி, சென்னை நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி தன் கிளை வங்கிகளைத் திறந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீண்டகாலக் கடன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தின் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக நிலவள வங்கிகள் ஆற்றியுள்ள பணிகளை இது விளக்குகிறது :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை. (ரூ. கோடியில்.) |
|---|---|
| 1966–67 .. .. .. | 3 |
| 1967–68 .. .. .. | 7 |
| 1968–69 .. .. .. | 14 |

1969–70-ம் ஆண்டில் வழங்கப்பட்ட நீண்ட காலக் கடன்கள் கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களைவிட அதிகமாகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முழுவதும் 90 கோடி ரூபாயை வழங்க வகைசெய்யும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் நிலவள வங்கிகள்மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதை உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த நிதி ஆண்டின் தொடக்கத்தில், கடந்தாண்டுத் தொகையிலிருந்து ரூ. 100 லட்சம் முதலீடு செய்வதைத்தவிர நடப்பாண்டில், 1970, மார்ச் 23-ம் நாள்வரை ரூ. 99.70 லட்சத்தை மாநில அரசு முதலீடு செய்துள்ளது.

24. நில மேம்பாட்டிற்கான பல முக்கிய காரியங்களுக்கு நிலவள வங்கிகள் வழங்கிய கடன்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

| நோக்கம். | வழங்கப்பட்ட கடன்கள். 1968–69 | 1969–70 (31–12–1969 வரை). |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 புதிய கிணறுகள் தோண்டுதல் .. .. | 338·26 | 366·21 |
| 2 கிணறுகளை ஆழப்படுத்துதல் .. .. | 224·71 | 145·52 |
| 3 விசையேற்றங்களை நிறுவுதல் .. .. | 362·85 | 208·16 |
| 4 விசையேற்றங்களுக்காகக் கொட்டகைகள் கட்டுதல். | 40·80 | 41·62 |

| நோக்கம். | வழங்கப்பட்ட கடன்கள். 1968–69. | 1969–70. 31–12–1969 வரை (ரூபாய்லட்சத்தில்). |
|---|---|---|
| 5 நிலம் பண்படுத்தல் .. .. .. | 94·19 | 22·19 |
| 6 டிராக்டர்கள் வாங்குதல் .. .. | 111·22 | 61·84 |
| 7 வடிமுனைக் குழாய் கிணறுகள் .. | 6·30 | 8·79 |
| 8 மற்ற நிலமேம்பாடுகள் .. | 117·36 | 105·62 |
| மொத்தம் .. | 1,295·69 | 960·35 |
| அதாவது | 12·96 கோடி | 9·60 கோடி |

நில மேம்பாட்டுக் காரியங்களுக்காகவே நீண்டகாலக் கடன்கள் முழுவதும் வழங்கப்பட்டிருக்கின்றன என இதிலிருந்து தெரிய வருகிறது.

25. 1968–69-ம் ஆண்டில், ஒப்பேற முடியாத பத்து தொடக்க நிலவள வங்கிகளுக்கு (கடன் நிலுவைகள் ரூ. 12.50 லட்சத்திற்கு மேற்படாத வங்கிகளுக்கு) அதன் பணியாளர்கள் குறித்த செலவுக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டது. இதில் எட்டு வங்கிகள் ஒப்பேறும் நிலையை அடைந்துவிட்டன. விரைவில் எஞ்சிய இரண்டு வங்கிகளும் ஒப்பேறும் நிலையை அடைந்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

26. நிலவள வங்கிகளிடமிருந்து வாங்கிய கடனைக் கொண்டு புதிய கிணறுகளை வெட்டிய உழவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய கிணறுகள் மானியத் திட்டத்தின்கீழ், ஒரு உழவர், கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சதவீத உதவித் தொகையை அல்லது ரூபாய் 500-ஐ இதில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகையைப் பெறத் தகுதி உடையவராவார். 1968-69-ம் ஆண்டில் இத்திட்டத்தின்படிக்கான உதவித் தொகை ரூ. 3.10 லட்சமாக இருக்கையில், நடப்பாண்டில், 14—2—1970 வரை ரூ. 8.28 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**27. வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் உதவி பெற்ற சிறு பாசப் பணித் திட்டங்கள்**

இயல்பான பணித் திட்டத்தைத்தவிர தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடனும் மாநில அரசின் உதவியுடனும் சிறு பாசனம்குறித்த பகுதி மேம்பாட்டுப் பணி திட்டங்களும் தோட்டப்பயிர் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது காரியத்துக்கென தமிழ்நாடு கூட்டுறவு நில வள வங்கி வெளியிட்டுள்ள சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் முதலீடு செய்வது மூலம் அவை நிதி உதவி வழங்குகின்றன. புதிய கிணறுகள் வெட்டுவது, விசையேற்றங்களை அமைப்பது போன்ற சிறு பாசனப் பணித் திட்டங்களுக்கென வேளாண்மை



மறு நிதிக் கழகமும் மாநில அரசும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதமாகிய 9 : 1 என்ற விதத்திலும், ரப்பர், தேயிலை, தென்னைபோன்ற தோட்டப் பயிர்த் திட்டங்களுக்கென 3 : 1 என்ற விதத்திலும் முதலீடு செய்கின்றன. 1968–69-ல் மாநில அரசு இந்தக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் ரூ. 41.15 லட்சம் தொகையையும் நடப்பாண்டில் 7—3—1970 வரையில் 10.76 லட்சம் தொகையையும் முதலீடு செய்தது. ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட பணித் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

28. மேற்குறிப்பிட்ட பணித் திட்டங்களைத் தவிர, கீழே குறிப்பிட்டுள்ள ஏனைய பணித் திட்டங்களும் வேளாண்மை மறு நிதிக் கழகம் மாநில அரசு ஆகியவற்றின் பரிசீலனையில் உள்ளன. அப் பணித் திட்டங்கள் விரைவிலேயே நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(1) லால்குடி, உடையார்பாளையம் வட்டங்களில் புதிய கட்டளை, புள்ளம்பாடி கால்வாய்ப் பகுதிகளில் கிணறுகளை வெட்டுதல்.

(2) மதுரை மாவட்டம், திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் கிணறுகளை வெட்டுதலும், ஆழப்படுத்துதலும்.

(3) மதுரை, மேலூர் வட்டங்களில் கிணறுகள் வெட்டுதல்.

(4) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டத்தில் கிணறுகளை வெட்டுதல்.

(5) இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை, திருப்பத்தூர் வட்டங்களில் கிணறுகளை வெட்டுதல்.

(6) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்டங்களில் கிணறுகள் வெட்டுதல்.

(7) ஏர்க்காடு மலைகளில் சிறு அளவில் காப்பித் தோட்டங்கள் பயிரிடுபவர்களுக்கு நிதி உதவி.

(8) பழனி மலையில் சிறு அளவில் காப்பித் தோட்டங்கள் பயிரிடுபவர்களுக்கு நிதி உதவி.

மேற்படிப் பணித் திட்டங்கள் குறித்த செலவு சுமார் ரூ. 950 லட்சம் ஆகும். இப்பணித் திட்டங்களைச் செயல்படுத்துவதனால், 12,450 புதிய கிணறுகள் வெட்டுவதும், 12,800 விசையேற்றங்களை அமைப்பதும், 2,000 எக்கர் நிலத்தில் காப்பிக்கொட்டை பயிரிடுவதும் இயலும்.

[1970 எப்ரல் 2

29. மேலே வகுக்கப்பட்டுள்ள பணித் திட்டங்களுக்குக் கூடுதலாக அரசு நியமித்துள்ள " தனிப் பொறுப்பு பணிப் பிரிவு " Taks Farce புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், டிராக்டர்களை வழங்குவதற்கும், ஏனைய பிறவற்றிற்கும் 31 பணித் திட்டங்களை வகுத்துள்ளதுடன், உலக வங்கிக்கு அனுப்பவேண்டிய ஒரு செயல் திட்ட அறிக்கையையும் தயாரித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குனேரி, தென்காசி, திருநெல்வேலி வட்டங்களிலும், திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறை, முசிறி, குளித்தலை, கரூர் வட்டங்களிலும், சேலம் மாவட்டத்தில் உள்ள சங்கரி, திருச்செங்கோடு வட்டங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஹரூர், ஹொசூர், தருமபுரி வட்டங்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர், வேலூர், குடியாத்தம், செங்கம், திருவண்ணாமலை வட்டங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலும் கூடுதலாகக் கிணறுகள் வெட்டும் செயல் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கும், விசையேற்றங்களை அமைப்பதற்கும் இந்த அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும், செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் வட்டத்தில் கிணறுகள் வெட்டுதல்—துளைக் கிணறுகள் அமைத்தல் திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ் நாட்டில் இயந்திர முறையில் பண்ணைப் பயிர்த் திட்டத்தை மேற்கொள்ளவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஆயக்கட்டுப் பகுதியில் நிலங்களைப் பண்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் நிலையாக, 32,000 ஏக்கர்களைப் பண்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. தற்போதுள்ள திட்டங்களுக்குக் கூடுதலாகக் கடன் வழங்குவதன் மூலம், இம் மாநிலத்தில் உள்ள நிலவள வங்கிகள், புன்செய் நிலங்களைப் பாசனம் பெறும் புன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு வகை செய்யும் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற முடியும் என்பதையும் அதன் மூலம் நமது மாநிலத்தின் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பதையும் மெய்ப்பித்துள்ளன.

### கூட்டுறவு விற்பனையும் வேலைமுறைக்கு உட்படுத்துதலும்

30. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்தில் பங்கு கொண்டது உட்பட, 1968–69-ம் ஆண்டில் கூட்டுறவு விற்பனை வேலை முறைக்கு உட்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூ. 146.35 லட்சம் செலவு ஏற்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூட்டுறவு விற்பனை வேலை முறைக்கு உட்படுத்துதல் திட்டத்திற்காக (கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நீங்கலாக) ரூ. 539 லட்சம் நிதி



1970 எப்ரல் 2]

ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனை—வேலை முறைக்கு உட்படுத்துதல் குறித்த முக்கியமான பணித் திட்டங்களின்கீழ் நடப்பு ஆண்டில் ஏற்பட்ட செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | 1969–70-ல் நிதி ஒதுக்கம். | பயன்படுத்தப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | |
| நவீன அரிசி ஆலைகள் நிறுவுதல் .. .. | 39·95 | 35·35 |
| லாரிகள் வாங்குவதற்காக கடன் உதவி .. | 2·80 | 2·60 |
| கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவி. | 1·00 | 0·48 |
| சர்க்கரை ஆலைகளுக்குப் பங்கு மூலதனம் .. | 10·00 | 1·00 |

தொழில் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சர்க்கரை இயக்குநர் அலுவலகம் ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதால், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் குறித்து இந்த ஆய்வுரையில் மேற்கொண்டு குறிப்பிடப்படவில்லை.

மேலே உள்ளவை தவிர, நடப்பு ஆண்டு முடிவதற்கு முன்பு ஏனைய திட்டங்கள் குறித்து கீழ்க்கண்டவாறு செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விற்பனைச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்தை அதிகரிப்பதற்காக விற்பனைச் சங்கங்களில் மாநில அரசு பங்கு மூலதன முதலீடு செய்யும். இதற்காக ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை பெடரேஷன், குளிர்ப்பதனப் பிரிவு ஒன்று ஏற்படுத்துவதற்காக ரூ. 4.91 லட்சம் கடனாகவும், ரூ. 2.94 லட்சம் உதவித் தொகையாகவும் நிதி உதவி அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ரூ. 4.91 லட்சம் கடன் 1969–70 நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன் அந்தப் பிரிவுக்கு வழங்கப்படும். பங்கு மூலதனத்தில் தொகை செலுத்துதல் விற்பனைச் சங்கங்களின் துணை நிலையங்களாக எண்ணெய் ஆலைகள் போன்ற பதப்படுத்தும் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குக் கடன்கள் வழங்குதல், மரவள்ளிக் கிழங்கு பக்குவப்படுத்தும் பிரிவு ஏற்படுத்துவதற்காக கடன் உதவி வழங்குதல் ஆகிய உதவிகளை அரசு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 3.13 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடாகிய ரூ. 0.42 லட்சத்திலிருந்து, பதப்படுத்தும் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையும் அளிக்கப்படும்.

31. விற்பனைச் சங்கங்கள், கொள்முதல் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டன. 1969 சம்பாப் பருவத்தின்போது 1.34 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

32. விற்பனைச் சங்கங்களின் துணை நிலையங்களாகப் பக்குவப் படுத்தும் பிரிவுகளை ஏற்படுத்துவது மும்முரமாக நடந்து வருகிறது. விற்பனைச் சங்கங்களுக்குச் சொந்தமானவையும், நிறுவப்பட்டு வருபவையுமான பக்குவப்படுத்தும் பிரிவுகள் பற்றி கீழ்க் கண்ட விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன :—

| தொடர் எண். (1) | பிரிவு வகை. (2) | பிரிவுகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1 | பருத்தி விதையெடுப்புப் பிரிவுகள் .. .. | 18 |
| 2 | வேர்க்கடலை தோல் நீக்கும் பொறிகள் .. .. | 25 |
| 3 | எண்ணெய்ச் செக்குகள் .. .. .. .. | 5 |
| 4 | அரிசி அரைக்கும் பிரிவுகள் .. .. .. | 36 |
| 5 | காப்பிப் பதப்படுத்தும் பிரிவு .. .. .. | 1 |
| 6 | நவீன அரிசி ஆலை .. .. .. .. | 13<br>12<br>(நிறுவப்பட்டு வருகின்றன). |
| 7 | அரிசித் தவிடு எண்ணெய்ப் பிரிவு .. .. | 1 |
| 8 | பழங்களை டப்பியில் அடைக்கும் பிரிவு .. .. | 1 |
| 9 | ஏலக்காய் எண்ணெய் எடுக்கும் பிரிவு .. .. | 1<br>(நிறுவப்பட்டு வருகின்றது). |
| 10 | மரவள்ளிக் கிழங்கு பக்குவப்படுத்தும் பிரிவு .. | 1<br>(நிறுவப்பட்டு வருகின்றது). |

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள பன்னிரண்டு அரிசி ஆலைகள், நெல்லை அரைத்த பிறகு அதிக அளவு அரிசி கிடைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஐந்து தஞ்சாவூர் மாவட்டத்திலும், ஏனைய ஏழு ஆலைகள் கீழே காட்டியுள்ளவாறு பிற மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

| மாவட்டம். (1) | அமைந்துள்ள இடம். (2) | ஒரு மணியில் நெல் அறைக்கும் திறன். (3) (டன்கள்). |
|---|---|---|
| தஞ்சாவூர் .. .. | திருவாரூர் .. .. | 4 |
| ஷை | கும்பகோணம் .. .. | 4 |
| ஷை .. .. | மன்னார்குடி .. .. | 4 |
| ஷை .. .. | மாயூரம் | 4 |
| ஷை | பட்டுக்கோட்டை .. .. | 4 |
| செங்கற்பட்டு .. .. | செங்கற்பட்டு .. .. | 2 |
| வட ஆற்காடு .. .. | செய்யாறு .. .. | 2 |
| தென் ஆற்காடு .. .. | கள்ளக்குறிச்சி .. .. | 2 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 2 |
| மதுரை .. .. | மதுரை .. .. | 2 |
| திருநெல்வேலி .. .. | திருநெல்வேலி .. | 2 |
| கோயம்பத்தூர் | பொள்ளாச்சி .. .. | 2 |





இந்த ஆலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை பெடரேஷனால் ஏற்கெனவே 1965-ல் ஏற்படுத்தப்பட்ட நவீன அரிசி ஆலை 1969–70 கூட்டுறவு ஆண்டின் முதல் ஐந்து திங்களில் 7,000 டன்கள் நெல் அரைத்தது. மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளிலிருந்து கிடைக்கும் தவிட்டை, அந்நியச் செலாவணி பெற்றுத் தரக்கூடிய துணைப் பொருளாகிய அரிசித் தவிடு எண்ணெய் தயாரிப்பதற்கு ஆதாயமான விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காக அரிசித் தவிடெண்ணெய் தயாரிக்கும் பிரிவை தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை பெடரேஷன் ரூ. 19.75 லட்சத்தில் ஏற்படுத்தியுள்ளது. அதில் 14.30 லட்சம் அரசு அளித்துள்ள உதவித் தொகையாகும்.

கல்குளம்–விளவங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் அன்னாசி பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்றையும், சிவகங்கை கூட்டுறவு விற்பனைச் சங்கம், முந்திரி பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்துவது ஆலோசனையில் உள்ளது.

33. சென்னையிலுள்ள, தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை பெடரேஷன் லிமிடெட், தலைமை விற்பனை நிறுவனமாகும். இது மாவட்ட விற்பனைச் சங்கங்கள், தொடக்க விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது. பெடரேஷன் நிலையில் விற்பனை ஊக்க, மதிப்பீட்டுப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் விற்பனைப் பிரிவு, இரசாயன உரப் பிரிவு, பொறியியல் பிரிவு ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகளில் பணியாற்றும் பணியாளர்களுக்காகும் செலவை, படிப்படியாக குறையும் அளவில் ஐந்து ஆண்டுகளுக்கு அரசு ஈடு செய்யும். விற்பனைச் சங்கங்களின், நிர்வாகப் பணியாளர்களுக்குப் பொதுத் தாம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டத்தை பெடரேஷன் நிறைவேற்றி வந்துள்ளது. தொடக்கத்தில் 11 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அவர்களில் 9 பேர் பணியில் உள்ளனர். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை பெடரேஷனால் பயிற்சியளிக்கப்பட்ட 31 பட்டதாரிகளும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, தஞ்சாவூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில் பாடமுறைப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

நவீன அரிசி ஆலைகள் 12-ல் ஒன்று செங்கல்பட்டில் இந்தத் தலைமை விற்பனைச் சங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆலையின் கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு, இயந்திரங்கள் நிறுவப்பட்டு விட்டன. அரிசியைப் புழுக்குவது உட்பட முறையான உற்பத்தி இந்த ஆலையில் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பனிக்கட்டி நிலையத்துடன் குளிர் சாதனப் பிரிவு ஒன்று ஏற்படுத்துவதற்காக இந்த பெடரேஷன் மாநகரத்திற்குள் மனை ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளது. இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பளிங்கு உரத் தொழிற்சாலை (Granular Fertilizer Factory) ஒன்று ஏற்படுத்தும் திட்டத்திற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் ரூ. 8.25 லட்சம் பங்கு மூலதனமாகவும், ரூ. 10 லட்சம் கடனாகவும் நிதி உதவி பெற்று தலைமைச் சங்கத்தினால் நிறைவேற்றப்படவிருக்கிறது. இத் திட்டத்திற்கான நிதி உதவி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தினால் மாநில அரசுக்கு அளிக்கப்படும். மாநில அரசு ரூ. 8.25 லட்சம் பங்கு மூலதனம் வழங்கியுள்ளது. இச்செயல் திட்டம் நிறுவப்பட்டு வருகிற மன்னார்குடியில் இத் திட்டம் தொடர்பான கட்டிடப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை பெடரேஷன் தயாரிப்பு நிறுவனங்களிலிருந்து உரங்களை ஒரு மொத்தமாக வாங்கும் பொறுப்பை ஏற்று, விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் ஒப்பேறு நிலையிலுள்ள கிராமப் பிரிவுகள் மூலமாகவும் எல்லா வகையான உரங்களையும் வழங்கத் தற்போது ஏற்பாடு செய்து வருகிறது. அதற்கென அது மாவட்ட அளவில், பயிற்சி பெற்ற உரமேம்பாட்டு அதிகாரிகளை வேலைக்கமர்த்தி உள்ளது. 1969 அக்டோபர் முதல் 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி வரை உள்ள கால அளவில் இந்தக் கூட்டமைப்பு, கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கென ரூ. 198 லட்சம் செலவில் தொகுப்பு ஏற்பாட்டு உரங்கள் அல்லாத பிற உரங்களை 12,000 டன் மொத்த அளவிற்கு வாங்கியது.

34. தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின் கீழ் டிராக்டர் பழுது பார்க்கும் நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கெனத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை பெடரேஷன் திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவுக் கூட்டமைப்புக்கும் உதவி அளிக்கப்படும். இச் செயல் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளது.

### துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்.

35. முப்பது மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் அவற்றுடன் 660 சில்லரை விற்பனை நிலையங்கள் இணைக்கப்பட்டுள்ளன. 1,667 ஆரம்பப் பண்டகசாலைகளும் இன்றியமையாப் பண்டங்களை நியாயமான விலைகளில் பொதுமக்களுக்கு வழங்கி வந்துள்ளன. இந்தப் பண்டகசாலைகளுக்குப் பங்கு மூலதனம் வழங்குதல், தொழில் மூலதனத்தில் பங்கு கொள்ளுதல், வண்டிகள், கிடங்குகள், மேசை, நாற்காலி போன்ற சாமான்கள் வாங்க உதவுதல் ஆகிய முறைகள் மூலம் அரசு அவற்றிற்கு நிதியுதவி வழங்கி வந்துள்ளது. 1968–69-ல் துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிதி உதவி செய்த வகையில் ரூ. 11.97 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1969–70-ம் ஆண்டில் பல்வேறு காரியங்களுக்கென துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் ரூ. 14.06 லட்சம் தொகை பெற்று வழங்கப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 169 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968-69-ல் ஆரம்பப் பண்டகசாலைகளும் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் முறையே ரூ. 29 கோடி, 33 கோடி அளவிற்கு விற்பனை செய்தன. 1968-69-ல் 977 ஆரம்பப் பண்டகசாலைகளும், 17 மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் மாவட்ட வழங்கல்-விற்பனைச் சங்கங்களும் ஈட்டிய ஆதாயம் முறையே ரூ. 129 லட்சம், ரூ. 19 லட்சம் ஆகும்.



36. மத்திய அரசுத் திட்டமாகிய பயன் துய்ப்போர் திட்டத்தை மாநிலத் துய்ப்போர் கூட்டுறவுக் கூட்டமைப்பும், மொத்த விற்பனை ஆரம்பப் பண்டகசாலைகளும் செயல்படுத்தி வந்தன. இந்திய அரசு வரையறுத்துள்ள குறிக்கோள் அளவின்படி 20 சதவீத நகர மக்கள் தொகை இத்திட்டத்தின்கீழ் பயன் பெற வேண்டும். அதே சமயத்தில் இத்திட்டத்தின் கீழ் 20 சதவீத சில்லரை வாணிகம் கொண்டுவரப்பட வேண்டும். இத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட மக்கள் தொகை 37 சதவிதம் ஆகும். 20 சதவீதம் சில்லரை வாணிகம் ஏற்கெனவே இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

37. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் துறையினர் பண்டகசாலைகளைத் துவக்குவதற்கான திட்டம், தமிழ்நாட்டில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள சென்னை, கடலூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகர்கோயில் ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன இடங்களில் 10 துறைப்பண்டகசாலைகள், சென்னை நீங்கலாக, ஒவ்வொரு இடத்திலும் ஒன்று என்ற வீதத்தில் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டு துறைப் பண்டகசாலைகள் உள்ளன. 1968–69-ல் 1—4—1968 முதல் 31—3—1969 வரை துறைப் பண்டகசாலைகள் செய்த மொத்த விற்பனை ரூ. 163.20 லட்சமாகும். 1969–70-ல் முதல் ஒன்பது திங்களில் (1—4—1969 முதல் 31—12—1969 வரை) செய்யப்பட்ட விற்பனை ரூ. 464.27 லட்சம் ஆகும். மேற்கொண்டு இரண்டு துறைப் பண்டகசாலைகள் விரைவில் துவக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஏற்கெனவே ஒரு சிறப்பு அங்காடியை நடத்தி வருகிறது. இதற்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது.

38. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் காப்பிக்கொட்டை அரைக்கும் இயந்திரங்கள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், எண்ணெய் ஆட்டும் தாம் பிரிக்கும் இயந்திரங்கள் போன்ற துய்ப்போர் தொழில்களைக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிறுவியுள்ளன. 45 காப்பிக்கொட்டை அரைக்கும் இயந்திரங்களும், 10 மாவு அரைக்கும் இயந்திரங்களும், 14 எண்ணெய் ஆட்டும் தாம்

பிரிக்கும் இயந்திரங்களும் நிறுவப்பட்டுள்ளன. எனினும், நான் காவது திட்டக்கால அளவில், சுவையூட்டும் பொருள்களைத் தூளாக்குதல், ரொட்டிப் பொருள்கள், எழுதுபொருள் தயாரிப்பு, பாலிதீன் பைகள், சோப்பு போன்ற துய்ப்போர் தொழில்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. துய்ப்போர் தொழில்களை நிறுவுவதற்கென நடப்பு ஆண்டில் அரசு நிதி உதவிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

39. ஆரம்பப் பண்டகசாலைகளை அமைப்பதற்கு மாற்றாக, நவீன சில்லரை விற்பனை நிலையங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை இணைகளாக நிறுவப்பட்டு வருகின்றன. இந்த நவீன சில்லரை விற்பனை நிலையங்கள் "சிறிய சிறப்பு அங்காடிகள்" என்று அழைக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் அத்தகைய 17 நவீன சில்லரை விற்பனை நிலையங்கள் நிறுவப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. பங்கு மூலதனத்தின் முதலீடு மேசை, நாற்காலி போன்ற சாமான்களை வாங்கக் கடன் உதவித் தொகை வரையில், ஒவ்வொன்றுக்கும் ரூ. 45,000 அளவிற்கு நிதி உதவி வழங்கப்படும்.

40. தமிழ் நாடு துய்ப்போர் கூட்டுறவு பெடரேஷன் தலைமை நிறுவனமாகும். ஆரம்ப, மாவட்ட அளவில் உள்ள துய்ப்போர் சங்கங்களின் நடவடிக்கைகளை அது ஒருங்கிணைக்கிறது. இந்த ஆண்டில் ரூ. 1,50 லட்சம் தொகையை அதன் பங்கு மூலதனத் திற்கு வழங்குவதன்மூலம் அதற்கு உதவுவதற்கெனத் திட்டமிடப் பட்டுள்ளது. 1968–69-ல் இந்த பெடரேஷன் செய்த விற்பனையின் மதிப்பு ரூ. 84 லட்சம் ஆகும்.

## VI ஏனைய வகைச் சங்கங்களும் அவற்றின் நடவடிக்கைகளும்.

41. **வீட்டு அடைமானச் சங்கங்கள்.**—மத்தியக் கூட்டுறவு வீட்டு அடைமானச் சங்கத்துடன் 55 ஆரம்ப வீட்டு அடைமான சங்கங் கள் இணைக்கப்பட்டுள்ளன. அச் சங்கம் புதிய குடியிருப்பு வீடு களைக் கட்ட கடன்கள் வழங்குவது தவிர, ஏற்கெனவே உள்ள வீடு களுக்குச் சேர்க்கைகள், மாற்றங்கள், செப்பனிடுதல்கள் குறித்துக் கடன் வழங்குகிறது. மேலும், அடைமானத்திலிருந்து வீடுகளை மீட்கவும், முந்திய கடன்களைத் திருப்பிக் கொடுக்கவும் அச்சங்கம் கடன் வழங்குகின்றது. இம்மாநில அரசின் உத்தரவாதத்தின் மேல், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நிதிகளைக் கடன் வாங்குகின்றது. புதிய வீடுகளைக் கட்ட ஒருவருக்கு வழங்கப்படும் பேரளவுக் கடன் ரூ. 20,000 ஆகும். வீடுகளுக்குச் சேர்க்கைகள், மாற்றங்கள் செய்யப் பேரளவுக் கடன் ரூ. 10,000 ஆகும். முந்திய கடன் தொகைகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான பேரளவுக் கடன் ரூ. 5,000 ஆகும். 1968-69-ல் இச் சங்கம் ரூபாய் 1.32 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளது.



1969-70-ல் ரூ. 1.50 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நகராட்சிகளிலும், பெரிய ஊராட்சிகளிலும் வீட்டு அடைமான சங்கங்களைப் படிப் படியாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே முதலீடு செய்துள்ள ரூ. 5 லட்சத்தைத் தவிர, 1969-70-ல் மத்திய வீட்டு அடைமானச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் ரூ. 10 லட்சம் முதலீடு செய்ய அரசு ஒப்பளித்துள்ளது.

42. **சமுதாயத்தின் தாழ்நிலைப் பிரிவினருக்கான சங்கங்கள்.**— உப்பளத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சமுதாயத்தின் தாழ் நிலைப் பிரிவினருக்கான சங்கங்களுக்கு மாநில அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. செய்யாறு, தையூர், கோவளம் முதலிய இடங்களி லுள்ள உப்பளத் தொழிலாளர் சங்கங்களுக்கு ரூ. 1.13 லட்சம் அளவிற்குக் கடன் உதவித் தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இடப் பாடி தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 2,000 உதவித் தொகையையும், 13 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 58,525 கடனையும் அரசு ஒப்பளித்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டமைப்பு ஒரு மாவட்டச் சங்கமாக மாற்றப்பட்டுள்ளது. 14,600 தொழிலா ளர்களை உறுப்பினராகக் கொண்ட 103 தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள் உள்ளன.

43. **கூட்டுறவுக் கல்வி பயிற்சி.**—இம்மாநிலத்தில் கூட்டுறவுப் பயிற்சிக்கான சிறப்புக் குழு கூட்டுறவுப் பயிற்சிக்குப் பொறுப்பு வகிக்கிறது. 3 அரசுப் பிரதிநிதிகளும் 4 அரசுச் சார்பற்ற பிரதி நிதிகளும் அதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பணித் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கூட்டுறவு நிலையங்களுக்கான பணியா ளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு இளநிலை கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் ஏழு உள்ளன. கூட்டுறவு துறைப் பணியா ளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென ஒரு நிறுவனம் உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர்கள் கூட்டுறவு உதவி பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கென பயிற்சிக் கல்லூரி ஒன்றும் உள்ளது. நைஜீரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் முதலிய பிற நாடுகளிலிருந்து வந்த மாணவர்களும் நடப்பாண்டில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

44. தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் வலம் வரும் வண்டி ஒன்றை வைத்துக்கொண்டு கூட்டுறவு குறித்துத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது; அனைத்திந்தியக் கூட்டுறவு வாரத்தைக் கொண்டாடுகிறது; கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்துகிறது. மாநில அளவில் ஒரு நூலகத்தையும் நடத்தி வருகிறது. பட்டப் படிப்பில் கூட்டுறவைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு முதலாவ தாகவும் இரண்டாவதாகவும் தேறும் பல்கலைக் கழக மாணவர்

களுக்குப் பொற்பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் வழங்குவதற்கான ஒரு திட்டமும் 1968-69-ல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1969-70-ல் கூட்டுறவுக் கல்வி பிரச்சாரத்திற்கென செலவிடக் கருதியுள்ள தொகையிலிருந்து, பல பிரச்சாரப் பணிகளுக்கென ரூ. 0.71 லட்சம் ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது. 1969-70-ல், மத்திய வங்கிகள் நூலகங்களை நிறுவுவதற்காக ரூ. 0.10 லட்சமும், பொற்பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும் வழங்குவதற்கென 0.03 லட்சமும் செலவிடப்படும்.



## இணைப்பு

| ட்டத்தின் பெயர். (1) | பணித்திட்டத்தின் கால அளவு (ஆண்டுகள்). (2) | பணித்திட்டம் தொடங்கிய நாள். (3) | இப் பணித் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் (லட்சத்தில்). (4) | பணித்திட்டக் குறிக்கோள் அளவு. வெட்டப்பட வேண்டிய கிணறுகளின் எண்ணிக்கை. (5) | அமைக்கப்படவிருக்கும் விசை யேற்றங்களின் எண்ணிக்கை. (6) | பண்படுத்தப்பட வேண்டிய அல்லது திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டிய பரப்பளவு (ஏக்கரில்). (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதியிலுள்ள நிலங்களைப் பண்படுத்துதல். | 5 | ஜனவரி 1965 | 452·04 | .. | .. | 85,110 |
| 2. கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொண்டமுத்தூர் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரங்களில் கிணறுகள் வெட்டுதல். | 3 | ஏப்ரல் 1968 | 110·00 | 1,000 | 1,000 | .. |
| 3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை கோட்டங்கள் கிணறுகள் வெட்டுதல். | 3 | பிப்ரவரி 1968 | 92·50 | 2,000 | 500 | .. |
| 4. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டப் பயிருக்கான திட்டம். | 6 | ஏப்ரல் 1968 | 25·00 | .. | .. | 1,000 |
| 5. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டப் பயிருக்கான திட்டம். | 9 | ஏப்ரல் 1968 | 24.00 | .. | .. | 1,500 |
| 6. தஞ்சாவூர் மாவட்டம் தென்னை பயிருக்கான திட்டம். | 9 | ஏப்ரல் 1968 | 31·50 | .. | .. | 2,000 |
| 7. உடுமலைப்பேட்டை வட்டத்தில் கிணறுகள் வெட்டுதல். | 4 | செப்டம்பர் 1969 | 125·00 | 1,000 | 1,000 | .. |
| 8 ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கை, திருப்பத்தூர் வட்டங்களில் கிணறுகள் வெட்டுதல். | 1 | செப்டம்பர் 1969 | 9·00 | 150 | 150 | .. |

இணைப்பு.

| *1969-70 ஆண்டுக்கான குறிக்கோள் அளவு (ரூபாய் லட்சத்தில்). | *1969-70 குறிக்கோள் அளவு. 1969-70 திட்டக் குறிக்கோளின்படி. | | | 31-1-70 முடிய 1969-70-ல் சாதனை. | | | | தொடங்கிய தேதியிலிருந்து 31-1-70 முடிய சாதனை. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிணறுகளின் எண்ணிக்கை. | விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட வேண்டிய அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டிய பரப்பளவு (ஏக்கரில்). | நிதிக் குறிக்கோள் அளவு (ரூபாய் லட்சத்தில்). | திட்டக் குறிக்கோள் அளவு. கிணறுகளின் எண்ணிக்கை. | விசையேற்றங்களின் எண்ணிக்கை. | பண்படுத்தப்பட வேண்டிய அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டிய பரப்பளவு (ஏக்கரில்). | நிதிக் குறிக்கோள் அளவு (ரூபாய் லட்சத்தில்). | திட்டக் குறிக்கோள் அளவு. கிணறுகள். | விசையேற்றங்கள். | பண்படுத்தப்பட வேண்டிய அல்லது திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டிய பரப்பளவு (ஏக்கரில்). |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) |
| 75·13 | .. | .. | 36,000 | 29·17 | .. | .. | 10,906 | 106·08 | .. | .. | 60,016 |
| 58·00 | 350 | 585 | .. | 20·06 | 182 | 136 | .. | 31·46 | 434 | 151 | .. |
| 35·00 | 750 | 200 | .. | 13·73 | 461 | 52 | .. | 36·29 | 969 | 554 | .. |
| 6·50 | .. | .. | 500 | 4·08 | .. | .. | 332 | 5·26 | .. | .. | 332 |
| 2·80 | .. | .. | 500 | 0·84 | .. | .. | 160 | 2·69 | .. | .. | 565 |
| 3·47 | .. | .. | 500 | 0·87 | .. | .. | 294 | 3·22 | .. | .. | 712 |
| 18·00 | 200 | 200 | .. | 5·61 | 139 | 2 | .. | 5·61 | 139 | 2 | .. |
| 9·00 | 150 | 150 | .. | 0·11 | 3 | 3 | .. | 0·11 | 3 | 3 | .. |

*1969-70-க்கான குறிக்கோள் அளவு 1-ம் எண் பணித்திட்டமாகிய பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பகுதியிலுள்ள நிலங்களைப் பண்படுத்துதல் குறித்து நிதியாண்டுக்குத் தொடர்புடையதாகும். ஏனைய திட்டங்கள் குறித்து கூட்டுறவு ஆண்டுக்கு (ஜூலையிலிருந்து ஜூன் வரை) தொடர்புடையதாகும்.



## இணைப்பு-3.

[34-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ் நாட்டில் 1969-ம் ஆண்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சி குறித்து ஆய்வுரை.

தமிழ் நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான மாபெரும் குடிசைத் தொழிலாகும். இங்கு சுமார் 5.50 லட்சம் கைத்தறிகள் உள்ளன. (இது இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையில் 26 சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலாகும்). ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் இத்தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி சஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ள இத்தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

2. இத் தொழிலின் மேம்பாட்டிலும் அதில் ஈடுபட்டுள்ள மக்களின் நலனிலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. மூலப் பொருள்கள் நிதி விற்பனை வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதற்கான தகுந்த நிறுவன முகவர்களாகச் செயலாற்றும் கூட்டுறவுகள் மூலம் அரசு உதவி பெரும்பாலும் அளிக்கப்படுகின்றது. இத்தொழிலின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆண்டுத் திட்டங்களின் கீழ் அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| | செலவு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1967-68-ம் ஆண்டுத் திட்டம் .. .. | 118·00 |
| 1968-69-ம் ஆண்டுத் திட்டம் .. .. | 130·69 |
| 1969-70-ம் ஆண்டுத் திட்டம் (மதிப்பிடப்பட்டது). | 161·19 |
| 1970-71-ம் ஆண்டுத் திட்டம் (திட்டமிடப்பட்டது). | 202·30 |

இத்தொழிலின் மேம்பாட்டிற்காக, 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 10.00 கோடி ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பற்பல கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள், பிந்திய ஆண்டுகளின் ஆண்டுத் திட்டங்களின்கீழ் ஆன செலவு, 1970-71-ம் ஆண்டுக்கும், நான்காவது திட்டத்திற்கும் திட்டமிடப்பட்ட செலவு ஆகியவை குறித்த தனித்தனியான விவரங்கள் 1-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. நடப்பாண்டில் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்பட்டு திட்ட நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்படாத நிதி உதவி

1969-70-க்கென கீழ்க்கண்டவாறு மேற்கொண்டு நிதி ஒதுக்கம் (திட்டத்தில் சேராதது) செய்யப்பட்டுள்ளது :—

(ரூ. லட்சத்தில்.)

### (1) கூட்டுறவுத் துறைமூலம் உதவி.

| | |
|---|---|
| (a) நெசவாளர் தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்கிற கைத்தறித் துணிகளை முனைந்து வாங்குவதற்கென தமிழ் நாட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கிய நடுத்தரக்காலக் கடன்கள் .. .. | 75·00 |
| (b) தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து கைத்தறித் துணி வாங்குவதற்காக அரசுப் பணியாளருக்கு முன் பணங்கள் (இத்தொகை தற்காலிகமானது. கூடுதலாகக் கூடும்.) .. .. | 50·00 |
| (c) கைத்தறித் துணியும், நூலும் வாங்குவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன் .. .. .. .. | 130·00 |
| (d) கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து நெசவாளர் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு நடை முறை மூலதனக் கடன் .. .. .. | 284.20 |
| (e) மத்திய வங்கியின் சொந்த நிதி வாயில்களிலிருந்து நெசவாளர் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் வழங்குதல் .. .. .. .. | 90·62 |
| (f) மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு நடைமுறை மூலதனக்கடன் .. .. .. | 279·90 |
| மொத்தம் .. | 909·72 |

### (2) கூட்டுறவுத் துறையின் கீழ் வராத கைத்தறித் தொழிலுக்கு உதவி.

| | |
|---|---|
| கூட்டுறவுத் துறையின்கீழ் வராத கைத்தறித் தொழிலின் மேம்பாட்டுக்காக கைத்தறி நிதிக் கழகத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் .. | 140. 9 |
| பெரு மொத்தம் .. | 1,049·81 |



4. இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த சுருக்கம் வருமாறு :—

(1) கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறிகளைக் கொண்டு வருதல்.—இம்மாநிலத்தில் 31—3—1969 அன்றைய நிலவரப்படி 1,001 நெசவாளர்கள் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் 2.11 லட்சம் தறிகள் இருந்தன. இவை, இம்மாநிலத்தில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கையில் 38.9 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் தறி ஒன்றுக்கு ரூ. 75 என்ற பேரளவுக்கு உட்பட்டு பங்கு மதிப்பில் 75 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் தங்களுடைய பங்கு மூலதனத்தை அதிகரிக்கவும் அதே உயர் வரம்புக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதில் இத்திட்டத்தின் சாதனை குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | | | புதிய தறிகளைச் சேர்த்தல். | புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் உட்பட உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனக் கடன்கள். |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| | | | | (ரூ. லட்சத்தில்). |
| 1967–68 | .. | .. | 3,522 | 2·16 |
| 1968–69 | .. | .. | 3,871 | 2.99 |
| 1969–70 | .. | .. | 2,500 | 2·00 (எதிர்பார்க்கப்படுவது.) |
| 1970-71 (திட்டமிடப்பட்டது) | | .. | 5,000 | 6·00 |

பொருளாதார முறையில் தனித்து இயங்க முடியாதவையும் நிதி வசதி யற்றவையுமான சங்கங்களை மூடிவிடும் நோக்கத்துடன் நெசவாளர் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களை சீரமைக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விளைவாக 1967-ல் 1,069 ஆக இருந்த அவற்றின் எண்ணிக்கை 1969 மார்ச்சில் 1,001 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், அடுத்துள்ள தனித்தியங்கக் கூடிய சங்கங்களில் இவ்வாறு மூடப்பட்ட சங்கங்களின் நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்வதும், தற்போதுள்ள சங்கங்களில் புதிய நெசவாளர்களைச் சேர்த்துக் கொள்வதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி, தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி முறைகள் கற்பவர்களுக்கு வழங்கப்படும் சலுகை, சிறு தொழில்களுக்கு உதவி முதலியவை போன்று அரசின் பல்வேறு சமூக பொருளாதார நடவடிக்கைகள், நெசவாளர் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள், கைத்தறி நெசவுத் தொழிலை விட்டு வேறு தொழில்களை விரும்பிச் செல்ல ஊக்கமளித்துள்ளது என்பதை ஈண்டு குறிப்பிடலாம்.

*(2) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனம்:*—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான வட்டி வீதத்தில் போதிய அளவுக்கு நடை முறை மூலதனம் வழங்க வகை செய்வதே கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கிய முதல் தேவையாகும். கைத்தறி துணிகளை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் நிலக் கூட்டுறவு வங்கிகள் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக வங்கி வட்டி விதத்தைக் காட்டிலும் 1.5 சதவிதம் குறைவான வட்டி வீதத்தில் அதாவது 3.5 சதவீத வட்டி வீதத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி நிதி உதவி வழங்குகின்றது. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தாங்கள் நிதி உதவி பெறும் வீதத்தில் அதாவது 3.5 சதவீதத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்க இயலும் வகையில் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளுக்கு ஈட்டுத் தொகையாக 3 சதவீதம் அளிக்கப்படுகின்றன.

மாநிலக் கைத்தறி நெசவாளர் சங்கம் உட்பட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நடை முறை மூலதனத்திற்கு அரச உத்திரவாதமுமுண்டு. 1969-70-ம் ஆண்டில் இது தொடர்பாக ரூ. 405 லட்சம் அளவிற்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு அரசு உத்திரவாதமளித்துள்ளது. மத்திய வங்கிகள் தங்களுடைய சொந்த நிதி வாயில்களிலிருந்து அளிக்கும் கடன்களுக்காகவும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. மாநில கைத்தறி சங்கத்திற்கு 3.5 சதவீத சலுகை வட்டி விதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் கடன்களை தமிழ் நாடு கூட்டுறவு வங்கி வழங்கும் பொழுது அதற்குரிய ஆதாயமாக வட்டி வகையில் ஒரு சதவீத உதவித் தொகை அதற்குத் தரப்படுகிறது.

மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்பட்ட கடன்களும், வட்டி குறித்து வழங்கப்பட்ட உதவித் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட அளவில் கடன்கள் வழங்கப்பட்டன :—

| ஆண்டு. | மாநிலக் கைத்தறிச் சங்கம். | நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள். | மொத்தம். | நடைமுறை மூலதனக் கடன்கள் மீதான வட்டி குறித்த மொத்த உதவித் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூ. லட்சத்தில்.) | | |
| 1967–68 .. .. | 1,00.00 | 2,86.05 | 3,86·05 | 10·62 |
| 1968–69 .. .. | 1,00·00 | 2,81·70 | 3,81·70 | 9·00 |
| 1969–70 .. .. | 1,00·00 | 2,84·20 | 3,84·20 | 11·00 (எதிர்பார்க்கப் படுவது.) |
| 1970–71 .. .. (திட்டமிடப்பட்டது) | 150·00 | 350·00 | 500·00 | 13·00 |





**நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்கள்** வழங்குவதன்மேல் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு ஏற்பட்ட விரயங்களை ஈடு செய்வதற்கு உத்தரவாதம் அளிக்கும் **திட்டம்:**—விரயத்தை ஈடு செய்யும் திட்டத்தின்கீழ், இந்திய ரிசர்வ் வங்கிக் கடன்களிலிருந்தும் வங்கிகளின் சொந்த வாயில்களிலிருந்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன்களைத் திரும்ப வசூலிக்க இயலாததால் எழக்கூடிய விரயங்கள் முறையே 50 சதவீதம் 40 சதவீத அளவிற்கு ஏற்க இந்திய அரசும், மாநில அரசும் ஒப்புக்கொண்டுள்ளன. எஞ்சியுள்ள 10 சத வீதத்தைக் கூட்டுறவுக் கடன் வழங்கும் வங்கிகளே ஏற்க வேண்டும். கூட்டுறவு மத்திய வங்கிகளால் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படும் மொத்தக் கடன்களில் 5 சத வீதம் என்ற மேல்வரம்பு வரையில்தான் மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1965-66 முதல் இதுவரையில் இத் திட்டத்தின்கீழ் ஆறு மத்திய வங்கிகளுக்கு ரூ. 1.51 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 0.75 லட்சமாகும். 1970-71-ம் ஆண்டிற்கு ரூ. 2.00 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

*(3) நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு பங்கு கொளல் :*— நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதன நிதி வழங்கும் இந்திய ரிசர்வ் வங்கி சில விதி முறைகளை வரையறுத்துள்ளது. அவற்றில் ஒரு விதி முறையின் கீழ் சங்கங்கள் தாங்கள் வாங்கும் கடனுக்காக 10 சதவீத ஈடு காட்ட வேண்டும். அவ்வாறு ஈடு காட்ட இயலாத சங்கங்களுக்கு உதவுவதற்காக, அவற்றின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதன் மூலம், அவற்றின் நிதிவாயில்களை அரசு வலுப்படுத்தியுள்ளது. இவ்வாறு 1968-69-ம் ஆண்டில் ரூ. 5 லட்சம் அளவுக்கு 103 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில், அரசு பங்கு மூலதன முதலீடு செய்தது. நடப்பு 1969-70-ம் ஆண்டில் நிதி ஒதுக்கத்தை ரூ. 9.00 லட்சமாக அரசு கூடுதலாக்கியுள்ளது. 1970-71-ம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் ரூ. 15 லட்சமாகும்.

*(4) தொழில் நுட்ப மேம்பாடுகளுக்குரிய திட்டம்:*—நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியையும், உற்பத்தி முறைகளையும் மேம்படுத்த வேண்டும். அப்போதுதான் அவை கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்து, ஆலைகளின் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியும். சீரான கைத்தறிகள், நெசவுக் கருவிகள் இவற்றின் விலையில் 75 சதவீதம் உதவியளிப்பதற்கான திட்டங்களை அவர்கள் வகுத்துள்ளனர். எஞ்சிய 25 சதவீதம் கடனுக

[1970 ஏப்ரல் 2

வழங்கப்படுகிறது. பெரிய சிறிய சாயச்சாலைகளை நிறுவும் திட்டங்களுக்கும் அரசு நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | திட்டச் செலவு. | பிரிவு. | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1967–68 .. .. | 2·22 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். | 6,719 |
| 1968–69 .. .. | 2·65 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். சிறு சாயச்சாலை கள். | 8,354 |
| 1969–70 .. .. | 3·14 (எதிர்பார்க் கப்படுவது) | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். | 8,011 |
| | | சிறிய சாயச்சாலை கள். | 5 |
| 1970–71 (திட்டமிடப் பட்டது.) | 4.00 | மேம்பாடு செய்யப் பட்ட கருவிகள். | 8,130 |

*(5) உற்பத்தியும், விற்பனையும் :*—கூட்டுறவுத் துறையில் கைத்தறித் துணிகளின் உற்பத்தியும், விற்பனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | உறபத்தி (பத்து லட்சம் கெஜத்தில்). | விற்பனை (ரூபாய் கோடியில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966–67 .. .. .. .. .. | 80·00 | 10·50 |
| 1967–68 .. .. .. .. .. | 83·94 | 10·74 |
| 1968–69 .. .. .. .. .. | 77.72 | 11·01 |
| 1969–70 (எதிர்பார்க்கப்படுகிறது) .. .. | 85·00 | 12·75 |
| 1970–71 (திட்டமிடப்பட்டது) .. .. .. | 100·00 | 15·00 |

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் தனது விற்பனைப் பிரிவுகளின் மூலம் விற்ற கைத்தறித் துணிகளின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1. | 1966–67-ல் விற்பனை .. .. .. .. .. | 4.10 |
| 2· | 1967–68-ல் விற்பனை .. .. .. .. .. | 4·14 |
| 3. | 1968–69-ல் விற்பனை .. .. .. .. .. | 4·20 |
| 4. | 1669–70-ல் விற்பனை (எதிர்பார்க்கப்படுவது) .. | 4·50 |
| 5. | 1970–71-ல் விற்பனை (திட்டமிடப்பட்டது) .. .. | 5·00 |



1970 ஏப்ரல் 2]

முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கூட்டுறவுத் துறையில் சுமார் ரூபாய் 8 கோடி மதிப்புள்ள 740 லட்சம் கெஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. கைத்தறித் தொழிலுக்குப் பெருமளவு நிதி உதவி வழங்கப்பட்டதன் விளைவாகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதால், 1963-64-ல் 11.5 கோடி கெஜம் அளவிற்குக் கைத்தறித் துணிகள் உற்பத்தி பெருகியது. ஆனல் பஞ்சாலைத் தொழிலில் பொதுவாக மந்த நிலை ஏற்பட்டதாலும், நைலான், டெரிலின் முதலிய செயற்கை நூல் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பி வாங்கியதாலும் கைத்தறித் துணியின் உற்பத்தி அதுமுதல் குறைந்து வந்துள்ளது. மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்கும் முறையை தறிக்கு இவ்வளவு கடன் என்ற அடிப்படையிலிருந்து உற்பத்தி அடிப்படைக்கு மாற்றியுள்ளது. திருத்த அடிப்படையின் நிபந்தனைகள் பல்வேறு சங்கங்கள் செயலாற்றுவதையும் அவற்றின் உற்பத்தியைப் பாதித்துள்ளது. நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்துமாறு இந்திய ரிசர்வ் வங்கியை மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியும் சில நிபந்தனைகளைத் தளர்த்த அனுமதி வழங்கியுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வணிக முறைகளை மேற்கொள்ளுவதுடன், பொதுவான வங்கிக் கோட்பாடுகளை ஒட்டி நடக்கவும் தொடங்கவேண்டும். குறைவான வாணிபத்துக்கு அதிகப் பங்கு மூலதனம் தேவைப்படுவதே அவர்களுடைய பெருந்துன்பமாகும். அவர்களுடைய வணிகத்தை விரைவுபடுத்துவதற்கும். அதிகரிப்பதற்கும், உற்பத்தியைச் சீரமைப்பது மிகவும் அவசியமாகும். இந்த நோக்கில் நெசவாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டம், பிறிதொரு இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சங்கங்கள், தங்களிடம் உள்ள இருப்புகளை விற்பனை செய்வதற்கு அரசு சிறப்பு உதவி அளித்து வந்துள்ளது. நெசவாளர் தொடக்கச் சங்கங்களிடம் இருப்புகள் தேங்கிக் கிடக்கும்பொழுது அவற்றை முனைந்து வாங்குவதற்காக மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது. அப்பொழுது தான் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்க இயலும். 1969-70-ம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்கெனவே அளிக்கப்பட்ட ரூ. 25 லட்சம் கடனுடன் கூட, இந்த நோக்கத்திற்காக ரூ. 50 லட்சம் கடன் அளிக்கப்பட்டது.

கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருக்குவதற்காக, 1968-69-ம் ஆண்டில் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைப் பிரிவுகளிலிருந்து கைத்தறித் துணி வாங்குவதற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ், அரசுப் பணி

[1970 ஏப்ரல் 2

யாளர் ஒருவர் ஒரு திங்களுக்கான அடிப்படைச் சம்பளத் தொகைக்கு நிகராக தமக்கு வழங்கப்படும் முன்பணத்தைக் கொண்டு தமக்குத் தேவையான கைத்தறித் துணிகளை வாங்கி கொள்ளலாம். முன்பணம் மொத்தத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு மாநிலச் சங்கத்திடம் அளிக்கப்படுகின்றது. இத் தொகை சம்பந்தப்பட்ட அரசுப் பணியாளரின் சம்பளத்திலிருந்து 6 அல்லது 8 திங்கள் தவணைகளில் அலுவலகத் தலைவரால் வசூலிக்கப்படுகின்றது. இத் திட்டம் நடப்பு ஆண்டிலிருந்து நிலைப்படுத்தப்பட்டு, உள்ளாட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1969-ம் ஆண்டு தீபாவளி காலத்தில் தனது விற்பனையை ரூ. 48 லட்சம் அளவுக்கு அதிகரிக்க இத் திட்டம் உதவி செய்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 70 லட்சத்திற்கு கைத்தறித் துணி விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. தள்ளுபடித் தொகை உதவி:—கைத்தறித் துணி வாங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது விற்பனைகளுக்குத் தள்ளுபடி அனுமதிக்கும் வகையில் சில்லறை விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 5 காசும், மொத்த விற்பனைகளின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 3 காசும் உதவித் தொகையை அரசு அளித்து வந்துள்ளது. அனைத்திந்தியக் கைத்தறி வாரம் போன்ற விழாக்களின் போதும் தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைகளின் போதும் 15 நாள் கால அளவுக்குப் பருத்தி கைத்தறித் துணிகள், கலப்பு கைத்தறித் துணிகள் சில்லறை விற்பனையின் மேல் ரூபாய் ஒன்றுக்கு 10 காசு வீதம் கூடுதல் தள்ளுபடி வழங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் தேங்கிவிட்ட இருப்புகளை விற்பனை செய்வதற்காக (பருத்தி, பட்டு, செயற்கைப் பட்டு அல்லது வேறு ஏதேனும் செயற்கை நூலைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட) எல்லா வகையான கைத்தறித் துணிகளுக்கும் 10 காசு வீதம் உயரிய தள்ளுபடி அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்த உதவித் தொகை முந்திய ஆண்டில் 59 நாட்களுக்கு வழங்கப்பட்டிருக்க, 1968-69-ம் ஆண்டில் மொத்தம் 89 நாட்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அனைத்திந்தியக் கைத்தறி வாரியம், பருத்தித் துணிகளின் சில்லறை விற்பனைகள் மீதான தள்ளுபடித் தொகை உதவியை ஓர் ஆண்டில் 15 நாட்களுக்குத் தான் வழங்கலாம் என்று அனுமதித்துள்ளது. நடப்பு ஆண்டில் அரசு இச் சலுகையை 1970 ஜனவரி இறுதி வரையில் மாத்தம் 66



1970 ஏப்ரல் 2]

நாட்களுக்கு நீட்டித்துள்ளது. தள்ளுபடி வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | செலவு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967-68 | 64·00 |
| 1968-69 | 84·65 |
| 1969-70 (மதிப்பீடு) | 90·00 |
| 1970-71 (திட்டமிடப்பட்டது) | 90·00 |

7. விற்பனையும், பிரசாரமும்.—விற்பனைக் கிடங்குகளையும், விற்பனை நிலையங்களை நிறுவவும், நாள்காட்டிகளை அச்சிடுதல், காகிதப் பைகள், செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடுதல், பொருட்காட்சியில் பங்கு கொள்ளுதல் முதலிய பல்வேறு விளம்பர நடவடிக்கைகளுக்காகவும், தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அரசு நிதி உதவி வழங்குகின்றது. இத்திட்டத்திற்கான செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | செலவு. (ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1967–68 | | 7·45 |
| 1968–69 | | 6·50 |
| 1969–70 | (எதிர்பார்க்கப்படுவது) | 7·00 |
| 1970–71 | (மதிப்பிட்டது) | 7·00 |

8. நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் :—தறி இல்லாத நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுகின்றன. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்கும் தறிகளையும், ஏனைய துணைக் கருவிகளையும் வாங்குவதற்கும் உதவி அளிப்பதோடு, பணிக்கூடங்கள் கட்டுவதற்கு 10 ஆண்டுகளுக்குள் திருப்பித்தரத் தக்க நீண்ட காலக் கடன்கள் இச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. பணியாளர்களை அமர்த்தல், வாடகை செலுத்தல் ஆகியவற்றிக்காக முதல் மூன்று ஆண்டுகளுக்கு உதவித்தொகை இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இச்சங்கங்களின் உறுப்பினர்கள், சங்க பணிக்கூடங்களில் பணியாற்றி ஊதியம் பெறுகின்றனர். மேலும் சங்கங்களுக்கு ஆதாயம் கிடைக்கும்போது, தங்கள் உற்பத்தியின் மீது அவர்கள் பூரிப் பூதியம் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் 27 நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் ஆண்டு உற்பத்தி மதிப்பு ரூ. 58.29 லட்சமாகும். இவற்றிலே சில சங்கங்கள் கண்கவர் படுக்கை விரிப்புகளையும், வண்ணத்துவாலைகளையும், வீடுகளுக்கு அழகூட்டும் துணிகளையும் தயாரிக்கின்றன. இவை உடனடியாக விற்பனையாகின்றன.

[1970 ஏப்ரல் 2

இத் திட்டத்தின் கீழ் செய்த செலவு விவரத்தைக் கீழே காணலாம் :—

அட்டவணை VII

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967-68 .. .. .. .. | 0·11 |
| 1968-69 .. .. .. .. | .. |
| 1969-70 (எதிர்பார்க்கப்படுவது) .. | 1·50 |
| 1970-71 (மதிப்பிட்டது) .. .. | 2·00 |

புதிய சங்கங்களை ஆரம்பிப்பதற்கு முன்னால் தற்போதுள்ள சங்கங்களின் செயல்முறையை உறுதிப்படுத்துவதே கொள்கையாகும். இத் திட்டத்தின்கீழ் செலவினம் அதிகமானதல்ல ; இச் சங்கங்களின் நிலுவைக் கோரிக்கை, அல்லது பணிக் கூடங்கள் கட்டுதல், அவற்றை விரிவு படுத்துதல் போன்ற செலவினங்களையே அது குறிக்கிறது.

*9. பட்டுத் தொழில்.—தமிழ்நாட்டிலுள்ள 20,000 பட்டுத்தறிகளில், 19 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் 3,062 தறிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்றன. பட்டு நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்திற்குப் பெருந்தொகை வேண்டியுள்ளது. எனவே, இந்திய ரிசர்வ் வங்கி, 1968-69-ல் இருந்து இச் சங்கங்களுக்குக் கடனுதவி வழங்கியுள்ளது. பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 89 லட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 97 லட்சமாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—*

| ஆண்டு | நிதிச்செலவு. (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 1967-68 .. .. .. .. .. | 4·19 |
| 1968-69 .. .. .. .. .. | 0·54 |
| 1969-70 (எதிர்பார்க்கப்படுவது) .. .. | 1·05 |
| 1970-71 (மதிப்பிட்டது) .. .. .. | 1·05 |

*1968-69-ல் இருந்து நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதை இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துக்கொண்டுவிட்டதால், செலவு குறைந்துள்ளது.*

*10. பயிற்சி.—கைத்தறித் துணிகளின் ரகங்கள், வண்ணங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு, நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அருகிலுள்ள நெசவாளர்களுக்கு பல்வேறு நவீன நெசவு முறைகளில், இம்மாநிலத்திலுள்ள நான்கு நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுவந்தன.*



1970 ஏப்ரல் 2]

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் சாயத் தொழிலாளர்களுக்கு, மேம்பாட்டு முறைகளில் சாயத் தொழிலுக்கான பயிற்சியும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு, கணக்கெழுதி வைத்து வருதல், அலுவலக நிர்வாக முறை, கைத்தறி தொழிலியல் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் எய்தியுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) | திட்டச் சாதனை. | |
|---|---|---|---|
| 1967-68 | 1·57 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. | 397 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 15 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. | 229 |
| 1968-69 | 1·45 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. .. | 377 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 17 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. .. | 168 |
| 1969-70 | 2·11 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. | 360 |
| (எதிர்பார்த்தது) | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 20 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. .. | 200 |
| 1970-71 | 4·50 | பயிற்சியளிக்கப்பட்ட நெசவாளர் .. .. | 2,100 |
| (திட்டமிட்டது.) | | பயிற்சியளிக்கப்பட்ட சாயத் தொழிலாளர் | 20 |
| | | பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர் .. | 200 |

நெசவாளர் பயிற்சிக்கானத் திட்டம் பல வழிகளில் குறைபாடுகள் உள்ளதாக காணப்பட்டது. செயல்படும் நிலையங்களின் எண்ணிக்கையோ குறைவு. நெசவாளர்களோ, தொலைதூர இடங்களிலிருந்து வரவேண்டியிருந்தது. இதனால் அவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டது. பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்பட்டதும் ஒரு குறையாகும். மேலும் பயிற்சி பெற்ற நெசவாளர்கள் இந்நிலையங்களில் தாம் கற்ற முறைகளைக் கடைப்பிடிக்கின்றனரா என்பதைக் கவனிக்க, மேற்கொண்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தை அரசு தக்கவாறு திருத்தி 15—2—1970 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவர முனைந்துள்ளது. இப்பயிற்சி நீலகிரி, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சி நிலையமாக 12 நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்டத்திலுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கம் இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கும். தகுதி வாய்ந்த கைத்தறி தொழில் நுட்ப ஆசிரியர்கள் பணி, அரசுச் செலவில் இச் சங்கத்திற்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலையத்திலும் 30 நெசவாளர்களுக்கு ஒவ்வொரு பாட முறையிலும் பயிற்சி அளிக்க ஆறு பாட முறைகள் இருக்கும். அந்தந்த திட்டத்தை நடத்தும், சங்க உறுப்பினர்களிலிருந்தும் அந்த கிராமத்தில் அல்லது நகரில் பிற சங்கங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிலிருந்தும். நெச

வாளர்கள் இப்பயிற்சிக்காகத் தெரிந்தெடுக்கப்படுவர். விரைவில் விற்பனையாகக் கூடியவையும், ஆலைகள் போட்டியிடாதவையும், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், துண்டுகள், சட்டைத் துணி, உயர் தரமான சேலைகள் போன்ற இரண்டு மூன்று வகைகளை உற்பத்தி செய்வது குறித்துப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்கு பின்னர், புதிய ரகங்களைச் சங்கங்களின் சார்பாக தயாரிக்குமாறு நெசவாளர் கேட்கப்படுவர். அவர்களுக்குப் புதிய கருவிகள் குறைந்த விலையில் கொடுக்கப்படும். பயிற்சித் திட்டத்தின் கால அளவு 45 நாட்களாகும். பயிற்சி பெறுபவருக்கு திங்களொன்றுக்கு ரூ. 100 உதவிப் பணமாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில், ஒரு பாட முறையில் பயிற்சியளிக்கப்படும். 12 நிலையங்களிலும், மொத்தமாக 360 நெசவாளர்கள் பயிற்சி பெறுவர். 1970–71-ம் ஆண்டு முதற்கொண்டு, ஆண்டு தோறும் 2,160 நெசவாளர்கள் பயிற்சி பெறுவர். ஒரு மாவட்டத்தில் செயல்படும் நிலையம் குறிப்பிட்டதொரு இடத்தில் நியாயமான எண்ணிக்கையுள்ள நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்த பின்னர், அந்த மாவட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு இடமாகச் செயல்படும். இப்பயிற்சி மும்முரமான பயிற்சி மட்டுமின்றி, பரவலான பயிற்சியுமாகும். இப்பயிற்சியின் காரணமாக எளிதில் விற்பனையாகக்கூடிய கைத்தறிச் சரக்குகளை உற்பத்தி செய்வதன் மூலம் கைத்தறித் தொழில் வளம் பெறுவதற்கு இப்பயிற்சி உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**11. நிர்வாகப் பணியாளருக்காக ஆகும் செலவிற்கான உதவித் தொகை.**—இத் திட்டத்தின் கீழ், நிதி வசதி குறைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாகப் பணியாளர் செலவு குறித்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதி உதவி படிப்படியாகக் குறையும் வகையில் நான்கு ஆண்டுகளில் அளிக்கப்படுகிறது. முதலாவது ஆண்டில் ஒரு சங்கத்திற்கு அதிக அளவாக ரூ. 1,000 உதவியளிக்கப்படும். இத் திட்டத்தின் கீழ் செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்) | பயன் பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967–68 .. .. .. | 0·49 | 72 |
| 1968–69 .. .. .. | 0·39 | 54 |
| 1969-70 (எதிர்பார்க்கப்பட்டது). | 1·00 | 100 |
| 1970–71 (திட்டமிட்டது) .. | 1·00 | 100 |

**12. நெசவாளர் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அரசு முதலீடு செய்தல்.**—கைத்தறித் துணிகளை அதிக அளவில் வாங்கி விற்பனை செய்வதற்கு சங்கத்தின் நடைமுதல் மூலதன வசதிகளை அதிகப்படுத்துவதற்காக அரசு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இதுவரையில் ரூ. 21.50 லட்சம் பங்கு மூலதனம் முதலீடு செய்துள்ளது. 1969-70-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ரூ. 1.00 லட்சம் பங்கு மூலதனம் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.





**13. தமிழ் நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள்.**—நமது மாநிலத்தில் இப்போது 12 கூட்டுறவு நூற்பாலைகள் செயல்படுகின்றன. இந்த ஆலைகள் அனைத்தும் ஆய்வாண்டில் தொடர்ந்து செயல்பட்டன. 1969-ம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகள் செயல்பட்டதில் கிட்டிய பலன்கள் 3-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 1,73,256 கதிர்கள் நிறுவப்பட்ட திறனுடைய இந்த ஆலைகள் 20-ஆம் நம்பர் நூல் முதல் 100-ஆம் நம்பர் நூல் வரை பருத்தி நூலை உற்பத்தி செய்கின்றன. சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1969-ம் ஆண்டில் இந்த ஆலைகளின் உற்பத்தி அளவு கணிசமான அளவிற்குப் பெருகியுள்ளது என்பதைக் கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| | 1968. | 1969. |
|---|---|---|
| உற்பத்தி (லட்சம் கிலோகிராமில்) .. | 88·25 | 105·70 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) .. | 743-06 | 8?0·36 |

இக்கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு மொத்தம் ரூ. 184.08 லட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இவை, கடன் உதவு நிறுவனங்களிடமிருந்து ரூ. 663.13 லட்சம் வரையில் வாங்கிய கடன் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு உறுதி அளிப்பதன் மூலமாகவும் அரசு இந்த ஆலைகளுக்குக் கணிசமான அளவில் உதவி செய்துள்ளது. தொகைகளைப் பின்னர் செலுத்தும் அடிப்படையில் இந்த ஆலைகள் ரூ. 39.85 லட்சம் வரையில் வாங்கிய நெசவாலைப் பொறிகள் குறித்தும் அப் பொறிகளுக்கான விலை பின்னர் தவறாமல் கொடுக்கப்படும் என்பதற்கும் அரசு உறுதி மொழியளித்துள்ளது. மேலும் இந்த ஆலைகளுக்குத் தாற்காலிகமாக ஏற்பட்டுள்ள நிதி இடர்பாடுகளைக் கடக்க இயலும் வகையில் இந்த ஆலைகளுக்கு ரூ. 35.65 லட்சம் நேரடியாக கடன்களும் அரசு வழங்கியுள்ளது.

ஸ்ரீ வில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையும், திருச்செந்தூர், கூட்டுறவு நூற்பாலையும், தங்களது திறனளவை 25,000 கதிர்களாக உயர்த்தும் பணியை மேற்கொண்டுள்ளன. விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ள கூடுதலான 30 வட்டச் சட்டங்களில் ring Frames திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை இதுவரையில் 8 சட்டங்களை வாங்கி நிறுவியுள்ளது. விரிவுத் திட்டத்தின் கீழ் 28 சட்டங்களை நிறுவவேண்டுமென்று திட்டமிட்டிருக்க, ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை கூடுதலாக 8½ சட்டங்களை நிறுவியுள்ளது. தங்களது விரிவுத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றி முடிக்க இந்த இரண்டு ஆலைகளும் நடவடிக்கைகள் எடுத்து வருவன்றன. ஆய்வாண்டில் ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 4.75 லட்சம் கடனைப் பெற்றுள்ளது. மேலும் பின்னர் தொகை செலுத்தப்படும் உத்தரவாதத்தின்மேல் இயந்தி

ரங்கள் வாங்குவதற்காக ரூ. 19.41 லட்சத்திற்கு உறுதிமொழியும் பெற்றுள்ளது. அன்றியும் அரசிடமிருந்தும் தாற்காலிகக் கடனாக ரூ. 10 லட்சம் பெற்றுள்ளது. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலைகள் தனது விரிவுத் திட்டத்திற்காக தொழில் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 35 லட்சம் கடனாகப் பெற்றுள்ளது. அரசும், திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலைகளில் கூடுதலாக ரூ. 5 லட்சம் பங்கு மூலதன முதலீடு செய்துள்ளது.

1969-ம் காலண்டர் ஆண்டில் சேலம் கூட்டுறவு நூற்பாலைகள், மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள், கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள், வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள் ஆகியவை ஒவ்வொன்றும் சில சட்டங்களைக் கூடுதலாக நிறுவியதன்மூலம் தங்களது கதிர் திறனை அதிகரிக்கும் திட்டத்தை நிறைவேற்றியது. கம்பு நூல் (Co 1e yarn) இரட்டிப்பு நூல் (Do'ible l yarn) ஆகியவற்றிற்கானத் தேவை நாளுக்கு நாள் பெருகி வருவதை முன்னிட்டு அதன் தேவையை நிறைவு செய்யவும் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், ஆலைகளில் சில தங்களது உற்பத்தியைப் பல்வகைப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்க மற்றொரு சாதனையாகும்.

மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையும், தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையும் தம் திறனை 25,000 கதிர்களாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன. மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரையில், அதன் விரிவுத் திட்டத்தை நிறைவேற்றுவதனால் வெளிநாடுகளிலிருந்து, இந்திய மண்ணிற்குத் திரும்பியுள்ள 300 அகதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமாதலால், அந்த விரிவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ. 35 லட்சம் நிதி உதவி வழங்குமாறு தமிழ் நாடு அரசு இந்திய அரசின் மறுவாழ்வு அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை தனது திறனை 25,000 கதிர்களாகப் பெருக்குவதற்காக தொழில் உரிமம் ஒன்றை அண்மையில் பெற்றது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை இந்த ஆலை எடுத்துவருகிறது.

ஆய்வாண்டில் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை நீங்கலாக கூட்டுறவு நூற்பாலைகள் அனைத்தும், ஏழு நாள் வேலைமுறைத் திட்டமொன்றை செயலுக்குக் கொண்டுவந்தன. இதனால் உற்பத்தி பெருகியதுடன், மேல் செலவுகள் குறைந்துவிட்டன.

1969-ம் ஆண்டில் கீழ்க்காணும் கூட்டுறவு நூற்பாலைகள், தாங்கள் உற்பத்தி செய்த நூலை, ஏற்பளிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முன்



வந்தன. அத்தகைய ஆலைகளின் பெயர்கள், ஒவ்வொரு ஆலையும் ஏற்றுமதி செய்ய முன் வந்த நூலின் அளவு ஆகிய விபரங்களைக் கீழே காணலாம்:—

| தொடர் எண். (1) | ஆலைகள். (2) | ஏற்றுமதி செய்யப்பட்ட கட்டுகளின் எண்ணிக்கை. (3) | ஏற்றுமதி செய்யப்பட்ட நாடுகள். (4) |
|---|---|---|---|
| 1 | திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 50 | பர்மா. |
| 2 | மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை .. | 400 | பர்மா. |
| 3 | கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 486 | பர்மா-இலங்கை. |
| 4 | திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை | 400 | பர்மா. |
| 5 | வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை | 670 | பர்மா. |
| | மொத்தம் .. | 2,006 | |

## 5. நெசவாளர் நலத் திட்டம்.

கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துகையில் நெசவாளர் நலத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் சமூக-பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதில் அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வருகிறது. இத் திட்டங்கள் சுருக்கமாகக் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

(a) நெசவாளர்களுக்கு வீட்டு வசதி.—நெசவாளர்களுக்குத் தொழில் கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதன்மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு அதிக அளவாக ரூ. 3,600 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. இதில் ரூ. 2,000 கடனாகவும், ரூ. 1,250 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சிய 350 ரூபாய் அல்லது வீட்டிற்குச் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையில் 10 சதவீதம்—இவ்விரண்டில் எது அதிகமான தொகையோ அத் தொகையை உறுப்பினர்கள் கொடுக்கவேண்டும். இக் கடன் 25 சமமான ஆண்டுத் தவணைகளில் 4½ சதவீத வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். வீட்டு வசதி, புதுக்குடியேற்றங்களில் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், தெரு விளக்கு வசதி செய்து கொடுத்தல் போன்ற பொதுவான வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 127.65 லட்சம் செலவிட்டு, 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1962-ல் இருந்து புதிதாக வீட்டு வசதித் திட்டம் எதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. திங்களொன்றுக்கு ரூ. 100-க்கு மேல் ஊதியம் பெறுகின்ற நெசவாளர்கள் மாதத் தவணையாக ரூ. 25 செலுத்துவது

கடினமாக இருப்பதால், சிக்கலை நன்கு ஆய்ந்தபின்னரே இத் திட்டம், நடப்பு ஆண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். நான்காவது திட்டக் காலத்தில் 500 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ரூ. 27 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(b) உதவித் தொகை சிக்கன நிதி (வருங்காலச் சேமிப்பு நிதி) திட்டம்.—இத் திட்டத்தின்கீழ் சேமித்து வைக்கும் பழக்கத்தை கைக்கொள்ளும் வகையில் நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், வீடு கட்டுதல் போன்ற பயனுள்ள செயல்களுக்கும், திருமணம் முதலியவை போன்ற அவசியமான சமூக நிகழ்ச்சிகளுக்கும், முன் பணமும் பெறுவதற்கும் உதவியளிக்கப்படுகின்றது. இத் திட்டத்தின்கீழ், நெசவாளர் ஒருவர், தாம் ஈட்டும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு வீதம் கொடுக்கிறார். அரசு 4 காசும் சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசும் கொடுப்பதால் இந்த நிதிக்கு நெசவாளர் வழங்கும் தொகைக்கு இணையாக மேலும் 6 காசு சேருகின்றது. இத் திட்டம் 1962–63-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அதிக சங்கங்களும் உறுப்பினர்களும் பயனடையும் வகையில் இத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை—சிக்கன நிதியானது சம்பந்தப்பட்ட மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளில் சிக்கன நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொருவருடைய பெயரிலும் 6 சதவீதம் வட்டிக்கு முதலீடு செய்யப்படுகிறது. 1968–69-ம் ஆண்டின் முடிவில் பல்வேறு கூட்டுறவு மத்திய பாங்குகளிலும், உதவித் தொகை சிக்கன நிதியானது மொத்தம் 30 லட்சம் ரூபாய்க்கு மேல் சேர்ந்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் நன்கொடையாக அரசு அளித்த உதவித் தொகை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:—

| ஆண்டு. | அரசு கொடுக்கும் உதவித் தொகை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 .. .. .. .. .. .. | 1·80 |
| 1968–69 .. .. .. .. .. .. | 1·89 |
| 1969–70 (எதிர்பார்த்தது) .. .. .. .. .. | 2·25 |
| 1970–71 (திட்டமிட்டது) .. .. .. .. .. | 2·75 |

நெசவாளர்கள் தங்கள் வருவாயின் ஒரு பகுதியைச் சேமித்து வைப்பதை ஊக்குவிக்கும் திட்டம், பயனுள்ளதாக இருந்தமையால் சில விதிகளைத் தளர்த்துவது குறித்து அரசு முனைந்து ஆய்ந்து வருகிறது. இத் திட்டத்தின் நன்மைகளைக் கூட்டுறவு நெசவாளர் பெருமளவில் அடைய வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

6. ஏனைய திட்டங்கள்.—பின் வரும் திட்டங்கள் கூட்டுறவுத் துறையின்கீழ் வராத நெசவாளர்களின் நலனையும் பொதுவாக கைத்தறித் தொழிலின் நலனையும் நோக்கமாகக் கொண்டமையாகும்:—



(a) புள்ளிவிவரம் திரட்டுதல்.—இது மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும் கூட்டுறவுத்துறைக்கு வெளியிலும் கைத்தறித் துணிகளின் உற்பத்தி, இருப்பு, விற்பனை ஆகியவை குறித்த புள்ளிவிவரங்களைத் திரட்டுவதற்கான நிட்ட வேலையாகும். மாவட்டங்களில் முக்கிய கைத்தறி உற்பத்தி உள்ளூர் நிலையங்களில் அவ்வப்போது அங்குமிங்குமாகப் புள்ளி விவரம் திரட்டும் (Randam Sampling) முறையை மேற்கொண்டு இத் திட்டம்புள்ளிவிவரத் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்திற்கு 1966–67-ல் ரூ. 1.03 லட்சமும், 1967-68-ல் ரூ. 1.16 லட்சமும், 1968-69-ல் 1.23 லட்சமும், செலவாயிற்று. 1969-70–க்கு ரூ. 1 லட்சம் தொகை செலவாகுமெனவும், 1970-71-ம் ஆண்டில் ரூ. 1 லட்சம் ஒதுக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(b) பரிசு வழங்கும் திட்டம்.—கைத்தறித் துணிகளில் புதிய கவர்ச்சிகரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்கு கூட்டுறவு அமைப்பில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கும், கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களுக்கும் மற்று தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கும் நேரடியான ஊக்கமளிப்பதன் மூலம், கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ்வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்கு பரிசளிக்கும் திட்டம் அரசினால் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 20,000 ரூபாய் அரசாங்கத்தால் செலவிடப்படுகிறது. பரிசுகள் வழங்கப்படுவதற்கான சிறந்த துணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசுப் பணியாளர், அரசுப் பணி சார்பற்றவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவின் உதவியுடன் தெரிந்தெடுக்கின்றனர்.

(c) தமிழ் நாடு கைத்தறி நிதி உதவும் கழகம்.—கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வராத நெசவாளர்களுக்கு உதவும் வகையில் பொது நிறுவனமாகவும், வங்கி அலுவல் புரியாத நிறுவனமாகவும் இக் கழகம் 1964-ம் ஆண்டில் அரசால் நிறுவப்பட்டது. இக் கழகம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. கழகத்தின் தொகை செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 57.85 லட்சத்திலிருந்து, குறிப்பாகக் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் வராத கைத்தறி, விசைத்தறி இவை தொடர்பான தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இக்கழகம் நிதி உதவி அளிக்கிறது. நடப்பு ஆண்டில் தமிழ் நாடு அரசு இக் கழகத்தில் ரூ. 7.40 லட்சம் அளவில் கூடுதல் பங்குகள் மூலதன முதலீடு செய்தது. இதன் விளைவாக இக்கழகத்தில் அரசின் மொத்த மூலதன முதலீடு ரூ. 20 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழ் நாடு கைத்தறி நிதி உதவும் கழகத்திற்கு இந்திய ஸ்டேட் வங்கி அரசு உத்ரவாதத்தின் மேல் ரூ. 90 லட்சம் அளவிற்குத் தொடர்ந்தாற்போல் ரொக்கக்கடன் வசதி வழங்கியுள்ளது. இந்த ஆண்டில் ரூ. 140.09 லட்சம் அளவிற்கு இக் கழகம் கடன் வழங்கியுள்ளது.

[1970 ஏப்ரல் 2

7. **திட்ட வேலைகளுக்கான நிர்வாகச் செலவு.**—கைத்தறித் திட்ட வேலைகளைச் செயல்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள துறைப் பணியாளர்களுக்கு ஆகும் செலவை ஈடு செய்ய கடன் உதவியளிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ம் ஆண்டில் ரூ. 3.60 லட்சம் செலவாகியது. 1969-70-ம் ஆண்டில் ரூ. 3.49 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970-71-ல் ரூ. 5 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டு உள்ளது.

8. **கைத்தறித் தொழிலுக்கு மூலப் பொருள் வழங்குதல்.**—(a) **பருத்தி நூலைத் தயாரித்தலும், வழங்குதலும்.**—தற்போது பருத்தி நூல் விலை, பங்கீடு குறித்துக் கட்டுப்பாடு ஏதும் செயலில் இல்லை. ஆலைகள் பருத்தி நூலை அவற்றின் விருப்பம்போல் எவருக்கேனும் விற்கவும், வாடிக்கையாளர்கள் போட்டி விலையில் நூலைப் பெற வகை செய்யவும் உரிமை பெற்றுள்ளன. பருத்தி நூல் வழங்கப்படும் நிலை மிக எளிதாக உள்ளது. எல்லா நம்பர் நூல்களும் எளிதில் அங்காடியில் கிடைக்கின்றன. இம் மாநிலத்திலுள்ள ஆலைகள் திங்கள் ஒன்றுக்குச் சராசரி சுமார் 6,000 பேல் பருத்தி நூல் உற்பத்தி செய்கின்றன. இந்த உற்பத்தியில் 1/3 பங்கு இம் மாநிலத்தின் கைத்தறித் தொழிலினால் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய நூல் இம் மாநிலத்திற்கு வெளியே உள்ள வாடிக்கைக்காரர்களுக்கு விற்கப்படுகிறது. இவ்வாறாகப் பருத்தி நூல் உற்பத்தியைப் பொறுத்த வரையில் இம் மாநிலம் உபரியாகவே உள்ளது.

(b) **நார்ப் பட்டு.**—பங்களூரிலுள்ள நூற்பாளர்கள் நெசவாளர்கள் மத்தியக் குழுவின் தென்னிந்திய வட்டாரக் குழு விஸ்கோஸ் இழை நூலை, கைத்தறித் துணி உற்பத்தியாளர்களின் சங்கங்களுக்கு வழங்குகிறது. உள்நாட்டில் உற்பத்தியாகும் நார்ப் பட்டு நூல் தற்போது கைத்தறி, பஞ்சாலைகள் இயக்குநரின் பரிவுரையின் அடிப்படையில் இப்போது செய்யப்படுகிறது. நார்ப் பட்டு நூல் நியாய விலையில் ஆலைகளின் மூலம் வழங்கப்படுகிறது.

(c) **இறக்குமதி செய்யப்படும் நார்ப்பட்டு நூல்.**—நார்ப்பட்டு நூலை உண்மையில் பயன்படுத்துவோரும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இறக்குமதியாளர்களும் நார்ப்பட்டு நூலை இறக்குமதி செய்வது இந்திய அரசினால் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்யும் பொறுப்பை இந்திய அரசு, அரசு வர்த்தகக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. 1969-ஆம் ஆண்டில் அரசு வர்த்தகக் கழகம் 172 டன் நார்ப்பட்டு நூலை இம் மாநிலத்திலுள்ள கைத்தறிச் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குவதற்கு ஒதுக்குகின்றது. இதில் எட்டு டன் நூல் மட்டும் கைத்தறிச் சங்கங்களாலும், கூட்டுறவுச் சங்கங்களாலும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. நூலின் விலை அதிகமாயிருப்பதே இதற்குக் காரணமாகும்.

(d) **மூலப் பட்டு.**—இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பட்டு மத்தியப் பட்டு வாரியத்தினால் ஒதுக்கப்படுகிறது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மூலப் பட்டின் விலை 1969-ஆம் ஆண்டு பிற்பாதியில் கடுமையாக அதிகரித்தது. இந்த விலை ஏற்றத்தைத் தடுப்பதற்காகத் தக்க நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு கருதி வருகிறது.



1970 ஏப்ரல் 2]

(e) **சரிகை.**—தமிழ் நாட்டிலுள்ள பட்டு, கைத்தறி நெசவாளர், ஆண்டுதோறும், ரூ. 1 கோடிக்கு மேற்பட்ட மதிப்புடைய பொன்சரிகையைச் சூரத்திலிருந்து வாங்குகின்றனர். நியாயமான விலையில் பொன் சரிகை கிட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு சரிகை உற்பத்திப் பிரிவு ஒன்றை காஞ்சிபுரத்தில் ரூ. 24 லட்சம் செலவில் நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கு வேண்டிய பொன் இந்திய அரசினால் இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தை விரைவில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(f) **சாயங்களும், இரசாயனப் பொருள்களும்.**—சாயங்கள் இறக்குமதி செய்வது 1969-70 உரிமக் கால அளவில் சாயம் பயன்படுத்துவோர் உரிமத்தின்கீழ் அனுமதிக்கப்படுவதில்லை. கைத்தறித் தொழிலில் இயல்பாகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களில் எதுவும் நடப்பு உரிமைக் கால அளவில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்கள் அவர்கள் ஏற்றுமதி செய்யும் சரக்குகளின் மதிப்பில் 5 சத வீதம் வரையில் சாயங்களையும், இரசாயனப் பொருட்களையும் (அனுமதிக்கப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்தவை) இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

**ஹைட்ரோ சல்பைடு சோடா.**—ஹைட்ரோ சல்பைடு சோடா மிகவும் பற்றாக்குறையாக உள்ளபடியால் அதனைக் கைத்தறி நெசவாளை இயக்குநருக்கு ஒழுங்காக ஒதுக்குவதற்காக ஆல்வாயிலுள்ள திருவாங்கூர்—கொச்சி கெமிக்கல்ஸ் நிறுவனத்துடனும், ஜே. கே. கெமிக்கல்ஸ் நிறுவனத்துடனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கைத்தறி இயக்குநர் மேற்சொன்ன நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் சோடாவைக் கைத்தறிச் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பங்கீடு செய்கிறார். இறக்குமதி செய்யப்படும் இருப்புக்களிலிருந்து அரசு வணிகக் கழகத்தினால் ஒதுக்கப்படும் அளவும் கைத்தறிச் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பங்கீடு செய்யப்பட்டது. 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் 141 டன் இவ்வாறு பங்கீடு செய்யப்பட்டது. அரசு வணிகக் கழகத்தினால் 134 டன் வெளியிடப்பட்டுள்ளது.

9. **ஏற்றுமதி.**—1965-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளின் அளவு பற்றிய விவரங்களைக் கீழே உள்ள அறிக்கையில் காணலாம்:—

| ஆண்டு | வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி மதிப்பு. | பிற நூல் இழைகள். | மொத்தம். |
|---|---|---|---|
| 1965 .. .. .. | 6·16 | 1·39 | 7·55 |
| 1966 .. .. .. | 0·03 | 3·63 | 3·66 |
| 1967 .. .. .. | 0·06 | 3·19 | 3·25 |

| ஆண்டு. | | | | வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி மதிப்பு. | பிற நூல் இழைகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| 1968 | .. | .. | .. | 0·05 | 2·53 | 2·58 |
| 1969 | .. | .. | .. | — | 3·69 | 3·69 |

வண்ணம் மாறும் துணியின் ஏற்றுமதி 1965-ஆம் ஆண்டு பிற் பாதியில் குறைந்தது. 1969-ஆம் ஆண்டில் இதன் ஏற்றுமதி மிகக் குறைவாகும். இந்திய அரசு ஊக்கம் அளித்ததால் பிற கைத் தறித்துணிகளின் ஏற்றுமதி, முந்திய ஆண்டைவிட 1969-ஆம் ஆண்டில் பெருகியது.

10. பொது.—தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்துமாகச் சேர்ந்து ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 12 கோடி அளவிற்கு உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பணியை மேற்கொள்வதன் மூலம் தங்களிடம் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்குச் சிறந்த உதவியை அளிக்கின்றன. அரசினால் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்கள், மூன்றாம் திட்டத்தில் அளிக்கப்பட்ட நிதி உதவி, 1966-67 முதல் 1969-70 வரை உள்ள ஆண்டுத் திட்டங்களில் செய்யப்பட்ட செலவு, 1970-71 ஆம் ஆண்டுக்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ஆகியவை குறித்த விவரங்கள் இந்த ஆய்வுரையின் -வது இணைப்பில் தரப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் கைத் தறித்தொழில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்குத் தொடர்பான புள்ளிவிவரங்கள் II -ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1969-ஆம் காலண்டர் ஆண்டில் ஆற்றிய பணி குறித்த விவரங்கள் III-ஆவது இணைப்பில் காணலாம். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் அரசு அளித்துள்ள கணிசமான நிதி உதவி அச்சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவியது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை நல்குவதன் மூலமும் அவற்றை மேற்பார்வையிடுவதன் மூலமும் அச்சங்கங் களுக்கு வலுவூட்டும் நோக்கத்துடன் மாவட்ட நிலையில் நிர்வாக அமைப்பைச் சீரமைப்பது அவசியமென அரசு கருதியது. நெச வாளர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வந்த துணைப் பதிவாளர்கள் (பொது அலுவல்) பிறவகையைச் சேர்ந்த பல சங்கங்களையும் கவனிக்க வேண்டியிருந்தால் அவர்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தில் போதிய கவனம் செலுத்த இயலாது எனக் கருதப்பட்டது. எனவே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தை தனிப்பட்ட முறையில் கவனித்து வருவதற்காகத் தனித் துணைப் பதிவாளர்கள் (கைத் தறி) என்கிற 5 பதவிகளை ஏற்படுத்தவும், அவசியமான



பணியாளர்களை நியமிக்கவும் இந்த ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. சேலம் வட்ட அலுவலகம் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றது. இவ்வாறாகத் தற்போது தனித் துணைப் பதிவாளர் (கைத்தறி) வட்டங்கள் ஆறு செயல்பட்டு வருகின்றன. இந்த வட்டங்கள் ஒவ்வொன்றும் ஒன்று முதல் மூன்று மாவட்டங்களைக் கவனித்து வருகின்றன. 1969 அக்டோபர் திங்கள் முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ள இந்த அமைப்பு நெசவாளர் தொடக்கச் சங்கங்களைப் பொருளாதார முறையில் தனித்து இயங்கக் கூடிய பிரிவுகளாக விரைவில் சீரமைப்பதற்கும், விரைவில் விற்பனை ஆகக்கூடிய கைத்தறித் துணிகளின் உற்பத்திக்கு ஊக்க மளிக்கவும், சங்கங்கள் செயல்படும் முறை, நெசவாளர் நலன் ஆகியவற்றில் பொதுவான முன்னேற்றம் காணவும் உதவுகின்றது.

## இணைப்பு 3-அ.

### வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் (நிதி).

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | நிதி இலக்கு (ரூபாய் இலட்சத்தில்). மூன்றாவது திட்டச் செலவு. | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1966–67 ஆண்டு கணக்குகள். | 1967–68 ஆண்டு கணக்குகள். | 1968–69 ஆண்டு கணக்குகள். | 1969–70 திட்ட மதிப்பீடு. | 1969–70-க்கான எதிர்ப் பார்க்கப் பட்ட செலவு. | 1970–71-க்கான திட்டம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | பங்கு மூலதனம்—நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக்கொள்வது. | 38·23 | 30·00 | 4·16 | 2·16 | 2·99 | 4·00 | 2·00 | 6·00 |
| 2 | தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசின் பங்கு. | .. | 25·00 | .. | 4·00 | 5·00 | 5·00 | 9·00 | 15·00 |
| 3 | தொழில் மூலதனக் கடனுக்கு வட்டி வகையில் வழங்கப்படும் உதவித் தொகை. | 33·69 | 65·00 | 10·50 | 10·62 | 9·00 | 11·00 | 11·00 | 13·00 |
| 4 | ஆராய்ச்சியும் தொழில் நுட்பமும் .. .. | 67.16 | 68.00 | 6·03 | 2·22 | 2·65 | 5·00 | 3.14 | 4·00 |
| 5 | தள்ளுபடி .. .. .. .. .. | 3,14·52 | 3,25·00 | 64·00 | 64·00 | 84·65 | 65.00 | 90·00 | 90·00 |
| 6 | விற்பனையும் விளம்பரமும் .. .. .. | 30·37 | 61·75 | 7·11 | 7·45 | 6·50 | 7·00 | 7·00 | 7·00 |
| 7 | கூட்டுறவு நூற்பு ஆலைகள் .. .. .. | 1,19·81 | 1,35·00 | 70·00 | 10·20 | 10·00 | 10·00 | 11.90 | 15·00 |
| 8 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 11·93 | 9·75 | 0·04 | 0·11 | .. | 1·35 | 1·50 | 2·00 |
| 9 | வீட்டு வசதி .. .. .. .. .. | 56·13 | 27·00 | 1·22 | 0·08 | .. | .. | .. | .. |
| 10 | உதவித்தொகை—சிக்கனநிதி .. .. .. | 5·16 | 15·00 | 1·80 | 1·80 | 1·89 | 2·25 | 2·25 | 2·75 |
| 11 | பட்டு—செயற்கைப் பட்டு .. .. .. | 8·52 | 13·25 | 9·13 | 4·19 | 0·54 | 2·60 | 1·05 | 1·05 |
| 12 | பயிற்சி .. .. .. .. .. | 3·97 | 11·25 | 1·41 | 1.57 | 1·45 | 2·25 | 2·61 | 4·50 |
| 13 | நிர்வாகப் பணியாளர்களுக்கான உதவித் தொகை. | 3·10 | 5·00 | 0·50 | 0·49 | 0·39 | 1·00 | 1·00 | 1·00 |
| 14 | தலைமைச் சங்கத்திற்கு பங்கு மூலதனம் .. | 12·00 | 12·00 | .. | 2·70 | 0·80 | 3·00 | 1·00 | 3·00 |
| 15 | நிர்வாகச் செலவுகள் .. .. .. .. | 23·50 | 26·00 | 5·46 | 3·96 | 3·60 | 3·49 | 3·49 | 5·00 |
| 16 | நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி. | 5·11 | .. | 0·96 | .. | .. | .. | .. | .. |
| 17 | கைத்தறி நிதி உதவிக் கழகம் .. .. | 12·60 | 5·00 | .. | .. | .. | .. | 7·40 | 5·00 |
| 18 | புள்ளிவிவரங்களைத் திரட்டுதல் .. .. | 4·39 | 5·00 | 1·03 | 1·16 | 1·23 | 1·00 | 1·00 | 1·00 |
| 19 | அரசு நெசவுப் பயிற்சி நிலையத்தின் ஆராய்ச்சிப் பிரிவு. | 0·06 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 20 | நடைமுதல் மூலதனக் கடன்கள் வழங்கிய வகையில் ஏற்பட்ட இழப்பிற்காக மத்திய வங்கிகளுக்கு உதவித் தொகை. | 0·05 | 5·00 | 0·10 | 1·29 | .. | .. | 0·75 | 2·00 |
| 21 | விசைத்தறிகள் .. .. .. .. | .. | 2,16·00 | .. | .. | .. | .. | 6·00 | 25·00 |
| | மொத்தம் .. | 7,50·30 | 10,60·00 | 1,83·45 | 1,18·00 | 1,30·69 | 1 21·94 | 1,61·19 | 2,02·30 |

## இணைப்பு 3-ஆ

### வேலைத் திட்டங்களின் முன்னேற்றம்.

(திட்டக் குறிக்கோள் அளவு.)

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | இனமும் பிரிவும். (3) | மூன்றாவது திட்ட சாதனை. (4) | நான்காவது திட்டக் குறிக்கோள் அளவு. (5) | 1966-67-ல் எய்திய சாதனை. (6) | 1967-68-ல் எய்திய சாதனை. (7) | 1968-69-ல் எய்திய சாதனை. (8) | 1969-70-க்கான எதிர்பார்க்கப்பட்ட சாதனை. (9) | 1970-71-க்கான குறிக்கோள் அளவு. (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ளுதல். | கூட்டுறவு அமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ள தறிகள். | 61,446 | 50,000 | 4,912 | 3,522 | 3,871 | 2,500 | 5,000 |
| 2 | ஆராய்ச்சியும், தொழில் நுட்பமும். | நவீனக் கருவிகள் .. .. | 2,19,392 | 1,50,000 | 22,402 | 6,719 | 8,354 | 8,010 | 8,130 |
| | | சிறிய சாயப்பட்டறைகள் .. | 112 | 150 | 2 | .. | 2 | 5 | .. |
| | | பெரிய சாயப் பட்டறைகள் .. | 1 | 5 | 1 | .. | .. | .. | .. |
| | | பாவு அமைத்து கஞ்சி போடும் இயந்திரம். | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| | | சரிகை இழை தயாரிப்புப் பிரிவு. | .. | 1 | .. | .. | .. | .. | .. |



| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | இனமும் பிரிவும். (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மறைப்புப் படுதா அச்சிடும் (ஸ்க்ரீன் பிரிண்டிங்) இயந்திரம். | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| | | எவர்ஸெட் சுருக்கம் நீக்கும் இயந்திரம். | .. | 1 | 1 | .. | — | .. | .. |
| | | முறுக்கேற்றும் இயந்திரம் | .. | .. | .. | .. | .. | 1 | .. |
| 3 | விற்பனையும் விளம்பரமும் .. | பிற மாநிலங்களில் விற்பனை நிலையங்கள். | 7 | 10 | 2 | — | .. | .. | .. |
| | | பட்டுக் கிடங்குகளும், விற்பனை நிலையங்களும். | 3 | 60 | .. | .. | .. | .. | .. |
| | | ஆயத்த உடைத் தயாரிப்பு தொழிற்சாலை. | 1 | 1 | .. | .. | .. | .. | .. |
| | | கிடங்குகள் (பெரியது) .. | 1 | 2 | .. | .. | .. | .. | .. |
| | | ஏற்றுமதி செய்யத்தக்க துணிவகைகள் உற்பத்திக்கான திட்டம். | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 4 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | பங்கு மூலதன, ஒரு மொத்தத் தொகை மூலதன உதவி. | .. | 1,000 தறிகள். | .. | .. | .. | .. | 2 கூட்டுறவு சங்கங்கள், 400 தறிகள். |
| 5 | வீட்டு வசதி .. .. .. | வீடுகள் .. .. .. .. .. | 1,181 | .. | | | | | |
| | | கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள் .. | .. | 1,000 | .. | .. | .. | | |
| | | நகரப் பகுதிகளிலும் நகரம் போன்ற பகுதிகளிலும் வீடுகள். | .. | 500 | .. | .. | .. | | |

இணைப்பு 3-ஆ—தொடர்ச்சி.

வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் (இட்டிய சாதனை)

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | இனமும் பிரிவும். (3) | மூன்றாவது திட்ட சாதனை. (4) | நான்காவது திட்ட இலக்கு. (5) | 1966-67-ல் எய்திய சாதனை. (6) | 1967-68-ல் எய்திய சாதனை. (7) | 1968-69-ல் எய்திய சாதனை. (8) | 1269-70-க்கான எதிர் பார்க்கப்பட்ட சாதனை. (9) | 1970-71-க்கான குறிக்கோள் அளவு. (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (திட்ட குறிக்கோள் அளவு) | | | | | | |
| 6 | பட்டு—செயற்கைப் பட்டு .. .. | பட்டுத் தறிகள் .. .. .. — | 1,102 | 2,500 | 300 | 300 | 288 | 300 | 300 |
| | | செயற்கைப் பட்டுத் தறிகள் .. — | 100 | .. | .. | .. | .. | .. | .. |
| 7 | பயிற்சி .. — .. .. | துணி மாதிரி தயாரிப்புத் தொழிற்சாலை நெசவாளர்கள். | 821 | 2,000 | 380 | 400 | 377 | 360 | 2,160 |
| | | கணக்கு முதலியன பார்க்கும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள். | 495 | 1,000 | 155 | 229 | 162 | 200 | 200 |
| | | சாயக்காரர்கள் .. .. — .. | 49 | 100 | 20 | 20 | 17 | 20 | 20 |
| 8 | நிர்வாகப் பணியாளர்க்கான உதவித் தொகை. | பயனடையும் சங்கங்கள் — .. | 351 | 500 | 64 | 50 | 54 | 60 | 100 |
| 9 | நெசவாளர்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான கடன் உதவி. | நெசவாளர்கள் .. .. — .. | 3,118 | 7,500 | 723 | .. | .. | .. | .. |



இணைப்பு-3-இ.

தமிழ் நாட்டில் கைத்தறித் தொழில் குறித்த புள்ளி விவரங்கள்.

| தொடர் எண். (1) | இனங்கள். (2) | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. (3) | 1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. (4) | 1968 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. (5) |
|---|---|---|---|---|
| | கூட்டுறவுத் துறையில். | | | |
| 1 | நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.— | | | |
| | (a) பருத்தி .. .. | 842 | 1,049 | 1,028 |
| | (b) பட்டு .. .. | 5 | 20 | 19 |
| | (c) செயற்கைப் பட்டு .. | 1 | 6 | 3 |
| 2 | தறிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) | 1·57 | 2·28 | 2·06 |
| | | | (ரூபாய் லட்சத்தில்) | |
| 3 | பங்கு மூலதனம் .. .. | 72·12 | 1,72·21 | 1,85·13 |
| 4 | சேம நிதி .. .. | 79·77 | 1,77·18 | 1,74·68 |
| 5 | ஏனைய சேம நிதிகள் .. | 30·22 | 82·47 | 52·99 |
| 6 | ஆண்டொன்றுக்கு வழங்கப் படும் ஊதியம். | 1,37·88 | 3,84·17 | 3,84·28 |
| 7 | வசூலிக்கப்பட்ட சிக்கன நிதி | 8·29 | 32·60 | 39·10 |
| 8 | நடைமுதல் மூலதனம் .. | 2,77·86 | 7,96·68 | 8,75·62 |
| 9 | உதவித் தொகை—சிக்கன நிதித் திட்டம்— | | | |
| | (a) பங்கு கொள்ளும் சங்கங்களின் எண்ணிக்கை. | .. | 153 | 150 |
| | (b) உறுப்பினர்களின் எண்ணிக்கை. | — | 9,400 | 87.25 |
| | (c) நிதியிலுள்ள மொத்த தொகை (ரூபாய் லட்சத்தில்). | — | 18·80 | 29·50 |
| | (d) [ 9 (c) ] மொத்த நிதியில் அரசு வழங்கிய பங்கு (ரூபாய் லட்சத்தில்). | — | 6·15 | 9·82 |

## இணைப்பு 3 இ—தொடர்ச்சி.

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | 1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. | 1968 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 10 | உற்பத்தி (ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்)— | | | |
| | (a) அளவு (கெஜம் லட்சத்தில்). | 74·34 | 1,02·00 | 83·94 |
| | (b) மதிப்பு (ரூபாய் கோடியில்). | 8·00 | 13·02 | 11·76 |
| 11 | விற்பனைகள்— | | | |
| | (a) மதிப்பு (ரூபாட் கோடியில்). | 5·91 | 13·03 | 11·56 |
| 12 | பெரிய சாயப் பட்டறைகள் | — | 4 | 4 |
| 13 | சிறிய சாயப் பட்டறைகள் .. | .. | 143 | 143 |
| 14 | நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்— | | | |
| | (a) காலனிகளின் எண்ணிக்கை. | 2 | 36 | 36 |
| | (b) வீடுகளின் எண்ணிக்கை | 65 | 2,683 | 2,683 |
| | (c) நிதி முதலீடு (ரூபாய் லட்சத்தில்). | 1·08 | 1,27·65 | 1,27·65 |
| 15 | நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்— சங்கங்களின் எண்ணிக்கை. | .. | 27 | 27 |
| 16 | மாநிலக் கைத்தறிச் சங்கம்— | .. | | |
| | (a) உறுப்பினர்கள் .. | 999 | 1,083 | 1,164 |
| | (b) பங்கு மூலதனம் (ரூபாய் லட்சத்தில்) | 6·1 .. | 36·25 | 41·06 |
| | (c) துணி கொள்முதல் (ரூபாய் லட்சத்தில்). | 1,36·21 | 3,77·40 | 439·58 |
| | (d) துணி விற்பனை (ரூபாய் லட்சத்தில்). | 1,40·16 | 3,83·22 | 4,14·46 |
| | (e) நூல் கொள்முதல் (பேல்களின் எண்ணிக்கை). | 10,329 | 25,225 | 25,096 |



## இணைப்பு 3 இ—தொடர்ச்சி.

| தொடர் எண். | இனங்கள். | முதலாம் திட்டத்தின் முடிவில் (1956 மார்ச்) உள்ள நிலை. | 1966 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. | 1968 ஜூன் 30-ம் நாள் முடிவில் உள்ள நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (f) நூல் விற்பனை (பேல்களின் எண்ணிக்கை). | 10,671 | 27,504 | 25,398 |
| | (g) சாயப் பொருள்கள் (ரூபாய் லட்சத்தில்). | .. | 33·68 | 35·67 |
| | (h) கச்சாப்பட்டு (ரூபாய் லட்சத்தில்). | .. | 1·13 | .. |
| | (i) சரிகை (ரூபாய் லட்சத்தில்). | .. | 0·11 | .. |
| | (j) செயற்கைப்பட்டு (ரூபாய் லட்சத்தில்). | .. | 5·12 | 0·91 |
| | (k) விற்பனை பிரிவுகளின் எண்ணிக்கை— | | | |
| | மாநிலத்தில் .. .. | 258 | 236 | 249 |
| | மாநிலத்திற்கு வெளியே. | 23 | 110 | 104 |
| | (l) சேமநிதி (ரூபாய் லட்சத்தில்). | 5·15 | 11·76 | 12·17 |
| | (m) நடைமுதல் மூலதனம் (ரூபாய் லட்சத்தில்). | 92·91 | 161·83 | 189·88 |
| | (n) சங்கத்தின் மூலதனத்தில் அரசின் பங்கு (ரூபாய் லட்சத்தில்). | — | 18 | 16 |
| | (o) சங்கத்தின் ஏற்றுமதி | .. | 32,329 | .. |
| 17 | கூட்டுறவு நூற்பு ஆலைகள் | | | |
| | (a) மொத்த நூற்புக் கதிர்கள். | | 1,64,360 | 1,73,256 |
| | (b) ஆண்டு உற்பத்தித் திறன் (பேல்கள் ஆண்டுக்கு). | .. | 66,000 | 66,000 |
| | (c) ஆலைகளுக்கான மொத்த மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்). | .. | 9 | 9 |
| 18 | தமிழ்நாடு கைத்தறி நிதிக் கழகம் கூட்டுறவு அமைப்பில் சேராத நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் (ரூபாய் லட்சத்தில்). | .. | 217 | 130·07 (நடப்பு ஆண்டு.) |

# இணைப்பு 3-ச.

| தொடர் எண். (1) | கூட்டுறவு நூற்பாலையின் பெயர். (2) | உரிமத்திறனளவு (நூற்புக் கதிர்கள்). (3) | அமைப்புத் திறனளவு (நூற்புக் கதிர்கள்). (4) | 1969-ம் ஆண்டில் சராசரியாக, ஒவ்வொரு இயங்கும் முறைக்கும் இயங்கிய நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை. (5) | 1969-ம் ஆண்டில் வேலை செய்த மொத்த நாட்கள். (6) | 1969-ம் ஆண்டில் உற்பத்தி செய்த மொத்த நூல் அளவு (கிலோவில்). (7) | 1969-ம் ஆண்டில் விற்பனை செய்த மொத்த நூல் அளவு (கிலோவில்). (8) | 1969-ம் ஆண்டில் விற்பனை செய்த நூல் மதிப்பு (ரூபாயில்). (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென் இந்திய கூட்டுறவு நூற்பாலைகள் "எ" பிரிவு | 17,600 | 17,600 | 15,984 | 317 | 1,227,223 | 1,199,194 | 92,82,239 |
| | "பி" பிரிவு | 12,096 | 12,096 | 11,882 | 317 | 316,302 | 308,811 | 48,24,105 |
| 2 | திருவல்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை. | 25,088 | 12,544 | 11,601 | 308 | 594,761 | 646,858 | 85,00,856 |
| 3 | திருசெந்தூர் கூட்டுறவு நூற்பாலை. | 25,200 | 16,400 | 12,547 | 300 | 746,235 | 724,377 | 62,50,117 |
| 4 | சேலம் கூட்டுறவு நூற்பாலை | 14,080 | 14,080 | 12,845 | 306 | 409,986 | 443 583 | 51,77,727 |
| 5 | மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,420 | 12,420 | 10,603 | 304 | 1,292,890 | 1,108,538 | 84,55,661 |
| 6 | கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,420 | 12,420 | 10,962 | 334 | 1,458,269 | 1,442,766 | 1,04,02,699 |
| 7 | திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,000 | 12,000 | 11,238 | 327 | 1,223,975 | 1,147,028 | 81,14,418 |
| 8 | கன்யாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,000 | 12,000 | 10,807 | 321 | 1,499,599 | 1,269,225 | 85,61,374 |
| 9 | காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை. | 13,680 | 13,680 | 12,036 | 310 | 353,964 | 336,868 | 38,96,575 |
| 10 | தென் ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,096 | 12,096 | 10,676 | 309 | 357,092 | 363,218 | 37,95,750 |
| 11 | வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 13,824 | 13,824 | 12,183 | 353 | 634,564 | 611,201 | 68,78,538 |
| 12 | தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை. | 12,096 | 12,096 | 11,098 | 349 | 455,237 | 443,365 | 57,87,097 |
| | | 1,94,600 | 1,73,256 | 1,54,462 | .. | 10,570,197 | 10,045,022 | 8,99,36,156 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1970 ஏப்ரல் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடியில் பண மோசடி**

*குறுகிய கால வினா எண் 2.—திரு. டி. மார்டின்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு தீவிர சாகுபடித் திட்டத்தில் சுமார் 80 ஆயிரம் ரூபாய்கள் மோசடி ஏற்பட்டுள்ளதையொட்டி சம்பந்தப்பட்ட விவசாய இலாக்கா அதிகாரி மீது தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) மரவள்ளிக்கிழங்கு நாற்றுகளை சில குறிப்பிட்ட விவசாயிகளிடம் வாங்கியதாகவும் அவற்றில் சிலவற்றை வேறு விவசாயிகளுக்கு விற்பனை செய்ததாகவும் பொய்க்கணக்கு எழுதியதன் விளைவாக சம்பந்தப்பட்ட மாவட்ட விவசாய அதிகாரியின் பேரிலும் அவருக்கு இது விஷயத்தில் உடந்தையாக இருந்ததாக ஒரு விவசாய விளக்குனரின் பேரிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கு தொடருவதற்கு வேண்டிய சாட்சியங்களை ஒழுங்கு கண்காணிப்பு இயக்குநர் மேற்கொண்டு சேகரித்து வருகிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த வழக்கு சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? யாரையாவது தப்பு சாட்சியாக—அப்ரூவராக—மாற்றுவதற்கு இலாக்கா வழிவகை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, மாவட்ட விவசாய அதிகாரி திரு. ஏ. எஸ். பெருமாள் என்பவர்தான் இப்படிப்பட்ட தவறு செய்திருப்பதாகக் கண்டு

பிடிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குத் துணையாக திரு. சி. கே. இரவீந்திரன் என்பவர் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, இப்பொழுது விஜிலன்ஸ் டைரக்டர் அவர்கள் அதுகுறித்து விசாரணை செய்துகொண்டு வருகிறார்கள். இன்னமும் அந்த இயக்குநர் அவர்கள் மேலும் பல சாட்சியங்களைத் தேடிக்கொண்டு புலன் விசாரணை நடத்திக்கொண்டு வருகிறார். யாரும் இதன் மூலமாகக் கைது செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பு இல்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக் கிழங்கு சாகுபடித் திட்டத்திலே ஏற்பட்ட ஊழல் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ரூபாய் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ? அவர்கள் பேரில் தீவிர நடவடிக்கை எடுத்து சரியான தண்டனை கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கிட்டத்தட்ட ரூ. 79,300 இப்படி ஒழுங்கீனமாகக் கையாடல் செய்யப்பட்டதாகக் குறிப்பு இருக்கிறது. அதற்கு வேண்டிய சாட்சியங்களைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். விசாரணை நடத்தியதற்குப்பிறகு, அது உறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு தகுந்த தண்டனை அளிக்கவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தக் கேஸ் சம்பந்தமாக எப்.ஐ.ஆர். கோர்ட்டில் தாக்கல் ஆயிற்று? எப்பொழுது சார்ஜ் ஷீட் செய்யப்படும் என்பதை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து கூறுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விஜிலன்ஸ் அண்டு ஆண்டி-கரப்ஷன் இயக்குநர் அவர்கள் இன்னமும் புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த வழக்கில், அரமனை பஞ்சாயத்துத் தலைவரும் ஈடுபட்டிருப்பதாக வதந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அரசியல் காரணமாக அவர் மீதுள்ள புகார் அதிகமாக விசாரணை செய்யப்படவில்லை என்ற புகார் மக்களிடையே இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறபடியால் யார் யார் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று பிறகுதான் சொல்ல முடியுமே தவிர, யார் யார் என்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை.

### *Book binding centre for physically handicaped*

*655 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :



(a) whether there are proposals under the consideration of the Government to open a book binding centre at Egmore, Madras City for the physically handicapped; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக, 'புக் பைண்டிங்' அல்லது வேறு வகையிலே அவர்கள் தொழிலைக் கற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அரசு நம்முடைய அச்சகத்தில் ஏதாவதொரு பிரிவை ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றோர்க்காக, சென்னை எழும்பூரில் புத்தகம் தைக்கும் நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?" என்ற கேள்விக்கு 'இல்லை' என்று விடையளித்தேன். ஆனால், 'சொஸைட்டி ஃபார் தி வெல்ஃபேர் ஆஃப் தி ஹாண்டிகேப்டு' என்று சொல்லப்படுகிற ஊனமுற்றவர்களுடைய நல்வாழ்வுக்காக இருக்கும் கழகம் இப்பொழுது ஊனமுடையவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அது திட்ட அளவில் இருக்கிறது; இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால், அப்படியொரு நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தக் கழகத்திற்கு இருந்து வருகிறது.

### இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள்

*656 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளநிலை (Lower Grade) உடற்பயிற்சி ஆசிரியருக்குரிய பயிற்சிப் பிரிவை எடுத்துவிடும் கருத்து அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள், வேலைக்குச் செல்ல முடியாத நிலையும், வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாத நிலையும் இருந்து வருகிறது. ஹையர் கிரேடு பயிற்சிபெற்ற ஆசிரியர்களை மட்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒன்று—இளநிலை உடற்பயிற்சியையே எடுத்துவிடவேண்டும்; அல்லது

அத்தகைய பயிற்சி பெற்றவர்களுக்கு ஏதாவது விழுக்காடு அடிப்படையில் வேலைவாய்ப்புத் தர ஆவன செய்யவேண்டும். இரண்டில் எதை அரசு செய்ய முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது உடற்பயிற்சி இளநிலை (லோயர் கிரேடு) பிரிவை எடுத்துவிடும் யோசனை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற சிக்கல்கள் அங்கே இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும். பயிற்சிபெற்ற எத்தனை இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமலிருக்கிறது அந்தப் பயிற்சியை நீக்கிவிடத்தான் வேண்டுமா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் முடிவு எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட குறிப்புகள் எதும் இப்பொழுது வரவில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** இளநிலைப் பயிற்சிபெற்றவர்களை ஊராட்சி ஒன்றியங்களின்கீழுள்ள உயர்தொடக்கப் பள்ளிகளில் ட்ரில் மாஸ்டர்களாக வேலைக்கு அமர்த்தும் திட்டம் அரசுக்கு உண்டா? பல ஊராட்சி ஒன்றிய உயர்தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாக இருந்தும் உடல் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இத்தகைய இளநிலை உடற்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அங்கே அமர்த்துவதன்மூலம் வேலைகிடைக்கவில்லை என்ற குறை நீங்கக்கூடும். ஆகவே, இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலில் குறிப்பிட்டபடி, இத்தகைய பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களை எங்கெங்கே வேலைக்கு அமர்த்தமுடியும் என்பதையும் கண்டறிந்தபிறகுதான், பரிசீலித்து தக்க முடிவு எடுக்க வேண்டும்.

*Effluence from Padalam Sugar Mills.*

* 657 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the industrial waste of sugar mill at Padalam in Chingleput taluk is not treated properly and is causing inconvenience and creating insanitary conditions to the villagers surrounding that area;

(b) whether the sugar mill authorities are constructing a well in Palar river near the mill; and

(c) whether it is a fact that the well water of the surrounding villages have been affected because of the industrial waste of the sugar mill?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) செங்கற்பட்டு மாவட்டம் படாளத்திலுள்ள மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் தொழிற்சாலைக் கழிவுப் பொருள் (Effluent) இரசாயன முறையில் பாகுபாடு செய்து வெளியில் அனுப்பப்படுவதில்லை.

(இ) ஆம்.

(உ) இல்லை.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, படாளத்திலுள்ள இந்தச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர், அங்கே காற்றின் தன்மையை அசுத்தமாக்கி துர்நாற்றத்தை உண்டாக்குகிறது. அதோடு கூட, கழிவு நீரை ஆற்றில் விடுவதன் காரணமாக, அது ஆற்றின் தரையில் ஊறி, ஸீப்பேஜ் மூலமாக சுற்றியுள்ள பல கிராமங்கள், நகரங்களிலுள்ள கிணற்று நீரை அசுத்தப்படுத்தி, ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது. ஆகவே, இந்தக் கழிவு நீர் சரி செய்யப்பட்டு, ட்ரீட் செய்யப்பட்டுத்தான் விடப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து அதற்கு உண்டான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சாதாரணமாக கெமிகல்ஸ் தொழிற்சாலை போன்றவற்றிலிருந்து வெளிவரும் கழிவுநீர் நச்சுத்தன்மை பொருந்தியதாக இருக்கும். அதை ‘மாற்று’ செய்து பக்குவப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், வெளிவருகின்ற கழிவு நீர் அப்படிப்பட்ட கொடுமைகளை உண்டாக்கும் சூழ்நிலையில் இல்லை. வெளியே வரும் தண்ணீரை 200 அடிக்கு அப்பாலுள்ள ஒரு குழிக்குக் கொண்டு போகிறார்கள். அது கூட, கற்களால் இருபக்கமும் கட்டப்பட்ட வாய்க்கால் மூலம் கொண்டு போகப்பட்டு, அங்கிருந்து பம்ப் செய்யப்பட்டு, தொழிற்சாலைக்குச் சொந்தமான 32 ஏக்கரா நிலத்தில்தான் பாய்ச்சப்படுகிறதே தவிர, அந்த 32 ஏக்கராவைத் தாண்டி வேறு எந்த நிலத்திற்கும் இந்தக் கழிவு நீர் பாய்வது இல்லை. 32 ஏக்கராவிற்குப் பாயும் அளவுக்குத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக, வேறு இடங்களில் போய்ப் பாய்கிற சூழ்நிலை ஏற்படவில்லை. ‘மோலஸஸ்’ ஏழு குழிகளில் நிரப்பப்படுகின்றன. அந்த ஏழு குழிகளில் மூன்று குழிகள் கட்டடம் கட்டப்பட்டவை; நான்கு மண் குழிகள். பெரு மழை பெய்து எங்கு பார்த்தாலும் வெள்ளம் அடித்தபோது, மொலாஸஸுக்காக உள்ள குழிகளில் நீர் நிரம்பி, வழிந்து வேறு பல இடங்களில் பரவும் சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குப்பிறகு அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை. பக்கங்களில் இருக்கும் கிணற்றுத் தண்ணீர் இதனால் பாதிக்கப்படவில்லை என்று மாவட்ட சுகாதார அதிகாரியும் மற்றவர்களும் ஆராய்ந்து பார்த்ததில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கிராம மக்களேகூட, நீருக்காக இருக்கும் இரண்டு பெரும் கிணறுகள் இதன் காரணமாகப்

பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்ததுபற்றிய குறிப்புதான் இங்கே தரப்பட்டிருக்கிறது.

திரு. என் வரதராஜன்: இப்படி சில முக்கியமான தொழிற் சாலைகளின் கழிவுநீர் வெளியேறி விவசாயத்தைப் பெரிதும் பாதிக்கிறது. ஆகவே இனி லைசென்ஸ் கொடுக்கிறபோதே விஞ்ஞான முறையில் கழிவு நீரை நல்ல நீராக மாற்றித்தான் வெளியேவிட வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: விவசாயத்தையோ, கிராம குடிதண்ணீர் வசதியையோ பாதிக்காத வகையில்தான் கழிவுநீர் வெளியேற்றப்பட இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த இடத்தில் கூட 10 அடி வட்டமுள்ள கிணறு தோண்டி விடவும், வறண்டு கிடக்கிற வாய்க்கால் வழியே செலுத்தவும் நடவடிக்கை எல்லாம் எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 658, 659, 660 பின்னால் எடுத்துக்கொள்ளப்படும்.

சி. சாத்தமங்கலம் அரிசன நலப்பள்ளி கட்டடம்

*661 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, சி. சாத்தமங்கலம் கிராமம், அரிசன நலப்பள்ளிக் கட்டடம் கட்டி முடித்த தேதி என்ன?

(இ) மேற்கண்ட கட்டடத் திறப்பு விழா நடந்த தேதி என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) 30—9—1967-ல் தற்காலிகக் கூரை ஒன்று மட்டும்தான் ஐந்தாயிரம் ரூபாயில் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) குறிப்பிட்ட ஒரு திறப்பு விழா எதுவும் நடைபெற வில்லை.

திரு. எஸ். சிவசுப்ரமணியன்: இது போன்ற சாதாரண கொட்டகை கட்டுவதனால் மழைக் காலங்களில் வீணாகிவிடுகிறது. நல்லதொரு கட்டடம் கட்ட நம் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாவட்ட அரிசன நல அதிகாரி இதுபற்றி சர்க்காருக்கு ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார். இதுபற்றி கவனிக்கப்படும்.

*662 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் தேவங்குடி கிராமம், கடலூர் வட்டம், வரக்கால்பட்டு கிராமம் ஆகியவற்றில் ஹரிஜன காலனி அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமான புகார்கள் அரசுக்கு ஏதாவது வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம்

திரு. சி. கோவிந்தராஜன்: அப்படிப்பட்ட புகார்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது? அரிசனங்களுக்காக வீடு கட்டுவதற்கு ஸ்பெஷல் தாசில்தார் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அந்த இடத்திற்குச் சொந்தமான பெரிய நிலச்சுவாந்தார் மறுப்பதன் காரணமாக வேறு இடத்திற்கு மாற்ற ப்ரபோசல் செய்கிறார்களே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: என்னிடத்தில் உள்ள குறிப்பில் இருதரப்பாரும் மாறிமாறி புகார் செய்து கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. அரிசனங்களுக்கு காலனி அமைக்க நான்கு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கின்றன. ஒன்று இடத்தைவிட நிலக்காரர்கள் மறுக்கிறார்கள். இல்லை என்றால் அரிசனங்கள் அந்த இடம் வேண்டாம் என்று மறுக்கிறார்கள். இதனாலேயே காலதாமதம் ஏற்படுகிறது.

குறிப்பாக முதலில் சர்வே நம். 145-1, 142-2, 3, 149-4-ஏ ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இரண்டாவதாக சர்வே நம். 91-1, 92-2, 94-2 ஆகிய இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்த இடத்திற்குப்போக அரிசனங்கள் மறுத்து விட்டார்கள்.

மூன்றாவதாக சர்வே நம். 130-1, 130-2 ஆகிய இடம் தேர்ந் தெடுக்கப்பட்டது. இந்த இடத்திற்குப்போகவும் மறுத்து விட்டார்கள். இது எல்லாம் பனங்காட்டைச் சேர்ந்தது.

அடுத்து விருத்தாசலம் வட்டம் தேவங்குடி கிராமத்தில் சர்வே நம். 11-1, 2, 3, 4, 5 ஆகிய இடங்களை மொத்தம் 2.98 ஏக்கரா நிலத்தை எடுக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. நிலக் காரர்களிடம் இருந்தும் பல எதிர்ப்புகள் வந்தன. ஆயினும் பரிசீலனை செய்ததில் ஆட்சேபணைக்குக் காரணம் இல்லை என்பதாக இப்போது முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. பி. வேலுசாமி: அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப் பதிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தென்னாற்காடு மாவட் டத்தில் மனைக்கட்டு வழங்குவது பற்றிய கேள்வி. வீடு கட்டுவது அல்ல.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறிப்பிட்ட இடத்தை எடுக்க நிலக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். கட்டாய ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, எதிர்க்கி றார்கள் என்று கைவிடுவானேன்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நிலக் காரர்கள் மறுக்கிறபோது, அங்கே குடியேறினால் தங்களுக்கு என்ன கெடுதி ஏற்படுமோ என்று அரிசனங்களும் அங்கே குடியேற அஞ்சுகிறார்கள். ஆகவே நிலக்காரர்கள் எதிர்ப்பையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** அரிசனங்களுக்கு மனைநிலம் ஆர்ஜிதம் செய்கிறபோது நிலக்காரர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். வழக்கு முடிய 3 வருடம், 4 வருடம் ஆகிவிடுகிறது. ஸ்டே கொடுத்தால் மூன்று, ஆறு மாதங்களுக்குள் முடியவேண்டும் என்று சொல்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படி இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் 700 வழக்குகளுக்கு மேல் இருந்தன. இந்த அரசாங்கம் வந்த பிறகு வழக்குகளை துரிதப்படுத்தவேண்டும் என்று சொல்லியதன் காரணமாக பல வழக்குகள் முடிந்துவிட்டன. ஒருசில வழக்குகள் இருக்கின்றன. அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

**திரு. நா. வீராசாமி :** நில ஆர்ஜிதம் செய்யும்போது நிலத்திற்கு ஈடாக கடைசியாக ரிஜிஸ்தர் செய்த விலை கொடுப்போம் என்கி றார்கள். நிலக்காரர்கள் அன்றைய மார்க்கெட் விலை கேட்கி றார்கள். இப்போது அரசாங்கமே அங்கங்கே ஒரு விலை நிர்ண யித்து வருகிறது. இந்த விலை அடிப்படையில் நஷ்டஈடு கொடுக்க முன்வந்தால் எவ்விதத் தகராறும் ஏற்படாது. அப்படி செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து :** இதுவரை விலையைப்பற்றி எந்தவிதமான புகாரும், எதிர்ப்பும் தெரிவிக்கப்பட வில்லை.

சும்மாக் கிடக்கிற நிலத்தை எடுக்க நடவடிக்கை எடுத்த வுடனேயே வாழை போட்டுவிடுவது, தென்னை போட்டுவிடுவது,— பச்சைப் பசேல் என்று இருக்கிற இந்த இடத்தை எடுக்கக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிப்பது, சட்டமன்ற உறுப் பினர்களே வந்து ஸ்டே கொடுக்கவேண்டுமென்று கேட்பது என்ப தாகத்தான் இருக்கிறதே தவிர—விலையில் புகார் இல்லை.

**திரு. சி. கோவிந்தராஜன் :** வரக்கால்பட்டு அரிசன மக்கள் காலனியில் மழைக்காலத்தில் பெண்ணையாறு வெள்ளம் பாய்ந்து விடுகிற காரணத்தினால் வேறு இடம் வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் சரியான மேடான இடத்தைத்தான்



எடுத்தார்கள். அந்த நிலச்சுவான்தாரர் ஆட்சேபித்தார் என்பதற் காக திரும்பவும் வேறு ஒரு இடம் எடுத்தார்கள். அது முன்பு இருந்த இடத்தைவிட பள்ளமானது என்பதனால் அரிசன மக்கள் வேண்டாம் என்றார்கள். திரும்பவும் எடுத்த இடம் பரியல் க்ரவுண்டாக இருந்த காரணத்தினால் அதற்கு அப்பால் வேறு ஒரு இடத்தை எடுக்கச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி போடவேண்டும். விளக்கம் தேவையில்லை, கேள்வி என்ன? துணைக் கேள்விகள் எத்தனை கேள்விகள் போடுவது? கேள்விகள். அதுவும் துணைக் கேள்விகள், கேட்கின்ற நேரத்திலே அங்கே நடந்திருக்கின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும்பற்றிச் சொல்வ தற்காகப் பயன்படுத்தக்கூடாது. குறிப்பிட்ட கேள்வியைப்பற்றி மட்டும் சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** முதலிலே குறிப்பிடப்பட்ட வரக்கால்பட்டு கிராமத்திலே கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றி ஒரு குறையும் இல்லை. இருந்தாலும் அவர்கள் போக மறுத்தார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட தேவன்குடி கிராமத்தினைப் பொறுத்தவரையில் கனம் கோவிந்த ராசன் அவர்களே ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அவர்கள் கூறியது நியாயமற்றது என்று நாம் மீண்டும் புனர் பரிசீலனை செய்துவிட்டுத் தெரிவித்தோம். அந்த இடத்தையும் மறுக்கி றார்கள். கனம் அங்கத்தினர் போன்றவர்கள் ஒத்துழைத்தால் அந்த இடத்தை எடுத்துக் கொடுப்பதில் காலதாமதமோ வழக்கோ ஏற்படாது.

### திருமயம் வட்டத்திலுள்ள அரிசன குடியிருப்புகள்

*663 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, திருமயம் வட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள அரிசனக் காலனிகளில் குடியிருக்க முடியாமல் இடிந்து போனவை எத்தனை? எங்கெங்கே?

(இ) அவற்றைச் சீர்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) மேலதானியம் கிராமத்திலுள்ள ஒரு குடியிருப்பில் ஆறு வீடுகள் இடிந்து போய்விட்டன.

(இ) இதற்கான கோரிக்கை எதுவும் அக்குடியிருப்பு வாசி களிடமிருந்து வரவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு ஆட்சி செய்த நேரத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட அரிசனக் காலனிகள் உள்ள வீடுகள் இடிந்திருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? காலனியில் உள்ள வீடுகளைக் கட்டியவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கடந்த காலத்தில் கட்டப்பட்ட வீடுகளில் சில வீடுகள் இடிந்துவிட்டதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. அதற்காக யார்மீதும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கவில்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை அரிசன மக்களேதான் பாதுகாக்க வேண்டும். வீடுகளைச் செப்பனிடுவதுகூட அவர்களுக்குப் பொறுப்பில்லாமல் அதைக்கூட அரசாங்கமே செய்து கொடுக்கின்ற நிலையில்லை. ரிப்பேர் செய்துகொடுப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இல்லை. கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பாதுகாத்துக் கொள்வது அவர்களுடைய பொறுப்பாகும்.

*Loans given to agriculturists in Krishnagiri taluk.*

* 664 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the amount given as loan to agriculturists under the package scheme of A.D.T. 27 paddy in Krishnagiri taluk in Dharmapuri district in the year 1967–68 and the paddy yield increase consequently?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மும்முர எருவிடும் திட்டத்தின் கீழ் நெல் பயிரிட 1967-68-ம் ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டத்திற்கு ரூ. 11,00,000 பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஆடுதுறை மற்றும் ஏனைய நெல் ரகங்களைப் பயிரிட ரூ. 8.97 லட்சம் வரை தருமபுரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி கடனுகவும் கொடுத்தது.

2. கடன் வழங்கியதன் மூலம் ஆடுதுறை 27 நெற்பயிர் முதல் போகத்தில் மொத்த உற்பத்தி அதிகரிப்பு 2,500 டன் என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் மதிப்பிடப்பட்டது. இந்தப் பகுதியில் மழை பெய்ததன் காரணமாக, இரண்டாம் போகம் விளையவில்லை.

Thiru B. VENKATASWAMY: Is it not a fact that 50 per cent of the poduction was decreased in Krishnagiri project area in 1967–68 because peasants were forced to plant ADT 27 where ADT 27 is not suited to that area since it contained more alkalinity? If so, may I know the 'value-loss' that occurred to the ryot due to the ADT 27 plantation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படி நஷ்டம் இருப்பதாக அரசாங்கத்திடம் எந்தவிதமான குறிப்பும் இல்லை.





கோயம்புத்தூரில் வானொலிப் பெட்டிகள் உற்பத்தி

* 665. வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவையில் ரேடியோ தொழிற்சாலை ஒன்று தனியார் துறையில் தொடங்கப்படவிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(உ) அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

Thiru K. VINAYAKAM: Is it not a fact that one industrialist by name Mr. G. D. Naidu is supposed to have constructed a radio set called 'People's Radio' at a cost of Rs. 25 per set? If so, would the Government think of the possibility of ordering these sets from the industrialist so as to use them in Government sector, whereever panchayat unions are to be supplied with rural sets?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி புதிய தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறதா என்பது. இல்லையென்று சொன்னேன்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே தொடங்குகின்ற முயற்சி இல்லையென்றாலும் வானொலியின் மூலம் விவசாய அறிவும், பொது அறிவும் பெறுகின்ற நிலை பரவலாக மக்களிடம் இருக்கின்ற காரணத்தினாலே அரசே வானொலிப் பெட்டிகளை உற்பத்திசெய்கின்ற தொழிற்சாலையை தமிழ்நாட்டிலே துவக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் உறுப்பினர் விநாயகம் சொன்னதைப்போல் இப்பொழுதே வானொலிப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. புதிய தொழிற்சாலை பற்றி அவர்கள் கேள்வி கேட்டார்கள். இல்லை என்று சொன்னேன். நம் நாட்டிலே இப்பொழுதே பலவிதமான வானொலிப் பெட்டிகள் இருக்கத்தான் செய்கின்றன.

Thiru K. VINAYAKAM: When the Congress Party was in power Mr. G. D. Naidu was complaining that the Government was not making use of his talent, supposed talent, in manufacturing these sets and the party which is in power now was then championing his cause. Now that you are in power, why can't you utilise his supposed talents which you have elaborated and propagated in those days?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் அறிவாற்றலை இப்பொழுதாவது கனம் அங்கத்தினர் அவர்கள்

[1970 ஏப்ரல் 3

சொன்னது மகிழ்ச்சிக்குரியதாகும். அவர்கள் சொன்னது தவறாகும். இந்த அரசாங்கம் அப்படிச் செய்யவேண்டுமென்று எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் தங்களுடைய சட்டத்தாலோ அல்லது வரியினாலோ கொடுமைப்படுத்துகிறது, தொழில்கள் தொடங்க அனுமதி மறுக்கிறது என்று சொன்னார்கள். ஒருவேளை போராட்ட காலத்திலே திரு. விநாயகம் அவர்கள் வந்திருக்கின்ற காரணத்தினாலே அப்படிக் கேட்கலாம். அதுகூட மத்திய அரசாங்கத்தை அவர்கள் கேட்க வேண்டும்.

நீதிமன்றங்களை அவமதிப்பது குறித்த மசோதா

*666 வினா.—திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீதிமன்றங்களை அவமதிப்பது குறித்த மசோதா மீது நாடாளுமன்றத்தின் கூட்டு ஆய்வுக் குழு சென்னை மாநகரிலும், தமிழ்நாட்டின் பிற இடங்களிலும், அண்மையில் விசாரணை நடத்தியபோது அதன்முன் தமிழ்நாடு அரசு தனது கருத்துக்களை அளித்ததா?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

நிலவள வங்கிகள்

* 667. வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்:
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வை. சுவாமிநாதன்
திரு. எம். முத்தையா.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நிலச் சீர்திருத்தம் செய்யும் விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து Land Development Banks ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தின் பல்வேறு வட்டாரங்களில் 60 நிலவள வங்கிகள் தொடங்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் குறித்த விவர அறிக்கை[a] ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது. தலைவர் அவர்களே, இந்த விடை தயாரிக்கப்பட்ட பின்னர் மேலும் 7 நிலவள வங்கிகளைத் தொடங்கப் போவதாக அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

---

[a]278–281-ம் பக்கங்களில இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1970 ஏப்ரல் 3]

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குச் சுலபமான முறையில் கடன்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்? பாங்குகள் மூலம் இப்பொழுது கடன் பெறுவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே விதிகளைச் சுலபமாக்கி சீக்கிரமாகக் கடன் பெறக்கூடிய முறையை அரசாங்கம் உடனடியாகக் கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நிலவள வங்கிக்கான பைலா, துணைவிதிகள் பிரத்யேகமாக, தனியாக, தயாரிக்கப்பட்டு, அவைகளைப் புதிய நிலவள வங்கிகள் ஏற்றுக்கொண்டு இக்கின்றன. சுலபமாகக் கடன்கள் பெறக்கூடிய வகையிலேதான் துணைவிதிகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, 7 இடங்களில் நிலவள வங்கிகள் தொடங்கப்போவதாகச் சொன்னார்கள். 7 இடங்கள் யாவை என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார்: ஏழு இடங்கள் எவை என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. க. கோமதிசங்கரதீட்சிதர்: தலைவர் அவர்கள், விவசாயிகள் விவசாயிகள் நில அடமான பாங்குகளின் மூலமாக லோன் வாங்குவதற்காக அப்ளை செய்து ஆறுமாதம், எட்டுமாதம் வரை காத்திருந்து அதனால் பயன் பெறாமல் இருப்பதால் நில அடமான பாங்கிகள் கடன் கொடுப்பதை எளிதிலே விவசாயிகள் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது நில அடமான பாங்குகளைப் பற்றி, அதிலே அவ்விதம் இருந்தது. விவசாயிகள் கடன் பெறுவதிலே சங்கடங்களையெல்லாம் அனுபவித்தார்கள். அதையெல்லாம் போக்குவதற்காக நில்வள வங்கிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்கான துணைவிதிகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, இந்தப் புதிதாகத் தொடங்கப்படுகிற நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டம் சேர்க்கப்படவில்லையே என்ன காரணம்? தஞ்சை மாவட்டத்திலே நிலவள வங்கிகள் வேண்டுமென்ற ஆர்வம் விவசாயிகளிடத்தில் இல்லையா? அரசாங்கம் அதற்காக என்ன யோசனை செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நேற்று கூட்டுறவு மானிய விவாதத்திலே நண்பர் சுரேந்திரன் இதே கேள்வியை எழுப்பினார்கள். நிலவள வங்கிகள் தொடங்குகிறபோது எங்கே வளம் குறைவாக இருக்கிறதோ அங்கே முதலிலே தொடங்க

வேண்டுமென்ற வகையில் புஞ்சைப் பகுதியிலே தொடங்குகிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் வளம் உள்ளதாக இருக்கிற காரணத்தினாலே இனிமேல் தொடங்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தஞ்சையைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை வளமான பகுதி. ஆனால் வடஆற்காடு மாவட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். வடஆற்காடு மாவட்டத்திலும் நிலவள வங்கிகள் ஒன்றுகூட துவங்கப்பட இல்லையே? என்ன காரணம்? எந்த அடிப்படையிலே அவை ஆரம்பிக்கப்படுகின்றன? ஏன் வடஆற்காடு மாவட்டத்திலே ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உறுப்பினர் அவர்கள் அவர்களது வட்டாரத்தில் ஒரு நிலவள வங்கியைத் தொடங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதன் அடிப்படையைச் சொல்லப் போனால், இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. இந்த ஆண்டு வடஆற்காடு மாவட்டம் இடம் பெறும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கன்னியாகுமரி ஜில்லாவில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய விளவங்கோடு தாலுக்காவில் இப்படிப்பட்ட வங்கி ஒன்று திறப்பதற்கு ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அப்படியிருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கனவே கன்னியாகுமரி ஜில்லாவில் இரண்டு இருக்கின்றன. ஒன்று நாகர்கோவிலில், மற்றொன்று, தக்கலையில், இப்போது மூன்று வட்டாரங்களில் புதியதாகத் தொடங்கப் பெற்றது. இந்த வருடம் பாக்கியுள்ள வட்டாரங்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு, வங்கிகள் தொடங்கப்படும்.

திரு. பி. எஸ். மணியன்: மதுரை மாவட்டத்தில் ஒரு இடத்தில் கூட நிலவள வங்கி துவங்கப்படவில்லை. ஆகவே வறட்சியான பகுதியிலாவது உடனடியாக நிலவள வங்கி திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மதுரை மாவட்டம் அடுத்த கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, if some educated unemployed people join together and want to start agriculture on poramboke lands available in various parts of the State, what help do the Government provide for them to startt agricultural colonies?



THE HON. THIRU SI. PA. ADITANAR: This question does not relate to agricultural colonies or poramboke lands. The question is about land development banks.

THIRU T. MARTIN: In our State there is an allergy for big people to enter into the co-operative department, because the responsib lity for any defalcation is constructively placed on the President or office bearers.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலவள வங்கி பற்றிக் கேளுங்கள்.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state whether the Department will put a cashier who will be responsible for defalcations and also for keeping of correct accounts?

THE HON. THIRU SI. PA. ADITANAR: In the Land Development Bank Act which was passed last year, the Government have made provision more or less on the lines indicated by the hon. Member.

மத்திய கூட்டுறவு நிலவள வங்கியின்றால் கோரப்பட்ட உறுதிமொழி

*668 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு மத்திய கூட்டுறவு நிலவள வங்கியினர் தங்கள் கடன் ஈட்டுப் பத்திரத்துக்கு 75 கோடி ரூபாய்க்கு அரசிடம் உறுதிமொழி கேட்டுள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1970 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) அரசின் உத்தரவாதத்தை ரூ. 75 கோடிக்கு உயர்த்தி, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

அருப்புக்கோட்டை கூட்டுறவு நிலவள வங்கி ஊழியர்கள்

*669 வினா—திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை கூட்டுறவு நிலவள வங்கி [-D.R.L-(S) Ltd] ஊழியர்களிடமிருந்து 8—1—1970-ம் தேதியிட்ட விண்ணப்பம் அரசாங்கத்திற்கும், அமைச்சரவர்களுக்கும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* (அ) ஆம்.

(இ) புதிய ஆரம்ப நிலவள வங்கிகளில் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கையில் பழைய வங்கிகளிலுள்ள உபரி ஊழியர்களுக்கு முன் உரிமை அளிக்க வேண்டுமென்று அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.

*Delivery van owned by Super Market at Vellore*

* 670 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the "Karpagam" Co-operative Super Market run by the North Arot District Co-operative Supply and Market-Society Limited, Vellore owns a van guard delivery van; and

(b) whether the vehicle is used by the Deputy Registrar-General Manager for his personal use?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* (அ) ஆம். சாக்குகள் விநியோகிக்க வண்டி ஒன்று இந்தச் சிறப்பங்காடிக்குச் சொந்தமாக உள்ளது.

(இ) இல்லை. அவ்வண்டி மானேஜரால் அலுவலகக் காரியங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

*திரு. கே. விநாயகம்:* சிறப்பங்காடிக்குச் சொந்தமான வண்டியை மானேஜர் அவர்கள் அலுவல் காரணமாகப் பயன்படுத்துவதில் எவ்வித அபிப்பிராயபேதமும் இல்லை. ஆனால் அது முடிந்த பிறகு இரவிலும், மாலை நேரத்திலும் அவர்கள் தன் சொந்தக் காரியங்களுக்காக அதைப் பயன்படுத்துகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அங்கேயும் புகார் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அமைச்சர் அவர்கள், இல்லை என்று சொல்லிவிட்டார்கள், அதற்குப் பிற்பாடு அதையே கேட்கலாமா?

THIRU K. VINAYAKAM: Is it God's truth? Should I not pry into the secret and try to pull out the answer? He says 'No'. Am I to take it as God's truth? That is not the intention of the question hour.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குக் கொடுக்கிற அறிக்கைகள், கருத்துக்கள் இவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் உண்மை, அதுதான் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பது ஒரு மரபு. அது தவறாக இருந்தால் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள், இன்ன நேரத்தில் இன்ன இடத்தில் எடுத்துக் கொண்டு போனார்கள் என்று சொல்ல உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. உங்கள் கேள்வியில், அங்கே புகார் செய்கிறார்கள், அப்படிப்



பேசப்படுவது உண்மையா என்று கேட்கிறீர்கள். இன்ன நேரத்தில் இன்ன இடத்தில் இன்ன காரியத்திற்காக எடுத்துக் கொண்டு போனார்கள் என்று விநாயகம் அவர்கள் சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM: I can be more pungent. I will now level a charge against the person concerned. He is taking his children, wife and other members of his family to the cinemas every day in the evening. What is the answer? I wanted to put it in polished language.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அமைச்சர் அவர்களிடமிருந்து விடையை, உண்மையை வாங்குங்கள். அதற்குக் குறுக்கே நான் நிற்கவில்லை. ஆனால் உங்கள் கேள்வியில் நீங்கள் 'துணைப்பதிவாளர்—பொது மேலாளரால் அந்த வண்டி அவர்து தனிப்பட்ட காரியங்களுக்கெனப் பயன்படுத்தப்படுகின்றதா?' என்று கேட்டிருக்கிறீர்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். அப்படி 'இல்லை' என்று சொல்லிவிட்ட பிறகு அப்படிப் பரவலாகப் பேசப்படுகிறது, புகார் இருக்கிறது என்று சொல்லக் கூடாது. இன்ன இடத்தில் இன்னார் இன்னாரை ஏற்றிச் சென்றார்கள், இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று கேளுங்கள். 'இல்லை' என்று சொல்லிவிட்ட பிறகு புகார் இருக்கிறது என்று சொல்வது முறையல்ல. இருக்கிற உண்மையை எடுத்துக் காட்டி இது தெரியுமா என்று கேளுங்கள். அதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM: I am not trying to scratch you on the wrong side. I always put questions in order having been trained properly. Please don't imagine for a moment that I am digressing from the rules. I wanted to be polished. I could have said that I have particulars in my possession and I shall give them to him. Then you will say "Give it to me in writing. I will enquire" and all that. Let him answer whether this van is not being used for his private purposes like going to the pictures and carrying his children to, and bringing them back from, the school.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Complaints were received and enquiries were made. All that was found was that the Manager, who is no longer the Manager, did not keep the trip sheets in a proper manner. There were omissions regarding details in the trip sheet. Action has been taken with regard to these omissions.

THIRU K. VINAYAKAM: I thank you very much.

*திரு. ரா. கனகசபை:* அலுவலகத்திற்குப் போகும்போது அல்லது வரும்போது சொந்த வேலைகளைக் கவனித்தால் அது குற்றம் என்று மந்திரி அவர்கள் கருதுகிறார்களா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* கூடுமானவரையில் சொந்த வேலைகளைத் தனியாகவும், அலுவல் வேலைகளைத் தனியாகவும், வைத்துக் கொள்வது நல்லது. இது வான், இது கார் அல்ல.

*Notifications of Co-operative Department*

*671 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether out-dated postings of the Co-operative Department issued several months ago have been published in the issue of *Fort St. George Gazette*, dated 11th December 1968; and

(b) how this mistake crept in the Gazette?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) 1968-ம் வருடத்தில் தமிழ் நாடு அரசிதழில் அவசர முக்கியமான அறிவிப்புகள் வெளியிடவேண்டியிருந்தது என்றும் எனவே கூட்டுறவுத் துறை அறிவிப்புகள் காலதாமதமாக வெளி வந்தன என்றும் அச்சுத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

THIRU K. VINAYAKAM: What steps have been taken to punish the offender for having committed the mistake and what steps will be taken to see that such mistakes do not occur in future?

THE HON. THIRU SI. PA. ADITANAR: The question of delay was in fact examined, and the explanation given by the Director of Stationery and Printing was that there was an unusual rush of notifications regarding land acquisition cases to be published in the Gazette and that, unless those notifications were published urgently, loss was likely to occur. In view of that, he had to delay certain other publications which were not regarded as urgent as the other ones which were given precedence by the Director.

*Deputy Registrars of Co-operative Societiee*

*672 Q.—THIRU K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to take back the recruitment of Deputy Registrar of Co-operative Societies from the purview of the Tamil Nadu Public Service Commission; and

(b) if so the reasons therefor?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

*குற்றாலத்தில் சந்தன மரங்கள் வளர்ப்பு*

*673 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள குற்றால மலையில் சந்தன மரங்களை வளர்க்க ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?



(இ) தற்பொழுது, குற்றால மலையில் என்னென்ன பயன்மிக்க மரங்கள் வளர்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை. எனினும் குற்றாலம் சரகத்தில் ஒரு ஹெக்டர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. ஒரு சோதனை முறையாக இந்த சந்தன மரங்கள் செயற்கையாக வளர்க்கப்பட்டன. இந்தச் சோதனைகளின் மூலம் கிட்டும் முடிவுகளின் அடிப்படையில் குற்றாலம் மலைகளில் சந்தன மரங்கள் வளர்க்கப்படும்.

(இ) காடுகளில் தேக்கு, வேங்கை, நாக்குமரம், மத்தி, வாகை ஆகிய மரங்கள் ஆங்காங்கே இயற்கையாகவே காணப்படுகின்றன. தேக்கு மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவை வளர்ந்து முற்றின மரங்களான பின் அவை வெட்டப்படும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: குற்றால மலையிலே சந்தன மரங்களை வளர்த்தால் தமிழகத்திற்கு மிகுந்த பயனும் கிடைக்கும், அதற்கான தகுதியும் அந்த மலையில் இருக்கிறது. அரசு ஆவன செய்ய முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இப்போது சோதனையாக ஒரு ஹெக்டார் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பொதுவாக சந்தன மரங்கள் வளர ஈர இலையுதிர் காடுகள் பிரயோசனப்படாது; உலர்ந்த இலையுதிர் காடுகள் தேவை. இப்போது செய்யப்படுகின்ற பரிசோதனையில் இருந்து வெற்றிகரமாக இருந்தால் மேற்கொண்டும் சந்தன மரங்களை வளர்க்கலாம்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the areas which are suitable for growing sandalwood trees?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்குத் தனிக் கேள்வி போட்டவும்.

திரு. மு.ச. சிவசாமி: நாட்டில் கோக்கோ பற்றாக்குறையாக இருக்கிறது. குற்றாலத்தில் உள்ள தட்ப வெப்ப நிலை கோக்கோ பயிரிட ஏற்றதாக இருக்கிறது. இந்த ஆண்டு இரண்டாயிரம் ஏக்கரில் விவசாயத் துறை மூலம் கொக்கோ பயிரிட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அப்படி ஒரு யோசனை இல்லை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: குற்றால மலைப் பகுதியில் இருக்கும் பொதிகை மலைப் பகுதிகளில் சந்தன இலைகள் உதிருகின்ற பகுதிகள் இருக்கின்றனவா என்று பரிசிலனை செய்து அங்கே சந்தன மரங்கள் வளர்க்க உத்தேசம் இருக்கிறதா? நம்முடைய மாநிலத்தில் வளரும் சந்தன மரங்கள் மைசூருக்குச் சென்று

1970 ஏப்ரல் 3]

அத்தராக சந்தனத் தைலமாகத் தயாரிக்கப்படுகிறது. அத்தகைய தொழிற்சாலை ஒன்றை நம்முடைய மாநிலத்திலே ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்தப் பகுதிகளில் சந்தன மரம் வளருமா என்பதற்காகத்தான் பரிட்சார்த்தமாக ஒரு ஹெக்டார் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பரிசோதனை வெற்றி பெற்றால் அதிகப்படியாக வளர்க்கலாம். தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இப்போது இல்லை.

திரு. ஆர். கருப்பையா: குற்றாலத்தில் வளர்க்கப்படும் சந்தன மரத்திற்கும் வேறு பகுதிகளில் வளர்க்கப்படும் சந்தன மரத்திற்கும் வேறுபாடு இருக்கிறதா? எது லாபகரமாக உள்ளது என்று ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இப்போது பரிசோதனை தான் நடத்தப்படுகிறது. இதிலிருந்து மொத்தமாக ஆண்டு ஒன்றுக்கு 1½ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

திரு. பி. துரைராஜ்: குற்றாலத்தில் சந்தனமரம் வளர்க்கப்படுவது பரிட்சார்த்தமாக இருப்பதாகச் சொன்னார்கள். எந்த ஆண்டு முதல் வளர்க்கப்படுகிறது? அதன் வளர்ச்சி இன்று எந்த அளவு இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்கான ரிப்போர்ட் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. நா. வீராசாமி: சந்தன மரம் வளர்க்க சூழ்நிலை இருக்கும் இடத்தில் அதை வளர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. வட ஆற்காடு, திருப்பத்தூர் போன்ற இடங்களில் சந்தன மரங்களை வளர்க்கும் சூழ்நிலை இருக்கிறது. அதற்கேற்ற தட்ப வெப்ப நிலையும் இருக்கிறது. ஆகவே, அதை ஊக்குவிக்கும் முறையில் அங்கே சந்தன மரங்களை வளர்க்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கேள்வி குற்றாலம் மலையில் சந்தன மரம் வளர்ப்பது பற்றியது. இருந்தாலும் பதில் கூறுகிறேன். வட ஆற்காடு, போளூர், வந்தவாசி பகுதிகளில் கிட்டத்தட்ட 40 ஹெக்டர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்கும் திட்டமிட்டு வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: மிகப் பெரிய அளவுக்கு அரசுக்கு வருமானத்தைத் தரக்கூடிய இந்தச் சந்தன மரத்திற்கு அடிக்கடி ஏதோ ஒரு வியாதி ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தடுப்பதற்குச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பிளாண்டேஷனுக்கு எந்த எந்த இடத்தில் என்ன வியாதி வருகிறது என்று பார்த்து



1970 ஏப்ரல் 3]

கவனிப்பதற்குத் தனியாக அதிகாரிகள் இருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### மேட்டூரில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம்

*674 வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் உள்ள தொழிற்சாலைகள் ரசாயனப் பொருள்களையும், அலுமினியத்தையும் உற்பத்தி செய்வதாக இருப்பதினால், அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ES I. வசதிகள் கிடைப்பதற்கான துரித நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: இப்போது மேட்டூர் வட்டாரத்தில் 9 தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம் மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. இன்னும் இ.எஸ்.ஐ. திட்டத்தில் சேராத நான்கு தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு, புதுடில்லி இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனின் அனுமதி கிடைத்தவுடன் இத்திட்டம் அமல்படுத்தப்படும்.

திரு. பி. வேலுசாமி: மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையும், ரசாயனத் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும் இ.எஸ்.ஐ. திட்டத்தில் இன்னும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அது எப்போது சேர்த்துக் கொள்ளப்படும்? இப்போது இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் குறைவாக இருக்கின்றன. அது அதிகப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை, ரசாயனத் தொழிற்சாலை இருக்கும் பகுதியில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இந்த அரசாங்கம் அதற்கு வேண்டிய செயற்குறிப்புகளைத் தயாரித்து டில்லியில் இருக்கும் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு அனுப்பி இருக்கிறோம், அவர்கள் அனுமதி கொடுக்க தயங்கிக் கொண்டிருக்கிறார்கள் நாங்கள் மேற்கொண்டு தீவிரமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். இருநூற்று ரூபாய் வாடகையில் ஒரு இடம்கூட எடுத்து வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. துரைசாமி: இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் திருப்பூர் போன்ற இடங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கட்டுவதாக இருந்து ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: என்ன காரணம் என்பதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னுல் விடை சொன்னேன்.

## பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்ட கடைகள்

* 658 வினு—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்மிய அகதிகளுக்காக திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கத்தில் கடைகள் கட்டப்பட்டுள்ளனவா?

இ) ஆம் என்ருல் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) பர்மா அகதிகளுக்காக பன்னிரண்டு கடைகளும், சாலைக்கடைகளும் ஸ்ரீரங்கம் நகராட்சியால் கட்டப்பட்டன. பர்மா அகதிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் இல்லாததால் அவை அனைத்தும், அகதிகளில்லாத பிறருக்கு 1—12—1969 முதல் ஒரு ஆண்டுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பர்மாவிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளுக்குக் கட்டிக் கொடுக்கும் கடைகளைக் குறைந்த அளவு வாடகையில் கொடுக்க அரசு முயற்சிக்குமா? சென்னையிலும் அது போன்று கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படித்தான் முயற்சிக்கப்படுகிறது. 549 கடைகள் கட்டப்பட்டன. 422 கடைகளைப் பர்மா அகதிகள் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். குறிப்பிட்ட காலம் வரை பார்த்து யாருட் வராத காரணத்தான் பிறருக்கு மீதமுள்ள கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 67 பெட்டிக் கடைகள் முனிசிபாலிடிக்குப் பணம் கொடுத்து பர்மா அகதிகளுக்காகக் கட்டியும் பர்மா அகதிகள் வரவில்லை. பத்திரிகைகளில் எல்லாம் கூட அதுபற்றிப் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. இதுதான் இப்போது இருக்கும் நிலை.

திரு. எம். எஸ். மணி: திருச்சி நகரத்தில் இரண்டு இடங்களில் பர்மா அகதிகளுக்குக் கடைகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டது, அமைச்சர் அவர்களிடமும் நேரடியாகத் தரப்பட்டது. அந்தக் கடைகளை உடனடியாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: திருச்சி, ஸ்ரீரங்கத்தில் எவ்வளவு கடைகள் பர்மா அகதிகளுக்காகக் கட்டப்பட்டன? எத்தனை இடங்களில் அவர்கள் கடைகள் வைத்திருக்கிருர்கள்?



மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மொத்தம் 12 கடைகள் ஸ்ரீரங்கத்தில் ஒரு இடத்தில் கட்டப்பட்டது. அந்த இடம் சரியாக இல்லை என்ற காரணத்தால் திருவானைக்காவல் சன்னதி தெருவுக்கு 11 கடைகளும், காந்தி ரோட்டுக்கு ஒரு கடையும் மாற்றப்பட்டது. அங்கும் பர்மா அகதிகள் வாராததால் அந்த ஊர்க்காரர்களுக்கு ஒரு வருஷத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: பர்மா அகதிகளுக்கான கடைகளைக் கட்டிக் கொடுக்கும்போது முக்கியமான இடங்களில் கட்டிக் கொடுத்தால்தான் வியாபாரம் நடக்கும். சென்னை நகரிலும் அவர்களுடைய கடைகளுக்குப் பாதுகாப்பான ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் எல்லாம் பஜார்களில் அவர்களுக்கான கடைகளைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கத்தினர் சொன்னது போல் நிரம்ப இதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எடுக்கப்பட்ட முயற்சிகளிலேயே பர்மா அகதிகள் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் தற்போதைய நிலை.

## *Provident Fund for labourers*

* 659 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the benefits of provident fund contribution are to be extended to all industrial employees in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு தமிழ் நாடு அரசுத் தொழில் நிறுவனங்கள் பணியாளர் (உதவித் தொகையுடன் கூடிய) வருங்கால வைப்பு நிதி விதிகள் நிதித்துறையில் 26—12—1969 அன்று வெளியான 1883-ஆம் அரசு ஆணையில் வெளியிடப்பட்டன. அந்த விதிகள் 1952-ஆம் ஆண்டு ஊழியர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தக்கூடிய தமிழ் நாடு அரசு தொழில் நிறுவனங்களின் ஊழியர்கள் அனைவருக்கும் பயன்படுத்தப்படும் என்றும், சட்டப்படிக்கான பணி விதிகளால் முறைப்படுத்தப்பட்டு ஓய்வூதியம் பெறத்தக்க பணியைச் சேர்ந்தவர்கள் இந்த விதிகளின் கீழ் வரமாட்டார்கள் என்றும் அந்த அரசு ஆணையில் ஆணையிடப்பட்டிருந்தது. இந்த விதிகள் 18—5—1958 அன்று செயலுக்கு வந்துள்ளன.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவரவர்களே, தொழிலாளர்கள் பிராவிடெண்ட் பண்டிலிருந்து லோன்கள் பெறுவதற்கு விதிகள் மிகவும் கட்டுப்பட்டிருப்பதால், கல்யாணத்திற்கும், படிப்பிற்கும்தான் என்றிருந்தது, அவர்களுக்( மற்றவை

களுக்குக் கடன் கொடுக்காததனால் அந்த நிலை நெகிழ்த்தித் தொழிலாளர்களுக்குக் கடன் கொடுக்கும்படியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எந்தெந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அத்தந்த நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன.

Dr. H. V. HANDE : What is the extra commitment for the Government under this head? Are the Government going to implement this from the present financial year May I know whether grants have been made in the present budget for this item?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : This has come into effect from 18th May 1958. It has retrospective effect. As for the amount involved, I want notice.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி, 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் மட்டும்தான் அமுல்படுத்துகிறது அதை மற்றத் தொழிலாளர்களுக்கும் அமல்படுத்த மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதனுடைய விளைவுகளை யோசித்து வற்புறுத்தப்பட வேண்டிய அம்சம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** சார், பேக்டரிகளிலேயும், மற்றைய அலுவலகங்களிலும் தொழிலாளர்களாகக் கருதி உதவி செய்யப்படுகிறது. அதே நேரத்தில் சர்க்காரில் ஊழியம் செய்து தொழிலாளர்களாகவோ அல்லது என்.ஜி.ஓ.-க்களாகவோ சேராது National Malaria Eradication Programme -இல் கிட்டத்தட்ட 5,000 பேர்கள், 15 வருஷங்களாகச் சர்வீஸ் செய்தும்கூட தினக் கூலிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களும் தொழிலாளர் வர்க்கத்தில் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தனிக் கேள்வி போடவும்.

### கொப்பனைபட்டியில் வீட்டு மனைகள் ஒப்படை.

*** 660 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள கொப்பனைபட்டியில் முஸ்லீம்கள் வாழும் பகுதியில், மனைக்கட்டு இடங்கள் அவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) இல்லை.



(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் தொகுதியிலுள்ள கொப்பனைபட்டி முஸ்லீம்கள் வாழும் பகுதி. அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு இடம் கிடைக்கிறது. அங்கு முஸ்லீம்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாக நிலத்தை அடமானம் செய்துதர வேண்டுமென்று கோரி வருகிறார்கள். இன்னும் அடமானம் செய்யாமல் இருப்பதால் அரசு விரைவில் அந்த இடத்தை அடமானம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அங்கு இடமிருந்து கேட்கும்படியான நிலைமையிருந்தால், இந்த அரசாங்கத்தின் கொள்கை எவ்வளவு தூரத்திற்கு நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கவும், வீட்டு மனையில்லாதவர்களுக்கு வீட்டு மனை கொடுக்கவும் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை ரொம்பத் தீவிரமாக அமல்படுத்துவதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். கொப்பனைபட்டியைப் பொறுத்த வரையிலும் முஸ்லீம்கள் சொல்லும் இடத்திலே இடம் இருந்தால் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அறிவிப்புகள்.

### (அ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. மா. இராசாங்கம்
2. திரு. எஸ். முருகையன்
3. திரு. எம். மேத்தா
4. திரு. ஏ. கோ பாலகிருஷ்ணன்
5. திரு. வீ. மலைக்கண்ணன்
6. திரு. மு. மாரிமுத்து
7. திரு. கே. விநாயகம்
8. திரு. கே. எஸ். கோதண்டராமையா
9. திருமதி கே. பி. ஞானசியம்மாள்

1970 ஏப்ரல் 3]

10. திரு. பி. ஜெயராஜ்
11. திரு. எம். அப்துல் கபூர் சாகிப்
12. திரு. கே. பி. எஸ். மணி.

சட்டப் பேரவையின் 215 (1)-வது விதியின் கீழ் திரு. கே. விநாயகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

### (ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ் நாடு 19700-ம் ஆண்டு மின்சாரத் தீர்வைத் திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, இம் மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### 4. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,49,60,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்."

**திரு. டி. மார்டின்:** தலைவரவர்களே, புலன் ஆய்வுத் துறை மேம்பாடுபற்றி விவாதிக்க— I move the following cut motion.



1970 ஏப்ரல் 3] [திரு. டி. மார்டின்]

"That the allotment of Rs. 14,49,60,200 under Demand No. 12-Police be reduced by Rs. 100."

### 5. நடைமுறைக் கேள்விகள்

### ஒரு கட்சியிலிருந்து ஒரு உறுப்பினருக்கு மேல் வெட்டுத் தீர்மானம் முன்மொழிய அனுமதிக்காதது குறித்து.

THIRU K. VINAYAKAM: I want to raise a point of order. Please listen. Our rules do not prohibit the moving of more than one cut motion from one party. You may find that we are having the practice of having one cut motion for one party. Government people are not going to move cut motion. We in the Opposition move cut motion. What is the harm, Sir, if more than two cut motions are moved from the same party? If I find that there are remarkably some defects to be pointed out in the working of the department, I may be allowed to move a cut motion, besides that of my friend's viz. (Thiru T. Martin's) cut motion. It may be that due to paucity of time, I may not actually speak on the demand. But that is different. More than a cut motion from one party can be allowed under such circumstances. Our rules do not prohibit the same. I am bringing it to your notice.

If more than two people of the same party want to move cut motions and they are relevant, that may be allowed. Our rules do not prohibit it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது இங்கு வந்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களில் ஒன்று ரெலவெண்ட், ஒன்று ரெலவெண்ட் இல்லை என்று இல்லை. எல்லாமே ரெலவெண்ட்தான். ரெலவெண்ட் இல்லையென்றால் அனுமதிக்கப்பட்டே யிருக்காது. எல்லாமே ரெலவெண்டாக இருப்பதால்தான் அனுமதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே, இங்கே கொடுக்கப் பட்டிருக்கும் அத்தனை வெட்டுத்தீர்மானங்களும் முன்மொழியத் தக்க உரிமையுடையவைதான். அதை மறுக்கவில்லை. ஆனால், மரபைப் பின்பற்றி வருகிறோம். ஒரு கட்சிக்கு ஒன்று என்ற முறையிலேதானே தவிர, தன்னுடைய வெட்டுத் தீர்மானம் வர வேண்டுமென்று சொல்லும்பொழுதே மற்ற வெட்டுத் தீர்மானம் நிறைவேறிவிட்டது, எனவே இந்த வெட்டுத் தீர்மானம் வரவில்லை முறையிலே சொல்ல வேண்டாம்.

**திரு. கே. விநாயகம்:** 10 பேர் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, முன்பு கடைப்பிடிக்கப்பட்ட முறை, வெட்டுப்பிரேரணைகள் வரும் பொழுது ஒரு மானியக்கோரிக்கைக்கு ஒரு வெட்டுத் தீர்மானம் என்ற மரபின் அடிப்படையிலே ஒன்றுதான் இருந்தது, எதிர்க்

ஒரு கட்சியிலிருந்து ஒரு உறுப்பினருக்கு மேல் வெட்டுத் தீர்மானம் முன்மொழிய அனுமதிக்காதது குறித்து.



கட்சி முழுவதற்கும் சேர்த்து. இப்பொழுதுதான் ஒரு கட்சிக்கு ஒரு வெட்டுப் பிரேரணை என்று வைக்கிறோம். ஆகவே வந்திருக்கும் வெட்டுப்பிரேரணைகள் அவ்வளவும் கவனிக்கப்பட வேண்டியவை தான். ஆனால் விவாதத்திற்கு மூவ் செய்ய வேண்டுமென்பதற்காக ஒவ்வொன்று என்று வைத்திருக்கிறோம். ஒவ்வொரு கட்சிக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்ற முறையிலே ஒரு கட்சிக்கு ஒன்று என்றுதான் வைத்திருக்கிறது. இந்த முறைதான் நல்லது. இல்லாவிட்டால் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே போகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் மரபு.

When all of them are token motions, the practice is that only one is moved in respect of each Demand and other Members who have given notice of cut motions speak on it.

அந்த முறையே தவிர வேறொன்றுமில்லை. திரு. வினயகம் அவர்களும் கட் மோஷன் கொடுத்திருக்கிறார்கள். திரு. மார்டின் அவர்கள் கொடுக்கும் முறையில், அவர்கள் கட்சியில் போராடிப் பெற்றுக்கொண்டிருக்கலாம். அதற்குப் பேரவைத் தலைவர் குறுக்கே நிற்கவில்லை.

4. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, போலீஸ்காரர்கள் ஊதியத்தை கூட்டுவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. வேலுசாமி:** தலைவரவர்களே, காவலர் பயணப்படி, ஊதிய உயர்வுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, போலீஸ்காரர்களுக்கு நாள்படியை அதிகரிக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



DR. H. V. HANDE: To discuss the immediate necessity to establish a Police station at the junction of Astabujam Road Angalamman Koil Street, Choolai and to bring home the inordinate delay in finalising the same, I move the following cut motion—

"That the allotment of Rs. 14,49,60,200 under Demand No. 12—Police be reduced by Rs. 100."

**திரு. என். வரதராஜன்:** தலைவரவர்களே, தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர மக்கள் தங்கள் நல உரிமைகளுக்காக இயக்கங்களில் ஈடுபடும்போது அவர்களை அடக்க போலீசாரை உபயோகப்படுத்தக்கூடாது என்பதை வற்புறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக்கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல்துறைபற்றிய ஆய்வுரைக் குறிப்பு ஒன்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தரப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுரையை நான் முழுதும் படித்ததாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ரா. ராமச்சந்திர துரை:** பேரவைத் தலைவர் அவர்களே. இன்றையதினம் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிற மானிய மானது இந்த நாட்டிலே நீதியையும் நிலைநாட்டவேண்டிய ஒரு மானியக்கோரிக்கை. அதிலே பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநிலக் காவல் துறையினர்களுக்கு இந்த மாநிலத்தைத் தவிர மற்றைய மாநிலங்களிலும், இந்திய தேசம் பூராவுமே அதிகமான மதிப்பும், மரியாதையும் உண்டு. திறமை மிக்கவர்கள் என்று பாராட்டப்பட்ட காவல் துறையினர்கள் நமது மாநிலத்தில் இருந்தவர்கள், இருக்கின்றவர்கள். அவர்களுக்குச் சில சலுகைகளை அவசியம் தரவேண்டிய நிலையில் இந்த அரசாங்கம் இருக்கிறது. காவல் துறையிலே இருக்கிற, கீழே இருக்கிற கான்ஸ்டேபிள்களுக்கு, இன்றைய நிலையிலே, விலைவாசி ஏற்றம் இருக்கிற இந்த நேரத்தில், சம்பளம் குறைந்த ஒரு நிலையில் இருக்கிறது. அத்துடன் மற்றைய அரசாங்க அலுவலகங்களிலெல்லாம் 8 மணி நேரம் வேலை என்று இருக்கிறது. இந்தக் காவல் துறையினர், சென்னையிலே இருக்கிற ஏ-1, பி-1, டி-1, ஸி-1 என்றிருக்கிற ஸ்டேஷன்களில் கிட்டதட்ட 10 மணி

* 282-302-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

நேரம், 11 மணி நேரம் வேலை செய்யக்கூடிய ஒரு நிலை இருக்கிறது மற்றைய அரசாங்க ஊழியர்களுக்கு எந்தத்துறையை எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கு சங்கங்கள் இருக்கின்றன. அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தக் காவல் துறையினருக்கு ஒரு சங்கம் வைப்பதற்கு அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். அவர்கள் சங்கம் வைக்கக் கூடாது என்று இப்பொழுது சொல்கிறார்கள்.

அதுபோக, சிறப்பு மிக்க காவல் துறையினராக இருந்த இந்த மாநிலக்காவல் துறையினர் உள்ளபடியே சிறப்பு மிக்கவர்கள், பாராட்டுக்குரியவர்கள் தான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் அரசியல் தலையீடு காரணமாக, ஆளும் கட்சியில் இருக்கிற முக்கியஸ்தர்கள் தலையீடு காரணமாக அவர்கள் தங்களுடைய நிர்வாகத்தை நல்ல முறையிலே செயல்படுத்த முடியாத அளவுக்கு இருக்கிறது.

உதாரணமாக, புதுக்கோட்டை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்றது. மாநகராட்சித் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், ஒரு காங்கிரஸ்காரர்கள் சாதாரணத் தொண்டருக்கும், தி.மு.க. தொண்டருக்கும் கைகலப்பு ஏற்பட்டது, ஒரு வார்டில். அந்த வார்டில் கைகலப்பு ஏற்பட்டவுடன், அந்த வார்டில் நிற்கக்கூடிய, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்து நிற்கின்ற, கவுன்சிலர் பதவிக்கு போட்டியிடுகின்ற ஒருவரையும், முக்கியமாக அங்கு வேலை செய்கின்ற செல்வாக்குப் படைத்த பலரையும் போலீஸ் அரெஸ்டு செய்து, உள்ளே கொண்டுபோய் வைத்தார்கள். மறுநாள் மாநகராட்சித் தேர்தல் நடைபெற இருக்கிறது. நான் அங்கே சென்று அவர்களை உடனே ஜாமீனிலாவது விடவேண்டும் என்று சொன்னவுடனே, அவர்கள்பேரில் எதுவும் வழக்குப் பதிவு செய்யவில்லை, உடனே அவர்களை அழைத்துச் செல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு, ஸ்டேஷன் தாண்டி 10 அடிகூட வரவில்லை. அதற்குள் திரும்பவும் இன்ஸ்பெக்டர் உள்ளே கூப்பிட்டார்கள். உள்ளே கூப்பிட்டவுடன், அவரே உடனே அங்கே உள்ளே வைத்துக்கொண்டு, எஃப்.ஐ.ஆர். பதிவு செய்துவிட்டார்கள். இதை நோக்கும்பொழுது, நான் வெளியில் வந்து ஒரு சில நிமிஷங்களுக்குள், ஏதோ போன் அங்கு வந்ததாகவும், அந்த போன்படி அவர் திரும்பவும் அவர்களை அரெஸ்டு செய்து, உள்ளே வைத்ததாகவும் சொல்லப்படுகிறது. கடைசியில் பின்னால் அவர்களுக்கு ஜாமீன் எடுத்தோம், வழக்கு நடந்தது, அது வேறு பிரச்னை.

அதற்கு அடுத்தப்படியாக, புதுக்கோட்டையில் ஒரு வட்டச் செயலாளர், அவருக்கும் இன்னொரு வியாபாரிக்கும் ஒரு தகராறு. அந்தத் தகராறில் ரூ. 50,000, லட்சம் ரூபாய் சொத்துள்ள அந்த நபரை ஒரு திருட்டு வழக்கிலே சம்பந்தப்படுத்தி, அவரைக் கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனில் ஐந்து நாட்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர் அல்ல. அவர்களை ஜாமீனில் எடுக்கவேண்டும் என்று என்னிடம் கூறிய காலத்தில், உடனே அதற்காக வேண்டி நான் ஜாமீன் எடுப்பதற்கு அங்கு சென்றேன். நான் அங்கே சென்று, நமது புதுக்கோட்டைச் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடன், டெப்யூடி சூப்பிரண்டெண்டெண்ட் அவர்களைப் பார்த்து, 'அவர் கௌரவம் மிக்கவர், ஏதோ இந்த வழக்கில் அவரைத் தவறாகப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் வழக்கு பதிவு செய்வதுபற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை, நீங்கள் அவர்களுக்கு எந்தவிதமான இன்னல்களும் விளைவிக்காத அளவுக்கு. நீங்கள் வழக்கு பதிவு செய்துகொண்டு, அவர்களை ஜாமீனில் விடுங்கள்' என்று சொன்னோம். மறுநாள் நாங்கள் அவரை மாஜிஸ்டிரேட்டிடம் கொண்டுபோய் ஆஜர் செய்து, கண்டிஷனல் பெயிலில் எடுத்துவிட்டோம். கண்டிஷனல் பெயிலில் எடுத்ததற்குப் பிறகு ஒரு போலீஸ்காரர், அவரை விசாரிப்பதற்குக்கூட மாஜிஸ்டிரேட்டிடம் ஆர்டர் வாங்கவேண்டுமென்று நினைக்கிறேன். கண்டிஷன் பெயிலில் எடுத்ததற்குப் பின்னால் அந்தப் பகுதியில் இருக்கிற டெப்டி சூப்பிரண்டெண்ட், அதே வட்டச் செயலாளரை எதிரில் வைத்துக்கொண்டு, அவரை அடித்திருக்கிறார்கள் அவர்கள் ஏதோ இப்பொழுது டெப்யூடி சூப்பிரண்டெண்ட் மீது வழக்குப் போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நான் வந்ததற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சி அது. இம்மாதிரியான காரியங்களில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சட்டம் என்பது அமைச்சர்களுக்கும் ஒன்றுதான். மற்றும் இந்த நாட்டில் வாழ்கின்ற குடிமக்களுக்கும் ஒன்றுதான். ஸிக்னல் லைட்டிங் இருக்கிற இடங்களில், ரெட் லைட் வந்தவுடன் அமைச்சர்கள் கார்கள் பின்னால் வந்தால், ரெட் லைட் எரியும் போதே அவர்களுக்குப் போவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அவர்கள் போகக்கூடிய ஒரு நிலையைப் பார்க்கிறோம். (சிரிப்பு) சிரித்து என்ன பிரயோசனம். நடப்பதைச் சொல்கிறேன். இல்லை என்றால், இல்லை என்று சொல்லுங்கள். எங்களுக்கும் சிரிக்கத் தெரியும்.

அண்மையில் ஜெமினி ஸ்டுடியோ அருகில் ரெட் லைட் ஸிக்னல் போட்டவுடன் அங்கு ஒரு டாக்டர் காரில் போயிருக்கிறார். அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி. அந்தப் போலீஸ்காரர் அவரை 'என்ன ஐயா, ரெட் லைட் போட்டிருக்கிறது, போகிறீர்கள்' என்று கேட்டவுடன், போன டாக்டர் அந்தக் கான்ஸ்டேபிளை எவ்வளவு கேவலமாகப் பேசவேண்டுமோ அவ்வளவையும் பேசிவிட்டு, நேராகப் போய்விட்டார்கள். அதற்குப் பின்னால், இரண்டு கார்கள் பின்னாலே, நமது அரசாங்க சீப் செகரட்டரி அவர்கள் சென்றதாகவும், சீப் செகரட்டரி அந்தக் காரைப் பின் தொடர்ந்து எங்கே போகிறது என்று பார்த்துச் சென்றதாகவும்,

அந்தக் காரானது ஒரு கமிஷனருடைய வீட்டில் போய் நின்றிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, அங்கே உடனே ஏதோ போன் செய்தி போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று, அந்த போனின் படி இங்குள்ள கான்ஸ்டேபிளை அங்கே கொண்டுபோய், அவருடைய டிரஸ்களை கழற்றி, அங்கே அரெஸ்டு செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், சீப் செகரடரி போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று, அங்குள்ள அதிகாரியைப் பார்த்து, அவரை விடும்படி கேட்டிருக்கிறார்கள். சீப் செகரடரியை அடையாளம் தெரியாமல், அவரை யார் என்று கேட்டவுடன், அதற்குப் பிறகு அவர் கார்டைக் காட்டியதும், அங்கே விட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நிலையில் மேல் அதிகாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இன்றைன்று, தென் பிராந்திய டி.ஐ.ஜீ' ஆக மதுரையில் இப்பொழுது திருச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. ஜனாதிபதி மண்டபம் காம்புக்கு விஜயம் செய்தபொழுது, முன்கூட்டியே பாதுகாப்பிற்கு வேண்டி அவர் அங்கு சென்றதாகக் கூறப்படுகிறது. அவர் சென்ற நேரத்தில் அந்தக் காரில் ஒரு பொம்பளை இருந்ததாகவும், அந்தக் கார் ஆக்ஸிடெண்ட் ஆனதாகவும் கூறப்படுகிறது. அந்தக் காரில் இருப்பவர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டு, அந்தக் காருக்கும் சேதம் உண்டாகியிருக்கிறது. அந்தக் காரை ஓட்டியவர் டி.ஐ.ஜி. அவர்களா அல்லது அந்தப் பெண்ணா என்பது புரியவில்லை.

இன்றைன்று, அந்தக்காரை டி.ஐ.ஜி. அவர்களே ஓட்டிச் சென்றதாகவும், அதற்குப் பிறகு அந்தக் குற்றத்தை மறைப்பதற்காக வேண்டி ஏதோ ஒரு கார் டிரைவரை 'ஓட்டியதாக ஒப்புக்கொள்ளச்' செய்ததாகவும் கூறப்படுகிறது. இப்படி மேல் அதிகாரிகள். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே அரசினுடைய கவனத்திற்கு வந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றங்கள் அரசால் மன்னிக்கப்படுவதில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின்மீது குற்றம் சொல்லவில்லை. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். பொதுமக்களின் பிரதிநிதி என்ற முறையில் கேட்பதற்கு எனக்கு உரிமை உண்டு. முதலமைச்சரவர்கள் பதில் சொல்லியதற்காக நன்றி. மேல் அதிகாரிகள் செய்கின்ற குற்றங்களால் கீழ் அதிகாரிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். மேல் அதிகாரிகள், தாங்கள் செய்கின்ற குற்றங்களை மறைப்பதற்காக வேண்டி, கீழே உள்ள கான்ஸ்டேபிள்களைப் பாதிக்கச் செய்கிறார்கள்,



இன்றைன்று, சென்னைக்கு அருகில் வேளச்சேரியில் டவுன் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியாக இருந்த ஏ. நாகேசுவரன் என்பவர்மீது பல ஆயிரம் ரூபாய் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், லஞ்ச ஒழிப்பு இலாகாவிற்கும் ஆதாரங்களோடு புகார் மனு அனுப்பப்பட்டது. இந்த மனுமீது லஞ்ச ஒழிப்புத் துறையினரும் நடவடிக்கை எடுக்க முற்பட்டு வருகின்றனர். லஞ்ச ஒழிப்பு இலாகா சிபாரிசின்பேரில் பத்து தினங்களுக்கு முன்னர், இந்த நிர்வாக அதிகாரியை—டி.ஆர்.டி.—கிராம வளர்ச்சி நெறியாளர் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு மாறுதல் செய்தார். ஆனால் அந்த உத்தரவு இத்தனை நாட்களாக செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது. உடனடியாக அந்த அதிகாரி வட ஆர்க்காடு மாவட்டத்திற்கோ அல்லது வேறு தொலைதூர மாவட்டத்திற்கோ மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் . . .

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் படிக்கின்றாரா அல்லது பேசுகின்றாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** இரண்டும் ஒன்றுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறிப்பை வைத்துக் கொண்டு பேசுங்கள். ஆனால் படிக்காதீர்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, இங்கே உள்ளவர்கள் எல்லோரும்தான் படிக்கிறார்கள். நான் ஒன்றும் பேச முடியாதவன் அல்ல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. நீங்கள் நன்றாகப் பேசக்கூடியவர்கள்தான். குறிப்பை அப்படியே படிக்க வேண்டாம், குறிப்பை வைத்துக் கொண்டு பேசலாம் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, நான் உள்ளே வரும்போது, எனக்குக் கிடைத்த தகவலானதாலேதான் அப்படியே படித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இன்னும் ஒரு நிமிஷம்தான் நேரம் இருக்கிறது. ஏற்கெனவே பதினைந்து நிமிடங்களாகிவிட்டன.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரியிடம், அந்த நபர் அங்கிருந்தால் அதற்குள் சாட்சியங்களை மறைப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அவரை உடனே மாற்ற வேண்டுமென்று மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நபர் சிபாரிசின்

பேரில் சென்னைக்கு அருகிலுள்ள திருவான்மியூருக்கு வந்திருப்பதாகவும், அந்த ஊருக்கே மாற்றப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. எடுத்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடிப்பதற்காக அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு போலீஸ் மானியத்தின்மீது பேசச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

* THIRU R. N. RANGANATHAN : Hon. Speaker, Sir, the Tamil Nadu Police have great achievements to their credit during the last year in keeping with their high tradition of efficiency. For the first time in the annals of the history of the Tamil Nadu Police, the Hon. Chief Minister has instituted the Chief Minister's Police Medal for gallantry and outstanding devotion to duty. Nowhere else in India is there such institution of a Police Medal like this, and enquiries from other States are pouring into our Government asking for details about it.

The long cherished demand of the Police for the appointment of a Commission to go into the service conditions and emoluments, the relationship between the public and the police with regard to maintenance of law and order at the time of disturbance to peace and tranquillity, what should be the discretion to be exercised by the police, etc. I hope all the Members would have received the questionnaire from the Police Commission with a request to give their answers to the questions.

The institution of the Chief Minister's Police Medal is a landmark in the history of the Tamil Nadu Police. As the Police Chief rightly remarked at the time of the presentation of the medal, no Chief Minister has given so much to the Police within such a short time as the present Chief Minister.

The appointment of the Police Commission is particularly noteworthy in view of the arduous nature of the task of the police in the present social context. There is the problem of increasing unrest from all sections of the society, the students, the labourers the agriculturists, etc., and in all these situations of unrest, the public has to rely on the Police. The time is ripe for the appointment of a Police Commission and the implementation of the recommendations of the Commission will definitely solve many of the longstanding problems of the Police.

A notable achievement of the Tamil Nadu Police during the last year was that it established itself as second to none in efficiency compared with the Police of the other States. If we make a comparative study with the other States in the matter of detection of crime, we will be able to realise how much valuable services the Tamil Nadu Police have rendered in spite of the handicap of shortage of funds and lack of transport and communication.

The Vaishnal Committee on Indian Police has given in its report the cost of detection of crime in each State. The cost is Rs. 1,417 in Andhra Pradesh, Rs. 274 in Mysore, as high as



Rs. 2,255 in Assam and in Tamil Nadu it is only Rs. 198. The cost of detection in Tamil Nadu is the lowest, with all the limitations due to lack of resources and facilities. In the dacoity in Sankarapandiapuram and the robbery tn the Shencottah-Madura passenger, the culprits were detected, taken into custody and presented before the Court.

All of us have heard about the rolling shutter lifting dacoities on an All-India basis. At the State level there was robbery going on. The Tamil Nadu Police detected the robbers and thus prevented the crime all over India.

Then there is the orgy of violence let loose and the menace created by the political extremists who called themselves Naxalites and who were creating trouble in West Bengal and Kerala. This kept the Tamil Nadu C.I.D. on its toes. The C.I.D. was able to round up nine Naxalities from Andhra Pradesh who assembled in Anna Nagar in Madras. A notable feature of the rounding up was that there was no encounter, no injury on either side, nobody was hurt. Without any of these things, the nine Naxalities were rounded up and taken into custody.

The Vigilance Squad has pursued them and also one M. Thambi alias Madhavan Thambi of Kerala, who is another Naxalite was also arrested by the Tamil Nadu Police and there were also other Naxalites arrested in other places but in all those incidents, we would have been able to find, as reported in newspapers that there was no encounter or counter-attack by the police and no one was hurt and no injuries were effected. Thus the Tamil Nadu Police has excellently done this work and they deserve appreciation from all quarters of the society. They have lifted Tamil Nadu to a level where the public of Tamil Nadu are assured of security and safety and are free from any sort of trouble which is not the case in any other State in India, and for this the credit goes to Tamil Nadu police to a great extent.

Sir, there is absolutely no cloud of lawlessness or unrest from any section of the people in Tamil Nadu and that is due to the Tamil Nadu police. But there seems to be baseless criticism against them from the Opposition—I mean the Congress Opposition. Last year the slum-dwellers were free from any fear and were very much relieved. There was absolutely no anxiety or apprehension felt by the slum-dwellers. Formerly every day there was apprehension in the minds of the slum-dwellers whether any fire—tri-colour—would appear in their huts (interruption). Fire is said to consist of three colours and I do not mean any other thing. So, the slum-dwellers have been relieved of their trouble and fear and that is all due to the check and preventive methods adopted by the Tamil Nadu police.

Apart from the detection and prevention of crime, they have also made a mark in other respects. They are trying to nip any agitation or riot in the bud itself, before it takes a violent turn

[Thiru R. N. Ranganathan]

and take preventive steps and that also has been accepted and acknowledged by all sections of the society even outside Tamil Nadu.

There have been complaints from the Congress Opposition that there is non-enforcement or under-enforcement of law and order by the Tamil Nadu Police and that is also without any basis whatsoever. It has also been alleged that there has been political interference in the affairs of the Tamil Nadu Police. But, Sir, the Tamil Nadu Police have been doing their duties without fear or favour. In this connection, I would like to remind hon. Members of Sections 149, 151 and 152 of the Criminal Procedure Code wherein it is laid down that in certain contingencies and when the urgency requires the police can take action to prevent any riot or any outburst of violence or any danger to the public tranquillity. So, under the statutory provisions the Police are acting and can anybody say that at the time the police apprehend that there is likelihood of a breach of peace, they would contact any partyman in power and then take action. If they had done so, they would not have won laurels from the public for keeping tranquillity and safeguarding the security and safety of the people from the hands of the hooligans. In this connection, I wish to point out that there is a false distinction made between the demonstrations organised by hooligans and the demonstrations organised by justifiable elements. In distinguishing these two elements and their demonstrations, the police will have to deal with each and every situation in their own way without any interference from any quarter.

Now, I would like to suggest that the Tamil Nadu Police should achieve perfection as in the case of Scotland Yard Police and they should streamline or standardise or modernise their records from the lowest ranks.

It has been stated that whenever allegations were made against the police no action is taken and also whenever any private complaint is made, no action is taken. But we find that even if anonymous petitions are written against the Sub-Inspector or constable to the higher authorities, they are also enquired into in these days. So also, hon. Members are quite aware of the fact that all petitions complaining and alleging certain things about the conduct and character of the police officials in the lower rank are also being looked into and sufficient steps taken in the matter. The erring officials are posted at innocuous places and they are kept under the watch of the alert officers.

As the late Sir C. P. Ramaswamy Iyer has stated, morale and behaviour of the police mainly depend upon the calmness, the kindness and the strength of the party in power. Apart from that, it also depends upon what is called the outlook of the public. In other words, the Government which is strong, calm, kind and



sympathetic towards the public will definitely show the best police to the outside world. I am definitely sure and the public are also confident that in the future under the brilliant leadership of our Hon. Chief Minister the Tamil Nadu Police will attain a positon second to none in the country.

Then there are other small matters. It has also been suggested that in the studies of sociology, traffic education should form part of the curriculum and it should be introduced in schools and colleges and the students should be trained in that also and the teaching methods in the Police Training College should also be changed. Also, fastly developing scientific instruments which are used in foreign countries to detect crimes should be used in Tamil Nadu also.

Lastly, I would like to invite the attention of the Hon. Chief Minister to the educational scheme introduced by the Madras University in pursuance of the recommendation of UNESCO. The scheme relates to the degree course, M.A. (Criminalogy) and our Madras Medical College has admitteed seven students in one year and those students who have passed out can be utilised in the Police Department by our Government so that what they have learnt could be utilised for the welfare of the Police Department and the uplift of the society. With these words, I conclude my speech. Thank you, Sir.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இன்று மானியக் கோரிக்கையின் கடைசி நாள். கில்லடின் 1 மணிக்கு. பதினாறு உறுப்பினர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பேரவையின் அனுமதிபெற்று அதிக நேரம் எடுத்துக்கொள்ளலாமா?

*திரு. கே. வினாயகம்:* 1¼ மணிக்கு கில்லடின் வைத்துக் கொள்ளலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவையின் அனுமதிபெற்று நேரத்தை அதிகப்படுத்துகிறபோது 1¼ மணியாக இருந்தாலும், 1½ ஆக இருந்தாலும் ஒன்றுதான். பதில் உரைக்கு முதல் அமைச்சருக்குத் தேவைப்படுகிற நேரம் எவ்வளவு?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* அரை மணி போதும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* எதிர்க்கட்சித் தலைவருக்கு அரை மணி, முதல் அமைச்சருக்கு அரை மணி என்றால் ஒரு மணி போய்விடுகிறது. பாக்கியிருப்பது இரண்டு மணிதான். ஆகவே இனிப்பேச இருக்கிற உறுப்பினர்களுக்கு ஆறு ஆறு நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:* பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின்மீது பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி, காவல் துறை என்பதே மிக நல்ல பெயர்

அந்தக் காலத்தில் அரசர்களைக் காவலர்கள் என்று சொல்வது வழக்கம். இன்றைக்கு ஆட்சியாளர்கள் செய்கின்ற வேலையை இத்துறையினர் செய்கின்றனர். அவர்களும் நாட்டை நல்ல முறையில் காவல் செய்யவேண்டும். ஆட்சியாளர்களும் அவர்களை நல்லமுறையில் காவல் செய்யவேண்டும். இந்த முறை இன்றியமையாதது.

மு.ப. 10-30. இதில் எத்தனையோ தவறுகள் நடந்துவிடுகின்றன. அவர்கள் தங்கள் கடமையைச் சரிவர செய்யவிடாது தடுப்பது, அவர்களை நேர்மையற்ற வழிக்குத் தூண்டுவது மதுவிலக்குச் சட்டம்தான். அவர்களையும் நல்லமுறையில் நடக்கவிடாது செய்து, மக்களையும் தவறான வழிகளுக்குக் கொண்டுசெல்வது இந்தச் சட்டம் தான். தயவுசெய்து இந்தச் சட்டத்தை அகற்றவேண்டுமென்று எத்தனையோ முறைகள் மன்றாடினோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்னாலேயே சொன்னார்கள், ராஜாஜிக்கு அவர்கள் சொல்வார்களா என்று கேட்டார்கள். ராஜாஜி அவர்களுக்குச் சொல்லவேண்டுமானால் ராஜாஜி அவர்கள் சொல்வதை நீங்கள் எதை எதைக்கேட்டுவிட்டீர்கள், இதை மாத்திரம் கேட்கப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். நல்லொழுக்கத்தையும் நல்வாழ்வையும் கெடுத்து முறை தவறிய முறையிலே பொருளீட்டி நேர்மையான முறையிலே அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு பாட்டிலையும் பணத்தையும் கொடுத்து அவர்களைக் கெடுக்கக்கூடிய சூழ்நிலைதான் மலிந்து வருகிறது. இதனால் பல இன்னல்களும், ஊழல்களும் வளர்ந்து வருகின்றன.

சிறையிலே இருப்பவர்களில் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் நூற்றுக்கு முப்பது பேர்கள் என்றைக்குமே குடியாதவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கடைசி நாளிலே கைதுசெய்யப்பட்டு, குடியாதவர்களைக்கூட அவர்கள் வாயிலே ஊற்றிக்கொண்டுபோகின்ற நிலைமையில் வேண்டாதவர்களைத் தண்டிப்பதற்கு இதை ஒரு நல்ல முறையாகப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துவிட்டால் போலீஸ் இலாகா புனிதமாக இருக்கும். அவர்கள் நல்ல காவலர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு முறைப்படி வருகின்ற ஊதியமும் குறைவு ஆக இருப்பதால் அவர்களுக்கு அது ஒரு ஊதியமாகவும் இருக்கிறது.

சாதாரணமாக நகரங்களிலே பணியாற்றுகின்ற ஆலை அல்லது இயந்திரத் தொழிலாளர்களைப்போன்ற சாதாரணத் தொழிலாளர்கள் சம்பளம்கூட அவர்களுக்கு இல்லை. அவர்களுக்குச் சிபாரிசு செய்வதாகச் சொல்லலாம் அவர்கள். அவர்களும் குறுக்கு வழியிலே வாழாமல் நேர்மையாக வளர்வதற்கு முயற்சிகள் செய்யவேண்டும். அவர்களுக்கு படி கொடுப்பது ஒன்றரை ரூபாய் என்ற அளவிலேதான் இருக்கிறது. இது மிக மிகக் குறைவு. இதை அதிகப்படுத்த வேண்டும்.





மிக முக்கியமான ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லிக்கொண்டு முடித்துவிடுகிறேன். இரண்டு வாரங்களுக்கு முன்னாலே நாங்கள் எல்லாம் கோவையிலே கிளர்ச்சியிலே ஈடுபட்டு கைதுசெய்யப்பட்டோம். எங்களை எல்லாம் நடத்தப்பட்ட முறை மிக வேதனைக்குரியதாக இருக்கிறது. மேல் அதிகாரிகளைப்பற்றிச் சொல்லப்போனால் அவர்கள் நல்ல பண்போடும் பரிவோடும் நடந்துகொண்டார்கள், அவர்கள் மரியாதையாக நடந்து கொண்டார்கள், அவர்களை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். ஆனால் கீழே உள்ள கீழ்மட்டத்திலே உள்ளவர்கள் என்ன என்ன அவமரியாதைகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தார்கள். கொடூரமான முறையிலே பண்பற்ற முறையிலே நாங்கள் இறங்கவில்லை, ஆனால் அவர்கள் எங்களுக்கு இழைத்த அநீதி மிக அதிகம். நூற்றுக்கணக்கான பேர்களையும் தண்ணீர் இல்லாத நிழல் இல்லாத இடத்திலே குவித்தார்கள். அவிநாசியிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள கருமத்தம்பட்டியிலே கொண்டுபோய் எங்களை எல்லாம் குவித்து வைத்தார்கள்.

அது மாத்திரமல்ல. எங்களை எல்லாம் சாதாரண மக்களைவிட நடைமுறையில் இல்லாத அளவுக்கு மிகக் கேவலமாக நடத்தினார்கள் என்று சொன்னால் மிகையாகாது. உங்களுக்குக் காட்டுவதற்காக ஆதாரம்கூடக் கொண்டுவந்திருக்கிறேன். சாதாரண சப் இன்ஸ்பெக்டர் அதற்கு மேலுள்ள அதிகாரி எங்களை எல்லாம் கீழே உட்கார வைத்துவிட்டு அதற்கு மேலே ஆசனங்களிலே அவர்கள் உட்கார்ந்துகொண்டு எங்களை எவ்வளவு கேவலமாக நடத்தியிருந்தார்கள் என்பதை இந்த போட்டோவைப் பார்த்தால் மிக நன்றாகத் தெரியும். (போட்டோக்களைக் காட்டிவிட்டு கொடுத்தார்) போதுமான இருக்கைகள் இருந்தாலும்கூட அவர்கள் காலுக்கடியில் எங்களை உட்கார வைத்து அவர்கள் மேலே இருந்துகொண்டு அவமானப்படுத்துவது போல்—நாங்கள் கைதுசெய்யப்பட்டோம், பின்னாலே எந்த அவமானம் வந்தாலும் சகித்துக் கொள்ளலாம்—நடத்தினார்கள்.

ஆனால், வெளியிலிருந்தவர்கள் ஜெயிலுக்குள் கொண்டுபோகக் கூடாது, போனால் எங்களையும் சேர்த்துக்கொண்டுபோங்கள் என்று வெளியிலே ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்கள் உட்கார்ந்திருந்தார்களே அவர்களுடைய உள்ளம் எப்படிப் புண்பட்டிருக்கும்? இந்த நிலையில் ஏதாவது ஏற்பட்டுவிட்டால் அமைதிக்கு உங்களால்தான் பங்கம் ஏற்பட்டது என்று குற்றஞ்சாட்டலாம். எங்களால் இயன்றவரை நாங்கள் அமைதியைக் காப்பாற்றினோம். எங்களையும் சேர்த்துக் கொண்டுபோங்கள் என்று ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வெளியிலே உட்கார்ந்திருந்தார்கள். அவர்களை அகற்ற காவல் துறையால் முடியவில்லை. எங்களைக்கொண்டு அவர்களுக்கு நல்லுரைகூறி வழிவிடும்படி கேட்டுக் கொண்டார்கள். அன்று காலையிலிருந்து அன்ன ஆகாரம் இல்லாமல், நாங்கள் அலைந்து உட்கார்ந்து இருக்கிறோம், ஐயாயிரம் மக்களிடத்திலே

எப்படிப் பேசுவது என்று கேட்கப்பட்டது, அதற்குப் பிறகு ஒலிபெருக்கி கொண்டுவரசெய்து பேசக் சொன்னார்கள், நாங்களும் எங்களால் இயன்றவரை அமைதியைக் காக்கப் பிரயத்தனப்பட்டு அவர்களை வழிவிடும்படி செய்தோம். இந்த நிலைமையில் ஏதாவது நடக்காதது நடந்துவிட்டால் எங்களைக் குற்றஞ்சொல்வார்கள். அமைதியைக் காக்க, நேர்மையைக் காக்க நீங்கள் துணைபுரிய வேண்டும்.

அவர்கள் எங்களுடைய மூன்றெழுத்துக்கு மதிப்புக் கொடுக்காவிட்டாலும் சாதாரண மக்களுக்குக் கொடுக்கின்ற மரியாதையாவது கொடுத்திருக்க வேண்டும். சாதாரண மக்களைவிட மிகக் கேவலமாக நடத்தினார்கள். இதை அரசாங்கம் உணரவேண்டும். அமைதியை நிலைநாட்டவும், நேர்மையை நிலைநாட்டவும் மக்களும் அன்பு நெறியைப் பேணவும், அவர்களும் தங்களுடைய கடமையைச் செய்யவும், அவர்களுக்கு நீங்களும் செய்ய வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். கந்தசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துகளை இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன்.

பொதுவாகத் தமிழ்நாடு காவல்துறை இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைவிட மிகச் சிறப்பான முறையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுகிறது என்பது தமிழக மக்களுக்குப் பெருமை தருகிற செய்தியாகும். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடனே, எந்த போலீஸ்துறை அடக்குமுறைகளால், துப்பாக்கிச் சூடுகளால் தங்களையெல்லாம் பழிவாங்கியதோ அதையெல்லாம் மனதிலே கொள்ளாது மறந்து, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தவிதமான மன எரிச்சலும் கொள்ளாமல் போலீஸ்துறையைப் பக்குவமாகப் பயன்படுத்தித் தமிழகத்தின் பெருமையையும் தமிழக மக்களுக்கும் எந்தவிதமான தொல்லையும் இல்லாத முறையில் மிகச்சிறப்பாகச் செயலாற்றி வந்தார்கள். அதற்குப் பின்னால் முதலமைச்சராக இருக்கும் கலைஞர் அவர்கள் அந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே போலீஸாருக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது போலீஸார் மட்டுமல்ல, பொதுமக்களும் அரசாங்கம் கையாளுகின்ற முறையும் இருக்கிறது என்ற விளக்கத்தினைத் தருகின்ற வகையிலே தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் என்ற அளவிலே பெரிய போலீஸ் அதிகாரிகளுக்கு அவராகவே மேல்நாட்டு உடையிலே, பரிசளித்ததைத் தமிழக மக்கள் மறக்கமாட்டார்கள், பாராட்டத்தான் செய்வார்கள்.





அதற்கு பின்னாலே தஞ்சையிலே மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் கிளர்ச்சி. அதைச் சுமுகமான முறையிலே தடுத்துநிறுத்தி அமைதிகாத்த பெருமை காவல்துறையைச் சாரும்.

மாணவர்கள் கிளர்ச்சி, தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்கள் பல இடங்களிலே வகுப்புக் கலவரங்கள் இவையெல்லாம் நடந்தும் கூட மிகச் சுமுகமான முறையிலே எல்லாப் பயனும் ஏற்படக்கூடிய வகையிலே போலீஸார் கடமையாற்றினார்கள் என்பதை மறுக்க முடியாது.

சென்ற ஆண்டு நடைபெற்ற முனிசிபல் தேர்தல்களிலும் இடைத் தேர்தல்களிலும் பல இடங்களில் போலீஸார் சிரமப்பட்டு எந்தவிதமானத் துப்பாக்கிச் சூடோ கண்ணீர்ப் புகையோ இல்லாத அளவுக்கு சிறப்பாகச் செயலாற்றி வந்ததை நாம் எல்லோரும் பாராட்டவேண்டும்.

இந்த ஓராண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலையில் 5 துப்பாக்கிச் சூடுகளும் 5 தடவை கண்ணீர்ப் புகை நிகழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது என்றால், இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் அரசாங்கமாக இருந்திருந்தால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் எவ்வளவோ துப்பாக்கிச்சூடுகளும் எத்தனையோ பேர் இறந்திருக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நமது அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த நேரத்தில், உணர்ச்சி வசப்பட்ட பொதுமக்கள் அவரது உடலைப் பார்க்க வந்த நேரத்தில் போலீசார் மிகுந்த சிரமப்பட்டு தங்களுக்குப் பல இன்னல்கள் வந்திருந்தாலும்கூட அவற்றைப் பொருட்படுத்தாமல் கூட்டத்தை முடிந்த அளவுக்கு அமைதியாக நடத்திச் சென்றதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு காங்கிரஸ் இரண்டுபட்ட பிறகு இப்பொழுது இந்தியாவின் பிரதம அமைச்சராக இருக்கும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் சென்னைக்கு வந்த நேரத்தில் பல இடங்களில் பல கிளர்ச்சிகள் இருந்தாலும்கூட, நமது முதலமைச்சர் அவர்கள் போலீஸ் இலாக்காவை எந்த முறையிலே கையாளவேண்டுமென்று தெரிந்து அந்த முறையில் செயல்படுத்திச் சென்றதன் காரணமாக, மிக அமைதியான முறையில் பிரதம அமைச்சரின் சுற்றுப்பயணம் நடந்தேறியது என்று எல்லோருக்கும் தெரியும்.

அடுத்தபடியாக அந்தப் போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவர்களுக்கு தேவையான ஊதியமும், அவர்களுக்கு மற்ற வசதிகளும் அளிக்கப்படவேண்டும் என்ற முறையில் இந்த அரசு 60 சதவீதம் வீடு வசதிசெய்து கொடுத்திருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அது மட்டுமன்றி மதுவிலக்கு வேண்டுமா வேண்டாமா என்ற ஒரு நிலை தமிழகத்தில் பொதுமக்களிடையே இருந்து வந்தாலும்கூட நமது முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்தியதன் பயன், இந்த

ஆண்டு சென்ற ஆண்டைவிட 50,000 வழக்குகள் அதிகமாக இருக்கின்றன. இதுகுறித்து நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து கிராமங்களில் உள்ள போலீஸ் இலாக்காவைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர்களுக்குப் போக்குவரத்துக்கு மிகவும் அவசியமானது என்ற முறையில் அவர்களுக்கு குறைந்த அளவு ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு ஜீப்பாவது தந்தால் அந்தப் பகுதியுள்ள கிராமங்களுக்குச் சென்று அவர்கள் தீவிரமாக பணிபுரிய வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நேரத்தில் தியணைப்புப் படையினர் வரமுடியாமல் பெருத்த சேதம்

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள மணப்பாறை ஒரு பெரிய நகரமாக இருந்தும்கூட அங்கு ஒரு தியணைப்பு நிலையம் இல்லை. பல இடங்களில் தீவிபத்துகள் ஏற்பட்டு குறித்த நேரத்தில் தியணைப்புப் படையினர் வரமுடியாமல் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு ஒரு தியணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

**திரு. என். சங்கரய்யா** : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறையைப்பற்றி மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன்.

இன்று இங்கு கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மதுவிலக்கு என்ற தலைப்பின்கீழ் அந்த மதுவிலக்குச் சட்டத்தை மீறியதற்காகப் போடப்பட்ட வழக்குகள் 1960-ல் 93,497. 1967-ல் இது 1,90,713 ஆக உயர்ந்தது. இப்பொழுது 1969-ல் 3,06,555 ஆக உயர்ந்திருக்கிறது. இதிலிருந்து நான் என்ன கூற விரும்புகிறேன் என்றால் இன்று நாம் சொல்லலாம் வழக்குகள் நல்ல முறையில் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்ததன் காரணமாக அதிகப்படியான வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன, ஆகவே அது நம்முடைய போலீஸ் செய்த பணியின் காரணம் என்று. இதையே வேறு ஒரு முறையில் பார்க்க வேண்டும். 1960-ல் 93,497 வழக்குகள்மட்டுமே இருந்தது இப்பொழுது மூன்று இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றால் இந்தக் கொள்கை தோல்வி அடைந்துவிட்டது, மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை, மேலும், மேலும் அதை மீறுவதற்கு மக்களின் மனோபாவம் திரும்புகிறது என்பதுதான். எந்த முறை கையாளப்பட்டாலும் எத்தனை வழக்குகள் போட்டாலும், நிலைமை மாறவில்லை என்பதைத்தான் அரசுத் தரப்பு அறிக்கையில் உள்ள புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இன்று 1969-ம் ஆண்டில் பிடி ஆணை வேண்டாத குற்றங்கள் 66,326 ஏற்பட்டிருக்கின்றன. நமது காவல் துறைக்குப் பிடி ஆணை வேண்டாத குற்றங்கள் இந்த அளவில் இருக்கிறபோது, மது விலக்குக் குற்றங்கள் 3,06,555 ஆக இருக்கிறது. ஆகவே





இன்றையதினம் காவல்துறையில் பெரும் பகுதி கவனம், நான்கு மடங்கு ஐந்து மடங்கு மற்ற குற்றங்களைக் காட்டிலும், இந்த மதுவிலக்குக் குற்றங்கள்மேல் செலுத்தப்படுகிறது. ஆகவே இதை யோசனை பண்ணும் நேரத்தில் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் பர்மிட் உள்ளவர்கள், பெரும் பணக்காரர்கள் அல்ல, ஆனால் சாதாரணத் தொழிலாளர்கள், ஏழை எளியவர்கள், விவசாயிகள்தான். இன்றையதினம் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், குடிப் பழக்கம் நாளடைவில் குறைக்கப்பட வேண்டும். அவர்களுடைய போதை மோகத்தைக் குறைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் திட்ட வட்டமான கருத்து. பல இடங்களில் நிச்சயமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. சட்டத்தின் மூலமும் தோல்வி அடைந்திருக்கிற நிலையைத்தான் நாம் பார்க்கின்றோம். பல இடங்களில் திருட்டுத்தனமாக இந்தத் தொழிலை நடத்துகிறவர்களும் காவல் துறையில் உள்ளவர்களும் ஓர் உடன்பாடு இருக்கிற காரணத்தால் ஏராளமாகச் சட்ட மீறுதல்கள் ஏற்படுகின்றன. வேண்டுமானால் அரசாங்கம் அதனுடைய ரகசிய போலீஸ் இலாக்காவின் மூலம் இந்த மதுவிலக்கு அமுல் எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை ஆராய்ந்து அப்பொழுதாவது உண்டாக்கியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சட்ட விரோதமான கிறேன். மற்ற மாநிலங்களில் இந்த மதுவில் இருக்கும் போதை சக்தியைக் குறைத்து மக்கள் வாங்கிச் சாப்பிடும் ஒரு நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சட்ட விரோதமான செயலுக்குக் கவனத்தைச் செலுத்தவில்லை. அதைப்பற்றி இங்கு பரிசிலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த துப்புத் துலக்கும் விஷயத்தில், இந்த ஆண்டு பிடி ஆணை வேண்டாத குற்றங்கள் 61.4 சதவீதம் துப்பத் துலக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில், அதாவது 1968-ல் 60.8 சதவீதமாக இருந்து இந்த ஆண்டு உயர்ந்திருக்கிறது ஆகவே மிகக் குறைந்த அளவுக்குத்தான் இந்த வழக்குகளில் துப்புத் துலக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்றோம். அப்படியானால் சுமார் 40 சதவீதம் வழக்குகள் துப்புத் துலக்க முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? இன்றையதினம் பொதுமக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து தங்கள் பணிகளைச் செய்ய வேண்டிய போலீஸாரை நம்முடைய பெரும்பகுதி மக்கள் ஒரு பயந்த உணர்வோடுதான் நோக்குகிறார்கள். அந்த எண்ணத்தை மாற்றும் நிலையில் போலீஸ் இலாக்கா நடந்து கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அவர்களுடைய கோரிக்கைகளிலும், வாழ்க்கை வசதியில் நம் அனைவருக்கும் அக்கறை உண்டு. ஒரு கட்சி ஆளும் கட்சியாக இன்றையதினம் இருக்கலாம், பிறகு அதுவே எதிர்க் கட்சியாக வரும். ஆளும் கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் சரி இந்த இலாக்கா இருவருக்கும் சொந்தம் என்ற உணர்வு வளா

வேண்டும். அந்த முறையில் இந்த இலாக்காவின் மனோபாவம் மாறினால்தான் பொதுவாக எல்லா வகையிலும் முன்னேற்றம் காணமுடியும்.

இன்றைய தினம் சாதாரணமாக என்ன நடக்கிறது? விசாரணைக்காக என்று சொல்லி போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே பலவிதமாகத் துன்பப்படுத்தப் படுகிறார்கள். தேர்ட் டிகிரி மெதேட்ஸ் பிரயோகிக்கப்படுகின்றன. பல இடங்களில் இதுபற்றிப் புகார்கள் வந்து கொண்டிருப்பதையும் அரசாங்கம் அறியும். குற்றவாளிகளை ஒத்துக்கொள்ளச் செய்வதற்காக இந்த முறைகள் கையாளப்படுவது ஒரு நிரந்தரமான முறையாகிவிட்டது. அரசாங்கம் இந்த முறையைத் தடுத்து நிறுத்த முன்வந்தால்தான் இந்த இலாக்காவில் முன்னேற்றம் ஏற்படும். இல்லாவிட்டால் பெரும் பகுதி மக்களுக்கு இந்த நிலை தான் நீடிக்கும்.

சில சமயங்களில் லாக்கப்பில் இறந்து விட்டதாக நாம் கேள்விப் படுகிறோம். ஒவ்வொரு நேரத்திலும் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. போலீஸ் ஸ்டேஷனில் லாக்கப்பில் ஒருவரைப் போடுவதற்கு முன்னால் அவருடைய உடலில் இருக்கும் அரைஞாண்கயிற்றை முதற்கொண்டு எடுத்துவிட்ட பிறகுதான் காவலில் வைக்கின்றார்கள். ஆகவே தற்கொலை என்று சொன்னால் அது எப்படி இயலும் என்பதைப் பொதுமக்கள் அறிய விரும்ப மாட்டார்களா? இதை கட்டுப்பாடான முறையில் ஒரு பிரிஸ்டேஜ் கொஸ்சனாக போலீஸ் அதிகாரிகள் எடுத்துக் கொள்கிறார்கள். இதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, போலீஸ் அதிகாரிகளுக்கு போன் செய்தால் அவர்கள் கிடைப்பதே இல்லை. ரெவின்யூ அதிகாரிகள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று பரிசிலனை செய்ய அதிகாரம் கொடுக்க வேண்டும். இப்பொழுது ரெவின்யூ இலாக்கா மீது உள்ள மாதிரி, போலீஸ் இலாக்காவிலும் ஒரு வித கண்ட்ரோல் இருக்க வேண்டும். தாசில்தார் அளவில் இப்படிப்பட்ட ஒருவித அதிகாரம் இருக்க வேண்டும், அதற்கு அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சந்தேக கேஸ்கள் என்று பிடிக்கப்படுவதைப் பற்றித் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறோம். நான் ஒருசமயம் கும்பகோணம் ரயில் நிலையத்தில் காலை 3 மணிக்குப் போய் இறங்கினேன். அப்போது ரயில்வே ஸ்டேஷனில் இருந்த பத்து பதினைந்து பேரை சந்தேக கேஸ் என்று போலீசார் பிடித்துக் கொண்டு போனார்கள். அந்தந்த ஊர்களுக்குப் போய் சேரக்கூடிய ஏழை மக்கள் அங்கு படுத்திருக்கிறார்கள். அவர்கள் மேல் என் சந்தேக கேஸ் போட வேண்டும்? அரசாங்கத் தரப்பில் மறுக்கப்பட்டாலும் கூட, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் இவ்வளவு கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்ற நிர்ணயம் இருப்பதால்





தான் இப்படி எல்லாம் பிடித்துக் கொண்டு போகிறார்கள். அப்படி இல்லாத எந்தச் சரகத்தில் அதிகமாகக் குற்றங்கள் இல்லையோ அது பாராட்டத்தக்கதாக இருந்தால் இந்த மாதிரி சந்தேக கேஸ்கள் என்று பிடித்துக் கொண்டு போவதெல்லாம் குறையும்.

அடுத்தது மரியாதை. மாண்புமிகு சுதந்திராக் கட்சி அங்கத்தினர் அவர்கள் கூடக் கூறினார்கள். நிலவுடைமையாளர்களுக்கே போலீஸ் ஸ்டேஷனில் மரியாதைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. இன்றைக்குப் புகார் கொடுக்க வருகின்றவர்களைக் கூட நிற்க வைத்துக் கொண்டு என்ன என்று கேட்டால் புகார் கொடுக்க வருகிறவர்களே பயந்து விடுவார்கள். இன்றைக்கும் அவர்களை எஜமான் என்று சொல்லும் நிலை இருக்கிறது. போலீஸ் நிலையங்களிலே ரிசர்ச் அசிஸ்டென்ட் அல்லது கிளார்க் என்று போலீஸ் அல்லாத சிவிலியனைப் போட்டு அவர்களிடத்தில் புகார்களைக் கொடுத்து அவ்வாறு புகார்களைக் கொடுத்தற்கு அத்தாட்சியும் கொடுக்க வேண்டும். அப்போது தான் பதில் வரவில்லை என்றால் புகார் கொடுத்தது பற்றிப் பின்னால் மேலதிகாரிகளிடத்தில் எடுத்துக் கூற முடியும். போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கப் போகிறவர்களையும், குற்றங்களை விசாரிக்கும்போதும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எந்தக் கட்சி அரசாங்கத்தில் இருக்கிறது என்பது பிரச்சினை இல்லை. ஜனநாயக அரசாங்கத்தில் போலீஸ் நிலையங்கள் தான் கிராமங்கள் உட்பட எல்லா இடங்களிலும் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளால் மக்களுக்கு இடர்ப்பாடு ஏற்படக் கூடாது. நன்மைகள் செய்யவேண்டும்.

ஃபயர் சர்விசை குடிதண்ணீர் அளிப்பதற்காகப் பயன் படுத்தப்பட்டது என்று அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைக் காண மகிழ்ச்சி. அந்த வகையிலே அரசாங்கத்தில் பிரதிநிதியாக போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். மரியாதை கொடுத்துப் பழகுவதற்கு போலீசாருக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். காவலர்களுக்குக் கொடுக்கப்படும் ஓரியன்டேஷன் கோர்ஸ் பழைய ஏகாதிபத்திய முறையிலேயே இருப்பதாக அறிகிறேன். அதை ஜனநாயக முறையிலே அமைக்க வேண்டும்.

பப்ளிக் ரிலேஷன்ஸ் என்ற அம்சம் குறைவாக இருக்கிறது. போலீஸ் இலாகாவைப் பற்றி இந்த சட்ட மன்றம் தவிர வேறு எங்கும் பேச முடியாது. மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் எல்லாம் பேச முடியாது. அப்படிப் பேசுவதற்கு வாய்ப்பளித்தால் அந்தந்த மாவட்டங்களில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை ஆங்காங்கே சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியும். பப்ளிக் ரிலேஷன்ஸ் என்ற அம்சத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீசாருக்குத் தகவல் கொடுப்பதற்காக 'இன்பார்மர்' என்று வைத்திருப்பதில் பதிப்பிற்குரியவர்கள் வரமாட்டார்கள்; ரவுடிகள்தான் இந்தத் தொழிலுக்கு வருகிறார்கள். இதனால் ஒரு தவறுதலான உறவு ஏற்படுகிறது. இதை அவர்கள் பயன்படுத்தி தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பது என்றால் ஒரு சங்கடமான சூழ்நிலை ஏற்படுகிறது. ஆக, இதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் இயக்கத்தைப் பொறுத்தவரை விவசாயிகளாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும் போலீசார் நல்ல முறையில் நடத்த வேண்டும். அவர்கள் சட்டப்படி அமைதியான முறையில் ஏதேனும் செய்தால் அதில் குறுக்கிடாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

குமரி மாவட்டத்தில் 1969 நவம்பர் மாதம் நிர்வாகம் 103 தொழிலாளர்களை நீக்கியது சட்ட விரோதமானது, லாக் அவுட்டுக்குச் சமமானது என்பதால் அதை எதிர்த்து 1970 பிப்ரவரி 11-ம் தேதி சத்தியாகிரகம் நடத்தினார்கள். விளவங்கோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆறு பேரை எந்தவிதமான காரணமும் இல்லாமல் கைது செய்து அவர்களை அடித்து போலீஸ் வண்டியில் ஏற்றி, அருமனை என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். குமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர் பிரச்சினை பற்றிய புகார்கள் என்னிடம் இருக்கின்றன. இப்படிப்பட்ட விஷயங்களில் அரசு வரையறைகளை ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளோ, தொழிலாளர்களோ அல்லது மாணவர்களோ அமைதியான முறையில் கிளர்ச்சி செய்தால் அதில் குறுக்கிடாது சட்டப்படி பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் முதலாளிகளுக்கோ, நிலப்பிரபுக்களுக்கோ பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது. சட்டப்படி என்ன பாதுகாப்புக் கொடுக்க முடியுமோ அதை மட்டும் கொடுக்க வேண்டும்.

மாணவர்கள் சங்கம் என்ற பெயரில் பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மாணவர்கள் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் மார்க்சிஸ்டு மாணவர்கள் சங்கம் என்று இருந்தால் அதிலுள்ள மாணவர்களுடைய பெற்றோர்கள் போலீசாரால் அணுகப்பட்டு எச்சரிக்கை கொடுப்பதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் சங்கங்கள் இருக்கின்றன. அதே போன்று காங்கிரஸ் மற்றக் கட்சிகளின் மாணவர்கள் சங்கங்கள் இருக்கின்றன. இன்று எல்லாக் கட்சிகளின் மாணவர்கள் சங்கங்கள் இருக்கும்போது இதிலே மட்டும் ஏன் போலீஸ் தலையிட வேண்டும்? இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பது நல்ல பாரம்பரியமற்ற முறையாகும்.

29—1—1970-ம் தேதியன்று மதுரையில் கீழமாசி வீதியில் இரயில்வே ஸ்டேஷனில் இருந்து சாமான் ஏற்றிக் கொண்டு வந்த வண்டிக்காரரை போலீஸ்காரர் அடித்துவிட்டார். தொழி





லாளர்கள் அதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். நம்முடைய போலீஸ் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்பது வேறு விஷயம். ஆனால் ஜனநாயக அடிப்படையில் உள்ள நிர்வாகம் என்ற முறையில் கடுமையான குற்றங்கள் புரிகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. கள்ளமார்க்கெட்காரர்கள், கள்ளக் கடத்தல்காரர்கள், கொலை செய்பவர்கள் ஆகிய குற்றம் செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். சமுதாயத்திற்கு நன்மைகளைச் செய்யும் வகையில் ஜனநாயக முறையில் இயங்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

எங்கள் ஜில்லாவில் பெண்ணாடம் பகுதியில் நக்ஸல்பாரிகள் தொந்தரவு காரணமாக குற்றம் செய்யாத ஒருசில நபர்களையும், சம்பந்தப்படாத நபர்களையும் பிடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களைப் பிடிப்பதில் எனக்கோ, எங்கள் கட்சிக்கோ ஆட்சேபணை இல்லை. அந்த நிலையில் சம்பந்தபடாத சிலரைப் பிடித்து போலீசார் கஷ்டப்படுத்துவதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒரு குடும்பத்தில் குற்றம் செய்தவரை வீட்டை விட்டே விரட்டி விட்டார்கள். அவர் தற்போது அந்த வீட்டிலே இல்லை, அந்த வீட்டில் இருப்பவர்களுக்கும், குற்றம் செய்தவருக்கும் இப்போது எந்தவிதமான தொடர்பும் இல்லை. இருந்தும், அவருடைய சொத்தைப் பறிமுதல் செய்கிறார்கள். இவ்வாறு சொத்தைப் பறிமுதல் செய்வது வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்டது. அது இப்போது இருக்கக் கூடாது. அவருக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள், மனைவிமார்கள் இருக்கிறார்கள், சொத்தைப் பறிமுதல் செய்துவிட்டால் அவர்கள் எப்படி வாழ முடியும்? வெள்ளைக்காரன் காலத்து முறை தொடர்ந்து இருப்பது கூடாது, இதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சி.ஐ.டி. போலீசாரை நல்ல முறையில் பயன்படுத்தி, உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டில் நல்லவர்கள் வாழ வசதியாக இருக்கும்.

சிதம்பரம் தாலுகாவில் அடிக்கடி பல கொலைகள் நடந்து கொண்டிருக்கிறது. அதன்பேரில் சி.ஐ.டி.க்கள் நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சிதம்பரம் தாலுகாவில் 13 கொலைகள் நடந்திருக்கின்றன, இவையெல்லாம் நடக்கக் கூடாது. ஆகவே சி.ஐ.டி. இலாகாவை நல்லமுறையில் பயன்படுத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சிதம்பரம் தாலுகாவைப் பொறுத்தவரையில், தென்ன மரங்களிலிருந்து கள் ஏராளமாக இறக்குகிறார்கள். கள் இறக்கும் பழக்கம் வந்துவிட்டது. கள்ளுக்கடைகளை எடுத்துவிட்டு ஜனங்களுக்கு விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். அப்படிச் சொல்லக் கூடியவன் அல்ல நான். குடிக்காதவர்களின் வாயில் கள்ளை விட்டு அவர்கள் குடித்தது போல் கேஸ் போடுவதாக அறிகிறேன். நல்லவர்கள் வாயில் கள்ளை ஊற்றுகிறார்கள். அதற்கு சாட்சியமும் தயார் செய்கிறார்கள். அப்படி சாட்சியம் தயார் செய்வதை எடுத்துவிட வேண்டும். இதனால் ஆதிதிராவிட மக்கள்தான் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். நல்லவர்கள் வெளியே வரவே பயப்படுகிறார்கள். ஒரு நல்லவரைப் பார்த்து, இவர் குடித்தார் என்று சொன்னால் என்ன செய்வது என்று வெளியே வர பயப்படுகிறார்கள். ஆகவே இதுபற்றி சாட்சியங்கள் தயார் செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் போலீஸ்காரர்களுக்கு வீடுகள் சரியாகக் கிடைப்பதில்லை. வெள்ளக்காரன் காலத்தில் கட்டிய வீடுகள் அப்படியே இருக்கின்றன. அவற்றை நல்லமுறையில் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும். எல்லா வகுப்பினருக்கும் வீடுகள் செப்பனிட்டுக் கொடுக்கையில், போலீஸ்காரர்களுக்கு மட்டும் வீடுகளை செப்பனிட்டுக் கொடுக்காதிருப்பது நல்லதல்ல. மேலும் போலீஸ்காரர்களுக்குள்ள வீட்டுக் கஷ்டம் தீர்க்கப்பட வேண்டும்.

சாட்சி சொல்வதற்கென்று சில ஆட்களைத் தயார் செய்து வைக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டம் இருக்கவே படாது. ஒருவரைப் பிடித்துச் சென்று அவருக்கு சோறு போட்டு, டிபன் போட்டு அங்கேயே வைத்திருக்கிறார்கள், பொய் சாட்சி சொல்வதற்காக. ஒரு கோர்ட்டுக்குச் சென்று சாட்சி சொன்ன பிறகு அடுத்த கோர்ட்டுக்கு கொண்டு போவது என்றிருக்கும் நிலைமை போலீஸ் இலாகாவில் நிறுத்தப்பட வேண்டும்.

போலீஸ்காரர்கள் தங்கள் கடமையைச் செய்யும்போது அவர்களுக்கு நிறைய ஆபத்து ஏற்படுகிறது. எங்கள் ஊரில் மாணிக்கம் என்ற ஒரு போலீஸ்காரர் குத்தப்பட்டு செத்து விட்டார், பஸ் ஸ்டாண்டில் பொதுமக்கள், எஸ்.பி. நான் எல்லாரும் இருந்து எடுத்து அடக்கம் செய்தோம். அவருக்கு ஐந்தாறு பிள்ளைகள். அவர் சாகாமல் இருந்தால் இன்னும் பதினைந்து ஆண்டுகள் வேலை செய்யலாம். ஆகவே போலீஸ்காரர்கள் வேலை செய்ய இருக்கிற காலத்திற்குள்ள சம்பளத்தை விட சற்று அதிகமான அளவில் போலீஸ்காரர் குடும்பங்களுக்குக் கொடுத்தால் நன்றாக யிருக்கும், இப்படிப்பட்ட கேஸ்களில். போலீஸ்காரர்கள் வெளியே சென்று விட்டால் திரும்பி வந்தால்தான் நிச்சயம் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே போலீஸ்காரர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து நல்ல உதவிகள் செய்ய வேண்டும்.



போலீஸ்காரர்களுக்கு காஷுவல் லீவ் 12 நாட்கள் என்றிருக்கிறது. அவர்களுக்கு குடும்பத்தில் என்ன கஷ்டம் வந்தாலும் அவர்களுக்கு லீவ் கொடுப்பதில்லை என்ற குறை இருக்கிறது. அவர்களுக்கு லீவ்சாங்ஷன் செய்வது கிடையாது. ஆகவே பலர் வீட்டில் ஏதாவது கஷ்டம் நேர்ந்தால் சொல்லாமல் ஓடி விடுகிறார்கள். அல்லது ஆப்சென்ட் ஆகி விடுகிறார்கள். ஓடிப்போய் விட்டாய் என்று அவர் மீது நடவடிக்கை எடுத்து டிஸ்மிஸ் செய்து விடுகிறார்கள். ஆகவே அவர்களுக்குள்ள நிலைமையை உணர்ந்து லீவ் கொடுக்க வேண்டும்.

ரிசர்வ் போலீஸ்காரர்கள் மாதத்திற்கு ஒரு நாள் கூட வீட்டில் தங்குவதில்லை. ஒரு வாரத்தில் ஒரு நாள் லீவு ஆஃப், ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை. லீவ் நாட்களில் வேலை செய்தால் ஒரு ரூபாய் கொடுக்கிறார்கள். நான்கு நாட்கள் வேலை செய்தால் இரண்டு நாட்களுக்குத் தான் சம்பளம் கொடுக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும்.

ஜெனரல் ஆஸ்பத்திரியில் ட்யூட்டி வேலை செய்யப் போனால் டியூட்டி முடிந்த பிறகு வெயிட்டிங் என்ற வேலை கொடுக்கிறார்கள். இது இந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் இருந்து வருகிறது. இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 6 மணியிலிருந்து 8 மணிவரை ட்யூட்டி. 8-ல் இருந்து 10 வரை வெயிட்டிங். 2-ல் இருந்து 4 மணி வரை வெயிட்டிங், 4-ல் இருந்து 6 மணி வரை ட்யூட்டி, 10 முதல் 12 வரை வெயிட்டிங், 12 முதல் 2 மணி வரை ட்யூட்டி. இப்படி ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து கொண்டே போனால் மனிதன் களைப்படைந்து போகாமல் இருக்க முடியுமா? ஆகவே அவர் சிறிது தூங்கி விழத்தான் செய்வார். அப்போது அதை யாராவது பார்த்து விட்டால் அவர்மேல் நடவடிக்கைகள் எடுத்து டிஸ்மிஸ் செய்யப்படுகிறார். ஆகையினால் இந்த முறைகளை மாற்றி அமைக்கக் கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, இந்த 1970–71-ம் ஆண்டுக்கான காவல் துறை மானியத்தின் மீது என் கருத்துக்கள் சிலவற்றை இந்த அவைமுன் வைக்கவிரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய மாநிலத்தில் தான் காவல்துறை மிகுந்த சிறப்போடு பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பது எல்லாத் தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப் படுகிற ஒன்றாகும். 1969–70-ல் காவலர்களை தேர்ந்தெடுத்தபோது குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களிடையே இருந்து 21.2 சத வீதமும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிலிருந்து 37.3 சத வீதமும் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதற்காக உள்ளபடியே இந்த அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1961-ல் இருந்து 1969-ம் வரை உள்ள மதுவிலக்குக் குற்றங்கள் இதில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி

மதிப்பிற்குரிய மார்க்ஸிஸ் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் கட்சி சார்பில் பேசுகிற நேரத்தில், கொள்கை அளவில் மதுவிலக்குக் கொள்கை தோல்வியுற்றிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். 1960-ம் ஆண்டில் 93,497 வழக்குகள் போடப்பட்டன. 1969-ல் 306,555 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. எனவே கொள்கை அளவில் மதுவிலக்கு கொள்கை தோற்றிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். மதுவிலக்குக் குற்ற வழக்குகள் வருடாவருடம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், காவல் துறையினர் மிகுந்த சுறுசுறுப்போடு பணியாற்றுவதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. 1969-ல் 306,555 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்றால், காவல்துறையின் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக் கூடியவர்கள் மிகுந்த சிரமத்தோடு, கஷ்டப்பட்டுத்தான் அந்தக் கேஸ்களைப் போட்டிருக்கிறார்கள் என்று ஏன் பொருள் கொள்ளக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

1960-ம் ஆண்டில் காவல் நிலையங்களில் இருந்த காவலர்கள்தான் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் வழக்குகள் அதிகமாகியிருக்கின்றன. ஆகவே வளர்ந்து வருகிற மக்கள் தொகை அடிப்படையில், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் சிறிது அதிகப்படியான காவலர்களை நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு காவல் நிலையத்தின் எல்லை பத்து பதினைந்து மைல் சுற்றளவிற்கு இருக்கிறது. ஒரு கிராமத்தில் ஒரு கலவரம் நடக்கிறது என்றால், அங்கு காவல் துறையினர் விரைந்து சென்று அந்தக் கலவரத்தை அடக்குவதற்காக பத்து நிமிடங்களில் செல்ல வேண்டுமென்றால், அப்படி விரைந்து செல்வதற்கு போதுமான வாகன வசதிகள் காவல் நிலையங்களில் இல்லை. ஆகவே ஒவ்வொரு காவல்நிலையத்திற்கும் ஒரு பழைய ஜீப் காராவது கொடுத்தால் தான் சட்டம், ஒழுங்கு இவற்றை நிலைநாட்டுவதன் மூலம் அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும்.

கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு ஆண்டு காலமாக இந்தக் காவல் துறைப் பொறுப்பை ஏற்று மிக நல்லமுறையில் பணி புரிந்து வந்தார்கள். அதற்குப் பிறகு இன்றைய முதல் அமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் காவல் துறைப் பொறுப்பை ஏற்ற காலத்தில் எதிர்க் கட்சியிலிருந்து, மாண்புமிகு கலைஞர் அவர்கள் கோபக்காரர் ஆயிற்றே, இத்துறை இவர்களிடம் செல்கிறதே, எதிர்க் கட்சியை அடக்கி ஒடுக்கி, நசுக்கி விட அதைப் பயன்படுத்திக் கொள்வார்களே என்று அஞ்சி மேடைகளிலும் பேசி வந்தார்கள், பத்திரிகைகளிலும் எழுதி வந்தார்கள். ஆனால் அத்தனைக்கும் மாறாக தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு எடுப்பதில், எதிர்க் கட்சிகளை அணைத்துச் செல்வதில் அண்ணா அவர்களுக்குப் பிறகு இரண்டாவது அண்ணாவாக மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்தத்



துறையின் பொறுப்பையேற்று பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

குறிப்பாக, எங்கள் தஞ்சை மாவட்டத்தில் சென்ற ஆண்டு அறுவடை நிச்சயமாக நடக்குமா என்ற அச்சநிலை இருந்தது. அப்போது விவசாயத் தொழிலாளர் தோழர்களும், நிலச்சுவாந்தார்களும் பாராட்டத்தக்க வகையில் தஞ்சை மாவட்டத்தில் காவல் துறையினர் நன்கு பணியாற்றினார்கள் என்றால், அந்தப் பெருமை நம் முதல் அமைச்சர் அவர்களையே சாரும். சட்டம், ஒழுங்கு, அமைதி எல்லாம் கெட்டுவிட்டது என்று சிறிது நாட்களுக்கு முன்னதாக எதிர்க் கட்சித் தரப்பில் உரத்த குரலில் பட்டது. அவர்கள் அத்தனை பேர்களும் வெட்கப்படக் கூடிய அளவிற்கு இன்று நம் மாநிலத்தில் சட்டம், அமைதி, ஒழுங்கு அவை கட்டிக் காக்கப்பட்டு வருகிறது என்பதைக் கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியக் கோரிக்கைமீது என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

குறிப்பாக, தமிழ் நாட்டிலுள்ள போலீஸ் இலாகா சீராகவும் சிறப்பாகவும் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வந்தது என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் காவல் துறையில் தலையீடு அதிகமாகப் போய்விட்ட காரணத்தினால் சில விடங்களில் பொது மக்களுக்கு பல இன்னல்கள் படிப்படியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக போலீஸ் இலாகாவில் பணியாற்றுகிறவர்களுக்கு, காவலர்களுக்குக் கொடுக்கப்படுகிற நாள் படி, பயணப்படி இன்னும் துணி மணிகள் போன்றவை சிறந்த முறையில் இல்லை. ஆகவே அவர்களுக்கு நாள்படி அதிகமாகக் கொடுக்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள போலீஸ் நிலையங்களில் வேலை பார்க்கிற காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஒரு மோட்டார் சைக்கிளாவது கொடுத்தால்தான் அவர்கள் தங்கள் வேலைகளை நல்ல முறையில் செய்ய வாய்ப்பிருக்கும். குறிப்பாக எங்கள் பகுதியில் திருமானூர் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 15 மைல் தூரத்திற்கு நல்ல ரோடு வசதியில்லாத நிலையில், குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாக போலீஸ்காரர்களும், சப்-இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பொதுமக்களின் ஆதரவைத் தேடித் தான் செல்ல முடியும். எந்தக் கேசைக் கண்டுபிடிக்கப் போகிறார்களோ அந்தக் கேஸ்காரர்களின் தயவால்தான் திரும்பி வர முடியும். அதுபோன்ற கிராமப்புறங்களில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ரோடு வசதிகள் இல்லாவிட்டால், அந்த போலீஸ் ஸ்டேஷனில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களுக்காவது மோட்டார் சைக்கிள் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக எங்கள் பகுதியில், 15 மைல் தூரம் நல்ல சாலை வசதியே இல்லை. ஏலாக்குறிச்சி, திருமானூருக்குக் கிழக்கே இருக்கிறது. எனவே, 7 மைல்களுக்கு ஒரு போலீஸ் நிலையம் வேண்டும். ஏலாக்குறிச்சியிலும் திருமழபாடியிலும் ஒவ்வொரு போலீஸ் நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லால்குடி தாலுக்காவைச் சேர்ந்த டால்மியாபுரம் போலீசார் அரியலூர் தாலுக்காவைச் சேர்ந்த புதுக்கோட்டை; ஆகிய இடங்களில் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. 10 மைல் தூரம் வந்து கண்டுபிடிக்க ரோடு வசதி இல்லை. வேண்டுமான அளவிற்கு போலீசார் இல்லை. ஏதாவது நிகழ்ச்சி ஏற்பட்டு, போலீஸ் அனுப்ப வேண்டுமென்று சொன்னால் ஸ்டேஷனில் ஆட்கள் இல்லையென்று சொல்லுகிறார்கள். வேலைவாய்ப்பு அதிகமாக இல்லாத இந்தக் காலத்திலே போலீஸ் இலாக்காவிலே ஆள் பற்றுக்குறையாக இருப்பது என்பது சரியல்ல. ஆட்கள் அதிகமாக இருந்தால்தான் வேலை வாய்ப்பு உண்டாகும். எனவே, போலீஸ் இலாக்காவில் பணியாற்றுபவர்களுக்குச் சிறந்த உணவும் குற்றங்குறைகளைத் திட்டவட்டமாகக் கண்டுபிடிக்க காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியாக வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக போக்குவரத்து வசதி இல்லாத இடங்களிலே நல்ல நிலையமாக இயங்கும் வகையில் போலீஸ் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே பலவிடங்களில் கள்ளைக் குடித்துவிட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 30, 40 என்று சென்ற மாதம் பேப்பரில் படித்தோம். கள்ளைக் குடிப்பதே தப்பு. கள்ளைக் குடித்துவிட்டிருப்பவர்களைக் கேட்பாரற்றுக் கிடக்கிறது இந்த இலாக்கா. வீதி வீதியாக இருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலும் சரி, திருச்சி ஜில்லாவிலும் சரி, திருமழபாடிக்குப் பக்கத்தில் கூட்டம் கூட்டமாக கள்ளைக் கொண்டு வந்து விற்கிறார்கள். வேடிக்கையாகச் சொல்லவில்லை, காலையில் 7 மணி 8 மணிக்கு வந்து கொள்ளிடக் கரையில் பார்த்தால் தெரியும். அதற்கு அமைச்சரவர்கள்கூடச் சொல்லலாம், போலீசுக்குச் சொல்வதுதானே என்று. போலீசுக்குச் சொன்னால்கூட கவனிக்கப்படும் முறையில் கவனிக்கப்படவில்லை. இம்மாதிரிக் குற்றங்கள் நீக்கப்பட வேண்டுமென்றால் குறிப்பாக, கூடுதல் நிலையங்கள் வேண்டும். அங்கே பணியாற்றக்கூடியவர்களுக்கு நல்ல வாய்ப்பும் வசதியும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து இந்த போலீஸ் இலாக்கா நல்லமுறையில் செயல்படுத்துவதற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கொள்ளைக் குற்றங்களும், திருட்டுக் குற்றங்களும் அதிகப்படியான அளவில் நடக்கின்றன. திருட்டுக் குற்றங்களைக் கண்டுபிடிக்க என்று தனியாக ஒரு இலாக்காவை அமைத்து தமிழகம்





முழுவதும் எங்கெங்கு திருட்டுகள், கொள்ளைகள் நடக்கிறதோ, அவைகளைத் திறமையாகக் கண்டுபிடிக்கப்பட்டு, பொதுமக்கள் நல்லமுறையில் பாதுகாக்கப்பட ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, நல்ல முறையில் அந்த இலாக்கா இயங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தது, இந்தக் கோட்டா முறை. மாத இறுதியிலே எத்தனை கேஸ் என்று கோட்டாமுறை இருப்பதால், வசதி படைத்த குடித்தவர்களை விட்டுவிடுகிறார்கள். அழுக்கு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு பஸ் ஸ்டாண்டில் படுத்துக் கிடப்பவர்களைப் பிடிக்கிறார்கள். ஜெயங்கொண்டம், அரியலூர், கீழப்பழூர், போன்ற இடங்களில் பஸ் ஸ்டாண்டுகளில் படுத்திருந்தால் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களிலும் பெரும்பாலும் இருக்கும் என்று கருதுகிறேன், " அதை " அவர்கள் வாயில் ஊற்றி, கேஸ் பிடிக்கும் முறையை அறவே நீக்க வேண்டும். ஏழைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

பலவிடங்களில் லைசென்ஸ் பெற்றுச் சீட்டாடுகிறார்கள். அப்படி அவர்கள் பணம் வைத்து ஆடினாலும் பிடிக்காமலிருக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே, பொழுதுபோக்கிற்காக, ரோட்டிலேயோ. அல்லது வீட்டிலேயோ பணம் வைக்காமல் ஆடினால்கூட பிடிக்கிறார்கள். அவ்வாறு செய்வது நல்லமுறை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்தப் போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் சிறந்த முறையில் பணியாற்ற விடவேண்டும்.

குறிப்பாக, கார்களில் வரும் எண்கள் பழைய ஆங்கில எழுத்துக்களிலேயே இருக்கின்றன. கார்கள், பஸ்கள், லாரிகள், சின்ன கார்களிலெல்லாம் தமிழ் எழுத்துக்களைப் போட வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். நமது ஆட்சி தமிழக ஆட்சியாக மலர்ந்திருப்பதால் முதலமைச்சரவர்கள் கார்களில் தமிழ் மொழியைப் பதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லாரிகளில் ஜனங்களை ஏற்றிவருவதில், 10 பேர் 20 பேர் என்று வந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கூட லாரியில் போனபொழுது மரணமடைந்த செய்தியைப் படித்தோம். எனவே லாரிகளில் 2 பேர், 3 பேர்களுக்கு மேல் வரும் முறையை நிறுத்த வேண்டும். பெரம்பலூரிலிருந்து மெட்ராசுக்கு வரும் லாரிகளில் ஒரு நாளைக்கு 20 பேர், 10 பேர் அளவில், 5 பேர், 10 பேர் என்று ரெகுலராக வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த முறைகள் நீக்கப்பட வேண்டும்.

போலீஸ் இலாக்கா திறமையாக நடக்க வேண்டுமென்றால், போலீஸ் இலாக்காவில் ஆட்களை அதிகமாக ஆக்க வேண்டும். நல்ல வசதிகளும் இருக்க வேண்டும். குறிப்பாகப் பல கிராமங்களில் ஏதோ மருத்துவ இல்லங்களுக்குப் போவதைப்போல் தோன்

[திரு. ஆர். கருப்பையா] [1970 ஏப்ரல் 3

சலாக மெலிந்து இருக்கிறார்கள். எனவே. அவர்களுக்கு நல்ல வசதியும் வாய்ப்பும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன் .

* திரு. பி. வேலுசாமி: தலைவரவர்களே, எனது வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், இருக்கின்ற போலீஸ் டிபார்ட்மெண்டிலேயுள்ள காவலர்களைப் பொறுத்தவரையிலும், இந்தியாவிலேயே சிறந்த காவலர்கள் என்ற பெயரைப் பெற்றிருக்கிறோம். தமிழ் நாட்டில் அமைதியான சூழ்நிலை இருக்குமானால் அது நமது காவலர்களை மையமாகக் கொண்டு அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக எங்கோ திருடியவர்களும், எங்கோ குற்றம் செய்பவனும், இங்கேயும் தவறாக நடக்கலாம் என்ற எண்ணத்தோடு தமிழகத்திற்கு வந்தால், இங்கேயும் நிச்சயமாக அப்படிச் செய்ய முடியாது என்பதைத் தமிழக காவலர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நாடு முழுவதும் ஒப்புக்கொள்ளுகின்ற நிலைமை திருட வந்தவர்கள் தமிழகத்தில் பிடிக்கப்பட்டார்கள். ஆந்திராவிலிருந்து வந்தவர்கள் தமிழகத்திலே பிடிக்கப்பட்டார்கள். இம்மாதிரியாக தமிழகத்தின் காவலர்கள் மிகவும் சிறப்பான காவலர்கள் என்பதை நாடு முழுவதும் ஒப்புக்கொள்ளுகின்ற நிலைமையாகும். இந்த நாடே அவர்களிடத்தில் பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய நிலைமைகள் உருவாகியிருப்பது உண்மை. ஆயினும்கூட இந்தச் சிறப்பான அம்சங்களிலே, மீண்டும் சிறப்பு பெற வேண்டுமென்பது தமிழக மக்களின் பொதுவான கருத்தாக இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளைப் பார்த்தால் சென்ற ஆண்டிலே 1968-ஆம் ஆண்டிலே, 60.8-ம், 1969-ஆம் ஆண்டிலே 61.3 சதவிகிதமும் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மற்றப்படியும் குற்றம் இருக்கிறது என்பது நமக்குத் தெரிய வருகிறது. இங்கே குற்றங்களைக் கண்டுபிடிக்கும்பொழுது காவலர்களின் உயர் அதிகாரிகளுக்கு, அவர்களின் கவனத்திற்கும் சில விஷயங்களைச் சொல்ல முயற்சி செய்கிறோம். சாதாரணமாக போலீஸ் டிபார்ட்மெண்டிலே பலவிதமான பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். Traffic, law and order, crime, vigilance department என்று வைத்திருக்கிறார்கள். இதிலே போலீஸ் இலாக்காவிற்குள்ளேயே சட்டத்தை அமல் நடத்தும் பகுதியில் ஏதாவது தவறு வந்தால் அந்தத் தவற்றை நிவர்த்தி செய்ய என்று டிபார்ட்மெண்டிலேயே ஏதாவது ஒரு பிரிவை ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும். சாதாரணமாக போலீஸ் டிபார்ட்மெண்டிலேயிருக்கும் பலரும் இந்த சமூக விரோத சக்திகளோடு இணைந்து, உறவுகொண்டு அவர்களும் தவற்றைப் பலவிடங்களில் செய்கிறார்கள். அம்மாதிரி செய்கைகளைத் தடுக்க வேண்டுமென்றால்,



1970 ஏப்ரல் 3] [திரு. பி. வேலுசாமி]

போலீஸ் இலாக்காவிற்குள்ளேயே ஒரு பிரிவை ஏற்படுத்தி அம்மாதிரியாக நடக்கின்ற தவற்றைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அத்துடன், முக்காடு கேஸ் என்று பல நண்பர்கள் சொன்னார்கள். சமூகத்திலே கல்வி வளர்ந்த நிலைமையிருக்கின்ற நேரத்தில், சமூகத்திலே நகரமும், கிராமங்களும் ஒன்றாக வளர்ந்து வரும் இந்தக் காலத்திலேயும் முக்காடிட்டுக் கொண்டு போகின்றவர்களைப் பொதுமக்கள் பிடிப்பது என்பது வெட்கப்பட வேண்டிய விஷயம். சமூகத்திலேயிருப்பவர்களிலே ஏழைகள், சாதாரணமாக உழைப்பவர்கள், ஒன்றும் அறியாத அப்பாவிகளா இருப்பவர்கள் போன்றவர்கள் சாதாரணமாக முக்காடு கேஸிலே கைது செய்யப்படுவதைப் பார்க்கிறோம். என்னுடைய வேலைக்காரனைக் கூட கைது செய்திருக்கிறார்கள். இரவு 12 மணிக்குச் சென்றான் என்று கைது செய்து உள்ளே வைத்துவிட்டார்கள். போலீஸ் டிபார்ட்மெண்டிலே, அவன் என்னிடத்தில் 12 மணிக்கு இருந்தான் என்று சொல்லியும்கூட, கேஸிலே போட்டுவிட்டோம், ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரியான நிரபராதிகள் பலர் இம்மாதிரியான கேஸ்களிலே இப்படி அநியாயமாகத் தண்டிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவது சிறப்பாக இருக்கும்.

107-வது செக்ஷன்படி கேஸ் ஒன்று போடப்படுகிறது. இந்தக் கேஸிலே என்னைப்போன்ற அரசியல் வாதிகள் கைதாகிறார்கள். முன்பு, இப்பொழுது ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் கைது செய்யப்பட்டார்கள், இப்போழுது நாங்கள் கைது செய்யப்படுகிறோம். இரண்டு பக்கங்களிலே ஏதாவதொரு காரணத்தால் மோதல் ஏற்படுகிறது என்று சொல்லி அநியாயமாக, அரசியல் சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலை வருகிறது. அத்தகைய நிலையில் என்னைப்போன்ற கைது செய்யப்பட வேண்டியவர்கள் கைது செய்யப்படுவதில் தவறு இல்லை. அதிலும் நிரபராதிகள் மாட்டிக் கொள்கிறார்கள். வாஸ்தவமாகவே நாங்கள் கைது செய்யப்பட வேண்டியவர்களாகயிருந்தால் அவர்களுக்கு என்று கேஸ் போட வேண்டுமே தவிர, நிரபராதிகள் மாட்டிக்கொள்வது சிறப்பாக இருக்காது என்று கூறிக் கொள்கின்றேன்.

இந்தப் போலீஸ் இலாக்காவில், பிடித்து வைப்பவர்களைச் சாதாரணமாக 24 மணி நேரம் போலீஸ் ஸ்டேஷனில் வைக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் ஒரு வாரம், 10 நாட்கள் என்று வைத்து விசாரணைக்காக வைத்திருக்கிறார்கள். அப்படி வைத்திருப்பது தப்பு, தவறு என்று சொல்லவில்லை. ஆனால் இருக்கும் சட்டத்தை, காவலர்களே சட்டத்தை மீறுவது என்பது சரியாக இல்லை. வேண்டுமானால் சட்டத்தைக் கூடத் திருத்தி, அப்படி விசாரணைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று செய்தால் நியாயமாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சட்டத்தை அமல் நடத்துபவர்கள் சட்டத்தை மீறுவது என்ற நிலைமை வருமானால், அது முறையாக இருக்காது. அம்மாதிரி இருக்கிற நிலைமையை மாற்றி, சட்டத்திற்கே திருத்தம் கொண்டு வந்தால்கூட தவறு இல்லை என்று கருதுகிறேன். போலீஸ்காரர்களுக்கு சங்கம் அமைத்துக்கொள்வதற்கு உரிமை கிடையாது. சங்கம் வைக்கும் உரிமை எப்பொழுது இல்லையோ, அப்பொழுது அவர்களுடைய நியாயமான தேவைகளை உணர்ந்து, அவற்றைக் கவனிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய தலையாய கடமையாகும் என்று கருதுகிறேன். சங்கம் வைக்கின்ற உரிமை இல்லாத அவர்களுக்கு . . . (மணி அடிக்கப்பட்டது)

* **திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியத்தை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயக அமைப்பிலே சட்டசபையும், நிர்வாகமும் ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கின்றன. சட்ட சபையில் நாம் சிறந்த கொள்கைகளை வகுக்கிறோம். அவைகளை நடைமுறைக்கு கொண்டுவருவது நிர்வாக அதிகாரிகள்தான். நிர்வாக அதிகாரிகள் நல்ல முறையிலே நேர்மையாகவும், ஒழுங்காகவும் நம்முடைய எண்ணத்தைப் பிரதிபலிக்காவிட்டால், நாட்டு மக்களிடையே கசப்பு உணர்வு ஏற்படுகிறது. குறிப்பாக ஆட்சியாளரைப்பற்றி தவறான எண்ணம் நாட்டில் பரவி விடுகிறது. கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியமாக இருக்கும் அதிகாரிகள் எந்த அளவுக்கு மனிதாபிமானத்தோடு, நேர்மையாகவும், ஒழுங்காகவும் தங்களுடைய கடமைகளைச் செய்கிறார்களோ, அந்த அளவுக்கு நல்லது. அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்வது கூட சரியான கருத்து அல்ல. சம்பளம் வாங்காமல் பணி செய்பவர்கள் தான் ஒத்துழைக்க வேண்டும். சட்டத்தின் அடிப்படையில் சம்பளம் பெற்று பணியாற்றுகிறவர்கள் மனிதாபிமானத்தோடு தங்கள் கடமைகளை நேர்மையாகவும், ஒழுங்காகவும் மக்களுக்கு ஆற்றிவர வேண்டும். இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற தி.மு.க. நல்ல கொள்கைகளை மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட வேண்டும் என்று வகுத்திருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சியை மேலும் பாராட்ட பல வாய்ப்புகள் இருக்கின்றன. சில இடங்களில் அதிகாரிகளினுடைய தவறு, அதிலும் குறிப்பாக கீழ்நிலையில் உள்ள அதிகாரிகள் செய்கின்ற தவறு அந்த வாய்ப்பை கெடுத்து விடுகிறது. மக்கள் எல்லோரும் படித்தவர்கள் அல்ல. ஆகவே, இதற்கும், ஆட்சிக்கும் என்ன சம்பந்தம் என்று எண்ணிப் பார்க்கக்கூடிய நிலையில் மக்கள் இல்லை. ஒரு சிறிய தவறு ஏற்பட்டால் கூட இந்த ஆட்சியிலா அப்படி நடக்கிறது என்ற தவறான எண்ணம் ஏற்பட்டு விடுகிறது மக்களிடையே.

சென்னை நகரை எடுத்துக்கொண்டால், 'நோபார்க்கிங் ஏரியா' என்று இருக்கிறது. பெரும்பாலும் ஸிட்டியில் அதிகமாக வண்டிகள் நிற்கக்கூடிய இடம் இல்லை. 'நோபார்க்கிங் ஏரியாவில்' பார்க் செய்தார்கள் என்று கோர்ட்டில் ரூ. 100 பைன் போட்டு விடுகிறார்கள். உடனே டாக்ஸிகாரர்கள் கூடி முன்பெல்லாம் ரூ. 5, 10 தான் பைன் போடுவார்கள், அதற்கு மேல் போடுவது கிடையாது, இப்பொழுது ரூ. 50, 100 போடுகிறார்கள் என்று ஒரு பிரசாரம் செய்யப்படுகிறது. அதற்கும் ஆட்சிக்கும் நிச்சயம் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. இருந்தாலும் ஏழை மக்களிடையே, குறிப்பாக நடுத்தர ஏழை மக்களிடையே நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிற ஆட்சியின் பேரில் ஒரு தவறான எண்ணம் வரக்கூடிய நிலையில் இருக்கிறது. கோர்ட்டிலுள்ள மாஜிஸ்டிரேட்களும் சில சமயங்களில் இவர்கள் சாதாரண மக்கள் தான், ரூ. 5, 10 பைன் போட்டால் போதும் என்ற நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

டீ கடை வைக்க வேண்டுமென்றால் போலீஸ் லைசென்ஸ் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மற்ற இடங்களில் கிடையாது. அதற்கு ரூ. 2 லைசென்ஸ் கட்டணம் கட்ட வேண்டும். பெரும்பாலான மக்களுக்கு டீ கடை லைசென்ஸ் கிடைப்பது கிடையாது. பொதுவாக அடுத்தடுத்து பக்கத்தில் கடை இருக்கிறது, அதனால் லைசென்ஸ் கிடையாது என்று சொல்லப்படுகிறது. மற்றைய கடைகள் மளிகைக் கடைகள் போன்றவைகள், பக்கத்து பக்கத்தில்தான் இருக்கின்றன. டீ கடை பக்கத்தில் இருந்தால், அதற்கு மட்டும் லைசென்ஸ் கிடையாது. சட்ட அடிப்படையில் டீ கடைக்கு லைசென்ஸ் தேவையில்லை. அது ஒரு மரபாகத்தான் வந்திருக்கிறது. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு டீ கடை வைப்பதற்கு கடன் கொடுக்கப்படுகிறது. அருள் கூர்ந்து முதல் அமைச்சர் அவர்கள் டீ கடைக்கு போலீஸ் லைசென்ஸ் தேவையில்லை என்ற எண்ணத்தை தெரிவித்துவிட்டால், பல ஆயிரக்கணக்கான ஏழை வியாபாரிகள் அவர்களைப் போற்றுவார்கள். சட்டத்தின் அடிப்படையில் அப்படிப்பட்ட லைசென்ஸ் தேவையே இல்லை. போலீஸ் லைசென்ஸில் போடப்பட்டிருக்கும் கண்டிஷன்களைப் பார்த்தால், டீ கடைக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

காட்டன் பெட்டிங் அதிகமாக நடக்கிறது ஸிட்டியில் என்று ஒரு பெரிய புகார் இருக்கிறது. எப்பொழுது ஸிட்டியில் அதிகாரிகள் இருக்கிறார்கள். காட்டன் பெட்டிங்கிற்கு திடீரென்று ஒரு வாரத்தில் அதிகப்படியான முக்கியத்துவம் கொடுத்து, பல பேர்கள் பிடிக்கப்படுகிறார்கள். அன்றாடம் அதிகாரிகள் அவர்களுடைய வேலையைச் சரிவர செய்திருந்தால், இந்த நிலைமை ஏற்படாது. ஏதோ இது இன்று நடப்பது போலவும், சர்க்கார் அனுமதிப்பது போலவும், அப்படி ஒரு தவறான எண்ணம் மக்களிடையே பரவக் கூடிய வாய்ப்பு அதிகாரிகளினால் ஏற்படுகிறது.

பிக் பாக்கெட்டிங் ஜார்ஜ் டவுன் ஏரியாவில் அதிகமாக நடைபெறுகிறது. அதிகாரிகளிடம் சொல்லியும் கூட, அவர்கள் நல்ல முறையில் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. அதை

[திரு. எம். ஆர். கண்ணன்] [1970 ஏப்ரல் 3

நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதெல்லாம் இந்த ஆட்சியில் நடைபெறுகிறது என்று எதிர்க் கட்சிக்காரர்கள் தாளம் போடலாம். அது மிகத் தவறு. எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், அது கொள்கையைத் தான் வகுக்க முடியும். கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது நிர்வாக அதிகாரிகள்தான் ஆகவே, எதிர்க் கட்சியினர் இப்படி நடக்கிறது, அப்படி நடக்கிறது இந்த ஆட்சியில் என்று சொல்வது தவறானது.

போலீஸ் லைன்களில் வீடுகள் நல்ல முறையில் கட்டி தரப்பட வேண்டும். இப்பொழுதுள்ள வீடுகளுக்கே கடைக்காலை நல்ல முறையில் பலமாகப் போட்டு, பல அடுக்கு மாடிகளைக் கட்டிக் கொடுத்தால். போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டுவதற்காக வேறு இடம் தேட வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு நல்ல முறையில் வீட்டு வசதி செய்து தரவேண்டும். போலீஸ் இலாகாவிலுள்ள குறை வேண்டிய ஆட்கள் இல்லை, ஆட்கள் நிறைய இருந்தால் தான் நைட் ரவுண்ட்ஸ் வர முடியும், ஸ்டாஃப் குறைவு என்று சொல்கிறார்கள். அருள் கூர்ந்து நமது அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே இருக்கிற கிளப்புகளில் 100-க்கு 99 கிளப்புகள் சூதாடி கிளப்புகளாக இருக்கின்றன. சட்டத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதால், போலீஸார் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் முயற்சி எடுத்தாலும், கிளப்புகளை விட்டு, தெருவிலே ஆடியது போல்தான் கேஸ் போட்டாக வேண்டியிருக்கிறது. மற்ற படி கேஸ் போடுவதற்கு சட்டம் இடம் தரவில்லை. ஆகவே, இந்த கிளப்புகளை ஒழிக்க ஏதாவது வழியிருந்தால், அதை நிச்சயம் செய்து, பல குடும்பங்களை காப்பாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

* **திரு. ஆ. கருப்பையா**: தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களை கூற விழைகிறேன்.

இன்று நமது தமிழ் நாட்டினுடைய காவல்துறை மிகச் சீரோடும் சிறப்போடும் பணியாற்றிவருகிறது என்பது, அயல் நாட்டினரும் போற்றக்கூடிய அளவுக்கு இது நடந்து வருகிறது என்பது தெள்ளத் தெளிவான விஷயம். அதோடு இன்று தமிழக அரசு உணவுப் பிரிவு என்று ஒன்றை ஏற்படுத்தி, தமிழகத்தில் சுமார் 654 பதுக்கல்காரர்களைப் பிடித்து, ரூ. 65 லட்சம் பெறுமானமுள்ள உணவுப் பொருள்களைப் பிடித்து, நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. தமிழ் நாடு அரசு இந்தத் துறையில் கள்ள மார்க்கெட் காரர்களை எந்த அளவில் பிடித்திருக்கிறது என்பது இதன் மூலம் தெரியும். சுமார் 329 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. நல்ல முறையில் திறமையாக பணியாற்றி வருகிற காவல் துறை அதிகாரிகளுக்கு ஒரு சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய நிலையில் நமது அரசு இருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது.



1970 ஏப்ரல் 3] [திரு. ஆ. கருப்பையா]

கிராமப்புறங்களில் இருக்கிற ஸ்டேஷன்களில் பெரும்பாலும் டெலிபோன் வசதி கிடையாது. ஏறத்தாழ 10, 20 மைல்களுக்கு அந்தப் பக்கம் உள்ள கிராமங்களில் இருக்கிற ஸ்டேஷன்களில் இருந்து முக்கியமாக ஒரு டாக்ஸி வரவழைத்து, ஆக்ஸிடெண்டில் சிக்கிய மனிதரை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டுமென்றால், அங்கு அதற்கு டெலிபோன் வசதி கிடையாது. போலீஸ்காரர்களுக்கு நல்லெண்ணம் இருந்தாலும், மனிதன் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், போன் வசதி இல்லாத காரணத்தினால் அந்த மனிதனை பிழைக்க வைக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதைக் கவனித்து நமது அரசு வேண்டிய போன் வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று கூட சொல்லிக் கொள்வேன். வெயில் காலத்தில் கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய ஸ்டேஷன்களுக்கு மின்சார விசிறி போன்ற வசதிகள் செய்து கொடுத்தால், அதுவும் கூட நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொன்று, நமது தமிழக அரசு காவல் பிரிவினருக்கு 60 சதவிகிதம் இப்பொழுது வீட்டு வசதிகள் செய்து கொடுத்திருந்தாலும்கூட, இன்னும் 40 சதவிகிதத்தினருக்கு வீட்டு வசதியை கூடிய விரைவில் நிறைவேற்றி கொடுக்க அரசு முற்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே உள்ள ஆயுதம் தாங்கிய காவல் படையினருக்கு சென்னையில் வீட்டு வசதி இல்லை என்பதை நாம் அறியும்பொழுது, அவர்களுக்கு உண்மையில் இதை விரைவிலே செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு என்னுடைய தொகுதியில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் மிக அவசியம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் மானூர் ஸ்டேஷன் இருக்கிறது. அதிலிருந்து உக்கரங்கோட்டை என்ற ஊர் சுமார் 12 மைல்களுக்கு அப்பால் தான் இருக்கிறது. அங்கே ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் கண்டிப்பாக அமைத்துத் தரவேண்டும் என்று அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

போன ஆண்டு கூட, ஒரு சம்பவம் நடந்தது. சாராய வேட்டைக்காகப் போன போலீஸ்காரர்கள் உக்கரங்கோட்டையில், சாராயக் கும்பலுக்கும் போலீசாருக்கும் கலவரம் ஏற்பட்டு, பக்கத்தில் ஸ்டேஷன் இல்லாததால், மூன்றே பேர்கள் சென்று இருந்ததால், பொது மக்களுடைய உதவியை நாட வேண்டிய வந்தது. அதன் மேல் தான் அவர்கள் ஸ்டேஷனுக்கு அழைத்து வரப்பட்டார்கள். இது என் தொகுதியில் நடந்த சம்பவம். அங்கே ஒரு அவுட்-ஸ்டேஷனாவது இருந்திருந்தால், இப்படி அவர்கள் 12 மைல் தாண்டி அங்கே வந்து அகப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த தீபாவளியன்று என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில், ஒரு கொலைக் கேஸ் நடந்தது. அது மணியாச்சி ஸ்டேஷனைச் சேர்ந்ததா அல்லது கங்கைகொண்டான் ஸ்டேஷனைச் சேர்ந்ததா என்று தெரியாமல் மத்தியில் நடந்திருந்தது. போலீசாரில் யார் இந்த கேசை முதலில் பார்ப்பது என்கிற தகராறு ஏற்பட்டு, அந்தப் போட்டியில் மறுநாள் மாலைவரையில் பிரேதம் அங்கேயே இருந்தது. அதன் பிறகு கேஸ் எடுத்து, கோர்ட்டில் அது நிற்கவில்லை, வெற்றி பெற முடியவில்லை. எந்த ஸ்டேஷனாக இருந்தாலும், அந்த நேரத்தில் முதல் உதவி செய்வது என்பதில் தயங்கக் கூடாது என்று போலீஸ்காரர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைகளை பணிவோடு தெரிவித்து, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

* ஹாஜி ம. மு. பீர் முகம்மது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கை மீது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் பேச அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமும், ஒழுங்கும், அமைதியும் பாதுகாக்கும் வகையில் நம்முடைய மாநில காவல் துறையினர் சிறப்பாகப் பணிபுரிவதை மனமாரப் பாராட்டுகிறேன். அப்படிப் பாராட்டுவதற்குக் காவல் துறையின் காவலராக இருக்கும் முதல் அமைச்சர் அந்தத் துறையில் விசேடமாகக் கவனம் செலுத்துவதுதான் காரணம் என்பதால், அதற்காக அவர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

நம்முடைய காவல் துறை மானிய அறிக்கையில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 52,948 குடிக்கின்றவர்களைப் பிடிக்கும் கேசுகள் அதிகப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறேன். உண்மையிலேயே இக்கண்டுபிடிப்புகள் அதிகமாக இருக்குமானால் காவல் துறையினரை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். ஏனெனில் குடித்துவிட்டு, குடிமக்களுக்கு கேடு விளைவிக்கும் குடிகேடர்களைப் பிடித்து தண்டனைக்கு ஆளாக்குவது சமுதாயத்தின் நல்வாழ்விற்கு அவசியமும் அவசரமும் ஆனது என்பதை உணர்கிறேன். ஆனால், ஆள்தூக்கி சட்டத்தின் பெயரில் நான் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் குடிகேடர்கள் என்ற பெயரில், நல்ல குடிமக்களையும் சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். நம் ஆட்சியில் அப்படி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதையும் தெரிவிக்கிறேன்.

வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய காவல் துறை சிறப்பாகப் பணிபுரிகிறது என்பதை நினைத்து உண்மையிலேயே சந்தோஷம் அடைகிறேன். அதே நேரத்தில் திருஷ்டி பட்டுவிடக் கூடாதே என்று ஒரு குறையைச் சொல்வதற்கு விரும்புகிறேன். இராணிப்பேட்டை வட்டாரத்தைப் பொறுத்தவரையில், தோல் மண்டிகள் அதிகமாக இருக்கின்றன.





அங்கே களவுகள் நடைபெறுகின்றன. இராணிப்பேட்டைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருடைய தோலே களவுபோகும் போது, கையும், களவுமாக போலீஸ்காரர்கள் பிடித்திருக்கிறார்கள். ஆனால் அதன் மீது எந்த விதமான நடவடிக்கையும் இதுவரையும் எடுக்கப்படவில்லை. அதே போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாமல் நம்முடைய காவல் துறையினர் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறையினர் சிறப்பாகச் செயல்படுவதற்கு அவர்களுக்குக் கொடுத்திருக்கும் காலணிகள் இடையூறாக இருக்கின்றன என்று தெரிகிறது. திடீர் என்று திருடர்கள் திருடிவிட்டு ஓடும்போது, இவர்கள் காலணிகளைக் கழட்டிவிட்டு ஓடுவதற்கோ, அல்லது ஒரு ஆறோ அல்லது சேறு நிறைந்த பகுதியோ இடைப்பட்டால், அந்த நேரத்தில் ஓடுவதற்கு இப்பொழுது கொடுத்துள்ள காலணிகள் அவர்களுக்கு இடையூறாக இருப்பதால், அதில் மாற்றம் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு காவல் துறைப் பணியாளர்களால் பிடிக்கப்படும் குற்றவாளிகளுக்கு குற்றப் பரிகாரமாக அபராதம் போடப்படும் போது, கிடைக்கும் அபராதத் தொகையிலிருந்து ஒரு பாகத்தை காவல் துறையினருக்கு ஏதாவது நல்ல காரியங்கள் செய்ய என்று பயன்படுத்தப்படும் வகையில் கொடுக்கும் ஒரு நிலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், பதிவு இல்லாத காவல் துறை அதிகாரிகள் காரோ, அல்லது மோட்டார் சைகிளோ அலுவல்களுக்கென்று வைத்திருந்தால், அவ்வாகனங்களின் காலாண்டு வரியை அரசினரே ஏற்று வந்தார்கள். ஆனால் அச்சலுகை புதிதாக காரோ, மோட்டார் சைகிளோ வாங்குபவர்களுக்கு இப்பொழுது கிடைப்பதில்லை. பாகுபாடின்றி புதிய, பழைய காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் அச்சலுகையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை ஊழியர்களுக்கு வீட்டு வசதி போதிய அளவு இல்லை. அவர்களது கடமையைச் செய்ய வீட்டு வசதி இன்றியமையாத ஒன்று. அந்தத் துறையில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் கண்ணாகவும், காதாகவும் பயன்படும் தனிப்பிரிவு காவல் துறையினருக்கு சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 2.50 தினப்படி கொடுக்கப்படுகிறது. சாதாரண காவல் துறையினருக்கு ரூ. 1.25 தினப்படி கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு இருக்கும் விலைவாசி ஏற்றத்தில், அவர்கள் சிறப்பாகப் பணிபுரிய அரசு கொடுக்கும் தினப்படி போதாது. ஆகவே, இதை அரசினரின் கவனத்தில் கொண்டு, கூடுதலாகப் படி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விடுமுறையில் செல்லுகின்ற அரசாங்க ஊழியர்கள் விடுமுறையில் ஒரு மாதத்தை, அவர்கள் மீண்டும் வேலையில் சேர்ந்து விடுப்பைக் கொடுத்துவிட்டு ஊதியம் பெறும் வாய்ப்பு பிற துறை அரசு அலுவலர்களுக்கு இருக்கிறது. ஆனால் காவல் துறையினருக்கு இந்தச் சலுகை பெற முடியவில்லை. காரணம், அவர்கள் அவசரமாக பணிக்கு அழைக்கப்பட்டு, வேலையில் சேர்ந்து விடுவதுதான். பிற அரசு அதிகாரிகள் ஒரு மாத ஓய்வைப் பெற்றுக்கொள்ளாது—வேலை செய்தால்—ஊதியம் பெற்றுக்கொள்ளும் சலுகையை இவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்கிற நிலையை உண்டு பண்ண வேண்டும் என்று அரசினரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில், குரும்பூரைப் பொறுத்தவரையில், அதற்கு ஒரு தனிக் காவல் நிலையம் வைக்கக் கூடிய எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. ஆனால் குரும்பூரின் ஒரு பகுதி ஆழ்வார் திருநகரி காவல் நிலையத்துடனும், மறு பகுதி நாசரத் காவல் நிலையத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது. குரும்பூரில் எல்லாவிதமான வசதிகளும், வாய்ப்புக்களும் இருந்தும், அங்கே ஒரு காவல் நிலையம் வைக்கவில்லை. உடனடியாக அங்கே ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஒரு நிலையத்தை ஏற்படுத்துவதற்கு முடியவில்லை என்றாலும், ஒரு போலீஸ் அவுட்-போஸ்டை குரும்பூரில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய காவல் துறை அதிகாரிகளிடத்தில், நெருக்கடியான சங்கடமான நேரங்களில், உயர் மட்டத்தில் ஆனாலும், கீழ் மட்டத்தில் ஆனாலும், சென்று புகார் கூறும்போது, தனித்த அக்கறையோடு கேட்டுத் தெரிந்து, உடனடியாகப் பரிகாரம் தேடித்தர செயல்படுகிறார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சி பாளையங்கோட்டையில் நடந்திருக்கிறது. முஸ்லிம்களை அடக்கம் செய்கின்ற இடத்தில், ஒரு குழந்தையை வெளியே எடுத்து வைத்துவிட்டார்கள். மரங்கள் வெட்டப்பட்டிருந்தன. மாவட்ட காவல் துறை அதிகாரியிடம் முறையிடு செய்தவுடன், அவரின் துணைப் பரிவாரங்களோடு அந்த இடத்திற்குச் சென்று அதற்குரிய பாதுகாப்பு முயற்சியில் ஈடுபட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டு, அதற்கு நன்றி தெரிவித்து எனது உரையை நிறைவுபடுத்துகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியம் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன்.

காவல்துறை என்று சொல்லும்போது, பழைய காலத்தில், அனுஷ்டிக்கப்பட்ட ஏகாதிபத்திய கொள்கையைத்தான் தொடர்ந்து இன்னமும் அனுஷ்டித்து வருகிறது. இதை மாற்று



வதற்கு உரிய முறையில் அரசாங்கம் திட்டமிட வேண்டும். சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய கமிஷன் கொள்கையை மாற்றுகின்ற சிபாரிசை அரசாங்கத்திற்கு எடுத்துரைக்கும் என்று நம்புகிறேன். இப்பொழுது நாளுக்குநாள் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்பது முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மதுவிலக்கை எடுத்துக்கொண்டால் சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் 50 ஆயிரம் வழக்குகள் அதிகமாகப் போடப்பட்டிருக்கின்றன. இந்த 50 ஆயிரம் பேர்கள் மது குடித்ததாலா வழக்குப் போடப்பட்டிருக்கிறார்கள். மது குடிப்பவர்கள்மீது வழக்குகள் போடப்பட வேண்டும் என்று சொன்னால் லட்சக் கணக்கான வழக்குகள் போட வேண்டிய நிலைமை ஏற்படும். குடிப்பவர்கள் தங்களுடைய பழக்கத்திலிருந்து தங்களை மாற்றிக்கொள்ளவில்லை. ஒரு சட்டம் வருகிறது என்று சொன்னால், அதைப் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொண்டாலொழிய அதை அமல்படுத்த முடியாத சூழ்நிலை மதுவிலக்குச் சட்டத்தில் இருக்கிறது. ஆகவே, மதுவிலக்குக் கொள்கையை கைவிடுவது நலமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக திருட்டுக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. சமீபகாலத்திலே கோவில் சிலைகள் எல்லாம் திருடு போயிருக்கின்றன. கும்பல் கும்பலாக வந்து கோயில்களிலும், வீடுகளிலும் புகுந்து திருடுகிறார்கள். இம்மாதிரியான திருடர்களைப் பிடிப்பதற்கான முறையில் எடுக்கப்படும் நடவடிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. கூட்டங்கூட்டமாக வந்து கொள்ளையடிக்கும் நிலைமை அதிகரித்து வருகிறது. அரசு தக்க கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பிச்சைக்காரர் விடுதி நடத்தப்படுகிறது. மதிப்பீட்டுக் குழு அந்த விடுதியைப் பார்த்தது. மற்ற மாநிலங்களைவிட, நம்முடைய மாநிலத்தில் இந்த விடுதி சிறைச்சாலைகளைப் போல், நடத்தப்படுகிறது. இங்கிருப்பவர்களை கைதிகளைவிட மிகக் கொடுமையாக நடத்துகிறார்கள். பம்பாயில் பிச்சைக்காரர்களைப் பிடித்து, அவர்களுக்கு நல்லவிதமாக தொழில், விவசாயம், காய்கறி தோட்டங்கள் போன்ற வேலைகளில் ஈடுபடுத்துகிறார்கள். அதேபோல பிச்சைக்காரர்களைப் பிடித்து, அவர்களுக்குரிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தினால் எல்லோருக்கும் நல்லது. எத்தனையோ தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தலாம். நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் பிச்சைக்காரர்களைக்கூட பிடிக்க முடியும். கோயில்களுக்குப் போனால் அங்கே பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள், பஸ் நிலையங்களிலும் நிறைந்து இருக்கிறார்கள், பஸ் நிலையங்கள்,

ரயில்வே நிலையங்கள், ஓட்டல் வாயிற்படிகள், இப்படி எங்கே பார்த்தாலும் பிச்சைக்காரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். எல்லா பிச்சைக்காரர்களையும் பிடிக்க தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களைக் கொண்டு தரிசான நிலங்களில்—சமீபத்தில் தஞ்சையிலே திறந்தவெளி சிறைச்சாலையை ஆரம்பித்ததுபோல—விவசாயம், தோட்டத் தொழில் போன்றவைகளைச் செய்ய வேண்டும். பிச்சைக்காரர்கள் அதிகரிப்பதற்கு வேலையின்மைதான் முக்கிய காரணம். இன்றைக்குப் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வருகிறது. ஆகவே இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுககொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாதிப் பூசல்கள் ஓய்ந்தபாடில்லை. உள்ளூர் சாதிப் பூசல்கள் நடந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சாதிப பூசல்கள் தீர்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அவையனைத்தையும் நாம் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் தஞ்சை போன்ற மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் அரிசனங்கள். அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்று கோருகிற நேரத்தில், ‘அரிசனங்கள் எல்லாம் ஒன்று சேர்கிறார்கள், ஊதியம் அதிகமாகக் கேட்கிறார்கள்’ என்று மற்ற ஜாதிக்காரர்கள், மேல் ஜாதிக்காரர்கள் எல்லாம் எல்லாம் ஒன்று சேர்கிறார்கள், ஊதியம் அதிகமாகக் கேட்கிறார்கள்’ ஒன்று சேர்ந்து அந்த அரிசனங்களின் மேல் தாக்குதல் நடத்துகிறார்கள். அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். அண்மையில் வெண்மணியில் நடந்ததைப்போலச் செய்கிறார்கள். எல்லா ஜாதிகளும் ஒன்றுதான் என்ற நிலைமையிலே வசதிகளைக் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் தங்களுடைய உரிமைகளுக்காக கிளர்ச்சிகள் ஆரம்பித்தார்களானால், போலீசார் சட்டத்தையும் ஒழுங்கையும் பின்பற்றுவதற்குப் பதிலாக நிலப்பிரபுக்கள், பெரிய முதலாளிகள் ஆகியோருக்குச் சாதகமாக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். “விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினையிலே போலீஸார் தலையிடக் கூடாது” என்று சர்க்கார் ஒரு கொள்கையை வகுப்பதன் மூலமாக அதை ஒழுங்குபடுத்த முடியும்.

அடுத்து, போலீஸார் காவலர்களை எடுத்துக் கொண்டால், இந்த தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். பதிவுபெற்ற அலுவலர்கள் மிக மிகக் குறைவாக எடுக்கப்பட்டிருக்கிறார்கள். கடைநிலை ஊழியர்கள் அதிகமான அளவில் எடுத்துக் கொள்வதற்கு வசதி இருக்கிறது. பி.யு.சி. வரையில் படித்தவர்களைக்கூட அரிசனங்களாக இருந்தால் சப்-இன்ஸ்பெக்டராக எடுத்துக் கொள்ள வேண்டும்.





சப்-இன்ஸ்பெக்டர்கள் நம்முடைய இராஜ்யத்தில் ஆயிரக்கணக்கில் பணியாற்றுகிறார்கள். எங்கேயாவது ஒரு சம்பவம், ஒரு நிகழ்ச்சி என்று சொன்னால் அங்குள்ள பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாத நிலைமை இருக்கிறது. காரணம், தக்க போக்குவரத்து வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் அல்லது மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சம்பவ இடத்திற்கு அவர்கள் எளிதில் போக முடியும்.

அடுத்தபடியாக, போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே வீடு இருக்க வேண்டும். வீடு ஒரு மைல், இரண்டு மைல் தூரத்தில் இருப்பதன் காரணமாக தகுந்த நேரங்களில் புகார்களை எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே, போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே வீடுகள் இருக்க வேண்டும்.

அடுத்து, போலீஸ் காவலர்களை எடுத்துக் கொண்டால், இந்த ராஜ்யத்திலே கீழான நிலையிலே வேலை செய்கிறார்கள். அவர்களுடைய ஆரம்பச் சம்பளம் 70 ரூபாய்தான். தினப்படி ஒரு ரூபாய் இருபத்தைந்து காசு என்று கொடுக்கப்படுகிறது. இந்தக் காலத்திலே ரூ. 1.25க்கு ஒரு வேளை சாப்பாடு கூட வயிறார கிடைக்காது. ஆகவே, அந்த தினசரிப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டும். தினசரிப்படி குறைந்த பட்சம் 3 ரூபாயாவது கொடுத்தால்தான் இரண்டு வேளையாவது வயிறார நிறைய சாப்பிட முடியும். இந்தக் காரியத்தை அரசாங்கம் கருணையோடு கவனித்துச் செய்து கொடுக்க வேண்டும். காவலர்களில் பெரும்பாலோர் ஏழைகள். ஏழைகள்தான் இந்த வேலைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் தக்க முறையில் செய்து கொடுக்க வேண்டும். மேலும் அவர்கள் இருபத்துநான்கு மணி நேரமும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நேரம், காலம் என்று கிடையாது. மற்ற மற்றத் துறைகளில் ஆறு மணி நேரம், எட்டு மணி நேரம் என்று வேலை செய்தால் போதும். எந்தச் சமயத்தில் ஆபத்து என்று கூப்பிட்டாலும் இவர்கள் வரவேண்டும்.

அடுத்தபடியாக, காவலர்களுக்கு வைத்திய வசதி தக்கபடி இல்லை. அவர்களுடைய சம்பளத்துடன் இணைந்த ஒரு தொகையை வைத்திய வசதிக்காக கொடுக்கவேண்டும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

போலீஸ் காவலர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்துக் கொள்ள மற்ற ராஜ்யங்களில் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது ராஜ்யத்திலும் காவலர்கள் சங்கம் அமைத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும். சங்கம் என்று இருந்தால், தங்களுடைய குறைகளை எடுத்துக் சொல்ல அவர்களுக்கு வசதியாக இருக்கும். சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமையை அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்,

Dr. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, on behalf of the Swatantra Party we have given notice of a number of cut motions and I have moved particularly one cut motion. In support of the cut motions, first of all, I wish to stress the fact that a number of things have to be done to set right the defects noticed in the working of the Department. I shall briefly pass over the whole thing by reading the cut motions we have given notice of. My hon. Friend Thiru Vengataswamy, has given notice of the wollowing cut motion—

"To discuss about the failure of the Police in dealing impartially with all people in the democratic administration of Tamil Nadu."

Then my hon. Friend, Thiru Kothandaramiah has given notice of the following cut motion—

"To discuss about the need to provide training to the Police to follow humane and modern methods in dealing with the offenders."

Then, I have given notice of the following cut motions—

"To discuss the need to give proper housing accommodation to the Constables of our State."

"To discuss the activities of the Naxalites in Tamil Nadu."

"To discuss the anxiety and worry caused to peace-loving people of the State by the dangerous activities of the Naxalites in this State."

"To discuss the need to prevent armed voluntary forces coming into existence in our State as a parallel to the Police Force."

"To discuss the circumstances under which protection to the West Bengal Deputy Chief Minister was given by Marxist Force and not by the State Police Force."

"To discuss the immediate necessity to curb the production and sale of illicit liquor inside the compound of General Hospital Quarters opposite to Moore Market (my constituency)."

"To discuss the circumstances under which five children died due to the fire accident on 17th January 1970 in a house in Muthiah Mudaly Street, Madras-14."

"To discuss the prevalence of frustration and ill-will among a vast section of people in Thanjavur because of certain inscriptions at the bottom of the Statute of Thiru E. V. Ramaswamy Naicker".



"To discuss the immediate necessity to establish a Police Station at the junction of Ashtabujam Road, Angalamman Koil Street, Choolai and to bring home the inordinate delay in finalising the same" (this is the cut-motion I have moved officially)

"To discuss the circumstances under which a clash between Harijans and non-Harijans on 16th January 1970 at Kachirapalayam in South Arcot district took place and the need to prevent such clashes in future"

"To discuss the unpleasant atmosphere prevailing in Thanjavur, arising out of appearance of a large number of anti-God posters" and lastly

"To discuss the circumstances under which deaths took place in the Elephant Gate Police Station during 1968 and 1969."

In this connection I wish to read a small extract from the proceedings of this House on 17th August 1968 when I have put a question to the revered Anna, who was the Chief Minister then. I have then put the following question—

"Will the Government examine the necessity of toning up the Police administration especially the violence that is exhibited by the Police officials inside the Police stations? Even though they do not want to give information, whenever a man is taken to Police station on a charge of gambling or drunkenness he is taken to the Police station and put in the lock-up and in the process of being kept in lock-up he is beaten. Many a time I have known such instances. On 13th in my own constituency, in the lock-up attached to C-2 Police station in Elephant Gate, a man died in the lock-up or on way to the hospital. I do not know all the details. Will the Hon. Chief Minister know that this sort of death inside lock-up leads to unrest in the area that such and such a man died in the lock-up because of beating, etc. Such sort of thing is most unfortunate. This is a legacy handed over to us by British and Congress Regime continued the same. The same is now being continued. I am not blaming the Hon. Minister or Ministry as such. But the officials have not changed their habit. Will the Government take note of the serious charge that I have placed before the House about the incident in the C-2 Police station and will the Hon. Minister see to it that such things do not happen?"

The Revered Anna replied—

"Whenever especially complaints of this nature are brought to my notice, I take special care to instruct the Police department to look into them, enquire into them and send

reports to me and reports are sent to me. Regarding the particular incident referred to by the hon. Member, if he were to give the details to me in writing, I will certainly look into them."

I gave the details in writing later but I do not know why subsequently no information has come to me.

I come to another point. This is a very highly responsible department. Responsible posts are there. We hear a lot of things about Police. I have myself made a diagnosis, and the root cause of the malpractices we find is because even though we have given them special responsibilities, the conveniences we have provided to them are very, very poor, when compared to the conveniences provided in other States. Unless the Police Department is properly fed, unless we make the officers feel their responsibility, it is no good. The problem should be solved, though not fully, at least partially, by giving them the necessary conveniences. Let me quote the figures obtaining in different States :—

| | Sub-Inspectors (basic pay). RS. | Inspector (basic pay). RS. |
|---|---|---|
| Andhra .. .. .. | 200 | 300 |
| Kerala .. .. .. | 180 | 275 |
| Tamil Nadu .. .. | 140 | 225 |
| Maharashtra .. .. | 225 | 350 |

The Police people in those States have in additio other conveniences in the matter of travelling allowances. When we consider all those things, our State is lagging far behind. I know it is difficult to increase the emoluments of all these people because it means a large amount to the exchequer. But I want the Commission which is seized of the matter to go into this aspect of the pay structure. We have now got a Commission exclusively for the Police. If that aspect is properly tackled, 50 per cent of the problem is over.

My distinguished colleague Thiru Krishnaswamy Gounder was talking about prohibition. It was a pity to hear him talk like that. But we have to agree with what he had said. We can't deny. If an hon. Member like Krishnaswamy Gounder who will not smoke, and who will not take a cup of coffee, who is such a teetotaller, if he were to speak like that, it means that something is really wrong and that boot-legging has become rampant. I want respectfully to submit to the Hon. Chief Minister to earnestly examine and consider this and see to it that boot-legging is stopped. This has become rampant and I know a number of things. Take Kosapet. I know large number of people who are thriving in this art. They have become uncrowned kings. They can completely keep the Police station under their control. This is not something new. This is a legacy which we have inherited ever since prohibition was introduced. Now we have to tackle this problem. It is there in village too. In small villages I know small people have become kings. They control the Police station. They get extraordinary finance with this boot-legging. The Hon. Chief Minister should consider this aspect and see that something useful is done in this matter.



I now come to the most important point. The Police from being a weapon of terror must become an instrument of service. We know in the Police station, excess of force is applied. When the present ruling party was in opposition, they were saying the same thing. But even now the situation is the same. We are not able to get information without being insulated by the officers concerned. Something must be done to check third degree methods being employed in Police stations. Without applying excess force, it must be possible to get information. But the Police do not do like that. What they do is this: like a cat giving a hit first when it gets a lizard, they give the hit first. That is the usua practice. That practice must be put a stop. The Police should employ only the minimum force. They should not employ the methods of the Army. In the Army they 'shoot to kill'. But the Police are different. Let them not employ the methods of Army. Their (Army) training is entirely different. Let not the Police imitate the Army and employ their methods in the Police station. Even in the case of Hosur, my distinguished friends wanted to stress on that. There were so many things. But the one particular aspect was that a number of innocent people were beaten in the Police station. That aspect brings discredit to the Government. This problem has to be tackle properly by Government.

I want to lay stress on another important point. Our Police force is second to none. They are the best. There is no question of doubt on that. I wish to quote a few examples. Take the Bavarian gang case. From a small beedi, they were able to trace. They found out that it must be a Rajasthan beedi and that those people must hail from there. It reminds me of Perry Mason novel and the excellent way in which the culprits are found out there. What the Police had done here is something remarkable. In detecting crime, they are second to none. In the 'Rolling shutter case' what they had done is remarkable. We know how they had rounded up the Naxalbaris in Madras, a whole party of them who had been wanted in murder, etc., cases in Andhra The whole batch wanted by Andhra Police were rounded up in a bunch from a house in Madras. I was very much surprised at the wonderful manner in which the Police had effected this catch. Our Police force is really a wonderful Police force.

They have one great need, viz., conveyance. We have not provided conveyances for them in the districts. I mean for the Inspectors. Have we provided all Inspectors with conveyance

in the districts? The Sub-Inspectors have not been provided with motor vehicles. Unless we provide them with this, how can they go to the spot and detect crimes? That is the point which I want the Government to note so that they could take suitable action.

We have to increase the strength of the Police force. Armies are being raised by different bodies and the Hon. Chief Minister also was wondering from where they get the training. To tackle this problem, I plead for increasing the strength of police force.

I come to housing. We have permanent posts like Commissioner Deputy Commissioner, Assistant Commissioner, etc. But do we have permanent houses built by Government for these officers? No. I am very sorry to state that these officers have to approach private parties for housing. Risk is involved by contact of these officers with private capitalists in regard to their housing accommodation. We do not know what kind of influence they will bring on the police by such contacts. So let us cut our Police from these people. Let us provide them immediately with permanent quarters.

In the All-India Police Duty Meet, I am happy to state that our State has won a shield and a record number of gold, silver and bronze medals. On behalf of my party I wish to congratulate the Government and the Police force on this great achievement.

Finally, one word with regard to Fire Service Constables and Head Constables. Since a number of years there has been a grievance on their part that they must be treated on a par with their counterparts in the regular police force. I want the Government to see that their grievance is immediately removed.

I hope and trust that the suggestions made will be taken in the right and true spirit and that the Police force will become more efficient and bring greater credit to the Government. With these words I wind up my speech. e

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, என்னுடைய
மு.ப. 12-00. பெயரால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேச விழைகிறேன்.

பொதுவாக இந்தப் போலீஸ் நிர்வாகத்தைப் பற்றிச் சொல்லப் போவோமானால் மக்களுக்கும் இந்த நிர்வாகத்திற்கும் அவ்வளவு பொருத்தம் இல்லை. தேர்தல் நடப்பதற்கு முன்னால், எந்த மாநிலத்திலும் ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சிக்கு வரும் என்று வாய்ப்பு தெரிந்தாலும், அல்லது இருக்கிற கட்சியின் ஆட்சி கவிழும் என்று தெரிந்தாலும், நிர்வாகம் அந்தப் பக்கம் சாய்வாக இருப்பது தெரிந்த விஷயம். நடைமுறையில் நாம் பார்க்கிறோம். ஏனெனில் நாட்டில் நிர்வாகம் சரியாக இருந்தால்தான் மனிதனும் கூட நல்ல வகையில் அமைதியாக வாழ முடியும். இன்றைய தினம் தொழில் வளம் நல்ல முறையில் இருக்கிறது நம்முடைய மாநிலத்தில்



என்றால் அது நல்ல நிர்வாகத்தை எடுத்துக் காட்டுகிறது. அதே போல் ஒரு நிர்வாகத்தில், இந்த அரசாங்கத்தில் இருக்கும் போலீஸ்காரர்களில் நல்லவர்களும் இருப்பார்கள் கெட்டவர்களும் இருப்பார்கள். பொதுவாக போலீஸ்காரர்களுக்கு சரியான ஊதியம் கிடைக்க வில்லை. அவர்கள் 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் நம்முடைய கிராமப் பகுதியில் சொல்வார்கள், போக்கற்றவனுக்குத்தான் போலீஸ் உத்தியோகம் என்று. நான் அதைக் குற்றமாகச் சொல்லவில்லை. ஏனென்றால் எங்கேயும் வேலை கிடைக்காவிட்டால் போலீஸுக்குப் போ என்று சொல்வார்கள். இது ஒரு பழமொழி. இதை அரசாங்கம் மாற்ற வேண்டும்.

அது மட்டுமல்ல, அந்த இலாக்கா மீது சொல்லப்படுகின்ற லஞ்சப் புகார்கள், ஊழல் புகார்கள் இவற்றைக் களைய வேண்டும். அவற்றைப் பார்ப்பதற்காக ஒரு தனி நிர்வாகம்போட்டு, அதற்காகச் செலவு அதிகமானால் அதையும் பொருட்படுத்தாமல் செய்ய வேண்டும். பொதுவாக மக்களிடம் இருக்கும் ஒரு பயம் என்னவென்றால், வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே போலீஸுனுடைய பழக்கம் நமக்கு ஆகாது என்பது தான். அயல்நாடுகளில் நாம் பார்க்கிறோம். நல்லவர்களுக்கு போலீஸ்காரர்கள் நண்பர்களாகவும் குற்றம் செய்கின்றவர்களுக்கு இவர்களைப் பார்த்தாலே பயம் என்ற நிலை நிலவி வருகிறது. அந்த நிலை நமது நாட்டு நிர்வாகத்தில் ஏற்பட்டு விட்டால் நல்ல சூழ்நிலை தானாக உருவாகிவிடும்.

எந்தக் கட்சி ஆளும் கட்சியாக இருந்தாலும் அவர்களுக்கு போலீஸ் உதவி என்ற எண்ணம் மக்களிடம் பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. நிர்வாகம் எந்தக் கட்சியையும் குறிப்பாக கருத்தில் கொண்டு சொல்வதில்லை. நான் எந்த ஒரு கட்சியையும் மனதில் கொண்டு சொல்லவில்லை. மேலே உள்ள அதிகாரிகள் ஒரு விதமாக இருந்தாலும் கீழே உள்ளவர்களைப் போய்ப் பார்த்தால் தெரியும். கட்சி நண்பர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்பதற்காக விசாரணை என்ற பெயரில் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து துன்புறுத்துவது குறைய வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் உங்களை வெறுக்கும் நிலை ஏற்படும்.

அதே நேரத்தில் பொதுமக்களிடத்தில் எப்படிப் பழக வேண்டும் என்று ஒரு நியதி இருக்க வேண்டும். இப்பொழுது நான் கேள்விப் பட்டேன். பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபிசர் என்ற ஒரு அதிகாரியைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் கேள்வி-பதில் நேரத்தில் சொன்னார்கள். மெட்ராஸ் சிட்டியில் மட்டும் அப்படி ஒரு அதிகாரி இருப்பதாகச் சொன்னார்கள். எப்படி மனுநீதித் திட்டத்தை ஆங்காங்கே இருக்கும் மாவட்ட ரீதியில் [illegible]வர்கள் கலெக்டர் மற்றும் ரெவின்யூ அதிகாரிகள் நேரில் சென்று எந்த [illegible]ப்பட்டார்

விடம் பழகுவதுபோல் இந்த போலீஸ் இலாக்காவிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபிசர் போட்டு நேரில் சென்று தொடர்பு கொண்டால் மக்களிடம் உள்ள பயம் போகும். அப்படி செய்தாலே 50 வருஷம் ஆகும் என்று கருதுகிறேன்.

நடுது போலீஸ்காரர்களில் சிலரிடம் குறைகள் இருக்கின்றன. கீழ் மட்டத்தில் உள்ள போலீஸ்காரர், ஹெட்கான்ஸ்டேபிள்கள் இவர்களில் ஒரு சிலரைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்கள் செய்யும் தப்பு லஞ்சம் வாங்குவது. கீழே உள்ளவர்களும் ஹெட்கான்ஸ்டேபிளாக இருந்து சப்-இன்ஸ்பெக்டர்களாக வந்துள்ளவர்களும் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இருந்த மாதிரியே தான் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் படித்தவர்களை போலீஸ்காரர்களாக எடுப்பதில்லை. இனியாவது எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களைத்தான் போலீஸ்காரர்களாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். படித்தவர்களை எடுத்தால் நல்லபடி பழகி ஒரு நல்ல நிலையை உருவாக்குவார்கள்.

அவர்களுக்கு நல்ல ஊதியம் அளிக்கப்பட வேண்டும். இது முக்கியமாகச் செய்யப்பட வேண்டும். நம்முடைய மாநிலத்தில் உள்ள நிர்வாகம் நல்ல நிர்வாகம் என்று பெயர் எடுத்திருக்கிறது.

அடுத்தபடியாக நம்முடைய போலீஸ் இலாகாவிற்கு போதுமான டிரான்ஸ்போர்ட், கம்யூனிகேஷன் வசதி இல்லை. யாராவது கிராமப்புறம் ஓடினால் ஜீப்பில் போய் வர முடியாது, சைக்கிளில் போகலாம் என்று சொன்னார்கள். டிரான்ஸ்போர்ட், கம்யூனிகேஷன் சரிவர இல்லாவிட்டால் குற்றங்களைச் சரிவர கண்டு பிடிக்க முடியாது. அதே நேரத்தில் முக்கியமாக மாவட்டத்திற்கு ஒரு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபிசர் போட்டு ரெவின்யூ ஆபிசர்கள் சென்று மக்களோடு தொடர்பு கொள்வது போல், இவர்களும் தொடர்பு கொள்ள வேண்டும். இதைச் செய்தால் மக்களுக்கு உள்ள பயம் நீங்கி போலீஸ் நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்கும் நல்ல உறவு வளரும் என்று கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே நிலையான, நிம்மதியான அமைதியான ஆட்சி தமிழகத்திலே தான் நடக்கிறது என்றால் அது மிக, மிகப் பொருத்தமாகும். அந்த அளவுக்கு ஒரு அமைதியான ஆட்சியை நடத்தி வருகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த தொகாவைப் பற்றிப் பேசுகிறபோது சட்டம்-ஒழுங்கு இவற்றைத் தெரிந்துபேசினார்கள். சட்டம்-ஒழுங்கு இந்தத் தமிழ் நாட்டில் கெட்டிருக்கிறது என்றால் காங்கிரஸ் கட்சி அலுவலகங்

வகையில் —

வளம் நல்ல



களிலும், அவர்கள் நடத்துகின்ற பொதுக்கூட்டங்களிலுமே தவிர வேறு இடங்களில் இல்லை. திட்டமிட்டு இந்தக் காரியங்களைச் செய்கின்றார்களா, என்ன காரணம் என்று தெரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்களுடைய கட்சி கெட்டுப்போய் விட்டது என்று எதை வைத்துச் சொல்கிறீர்கள்?

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சத்தியமூர்த்தி பவனில் ஆரம்பித்த இந்தச் சண்டை கடலூருக்கு வந்திருக்கிறது. இந்தச் சண்டையைத் தீர்த்து வைப்பது பெரும்பாடாகப் போய்விட்டது. வடநாட்டில் அரசியல் தலைவர்கள் நடமாட முடியவில்லை. இங்கே நமது மாநிலத்தில் கருப்புச் சட்டை அணிந்த பெரியார் அவர்களிலிருந்து கதர் சட்டை அணிந்த ராஜாஜி அவர்கள் வரை அரசியலிலே ஒருவருக்கொருவர் இரு வேறு கருத்துத் துருவங்களாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் ஒன்று கூடி அளவளாவும் நிலைமை வளர்ந்திருக்கிறது. அந்த நிலைமையைக் கெடுத்து விடக்கூடாது என்று காங்கிரஸ் கட்சியினரைக் கேட்டுக் கொள்கிறேன். கல் எறிவதும், செருப்புகளை வீசுவதும், பொதுக்கூட்டங்களில் மாணவர்களைத் தூண்டிவிடுவதும் காங்கிரஸின் வாடிக்கையாகப் போய்விட்டது. இந்தச் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை முழுக்க, முழுக்க காங்கிரஸ் கட்சியில் பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் இந்த பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தச் சட்டம்-ஒழுங்கைக் காப்பதில் நம்முடைய பொது மக்கள் காவல் துறைக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

குறிப்பாக விபத்துக்களைப் பார்க்கின்றபொழுது நாம் அதிலே தீவிரமாகக் கவனம்செலுத்தவேண்டிய நிலைமை இருக்கிறது. ஸ்கூட்டர் விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே போகின்றது. ஸ்கூட்டர் விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடியாக உயிர் இழக்கக்கூடிய நிலைமை தான் ஏற்பட்டுவிடுகிறது. இதைத் தடுக்கக்கூடிய முறையில் கவசங்கள் அணிந்து கொள்ளுகின்ற முறை கொண்டுவரவேண்டுமென்று யோசனை இருந்தது. எனவே அரசாங்கம் கவசங்களை அணிந்துகொள்ளவேண்டுமென்ற முறையில் ஒரு கட்டாய நடவடிக்கையை மேற்கொண்டால்தான் பொது மக்கள் விபத்துக்களிலே சிக்குண்டு உயிர் இழக்கக்கூடிய நிலைமை தவிர்க்கப்படும். எனவே அந்த முறையைக் கொண்டுவர வேண்டும்.

எதிர்த்தரப்பிலே காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசும்பொழுது சொன்னார்கள்,. காவல்துறையிலே எங்களுடைய கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்களென்று. நான் அசந்துபோனேன். இன்றைக்கு கீழ்மட்டத்திலே உள்ளவர்களிடம் தரம் கெட்டுப் போனதற்குக் காரணம் கடந்த இருபது ஆண்டுகளாக அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின்கீழ் இருந்ததே தவிர, வேறு அல்ல. எந்த எந்தக் காரியங்களைச் செய்வதற்காக அவர்கள் நியமிக்கப்பட்டார்

களோ, அந்தக் காரியங்களைச் செய்யவிடாமல், காங்கிரஸ்காரர்கள் எதை எதை எண்ணினார்களோ அதைச் செய்வதற்கு அவர்களைப் பயன்படுத்தினார்கள். அந்தக் காரணத்தினால்தான் இன்றைக்கு ஒன்றிரண்டு இடங்களில் அப்படிப்பட்ட தாக்குதலை இருக்கிறது. உதாரணத்திற்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குள்ளஞ் சாவடிக்குப் பக்கத்திலே புலியூர் என்ற இடத்தில் கண்ணுசாமி என்பவரை 307 செக்ஷனில் புக் பண்ணினார்கள். எந்தச் சம்பவத்திற்காக அவர் மீது இந்த வழக்கு போடப்பட்டதோ, அந்தச் சம்பவம் நடந்த அதே நேரத்தில் அவர் டி.எஸ்.பி. அவர்களிடத்திலே வேறு சில சாட்சிகளுடன் அவரும் சாட்சியம் சொல்லிக் கொண்டிருந்தார். டி.எஸ்.பி. அதற்கு சர்டிபிகேட் கொடுத்தும் அதை அந்தக் காவல் நிலையத்திலே ஏற்றுக்கொள்ளவில்லை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அந்தக் காவல் அதிகாரிக்கு வேண்டியவர் புலியூரில் உள்ள காங்கிரஸ்காரர். அந்த கண்ணுசாமி என்பவர் யார் என்று கேட்டுவிடாதீர்கள். அவர் என்னுடைய சொந்த சித்தப்பாவின் மகன். காங்கிரஸ்காரர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு, கழகத்துக்காரர் மீது பொய் போட்டிருக்கிறார் என்று நான் கூட சொல்லலாம். ஆனால் இப்படி இரண்டொரு நிகழ்ச்சிகள் நடைபெறுவதை வைத்துக்கொண்டு கட்சிக்காகச் செயல்படுகிறார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாராய பாட்டில்களை வைத்துக் கேஸ் போடுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு என்ன பரிகாரம் என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லவில்லை. உண்மையிலேயே மதுவிலக்குச் சட்டம் இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பதைத் திட்டவட்டமாக அவர்கள் சொல்லவேண்டும். பொய் கேஸ் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையைச் சமுதாயத்தின் அடிப்படையிலே ஏற்படுத்தவேண்டுமா அல்லது சட்டத்தின் அடிப்படையிலே ஏற்படுத்தவேண்டுமா என்பதை திட்டவட்டமாக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன். அத்தகைய பழக்கங்களை சட்டத்தின் அடிப்படையிலே கட்டுப்படுத்துவதைவிட சமுதாய அடிப்படையின் மூலம், பிரச்சாரத்தை வலுப்படுத்துவதின் மூலம் கட்டுப்படுத்துவது நன்மையாக இருக்கும். டீ, காபி இவற்றிலே காபின் என்ற விஷம் இருக்கிறது. புகையிலையில் நிகோடின் என்ற விஷம் இருக்கிறது. குடிக்கக் கூடாது என்று சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியாது. மகாத்மா காந்தி கூட இவற்றையெல்லாம் சமுதாய அடிப்படையிலே நீக்குவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்றுதான் பாடுபட்டார்கள். இந்தப் பிரச்சனையில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியின் திட்டவட்டமான கொள்கை என்ன, மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



போலீஸ் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கு உள்ள முக்கியமான கஷ்டம் வறுமைதான். அடிமட்டத்தில் உள்ளவர்கள் மிகவும் வறுமையிலே உழல்வதால் அவர்கள் சரிவர இயங்கமுடியவில்லை. ஏற்கனவே மதிப்பீட்டுக் குழு கூட இதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறது. இந்த வறுமையைத் தீர்ப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போலீஸ் கமிஷன் ஒன்றை தக்க நேரத்திலே உருவாக்கியிருக்கிறார்கள். அதிலே இந்த மன்றத்திலே உள்ள ஒருவர் அங்கம் பெற்றுள்ளதால் இங்கே பேசப்படுகின்ற கருத்துக்களையெல்லாம் அவர்கள் தெரிவிக்கின்ற நிலைமை இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். மதிப்பீட்டுக் குழு ஆராய்ந்து **Morale cannot be built up and maintained unless the pay scale is reasonable bnd satisfactory** என்று 1963-ஆம் ஆண்டிலேயே அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். நல்ல நிர்வாகத்தை உண்டாக்கவேண்டுமென்றால் சம்பள உயர்வு வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். போலீஸ் சர்வீசைப்பற்றி ராயல் கமிஷன் ரிப்போர்ட்டை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். **In the Royal Commission Report on Police appointed in 1960 in the United Kingdom** போலீஸ் துறையிலே பணியாற்றுகின்றவர்களை ஸ்கில்டு வொர்க்கர்ஸ் என்ற முறையிலே கணித்து அவர்களுக்கு அதிகமான சம்பளம் தரப்பட வேண்டுமென்றும், ஷிப்டு முறை கிடையாது, நைட் டியூட்டி உண்டு, இரவு பகலாக அவர்கள் உழைக்கவேண்டியிருக்கிறது, எனவே அதற்காக சம்பளத்தில் 45% கூட்டிக்கொடுக்கிறது. எனவே, அதற்காக சம்பளத்தில் 45% கூட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், டேஞ்சர் டு லைஃப் அதாவது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய பணியிலே ஈடுபடுகின்ற காரணத்தினாலே அதற்காக 25% கூட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு கருத்தை அறிவித்துள்ளனர். எனவே ராயல் கமிஷன் ரிப்போர்ட்டை வைத்துக் கொண்டு காவல் துறையினரின் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுகிறேன். அதோடு படித்தவர்கள் நிறையப் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிற காரணத்தினால் காவல் துறை பணிகளுக்கு படித்தவர்களை நியமித்து போலீஸின் தரத்தை உயர்த்தி, காவல் துறையிலே மேலும் நல்ல வெற்றிகளைப் பெற முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய மாநில போலீஸ் சிறந்த முறையிலே நிர்வாகத்தை நடத்துகிறது என்று சொன்னால் மிகையாகாது. அதே நேரத்தில் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தவேண்டுமானால் அரசாங்கத்திலே உள்ளவர்கள் சற்று அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், ஆட்சியிலே உள்ளவர்கள் அப்படி எடுத்துக்கொண்டால் தான்—எனக்கு முன்னாலே பேசிய திரு. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல் அவர்களுக்கு முறையான உயர்வான சம்பளம்

கொடுக்கப்படவில்லையென்றால்—எத்தனை சட்டங்கள் போட்டாலும் நிர்வாகத்தை நல்லமுறையிலே நடத்தவே முடியாது. ஆட்சி சிறந்த முறையிலே நடக்கவும், லா அண்ட் ஆர்டர் என்று சொல்லக்கூடிய எல்லாவற்றுக்கும் பொறுப்பாக இருக்கக் கூடிய அந்த டிபார்ட்மெண்டும் முறையாகப் பணியாற்றுவதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். வெளிநாடுகளுக்குச் செல்கின்ற அமைச்சர் பெருமக்கள் போலீஸ் அதிகாரிகள் வெளி நாடுகளிலே எவ்வளவு சிறப்பாக வாழ்கிறார்கள், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்து அந்த முறையிலே இங்கேயும் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இதை 1958-ஆம் ஆண்டிலிருந்தே நான் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

அவர்களுக்கு வாழ்க்கையிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. கான்ஸ்டபிளுக்கு ஆஃப் டியூட்டி போடுகிறார்கள், வாரத்தில் ஒரு நாள் லீவ். ஆனால் அதற்காகக் கொடுக்கப்படுவது 1 ரூபாய் தான். தினசரிச் சம்பளம் 2½ ரூபாய் அல்லது 3 ரூபாய் வருகிறது. மூன்று ரூபாய் அளவுக்கு அதைக் கொடுத்துவிட்டு பிச்சைக்காக கொடுக்கிற மாதிரி இதற்கு 1 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இதை மாற்றி அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அவர்கள் நீட் ஆக வரவேண்டும், டிப்-டாப் ஆக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறைதான் பூட்ஸ் கொடுக்கிறார்கள், அது போதாது. வருஷத்திற்கு ஒரு பூட்ஸ் கொடுக்கவேண்டும். அதேபோன்று டிரஸ் ஆண்டுக்கு இரண்டு ஜதைதான் கொடுக்கிறார்கள். அதுவும் போதாது, மூன்று ஜதை கொடுக்கவேண்டும். அவர்களுடைய குடியிருப்புகளைப் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. சர்ப்ரைஸ் விசிட் செய்தால் எத்தனையோ குவார்ட்டர்ஸ் மனிதன் வாழ்வதற்கே தகுதியில்லாத நிலைமையில் இருப்பதைப் பார்க்க முடியும். இதையெல்லாம் முறைப்படுத்தவேண்டும்.

கிட் முறை வைத்திருக்கிறார்கள். வருடத்திலே ஒரு முறை, இரண்டு முறை இன்ஸ்பெக்ஷன் செய்யலாம். ஆனால் அடிக்கடி எஸ்.பி. கிட், டி.எஸ்.பி. கிட் என்று வருடம் பூராவும் வைத்து அவர்கள் கிட் பேக்கை தூக்கிக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது, இதையும் மாற்ற வேண்டும்.

வைத்திய வசதிகளைப்பற்றிப் பார்க்கும்பொழுது இப்பொழுது இருக்கிற வசதிகள் போதாது. அதிகமாக அவர்களுக்கு வைத்திய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். கருணை என்று சொன்னால் மதிப்பிற்குரிய முதலமைச்சரை கருணா என்று கூப்பிடுகிற நிலையில் கருணை மனு என்று கொடுத்தால் கருணை வருகிறதா என்றால் கருணை வரவில்லை, கரணைதான் வருகிறது. சிறு தவறுகள் செய்தாலும் கான்ஸ்டபிள் வேலை நீக்கம் செய்யப்படுகிற நிலை இருக்கிறது. ஆப்ஸெண்ட் என்று ஆகிவிட்டால் 3பி



சார்ஜிலே போட்டு, அதற்குள்ளாக மேலதிகாரிடமிருந்து வேலை நீக்க உத்திரவு வந்துவிடுகிறது. போலீஸ் வேலை செய்துவிட்டு வேறு வேலை செய்யமுடியாத நிலைமையிலே மக்களால் அவர்கள் விரோதியாகக் கணிக்கப்படுகின்ற நிலைமை இருப்பதால் சிறு தவறுகள் செய்தால் அதற்காக சாதாரண பனிஷ்மெண்ட் கொடுக்க வேண்டுமேயொழிய வேலையிலிருந்து நீக்கக்கூடாது.

இவையெல்லாம் ஏன் செய்துகொடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறேன் என்றால், மனிதனுடைய ஜீவாதாரத்திற்குச் செக்யூரிட்டி கொடுப்பதற்காகவும் தேசத்தினுடைய முக்கிய தலைவர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை அவர்களிடத்திலே இருப்பதினாலும்தான். ஆதலால் அவர்களுக்கு அதிகபட்சம் செலவு செய்வதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தீண்டாமைக் குற்றம் பற்றி எந்த போலீஸ் அதிகாரியும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. அதற்காக எவ்வளவோ சட்டங்கள் இருந்தும் இவ்வாறு இருப்பது வருந்தத் தக்கது. இது பற்றி அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதில் கவனம் காட்ட வேண்டுமென்று அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போலீஸ் இலாகாவிலும் போதுமான சலுகை காட்டப்படவில்லை. சுதந்திரம் அடைந்து 22 ஆண்டு காலம் ஆகியும் ஒரு டிப்பார்ட்மெண்டிலும் எங்களுக்காக, ஒதுக்கப்பட்ட 16 என்ற விகிதாச்சார உத்தியோகம் கொடுக்கப் படவில்லை. 2½, 3 என்றுதான் கமிஷன் ரிப்போர்ட்டே இருக்கிறது. இதைக் காட்டிலும் கேவலமான நிலை இல்லை. எந்த டிப்பார்ட்மெண்டிலே நூற்றுக்கு நூறு கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஸ்வீப்பர் உத்தியோகந்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நூற்றுக்கு நூறு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கட்சி ஆண்டாலும் சரி, காங்கிரஸ் ஆண்டாலும் சரி, கம்யூனிஸ்டாக இருந்தாலும் சரி, சுதந்திராவாக இருந்தாலும் சரி, தி.மு.க. வாக இருந்தாலும் சரி, தோட்டி வேலைதான் நூற்றுக்கு நூறு தாழ்த்தப் பட்ட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலை இன்று இருக்கிறது. ஒதுக்கப்பட்ட 16 விகிதாசாரத்தையாவது எங்களுக்கு எல்லா டிப்பார்ட்மெண்டிலும் உத்தியோகம் கொடுக்க வழி செய்ய வேண்டும். விளம்பரம் பெரிதாக இருக்கிறதே தவிர பலன் இல்லை. தெலுங்கில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். 'பேரு பெத்த பேரு, தாக நீலு லேது' என்று. கருணை என்று முதலிலேயே சொன்னேன். இப்போது கருணை காட்டாமல் கரணைதான் காட்டப்படுகிறது. கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கூட்டுகின்ற வேலையைத்தான் கொடுக்கிறார்களே தவிர, வேறு வேலை கொடுப்பதில்லை என்ற குற்றச்சட்டைக் கூறினார்கள். நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்—இன்றைக்கு நகராட்சி மன்றங்களில் அப்படிப்பட்ட வேலை காலி ஏற்படும் நேரத்தில் அதற்கு ஏற்படும் போட்டி மிக ஏராளமாக இருக்கிறது. அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாத பலரும் இந்த வேலைக்குப் போட்டி போடுகிறார்கள். ஆகவே, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அந்த வேலையில் போடுவதாகக் கனம் அங்கத்தினர் கருதக்கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1902-ம் ஆண்டிலேதான் போலீசாரின் சம்பளத்தைப் பற்றி ஆராய குழுவை நியமித்தார்கள். அதற்குப் பிறகு 67 ஆண்டுகளுக்குப் பிறகுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் காவலர்களுடைய சம்பளத்தைப் பற்றி ஆராய ஒரு குழுவை நியமித்திருக்கிறார்கள். இருபது ஆண்டு காலம் காங்கிரஸ் இருந்த காலத்திலும் போலீசாரின் சம்பளத்தைப் பற்றியோ, பஞ்சப்படியைப் பற்றியோ, வேலைப் பளுவைப் பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. இப்பொழுது அந்தக் குழுவை ஏற்படுத்தியதின் காரணமாக தமிழ் நாட்டு அரசாங்கத்தை அவர்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். போலீசார் உதவித் தொகை பெறுகிற நேரத்தில் கடந்த காலத்தில் மூன்று ஆண்டுகள் பெறுகின்ற சம்பளத்தைக் கணக்கிட்டு உதவித் தொகையாகக் கொடுத்து வந்தார்கள். நம்முடைய சர்க்கார் முடிவு காரணமாக கடைசி ஓராண்டுச் சம்பளத்தைக் கணக்கிட்டு உதவித் தொகை கொடுக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் துறையிலே இருக்கும் எல்லா அதிகாரிகளும் இதைப் பாராட்டி வருகிறார்கள்.

நம்முடைய நாட்டில் சட்டம் அமைதி மிகச் சிறப்பாகக் காக்கப்பட்டு வருகிறது என்று இந்த மன்றத்தில் பலரும் கூறினார்கள். அப்படிப்பட்ட சிறந்த நிலைக்கு இங்கிருக்கும் காவல்துறை காரணம் என்பதை அனைவரும் அறிவோம். தமிழகப் போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள் அனைத்து இந்திய அளவில் பங்கேற்று தங்கள் திறமையைக் காட்டி வருகிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாட்டு சர்க்காரின் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்தான் மிகச் சிறந்தவர்கள் என்பதற்கான பதக்கங்களை எல்லாம் பெற்று அகில இந்தியாவிலும் முதன்மை பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றமடைந்த மாவட்டம். அங்கே காவல் துறை ஒரே ஒரு மாவட்டமாக வைத்துக் கொண்டுதான் நிர்வகித்து வருகிறார்கள். அதனால் அங்கு இருக்கும் சிரமங்களை உயர் போலீஸ் அதிகாரிகள் மிகத் தெளிவாக உணர்த்தி வருகிறார்கள். கோவை மாவட்ட போலீஸ் துறையைப் பொருத்தவரை, கோவை நகரத்தைப் பொறுத்தவரை ஒரு பிரிவாகவும், ஏனைய பகுதிகளை ஒரு பிரிவாகவும்





அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும். செங்கற்பட்டில் காவல் துறையை அப்படிப் பிரித்து வைத்திருக்கிறார்கள், அதே போன்று கோவையிலும் செய்ய முடியுமா என்று பரிசீலித்து அதற்குரிய நடவடிக்கையை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு கருத்தை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டதற்கு நேற்றுக் கூட பதில் கூறினார். திருப்பூர் வளர்ச்சி பெற்ற நகரம். ஒன்றரை லட்சம் மக்களும், 15,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் ஒரே ஒரு காவல் நிலையந்தான் இருக்கிறது. அங்கு இரண்டாவது காவல் நிலையத்தை அமைப்பது அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்றும், உரிய நேரத்தில் பதில் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். திருப்பூரை விட சிறிய நகரங்களாக இருப்பவற்றுக்கெல்லாம் இரண்டு மூன்று காவல் நிலையங்கள் இருக்கும் நேரத்தில் திருப்பூருக்கும் இரண்டாவது காவல் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு உடனடியாக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பெரிய நகரங்களில் இருக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கு, சப்-இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி. போன்றவர்களுக்கு அரசாங்கத் துறையில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்து, பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பமளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

* **திரு. டி. மார்ட்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை காவல்துறை மானியத்தின் மீது வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழ் நாட்டு போலீசார் திறமை மிக்க போலீசார், காஷ்மீரில் நடந்த போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கங்களைத் தமிழ் நாட்டுக்கு வாங்கித் தந்தார்கள்; ஆந்திராவில் இருந்து இங்கு வந்த நக்சல்பாரிகளைப் பிடித்து ஆந்திராவுக்கு அனுப்பியதன் மூலம் ஆந்திர அரசுக்கு உதவி செய்தார்கள்; நடந்த கொள்ளை கொலைகளில் நல்ல முறையில் துப்புக் கண்டு பிடித்தார்கள் என்றெல்லாம் கூறுகின்ற நேரத்தில், அதிலே அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தாலும், அதில் எல்லாம் வெற்றி கண்டார்கள்; தமிழகத்தில் மட்டும் இன்னும் சரியாக வெற்றி காணவில்லையே என்ற குறை இந்த ஆட்சியில் உள்ள காவல்துறை பற்றி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, தமிழகத்தில் தேகு என்பவனுடைய தலைமையில் ஏறக்குறைய மூன்று லட்சம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டு அவன் ஆந்திர மாநிலத்திலுள்ள பெல்லாரியில் பிடிபட்டான். நக்சல்பாரிகளைப் பிடித்தோம் என்று பெருமை பேசுகிறார்களே, ஏன் பிடிக்கவில்லை என்று மக்கள் மத்தியில் பேசுகிறார்கள்.

குறிப்பாக காவல் துறையினர் சிறந்த துறையினராக இருந்தாலும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைக் கொடுக்காத காரணத்தாலும், பழுதடைந்த கார்களையும், ஓட்டை உடைசல் ஜீப்புகளையும் வைத்துக் கொண்டு அவர்கள் எந்த முறையில் பணியாற்ற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால் தான் குற்றங்கள் அதிகமாகப் பெருகி வந்திருக்கின்றன.

1968-ம் ஆண்டில் சொத்துக்களும், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கொலைகளுமாக 26,997 குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. 1969-ல் அது 28,212 ஆக உயர்ந்திருக்கிறது. அதோடு இந்தியன் பீனல் கோட் ஸ்பெஷல் லாஸ் படி நடைபெற்ற குற்றங்கள் 1968-ல் 62,579 ஆக இருந்தது இப்போது 66,326 என்ற முறையில் உயர்ந்திருக்கிறது. மதுவிலக்குக் குற்றம் 1966-ம் ஆண்டை பேஸ் ஆக வைத்துப் பார்த்தால் 1,89,000 ஆக இருந்தது, 1969-லே 3,60,555 ஆகப் பெருகியிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? யாருடைய செயல் திறமையைக் காட்டுகிறது? பம்பாயில் ஜெயித்து வந்தவர்கள், காஷ்மீரில் ஜெயித்து வந்தவர்கள் தமிழ் நாட்டில் மட்டும் என் ஓட மறுக்கிறார்கள்? தமிழ் நாட்டிலே அவர்களுடைய செயல்திறன் குறைந்திருக்கிறது.

சென்னையைப் பொருத்தவரை — The City Police administration is at a discount, the City Police administration is stinking என்று மக்கள் மத்தியிலும் நீதிமன்றங்களிலும் பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த சிடி போலிஸ் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு இருந்த பல வசதிகளை இன்று குறைத்திருக்கிறார்கள். 1968–69-ல் 1,26,792 ரூபாய் குதிரை வகைகளுக்காக ஒதுக்கியிருந்தார்கள். 1970–71-ல் அது 1,20,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. குதிரைகள் அதிகமாக இல்லை, இருப்பவையும் நல்ல குதிரைகளாக இல்லை. நல்ல குதிரைகள் நிறைய இருந்தால் சென்னையிலே அன்று துப்பாக்கிச் சூடு நடந்திருக்க முடியுமா? குதிரையை உபயோகித்து கூட்டத்தைக் கலைத்திருக்கலாமே. இருக்கின்ற குதிரைகள் வயதான குதிரைகளாக இருக்கின்றன; போடப்படும் தீனியும் குறைவாக இருக்கிறது. தெனாலிராமன் குதிரையைப் போல் தாடி வைத்துக் கொண்டு போனால் அதைப் பிடித்துக் கடிக்கும் நிலைமை இருக்கிறது.

பி.ப. 12-30 **ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** நம்முடைய நாட்டிலுள்ள சிறந்த மேதைகள் எல்லாம் தாடி வைத்திருக்கிறார்கள். தெனாலிராமன் குதிரை தாடியைத்தானா தேடவேண்டும்? அதைத் தயவு செய்து உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும். வேறு ஏதாவது ஒரு உவமையை அவர்கள் கையாளலாம்.

**திரு. டி. மார்டின் :** போலீஸ்காரர் தாடி வைத்துக்கொண்டு சென்றால் அவர்களைத்தான் அது பிடிக்கும். உறுப்பினர் அவர்கள் அந்தக் குதிரையின் பக்கம் செல்லவேண்டியதில்லை. போலீஸ் குதிரையை போலீஸ்காரர்கள்தான் நிர்வகிக்கவேண்டும்.



**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** காவல் துறையினர் தாடி வைத்துக் கொள்ளக்கூடாது என்ற மரபு இருப்பதாக அறிகிறேன். அப்படியென்றால் அது காவல் துறையினரைக் குறிக்காது. தயவு செய்து அவர்கள் அதை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** இன்று விலைவாசியேற்றம் அதிகமாக இருக்கிறது. பிறகு, 'மெயின்டனஸ் ஆஃப் வெகிக்கிள்ஸ்'. அதற்காக 1969-70-ல் 17 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அது இப்போது ரூ. 40,000 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. ஸிட்டி போலீஸ் குற்றம் நடக்கிற இடத்திற்குச் செல்லவேண்டுமென்றால் ஸ்பேர் பார்ட்ஸ் செலவு, பெட்ரோல் செலவு போன்றவைகளின் செலவு இப்போது அதிகமாகியிருக்கிறபோது குற்றம் நடந்து முடிந்து விட்டபிறகு அடிப்பட்டவன் சுகமாக இருக்கிறானா என்று பார்க்கத்தான் அவர்கள் போக முடியுமே தவிர குற்றவாளிகளை உடனடியாகக் கண்டு பிடித்து புலன் விசாரணை செய்ய முடியாத நிலையில் தான் ஸிட்டி போலீஸார் இருக்கிறார்கள். 'ஃபீடிங் சார்ஜ்' என்று 1968-69-ல் 10,00,000 (பத்து லட்சம்) ரூபாய் ஒதுக்கப்பட்டது, 1970-71-ல் ரூ. 5,00,000 (ஐந்து லட்சம்) ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் முன்னால் ஒரு கப் காபி குடித்து வந்த ஸிட்டி போலீஸ்காரர் இன்று அரைக் கப் காபிதான் குடிக்க முடியும். முன்பு ஒரு இட்டிலி சாப்பிட்டு வந்தவர்கள் இப்போது பாதி இட்டிலி தான் சாப்பிட முடியும் என்ற நிலை இருக்கிறது. Miscellaneou என்று சென்ற ஆண்டு ரூ. 8,90,000 ஒதுக்கியிருந்தார்கள். இந்த ஆண்டு அதை ரூ. 4,50,000 ஆக குறைத்திருக்கிறார்கள். அதிலும் பாதி குறைத்திருக்கிறார்கள். திடீரென்று கமிஷனருக்கு ஒரு வேலைக்காக பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? இதில் நான்கு லட்சம் ரூபாய் குறைத்திருக்கிறார்கள். என் ஸிட்டி போலீஸினிடம் இந்த ஆட்சிக்கு அவ்வளவு கோபம் வருகிறது என்று தெரியவில்லை. " clothing and equipment " என்பதற்காக சென்ற ஆண்டு ரூ. 5,33,000 ஒதுக்கியிருந்தார்கள். இந்த ஆண்டு அதை ஐந்து லட்சமாகக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் காக்கிச் சட்டை போட்டுக் கொண்டு வருவார்களா அல்லது பனியனைப் போட்டுக் கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. இப்போது துணி விலை ஏறியிருக்கிறது. எக்விப்மெண்ட்டின் விலைகளும் ஏறியிருக்கின்றன. ஸிட்டி போலீஸ்காரர்கள் மருத்துவ மனைகளுக்குச் சென்று மருந்து வாங்கவேண்டியதில் மருந்துக்காக சென்ற ஆண்டு அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3,32,000. அது இந்த ஆண்டு ரூ. 3 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஸிட்டி போலீஸார் அடிபட்டு மருத்துவ மனைக்குச் சென்றால் அங்கு பென்ஸிலினின் ஊசிக்குப் பதிலாக தண்ணீரை வைத்து ஊசி போட்டு சுகப்படுத்தலாம் என்ற முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

அடுத்தபடியாக, திறமை மிக்க ஒரு ஐ. ஜி.-யை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். திறமை மிக்க ஒரு தலைவர் இன்று காவல் துறையின் தலைமைப் பதவியை வகித்து வருகிறார்கள். அவர்களுக்குக் கூட, தலைமை அதிகாரியாக இருக்கக்கூடிய அவர்களுக்குக்கூட 1969-70-ல் சம்பளம், டி.ஏ. என்ற வகையில் ரூ. 6,47,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதை ரூ. 6,39,000 ஆக குறைத்திருக்கிறார்கள். இத்துறையை தலைமை தாங்கி நடத்தும் அவர்களுக்கே கூட குறைக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக, டி.ஐ.ஜி. யின் டி.ஏ. யில் ரூ 10,000 குறைத்திருக்கிறார்கள் இப்படியென்றால் எப்படிச் செயல் திறன் ஏற்படும்? மாவட்ட போலீஸ் துறையில் 'Travelling allowance including cost of passage' க்காக கடந்த ஆண்டு 97 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது இந்த ஆண்டு 85 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 97 லட்சம் எங்கே, 85 லட்சம் எங்கே? குற்றம் நடந்த இடத்திற்குப் போக முடியுமா, சிந்தித்துப் பாருங்கள். ஆதலால் குற்றம் நடந்த இடத்திற்குப் போகாமல் பார்பர் ஷாப்பிற்கோ அல்லது லாண்ட்ரிக்கோ சென்று இருந்துவிட்டு கந்தனைக் காணவில்லை, கருப்பனைக் காணவில்லை என்று சொல்லி திரும்பி வருவார்களே அல்லாது அந்த இடத்திற்கு அவர்கள் போகமுடியுமா? 12 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆபீஸ் கண்டிஜன்ஸி என்ற தலைப்பில் மாவட்ட போலீசுக்கு சென்ற ஆண்டு இருந்ததைவிட ரூ. 5,23,000 குறைக்கப்பட்டிருக்கிறது இந்த ஆண்டு. ஆகவே எப்படி செயல் திறன் வரமுடியும் என்று கேட்கிறேன். வேண்டிய வசதிகளைக் கொடுத்தால்தானே அவர்கள் திருடனைப் பிடிக்க முடியும்.

அடுத்ததாக, மோட்டார் வெஹிக்கிள்ஸ் "new vehicles including return of condemned vehicles" என்ற வகையில், 1969-70-ல் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது பத்து லட்சம் தான் மாவட்ட போலீசுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்கள் எப்படி பிரயாணம் செய்வார்கள்? ரிவார்டில் ரூ. 33,856 குறைத்திருக்கிறார்கள். தளவாடங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையும் போன ஆண்டு ரூ 1,30,000 என்றிருந்தது இப்பொழுது ஒரு லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட போலீஸ் காரர்களுக்கு ஆஸ்பத்திரிச் செலவில் ரூ. 66.000 குறைத்திருக்கிறார்கள். குற்றவாளிகளை ஜெயிலுக்கு அனுப்புகிற போலீஸ் காரர்கள், அதிகாரிகள், சமயத்தில் ஆறு வார காலம் ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறார்கள் ரெப்ரஷர் கோர்ஸ் என்ற பெயரில் அப்படி அவர்கள் அங்கு செல்லும்போது அங்கு லேவெட்டரி வசதி கூட இல்லாத நிலையில் அவர்களின் நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. அதையும் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

க்ரிமினல் இன்வெஸ்டிகேஷன் டிப்பார்ட்மெண்ட் பெருமைப்படத்தக்க ஒரு டிப்பார்ட்மெண்ட். ஸ்காட்லாண்ட் யார்டில் 45 சதவிகிதம் குற்றம் தான் புலனாய்வு செய்கிறார்கள். இங்கு 61 சதவிகிதம் குற்றங்களை புலனாய்வு செய்கிறார்கள் என்பதற்காக பாராட்டவேண்டிய டிப்பார்ட்மெண்ட் இது. அதில் கூட ஆபீஸ்



கண்டிஜன்ஸியில் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 3,74,000-ல் ரூ. 24,000 குறைத்து இந்த ஆண்டு ரூ. 3,50,000 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இனி இந்தப் புலன் ஆய்வுத் துறை திறமையாகச் செயல்படக்கூடாது என்று விரும்புகிறார்களா? மோட்டார் செலவு; வாகனச் செலவு, போட்டோ எடுக்கும் செலவு இவற்றில் கடந்த ஆண்டு மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது இந்த ஆண்டு இரண்டு லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்தால் நாம் ஸ்காட்லண்ட் யார்டோடு போட்டி போட முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது ஸி.ஐ.டி. டிப்பார்ட்மெண்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஜீப்கள் ஓட்டைகள், பழுதடைந்த ஜீப்கள். குற்றம் செய்துவிட்டு நல்லதொரு காரில் பறக்கும்போது இவர்கள் இந்த பழுதடைந்த கார்களில் சென்றால் நடுக்காட்டுக்கு சென்று விட்டு குற்றவாளிகளை பிடிக்காமல் திரும்பும் நிலைதான் ஏற்படும். அதையும் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, "State Forensic Laboratory" லாபரட்டரி சார்ஜில் ரூ. 7,000 குறைத்துவிட்டார்கள். இந்தத் துறையில் காஷ்மீரில் நல்லமுறையில் அவர்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு காவல் துறையைச் சேர்ந்தவர்கள். எதற்காக காவல் துறையினரின் மேல் இவ்வளவு கோபம் என்று தெரியவில்லை. எக்விப்மெண்டின் விலைகள் ஏறியிருக்கின்றன. இதற்காக 1969-70-ல் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது இந்த ஆண்டு 60,000 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. இப்படியென்றால் எப்படி, இன்வெஸ்டிகேஷனை சரியான முறையில் நடத்த முடியும் என்பதைப் பற்றி முதலமைச்சர் விளக்க வேண்டும்.

விட்டி போலீஸ் பொறுத்தவரையில், வழக்குகளை வாபஸ் வாங்கும் முறைபற்றி பேசவேண்டியிருக்கிறது. ஸப்ரஷன் ஆஃப் இம்மாரல் டிராஃபிக் ஆக்ட்டின் கீழ், விபசாரத் தடைச் சட்டத்தின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் Crime Nos. 160 to 162 of 1969—C.C. No. 39110 of 1969, Fifth Presidency Magistrate கோர்ட்டில் ருக்மணி என்ற நங்கையும், விஜயா என்ற நங்கையும், சரோஜனி என்ற நங்கையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மேல் உள்ள வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டிருக்கின்றன. காரணத்தை பிறகு சொல்கிறேன். டிகாய் விட்னஸ் ஹாஸ்டைலாக மாறிவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

"Hostile witness" evidence need not be rejected in to.

என்றிருக்கிறது. இந்தக் குற்றவாளிகளைப் பிடிக்க போலீஸார் நேரிலே செல்கிறார்கள். அவரே 'ஐ விட்னஸ்' ஆகிறார். அவர் வாக்குமூலத்தை நம்பி கோர்ட் தண்டனை கொடுக்கலாம். அப்படியிருந்தும் வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். இன்னொரு

முக்கியமான விஷயம். ஸப்ரஷன் ஆப் இம்மாரல் டிரூபிக் ஆக்ட்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட Crime Nos. 194, 195, 196, 197 ஆஃப் 69 கேஸில் சத்தியநாராயண ராஜு, சத்தியாவதி, ராமகிருஷ்ணன், விஜயராணி போன்றவர்கள் குற்றவாளிகளாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு அவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் விட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லிருர்கள்? டிகாய் சாட்சியை பிடித்துக் கொண்டு வரமுடியவில்லை, அதனால் வழக்கு போட முடியவில்லை என்று சொல்வார்களானால், நமக்கு ஒரு சி.டி. போலீஸ் தேவையா? இதற்கு ஒரு அஸிஸ்டெண்ட் கமிஷனர் தேவையா? என்று கேட்கிறேன். சாதாரணமாக ஏட்டையா கூட சாட்சியைக் கொண்டு வந்து சார்ஜ் ஷீட் போடுவார்கள். ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனரால், அதுவும் சிட்டியில், அதற்குமேல் டெபுடி கமிஷனர் இருக்கிறார், அதற்கும் மேலே கமிஷனர் இருக்கிறார், இவ்வளவு பேரும் இருந்து சாட்சியைக் கொண்டுவர முடியவில்லை என்று விட்டுவிட்டால் அது என்ன நிலையைக் காட்டுகிறது? இதுபற்றி மறைந்த முதலமைச்சரவர்கள் சொல்லுகின்ற வாக்கியத்தில் முதலமைச்சரவர்களுக்கு உண்மையிலேயே நம்பிக்கையிருந்தால் கடமை தவறிய அசிஸ்டெண்ட் கமிஷனரை உடனடியாக சஸ்பெண்ட் செய்து நீதி விசாரணை செய்யவேண்டும். குற்றவாளியைக் கொண்டு வந்து வழக்கு போட முடியாது, ஆனால் ஒரு சாட்சியைக் கொண்டு வந்து நிறுத்தி வழக்கு போட முடியாத ஒரு போலீஸ் இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி முதலமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும். வருகின்ற குரல் எங்கிருந்து வருகிறது என்று பார்க்காமல் அந்தக் குரலிலே நியாயம் இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து விசாரணை செய்ய வேண்டும். அப்படி விசாரணை நடத்தினால் இன்னும் அந்தந்த துறையில் எத்தனை வழக்குகள் விடப்பட்டுள்ளன என்று கண்டுபிடிக்க முடியும். Anti-smuggling vigilance இலாக்காவில் சுமார் 4000 கேஸ் பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த நான்காயிரத்தில், வட ஆற்காடு மாவட்டத்திற்கு மைலோ ஒரு வியாபாரிக்கு பங்கீட்டிற்காக ஒதுக்கப்பட்டு, அந்த மைலோவை அவர் சென்னையிலே ஒரு வியாபாரியிடம் விற்றிருக்கிறார். அந்த மாவட்டத்திலே விநியோகம் செய்யாமல் போயிருக்கிறது. அதைப்பற்றி மத்திய போலீசார் புலன் விசாரணை செய்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால் நம்முடைய திறமை மிகுந்த போலீஸ் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பதை முதலமைச்சரவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, எதோ வடாற்காடு மாவட்டத்தில், மைலோ ஒதுக்கி, சென்னையில் வியாபாரம் நடந்தது. அதை மத்திய போலீசார் விசாரணை செய்து மத்திய சர்க்காருக்கு அறிக்கை அனுப்பியிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தகவல் எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது என்ற உண்மையைச் சொல்லுகிறேன். அங்கத்தினர் அவர்கள் கேலியாக எடுத்துக்கொள்வதைப்பற்றிக் கவலையில்லை. அப்படி மத்திய அரசுக்கு ஏதாவது அறிக்கை அனுப்பியதுபற்றி இந்த அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அப்படித் தகவல் கொடுத்தால் எந்த வியாபாரி என்று பார்க்காமல் நிச்சயமாக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. டி. மார்டின்:** அமைச்சரவர்கள் அதுபற்றி விசாரணை செய்தால் தெரிய வரும்.

ஈரோட்டில் பழனியப்ப கவுண்டர் என்பவர் ரைஸ் மில்லை விற்றுவிட்டார். 6 மாதங்களுக்கு முன்பு அரசு தரப்பில் ஆயிரம் டன்கள் நெல் கொடுத்து அரைத்து வாங்கியிருக்கிறார்கள். என்றால் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. ரைஸ் மில் இல்லாதவரிடத்தில் அரசின் நெல் கொடுக்கப்படுகிறது. அவர் முதலமைச்சரின் பிரைவேட் செக்ரட்டரியாக இருக்கும் திரு. வைத்திலிங்கம் அவர்களின் நெருங்கிய உறவினர் என்று தெரிகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மறுபடியும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஈரோட்டில் ரைஸ் மில்லை விற்றுவிட்டவருக்குக் கொடுப்பதாகப் புகார் சொல்லுகிறார்கள். ஹோல் சேல் டீலர், புரொக்யூர் செய்பவர்களிடத்தில் மட்டும் கொடுத்து அரிசியாக்கச் சொல்லுகிறோம். தனியாருக்குக் கொடுத்துச் செய்வதில்லை. அவர்கள் சொல்வதை எத்தனை வருஷத்திற்கு முன்பு எத்தனை மாதத்திற்கு முன்பு என்று சொல்லட்டும். அடிக்கடி உறவினர், பிரைவேட் செக்ரட்டரிக்கு உறவினர் என்று சொல்லிக் கொண்டிருப்பது முறையுமல்ல, அது சரியுமல்ல. அப்படியே கொடுத்தாலும், அரிசி மில் சொந்தக்காரர்களிடமிருந்து அரிசியாக எடுத்துக்கொள்ளும்பொழுது குறிப்பிட்ட சதவிகிதம் என்று ஒதுக்கி வாங்குகிறோம். யாருக்குக் கொடுக்கிறோம், என்ன கொடுக்கிறோம் என்று பார்க்காமல் கொடுத்தால், திரு. நல்லசாமி அவர்கள் அரிசியைக் கொண்டு வந்து காட்டியதாகப் பத்திரிகையில் பார்த்தேன், அப்படித்தான் இருக்கும். எனவே, திறமை படைத்தவர்களுக்குக் கொடுப்பதாக யிருந்தால் தவறில்லை.

**திரு. டி. மார்டின்:** 6 மாதத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அதிலே விசாரணை நடத்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக, ஒயின் விற்பனை லைசென்ஸ் தற்சமயம் சுமார் 4 லைசென்ஸ்கள் சிட்டியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சண்முக வடிவேல் என்பவரின் மனைவியான ஜோதியம்மாள் என்று சீதம்மா காலனியில் இருப்பவர்களுக்கு 'ஃபாரின் லிக்கர்' விற்கும்

லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதற்கு எந்த முறையிலே தகுதி பெற்றவர்கள்? முன்பு மது விற்றுப் பழக்கம் இருக்கிறதா? அல்லது, மருந்துக்கடை வைத்துப் பழக்கமா?

அடுத்தபடியாக, அரசாங்க உத்தியோகஸ்தர்கள்பற்றி விஜிலன்ஸ் கமிஷனில் ஒன்று கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** லிக்கர் ஷாப் வைக்க யார் வேண்டுமானாலும் லைசென்ஸ் கேட்கலாம், இதிலே எந்தவிதமான தடையும் இல்லை. ஏற்கெனவே 10 கடைகள் சென்னையிலிருக்கின்றன. இப்பொழுது 5 கடைகளுக்கு 3, 4 ஆண்டு காலமாக கொடுக்கப்பட்டு 15 கடைகள் இருக்கின்றன. யாரோ இரண்டு மூன்று பேர் மட்டும் அதிகமாக லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று இல்லாமல் பரவலாகக் கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டால்கூட நிச்சயமாகத் தரப்படும்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவரவர்களே, அப்படி லிக்கர் ஷாப் வைக்க பர்மிஷன் அளிக்க வேண்டுமென்று இந்த முதலமைச்சரிடம் கேட்கும் அளவில் இந்த சட்டமன்ற உறுப்பினர் இல்லை என்று தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

Thiru T. Martin.—Sir, There were interruptions for five minutes.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிஷங்களிலே முடித்து விடுங்கள்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவரவர்களே, உத்தியோகஸ்தர்களைப்பற்றி, விஜிலன்ஸ் கமிஷன், மாமூல் மணி, ஹஷ் மணி புஷ் மணி என்றிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறது. இந்த நேரத்தில் காவல்துறை மிகவும் கண்விழிப்பாக இருக்க வேண்டும். காவல் துறையிலிருப்பவர்கள் வீடு கட்டவும், நிலம் வாங்கவும், ஹோம் டிபார்ட்மெண்டிலே முதலமைச்சருக்கு கீழே வேலை செய்பவர்கள், யாராகயிருந்தாலும் வீடுகள் கட்டும்பொழுது எந்தப் பிளானில் வீடுகள் கட்டப்படுகின்றன என்பதை முதலமைச்சரவர்கள் நிச்சயமாக வாங்கிப் பார்க்க வேண்டும். குறிப்பாக எங்களுக்கு வந்த தகவலின்படி முதலமைச்சரவர்களின் பிரைவேட் செக்ரட்டரியான திரு. வைத்திலிங்கம் அவர்கள் அண்ணா நகரில் பெரிய பங்களா ஒன்றைக் கட்டிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சுமார் 3,000 (மூவாயிரம்) சதுர அடி இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஒரு சதுர அடிக்கு 30 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் 90,000 ரூபாய் வரும் என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரி நிலையில் சர்க்கார் லோனாக நாற்பதாயிரமோ, ஐம்பதாயிரமோ வாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மீதமுள்ளவை எந்த முறையில் . . . . . .



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அடிக்கடி பிரைவேட் செக்கரட்டரியைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசிக்கொண்டு வருகிறீர்கள். என்ன காரணமோ எனக்குத் தெரியவில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர் யார் வீடு கட்ட வேண்டுமென்று சொன்னாலும் சர்க்கார் கடன் கொடுக்கிறது. யாராக இருந்தாலும் சரி, சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தால், அவர்கள் முதலமைச்சருக்குக் கீழேயிருப்பவராக இருப்பதற்காக மட்டுமல்ல, அரசாங்கத்தின் பணிபுரியும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் வீடு கட்ட அரசு கடன் கொடுக்கிறது. சொந்தப் பணத்தில் கட்டினாலும்கூட, அரசாங்கத்தின் அனுமதி வாங்கவேண்டும் என்று உத்தரவிருக்கிறது. அரசாங்கத்தில் கடன் வாங்கி வீடு கட்டுவதில் என்ன தவறு என்று எனக்குத் தெரியவில்லை. அனாவசியமாக ஒருவர் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பது அங்கத்தினருக்கு முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் பேசும் நேரத்தில் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை, பொறுப்பான ஒரு துறையில் இருப்பவரின் மீது சுமத்துவது நியாயமா? இந்த அவையில் ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டு போவதைப் பேரவைத் தலைவரவர்கள் அனுமதிக்கலாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். எதை வேண்டுமானாலும், பத்திரிகையில் வர வேண்டுமென்பதற்காக, தங்களுடைய பெயர் பெரிய எழுத்திலே இருக்க வேண்டுமென்பதற்காக வீணாகச் சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய அரசின் அதிகாரத்தின்கீழ் இருக்கும் அதிகாரிகளைப்பற்றிக் குறை கூறுவதிலே எந்தவிதமான தடையுமில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள், ஓர் அதிகாரி 'வீடு கட்டுவதாகச் சொல்லப்படுகிறது', என்று பேசுகிற நேரத்திலே, 'சொல்லப்படுகிறது', 'சொல்லப்படுகிறது', என்று சொல்ல வேண்டாம். இன்னுமொன்று சொல்லப்படுகிறது' என்ற வார்த்தை வைத்து, "ஏதோ அவர்கள் சொன்னதை நாங்கள் சொல்லிவிட்டோம், இது இல்லையென்று சொன்னால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம்" என்ற போக்கிலே போகக் கூடாது. பல முறை சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் மீண்டும் வற்புறுத்தத் தேவையில்லை என்ற காரணத்தினாலே பேசாமல் இருக்கிறேனே தவிர வேறொன்றும் இல்லை. திரு. மார்டின் அவர்கள் ஆதாரத்தோடு குற்றம் சாட்டுவதற்கு எந்தவிதமான தடையுமில்லை. 'யாரோ சொல்கிறார்கள்', 'சொல்கிறார்கள்' என்ற அளவிலே இங்கு பேசக் கூடாது; ஆதாரத்தோடு பேசுவது நல்லது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முதலமைச்சருடைய பிரைவேட் செக்ரட்டரி கடன் வாங்கியிருக்கிறார்கள்; மேலேயும் கையிலிருந்து செலவழித்திருக்கிறார்கள். 75 ஆயிரம், லட்சம், இரண்டு

லட்சம் என்றெல்லாம் உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இதற்கு என்ன ஆதாரம்? ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இங்கு சொல்லக் கூடாது. ஏனென்றால் இங்கு பேசுவது பத்திரிகையில் வரும். "இந்த அதிகாரி 40 ஆயிரம் கடன் வாங்கி 75 ஆயிரத்துக்கு வீடு கட்டிவிட்டார், எங்கேயிருந்து வந்தது மீதிப் பணம் என்று பரவலாகக் கேட்கப்படுகிறது, இதை இந்த மன்றத்தில் இப்பொழுது தெரிவித்துவிட்டேன்" என்று சொல்லிவிடுகிறார்கள். இப்படி இரண்டு வார்த்தைகளைச் சொல்லும்போது, "ஆதாரம் இருக்கிறதா ?" என்று கேட்டால், "கேள்விப்படுகிறேன்" என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது அவ்வளவு நல்லது அல்ல. இதற்குத் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஹைவெலிங் போர்டிலிருந்து 2½ கிரௌண்டு நிலம் வாங்கி தமது அப்ளிகேஷனிலேயே ரூ. 70,000-க்கு மேல் எஸ்டிமேட் தொகையைக் குறிப்பிட்டு அரசாங்கத்திடமிருந்து ரூ. 45,000 கடனாக, உரிய முறையில் பெற்றிருக்கிறார்கள் என்ற பரம இரகசியத்தை மாண்புமிகு அங்கத்தினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது முதலமைச்சரின் பிரைவேட் செக்ரட்டரியாக இருக்கும் ஒருவர் 1½ இலட்சத்திற்கு, 2 இலட்சத்திற்கு வீடு கட்டக்கூடாது என்று சொல்ல முடியாது. அப்படிக் கட்டும் நேரத்தில் அந்தப் பணம் எப்படி வந்தது என்று கேட்டால், அவர்களுக்குச் சொந்த அளவிலே கூட பணம் இருக்கலாம். உறுப்பினரவர்கள், இந்த அதிகாரி வீடு கட்டும் நேரத்தில் அதற்குச் செலவழிந்த பணம் அவர்களுக்குத் தவறான முறையிலே கிடைத்திருக்கிறதா என்பதைப்பற்றி விளக்கம் தேவை என்று அதைக் குற்றமாகச் சொல்லி கேட்கக் கூடாது. இப்படி விளக்கம் கேட்பது முறையல்ல. ஆதாரத்துடன் பேசவேண்டும். ஊரிலேயிருப்பவர்கள், பத்திரிகைகளெல்லாம் ஏதாவது சொல்வார்கள். அதைப்பற்றிச் சொல்வதற்கெல்லாம் மன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. கூறும் குற்றச்சாட்டை ஆதாரமுள்ளதாகக் கூறுவது நல்லது என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்லுகிறேன். திரு. மார்டின் அவர்கள் வழக்குரைஞராக இருப்பவர், அவருக்கு நன்கு தெரியும். எப்படி சொல்ல வேண்டுமென்று முறைப்படுத்திப் பேசுவது நல்லது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதில் நான் கூற வந்தது என்னவென்றால், காவல் துறையினரும், காவல் துறையினரைக் கட்டுப்படுத்தக்கூடியவர்களும் வீடுகள் கட்டிக் கொள்கிற நேரத்தில், அது 3,000 சதுர அடியா அல்லது 4,000 சதுர அடியா, எஸ்டிமேட் எவ்வளவு என்பதை முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அந்த அளவுக்கு குறிப்பிடுகிறேனே ஒழிய, விஜிலென்ஸ் கமிஷன் சொல்லியிருக்கிற சில முறைகளைப் பின்பற்றவிட்டால் மக்கள் மத்தியில் தவறான எண்ணம் . . . .





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'அப்படியெல்லாம் யோசிக்க வேண்டும், பார்த்துச் செய்ய வேண்டும்' என்பது முதல் அமைச்சருக்குத் தாங்கள் சொல்கிற யோசனை. அந்த யோசனையைப்பற்றி ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பதை பிறகு பரிசீலிக்க வேண்டும். அந்த யோசனைக்கிடையே தாங்கள் சொன்னது, 'என்னுடைய காரியதரிசி திரு. வைத்திலிங்கம் ரூ. 40,000 அல்லது 45,000 அரசாங்கத்திடம் கடன் வாங்கி ரூ. 75,000-க்கு வீடு கட்டியிருக்கிறார். அந்த முறையிலே அதற்கு விளக்கம் தேவை என்று கேட்டேன் என்பது. அவர்கள் மீது குற்றச்சாட்டு சொல்கிற நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டிற்கு உறுப்பினர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைப்பற்றி விசாரணை நடத்தினால், தாங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு சபாநாயகர் அவர்கள் அளிக்கின்ற தீர்ப்பை, இந்த சபை அளிக்கின்ற தீர்ப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். திரு. வைத்திலிங்கம் தவறு செய்து, வேறு மார்க்கத்தில் பணத்தைச் சேகரித்துக் கொண்டு, அதற்கு மேல் அதிகமாக பணம் செலவழித்து, அந்த வீட்டைக் கட்டியிருக்கிறார் என்று தாங்கள் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு தாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா?

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, என் கையிலுள்ள போட்டோவை தங்களிடம் (குறுக்கீடு) . . . . ஆதாரம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முன்பே சொன்னேன். திரு. மார்டின் அவர்களுக்கு மீண்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் ரூ. 40,000 கடன் வாங்கி ரூ. 4 லட்சத்திற்குக் கூட வீடு கட்டலாம். ரூ. 40,000-க்கு மேல் ரூ. 4 லட்சம் அளவிலே வீடு கட்டுவதற்கு அந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்பதைப் பார்க்க வேண்டும். அது தவறான வழியில் வந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை உம்மால் நிரூபிக்க முடியுமா என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை உம்மால் நிரூபிக்க முடியுமா ? (குறுக்கீடு) ரூ. 40,000 கடன் வாங்கியிருக்கிறார். ரூ. 40,000-க்கு மேல் வீடு கட்டியிருக்கிறார். அப்படி வீடு கட்டியிருக்கிறார் என்று சொன்னால், அந்த அதிகப் பணம் எப்படி வந்தது என்று கேட்கிற முறை வேறு. அதை இந்த மன்றத்தில் வந்து குற்றச்சாட்டாகச் சொன்னால் அதற்குத் தாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறீர்களா என்று முதல் அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். இதைத் தவறான முறையில் எடுத்துச் சொல்கிற நோக்கமே, அது தவறான வழியில் வந்திருக்கிறது என்ற எண்ணத்தில்தான் அதைத் தான் சொல்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 40,000 45,000 கடன் வாங்குகிறார்கள். அந்த வீட்டிற்கு எஸ்டிமேட்டைப் பார்க்கிற பொழுது, ரூ. 70,000-க்கு மேலே போகக்கூடிய நிலை இருக்கிறது என்று மக்கள் மத்தியிலே சொல்லப்படுகிறது. அத . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இதைப் போலவே, ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும், என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் எதிர்க்கட்சியில் இருக்கிற ஒவ்வொருவரைப் பற்றியும் இப்படிப் பேசி, இப்படி இவர் வீடு கட்டியிருக்கிறார், இந்த எம்.எல்.ஏ. இப்படி தவறுதலாக பணம் பெற்று வீடு கட்டியிருக்கிறார் என்று மக்கள் மத்தியிலே பேசப்படுகிறது என்று சொல்லிக் கொண்டே போனால் இருதரப்பிலும் ஒரு அசிங்கமான நிலைமை உருவாகும், தரக்குறைவான நிலைமை உருவாகும். ஆகவே, திரு. மார்டின் அவர்கள் தாம் சாட்டிய குற்றச்சாட்டிற்கு பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். அல்லது நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அவர் அப்படிப் பேசியது அனைத்தையும் எடுத்துவிடுவது சாலச் சிறந்தது என்ற என்னுடைய கருத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** நான் எப்படி பேசினேன் என்பதையும் குறிப்பிட்டு, அதற்கு நான் பொறுப்பேற்கத் தயாராக இருக்கிறேன். ரூ. 45,000 கடன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மன்றத்தில் உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்த உரிமை நான் பல முறை சொல்லியதைப்போல, ஒரு வரம்புக்கு உட்பட்ட உரிமைதான். நான் முன்னமே ஒரு முறை சொன்னேன். இந்த மன்றத்தில் தொழில் அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்களின் பெயரால் எழுந்திருந்த நகரத்தில் 'இந்த அளவுக்கு நிலத்திற்கு விலை கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்ன உடனே, தொழில் அமைச்சர் அவர்கள் 'என்னுடைய பெயரை இணைத்துக் கூறுவதினால், அதில் ஏதாவது நோக்கம் உண்டா? என்று கேட்டு, அதை நீக்கத்தான் வேண்டும் என்று வற்புறுத்தி, அதை நீக்கியபிறகு ஒப்புக்கொண்டார்கள். இப்பொழுது ரூ. 40,000 கடன் வாங்கி, ரூ. 75,000-க்கு வீடு கட்டியிருக்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில், மீதி ரூபாய் முறைப்படி வரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறைமுகமாக கூறியிருக்கிறார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் கேட்கிறார்கள். அப்படித் தவறான முறையில் பணத்தைச் சேர்த்து வீடு கட்டியிருக்கிறார் என்று உறுப்பினர் சொன்னால், அவர் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் ரூ. 40,000 கடன் வாங்கி, ரூ. 70,000-க்கு வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, அது பத்திரிகையில் வருகிற நேரத்தில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் செயலாளர் இப்படிச் செய்திருக்கிறார் என்று அவரைப்பற்றிய தவறான ஒரு கருத்து பத்திரிகையில் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, அப்படிச் சொல்லிவிட்டு, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை என்று சொல்வது முறையாகாது. அப்படிப்பட்ட பேச்சு மன்றத்தில் பேசுவது சரியல்ல.





**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 40,000, 45,000 கடன் வாங்கி அவர்கள் வீடு கட்டியிருக்கிறார்கள். மக்களால் அது ரூ. 70,000-க்கு மதிப்பிடப்படுகிறது. அந்தப் பிளான், எஸ்டிமேட் சாங்ஷனான நேரத்திலும், அதற்கு சுமார் ரூ. 70,000 ஆகும் என்று மதிப்பிடக்கூடிய அளவில், அந்தப் பிளான் தாக்கல் செய்யப்பட்டு, அது கார்ப்பரேஷனில் அப்ரூவ் ஆகியிருக்கிறது. அந்த அளவில் அந்தக் கட்டடம் ரூ. 70,000 மதிப்பிடப்படுகிறது. ஒரு ஸ்கொயர் ஃபுட்டுக்கு ரூ. 30 என்று வைத்துக்கொண்டால், ரூ. 70,000 என்று அந்த பிளானுக்கு ஆகும் என்ற பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முன்பே சொன்னது போல, ரூ. 40,000 கடன் வாங்கி ரூ. 4 லட்சத்திற்குக் கூட வீடு கட்டலாம். ஆனால் மேற்கொண்டு செலவழிக்கப்பட்ட பணம் தவறான வழியில் வந்தது என்று சொல்கிறீர்களா? அப்படியென்றால், அதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்படி சர்க்கார் அதிகாரிகள் வீடுகள் கட்டுகின்ற நேரத்தில், அதற்கான பிளானை வாங்கி, அந்தப் பணம் எந்த வழியில் வந்திருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்கள், காவல் துறையினர் வீடு கட்டினாலும் சரி, அதைக் கண்காணிக்கின்றவர் வீடு கட்டினாலும் சரி, பார்க்க வேண்டும். அப்பொழுது தான் விஜிலன்ஸ் கமிஷன் சொல்கிறதை செயல்படுத்த முடியும் என்று சொன்னேனே தவிர. பணம் தப்பிதமான முறையில் வந்திருக்கிறது என்று நான் பேசவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எனது அந்தரங்கச் செயலாளர் வீடு கட்டிய விஷயத்தில் தவறு நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் சொல்கிறார்களா?

**திரு. டி. மார்டின் :** தவறு நடந்திருக்கிறது என்று நான் கூறவில்லை . . . (மணி அடிக்கப்பட்டது)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அவையின் முன் இருக்கும்படியான இந்தப் போலீஸ் மானியத்திற்கு என் கட்சியினர் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் வராத சூழ்நிலை இருந்ததால், கடைசியிலே நண்பர் திரு. மார்டின் அவர்கள் முடிவுரை ஆற்றுவதாக இருந்தார்கள். அவர் பேசும்படியான காலத்தில் குறுக்கீடுகள் இருந்தன. இது மிகவும் முக்கியமான மானியமாக இருப்பதினாலும், நான் இங்கே இருப்பதினாலும், ஒரு சில நிமிஷ நேரத்தில் என்னுடைய உரையை முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக, எதிர்க்கட்சியினர் சாட்டுகின்ற குற்றச்சாட்டுகளை சர்க்கார் தரப்பிலிருந்து மறுக்கவேண்டும். குற்றச்சாட்டு சாட்டுவதற்கு சரியான ஆதாரம்

இருக்கவேண்டுமென்ற நிலை இருந்தாலும்கூட, பூரணமான எல்லா ஆதாரங்களும் இருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயக முறையில், தவறான குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டால், அப்படிச் சாட்டும்படியான நேரத்தில், அது இல்லை என்று நிரூபிக்கப்பட்டு விட்டால், சர்க்கார் நல்ல முறையில் இயங்குவதற்கு அது வழிகாட்டியாக இருக்குமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில், சில உறுப்பினர்கள் பேசினார்கள். குறிப்பாக போலீஸ், காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஏதோ உங்களுடைய ஆட்சியில் எங்கள் கட்சி அலுவலகத்தில் போலீஸ் வைக்கவேண்டும். என்ற சூழ்நிலை இருக்கிறது என்றால், அப்படி வைக்கப்படுவதற்கு இந்த சர்க்கார் தான் பொறுப்பே தவிர, நாங்கள் அல்ல. ஒரு சர்க்கார் ஆண்டுகொண்டிருக்கும்பொழுது, கட்சி அலுவலகத்தில் போலீஸ் இருக்கிறது என்றால், ஆளும் கட்சியினர்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

நமது போலீஸ் துறை நீங்கள் வந்ததற்குப் பிறகுதான் மாறி விட்டது, உங்களுக்கு முன்னால் வேறுவிதமாக இருந்தது என்ற நிலை இல்லை. பொதுவாக, தமிழ் நாடு காவல் துறை சிறப்பாகப் பணியாற்றிவருகிற முறையில் தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது. நமது மாநிலத்தில் இருக்கக்கூடிய காவல் துறை நன்றாகச் செயலாற்றி வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், அப்படிச் செயலாற்றுவதற்கு இவர்கள் விடப் படுகிறார்களா, சுயமாக நடப்பதற்கு விடப்படுகிறார்களா, பூரண சுதந்திரம் கொடுக்கப்படுகிறதா, தங்களுடைய பணியையும், கடமையையும் செய்வதற்கான சூழ்நிலை இப்பொழுது இருக்கிறதா இல்லையா என்பதுதான் பிரச்னையே தவிர, வேறு ஒன்றுமில்லை.
பி.ப. 1-00. ஆகவே, பாக்கியிருக்கும் மாநிலங்களில், குறிப்பாக பஞ்சாப் மாநிலத்தில் காவல் துறை அதிகாரிகள் வருவதற்கே சாதாரண வேலையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. தவறு கள் நடப்பது பற்றி. சேகரித்த புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் சிறந்த முறையில் பணியாற்றி வந்திருக்கி றார்கள். ஆனால் வர வர இருக்கும்படியான சூழ்நிலைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால், போலீசைப் பார்த்தால் ஜனங் களுக்கு பயம் அற்று போய்விட்டது. அதற்குக் காரணம் யார்? (குறுக்கீடு) நாங்களா? நீங்கள்தான். ஆளுங்கட்சிக்காரர் களாகிய நீங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, வன்முறையைத் தூண்டிவிட்டு, வன்முறையை வளர்த்ததன் காரணமாக, இன் றைக்கு அற்று போய்விட்டது என்று குற்றம் சாட்ட முன்வருகி றேன். எத்தனை தீ வைத்தது? இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று, எத்தனை தீ, எத்தனை கொலைகள், எத்தனை ....





**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** எதிர்க் கட்சித் தலைவரே இடம் கொடுக்கிறார்கள். போலீஸ்காரர்களுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு மிக, மோசமாகப் போய்விட்டது என்பது, இண்டிகேட், சிண்டிகேட் என்று வந்தபிறகுதான் மரியாதை குறைந்து இருக் கிறது. எங்கள் ஆட்சியால் அல்ல. போலீஸ்காரர்கள் மக்களி டத்தில் எந்த அளவில் நடக்க வேண்டுமோ அந்த முறையிலும், மக்கள் போலீசாரிடத்தில் எந்த அளவில் நடக்க வேண்டுமோ அந்த நிலையிலும் நடக்கிறார்கள். ஆட்சி நல்லபடியாகவே நடக் கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் நம்முடையது என்கிற வகையில் நடக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆமாம். அதற்கெல்லாம் பின்னால் விளக்க விரும்புகிறேன். உங்கள் ஆட்சியில், மாவட்ட, வட்டச் செயலாளர்கள் போலீஸ் நிலையத்தில் அதிகாரம் நடத்துவதை, கட்சிக்காக போலீஸ் நடத்துவதைப் பார்க்கிறோம். கட்சியின் வளர்ச்சிக்காக நீங்கள் சொல்வதற்கெல்லாம் அவர்கள் செவி சாய்க்க வேண்டும் என்று சொல்வது சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம்தான் சொல்லுகிறேன், இதெல்லாம் அவ்வளவு நல்ல தல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களைப் பார்த்துத்தான் சொல் லுகிறேன். புலவர் பெருமானாக இருப்பதால், தங்களுக்கு இராமா யணத்திலிருந்து சொல்கிறேன். மந்தரை பேசியதன் காரணத் தால் தேவியின் தூய மனதும் கெட்டுவிட்டது போல, கட்சிக்காரர் களின் காரியங்களால் தூய போலீசும் இந்த மூன்று வருஷ காலத் தில் கெட்டுவிட்டது என்பதுதான் இப்பொழுது இருக்கும் நிலை. போலீஸ், சட்டம் அமைதி இவற்றைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு அவர்களிடம் மக்களுக்கு அச்சம் இருந்தால்தான் செய்ய முடியும். ஆட்சி எதுவாக இருந்தாலும், மாறினாலும், சட்டம், அமைதி இவற்றைக் காக்க அவர்களுக்கு பூரண சுதந்திரம் இருக்க வேண்டும். இப்பொழுது இருக்கிறதா? சுதந்திரமாக இயங்க முடியும் என்கிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோமா?

எதிர்க்கட்சியிலிருந்தபோது வன்முறையில் ஈடுபட்டு தண்டனை அடைந்தவர்களையெல்லாம் விடுவித்திருக்கிறீர்கள். எப்படி போலீஸ் இயங்கமுடியும்? அந்த இடத்தில் போலீசுக்கு என்ன மரியாதை, மதிப்பு இருக்கும்? போலீசை தனியாக இயங்க விடுகிறார்களா? மாணவர்கள் பல் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் விட்டார்களா? போலீஸ். கமிஷனர் கெஞ்சவில்லையா? போட்டோ வெல்லாம் வந்ததே. பத்திரிகையில் எல்லாம், உலகமெல்லாம் வந் ததே. போலீஸ் இஷ்டப்படி நடக்க விட்டார்களா? நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில், பூரண சுதந்திரம் கொடுத்திருக் கிறோமா? எத்தனை தீ வைப்பு வைக்கப்பட்டது? கண்டு பிடித்

தார்களா? ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை? கட்சித் தலையீடு, கட்சியின் தலையீட்டால் கண்டுபிடிக்க முடியவில்லை. திரு. கிருஷ்ணசாமியின் அறிக்கை என்ன சொல்லுகிறது? ஆசையின் காரணமாக தீ வைக்கப் பட்டது என்று இருக்கிறது. ஆசைக்கு காரணம் யார்? கண்டு பிடித்தார்களா? கண்டு பிடிக்க முடியுமா? கண்டு பிடித்தால், போலீஸ்காரர் உத்தியோகம் இருக்குமா? உணவு அமைச்சர் துறைமுகத்திலிருந்து கேஸ் ரிஜிஸ்டர் செய்திருக்கிறோம் என்கிறார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கண்டுபிடிக்கப்பட்டு, வழக்கு போடப்பட்டிருக்கிறது. என்றைக்குமே மறுத்தது இல்லை. போலீஸ் கொண்டுவந்த மூட்டைகளை இல்லை, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கேஸ் போட்டிருக்கிறது. தண்டனையும் கிடைக்கும். அவசரப்படவேண்டாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: மதுவிலக்கு பற்றிச் சொல்லப் போனால், புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். 60-லிருந்து படிப்படியாக ஏறி, 67-ல் இவர்கள் வந்தபோது, 1,90,713 ஆக இருந்து, மூன்று ஆண்டுகளில் 2,53,667, 3'06,550 என்று போயிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? ஆட்சிக்கு இவர்கள் வந்த காலத்தில் இருந்ததைவிடவும் இன்றைக்கு அதிகம் என்றால், பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது எத்தனையோ? ஆகவே, இந்த ஆட்சியில் கட்டுப்பாடு இல்லை; சர்க்கார் நடவடிக்கை எடுப்பதில் தீவிரமாக எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன். இவ்வளவு அதிகம் என்றால், போலீசுக்கு வசதிகள் அதிகம் செய்து கொடுக்க வேண்டும் என்பதைத்தான் நண்பர் திரு. மார்டின் குறிப்பிட்டார்கள். வசதிக் குறைவோடு இவ்வளவு என்றால், எவ்வளவு தவறியிருக்கிறது என்று யோசித்துப் பார்க்க வேண்டும். மதுவிலக்கு கேள்விக் குறியாக இருந்து, அகண்டு விரிந்து முற்றுப்புள்ளியாகியிருக்கிறது. கேள்விக்குறியாகும் நிலை ஏன் வந்தது?

ஆகவே என்ன நிலை? மதுவிலக்கு வெற்றிபெற அடிப்படைக் காரணம் போலீசினுல் மட்டும் செய்துவிட முடியாது, மக்கள் தரம் உயரவேண்டும். "கள்வர் இல்லையேல், காவலர் இல்லை, கொள்வர் இல்லையேல், கொடுப்பாரும் இல்லை" என்று கம்பர் குறிப்பிட்டது போல் சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்றால், மக்கள் தரம் உயர வேண்டும். ஒழுக்கம் உயரவேண்டும். அப்படி உயரவேண்டும் என்றால், ஆளும் கட்சிக்காரர்கள், மக்கள் தரத்தை, பண்பை உயர்த்து காரியங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்று குற்றம் சாட்டிமட்டும் பிரயோஜனம் இல்லை.

பண்ருட்டி எம்.எல்.ஏ. சொன்னார்கள், காங்கிரஸ் அலுவலகத்தில்தான் காவல் துறை இருக்கிறது என்று. திராவிட முன்னேற்றக் கழக அரசியல் மாநாடு திருச்சியில் நடந்தது. அப்பொழுது என்ன நடந்தது? எத்தனை திருட்டுக்கள்? எத்தனை



பெண்கள் வளையல்கள் போயின. காரணம் என்ன? (குறுக்கீடு) உங்கள் மாநாடு திருச்சியில் நடந்ததே அப்பொழுதுதான.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருட்டுகள் போனது உண்மை. அதை நடத்தியவர்கள் வேறு கட்சிக்காரர்கள் என்று தகவல்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: வேறு கட்சிக்காரர்கள் என்று இருக்கட்டும். ஆனால் கண்டுபிடிக்கவே முடியவில்லையே. திருட்டுகள் போனால், திருடனைப் பிடிக்கவில்லை என்றால் அது வாதமாகி விடுமா? சாதாரணத் திருடர்களா? (குறுக்கீடு) மனதைத் திருடினார்கள் என்றும் சொல்லலாம்....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 'சாதாரணத் திருடர்களா' என்று முதல் அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறார்கள். அது முறைதானா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கருத்திருமன் உள்ளங் கவர்ந்த கள்வன் நான் என்கிறார். (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன்: பழைய திருடன் என்று எனக்குத் தெரியும். ஆகவே, கீழ்த்தரமாக அரசியல் கட்சியை நடத்த போலீஸ்காரர்களை விடக் கூடாது.

கோயம்புத்தூரில், சூப்பரின்டென்டென்ட் ஆப் போலீஸ் என்னைப் பார்த்து 'லீடர் ஆப் தி அப்பொசிஷன்' என்று எனக்கு எப்படித் தெரியும் என்றார். இது என்னைக் கேட்கக் கூடிய வார்த்தையா? உங்கள் ஆட்சியில் போலீசுக்கு நீங்கள் சொல்லித் தந்தது இதுதானா? சட்ட சபையில், முதல் அமைச்சரைப் பார்த்து "நீங்கள் முதல் அமைச்சர் என்று எப்படித் தெரியும்" என்று நான் கேட்கலாம் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு சின்ன விளக்கம். காங்கிரஸ் ஆட்சி காலத்தில், பேரறிஞர் அண்ணா, இன்றைய முதல் அமைச்சர் கலைஞர், நாவலர் இவர்களை வரிசையாக நிறுத்தி வைத்து, அண்ணாவைத் தெரியாத போலீஸ்காரர் இருக்க முடியாது who are you? என்று கேட்டு, அவர்கள், 'சி. என். அண்ணாதுரை' என்று சொல்லி, முதல் அமைச்சரை, who are your என்று கேட்டு, எல்லோரையும் பெயரைக் கேட்டார்கள். அவர்கள் அப்படிச் செய்யலாமா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதே பண்பாட்டில் நீங்களும் இறங்கியிருக்கிறீர்களா? குற்றத்தை ஒப்புக்கொள்கிறார்கள். எதிர்க் கட்சியிலிருந்தபோது, 'யார்' என்று கேட்க, 'அண்ணாதுரை' என்று சொல்ல இருந்த நிலைமை போலவே, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவரை 'யார்' என்று கேட்டது சரி என்கிறார்கள். நன்றி, விளக்கத்திற்கு. சொல்லிவிட்டார்கள், நீங்கள் செய்துகொண்டு வந்தீர்கள், நாங்களும் அப்படிச் செய்யும்படி

'இன்ஸ்ட்ரக்ஷன்' கொடுத்திருக்கிறோம் என்கிருர்கள், புரிந்து கொண்டேன். இவர்கள் ஆட்சி இந்த நிலையில் இருக்கிறது என்ருல், சபாநாயகர் அவர்களே, நேராக ஒப்புக் கொள்வார்களாருல், நான் தலை வணங்குகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை ஒரு போலீஸ் அதிகாரி, "நீங்கள் எதிர்க் கட்சித் தலைவர் என்று எப்படித் தெரியும்?" என்ற கேட்ட தகவலை இதற்கு முன்பே ஒருமுறை நான் இந்தப் பேரவையிலே இல்லாத போது சொல்லியிருக்கிருர். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கு 'முதலமைச்சர் யார் என்று எனக்குக்கூட கேட்கத் தெரியும்' என்று அவர் பதிலாகத் தெரிவித்திருக்கிருர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படி நடத்தப்படவில்லை. நான் விசாரித்துப் பார்த்ததில் அப்படி நடக்கவில்லையென்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. 'எங்களை அப்படி நடத்தினுர்களே, அதற்காகத்தான் அப்படி நடத்த வேண்டுமென்று சொன்னதாகச் சொல்வது' மரபு அல்ல, நல்ல முறையல்ல. ஆளும் கட்சியாக இருக்கிற நாங்கள் முக்கியமாகக் கண்டிக்கிறோம். அங்குள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அப்படி நடத்தவில்லையென்று கூறியிருக்கிருர்கள். அவர் அப்படி நடத்தப்பட்டிருந்தால் அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் அப்படி நடைபெறுமல் இருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வோம். நிச்சயமாகத் தெரியும் எனக்குக் கிடைத்த தகவல் அப்படி நடைபெறவில்லையென்று. போலீஸ் அதிகாரி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து, 'எதிர்க்கட்சித் தலைவர் என்று எனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டதாகச் சொன்னதைப்போல, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், 'முதலமைச்சர் யார், முதலமைச்சர் எனக்கு எப்படித் தெரியும்?' என்று என்னைப் பார்த்துக் கேட்டு, அவரைப்போல இவரும் நடந்துகொண்டார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதுதான் தமிழர் பண்பாடு. அனாவசியமான குற்றங்களைச் சாட்ட நான் தயாராக இல்லை. சர்க்கார் குறைகளைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். மேற்கு வங்காளத்தில் என்ன நடந்தது? முதலமைச்சர் அவர்கள் 'ஐயோ போலீஸ்' என்று கதறவில்லையா? அந்தமாதிரியான சூழ்நிலைகள் எல்லாம் நம்முடைய மாநிலத்திலே நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் கண்டிக்கப்படவேண்டும். அது எங்கள் ஆட்சியில் நடந்திருந்தாலும் சரி, உங்கள் ஆட்சியில் நடைபெற்ருலும் சரி, கண்டிக்கப்படவேண்டும். அப்படி நடந்தால் அது பண்பாடற்ற முறையாகும், நாணயமற்ற முறையாகும், கண்ணியமற்ற முறையாகும்.





நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். எங்கள் கட்சியில் முன்னே இருந்தவர்கள் என்னென்னவோ சொன்ஞர்கள், என்னென்னமோ செய்தார்கள். அதனுடைய பயனை இப்பொழுது நாங்கள் அனுபவிக்கிறோம். அதைப்போல நீங்களும் அனுபவிக்க வேண்டாமென்றுதான் சொல்கிறேன். (சிரிப்பு) அதற்கு நீங்கள் பலியாகாதீர்கள், இரையாகாதீர்கள். 'நாங்கள் அப்படித்தான் செய்வோம், பலியாவோம்' என்று நீங்கள் சொன்ஞல், உங்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றை திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும். கட்சிக்காரராக இருந்தாலும் அல்லது யாராக இருந்தாலும் போலீஸ் ஸ்டேஷனுக்கு சிபாரிசு கிடையாது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட வேண்டும். அப்பொழுதுதான் போலீஸ் ஸ்டேஷன் நன்ருக இயங்குவதற்கான சூழ்நிலை உண்டாகும். இதைத் திட்டவட்டமாகச் சொல்லவில்லையென்ருல், பல அமைச்சர்கள் சுற்றுப்பயணங்களுக்குச் செல்கிற நேரத்திலே கட்சிக்காரர்கள் எல்லாம் பக்கத்திலே வந்து சூழ்ந்துகொண்டு, பல தவறுகள் ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். காங்கிரஸ்காரன் கொடியேற்ற முடியாது, ஆபீசிலே இருக்க முடியாது. தவறுகள் நீடித்துக்கொண்டே போனுல் எவ்வளவு நாளைக்கு ஆட்சி நீடிக்கும்? பின்னுலே எப்படி இருக்கும் என்பதையெல்லாம் நீங்கள் கவனிக்க வேண்டும்.

பாக்கி இருக்கிற கட்சிக்காரராக இருந்தாலும், உங்கள் சொந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் எல்லோருக்கும் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வழிகள் செய்யப்பட வேண்டும். சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றைப் பாதுகாக்க போலீசாருக்குப் பூரண அதிகாரம் இருக்க வேண்டும். தவறு நடந்தால் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலைமை இருக்க வேண்டும். சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகள் எல்லாம் 'அங்கே இல்லை, இங்கே இல்லை' என்று சொல்லி தப்பித்துக் கொள்கிற முறையிலே முதலமைச்சர் அவர்கள் இருக்கக் கூடாது. தனது சொந்தக் கட்சிக்காரர்கள் கொண்டு வருகின்ற சிபாரிசையும் ஏற்றுக்கொள்வதில்லையென்று சொன்ஞல் ஓரளவு போலீஸ் நல்ல முறையில் நடக்க வழிகாட்டியாக இருக்கும்.

போலீசார் நன்ருக இயங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். நல்ல முறையில் வேலை செய்வதற்கு ஊதிய உயர்வு, உதவிகள் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். அவர்களும் நம்முடைய சகோதரர்கள்தாம். அவர்களும் நம்முடன் பிறந்தவர்கள்தான். அவர்கள் நம்முடைய நண்பர்கள். கண்ணியமானவர்கள், சிறந்தவர்கள். நம்முடைய நாட்டினுடைய சட்டம், அமைதி இவற்றைப் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னை போலீசார், 'எதிர்க் கட்சித் தலைவர் என்று எப்படித் தெரியும்' என்று கேட்டதாகச் சொன்னார்கள். ஆனால்....

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir. How does this arise? The hon. Member is not in a position to get clarification. If anyone wants clarification, it must be from Ministers or Chief Minister. How on earth can the hon. Member seek clarification or be allowed to seek clarification? It does not arise.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். இது பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன்தான்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள காவல்துறை மானியத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக் களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வந்த நேரத்தில், 'இறுதியாகத்தான் பேசப் போகிறீர்களா?' என்று கேட்டேன். 'நான் பேசப் போவ தில்லை'யென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நானே அவரிடத் தில் 'மிக முக்கியமான மானியமாயிற்றே, நீங்கள் பேச வேண் டாமா?' என்று கேட்டேன். 'பேசுவதற்கு என்ன இருக்கிறது?' என்று முதலிலே கூறிவிட்டு, என்னுடைய வேண்டுகோளுக் கிணங்கி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகிற மானியமாக இருக்கிற காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இறுதியாகப் பேசி னார்கள். எனக்கு கொஞ்சம் முக்கியத்துவம் கொடுப்பதுபோல் ஒரு வார்த்தையாவது சொல்வாரோ என்பதற்காக நான் அவரைப் பேசுமாறு வேண்டிக்கொள்ளவும் அவரும் பேசினார்கள். முதல மைச்சர் அவர்கள் கொண்டு வருகிற போலீஸ் துறை மானியத்தில், கண்டிக்க விஷயங்கள் இல்லையென்று ஏற்கெனவே முடிவு செய்த காரணத்தினால், போலீசாருக்கு வசதிகள் அவசியம் என்று பெருந் தன்மையாக எடுத்துரைத்தார்கள். அவர் பேசிய பிறகுதான் புரிந்தது. நாம் ஏன் அவரைப் பேசச் சொன்னோம், பேசச் சொல் லாமலே இருந்திருக்கலாமே என்று. போன ஆண்டு இந்த மானியத் தின்மீது அவர் பேசியதை திரும்பப் படித்துவிட்டால் போதும் போன ஆண்டு சொன்ன அதே குற்றச்சாட்டுக்கள், போன ஆண்டு சொன்ன அதே கம்ப ராமாயணத்திலே வருகின்ற 'கள்ளர் இல்லை யேல் காவலர் இல்லை, கொள்வார் இல்லையேல் கொடுப்பார் இல்லை' என்ற உதாரணம்....

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, போன ஆண்டில் இருந்த அதே முதலமைச்சர்தான் இன்றும் இருக்கிறார்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அதே அமைச்சர் இருக்கலாம். பிரச்சினைகள் மாறலாம் அல்லவா? இந்தி எதிர்ப்பு 1965-ம் ஆண்டு நடைபெற்ற காலத்தில் ஏற்பட்ட வன் முறைச் செயல்களினால் போலீசாருக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் போன்ற இதே விஷயங்களை எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்று காலையிலிருந்து நடைபெற்ற விவாதத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் பேசினார்கள். விவாதத்தைத் தொடங்கி வைத்த என் அருமை நண்பர் ராமச்சந்திர துரை அவர்கள்கூட—சாதாரணமான விஷயங்களிலேகூட காரசாரத்தைக் குழைத்துத் தருகின்றவர்கள்—அதிகமான காரசாரம் இல்லாமல் பேசினதும், நம்முடைய நண்பர் மார்ட்டின் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அவர்கள் தாக்குவதாக எண்ணிக்கொண்டு, போலீஸ் துறைக்குப் பதிலாக என்னுடைய அந்தரங்கச் செயலாளர் அவர் கள்மீது தாக்குதலைப் பயன்படுத்தியதன் மூலம், போலீஸ் துறை யின்மேல் தாக்குதலைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு காவல் துறை மிகவும் நேர்மையானதாகவும், சிறந்ததாகவும், தமிழகத் திலே அனைவரும் மெச்சத் தகுந்த அளவிலும் பணியாற்றி வருகிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள். தமிழகத்திலே போலீஸ் துறை அனைவரும் மெச்சக்கூடிய அளவிலே தொண் டாற்றி வருகிறது என்பதற்கு இதைவிட வேறு நல்ல எடுத்துக் காட்டு தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் காவல் துறையினர் எவ்வளவு சிறப் பாகவும் செம்மையாகவும் பணியாற்றுகிறார்கள் என்பதற்குப் பல் வேறு மாநிலங்களுடைய புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். துப்பறிந்த வழக்குகள் என்ற அளவில் வேறுபல மாநிலங்களின் கணக்குகளையும், நம்மு டைய மாநிலத்தின் விகிதாசாரக் கணக்கையும் ஒருமுறை ஒப் பிட்டுப் பார்த்தால் நன்கு தெரியவரும். 1968-ம் ஆண்டு துப்பு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் ராஜஸ்தான் மாநிலத்தில் 20.9 சதவீதம்; அஸ்ஸாம் மாநிலத்தில் 20.5 சதவீதம்; பீகாரில் 9.7 சதவீதம் ; மேற்கு வங்காளத்தில் 17.5 சதவீதம் ; பம்பாயில் 26.5 சதவீதம் ; ஒரிசாவில் 23.4 சதவீதம் ; கேரளத்தில் 31.2 சதவீதம்; மைசூரில் 39 சதவீதம் ; குஜராத் மாநிலத்தில் 24.2 சதவீதம் ; உத்திரப் பிரதேச மாநிலத்தில் 10.7 சதவீதம் ; மத்தியப் பிரதேசத் தில் 30.3 சதவீதம் ; அரியானாவில் 34.9 சதவீதம் ; ஜம்மு-காஷ்மீர் பகுதியில் 14.4 சதவீதம் ; நாகாலாந்து பிரதேசத்தில் 50.1 சத வீதம் ; பஞ்சாப் மாநிலத்தில் 35 சதவீதம் ; ஆந்திர மாநிலத்தில் 61.6 சதவீதம்; தமிழகத்தில் 60 சதவீதம் ஆகும். ஆந்திரம், தமிழகம் ஆகிய இந்த இரண்டு மாநிலங்களில்தான் குற்றங்கள் 60 சதவீதத்திற்கும் மேலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் பேசிய நேரத்தில் ஆந்திர மாநிலத்தில் இருந்து தப்பி இங்கே வந்தவர்களை தமிழக காவல் துறை கைது செய்ததுபற்றிக் குறிப்பிட்டார்களே,

தமிழ்நாட்டில் இருந்து தப்பிச் சென்றவர்களை ஆந்திராவிலும் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார். அதற்கான நிலையும் உறுப்பினர்களுக்குத் தெரியும். புலன் ஆய்வின் மூலம் ஆந்திராவும், தமிழகத்தைப்போல 60 சதவீதத்திற்குமேல் வழக்குகளைக் கண்டுபிடிக்கிற திறன் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

1968-ம் ஆண்டில் செய்யப்பட்ட கொலைகள் உள்பட, களவுக் குற்றங்கள் 26,997. 1969-ம் ஆண்டில் இக் குற்றங்களின் எண்ணிக்கை 28,801 ஆக அதிகரித்திருக்கிறது.

உலகம் எங்கணுமுள்ள வளர்ச்சியடைந்த நாடுகளிலும், முன்னேற்றமடைந்துவரும் நாடுகளிலும் களவுகள் 4½ சதவீதம் அதிகரித்திருப்பதை நாம் கருத்தில் கொண்டு பார்க்கின், நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள குற்றங்களின் உயர்வைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அது இயல்பான ஒன்றுதான் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருக்கிறது.

பன்னெடுங்காலமாக சமுதாயத்தில் வேரோடி அனைவராலும் போற்றிப் புகழப்பட்ட மனிதப் பண்புகள் மக்களிடையே குறைந்து வருவதாலும், மக்கள் தொகை நாளும் பெருகி வருவதாலும், குற்றங்கள் பெருகி வருவதை தடுக்க முடியாத அளவில், அடக்க முடியாத அளவில் நாம் இருக்கிறோம் என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

குற்றங்களைக் கண்டு பிடிப்பதில், புலனாய்வதில் முன்பைவிட இப்போது அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை புள்ளிவிவரங்களே விளக்கியிருக்கும். வேலூரிலும், பிற எட்டு மாவட்டத் தலைமையிடங்களிலும் உள்ள கைவிரல் பதிவு நிலையங்களும், துப்புத் துலக்கும் நாய்ப்படைகளும், காவற்படையைச் சார்ந்த கம்பியில்லாத் தந்தியமைப்பும், பாரன்சிக் ஆய்வுக் கூடமும் திறனுடன் பணியாற்றி வருகின்றன.

1968-ம் ஆண்டில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 60.8 சதவீதமாகும். 1969-ல் இது 61.3 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டில் சில முக்கியமான கொள்ளைக் கூட்டங்களை நம் காவல்படையினர் எவ்வாறு வெற்றியுடன் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்கிற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நேரத்தில் நினைவில் வைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

17—7—1969-ல் சங்கரபாண்டியபுரத்தில் துணிகரக் கொள்ளையில் இறங்கிய கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்தும்,



வச்சக்காரப்பேட்டை காவல்நிலைய எல்லைகளுக்குள் 21—5—1969-ம் தேதி கொள்ளை நடத்திய கொள்ளைக்காரர்களைப் பிடித்ததும் பெரிய சாதனைகளில் ஒன்றாகும்.

27—10—1969 அன்று இரவு செங்கோட்டை-மதுரை பாசஞ்சர் ரயிலில் கொள்ளை அடித்த கூட்டத்தினரையும் நமது காவல் படையினர் பிடித்திருக்கிறார்கள். இது சிறப்பு மிக்க ஒரு செய்தியாகும்.

இரண்டு கொலையாளிகள் வாடகைக்காரர்களை அமர்த்திக் கொண்டு சென்று வழியில் ஓட்டுநர்களைக் கொலை செய்து அப்பால் வண்டியையும் விற்றுப் பணமாக்கினர். திருநெல்வேலி, செங்கல்பட்டு ஆகிய இந்த இரண்டு இடங்களில் இந்தக் குற்றம் நடந்திருக்கிறது. காவல்துறையின் திறமை காரணமாக குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு நடந்து வருகிறது.

திருநெல்வேலியில் அச்சடிக்கப்பெற்று சென்னையில் பிடிக்கப்பட்ட 10 ரூபாய் கள்ள நோட்டு வழக்கில் காவல்துறையினர் 19 குற்றவாளிகளைப் பிடித்திருக்கிறார்கள்.

1969-ம் ஆண்டில் இரண்டு ரூபாய் கள்ள நோட்டு வழக்குகள் பிடிக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த ஆண்டில் பத்து ரூபாய், இரண்டு ரூபாய் கள்ள நோட்டுக்களையும், 10 டாலர் மதிப்புள்ள அமெரிக்க கள்ள நோட்டுக்களையும் தயார் செய்த 14 பேர் கொண்ட குழு ஒன்றை மதுரையில் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்கிற விவரம் உங்களுக்குத் தெரியும்.

அண்மையில் சென்னை நகரத்தில் அதிகார அனுமதியற்ற போலி உணவுப் பங்கீட்டுச் சீட்டுகள் சில சமூகவிரோதிகளால் வழங்கப்படுவதை காவல்துறை உஷார் பிரிவினர் கண்டுபிடித்து, நேற்று புதுப்பேட்டையைச் சேர்ந்த பெருமாள், தண்டையார்பேட்டையைச் சேர்ந்த விசுவநாதன் இருவரையும் 800 போலிச் சீட்டுகளுடன் ஒரு டாக்சியில் செல்லும்போது கைது செய்திருக்கிறார். புதுப்பேட்டை லாங்க்ஸ் கார்டன் சாலையில் உள்ள பான்சி ஆர்ட் காட்டேஜ் என்ற அச்சகத்தையும் சோதனையிட்டு அதிலிருந்து 500 காலிச் சீட்டுக்களையும், மற்றும் அச்சு சாமான்களையும் கைப்பற்றியுள்ளார்கள். கைதான பெருமாள் இப் போலிச் சீட்டுகளை வண்ணாரப்பேட்டைப் பகுதியில் விநியோகம் செய்ததாகத் தெரிகிறது. அவை யாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது காவல்துறையினரின் மற்றொரு அபார சாதனையாகும்.

கதைகளைப்போல என்றென்றும் நினைவில் வைத்திருக்கும்படியாக எப்படி இத்துறையினர் குற்றங்களை புலனாய்வு செய்து குற்ற கண்டு பிடித்து வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

[1970 ஏப்ரல் 3 [திரு. மு. கருணாநிதி]

முகமூடித் திருடர்கள் வட பகுதியில் இருநது வந்து தமிழ் நாட்டிலும், குறிபபாக சென்னை நகரிலும் மிகத் துணிகரமாகக் கொள்ளை அடித்தார்கள். நமது காவல்துறையினர் அவர்கள் கொள்ளையிட்டுச் சென்ற இடத்தில் சாதாரண தடையங்களைக் கண்டு அவற்றின் மூலமாகவே அவர்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கொள்ளை அடிக்கப்பட்ட இடத்தில் கிடந்த பீடித் துண்டுகளைப் பார்த்து அவை தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டவை அல்ல, வடநாட்டைச் சேர்ந்தவை, அதுவும் எந்த நாட்டைச் சேர்ந்தது என்று கண்டு அவர்களைத் தொடர்ந்து சென்று சான்சியர் பதினைந்து பேர்களையும் அவர்களுடைய தலைவன் கங்குவையும் கைது செய்து வழக்குத் தொடர்ந்தார்கள். கொள்ளை அடிக்கப்பட்ட பல்வேறு சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நடைபெற்று அந்த சான்சியர் ஆறு பேர்களுக்கு ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனையும், பத்துப் பேர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

இதைப் போலவே சுருள் கதவுகளை உடைத்து கடைகளை எல்லாம் கொள்ளை அடித்து வந்த ஒரு கும்பலையும் நமது காவல் துறையினர் கண்டுபிடித்தார்கள். அதுவும் ஓர் இரவு மதுரையிலே ஒரு துணிக் கடையின் சுருள் கதவுகளை உடைத்துக்கொண்டிருக்கும்போது நமது காவலர் பிடியில் அவர்கள் வசமாய்ச் சிக்கிக்கொண்டார்கள். இவர்கள் நம் மாநிலத்தில் மாத்திரம் இல்லாது ஆந்திரா, மைசூர் ஆகிய மாநிலங்களிலும் தங்கள் கொள்ளையை திறம்பட நடத்தியிருக்கிறார்கள். தமிழகத்தில் இவர்களைப் பிடித்தது நம் காவல்துறையின் சாதனையாகும்.

அதைப்போலவே—திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. அரங்கநாதன் அவர்களும் தம் பேச்சில் குறிப்பிட்டார்கள்—தமிழ்நாட்டில் எங்கெங்கே நக்சல்பாரிகளின் ஊடுருவல் இருக்கிறது என்பதை நமது காவல்துறையினர் மிகுந்த கண்காணிப்போடு பார்த்து வந்தார்கள். உங்களுக்குத் தெரியும். பெண்ணாடத்தில் நடந்த நிகழ்ச்சி உண்மையில் அலட்சியப்படுத்தக் கூடியது அல்ல. ஒரு மாணவரும், மற்ற இருவரும் வெடி குண்டுகள் தயாரிக்கிற நேரத்தில் தயாரிக்கப்படுகிற வெடிகுண்டுகள் வெடித்ததன் காரணமாக அவர்கள் அந்த இடத்திலேயே இறந்திருக்கிறார்கள். அது வெளியே தெரிந்தால் அவர்கள் நடத்துகின்ற சதி வெளிப்பட்டுவிடும் என்பதற்காக ஆழமாகக் குழி தோண்டி அதற்குள்ளேயே அவர்களது உடலங்கள் புதைக்கப் பட்டு விட்டன. நமது காவல்துறையினர் அந்த இடத்தையும் கண்டுபிடித்து குழியைத் தோண்டி சவத்தை எடுத்திருக்கிறார்கள். தலைமறைவாக இருக்கிற ஒருவர் இது சம்பந்தமாகத் தேடப்பட்டு வருவதும் உங்களுக்குத் தெரியும்.

ஆந்திரத்தைச் சேர்ந்த நாகிரெட்டியின் தலைமையில் இருந்த ஒரு கூட்டம் சென்னையில் சிக்கினார்கள் என்பது முன்பே தெரியும். அவர்கள் சென்னையில் தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடித்து



[திரு. மு. கருணாநிதி]

அவர்கள் எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்குத் தெரியாமலேயே பின்தொடர்ந்து சென்று, இரவிலே அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றி—அவர்கள் கட்டி வைத்திருந்த நாய்களுக்கிடையே, மாடுகளுக்கிடையே, மாட்டுத்தொழுவத்தில் சாணத்திடையே—ஒளிந்து நின்று இரவு 3 மணிக்கு பெரும் கூட்டமாகச் சுற்றி வளைத்து அப்படிச் சுற்றி வளைக்கிற நேரத்தில் இருட்டாக்க அவர்கள் விளக்கை அணைத்தபோது, தாங்கள் கொண்டு சென்றிருந்த ஒளிமிக்க விளக்குகளினால் ஒளியை ஏற்படுத்திக்கொண்டு அவர்களைக் கைது செய்திருப்பது மிகமிகப் பாராட்டுக்குரியதாகும். இதை அனைவரும் நன்கு அறிவீர்கள்.

முதலமைச்சருடைய விருது என்ற பெயரால் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாளன்று ஒவ்வொரு ஆண்டும் வீரப் பதக்கங்களையும் சிறப்புப் பதக்கங்களையும் காவல்துறையினருக்கு வழங்க வேண்டும் என்று சென்ற ஆண்டு இந்தக் காவல்துறை மானியத்தினுடைய விவாதத்தில் அறிவிக்கப்பட்டது நினைவு இருக்கலாம். அதை தொடர்ந்து 22 பேருக்கு அந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. கையிலே கத்தி வாளோடு மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்த ஒரு பயங்கரவாதியை போலீசார் தேடிக்கொண்டு சென்றபோது அவன் தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்த நேரத்தில், கையில் வெறும் தடியோடு இருந்த போலீஸ்காரர் மாரிமுத்து என்பவர் தைரியமாக உள்ளே சென்று அவனைப் பிடிக்க, போலீஸ்காரரை கத்தியால் குத்த, ரத்தம் பெருக்கு எடுத்த நேரத்திலும் அதைப் பொருட்படுத்தாமல், அப்படியே பிடித்துக்கொண்டு வெளியில் வந்து அவனைப் போலீசாரிடம் ஒப்படைத்து தன்னுடைய பிணத்தையும் போலீசாரிடம் ஒப்படைத்து தீர்ச்செயல் புரிந்த மாரிமுத்து போலீஸ் நண்பர் செத்தார். அவருடைய விதவை மனைவி சேலத்தில் நான் பரிசு அளிக்கின்ற நேரத்தில் கண்ணீரும் கம்பலையுமாக வந்து நின்று அளித்த பரிசையும் தந்த பதக்கத்தையும் பெற்றுக்கொண்ட காட்சி போலீஸ் துறையினர், காவல்துறையினர் எந்த அளவுக்கு கடமை ஆற்றுகின்றார்கள் என்பதை நமக்கு தெரிவிக்கின்ற நிகழ்ச்சியாக இருக்கிறது. பி.ப. 1-30

ஜனவரி 26-ம் தேதியன்று குடியரசு தின விழா நாம் கொண்டாடியபோது அணிவகுப்பு ஆரம்பமாகிவிட்டது. ஆயுதப்படை ஹவில்தார் சங்கரநாராயணன் அவர்களுக்கு அப்பொழுது மாரடைப்பு வந்துவிட்டது. மாரடைப்பு என்று சொன்னால் குடியரசு தின விழாவில் குழப்பம் ஏற்பட்டுவிடும் என்ற பயம் காரணமாக மாரடைப்போடு தன்னுடைய நடையில் மாற்றம் இல்லாமல், முகத்தை மட்டும் வலியின் காரணமாக சுளிக்கிக் கொண்டு எங்கே போகவேண்டுமோ, எந்த இடத்தில் அணிவகுப்பு கலைய வேண்டுமோ அந்த இடத்தில், அணி வகுப்பு முடிந்த இடத்தில் பிணமாகச் சாய்ந்து விழுந்தார் சங்கரநாராயணன். ஆயுதப் படையைச் சேர்ந்த ஹவில்தார் ஒருவர் இந்த ஆண்டு

26-ம் தேதி இறந்தார். முதலமைச்சர் நிதியிலிருந்து ரூபாய் 3,000-ம், போலீஸ் இலாக்காவிலிருந்து 1,500 ரூபாயும் அவருடைய குடும்பத்திற்கு தரப்பட்டிருக்கிறது. நான் அவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம் கடமை உணர்ச்சியும் கட்டுப்பாடு உணர்ச்சியும் கொண்டவர்கள் பலர் இந்தத் துறையில் இருக்கிறார்கள் என்பதைக் தெரிவிக்கவேதான்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள் சில புகார்களை. நான் அந்தக் கருத்துக்களை எல்லாம் இல்லை என்று அவர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேச விரும்பவில்லை. ஏனென்றால் ஏறத்தாழ 30 ஆயிரம் பேரைக் கொண்டுள்ள இந்தத் துறையில் சில பேர் தவறு புரிபவர்களாக இருக்கலாம். நான் இல்லை என்று கூறவில்லை. இதில் சிறிய தவறுகள் இருக்கலாம். பெரிய தவறுகளை சிலர் புரிந்து இருக்கலாம். அவர்களை எல்லாம் யார் யார் என்று இந்த ஓராண்டு காலத்தில் நான் அறிந்து வைத்திருக்கிறேன். காவல் துறையில் இருக்கின்ற புலன் ஆய்வு செய்கின்ற அந்த அளவுக்கு மேல் இல்லாவிட்டாலும் அந்த அளவுக்காவது நான் இவைகளை எல்லாம் அறிந்து வைத்திருக்கிறேன். நான் இந்த அவையின் மூலம் அந்தத் தவறுகளைச் செய்கின்ற காவல்துறையினருக்கு எச்சரிக்க விரும்புகிறேன். அவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களேயானால் அதிக அளவுக்கு தண்டனை நிச்சயமாகப் பெறுவார்கள் என்பதை அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். ஆகவே இப்படி நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, மக்களுக்கு கடமையாற்றுபவர்களாக உயிர் இழக்கின்ற மாரிமுத்துகளும் இருக்கின்றார்கள், சங்கரநாராயணன்களும் இருக்கிறார்கள், அதே நேரத்தில் தவறு செய்கின்றவர்களும், அவர்களுக்குத் துணை போகின்ற கயவர்களும் இந்தத் துறையில் இருக்கிறார்கள் என்பதை நான் அறியாமல் இல்லை, இந்த அரசும் அறியாமல் இல்லை. அவர்கள் மீது நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதிலே சந்தேகம் இல்லை என்பதை இந்தச் சபைக்கு உறுதியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் மார்ட்டின் அவர்கள் சொன்னார்கள், சிட்டி போலீசுக்கு சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு நிதி ஒதுக்கியதைக் குறைத்து விட்டார்கள் என்று. அதைச் சொல்லிவிட்டு சிட்டி போலீஸ் விபசாரக் குற்ற வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டது, இதற்குப் பெயரா சிட்டி போலீஸ் என்றார்கள். அந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால் அர்த்தம் உண்டு. உடுப்புக்காக சென்ற ஆண்டு 5,25,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகப்படியாகத் தேவைப்பட்டால் அரசு மறுபடியும் அதைக் கொடுக்கும். இன்றியமையாததைக் குறைக்கவில்லை. அதிகப்படியாக ரூபாய் 5,000 இந்த ஆண்டும் சென்ற ஆண்டும் உணவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே வாகனங்களுக்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதை விட இந்த ஆண்டு குறைவு என்று சொன்னார்கள். சென்ற ஆண்டே வாங்க வேண்டிய வாகனங்கள் வாங்கிவிட்டதால் இந்த ஆண்டு வாங்க வேண்டியதில்லை. ஆகவே பராமரிப்புச் செலவுக்காகக் குறைவாக



ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வாங்கிவிட்ட காரணத்தால் இந்த ஆண்டு குறைவு ஏற்பட்டிருக்கலாமே தவிர குறைக்க வேண்டும் என்ற காரணத்தால் குறைக்கப்படவில்லை என்பதை மார்ட்டின் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போலீஸ் துறையினருக்கு சங்கம் வைக்க வேண்டும் என்று நம்முடைய ராமச்சந்திர துரை அவர்கள் சொன்னார்கள். போலீஸ் துறையினருக்கு சங்கம் இருந்து முன்பு ஒரு முறை என்னென்ன சங்கடங்கள் ஏற்பட்டன என்பதை நான் அறிவேன். போலீஸ்காரர்களுக்கு சங்கம் எந்த மாநிலத்திலாவது இருக்கிறதா என்று கேட்டேன். மேற்கு வங்காளத்தில் மட்டும்தான் இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிற போலீஸ்காரர்கள் சட்டசபை வரையில் நுழைகிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான், போலீஸ்காரர்களுக்குச் சங்கம் வைத்து அவர்களுக்குரிய உதவிகளைச் செய்வதைவிட சங்கங்கள் வைக்காமலே அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்யக்கூடாதா என்பதை இந்த அரசாங்கம் உணராமல் இல்லை. இந்த அடிப்படையின் காரணமாக போலீஸ் கமிஷன் ஒன்றை அமைத்திருக்கிறோம். அந்தப் போலீஸ் கமிஷன் வெகு விரைவில் அதனுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று நம்புகிறேன். அவர்களுக்கு என்னென்ன தேவை என்பதை எல்லாம் அந்தப் போலீஸ் குழு ஆராய கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் நம்முடைய மதிப்பிற்குரிய சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் இருக்கிறார். அவர் இந்த மன்றத்தில் இன்றைய தினம் நடைபெறுகின்ற விவாதத்தை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காவல்துறையினருக்கு அந்தப் போலீஸ் குழுவில் செய்ய வேண்டிய காரியங்களுக்காக நிச்சயமாக குறிப்புக்களைத் தயாரித்து அனுப்புவார் என்று நம்புகிறேன். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது. போலீஸ் குழுவில் போலீஸ் துறையினர் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். போலீஸ் குழு ஓர் அறிக்கை அனுப்பி இருக்கிறது. எல்லாப் போலீஸ்காரர்களும் எந்த ஸ்டேஷனில் இருந்தாலும் தங்களுடைய குறைகளைச் சொல்லலாம், சொல்லவேண்டும். போலீஸ் குழுவின் சார்பாக அனைவருக்கும் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. (திரு. ம. பொ. சிவஞானத்தைப் பார்த்து) சரிதானே ?

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களுக்குச் சங்கம் இல்லை என்பதை அறிந்துதான் கமிஷன் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் மூலமாக ஒவ்வொரு போலீஸ்காரருடைய குறைகளையும் விசாரித்து அனுப்புவதோடு அல்லாமல், கூட்டம் போட்டு சேர்த்து அனுப்பினாலும் பெற்று அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கு போலீஸ் ஐ.ஜி. மற்ற அதிகாரிகள் ஒத்துழைப்பு கிடைத்து வருகிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆகவேதான் சங்கங்கள் வைத்து காரியங்கள் செய்ய வேண்டியது என்பதல்லாமல், அதைப்

பற்றி ஹேஷ்யம் கூறுவதைவிட கமிஷனுடைய குரலை கொடுக்கின்ற வகையில் சிலம்புச் செல்வர் விளக்கத்தைக் கொடுத்ததைக் கேட்டீர்கள். அந்தக் குழுவின் மூலம் கிடைக்கும் அறிக்கையின் மீது விரிவான முடிவு எடுக்கப்படும். குழுவை ஆராயும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள விவரங்கள்: காவல் படையினரின் சம்பளம், படிகள் பற்றி ஒரு இசைவான முடிவு எடுப்பதற்காக காவல்துறை ஆணைக் குழுவும் சம்பள ஆணைக் குழுவும் சேர்ந்து இது குறித்து பரிசீலனை செய்யும். பணியின் பொது நிலைமைகள், வீட்டு வசதி, காவலர் நலன், காவல் படையின் அதிகாரங்கள், கடமைகள், சட்டம், ஒழுங்கு இவற்றை நிலைநிறுத்துதல், குற்றத்தைக் தடுத்தல், புலனாய்வு செய்தல், போக்குவரத்து கட்டுப்படுத்துதலும், முறைப்படுத்துதலும், வேவுத் தகவல் சேகரித்தல், காவலர்கள் பிற கடமைகள் பழையனவும், புதியனவும் ஆகியவற்றிற்குத் தொடர்பானவற்றில் காவல் படையின் செயல் திறனை மேம்படுத்துதல், மற்றும் இதுபோன்ற பல்வேறு தகவல்கள், இன்னும் காவல்துறையினருக்குச் செய்யவேண்டிய நல்ல காரியங்களைப்பற்றி இந்தக் குழு ஆராய இருக்கிறது.

நண்பர் ராமச்சந்திர துரை அவர்கள் இங்கே பேசிய நேரத்தில் ஜெமினிக்குப் பக்கத்தில் ஒரு கார் சென்றது என்றும், அதற்குப் பின்னால் சர்க்கார் தலைமைச் செயலாளர்—சீப் செக்ரட்டரி சென்றார் கமிஷனர் வீட்டில் கார் நின்றது, ஒரு போலீஸ் படையை வைத்திருந்தார்கள் என்றும் சொன்னார்கள். அதற்கு எந்தவிதமான அடிப்படையும் இல்லை. நான் விசாரித்துப் பார்த்த அளவில் அப்படி எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே அந்தத் தகவலை நண்பர் அவர்களும் நம்புவார்கள் என்று கருதுகிறேன். அவரும் தனக்கு யாரோ சொன்னதாகத்தான் சொன்னார்கள். அது ஆதாரமற்றது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்

மதுவிலக்குபற்றிப் பேசப்பட்டது. திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் சுதந்திரா கட்சியினுடைய பிரதானத் தலைவர்களிலே ஒருவர். அவர்கள் சொன்னார்கள் மதுவிலக்கை ரத்துச் செய்யுங்கள், தேவையே இல்லையென்று சொன்னார்கள். அதோடு இன்னொன்றும் சொன்னார்கள். ராஜாஜியைக் கேளுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ராஜாஜி சொல்வதையெல்லாம் முதலமைச்சர் கேட்கிறாரா என்று சொன்னார்கள். அப்படிக் கேட்காமல் மதுவிலக்கை ரத்து செய்யுங்கள் என்று ஒரு நல்ல யோசனையைச் சொல்லிக் கொடுத்தார். ராஜாஜி சொல்வதை கேட்கக்கூடாது என்பதல்ல, கேட்கமுடியாத நேரத்திலே கேட்காமல் இருப்போம். ராஜாஜி என்ன சொல்வது நாம் என்ன கேட்பது என்று நானோ அல்லது அமைச்சரவையோ அல்லது முன்னேற்றக் கழகமோ நினைப்பதில்லை. ராஜாஜியல்ல, எந்தப் பெரியவர் சொன்னாலும், காமராஜர் சொன்னாலும் கேட்க முடிந்ததைச் சொன்னால் நிச்சயமாகக் கேட்போம். திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் எடுத்துச் சொன்ன அபிப்பிராயம் பரவலாக நாட்டிலே



அனைவருடைய உள்ளத்திலே இருந்து வருகின்ற ஒன்றாகும். எடுத்துவிட்டால் என்ன ? அதிக வருமானம் வருமே, கணக்குத் தானே உயருகிறது. திரு. சங்கரய்யா அவர்கள்கூடச் சொன்னார்கள், சென்ற ஆண்டு 2 லட்சம், அடுத்த ஆண்டு 3 லட்சம் என்ற அளவுக்கு கணக்குத்தானே உயருகிறது என்று சொன்னார்கள். கணக்கு உயர்கிற அதே நேரத்திலே குற்றவாளிகளும் அதிகமாகப் பிடிக்கப்படுகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். காவல் துறையினர் கண்காணிப்பாக இருந்து பிடித்து வருகிறார்கள் என்பதற்காகப் பாராட்டவேண்டும். இந்த மூன்று லட்சம் பேர்களும் குற்றம் செய்தவர்களா இல்லையா என்றால் செய்தார்கள் என்பதை மறுக்கவில்லை. திங்கட்கிழமை செய்தவர் செவ்வாய்க் கிழமை * * * தூய்மையாக இருப்பார். எந்தத் தவறான பொருளிலும் நான் சொல்லவில்லை. ஆகவே செவ்வாய்க்கிழமை போகிற நேரத்திலே அகப்பட்டுக்கொள்வதில்லை. தூய்மைக்கு முன்பாக நான் சொன்ன அந்த வார்த்தையை நீக்கிவிடவேண்டும்—வாய் தவறி வந்துவிட்டது * * * அந்த வார்த்தையை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் குறிப்பேட்டிலிருந்து அந்த வார்த்தையை நீக்கிவிடவேண்டும். பத்திரிகைகளும் அதை வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட நிலைமையில் எவ்வளவு வருமானத்தை இழக்கக்கூடிய சூழ்நிலையிலும் மதுவிலக்குக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனாலும் மதுவிலக்கை ரத்து செய்வதில்லை என்ற முடிவில் இந்த அரசு இருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். சென்ற ஆண்டு இது கேள்விக் குறியாகக் கிளம்பி, கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து நாட்டிலே உள்ள எல்லாப் பத்திரிகைகளும் கார்டூன்களுக்காக கேள்விக்குறியைப் பயன்படுத்தி, காந்தி நூற்றாண்டு விழா நேரத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. முற்றுப்புள்ளிக்குக் கீழே ஒரு கோடு இழுத்தால் அது கமா ஆகிவிடும், முற்றுப்புள்ளி வைத்தால் கமா ஆகாது என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி ஆகாமல் இருக்கின்ற முறையிலே மத்திய அரசு மதுவிலக்கைத் தீவிரப்படுத்துகின்ற அரசுக்கு உதவிகளை பரிசுத் தொகைகள் வடிவத்தில் அளிப்பார்களானால் மதுவிலக்குத் திட்டத்திலே ஒவ்வொரு மாநிலமும் சிரத்தை காட்டமுடியும். தமிழகத்திற்கு அதற்காகத் தருகிறார்கள் என்றால் அடுத்து அடுத்து மற்ற மாநிலங்களும் தமிழகத்தைப் பின்பற்றுவதற்கு முன்வரக் கூடும்.

பெரிய பணக்காரர்கள் மாத்திரம் பெர்மிட் வாங்கிக் குடிப்பதற்கு உரிமையிருக்கிறது, ஏழை எளியவர்களாக இருக்கிறவர்கள் குடித்தால் பிடிக்கப்படுகிறார்கள் என்று திரு. சங்கரய்யா அவர்கள்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

குறிப்பிட்டார்கள். பெர்மிட் வழங்குகின்ற முறையிலே அரசு சில மாறுதல்களைச் செய்யவிருக்கிறது. வருமானத்தின் அடிப்படையிலே டி.எம்.ஓ. அளவிலே நற்சாட்சிப் பத்திரம், "இவருக்கு இருதய நோய், மது சாப்பிட்டால்தான் உயிரோடு இருப்பார்" என்று கொடுத்தால் தரப்படுகிறது. இதைச் சாப்பிட்டால்தான் உயிரோடு இருப்பார் என்பதற்கும் வருமானத்திற்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. நாலாயிரம், ஐயாயிரம் வருமானமுள்ள பணக்காரர்கள் இரண்டு யூனிட் சாப்பிட்டால்தான் உயிரோடு இருப்பார் என்றால் 200, 300 ரூபாய் வருமானம் உள்ள ஏழை எளியவர்களுக்கு இருதய நோய் வராதா என்ற கேள்வி எங்கள் உள்ளத்தில் உறுத்தியது. பெர்மிட் தரப்படுகின்ற சட்டம் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு பெர்மிட் வழங்கப்படாமல் அவர்களுடைய நோயை அடிப்படையாகக் கொண்டு வழங்க வேண்டுமென்ற முறையிலே—மாற்றப்பட உத்திரவு போடப்பட இருக்கிறது. இதற்கு முன்பு புதிதாக பெர்மிட் வாங்குவதற்கு 50 ரூபாய் கட்டணமும் பெர்மிட்டை புதுப்பிப்பது என்றால் 75 ரூபாய் கட்டணம் என்றும் இருந்தது. இனிமேல் புதிதாக பெர்மிட் வாங்குவதற்கு 250 ரூபாய் என்றும் புதுப்பிப்பதற்கு 150 ரூபாய் என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வரவிருக்கிறது.

இது மாத்திரமல்ல. இதற்கு முன்பு மதுவகையறுக்களுக்கு விற்பனை வரியில்லாமல் இருந்தது. **இப்பொழுது 12½ சதவீதம் விற்பனை வரி** மது வகையறுக்களுக்கு **விதிக்கப்பட்டிருக்கிறது.** ஆக, மதுவை ரத்து செய்து வராத வருமானத்தை இருக்கிற பெர்மிட்டுகளைப் பயன்படுத்திப் பெறலாமா என்ற அற்ப ஆசையிலே இம்மாதிரிச் செய்கிறோம். பெர்மிட் வாங்கிக் குடிக்கிறவர்கள் பெருகுவதை இதன்மூலம் தடுக்கலாமா என்று பார்க்கிறோம். இந்தக் கட்டணத்தையும் செலுத்தி என்னுடைய இருதய நோயைத் தடுக்க போகிறேன் என்று யாராவது வந்தால் அந்த வருமானத்தை இழக்க இந்த அரசு தயாராக இல்லை.

காலையிலே பத்திரிகையில் பார்த்தால் இல்லத்தரசிகள் இதற்காகக் கிளர்ச்சி செய்வார்கள் என்று போட்டிருக்கிறார்கள். கிளப்களிலே பெர்மிட்டைப் பயன்படுத்திச் சீமைச்சரக்கை வாங்கி அங்கேயே உட்கார்ந்து குடிக்கக்கூடாது என்று அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. காந்தி நூற்றாண்டு விழாவில் இந்த அறிவிப்பைச் செய்தேன். ஏழை எளியவர்கள் குடிக்கிறார்கள் என்றால் பிடிக்கப்படுகிறார்கள். ஆனால் செல்வச் சீமான்கள் கிளப்களிலே உட்கார்ந்து பெர்மிட்டைப் பயன்படுத்தி அங்கேயே உட்கார்ந்துகொண்டு குடிக்கிறார்கள் என்பது சமதர்ம நாட்டில், சோஷலிச நாட்டில் ஒத்து வராது என்ற காரணத்தினாலே 20 ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்டிருந்த ஜனநாயக சோஷலிசத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த முறை நம்முடைய சோஷலிசத்திலே அனுமதிக்கப்படக்கூடாது என்ற முடிவை எடுத்தோம். அந்த முடிவிற்கேற்ப கிளப்களிலே அயல்நாட்டார், அயல்நாட்டுத் தூத





ரகத்தைச் சேர்ந்த அயலார், தற்காலிகமாக வரும் அயல்நாட்டார், மற்ற மாநிலத்தார், ராணுவம், கப்பற்படை, விமானப்படையைச் சேர்ந்தவர்கள் பெர்மிட்டைப் பயன்படுத்தி அங்கேயே உட்கார்ந்து சாப்பிடலாம், மற்றவர்கள் அங்கேயே உட்கார்ந்து சாப்பிடக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. வீட்டு அரசிகள் எங்களுடைய கணவர்கள் அங்கேயே உட்கார்ந்துகொண்டு சாப்பிடலாம், 'வீட்டில் சாப்பிட்டால் குழந்தைகளுக்கு அந்தப் பழக்கம் வந்து விடும்' என்று நினைத்தால் குழந்தைகளைத் தூங்க வைத்துவிட்டு கணவனை மாடிக்கு அழைத்துச் சென்று குறைவாகச் சாப்பிட்டால் தான் நல்லது என்று--தனக்கு அந்தப் பழக்கம் வரக்கூடாது, தன்னைப் பேணிக் காக்கின்ற துணிவு உள்ள பெண்—டாக்டர் இவ்வளவுதான் குறிப்பிட்டு உள்ளார், 4 யூனிட்டுகள்தான் சாப்பிடவேண்டும், அதற்கு மேலே சாப்பிடக் கூடாது என்று சொல்வார்களானால் நல்லது. கிளப்களுக்குச் சென்று குடிக்க வேண்டுமென்று அவர்களே கிளர்ச்சி செய்ய மாட்டார்கள், ஆனால் வீரத் தாய்மார்கள் இதற்காக கிளர்ச்சி செய்வது வேடிக்கையாக இருக்கிறது. பத்திரிகைகளிலே--அரசாங்கம் செய்கிற செய்கிற நல்ல காரியங்களைப் பெரிய அளவிலே போடாவிட்டாலும் —தாய்மார்கள் கிளர்ச்சி என்பதைப் பெரிய அளவிலே போடுகின்றன. உங்களுடைய கணவன் குடிப்பது அளவுப்படி இருக்க வேண்டுமென்றால் இருதய நோயிலிருந்து உண்மையிலேயே பாது காக்கப்படவேண்டுமென்றால் வீட்டிலே அமர்ந்து குடிக்கச் செய்தால் அவர்கள் கெட்டுப் போவதற்கு வழியில்லை. கிளப்களிலே அவர்கள் குடிக்க அனுமதித்தால் அங்கே மற்றவர்கள் எனக்குப் போதும் நீ கொஞ்சம் குடி என்று சொல்வார்கள், அவர்கள் கெட்டுப் போவார்கள். ஆகவே கிளர்ச்சி செய்கின்ற தாய்மார்களை இங்குள்ளவர்களையல்ல—வெளியிலே கிளர்ச்சி செய்கின்ற தாய்மார்களை நான் கேட்டுக்கொள்வது வீட்டிலேயே உட்கார்ந்து அளவோடு குடிக்கச் செய்வதுதான் நல்லது என்பதால் அவ்வாறு அவர்கள் செய்யலாம்.

போலீஸ் ஸ்டேஷன்களிலே அடைக்கப்படுகின்ற கைதிகள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள், அடிக்கப்பட்டுச் செத்தார்கள் என்ற புகார்கள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டைப் பொறுத்தவரை அந்தக் கணக்கு குறைந்திருக்கிறது என்று கருதுகிறேன். ஐ.ஜி. அவர்களுடனும் ஏனைய அதிகாரிகளுடனும் பேசி ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். போலீஸ் ஸ்டேஷன்களில் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று கூறி போலீசார் தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்பதாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரி, அதற்கு இடம் இல்லாத அளவுக்கு ஸ்டேஷன்களில் இருக்கும் கைதிகளை அடைக்கும் இடங்களில் ஜன்னல் கம்பி இல்லாத அளவுக்கு, துணியையோ, கயிற்றையோ கட்டுவதற்கு வசதி இல்லாத நிலையில், குறுக்குக் கம்பி இருந்தால் மிக உயரத்தில் வைக்க வேண்டுமென்ற நிலையில், நிச்சயமாக அந்தக் கைதிகள் தற்கொலை செய்து கொண்டிருக்க முடியாது, தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பு இல்லை

என்ற அளவுக்குக் கட்டடங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாலை ஆறு மணிக்கு மேல் தனிப்பட்ட பெண் குற்றத்திற்காகச் சிறைப் பிடிக்கப்பட்டால் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கக் கூடாது, சப்-ஜெயிலுக்கு அனுப்பிவிட வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சில தவறுகள் குறைக்கப்பட ஏதுவாக இருக்கும். அந்த முறையும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரைப் பொறுத்தவரை ஆறு காவல்துறை வான்கள் இருந்துகொண்டிருக்கின்றன. மேலும் ஆறு காவல்துறை வான்கள் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. 12 வான்களும் 12 தொகுதிகளில் சென்னை நகரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் இரவு பகல் எந்நேரமும். அதிலே சப் இன்ஸ்பெக்டரோ அல்லது காவல் துறையைச் சேர்ந்த ஒருவரோ இருப்பார். தீ விபத்துக்கள், சிறு சிறு குற்றங்கள் ஆங்காங்கு நடைபெறுகிறவாறு 12 வான்களையும் பயன்படுத்த முடியும். அதுவும் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையின்போது, காவலர் க்ஷேம நல நிதிக்கு அதிகபட்சம் ரூ. 50,000 என்று இருந்ததை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 இலட்சம் என்று அதிகரிப்பதாக அறிவித்தேன். அது அமலுக்கு வந்திருக்கிறது. காவலரின் வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 யூனிட் மின்சாரம் என்று இருந்ததை 20 யூனிட்டுகளாக ஆக்குவதற்கு உத்தரவு பிறப்பித்து இன்று அமலில் இருக்கிறது. சிறந்த சேவைக்கும், வீரச் செயல்களுக்கும் 'முதலமைச்சர் பதக்கம்' வழங்குவது பற்றிக் கூறியதும் இன்று அமலில் இருக்கிறது. காவலர்களுக்கு ரூ. 15 லட்சத்தில் வீடு கட்டித் தரப்படும் என்ற உறுதிமொழியும் இன்று அமலாக்கப்பட்டிருக்கிறது.

இன்று காலையில் பேசிய பலரும் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரங்கநாதன் அவர்களும், கணேசன் அவர்களும், எதிர்த்தரப்பில் பேசிய பலரும் பேசிய நேரத்தில், கிராமங்களில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள் வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கே மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுப்பதைவிட, ஐந்து ஆண்டுகளில் இருக்கக்கூடிய எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுப்பது என்ற வகையில் முதற்படியாக இந்த ஆண்டு 100 கிராமங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்).

கிராமங்களில் உள்ள போலீஸ்காரர்கள் தங்கள் பணியைப் புரிவதற்கு சைக்கிள்கள் தேவை என்ற கோரிக்கையைத் தெரிவித்தார்கள். போலீஸ் கமிஷன் அறிக்கை வருவதற்கு முன்பாகவே



—அவர்கள் இன்னும் பல தேவைகளையும், நன்மைகளையும் கூறியிருக்கிறார்கள்—இடையிலேயே கிராமங்களில் உள்ள போலீஸ்காரர்களுக்கு முதல் கட்டமாக இந்த ஆண்டு ஐயாயிரம் பேர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படும். அந்த சைக்கிள்கள் வாங்க மானியமாக 40 சதவிகிதமும் கடனாக 60 சதவிகிதமும் அவர்களுக்கு அளிக்கப்படும்.

காவல் துறையைப் பற்றி மிகுந்த கடமையுணர்வோடும், கண்ணிய உணர்வோடும், கட்டுப்பாட்டு உணர்வோடும் பலரும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நல்ல காரியங்களுக்காகப் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். அதே நேரத்தில் அவர்களிடத்தில் இருக்கும் சிறு சிறு குறைபாடுகளை அவர்களே நீக்கிக் கொள்ள முன்வரவேண்டும். வேலியே பயிரை மேய்வது என்று இல்லாமல் அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த அவையின் சார்பாகக் காவல் துறையினரைக் கேட்டுக் கொண்டு காவல்துறையின் பெரிய அதிகாரிகளும், ஏனைய அதிகாரிகளும் இந்த அரசோடும், என்னோடும் ஒத்துழைத்ததற்காகவும், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், அமைதி ஒழுங்கை நிலைநாட்டவும் அரசுடன் ஒத்துழைத்த ஐ.ஜி. அவர்களுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறைச் செயலாளர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்து, இதிலே விரிவான விளக்கம் அளித்துவிட்ட காரணத்தால் இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு அமைகிறேன்.

**திரு. மார்ட்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.**

**திருவாளர்கள் ஏ. அ. சுப்பராஜா, பி. வேலுசாமி, சோ. அழகர்சாமி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வரதராஜன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,49,60,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.**

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 10—நிதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,42,18,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(இ) நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,36,57,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து கொள்ளுகிறேன்.

### 3. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம் மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

.ப. —57. பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

**பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.**



### 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

189. Notification issued with R.C. No. 22156/68, P-1, dated the 19th September 1969 in regard to exclusion of certain areas from the limits Vellanur Panchayat and exclusion in the limits of Avadi Township. [Laid on the Table of the House under Section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

190. Tamil Nadu Government's Review and Fourth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Industrial Development Corporation Limited, for the year ended 31st March 1969. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

*B. Reports, Notifications and other papers.*

@ 132. Review of the Progress made in Co-operative Department Schemes, 1969–70 (English and Tamil).

---

@ Despatched to Members on 1st April 1970.

[1970 ஏப்ரல் 3

இணைப்பு I.

தொடக்க நில மேம்பாட்டு வங்கிகளைத் தொடங்க ஆணையிடப்பட்ட, இடங்களைக் காண்பிக்கும் விவர அட்டவணை.

### செங்கற்பட்டு மாவட்டம் :

1 கும்மிடிபூண்டி
2 எல்லாப்புரம்
3 திருவேலங்காடு
4 உத்திரமேரூர்
5 சித்தாமூர்
6 வாலாஜாபாத்
7 கடம்பத்தூர்

### தென் ஆற்காடு மாவட்டம் :

1 நல்லூர் (பெண்ணாடத்தில்)
2 வானூர்
3 மரக்காணம்
4 தியாகதுர்க்கம்
5 சின்ன சேலம்
6 மேல்மலையனூர்

### கோயம்புத்தூர் மாவட்டம் :

1 சத்தியமங்கலம்
2 காங்கேயம்
3 பொள்ளாச்சி வடக்கு
4 கிணத்துக்கடவு
5 ஆனைமலை
6 தொண்டாமுத்தூர்
7 பெரியநாயக்கன்பாளையம்
8 குடிமங்கலம்
9 வெள்ளான் கோயில்
10 மூலனூர்
11 குண்டடம்
12 மடத்துக்குளம்

### சேலம் மாவட்டம் :

1 மேச்சேரி
2 கடயம்பட்டி
3 மகுடஞ்சாவடி
4 எடப்பாடி
5 நாமகிரிப்பேட்டை
6 வெண்ணந்தூர்
7 மோகனூர்



இணைப்புகள்.

1970 ஏப்ரல் 3]

### திருச்சிராப்பள்ளி மாவட்டம் :

1 தொட்டியம்
2 மணச்சநல்லூர்
3 அரவக்குறிச்சி
4 திருமானூர்
5 அன்னவாசல்
6 பொன்னமராவதி
7 அரிமளம்
8 விராலிமலை
9 காம்பக்குடி
10 கீரனூர்

(குன்னண்டார்கோயில் வட்டாரம்)

### இராமநாதபுரம் மாவட்டம் :

1 இளையாங்குடி
2 விருதுநகர்
3 திருச்சுழி
4 சிங்கம்புணரி
5 காளையார்கோயில்
6 முதுகுளத்தூர்
7 கமுதி
8 கடலாடி
9 கல்லல்

### திருநெல்வேலி மாவட்டம் :

1 புதுக்கோட்டை
(தூத்துக்குடி கிராமபுறம்)
2 பாளையங்கோட்டை
3 விளாத்திகுளம்
4 வாசுதேவநல்லூர்
5 செங்கோட்டை
6 மேல்நீலிதநல்லூர்

### கன்னியாகுமரி மாவட்டம் :

1 தோவாளை
2 ராஜக்காமங்கலம்
3 குருந்தங்கோடு

இணைப்புகள்.

[1970 ஏப்ரல் 3

Statement showing the places where primary land development banks have been ordered to be opened.

*Chingleput District.*

1 Gummudipoondi
2 Ellapuram
3 Thiruvelangadu
4 Uthiramerur
5 Chithamur
6 Walajabad
7 Kadambathur

*South Arcot District :*

1 Nallur (at Pennadam)
2 Vanur
3 Marakkanam
4 Thiyagadurgam
5 Chinnasalem
6 Melmalayanur

*Coimbatore District.*

1 Satyamangalam
2 Kankeyam
3 Pollachi North
4 Kinathukadavu
5 Anaimalai
6 Thondamuthur
7 Perianaickenpalayam
8 Gudimangalam
9 Vellakoil
10 Moolanoor
11 Kundadam
12 Madathukulam

*Salem District :*

1 Mecheri
2 Kadayampatti
3 Magudanchavadi
4 Edapadi
5 Namagiripettai
6 Vennanthur
7 Mohanur

*Thiruchirappalli District.*

1 Thottiam
2 Mannachanallur
3 Aravakurichi
4 Thirumanur
5 Annavasal
6 Ponnamaravathi
7 Arimazham
8 Viralimalai
9 Karambakudi
10 Keeranur (Kunnandarkoil Block)



இணைப்புகள்.

*Ramanathapuram District :*

1 Ilayangudi
2 Virudhunagar
3 Thiruchuli
4 Singampunari
5 Kalaiyarkoil
6 Muthukulathur
7 Kamuthi
8 Kadaladi
9 Kallal

*Tirunelveli District :*

1 Pudukkottai (Tuticorin Rural)
2 Palayamkottai
3 Vilathikulam
4 Vasudevanallur
5 Shencottah

*Kanyakumari District :*

1 Thovalai
2 Rajakkamangalam
3 Kurunthankode

## தமிழ் நாட்டுக் காவல்துறை.
## 1969–70-ம் ஆண்டிற்கான ஆய்வுரை.

1969–70 தமிழ் நாட்டுக் காவல்துறை—மறு ஆய்வு—சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட, வலிவும் திறமையுமிக்க ஒரு காவற்படை மிகவும் தேவையானது. நமது நாட்டில் மிகச் சிறந்த ஒரு அமைப்பாகத் திகழும் பெருமையினைத் தமிழ்நாட்டுக் காவற்படை தொடர்ந்து காப்பாற்றி வருகிறது.

2. படைக்கலந்தாங்கிய காவற் படை.—ஆவடி, படைக் கலந் தாங்கிய சிறப்புக் காவற் படையின் 1-வது அணி, முறைப்படுத்தப் பட்ட அமைப்பு முறைக்கிணங்க, ஆவடியைத் தலைமையிடமாகக் கொண்டு தொடர்ந்து செயலாற்றுகிறது.

இந்திய ரிசர்வ் காவற்படையாயுள்ள படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவற்படையின் II -ம் அணி அஸ்ஸாமில் இந்திய அரசுக் காகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. கடந்த நான்கு ஆண்டு களாக இந்தப் படை அணி அங்கு பணி நிமித்தம் அனுப்பப் பட்டுள்ளமையால் 1969 பிப்ரவரியில் அந்த அணியை இம்மாநிலத் திற்குத் திரும்பச் செய்து அதைக் கலைத்துவிடக் கருதப்பட்டது. அடிக்கடி வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் இந்திய அரசு, இந்த அணியைத் திருப்பி அனுப்பவில்லை. இந்த அணியை விரைவில் திருப்பி அனுப்புமாறு இம்மாநில அரசு மீண்டும் இந்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

1967 மே திங்கள் 27-ம் தேதியில் இம்மாநிலத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்ட படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவற் படையின் IV -வது அணி, ஆவடியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல் பட்டு வருகிறது.

மலபார் சிறப்புக் காவற்படை I -ம் அணி, வடகிழக்கு எல்லைப் புறத்தில் (நேபா) இருந்த மலபார் சிறப்புக் காவற்படையின் III -வது அணியை விடுவிக்க 1969 மார்ச்சு திங்கள் 9-ம் நாள் இம் மாநிலத்திற்குப் புறம்பே அனுப்பப்பட்டது. இது, வடகிழக்கு எல்லைப் புறத்தில் இந்திய அரசுக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இந்த அணியின் பணி இம்மாநிலத்திற்குத் தேவைப் படுவதால் இதை விரைவில் திருப்பி அனுப்புமாறு இந்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மலபார் சிறப்பு காவற்படை I -ம் அணி அனுப்பப்பட்ட பின்னர், மலபார் சிறப்புக் காவற் படை III-ம் அணி இம்மாநிலத்திற்குத் திரும்ப அனுப்பப்பட்டது. 1968 ஜூலை திங்கள் 1-ம் தேதி முதல் இது கலைக்கப்பட்டது. பின்னர் அது மத்திய சேமக் காவற்படையுடன் 42-வது அணியாக இணைக்கப்பட்டது.

மலபார் சிறப்புக் காவற்படை -ம் அணி, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறில் தொடர்ந்து இயங்கி வருகிறது.



3. காவல் துறையிலுள்ள அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின் தங்கிய வகுப்பினர்களின் சதவீதம் :—

1969, டிசம்பர் 31-ம் நாளன்று உள்ள நிலைவரப்படி, காவல் துறையில் வேலைக்கமர்த்தப்பட்ட அரிசனங்களின் சதவீதம் கீழ்வருமாறு :—

| (1) | 31-12-1969-ல் உள்ளவாறு இருந்த அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை. (2) | வேலைக்கமர்த்தப்பட்ட அரிசனங்களின் எண்ணிக்கை. (3) | சதவீதம். (4) | செட்யூல்டு வகுப்பினர். (5) | சதவீதம். (6) | பின்தங்கிய வகுப்பினர். (7) | சதவீதம். (8) | பழங்குடி மக்கள். (9) | சதவீதம். (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்கள். | 252 | .. | .. | 44 | 18 | 20 | 8 | 1 | 0·4 |
| அரசிதழ் பதிவுபெறாத அலுவலர்கள்— | | | | | | | | | |
| (அ) கடைநிலைப் பணியாளர்கள் நீங்கலான ஏனையோர்— | | | | | | | | | |
| நிலைப் பணியாளர்கள் .. | 33,985 | 1,476 | 4 | 3,581 | 11 | 13,274 | 39 | 6 | 0·02 |
| தற்காலிகப் பணியாளர்கள் .. | 6,435 | 311 | 5 | 673 | 10 | 1,918 | 30 | 11 | 0·2 |
| (ஆ) கடைநிலைப் பணியாளர்கள் | | | | | | | | | |
| நிலைப் பணியாளர்கள் .. | 250 | 14 | 6 | 42 | 17 | 54 | 22 | .. | .. |
| தற்காலிகப் பணியாளர்கள் .. | 118 | 48 | 41 | 47 | 41 | 14 | 12 | .. | .. |

இந்த ஆண்டில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காவலர்களின் எண்ணிக்கை :—

| வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை. | அரிசனங்களின் எண்ணிக்கை. | சதவீதம். | வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் தங்கிய வகுப்பினர் எண்ணிக்கை. | சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1,700 | 350 | 21·2 | 634 | 37·3 |

தற்போதுள்ள காவற்படையினரின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் I, II-ம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.



4. பயிற்சியும் பணிக்கமர்த்தப்படுவதும்.—காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் மூவரும் (1-ம் வகை), உதவித் தளவாய் (3-ம் வகை) ஒருவரும் இந்தியக் காவல்துறைத் தொகுதிப் பணியில் தகுதி காண் பருவத்திலுள்ளவர்கள் மூவரும் வேலூர் காவல் துறையினர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். காவல் துறையினர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் உதவித் தளவாய், வெல்லிங்டன் தமிழ்நாடு படைப்பிரிவு நிலையத்தில் ஒன்றரை மாத காலத்திற்கு ராணுவப் பயிற்சி பெற 1970 பிப்ரவரி 1-ம் தேதி முதல் அனுப்பப்பட்டுள்ளார்.

காவல்துறையில் தகுதிகாண் பருவத்திலுள்ள துணைக் கண்காணிப்பாளர்கள் இருவர் (1-ம் வகை) இப்போது, மாவட்டங்களில் செய்முறைப் பயிற்சி பெறுகின்றனர்.

மாவட்டங்களில் செய்முறைப் பயிற்சி முடித்த இந்தியக் காவல்துறை தொகுதிப்பணி அதிகாரிகள் மூவர், இந்த ஆண்டில் மாவட்டங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டங்களில் செய்முறைப் பயிற்சி முடித்த, நேரடியாகப் பணியில் அமர்த்தப்பட்ட உதவித் தளவாய்கள் இருவர், படைப்பிரிவுகளின் தனிப் பொறுப்பேற்க அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் உதவித் துணை ஆய்வாளர்கள் எவரும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

5. கல்கத்தா, ஐதராபாத் ஆகிய இடங்களிலுள்ள மத்தியப் புலனாய்வுப் பள்ளியில் பயிற்சி பெறுதல்.—இந்த ஆண்டில் ஐதராபாத்திலுள்ள மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியிலும் (ஐந்து துணை ஆய்வாளர்கள்) கல்கத்தாவிலுள்ள பயிற்சிப் பள்ளியிலும் (ஆறு துணை ஆய்வாளர்கள்) புலனாய்வுக்குத் தொடர்பான அறிவியல் நுட்பக் கருவிகளிலும் மேம்பட்ட வழிகளிலும் பதினான்கு வாரங்கள் பயிற்சி பெறுவதற்கென பதினொரு துணை ஆய்வாளர்கள் அனுப்பப்பட்டனர்.

6. புதுவலுவூட்டுப் பயிற்சி.—காவல் துறை அதிகாரிகளுக்காக ஆண்டுதோறும் நடைபெறும் ஆறு வார நினைவூட்டுப் பயிற்சிப் பாட முறை 1968-ல் மீண்டும் தொடங்கப்பட்டது.

வேலூர், காவல்துறையினர் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்ட காவல்துறை அலுவலர்களுக்கான நினைவூட்டுப் படிப்பில் 1969-ல் 176 அலுவலர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர். இவர்கள் நான்கு தொகுதியினராகப் பயிற்சி பெற்றனர்.

7. மருத்துவச் சார்பான சட்ட ஆய்வுத்துறை.—தமிழ் நாடு மருத்துவச் சார்பான சட்ட ஆய்வுக்கூடம் காவல்துறையில் 1967 மார்ச் 1-ம் தேதி முதற்கொண்டு நிறுவப்பட்டது; இது ரசாயன ஆய்வாளர் ஆய்வுக் கூடத்திலிருந்து பிரித்து அமைக்கப்பட்டது.

இந்த ஆய்வுக் கூடத்தில் செயற்பாட்டை இந்திய அரசு நியமித்த ஆய்வுக் குழு ஒன்று ஆராய்ந்து மருத்துவச் சார்புச் சட்ட ஆய்வு குறித்த மத்திய ஆலோசனைக் குழுவிற்கு அதன் அறிக்கையை அளித்தது. தற்போது, தமிழ்நாடு மருத்துவச் சார்புச் சட்ட ஆய்வுகுறித்த ஆய்வுக் கூடத்தில் கீழ் காணும் பிரிவுகள் அடங்கி யுள்ளன:—

(1) உயிரியல் பிரிவு.
(2) ரசாயனப் பிரிவு.
(3) பௌதிகப் பிரிவு.
(4) புகைப்படப் பிரிவு.
(5) உந்துவிசைப்படை ஆய்வுப் பிரிவு.
(6) ஆவணங்கள் பிரிவு.

தமிழ் நாடு மருத்துவச் சார்புச் சட்ட ஆய்வுகுறித்த ஆய்வுக் கூடம் சிறந்த முறையில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அறுவர், குற்றவியல் ஆய்வு, மருத்துவச் சார்புச் சட்ட ஆய்வுகுறித்த டிப்ளோமா படிப்பில் பயிற்சிபெற 1963 நவம்பர் முதல் அனுப்பப்பட்டுள்ளனர்.

8. குற்றம்.—சிறப்புச் சட்டங்களின் கீழும் உள்ளூர்ச் சட்டங் களின் கீழும் இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுதியின் சிறு தொல்லைகள் விளைவித்தல் குறித்த பிரிவுகளின் கீழும் நிகழ்ந்த குற்றங்கள் நீங்கலாக, 1969-ல் நிகழ்ந்த பிடி ஆணை வேண்டாக் குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 66,326 ஆகும்; 1968-ல் 62,579 நிகழ்ந்தன. இதனால் 3,747 குற்றங்கள் கூடின. குற்றங்களைத் தாராளமாக அறிவித்தல், குற்றங்களைத் தாராளமாகப் பதிவு செய்தல், பாதகமான பருவ நிலைமைகள் ஆகியவையே இதற்குக் காரணங்களாகும்.

9. துப்புத் துலக்குதல்.—1968-ல் துப்புத் துலக்கப்பட்ட பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் 60.8 சதவீதம் ஆகும். 1969-ல் இந்த எண்ணிக்கை 61.3 சதவீதமாகும். துப்புத் துலக்கிய குற் றங்களின் சதவீதம் 1969-ல் அதிகரித்துள்ளது.

10. மதுவிலக்கு.—மதுவிலக்குச் சட்டத்தைக் காவல்துறை யினர் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர். மாவட்டங் களிலும் சரகங்களிலும் இயங்கும் சோதனைக் காவற்படையினர் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். 1960 முதற்கொண்டு



அளிக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கையைக் கீழ்க் காணும் புள்ளி விவரம் காட்டுகிறது :

| | |
|---|---|
| 1960 | 93,497 |
| 1961 | 1,12,689 |
| 1962 | 1,29,977 |
| 1963 | 1,23,006 |
| 1964 | 1,37,714 |
| 1965 | 1,65,052 |
| 1966 | 1,89,548 |
| 1967 | 1,90,713 |
| 1968 | 2,53,607 |
| 1969 | 3,06,555 |

தொடர்ந்து செயலாற்றிக் கண்டுபிடிப்பதற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டது.

11. நாய்ப் படைப் பிரிவு.—இம்மாநிலத்தில் தற்போது சென்னை மாநகரில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்று மாக மூன்று துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் உள்ளன. இவைகள் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன.

12. மாவட்டக் குற்றப் புள்ளிவிவரக் கழகம்.—குற்றம், குற்ற வாளிகள்பற்றிய விவரங்களைத் திரட்டுவது அவற்றைப் பற்றிய தகவல் தருவது மேலும் முக்கியமான குற்றங்களின் தன்மை அவர்கள் கூட்டாகச் சேர்ந்து இயங்கும் விதம் ஆகியவற்றைப் பற்றிய தனி ஆய்வு செய்வது, குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவரிடம் துப்புத் துலக்குபவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதுபற்றி ஆலோசனை கூறுவது போன்ற பணிகளை மாவட்டக் குற்றப் புள்ளி விவரக் கழகம் நன்கு நிறை வேற்றி வந்தது. விரல் ரேகை, காலடிச் சுவடுபற்றி அறிவதில் தனிப் பயிற்சி பெற்ற தலைமைக் காவலர் விஞ்ஞான உதவியாளர் களும் வழக்குகளைத் துப்புத் துலக்குவதில் மிகவும் உதவியாயிருந் தனர். விரல் ரேகை (கண்டுபிடிப்பு) கழகத்தினைச் சேர்ந்த திறமைசாலிகள் குற்றம் நடந்த இடத்தை உடனடியாகச் சென்று பார்வையிடுவர். முக்கியமான வழக்குகளில் விரல் ரேகை குறித்து துப்புத் துலக்குவதற்காக இவர்களுடைய உதவி வேண் டப்படுகிறது. குற்றம் நடந்த இடங்களில் குற்றவாளிகள் விட்டுச் சென்ற விரல் ரேகை அடையாளங்களிலிருந்து 259 வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். குற்றப் புலனாய்வுத் துறையில் குற்றவியல் பிரிவுடன் இணைந்துள்ள குற்றம் செய்யும் முறைகளையும் அவற்றைக் கண்டு பிடிக்கும் வழிகளையும் கற்பிக்கும் மாநிலக் கழகம் மாவட்டங்களிலுள்ள துப்பறியும் கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இணக்கமாகப் பணி புரிந்தது.

[1970 ஏப்ரல் 3

**13. பிச்சைக்காரர் விடுதிகள்.**—பிச்சை எடுப்பதைத் தடை செய்யும் 1945-ம் ஆண்டுச் சட்டம், இம்மாநிலம் முழுவதிலும் 1966 மே, 1-ம் தேதி முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஏற்கனவேயுள்ள விடுதிகள் தொடர்ந்து மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வந்தன.

தமிழ் நாட்டுச் சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, பிச்சைக்காரர் சிக்கல்பற்றி விரிவாக ஆராய்ந்தது; இக் குழுவின் பரிவுரைகள் முனைப்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

**14. சிறுவர் விடுதிகள்.**—மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் 1959-ல் சிறுவர் விடுதிகள் திறக்கப்பட்டன. இவைகளைக் காவல்துறை நிர்வகிக்கிறது. சிறுவர் விடுதியின் மத்தியக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் புலனாய்வுத் துறையின் துணைத் தலைமை அதிகாரி அதன் தலைவராவார். காலாண்டுக்கு ஒருமுறை மத்தியக் குழு கூடுகிறது; சிறுவர் விடுதிகள் செயல்படும் முறைபற்றி ஆராய்ந்து வேண்டப்படுமிடங்களில் கருத்துரைகள் வழங்குகிறது. அவ்வாறு ஒவ்வொரு காலாண்டுக்கும் மத்தியக் குழுவால் செய்யப்படும் ஆய்வும் அரசுக்கு அனுப்பப்படுகிறது. இப்போதுள்ளபடி, இம் மாநிலத்தில் 29 சிறுவர் விடுதிகள் உள்ளன. 1968-69-ல் கோடம்பாக்கத்தில் ஒரு சிறுவர் விடுதியைத் திறக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. 1968–69-ம் ஆண்டுக்காக, தமிழ் நாட்டில் சிறுவர் விடுதிகளைப் பேணுவதற்கு ரூ. 62,156 வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. செலவிடப்பட்ட தொகை ரூ. 65,009.91.

**15. சாதிப் பூசல்கள்.**—இந்த ஆண்டில் ஒன்றிரண்டு சாதிப் பூசல்கள் ஏற்பட்டன. இவற்றைப் பெரிய கலவரங்களென வகைப்படுத்துவதற்கில்லை. சிறு சிக்கல்களில் ஏற்பட்ட கசப்பு உணர்வின் காரணமாகவே 23 கலவர நிகழ்ச்சிகள் நடந்தன. இவைகள் உள்ளூர்த் தன்மை வாய்ந்தவை; இவை குறித்துத் திறம்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**16. உழவுத் துறை நிலைமை.**—இந்த ஆண்டில் உழவர்களின் முக்கியக் கோரிக்கை, கூலி உயர்வும் அறுவடைக்கு வெளியிலிருந்து தொழிலாளர்களை வேலைக்கமர்த்தக் கூடாதென்பதும் ஆகும். வயலில் அத்து மீறி நுழைந்து தொழிலாளர்களை வெளியிலிருந்து கொண்டுவந்து வேலைக்கமர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அறுவடை செய்வதைத் தடுத்த நிகழ்ச்சிகள் சில இந்த ஆண்டில் ஏற்பட்டன. இருப்பினும் கணபதியா பிள்ளை ஆணைக் குழுவின் பரிந்துரைப்படி உழவுத் தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் செயல் படுத்தப்பட்டதால் தொழிலாளர்களிடையே அமைதி நிலவியது. இதன் பின்னர், கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவிய நிலக்கிழார் உழவுத் தொழிலாளர் தகராறு தலைகாட்டவில்லை.



1970 ஏப்ரல் 3]

**17. தொழிலாளர் நிலைமை.**—தொழிலாளர் நிலைமை பொதுவாக மனநிறைவளிப்பதாயிருந்தது. ஒரு சில இடங்களில் தொழிலாளர்கள் சில வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். ஆயினும் மனநிறைவு தரும்வகையில் அவற்றிற்குத் தீர்வு காணப்பட்டது. இந்தத் தகராறுகள் அனைத்தும் அந்தந்தத் தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட சிக்கல்களின் அடிப்படையில் தோன்றியவையாகும். தொழிலாளர் கலவரம் எதுவும் சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரையில் பெரும் பிரச்சினையாகத் தோன்றவில்லை.

**18. மாணவர் கிளர்ச்சி.**—மாணவர் கிளர்ச்சி குறித்த பொதுவான நிலைமையில் இந்த ஆண்டில் பெருமளவிற்கு மேம்பாடு காணப்பட்டது. ஆங்காங்கே சில வேலை நிறுத்தங்களும், கிளர்ச்சிகளும் நடந்தன என்பதில் ஐயமில்லை. என்றாலும் இந்த நிகழ்ச்சிகள் எவையும் சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரையில் காவல் துறைக்குக் கடும் பிரச்சினை எதையும் எழுப்பவில்லை.

**19. காவல் துறையினர் செய்த துப்பாக்கிச் சூடு.**—1969-ல் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஐந்து சந்தர்ப்பங்களில் காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருந்தது :—

(1) 1969-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ம் தேதியில் தமிழ் நாட்டு முதலமைச்சர் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்த மக்கள் கடலெனத் திரண்டு குழுமியிருந்தனர். மக்கள் கூட்டம் மிகுந்த இடர்ப்பாடு, வன்செயலில் ஈடுபட்டது. எனவே காவற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. இந்தத் துப்பாக்கிச்சூட்டில், திருவேங்கடம் என்பவர் இறந்தார். மற்றும் எட்டுப்பேருக்குக் காயம் ஏற்பட்டது. பதினொரு காவல்துறை அலுவலர்களும் காயமடைந்தனர். சைதாப்பேட்டை, மாநகர மூன்றாவது மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தினர். துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது என்று முடிவுரைத்தார்.

(2) கீரமங்கலம் (தஞ்சாவூர்), திலகர் திடலில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16-ம் தேதியில் ஒரு நாடகம் நடந்தது. பெண்கள் உட்கார்ந்த இடத்திற்கு அருகில் கூட்டத்தில் ஒரு பகுதியினர் ஒழுங்கற்ற முறையில் நடக்கத் தொடங்கினர். கூட்டத்தினர் வன்செயலில் இறங்கினர்; காவல்துறையினர் எச்சரிக்கைக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் தனது கைத்துப்பாக்கியால் இரண்டு முறை மேலே சுட்டார்; கூட்டம் கலைந்தது. வருவாய்க் கோட்ட அதிகாரிகள் அறிக்கை இன்னும் எதிர்பாக்கப்படுகிறது.

(3) கொள்ளிடம் ஆற்றங்கரையிலுள்ள வெள்ளைக் கிராமத்தில் நெல் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் கண்டுபிடிக்க காவற்படையினர் 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் தேதியில் சென்றனர். கள்ளக் கடத்தலுக்கான நெல் அடங்கிய கோணிப்

பைகளை நடு இரவு 12 மணிக்குக் கள்ளக்கடத்தல்காரர்கள் பத்துப் பேர் கொண்டுவந்தனர். முதலில், காவல்துறையினரைக் கண்டதும் அவர்கள் ஓடி விட்டனர்; பின்னர், தடியுடனும் அரிவாளுடனும் திரும்பி வந்து காவற்படையினரைத் தாக்கினர். காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இரண்டு முறை சுட்டார். குற்றவாளிகள் ஓடிவிட்டனர்; எவரும் காயமடையவில்லை. வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை நடத்தினார்; துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதென்று முடிவுரைத்தார்.

(4) தேனி காவல் நிலைய எல்லைக்குள் 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாள் 8 மணிக்கு ஒருவரின் சடலம் கிடந்தது. கூட்டம் கூடி விட்டது. இறந்தவரின் மனைவி, இதில் எவரோ தவறிழைத்திருப்பதாக முறையீடு செய்தார். மாலையில் கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டனர். தாலூகா மாஜிஸ்திரேட்டும் வந்தார். கண்ணீர்ப்புகை விடப்பட்டது; பலனில்லை. தடியடியும் செய்யப்பட்டது; ஆனால் அதிலும் பலன் ஏற்படவில்லை. துப்பாக்கிச்சூடு நடத்த தாலூகா மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். நான்கு முறை சுடப்பட்டது. அந்த இடத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர், மருத்துவமனையில் இறந்தார். மற்றும் மூவர், குண்டு காயம் அடைந்தனர். உசிலம்பட்டி, வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை நடத்தினார்; துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமாகுமென முடிவுரைத்தனர்.

(5) அறந்தாங்கி, கதிராமங்கலத்தைச் சேர்ந்த பெருங்குளம் சிற்றூரில் கள்ளக்கடத்தலைக் கண்டுபிடிக்க 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12-ம் நாள் காவல்துறையினர் சென்றனர். நெல் ஏற்றப்பட்டு கைவிடப்பட்ட இரட்டை மாட்டு வண்டிகள் விட்டு இருப்பதைக் கண்டனர். கள்ளக் கடத்தல்காரர்கள் காவல்துறையினரைத் தாக்கினர். எனவே, இன்ஸ்பெக்டர் நான்கு முறை சுட்டார். கூட்டத்தினர் கலைந்து செல்வதைப் பார்த்து, இன்ஸ்பெக்டர் சுடுவதை நிறுத்தினர். மூன்று பேருக்குக் குண்டு காயம் ஏற்பட்டது. பின்னர், கூட்டத்தினர் காவல் துறையினரை அவ்விடத்தில் நிறுத்தி வைத்துவிட்டனர். இவர்களைப் படைக் கலந்தாங்கிய ரிசர்வ் காவற்படையினர் மீட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. பட்டுக்கோட்டை, வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை நடத்தினார், அவரது தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

<u>20. கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.—(1)</u> யானைக் கவுனி காவல் நிலையத்தின் அதிகார வரம்பிற்குள் யானைக் கவுனிக்கு அருகில் 1969-ம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ம் நாள் 500 பேர் கூடினர். கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டுப் பொது சொத்திற்குச் சேதம் ஏற்படுத்தத் தொடங்கினர். கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடிக்கப்பட்டு, 5 நிமிடங்களில் கூட்டத்தினர் கலையத் தொடங்கினர்.





(2) மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தவந்த கூட்டத்தினர் 1969-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ம் நாள் கட்டுமீறிப்போகவே, கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடிக்கப்படவேண்டியதாயிற்று.

(3) தேனி காவல் நிலையத்தின் முன், 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாள் மாலை 3-45 மணிக்கு 2,000 பேர் கொண்ட கூட்டம் கூடியது; கற்களை எறிந்து காவல் நிலையத்தைத் தாக்கினர். கூட்டத்தினரைக் கலையச் செய்ய அன்று கண்ணீர்ப்புகை குண்டுகள் வெடிக்கப்பட்டன.

(4) நகராட்சித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க வாக்குகள் எண்ணப்படுவது சம்பந்தமாக மதுரை (நகரம்), மதிச்சியம் சாலையில் 5000-க்கு மேற்பட்டுக்கூடிய கூட்டத்தினரை கலைக்க 1969-ம் ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் நாளில் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.

(5) ஒருவர் குத்தப்பட்ட நிகழ்ச்சியையடுத்து, நெய்வேலி, அனல் மின் நிலையத்திற்கு வெளியே கூடிய நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் சுமார் 2,000 தொழிலாளர்கள் கட்டுக்கடங்காது போகவே 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ம் நாள் மாலை 4-15 மணிக்குக் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.

<u>21. காவல்துறை வானொலிப் பிரிவு.</u>—தமிழ் நாட்டுக் காவல் துறை அமைப்பில் 57 நிலையான வானொலி நிலையங்களும், 20 இடம் பெயரும் நிலையங்களும், 5 உயர் அலைக் கண்ட்ரோல் நிலையங்களும், 5 உயர் அலை ரிபீட்டர் நிலையங்களும் அடங்கியுள்ளன.

மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னை மாநகருடன் வானொலித் தொடர்புமூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதில், மத்திய சரகம், தென் சரகம், மேற்குச் சரகம், அவசரத் தொகுப்பு நிலையங்கள் (Emergency group of stations) ஆகிய நான்கு கண்ட்ரோல் நிலையங்கள் உள்ளன.

இந்த மூன்று சரகங்களின் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், காவல்துறைத் துணைத் தலைமை அதிகாரிகள், சென்னை, குற்றவியல் புலனாய்வுத் துறைத் துணைத் தலைவர், சென்னை, காவல் துறைத் தலைமை அதிகாரி ஆகியோருக்கு இடம் பெயர் வானொலி நிலையங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் தொலைவுப் பகுதிகளில் முகாமிடும்போது தங்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடங்களுடன் தொடர்பு கொள்ள இந்த வசதி வகைசெய்யும். 1967-68 திறக்கப்பட்ட 42 உட்கோட்ட வானொலி நிலையங்களும் முறையாகச் செயல்படுகின்றன; சம்பந்தப்பட்ட மாவட்டத்துடனும் சரகத்துடனும் தலைமையிட நிலையங்களை இணைத்துச் செயல்பட்டு வருகின்றன.

மேற்சொன்ன வானொலி நிலையங்களுடன் தமிழ்நாடு காவல் துறை வானொலி அமைப்பில் சென்னையில் ஒரு கண்ட்ரோல் நிலையமும், மேட்டூர் அணை, கல்லணை, தஞ்சாவூரிலுள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் கீழ் அணைக்கட்டு, பவானிசாகர், தக்கலை ஆகிய வெளியிடங்களில் ஆறு நிலையங்களும் அமைக்கப்பட்டு வெள்ளக் காலங்களில் அவசர உதவி செயல்படுவதற்குப் பணியாற்றி வருகின்றன. இவை வெள்ளம் வருவதையும் புயல் அடிப்பதையும் அறிவித்து எச்சரிக்கை செய்கின்றன.

டிரங்க் லைனுக அமையும் தொடரான நான்கு ரிபீட்டர் நிலையங்களில் கடைசி உயர் அலை ரிபீட்டர் நிலையம் கோடைக்கானலில் 1969 மே 7-ம் தேதியில் திறக்கப்பட்டது. இந்த நேர் இணைப்புக்குத் தற்போது திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் ஆகிய இடங்களில் உயர் அலைக் கோடி நிலையங்கள் (V. H. F. Terminals) உள்ளன. இதனால் இவைகள், கம்பியில்லாத் தந்திப் போக்குவரவுப் பளுவினைப் பகிர்ந்து கொண்டு நெருக்கடி நிலைகளின் போதும், தனிப் பாதுகாப்பு ஏற்பாட்டின் போதும் நேரடி வானொலித் தொலைபேசிச் செய்திப் போக்குவரத்திற்கு உதவுகின்றன.

சென்னை மாநகர் காவற் படையினர், மலபார் சிறப்புக் காவற் படையினர், படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவற் படையினர், ஆகியோருக்குக் கூடுதலான நிலையங்கள் உள்ளன. மேட்டூர், கீழ் அணை, கல்லணை, தஞ்சாவூர் பவானிசாகர் தேக்கடி முதலிய இடங்களில் (ஒரு கண்டரோல் நிலையம் உட்பட) ஏழு வெள்ளம் அறிவிப்பு அவசரகால நிலையங்கள் உள்ளன. தற்போது 42 உட்கோட்டத் தலைமையிட நிலையங்கள் செயலாற்றி வருகின்றன.

குற்றங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களையும் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்தல் சம்பந்தமான தகவல்களையும் அவசர காலத் தேவை, தேர்தல்கள், திருவிழாக்கள், கிளர்ச்சிகள்; முதன்மை பெற்றோர் வருகை ஆகிய சிறப்பான கடமைகள் குறித்த தகவல்களையும் பரப்புவதற்காக இந்த வானொலி நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

22. காவல் படையினருக்குக் குடியிருப்பு வசதி.—காவற்படையினரில் குறைந்தது 80 சதவிகதத்தினருக்காவது ரூ. 4.5 கோடி தோராயச் செலவில் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்கு 1955–56-ல் காவலர் குடியிருப்பு வசதித் திட்டம் வகுக்கப்பட்டது. இதுவரையில் மாவட்டங்களிலும் சென்னை மாநகரிலும் 106 சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கும், ஐந்து ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களுக்கும், 381 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 47 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 40 ரிசர்வ் அசிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 859 தலைமைக் காவலர்களுக்கும், 5,273 காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவல் படையினருக்கும், மலபார் சிறப்புக் காவல் படையினருக்கும் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. உதவித் தளவாய்கள் இருவருக்கும், சுபேதார்-மேஜர்கள் இருவருக்கும், சுபேதார்கள் ஒன்பது பேருக்கும், ஜமேதார்கள் இருபது பேருக்கும், அலுவலர்கள் அறுபத்தொன்பது பேருக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.



1969–70 வரையில் இந்திய அரசு ரூ. 3.64 கோடி தொகையைக் கடனாக வழங்க ஒப்பளித்துள்ளது. 1969 செப்டம்பர் திங்கள் 30-ந் தேதியில் வரையிலான காலப் பகுதிக்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 5.49 கோடி ஆகும்.

எண்பது சதவீதப் பேருக்குக் குடியிருப்பு வசதி செய்ய வேண்டுமென்று இலக்கிடப்பட்டது. இதுவரையில் 60 சதவீதத்தினருக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

1969–70-ம் ஆண்டுக்கு இந்திய அரசு ரூ. 10 லட்சம் கடன் தொகைக்கு ஒப்பளித்துள்ளது. 1969-70 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணிகளுக்கும் நிறைவேறி வரும் பணிகளுக்கும் ரூ. 9 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய பணிகளுக்காக ரூ. 15 லட்சம் தொகையை ஒதுக்கியுள்ளது.

23. காவல்துறையினர் நலத் திட்டங்கள்.—1956-ல் அமைக்கப்பட்ட தமிழ்நாட்டுக் காவல்துறையினரின் குடும்ப நல அமைப்பு மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. எழுத்துப் பணியாளர் உட்பட அரசிதழ் பதிவு பெறாத எல்லாக் காவல்துறைப் பணியாளரின் குடும்பத்தினரிடையே நலப் பணியைத் தொடங்கி, மேம்படுத்தி ஒருங்கிணைப்பதே இந்த அமைப்பின் குறிக்கோளாகும். பொதுவாகச் சொன்னால் காவலர் குடும்பத்தினரின் வருமானத்தைப் பெருக்குவதற்கும், காவல்துறையினருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பொழுது போக்கு வசதிகள், மருத்துவம், கல்வி வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதற்கும் உதவி பெறும் நிறைவேற்றத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதும் இப்பணியில் ஒன்றாகும். கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதும் இதில் அடங்கும்.

1969-ம் ஆண்டில் தமிழ்நாடு காவல்துறையினர் குடும்ப நல அமைப்பின் தலைவர், காவல்துறையின் நலப்பணிகளுக்குப் புதிய ஆக்கம் அளித்துச் சீர்படுத்தினார். காவல் துறையினர் குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்தில் நலப் பணிகளை மேம்படுத்த ஆண்டுக்கு அளிக்கப்பட்ட மானியம் ரூ. 750-லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டது.

காவல்துறையின் முதுநிலை அதிகாரிகளின் மனைவிமார்கள் ஒன்று சேர்ந்து, சென்னை மாநகரிலுள்ள பல காவலர் குடியிருப்பு களுக்குச் சென்று பார்வையிடும் திட்டத்தை வகுத்தனர். இவர்கள் காவலர் குடியிருப்புகளில் வாழும் காவல்துறையினரின் குடும்பங்களின் சுகாதாரம், துப்புரவு, குடும்பக் கட்டுப்பாடு ஆகிய வற்றில் பெரிதும் ஆர்வம் கொண்டும் காச நோயாலும் பிற இடை விடா நோய்களாலும் பீடிக்கப்பட்டவர்களைக் கண்டறிய விரும்பியும் பிற சிக்கல்களைக் கண்டறியவும் அவர்கள் குறிப்பாக அக்கறை காட்டினர்.

மாநிலக் காவல் துறையினர் குடும்பங்களின் நலப் பொருட் காட்சி கலை நிகழ்ச்சியும் 1969 செப்டம்பரில் மதுரையில் நடை பெற்றன.

அனைத்திந்தியக் காவல்துறையினர் நலப் பொருட்காட்சியும், கலை நிகழ்ச்சியும் 1969 நவம்பர் 15-ம் தேதி முதல் 19-ம் தேதி வரையில் ஸ்ரீநகரில் நடைபெற்றன.

**24. காவலர் நல நிதி.**—காவலர் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறாத எல்லாப் பணியாளர்களின் நிலைமைகளை மேம்படுத்து வதற்காக 1957 ஜூலையில் உருவாக்கப்பட்ட தமிழ் நாடு காவலர் நல நிதி தொடர்ந்து சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1969–70 நிதியாண்டில் இந்நிதியின் உறுப்பினர்களிடமிருந்து பெற்ற தொகைக்கு ஈடாக அரசு இந்நிதியத்திற்கு அளித்து வந்த இணை மானியத் தொகையை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000-லிருந்து ரூ. 1,00,000 ஆகத் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது.

1969 ஜனவரி 1-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி வரையிலான காலப் பகுதிக்குப் பல நல வசதிகளுக்கும் கல்வி வசதி, குடும்ப, மருத்துவ உதவிகள், கருணை மானியம், சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் அமைந்துள்ள காவலர் குடியிருப்புகளில் இயங்கும் படிப்பகங்களுக்கு மானியம், மாநிலக் காவலர் குடும்ப நல அமைப்புக்கு மானியம் முதலியன போன்ற வசதிகளுக்கும் இந்த நிதியிலிருந்து ரூ. 1,25,554.64 செலவிடப்பட்டுள்ளது.

1968–69-ம் கல்வியாண்டில் அரசிதழ் பதிவு பெறாத, காவல் துறை அலுவலர்களின் குழந்தைகளுக்குத் தொழில் நுட்ப, கலைப் படிப்பிற்கு இந்த நிதியிலிருந்து ரூ. 33,600 வரையில் படிப்பு உதவிப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

**25. ஊர்க்காவல் படையினர்.**—விரும்பித் தொண்டாற்றும் அமைப்பாகிய ஊர்க்காவல்படை, 1963-ம் ஆண்டிலிருந்து செயற் படத் தொடங்கியது. முதலில் 10,000 பேர் (91 அணிகள்) கொண்ட ஊர்க்காவல் படையை அமைக்கலாம் என முடிவு செய் யப்பட்டது. பின்னர், 1965 அக்டோபரில் ஊர்க்காவல் படையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 22 கூடுதல் அணிகளுக்கு



அரசு ஒப்புதல் அளித்தது, அதன்மூலம் ஏற்பளிக்கப்பட்ட ஊர்க்காவல் படையின் மொத்த எண்ணிக்கை 113 அணிகளா யிற்று. (12,430 பேர்) ஏற்பளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அவ்வாறிருக்க, 1969 டிசம்பர் திங்கள் 31-ம் நாளின் நிலவரப்படி இப்படையின் எண்ணிக்கை 10,796 ஆகும். (சென்னை மாநகரில் 3,752 பேர் ; வெளியூர்களில் 7,044 பேர்).

தமிழ்நாடு முழுவதிலும் இரவு ரோந்து, போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆகிய வழக்கமான பணிகளில் காவல் துறையினருக்கு ஊர்க்காவல் படையினர் தொடர்ந்து உதவி செய்கின்றனர். 1969 ஏப்ரலில் நடந்த நகராட்சித் தேர்தல்களின் போது அவர்கள் சிறப் பாகப் பணியாற்றினர்.

**26. கள்ளக் கடத்தல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை.**—கண்காணிப்புப் பிரிவு, 1964 அக் டோபரில் நிறுவப்பட்டது. பல்வேறு உணவுத் தானியங்கள் குறித்த கட்டுப்பாட்டு ஆணைகளையும், இன்றியமையாத உணவுப் பொருள்களான நெல், அரிசி, சர்க்கரை, கோதுமை முதலிய வற்றின் விலைகள் ஏறுமல் பார்த்துக் கொள்ள அரசு மேற்கொள்ளும் ஏனைய ஒழுங்குமுறை ஏற்பாடுகளையும் செயல்படுத்துவது உணவு வழங்கல் துறைக் கண்காணிப்புப் பிரிவின் முக்கியப் பணியாகும். மேலும், இன்றியமையாத பண்டங்களை நியாய விலைக்கு வழங்கு வதை உறுதிப்படுத்துவதில் உணவு வழங்கல் துறை மேற்பார்வை யாளர் அலுவலகத்திற்கு இப்பிரிவு துணை செய்யும்.

1969 ஜூலை வரையில் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துறைத் துணைத் தலைமை அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ்க் கண்காணிப்புப் பிரிவு செயலாற்றி வந்தது. சீரமைப்பு நடவடிக்கையினால் இந்தக் கண்காணிப்புப் பிரிவு தனியான துணைத் தலைமை அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கண்காணிப்புப் பிரிவு செயலாற்றி வந்தது. சீரமைப்பு நடவடிக்கை யினால் இந்தக் கண்காணிப்புப் பிரிவு, தனியான துணைத் தலைமை அதிகாரியின் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயல்பட்டு வருகிறது.

1969-ல் கண்காணிப்புப் பிரிவு 4,902 வழக்குகளில் துப்புத் துலக் கியது.

**27. தீயணைப்புப் படை.**—இதுகாறும் மாநிலக் காவல் துறைத் தலைவரின் பொறுப்பிலும் மேற்பார்வையிலும் முற்றிலும் இருந்து வந்த தீயணைப்புப் படைப் பிரிவு காவல் துறையிடமிருந்து பிரிக்கப்பட்டு, 1967 அக்டோபர் திங்கள் 4-ம் நாள் முதல் தனிப் பட்ட தீயணைப்புப் படை இயக்குநரின் மேற்பார்வையில் தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. 1969 டிசம்பர் திங்கள் 31-ம் நாள் உள்ளவாறு தீயணைப்புப் படைத்துறையில் பணியாற்று வோரின் எண்ணிக்கை III-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

[1970 ஏப்ரல் 3

1969-ம் ஆண்டின் தொடக்கத்தில் இம்மாநிலத்தில் 56 தீயணைப்பு நிலையங்கள் இருந்தன. சென்னை மாநகரில் 12 நிலையங்களும், வெளியூர்களில் 44 நிலையங்களும் இருந்தன. 1969-ல் இரண்டு புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. ஏற்கெனவே சென்னை மாநகரில் ஒப்பளிக்கப்பட்ட மூன்று தீயணைப்பு நிலையங்கள் இடம் கிடைத்ததும் திறக்கப்படும். நகரங்களில் தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் ஏற்படும் தீ விபத்துக்களையும் பிறவற்றையும் அடிப்படையாகக்கொண்டு எதிர்காலத்தில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்படவிருக்கும் நகரங்களின் 'முறை வைப்புப் பட்டியல்' ஒன்றை அரசு ஏற்கெனவே தயாரித்துள்ளது. இந்தப் பட்டியலில் 28 நகரங்கள் உள்ளன. இதில் மேலும் சில நகரங்களைச் சேர்க்க வேண்டுமென்றும் நகரங்களில் இப்போது ஏற்படும் தீ விபத்துக்களின் அடிப்படையில் முறை வைப்பினைத் திருத்த வேண்டுமென்றும் தீயணைப்புத் துறை இயக்குநர் கருதினர். இச் செயற்குறிப்பை அரசு ஆலோசித்து வருகிறது.

1969-ல் 4,690 தடவைகளில் தீயணைப்புப் படை உதவிக்கு அழைக்கப்பட்டது. தீ விபத்து ஏற்பட்ட 4,542 நிகழ்ச்சிகளில் 49 தீ விபத்துக்கள் மிகக் கடுமையானவை. இவற்றில் ஒவ்வொரு விபத்திலும் இறப்பு ஏற்பட்டது அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்திற்கு விரயம் ஏற்பட்டது. தீ விபத்து அழிவிலிருந்து ஏறக்குறைய ரூ. 330.94 லட்சம் பெறுமான சொத்துக்கள் மீட்கப்பட்டன. 1969-ம் ஆண்டில் 19,788 தடவைகளில் பிணியாளர்க்கான இயங்கும் வண்டியின் உதவி கோரப்பட்டு உதவியளிக்கப்பட்டன. தீ விபத்திலிருந்து பாதுகாப்பளிக்கவும், நீர் இறைத்துத் தீயணைக்கவும் சிறப்புச் சூழ்நிலைகளில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன; இத்தகைய உதவி 182 தேர்வுகளில் செய்யப்பட்டுள்ளன.

குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் மக்களுக்கு நீர் வழங்குவதற்காகவும் தீயணைப்புப் படை வண்டிகள் அனுப்பப்பட்டன. 1969-ல் 551 அழைப்புகளுக்கு இணங்கிச் சென்று தீயணைப்புப் படையினர் மீட்புப் பணிபுரிந்துள்ளனர். கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தீ விபத்தைத் தடுப்பதில் உள்ள பொறுப்பினை உணர்த்தும்பொருட்டும் தீ விபத்து ஏற்பட்ட தொடக்க நிலையில் அந்த இடத்திற்குத் தீயணைப்புப் படை உதவிக்கு வரும்வரையில் தீயை அணைக்கும் வகையை அவர்களுக்கு விளக்கவும், கிராமங்களில் தீ விபத்துக்களால் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கவும் கிராமத் தீ விபத்துக் கண்காணிப்புத் தீயணைப்புப் படை ஒன்று அமைக்கப்பட்டது. 88 தீ விபத்துக்களின்போது தீயை அணைப்பதில் தீயணைப்புப் படையினருக்கு இப்படை துணை புரிந்துள்ளது.

இந்த ஆண்டில் சென்னை மாநகரில் குடிசைவாழ் பகுதிகளில் தீ விபத்து பொதுவாக ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்க கூறாகும்.



1970 ஏப்ரல் 5]

28. முதலமைச்சர் காவல் துறைப் பதக்கம்.—1969 ஆகஸ்டுத் திங்களில் தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு முதலமைச்சர் காவல் துறைப் பதக்கம்" என்னும் பெயரில் புதிய பரிசு ஒன்றை ஏற்படுத்தியது. காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் தகுதி வரை மாநிலக் காவற்படையில் பணியாற்றுவோரும், கோட்டைத் தீயணைப்பு அலுவலர்கள் (நிலை I & II ). பதவித் தகுதி வரை தமிழ்நாடு தீயணைப்புப் படையில் பணியாற்றுவோரும், 10 ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்குப் பணியாற்றியிருந்து கடமையாற்றும்போது வீரம்மிக்க பாராட்டத்தக்க செயல்புரிந்திருந்தால் இப்பரிசு பெறத் தகுதியுள்ளவராவர். நீண்ட காலம் பணியாற்றியவருக்கு முதன்மையளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 15-ம் நாளில் இந்தப் பரிசை அரசு அறிவிக்கிறது. 25 காவல்துறைப் பதக்கங்கள் கீழ்க்கண்ட தொகையுடன் அளிக்கப்படும் :—

## வீரச் செயலுக்கு.

பதவித்தகுதி எவ்வாறிருப்பினும்—ஒவ்வொருவருக்கும் ரூபாய் 3,000.

## பாராட்டத்தக்க பணிக்கு.

(1) காவலர், தலைமைக் காவலர், தீயணைப்புப் பணியாள், முன்னணித் தீயணைப்புப் பணியாள், வலவர், இயந்திரக் கம்மியர், இதற்குச் சமமான பதவித் தகுதிகள்—ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000.

(2) துணை இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், நிலைய அலுவலர், கோட்டத் தீயணைப்பு உதவி அலுவலர், இதற்குச் சமமான பதவித் தகுதிகள்—ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000.

(3) காவல் துறை டெபுடி சூப்பிரண்ட் (I, II, III-வது வகைகள்) கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் (I, II-ம் நிலைகள்)—ஒவ்வொருவருக்கும் ரூ. 3,000.

இத் திட்டத்தின் கீழ், 22 காவல்துறை அலுவலர்களும், காவலர்களும் 1969-ல் முதலமைச்சர் காவல் துறைப் பதக்கம் பெற்றனர்.

29. காவல் துறை ஆணைக்குழு.—காவல் துறையினரின் ஊழிய நிலைமைகள், கடமைகள், பொறுப்புகள் குறித்தும் அவற்றை நவீன முறையில் சீரமைப்பது குறித்தும் ஆராய அரசு, காவல் துறை ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. முடிந்தவிரைவில் அறிக்கையை அளிக்குமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

30. காவல் துறையினரின் கட்டுப்பாட்டுணர்வு.—காவற்படையினரின் ஒழுங்குணர்வும், கட்டுப்பாடும் எப்போதும்போல் உயர்ந்த நிலையிலேயே இருந்துவருகின்றன. தொழிலாளர்

கலவரம், உழவுத் தொழிலாளர் கலவரங்கள், இடைத் தேர்தல்கள், நகராட்சித் தேர்தல்கள், முதன்மை பெற்றோர் வருகை, பல சிக்கல்களினால் மாணவர்கள் கிளர்ச்சி இவற்றால் ஆண்டு முழுவதும் காவல் துறையினர் தொடர்ந்து கடுமையான பணியாற்ற வேண்டியிருந்தபோதிலும், சட்டம் ஒழுங்கைநிலை நாட்டுவதிலும், குற்றங்கள் நிகழாது தடுப்பதிலும், அவற்றைத் துப்புத் துலக்குவதிலும், அவர்கள் தங்கள் கடமைகளைச் சிறப்பாக ஆற்றினர். எல்லாப் பதவித் தரத்திலுள்ளவர்களும் முனைப்பாகவும் ஆர்வத்துடனும் தொடர்ந்து பணியாற்றினர்.

காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நிலவும் நல்லுறவை மேம்படுத்தவும் காவல்துறையினர் தங்கள் கடமைகளை மேலும் செவ்விய முறையில் நிறைவேற்றவும் உதவியாக இம் மன்றப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆன்ற கருத்துரைகளை வழங்கினால் அவற்றை அரசு வரவேற்கும்.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.



இணைப்பு II-அ.

**31—12—1969-ல் உள்ளவாறு தமிழ்நாடு காவற்படையினரின் எண்ணிக்கை (மலபார் சிறப்புக் காவற்படையினர், படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவற்படையினர் நீங்கலாக).**

| | ஒப்பளிக்கப் பட்ட மொத்த எண்ணிக்கை. | நிலைப்பணி. | தற்காலிகப் பணி. |
|---|---|---|---|
| மாநிலக் காவல் துறைத் தலைவர் | 1 | 1 | .. |
| மாநிலக் காவல் துறைத் துணைத் தலைவர்கள் | 7 | 6 | 1 |
| காவல் துறை சூப்பிரண்டுகள் | 50 | 48 | 2 |
| காவல் துறை உதவி சூப்பிரண்டுகள் | 24 | 24 | .. |
| காவல் துறைக் கூட்டு சூப்பிரண்டுகள் | 5 | 5 | .. |
| காவல் துறைத் துணை சூப்பிரண்டுகள் | 117 | 102 | 15 |
| காவல் துறை இன்ஸ்பெக்டர்கள் | 387 | 289 | 98 |
| காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் | 1,664 | 1,488 | 176 |
| அசிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்கள் | 156 | 72 | 82 |
| தலைமைக் காவலர்கள் | 3,420 | 2,973 | 447 |
| காவலர்கள் | 20,580 | 19,039 | 1,541 |

படைக்கலந் தாங்கிய ரிசர்வ் காவற்படைகள்.

| | | | |
|---|---|---|---|
| காவல் துறை வானொலி அலுவலர் .. .. .. .. | 1 | 1 | .. |
| காவல் துறை வானொலி அலுவலரின் நேர் உதவியாளர் .. .. | 1 | 1 | |
| காவல் துறைத் துணை சூப்பிரண்டுகள் (வகை II) .. .. | 15 | 11 | 4 |
| ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. .. | 43 | 32 | 11 |
| ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. .. | 233 | 176 | 57 |
| ரிசர்வ் அசிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. | 142 | 101 | 41 |
| தலைமைக் காவலர்கள் .. .. .. .. .. | 984 | 608 | 376 |
| காவலர்கள் .. .. .. .. .. .. | 9,116 | 6,684 | 2,432 |



இணைப்பு II-ஆ.

மலபார் சிறப்புக் காவற்படை, படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவற்படைப் பிரிவுகளின் அனுமதித்த மொத்த எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை (31—12—69-ல் உள்ளபடி).

| | மலபார் சிறப்புக் காவற் படை. I | மலபார் சிறப்புக் காவற் படை. II | படைக் கலந் தாங்கிய சிறப்புக் காவற் படை. I | படைக் கலந் தாங்கிய சிறப்புக் காவற் படை. I (படை அணி வகுப்பு இடம்.) | படைக் கலந் தாங்கிய சிறப்புக் காவற் படை. II | படைக் கலந் தாங்கிய சிறப்புக் காவற் படை. IV |
|---|---|---|---|---|---|---|
| தளவாய் .. .. | [illegible] | [illegible] | 1 | .. | 1 | 1 |
| துணைத்தளவாய் .. .. | [illegible] | [illegible] | .. | 1 | 1 | .. |
| உதவித்தளவாய் .. .. | 8 | 4 | 4 | .. | 8 | 4 |
| சுபேதார்-மேஜர் .. .. | 1 | .. | .. | 1 | 1 | .. |
| சுபேதார்கள் .. .. | 9 | 9 | 9 | 1 | 8 | 9 |
| ஜமேதார்கள் .. .. | 20 | 20 | 19 | 9 | 20 | 20 |
| கம்பெனி அவில்தார் மேஜர் .. | 6 | 6 | 6 | 1 | 6 | 6 |
| அவில்தார் .. .. | 79 | 79 | 79 | 17 | 79 | 79 |
| நாயக் .. .. | 64 | 80 | 70 | 18 | 63 | 64 |
| நான்ஸ் நாயக் .. .. | [illegible] | [illegible] | 611 | 120 | 581 | 674 |
| காவலர்கள் .. .. | 64 | 64 | .. | .. | .. | .. |
| பின்பற்றிக் கண்டுபிடிப்பவர்கள் .. | 24 | .. | 24 | 4 | 25 | 21 |

## இணைப்பு II (இ).

### தீயணைப்புப் படைப் பணியாளர் எண்ணிக்கை 31—12—1969 அன்றுள்ளபடி.

| | |
|---|---|
| தீயணைப்புப் படை இயக்குநர் | 1 |
| தீயணைப்புப் படை துணை இயக்குநர் | 1 |
| கோட்டத் தீயணைப்பு அதிகாரிகள்— | |
| நிலை—1 | 2 |
| நிலை—2 | 5 |
| கண்காணிப்பாளர்கள் | 3 |
| உதவியாளர்கள் | 24 |
| எழுத்தர்கள் | 82 |
| சுருக்கெழுத்தாளர்கள் | 2 |
| தட்டச்சர் | 11 |
| சிற்றெழுத்தர் | 1 |
| ஏவலர்கள் | 2 |
| கோட்ட தீயணைப்பு உதவி அதிகாரி | 9 |
| கோட்ட தீயணைப்பு உதவி அதிகாரி (போக்குவரத்து) | 1 |
| தீயணைப்பு நிலைய அலுவலர்கள் | 66 |
| தீயணைப்பு நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) | 7 |
| முன்னணித் தீ அணைப்பவர் | 271 |
| யந்திரக் கம்மியர்—வலவர்கள் | 72 |
| தீயணைப்பவர்—வலவர்கள் | 438 |
| தீயணைப்பவர்—வலவர்கள் | 1,702 |
| தீயணைப்பவர்—யந்திரக் கம்மியர் | 4 |
| தீயணைப்புத் தச்சர் | 1 |
| பற்றவைப்பவர் | 1 |
| குப்பை கூட்டும் முழுநேரப் பணியாளர் | 3 |
| நீர்சேகரத் தொட்டி பணியாளர் | 6 |
| நீர் சேகரத் தொட்டி மேஸ்திரி | 1 |
| படிகாரர்கள் | 2 |

# தமிழ்நாடு சட்டப்பேரவை

## சனிக்கிழமை, 1970 ஏப்ரல் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.02 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர். புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) நடை முறைக் கேள்வி.

### தாமதமாக பேரவை கூடியது குறித்து.

திரு. ஆர். கருப்பையா: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலேயே என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ?

திரு. ஆர். கருப்பையா : சட்ட மன்ற நிகழ்ச்சி சரியாக 9 மணிக்குத் துவங்க வேண்டுமா அல்லது பொதுக்கூட்டம் மாதிரி 9 மணி அளவிலா என்று அறிய விரும்புகிறேன்.

### (2) வினுக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 675 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Hostel for students of Junior technical school at Vellore*

* 676 Q.—Thiru K. SAHADEVA KANDER Will the Hon. the Minister for Education and Health be pleased to state.—

(a) whether any dormitory type hostel and kitchen and dining hall are to be built for the Junior Technical School attached to North Arcot Polytechnic, Vellore; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) வெல்லூரிலுள்ள அரசாங்க தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிக்கு, மாணவர் விடுதி கட்டுவதற்கென ரூபாய் 2,50,000 (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம்) செலவிட அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

### நெடுங்குளம் அரசு உயர் தொடக்கப்பள்ளி

* 677 வினு—திரு. பி. ஜெயராஜ்: மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்த் தஞ்சையைச் சேர்ந்த நன்னிலம் தாலுக்கா 179-ம் நெம்பர் நெடுங்குளம் அரசினர் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்றால், எப்போது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1970-71-ல் நெடுங்குளத்தில் ஒரு உயர்நிலைப்பள்ளி திறப்பதற்கான கருத்துருவை பள்ளி கல்வி இயக்குநர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்.

**திரு. பி. ஜெயராஜ் :** தலைவர் அவர்களே, நெடுங்குளம் அரசினர் உயர்தொடககப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கு கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக முயற்சி செய்து, ஜில்லா அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலும் சிபார்சு செய்யப்பட்டு சென்ற ஆண்டு இரண்டு பாடசாலைகள் மேலத் தஞ்சையில், உயர் தொடக்கப்பள்ளியாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கீழத் தஞ்சையில், நெடுங்குளம் அரசினர் உயர்தொடக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்பட்டும், அது மாற்றப்படவில்லை. மேலத் தஞ்சைப் பகுதியில் மட்டும் அரசாங்க அங்கிகாரம் கொடுக்கப்பட்டுத் திறக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினாலோ கீழத் தஞ்சையில் திறக்காமல் விட்டிருக்கிறார்கள். இவ்வாண்டு பாடசாலைகளை ஆரம்பிக்கின்றபோதாவது நெடுங்குன்றத்திலுள்ள அரசினர் உயர்தொடக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பள்ளிகள் திறப்பதில் மேலத் தஞ்சை, கீழத் தஞ்சை என்று வேறுபாடு காட்டி, எந்தத் தவறான முறைகளிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால், நெடுங்குன்றத்திலுள்ள அரசினர் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுவதற்கான வாய்ப்புக்கூறுகளெல்லாம், நிபந்தனைகளைப் பொருந்தி வருமானால், அதை உயர்நிலைப்பள்ளி ஆக்குவதில் எத்தகைய தடையும் இருக்காது. மாவட்டக் கல்வி அதிகாரியிடமிருந்து அது பற்றிய குறிப்புகள், மாவட்டக் கல்வி இயக்குனரால் கேட்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குறிப்புகளெல்லாம் வரவேண்டும். உயர் துவக்கப்பள்ளிக்கு வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை, பக்கத்தில் வேறு எந்தப் பள்ளிக்கூடமும் பாதிக்கப்படாத நிலை, உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர்கள் வரத்தக்க அளவுக்கு உயர் துவக்கப்பள்ளிகள் பல இருக்கின்ற நிலை, ஆகிய இப்படிப்பட்ட கூறுபாடுகளையெல்லாம் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள். பொதுவாக மே, ஜூன் திங்கட்களில் உயர்நிலைப் பள்ளி வைக்கும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது இத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றும் சூழ்நிலை ஏற்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.

**திரு. கை. சுவாமிநாதன் :** உயர்நிலைப்பள்ளிகள் துவக்குவதற்குச் சென்ற ஆண்டு, ஐயாயிரம் ரூபாய் கட்டடத்திற்கும் சேர்ந்து பத்தாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற விதி இருந்ததே. அது இந்த ஆண்டும் அனுசரிக்கப்படுமா? அல்லது அதைத் தளர்த்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஐந்து ஏக்கர் நிலம், பத்தாயிரம் ரூபாய் தரவேண்டும் என்ற ஒரு நிபந்தனைதான் விதிக்கப்பட்டு வருகிறது. ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் வேறு எந்த உயர்நிலைப் பள்ளியும் இல்லாமலிருக்க வேண்டும், வேறு உயர்நிலைப்பள்ளி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். உயர் துவக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக வருவதற்கு ஏற்ற அளவு மாணவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டால் உயர்நிலைப்பள்ளிக்கு அனுமதி வழங்கப்படும்.

### காளி கிராமத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

*678 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, காளி கிராமத்தில், காளி ஆரம்ப சுகாதார நிலையத்துக்காக புதிய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இதுவரை கட்டடம் கட்டுவதற்கு ஆரம்ப ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள் யாவை?

(இ) எப்பொழுது முதல் கட்டட வேலை துவங்கப்பெறும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) நிதி பற்றாக்குறையால் கட்டிடம் கட்டுவது எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு ஒரு குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. காளி சுகாதார நிலையம் பற்றியும் பரிசீலிக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரம் தாலுக்கா, காளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காகப் பொதுமக்கள் எத்தனை ரூபாய் பங்குத்தொகை கட்டியிருக்கிறார்கள்? கட்டியது போக பாக்கித் தொகை ஏதேனும் கட்டப்படவேண்டியிருக்கிறதா? அதனைக் கட்டிவிட்டால் விரைவில் இந்த ஆண்டுக்குள்ளேயே அது செயல்படத் தொடங்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் வைப்பதற்கு ஐந்து ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாயும் கட்டவேண்டும் என்ற விதியிருக்கிறது. ஆனால், அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டதால் இது நிறைவேற்றப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். பல ஆண்டு காலத்திற்கு முன்பே அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. இப்பொழுது முப்பது ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் பத்து சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்க இருக்கும் காரணத்தால் அவற்றுடன் இதுவும் சேர்த்துக் கவனிக்கப்படும் என்பதைக் குறித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1970 ஏப்ரல் 4]

**திரு. எம். சுரேந்திரன் :** ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஐந்து ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாயும் தந்தால் கட்டப்படும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இதுபோன்ற நிபந்தனைகள் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டும் கூட, வருடக்கணக்கில் இன்னும் கட்டப்படாமலிருக்கும் நங்கவள்ளி சுகாதார நிலையத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, இடையில் நிதிப் பற்றுக்குறை காரணமாகவும், நெருக்கடி நிலையின் காரணமாகவும் கட்டடங்கள் கட்டுவது நிறுத்திவைக்கப்பட்டது. நெருக்கடி நிலை தீர்ந்தது. ஆனால், நிதிப் பற்றுக்குறை காரணமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. இந்த ஆண்டு முப்பது ஆரம்ப சுகாதார நிலையங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் பத்து எடுத்துக் கொள்ளுவதற்கு அண்மையில் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நங்கவள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் பற்றிய சூழ்நிலை தெரியவில்லை. எங்கெங்கே ஐந்து ஏக்கர் நிலமும், பத்தாயிரம் ரூபாயும் தரவேண்டும் என்கிற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவோ அவற்றிற்கு முதலிடம் தந்து, அவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி எடுத்துக்கொள்ளும் வகையில், எந்த மாவட்டங்களில் அஸ்திவாரம் போட்டும், கட்டடங்கள் கட்டாமல் இருக்கின்றனவோ அந்த மாவட்டங்களில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியிருக்கிறது. எடுத்துக்கொள்ளும் பட்டியலில் நங்கவள்ளி இணைந்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரம் தெரிவிக்கலாம்.

**திரு. என். கிட்டப்பா :** இந்த காளி கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் பங்குத் தொகை கட்டியிருப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்தளவிற்கு உண்மை என்பதை அறியலாமா? அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மூன்று ஆண்டுகளாகக் கேட்டும்கூட சரியான தகவல் கிடைக்காததால் அதைப் பற்றி தயவுசெய்து அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதன் அடிக்கல் 23—6—1958-ல் போடப்பட்டதாக மட்டும் குறிப்பு இருக்கிறது. பணம் கட்டியது பற்றிய குறிப்பு இல்லை. தனியாக அறிந்து சொல்லப்படும்.

### கடியாபட்டி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

* 679 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருமயம் தொகுதியிலுள்ள, கடியாபட்டியில் அமைந்திருக்கும் உடல் நலக் காப்புமனைக்கு Health centre ) உரிய மக்கள் பங்குத் தொகை செலுத்தப்பட்டும் கட்டடம் எழுப்பப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன?

வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(உ) மேலே குறிக்கப்பட்ட காப்புமனைக்கு சுற்றுந்து ( Van)

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) திருமயம் தொகுதியிலுள்ள கடியாபட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ( Praimry Health centre ) கட்டுவதற்கு மக்கள் பங்குத் தொகையாக ரூ. 5,000 பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் கட்டிடம் கட்டுவதற்கான நிலத்தை இதுவரை அரசிற்கு வழங்கப் படவில்லை. ஆகையால் டி நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான திட்டங்கள் சுகாதார குடும்பநல இயக்குநரால் தீட்டப்படவில்லை.

(உ) இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு சுற்றுந்து வழங்க ' UNICEF ' நிறுவனத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** தலைவர் அவர்களே, கடியாபட்டியில் அமைந்திருக்கிற உடல் நலக் காப்புமனைக்கு கட்டடம் கட்டுவதற்குரிய வாய்ப்பு நல்கியமைக்கு என் தொகுதி மக்கள் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்து அந்தக் காப்புமனைக்கு ஒரு சுற்றுந்து இன்றியமையாது தேவைப்படுவதால் அதை உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முன்பு குறிப்பிட்டபடி நிலம் இன்னும் அரசாங்கத்திற்கு வழங்கப் படவில்லை. அப்படி நிலத்தை ஒப்படைக்கும் முயற்சியை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களேயானால் கட்டடம் கட்டும் முயற்சியில், அதற்கான திட்டம் வரைவதில், அதற்கான முயற்சியில் ஈடுபடலாம். சுற்றுந்து ஒன்று கொடுக்க யூனிஸெஃப் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் அது வரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அது அளிக்கப்பட்டவுடன் உடனடியாக அது அந்த சுகாதார நிலையத்திற்கு அளிக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவது என்பதே மத்திய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு வேண்டிய மானியங்களை எல்லாம் மத்திய அரசே முன்பு கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போது அது தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறதா? அல்லது நிறுத்தப் பட்டு விட்டதா ? அப்படி நிறுத்தப்பட்டிருந்தால் அதை மீண்டும் பெற்று தமிழகம் எங்கும் பலவிடங்களிலும் இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுகிற முழுப் பொறுப்பும் மாநில அரசின் கீழ் தான் இருக்கிறது. ஆனால் குடும்ப நலத்திட்டத்திற்கான கட்டடங்கள் கட்டவும், டாக்டர்கள், செவிலியர்களுக்கான

1970 ஏப்ரல் 4]

குடியிருப்புகள் கட்டவும் மத்திய அரசு உதவி செய்கிறது. அந்த வகையில் ரூ. 90,000 கிட்டத்தட்ட இந்த அரசுக்கு மத்திய அரசு தருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அதையொட்டி குடும்ப நலத் திட்டத்திற்கான கட்டடம் கட்டப்படுகிறது. அந்த வகையில் 100 இடங்களுக்கு தந்திருக்கிறார்கள். அந்த 100 இடங்களில் குடும்ப நலத் திட்டத்திற்கான கட்டடங்கள் கட்டும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடையே ஐந்து மைல் தூரம் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். மூன்று மைல்களுக்குள் இருக்கிற ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து ஏக்கர் நிலமும், 12,000 ரூபாயும் கொடுத்தால் அந்த இடத்தில் இந்த நிலையம் ஆரம்பிக்கப்படுமா? ஐந்து மைல் தூரம் போவதற்குக் கஷ்டப்படுபவர்கள் இப்படி ஐந்து ஏக்கர் நிலமும், ரூ. 12,000-ம் கொடுத்தால் அங்கு இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமா, எடுக்காதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஐந்து மைல்களுக்கு அப்பால் இருக்கவேண்டும் என்பது பள்ளிக்கூடங்களைப் பொறுத்துத்தான் அந்த முறையை வைத்திருக்கிறார்கள். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் பொறுத்து, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமாவது கட்டாயம் அமைய வேண்டும் என்பதுதான். அப்படி அமைக்கப்படுவது கூடுமானவரையில் ஒன்றியங்களின் நடுப்பகுதியில் அமைய வேண்டும் என்பது. மற்றொன்று, பக்கத்தில் பெரிய நகரங்கள் இருந்து பெரிய மருத்துவமனைகள் இருந்து அதற்கிடையில் இரண்டு மூன்று மைல்களுக்குள் ஆரம்ப சுகாதார நிலையம் வைப்பதால் பலன் இருக்காது என்பதால் பெரிய நகரங்களுக்கு அருகில் இரண்டு மூன்று மைல்களுக்குள் ஆரம்ப சுகாதார நிலையம் வைத்தாலும் மக்கள் நகரத்தில் உள்ள மருத்துவ மனைக்குத்தான் செல்வார்கள். ஆகவே ஐந்து மைல்களுக்கு அப்பால் வைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்தின் நடுப்பகுதியில், இடவசதியுள்ள இடத்தில், போக்குவரத்து வசதியுள்ள இடத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் இசைவு பெற்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அப்படி பலயிடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களில் தகராறுகள் இருப்பதால் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மருத்துவ அதிகாரி, மற்றவர்களோடு கலந்து ஊராட்சி ஒன்றியத்தையும் கலந்து முடிவு எடுத்து, நியாயத்தின் அடிப்படையில் எடுத்து, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. பெ. சீனிவாசன்:** இப்போதுள்ள சூழ்நிலையில் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றிருப்பது போதாது. எனவே அதை அதிகமாகவோ அல்லது நடமாடும் மருத்துவ நிலையங்களையோ உருவாக்க அரசு ஏற்பாடு செய்யுமா?



1970 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 374 ஊராட்சி ஒன்றியங்களில் 341 ஊராட்சி ஒன்றியங்களில் இப்படிப்பட்ட சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 374 ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறைவேற்றியதற்குப் பிறகுதான்—தேவைப்படுகிற ஒன்றியங்களில் நாம் அவற்றை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இப்போது 33 ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லை என்ற நிலையில் அவற்றிற்குத்தான் முதல் இடம் தரவேண்டிய நிலையில் இருக்கிறோம். எல்லா ஒன்றியங்களிலும் இப்படி ஏற்படுத்திய பிறகுதான் மற்ற ஒன்றியங்களில் இரண்டு நிலையங்கள் வைக்கலாமா என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

### கங்கைகொண்ட சோழேசுவரம் கோயிலிலுள்ள வரலாற்றுச் சின்னங்கள்

*680 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்த கங்கைகொண்ட சோழேசுவரம் கோயிலிலுள்ள வரலாற்றுச் சின்னங்கள் தக்க வகையில் பாதுகாக்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஆம். கங்கைகொண்ட சோழேசுவரம் கோயில் மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது. இக்கோயிலுக்கு பழுது பார்க்கும் வேலையை அத்துறை மேற்கொண்டுள்ளது. பழுது பார்க்கும் வேலை இப்பொழுது நடந்து வருகிறது.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, இந்த ஆலயம் புராதனச் சின்னம் என்ற முறையில் மத்திய அரசிடம் இதன் நிர்வாகம் இருக்கிறது. அது தமிழக அரசிடம் மாற்றப்படவேண்டுமென்று விண்ணப்பங்கள் செய்து கொண்டதாக அறிந்தேன். அதற்கு என்ன விடை கிடைத்தது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** விண்ணப்பத்திற்கு 'இல்லை' என்ற விடைதான் கிடைத்துக் கொண்டே வருகிறது. தஞ்சை பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில் இவை மாநில அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்வரவேண்டுமென்று இந்த அரசு விண்ணப்பித்துக்கொண்டு வருகிறது. முன்பு தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மத்திய அரசின் கீழ் இருந்தது அண்மைக் காலத்தில், சில ஆண்டுகளுக்கு முன்பாக மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறை என்ற ஒரு துறையை ஏற்படுத்தியிருக்கிறோம். எந்த நோக்கத்தோடு மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்காணிக்கிறார்களோ அதே அளவில் அதே நோக்கத்தின் அடிப்படையில் மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும் கண்காணிக்கவேண்டுமென்று

இருக்கிறது. அகிலஇந்திய அடிப்படையில் அது பிரசித்தம் பெற்றிருப்பதால் மத்திய அரசு அதை தன்னிடமே வைத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். தஞ்சை பெரிய கோயிலை ஓரளவு பழுது பார்க்க பொருள் ஒதுக்கி அந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கங்கைகொண்ட சோழபுரம் கோயிலுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் ஏற்பட்டிருக்கிற பழுதுகள் அத்தனையையும் நீக்குகின்ற அளவிற்கு அமையவில்லை. மத்திய அரசு அதற்காக அதிகத் தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். தஞ்சை பெரிய கோயிலை ஓரளவிற்கு காப்பாற்றக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. கங்கைகொண்ட சோழபுரம் கோயில் மதில்கள் சீர்கேடு அடைந்து கொள்ளிடம் பாலம் கட்டும்போது ஏற்கனவே இடிபட்டுக் கிடந்த மதில் சுவர்களின் கற்களை எடுத்துச் சென்று விட்டார்கள். அதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று மத்திய அரசினரை தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

**திரு. ஆர். கருப்பையா :** கங்கைகொண்ட சோழபுரம் கோயில் சிறந்ததொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒன்றாகும். அக்கோயில் சீர்கேடு அடைந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கோயில் சிறிது சிறிதாக இடிந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, அதன் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து அக்கோயிலை பழுது பார்க்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கங்கைகொண்ட சோழபுரம் கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்பதை உணர்ந்துதான் அதை தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். தஞ்சை பெரியகோயில் ராஜராஜன் கட்டியது என்றால் இது அவர் மகன் இராஜேந்திரச் சோழனால் கட்டப்பட்டதாகும். அதைப் பழுதுபார்க்க ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை. பழுதுகள் ஏராளமாக இருக்கின்றன, நாளுக்குநாள் கலனாகிக் கொண்டே வருகிறது என்பதை உணர்ந்துதான் அதிகப் பணம் ஒதுக்கும்படி கேட்டு வருகிறோம். அதை மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதற்கு கேட்டிருக்கிறோம். அப்படி மாநில அரசுத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டால் நாமும் அதிகத் தொகை ஒதுக்க முடியும். நாமே அதற்கு ஒரு திருப்பணிக் குழு அமைத்து அவர்கள் மூலம் செலவழிக்கலாம் என்றால் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். பணத்தை திரட்டி எங்களிடம் தாருங்கள், நாங்கள் பார்த்துச் செய்வோம் என்று சொல்கிறார்கள். அது நம் மாநில அரசின் கீழ் வந்தால் அதைப் பாதுகாக்கின்ற முயற்சியை நாம் மேற்கொள்ளலாம். அதுபற்றி தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறோம், தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. அண்மையில் கூட எழுதியிருக்கிறோம். வர இருக்கிற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் இதைப் பற்றி வற்புறுத்தலாம் என்றிருக்கிறேன்.



**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இப்பொழுது தஞ்சைப் பெரிய கோயிலில் கோபுரத்தின் வாயிலிலேயே நல்ல சிற்பங்கள், ஓவியங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஓவியங்கள் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருக்கிறதா என்பதை ஆராயவாவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அல்லது அவ்வாறு செய்ய வற்புறுத்துமா என்று வரலாற்றுச் சிறப்புடைய அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செயழின் :** தலைவரவர்களே, தஞ்சைக் கோயிலிலுள்ள சிற்பச் சிலை அழகு இங்கும் இருக்கிறது. ஓவியத்தைப் பொறுத்தவரையில் தஞ்சைக் கோயிலில் உட்புறத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட பழங்கால ஓவியங்கள் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இருக்குமா என்று தோண்டித் தோண்டிப் பார்த்தால் இருப்பதும் போய்விடும். ஆகவே, தென்பட்டால் காணலாமே தவிர, தோண்டிப் பார்க்கவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** யுனெஸ்கோ ஸ்தாபனத்திலிருந்து இந்த ஆலயத்தைச் சீர் செய்வதற்கு ஏதாவது உதவியை அரசாங்கம் நாடியிருக்கிறதா ? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் உதவியைப் பெற வேண்டுமென்றால் அந்தக் கோயிலுக்கு நாம் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கும். ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் கோயில்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சைக் கோயிலை மூன்றாவதாகவும், நான்காவதாக கங்கைகொண்ட சோழபுரத்தையும் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள யுனெஸ்கோ பிராஞ்ச் இருக்கிறது. அப்படிக்கொடுக்கும் அவர்களது உதவி கூட பெரும் உதவி அல்ல. ஒரு லட்சத்திற்கும், கெமிக்கல்ஸ், வர்ணம் போன்றவைகளை உதவி செய்யும் அளவிற்கு இருக்கிறார்கள். இந்த நாட்டில் கிடைக்காத பொருள்கள் என்ற அளவில் அதையும் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Gangaikondacholapuram was a great historical and religious centre of the Cholas. Its very name brings to our memory remembrances of gigantic wars and victories and religious activities. We have got a number of book son Mahabalipuram's historical importance, but we do not have books on Gangaikondacholapuram. Considering all these, will the Hon. Minister for Education who is interested in epigraphy and history try to bring out a booklet about the historical importance of Gangaikondacholapuram?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கங்கைகொண்ட சோழபுரம் பற்றிய நூல் ஒன்று வெளிவந்ததாக நினைவு இருக்கிறது. அப்படி வராவிட்டால் அதைக்கொண்டுவர

தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இப்பொழுது மேற்கொண்டிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக்கென்று ஒரு அச்சகம் அமைத்து, வரலாற்றுச் சிறப்பு கொண்ட கோயில்களைப்பற்றிய விரிவான விளக்கங்களை வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள். இப்பொழுது கூட தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள கல்வெட்டுக்களைப்பற்றி நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. கங்கைகொண்ட சோழபுரத்திற்கும் இருந்தால் அதை வெளியிட தொல்பொருள் ஆராய்ச்சித் துறை முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. கே. விநாயகம்: சார், கங்கைகொண்ட சோழபுரம் கோயிலில் சரித்திரப் பிரசித்திப்பெற்ற என்ன பொருள்கள்தான் இப்பொழுது இருக்கிறது? அந்தக்கோயிலின் மதில்சுவரின் கற்களைக் கூட கொண்டு போனார்களே, அந்தக் காலத்திலே ஒரு மன்னன் கங்கைக்கே போய் தண்ணீரைக்கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறதே, அந்தத் தண்ணீராவது அங்கு இருக்கிறதா? அல்லது அதுவும் போய்விட்டதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கங்கைகொண்ட சோழபுரத்தின் கோயிலினுடைய அமைப்பு தனி அமைப்பு, தஞ்சைக்கோயிலை ஒத்த அமைப்பாக இருக்கிறது. வேறு எந்தக் கோயிலிலும் இருக்கும் அமைப்பைப்போன்றது அல்ல இந்தக் கோயிலின் விமான அமைப்பு. விமான அமைப்பு தனிச்சிறப்புடையது. அங்கிருக்கும் சிலைகளெல்லாம் மிகச் சிறந்த அளவில், பெருத்த அளவில் அமைந்த கற்சிலைகளாகவும், தங்கச் சிலைகளும் மற்றைய செப்புச் சிலைகளும் மற்றவைகளும் பழமை வாய்ந்தவை. பழமை வாய்ந்தவை மட்டும் அல்ல, அந்தச் சிலைகள் அழகும்கூட கங்கைசோழபுரத்திலுள்ள சிலைகளின் அழகு மிகவும் பாராட்டத்தக்க அழகுடையதாகும் என்று சிற்பிகள் சொல்லும் அளவிற்குப் பாங்குடையதாகும். கங்கைவரையில் சென்று இராஜேந்திர சோழன் வெற்றிபெற்று, அந்த வெற்றியின் சின்னமாக கங்கை நீரைக் கொண்டுவந்து, சோழகங்கம் என்ற பெரிய ஏரியில் விட்டான். சோழகங்கம் ஏரி இருக்கிறது. அவன் விட்ட அந்தத் தண்ணீர் எந்தப் பகுதியிலேயிருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் முயன்றாலும் கண்டுபிடிக்க முடியாது. இருக்கும் என்று எதிர்பார்ப்பதுதான் தவறு.

### இயங்கும் அறிவியல் ஆய்வுக் கூடம்

*681 வினா—திரு. என். எஸ். சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமெரிக்க நாட்டு 'கேர்' நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூடம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) 'கேர்' நிறுவனத்தின் நிருவாகச் செலவுக்காக இந்த அரசினால் கொடுக்கப்பட்ட தொகையில் செலவிடப்படாது எஞ்சிய தொகையைக் கொண்டு 'கேர்' நிறுவனம் இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இரண்டினை வழங்கியுள்ளது. இத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகச் சோதிக்கப்படுகிறது. தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்திலுள்ள மாயூரம், சீர்காழி, கும்பகோணம், பாபநாசம், நன்னிலம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு ஆகிய வட்டங்களிலுள்ள 40 உயர்நிலைப்பள்ளிகளுக்குப் பயன்படுகிறது. ஒவ்வொரு வண்டியும் 20 பள்ளிகளுக்குப் பயன்படும். இயங்கும் இவ்வண்டிகளில் அறிவியல் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதால், இது பொருத்தமான ஆய்வுக்கூட வசதியற்ற உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்களுக்கு அறிவியலை நன்கு கற்பிக்க உதவும். ஒவ்வொரு வண்டியும் தகுதி பெற்ற அறிவியல் ஆசிரியர் ஒருவரின் பொறுப்பில் இருக்கும்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவரவர்களே, இந்தக் கேர் நிறுவனம் நமக்கு எந்தெந்த அளவில் உதவி செய்கிறது. உணவுப் பொருள்கள் எந்தெந்த விதத்தில் பங்கீடு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே கேர் நிறுவனம் பொதுவாக மதிய உணவிற்காக உணவுப்பொருள்கள் வழங்குகிறார்கள். கல்வி மானியத்தின்போது குறிப்பிட்டபடி, 18 இலட்சம் மாணவர்கள் மதிய உணவு பெற்று வருகிறார்கள். இதுவரையில் 17½ கோடி ரூபாய் அளவில் கேர் நிறுவனம் பொருள்கள் வழங்கினார்கள். ஆண்டுதோறும் 4 கோடி ரூபாய் அளவில் வழங்கவும் எண்ணம் இருக்கிறது. மத்திய சமையல்கூடம் கட்டுவதற்குப் பேருதவி புரிகிறார்கள். சேக்காட்டில் பரீட்சார்த்தமாக துவக்கப்பட்டிருக்கிறது 1970-71-இல் 30 இடங்களில் துவங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் அமையத்தக்க அளவிற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு மத்திய சமையற்கூடம் கட்டுவதற்கு 2 லட்ச ரூபாய் செலவாகிறது. அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள் அதைப் பராமரிப்பதற்கான செலவையும், பாதுகாப்பதற்கான செலவையும், வேலையாட்களை அமர்த்தி உணவு சமைக்கும் செலவையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆய்வுக்கூட வசதிகளுக்காக இரண்டு வேன்களைத் தந்திருக்கிறார்கள். 20, 20 உயர்நிலைப்பள்ளிகள் என்று 40 உயர்நிலைப்பள்ளிகளுக்குப் பயன்பட்டு வருகிறது. ஆய்வுக்கூடங்கள் இல்லாத உயர்நிலைப்பள்ளிகளுக்கு இயங்கும் ஆய்வுக்கூடங்கள் மிகவும் பயன்படுகின்றன. மேலும் சில வேன்கள் தர வேண்டுமென்று கேர் நிறுவனத்திடம் கேட்டிருக்கிறேன். தந்தால் இன்னும் பிற்பட்ட, வசதியில்லாத இடங்களில் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தக் கேர் நிறுவனம் பல்வேறு விதமான முறையிலே தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும் பல்வேறுவிதமான உதவியைச் செய்வதாகக் கூறுகிறார்களே, இம்மாதிரி உதவிகள் செய்வதற்கு

பணத்தின் நோக்கம் என்ன? அது எத்தகையது? இம்மாதிரி உதவி செய்வதன் மூலம் இங்கிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்று அமைச்சரவர்கள் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அவர்கள் இங்கிருந்து எதையுமே எதிர்பார்க்கவில்லை. அறச்சிந்தனையின் அடிப்படையில் பயன்பட்டு வருகிறது. அங்கிருக்கும் அறச் சிந்தனையாளர்கள் நிதி கொடுப்பதை இந்த ஸ்தாபனம் வாங்கிச் செய்கிறதே தவிர, அரசாங்கத்தின் சார்பாகக்கூட அல்ல. அமெரிக்காவிலுள்ள பல்வேறு இடங்களிலும் நிதி திரட்டி, பிற்பட்ட நிலையிலுள்ள நாடுகள் வளர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலேதான் உதவி செய்கிறார்கள். அந்த முறையிலே உணவு வசதி, மருத்துவ வசதி, தொழிலாளர்களின் வீட்டிலே இருக்கும் கர்ப்பிணிகளுக்கு உணவு அளித்தல், தொழிலாளர்களுக்கும் உணவு அளித்தல், ப்ரீ ஸ்கூல் சில்ட்ரன், பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் சிறு குழந்தைகளுக்கு உணவு அளித்தல், மகப்பேறு இல்லங்கள் மூலம் உணவு தருதல் ஆகியவைகளைச் செய்கிறார்கள். இவைகள் எந்த நிபந்தனைகளின் அடிப்படையிலும் இல்லை. எதையும் எதிர்பார்த்து அல்ல. பிற்பட்ட நிலையிலுள்ள நாடுகள் வளர வேண்டுமென்று, அவைகள் நல்லதொரு இடத்தைப் பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செய்கிறார்கள். இதற்காக பாராட்டுதலையும், நன்றியையும் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## *State awards for Tamil glms*

* 675 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether any Committee has been constituted to choose Tamil films for State awards; and

(*b*) If so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) 1969-ஆம் ஆண்டிற்குரிய பரிசிற்கான 1968-ஆம் ஆண்டின் திரைப்படங்களின் தரத்தை ஆய்வு செய்வதற்காக கீழ்க் காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்தது.

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் மு. வரதராசனார் | தலைவர் |
| 2. | திரு. எஸ். டி. சுந்தரம் | உறுப்பினர் |
| 3. | திருமதி உமையாள் இராமநாதன் | உறுப்பினர் |
| 4. | கே. ஆர். இராமசுவாமி | உறுப்பினர் |
| 5. | திருமதி ஜி. எல். சந்திரன் | உறுப்பினர் |
| 6. | திரு. எம். எஸ். அப்துல்காதர் (முன்னாள் மேயர்) | உறுப்பினர் |
| 7. | திரு. எம். கோபால், எம்.எல்.ஏ | உறுப்பினர் |
| 8. | உறுப்பினர் (திரைப்படக் கலை குறித்து பொறுப்பு வகிப்பவர்) வருவாய்த்துறை | உறுப்பினர் |
| 9. | நகர காவல்துறை ஆணையாளர் இயக்குனர் (பொறுப்பு). | உறுப்பினர் |
| 10. | செய்தி- விளம்பரத்துறை | செயலாளர் |



குழுவின் செயலாளராகப் பணியாற்றிய செய்தி-விளம்பரத் துறையின் பொறுப்பிலிருக்கும் இயக்குநருக்கு, வாக்களிக்கும் உரிமையும், பரிசுக்குரிய திரைப்படங்களைத் தேர்ந்தெடுப்பது முதலியவை குறித்து கருத்துத் தெரிவிக்கும் உரிமையும் வழங்கப் படவில்லை.

THIRU T. MARTIN: There is a feeling in Tamil Nadu that only films produced in Hindi States and Bengal are given prominence in the matter of Presidential awards than films produced in Tamil Nadu. May I know from the Hon. Chief Minister whether any representation has been received by this Board from producers in Tamil Nadu regarding this and if so the action, if any, taken by the Board to alleviate this grievance?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட எந்த புகார்களோ அல்லது எழுத்துமூலமான விண்ணப்பங்களோ எதுவும் வரவில்லை. அதுபற்றித் திரைப்படத்துறையினர் கலந்து கொண்ட சில நிகழ்ச்சிகளில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவரவர்களே, கலைத்துறையில் தொடர்பு கொண்டுள்ள நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்தக் குழுவிற்குத் தலைவராக இருப்பதுதான் சிறந்த முறையாகும் என்பதையறிந்து அதைப்பற்றி பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த விஷப் பரீட்சையில் இறங்க நான் விரும்பவில்லை.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, மாநில பரிசுகள் நல்ல சினிமாக்களுக்கு வழங்குவதற்காக எந்த முறைகளைக் கையாண்டு, எந்தக் கருத்துக்களுக்காக இந்த நல்ல வெகுமதிகள் கொடுக்கப் படுகின்றன என்ற விஷயத்தைத் தெளிவாக விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சிறந்த படங்களைப் பொறுத்தவரையில், அந்தப் படங்களில் சொல்லப்படுகின்ற கருத்துக்கு, கதை அமைப்பின் கட்டுக்கோப்புக்கு, நடிப்புக்கு இவைகளெல்லாம் சேர்த்து எது சிறந்த படம் என்று கருதப் படுகிறதோ, அதற்குப் பரிசளிக்கப்படுகிறது. நடிகை, நடிகர், இசை அமைப்பாளர், வசனகர்த்தா, பாடலாசிரியர் ஆகியோர் செயல்படுகிற அந்தந்த துறைகளில் தங்களுடைய பணியை எப்படிப் புரிந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, நல்ல கருத்துள்ள படங்களுக்கு பரிசு வழங்கப்படுகிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மதுவிலக்குக் கொள்கையை நல்ல முறையில் அமைத்து நடத்த

வேண்டும் என்ற காரணத்திற்காக நல்ல தம்பி என்ற திரைப் படத்தை எடுத்தார்கள். அரசு அதற்கு சிறப்புப் பரிசு வழங்கு வதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒவ்வொரு ஆண்டும், முதல் ஆண்டு வெளிவந்திருக்கிற படங்களை எடுத்துத்தான், அவைகளைப் போட்டிக்கு உட்படுத்தி அதிலிருந்து தேர்ந்தெடுத்துத் தான் பரிசுகள் வழங்கவேண்டும். முன்பிருந்த அரசு இதைத் செய்திருக்க வேண்டும். செய்திருந்தால், நாம் மகிழ்ந்திருக்கலாம்.

**திரு. கே. விநயகம்:** பொதுவாக நாடும் வளரவேண்டும், நாட்டிலே பொருளாதாரம் மற்றவைகள் வளரும்பொழுது, கலையும் வளரவேண்டும். ஆனால், கலையைப் பொறுத்தவரையில் நமது அரசு அதற்கென்று எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது என்று தெரிகிறது. மத்திய சர்க்காரில் கூட மினிஸ்டர் ஃபார் கல்சரல் அஃபேர்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதுமாதிரி நம்முடைய அரசாங்கத்தில் ஒரு அமைச்சரை வைத்து, எந்தக் கலையாக இருப்பினும் அதை வளர்ப்பதற்கு தனியாக ஒரு அமைச்சரை அமைச்சர் குழுவில் சேர்த்துககொள்ள கலைஞர் முற்படுவாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கலைஞர் ஒருவரே முதல் அமைச்சராக இருக்கிற காரணத்தினால், அந்தப் பிரச்சினை இப்பொழுது எழவில்லை.

*Grant of loans to vegetable growers*

*682 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether here are proposals under the consideration of the Government to offer loans to vegetable growers in the State : and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:* (அ) & (இ) தமிழ்நாட்டில் காய்கறி விளைச்சல் வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ் காய்கறி பயிரிடுபவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பருவத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120 என்று குறுகிய காலக் கடன், பேரளவு ரூ 240 என்பதற்குட்படும், இருபோகக் காய்கறிப் பயிரிடுபவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 480 என்ற பேரளவுக்குட்பட்டும், சொந்தப் பிணையத்தின் மேல் வழங்கப் படுகிறது. கடன் தொகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| | |
|---|---|
| விதைகள் | ரூ. 5–00 |
| உரம் | ரூ. 40–00 |
| பயிர்வளர்க்க செலவுகள் | ரூ. 70–00 |
| பூச்சிக்கொல்லி மருந்துகள் | ரூ 5–00 |
| மொத்தம் | ரூ. 120–00 |





சென்னை மாநகரத்திற்கான காய்கறி விற்பனைப் பணித் திட்டத்தின்கீழ், சென்னையைச் சுற்றி 80 கி.மீ. தொலைவிற்குள் பதிவான காய்கறி பயிரிடுவோர் ஒவ்வொருவருக்கும், காய்கறி பயிரிட ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 250 வீதம் கடன் அளிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : We are deficit in vegetable production To re-equip the shortage will this Government come forward to introduce vegetable package scheme in areas suitable for vegetable cultivation like Hosur taluk which is having a fine climate for growing English vegetables and if so, when it will be introduced?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பாக்கேஜ் ப்ரோகிராம் இல்லை என்றாலும், இப்பொழுது அங்கே உருளைக் கிழங்கு, மற்ற காய்கறிகள், மிளகாய் இவைகளெல்லாம் பயிரிடப் பட்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற உணவுக்குத் தேவையான காய்கறிகளை சில சங்கங்கள் மூலமாக பயிரிடுவதற்கு அவசியம் ஏற்பட்டால், அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்வதுபற்றி இந்த அரசு ஆலோசிக்கும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, காய்கறித் தோட்டங்களில் காய்கறிகள் பயிரிடுவதற்காக அரசாங்கத்தில் கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கடனை யாரிடமிருந்து பெறுவது, விவசாய இலாகாவிலிருந்து பெறுவதா அல்லது பஞ்சாயத்து யூனியனிலிருந்து பெறுவதா என்று விளக்கமாக சொல்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்தக் கடன் விவசாய இலாகாவிலிருந்து தான் பெறப்படும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாமிச உணவு சாப்பிடக் கூடியவர்களுக்குச் சாதகமாக ஆடு, மாடு, கோழி வளர்ப்பதற்கு மானியம் கொடுக்கிறார்கள் அல்லவா, அதைப்போல காய்கறி சாப்பிடுகிறவர்களுக்குச் சாதகமாக காய்கறி வளர்ப்பதற்கு கிராண்டு, மானியம் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கடனைத் தான் கொடுத்துக்கொண்டு வருகிறோமே தவிர, மானியம் கொடுக்க ஒரு திட்டமும் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Some time back when the President of the World Bank came to Madras and had a discussion with the Members of the Cabinet, he put a question asking whether this Government was producing vegetables which could be sent to European markets to earn foreign exchange. Since we did not develop vegetables that could be sent to foreign countries we were not able to give a proper answer at that time. We can also get a loan for growing vegetables from the World Bank. So will this

[1970 ஏப்ரல் 4

Government come forward to find out suitable areas and grow vegetables on a large scale for sending them to foreign countries and earning foreign exchange?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** உலக பாங்கைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டார்களா என்பதற்கு தகவல் இப்பொழுது இருக்கவில்லை. அப்படி நிலைமை இருக்குமானால், அரசாங்கம் பரிசீலிக்கலாம். இப்பொழுது அந்த நிலைமை இல்லை.

**திரு. எஸ். அக்னிராஜு:** சில வங்கிகள் தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு இப்பொழுது கடன் கொடுத்து வருகின்றன. காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு அப்படிப்பட்டக் கடனை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்தக் கடன் வேளாண்மைத் துறை மூலமாகத்தான் விவசாயிகளுக்குத் தரப்பட்டுவருகிறது. பாங்குகளின் மூலமாகவும், ஊராட்சி ஒன்றிப்புகளின் மூலமாகவும் தருகின்ற விவரம் இல்லை.

### *Firms black listed in City*

* 683 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether the Commercial Taxes Department has black listed firms in Madras City during 1968–1969–1970 ; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

### சித்திரைப் பொருட்காட்சியில் கேளிக்கை வரி விலக்கு

* 684 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, மதுரையில் நடைபெற்ற "சித்திரைப் பொருட்காட்சியில்" ஏற்பாடு செய்யப்பட்ட சினிமா, நடன, நாடக நிகழ்ச்சிகளுக்கு "கேளிக்கை வரி"யிலிருந்து விலக்கு அல்லது சலுகை அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** (அ) & (இ) நடனம், நாடகம் இவற்றிற்கு கேளிக்கை வரி இல்லை. ஆனால் திரைப்படக் காட்சிகளுக்கு கேளிக்கை வரி உண்டு. 1969-ம் ஆண்டு மதுரையில் நடந்த சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளுக்கு, கேளிக்கை வரியினின்றும் விலக்கு அளிக்கப்படவில்லை.



1970 ஏப்ரல் 4]

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிப்பதில்லை என்று சொன்னார்கள். அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்ட சில அமைப்புக்கள், கல்லூரி வளர்ச்சி நிதி, உயர்நிலைப் பள்ளி வளர்ச்சி நிதி என்று பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் வளர்ச்சி நிதியின் பெயரால் மார்னிங் ஷோஸ், பெனிபிட் ஷோஸ் போடுவதற்கு அரசாங்கத்தினிடம் அனுமதி கேட்டால், அதற்கு அரசாங்கம் வரி விலக்கு அளிப்பதற்கு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் சொன்னது சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு கேளிக்கைவரி விலக்கு இல்லை என்று சொன்னேன். அது போன்றவர்கள் மனுப் போடுவார்களேயானால், அதை அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கத்தாரால் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி விலக்கு இருக்கிறது. ஸ்கூல் பங்ஷன்ஸ் நடத்தினால் அதற்கு விதிவிலக்கு இருக்கிறதா என்பதை வரையறுத்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பொது நிகழ்ச்சிகளுக்கென்று தனியாக மனுச் செய்வார்களேயானால், அதனுடைய நிலைமையை ஆராய்ந்து அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

### *Market study on sugar*

* 685 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Thiru S. N. CHITHAN: Will the Hon. Minister for Food and Commercial Taxes e pleased to state: Whether any market study regarding (i) the production output and the profit. (ii) the consumers, impact; and (iii) the price level has been made in this State after the partial de-control of sugar?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. ஆர். கருப்பையா:** சர்க்கரையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆலையிலும் சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது என்ற காரணத்தினால், ஆலைக்கு கரும்பு அனுப்புகிறவர்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை. டன் ஒன்றுக்கு ரூ. 10 தான் அட்வான்ஸ் கொடுக்கப்படுகிறது. முன்பு டன் ஒன்றுக்கு ரூ. 70 அட்வான்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ரூ. 10 தான் கொடுக்கப்படுகிறது. இதுபோன்ற நிலையை நீக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, டன் ஒன்றுக்கு ரூ. 50 அட்வான்ஸ் கொடுக்க அரசு வகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகிற சக்கரையைப் பற்றிய கேள்வி இது. இருந்தாலும், அங்கத்தினர் கேட்பதற்குப் பதில் சொல்கிறேன். சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது என்பதற்காகத் தான், அவ்வப்பொழுது சர்க்காரில் ஒதுக்குகிற லெவி சர்க்கரையை அந்தந்த மாதம் விற்றுவிடவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம்.

## Rice supplied in belt areas around Madras City

* 686 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:—

(a) the quantity of rice supplied per card-holder in the belt area around Madras City before 1969;

(b) the quantity of rice supplied to the card-holders during the year 1969–70;

(c) whether the Government has received any complaints during November and December, 1969 from the public about the reduced quantity and the deteriorated quality of the rice; and

(d) if so, the action taken by this Government?

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:*** *(அ) & (ஆ); 1968-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை வயது வந்தவர்களுக்கு வாரமொன்றுக்கு 1,400 கிராம் விதம் அரிசி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு அளவு வயது வந்தவர்களுக்கு 1,000 கிராமாகக் குறைக்கப்பட்டு 24-9-1969 வரை வழங்கப்பட்டது. 25-9-1969 முதல் 28-9-1969 வரை 900 கிராம் ஆக குறைக்கப்பட்டது. 29-9-1969 முதல் 15-11-1969 வரை மேலும் அது 750 கிராமாக குறைக்கப்பட்டது. ஆனால் 16-11-1969 முதற் கொண்டு அரிசியின் அளவு வயது வந்தவர்களுக்கு வாரமொன்றுக்கு 1,000 கிராமாக உயர்த்தப்பட்டது.*

*வயது வந்தவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவில் பாதி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.*

*(இ) அரிசியின் அளவைக் குறைத்து வழங்கியதைப் பற்றி புகார் எதுவும் வரவில்லை. ஆனால் விருகம்பாக்கம் பகுதியிலிருந்து வழங்கப்படும் அரிசி தரமுள்ளதாக இல்லை என்று சில புகார்கள் வந்தன.*

*(ஈ) சில கடைகளில் வழங்கி வந்த நிற மாற்றமடைந்திருந்த அரிசி உடனடியாக திரும்பப் பெறப்பட்டு நல்ல தரமுள்ள அரிசி வழங்கப்பட்டது.*

Dr. H. V. HANDE: Sir, this question was given notice of because we received some complaints from Maduravayal, Nekkundram and Koyambedu. Now that the Hon. Minister has stated that the quality of rice has improved, may I know whether the same policy of supplying one-rupee-a-measure-rice in the Madras City for those whose income is less than Rs. 300 would be extended to the persons who are living in the belt areas around the City of Madras?

The Hon. Thiru P. U. SHANMUGAM: We have not decided about it.

*திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 12 வயதிற்குட்பட்டவர்கள் பொதுவாக பெரியவர்களைவிட அதிகமாகச் சாப்பிடுகிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, தயவுசெய்து, பெரியவர்களுக்கு எந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு சிறுவர்களுக்கும் கொடுக்க உத்தேசம் உண்டா?*





***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:*** *திரு. கோதண்டராமன் தத்துவார்த்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக நான் இல்லை.*

***திரு. கே. விநாயகம்:*** *உணவுப் பங்கீடு முறையை மாற்றி அமைத்திருக்கிறோம் இப்பொழுது. ஆனால் நியாயவிலை அரிசிக் கடைகளில், 300 ரூபாய்க்கு கீழ் சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறோமே, அந்த அரிசி 'குவாலிடி' தரம் நன்றாக இல்லை என்று பொதுவாகவே எல்லா கூட்டங்களிலும், எங்களிடம் கொண்டு வந்து காட்டுகிறார்கள். அதை இங்கே சபையில் கொண்டு வந்து காட்டுவது அநாகரிகம் . . . .*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** *துணைக் கேள்வியைப் போடுங்கள்.*

***திரு. கே. விநாயகம்:*** *ஐ ஆம் கமிங் டு தட், வருகிறேன். பலர் எங்களிடம் அப்படிக் காட்டுகிறார்கள். ஆகவே, அப்படிப் பட்ட அரிசியை தடுத்து நிறுத்தி, நல்ல அரிசி கொடுக்க சர்க்கார் முயற்சிப்பார்களா?*

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:*** *தலைவர் அவர்களே, சற்று விளக்கமாகச் சொல்லுவது நல்லது என்று கருதுகிறேன். குறுவை நெல் தஞ்சையில் கொள்முதல் செய்யப்பட்டபோது, ஈரமாக இருந்தபோது அவசரமாக வாங்கவேண்டியிருந்ததால், அதைத் தேக்கிவைத்து அரிசியாக ஆக்கியபோது, அதில் அரிசி பழுப்பு நிறமாக மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அது ஒரு காரணம். மேலும், சில இடங்களில் அரிசி மில்காரர்கள் குறிப்பிட்ட சதவிகிதம் லாபம் வரவேண்டும் என்ற நோக்கத்தோடு, தண்ணீரில் நெல்லை அதிகமாக ஊறவைத்து, அதன் காரணமாக தரத்தை குறைத்திருக்கிறார்கள். அதற்கும் 'க்வாலிடி கட்' போடுகிறோம். 'மாய்ஸ்சர் கன்டென்ட்'க்குத் தக்கவாறு, அரிசியின் விலையை குறைக்கிறோம். நம்மிடத்தில் இப்பொழுது ஏறக்குறைய 28,000 டன் அரிசி பழுப்பு நிறமான, கலர் மாறியது, கையிருப்பு இருக்கிறது. அதை எப்படியாவது விற்றுத் தீர வேண்டும். வேறு வழியே இல்லை. தேக்கிவைத்து விட்டால், அது புழுத்துப்போய் நாசமாகிவிடும். நம்மிடம் உள்ள ஸ்டாக், 2,80,000 மூட்டைகள் நிறம் மாறியது. அப்படித் தந்ததற்காக அவர்களுக்கு அபராதம் விதித்திருக்கிறோம். ஆகவே அப்படிப் பட்ட சங்கடமான நிலையில் அரசாங்கம் இருக்கிறது.*

Dr. H. V. HANDE: Sir, the Hon. Minister while answering a supplementary question has stated that a stock of 28,000 tonnes of spoiled rice is available with the Government. Will the Hon. Minister be pleased to tell the total quantity of stock available now in the City of Madras and the percentage of this rice and whether we have much better quality of rice than these 28,000 tonnes of rice. Also whether they have checked up once again with regard to the belt areas, the difference in the price of open market rice and the subsidised rice given in the ration shops. Also, whether we have enough quantity of good quality rice in the Madras City.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சென்னை கோடவுன்களில் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்று திடீரென்று கேட்டால், அதைச் சொல்வதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். என்ன முறை என்றால், பழுப்பு நிறமான அரிசி பாதியும், நல்ல அரிசி பாதியும் என்ற அளவில் கொடுத்து, எப்படியாவது இந்த அரிசியைக் கொடுத்துவிட வேண்டும் என்று செய்யப்படுகிறது. சுற்றுவட்டாரத்தில் அப்படித்தான் இருக்கிறது. சென்னையிலேகூட, ரூபாய்க்கு ஒரு படி போடுவதில் உள்ளதைவிட வெளிச்சந்தையில் விலை அதிகமாகத்தான் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். வித்தியாசம் என்ன என்று கேட்கிறார்கள். அதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister for Food whether the Government would take steps to auction the bad quality rice and procure good quality rice instead?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஏலத்தில் விடலாமா என்பதை அரசாங்கம் பரிசீலனையில் வைத்திருக்கிறது. அதே சமயத்தில் ஏலத்தில் இன்னும் நஷ்டத்தில் போனால், என்ன செய்வது என்று யோசிக்கப்படுகிறது. அதன் மேல் விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், உணவுப் பங்கீட்டு முறையில் 1,000 கிராம் கொடுக்கப்படுவதாக அமைச்சர் சொன்னார்கள். இந்த உணவுக் கட்டுப்பாட்டை எடுத்ததே, உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதால்தான். ஆகவே, அளவை அதிகப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை உணருகிறோம். வெளியிலே கிடைப்பது, சிறை தண்டனை அடைந்தவர்களுக்குக் கொடுப்பதைவிடக் குறைவாக இருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு உணவுப் பங்கீட்டின் அளவை அதிகப்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் அன்றையதினமே, உணவு துறை விவாதத்தின்போது சொல்ல மறந்துவிட்டேன் என்று நினைக்கிறேன். அதை இப்பொழுது சொல்வது நல்லது. 1,000 கிராம் என்பது சப்சிடியில் கொடுப்பதுதான். அது தவிர வெளியில் வாங்கிக் கொள்ளலாம். சிறையில் இருப்பவர்களைவிட குறைவு என்கிறார்கள். அவர்களுக்கு அவ்வளவுதான் கிடைக்கும். ஆனால் இங்கே வெளியில் வாங்கிக் கொள்ளலாம். கொடுக்கும் அரிசியும் உதவியாக இருக்கவேண்டும் என்றுதான் குறைந்த விலையில் 1,000 கிராம் கொடுக்கிறோம். இப்படிக் கொடுப்பதிலேயே, இப்பொழுது ரூ. 300-க்கு குறைந்த சம்பளம் உடையவர்களுக்கு என்பதில், அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு ரூ. 8 கோடி.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, தனி நபர்களின் தவறுகள், நிர்வாக ஊழியர்கள் தவறுகள் இவற்றின் காரணமாக நிறம் மாறிவிட்ட அரிசியை ஜனங்கள் தலையில் கட்டாமல் குறைந்த விலையில் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இன்னொரு விஷயம் சொல்வது நல்லது என்று நினைக்கிறேன். நிறம் மாறிய அரிசியைக் கொடுத்துவிட்டால், தரமுள்ள அரிசியை மில்காரர்கள் கொடுப்பார்கள் என்று தயவுசெய்து பொருள் கொள்ள வேண்டாம். அப்படிக் கொடுப்பது வாடிக்கையாகப் போய் விட்டது அவர்களுக்கு. தகராறு செய்து கொண்டு, பணத்தை அரசாங்கம் பிடித்து வைத்துக்கொள்கிறது. இதற்கு வழி அரசாங்கமே புதிய ரைஸ் மில்களை நடத்த வேண்டும். வேறு வழியே கிடையாது. அப்பொழுது ஸ்டேட் ட்ரேடிங் பூராவையும் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். அது இப்பொழுது சாத்தியமில்லை.

**திரு. மு. ச. சிவசாமி:** அரசாங்கத்தில் ஸ்டாக் இருக்கும் 28,000 டன் அரிசியையும், கெட்டுப் போகக் கூடிய நிலையில் இருப்பதால், துரிதமாகச் செலவு செய்ய, 1,000 கிராம் என்பதை 1,500 கிராம் என்று அளவை உயர்த்திச் சீக்கிரமாக இருப்பில் இருப்பதை விநியோகிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நஷ்டம் இன்னொரு 5 கோடி வரும். நஷ்டத்தில் குறையாது. ஆனால், சென்னையிலும் கோயம்புத்தூரிலும், பெல்ட் ஏரியாவில், 300 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு என்கிற திட்டத்தின் கீழ் மொத்தம் செலவாகும் அளவு 15,000 டன். ஆகவே இரண்டு மாதத்தில் இது முடியலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, அரிசியாகக் கொடுப்பதால், ரைஸ் மில்காரர்கள் மோசமான அரிசியைக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. நெல்லாகவே விநியோகம் செய்யக்கூடிய நிலையில் ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மன்னிக்கவும், 1,000 கிராம் அரிசிக்குப் பதில் நெல் கொடுத்தால், எங்கே போய் குத்துவார்கள்.

### அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

* 687 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 1968-69-ம் ஆண்டில், சீனி மூட்டைகளின் அடைமானத்தின்பேரில் மதுரை கூட்டுறவு வங்கியில் பணம் பெறுவதில் ஒழுங்கீனம் நடைபெற்றதாகக் கண்டுபிடிக்கப் பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ): இல்லை.

1970 ஏப்ரல் 4]

*Temple Administration*

*688 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government is aware of the agitation of the Tamil Nadu Hindu Mission for better temple administration?

*மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :* தமிழ்நாடு இந்து சபையைச் சேர்ந்த ஏறத்தாழ 50 உறுப்பினர்கள் 24—11—1969 அன்று இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையரின் அலுவலகத்தின் முன்னர் உண்ணா நோன்பு இருந்தனர். மேற்சொன்ன சபையைச் சேர்ந்த ஏறத்தாழ 17 உறுப்பினர்கள் 24-11-1969 அன்று திருநெல்வேலி இந்து சமய அறக் கட்டளைகள் துணை ஆணையர் அலுவலகத்தின் முன்னர் உண்ணா நோன்பு இருந்தனர். மேற்சொன்ன சபையின் பல்வேறு கோரிக்கைகளை அரசு பரிசிலனை செய்தது. இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையர் அவர்களின் கோரிக்கைகளை எங்கெங்கு ஏற்க இயலுமோ அங்கெல்லாம் ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த கேள்விக்கும் பதில் சொல்லிவிடலாம்.

*689 Q.—DR. H. V. HANDE : Will the Honourable the Minister for Religious Endowments be pleased to state :—

(*a*) whether it is a fact that Archakas and temple employees of Tamil Nadu went on a one-day fast in front of the Hindu Religious and Charitable Endowments Office on 24th November 1969;

(*b*) if so, the reasons for their fast and their demand; and

(*c*) the action taken by this Government to redress their grievances?

*மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:* (அ), (இ) & (உ): தமிழ்நாடு அர்ச்சகர்கள், கோயிற்பணியாளர்கள் எவரும் 24—11—1969 அன்று ஒரு நாள் உண்ணா நோன்பு இருக்கவில்லை. சேலம் தமிழ்நாடு இந்து சமயச் சபையைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள் கீழ்க் காணும் தமது கோரிக்கைகள் இந்து சமய அறக்கட்டளைகள் துறையினால் கவனிக்கப்படுவதற்காக இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையர் அலுவலகத்தின் முன் 24-11-1969 அன்று "உண்ணா நோன்பு" இருந்தனர் :

(1) சோட்டைப் பெரிய மாரியம்மன் கோயிலுக்கு இராஜ கோபுரம் ஒன்றைக் கட்டுவதன் மூலமும், கருவறைத் திருப்பணியை நிறைவேற்றுவதன் மூலமும் அக்கோயிலை யாத்திரைத்தலமாக செய்தல்.

(2) வெற்றிடத்தில் திருமண மண்டபம் ஒன்று அமைத்தல்.

(3) கோயில் புறம்போக்கு நிலத்திலிருக்கும் தாற்காலிகக் கடைகளை வெளியேற்றுதல்.



1970 ஏப்ரல் 4]

(4) கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது இருக்கும் நிரந்தரக் கடைகளின் குத்தகைகளை ரத்து செய்து விட்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 34-ஆவது பிரிவின்படி அவற்றை ஏலத்தில் விடுதல் :

(5) இக்கடைகள் இந்துக்களுக்கு மட்டும் ஏலத்தில் அளிக்கப்படவேண்டுமேயன்றி, முகமதியர்களுக்கு அளிக்கப்படக் கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதுபோன்ற 34 கோரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களையும் சபை மக்களுக்கு வழங்கியது. மேற்சொன்ன சபையால் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை அரசு ஆலோசனை செய்தது. இக் கோரிக்கைகள் பலவற்றின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கத் தேவையில்லை என்று அரசு கருதியது. இந்த சமய அறக்கட்டளைகள் ஆணையர் மேற்படி கோரிக்கைகளை எங்கெங்கு ஏற்க முடியுமோ அங்கெல்லாம் ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

*திரு. கே. விநாயகம் :* தலைவர் அவர்களே, தமிழ்நாடு 'இந்து மிஷின்'ஐச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தை அணுகி, இந்துக்கள் அல்லாதவர்கள் இந்துக்கள் கோவிலுக்குள் ஒரு குறிப்பிட்ட இடம் வரைக்கும்தான் போகலாம். உள்ளே போகக்கூடாது என்று கோரிக்கை விட்டிருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது ? ஆண்டவன் சிலை வைத்திருக்கிற இடத்தில் அர்ச்சகர்கள்தான் போகலாம். மற்றவர்கள் இந்துக்களாயிருந்தாலும், பெரிய பக்திமான்களாக இருந்தாலும் போகக் கூடாது என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, அர்ச்சகர்கள் சிலை இருக்கும் இடம் வரையில் போகலாம் என்பதும், அந்த இடத்திற்கு மற்றவர்கள் போகக்கூடாது என்பதும் இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற கருத்துத்தான். ஆனால் அர்ச்சகர்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதியைத்தான் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு விடை காணும்போது அப்படி இருக்கத் தேவையில்லையென்று கருதுகிறது. அர்ச்சகர்களாகப் பயிற்சி பெறுகிற—யாராக இருந்தாலும்—ஆண்டவனுடைய சிலை அருகே இருந்து அர்ச்சனை, அபிஷேகம் போன்ற காரியங்களில் ஈடுபடலாம் என்பது அரசாங்கத்தினுடைய கருத்தாகும். இந்தக் கருத்தை ஆதரித்துக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. காசிராமன் அவர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இது எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கொள்கை. வேண்டுமென்றே ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைப் புண்படுத்தக்கூடிய காரியமாக வெளியிலே பிரசாரம் செய்வது சரியல்ல. அப்படிப் பிரசாரம் நடைபெறுவது கண்டு வருந்துகிறேன். இதுபற்றிய ஓர் அறிவிப்பை முதலமைச்சர் என்ற வகையில் தெரிவித்தேன். பரம்பரை பரம்பரையாக அர்ச்சகர்களாக இருக்கக்கூடிய அர்ச்சகர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு முதற் சலுகை தரப்படும் என்று கூறப்பட்டது. பிற மதத்தினர் நம்முடைய ஆலயங்களுக்கு

வருவதை ஏன் தடுக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. மற்ற மற்ற மதத்தினுடைய ஆலயங்களுக்கு இந்துக்கள் செல்லவில்லையா? இஸ்லாமிய, கிறித்துவ ஆலயங்களுக்கு இந்து மதத்தினர் செல்வதில்லையா? பிற மத சம்பந்தப்பட்ட ஆலயங்களுக்கு இந்து மதத்தினர் செல்கிறார்களே, அந்த அளவிற்கு இந்துக கோயிலுக்கும் மற்ற மதத்தினர் வருவதால் எந்தவிதமான கெடுதலும் இல்லை. 'எம்மதமும் சம்மதமே' என்ற புனிதமான கொள்கைக்கு ஆக்கம் அளிக்கும் வகையில்தான் நாம் இதைச் சொல்கிறோம். நண்பர்கள் இதுபற்றி யாராவது எதிர்ப்புத் தெரிவித்தால், அவர்கள் தங்களுடைய கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று, திரு. விநாயகம் அவர்களுடைய கேள்வியைப் பயன்படுத்திக்கொண்டு, வேண்டுகோள் விடுக்கிறேன்.

DR. H. V. HANDE: One of the most liberal reltgions in the whole world is the Hindu religion. It embraces all good philosophies nurtured by other religions. The question of Hindu religion's tolerance does not arise at all. The problem in this question is different. As far as the archakas are concerned, there are two issues, viz., (i) Whether a particular community should come as archakas. Even taking the Brahmin community, they do not want their children to be archakas because the present position of archakas is so bad and their pay scales is so mserable.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகப் போடுங்கள்

DR. H. V. HANDE: Who is to be the arohaka is not the question? What should be the emoluments and facilities to be given to archakas? Will the Honourable Chief Minister who has such soft corner for temples (let the temples and Hindu religion prosper under his regime) come forward to give a categorical answer as to whether he would improve the lot of the archakas?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அர்ச்சகர்களை ஆண்டவன் கவனிக்காவிட்டாலும், இப்பொழுது ஆளுகிறவர்கள் நிச்சயமாகக் கவனிப்பார்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, மற்ற மதத்தினரான இஸ்லாமிய, கிறிஸ்தவர்கள் கோயிலுக்குள் இந்துக்கள் அனுமதிக்கப்படுகிறார்களே, அதே தாராள மனப்பான்மையுடன் பிற மதத்தினர் இந்துக் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்துக்களிலே சிலர் உருவ வழிபாடு செய்கிறார்கள். சிலர் அருவமாகவும் வழிபடுவது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லா இந்துக்களும் அருவ-உருவ வழிபாட்டில் 'ஏகன்' 'அநேகன்' என்ற முறையில் வழிபடுகிறார்கள். இஸ்லாமியர், கிறிஸ்தவர்களுக்கு அப்படி இல்லை. அவர்கள் அருவ வழிபாடுதான் செய்கிறார்கள். ஆகவே, உருவ வழிபாடு இல்லாதவர்களை உருவ வழிபாடு உள்ள கோயிலுக்குள் அனுமதிக்கலாமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆண்டவனை வழிபடுவதற்காகத்தான் கோயிலுக்குள்ளே வர வேண்டும் என்பதற்காக அல்ல. கிறிஸ்தவர்களிலேகூட உருவ



வழிபாடு உள்ளவர்கள்—ப்ராட்டஸ்டன்ட், கத்தோலிக்கர்—என்ற பிரிவு இருக்கிறது. உள்ளே வருகின்றவர்கள் ஆண்டவனைத் தொழுதுதான் தீரவேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. நாங்கள் எல்லாம்கூட இந்துக்கள் கோயிலுக்குள் செல்கிறோம். அங்கே ஆண்டவனை வணங்கித்தான் தீரவேண்டுமென்பது இல்லை. அங்கிருக்கும் கலைப் பொருட்களைத் தெரிந்து கொள்கிறோம். நம்முடைய நாட்டில் பழங்காலச் சிற்பங்களையும் தமிழ்நாட்டினுடைய கலைச்செல்வங்களையும் தெரிந்துகொள்ள பயன்படுகிறது. தமிழ்நாட்டினுடைய கலைச் செல்வங்களையும், கலைச்சிறப்பையும் இந்துக்கள் அல்லாத மற்ற மதத்தினரும் அறிவதற்காக இது பயன்படும் என்று கருதுகிறோம். இன்னும் சொல்லப்போனால் இந்துக்கள் சுயநலம் உடையவர்கள் என்று மற்ற மதத்தினர் சொல்லக்கூடாத அளவிற்கு அவர்களையும் கோயிலுக்குள் செல்ல அனுமதிப்பது நல்லது என்றுதான் கருதுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

10-00 மு.ப.

### (1) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி தாமதமாகப் பேரவை கூடியது குறித்து

THIRU T. MARTIN: On a point of Order, Sir. The House was delayed by five minutes today before the starting of the business. Now I want to know from the Honourable Speaker the reason for such delay in the starting of business of the House and also I wanted to put a question regarling kitchen garden......

MR. SPEAKER: No point of order.

உங்கள் கையிலே கட்டியிருக்கிற கடிகாரம் தவறாக இருக்கலாம். அவையில் இருக்கிற கடிகாரங்களில் ஐந்து நிமிஷம் தாமதம் ஆகவில்லை. இரண்டு நிமிஷங்கள் தான் மேலே ஆகியிருந்தது.

### (3) ஒத்தி வைப்புத் தீர்மானம்

### மதுரை மாவட்ட கரும்பு விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன் உண்ணாவிரதம் இருப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக, திருமதி கே. பி. ஜானகியம்மாள் விதி 42-இன் கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

" மதுரை மாவட்டக் கரும்பு விவசாயிகள் தங்களது கோரிக்கைகளைக் கேட்டு ஆலை நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் முடிவு பெறாமல் 2—4—1970 தேதி முதல் மதுரை கலெக்டர் அலுவலகத்தின் முன் உண்ணாவிரதமிருந்து வருவது இந்தப் பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் இந்த

அவசரப் பொது முக்கியத்துவத்தை சபையில் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட நிகழ்ச்சி என்ற காரணத்திஞல் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

## (4) அமைச்சரின் விளக்க உரை

### விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணக் குறைப்பு குறித்த முதலமைச்சரின் விளக்க உரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விதி 82 இன் கீழ் இந்த அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1—1—1970-க்கு முன்பு விவசாயிகளுக்கு ஒரு யூனிட் மின்சாரம் 8.25 பைசாவுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசின் ஒப்புதலின் பேரில் ஒரு யூனிட் மின்சாரத்தின் கட்டணத்தை 10 பைசா என்று 1—1—1970 முதல் உயர்த்தியுள்ளதை இந்த மாமன்றம் அறியும். மின் உற்பத்தி செய்வதற்கும், அதை விவசாயிகள் பயன்படுத்தும் இடத்திற்குக் கொண்டு வருவதற்கும் அதிக செலவாகிறது. அதனால் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு மின்சார வாரியம் 16 பைசாவுக்குமேல் செலவிட வேண்டியிருக்கிறது. எல்லா பம்பு செட்டுகளுக்கும் யூனிட் ஒன்றுக்கு 8.25 பைசா என்று கட்டணம் வசூலித்தால் மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 9 கோடி இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பில் ஒரு பகுதியையாவது சரிக்கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் 8.25 பைசா என்று இருந்ததை 10 பைசா என்று உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 10 பைசா என்று உயர்த்திஞல் கூட மின்சார வாரியத்திற்கு வரும் ரூ. 9 கோடி நட்டத்தை முழுவதுமாக ஈடு கட்ட முடியாது. ஆஞல் ரூ. 9 கோடி நட்டம் என்பதை ரூ. 6 கோடி அல்லது 7 கோடி நட்டம் என்ற அளவிற்குக் கொண்டுவர இயலும்.

நிலை இப்படியிருந்தும் சேலம், கோவை, தென் ஆற்காடு மாவட்டங்களில் ஆழமான கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுக்க அதிகச் செலவாகிறதென்றும் அதற்குச் சலுகை அளிக்கவேண்டுமென்றும் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் நேற்று என்னைச் சந்தித்து கருத்து அறிவித்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமையையும், விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தையும் ஒரு சேர கருத்தில் கொண்டு அரசு ஏற்கனவே எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்தது. எந்த அளவிற்கு விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க முடியும் என்பதும் நன்கு பரிசீலிக்கப்பட்டது. 75 அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளிலிருந்து பம்பு செட்டுகளின்மூலம் தண்ணீர் எடுப்பதற்கு விவசாயிகளுக்குச்



சற்று செலவு அதிகமாகும் என்பதை இந்த அரசு உணருகிறது. ஆகவே இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு 75 அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 10 பைசா என்பதை 9 பைசாவாக மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இதஞல் சுமார் 1,20,000 விவசாயிகளுக்குச் சலுகை கிடைக்கும்.

## (5) தன்னிலை விளக்கம்.

### திண்டிவனம் கூட்டுறவு நில அடைமான வங்கியில் தான் உறுப்பினராக இல்லை என்று கூறியதைத் திருத்தி திரு. க. இராமமூர்த்தி அளித்த விளக்கம்.

Thiru K. RAMOORTHY : Hon. Speaker, Sir, on 2nd April 1970 while intervening in the reply by the Hon. Minister for Co-operation I said that I was not a member of the Land Mortgage Bank in Tindivanam. On verification I found that I had been a member of the Tindivanam Co-operative Land Mortgage Bank by virtue of a loan I have received from the bank for sinking a new well. I have mentioned this fact in my statement of assets and liabilities. I request that that part of my intervention be delited from the proceedings. The error was due to the fact that I misundestood membership for directorship.

## (6) கவன ஈர்ப்பு

### (அ) தாமதமாக மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப் பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக தேர்விற்கு அனுமதிக் கப்படாத நிலை.

Thiru J. JAMES : Mr. Speaker Sir, I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, about 35 Medical College students of the Madras University who were admitted for 1969-70 course on 19th September 1969. that is after one month and nineteen days of the reopening of the College due to the pendency of the writ petitions in the High Court, but they were not permitted to sit for the examination to be held in April 1970 along with the other students by the University authorities, though they also remitted fees for the examination and completed the course along with the other students.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1969-ஆம் ஆண்டு ஜூலையில் ஆரம்பிக்கும் முதலாம் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி. பி.எஸ். வகுப்பில் சேர்க்கப்படுவதற்கென தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 31—7—1969 அன்று அல்லது அதற்கு முன்னர் கல்லூரிகளில் சேரவேண்டுமெனக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வகுப்புகளில் சேராததால் முதல் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். வகுப்பில் 24 காலியிடங்கள் ஏற்பட்டன. இதற்கிடையில், தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்களில் பலர்

சென்னை உயர்நீதி மன்றத்தில் (ரிட் மனுக்கள்) தாக்கல் செய்தனர். "ரிட்" மனுக்களை அனுமதிக்கையில், நீதிப்பேராணை மனு (ரிட் மனு) செய்துகொண்டுள்ள மாணவர்கள் குறித்து ஒருங்கிணைந்த முதலாம் ஆண்டு எம்.பி.பி.பிஸ். வகுப்பில் ஒரு இடம் காலியாக வைத்திருக்குமாறு அரசுக்கும் மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் உயர்நீதி மன்றம் கட்டளைகள் பிறப்பித்தன. உயர்நீதிமன்றத்தால் இதுபோன்ற நீதிப்பேராணைகள் சுமார் 20-லிருந்து 25 வரை அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு நீதிப்பேராணை தாக்கல் செய்து கொண்ட ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு இடம் காலியாக வைத்திருக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

சில வழக்குகள் நீதி மன்றத்தால் முடிவு செய்யப்பட்ட பிறகு இரண்டு இடங்களைத் தவிர ஏனைய இடங்களைப் பூர்த்தி செய்யுமாறு அரசு கட்டளையிட்டது. எந்த இரண்டு மாணவர்களின் நீதிப் பேராணை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அந்த இரண்டு மாணவர்களுக்காக இரண்டு இடங்கள் காலியாக வைத்திருக்கப் பட்டன. ஒதுக்கப்பட்டியலிலுள்ள (Reserve List) 22 மாணவர்களை 24—9—1969-குள் கல்லூரியில் சேரவேண்டுமென மருத்துவக் கல்வி இயக்குநர் அறிவித்தார். இந்த 22 மாணவர்களில், 19 பேர் பல்வேறு நாட்களில் கல்லூரியில் சேர்ந்தனர். எஞ்சிய 3 இடங்களைப் பூர்த்தி செய்ய ஒதுக்கப்பட்டியலில் **உள்ள** மாணவர்களில் மேலும் 3 பேர் 5—11—1969-குள் கல்லூரியில் சேருமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அறிவித்தார். 1969 ஜூலை தொடருக்கான முதலாம் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். வகுப்பிற்கு காலம் கடந்து மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதை மன்னிக்குமாறு வேண்டி மேலேயுள்ள நிலையைப்பற்றி விவரித்து, சென்னை, மதுரை பல்கலைக்கழக பதிவாளருக்கு மருத்துவக் கல்வி இயக்குநர் கடிதம் எழுதி தெரிவித்துள்ளார். இதனால், 1970 ஏப்ரலில் நடக்கும் முதலாண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.பிஸ். தேர்விலேயே காலம் கடந்து சேர்க்கப்பட்ட மாணவர்கள் எழுத இயலும். இதுபற்றி ஆய்வு செய்ய, பல்கலைக் கழக மாமன்ற ஆட்சிக் குழுவிடம் (சிண்டிகேட்) இப்பொருள் வைக்கப்பட்டுள்ளதாக சென்னை, பல்கலைக்கழக பதிவாளர் 6—3—1970-ல் மருத்துவக் கல்வி இயக்குநருக்கு தெரிவித்தார். முதலாம் ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். வகுப்பில் காலங் கடந்து சேர்ந்த மாணவர்கள், 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடக்கும் முதலாண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். தேர்வுக்குத்தான் அனுமதிக்கப்படுவார்கள் என்று பல்கலைக்கழக மாமன்ற ஆட்சிக் குழு முடிவு செய்தது. சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு சென்னை பல்கலைக்கழகத்தின் முடிவை எடுத்துரைக்குமாறு, கல்லூரிகளின் தலைவர்களுக்கும், முதல்வர்களுக்கும், மருத்துவக் கல்வி இயக்குநரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட பல்கலைக் கழகத்தின் முடிவை எதிர்த்து, சென்னை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சிலர் மேல்



முறையீடு செய்து கொண்டுள்ளனர். இதுபற்றி மறு ஆய்வு செய்து, 1970-ஏப்ரலில் நடக்கும் முதலாண்டு ஒருங்கிணைந்த தேர்விற்கு மாணவர்களை அனுமதிக்குமாறு கேட்டு அவர்களின் முறையீடுகள் மருத்துவக் கல்வி இயககுநரால், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டன. 1969-ம் ஆண்டு செப்டம்பரில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் விதிமுறைகளில் கண்டுள்ள ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்டும், அவர்களது சொந்தப் பொறுப்பிலும் 1970 ஏப்ரல் தேர்விற்கு தனி தேர்வாக அனுமதிக்கப்படுவர் என்று சென்னை, பல்கலைக்கழகப் பதிவாளர் 26—3—1970-ல் மருத்துவக் கல்வி இயக்குநருக்கு அறிவித்தார். இது ஒரு முன்னோடியாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாதென்றும் பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. 5 மாணவர்கள் மட்டுமே 1970 செப்டம்பரில் நடக்கும் தேர்வுகளில் எழுத வேண்டிவரும். ஏனெனில், 30—9—1969-க்குப் பிறகுதான் அவர்கள் கல்லூரியில் சேர்ந்தனர்.

### (ஆ) நெல்லை மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் பருவமழை தவறியதும், பஞ்ச நிவாரண நடவடிக்கைகளும்.

**திரு. ஆலடி அருணா :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் நெல்லை மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் பருவமழை தவறியதின் காரணமாக ஏற்பட்டுள்ள பஞ்சநிலையை போக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, the Government have received representations that owing to rains, acute distress prevails in Ootbumalai, Kilpavoor and Nallur, that there is scarcity of drinking water and that, therefore new water supply schemes and deepening of the existing wells under drought relief may be taken up in the areas referred to above.

The Government consider that immediate relief schemes may be taken up in such areas as top priority has always been given to improvement of drinking water facilities under drougt relief programme. They accordingly sanction an expenditure not exceeding Rs. 2,46,000 towards the drinking water supply schemes.

The Collector of Tiruneiveli is requested to take action immediately to ensure that the allotments are utilised on the schemes. He is also requested to entrust the works to the agency of his choice having regard to the speedy execution of the work in the interests of the affected people and to send a report to Government in due course.

## 7. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்)

[1970 ஏப்ரல் 4

மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம் மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்.

**(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இம் மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.



1970 ஏப்ரல் 4]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இம் மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா
(சட்டப் பேரவை மசோதா எண் 13/70)

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண். 3) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 13/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. எம். சுரேந்திரன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதை திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத்தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவின் கீழ் பேசுவதற்கான வாய்ப்பைத் தந்ததற்காக முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த ஒரு மாத காலமாகப் பல்வேறு இனங்களின்கீழ் பல்வேறு தலைப்புகளின்கீழ் இந்த அரசினுடைய பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வந்தது. இன்றைய தினம் நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் முழுமை பெறுகின்ற அளவில் முழுமையான விமரசனத்திற்காக வந்து இருக்கிறது. இந்த மன்றத்திலே பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து பெரும் அளவிலே முழுமையான விமர்சனத்திற்காக வந்து இருக்கிறது. இந்த மன்றத்திலே பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து பெரும் அளவிலே அதிலே இருக்கிற நிலைமைகள், குறைகள், செய்ய வேண்டிய முன்னேற்றங்கள் இவற்றையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த முழுமையான நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்காக நான் அவைமுன் நிற்கிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடுகள் செலவுசெய்கின்ற நிலைமையிலே விவசாயத் துறையிலே தனிக் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகள் தரப்படுகின்றன. வீரிய விதைகள் தரப்படுகின்றன. விவசாயிகளைப் பொறுத்த வரையிலும் அவர்களுக்குத் தரப்படுகின்ற நிலைமையைப்பற்றிச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். துறையினரால் விதைகள் விவசாயிகளுக்குத் தரப்படுகிறது. விவசாயிகள் மத்தியிலே விளைபொருள்களை வாங்கி சேமித்து வைத்திருந்து பிறகு விவசாயிகளுக்கு விலைக்குத் தரப்படுகிறது. வாங்குகிற விலைக்கும் விவசாயிகளுக்கு தரப்படுகின்ற விலைக்கும் பெரிய அளவிலே வித்தியாசம் இருக்கிறது. விவசயிகள் அதிக விலைக்கு

வாங்குகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரு நஷ்டத்திற்கு ஆளாகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துறை சேமித்து வைப்பதற்காகச் செய்கின்ற செலவு ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும் கூட தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள கணக்கை எடுத்துப் பார்க்கின்ற நேரத்திலே மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே இந்த செலவு அதிகப்படியான செலவு, தேவையற்றது. இதைக் குறைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து அரசுத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற நேரத்தில் விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும். அதைக் கண்காணிக்க அரசு முன்வரவேண்டும்.

புதிய ரக நெல்லைப் பொறுத்தவரையிலே ஐ.ஆர். 8, ஐ. ஆர்.5, ஏடிடி. 27 ஆகிய நெல்லைப் பொறுத்தவரையிலும் மிக முக்கியமானதொரு நிலைமை இந்து கொண்டிருக்கிறது. .ஐஆர். 8 நெல்லைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் பூச்சிகளால் அழிக்கப்படுகிற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் துறையினரால் விளம்பரப்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு உறுப்பினர் ஐ.ஆர்.8 பயிர்கள் பெரும்பாலும் பூச்சிகளால் அழிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 7 லட்சம் ஏக்கர்களில் பயிர்கள் இருக்கின்ற நிலைமையில் 800 ஏக்கர் அளவிற்குத்தான் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை உள்ளது. எனவே ' பெரும்பாலும் ' என்று அவர்கள் சொல்வதால் எல்லாமே பூச்சிகளால் பாதிக்கப்படுவதாக சொல்கிறார்கள். அது சரியல்ல, எல்லாமே பூச்சிகளால் பாதிக்கப்படுவதில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இந்த பூச்சி மருந்து தெளிப்பது ஐந்தாறு தடவைகள் ஸ்ப்ரே பண்ண வேண்டும். ' ஈஸிலி சஸப்டிபிள்டு டிஸிஸஸ் ' என்று சொல்லக்கூடிய முறையிலே இது இருப்பதாலே மற்ற எல்லாவிதமான விதைகளையும்விட இதற்கு குறைந்தது 50 ரூபாய், 60 ரூபாய் ஆவது அதிகமாக செலவழிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதுதான் பொருள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பூச்சிகளை அதிகமாக ஈர்க்கின்ற முறையிலே இந்தப் பயிர் இருக்கிறது. அதற்காக அடிக்கடி மருந்து தெளிக்கவேண்டும். ஆனால் பூச்சிகளாலேயே பெரும்பாலும் அழிக்கப்படுகிறது என்று அவர்கள் சொல்வது தவறான கருத்து ஆகும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பூச்சிகள் அதிகமாக வந்தாலும் உரியகாலத்தில் மருந்துகள் தெளித்தால் வருவதில்லை. ஒரு நாள் தெளிப்பதற்குத் தவறிவிட்டால் மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது என்பதை என்னுடைய சொந்த அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன். இரண்டு நாட்களுக்கொருமுறை மருந்து அடிக்கிறோம். மருந்து கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது ? எனவே மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், விவசாயிகளும் இந்த விஷயம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது. நல்ல முறையிலே கவனித்து வந்தால் பயிர் அழியாது. எந்த அளவுக்கு எத்தனை சதவீதம் அவர்கள் சொல்கிறார்களோ அந்த சதவீதம் அளவுக்கு மட்டும் போட்டு எப்பொழுது எப்பொழுது போடவேண்டுமென்று சொல்கிறார்களோ அதன்படி போட்டு வந்தால் பூச்சிகளால் அழிக்கப்படாமல் பயிர்களைப் பாதுகாக்க முடியும். விவசாயிகள் உரமும்,

[மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

பூச்சிக்கொல்லி மருந்துகளையும் எந்த அளவுக்கு அதிகமாக முறையாக உபயோகப்படுத்துகிறார்களோ அந்த அளவுக்குப் பயிர் அதிகமாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஐ.ஆர். 8 விளைச்சல் எவ்வளவு இருக்கும் என்பதை அடுத்த வருஷத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் சொல்வதைத் தான் நானும் சொல்ல வந்தேன். அதற்குள் அவர்கள் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். ஈர்க்கின்ற தன்மையையும் பொறுத்து அடிக்கடி அழிந்து போய் அழிந்து போய் மீண்டும் வளருகின்ற நிலைமை இருக்கிறது. அது ஒரு புறம் இருக்க பூச்சி மருந்தைத் தெளிப்பதற்கு ஒரு ஆளாவது அதற்காக என்று நியமிக்கவேண்டியிருக்கிறது. ஐ.ஆர். 8 நெல்லுக்காக அரசாங்கம் கடனிலே பூச்சி மருந்தாக பண்டமாற்று முறைப்படி. கொடுக்கிறார்கள். அதிலே ஐ.ஆர். 8 பயிருக்கு மருந்தைத் தெளித்துக்கொண்டே இருந்தால் தான் வளரும் என்ற நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. பணக்காரர்கள்தான் அதைப் பயிரிட முடியும் என்ற நிலைமைதான் இருக்கிறது. அதற்கு அதிகமான அளவிலே உரம் வேண்டும், அதோடு ஆட்களைக்கொண்டு காலம் தவறாமல் பூச்சி மருந்து அடிக்கடி தெளித்துக் கொண்டுவரவேண்டும். காலம் தவறாமல் தெளிக்கவேண்டுமானால் ஆட்கள் கிடைப்பது கடினம். இதைத்தவிர பூச்சி மருந்தை இரண்டு மூன்று தடவைகள் ஒரே ஆள் தெளித்தால் அந்த அளவிற்கு அவருடைய உடல் நலம் குன்றிவிடக்கூடிய நிலைமை அசதி இவையெல்லாம் ஏற்படுகின்றது. இதிலே நாம் ஒதுக்குகின்ற பணம் தக்க முறையிலே விவசாயிகளுக்குப் போய் சேருகின்ற நிலைமை இருக்கவேண்டும். ஆட்கள் கிடைப்பது முடியாததால் அதற்கான இயந்திரச் சாதனங்களைக் கொடுத்து பூச்சி மருந்துகள் தெளிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்,

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

அடுத்தாற்போல், ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் வாயிலாக விளைபொருள்கள் விற்பனை ஆகி வருகின்றன. அந்த ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களைப் பொருத்தமட்டில் வெகுவான முன்னேற்றம் காணவேண்டும். இந்த விற்பனைக் கூடங்கள் ஒருபுறம் இருந்து கொண்டிருக்க, பக்கத்திலே ஒவ்வொரு ஊரிலும் இடைத்தரகர்கள் நடத்தும் மண்டிகள் இருக்கின்றன.

விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை விற்பதற்கு உண்டான வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட மார்க்கெட்டுகளை ஏற்படுத்தும் வகையில் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

போலீஸ் துறையைப் பொருத்தவரை நேற்றையதினம் வெகுவாகப் பேசப்பட்டது. பெரிய கண்டுபிடிப்புகள், அரிய வேலைகள் போலீஸ் துறையினரால் செய்யப்பட்டு வந்தாலும் சிறுசிறு தவறுகளின் காரணமாக அந்த அரிய வேலைகளுக்குப் போதுமான முக்கியத்துவமும், மரியாதையும் இல்லாமல் போய்விடும் நிலைமை இருக்கிறது. கடலூரில் நடந்த நிகழ்ச்சி, சுச்சரபாளையத்தில் நடந்த நிகழ்ச்சி போலீஸ்துறைக்கு நன்மை பயக்கும் நிகழ்ச்சிகள் அல்ல. அந்த நிலைமைகளை அவை கவனத்தில் கொள்ள வேண்டும். லீவில் சென்ற போலீஸ் அதிகாரிகளைக் குறிப்பிட்ட நாள் அன்று அவசரம் அவசரமாக லீவைக் கான்சல் செய்து வேலைக்கு அழைக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. வேலூரில் நடந்த நிகழ்ச்சி—இதிலே உள்ளிட்டுச் செல்ல விரும்பவில்லை. போலீஸ் பவரைப் பயன்படுத்தி இதுசம்பந்தமாகத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ் துப்பறிவதில் ஆட்சேபனை இல்லை. புலன் விசாரணை செய்வதில் ஆட்சேபணை இல்லை ; இதை வைத்துக்கொண்டு பலரைக் கொடுமை செய்து கொண்டிருக்கிறார்கள் ; சித்திரவதை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு காணவேண்டும். இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுப்பார்களானால் போலீஸ் துறையின் நல்ல பெயரே கெட்டு விடும்.

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது சம்பந்தப்பட்ட விஷயத்தைப்பற்றி மேற்கொண்டு பேச வேண்டாம். * * அங்கு என்னென்ன செய்தார்கள் என்று * * பேசிய பேச்சை சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்குவதற்கு உத்திரவு இடுகிறேன். இவை பத்திரிக்கைகளிலும் வரக்கூடாது என்று பத்திரிகையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

திரு. க. இராமமூர்த்தி : * * பல நகரமன்றங்களில் பஞ்ச நிவாரணக் குழு என்று போட்டு, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலிருந்து தானியங்களை வாங்கி அதிகாரபூர்வமற்ற முறையில் வரும் அந்த லாபத் தொகைகளை அவர்கள் விரும்பியபடி ஊதாரித்தனமாகச் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். நான் அந்த நிலைமையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டம் பயின்றவர்கள் என்று நினைக்கிறேன். பஞ்ச நிவாரணக் குழு என்று போட்டு ஊதாரித்தனமாகச் செலவு செய்கின்றார்கள் என்று சொல்வது பொருந்தமானதல்ல. தனிப்பட்ட நபர் யாரிடமாவது கொடுத்துச் செய்திருந்தால் கட்சியாளர்களுக்குக் கொடுத்து விட்டதாகச் சொல்லலாம். குழு போட்டு,

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





கணக்கு வைத்து, வரவு-செலவு என்ன என்பதற்கு முழு விவரங்களும் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு வரவேற்புக் கொடுத்ததைப்பற்றித் திரும்ப திரும்பச் சொன்னார். மதிப்பிற்குரிய காங்கிரசின் பெருந் தலைவர் காமராசர் அவர்களுக்கும்தான் வரவேற்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்களுக்குக் கொடுத்தது சரியல்ல என்பதைச் சொன்னால் நான் ஒத்துக் கொள்கிறேன். அவ்வளவு பெரிய தலைவர் காமராசரைச் சொன்னால் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஊதாரித்தனம் என்று சொல்வது அன்பார்லிமெண்டரியா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். காமராஜர், காமராஜர் என்று சொல்லி கிண்டல் செய்யவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். யாருக்கு செய்தாலும் ஊதாரித்தனம் இருந்தால் ஊதாரித்தனம்தான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காமராசர் அவர் பெயரைச் சொல்லவேண்டாம் என்று சொன்னார்கள். அவர் பெயரைச் சொல்லி அவருடைய பெயருக்கு களங்கம் கற்பிக்க எனக்கு நோக்கம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இவ்வளவு அனுதாபத்துடன் அவரைப்பற்றிச் சொல்வதற்கு நன்றி.

* * *

மசோதாவில் பொதுவான சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகாலமாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசாங்கம் பல்வேறு பொதுவேலைகளை, பொதுமக்களின் நன்மைகளைக் கருதி மிக அருமையாகச் செய்து வந்திருக்கின்றது. அண்மையிலே பஞ்சம் ஏற்பட்ட பொழுது தமிழக அரசாங்கத்தின் மிகத் தீவிரமான வேலைகளின் காரணமாக அந்தப் பஞ்சம் ஏற்பட்ட இடங்களில் துயர் தணிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாகத் தமிழகத்தில் ஏற்பட்ட நன்மைகளில், மற்ற மாவட்டங்களில் நடந்ததைப்போல் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற முடியவில்லை என்பதை இந்த மன்றத்தில் பலதடவை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையில் சாபகேட்டிற்கு ஆளானதொரு மாவட்டம். இன்றையதினம், பிற மாவட்டங்களில் குறிப்பிட்டு, வருஷத்தில் மூன்று மாதம், நான்கு மாதம் கடுமையான கோடைகாலமாக இருக்கும். ஆனால் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டு முழுவதும், 12 மாதங்களுக்கும் வறண்ட மாதங்களாகவே இருக்கின்றன. இந்தப் பயங்கரமான நிலைமை பல ஆண்டுகாலமாக நீடித்துக்கொண்டேயிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் அரசியல் ரீதியாக மிகப் பெரிய தலைவர்களை உருவாக்கிய மாவட்-

* பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

டம். அகில இந்தியா, உலகமெல்லாம் சுற்றிவந்த தலைவரொருவர், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகயிருந்த ஒருவர், எங்கள் மாவட்டத்தில் பிறந்தவர். அவர் இதே மாமன்றத்தில் பல்லாண்டுக் காலமாக முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவருடைய பதவி உயர்ந்ததே தவிர, அவருடைய பவனி விரிந்ததே தவிர, அவர் பிறந்த அந்த மாவட்டம் இன்று வரை வறண்ட பாலைவனமாகத்தான் இருக்கிறது. இன்றைக்கும் காங்கிரஸ் காரர்களுக்கு அவர் தெய்வமாக, வழிகாட்டியாக, ஒளி நட்சத்திர மாக அல்லது வால் நட்சத்திரமாக இருக்கலாம் ஆனால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசியல் ரீதியாக அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தலைவராக வந்தாலும்கூட, அந்த மாவட்டத்தின் பொருளாதார நிலைமை, அங்கிருக்கும் விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமையாகத் தொடர்ந்து நீடிக்கிறதே தவிர எந்த விதமான விமோசனமும் ஏற்படவில்லை.

சமீபத்திலே ஏற்பட்ட வறட்சியைப்பற்றி மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசும்போது ஏதோ பயங்கரமான பஞ்சம் என்று கவலையோடு கூறினார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அத்தகைய பஞ்சம் பரம்பரை பரம்பரையாக வருவது, சர்வ சாதாரணமாகச் சந்தித்து தீர்த்துக்கொள்வது ஆகும். இன்று பஞ்ச நிவாரண வேலையில் ஏராளமான பணம் இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே மட்டும் ஏறத்தாழ 6 இலட்சம் ரூபாய் பஞ்ச நிவாரண வேலைக்காக என்று, நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல், எந்தவிதமான ஊழலும் இல்லாமல், எந்த வேலைக்காக ஒதுக்கப்பட்டதோ அந்த வேலைக்கே சென்று, மிக அருமையான முறையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 6 இலட்சம் ரூபாய் செலவழித்ததைத் தானே நேரடியாக தொகுதி முழுவதும் சுற்றி ஆங்காங்கு கிணறுகளை ஆழப்படுத்துவது, குடிதண்ணீர் வசதி ஆகியவைகளை உருவாக்கிவிட்டு இங்கு வந்தேன். சமீபத்திலே நான் திரும்பி, தொகுதிக்குச் சென்று பார்த்தபொழுது ஒரு கிராமத்திலும் குடிதண்ணீர் இல்லை. எவ்வளவு ஆழம் போனாலும், அங்கே தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, பஞ்ச நிவாரண வேலைகளினால் நம்முடைய பணம் செலவழிக்கப்பட்டதே தவிர, அந்தப் பணம் செலவழிக்கப்பட்ட காரணத்தினால், பொதுமக்களுக்கு, கிராமங்களிலேயிருக்கும் மக்களுக்கு எந்தவிதமான பயனுமில்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம், அந்த மாவட்டம் ஏற்கனவே மழை மறைவுப் பிரதேசம். மேற்குத் தொடர்ச்சி மலையின் மறைவுகள் காரணமாக பருவமழை எப்பொழுதுமே பெய்வது இல்லை.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நாட்டிலே நடந்து கொண்டிருந்த நேரத்திலே இந்த இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றிப் பல்வேறு விதமான ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள். மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அப்பால்



கேரளாவிலே ஓடும் இரண்டு மூன்று நதிகளைத் திருப்பி, மலையைப் பிளந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்யலாம் என்ற யோசனையை 1947-க்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறார்கள். கீரியாறு திட்டம், பம்பையார் திட்டம் பிளவுக்கல் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் எப்படி நிறைவேற்றுவது என்று பல்லாண்டுகளாக ஆராய்ச்சி செய்யப்பட்டு, இன்றைய தினம் மத்திய அரசாங்கத்திற்கு பிளவுக்கல் திட்டம் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. அதுகூட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேறுமா என்ற சந்தேகமும் இருக்கிறது. அந்தக் திட்டங்கள் மூன்றும் நிறைவேறினால் இராமநாதபுரம் மாவட்டம் முழுமையாக விவசாயத்தை நம்பியிருக்கும் மாவட்டம் அந்த மூன்று திட்டங்களும் நிறைவேறினால் நிச்சயமாக ஏதாவது நல்ல பலன் கிடைக்க முடியும். அப்படிப் பலன் கிடைத்தால்தான் அந்த மாவட்டத்தின் வறுமை நீங்குமே தவிர வேறு எந்த வகையிலும் நீங்க முடியாது.

இந்த நிலவள வங்கியின் மூலமும், கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும், அரசாங்கம் நேரடியாகத் தருவதன் மூலமும், ஏராளமான கடன் உதவியை இந்த அரசாங்கம் செய்கிறது. அது அந்த நேரத்திற்கு விவசாயிகளுக்கு ஒரு ஆறுதலாக இருக்குமே தவிர, அதைத் திருப்பித் தர வேண்டுமென்று நினைத்தால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் நிச்சயமாக யாருமே திகைக்கத் தான் செய்கிறார்கள்.

மின்சாரக் கட்டணச் சலுகை தந்திருக்கிறார்கள். இந்தச் சலுகைகூட எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பயன்படாது. 75½ அடி ஆழம் கிணறு தோண்டுமளவிற்கு வசதியில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த மாவட்டத்தை தனிக் கவனிப்பிலே எடுத்துக் கொண்டு, இதற்கென்று தனியான ஒரு குழுவை நியமித்து, இதை நிரந்தர பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, இதற்கு வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் முன் வர வேண்டுமென்று மிகப் பணிவன்போடு அங்கே அல்லற்படும் விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் கணக்குப் பார்த்தால், கடன் இல்லாத விவசாயி நிச்சயமாக இருக்க முடியாது. அந்த அளவுக்கு மோசமான நிலைமை இருக்கிறது. அதற்குத் தகுந்த முறையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேற்று காங்கிரஸ் சார்பில் கூறப்பட்ட ஒரு கருத்திற்கு மட்டும் விளக்கம் தந்துவிட்டு விடைபெறலம் என்று கருதுகிறேன்.

இங்கே பேசிய ஒரு காங்கிரஸ் உறுப்பினரவர்கள், இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சராக இருப்பவரை மாற்ற வேண்டும், இலாக்கா மாற்ற வேண்டும், முதலமைச்சரவர்கள் அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும், அமைச்சரை மாற்ற வேண்டுமென்றெல்லாம் யோசனை சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வளர்பிறையில் இருக்கிறது. இன்று இந்த நாட்டின்

வரலாற்றை உருவாக்கும் பணி பொதுமக்களால் அளிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் இனி என்றென்றைக்கும் வளர்ந்துகொண்டுதான் இருக்கும் என்ற நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட முன்னேற்றம் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, யாரை அமைச்சராக வைத்துக்கொள்ளலாம், யாரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்ற யோசனையை இங்கே பேசிய காங்கிரஸ் நண்பர்கள் கூறியிருப்பது தேவையில்லாத ஒன்றாகும்.

அதைவிடுத்து, காங்கிரஸ் கட்சி, அதுவும் இன்று 'ஓ' காங்கிரஸ், அதாவ ஆர்க்கனைசேஷன் காங்கிரஸ் நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே வருகிறது. அந்தக் கட்சியைச் சேர்ந்த அத்தனை பேரும் அவர்களுடைய வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்று யோசனை செய்திருக்க வேண்டும். அந்த யோசனையைச் செய்யாமலிருப்பதால், நாங்கள் சொல்வதிலே தவறு இருக்க முடியாது என்று கருதிச் சொல்லுகிறேன். இங்கேயிருக்கும் அமைச்சரவையை மாற்றுங்கள், இலாக்காவை மாற்றுங்கள் என்று சொல்லிவரும் காங்கிரஸ்காரர்கள் அவர்களுடைய தலைவரை மாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். இன்று தலைவராக இருப்பவர்கள், தமிழகத்தைச் சுற்றிவந்து, ஆங்காங்கு ஜாதிப் பூசல்களையும், ஆங்காங்கு கலவரங்களையும் உண்டாக்குகின்ற முறையில் பேசி வருகிறார்கள். அந்த அமைச்சரின்மீது நடவடிக்கை எடுங்கள், இந்த இலாக்காவை மாற்றுங்கள் என்று சற்றும் தமக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில், தாம் எந்தக் காலத்திலும் ஈடுபட முடியாத, நுழைய முடியாத சட்டசபையைப் பற்றி வெளியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தலைவரை மாற்றினால் தமிழகத்தில் உங்களுடைய கட்சி ஒன்றிரண்டு ஆண்டுகளாவது நீடித்திருக்கும். அதைச் செய்யத் தவறினால் நிச்சயமாக 72-தேர்தலுக்கு முன்னால் இருக்கும் இடம் தெரியாமல் போவீர்கள்.

ஆகவே அவ்வாறு செய்து செப்பனிடுங்கள். இங்கிருக்கும் கலைஞருக்கு, ஆட்சியைத் திறமையாக, உறுதியாக, அருமையாகச் செய்வதற்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக சர்க்காருக்கு, சர்க்காரின் அமைச்சரவையை எப்படி அமைக்க வேண்டு
மு.ப. 11.00. மென்பதற்கு உங்களுடைய அறுந்துபோன, வறண்டுபோன தத்துவத்தின் அடிப்படையில் தயவுசெய்து ஆலோசனை தாரதீர்கள் என்று கூறி விடைபெறுகிறேன்.

*திரு. ந. தீர்த்தகிரி: தலைவரவர்களே, நிதி ஒதுக்க மசோதாவில் எனது கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். விவசாயிகள் உயர்ந்தால்தான் இந்த நாடு உயரும். முதலிலே நாம் விவசாயத்தைக் கவனித்தாக வேண்டும். என்னுடைய பகுதி விவசாயம் செய்யக்கூடிய பகுதி. அங்குள்ள மக்கள் விவசாயத்தை நம்பி வாழக் கூடியவர்கள். விவசாயத்திற்கு இன்றையதினம் மின்சாரம் தேவைப்படுகிறது, தண்ணீர் தேவைப்படுகிறது.





இரண்டும் முக்கியமான பிரச்சினை. எங்கள் பகுதியில் தண்ணீர்ப் பிரச்சனை ரொம்ப அதிகமாக சங்கடமாக இருக்கிறது. தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், சர்க்காரின் மூல மு. ப. 11-00
மாகக் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். சர்க்காரே ஆழப்படுத்தி, இயந்திரங்களைப் போட்டு வெட்டி, விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, அதுவும் சில வருடங்கள் கடனாகக் கொடுத்து, அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். மின்சாரம் இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு விவசாயிகள் அவதிப்படுகின்ற நிலையை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். மின்சாரம் சப்ளை இல்லாமல், விவசாயிகள் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். புஞ்சை விவசாயம் கூட செய்ய முடியவில்லை. ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை அங்கே இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் வாழ வேண்டுமானால் மின்சாரத்தை நாம் உடனடியாக வழங்க வேண்டும். அதை உடனே கவனிக்க வேண்டும்.

என் பகுதியிலே பாலாடிப்பட்டி பாப்பிரெட்டிப்பட்டி யூனியன் என்ற இடத்திலே ஒரு ஸப்-ஸ்டேஷன் தேவைப்படுகிறது. இது பற்றிப் பல தடவை சொல்லிக் கொண்டிருக்கிறோம். மின்சார சப்ளை இல்லாமல் மோட்டார்கள் காய்ந்து விடுகின்றன. ஒரு நாளைக்கு மின்சாரம் தவறிப்போய்விட்டாலும் கூட, கழனி காய்ந்துவிடுகிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, இதை உடனடியாகக் கவனித்து மின்சாரத்தை கொடுப்பதற்கு எற்பாடு செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்குத் தாங்கள் செய்யக்கூடிய வேலைகளுக்கு குறைந்த கூலி தான் கிடைக்கிறது. நகர் புறங்களில் கிடைக்கிற லாபத்தைக் காட்டிலும் விவசாயிகள் கிராமப்புறங்களில் லாபம் அடையவில்லை. விவசாயிகள் இரவு பகலாக பாடுபட்டுக் கொண்டிருந்தாலும்கூட, குறைந்த லாபம் தான் அவர்களுக்குக் கிடைக்கிறது. அங்குள்ள விவசாயிகள் நல்ல முறையில் வாழ வேண்டுமானால், விவசாயிகளுக்கு நல்ல சலுகைகளைக் கொடுக்க வேண்டும். வங்கிகள் கடன் கொடுக்கிற நிலையில், விவசாயிகள் பட்ட பழைய கடன்களைக் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பழைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு வங்கிகள் வழிவகை செய்ய வேண்டும். இரண்டு வருஷங்களாக மழை இல்லாமல் விவசாயிகள் ஸ்தம்பித்த நிலையில் இருந்து கொண்டிருப்பதால், கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சொஸைடி கடன்களை ஒரு வருஷத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும். விவசாயிகளுடைய பம்பு செட்டுகளை ஜப்தி செய்கிறார்கள். அந்த பம்பு செட்டுகள் இல்லாவிட்டால் கழனி என்னவாகும், நிலம் என்னவாகும் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட பிரச்சனை விவசாய மக்களுக்கு இருக்கக் கூடாது.

அங்குள்ள ஏழை அரிசனங்கள் கூலி வேலை செய்துதான் சாப்பிட வேண்டும். வேறு வழி கிடையாது. கூலி வேலையை தினந்தோறும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நிலையில், பழைய அரசாங்கம் இருந்தபொழுது இருந்த நிலையே இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது, இந்த அரசாங்கம் வந்தபிறகு ஏதோ செய்யும் என்று எதிர்பார்த்திருந்த மக்கள் இன்றைக்கு வேதனைப் பட்டுக் கொண்டிருக்கக்கூடிய காட்சியை நாம் பார்க்கிறோம். அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு பழைய அரசாங்கம் உதவி செய்துகொண்டு வந்தது. அது கூட இந்த அரசாங்கத்தில் இல்லை என்று நினைக்கிறேன். சிறு சிறு தொழில்கள் செய்வதற்கு கடன்கள் தரப்படும் என்று சொல்லப்பட்டு, பல லட்சக்கணக்கான விண்ணப்பங்கள் சர்க்காருக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், எந்த இடத்திலும் எதுவும் நடந்ததாகக் காணமுடியவில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு தொகையை ஒதுக்கி, அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அவர்கள் சிறு தொழில்கள் ஆரம்பித்து, தானாகவே தன் உழைப்பைப் பொறுத்து அதில் லாபம் வரக்கூடிய நிலையை எண்ணிப்பார்த்து, அதற்கான உதவி செய்ய வேண்டும். அரிசன மக்கள் ஓட்டிக் கொண்டிருக்கும், உழவடித்துக் கொண்டிருக்கும் நிலங்களை மற்றவர்கள் பட்டா செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, அங்குள்ள அதிகாரிகளுக்கு தக்க உத்தரவிட வேண்டும் என்ற தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அதிகத் தொகை ஒதுக்கி சிறு தொழில்கள் தொடங்குவதற்குக் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பது கண் துடைப்பாக இருக்கிறதே ஒழிய, எந்த விதமான நன்மையும் அடைய முடியாத நிலையில் மக்கள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தண்ணீரும், மின்சாரமும் தேவைப்படுகிற நிலையில் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை அளிக்க வேண்டும். மின்சார கட்டணத்தை 8¼ பைசாவிலிருந்து 9 பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள். 8¼ பைசா கட்டுவதற்கே தாலியைக் கூட அடகு வைத்துக் கட்டவேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த உயர்வையும் தள்ளுபடி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு, எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, எனது அருமை நண்பர் விருதுநகர் தொகுதி திரு. சீனுவாசன் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லாவின் நிலையைப்பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லா ஆண்டாண்டு காலமாக ஒரு பெரிய பஞ்சப் பிரதேசமாக இருந்து கொண்டிருக்கிறது. இராமநாதபுரத்தில் பஞ்சம் என்பது புதியதான காரியம் அல்ல. இதற்கு நிரந்தரமாக ஏதாவது ஒரு திட்டத்தைச் செய்து கொடுக்க வேண்டும்? நிரந்தரமான திட்டம்



என்று சொன்னால், விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால் தண்ணீர் வேண்டும். தண்ணீருக்கு பூமிக்கு அடியே கிணறுகளைத் தோண்ட வேண்டும். கிழக்கு இராமநாதபுரத்தில் கிட்டத்தட்ட 30, 50 அடி வரையில் உப்புத் தண்ணீர்தான் ஆகவே, குழாய்க் கிணறுகளைப் போட்டு பாசன வசதி செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்டநாட்களுக்கு முன்பே மதிப்பிற்குரிய மூக்கையத் தேவர் அவர்கள் 10 ஆண்டுக் காலமாகவே கிழக்கு இராமநாதபுரம் ஜில்லா செழிப்பு அடைவதற்கு ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வெள்ளையர் இந்த நாட்டை ஆண்ட காலத்திலேயே கிழக்கு இராமநாதபுரம் ஜில்லா செழிப்பு அடைய ஒரு திட்டம் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த திட்டம் என்னவென்றால், கேரளாவில் மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் தண்ணீரைக் கிழக்கு நோக்கித் திருப்பி, மேற்பெரியார் கொண்டு வந்து, வைகை டாம் மூலமாக திருப்பி விடவேண்டும் என்பது தான். அதன் மூலம் கிழக்கு இராமநாதபுரத்திற்கு தண்ணீர் கொண்டுவந்து, நாராயணக் கால்வாய் போன்ற கால்வாய் மூலம் கிட்டத்தட்ட 3 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியும். அப்பேர்பட்ட காரியங்களில் தமிழக அரசு அனுகூலமான முறையில் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாடு முதல் அமைச்சர், பொதுப் பணித்துறை ஆகியோர் கேரள முதல் அமைச்சரை சந்தித்து, இது சம்பந்தமாகப் பேசி விரைவில் முடிவு எடுக்கவேண்டும்.

இராமநாதபுரம் ஜில்லாவில் கிட்டத்தட்ட ரூ. 65, 70 லட்சம் வரி பாக்கி இருக்கிறது. கடந்த 10, 15 ஆண்டுகளாக பாக்கி இருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லா பழைய ஜமீன் பகுதி. ஜமீன்தார்கள் நாட்டை ஆண்ட காலத்திலே கொடுக்கவேண்டிய வரி பாக்கி. அது சம்பந்தமாக சரிவர கணக்கு வழக்கு கூட வைக்கப்படவில்லை. ரூ. 70 லட்சம் பாக்கி இருக்கிறது. கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட தக்காவிக் கடன், 1957-ம் ஆண்டு புயல் கடன் அதற்குப் பிறகு கொடுக்கப்பட்ட கடன் ஆகியவைகள் தான் பாக்கியாக இருக்கிற காரணத்தினால், அந்த ரூ. 70 லட்சம் வரி பாக்கியை கிழக்கு இராமநாதபுரம் ஜில்லா மக்களுக்கு தள்ளுபடி செய்துகொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நமது முதல் அமைச்சர் அவர்கள் இன்று சட்டசபையில் கேள்வி நேரம் முடிந்தபிறகு ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 8¼ பைசா ஒரு யூனிட்டுக்கு மின்சாரக் கட்டணம் இருந்ததை 10 பைசாவாக உயர்த்தி, அதற்குப் பிற்பாடு விவசாயப் பெருங்குடி மக்களின் வேண்டுகோளுக் கிணங்க அதை 9 பைசாவாக ஆக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஓரளவுக்கு மகிழ்ச்சி. விவசாயப் பெருங்குடி மக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால்

[திரு. கரு. சீமைச்சாமி] [1970 ஏப்ரல் 4

அவர்களுக்கு எந்த அளவுக்கு சலுகைகள் கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சேலம் இரும்பாலைத் திட்டம் வந்துவிடும், வந்துவிடும், நாளை வந்துவிடும் என்று எதிர்பார்த்தோம், ஏமாற்றம்தான் கிடைத்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பச்சைக்கொடி காட்டியாகிவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசு சேலம் இரும்பு ஆலைக்கு சிவப்பு கொடி காண்பித்து விட்டார்கள் என்றுதான் கொள்ளவேண்டும். ஏனெனில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் இரும்பாலை சேர்க்கப்பட வில்லை. பத்து ஆண்டு காலமாக சேலம் இரும்பாலைத் திட்டம் நிறைவேறவேண்டும், அதற்கான முயற்சி எடுக்கவேண்டும் என்று பல தடவையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தி.மு.க. ஆட்சியி லிருக்கிற நேரத்தில் எப்படியாவது சேலம் இரும்பாலைத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்றால், மத்திய அரசை நாம் கெஞ்சிக் கேட்டு பயனில்லை. சேலம் இரும்பாலைத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்பதற்காக தி.மு.க. அரசு ஒரு போராட்டம் நிச்சயம் நடத்தவேண்டும். அப்பேர்ப் பட்ட போராட்டம் நடந்தால், தி.மு.க. அரசோடு தோளோடு தோள் நின்று சுதந்திராக் கட்சி அவர்களோடு ஒத்துழைக்கும். நிச்சயம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் இரும் பாலைத் திட்டத்தைச் சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முதல் அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

சமீபத்தில் ராஜ்ய சபைத் தேர்தல் நடந்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும். ராஜ்ய சபை தேர்தல் நடந்தபொழுது மிகவும் பரபரப்பான சூழ்நிலை இருந்தது. ராஜ்ய சபைக்கு 6 ஸ்தானங்களில், தி. மு. க.-வைச் சேர்ந்த பிற கட்சியினர்கள் 5 ஸ்தானங்கள். பழைய காங்கிரஸ் ஒரு ஸ்தானம், ஆகிய ஆறு ஸ்தானங்களுக்கு ஆறு உறுப்பினர்களை அவர்கள் போட்டிருந் தார்கள். அந்த நிலைமையில் அவர்கள் நிச்சயம் போட்டி யில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், 7-வது உறுப்பினராக மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 10 ஆண்டுகளுக்கு இந்த சட்டமன்றத்தில் மந்திரியாகப் பணி யாற்றியவர், மத்திய அரசாங்கத்தில் மந்திரியாக பணியாற்றியவர் 7-வது உறுப்பினராக வந்தார்கள்.

ஏழாவது வேட்பாளராக வந்தபோது, எல்லோருக்கும் பேர் அதிர்ச்சியாக இருந்தது. 7, 8 உறுப்பினர்களை மட்டும் கொண்ட இந்திரா கட்சியைச் சேர்ந்தவர்கள் எப்படி வெற்றி பெறமுடியும்? குறைந்தது 31 வோட்டுக்கள் வேண்டும். ஆனால், எந்த அடிப் படையில் திரு. சி. சுப்பிரமணியம் தேர்தலில் இறங்கியிருக் கிறார்கள் என்கிற ஐயப்பாடு ஏற்பட்டது. பலவாறாகப் பேசப் பட்டது.



1970 ஏப்ரல் 4]

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

**திரு. கரு. சீமைச்சாமி :** . . . . *

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பாயிண்ட் ஆப் ஆர்டர். பொதுப் படையாக இப்படிச் சொல்லுவது நல்லதல்ல.

**திரு. கரு. சீமைச்சாமி :** குறிப்பாகச் சொல்ல வேண்டியதில்லை. திரு. சுப்பிரமணியமே வந்தார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அவையில் இல்லாதவர் களைப் பற்றி குற்றச் சாட்டுகளைப் பேசக்கூடாது என்று விதி முறைகள் இருக்கின்றன.

**திரு. கரு. சீமைச்சாமி :** குற்றச்சாட்டு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** நீங்கள் சொல்லுவது குற்றச்சாட்டுத்தான். வேறு என்ன? குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** குற்றம் சாட்டவில்லை. நடந்ததைச் சொல்கிறேன். சுப்பிரமணியமே வந்தார்கள். சுதந்திராக் கட்சி உறுப்பினர்களைப் பார்த்தார்கள்; திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பார்த்தார்கள்; பார்வர்ட் பிளாக் உறுப்பினர் களைப் பார்த்தார்கள். அவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வேறொரு கட்சியைச் சேர்ந்தவர்கள். ஒரு கட்சி சார்பில் மற்றக் கட்சிக்காரர் மற்றவர்களைப் பார்ப்பது என்பது அரசியல் சம்பிரதாயம் அல்ல. சுப்பிரமணியம் தேர்தலில் நின்றதே நியாயமற்ற செயல் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** தேர்தலில் நிற்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. ஒரு கட்சிக்காரர் சார்பில் மற்ற கட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளும் நிலை இருக்கலாம். மேற்கொண்டு அதைப்பற்றி பேசவேண்டாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** மற்ற கட்சிக்காரர்களைப் பார்க்கலாம்.

**திரு. கோ. பூவராகவன் :** திரு. சுப்பிரமணியம் தேர்தலில் நின்றதே நியாயம் அற்ற செயல் என்று சொல்கிறார். அந்த வார்த்தைகளை சபையின் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதா பற்றிய விவாதத்தில், பொது விவாதத்தில் ஈர்க்கத் [illegible]பட்ட கருத்துக்களை, அரசாங்கத்தின் கவனத்தை [illegible] அப்படியிருந்தால், தக்க வகையில் கருத்துக்களைத் தாவே[illegible]ட்டதல்ல[illegible], வெளியிலே அவையோடு, அரசோடு தொடர்பில்[illegible] நிலை[illegible]ம் இருக்கிறது. நடப்பவைகளை அல்ல, எடுத்துச் சொல்[illegible]

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் [illegible]ங்க அகற்றப் பட்டது

வெளியிலே நடப்பவைகளைச் சொல்லக் கூடாது என்பதற்கு காரணம், அந்தக் கருத்துக்களுக்கு பதில் உரைக்க வாய்ப்பு இல்லை என்பதால். வெளியிலே கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளலாம். அவையிலே பேசும்போது, அப்படிப்பட்டவைகளுக்கு 'ரெபரன்ஸ், பாஸிங் ரிமார்க்' என்ற வகையில் ஏதாவது சொல்லலாம், பெயர்களைக் குறிப்பிடாமல்; ஆனால் குற்றம் குறை கூறக்கூடாது என்று மரபு இருக்கிறது. அவை வெளியிலே எழுமானால், வெளியிலே பதில் சொல்லலாம், அதற்கான வாய்ப்புக்கள் அங்கே இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட வாதங்களுக்கு இந்த அவையை பயன்படுத்தக் கூடாது என்பதுதான் மரபு. நிதி ஒதுக்கீடு மசோதாபற்றி, அரசோடு தொடர்புள்ள கருத்துக்களை மட்டும் கூறவேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

**திரு. கே. விநயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய அவை முன்னவர் சொல்வது நல்ல கருத்து. அதை எல்லாக் கட்சிக்காரர்களும் அநுசரிக்க வேண்டும். நண்பர் சீனிவாசன், காமராஜரைத் தோற்கடித்தது ஏதோ பெரிய காரியம் போலவும், காமராஜரைப்பற்றி பேசுவதே காரியமாக, ஊர் ஊராகச் சென்று இன வேற்றுமையைக் கிளப்புகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதையும் எடுக்க வேண்டும் என்பது தான் சட்டசபைக்கு ஒழுங்கு, நல்லது. அந்த மாதிரி காமராஜரைத் தாக்கிப் பேசியதை, தானே, To depend himself he is not here எப்படி சுப்பிரமணியம் இங்கு இல்லையோ, அதே மாதிரிதான் காமராஜரும். அதுதான் நியதி. சட்டசபையிலே நம்முடைய அவை முன்னவர் சொல்வதுதான் நியாயம், அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், அதைச் சொல்லும்போது 'பாயின்ட் ஆப் ஆர்டர்' வராது என்று கிண்டல் செய்யலாம்; சும்மா இருந்து விட்டு, சுப்பிரமணியத்தைப் பற்றிச் சொல்லும்போது அதை நீக்க வேண்டும் என்றால், There should not be double standards of judgement in our House. ஆகவே, அதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, நான் இங்கே ராஜ்ய சபைத் தேர்தல் பற்றி குறிப்பிடுவதற்குக் காரணம், சட்ட மன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தப்பட்டார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்குத்தான். சி. சுப்பிரமணியம் முதல் அமைச்சர் காலை வாரிவிட்டார்கள், சுதந்திராக் கட்சி காலை வாரிவிட்டார்கள், பழைய காங்கிரஸ் காலை வாரிவிட்டது என்றெல்லாம் அறிக்கை விட்டார்கள். தேர்தலில் வோட்டுப் போடுவதில் அநாகரிகத்தைப் புகுத்த வேண்டாம். ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அகில இந்தியாவிலும் பல மாநிலங்களில் தேர்தல் நடந்தன. ஆனால் தமிழ் நாட்டில், சட்ட மன்ற உறுப்பினர்கள் மானத்தைக் காத்தார்கள் என்ற பெருமையைத் தேடிக்கொடுக்கும் அளவுக்கு, கண்ணியமான

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



முறையில் நடந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் சொல்கிறேன், வேறு எந்தக் காரணத்திற்காகவும் இல்லை.* *

(மணியடிக்கப்பட்டு, திரு வரதராஜன் அழைக்கப் பட்டார்.)

**திரு. கே. என். குமாரசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. சுப்பிரமணியம் அவர்கள் அவர்களுடைய கட்சியை மட்டும் நம்பி நிற்கவில்லை. மற்ற கட்சிகளும் ஆதரவு அளிக்கின்றன என்ற நிலையில், எல்லாக் கட்சியையும் வோட்டுக் கேட்கும் போது, எந்த உறுப்பினரையும் வற்புறுத்தி . . . .
(குறுக்கீடு) வற்புறுத்தினார் என்று சொன்னார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** அவர்கள் சொன்னார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** நீங்கள் எழுந்தது பாயின்ட் ஆஃப் ஆர்டருக்காக. ஆனால், இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. திரு. வரதராஜன்.

***திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் மேல் பேசும்போது, கால்நடை உதவியாளர்கள் 2 ஆயிரம் பேர்கள்வரை தலைநகர் வந்து போயிருக்கிறார்கள். கடந்த 10, 12 நாட்களாக முதலமைச்சர் அவர்களையும், அத்துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்களையும் சந்திப்பதற்காக சென்னையில் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை சந்திக்க வேண்டும். அவர்கள் கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுகிறேன்.

(திரு. வி. டி. அண்ணாமலைத் தலைமை)

அடுத்து, பரிசுச் சீட்டுத் தொகையை உயர்த்தியிருக்கிறார்கள். பணம் வந்தால் ஓரளவுக்கு உதவியாக இருக்கும் என்கிற சங்கடமான நிலையில்தான் பரிசுச் சீட்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது, சீட்டு விலை இரண்டு ரூபாய் என்றும், பரிசுத் தொகை 10 லட்சம் ரூபாய் என்றும் வைப்பதன் மூலமாக மனிதர்களின் சபல சுபாவத்தைப் பயன்படுத்திக் கொண்டு சூதாட்ட மனோபாவத்தை ஏற்படுத்துகிறோம். பரிசுத் தொகைகளை இப்படி உயர்த்தி, உயர்த்திக்கொண்டே போகும்போது, பின்னால் சூழ்நிலை மிகவும் பாதகமாகப் போய்விடும். ஆகவே, பரிசுச்சீட்டு விலையை உயர்த்தி, பரிசுத் தொகையையும் உயர்த்திக்கொண்டு போகக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் வறட்சி நிலை இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர், பாளையம் போன்ற பகுதிகளில் வறட்சி நிலைமையின் காரணமாக கடன் வசூலை ஒத்தி வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை நான் வரவேற்கிறேன். இன்னும் திண்டுக்கல் வட்டத்திலும், திருமங்கலம், உசிலம்பட்டி, பழனி தாலுகாவின் சில பகுதிகளிலும் வறட்சி நிலை நீடிக்கிறது. சர்க்கார் உடனடி

யாகக் கவனித்து தக்க நிவாரணம் செய்ய வேண்டும். கடன் வசூல்களை ஒத்திவைக்க வேண்டும். நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாவட்டத்தில் கரும்பு விவசாயிகள் அலங்காநல்லூரில் கூட்டுறவுத் துறையில் இருக்கும் கரும்பாலையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த கரும்பு விவசாயிகள் மதுரை மாவட்டக் கலெக்டர் ஆபீஸ்முன் தங்களுக்கு நியாயவிலை கிடைக்க வேண்டுமென்பதற்காக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் அவர்களுக்கு டன் ஒன்றுக்கு 40 ரூபாய், 45 ரூபாய்கூட கிடைக்காமல் போனதால் தங்களுடைய கரும்பை எரித்து பாழாக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு டன்னுக்கு 90 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் பங்குத் தொகை என்ற பெயரில் டன்னுக்கு 3½ ரூபாய் எடுத்துக் கொள்கிறார்கள். இப்படி எடுத்துக் கொண்ட பணம் ஒவ்வொரு விவசாயிக்கும் ஏழாயிரம், எட்டாயிரம் ரூபாய் வரை எந்தக் கணக்கிலும் சேராமல் இருக்கிறது. மேலும் அடிக்கரும்பு கொழுத்தாடை என்ற பெயரால் டன்னுக்கு பத்து, பதினைந்து ரூபாய் வரையில் எடுத்துக் கொள்கிறார்கள். இப்படியாக எல்லாவற்றுக்கும் எடுத்துக் கொண்டதுபோக மீதி டன்னுக்கு ஐம்பது அல்லது அறுபது ரூபாய்தான் கரும்பு விவசாயிக்கு கிடைக்கிறது. இதன் காரணமாக கரும்பு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். டன்னுக்கு 90 ரூபாய் தரவேண்டும் என்று ஒப்பந்தம் இருந்தாலும் அதை அமல்படுத்தவில்லை. கேட்டால், ஆலைக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள். விவசாயிகளால் இந்தக் கரும்பாலைக்கு நஷ்டம் ஏற்படவில்லை. ஊழலால்தான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கரும்பு விவசாயிகள் மூன்று நாட்களாக கலெக்டர் அலுவலகத்தின்முன் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், நியாயவிலை கொடுக்க வேண்டும், ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டும் என்பதே அவர்களுடைய கோரிக்கை. சர்க்கார் உடனடியாக இதன்பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய தீர்ப்பு விரைவாக வெளிவர முயற்சி எடுக்க வேண்டும். 'பிரச்னைகள் தோன்றும்போதெல்லாம் கமிஷன் தோன்றும்' என்று சொல்வார்கள். கமிஷன் அந்தப் பிரச்னையை ஊறுகாய்ப்பானையில் போட்டுவிடும். ஆகவே, விலைவாசிகள் ஏறுகிற நேரத்தில் சம்பளக் கமிஷனுடைய தீர்ப்பு எப்போது வரும் என்று சிப்பந்திகள் எதிர் நோக்கியிருக்கிறார்கள். சம்பளக் கமிஷனுடைய தீர்ப்பு சீக்கிரத்தில் வர வேண்டுமென்று வற்புறுத்தி, தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.



அடுத்து, நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிற இந்தியாவின் ஒரு பகுதிதான் நம்முடைய மாநிலம். கடுமையான பொருளாதார நெருக்கடி என்ற விஷச்சக்கரத்தில் நாம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பார்த்தாலும்கூட, ஒரு லட்சத்து முப்பதினாயிரம் பேர் மின்சாரத் துறைக்கு வேலைக்காக மனுப்போட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு காலியிருக்கும் இடம் 1,300 குமாஸ்தா வேலைக்கு. எவ்வளவு பரிதாபகரமான நிலைமை நாட்டிலே வளர்ந்துகொண்டு வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் நூற்றுக்கு நாற்பத்திரண்டு பேர் நிலமற்ற விவசாயிகள். இன்றைக்கு தமிழகத்தில் 4 கோடி பேர் இருக்கிறார்கள் என்றால், கிராமப்புறங்களில் இருப்பவர்கள் சுமார் 2½ கோடி பேர். அந்த 2½ கோடி பேரில் 1 கோடி பேர் நிலமற்றவர்கள். கணபதியா பிள்ளை கமிஷன் சொல்லியிருக்கிறது, நஞ்சை இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்திலேகூட விவசாயிகளுக்கு ஆண்டில் ஐந்து மாதங்கள் தான் வேலை இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புஞ்சை பிரதேசங்களிலே, வறண்ட பிரதேசங்களிலே இருக்கும் விவசாயி எப்படி அவதிப்படுவான் என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு விலைகள் உயர்ந்து வருகின்றன. விலை உயருவதற்கும் தங்களுக்கும் பொறுப்பு இல்லை, மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று மாநில சர்க்கார் சொல்லலாம். இப்போது 30 புள்ளி உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு நாட்டில் இருக்கும் சிப்பந்திகள், தொழிலாளர்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் நெருக்கடி ஏற்பட்டு, குமுறல் ஏற்பட்டிருக்கிறது. மாநில சர்க்கார் பட்ஜெட்டைத் தயாரிக்கிறபோது ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வளவு கடுமையான நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றனவே, இதற்குக் காரணம் என்ன? இதைத் தீர்க்க மத்திய சர்க்கார் என்ன கொள்கையை அனுஷ்டிக்கிறது, அதை மாற்ற மாநில சர்க்கார் என்ன கொள்கையை அனுஷ்டிக்க வேண்டும என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய நாட்டில் 22 ஆண்டுகளாக உற்பத்தியான செல்வம் எல்லாம் சில தனிநபர்களின் கையிலேபோய்ச் சேர்ந்திருக்கிறது. ஏகபோக மூலதனம் சிலரின் கையில் தேங்கிக் கிடக்கிறது. இதையெல்லாம் விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் கூடப் போடப்பட்டது. நாம் இதைச் சொல்லும்போது, 'இசம்'கள் என்றோ, 'தத்துவங்கள்' என்றோ கூறி, இதைத் தள்ளி விட முடியாது. இந்த விஷச்சக்கரத்திலிருந்து விடுபட மாநில சர்க்கார் முயற்சி செய்யாவிட்டால் மாநில சர்க்கார் பட்ஜெட்டால் மக்கள் நன்மை பெற இயலாது.

நிலச்சீர்திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறோம். உச்சவரம்பு மசோதா ஏமாற்றம் அளிப்பதாகவே

[திரு. என். வரதராஜன்] [1970 ஏப்ரல் 4

இருக்கிறது. அதிலுள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். சாதாரண விவசாயிக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் கிடைக்கக்கூடிய முறையிலே இருக்க வேண்டும். ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டார்ட் ஏக்கர் இருக்கும்படியாக உச்ச வரம்பு சட்டம் இருக்கவேண்டும். இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மசோதா வந்திருப்பது ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. பழைய நில உச்சவரம்புச் சட்டத்தின் ஓட்டைகள் அப்படியே இருக்கின்றன. இதை மாற்றியாக வேண்டும்.

அடுத்தபடியாக, தொழிலைப் பொறுத்தவரையில் பொதுத் துறையில் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும். எண்ணெய்க் கம்பெனிகள், பெரும் நிலக்கரிச் சுரங்கங்கள், ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம் போன்றவை நாட்டு உடைமையாக வேண்டும். செல்வம் ஒரு பக்கத்தில் குவிவதைத் தடுக்க வேண்டும், இன்னொரு பக்கத்தில் வறுமை ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். இதற்கு அடிப்படையான திட்டம் என்ன என்பதை ஆராய வேண்டும். இந்த நிலையில் மாநில அரசு தெளிவான கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். இதில் மாறுதல் இல்லாவிட்டால் நெருக்கடி நீடிக்கவே செய்யும்

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், முதலில் பத்து பைசாவாக்கிய பிறகு, 'ஒரு பைசாவைக் குறைத்திருக்கிறோம்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏன் இந்த அவசரக் கோலம்? 'அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததைப்போல்' முதலில் சில வரிகளை உயர்த்தி, பின்னால் வாபஸ் வாங்குவது ஏன்? மதுரை மாவட்டத்தில் மேலூர் பகுதியிலே பஞ்சாயத்து யூனியன் செஸ் வரியை உயர்த்திவிட்டு, கிளர்ச்சியெல்லாம் நடந்ததற்குப் பிறகு, மாவட்டக் கலெக்டர் அவர்கள் அந்த வரியை வாபஸ் வாங்கியிருக்கிறார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. அந்தமாதிரியான வரிகள் ஏற்றுவதை மக்கள் அனுமதிக்கவில்லை. காங்கிரசார் ஏற்கெனவே எவ்வளவு ஏற்ற வேண்டுமோ அவ்வளவு ஏற்றிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இப்பொழுது பற்றுக்குறைதான் இருந்து வருகிறது. பற்றுக் குறை துணியைத்தான் நாம் அணிந்து கொண்டிருக்கிறோம். அந்தத் துணியை காலுக்கு இழுத்தால் தலைக்கு எட்டவில்லை, தலைக்கு இழுத்தால் காலுக்கு எட்டவில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. இந்தப் பற்றுக்குறை பட்ஜெட்டை கல்விக்கு இழுத்தால் வைத்தியத்திற்கு இல்லை, வைத்தியத்திற்கு கொஞ்சம் இழுத்தால் கல்விக்கு இல்லை என்ற நிலைமைதான் போட்டிருக்கிறோம். பற்றுக்குறை பட்ஜெட்டை வைத்துக் கொண்டு மக்களுக்கு வாழ்வு அளிக்க முடியாத நிலையில் நாம் இருக்கிறோம்.

நகரசபைகள், பஞ்சாயத்து யூனியன் இவைகளையொட்டிய வேலைகளுக்குக் கொடுக்கும் பணத்தில் 24 கோடி ரூபாயை வெட்டியிருக்கிறோம். இப்படிச் செய்வதால் அந்த வேலை கெட்டுவிடும். நாம் 24 கோடி ரூபாய் வெட்டியிருக்கிறோம் என்று சொன்னால் அதை எடுத்து கல்விக்கு கொஞ்சம், நீர்ப்



1970 ஏப்ரல் 4] [திரு. என். வரதராஜன்]

பாசனத்திற்குக் கொஞ்சம் என்றுதான் இருக்கிறோம் ஆகவே, மொத்தத்தில் இது நிவாரணம் அளிக்கக்கூடிய பட்ஜெட் என்று சொல்ல முடியாது. இந்த வழியில் நிவாரணம் கிடைக்குமா?

வசதியுள்ளவன் தலையில் வரி போடவேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். சரியான நிலச்சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும். மோட்டார் தொழிலை நாட்டுடைமையாக்குங்கள், தேயிலைத் தோட்டங்களை நாட்டுடைமையாக்குங்கள், சர்க்கரை ஆலைகளை நாட்டுடைமையாக்குங்கள் என்று சொல்லி, இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : பெருமதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பேச முடியாமல் விட்டுவிட்ட சில கருத்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே, விவசாயப் பகுதியிலிருந்து வருகின்ற என்னைப் போன்றவர்கள், விவசாயத்தை வாழ்க்கைமுறையாக ஒப்புக்கொண்டிருக்கிற என்னைப்போன்றவர்கள் அதைப்பற்றி அதிகமாகப் பேசுகிற நேரத்தில் அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், நல்ல பற்றுதலோடும், பரிவோடும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மிக சாதாரணப் பிரச்சினைகள் என்று கருதப் மு. ப. 11-30.
படுபவைகள் கூட விவசாய குடும்பத்தை பாதிக்கக்கூடிய அளவுக்கு அமைந்துவிடும். உதாரணமாக புறம்போக்கு நிலத்தில் கிணறு இருந்து அந்த கிணற்றில் இருந்து பாசனம் செய்யக்கூடிய நிலங்கள் பட்டா நிலங்களாக ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்றன. பத்து இருபது பேர்களுடைய பட்டா நிலங்கள், புறம்போக்கு நிலத்தில் இருக்கிற கிணற்றில் இருந்து பாசனம் செய்யப்படுவதாக இருக்கிறது. அப்படி இருக்கிறபோது இந்த புறம்போக்கு நிலத்தில் உள்ள கிணற்றில் மின்சார பம்பு செட்டு வைக்கவோ, மோட்டார் வைக்கவோ சட்டம் குறுக்கே நிற்கிறது. இதைப்போன்ற சூழ்நிலை எங்கள் பகுதியில் ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பதாலும், மற்ற இடங்களிலும் இதுபோல இருக்கக்கூடும் என்று எண்ணுகின்ற காரணத்தினால் அந்தக் கிணறுகளில் மோட்டார், பம்பு செட்டுகள் வைக்க வாய்ப்பளிக்கும் பொருட்டு அந்தக் கிணற்றை பட்டா நிலத்தோடு சேர்த்துத்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்தில்—தாலுக்கா ஆபீசில் உள்ளவர்களுக்கு ஒர்க் லோடு அதிகமாக இருக்கிற காரணத்தினால் நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க பட்டா கொடுக்க ஸ்பெஷல் அதிகாரிகளையே போடுவார்களா என்று கேட்டதற்கு உறுப்பினர் சொல்கின்ற கருத்து ஒத்துக்கொள்ளக் கூடியதுதான், நிதி நிலைமையை அனுசரித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் என்னுடைய பெரம்பலூர் தாலுக்காவில் ஸ்பெஷல்

[1970 ஏப்ரல் 4 [திரு. ஜே. எஸ். இராசு]

தாசில்தார், அவருக்கு கீழே சிப்பந்திகளைப்போட்டு இப்போது நிலமற்றவர்களுக்குப் பட்டா தருகின்ற அருமையான பணியினைத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும் அதையொட்டி வேறு ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொத்தல் இலைக் கலமானால் ஏழைமக்கள்
புனல் நிறைந்த தொட்டியினைப் போலானார் செல்வர்

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிட்டதைப்போல பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவே ஆகக்கூடிய நிலை இன்னமும் இருக்கிறது. ஏற்கனவே சொந்தத்தில் நிலம் வைத்திருப்பவர்களே தன் மனைவியின் பேராலே, வேலை செய்கின்ற பணியாளின் பேராலே 5 ஏக்கர், பத்து ஏக்கர் என்று இந்தப் புறம் போக்கு நிலத்தையும் பெற்று வருகிற சூழ்நிலையும், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கிடைக்காதே போகிற சூழ்நிலையும் இப்போதும் அற்றுப்போய்விடவில்லை. ஆகவே இதைக் கவனித்து நிலம் இல்லாதவர்களா என்று கண்டு, நிலத்தை விற்காமல் விவசாயம் செய்வார்களா என்கிற கருத்தையும் மனதில் வைத்து பட்டா வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஊராட்சி மன்றங்களுக்கு நாம் 5 ஏக்கர், 10 ஏக்கர், நத்தம் புறம்போக்கு, ரோடு புறம்போக்கு என்று புறம்போக்கு நிலங்களை ஒப்படைத்திருக்கிறோம். அப்படி ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் அவர்கள் விவசாயம் செய்வதில்லை. குடியிருப்பு மனைகளாகவும் பயன்படுத்துவதில்லை. குடியிருக்க இடமற்ற ஏழை மக்கள் அந்த நிலத்தை வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பித்துக் கொண்டால் அவர்கள் இந்த ஊராட்சி மன்றத்தின் கருத்தைக் கேட்கிறபோது வேண்டியவர்களாக இருந்தால் கொடுக்கலாம் என்றும், இல்லையென்றால் பழத் தோட்டம் வைக்கப்போகிறோம், தென்னந்தோட்டம் போடப் போகிறோம், இல்லை ப்ரைமரி ஹெல்த் சென்டர் கட்டப்போகிறோம் கொடுக்கக்கூடாது என்று சொல்லி விடுகிறார்கள். இதைக் கவனித்து ஒன்று ஊராட்சிகள் பயன்படுத்திக்கொள்ளவேண்டு மென்றால் பயன்படுத்திக்கொள்ளவேண்டும், இல்லாது வறிதே போட்டிருக்கிற நிலமாக இருந்தால் அதை நிலம் அற்றவர்களுக்கு தாசில்தார், அர்டிஓ கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுடைய நலனில் இந்தத் தமிழக அரசாங்கம் அதிக அக்கறை காட்டிவருவது பாராட்டுக்குரிய தாகும். ஏற்கனவே ஆயிரக்கணக்கான நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் இந்த அரசாங்கம் வழங்கி யிருக்கிறது. ஏறக்குறைய ஒரு லட்சம் பட்டாக்கள் வழங்கப் பட்டும், இன்னமும் குடியிருப்புக்கான மனைகள் இல்லாமல் ஏழை மக்கள் சிரமப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலை மாறவேண்டுமானால் இன்னும் தீவிரமாக இந்தப் பணி நடந்தாக வேண்டும்.



1970 ஏப்ரல் 4] [திரு. ஜே. எஸ். இராசு]

என்னுடைய அனுக்கூர் கிராமத்தில் அரிசன இலாக்கா ஒரு விடுதி கட்ட வேண்டும் என்று சொன்னோம். அம்மையார் அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்டு இலாக்கா நிலங்கள் வறுகை புல்பூண்டு கூட முளைக்காது வறிதே கிடக்கின்றன. இதுபோல நூறு ஏக்கரா, இருநூறு ஏக்கரா என்று இருக்கக்கூடிய நிலங்களை ஏழை மக்கள் கோருகிற போது அரசாங்கம் காட்டு இலாக்காவின் கருத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் அந்த இடத்தில் சந்தன மரம் முளைத்திருக்கிறது, பெரிய பெரிய மரங்கள் இருக்கின்றன என்பதாக ரிப்போர்ட் அனுப்பி விடுகிறார்கள். அந்த இடங்களில் சந்தன மரமும் இல்லை. சவுக்கு மரமும் இல்லை. இதுபோல அரும்பாவூர் கொரக்குன்றூர் இடத்தில் 4 ஏக்கராக்களுக்கு மேல் இருக்கின்றன. காரியா கிராமத்தில் இதுபோல் இருக்கின்றன. இதுபற்றி மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்களிடத்தில் சொன்னபோது, "நான் உங்கள் தொகுதிக்கு வருகிறபோது அந்த இடங்களை நேரில் பார்க் கிறேன். கொடுக்கத் தகுதியுள்ள இடங்கள் என்று நான் கருதினால் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னார்கள். எங்களுடைய துர்பாக்கியம், தமிழக அரசின் துர்பாக்கியம் அவர்கள் போய்விட்டார்கள். இப்போதுள்ள அத்துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டும். செடிகொடிகள் கூட இல்லாது வறிதே இருக்கிற அந்த நிலங்களை ஏழை மக்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஸ்களை எடுத்துக்கொண்டால் இப்போது ஏராளமான ரூட்டுகள் வழங்கப்படுகின்றன. ஏழை எளிய மக்களின் பிரதிநிதி என்கிற முறையில் ஒரு சிறிய வேண்டுகோள். பெரிய பெரிய முதலாளிகளுக்கே மீண்டும் மீண்டும் பர்மிட் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சின்ன சின்ன முதலாளிகளுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்ற கணக்கை அருள்கூர்ந்து ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

தொழில் செய்வதற்கு ஆர்வம் உள்ள பத்துபேர், எட்டுபேர் சேர்ந்து முன்வந்தால் அவர்களைப் புறக்கணிக்காது உதவிசெய்ய வேண்டும். யார்யாருக்கு ஏற்கனவே பஸ் இருக்கிறதோ, வசதி இருக்கிறதோ அவர்களுக்கே உதவுவது சரியல்ல என்று பணிவாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பெரிய முதலாளிகளை உருவாக்குவதை தடுத்து நிறுத்தக்கூடிய பொறுப்பில் இருக்கிறோம். தேசிய மயக் கொள்கையை உருவாக்கி அரம்பித்து அதை நல்ல முறையிலே நடத்திவருகின்ற சூழ்நிலையிலே இருக்கின்றோம். மிகச் சாதாரணமான குடும்பங்கள், ஒரு தாலுகாவுக்கு ஒருவர் அல்லது இரண்டு பேர்கள் அல்லது

10 பேர்கள் என்ற முறையிலே உள்ளவர்களை ஊக்குவிக்கின்ற முறையிலே அவர்கள் குடும்பங்களை வளர்ப்பதற்கும் அந்தந்தக் குடும்பங்களிலே ஓரளவுக்கு நிம்மதியும் நல்ல வருமானமும் ஏற்படவும் அதே நேரத்திலே பொதுமக்களுக்கு வசதியும் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்றால் நம்முடைய கருணை மிகுந்த கலைஞர் அவர்கள் நம்முடைய முதல்வராக இருக்கின்ற இந்த நேரத்திலே அவர்கள், சிறிய அளவுக்குப் பணம்பெற்றவர்கள் ஒன்று சேர்ந்து அல்லது தனியாக மனுக்கள் போட்டால் அந்த மனுக்களை கருணையோடு ஏற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் ஆணைகள் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்ததற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. கோ. பூவராகன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற நிதி ஒதுக்கீடு மசோதாவின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

அமைச்சர்கள் அவரவர்கள் மானியக்கோரிக்கைகளை அளித்து இந்த ஆண்டு சிறப்பான முறையிலே எடுத்துக்கொண்ட இனங்களுக்காக செலவுசெய்து அடுத்த ஆண்டு சிறப்பாக மேலும் நல்ல காரியங்களைச் செய்வதற்கும் நல்ல திட்டங்கள் வகுப்ப தற்கும் இந்த நிதி ஒதுக்க மசோதா அடிப்படையாக அமையும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு இனங்களுக்காக நிதி ஒதுக்கப்படுகின்றபோதெல்லாம் பல்வேறு கருத்துக்கள். பேசப்படுகின்றன. அந்தக் கருத்துக்களையெல்லாம் அமைச்சர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு சரியான முறையிலே நிறைவேற்றவேண்டுமென்பது இந்த மன்றத்தில் உள்ள உறுப் பினர்களின் கோரிக்கையாகும்.

விவசாய இலாகாவைப் பொறுத்தவரையில் புதிய நோக்கத் தோடு பல புதிய இனங்களுக்காக பணத்தை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் நல்ல முறையில் கவனிக்கப்படாமல் கிடக்கிற புஞ்சை நிலங்களையும் நல்ல முறையிலே விவசாயத்திற்கு கொண்டுவருவதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியோடு இந்த அரசாங்கம் செய்வதற்கு முன்வந்திருக்கிறது. மத்திய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கின்ற நிலைமை இருந்தாலும் நம்முடைய அரசாங்கமும் மேலும் சில கோடிகளைச் சேர்த்து புஞ்சைநிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். நூறு லட்சம் ஏக்கர் இன்றைய தினம் புஞ்சை நிலமாக இருக்கிறது. ஒரு சில லட்ச ஏக்கர்களுக்குத்தான் கவனம் செலுத்தமுடியும் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே பார்த்தேன். இதை ஏன் சொல்ல விரும்புகிறேன் என்றால் இதைச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் விவசாயத் திற்கு அதிகமான நிலங்களை கொண்டுவருவதற்கும் வசதியாக இருக்கும்.





குறைந்த காலத்தில் விளைச்சல் கொடுக்கக்கூடிய புஞ்சை நிலத்தில் பயிரிடக்கூடிய விதைகளை இந்த இலாகா கண்டுபிடிக்க வேண்டும். மழை குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே குறுகிய காலத்திலே பயிர்செய்யக்கூடிய விதைகளை இந்த விவசாய ஆராய்ச்சி இலாகா கண்டுபிடிக்கவேண்டும். மழையில்லாத காலங்களிலே—கிணறுகளைப் போடுகிறோம், அணைக்கட்டுகளைக் கட்டுகிறோம், பாசன வசதிகள் எல்லாம் செய்கிறோம், ஒரு போகத்தை இரண்டு போகமாக மாற்றுகிறோம், இரண்டு போகங்களை மூன்று போகங்கள் சாகுபடிசெய்யக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவருகிறோம், இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தாலும்—பயிர்செய்யக்கூடிய முறையிலே குறுகிய காலப் பயிர் இனங்களைக் கண்டுபிடித்தாகவேண்டும். இந்த 100 லட்சம் ஏக்கரையும் என்றைய தினம் நாம் விவசாயத்திற்கு நல்ல முறையிலே கொண்டுவருகிறோமோ அன்றைய தினம்தான் கிராம மக்கள் நல்ல முறையிலே வாழ்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும். அப்பொழுதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்.

இன்றைய தினம் படித்தவர்கள் மத்தியிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம் இருந்தாலும், கிராமப் புறங்களிலே விவசாயிகள் எத்தனை மாதங்களுக்கு வேலைசெய்யக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். பாசன வசதி யிருக்கின்ற இடங்களிலே இரண்டுபோகம் மூன்று போகத்திற்கு சில மாதங்களுக்கு வேலை இருக்கலாம், மற்ற நாட்களில் வேலை யில்லை. இதைத்தவிர பாசனவசதியில்லாத இடங்களில் மிகச் சொற்ப நாட்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது, மற்ற நாட்களிலே அவர்கள் வெறுமனே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய முறையில் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். குழாய்க் கிணறுகள் அதிகமாக இறக்கப்படவேண்டும். அதற்கான கருவிகள் போதுமானதாக இல்லை. இருக்கின்ற கருவிகளும் அடிக்கடி பழுதுபட்டுப்போகின்ற நிலைமையில் இருக்கின்றன. இந்த இலாகாவிலே உள்ளவர்கள் எத்தனை நாட்களுக்கு அந்தக் கருவிகள் வேலைசெய்கிறது என்று பார்த்தால் வேலை செய்யாத நாட்கள்தான் அதிகமாக இருக்கும். இதன் காரணமாக குழாய்க் கிணறுகள் இறக்கவேண்டுமானால் ஆறு மாதம் 9 மாதம் என்று காலதாமதமாகிறது. சாதாரணமாக 8 அல்லது 9 நாட்களில் குழாய் கிணறுகளை இறக்கிவிடுகின்ற ஆற்றல் அந்தக் கருவி களுக்கு இருக்கின்றது, இருந்தாலும் பழுது அடிக்கடி ஏற்பட்டு விடுகின்ற காரணத்தினாலே 4 மாதம் 6 மாதம் 8 மாதம் என்று காலம் பிடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கண்காணிப்பாக இருந்து டார்ஜெட் வைத்து குறைந்தபட்சம் வறண்ட பகுதிகளிலாவது குழாய்க்கிணறுகளைப் போடுவதற்கு துரிதப்படுத்த வேண்டும். கருவிகள் போதவில்லையென்றால், நெய்வேலியில் கருவிகள் வாடகைக்குத் தருகிறார்கள், அவற்றைப் பெற்று குழாய்க் கிணறுகளை அதிகமாக இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திரு. கோ. பூவராகன்] [1970 ஏப்ரல் 4

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதைப்போல் காடு என்று சொல்லப்படுகின்ற இடங்கள் புல் முளைத்து இருக்கின்ற இடங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன, காட்டு இலாகா இருக்கிறது, அதுவும் அதைப் பயன்படுத்தாமல் செடி, கொடி, மரங்கள் வைக்காமல் வீணே 1,000 ஏக்கர் 500 ஏக்கர் என்று இருக்கிறது. அவற்றை அரிசன மக்களுக்கு ஏழை எளிய பின்தங்கிய மக்களுக்கு விவசாயத்திற்காக அவர்கள் ஈடுபடுகின்ற முறையில் குத்தகைக்கோ அல்லது பட்டா போட்டோ கொடுத்தால் அவர்கள் நல்ல முறையிலே பயிர்செய்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சந்தர்ப்பம் இருக்கும்.

எங்களுடைய ஜில்லாவிலே கருவேலப்பங்குறிச்சிக்காடு 1,000 ஏக்கர் இருக்கிறது. அங்கே நெல் கரும்பு இவற்றை உற்பத்தி செய்யலாம், இப்பொழுது புல்பூண்டு முளைத்துப்போய் விருத்தாசலத்திற்கு அருகாமையில் உள்ள இடத்தில் இருக்கிறது. அதுபோல ரூபநாராயண நல்லூர் என்ற இடமும் புல்பூண்டு முளைத்திருக்கின்ற நிலையில்தான் இருக்கிறது, அதையும் புஞ்சைப் பயிர்கள் விவசாயம் செய்வதற்கு முயற்சி செய்யலாம். உளுந்தூர் பேட்டை-திருச்சி சாலையிலே ஒரு சிறிய காடு இருக்கிறது. அந்தக் காட்டையும் வளப்படுத்தி ஆடுகளை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். அப்படிச் செய்தால் அந்த இலாகாவிற்கு நல்ல வருவாயைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

பல இடங்களிலே இப்படி விவசாயத்திற்கு வராத நிலங்கள் இருப்பதையெல்லாம் இந்த விவசாய இலாகா சர்வே செய்து அந்தப் பகுதிகளையும் விவசாயத்திற்குக் கொண்டுவர வேண்டும். அந்த மானியத்தில் பேசும்பொழுது நான் சொன்னேன். இதற்காக ஒரு தனி இலாகாவை வைத்து அதற்காக அதிக அளவிலே பணத்தை ஒதுக்கி அந்தப் பொறுப்பை ஒரு தனி டைரக்டர் நியமித்து அவரிடம் கொடுத்தால் நல்ல முறையில் செய்வார்கள், அதனால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவும். இதைத்தவிர விளைகின்ற பொருட்களுக்கு நல்ல விலைகள் கிடைக்கவேண்டும். அப்பொழுதுநான் உற்சாகமாக அவர்கள் அந்தப் பணியில் ஈடுபடுவார்கள். உற்பத்தியைப் பெருக்கினால் அதைச் சார்ந்த தொழில்களும் வளர்ந்து அதன் காரணமாக நிதி நிலைமையும் உயர்ந்து வளம்பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒரு அறிக்கையை விட்டார்கள். அந்த அறிக்கையை விட்டதற்காகப் பாராட்டுகிறேன். மின்கட்டணம் 8¼ பைசா என்று இருந்ததை 9 பைசா என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கேட்டது 8¼ பைசா; நீங்கள் கொடுத்திருப்பது 9 பைசா. முக்கால் பைசா உயர்த்தியிருக்கிறீர்கள். ஒன்பது பைசா வரும் என்பது தெரிந்தாலும் கூட நாங்கள் 8¼ பைசா என்று கேட்டுக் கொண்டிருந்தோம். கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்பவர்களுக்கும், அணைக்கட்டுத் தண்ணீரைப் பெறுகின்ற விவசாயிகள் தண்ணீருக்காகக் கொடுக்கின்ற ரூபாயும், கிணற்றின் மூலம்



1970 ஏப்ரல் 4] [திரு. கோ. பூவராகன்]

விவசாயம் செய்கிறவர்கள் மின்சாரக் கட்டணமாகக் கொடுக்கின்ற ரூபாயும் எவ்வளவு என்று முதலமைச்சர் அவர்கள் சற்றுக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

அரசாங்கத்திற்கு நஷ்டம் வாலாம். ஆறு கோடி, ஒன்பது கோடி என்று நஷ்டம் வருகிறது, அதை எப்படித் தவிர்ப்பது என்று கேட்கிறார்கள். அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைத் தவிர்க்க வழிகள் இருக்கின்றன. மின்சார இலாகாவில் நஷ்டம் வரக்கூடிய சில இனங்கள் இருக்கின்றன. அந்த இலாகாவோடு பேசி அவற்றைத் தவிர்க்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நிறைய திருட்டுகள் போகின்றன. வேஸ்டேஜ் ஆகின்றன. மின்சாரக் கட்டணங்கள் காலாகாலத்தில் வசூலிக்கப்படாமல் இருக்கின்றன. இதனால் எல்லாம் அந்த இலாகாவுக்கு நஷ்டம் வருகிறது. இரண்டு வருஷம், மூன்று வருஷம் என்று மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படாமல் பிறகு அப்படியே தள்ளியும் விடுகிறார்கள். லட்சக்கணக்கான ரூபாயைத் தள்ளிக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து அந்த இலாகாவை சிக்கனமாகவும், துரிதமாகவும் இயக்க நடவடிக்கை எடுத்தால் மின்சாரக் கட்டணத்தால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்ட முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எழுபத்தைந்து அடி கிணறுகள், அதற்கு மேல் உள்ள கிணறுகள் என்று இல்லாமல், பம்ப் செட் வைத்து விவசாயம் செய்கிற எல்லாக் கிணறுகளுக்கும், எல்லா மாவட்டத்திலும் மின்கட்டணம் 9 பைசே என்ற நிலையை உருவாக்கி விவசாயிகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி அவர்கள் எல்லாம் உணவு உற்பத்திப் பெருக்கத்திலே ஈடுபடுவதற்கான வழிவகையைச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப் பகுதிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதைப் பொறுத்தவரை என்னுடைய பகுதியில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக எந்த வேலையும் நடந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பணியை அந்தப் பகுதியில் விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும்.

விருத்தாசலம் நகரப் பஞ்சாயத்தாக இருந்தது இன்றைய தினம் நகரசபையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு மருத்துவமனை இருக்கிறது. ஏற்கெனவே அந்த மருத்துவமனை போதாததாக இருந்தது. இன்று நகரசபையாக ஆகியிருக்கும் நிலையில் அந்த மருத்துவ மனையில் படுக்கைகளை அதிகமாக்க வேண்டுமென்றும், மருத்துவ மனைக்கான கட்டடங்களைக் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நகரசபையாக ஆக்கும்போது அதிலே எந்தெந்தப் பஞ்சாயத்துக்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டார்கள். நகரசபையாக அறிவித்துவிட்ட பிறகு பார்க்கும்போது ஒரு பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய ஒருசில கிராமங்களை விட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் கேட்டு அவர்கள்

பதில் அளிக்கும்போது அது தூரத்தில் இருக்கிறது, அப்படி இருக்கிறது, இப்படி இருக்கிறது என்று கூறிவிட்டார்கள். அதனுடன் தொடர்புள்ள பஞ்சாயத்தை விட்டுவிட்டு அதற்கு அப்பாலுள்ள தொடர்பற்ற பஞ்சாயத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களோ, மற்ற அமைச்சர்களோ அந்தப் பகுதிக்கு வரும்போது அங்கிருப்பவர்களை இதைப் பற்றிக் கேட்டால் நன்றாகப்புரிந்து கொள்ள முடியும் முந்நூறு ஜனத்தொகை உள்ள கிராமம் அந்த பஞ்சாயத்துடன் இணைந்த பகுதி அது. யாரோ ஒருவர் மகஜர் கொடுத்தார் என்பதற்காக அதை நீக்கிவிட்டார்கள். ஏற்கனவே நோடிஃபை செய்த கிராமத்தை விட்டிருப்பது பொருத்தமாக இருக்காது. அதை நகரசபையுடன் சேர்த்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு செஸ் நிதியின் மூலம் ஏராளமான பணம் வருகிறது. அந்தப் பணத்தை அந்தப் பகுதியில் நல்ல முறையில் செலவிடுகிறார்களா ? என்ன குறியளவு வைத்திருக்கிறார்கள் ? அந்த நிதியிலிருந்து அந்தப் பகுதியில் ரோடு போட வழி செய்ய வேண்டும். முருகன்குடியில் இருந்து கணபதிகுரிச்சி செல்லும் பாதை மண்பாதையாக இருக்கிறது. ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது, இதனால் விவசாயிகளுக்கு ஏராளமாகச் செலவாகிறது. அங்கு ஒரு தரைப்பாலமாவது கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பாலத்தையும் விளாங்காட்டூர்-பெண்ணாடம் சாலையையும் பெண்ணாடம் கரும்பு செஸ் நிதியிலிருந்து நல்ல சாலையைப் போட்டுத் தந்தால் விவசாயிகள் கரும்பை ஆலைக்கு எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும்.

விருத்தாசலத்திலிருந்து காட்டுக்கூடலூருக்கு ஏழு லட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டுள்ள சாலை எந்தவித மராமத்தும் செய்யப்படாமல் பழுதடைந்து இருக்கிறது. மேற்கொண்டு பணம் ஒதுக்கி பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டும். தார் சாலையாக அமைக்கப்படவேண்டும்.

கொளஞ்சியப்பர் தேவஸ்தானம் இருக்கிறது. கட்சிக் கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த தேவஸ்தானத்தில் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது அவர்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேரை நியமித்திருந்தார்கள். மணவாளநல்லூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்,நான் அந்த தேவஸ்தானத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவர்கள். இன்னும்கூட விசேஷ காலங்களில் சுவாமி அங்கு சென்று வருவதுண்டு. அவர்கள் உற்சவத்தை நடத்தி வருகிறார்கள். அந்தத் தேவஸ்தானத்திற்கு நிறைய உண்டியல் வருமானம் வருகிறது. அந்த தேவஸ்தானத்தில் எந்தக் கட்சிக்காரர்களை வேண்டுமானாலும் போடட்டும். இப்போது அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் ஒருவரைக்கூடப் போடவில்லை. அந்த கிராமத்தின் மூலம் முன்னுக்கு வந்த அந்த தேவஸ்தானத்திற்கு



அந்த கிராமத்தில் உள்ளவர்களை நியமிப்பது பொருத்தமாகவும் இருக்கும், நம்முடைய நல்ல கடமையைச் செய்தவர்களாகவும் ஆவோம். இதை முதலமைச்சர் அவர்கள் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிற்பேட்டைகள் ஏராளமாகப் பயன்படாமல் இருக்கின்றன. பல காரணங்கள் சொல்லப்படுகிறது. சென்னை நகரத்தில் ஸ்கொயர் ஃபீட்டுக்கு எவ்வளவு வாடகை என்று கணக்கிடுகிறார்களோ அதே போன்று வெளியிடங்களிலும் கணக்கிடுவதன் காரணமாக அவை காலியாகக் கிடக்கின்றன. அதன் வாடகையைக் குறைத்து எல்லா தொழிற்பேட்டைகளிலும் தொழில் நடைபெற ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கப் பணம் வீண் விரயம் ஆகாதவாறு நிலைமையை உண்டாக்க வேண்டும். அவ்வாறு குறைத்துக் கொடுப்பதால் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும், எஞ்சினியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

நடந்த ராஜ்ய சபைத் தேர்தல் பற்றிப் பேசப்பட்டது. இங்கும் பேசுகிறார்கள், வெளியிலும் பேசுகிறார்கள். பலவிதமாகப் பேசுகிறார்கள். இந்த மன்றத்திலே இருப்பவர்கள் வாக்காளர்களாக இருக்கிறார்கள். அந்த வாக்காளர்கள் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசினார்கள், எந்த அளவு கண்ணியத்தோடு பேசினார்கள் என்று பார்த்தோம். அப்படிப் பேசுவது இந்த மன்றத்திலே இருப்பவர்களுக்குப் பொருத்தமாக இருக்காது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சேவை செய்வதற்காக நாம் வந்திருக்கிறோம். ரொம்ப அவதூறாகவும், கீழ்த்தரமாகவும் பேசினார்கள். அவர்கள் நிதானமாகப் பேசினார்கள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. எந்த நிதான நிலையோடு பேசினார்கள் என்று சொல்லுவதற்கில்லை. எனக்கு முன்னால் பேசிய ஒருவர் ' எங்களை எல்லாம் வந்து ஓட்டுக் கேட்டார்கள், கதவைத் தட்டினார்கள் ' என்றெல்லாம் சொன்னார். எங்கள் உறுப்பினர்களை யார் யார் எல்லாம் கேட்டார்கள், எப்படி எப்படி எல்லாம் கேட்டார்கள், எங்கெங்கு இருந்தெல்லாம் ஆட்கள் வந்தார்கள், எங்கெங்கு இருந்து பணம் வந்தது, எப்படிப்பட்ட பெரிய மகான்களை, பெரும் தலைவர்களைக் கண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள், அவர்கள் இவர்களுக்கு அட்சதை எல்லாம் போட்டார்கள் என்பதெல்லாம் எங்களுக்கும் நன்றாகத் தெரியும். அதையெல்லாம் இந்த மன்றத்தில் பேசக்கூடாது, இந்த மன்ற உறுப்பினர்களுக்குக் கண்ணியக்குறைவை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு பல சிரமங்கள் இருந்தன. மழை இல்லாததால் சிரமங்கள் இருந்தன. இந்த ஆண்டு நல்ல சூழ்நிலை இருக்கிறது. மக்களுக்கு உள்ள பிரச்சினைகளை எல்லாம் நல்ல முறையில் அணுகி, அந்தப் பிரச்சினைகளைக் கண்ணும் கருத்துமாகப் பரிசீலித்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல வளர்ச்சியைத் தேடிக் கொடுக்கும் பொறுப்பு இந்த மன்றத்தில் இருக்கும் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதியில் இருக்கும் குறைகளை அமைச்சர்

க. ப.
12–00 களும் இலாக்காக்களும் இணைந்து நல்ல முறையில் போக்க நல்ல வாய்ப்பு நல்க வேண்டுமென்று கூறி இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. கே. என். குமாரசாமி:** அவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாமீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்தில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதில் அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகள், கொடுத்துள்ள சலுகைகள் எப்படிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற பிரச்னையைத்தான். முதன் முதலாக முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தைத் தான் நம்பி பெரும் பகுதி மக்கள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். இதிலே தீவிரமான கவனம்செலுத்தி அதைப்பற்றி மேலும் ஆலோசனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக பல பிரதேசங்களில் மழையையே நம்பி வாழ்ந்து விவசாயம் செய்து வருகின்ற விவசாயிகளுக்கு மிகவும் பாதகமான சூழ்நிலை இருக்கிறது. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோரும் ஒத்துக் கொண்ட பிரச்னை. அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது என்பதுதான் முக்கியம். ஏற்கனவே உள்ள பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் போன்றவற்றைச் சரியான முறையில் கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி நிறைவேற்றப்பட்டால் கிட்டத்தட்ட அந்தப் பிரதேசத்தில் இருக்கிற இரண்டரை லட்சம் எக்கரா நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கும். அதை நிறைவேற்ற அரசு முயற்சி எடுத்துக் கொண்டால், அந்த இரண்டரை லட்சம் எக்கரா நிலங்களுக்கு பாசன வசதி கிடைத்தால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொரு பிரச்னையையும் சொல்கிறேன். விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நிலையில் அரசு விவசாய உற்பத்திச் செலவைக் குறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் விவசாயம் செய்து விவசாயத்தில் முதலீடு செய்து, செய்து கடனாளியாகப் போகிறானே தவிர, அவனுடைய வாழ்நாளில் உபரி மிச்சம் கண்டான் என்ற நிலை எப்பொழுதும் இல்லை. பம்பு செட்டுகளை வைத்துக் கொண்டு விவசாயம் செய்கின்றவர்களிடம் மிகவும் மோசமான நிலை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் மின்சாரக் கட்டணம் விஷயமாக ஓர் அறிக்கை வெளியிட்டுச் சொன்னார்கள் எழுபத்தைந்து அடியும் அதற்கு மேலும் ஆழமுள்ள கிணறுகளுக்கு 9 பைசே என்றும் மற்றவற்றிற்கு 10 பைசே என்றும் அறிவித்தார்கள். கிணறுகள்





வைத்துக்கொண்டு பம்பு செட்டுகள் போட்டு பாசனம் செய்கின்றவர்கள் ஏற்கனவே 8¼ பைசே கொடுக்கின்றார்கள், அதற்கு மேல் ஏற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உயர்வின் காரணமாக செக்யூரிட்டி டெபாசிட், மற்றும் ஸர்சார்ஜ் போட்டு, அதாவது 20 சதவிகிதம் போட்டு, வசூல் செய்வதன் காரணமாக 8¼ பைசேவுக்கு மேல் போடக்கூடாது என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். 75 அடிக்கு மேலுள்ள கிணறுகளுக்கு 9 பைசேவும், அதற்குக் கீழே உள்ளவற்றிற்கு 10 பைசேவாகவும் அறிவித்தார்கள். அந்த வெளியீடானது விவசாயிகளை பெரிதும் பாதிக்கும் என்று தெரிவித்துக் கொண்டு அதை புனராலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் நீர்ப்பாசன பூமியில் விவசாயம் செய்கின்றவர்களுக்கும், பம்பு செட்டு போட்டு விவசாயம் செய்கின்றவர்களுக்கும் இரண்டு விதத்தில் வித்தியாசம் இருக்கிறது. பம்பு செட்டு போட்டு விவசாயம் செய்கின்றவர்களுக்கு ஒரு எக்கராவுக்கு ஒரு வெள்ளாமை செய்யவேண்டுமானால், அவர்களுக்கு ஆகின்ற மின்சாரக் கட்டணம் மட்டும் 68 ரூபாய் ஆகிறது. இது பம்பு செட்டு நீங்கலாக. அதே நேரத்தில் நீர்ப்பாசனத்தில் விளைகின்ற பூமியாக இருந்தால் ஒரு வருஷத்திற்கு ஒரு எக்கராவுக்கு மூன்று வெள்ளாமை எடுத்தாலும், தஞ்சாவூரில் ரூ. 22, கோவையில் 3 ரூபாய்தான் கட்டப்படுகிறது. எப்படி மார்க்கெட்டில் இருவரும் ஒரு விலைக்கு விற்க முடியும்? அதனால் தான் பம்பு செட்டு போட்டு விவசாயம் செய்கின்றவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பை புனர் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையில் அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிற காரணத்தாலும், அவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தாலும் தான் நான் மீண்டும், மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக பம்பு செட்டு உள்ள கிணறுகளுக்கும் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சப் பகுதிகள் என்று சில பிரதேசங்கள் அறிவிக்கப்பட்டு பஞ்ச நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பஞ்ச பூமியில் வாழ்கின்ற மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அந்தப் பகுதிகளில் உள்ள அப்படி பாதிக்கப்பட்ட மக்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு நிவாரண ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில நேரங்களில் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஒரு வெள்ளாமைக்கு 10 எக்கருக்கு ரூ. 2,000 செலவு செய்யும் அளவுக்கு பூச்சி மருந்துகள் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அரசாங்கம் பாதி விலையில் பூச்சி மருந்துகள் சப்ளை செய்தாலும் தேவையான பூரா அளவும் அந்தப் பாதி விலைக்குக் கிடைக்காததால் வெளியே மருந்து ஷாப்பில் வாங்க வேண்டிய

நிலைமை இருக்கிறது. அப்படிப் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் கொண்ட விவசாயிகளுக்கு, குறிப்பாக ஏராளமாகப் பணத்தை செலவழித்த பிறகு பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு ஒரு வெள்ளாமைக்குரிய தொகையை அரசாங்கம் மான்யமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் பணம் இல்லை என்று சொல்லலாம். அவர்கள் ஏராளமாகப் பணம் செலவழித்த பிறகு இந்த நிலைமை ஏற்படுகிறபோது இந்த உதவியைச் செய்தால்தான் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும்.

சிறு தொழில்கள் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது கோவையில் ஸ்டீல் பர்னீச்சர் தொழிற்சாலை, இண்டஸ்டிரியல் தொழிற்சாலை இவைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. சில இடங்களில் பாதி நாளைக்குத்தான் வேலை நடக்கிறது. இதற்குக் காரணம் கோக், பிங்காஸ், உருக்குத் தகடு போன்ற பொருள்கள் கிடைக்கவில்லை. அந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தேடும் முறையில் மத்திய அரசாங்கத்தோடு மாநில அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி, அந்தப் பொருள்களுக்கு கோட்டா கொடுக்கும்படி செய்து மீண்டும் அந்தத் தொழிற்சாலைகளை திறந்து வேலைசெய்யும் வாய்ப்பை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக புஞ்சை நில விவசாயிகளுக்கு அரசாங்கம் கூட்டுறவு பேங்குகள், கூட்டுறவு சொசைட்டிகளின் மூலமாகப் பணம் கொடுப்பதில்லை. உரத்திற்குக் கொடுக்கிறோம், விதைக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, அவர்களுக்குக் கடன் இருந்தால் ஒரு வெள்ளாமை செய்வதற்கும், எரு இடுவதற்கும், மற்ற பொருள்கள் வாங்குவதற்கும் கடன் வசதி செய்து கொடுக்க வேண்டும். ஏராளமாகப் புஞ்சை நிலத்தை நம்பி வாழ்கிறவர்களுக்கு கடன் உதவி செய்தால் அவர்களுக்கு நன்மையாக இருப்பதோடு அந்த நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிணறுகள் வெட்டுவதற்காக, விவசாயத்திற்குக் கொடுப்பதுபோல் கொடுப்பது ரூபாய் 5,000 என்று சொல்லப்படுகிறது. அந்த 5,000 ரூபாயை வாங்குவதற்குள் கிட்டத்தட்ட ரூபாய் 500 செலவு செய்து அதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டால் ஓராண்டு கழித்துத்தான் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தக் காரணத்தால் பலர் சலிப்பு அடைந்துவிடுகிறார்கள். இதைப் பரிசீலனை செய்து ஒரு இரண்டு மாதகாலத்திற்குள் அல்லது ஒரு மாதத்திற்குள் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கோவை ஜில்லா போன்ற இடங்களில் ரூபாய் 5,000 கொடுப்பதால் பிரயோஜனம் இல்லை. கிட்டத்தட்ட ரூபாய் 30,000 வரை தேவைப்படுகிறது. 120 அடி வரையில் கிணறு தோண்டினால் தண்ணீர்



கிடைக்குமே தவிர, ரூ. 5,000 கொடுத்து மீதி ரூ. 25,000-ஐ விவசாயியைப் போடச் சொன்னால், ஒன்றும் செய்ய முடியாது. அதனால் பல கிணறுகள் பாதி அளவு வரை தோண்டப்பட்டு தண்ணீர் இல்லாமல் அப்படியே இருக்கின்றது. அந்தக் கிணறுகளுக்குக் கிட்டத்தட்ட 15,000 ரூபாய் அளவுக்காவது அரசாங்கம் கடன் வழங்கும் முறையை ஏற்படுத்தினால், கிணறு தோண்டும் திட்டம் பூராவும் நிறைவேற்றி வைக்க முடியுமே தவிர, மற்ற வழியில் முடியாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு பிரச்னை. இந்தக் கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படுகின்ற பருத்திக் கொட்டை பூராவையும் வடநாட்டுக்கு ஏற்றுமதி செய்து விடுகிறார்கள். கால்நடைகளுக்குத் தேவையான அளவுக்குப் பருத்திக் கொட்டை தமிழகத்தில் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக பருத்திக்கொட்டை இப்பொழுது மணங்கு 10 ரூபாய்க்கு விற்கிறது. அதனால் இந்தக் கால்நடைகளுக்குப் பயன்படுகின்ற பருத்திக் கொட்டை வெளி இடங்களுக்குப் போவதைத் தடுத்து நிறுத்தி இங்கே தேவைக்கு ஏற்றபடி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்னைகளை எல்லாம் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வது இந்த மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க புனராலோசனை செய்ய வேண்டும், அந்த அளவுக்கு விவசாயிகளிடம் நம்பிக்கை கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

• திரு. வை. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதா மீது பேச எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு மகிழ்ச்சி.

பொதுவாக கல்வி, விவசாயம், சமுதாய நலத்திட்டங்கள் இவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி பற்றாக்குறையாக இருக்கிறது. இவற்றிற்கு அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலுள்ளவர்கள் உயிர்நாடியான பிரச்னை விவசாயம்தான். இந்த விவசாயப் பிரச்னையில் அரசாங்கம் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய கடன்களுக்கு எல்லாம், அதிகப்படியான வட்டி வாங்கப்படுகிறது. கிட்டத்தட்ட எட்டேமுக்கால் சதவிகிதம் அல்லது ஒன்பது சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆகவே இந்த வட்டி விகிதத்தை 4 சதவிகிதம் ஆக குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு எங்கு பார்த்தாலும் வறட்சி நிலை தாண்டவமாடும் காட்சியைப் பார்த்தோம். அப்படியிருந்தும் கூட விவசாயிகளிடமிருந்து கடன் வசூல் செய்வது ஒத்தி வைக்கப் படவில்லை. மற்ற மாவட்டங்களில் ஒத்திவைத்திருப்பதைப் போல்

திருச்சி மாவட்டத்தில் கடன் வசூல் செய்வதை ஒத்திவைக்க வேண்டும். அங்குள்ள கோத்தாரி பாக்டரியில் கரும்பு சாகுபடி செய்பவர்களுக்கு அறுபது ரூபாய் அட்வான்ஸாக எப்போதும் கொடுப்பது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு பத்து ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் லால்குடி, அரியலூர் போன்ற இடங்களிலுள்ள விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்ய மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்கம் அவர்களுக்கு கொடுத்துள்ள கடனைத் திரும்பத் தரவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. ஆகவே அந்த சர்க்கரை ஆலை முதலாளியிடம் சொல்லி ஒன்று அவர்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கச் சொல்லவேண்டும் அல்லது அவர்களிடமிருந்து கடன் தொகை வசூலிப்பதை ஒத்தி வைக்கவேண்டும்.

மணிகண்டம் பஞ்சாயத்து யூனியனில் மிகுந்த வறட்சி காணப் படுகிறது. அந்த யூனியனிலிருந்து தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அரியலூர், சித்திரப் பட்டி, நாகமங்கலம், மாத்தூர் அம்மாபேட்டை, குளத்தூர், சேதுராப்பட்டி, திருமலைசமுத்திரம், முடிகண்டம், துரைக்குடி, பாகனூர் போன்ற பகுதிகளில் மிகுந்த வறட்சி காணப்படுகிறது. அந்தப் பகுதிகளில் வறட்சி நிவாரண வேலைகளை மேற்கொள்ள அதிகப்படியான நிதி ஒதுக்கப்பட்டு நிவாரண வேலைகளை மேற்கொள்ளவேண்டும். அதோடு அங்குள்ள விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் வசூலையும் ஒத்திவைக்க வேண்டும். திருச்சி மாவட்டத்தில் சுமார் 8,000 டன் டைமண்ட் பாஸ்பேட் கிடங்கில் முடங்கிக் கிடக்கிறது. இதில் அரசாங்கப் பணம் 80 லட்சம் முடக்கப்பட்டிருக்கிறது. அதை சரியான முறையில் விநியோகிக்காவிட்டால் இந்த 80 லட்சம் ரூபாயும் நஷ்டப்பட்டுவிடும். ஆகவே இந்த 8,000 டன் டைமண்ட் பாஸ்பேட்டை சரியான முறையில் விநியோகிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, கிராம முன்சீப், கர்ணம் போன்றவர்களின் ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்படவேண்டும். அதைப் பற்றி யெல்லாம் அவர்கள் அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக் கிறார்கள். அவர்களின் சம்பள விகிதங்களை உயர்த்தவேண்டும். அதோடு அவர்களுக்கு உள்ள பிரயாணப் படியையும் உயர்த்த வேண்டும்.

எங்கள் தொகுதியில் ஏப்ரல் 7-ம் தேதி பாயிலர் தொழிற் சாலையில் ஒரு வேலைநிறுத்தம் செய்ய இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் களும் அந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிக்கை விடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய அந்தப் பகுதியில் பலர் அந்த வேலைநிறுத்தத்தில் அக்கரையும் ஆர்வமும் உடையவர்களாக இல்லை. ஆனால் அவர்கள் வேலைக்குச் சென்றால் அவர்கள் தடுக்கப் படுவார்கள் என்று பயமுறுத்தப்படுகிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் வேலைக்குச்



செல்பவர்களுக்கு சரியான முறையில் பந்தோபஸ்து இருக்காது என்றும் மற்றும் சிலர் அந்த பாக்டரியைத் தாக்கவேண்டும் என்றும் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நம் முதல் அமைச்சர் அவர்கள் கவனித்து அந்தத் தொழிற்சாலைக்கு தகுந்த பந்தோபஸ்து அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அங்கு எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாது என்ற உறுதிமொழியினை அளிக்கவேண்டுமென்று இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்தத் தொழிற்சாலைக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டால் நமக்கு சேலம் தொழிற்சாலை வருவதற்கு மத்திய அரசாங்கம் கூட பயப்பட நேரிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்தத் தொழிற்சாலைக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேண்டிய பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கிராமப் புறங்களுக்கு அதிகப்படியான நிதி வசதி அளிப்பதோடு கூட, கிராமங்களில் உள்ள குளங்களில் மீன்பாசிக் குத்தகையை எல்லாம் மீனவர்களுக்குக் கொடுக்கப் போவதாக அறிக்கை ஒன்றைப் பார்த்தேன். ஆனால் அப்படி மீனவர் சொஸைட்டிக்குக் கொடுக்கப்பட்டும் எந்த சொஸைட்டியும் அப்படி மீன் பிடிப்பது கிடையாது. ஆகவே அவற்றை பஞ்சாயத்து களுக்குக் கொடுத்தால் பஞ்சாயத்துக்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே குத்தகையை பஞ்சாயத்துக்களுக்கே கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் இந்த ஆண்டு B rm. 2-வது ஆண்டு பட்டப்படிப்பில் நடத்தாத பாடங்களை பரீட்சைகளில் கேட்டிருப்பதாக மாணவர்கள் குறைப்படுகிறார்கள். அதையும் பரிசீலித்து நடக்காத பாடங்கள் எப்படி பரீட்சையில் வந்தன என்பதைப்பற்றியும் ஆராய வேண்டும்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் இன்று திருச்சி ஜில்லாவில் பல கல்லூரிகள் இருந்தும் மாணவர்கள் சேருவதற்கு இடம் இல்லாமல் தவிக்கிறார்கள். ஆகவே, ஷிப்ட் முறையை அனுசரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாலை நேரக் கல்லூரிகள் அதிகமாக்கப்படவேண்டும். இப்போது மாலை நேரக் கல்லூரியில் அரசாங்க ஊழியர்கள்தான் அதிகமாகப் படிக்கிறார்கள். ஆகவே மாலை நேரக் கல்லூரியில் படிக்கிற மாணவர்களுக்கு கல்விச் சலுகைகள் அளித்து இலவசக் கல்வித்திட்டத்தின் கீழ் அவர்களைப் படிக்கச் செய்ய வேண்டும்.

பி.டி.ஸி., போன்றவற்றில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பதோடு பஸ், ரெயில்வே பாஸ் போன்றவை கிடைப்பதற்கும் வழிவகை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, திருச்சியும், தஞ்சையும் சோழர் காலத்தில் பிரசித்திபெற்ற நகரங்களாக இருந்தன. பழைய நாகரீகம், கலாசாரம், பண்பாடு இவற்றிற்கெல்லாம் எடுத்துக்காட்டாக

[திரு. வை. சுவாமிநாதன்] [1970 ஏப்ரல் 4]

திருச்சி, தஞ்சை இருந்து வந்திருக்கின்றன. கரிகால் சோழன் ஆண்டு வந்த அந்த இடத்தில், உல்லாச ஸ்தலம் ஏற்படுத்த வேண்டும். நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தலைசிறந்த கல்லணை ஒரு உல்லாச ஸ்தலமாக ஆக்கப்படவில்லை. மதுரை போன்ற நகரங்களில் இன்றையதினம் உல்லாச ஸ்தலங்கள் இருக்கின்றன. ஆனால் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அப்படி ஒரு உல்லாச ஸ்தலமும் இல்லை. ஆகவே கல்லணையை ஒரு உல்லாச ஸ்தலமாக ஆக்கி அதை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஆக்கி அங்கு பலவித இம்ப்ரூவ்மென்ட்ஸ் செய்யவேண்டும். திருவெறும்பூரை எடுத்துக்கொண்டால் அங்கு செக் நாட்டவர் போன்ற பிற நாட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்களும், மற்ற மேல் நாட்டவர்களும், நம் நாட்டவரும் கண்டு களிக்கும்படி கல்லணையை ஒரு உல்லாச ஸ்தலமாக ஆக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டத்தில் இப்போது "ஹிப்பீஸ்"களின் தொல்லை அதிகமாகி வருகிறது. முன்பு அவர்கள் கோவா கடற்கரையில்தான் இருந்து வந்தார்கள். இப்போது அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பலயிடங்களில் பரவி வருகிறார்கள். இதனால் அந்த இடங்களுக்குச் செல்லவே மக்கள் பயப்படுகிறார்கள். ஆகவே அவர்களின், அந்த ஹிப்பீஸ்களின் நடமாட்டத்தைத் தடுக்க வேண்டும்.

தஞ்சை மிராசுதார் ஆஸ்பத்திரியில் பல நாட்களாக எக்ஸ்ரே யூனிட் கருவிகள் பழுதடைந்திருப்பதால் வியாதியஸ்தர்களுக்கு வைத்தியம் செய்து கொள்ள கஷ்டமாகயிருக்கிறது. ஆகவே அதை உடனடியாக செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாமீது என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகம் கடந்த ஆண்டு பயங்கரமான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டதும் அதற்கு நம் தமிழக முதல்வர் மத்திய அரசின் உதவியோடு தமிழகத்தில் ஏற்பட்ட அந்த பயங்கரமான வரட்சி நிலையை எந்தளவிற்கு சமாளித்தார்கள் என்பதை கிராமப்புறங்களில் உள்ள மக்கள் உள்ளபடியே பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 17 கோடி ரூபாய் கிராமப் பகுதிகளில் செலவிடப்பட்டது. ஏரிகள் வெட்டப்பட்டு, கால்வாய்கள் வெட்டப்பட்டு, ஏரிகள் எல்லாம் பழுதுபார்க்கப்பட்டு உள்ளபடியே நல்ல பல வேலைகளைச் செய்ததன் மூலம் நல்ல வேலை வாய்ப்புகளை, பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கூலி கிடைக்காதவர்களுக்கு நல்ல கூலி கிடைக்கும் வகையில் நல்ல பல வேலைகளைச் செய்ததற்கு உள்ளபடியே முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னால் பல துறைகளில் அது எந்தளவிற்கு பொது மக்களின்



1970 ஏப்ரல் 4] [திரு. நா. வீராசாமி]

பிரச்சினைகளை அணுகியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அரசாங்க ஊழியர்கள் அவர்களது சம்பள விகிதங்களை மாற்றியமைக்கவேண்டும் என்று சொன்னவுடனே அதை எல்லாம், பார்க்கலாம், கவனிக்கலாம் என்ற வார்த்தைகள் எல்லாம்போய் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பே கமிஷனை நியமித்து அவர்களின் குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் இன்றைய தினம் அரசு ஈடுபட்டிருப்பதைப் பாராட்டவேண்டும்.

அதேபோன்று இந்த நாட்டிலேயிருக்கும் ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்காக பேக்வேர்ட் கமிஷனை நியமித்து, அதன்மூலம் இந்த நாட்டிலேயுள்ள பின்தங்கிய மக்களுக்கு என்ன நன்மைகள் செய்ய முடியுமென்று ஆராய்ந்து பார்க்கும் முறையிலே ஒரு கமிஷனை ஏற்படுத்தியிருப்பதை இந்த நேரத்தில் பாராட்ட வேண்டும்.

மொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் கிராமப் பகுதிகளை எந்த அளவிற்கு வளப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஆண்டு ஒன்றுக்கு 51,000 பம்பு செட்டுகள், 52,000 பம்பு செட்டுகள் என்ற அளவில் விவசாயிகளுக்கு மிகச் சீக்கிரமாக மின்சாரம் கிடைக்க வேண்டுமென்ற அளவில் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு முன்னாலே காங்கிரஸ்காரர்கள் ஆண்ட நேரத்திலே, மின்சாரத்தைக் கிராமப் பகுதிகளுக்கு விஸ்தரிக்க வேண்டும், கடன் வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் இவ்வளவுதான் கொடுக்கமுடியும் என்று 6 கோடி அல்லது 8 கோடி அளவில் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று திராவிட முன்னேற்றக் கழகம், 71-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம், எல்லா இடங்களுக்கும் மின்சாரம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லிவிட்டு, அதற்காகப் பணம் எங்கே என்று கேட்காதீர்கள், தொடர்ந்து செயல்படுத்துங்கள், அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று சொல்லும் அளவிற்கு அந்த இலாகாவை முடுக்கிவிட்டதாலே 1,000, 1,500 கிராமங்கள் என்று தினந்தோறும் மின்சார விநியோகம் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட நல்ல நிலைமை உருவாகியிருப்பதைப் பாராட்டவேண்டும்.

அதுமட்டுமல்ல, கிராமப்பகுதியிலேயிருப்பவர்களுக்கு, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருப்பதை இந்த நாட்டு மக்கள் எந்த அளவிற்குப் பாராட்டுகிறார்கள் என்பது ஒருவேளை எதிர்க்கட்சித் தலைவர்வர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் கிராமப் பகுதிகளிலே சுற்றிப் பார்க்கும் நேரத்தில் அதையெல்லாம் அவர்கள் பாராட்டுவதைப் பார்க்க முடிகிறது.

1970 ஏப்ரல் 4] [திரு. நா. வீராசாமி]

அதுமட்டுமல்ல, பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில் சென்னை நகரத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. அவ்வளவு பயங்கரமான நிலைமையிருந்தது. உடனே, புரப்போசல் அனுப்புங்கள் என்று அரசாங்கம் கேட்கவில்லை. உடனடியாக சென்னை நகரமெங்கும் பம்புகள் நிறுவுங்கள், எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று சொல்லி, 11,000 பம்புகள் அமைத்து, ஏழை எளியவர்களுக்கு, குடிசைப் பகுதிகளிலேயிருப்பவர்களுக்கு பம்புகள் அமைத்து, தண்ணீர் கிடைக்கின்ற அளவிலே இந்த அரசாங்கம் நல்ல வழிவகைகளைச் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபதாண்டுக் காலமாக இந்த ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் அவர்களின் குறைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலைமையிருந்தது. அதிகாரிகளைத் தேடிச் சென்றால் அதிகாரிகளைக் காண முடியவில்லை மக்கள். அப்பொழுது அமைச்சர்கள் எப்படியிருந்தார்களோ அப்படித்தான் அவர்களுடைய ஆட்சியிலிருந்த அதிகாரிகளும் இருந்தார்கள். ஆனால் இன்றையத் தினம் மனு நீதி நாள் என்று வைத்து, அதிகாரிகளை மக்கள் தேடிச் சென்ற காலம் போக, இன்றையத்தினம் அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று, உங்கள் குறைகள் என்ன? உங்கள் நிலைமைகளை எடுத்துச் சொல்லுங்கள், நாங்கள் தீர்த்து வைக்கிறோம் என்று சொல்லுமளவிற்கு, கிராமங்களுக்குப் போய் அவர்களுடைய குறைகளையெல்லாம் இப்படிப்பட்ட முறைகளில் நிவர்த்தி செய்கிறார்கள்.

ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பல்லாண்டுக் காலமாக தீர்க்கப்படாத பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்றால் அதையெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பாராட்ட இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை, ஆனால் மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தது. இதை விவசாயிகள் பாராட்டுகிறார்கள். ஆனால் அந்தச் சட்டம் வரும் என்று சொன்னவுடனே, அதில் ஏதாவது ஓட்டைகள் இருக்கும், குறை சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் இன்றையத்தினம் நகல் வந்தவுடனே, அவர்களுடைய ஸ்டேட்மெண்டைக் காணோம், பேப்பரிலே அறிக்கையைக் காணோம், அந்த அளவிற்கு அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நல்ல முறையிலே கொண்டு வந்து அறிமுகப்படுத்தியிருப்பதைப் பார்க்கிறோம். எனவே, விவசாயிகள் உள்ளபடியே இந்த அரசாங்கத்தைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

சென்னையிலிருப்பவர்களுக்கு 200 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு 1 ரூபாய்க்கு 1 படி அரிசி என்று அறிவித்தவுடனே, பல ஏழை எளிய மக்கள் தங்களுக்கும் இப்படிப்பட்ட



[1970 ஏப்ரல் 4 [திரு. நா. வீராசாமி]

நிலையை உயர்த்துங்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு சொல்லியவுடன், நீங்கள் என்ன கேட்பது, நாங்கள் என்ன சொல்வது என்று இந்த அரசாங்கம் சொல்லவில்லை. இப்பொழுது 300 ரூபாய் வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு 1 ரூபாய்க்கு 1 படி அரிசி என்ற நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

அது மட்டுமல்ல, ஹவுஸ் சர்ஜன்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 150 ரூபாய் கொடுக்கப்பட்டது. இன்றையத் தினம் இந்தியத் துணைக்கண்டத்திலேயே பாண்டிச்சேரியில் மட்டும் 175 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று தெரிந்தவுடனே, நம்முடைய தமிழக அரசு, பாண்டிச்சேரியில் 175 ரூபாய் கொடுக்கிறார்கள், வேறு எந்த மாநிலத்திலும் கொடுக்கப்படவில்லை, இங்கேயும் நாங்கள் அறிவிக்கிறோம் என்று 4 தினங்களுக்கு முன் வெளியிட்டார்கள். பாண்டிச்சேரியில் இருக்கும் ஹவுஸ் சர்ஜன்கள் வாங்குவதைப்போல் இந்த நாட்டிலேயிருக்கும் ஹவுஸ் சர்ஜன்களும் 175 ரூபாய் சம்பளம் பெற அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனவோ, அந்தப் பிரச்சினைகளை நல்லமுறையில் அணுகிக் கொண்டிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

போலீஸ்காரர்கள் போவதற்கு சைக்கிள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். இது சாதாரண பிரச்சினைதான். அதை 20 ஆண்டுக் காலத்தில் தீர்க்க முடியவில்லை. இன்று சைக்கிள் கொடுக்கிறோம் என்பது மட்டுமல்ல, 40 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கிறோம். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் மோட்டார் சைக்கிள் அமைக்க வேண்டுமென்ற முறையில் உருவாக்கவிருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதெல்லாம், ஏழைகளாக இருப்பவர்கள் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்பதற்காக என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

தாய்மார்கள், திருமணமாகாத பெண்கள் ஆகியவர்கள் கைது செய்து அடைக்கப்படும் நேரத்தில் இரவு நேரங்களிலும் அடைக்கப்படும் நிலைமை இருந்தது. இந்த நிலையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உணர்ந்திருந்த காரணத்தினால், குறிப்பாக என்னுடைய தொகுதியில் அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன், குற்றம் செய்த அதிகாரியைத் தண்டிக்க நடவடிக்கை எடுத்தார்கள். அதை மனத்திற்கொண்டு, மாலை 6 மணிக்கு மேல் எந்தத் தாய்மாரும், அவர்கள் குற்றவாளிகளாக இருந்தாலும்கூட போலீஸ் நிலையத்தில் வைக்கவேண்டியதில்லை என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், நாங்கள் எதிர்க்கட்சியாகயிருந்த பொழுது ஏதாவது கோரிக்கைகளைக் கூறினால் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவார்கள், அதை நாம் மதிக்கவேண்டுமென்பது தேவையா என்றிருந்த நிலைமை இப்பொழுது மாறி, எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னாலும் அதை எந்த அளவிற்கு மதித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்று நடந்த விவாதத்திலே, திரு. ராமச்சந்திர துரை அவர்கள் பேசும்பொழுது, டி.ஐ.ஜி. குற்றம் செய்துவிட்டார் என்று சொன்னார்கள். திரு. பக்தவத்சலமாக இருந்தால் அதற்கு என்ன சொல்லியிருப்பார்? அதெல்லாம் ஒன்றுமில்லை, ஒன்றும் நடக்கவில்லை, அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை என்று சொல்லியிருப்பார். ஆனால் நமது முதலமைச்சரவர்கள், இருக்கும் உண்மையை அப்படியே சொல்லி, குற்றம் செய்தார், நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று இந்த மாமன்றத்தில் ஒளிவு மறைவில்லாமல் அறிவித்திருப்பதை எதிர்கட்சித் தலைவரவர்கள் நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமின்றி, முதலில் சேல்ஸ் டாக்ஸ் போட்டோம். 7½ சதவீதம் என்று சொன்னவுடனே அது அதிகம் என்று சொன்னார்கள். அதிகம் என்று சொல்லிவிட்டார்கள், நாம் கவலைப்பட வேண்டியதில்லை, நமக்குப் பின்னாலே 138 பேர்கள் இருக்கிறார்கள் என்று காங்கிரஸ்காரர்களாக இருந்திருந்தால் நினைத்திருப்பார்கள். ஆனால் இந்த அரசாங்கம் அப்படி இருக்கவில்லை. அதை பரிசீலனை செய்து, அவர்கள் சொல்வதில் கொஞ்சம் நியாயமிருக்கிறது என்று மீண்டும் பரிசீலனை செய்து, இன்றையத்தினம் 5 சதவீதமாக குறைத்திருக்கிறது.

அதேபோலத்தான், விவசாயிகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு 8¼ பைசாவை 10 பைசா என்று ஆக்கியவுடனே, 10 காசாக ஆக்கிவிட்டார்கள், நாங்கள் போராட்டம் நடத்துகிறோம் என்று போராட்டம் நடத்தினார்கள். அந்த உண்மையைக் கொஞ்சம் புரிந்துகொண்ட பிறகு, அதிலே சில சலுகைகள் கொடுக்கலாம் என்று முன்வந்து, முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் செய்தியை வெளியிட்டார்கள். கோயம்புத்தூர், சேலம் பகுதிகளிலே 75 அடிக்குக் கீழேயிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து விவசாயிகள் பயன்படுத்த வேண்டியிருப்பதால், அந்தச் செலவு 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாகக் கூடுதலாகியது, அதை 9 பைசாவாகக் குறைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியாக நாங்கள் இருந்தபொழுது எத்தனை ஆண்டுகள் அனுகியும் என்றைக்காவது எதிர்க்கட்சி கோரிக்கைவிட்டு, ஒரு காரியத்தையாவது நீங்கள் ஏற்றுக்கொண்டது உண்டா என்பதை உங்களுடைய விவாதத்திலே கொஞ்சம் தயவுசெய்து குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பசுமைப் புரட்சிக்காக பல கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. கண்ட்ரோலை எடுத்திருக்கிறோம். ஆற்காடு அரிசி என்றால் பெயர்போனது. அங்குள்ள வியாபாரிகள் பாராட்டுகிறார்கள். கண்ட்ரோலினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நசித்துப் போயிருந்தது. கண்ட்ரோலை எடுத்த பிறகு, ஆற்காடு நகரம் பசுமையாக இருக்கிறது.

இறுதியாக ஒரு பிரச்னை. சில தினங்களுக்கு முன்னால் சென்னை நகரத்தை நோக்கி தமிழகத்திலேயுள்ள பெரும்பாலான கிராம உத்தியோகஸ்தர்கள், தோட்டிகள், தலையாரிகள், கர்ணம்கள், மணியக்காரர்கள் வந்தார்கள். மாநாடு கூட்டி, மாண்புமிகு



முதலமைச்சரவர்களையும், மாண்புமிகு நிதியமைச்சரவர்களையும் வரவழைத்து சில கோரிக்கைகளைக் கொடுத்தார்கள். ஆனால், அவர்கள் கோரிககைகளைக் கொடுப்பதற்கு முன்னாலேயே இந்த அரசாங்கம் இந்த பட்ஜெட்டிலே நல்ல சலுகைகள் அளித்திருப்பதை மறந்திருக்க முடியாது. டி.ஏ. கொடுக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம, பண்டிகை முன்பணம் கொடுக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம். இவைகளெல்லாம் போதாது என்று சொல்லி கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை, உள்ளபடியே ஆயிரக்கணக்கான கிராமங்களிலேயிருந்து அவர்கள் வந்தவர்கள் என்றாலும்கூட, மிக அமைதியாக, எந்த அளவிற்கு அந்தப் பிரச்சினைகளை எடுத்து வைக்க வேண்டுமோ அந்த அளவிற்கு மிக நல்ல முறையிலே எடுத்து வைத்தார்கள். அதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சரவர்களும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் அதே நேரத்தில் அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு சில இண்டரிம் ரிலீஃப் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு நமது முதலமைச்சரவர்கள் தமக்கே உரிய திறமை மிக்க வாதத்தினால், நீங்கள் இண்டரிம் ரிலீஃப் கேட்கிறீர்கள். இப்பொழுது சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நான் இங்கு அறிவிக்கக்கூடாது, எனக்கு ஒரு இண்டரிம் ரிலீஃப் கொடுங்கள் என்று அவர்களிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து விட்டார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன், அவர்களது கோரிக்கைகள் நியாயமானவைகள்தான், அதைத் தயவுசெய்து ஏற்றுக்கொண்டு ஏதாவது அறிவிப்பு கொடுங்கள். அப்படிச் செய்தால் ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்கள் இந்த ஆட்சியை வாழ்த்துவார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். 12-30 பி..

அதே நேரத்தில், அவர்களுடைய முக்கியமான கோரிக்கைக்கு அந்த இடத்திலேயே முதல் அமைச்சரவர்கள் ஒரு முடிவு எடுத்தார்கள். அவர்களுக்கு தங்களுக்கென்று அலுவலகம் வேண்டும் என்றார்கள். ராஜாஜி ஹால் பக்கத்தில், எந்த அலுவலகமும் இல்லாத இடத்தில், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு தனி இடம் ஒதுக்கப்படும் என்று சொல்லி, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கட்டடம் அமைக்கப்படும் என்று சொல்லி, இடத்தையும் ஒதுக்கியதற்காக முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. தோட்டி தலையாரிகள் பெரும்பாலும் அரிசனங்கள். அவர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்திருக்கிறார்கள், அதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதை முதல் அமைச்சர் தயவுசெய்து கருணையோடு கவனித்து, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

கோரிக்கைகளில் சம்பளம்பற்றி, பே கமிஷன் சிபாரிசுப்படி செய்யவேண்டும் என்றார்கள். அதேபோல ஆள் குறைப்புப் பற்றியும் சொன்னார்கள். ஆள் குறைப்பிலே அனுதாபத்தோடு

அனுகி, அப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் இருக்கக்கூடிய உறுதியைத் தாருங்கள் என்று அந்த உத்தியோகஸ்தர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைப் பற்றிச் சொல்லும்போது, நீண்ட நாளாக இருந்த பிரச்சனையைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். ஆற்காடை தனி தாலுகாவாக ஆக்கியதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. என். மருதாசலம் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் இந்த வருஷம் பூராவிற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி ரூ. 377 கோடி. இந்த 377 கோடி ரூபாயில் இந்த வருஷம் பூராவிற்கும் கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில் அபிவிருத்தி போன்ற துறைகளுக்குச் செலவிட வேண்டும். அப்படிச் செலவிடக் கூடிய தொகைகள் முறையாகச் செலவிடுவதற்கு, மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய முறையில் செலவிடுவதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உற்சாகப்படுத்தி, செலவினங்களால் மக்களுக்கு பிரயோசனம் ஏற்படும் அளவில் செலவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பொரேஷனில் நகரசுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். நேற்று வந்து அமைச்சரிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். போனஸ் பண்ட் என்று இருக்கிறது. அதை பிராவிடெண்ட் பண்டோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான், அவர்கள் கடன் வாங்க முடியும், நல்ல காரியங்களைச் செய்ய முடியும். ஆகையினால் அந்த போனஸ் பண்டையும் பிராவிடெண்ட் பண்டோடு சேர்க்கவேண்டும்.

முனிசிபல் தொழிலாளர்களுக்கு சர்வீஸ் பண்ட் என்று வேலை முடியும் காலத்தில் கொடுக்கப்படுகிறது. அதை நகரசபை கொடுப்பதில்லை. நகரசபைக்கு விண்ணப்பம் செய்தால், அவர்கள் அதை அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். சர்க்காரிலிருந்து சாங்ஷன் வந்தபிறகு, நகரசபைக்கு போய் வருவதற்குள் தொழிலாளி இறந்து விடுகிறான். நகரசபையிலுள்ள தொழிலாளிக்கு, இந்த சர்வீஸ் பண்டை நகரசபையே கொடுக்கவும், பிறகு அவர்கள் சர்க்காரிலிருந்து பெற்றுக் கொள்ளவும் உள்ள முறையில் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தில், எங்கள் பகுதியில் நல்ல மழை இல்லாததால் மிக்க கஷ்டம் எங்கள் பகுதியில் கிணறுகளோ, குளங்களோ கிடையாது. அந்தப் பகுதியில், சென்ற வருஷம் இந்த அரசு மூன்று குட்டைகள் புதிதாக அமைத்துக் கொடுத்தமைக்கு மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைபாடுகளும் இருக்கின்றன.

மதுக்கரைப் பகுதியில் அணை கட்டவேண்டும் என்று விவசாயிகள் விண்ணப்பித்திருக்கிறார்கள். காங்கிரஸ் காலத்திலிருந்தே சாங்ஷன் ஆகியிருக்கிறது. ஆகையினால் அந்த அணைக்கட்டை



பாலத்துறைக்குப் பக்கத்தில் கட்டினால் விவசாயிகளுக்கு பிரயோசனமாக இருக்கும், நன்மை பயக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் பகுதி கன்னியமதூரில், போத்தனூரில், தண்ணீர் வசதி ரொம்பக் குறைவு. குரிச்சி பஞ்சாயத்தில் குழாய் கிணறுகள் போட்டு, தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். தண்ணீர் இல்லை என்று மக்கள் நகரத்திற்குப் போய்க் கொண்டு இருக்கிறார்கள். அதைத் தடுக்க அங்கேயே தண்ணீர் வசதி செய்து கொடுத்தால்தான், மக்கள் அங்கேயே இருப்பார்கள்.

கல்வி சம்பந்தப்பட்ட வரையில், அரிசனங்களுக்கு சென்ற வருஷம் பலருக்கு ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கவில்லை. பாதிப் பேருக்கு நகரத்திலும், கிராமங்களிலும் கிடைக்கவில்லை. அந்தந்தப் பகுதியில் இருக்கும் அரிசன டிபார்ட்மெண்ட் ஒழுங்காக, நல்ல முறையில் வேலை செய்யவில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் துறையில் கோவை நகரம் வளர்ந்து வருகிறது. அந்த நகரில் பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமாகப் பணத்தைப் பெற்று, மூடப்பட்ட மில்களை திறக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரத்தில் முனிசிபல் தேர்தல் நடக்கவேயில்லை. அந்த மக்களுக்கு யாரை அணுகுவது, தங்கள் குறைபாடுகளைச் சொல்வது யாரிடம் என்று பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், அந்த நகரசபைக்கு மறுபடியும் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன். அந்த வகையில் நகரசபை மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகரசபை மின்சார ஊழியர்கள். சம்பளக் கமிஷன்பற்றி மத்திய சர்க்கார் முடிவு செய்து, சென்னை சர்க்காருக்கு, காங்கிரஸ் காலத்திலேயே வந்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் அமுல் நடத்தவில்லை. ஆகையினால், நம் தமிழக அரசு அதை உடனடியாக அமுல் செய்து மின்சார ஊழியர்களுக்கு சம்பளம் அதிகப்படுத்தி, வாழ்க்கை வசதியை ஈடுசெய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு அமைச்சர் சபைமுன் வைத்துள்ள நிதி ஒதுக்கீடு மசோதாவின் மேல் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு மாதமாக விவாதத்தில் பலபேரும் கலந்துகொண்டு, பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தனை கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டு, அரசாங்கத்திலே நல்ல முறையில் தீர்வு காணப்படும்.

பொதுவாக, எங்கள் பகுதியில் விவசாயம் இந்த ஆண்டு பாதிக்கப்பட்டிருக்கிறது. பெய்த மழை கார்த்திகையில்தான் பெய்தது.

இப்பொழுதுதான் சில இடங்களில் அறுவடையாகிக் கொண்டும், ஆகாமலும் இருக்கிறது. விவசாயிகள் ரொம்ப சங்கடப்படுகிறார்கள். இரண்டு வருஷமாக சர்க்கார் தீர்வைகள் கொடுக்கமுடியாமல் இருந்திருக்கிறார்கள். சர்க்காரும் ஒத்திவைத்தார்கள். ஆனால், இப்பொழுது மூன்று வருஷத் தீர்வையையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டவேண்டும் என்று சர்க்கார் சொல்லி அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தகவல். இதுபற்றி அமைச்சரிடமும் சொல்லியிருக்கிறேன். அதை இப்பொழுது ஞாபகப் படுத்துகிறேன். மூன்று வருஷத் தீர்வை, லோன் பணம் இவற்றைக் கொடுக்க, விவசாயிகள் சங்கடப்படுவார்கள். ஆகவே, காலம் தவறி விவசாயம் செய்யும் விவசாயிகள், நல்ல பலன் கூடக் கிடைக்காது என்று இருக்கிற நிலையில், இதை மறுபரிசிலனை செய்து, அந்தக் கடன்களையெல்லாம் ஒரே தவணையாகக் கட்ட வேண்டும் என்பதை மாற்றி, ஒத்தி வைத்து, 2, 3 தவணைகளில் வாங்கத்தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் திரு. வீராசாமி சொன்னது போல, எங்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் 400-க்கு மேற்பட்ட தோட்டி, தலையாரிகள் இரண்டு வருஷமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆள் குறைப்பு என்று சொன்னார்கள். எத்தனையோ குறைப்புகளைச் செய்கிறோம். போயும், போயும் பரிதாபத்திற்குரிய இந்த ஆதி திராவிட ஏழை எளியவர்களையா, மாதத்திற்கு 40, 48 ரூபாய் சம்பளம் வாங்கும் ஊழியர்களையா பாதிக்க வேண்டும்? இவர்கள் பரம்பரை பரம்பரையாக சர்க்காருக்கு உழைத்தவர்கள். 400 பேர்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும், அதன் மேல் அவர்கள் ஹைகோர்ட்டில் ரிட் மனுப் போட்டு, அதன்மேல் நடவடிக்கை வரவில்லை என்றும் அதைப் பற்றி மாநாட்டில் சொன்னதாகவும் சொல்லுகிறார்கள். இந்த அமைச்சரவை அதற்கு ஒரு நல்ல பரிகாரம் காணவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் பதிலில் ஏதாவது நல்ல வார்த்தை சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

குறிப்பாக, தேர்தல் நேரங்களிலே காலனி பக்கம் போய் ஓட்டு கேட்கப் போனால், "இருபது வருஷம் காங்கிரஸ்காரர்கள் இருந்தார்கள், அதைச் செய்து தருகிறேன், இதைச் செய்து தருகிறேன் என்று சொன்னார்கள். நீங்கள் வந்து மூன்று வருஷம் ஆனது, நீங்கள் மட்டும் என்ன செய்து விட்டீர்கள்?" என்று அரிசன மக்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். நாங்கள் எல்லாம் அடிக்கடி அந்தப் பக்கம் ஓட்டுக் கேட்கப் போகவேண்டியிருப்பதால், எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு மனை வசதி செய்து கொடுத்து, குடிப்பதற்குத் தண்ணீர் வசதி செய்து கொடுத்து, நடப்பதற்கு நல்ல ரோடு வசதி செய்து கொடுத்து, தோட்டி-தலையாரி போன்றவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டால், அந்த மக்களை நாங்கள் சந்திக்கின்ற நேரத்தில் எங்களுடைய சாதனைகளைச் சொல்லலாம், அவர்களும்



வசதியோடு வாழ வழி செய்தார்கள் என்று நினைப்பார்கள். ஆகவே, அந்த வசதிகளையெல்லாம் செய்வதற்கு வழிவகை தேடித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஒன்றைப் பேச வேண்டுமென்று நீண்ட நாட்களாக சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இன்றைக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இன்றைக்கு அரசாங்கம் நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். நான் அதனால் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை—நீண்ட நாட்களாகச் சொல்லிவந்த கொள்கையை நிறைவேற்றியதற்காக நான் பாராட்டுகிறேன், அதை வரவேற்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டில் விவசாய வருமான வரியைத் திருத்திப் போட்டிருக்கிறார்கள். எனக்காக இதைச் சொல்லுகிறேன் என்று தயவுசெய்து நினைக்க வேண்டாம், பல விவசாயிகளின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். விவசாய வருமான வரியை தயவுசெய்து எடுத்துவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, உறுப்பினரவர்களுக்கு எத்தனை ஸ்டாண்டர்டு ஏக்கரா இருக்கிறது என்பதை சபாநாயகர் மூலமாகத் தெரியப்படுத்த முடியுமா?

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பாகவே என்னுடைய சொத்துக் கணக்கைக் கொடுத்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் அதன் பிரதி வந்திருக்கும். அதைப் பார்த்தால் தெரியும். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடியால் சொல்லாமல் இருப்பது நல்லது இல்லையென்று கருதுகிறேன். எனக்கு 60 ஏக்கர் இருக்கிறது. அது எத்தனை ஸ்டாண்டர்டு ஏக்கராவிலே வருகிறதோ, தெரியவில்லை. மொத்தமாக எனக்கு 60 ஏக்கர் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எத்தனை கிஸ்தி கட்டுகிறீர்கள்? அதாவது ஞாபகம் இருக்குமா?

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** ஏதோ பெண்ணைக் கொடுத்து, பெண்ணைக் கட்டிக்கொள்கிறவர்கள்மாதிரி கேள்வி கேட்கிறீர்களே? (சிரிப்பு)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஏதோ சொத்து அதிகமாக இருந்தால் எங்கள் பக்கத்திலேயிருந்து பெண் கொடுக்கலாமா என்று யோசனை செய்கிறோம். (சிரிப்பு)

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இவ்வளவு பேச்சு வந்ததற்குப் பிறகு சொல்லாமல் இருப்பது சரியல்ல. சொல்லிவிடுகிறேன். என்னுடைய பெண் பி.ஏ. படித்துக்கொண்டு

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [1970 ஏப்ரல் 4]

வருகிறது. அந்தப் பெண்ணைக் கட்டிக்கொள்ளக்கூடிய தகுதியுள்ளவராக இருந்தால், பொருத்தமுடையவராக இருந்தால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். (பெரும் சிரிப்பு)

சென்ற தடவை பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் கூப்பிட்டு, 'உங்கள் தொகுதியிலே என்னென்ன செய்ய வேண்டும்' என்று கேட்டார்கள். 'இரண்டு மூன்று பாலங்கள், இரண்டு மூன்று ரோடுகள் அமைக்க வேண்டும்' என்று சொல்லியிருக்கிறோம். பட்ஜெட் விவரக்குறிப்பிலே அவை வரும் என்று எதிர்பார்த்தோம். காணவில்லை. மறுபடியும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் கழுவளி என்ற பகுதி இருக்கிறது. சுமார் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்து விவசாயத்திற்குக் கொண்டுவரலாம். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட ஏழை எளியவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தால் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்தப் பகுதி எல்லோருக்கும் தெரியும். கலக்டெராக இருந்து எவ்வளவோ பேர் செக்ரடேரியட்டில் வந்திருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ அதை விட்டுவிடுகிறார்கள். கழுவளி பகுதியை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுத்தால் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வழிவகையாக இருக்கும்.

கழுவளி வால்வீச்சாக நீளமாக இருக்கிறது. கிழக்குப் பகுதியிலிருந்து குறுக்கே மேற்குப் பகுதிக்குப் போக வழியில்லாமல் இருக்கிறது. குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டும். குறைந்தது ஒரு மரப் பாலமாவது கட்ட வேண்டுமென அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி, இதை உடனடியாக செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் கீழே ஏனைய அங்கத்தினர்கள் பேசிய பிறகு என்னுடைய கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன்.

சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக சட்டமன்றம் தொடங்கி, இன்று பட்ஜெட் விவாதத்திலே கடைசி நாள். மறுபடியும், 6, 8-ம் தேதிகளில் மசோதாக்கள் பரிசீலனைக்கு வர இருக்கின்றன. தமிழ்நாடு சட்டசபையிலே எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்திருந்தாலும்கூட, சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

முதலாவது, ஆளும் கட்சித் தலைவராக இருக்கும்படியான முதலமைச்சர் அவர்கள் மிகவும் சிறந்த முறையில், உயர்ந்த முறையில் அண்மையில் நடந்த ராஜ்ய சபை தேர்தலில் நூற்றுக்கு நூறு கண்ணியத்துடன் கட்டுப்பாட்டுடன் சிறப்பான முறையில் பணியாற்றியதற்காக—அந்தக் கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல. எங்கள் கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு



1970 ஏப்ரல் 4] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சட்டமன்ற முக்கால்வாசி அங்கத்தினர்கள் கட்டுப்பாடாக இருந்ததற்காக—எனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அடிப்படைக் காரணம் முதலமைச்சர் அவர்கள் என்றால் அது மிகையாகாது. என்னென்னமோ பேச்செல்லாம் வந்தது. "நூற்றுக்கு நூறு வந்துவிடும். பன்னிரண்டைப் பிடித்து விட்டோம். பத்து ஓபனாக சொல்லிவிட்டார்கள். இன்னும் பத்தைப் பிடித்துவிடுவோம்" என்று சொல்லிக்கொண்டிருந்ததற்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டதற்காக அவரைப் பரிபூரணமாக பாராட்டுகிறேன்.

இந்திய நாட்டு அரசியலிலே ராஜ்ய சபைத் தேர்தலைப் பொறுத்தவரையிலே அவரவர்களுக்கு வெவ்வேறு நோக்கம் இருந்திருக்கலாம். எந்தெந்த ராஜ்யங்களிலே எப்படி எப்படி நடந்துகொண்டிருந்தாலும்கூட, இந்தத் தேர்தலிலே ஸ்தாபன காங்கிரஸுக்கு பெருத்த வெற்றி கிடைத்திருக்கிறது. அதே சமயத்தில் பலப்பல இடங்களிலே ராஜ்யத்தை மாற்றுவதும், ராஜ்ய முதலமைச்சர்களை மாற்றுவதும் போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. வேறு யாருக்காவது ஆதரவு கொடுத்துவிட்டால் போதும் அவர் தப்பமாட்டார். பஞ்சாப் முதலமைச்சர் வீட்டுக்குப் போனதும் தெரிந்த விஷயம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார். டெல்லியிலே இருக்கும்படியான பணத்தை வைத்தோ, பதவியை வைத்தோ, அதிகாரத்தை வைத்தோ இந்தச் சர்க்காரை மாற்ற முடியாது என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டெல்லியில் இருக்கிறவர்கள் என்னதான் திருவிளையாடல் செய்தாலும், மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரை என்னுடைய கட்சி பரிபூரணமாக ஆதரிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதுதான் அரசியல் நாணயம், அரசியல் நேர்மை. இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார். அவர்கள் தவறு செய்யும்போது அதைக் கண்டித்துச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. இப்போதிருக்கும்படியான நிலையிலே, தமிழ்நாட்டு மக்களால் ஆதரிக்கப்பட்ட சர்க்கார் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். நல்ல கரியங்களைச் செய்தால் நாங்கள் பாராட்டுவோம்.

முதலமைச்சர் அவர்கள் மின் கட்டண குறைப்பு பற்றி அறிவித்தார்கள். அவர்கள் விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு சலுகை கொடுக்க வேண்டுமென்ற முறையில் செய்திருக்கிறார்கள். பரிபூரண பாராட்டுதல் தெரிவிக்க வேண்டுமென்று முன்னால் நினைத்திருந்தாலும்கூட, இப்பொழுது அரைப் பாராட்டாவது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆழக் கிணற்றில் அரைக் கிணறு தாண்டுவது ஆபத்து.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அரைக் கிணறு தாண்டுவதில் நீங்கள் வெற்றி பெற முடியாது. நாஜ்ய சபைத் தேர்தலில் நீங்கள் அரைக் கிணற்றில் தாண்டி விழுந்து விட்டீர்களே? விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்து ஒரு பைசாவைக் கொஞ்சம் குறைத்த அந்த எண்ணத்திற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வீராசாமி சொல்லித்தான் பாராட்ட வேண்டுமென்பது கிடையாது. தமிழர்களுடைய அடிப்படைப் பண்பாட்டினாலேயே நான் பாராட்டுகிறேன்.

இப்போது ராஜ்ய சபைத் தேர்தல் உலகப் பிரச்சினையாகவே ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரு. குமாரசாமி அவர்களுக்கு ஒரு சின்ன விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். கோயம்பத்தூர் மாவட்டத்தில் 88,575 கிணறுகள் இருக்கின்றன. அளிக்கப்பட்டுள்ள சலுகை 51,640 கிணறுகளுக்கு. இதை மாத்திரம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கிணறுகள் ரொம்ப ஆழமாக இருப்பதும் எங்கள் ஊர்தான். அரசியலும் அங்கிருந்துதான் கிளம்பிக்கொண்டிருக்கிறது. ராஜ்ய சபைத் தேர்தலைப்பற்றி பிறகு வெளியிட்ட அறிக்கை என்ன? வோட்டுப் போடுவது, போடாதது அவரவர்களுடைய ஜீவாதார உரிமைப் பிரச்சினை. இப்படி எல்லாம் மற்றவர்கள் 'ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்வது எதைக் காட்டுகிறது?

ஒரு பையன் பரீட்சை எழுதிவிட்டு அவனே மார்க் போட்டுக்கொண்டு 75 சதவிகிதம் வரும் என்பான். தகப்பனார் கேட்கிறபோது 50 சதவிகிதத்துக்குக் குறையாது என்பான். நெருங்கிய நண்பனிடம் தேர்ட் க்ளாஸ் வரலாம் என்பான். ரிசல்ட் வரும்போது அவன் நம்பர் இருக்காது. என்னடா என்று கேட்டால் என்ன சொல்வான்? வினாத்தாளை திருத்திய ஆசிரியருக்கும், அவரது மனைவிக்கும் சண்டை, அதனால் சரியாக எனக்கு மார்க் போடாது விட்டுவிட்டார் என்பான். இது ரொம்ப சகஜம். இதைப்போல 'நான் இப்படி இப்படி எல்லாம் கணக்குப்போட்டேன், இன்னார் இன்னார் இப்படி நடந்துவிட்டார்கள், அதனால் தோற்றுவிட்டது' என்று சொன்னால் நியாயமாகக் கணக்குப்போட்டாரா? சட்டசபை உறுப்பினர்கள் என்ன விளையாட்டுப் பொருளா? வேடிக்கைப் பொருளா? எது முற்போக்கு சக்தி? நாம் எல்லாம் அத்தகைய ஒரு நிலை வருமேயானால் அவமானப்படவேண்டும். தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்கள் தங்களுடைய நேர்மையை, நாணயத்தை, யோக்கியத்தன்மையை உலகறிய நிரூபித்திருப்பதற்காக நான் அவர்கள் எல்லோரையும் பாராட்டுகிறேன். யார் எப்படி இருக்கவேண்டும், எந்த இடத்தில் இருக்கவேண்டும் என்பதை ராஜ்ய சபைத் தேர்தல் தீர்ப்பே காட்டும். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



நாம் இப்போது ஒதுக்கீடுகள் செய்திருக்கிறோம். அந்த விவரங்களை எல்லாம் அமைச்சர் தெரிவித்தார்கள். ஆனால் நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது என்ன? ஒதுக்கிவைத்துவிட்டால் மட்டும் போதாது. எப்படி மக்களுக்குப் போய் சேருகிறது, எந்த நிலையில் மக்களுக்குப் பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

ஒரு கதை சொல்வார்கள். அமெரிக்காவில் ஒருவர் காரை ஓட்டிக்கொண்டு சென்றாராம். அந்தக் கார் ரிப்பேர் ஆகிவிட்டது. ஒரு மெக்கானிக்கிடம் காட்டினார். அவன் காரைப் பார்த்துவிட்டு, ஒரு இடத்தில் கொஞ்சம் தட்டினானாம். கார் சரியாகிவிட்டது. அதற்கு 5 டாலர் கூலி கேட்டானாம். இந்த ஒரு தட்டுத் தட்டுவதற்காக 5 டாலரா என்று கேட்டபோது, 'தட்டியதற்கு கால் டாலர் கூட இல்லை. ஆனால் எந்த இடத்தில் தட்டவேண்டும் என்று பார்த்துத் தட்டினேன். அதற்குத்தான் 5 டாலர்' என்றானாம்.

அப்படி பணம் ஒதுக்குவது ஒன்றும் இல்லை. ஒதுக்கிய பணம் எப்படிச் செலவிடப்படுகிறது, என்ன என்ன நன்மைகளை விளைவிக்கிறது என்று பார்த்துச் செலவிடப்படவேண்டும். அது தான் முக்கியம்.

"நீங்கள் இருபது வருஷ காலத்திலே என்ன செய்தீர்கள்?" என்று அவர்கள் கேட்கலாம். நாங்கள் பதிலுக்கு "நீங்கள் இந்த மூன்றாண்டுகளிலே என்ன செய்தீர்கள்?" என்று கேட்கலாம். இது எல்லாம் பழங்கதை. ஆனால் இந்த அரசு யாருக்கும் தனிச் சலுகை இல்லாமல், நீதியாக, நேர்மையாக, முறையாக நடந்து கொண்டிருக்கிறதா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

கூடலூர் ஜன்மம் பகுதியை எடுத்துக்கொண்டால் நாம் ஜன்மிச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். பொறுக்குக் கமிட்டியில் அந்த இடத்திற்கே சென்று விசாரணை செய்தோம். நிதி அமைச்சர்—அப்போது ரெவின்யூ அமைச்சராக இருந்தார். அவரும் வந்திருந்தார். ஜன்மிகளை எடுப்பதுபற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் எடுக்கப்பட்ட நிலங்கள் நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு, பலகாலமாக அங்கேயே தங்கி வேலைசெய்துவந்த ஏழை எளியவர்களுக்கு கொடுக்கப்பட்டதா? கேரளாவில் அரசியல் காரணமாக பலர் இந்த இடங்களுக்கு வந்து நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் எனக்கு வந்திருக்கிறது. காப்பி போட்டிருந்த இடங்களைக்கூட அப்புறப்படுத்திவிட்டு, யாரும் இங்கே விவசாயிகள் இல்லை என்பதாக விவசாயிகள் நிலத்தில் இருந்து துரத்தப்பட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஆகவே தயவுசெய்து உடனடியாக மாவட்ட கலெக்டருக்கு உத்தரவு போட்டு ஆக்கிரமிப்பு யாராக இருந்தாலும் அப்புறப்படுத்தி—அந்த இடங்களிலேயே இருந்துவந்த நிலமற்ற ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஜன்மம் எஸ்டேட் சில ஆயிரம் ஏக்கராக்கள்தான் இருக்கும். ஆகவே, தனியாக அதிகாரிகளைப் போட்டாவது எவ்வித குறைபாட்டிற்கும் இடமின்றி இப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

அடுத்து, அரசியல் கொள்கைகளைப் பள்ளிக்கூட கேள்வித் தாள்களில் குறிப்பிடுவதைப்பற்றி ஏற்கனவே இருமுறைகள் சொல்லியிருக்கிறேன். கணக்கில் அல்ஜீப்ரா ஏ.பி.ஸி: என்பதற்கு டி:எம்:கே என்பதாகவும், எம்:ஜி:ஆர் என்பதாகவும் முன்பு கொடுக்கப்பட்டதைச் சொன்னேன். அப்போதே சரியான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் இதுபோன்ற தன்மை மீண்டும் ஏற்படாதிருக்கும். வினாத்தாளில் தீவிரக் கம்யூனிஸ்டு கொள்கை புகுத்தப்பட்டிருந்ததையும் எடுத்துக் காட்டினேன். இப்போது எஸ்.எஸ்.எல்.ஸி. வினாத்தாள் ஒன்று எப்படி இவ்வாண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை பேரவைத் தலைவரின் அனுமதியோடு சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்--தலைமை)

Read the following passage and answer the questions given below it :—

The General Council of the D.M.K., the top policy-making body of the party, spelt out its attitude to the Central Government headed by Mrs. Indira Gandhi in its political resolution and made it clear that support of the D.M.K. would be based on the merits of each issue. The Council made it clear that the D.M.K's support was not for any particular individual or party and the D.M.K. would not hesitate to oppose tooth and nail if the Central Government's actions weakened or badly affected people's welfare and endangered the basic aims of the D.M.K.

What will the D.M.K. do if the Central Government's actions badly affected people's welfare?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது என்ன பேப்பர் ?

THIRU P. G. KARUTHIRUMAN : This is from Final Revision Test, English Paper II Time 2½ hours—Maximum marks 100. இதற்கு முன்னாலேயே நான் குறிப்பிட்டபோது நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த மாதிரிப் பேப்பர்கள் இன்னமும் வந்து கொண்டிருக்காது.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபோல் முன்பு எதிர்க் கட்சித் தலைவர் சாட்டிய குற்றச்சாட்டின்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நேற்றைய தினம் மேலவையில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுது அளித்திருக்கிற இந்தக் குறிப்புகளும் உண்மையாக இருக்குமென்று கருதுகிறேன். உண்மையாக இருக்குமானால் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் சில பள்ளிகளுடைய ஆசிரியர்கள்—இப்பொழுது கூறியது ஒன்றல்ல--இருபது ஆண்டுக் காலமாகக் கட்சிகளைப்பற்றிக் கேள்விகள் கேட்பதை முறையாக வைத்து வந்திருக்கிறார்கள். காமராஜரைப்பற்றியும் காங்கிரஸ் கட்சியைப்பற்றியும் ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆசிரியர் கேள்விகள் கேட்டார். ஆனால் அப்பொழுது எல்லாம் நடவடிக்கை எடுக்கப்



படவில்லை. எதிர்கட்சித் தலைவர் தந்துள்ள புகார்மீது அரசு நிச்சயமாக நடவடிக்கையெடுக்குமென்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. நடவடிக்கை எடுத்திருப்பதாக ஓரளவிற்கு அறிகிறேன். நான் இதைச் சொல்வது குற்றச்சாட்டாக அல்ல, ஆரோக்கியமில்லாத அரசியலுக்கு இது போகும்படியான நிலைமை என்பதுதான். இன்றைக்கு தி.மு.க. அரசு இருக்கிறது, நாளைக்கு இன்னொரு சர்க்கார் வரலாம். இதேமாதிரி போய்க்கொண்டிருந்தால் எந்த நிலையில் போய் நிற்கும் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் பொடி வைத்தமாதிரி, முன்னாலே நடவடிக்கை எடுக்கவில்லை, இப்பொழுது நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் உங்களை உட்கார வைத்திருக்கிறோம். நடவடிக்கை எடுத்ததற்காக மிகவும் நன்றி, பாராட்டுதல்கள். குற்றச்சாட்டுகள் சொல்லும்பொழுது சபாநாயகர் அவர்கள் அதற்கு இத்தனை ஆதாரம் இருக்கவேண்டும், இதற்கு இத்தனை ஆதாரம் இருக்கவேண்டுமென்று மிரட்டியிருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பல முறைகள் எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொல்லியிருக்கிறேன். தவறு என்று பேரவைத் தலைவர் அவர்கள் கருதினால் அந்தத் தவறைச் சுட்டிக் காட்டுவதற்கு முறையிருக்கிறது. உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே ஆதாரத்தோடு பேசவேண்டுமென்று சொல்வது முறை தவறுவது அல்ல, பேரவைத் தலைவர் தன்னுடைய கடமையைச் செய்கிறார். அது தவறு என்று எதிர்க் கட்சித் தலைவர் நினைக்கிறாரா ? ஆதாரமில்லாத குற்றச்சாட்டைக் கூறாமல் இருப்பது நல்லது. பேரவைத் தலைவர் தவறு என்று கருதினால் அதைப்பற்றி அவர்கள் கூறுவதற்கு முறையிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மனதிலே இருக்கும்படியான நிலைமையை சொல்லிக்கொண்டு போகிறேன். சபாநாயகர் அவர்கள் சொன்னால் அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் நன்னியமாக நடக்க வேண்டும். கடமையோடு நடக்கவேண்டுமென்ற முறையிலே நீங்கள் கொடுக்கும்படியான தீர்ப்புக்கு கஷ்டமாக இருந்தாலும், சகிப்புத் தன்மையோடு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆதாரங்களோடு குற்றச் சாட்டுகள் சாட்டப்பட்டால் அதை ஏற்றுக்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு நிச்சயம் என்றைக்கும் தயங்காது. எதிர்க் கட்சித் தலைவர் கொடுப்பது கேள்வித்தாள்களையல்ல, ஆர்கனைசர் என்ற பத்திரிகையிலே கேள்வித்தாள்பற்றி வந்ததைப் படித்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் முன்னாலேயே சொல்லும்பொழுது ஒரு வார்த்தையைச்

சொன்னேன், எதிர்க் கட்சித் தலைவர் கூறுவது உண்மையாக இருக்குமானால் கேள்வித்தாள்களை வரவழைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னேன். ஆதாரத்தோடு சாட்டப்படுகிற எந்தக் குற்றச்சாட்டையும் விசாரணைக்குட்படுத்தி ஏற்ற நடவடிகைகைகள் எடுப்பதை அரசு தனது கடமையாகக் கருதும்.

மிகப் பெரிய பத்திரிகைகள், கண்ணியம் மிகுந்த பத்திரிகைகள் கூட, அமைச்சர்களின் பதிலைச் சிறிய எழுத்திலே போட்டுவிட்டு, ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளைப் பெரிய அளவிலே போடு கின்றன. நாங்கள் சாதாரணமானவர்கள், ஆள வந்துவிட்டோம் என்ற காரணத்தினால் பெரிய பத்திரிகைகள், கண்ணியம் மிகுந்த பத்திரிகைகள் இந்தக் காரியத்தைச் செய்துகொண்டு போகின்றன. நாங்கள் சாமானியமானவர்கள், சாதாரணமானவர்கள், 'இதுகளும் ஆளவந்துவிட்டன' என்று நினைத்து நீங்கள் தருகின்ற குற்றச்சாட்டுக்களை அந்தப் பத்திரிகைகள் போடக் கூடிய அளவுக்கு அவை பத்திரிகைகளுக்குத்தான் பயன்படு கின்றன. ஆதாரங்களோடு குற்றச்சாட்டுகள் இருந்தால் தர வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவருக்கும் மற்ற உறுப்பினர் களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சாதாரணமானவர்கள், சாமானிய மானவர்கள் என்று அவர்கள் ஏன் கருதிக்கொள்ளவேண்டும்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உயர்ந்தவர்கள். இன்பீரியாரிடி காம்ப்ளக்ஸ் தேவையே கிடையாது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லோரும் உயர்ந்தவர்கள்தான். நீங்கள் தீர்ப்புகள் கொடுக்கிறீர்கள், அதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். கண்ணியமான முறையிலே ஏற்றுக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்துவிட்டால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று சட்டம், மரபு இருக்கிறது.

முதலமைச்சர் விமர்சனம் செய்கிறார்கள், விஷக் கிருமிகள் என்று இந்த நாட்டு மக்களைச் சொல்லிவிட்டு, ஹைகோர்ட் சம்மன் வந்தால் அதற்குக்கூடப் பதில் சொல்ல முடியாதபடி யோக்கியதை யற்ற நாணயமற்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது.

**திரு. கோ. பூவராகன் :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் பேசிய பேச்சை கனம் சபாநாயகர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்பி லிருந்து நீக்கிவிடவேண்டும். குறிப்பிட்ட ஒரு நபரைப்பற்றித் தரக்குறைவாக பேசுவது எதிர்க் கட்சித் தலைவருடைய தரத்திற்குப் பொருந்துமா என்பதைப்பற்றித் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் சொன்னார்கள், தாக்குதலைத் தாக்கிவிட்டேனென்று சொன்னார்கள். எதற்காக





என்னுடைய கண்ணியத்தையும் கௌரவத்தையும் இழக்க வேண்டும்? சபாநாயகர் அளித்த தீர்ப்பை ஏற்றுக் கொண்ட தற்காக . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த இடத்திலே அதை யெல்லாம் சொல்லிக்கொள்ளுங்கள். இங்கே சொல்லக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதிலே ஏன் திரு. பூவராகன் அவர்கள் தலையிடுகிறார்கள், அவருக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறதோ? ஹைகோர்ட் ஜட்ஜ் சொல்லியிருக்கிறார் திறப்பு விழா நடத்துகிறீர்களே, ஹைகோர்ட்டுக்கு வந்து சொல்லக் கூடாதா என்று. கண்ணியத்தைக் காப்பாற்றவேண்டுமென்று கட்டுப்பாட்டைக் காப்பாற்றவேண்டுமென்று நான் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகின்ற காரணத்தினால் அவர் யார்மீது பேசவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதாக நினைத்துக்கொண்டு தவறிப்போய் முதல மைச்சர், முதலமைச்சர் என்று கூறுகிறார்கள். அவர்கள் குறிப் பிட்டது முன்னாள் முதலமைச்சரைப்பற்றி என்று நினைக்கிறேன். வீணாக நான் பாதிக்கப்படுகிறேன். முதலமைச்சர், முதல மைச்சர் என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிடுவதால் அதைக் கூட பத்திரிகைக்காரர்கள் போட்டுவிடப் போகிறார்கள். அதற் காகத்தான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிச்சயமாக இப்பொழுது இருக்கும் படியான முதலமைச்சர் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமாதிரி இவர்கள் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சட்டமன்றத்திலே எத்தனையோ நடைபெறுகின்றன. மீண்டும் ஆதாரங்கள் வேண்டுமென்றால் இத்துடன் சபை நின்றுவிடப் போவதில்லை, மீண்டும் சபை நடக்கிறது, எந்த நிலையில் ஆதாரங்களைக் கொடுக்கவேண்டும் என்பதை நான் உணர்ந்திருக் கிறேன். இந்தப் பிரச்னை இதோடு நின்றுவிடப்போவதில்லை. 72 தேர்தலுக்குள் எந்த எந்த ஆதாரங்கள் கொடுக்கப்பட்ட விட்டிருக்கிறதோ அதற்குள் கொடுத்தால் நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எத்தனையோ பிரச்சனைகள்மீது விவாதங்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன.

சட்டசபையில் வாக்குறுதிகள் கொடுக்கப்படுகின்றன. அஷ்யூரன்ஸ் கமிட்டியிலே இதைப்பற்றிப் பார்த்தாலும், சட்ட சபையிலே எத்தனை பேர்கள் கேள்விகள் இதைப்பற்றிக் கேட்டு இருக்கிறார்கள். அஷ்யூரன்ஸ் கொடுத்திருந்தால் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை நாம் கண்டு வருவதில்லை. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் இருக் கிறது, எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் இருக்கிறது, எதற்காக

[திரு. பி. ஜி. கருத்திருமன்] 1970 ஏப்ரல் 4]

இதையெல்லாம் இங்கே சமர்பிக்கிறோம். நடவடிக்கை எடுப்பதற்காகத்தான். இதை அப்படியே தள்ளிக் கொண்டே போனால் ஆரோக்கியமற்ற அரசியல் ஏற்பட்டு தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கமுடியாத நிலைமைக்குப் போய்விடுகிறது.

அமைச்சர் சொன்னார்கள், முன்னாலே 20 வருஷங்கள் தவறுகள் நடந்திருக்கின்றன என்று. முன்னாலே தவறு செய்தாலும் நடவடிக்கை எடுங்கள். என்குயரி பண்ணுங்கள், நடவடிக்கை எடுத்திருந்தால் இப்பொழுது இருக்கும்படியான அரசாங்கம் மக்களுடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொல்லலாம்.

எனக்கு எப்போதும் இந்தத் தகராறு. மணியைப் பார், மணியைப் பார் என்று சொன்னால் மணியை நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இங்கே இப்படியெல்லாம் இருக்கிறது, ஆனால் வெளியிலே எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லவில்லையே என்று சொல்கிறார்கள். இருந்தாலும்கூட ஒன்றரை மாதமாக நல்ல முறையிலே சட்டமன்றம் நடந்தது. எவ்வளவு வேகமாகக் கருத்துக்களைச் சொல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகச் சொல்லியிருக்கிறோம்.

பி.ப. 01-1. குறிப்பாக, நிதி ஆண்டு ஆனவுடனே நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். தாக்கல்செய்து அறிமுகமாகி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்போகிறோம். **விவாதத்திற்கு** எடுத்துக் கொள்ளும் நிலையில் என்ன **சொல்லிக்** கொண்டிருந்தார்கள்? காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்த சமயத்தில் எவ்வளவோ ஓட்டைகள் இருந்தன ; நாங்கள் அந்த ஓட்டைகளை எல்லாம் அடைக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். இந்த மசோதா எல்லா ஓட்டைகளையும் அடைக்கவா வந்திருக்கின்றது ? கொண்டுவரப்படுகின்ற மசோதாவைப் பொதுவாக வரவேற்கிறேன். ஆனால் நல்ல முறையில் ஓட்டைகள் இல்லாமல் கொண்டுவர வேண்டும்.

ஒரு அங்கத்தினர் நான் பாதிக்கப்படுகிறேன் என்று சொன்னார். என்னுடைய பெண் பி.ஏ. படிக்கிறது என்று சொன்னார். என்று பாரதியார் சொன்னாரே அந்த வகையில்—செய்தால் நல்லது. ஆண்களுக்கு எவ்வளவு ஏக்கர் கொடுக்கிறார்களோ அதே போன்று பெண்களுக்கும் கொடுக்க வழி இருக்க வேண்டும். பாரதியார் சொன்ன சரிநிகர் சமான நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த வண்டு சொன்ன கருத்துக்களையெல்லாம் கேட்டு, அடுத்த ஆண்டு வரும்போது இப்போது கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றியிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நாட்களாக நடைபெற்ற விவாதங்களுடைய இறுதிக் கட்[illegible] நிதி ஒதுக்க மசோதாவை நிறை



1970 ஏப்ரல் 4] [திரு. கே. ஏ. மதியழகன்]

வேற்றும் நிலையில் இருக்கிறோம். சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் கடைசியாகப் பேசிய பேச்சைப் பாராட்டும் வகையில் கூறி நானும் சீக்கிரமாக முடிக்க விரும்புகிறேன். ஒன்றரை மணிக்குள்ளாக முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் நல்ல யோசனைகளை எல்லாம் சொன்னார்கள். அவற்றுக்கெல்லாம் இந்த மன்றத்திலே பதில் சொல்லவில்லையென்றாலும் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை என்று கருத வேண்டாம். அரசாங்கம் அவற்றுக்கெல்லாம் உரிய மரியாதை கொடுத்து சாத்தியக்கூறானவற்றை எல்லாம் நிச்சயம் நிறைவேற்றும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையைப்பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் செய்யும் நல்ல காரியங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். விவசாயப் புரட்சியில் இந்த அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை விவசாயப் பெருங்குடி மக்களும், மற்றவர்களும் நல்ல வகையில் பாராட்டுகிறார்கள், உற்சாகம் காட்டி வருகிறார்கள். இந்தக் காரியங்களிலே சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் இவற்றை முழுமைப்படுத்துவதற்காகவே சொல்லப்படுகின்றனவேதவிர, குறை கூறுவதற்காக அல்ல என்று அவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு அந்தக் காரியங்கள் மேற்கொள்ளப்படும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ரொம்பப் பாராட்டிப் பேசினார்கள். அந்தப் பாராட்டுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ராஜ்ய சபைத் தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதைப் பற்றிப் பேசவேண்டாமென்றுதான் கருதிக் கொண்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் சிமைச்சாமி அவர்களும், பூவராகன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் அதைப்பற்றிய அபிப்பிராயத்தை நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் பூவராகவன் அவர்கள் சொன்னதுமாதிரி தனிப்பட்ட முறையில் யார் என்ன செய்தார்கள் என்று பேசுவது நம்முடைய சபையினுடைய பெருமையைக் காப்பதாக இருக்காது. அது உண்மையாகக்கூட இருக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை நான் அழுத்தந்திருத்தமாக ஆதரிக்கிறேன். ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறது. எப்படியோ ராஜ்ய சபைத் தேர்தல் நடந்து முடிந்தது. நமக்கு ஒரு பெரிய கவலை. தமிழ்நாட்டின் பொது வாழ்க்கைக்கு ஒரு அபகீர்த்தி ஏற்படக்கூடாது என்ற அச்சம் இருந்தது. மாற்றுக் கட்சிகாரர்களைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. எங்கள் கட்சியைப்பற்றி, எங்கள் கட்சியின் தனித் தன்மைபற்றித் தெரியுமே தவிர, அடுத்த வீட்டில் இருப்பவர்கள் அப்படி இருக்கிறார்களே, இப்படி இருக்கிறார்களே என்று பார்ப்பதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முன்னேற்றக் கழகம் வழி நடத்திச் செல்லும் ; அந்தக் கட்சி இந்த நாட்டின் தலைமையைத் தாங்குவதற்கு வலிவான கட்சி என்பதை நிரூபித்து வருகிறது.

இந்தத் தேர்தலில் ஒரு தவறான நிலைமை. ஜனநாயகத்தில் யாரும் தேர்தலிலே நிற்க உரிமையுண்டு. வாக்குகளைப் பெறுவதற்கும், ஜெயிப்பதற்கும் உரிமை உண்டு. யாரும் தடுப்பதற்கில்லை. கொள்கையின் அடிப்படையிலே, நியாயத்தின் அடிப்படையிலே கட்சியின் அடிப்படையிலே இருக்க வேண்டும். தவறான முறைகளை ஏற்படுத்தி நாட்டினுடைய அரசியல் பொது வாழ்க்கைக்கு அவமானத்தைத் தேடக் கூடாது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் எல்லாக் கட்சிகளும் தங்களுடைய கட்டுப்பாட்டை, தங்கள் கட்சியில் இருக்கும் ஒழுக்க நிலைகளைப் பாதுகாத்து உலகத்திற்கே எடுத்துக்காட்டாக இருக்கிறது.

சுப்பிரமணியம் ஜெயித்தாரா, இல்லையா என்பது பிரச்சினையல்ல. பொதுவான ஒரு முயற்சி நடந்தது. யார் குற்றவாளியாக இருந்தாலும்சரி, நான்கு கோடி மக்களின் பிரதிநிதிகளுக்குக் கவலைதரும் வகையில் இந்தத் தேர்தல் வந்தது. அந்த வகையிலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பணத்திற்குக் கட்டுப்பட மாட்டோம், வேறுவகையான சாகசத்திற்கு அடிமையாக மாட்டோம் என்பதைத் தெரிவித்ததன்மூலம் தமிழ்நாட்டில் ஜனநாயகம் பெருமளவுக்கு வளர்ந்து வருகிறது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். நாம் ஒரு ஆபத்தைத் தவிர்த்திருக்கிறோம். மற்ற இடங்களுக்கு நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறோம் என்று பெருமைப்பட முடியும். தமிழகத்து அரசியலிலே கேவலமான நிலைமைகளுக்கு இடம் இல்லை, மக்களுக்குப் பாடுபடுவது என்ற புனிதமான கொள்கைகளுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். சேவை செய்வதன்மூலந்தான் மக்களுடைய நம்பிக்கையைப் பெற முடியும். பாராட்டைத் தெரிவித்த நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆபத்து வந்தால்கூட காப்பாற்றுவோம் என்று சொன்னார்கள். எந்த ஆபத்தும் வராது . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஆட்சியிலிருப்பவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று சொன்னேன். ஆபத்து வராது என்று நினைக்காதீர்கள், எங்கெங்கோ ஆபத்து வந்திருக்கிறது. ஆபத்து வந்தால் உங்களுக்கு உதவியாக இருக்கிறோம் என்று சொன்னேன். டில்லியில் இருந்து வந்து திருவிளையாடல் நடத்தினால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க நாங்களும் சிறிது உதவியாக இருக்கிறோம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் உதவி வேண்டாமென்று சொன்னதாகத் தவறாக எண்ணிக் கொள்ள வேண்டாம். ஆபத்து வந்தால் உதவுகிறேன் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நான் சொல்லுவது ஆபத்து வராது ; அப்படி வந்தால் நீங்களும் உதவி செய்யலாம் என்றுதான் சொல்ல வந்தேன். நாங்கள் அவர்களிடமிருந்து தூரத்தில் இருக்கிறவர்கள். நீங்கள்தான் அவர்கள் பக்கத்தில் இருந்து பழகியவர்கள்; நெருக்கமான தோற்றத்தை நீங்கள்தான் பார்த்திருப்பீர்கள்.





நான் கூற வந்தது இந்த அரசாங்கம் வலுவான அரசாங்கம், யாரும் கவிழ்த்து விடலாம் என்று நினைத்தால் முடியாது, அது இந்திரா காந்தியாக இருக்கட்டும் அல்லது உங்களுடைய பெருந் தலைவராகவே இருக்கட்டும், அப்படிக் கவிழ்க்கப்படக்கூடிய அரசாங்கம் இங்கு நடக்கவில்லை. இந்த மாதிரி அரசியல் விளையாட்டுகளுக்கு, சூதாட்டப் பந்தயங்களுக்கு இங்கு இடம் இல்லை.

இந்த அரசுக்கு ஆபத்து வந்தால் உதவிக்கு வருகிறோம் என்பதற்குப் பதிலாக, இந்த நாட்டு மக்களின் கோரிக்கையின் நியாயத்திற்காகப் போராடும்போது உங்கள் உதவியைக் கொடுங்கள். ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசாங்கத்தின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய உணர்வுகளை, கோரிக்கைகளைச் சொல்லிவிட்டார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் தனியாக 175 கோடி ரூபாயைத் தனியாகப் பங்கு போடும் முறையில் சில மாநிலங்களுக்குமட்டும், எட்டு, ஒன்பது மாநிலங்களுக்குமட்டும் பகிர்ந்து அளித்திருக்கிறார்கள். பஞ்ச நிவாரணத்திற்காக இவ்வளவு கோடி ரூபாய் செலவிட வேண்டுமா என்று கேட்கிற அளவிற்கு அப்படிக் கேட்டிருக்கிற அவமானம் நேர்ந்திருக்கிறது.

சேலம் இரும்பாலையைப் பொறுத்தவரையில் வரும் வரும் என்று ஜோதிடக்காரன், ஆருடக்காரன் சொல்வதைப்போன்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்படி இனிமேல் ஆருடம் சொல்லாது முதல் அமைச்சர் அவர்களின் கோரிக்கையைச் சீக்கிரம் நிறைவேற்றுவார்கள் என்று கருதுகிறேன்.

இன்று அரசாங்க ஊழியர்கள், ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்கள், ஆசிரியர்கள் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறோம். இவற்றையெல்லாம் நிதிக் கமிஷன் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. இந்தி பேசுகிற மாநிலங்களான பீஹார், உத்திரப் பிரதேஷ், மத்தியப் பிரதேஷ், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு எல்லாம் பைனான்ஸ் கமிஷன்மூலம் ஏராளமான பணம் கிடைத்திருக்கிறது. பிளானிங் கமிஷன்மூலம் சில மாநிலங்களுக்கு நல்ல சலுகைகள் கிடைத்திருக்கின்றன. பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலம், கேரள மாநிலம், மைசூர் மாநிலம் இவற்றிற்குக் கூட—நாம் பே கமிஷன் நியமிக்க சிறிது தாமதமானோம்—அனுகூலம் கிடைத்திருக்கிறது. ஆனால் எல்லா நிலைகளிலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது. முதல் அமைச்சர்கள் மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் நான் கூறினேன், What is the reason for this special neglect? எங்களை மட்டும் இவ்விதம் புறக்கணிக்க நாங்கள் என்ன பெரிய பாவம் செய்துவிட்டோம் என்று, ஏன் வேறு நாட்டுக்காரர்களைப்போல் தனியாக இப்படிச் செய்கிறீர்கள் ? இவை எங்களது தனிப்பட்ட காரியங்கள் அல்ல. இரும்பாலையை நாம் பெறுவதில் எங்கள் கரங்களை நீங்கள் வலிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 ஏப்ரல் 4

ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நண்பர் திரு. வீராசாமி அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கிராம உத்தியோகஸ்தர்கள்பற்றியும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சில சிரமங்கள் பற்றியும், நடைபெற்ற மாநாடுபற்றியெல்லாம் சொன்னார்கள். இந்த அரசாங்கம் கிராம உத்தியோகஸ்தர்கள் மீது ரொம்ப அக்கறை கொண்டிருக்கிறது. அதற்காகப் பல நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்லா இலாகாக்களுக்கும் அடித்தளம் போன்றது ரெவின்யூ இலாகா. ரெவின்யூ இலாகாவின் அடித்தளம் கிராம உத்தியோகஸ்தர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் வெறும் வரி வசூல் செய்வது மட்டுமல்ல, அடங்கல் கணக்கு வைப்பது மட்டுமல்ல, அரசாங்கத்தின் பாதுகாவலர்களாகக் கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்கள் பெரிய பாத்திரங்கள் என்பதில் சந்தேகமில்லை.

கிராம முன்சீப், கர்ணம், தலையாரி போன்றவர்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்காக பே கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பது முதன்முதலாகத் தமிழ்நாடு அரசாங்கம் இப்போது தான் செய்திருக்கிறது. இதை அவர்கள் அறிவார்கள். வம்சா வழி வருவது என்பது எடுத்துவிடப்பட்டது. ஆனால் இன்று ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக வருபவர்கள், வம்சாவழியில் வருபவர்கள் இவர்கள் இருவருக்கும் ஒரே யோக்கியதாம்சம் இருந்தால் வம்சாவழி வருகிறவர்களுக்கு விசேஷச் சலுகை காட்டப்படும் என்ற விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்க ஊழியர்களைப்போன்று அவர்களுக்கும் சர்வீஸ் ரூல்ஸ் ஏற்படுத்தி சீக்கிரத்தில் வெளியிடப்படுகிற தருவாயில் இருக்கிறது. இதில் 20 லட்சம் ரூபாய் லம்ப் ஸம் டி.ஏ. ஆக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல காரியங்களை அவர்களுக்காகச் செய்ய முயற்சிக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதியோடு அவர்களுக்காகச் சில சலுகைகளை அறிவிக்கிற முறையில் கீழ்க்கண்ட சலுகைகளை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அளிப்பதற்காக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி முடிவு செய்தோம். கிராம உத்தியோகஸ்தர்களின் தலைவர் திரு. டி. கே. பொன்னுவேலு அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடனும், என்னுடனும் நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையில் கிராம உத்தியோகஸ்தர்கள், பணியாளர்கள் சம்பந்தமாக கீழ்க்கண்ட சலுகைகளை அரசாங்கம் அறிவிக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைக்கால நிவாரணம், இன்டரிம் ரிலிப்; கிராம முன்சீப், கர்ணம் ஆகியோருக்கு மாதம் ஐந்து ரூபாய் என்றும், வெட்டி, தலையாரி, நீர்க்கண்டி ஆகியோருக்கு ரூ. 3 என்றும்—அரசாங்க ஊழியர்களுக்குப் பத்து ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதைப்போல் —1–4–1970 முதல் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை



1970 ஏப்ரல் 4] [திரு. கே. ஏ. மதியழகன்]

மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பல இடங்களில் தலையாரிகள், வெட்டிகள், நீர்க்கண்டிகள் போன்றவர்கள், இவர்கள் ஆதித்திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பல கட்டங்களில் ரிட்ரென்ச் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி நீக்கப்பட்ட எல்லோரும் வேலையில் அமர்த்தப்படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை, ரிட்ரென்ச் செய்யப்பட்டிருக்கும் ஊழியர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம முன்சீப்கள், கர்ணங்கள் இவர்கள் 'ஆட்-இன்டரிம் சஸ்பென்ஷன்' செய்யப்படும் நிலை இருக்கிறது. காரணம் காட்டாமலேயே கோட்டாட்சித் தலைவர் அவர்களை இப்படி வேலையிலிருந்து நீக்கலாம் என்றிருக்கிறது. Financil irregularities serious irregularties like misappripriation —பணம் மோசடி செய்தல், பணம் கையாடல் செய்தல் போன்ற சீரியஸ் குற்றங்களைத் தவிர மற்றபடி 'ஆட்-இன்டரிம் சஸ்பென்ஷன்' செய்யக்கூடாது என்ற ஒரு உத்தரவைப் பிறப்பிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயணப்படி சம்பந்தமாக எந்தளவிற்குக் கொடுக்க முடியும் என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து அதிலும் ஒரு நல்ல முடிவை அரசு எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த முடிவுகள் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஜமாபந்தி முறை ஒருசில இடங்களில் ஒழிக்கப்பட்டிருப்பதை அனைவரும் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். மனுநீதி முறை மாவட்ட நிர்வாகத்தில் பெரியதொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இது கிராமப்புறங்களில் நல்ல முறையில் வேலைகள் நடைபெற உதவும் என்று சொல்லிக்கொண்டு இந்த ஒன்றரை மாத காலமாக இங்கு காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருந்தாலும் நாம் எல்லோரும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காகத்தான் பாடுபடுகிறோம். ஒருவருக்கொருவர் கருத்து மோதல்கள் ஏற்பட்டிருந்தாலும் அவைகள் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் ஏற்பட்டவை அல்ல. இந்த மன்றத்தின் பெருக்கும் புகழுக்கும் மேலும் புகழ் ஏற்படும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும், மன்ற உறுப்பினர்களும், ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர்களும் நடந்து கொண்டதற்காக என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கருத்துக்கள் வழியாக நடந்து எந்தளவிற்கு மக்களுக்காக நன்மை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு, எங்கள் சக்திக்கு உட்பட்ட அளவிற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள நாங்கள் பின்வாங்கமாட்டோம் என்ற உறுதியைக் கூறிக்கொண்டு இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஜன்மம் அபாலிஷன் ஆக்டின்படி ஏற்கனவே இருக்கக்கூடிய விவசாயிகளை அப்புறப்படுத்தப் படாமல் இருக்கவேண்டுமென்று கலெக்டர் உத்தரவு போட, நியாயமானவர்களை வைத்துக்கொண்டு ஆக்கிரமிப்புச் செய்தவர்களைமட்டும் எடுக்கவேண்டுமென்று உத்தரவுபோட சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் சொல்லு பி.ப.
வதற்கும் நாம் சொல்லுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. 1.30.
அவர்கள் சொல்கின்றபோது ஒரு மாதிரியான தொனி. அரசாங்கத்தின் சார்பில் நாங்கள் சொல்கின்றபோது வேறு மாதிரியான தொனி. அவர்களுக்கும் தெரிந்திருக்கலாம் என்ற வகையில் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்ற அரசாங்கம் அதற்கான நடவடிக்கையிலும் ஈடுபடும் என்று தெரிவித்துக்கொண்டு, அவர்களைப் பற்றி அதிகமாகப் பேசுகிற காரணத்தால் முக்கியத்துவம் வந்துவிடும். அந்தத் தவறான கருத்து கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். தலைவர் அவர்களே, அரசாங்க மசோதாக்களுக்குத் திருத்தங்கள் கொடுக்கின்றவர்கள் 3 மணிக்குள் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில மசோதாக்களுக்குப் பழைய சட்டங்கள்பற்றிய விபரம் அனெக்சரில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப்படி அனெக்சர்கள் கொடுக்கப்படவில்லை. பழைய சட்டம் டேபிளில் வைக்கப்படவில்லை. அவை கிடைக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பழைய சட்டப் பிரிவுகளுடன் எந்த எந்த இடத்தில் திருத்தம் என்று நேராகப் போட்டு அச்சடித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த நிலச் சீர்திருத்த மசோதாவுக்குக்கூட இல்லை. எந்தெந்தப் பிரிவுக்கு எந்தத் திருத்தம் என்று கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இன்று 3 மணி என்பதை திங்கட்கிழமை என்று வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கேட்டதை அடுத்து, திருத்தங்களை இப்பொழுது ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள்தான் கொடுக்கலாம் என்று இருக்கிற விதியைத் தளர்த்தி அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் அந்தத் திருத்தங்களை முன்மொழிய அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனெக்சரில் சம்பந்தப்பட்ட மூல சட்டத்தின் பிரிவுகளையும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பழைய சட்டத்தினுடைய நகலை அச்சடித்துத் தருவதற்கு இயலுமா என்பதை அந்த இலாக்காவில் கேட்டு முடிந்த வரையில் அதற்கான முயற்சியை மேற்கொள்கிறோம் என்ற அளவில் மட்டும் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சைக்கிளோஸ்டைல் பண்ணிக் கூடக் கொடுக்கலாம்.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(இ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் அகற்றப் படுவதுகுறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. (*) சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்தப் பகுதி நீக்கப்படுகிறது. இதைப் பத்திரிக்கையாளர்கள் வெளியிட வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13-70)—தொடர்ச்சி.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இரண்டாவது பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/70) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் பேரவையின் ப.
இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்து, பேரவை மீண்டும் திங்கட் 1.35.
கிழமை காலை 9 மணியளவில் கூடும்.

(9) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

A. Statutory Rules and Orders.

@ 191. Notification issued with G.O. Ms. No. 2048, Revenue, dated the 23rd September 1969 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955, published at pages 649–665 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 21 December, 1965. [*Laid on the Table of the House under seition* 61 (3) *of the Tamil Nadu Agricultural Income-eax Act*, 1955 (*Tamil Nadu Act* 5 *of* 1955).]

(*) மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

192. Notification issued with G.O. Ms. No. 1208, public (Services -A), dated the 30th June 1969; regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations 1954 relating to the exclusion the temporary post of Director of Tamil Development from the Commission's purview. [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*.]

B. Reports, Notifications and other Papers.

@ 133. Notification issued with G.O. Ms. No. 311, Home, dated the 12th February, 1969 in regard to certain amendment to the Tamil Nadu Manufactured Drugs Rules 1932, published at pages 798 to 806 of part I of the *Fort St. George Gazette*, dated the 3rd May, 1932 under the Dangerous Drugs Act, 1930 (Central Act II of 1930).

@ 134. Performance Budget of the Tamil Nadu State Transport Department, 1970–71.

@135. Performance Budget of the Tamil Nadu Agriculture Department, 1970–71.

* 136. A Review on Tamil Nadu Police, 1969–70 (English and Tamil).

* 137. Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 10 of 1970).

* 138. Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970) (Tamil).

---

@ Placed on the Table of the House on 3rd April 1970.
* Despatched to Members on 2nd April 1970.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1970 ஏப்ரல் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்–விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.

*Second Year B.Com. Examination.*

* 3 S. No. Q.—THIRU A. R. SUBBIAH MUDALIAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that in the question paper set for the B.Com. Second Year English First Paper Examination held on 1st April 1970 questions were set in respect of portions not prescribed for the students;

(*b*) if so, how many such questions were set and

(*c*) what action is proposed to be taken in the matter?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.** (அ) ஆம்.

(இ) இரு வினுக்களும் இரு உரை விளக்கத் தொகுதிகளில் ஒரு உரை விளக்கத் தொகுதியும்.

(உ) இதைப் பல்கலைக் கழக அதிகாரிகள் உடன் உணர்ந்து மாணவர்களுக்கு எவ்வித இடையூறும் நேரா வண்ணம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இரண்டு புத்தகங்களிலிருந்து வினுக்களுக்கு விடை அளிக்கவேண்டும். ஆனால், அதில் சம்பந்தம் இல்லாத ஒரு புத்தகத்திலிருந்து வினுக்கள் கேட்கப்பட்டிருப்பதனுல், அநேக மாணவர்கள் விடை எழுத முடியாமல் திகைத்து, என்ன செய்வதென்று தெரியாமல், விடை எழுதாமல் விட்டிருக்கிருர்கள். அப்படி உள்ளவர்களுக்கு என்ன வழி செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று—

Regulations of 1967 called 'Revised Regulations' for those who joined in 1967.

1967-இல் சேர்ந்தவர்களுக்கு ரிவைஸ்டு ரெகுலேஷன்ஸ் என்ற திட்டம் இருக்கிறது. இன்னென்று—

Regulations in force before 1967 called 'New Regulations'.

1967-க்கு முன்னுல் ஒரு முறை இருந்ததே அதற்கு "நியூ ரெகுலேஷன்ஸ்" என்று பெயர். இப்படி இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. 1967-க்கு முன்னுல் இருந்த நியூ ரெகுலேஷன்ஸிலே

படித்தவர்கள் தொடர்ந்து தேர்வு எழுதிக்கொண்டு வருகிறார்கள். இரண்டு வகையில் தேர்வு எழுதுவதில், முதலில் இருப்பவர்களுக்கு நியூ ரெகுலேஷன்ஸ் என்றும், அதற்குப் பிறகு வந்திருப்பவர்களுக்கு ரிவைஸ்டு ரெகுலேஷன்ஸ் என்றும் இருப்பதிலே ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், கேள்வித்தாள் தயாரிப்பவர்கள் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாமல், வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த மாநிலத்தில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதில்லை. ஆகவே, இதில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்திற்குக் காரணம், இரண்டு புத்தகங்களில் இருக்கும் கேள்விகளைத் தவறிப் போட்டுவிட்டார்கள். அப்படி மூன்று கேள்விகள் வந்திருக்கின்றன. அவை சொல்லிக் கொடுக்கப்படாத பகுதிகள் பற்றிய கேள்விகள் ஆகும். பல்கலைக் கழகத் துணைவேந்தர், மாணவர்களுக்கு எந்த அளவுக்கும் பாதகம் ஏற்படாத அளவுக்கு, எக்ஸாமினர்களைக் கலந்தாலோசித்து, ஒரு கேடும் ஏற்படாத அளவுக்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களுக்கு எந்தக் கேடும் ஏற்படாது.

**திரு. கே. விநாயகம்:** இந்தக் குறிப்பிட்ட தவறு ஏற்பட்ட வினாத் தாள்கள், பரீட்சை எழுதும் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில், அவர்கள் ஒருவிதமான சஞ்சலத்திற்கு உள்ளாகி, மற்றக் கேள்விகளுக்கும் தவறான விடை அளித்திருக்கக்கூடும் என்பதை யூகித்து, இந்தத் தவறான வினாத்தாள்கள் சம்பந்தப்பட்ட பரீட்சை எழுதிய மாணவர்கள் எல்லோருமே தேர்வு அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி பல்கலைக் கழகத்திற்கு அரசு சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தேர்வு முறையில் அப்படிப்பட்ட அதிர்ச்சிகள் வந்தாலுங்கூட அதையும் தாங்கிக் கொண்டு பதில் எழுதும் திறமையை மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும். ஆகவே, அதற்காக எல்லோரையும் பாஸ் செய்துவிடச் செய்யவேண்டும் என்பது முடியாது. ஸிலபஸில் இல்லாத பகுதிகளில் கேட்ட கேள்விகளுக்கு விடை அளிக்கவில்லை என்பதற்காகத் தண்டிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட முடியாது. ஆகவே, ஸிலபஸில் இல்லாத பகுதிகளில் கேள்விகள் கேட்டு அதனால் ஏற்படுகின்ற தீங்குகளை அகற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கலாம். மாணவர்களுக்கு அந்தக் கேள்விகளைப் பொறுத்து எந்தப் பாதகமும் ஏற்படாத அளவு பார்த்துக்கொள்ளுவதற்கு எல்லா நடவடிக்கையும் எடுத்துக் கொண்டிருப்பதாகப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மேலும், கேள்விகளைத் தயாரிப்பவர்கள் மற்ற மாநிலத்தவர்களாக இருக்கிறார்கள். ஸீல்டு கவரில் கேள்வித்தாள் வரும்போது, அதைப் பரீட்சை நடக்கும் இடத்தில்தான் திறக்க வேண்டும். வேறு இடத்தில் திறப்பதற்கில்லை. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வினாத்தாள்கள் வருகின்றபோது ஒரு பல்கலைக் கழகம் முன்கூட்டியே எல்லாவற்றையும் பார்த்து "வெரிஃபை" பண்ணி, சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கில்லை. ஆகவேதான், தவறு ஏற்பட்டிருக்கிறது. இதனால் கஷ்டம் ஏற்படாமலிருக்க எல்லா நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருப்பதாக துணைவேந்தர் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள்.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, சமீபத்தில் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் கமர்ஷியல் அரித்மெடிக் வினாத் தாளில் ஸிலபஸில் இல்லாத கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி கெமிஸ்ட்ரியில் கேட்கப்பட்டிருக்கக்கூடிய தமிழ் மொழி பெயர்ப்புக்கூட சரியாக இல்லாமலிருக்கிறது. கேள்வியில் சில தவறுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :—**தலைவர் அவர்களே, இது, மூலக்கேள்விக்குத் தொடர்புடையதல்ல. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, தவறுகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் தக்க கை எடுக்கலாம்.



**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, கேள்விகள் வெளி மாநிலத்தில் தயார் செய்து, ஸீல்டு கவரில் வந்ததாகவும், வந்தவுடன் கொடுத்துவிடுகிறார்கள், ஆகவே, அதை உடைத்து பார்க்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். கேள்விகளைத் தமிழ்நாட்டிலேயே ஏன் தயார் செய்யக் கூடாது? வெளி மாநிலங்களுக்கு அனுப்பவேண்டிய அவசியம் என்ன? அப்படி அனுப்பும்போது, "தமிழ்நாட்டிலே உள்ள பாடத்திட்டங்களுக்குத் தகுந்தாற்போல் கேள்வித் தாள்களை அனுப்புங்கள்" என்று யூனிவர்சிடியிலிருந்து ஏதாவது தாக்கீது அனுப்பவில்லையா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கேள்வியில் ஒரு முக்கியத்துவம் இருக்கவேண்டும் என்பதற்காகவும், வெளிப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் இந்த மாநிலக் கேள்விகள் வேறு பல மாநிலத்தில் உள்ள பேராசிரியர்களால் தயாரிக்கப்படவும், வேறுபல மாநிலங்களுக்குத் தேவையான கேள்விகளை இந்த மாநிலப் பேராசிரியர்கள் தயாரிக்கவும் ஆகிய இப்படிப்பட்ட முறை தொடர்ந்து இதுவரையில் நடந்து வருகிறது. இந்தத் தடவைதான் அந்தத் தவறு ஒரே ஒன்றில் ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் வகையான கேள்விகள் பல்கலைக் கழகத்தில் பல்வேறு பரீட்சைகளுக்காகத் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றில் மட்டுந்தான் தவறு ஏற்பட்டிருக்கிறது. ரிவைஸ்டு ரெகுலேஷன், நியூ ரெகுலேஷன் என்றிருப்பதில் ஏற்பட்டிருக்கிற மாற்றத்தினால் குழப்பம் ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. அந்த முறையை மாற்றுவதன் மூலம் இனி, சொல்லிக்கொடுக்காத பகுதிகளில் கேள்விகள் வந்துவிட்டன என்ற குறைபாடுகளுக்கெல்லாம் இடம் இருக்காது.

## தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்.

***குறுகிய கால வினா எண் 4.—திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யுனெஸ்கோ நிறுவனம், மத்திய அரசு, தமிழ்நாடு மாநில அரசு இவைகளின் ஒத்துழைப்புடன் தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை அமைத்திருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் தலைமைச் செயலகம் எங்கு அமைக்கப் பட்டிருக்கிறது?

(உ) அந்தத் தலைமைச் செயலகத்தை வேறு எங்காவது மாற்றுவதற்கு திட்டம் உண்டா? ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை யுனெஸ்கோ-மத்திய அரசு, தமிழ்நாடு அரசு இவைகளின் ஒத்துழைப்புடன் சென்னை நகரில் நிறுவ கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் சென்னையில் நிறுவப்படும்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் வளர்ச்சி—ஆராய்ச்சி நிறுவனத்தில், தமிழின் மூலம் தமிழ் இலக்கியங்களை அறிந்தவர்கள் ஒரு சாராரும், ஆங்கிலத்தின் மூலம் தமிழ் இலக்கியங்களை அறிந்தவர்கள் ஒரு சாராரும் ஆக இருக்கக்கூடும் என்று அறிகின்றேன். ஆனால், தமிழைப்பற்றித் தவறான கருத்துக்கள் சர்வதேச அரங்கில் இடம்பெற்றுவிடாமல் இருக்கவேண்டுமானால், தமிழின் மூலம் தமிழைப் படித்தறிந்த புலவர்கள்தான் மிகுதியாக அந்த நிறுவனத்தில் அங்கம் வகிக்க வேண்டும். அதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்தை அமைக்கும் பெரு முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலே ஏற்படுகிற செலவில் பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு, அது மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. யுனெஸ்கோ, மூன்றிலொரு பங்குத் தொகை தர வேண்டும் என்ற அளவுக்குக் கூறப்பட்டிருக்கிறது. வருகிற அக்டோபரில் நடைபெறவிருக்கும் யுனெஸ்கோ மாநாட்டில் அது வற்புறுத்தப்பட்டு, அவர்களிடமிருந்து பொருளுதவி கிடைக்கக்கூடும்.

இன்டர்நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டமில் ஸ்டடீஸ் என்ற அளவுக்கு அழைக்கப்படுவதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, வேறு பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிலே இடம்பெறக்கூடும். என்றாலும், இங்கே தமிழ் மூலம் தமிழ் நன்றாக அறிந்தவர்களுடைய ஒத்துழைப்பின் பேரிலேதான் அவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு அடிப்படையாக அமையக்கூடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற தவறு ஏற்படாத அளவுக்கு, இங்கே திறம் படைத்த பேராசிரியர்களை அதில் பங்குபெறச் செய்து, அதில் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம். தமிழக அரசின் பிரதிநிதித்துவமும் அதில் இருக்கும். அந்த அடிப்படையில் சிந்தித்து, தவறு ஏற்படாத அளவுக்குப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனால், அந்தக் கட்டம், எந்த எந்தத் துறையை வைக்கப் போகிறோம் என்று பின்னால் வரும்போது, ஏற்படும். அப்பொழுது அதைக் கவனத்தில் கொள்ளலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவரவர்களே, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய தலைமைச் செயலகத்தைச் சென்னையிலே அமைப்பதற்கான செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இடம் மதுரை. ஆகவே, இதனுடைய தலைநகரத்தை மதுரையிலே மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:**—தலைவரவர்களே, தமிழர் எல்லோரும் சேர்ந்து சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இடம் மதுரை. இந்த இன்ஸ்டிட்யூட்டில் அகில உலகத்தையும் சேர்ந்தவர்கள் தொடர்பு கொண்டிருப்பார்கள். உலகத்திலேயுள்ள பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் இருப்பார்கள். இந்த இன்ஸ்டிட்யூட்டில் இருப்பவர்களின் மூலமாக உலகத்திற்குப் பல கருத்துக்களைப் பரப்ப வேண்டி இருக்கும். எல்லா வசதிகளையும் வாய்ப்புகளையும் வைத்துப் பார்க்கும்பொழுது இது தமிழகத்தின் தலைநகரமான சென்னையிலேதான் இருக்க வேண்டும். அப்பொழுது மதுரையில் சங்கம் வைத்து வளர்த்தார்கள் என்றால், மதுரை அப்பொழுது ஆட்சியின் தலைநகரமாக இருந்தது. இப்பொழுது தலைநகரமாக சென்னை இருக்கிறது. ஆகவே, சென்னைதான் எல்லா வகையிலும் பொருத்தமான இடமாகும்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் விளக்கம் இருக்கிறது. ஆனாலும்கூட திரும்பவும் ஒன்றை நான் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். தமிழின் மூலம் தமிழைப்பற்றிப் படிக்காமல், ஆங்கிலத்தின் மூலமாக தமிழ்படித்த ஆராய்ச்சியாளர்களின் மூலமாக செய்வதால் தமிழைப்பற்றி எவ்வளவோ தவறான கருத்துக்கள் ஏற்படுகின்றன, என்சைக்லோபேடியாவில் தவறான கருத்துக்கள் இடம் பெற்றிருக்கப் பார்க்கிறோம். ஆகவே, உறுதியாக, இந்த நிறுவனத்தில், தமிழின் மூலமே தமிழ் கற்றவர்கள் மிகுதியாக இருப்பதற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் அப்பொழுதே குறிப்பிட்டேன். அந்தத் துறையைத் துவக்கும்பொழுது அதிலே யார் யார் இடம்பெறுவது என்று கவனிக்க வேண்டிய ஒன்றாக





இருக்கும். அப்போழுது அதை மனத்திற்கொள்ளலாம். இப்பொழுது நிறுவனத்தை இங்கு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு, வரலாற்றுத்துறை, மொழித்துறை, ஆராய்ச்சித் துறை என்று எந்தெந்தத் துறைகளில் பங்கு, பொறுப்பு என்று வரும்பொழுது அத்தகைய தவறுகள் ஏற்படாமல் நல்லமுறையில், தமிழின் மூலம் தமிழ் அறிந்தவர்களை அதிகமான அளவிலே ஈடுபடுத்தி, இத்தகைய தவறுகள் ஏற்படாத அளவிற்குப் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது தவறுகள் ஏற்படுவதற்குக் காரணம், இந்த ஆராய்ச்சி செய்பவர்கள் அந்தந்த இடத்திலேயே இருந்து கொண்டு, ஜெர்மனியிலிருந்து கொண்டு, இலண்டனிலிருந்து கொண்டு ஆராய்ச்சிசெய்து, கிடைக்கின்ற கருத்துக்களை வைத்துக்கொண்டு செய்வதால் தவறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, சென்னையிலேயே இந்த நிலையம் அமைந்து, விஷயம் தெரிந்த பலரும் இருக்கும்பொழுது, இங்கேயிருக்கின்ற பல்கலைக் கழகத்தோடு தொடர்பு ஏற்படக்கூடும். ஆகவே, அப்படிப்பட்ட தவறுகள் ஆராய்ச்சியில் ஏற்பட முடியா. அப்படியே ஆராய்ச்சிக் கருத்துக்கள் வரும்பொழுது அதைப் பரிசீலிக்கும் பொறுப்பு இங்கிருப்பவர்களுக்கு ஏற்படுத்துகின்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் எதிர்பார்க்கின்ற அத்தகைய தவறுகள் ஏற்படாத நிலை ஏற்படக்கூடும். ஆகவே, அந்தத் துறையை அமைக்கும்பொழுது இவைகளை உள்ளத்தில் வைத்துத் தக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவரவர்களே, மூன்றில் ஒரு பகுதியை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதா? தென் மாவட்டங்களில் மிகச்சிறந்த ஆராய்ச்சியாளர்கள் தமிழ்த்துறையில் இருப்பதால் இதனுடைய கிளை ஒன்றை மதுரையில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தென் மாவட்டங்களில் இருக்கிறார்கள் என்றால், வடக்கே யாரும் இல்லை என்று அர்த்தமா என்ன? வட மாவட்டங்களில் இல்லை என்று அர்த்தமா?

**திரு. கே. விநாயகம்:** சார், தமிழ் வளர வேண்டும். அதிலே எவருக்கும் அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் தமிழ் வளர்க்கும் இந்த ஆராய்ச்சித்துறையை சென்னையிலே வைக்கும்பொழுது வெறும் தமிழைக் கற்று, தமிழை எழுதி தமிழ் ஆராய்ச்சி செய்பவர்கள் மட்டும் தான் இந்தத் தமிழை வளர்க்க முடியுமென்ற கருத்தை அரசாங்கம் ஆதரிக்கிறதா? தமிழோடு மற்ற மொழிகளும் தெரிந்திருந்தால், ஆராய்ச்சியில் அதிக அனுபவம் பெற்று, பல மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, சொல்வதற்குப் பயன்படுமே. ஆகவே, தமிழையும் கற்று, ஆங்கிலமும் கற்று, தமிழ் ஆராய்ச்சி செய்வதற்குச் சக்தியிருந்தால் அவர்களைப் பயன்படுத்தாமல் விட்டுவிட அரசாங்கம் முன் வருமா? அல்லது, பயன்படுத்திக் கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட நோக்கம் எதுவுமில்லை. தமிழை அறிந்து தமிழ் படித்தவர்கள் மட்டும்தான் ஈடுபட வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. இதிலே சொல்லப்பட்ட தமிழ் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு, தக்க அறிவு படைத்தவர்கள் இருக்கிறார்கள். இங்கே தமிழ் அறிவு படைத்தவர்களும், ஆங்கில அறிவு படைத்தவர்கள் பலரும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ் அறிவு படைத்தவர்கள் மட்டும், பல வரலாற்றுக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். சதாசிவப் பண்டாரத்தாருக்கு ஆங்கிலம் தெரியாது, சிறந்த தமிழ் ஆராய்ச்சி செய்து கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களை வைத்து, கல்வெட்டுக்களில் உள்ள கருத்துக்களை ஆராய்ச்சி செய்ய பயன்படும், அந்த ஆராய்ச்சிக் கருத்துக்கள் மிகவும் பயன்படும். தமிழை மட்டும் கற்றவர்களாக இருந்து பல்வேறு ஆரய்ச்சிகளைச் செய்து எழுதியிருக்கும் புத்தகங்களைப் பார்த்து மற்றவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

முழுப்பொருளையும் நம்மாலேயே உணரமுடிவதில்லை. அக நானூறு, புற நானூறு, அகத்திணை, புறத்திணை போன்றவைகளுக்குச் சரியான பொருளை சில சமயங்களில் நம்மாலேயே உணர முடியவில்லை. திரு. ம. பொ. சி. அவர்கள் கூறுகின்றபடி தமிழ் மூலம் தமிழை அறிந்தவர்கள் பெரும்பாலும் இருக்கின்ற காரணத்தால், அப்படிப்பட்ட தவறுகளைத் திருத்துவதற்கு வழி ஏற்படும் என்று கருதப்படுகிறது. இந்தத்துறை சென்னையிலே அமையவிருக்கின்ற காரணத்தால், ஆராய்ச்சிக் கருத்துக்களில் தவறுகள் ஏற்பட்டால் திருத்திக்கொள்ளவும், சரிப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பிருப்பதால், தமிழ்ப் பேராசிரியர்களைக் கலந்து கொள்ள வேண்டிய வாய்ப்பு பிற நாட்டாருக்கு ஏற்படுவதால் அப்படிப் பட்ட தவறுகள் அதிகமாக ஏற்பட வழி ஏற்படாது. நல்ல பல நிலைமைகள் ஏற்படுவதற்கு வழி உண்டாகும்.

**திரு. ப. மகாதேவன் :** சார், கார்ல்ட் வெல், போப் போன்றவர்களை நோக்கும்பொழுது திரு. ம. பொ. சி. அவர்களின் சந்தேகத்திற்கு ஆதாரமில்லை அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்குப்போக வேண்டாம்.

## பொன்னேரி அரசுக் கலைக் கல்லூரி இட மாற்றம்.

* 690 விஞ—**திரு. கரு. சிமைச்சாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரியிலுள்ள அரசுக் கலைக் கல்லூரியை நந்தனத்திற்கு அல்லது வேறு ஏதேனும் இடத்திற்கு மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

## ஜயம்கொண்டம் மருத்துவ மனையை விரிவு படுத்தல்.

* 691 விஞ—**திரு. கலியமூர்த்தி என்ற அ. கு. மூர்த்தி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் தாலுக்கா, ஜெயங்கொண்டத்தில் உள்ள மருத்துவ மனையை (Government Hospital) விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ). அரசு ஆணை எண். 2420, பொதுப்பணித்துறை நாள் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதியில் 40 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமை மருத்துவமனை ஒன்றை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சுமார் ரூ. 3·70 லட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வேலை தற்சமயம் நடந்தேறி வருகிறது.

**THIRU T. MARTIN :** First question Sir;

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது என்ன முறை என்று தெரிய வில்லை. ஒரு கேள்வி முடிந்து, அடுத்த கேள்விக்கு விடை சொல்லி யாகி விட்டது. அப்படியிருக்கும்போது, 'First question' என்று சொல்லுகிறீர்களே.

**THIRU T. MARTIN :** Thank you, Sir.





## முள்ளிப் பள்ளத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டடம்.

* 692 விஞ—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டடத்திற்கு 6—12—1968-ல் அடிக்கல் நாட்டப்பட்டும் அதற்கான பூர்வாங்க வேலைகள் துவங்க கால தாமதமேற்படுவதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஊராட்சி ஒன்றியத்திற்கு போதிய நிதி வசதியில்லாமையால் முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடத்திற்கான வேலைகள் துவங்க தாமதமேற்பட்டன.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, இதுபோன்ற ஊராட்சி ஒன்றியங்களிலே கட்டிட வேலைகளுக்கு அடிக்கல் நாட்டப்படுவதற்கும், கட்டடம் முடிக்கப்படுவதற்குமிடையே பல ஆண்டுகள் கடந்து போகின்றன ? இந்தக் குறையைப் போக்க குறிப்பிட்ட காலத்துக்குள்ளாகவே, அடிக் கல் நாட்டப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாகவே இந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடத்திற்கான வேலைகள் துவங்கக் காலதாமதமேற்படுவதற்குக் காரணம், அங்கிருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில் நிதிப் பற்றுக்குறை இருந்ததன் காரணமாக காலதாமத மானதாகக் கூறப்பட்டிருக்கிறது. நிதி வசதியைப் பெருக்க முயற்சி யெடுக்கப்பட்டு, ஓரளவிற்கு வரிகளை அதிகப்படுத்தியிருப்பதால் நிதி வசதி ஏற்பட்டிருக்கிறது என்றும், விரைவிலே அந்தத் திட்டம் முடிக்கப்படும் என்றும் குறிப்பு அங்கிருந்து கிடைத்திருக்கிறது.

## மருத்துவச் சிகிச்சை பெற ஆசிரியர்களுக்கு அடையாள அட்டைகள்.

* 693 விஞ—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிக்கூட ஆசிரியர்கள் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற சர்டிபிகேட் வாங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க அடையாள அட்டைகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற அளிக்கவேண்டிய என். ஜி. ஓ. சான்றிதழுக்குப் பதிலாக, அடையாள அட்டைகள் அரசிதழ் பதிவு பெருத அரசாங்க ஊழியர் களுக்கு வழங்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இது அரசினர் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு மட்டுமே பயன்படும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, எப்பொழுது முதல் அமுலுக்கு வரும் ? இப்பொழுது அதுமாதிரிக் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு ஆரம்பத்திலாவது கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப் பொழுது அந்த அட்டைகள் அச்சிடப்பட்டு ஆங்காங்கு விநியோகிக்கப்பட விருக்கின்றன. பலருக்கு இப்பொழுது வழங்கும் முயற்சியை விரைவில்

மேற்கொள்வார்கள். அச்சிடப்பட்டு, இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவிலே அரசிதழ் பதிவு பெறுதவர்களுக்கு அட்டைகள் கிடைக்கும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அவர்களுக்கான இந்த மெடிக்கல் அலவன்சைப் பெறுவதற்கு டாக்டர் சர்ட்டிபிகேட்டு வாங்கி கிளைம் பண்ண வேண்டுமென்றிருக்கிறது. அதை நீக்கிவிட்டு, நான்–கெஜட்டெட்டாக இருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகையை அளிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? ஆமெனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியைத் தாண்டியே போகிறீர்களே. மூலக் கேள்வியை விட்டுவிட்டு எங்கேயோ போகிறீர்கள். பணமாகக் கொடுத்துவிடுகிறீர்களா என்று உறுப்பினர் கேட்கிறார்.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், நான்-கெஜெடெட் ஆபீசர்ஸ், டீசர்ஸ் இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய மருத்துவ தேவையை அனுசரித்து சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்த பின்புதான் அவர்களுக்கு உண்டான மருத்துவப்படி, செலவு கொடுக்கப்படுகிறது. இதை நீக்கி, நான்-கெஜெடெட் ஆபீசர்ஸ், டீசர்ஸ் ஆகியோர்களுக்கு குறிப்பாக ஒரு தொகையை மெடிகல் அலவன்ஸ் என்பதாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவுமில்லை.

**திரு. என். வரதராஜன் :** இந்த அட்டைகள் கொடுக்கப்படுகிறபொழுது இந்த ஆண்டு புதிதாக சலுகை கொடுத்திருக்கக் கூடிய தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவர்கள் அரசிதழ் பதிவு பெறுதவர்கள் என்பதைக் காண்பிக்கிற வகையில் சான்றிதழுக்குப் பதிலாக ஐடெண்டிபிகேஷன் கார்டுகள் வழங்கப்பட வேண்டும் என்ற முறையில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சலுகை கொடுக்கப்பட்டவர்கள்பற்றி இன்னும் யோசிக்கப்படவில்லை. அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிலைமைதான் இப்பொழுது இருக்கும். அரசிதழ் பதிவு பெறுத அரசாங்க ஊழியர்கள், அரசினர் பள்ளி ஆசிரியர்கள் இவர்களுக்குத்தான் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. மற்றைய தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்தச் ஆண்டுதான் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இனிமேல் அதைப்பற்றி யோசிக்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசாங்க இதழ் பதிவு பெறுத அரசாங்க ஊழியர்களுக்கும் அடையாளக் கார்டுகள் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அடையாளக் கார்டுகள் அரசினர் ஆங்கில மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுவதற்குத்தான் பயன்படுமா? இந்திய மருத்துவ மனைகளில் இலவசச் சிகிச்சை பெறுவதற்குப் பயன்படாதா? மாடர்ன் மெடிஸின்ஸ்-க்குதான் ரீ இம்பர்ஸ்மெண்டு செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்திய மருத்துவப் பிரிவுகளிலும் இந்த சலுகையை வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாக நடைபெறுகிற எந்த மருத்துவமனையாக இருந்தாலும், அந்த வசதியைப் பெறலாம்.





**திரு. கொ. இர. ஞானசம்பந்தம்** ஊராட்சி மன்ற, நகராட்சி மன்ற பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கும் இந்த அடையாள கார்டு வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கு மட்டும்தான் இந்த அடையாளக் கார்டுகள் வழங்கப்படுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு சான்றிதழ் முறைதான் இருக்கும் என்று கருதுகிறேன். அது மறுபடியும் யோசிக்கப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 694, 695 எண்ணுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Model farms in Tamil Nadu*

*696 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government has invited Messrs. CIBA of India to run a model farm in this State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** இந்த சிபா ஆஃப் இன்டியா கம்பெனியுடன் நமது மாநிலத்தின் விவசாய அபிவிருத்தி பற்றி என்ன பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ரூ. 40,000 செலவில் இப்படிப்பட்ட வேளாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் முன்வந்தார்கள். அவர்களே விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து இவைகள் அத்தனையும் கொடுத்து, அறுவடையானதற்குப் பிறகு அதை வசூலித்துக் கொள்கிற ஒரு முறையை அவர்கள் கொடுத்தார்கள். இதற்கு அவர்கள் அரசாங்கமே, ஸ்விட்சர்லண்டு அரசாங்கமே இன்னும் ஒப்புதல் தரவில்லை. எனவே இப்பொழுது இந்தத் திட்டம் விடப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, about one thousand acres of poramboke land is available in Hosur Taluk and the climate and other factors are favourable and so will the Hon. Minister be pleased to recommend to Messrs. CIBA of India to start a model farm at Hosur.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அது மாடல் பார்ம் இல்லை. விவசாயிகளை குறிப்பிட்ட சில இடங்களில் எடுத்து, அவர்களுக்கு உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து, அவை அத்தனையும் இந்தக் கம்பெனிக்காரர்கள் கொடுக்கிற ஒரு திட்டத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு அவர்களுடைய அரசாங்கத்திலிருந்து, ஸ்விட்சர்லண்டிலிருந்து இன்னும் ஒப்புதல் வரவில்லை. எனவே, அரசாங்கம் ஒன்றும் முடிவு எடுக்கவில்லை. இது மாடல் பாரம் அல்ல.

[1970 ஏப்ரல் 6

*Agricultural Engineering Unit for Dharmapuri*

* 697 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new Agricultural Engineering Unit at Dharmapuri ; and

(*c*) if so, when it will be opened ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) தர்மபுரியில் புதிய வேளாண்மைப் பொறியியல் துணைக் கோட்டம் ஒன்று அமைப்பதற்கு ஏற்கெனவே அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய துணைக்கோட்டத்திற்கு நியமிக்கப்பட்ட வேளாண்மை உதவிப் பொறியாளர் ஒருவர் 25–2–1970-ல் பதவி ஏற்றார். இப்புதிய துணைக் கோட்டம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

THIRU B. VENKATASWAMY : Eventhough the Dharmapuri District was separated from the Salem District three years ago, the Agricultural Engineering section has not yet started functioning in the Dharmapuri District. So, will the Government come forward to issue strict orders for the opening of an Engineering Section in the Dharmapuri District immediately ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தர்மபுரி மாவட்டத்திற்குத்தான் இந்தப் புதிய துணைக்கோட்டம் இப்பொழுது துவங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். சேலத்திலிருந்து அவர்கள் வந்து ஆக்கபூர்வமான பணிகளை அவர்களால் செய்ய முடியவில்லை. அதன் காரணமாகத் தான் தருமபுரியில் உருவாகியிருக்கிறது. அதற்குள்ள சில பணியாளர்களையும் அரசாங்கம் நியமித்திருக்கிறது. சில புதிய பணியாளர்களையும் ஏற்கெனவே பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் சிலரையும் மாற்றி அமைத்தும் ஏற்பாடு செய்து, விரைவிலே இது பணியாற்றத் தொடங்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : A major portion of the Dharmapuri District is full of hard rock. Recently the Andhra Government introduced rigs which are very useful for digging wells. Wells can be dug within two or three days with one rig. Will this Government come forward to sanction one or two such rigs for Dharmapuri District ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் விவசாய மானியக்கோரிக்கை விவாதத்தின் பொழுது சொல்லும்பொழுது கூட ரூ. 25 லட்சத்திற்கு புதிய ரிக்குகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன். அந்த ரிக்குகள் பல இடங்களுக்கும் கொடுக்கப்படும். நிச்சயம் ஹோசூருக்கும் கொடுக்கப்படும்.

**சேத்தியாதோப்பு துணைப் பதிவாளர் அலுவலகத்துக்குக் கட்டடம்.**

*698. **வினா—திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தாலூக்கா சேத்தியா தோப்பு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு சர்க்கார் கட்டடம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு என். வி. நடராசன் :** இல்லை.



1970 ஏப்ரல் 6]

**தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள காவிரிப் பாசன ஆயக்கட்டுகள்**

***699 வினா.—திரு என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், காவேரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதி, மண்ணியாற்றின் தலைப்பு மண் அடித்து தூர்ந்து போய் விட்டதால் அதற்கு கொள்ளிடம், குமுக்கி மண்ணியாற்றிலிருந்து தற்காலிகமாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதை நிரந்தரமாக்கக் கோரி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள முடிவென்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** (அ) ஆம். 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் முறையீடு ஒன்று வரப்பெற்றது.

(இ) மண்ணியாற்றின் தலைப்பகுதியை மேம்பாடுசெய்து அதன் ஆயக்கட்டிற்குத் தண்ணீர் போதிய அளவு கிடைக்க வகை செய்வதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. மண்ணியாற்றின் தலைப்பகுதியை மேம்பாடு செய்து அதனால் ஏற்படக்கூடிய பலன்களைச் சிலகாலம் கவனித்த பின்னரே, மண்ணியாற்றுக்கு நீர் வழங்கும் வாயிலை மாற்றுவது குறித்து அதாவது குமுக்கி மண்ணியாறு கலக்குமிடத்திற்குக் கீழே மண்ணியாற்றின் கீழ் கடைமடைப்பகுதியில் உள்ள 3,738 ஏக்கர் ஆயக்கட்டுக்கு தற்போது தற்காலிக ஏற்பாடாக குமுக்கி மண்ணியாற்றிலிருந்து நீர் வழங்கப்பட்டு வருவதை நிலையான ஏற்பாடாக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மண்ணியாற்றின் தலைப்பு பெரும்பாலும் தூர்ந்துவிட்ட காரணத்தினால், மண்ணியாற்றில் கடைமடைப் பகுதிக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. எனவே, குமுக்கி மண்ணியாறு மூலம் கொள்ளிடத்தில் மண்ணியாற்றின் கடைமடைப்பகுதிக்குத் தண்ணீர் விட ஒரு நிரந்தரமான உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** ஏற்கெனவே நான் அளித்த பதிலில் இந்த விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

**திருமயம் தொகுதியிலுள்ள விராச்சிலைக் கண்மாய்க்குக் கால்வாய் அமைப்பு**

*** 700 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள வாழக்குறிச்சி நெய்வேலிக் கண்மாய்களின் கலிங்கல் நீர் வந்து விழும் கூடலூர் ஆற்றிலிருந்து தேவங்குழி, கண்ணேரிக் கண்மாய், ஆலங்குடிக் கண்மாய் வழியாக விராச்சிலைக் கண்மாய்க்குக் கால்வாய் வெட்டிப் பாசனத்தைப் பெருக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா :** இல்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள கண்மாய்கள், கலிங்கல் அமைப்பு சங்கிலித் தொடர் போன்று அமைந்திருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியில் கூடலாறு என்று அழைக்கப்படும் நெரிஞ்சிக்குடி ஆற்றையும், பாம்பாற்றையும் இணைக்கக்கூடிய கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டால் நிறைய கண்மாய் ஆயக்கட்டுகள் பயன் பெறும். ஆகவே, அரசாங்கத்தின் சார்பில் இது பரிசீலனை செய்யப்பட்டு மேற்கொள்ளப்படுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நெய்வேலிக் கண்மாயி லிருந்து கூடுதலான நீரை மற்ற கண்மாய்களுக்குக் கொடுக்கும் யோசனை இல்லை. ஆனால், நெரிஞ்சிக்குடி ஆற்றின் குறுக்கே அணை கட்டி, நாகணியேந்தல் கண்மாய், வடக்குப்பொட்டைக் கண்மாய், தெற்குப் பொட்டை கண்மாய், பண்யம் கண்மாய், குலத்தாண்டன் கண்மாய் ஆகிய ஐந்து கண்மாய்களுக்கும் நீர்வழங்கும் யோசனை பரிசீலிக்கப்பட்டு வருகிறது—

## திருமயத்திலுள்ள தாமரைக் கண்மாயைத் தூர் எடுத்தல்

*** 701 வினு—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா.

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தாமரைக் கண்மாயை இயந்திரங்களைக் கொண்டு மண் மராமத்து செய்து சீர்படுத்தும் பெரும் வேலைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்.?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற நேரத்தில், ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும், அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாகவும் அங்கே சொன்னார்கள். அந்தத் திட்டம் இங்கே பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** அந்தத் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபார்சின் பேரில் தலைமைப் பொறியாளரால் கைவிடப்பட்டிருக்கிறது.

## *Pambaiyar Scheme*

9-30 முற்பகல்

*** 702 *Q.*—Thiru T. MARTIN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the 'Pambaiyar' Scheme is now pending before the Government of Tamil Nadu for execution ; and

(*b*) if so, the particulars thereof ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் ஒரு வறண்ட மாவட்டமாகும்; திருநெல்வேலி மாவட்டம் வறண்ட பகுதிகளைக் கொண்ட மாவட்டம். ஆகவே, இந்த பம்பை யாறு செயல் முறைக்குவந்தால் அந்த மாவட்டங்கள், பயன் அடையும், பழைய காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே கேரள அரசோடு தொடர்பு கொண்டு அதைச் செயல்படுத்த செயற்குறிப்பு இருப்பதாகச் சொல்லப் படுகிறதே அது உண்மையா ? அப்படியானல், அதைத் தொடர்ந்து இந்த அரசாங்கம் கேரள அரசோடு தொடர்புகொண்டு, இந்த பம்பையாறு திட்டத்தைச் செயல்படுத்த முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கடந்த கால அரசு பல நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரிகிறது. அதற்கான யாதொரு முடிவும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து அந்த வேலைகளை நம்முடைய அரசு மேற்கொள்ளும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது முக்கியமான திட்டமாக இருப்பதால், மறுபடியும் கேரள அரசோடு தொடர்புகொண்டு, அதைப் பற்றிப் புனராலோசனை செய்ய தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Thiru S. J. SADIQ PASHA :** The question of utilisation of west-flowing rivers can be considered only after an agreement is reached between the two States on the issue. Such an agreement can also be reached following successive discussions after the draft agreement on the Parambikulam-Aliyar Project is finalised and approved by the Government of Kerala.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பம்பையாறு திட்டமென்பது கேரளத்தில் ஆரம்பிக்கப்பட்டு முடிவு பெறும் நிலையில் இருக்கிறது. ஆதலால், பம்பையாற்றில் மேற்கொண்டும் தண்ணீர் வரக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே மேல் நடவடிக்கை என்ன இருக்கிறது என்பது பற்றி சந்தேகம் இருக்கிறது. சர்க்காருக்கு இந்த விவரங்கள் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பம்பையாறு திட்டம் என்பது நம்முடைய உறுப்பினருடைய "பெட் ஸ்கீம்," அடிக்கடி வற் புறுத்தும் திட்டம். பம்பையாறு ஹைட்ரோ–எலெக்ட்ரிக் ஸ்கீம் கேரளாவில் முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது. இன்னும் சற்றுத் தண்ணீர் நமக்கு கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. மு. ச. சிவசாமி :** பம்பையாறு திட்டம் பற்றி கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி வெற்றி முறையாக வந்தால், எந்த எந்தப் பகுதி இதனால் பலன் அடையும் என்பது அரசாங்கக் குறிப்பில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதைப்பற்றி இப் பொழுது சொல்லாமல் இருப்பதே நல்லது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், கேரள முன்னாள் முதல் அமைச்சர் திரு. நம்பூதிரிபாட் காலத்திலேயே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரும், முதல் அமைச்சரும் இது பற்றிச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியதாகக் கூறப்பட்டதே. அது சம்பந்தமான விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை .

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், அமைச்சரவர்கள் பரம்பிக்குளம்–ஆளியாறு ஒப்பந்தம் ஆன பிறகு இதைப் பற்றிக் கவனிக்கலாம் என்று சொன்னார்கள். அந்தப் பரம்பிக்குளம்–ஆளியாறு பற்றி ஏற்கனவே முடிவு ஆகிவிட்டது என்று மக்கள் மத்தியில் இருக்கிறதே, அது எப்பொழுது முடிவடையும், அதன் பிறகு எவ்வளவு நாட்களுக்குள்ளாக இது பரி சீலிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த ஒப்பந்தம் கேரள அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்தப் பிரச்சினை முடிவு அடையும்போது, கவனிக்கலாம், இப்பொழுது இப்படிப் பட்ட கேள்விகளைக் கேட்டுப் பிரச்சினையை சிக்கலாக்காமல் இருப்பது நல்லது.

[1970 எப்ரல் 6

### வெட்டாற்றின் குறுக்கே பாலம்

***703. வின— திரு வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கொரடாச்சேரி அருகில் உள்ள வேடம்பூர் கிராமத்தையும், அரவங்குடி கிராமத்தையும் இணைக்கும் வகையில் வெட்டாற்றில் ஒரு புதிய பாலம் கட்ட தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம், எனில், இதற்கான மதிப்பீட்டு பட்டியல் தொகை எவ்வளவு ?

(உ) இத்திட்டம் எப்போது செயல்படத் துவங்கும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) 7·50 இலட்சங்கள்.

(உ) பாலம் கட்டும் வேலை தற்போது ஆரம்பமாகிவிட்டது.

**திரு வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுவதால், கொரடாச்சேரி, குடவாசல் வலங்கிமான் போன்ற இடங்கள் பயன் அடையும். ரயில்வே ஸ்டேஷனுக்கு சரக்குகளைக் கொண்டு போக சுலபமாக இருக்கும். ஆகவே, வேலையைத் துரிதமாக முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அப்படிப்பட்ட நன்மைகள் கிடைக்கும் என்பதால்தான் பாலம் கட்டும் வேலை நடக்கிறது.

**திரு. எம்.சுரேந்திரன் :** சார், அதே போன்று பாலங்கள் கட்டி முடிந்ததற்குப் பின்னால், இதற்காகும் செலவுகளை அதிலே போக்குவரத்துக்களிடமிருந்து வசூலிக்கப் படுகிறதனால்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ, நோ, அடுத்த கேள்வி.

### பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள்.

*** 704 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள, அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் 1967–68, 1968–69-ல் பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள் கட்ட வேண்டிய இன்றியமையாமை குறித்து அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளதா?

இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Bus stand at Panruti*

*** 705 *Q.*—THIRU S. RAMACHANDRAN :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken by Government to complete the construction of the bus stand at Panruti ?



1970 எப்ரல் 6]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேருந்து நிலையம் ஏற்படுத்துவது ஊராட்சியின் பொறுப்பாகும். பண்ருட்டியில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. பேருந்து நிலையம் பொது உபயோகத்திற்காக 28–11–1969-ல் திறக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பண்ருட்டி பஸ் நிலையம் பற்றி துணைக் கேள்வி கேட்பார் திரு வரதராஜன்.

**திரு. என். வரதராஜன் :** பண்ருட்டி பஸ் நிலையம் கட்டி ஒன்பது மாதங்களுக்குப் பிறகு திறப்பு விழா நடந்தது. தாமதத்திற்குக் காரணம், ஆணையாளருக்கும், நகரசபை உறுப்பினருக்கும் இடையில் தகராறு என்றும், மாற்ற வேண்டும் என்றும், கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்ததா ? அதன் மேல் நடவடிக்கை எடுத்து, விரைவாக முடிவு செய்ய இயலுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, பேருந்து நிலையத் தலைமைக் கட்டடம் 1968 ஆகஸ்டு திங்களில் முடிந்தது ; மேலும் சிலபல வசதிகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு, அதற்காக வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் முற்றுப் பெற்று, தயாராக இருந்தது. அதைத் திறந்து வைக்கவேண்டும் என்று ஜூலை திங்களில் சிறப்பு விழா நடத்த நகரமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. 1969-ம் ஆண்டு, நவம்பர் திங்களில், 28-ம் நாளில் பொதுமக்கள் உபயோகத்திற்கு, கல்வி—சுகாதார அமைச்சர் அவர்களால் அது திறந்து வைக்கப்பட்டது. குற்றச்சாட்டு வந்ததாகத் தகவல் இல்லை.

### மதுராந்தகத்தில் பேருந்து நிலையம்

***706 ,வினு—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஊராட்சி மன்ற பஸ் நிலையம் கட்டுவதற்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** பேருந்து நிலையம் கட்டுவதற்காக மதுராந்தகம் பேரூராட்சிக்கு மாநில நிதியிலிருந்து கடந்த ஆண்டில் ரூ. 50,000 கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** பேருந்து நிலையத்திற்கு மொத்தமாக சாங்ஷன் செய்யப்பட்ட தொகை எவ்வளவு ? அரசாங்கம் மானியமாகக் கொடுத்தது எவ்வளவு ? கடனுகக் கொடுத்தது எவ்வளவு ? பேரூராட்சி மன்றம் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** திட்டமிட்டுள்ளபடி அதன் மதிப்பீடு ரூ. 1,50,000. இதனைச் சரிக்கட்ட, ரூ. 75,000 மானியமாகவும், ரூ. 75,000 கடனுகவும் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. மானியமாகக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் கொடுப்பதற்கில்லை. ஆகவே, கடனுகக் கொடுக்கும் நிலையில் ரூ. 50,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஒரு லட்சத்திற்குக் குறைத்துக் கொள்ளுமாறு பேரூராட்சிக்கு அதைப் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

### *Employees of Public works Department deputed to Electricity Board.*

*** 707 *Q.*—THIRU N.S.V. CHITHAN :** Will the Hon. the Minister for Electricity be pleased to state the action taken by the Government to recall the Government employees who have been deputed to the State Electricity Board on foreign service terms from Public Works Department ?

**மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் :** தமிழ்நாடு மின்வாரியத்தின் கீழ்ப் பொதுப்பணித்துறை அதிகாரிகளின் நீண்ட காலப்பணியைக் கருத்தில் கொண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகளின் கீழ் ஏற்படக் கூடிய கூடுதல்பணிச்சுமையின் விளைவாக,தமிழ்நாடு மின்வாரியத்திலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பொதுப்பணித்துறை அதிகாரிகள் பொதுப்பணித்துறைக்கு திருப்பி அனுப்ப வேண்டிய எண்ணிக்கைகளை குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகளும், மின்வாரிய அதிகாரிகளும் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று பொதுப்பணித் துறையின் அதிகாரிகளையும் தமிழ்நாடு மின்வாரியத்தின் அதிகாரிகளையும் அரசு வேண்டிக் கொண்டது. இது குறித்து இறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையில் எல்லாப் பொறியாளர்களையும் பொதுப் பணித்துறைக்குத் திருப்பி அனுப்புமாறு வாரியம் அரசை மீண்டும் வேண்டிக் கொண்டுள்ளது. இது குறித்து வாரியத்துடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

**திரு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட இஞ்சினியர்கள் டெபுடேஷனில் வருவதில், பல தகராறுகள் ஏற்படுகின்றன. எனவே, முதன் முதலிலேயே வேலையில் நியமிக்கும்போது சிவில் இஞ்சினியர்கள் பொதுப்பணித் துறைதான் நியமனம் செய்ய வேண்டும் என்றும், எலெக்ட்ரிசிடியை சப்ஜெட்டாக எடுத்துப் படித்த இஞ்சினியர்களை மின்சார வாரியம்தான் நியமனம் செய்ய வேண்டும் என்றும், அந்த அந்த இலாகாவிற்கு வேண்டிய சிவில் இஞ்சினியர்களை பொதுப்பணித்துறையிலிருந்தும், எலெக்ட்ரிகல் இஞ்சினியர்களை மின்சார வாரியத்திலிருந்தும் பெறவேண்டும் என்றும் உத்தரவை அரசாங்கம் இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் :** மின்சார வாரியம் தனி போர்டாக இருப்பதால், தனியாக அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலைத் திட்டங்கள் புதிதாக எடுக்கும்போது, சிவில் இஞ்சினியர்கள் தேவைப்படுமானால், பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமெண்டிலிருந்து கடன் வாங்குகிறார்கள். 21, 22 வருஷங்கள் வேலை செய்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக திருப்பி அனுப்புவதில் சங்கடம் இருப்பதால் எந்த அளவில் நிறுத்திக்கொள்வது, எந்த அளவில் திருப்பி அனுப்புவது என்பது பற்றி இரண்டு இலாகாவும் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, ஒரு இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவிற்கு அதிகாரிகளையும், ஊழியர்களையும் மாற்றுவதன் மூலம் சீனியாரிடி போன்றவை கணக்கிடப்படுவதில்லை. பிரமோஷன் கிடைக்கவில்லை என்ற புகார்கள் வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அவைகளை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, சீனியாரிடி கணக்கிடப்பட்டு, பிரமோஷன் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே தற்காலிகமாக உள்ள பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இதிலே இரண்டு விதமான பளு இருக்கின்றன. உதாரணமாக, எண்ணூர் அனல் மின்சார நிலையத்திற்கு ஆயிரக்கணக்கான சிப்பந்திகள் தேவைப்படுகிறார்கள் என்றால், அந்தத் திட்டம் முடிந்தவுடன் அவர்களை நாம் வைத்துக் கொள்ள முடியாது. எதிர்பாரா வேலைத் திட்டங்களுக்காக நிரந்தரமல்லாத ஊழியர்களை வைத்துக் கொள்கிறோம். வேறு திட்டங்களை ஆரம்பிக்கும்போது தற்காலிகமாக வைத்துக் கொள்ளுகிறோம். பொதுவாக, தவிர்க்க முடியாத நிலை ஏற்படும்போதுதான் அவர்களுக்கு வேலை தரமுடியாமல் போகிறது. பெரும்பாலான நேரங்களில் அவர்களுக்கு வேலைகொடுக்கும் முயற்சி நடந்து வருகிறது.





**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** தலைவர் அவர்களே, நீண்ட காலமாக மின்சார இலாகாவிலே பணிபுரிந்தவர்கள் அந்த இலாகாவிலே இருப்பதற்கு விண்ணப்பித்தால் அனுமதிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, நீண்ட காலமாக இருப்பவர்கள் அங்கேயே இருக்கலாம். குறைந்தது ஓர் ஆண்டு காலம் தொடர்ந்து வேலைசெய்தாலே அவர்களுக்கு போனஸ் போன்றவை கொடுக்கப்படுகிறது. நிரந்தரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது, கூடுமான வரையில் அப்படிச் செய்துவருகிறோம்.

### கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி கிராமங்களுக்கு மின் இணைப்பு

***708 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய கிராமங்களுக்குரிய மின் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ)&(இ) திருமயம் வட்டத்திலுள்ள மின்திட்டத்துக்கான கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய கிராமங்களுக்குரிய மின் திட்டம் நிறைவேற்றப்பட்டு இக்கிராமங்களுக்கு மின்சக்தி 9–2–1970 அன்று வழங்கப்பட்டது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு வீதி விளக்கிற்கு மின்திட்டம் நிறைவேற்றப்பட்டமை குறித்து அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, அங்கே இருக்கக்கூடிய கேணிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கக் கூடிய திட்டம் இன்னும் நிறைவேருமல் இருக்கிறது. ஆகவே, அதை விரைவில் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, ஆவன செய்யலாம்.

### *Instruction classes for labourers*

***709 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—**

(*a*) whether this Government has any proposal to convene a conference of Labourers, industialists and other representatives to discuss about starting of training classes throughout the State to educate the workers about labour laws, etc., to enable them to help in negotiating with the Managememt ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ)&(இ) ஆம். செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. விரைவில் தொழிலாளர் கல்வித் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்த, அதற்கென்று அமைந்துள்ள தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர் தலைவர்கள் அடங்கிய முக்கூட்டுக் கூட்டத்தைக் கூட்ட திட்டமிட்டிருக்கிறேன்.

DR. H. V. HANDE: One of the reasons why labour unions go in for outside leadership is many of the labourers and working class people do not know the rules and regulations with which they have to counter any problems whenever there is arbitration between employees and labourers. In view of this, will the Government come forward and give them assistance so that they will be able to fight out these labour disputes without help of defence from outside? Will the Government think of a concrete arrangement by which the labourers are given free legal aid, certain advice whenever there is labour dispute ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் யோசனையின்படி, தொழிலாளர்களுக்கு, தொழிற் சங்க சட்டங்களும் தொழில் சட்டங்களும் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காக "தொழிலாளர் கல்விக்கான மத்திய வாரியம்" என்ற சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. நாகபுரியிலே இதன் தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டு, மூன்று நிலைகளில் இது நிறைவேற்றப் படுகின்றது. தமிழ்நாட்டில் மூன்று நகரங்களில் தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர் அமைந்து, தொழில் கல்வியைப் பரப்பி வருகிறார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், நம்முடைய மாநிலத்தில்தான் தொழிலாளர் கல்வித் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்று அறிய முடிந்தது. தொழிலாளர்கள் மூன்று மாதங்களுக்கான பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்று, தங்கள் தொழிற்சாலைகளுக்குத் திரும்புகின்றனர். பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் தொழிலாளர் ஆசிரியர் என்று அழைக்கப்படுகிறார்கள். அந்த ஆசிரியர்கள் அந்தந்த தொழிற்சாலைகளுக்கு அனுப்பி அங்குள்ள தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. வகுப்பு நடத்துவதற்கு அரை மணி நேரம் ஒதுக்கி தர வேண்டுமென்று தொழிலதிபர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மற்றும் மேஜை, நாற்காலி போன்ற இடவசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் அரசாங்கத்தின் சார்பிலே தொழிலதிபர்களை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில்தான் இந்தத் திட்டம் சிறப்புற நடைபெற்று வருகிறது. இது இன்னும் சிறப்புற அமைவதற்காக நானே விரைவிலே ஒரு முக்கூட்டு மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று முயற்சி செய்து வருகிறேன்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, தொழிலாளர் ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கு தொழிலாளர்களை அனுப்ப சில தொழிலதிபர்கள் மறுக்கிறார்களே, அதற்கு அரசாங்கம் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்குமா.? இதுவரையில் எத்தனை பேர் தொழிலாளர் கல்வி பயிற்சி பெற்றிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, எந்தெந்த தொழிலதிபர்கள் இப்படி தொழிலாளர்களை பயிற்சிக்கு அனுப்ப மறுக்கிறார்கள் என்ற விவரங்களைத் தந்தால் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். இதற்கென்று தனியாக ஒரு சட்டம் இல்லை. இந்தப் பயிற்சி தொழிலதிபர்களுக்கு உதவியாக இருக்கும் என்ற காரணத்தால்தான், இந்தக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது. புத்திசாலித்தனமான தொழிலதிபர்கள் யாரும் இந்தத் திட்டம் வேண்டாமென்று மறுக்கமாட்டார்கள். இதற்காக ஒரு முக்கூட்டுக் கூட்டத்தை விரைவிலே நடத்த வேண்டுமென்றுதான் எண்ணிவருகிறேன். மொத்தத்தில் எத்தனை தொழிலாளர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று கணக்கு கேட்டார்கள். தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்களைச் சேகரித்து தர முடியும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொழிற்சங்கமும் மாநாட்டிற்கு அழைக்கப்படுமா ? அல்லது குறிப்பிட்ட தொழிலாளர்களை மட்டும்தான் இந்த மாநாட்டிற்கு அழைப்பார்களா?



தொழிலாளர்களுக்கு சட்டப் பிரச்சினைகளிலே உதவி செய்வதற்காக வேண்டி ஏற்கெனவே மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது, இலவசமாக வழக்கறிஞர்கள் உதவிசெய்து தரப்படும் என்று கோரிக்கை இருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, தொழிலாளர் கல்வித் திட்டம் வேறு, தொழில் தகராறுகளிலே இலவசமாக வழக்கறிஞர்களின் உதவியளிப்பது வேறு. தொழிலாளர் கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாநாட்டில் பங்குபெறுவதற்காக ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., மத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், தனித்தனியான அமைப்புகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்படுகிறார்கள்.

DR. H. V. HANDE : Whenever there is a dispute between labour and management there is a role to be played by Labour Welfare Officer whether in Government enterprise or private enterprise. The Labour Welfare Officer will try to help one of the sides. But in practice, the Labour Welfare Officer takes the side of the management whether in public or private enterprise. He invariably sides with the management because he is afraid that his position will be affected if he takes the side of the labour. So will the Government think of bringing forward a legislation and see to it that the position of the Labour Welfare Officer is untouched and that he is quite safe even when he takes the side of the labour when there is a labour dispute ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இதே பிரச்சினை தொழிலாளர் மானியம் வந்தபோது உறுப்பினர்களால் பேசப்பட்டது. இதுபற்றி சில முடிவான கொள்கைகளை ஆராயவேண்டும். லேபர் ஆபீசர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுபவர்களாக இருக்க வேண்டும். இதுபற்றி இறுதியான முடிவை அரசாங்கம் எடுக்கும். பொதுவாக லேபர் ஆபீசர்கள் தொழிற்சாலைகளிலே இருப்பவர்கள் நடுநிலையோடு நடந்து கொள்ள வேண்டும். லேபர் ஆபீசர்கள் கண்டிப்பாக தொழிலாளர் பக்கமே இருக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. நாமும் அதை வற்புறுத்தி வருகிறோம்.

### பர்மாவிலிருந்து தாயகம் திரும்புவோரின் மறு வாழ்வு

***694. வினா—திரு என். எஸ். வி. சித்தன்.**—மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 மார்ச் முதல் 1969 ஜூன் முடிய பர்மாவிலிருந்து தமிழகத்துக்கு வந்த அகதிகள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் எங்கெங்கு குடியமர்த்தப்பட்டனர் ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்.**—(அ)&(இ) சட்டப்பேரவை முன் ஒரு பட்டியல்* வைக்கப்பட்டுள்ளது.

* 695 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether about 1,500 Indian repatriates from Burma arrived in Madras early in the month of June 1969 ; and

(*b*) how these repatriates of South Indian or Tamil origin are proposed to be rehabilitated in our State ?

---

* முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்.** (அ) பர்மாவிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்தியர்களை ஏற்றிக்கொண்டு ரங்கூனிலிருந்து நான்கு கப்பல்கள் 31-5-1969, 11-6-1969, 22-6-1969, 2-7-1969 தேதிகளில் சென்னைத் துறைமுகத்தை வந்தடைந்தன. இக்கப்பல்களின் மூலம் மொத்தம் 6,274 அகதிகள் வந்து சேர்ந்தனர். இவர்களில் தமிழ் பேசும் அகதிகள் 3,791 பேர். எஞ்சியவர்கள் இந்தியாவின் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

(இ) பர்மாவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளின் மறு வாழ்வுக்காக இந்த அரசு, வகுத்து, இம்மாநிலத்தில் நிறைவேற்றிவரும் திட்டங்களின் படியல்* ஒன்று சட்ட மன்றப் பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : From the statement placed on the table of the House it is clear that the Government is helping them to a large extent. Whereas the Central Government is giving a sum of Rs. 5000 for the construction of houses for Burma Repratriates, is our Government also giving any amount ? Is the Government aware of the fact that colonists in the colony for Burma evacuees which has sprung up near the Lattice Bridge have appealed to both the Leader of the House as well as the Finance Minister, and what action was taken to help them to construct their houses with the aid of Government loans ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பர்மா அகதிகளின் முழு செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது நம் கொள்கை. அந்த அளவு அவர்களிடம் இருந்து பணத்தைப்பெற முயன்று கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி—மாண்புமிகு அம்மையார் அவர்களுடைய தொகுதி—வியாசர்பாடியில் இரண்டே முக்கால் கோடி ரூபாயில் 9 ஆயிரம் பேர்களுக்கு வீடு கட்டும் திட்டம்—ஒரு பெரிய நகரமே அமைகிற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது நிறைவேற்றப்படும்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, பர்மாவில் இருந்து தமிழகத்திற்கு வரக்கூடிய தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற முறையில் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்படுகின்றன என்றார்கள், இத்துறையில் எத்தனைகோடி செலவழித்திருக்கிறோம், இந்த 1970-ம் ஆண்டில் எவ்வளவு தமிழர்கள் வர இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த ஆண்டு எத்தனை பேர் வருவார்கள் என்பது தெரியாது. பொதுவாக 1964-ம் ஆண்டில் இருந்து இதுவரை வந்துள்ளவர்களின் எண்ணிக்கை 94,470 பேர்கள். இவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க சிறுதொழில் பயிற்சி நிலையங்கள் தையல் தொழில், தோட்டத் தொழில் ஆகிய எல்லா வசதியும் அளிக்கப் படுகிறது.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, விவர அறிக்கையில 7 ஆயிரம் பேருக்கு உதவியளித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, 94 ஆயிரம் பேர் பர்மா அகதிகள்வந்ததாகக் கூறினார்கள். இடைவெளி அதிகமாக இருப்பதால் உடனடியாக அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பை அளிக்க நடவடிக்கை எடுப்பார்களா ? இதுவரை மத்திய சர்க்கார் அகதிகள் நிவாரண நிதியிலிருந்து நமது மாநிலத்திற்கு எவ்வளவு பணம் கிடைத்தது? இனிமேலாவது வற்புறுத்தி வாங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மூலக் கேள்வி ஜூன் 1969-ல் இருந்து இந்தியாவுக்கு வந்த பர்மா அகதிகளின் எண்ணிக்கை. அதற்கு நான் 7 ஆயிரம் என்று விவர அறிக்கையில் சொன்னேன். ஆனால் இப்போது 94 ஆயிரம் என்று குறிப்பிட்டது 1964 முதல் இந்தியாவுக்கு

* இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



வந்தவர்கள் என்று குறிப்பிட்டேன். ஆகவே என்னுடைய பதிலில் முரண்பாடு—இடைவெளி அதிகம் இல்லை. இவர்களுக்கு சிறுதொழில்களை ஏற்படுத்த மத்திய அரசாங்கத்தில் இருந்து 2,25,16,831 ரூபாய் பெற்று நல்ல முறையில் உதவியிருக்கிறோம்.

**திரு. பெ. மலைச்சாமி:** பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து வந்தவர்கள் அதிகமான சொத்துக்களைவிட்டு வந்திருக்கிறார்கள். அந்த சொத்துக்களுக்கு நஷ்ட ஈட்டைப்பற்றி மத்திய அரசாங்கத்தின் மூலம் வற்புறுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த அரசு எத்தனையோ விஷயங்களில் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. அகதிகளுக்கு சிறுதொழில் ஆரம்பிக்க கடனாகக் கொடுக்கிற பணத்தில் கூட அவர்கள் திரும்பக் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் 25 சத வீதத்தை இந்த அரசே திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நம் தலையில கட்டியிருக்கிறார்கள். இது நியாயமில்லை. அவர்கள் திருப்பிக் கொடுப்பதைத்தான் கொடுப்போம் என்று சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்களே பர்மாவில் இருந்து வருகிறவர்களுடைய சொத்துக்களுக்கு நஷ்டஈடுபற்றி வற்புறுத்தி வந்தார்கள். நாம் சொல்வது எதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

THIRU K. VINAYAKAM : In the Burma repatriates colony in Vyasarpadi most of the families are living in water-logged areas during the rainy season. Will the Government take steps to instruct the Corporation of Madras to lay at least approach roads with lighting facilities so as to alleviate the trouble and inconvenience undergone by the repatriates ? The area is in the Madam's (Minister for Agriculture) constituency.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. சில பகுதி ஹவுஸிங்போர்டில் இருக்கிறது. சில கார்ப்பரேஷனிடம் இருக்கிறது. இதை எல்லாம் அணுகுவதைக் காட்டிலும் மத்திய அமைச்சரையே கொண்டுபோய் காட்டியுள்ளோம். அவர் உதவுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உதவி கிடைத்தவுடன் நாமே நல்ல முறையில் அதற்குப் பரிகாரம் தேடலாம்.

**திரு எஸ். அக்னிராஜு:** பர்மாவில் இந்தியாவில் இருந்து சென்றவர்களைப்போல் பர்மாவில் இருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்தியர்கள் மட்டும் வெளியேற்றப்படுவதற்கு அரசியல் காரணம் ஏதாவது உண்டா?

பாகிஸ்தானில் இருந்து அகதிகள் வந்தபொது தண்டகாரண்யம் திட்டம் என்று மத்திய சர்க்கார் தனியாகவே தங்கள் பொறுப்பில் ஒரு திட்டத்தைத் தாயாரித்துச் செயல்படுத்தினார்கள். ஆனால் பர்மாவில் இருந்து வருகிற தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க அப்படி ஏன் செயல்படவில்லை? இனிமேலாவது அப்படிப்பட்ட திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதில் அரசியல் காரணம் என்ன என்று எனக்குத் தெரியாது. பாகிஸ்தான் அகதிகளுக்கு இந்திய சர்க்கார் பரிவு காட்டினார்கள். பர்மா, இலங்கை அகதிகள் விஷயத்தில் அப்படியில்லை என்பது சரியல்ல. இந்த நேரத்தில் அவர்கள் இந்த அகதிகளுடைய புனர் வாழ்வுக்காக அளிக்கிற உதவிகளுக்கு நான் பாராட்டவே விரும்புகிறேன். இந்த விஷயத்தில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு,—ஓர் உரையின் தொடாகத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்,]

## 2. அவையுரிமைக் கேள்விகள்.

முற்பகல் 10-00

(அ) இந்திய மாநிலங்கள் அவையில் திரு. எஸ்.எஸ். மாரிசாமி தமிழ் நாட்டு சட்டப்பேரவை உறுப்பினர் சிலரைக் குறித்துப் பேசியதாக வந்துள்ள செய்தி பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்திய மாநிலங்கள் அவை உறுப்பினர் திரு. எஸ். எஸ். மாரிசாமி அவர்கள் 1970 எப்ரல் 2-ஆம் நாளன்று மாநிலங்கள் அவையில் பேசியதாக, 1970 எப்ரல் 3-ஆம் நாளிட்ட "இந்து", "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "நவசக்தி" 1970 எப்ரல் 4-ஆம் நாளிட்ட "தினமணி" ஆகிய நாளிதழ்கள் முறையே

'Some members of the State Assembly were taken away to Bangalore and given Scotch whisky besides the facilities of motor cars and jeeps.,
என்றும்,

'Some members of the State Assembly were taken to Bangalore and entertained with liquor and other things...................He was shocked by the corrupt practice.'
என்றும்,

" ராஜ்ய எம்.எல்.ஏக்கள் சிலர் பெங்களூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு ஸ்காட்ச் விஸ்கி வாங்கி ஊற்றப் பட்டது. அவர்களின் உபயோகத்திற்காக கார்களும் ஜீப்புகளும் கொடுக்கப்பட்டன என்றும் மாரிசாமி கடுமையாகக் குற்றஞ்சாட்டிப் பேசினார்"
எனவும்,

" ராஜ்ய அசெம்பிளி மெம்பர்களில் சிலர் பெங்களூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அவர்களுக்கு ஸ்காட்ச் விஸ்கி சப்ளை செய்யப்பட்டதாகவும் கூறினார் "
எனவும் வந்திருக்கும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, உரிமை மீறிய நிகழ்ச்சி ஒன்றைப் இப்பேரவையில் எழுப்ப, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கோ. பூவராகன், திரு. எம். சுரேந்திரன், ஆகியோர் என் அனுமதியை வேண்டியுள்ளார்கள்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் பேசுவதும் எழுதுவதும், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமையை மீறியதேயாகும்.

ஆனால், ஓர் அவையைச் சார்ந்த ஓர் உறுப்பினர் மீது, பிறிதொரு அவையைச் சார்ந்த ஓர் உறுப்பினர் எழுப்பும் இதுபோன்ற உரிமை மீறிய நிகழ்ச்சியில் கடைப்பிடிக்க வேண்டிய முறை பற்றி எர்ஸ்கின் மே அவர்கள் பின்வருமாறு வழிகாட்டியுள்ளார் :

" The leading principle which appears to pervade all the proceedings between the Houses of Parliament is that there shall subsist a perfect equality between them, and that they shall be, in every respect, totally independent one of the other. Hence it is that neither House can claim, much less exercise, any authority over a member of the other. Neither House of Parliament can take upon istself to punish any breach of privilege or contempt offered to it by any member of the other House. If any complaint is made against any individual Member or against any of the officers of the other House the usual mode of proceeding is to examine into the fact and then lay a statement of that evidence before the House of which the person complained of is a Member or officer." என்றும்

When a member, officer, or servant of either House has been guilty of any offence either against the other House or against its members, which would be punishable by the latter if committed by one of its own



members, officers, or servants, it is the duty of the House to which such offender belongs, upon being apprised of the fact, to take proper measures to inquire into and punish the offence in a proper manner.'
என்றும் வழிகாட்டியுள்ளார்.

மேலும் இது போன்ற நிகழ்ச்சியில் கடைப்பிடிக்க வேண்டிய முறை பற்றி நம் இந்திய நாடாளுமன்ற இரு அவைகளின் உரிமைக் குழுக்களும் ஒன்றாக அமர்ந்து ஆய்ந்து எடுத்த முடிவு பின் வருமாறு :

" When a question of breach of privilege is raised in any House in which a member, officer or servant of the other House is involved, the Presiding Officer shall refer the case to the Presiding Officer of the other House.

Upon the case being so referred, the Presiding Officer of the other House shall deal with the matter in the same way as if it were a case of breach of privilege of that House or of a member thereof.

The Presiding Officer shall thereafter communicate to the Presiding Officer of the House where the question of privilege was originally raised a report about the enquiry if any, and the action taken on the reference'
என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த அவையில் இப்போது எழுப்பப்பட்டிருக்கும் நிகழ்ச்சியில் திரு. மாரிசாமி அவர்கள் உண்மையில் அவ்வாறு பேசியிருப்பின், அது உரிமை மீறியதே ஆகும் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், அளித்திருக்கும் ஆதாரங்கள், செய்தித் தாள்களில் வந்திருக்கும் செய்தியாகவே இருப்பதால் திரு. மாரிசாமி அவர்களின் பேச்சு பற்றி ஏற்புடைய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு மாநிலங்களின் அவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்கிறேன், என்ற அளவில் இதை நிறுத்திக் கொள்கிறேன்.

**Thiru K. VINAYAKAM:** Just listen to us

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு ரூலிங் கொடுத்து இருக்கிறேன், ரெபர் பண்ணுவதாக.

**திரு. கே. விநாயகம் :** மற்றக் கட்சிக்காரர்கள் என்ன அபிப்பிராயம் சொல்கிறார்கள் என்று கேட்டால் உங்கள் ரூலிங்க்கு இன்னும் கொஞ்சம் பலம் ஏற்பட்டிருக்கும்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** அப்படிக் கேட்பதற்கு சபாநாயகர் அவர்களுக்கு உரிமை உண்டு, ஆனால் எந்தக் கட்டத்தில் என்றால் பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா என்று பார்க்கின்ற நிலையில் தான். ஆனால் சபாநாயகர் அவர்களே பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்று தெரிவித்து ராஜ்ய சபைத் தலைவருக்கு ரெபர் பண்ணுகிறார்கள். இதிலே அந்தக் கட்டம் வராது. பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா என்று முடிவெடுப்பதற்காகத்தான் அப்படிக் கேட்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**Thiru K. VINAYAKAM:** Just listen to me

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமைப் பிரச்சினையை எழுப்பி இருப்பவர்கள் நான்கு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் கருத்து வழங்க வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் கருத்து வழங்குகின்ற நேரத்தில்—எனக்கு ஒரு அச்சம்—அந்த அவையிலே அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்ததாகச் சொல்லப்படுவது பற்றி இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற நேரத்திலே, நாம்

[பேரவைத் தலைவர்] [1970 எப்ரல் 6

அதைப்பற்றி இந்த அவையிலே பேசுகின்ற கருத்துக்களைப் பற்றி, அங்கேயிருக்கின்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் மீது ஏதாவது, உரிமைப் பிரச்சினை எழுப்பக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பது. நமக்கு வழி காட்டுவதற்காக சில தீர்ப்புகள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் குறித்து வழங்கப் பட்டிருக்கின்றன என்பதைக் கூறினேன். எனவே மாநிலங்களின் அவைத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு செல்கின்ற அளவோடு இதை நிறுத்திக் கொள்கிறேன்.

**திரு ஏ. அ. சுப்பரராஜா :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், சபாநாயகர் அவர்கள் கொடுத்த தீர்ப்பு நல்ல தீர்ப்பு. முறைப்படி அனுப்புகிறார்கள். மிக முக்கியமான பிரச்சினையாகிய இதை இந்த அவையிலே விவாதிக்கக் கூடாது என்று சொல்கிற நேரத்திலே, அந்த அவைத் தலைவருக்கு அதை அனுப்புகின்ற நேரத்திலே அவர்கள் அதைப் பரிசீலிக்காமல் ஒன்றுமே செய்யாமல் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டால்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுப்புகிறோம். எதிர்காலத்தில் அப்படி ஆகிவிட்டால் என்ன ஆகும் என்பதையெல்லாம் சொல்வதற்கு இது நேரமில்லை.

**திரு எம். சுரேந்திரன் :** கனம் சபாநாயகர் அவர்களே............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கொடுத்ததை யெல்லாம் சொல்லியிருக்கிறேன். என்ன வேண்டும் ?

**திரு. எம். சுரேந்திரன் :** என்னிடம் ஆதாரம் இருக்கிறது. சபாநாயகர் அவர்கள் இந்த உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான அபிப்பிராய பேதமும் எனக்கு இல்லை. திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னிடத்தில் ஒரு ஆதாரம் இருக்கிறது. ஒரு கடிதம் லீடர் ஆப் தி பிரஜா சோஷலிஸ்ட் பார்டி என்று போட்டு ராஜமஹேந்திரியிலே முத்திரையிடப்பட்டு இருக்கிற தபால்—கையெழுத்து இல்லை—இருந்தாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுரேந்திரன் அவர்கள் என்னுடைய அறையிலே அதைக் காட்டினார்கள். என்னிடத்திலே தாருங்கள் இந்த அவையிலே அதை அறிவிக்கலாமா இல்லையா என்பதைப் பற்றிச் சொல்லலாம் என்று நான் சொல்லியிருக்கும்பொழுது, அவர்கள் அதைப் பற்றி இந்த அவையிலே சொல்வது சரியல்ல. அறையிலே கொடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தங்களுக்கு அளிப்பதற்காகத்தான் அதைப் பற்றிச் சொல்ல வந்தேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நான் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்........

**மாண்புமிகுபேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவரிடம் அவர் இங்கே வந்து அரை மணி நேரத்திற்குப் பிறகு திரு. கோதண்டராமன் அவர்கள் உரிமைப் பிரச்சினையென்று கொடுத்திருக்கிறார்கள். என்ன கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பார்த்து விட்டுத்தானே சொல்ல முடியும்.

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் மாரிசாமி அவர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் எந்த விதியின் கீழ் ?



1970 எப்ரல் 6]

**திரு. டி. மார்டின் :** 83-வது விதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 83-வது விதியின்கீழ் உறுப்பினர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எப்படி எழுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே 83-வது விதி என்று சொல்லிக் கொண்டு எழுந்துவிடக் கூடாது. எந்த விதி, எந்த மரபு மீறப்பட்டிருக்கிறது என்பதை முதலிலே சொல்லிவிட்டு, பிறகு விளக்கத்திற்கு போகவேண்டும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே அதை அனுமதித்ததற்குப் பிறகு எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் கொண்டுவந்தால் அந்தத் தலைவரை............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** Please sit down.

இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டுமென்று சொன்னேன். அந்த அவையிலே பேசப்பட்டு அனுமதிக்கப்பட்ட காரணத்தால் அது சரி என்பதல்ல. அந்த அவையில் உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில், பேரவைத் தலைவர் கவனிக்காததாலோ அல்லது வேறு காரணங்களாலோ அவர் கவனத்திற்கு வராது இருந்திருக்கலாம். பேரவைத் தலைவரே ஒவ்வொருவர் பேசுவதிலும் இது இது உரிமை மீறிய நிகழ்ச்சி என்று கூறுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு உரிமை மீறிய நிகழ்ச்சிகளைப் பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரும்போது, அதிலே உரிமை மீறிய நிகழ்ச்சி இருக்கிறதா என்று தீர்ப்புக் கொடுக்கிறார். உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே உறுப்பினர் மார்ட்டின் அவர்கள் எழுப்பியது பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

**Dr. H. V. HANDE :** Arising out of what the hon. Member Thiru Martin said, already there is a privilege issue before the Hon. Chairman Rajya Sabha. In view of that will it be in order, if we communicate this matter subsequent to that? It is already in the jurisdiction of the Chai man, Rajya Sabha and he is seized of the matter. May be this might have escaped the notice of the Hon. Speaker. So will it be in order,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மாரிசாமி அவர்கள் பேசிய பேச்சின் மீது மாநிலங்களின் அவைத் தலைவர் உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டார்கள் என்ற செய்தி இதுவரை பேரவைத் தலைவருக்குத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தாலும் கூட, அவர்கள் உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டிருக்கும் நேரத்திலும் கூட, அவர்களுடைய மேலான கவனத்திற்கு நாம் கொண்டு வருவதில் எந்தவிதமான தவறும் இல்லை. நாம் செய்ய வேண்டிய கடமையை, இந்த மன்றம் செய்ய வேண்டிய கடமையைச் செய்திருக்கிறோம். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**Dr. H. V. HANDE :** This should not go on like this. May be in the other House, Lok Sabha, something may come up later. That is why I say "kindly analyse the whole thing". If we go on raising issue like this, subsequently another issue viz., whether the Chairman here has got jurisdiction may be raised ............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாநிலங்கள் அவையிலே மட்டுமல்ல, இந்த ராஜ்யத்திலேயே இருக்கும் வேறு ஒரு மன்றமாக இருந்தாலும், அல்லது வேறு ராஜ்யங்களிலே இருக்கக்கூடிய மன்றமாக இருந்தாலும், இந்த அவையில் இருக்கும் உறுப்பினர்களுக்கு மாசு கற்பிக்கும் முறையிலே, இந்த அவைக்கு இழுக்கு ஏற்படுத்தும் நிலையிலே மற்ற

அவைகளிலே பேசக்கூடாது. ஆகவே, முறைப்படி நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத்தான் எடுத்திருக்கிறோம். எந்தக் கருத்தை எந்த அவையிலே கூறினாலும் அது அவையின் உறுப்பினர்களுக்கோ, அவைக்கோ இழுக்குத் தேடும் முறையில் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது உரிமை மீறிய நிகழ்ச்சியாகும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பி இருப்பவர்களுக்கு மட்டும் இது உரிமைக் கேடான விவகாரம் அல்ல. இந்தச் சபையின் கருத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**(ஆ) நிலச் சீர்திருத்த மசோதா பேரவையில் அறிமுகம் செய்யப்படுமுன் டெல்லியில் திட்டக் குழுவிடம் ஆலோசனை பெறவும், குடியரசுத் தலைவர் சம்மதத்தைப் பெறவும் நிதி அமைச்சர் ஏற்பாடு செய்தது குறித்தும், அதனால் மசோதாவின் இரகசியத் தன்மை காப்பாற்றப் படாதது குறித்தும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. க. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மீது எழுப்பி யிருக்கிறார்கள். 31-ம் தேதி கொடுக்கப்பட்டது. அதை நான் படிக்கிறேன்.

The Hon'ble Minister has today chosen to seek the leave of this House to introduce the Tamil Nadu Land Reforms Bill, 1970.

The Hon'ble Minister while replying to the debate on 28th March 1970 on the supplementary demands for 1969-70 has said that an Officer of the State Government had gone to New Delhi *to obtain the consent of the President* for the draft Bill to give effect to the Government's decision to reduce the ceiling on land holding from 30 standard acres to 15 standard acres.

Rule 91 of the TamilNadu Legislative Assembly Rules authorises the Speaker to refer any Bill or amendment to the Governor or the President if notice is given of any motion in respect of a Bill or an amendment which in the opinion of the Speaker cannot be made except on the recommendations of the Governor or with the previous sanction of the President.

Only on the Bill being passed by the Assembly the same is sent by the Speaker to the Governor or the President as the case may be for his assent.

Articles 199 (4) and 200 of the Constitution of India also empowers the Governor or the President to declare or withhold his assent to any Bill only when it reaches them after having been passed by the Assembly.

Neither the Tamil Nadu Legislative Assembly rules nor the Constitution of India provide for a Bill of this House to be consented to by the Governor or the President as the case may be, even before notice is given of such motion in respect of such a Bill.

The Hon'ble Minister for Finance has chosen to refer the Tamil Nadu Land Reforms Bill 1970 to the President for his consent. This involves a gross breach of privilege of the Tamil Nadu Legislative Assembly Rules.



Further contra to the information given by the Hon'ble Minister for Finance that *an* officer of the State Government had gone to New Delhi to obtain the consent of the President for the draft Bill, two offici*als* of the State Government viz. Thiru P. K. Nambiar, Revenue Secretary and Thiru S. Vadivelu, Joint Secretary of the Revenue (Law) Department have gone to Delhi.

The State Government Officers have had discussions with the Law Ministry and Planning Commission Officials on the proposal of the State Government to reduce the land ceiling from 30 standard acres to 15 standard acres.

The Planning Commission has no recognition or legal status according to the Constitution of India. It is only a recommendatory, and consultative body of and to the Central Government. As such the State Government can have nothing directly with the Planning Commission. But still the Officials of our State Government have had consultation with the Planning Commission at Delhi on the Land Reforms Bill 1970.

Nothing could have prevented the secrets of the Bill or the aspects of the various clauses of the Bill from being known or intimated to the people of Tamil Nadu from New Delhi. Whether this had taken place or not the secret of the Bill stands revealed to the Planning Commissios which is in gross violation of the Rules of Procedure of this House.

Before this House was taken into confidence other bodies have been intimated and consulted on the Bill. This should be deemed as a disrespect shown to this House and that the sovereign power of this House has not been respected by the Hon'ble Minister. The Hon'ble Minister has almost pledged our right to Delhi.

And hence, Sir, I move that you may be pleased to move this issue to the Committee of Privileges.

என்று எழுப்பியிருக்கிறார்கள். இதிலே எந்தவகையில் உரிமை மீறி யிருக்கிறது என்று திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். இதிலே கூறப்பட்டிருப்பதைத் தவிர வேறு ஏதாவது உறுப்பினர் அவர்கள் கூறப் போகிறார்களா ?

**திரு. க. இராமமூர்த்தி :** நான் கொடுத்திருப்பதுதான், வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதன் மீது நான் என்னுடைய தீர்ப்பையும் கூறிவிடுகிறேன்.

Clause 3 of Article 166 of the Constitution lays down that the Government shall make rules for the more convenient transaction of business of the Government of the State. Pursuant to the said provision the Government of Tamil Nadu have framed the Rules called the Tamil Nadu Government Business Rules which are Statutory Rules. These rules contain the procedure to be followed by the administrative departments in the case of proposals for legislation.

Rule 46 (*a*) of the said rules states that where the previous sanction of the President or the recommendation of the Governor is necessary for a Bill, the originating department shall obtain it.

The next stage, namely, the issue of notice of motion for introduction of a Bill to the Secretary to the Chamber or of the Legislature in which it is proposed to introduce the Bill, is contained in Rule 46 (*b*) which follows and does not precede the procedure laid down in rule 46 (*a*).

The provision in rule 91 of the Assembly Rules must be construed to clothe the Speaker with the power to decide whether a Bill or an amendment requires the recommendation of the Governor or the previous sanction of the President, as the case may be, and also to refer the Bill to the authority who has the power to grant the sanction, in case it has not been already obtained.

In point of fact, this provision relates more to the recommendation contemplated under rule 207 (1) and the recommendation contemplated under rule 207 (3) read with Article 199 of the Constitution in respect of a Money Bill and other Bills. It is significant that Article 199 (3) provides that the question whether a Bill is a Money Bill or not shall be decided by the Speaker and his decision shall be final.

Even for the introduction of a Money Bill, the recommendation of the Governor is necessary and the first requisite under Article 207. But in respect of the class of Bills which if enacted and brought into operation would involve expenditure from the Consolidated Fund of the State, the recommendation as provided in Article 207(3) is necessary only at the consideration stage and not at the introduction stage.

It is well to mention here that in respect of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling) Act, Act 58 of 1961, recommendation for consideration and not for introduction was obtained. Further, the Bill was later reserved for assent of the President.

Further, Rules 42, 43 (2) and 43 (3) of the Business Rules, provide that the administrative department shall obtain the opinion of such officers and bodies, particularly of the Government of India, as it seems necessary on the draft Bill...... if a Bill which is proposed to be introduced falls within the concurrent legislative field, or attracts the provision of clause (2) of Article 31 or clause (1) of Article 31-A of the Constitution.

From the above it follows that the procedure adopted in the case of the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land))Bill 1970, is in accord and conformity with the provisions of the Constitution and the business rules and is by no means a deviation from or violation of, any of them.

Therefore, there is no question of disclosure or leakage of the provisions of the Bill to any person or body before it is introduced in the House, much less any disrespect to the House in which it is introduced. Hence, the question of breach of privilege does not arise.

As regards the point that, whereas two officers went to the Government of India, the Hon. Minister said only one Officer went to the Government of India, there is no substance or force in this. These are administrative matters and are done in accordance with exigencies of service and hence the discrepancy is inconsequential and trivial, if any.



ஆகவே இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன். தெளிவாகவே இருக்கிறது. விதிகளை வேண்டுமானால் படிக்கிறேன்.

The administrative department will obtain the opinions of such officers and bodies as it seems necessary on the draft Bill and submit the opinion received with a copy of the tentative draft bill to the Minister in charge.

If a Bill which is proposed to be introduced in the Legislature falls within the concurrent legislative field, the administrative department principally concerned shall, whenever possible, consult the administrative department of the Government of India dealing with the subject-matter of the Bill on the proposed legislation. Consultation with the Government of India shall also be necessary in cases where a Bill may seek to amend a law falling within the concurrent legislative field, eventhough such law applies only to the State of Madras. Such consultation should be made after the stage indicated in clause (1).

என்று தெளிவாகவே இப்படிப்பட்ட மசோதாக்கள் தயாரிப்பதற்கு முன்பு நம் மாநிலத்தில் உள்ள அத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தியாவிலுள்ள அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோடு அதற்குரிய மற்ற துறை அதிகாரிகளோடு கலந்து முடிவு எடுக்க வேண்டுமென்று நம் விதிகள் தெளிவாக இருக்கின்றன. ஆகவே, எந்தவிதமான முரண்பாடும் இல்லை. எந்தவிதமான உரிமை மீறுதலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இ) மாநிலங்கள் அவைத் தேர்தலில் இரு வாக்குகள் செல்லாதவை ஆகிவிட்டது பற்றி திரு. டி. மார்டின் பேசிய பேச்சு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, திரு. அக்னிராஜு அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் 'கூறியிருப்பது—

On 31st March 1970 Thiru T. Martin, M.L.A., while rising on a point of order under Rule 83 of the Tamil Nadu Legislative Assembly Rules has *inter alia* stated as follows :—

கண்ணியமிக்க பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறோம். ராஜ்ய சபை தேர்தலில் 2 வோட்டுகள் செல்லாத வோட்டுகளாக ஆகிவிட்டன.......... கண்ணியமான இந்தச் சபையிலே நாமெல்லாம் உறுப்பினர்கள். இரண்டு வோட்டுக்கள் செல்லாத வோட்டுக்களாகிவிட்டன. இதைப்பற்றி மக்கள் வோட்டுப் போடுவதற்குக் கூடத் தெரியாத நிலைமையிலே இரண்டு வோட்டுக்கள் ஆகிவிட்டன என்று பொதுமக்கள் பேசக்கூடிய நிலைமையிலே இந்தச் சட்டசபையினுடைய கௌரவத்தைப் பாதிக்கும் செயல் நடைபெற்று இருப்பதால் தாங்கள் அதைப்பற்றி விசாரணை நடத்தி இரண்டு வோட்டுக்கள்........என்று முடித்திருக்கிறார்கள்.

The above statement is a gross reflection upon the conduct of the Hon. Speaker and the Members of this Hon. House and also lowers the dignity and prestige of the Members and also of the House in the eyes of the general public. By his statement the Member also indirectly attributes motives to the Hon. Speaker, Hon. Ministers and other

Hon. Members of the House that they do not know even the procedure of voting in the election. Hence it is a contempt of the House and also a breach of privilege.
என்று ஓர் உரிமை மீறிய வழக்கை அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். அக்னிராஜு**: தலைவர் அவர்களே, திரு மார்டின் அவர்களுடைய இந்தப் பேச்சால் இங்கிருக்கிற 234 உறுப்பினர்களைப் பற்றியும் பொதுவான முறையில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பொதுமக்கள் இதை நம் சட்டமன்ற உறுப்பினர் செய்திருப்பாரோ என்றதொரு அச்சமும் ஒரு பேச்சும் வரக்கூடிய அளவில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். மேலும் வோட்டு போடுவதில் செல்லுபடியாகக் கூடிய வோட்டுதான் போட வேண்டும் என்றில்லை. வோட்டுப் போடும் முழு உரிமையும் உறுப்பினர்களுக்கு இருக்கிறது. செல்லுபடியாகாத வோட்டை யார் போட்டார்கள் என்று கண்டுபிடித்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் கூட அவர்கள் சொல்கிறார்கள். அந்த அளவில் அது இங்குள்ள ஒவ்வொரு உறுப்பினருடைய கௌரவத்தையும், இந்த சபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் பாதிக்கிற அளவில் உள்ள அந்தச் செயல், நம் கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் இருப்பதால் இதன் மீது தலைவர் அவர்களின் தீர்ப்பைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.**—திரு அக்னிராஜு அவர்கள் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினை மீது நாளைக்கு என் முடிவைத் தெரிவிக்கிறேன்.

## (ஈ) பேரவைத் தலைவரால் நீக்க ஆணையிடப்பட்ட சில பகுதிகளை "நவசக்தி" நாளிதழில் வெளியிட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் இப்பேரவையின் உரிமை மீறிய ஒரு காரியத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு கோ. பூவராகன், திரு வி. கே. கோதண்டராமன் ஆகியோர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். 4—4—1970 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு கரு. சீமைச்சாமி அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியைச் சபையின் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும், அப்பகுதிகள் பத்திரிகைகளிலும் வெளியிடப்படக்கூடாதென்றும் நான் அறிவித்திருந்தேன். அப்படி நீக்கப்பட்ட பகுதிகள் 5—4—1970 தேதியிட்ட "நவசக்தி" நாளிதழில் வெளியாகி இருக்கிறதென்றும், அது இந்த அவையின் உரிமையை மீறிய ஒரு நிகழ்ச்சி என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அறிக்கைகளில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

அதுபற்றி சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. கோ. பூவராகன்**: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பேசுகிற பேச்சுக்கள் இந்த மன்ற நடவடிக்கைகளுக்கும், இந்த மன்றத்தின் கௌரவத்திற்கும், கண்ணியத்திற்கும் குறைவு இல்லாமல் இருக்க வேண்டுமென்ற மரபை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அப்படி பேசும்போது சில சமயங்களில் தவறுதலாகப் பேசிவிட்டாலும் கூட அதை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டுமென்றும், அவைகள் பத்திரிகைகளில் வெளியிடப்படக் கூடாது என்றும் தாங்கள் கட்டளை பிறப்பிக்கிறீர்கள். அதை மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். பத்திரிகைகளும் வெளியிடுவதில்லை.

இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி, பாராளுமன்றத்தில் பேசியதுபற்றி உரிமைப் பிரச்சினை கொடுத்திருப்பது உறுப்பினர்களுக்கும் தெரியும், தலைவர் அவர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும் அதையொட்டி அன்றையதினம் இங்கு மிகவும் விரிவாகப் பேசும்போது இடையில்,



அவ்வாறு அந்தப் பேச்சுக்களை இந்த மன்றத்தில் பேசக் கூடாது, அது இம்மன்றத்தின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் உறுப்பினர்களுடைய கௌரவத்தையும் பாதிக்கும் அளவில் இருக்கிறது என்று எடுத்துத் தெரிவித்து, அதை குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். தாங்களும் அதற்கு செவிசாய்த்து அந்தப் பகுதிகள் பத்திரிகைகளில் வரக்கூடாது என்றும் குறிப்பேட்டிலிருந்து அவை நீக்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டீர்கள்.

ஆனால், அடுத்த நாள் பத்திரிகைகளும்—எல்லாப் பத்திரிகைகளிலும் என்று சொல்ல முடியாது, எல்லாப் பத்திரிகைகளிலும் வரவில்லை—ஒரு குறிப்பிட்ட பத்திரிகை, அந்தப் பத்திரிகை வேண்டுமென்றே இந்த மன்றத்தின் கௌரவத்தையும்—தலைவருடைய கௌரவத்தையும் கூட என்று சொல்லலாம்—பாதிக்கும் அளவில் சில பகுதிகளை வெளியிட்டிருக்கிறது. இம்மன்றத்தின் கௌரவம், தலைவரின் கௌரவம் மன்ற உறுப்பினர்களின் கௌரவம் எல்லாம் இந்தப் பத்திரிகை வெளியிட்ட வார்த்தைகளிலிருந்து மிக மிகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மிக இழிவாக அதையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். தங்கள் கட்டளையை அவர்கள் ஏற்றுக் கொண்டதாக, அதை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மிகப் பெரிய அளவில் "நவசக்தி" என்ற பத்திரிகையில், "50 ஆயிரம், லட்சம் ரூபாய் தருவதாக எம்.எல்.ஏ.-க்களிடம் சப்பிரமண்யம் கோஷ்டி பேரம்" என்பதைப் பார்க்கிறபோது சிலர் கேட்கிறார்கள் எப்படி இவர்கள் மன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள், சட்டமன்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்ற அளவில், கீழ்த்தரமான நிலையில், சொல்லப்போனால்—அதைப்பற்றிக் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன். பத்திரிகை தர்மத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் ஒரு செய்தியை பிரசுரித்திருக்கிறார்கள்.

இதை உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். தாங்கள் கட்டளையிட்டதைப் பொருட்படுத்தாமல் இப்பத்திரிகை அதை வெளியிட்டிருக்கிறது. ஆகவே, தாங்களே தக்க அளவில் இப்படிச் செய்தியைப் பிறப்பித்த பத்திரிகையின் பொறுப்பில் இருக்கிறவர்களுக்கு தக்க தண்டனை கொடுக்கும் பொறுப்பு தங்களுக்கு உண்டு. அதைச் செய்வதற்குள்ள நிலையில் தங்களுக்கு அந்த உரிமையும் உண்டு. ஆகவே தாங்கள் இவ்வாறு மேலும் நிகழ்ச்சிகள் நடைபெறாத அளவில், தக்க முறையில் அதற்குரிய தண்டனையை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்**: சார், நண்பர் திரு. சீமைச்சாமி அவர்கள் பேசியதைப்பற்றிக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்பதைப் பற்றி நான் ஒன்றும் எழுதிக் கொடுக்கவில்லை. ஆனால் என்னுடைய பெயர் வந்திருக்கிறது. எப்படி வந்தது என்று தெரியவில்லை. இப்பொழுது நான் கொடுத்திருப்பது பாராளுமன்றத்திலே, ராஜ்ய சபையிலே திரு எஸ். எஸ். மாரிசாமி பேசியிருக்கும் பேச்சான அந்த உரிமைப் பற்றி நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக நான் எழுதிக் கொடுக்கவில்லை. என் பெயர் எப்படி வந்தது என்று தெரியவில்லை.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கோதண்டராமன் அவர்கள், இரண்டு "நவசக்தி"யைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்திருப்பதிலே ஒரு நவசக்தியிலே மாரிசாமியின் நிகழ்ச்சி இருக்கிறது. இன்னொரு பத்திரிகை கொடுத்திருப்பதால் இந்தப் பிரச்சினையை எடுத்திருப்பீர்களோ என்று என் உதவியாளர் கருதி, உங்கள் பெயரைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய பெயர் இந்த நிகழ்ச்சியில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** 3–4–1970-ம் தேதிய நவசக்தியும், இன்றைய பத்திரிகை, 6–4–1970-ஆம் தேதிய நாத்திகம் ஆக இரண்டு பத்திரிகைகள் கொடுத்தேன். ஒருவேளை மாறிப் போயிருக்கலாம். இரண்டு பத்திரிகைகள்தான் கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆக, இதிலே உங்கள் பெயர் இல்லை.

**திரு. கோ. பூவராகன்.** அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை மீது என்னுடைய தீர்ப்பை நாளை அடுத்த நாள் தெரிவிக்கிறேன்.

**(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்**

**(அ) கோவை — சோலையாற்று அணைக்கட்டில் நிலச்சரிவினால் தொழிலாளர்கள் சிலர் உயிரிழந்தும், சிலர் காயமுற்றதும் பற்றி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. எம். பூபதி அவர்களும், திரு வை. சுவாமிநாதன், திரு ஆர். கருப்பையா ஆகிய மூவரும் 1970–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் தேதி அன்று கோவை சோலையாற்று அணைக்கட்டில் பல தொழிலாளர்கள் வேலை செய்த போது மண் சரிந்து சில தொழிலாளர்கள் உயிருடன் புதைப்பட்டதையும், பலர் காயமுற்ற விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டு மென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரணத்தால் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

**(ஆ) திருவல்லிக்கேணியில் சாக்கடை சுத்தம் செய்யும்போது ஒரு கார்ப்பரேஷன் தொழிலாளி உயிரிழப்பும், இரு தொழிலாளிகள் மயக்கமுற்றதும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் சென்னை மைலாப்பூர் பீமண்ணபேட்டையைச் சேர்ந்த செல்லன் என்ற சென்னை கார்ப்பரேஷன் தொழிலாளி 3—4—1970 வெள்ளிக்கிழமை காலை திருவல்லிக்கேணி சவுரிமுத்து தெருவிலுள்ள சாக்கடையைச் சுத்தம் செய்ய இறங்கியபோது மயக்கமுற்று,பிறகு ஆஸ்பத்திரியில் இறந்ததும், அதேபோல் மற்றும் இரு தொழிலாளிகள் மயக்க முற்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது குறித்ததுமான அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டு இருக்கிற காரணத்தால் அனுமதி தர மறுக்கிறேன்.

**(4) அரசினர் தீர்மானங்கள்.**

**(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை விதி 244-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதி 41 (3)-ன் கீழ், 'ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது' என்ற விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவைமுன் முடிவிற்கு விடப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.



**(5) கவன ஈர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. அடுத்து, திரு. சீமைச்சாமி அவர்கள்.

**(அ) மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் பருவமழை தவறியதும், துயர் தணிப்புப் பணிகள் துவங்குவது குறித்தும்.**

**திரு. கரு. சீமைச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன் :—

"மதுரை, இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை தவறியதால், மேற்படி மாவட்டங்களில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்."

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் : —

"மதுரை, இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை தவறியதால், மேற்படி மாவட்டங்களில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்."

**திரு. நா. சௌந்தர பாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"மதுரை, இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை தவறியதால், மேற்படி மாவட்டங்களில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்."

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, 1969-இல் மதுரையில் ஏனைய வட்டங்களுடன் திருமங்கலம், உசிலம்பட்டி, வேடசந்தூர் ஆகிய வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் பெரும்பாலும் வேலை வாய்ப்பு சார்ந்த துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1970 ஜனவரியில், வேடசந்தூர் பகுதியில் உடனடியாகத் துயர் தணிப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முறையீடுகள் பெறப்பட்டன. வேடசந்தூர் பகுதியில் தக்காவிக் கடன்களாக வழங்குவதற்கு ரூபாய் ஒரு லட்சமும், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு இன்னொரு லட்சமும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து மறுபடியும் புதிதாக வறட்சி ஏற்பட்டுள்ளதென்று. அதுவும் முக்கியமாகத் திருமங்கலம், உசிலம்பட்டி, வேடசந்தூர் ஆகிய வட்டங்களைக் குறிப்பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது, கூடுதலாகத் துயர் தணிப்பு உதவியளிப்பது பற்றி வருவாய் வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுப் பரிசிலனையில் இருக்கிறது.

1969-இல் இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதென்று அறிவிக்கப்படிருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் வேலை வாய்ப்பு சார்ந்த துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2·48 கோடியில் ரூ. 2·36 கோடி துயர் தணிப்பு ஏற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளில் இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்

பட்ட தொகை இரண்டாவது உயர்ந்த அளவுத் தொகையாகும். 1970 ஜனவரியில், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் கடும் வறட்சி நிலை நிலவுவதாக முறையீடுகள் பெற்றதன் அடிப்படையில், தக்காவிக் கடன்கள் வழங்குவதற்காகவும், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும், ரூ. 3 லட்சம் அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ வில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், முது குளத்தூர் ஆகிய வட்டங்களின் பகுதிகளில் தொடர்ந்து வறட்சி நிலைகள் பற்றிச் செய்திகள் வந்துள்ளன ; துயர் தணிப்பு ஏற்பாடு களுக்கான விரிவான செயற்குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ளார். மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தலைமைச் செயலாளர் இப்போது பார்வையிட்டு வந்து உள்ளார். இது குறித்து வருவாய்த் துறை வாரியத்தின் குறிப்புகள் வந்து சேர்ந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் துணை வட்டம் நாங்குநேரி வட்டத்தில் இருக்கிறது. 1969-இல் இராதா புரம் துணை வட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப் பட்டது. குடிநீர் வழங்குதல், சிறு பாசனம், சாலைப் பணிகள் போன்ற துயர் தணிப்பு வேலைகளுக்காக, இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 5·73 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டது. 1970 ஜனவரியில் இராதாபுரம் பகுதியில் இங்கும் அங்குமாகக் குறிப்பிட்ட சில பகுதிகளிலும், சங்கரன் கோவில், கோவில்பட்டி, தென்காசி வட்டங் களில் சில பகுதிகளிலும் கடும் வறட்சி நிலை நிலவுவது பற்றிச் செய்திகள் வந்ததின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் தக்காவிக் கடன்கள் வழங்குவதற்காகவும், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்து வதற்காகவும் அரசு ரூ. 2·53 லட்சம் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி, தென்காசி, நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம், சங்கரன் கோவில் ஆகிய வட்டங்களில் சில பகுதிகளிலும், இராதாபுரம் பகுதியிலும் கூடுதல் துயர் தணிப்பு ஏற்பாடுகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளார். தலைமைச் செயலாளரும் பாதிக்கப்பட்ட இடங்களை நேரிற் பார்வை யிட்டுத் தாம் கண்டறிந்தவற்றைத் தெரிவித்துள்ளார். வருவாய்த் துறை வாரியத்தின் குறிப்புகளைப் பெற்றவுடன் அவற்றைப் பரிசீலித்ததும் இது தொடர்பான உத்தரவுகள் மிக விரைவில் பிறப்பிக்கப்படும்.

மேற்கூறிய மூன்று மாவட்டங்களிலும், வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அரசுக் கடன்கள், நிலவரி நிலுவைகள் அனைத்தையும் வசூல் செய்வதை ஒத்திப் போடும் வகையில் உடனடித் துயர் தணிப்பு உதவி ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. அரசு நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது ; துயரம் நிலவும் பகுதிகளுக்கு. இவ்வரசு இயன்ற அளவு விரைந்து தன்னாலியன்ற உதவி அனைத்தையும் வழங்கும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, பஞ்ச நிவாரண வேலைகள் நடந்து முடிந்துவிட்டது. இன்னமும் பஞ்ச நிவாரண வேலைகள் தொடர்ந்து நடக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். தக்காவிக் கடன்கள் 3 லட்சம், 4 லட்சம் போதாது. ஆகவே, தக்காவிக் கடன்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகமாக ஏற்பாடு செய்ய முன் வருவார்களா என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அதைத்தான் சொன் னேன். இயன்ற அளவிற்கு அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, ஏற்கனவே மிகக் கடுமை யான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள வேடசந்தூர், பாளையம், உசிலம் பட்டி, திருமங்கலம், திண்டுக்கல் போன்றவைகள் இருக்கின்றன. இப் பொழுதுதான் வேடசந்தூர், பாளையம் ஆகிய இரண்டு பிளாக்குகளுக்குத்



தான் நீங்கள் கொடுக்க இருக்கும் கடன் ஒற்றிவைப்பு என்று அனுமதித்து இருக்கிறார்கள். உசிலம்பட்டி, திருமங்கலம், பழனி வட்டங்களில் உள்ள பகுதிகளிலும் கடனை ஒற்றிவைக்கவும், நில வரியை வஜா செய்யவும் நிவாரண வேலைகளுக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால்தான் அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் வாழ முடியுமென்ற நிலையிருக்கிறது. அதற்காக உடனடியாக அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கெனவே சொன் னேன். ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. கடன்கள், நிலவரி எங் கெங்கு கொடுக்க முடியாமலிருக்கிறதோ ஆங்காங்கு கலெக்டர்கள் உசிதம் போல் செய்யலாம். நிலைமைகள் உண்மையாக உறுப்பினர்கள் கூறும் வண்ணம் இருக்குமேயானால், கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்தவித மான ஆயாசமும் அடையத் தேவையில்லை, அச்சப்பட வேண்டிய தேவை யில்லை. எங்கே இந்தமாதிரி உண்மையான நிலைமைகள் இருக்கின் றனவோ அங்கேயெல்லாம் அரசாங்கம் பரிவோடு கவனிக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

### (ஆ) குமரி மாவட்டம். குளச்சல் நகரில் மீனவர்கள், வீடுகள் தீக்கிரை யாகி, வீடின்றி தவிப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. எம். சி. பாலன் அவர்களும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. எம். சி. பாலன் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை யின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"குமரி மாவட்டம், குளச்சல் நகரில் உள்ள 156 மீனவர்கள் வீடுகள் 18—3—1970 அன்று தீக்கிரையாகி வீடிழந்து தவிப்பது பற்றி."

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரி யத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"18—3—1970 அன்று குமரி மாவட்டம், குளச்சல் நகரில் உள்ள 156 மீனவர்கள் வீடு தீக்கிரையாகி வீடிழந்து தவிப்பது பற்றி"

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் தாலுக்காவில், குளச்சல் கிரா மத்தில் 19—3—1970 அன்று தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. அதில் 101 வீடுகளும், 5 பண்டக சாலைகளும் தீக்கு இறையாகின. பாதிக்கப்பட்ட வர்கள் பொருள் சேதம் சுமார் ரூ. 1,00,200-க்கு சற்று அதிகமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. உயிர்ச் சேதமில்லை. ஆனால் சில பன்றி களும், வாத்துகளும் தீவிபத்தில் மாண்டன. தலா ரூ. 80 வீதம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்கப்பட்டது. மொத்தம் வழங்கப்பட்ட தொகை ரூ. 8,080 ஆகும். தவிர பாதிக்கப் பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2 படி வீதம் அரசாங்க கையிருப்பிலிருந்து ரூ. 289·74 மதிப்புள்ள அரிசி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எம். சி. பாலன் :** தலைவரவர்களே, இதே போன்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மேல்மணக்குடி கிராமத்தில் 10 வீடுகள் தீக்கு இறையாகி எரிந்து விட்டன. அந்த வீடுகளில் கிட்டத்தட்ட ரூ. 10,000-க்கு

மேல் மதிப்புள்ள வலைகள் வைத்திருந்தார்கள் என்று கணக்கிட்டு அங்கு இருக்கக்கூடிய மீனளத் துறை மூலமாகவும் அங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் அந்த ரூ. 10,000 அவர்களுக்கு மானியமாக தரப்பட்டது. அதே போல இந்த மீனவர்களுக்கும் ரூ. 1 லட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டிருப்பதன் காரணமாக அங்கே இருக்கின்ற மீனவர் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக மானியமாக இல்லாவிட்டாலும் கடனாகவாவது தருகின்ற உத்தேசம் இந்த அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசு என்று சொன்னால், அப்போது கொளச்சலில் தேர்தல் காலமாக இருந்தது, அந்தக் காலத்தில் இருந்த அரசு, அப்படிச் செய்தது என்று சொல்லி விடுவார்கள். ஆனால் பிறர் சொல்லுகிறார்களோ சொல்லவில்லையோ, நாம் செய்ய வேண்டிய நியாயமான காரியங்களை செய்ய வேண்டியது தான். இது தேர்தல் இல்லாத காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி நிலை இருக்கிறது, எந்த அளவிற்கு வசதி இருக்கிறது என்பதை உத்தேசித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை பரிசீலிக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கொளச்சலில் ஏற்பட்ட தீ விபத்தில், தீயை அணைப்பதற்கான தீ அணைக்கும் படை நாகர்கோவிலிலிருந்து வந்ததாகவும், அது வர காலதாமதம் ஏற்பட்டதாகவும், அதன் விளைவாக போதுமான தீ அணைக்கும் படை வருவதற்கு இல்லாத காரணத்தால் கேரளத்தில், திருவனந்தபுரத்தில் இருக்கக்கூடிய தீ அணைக்கும் படையை வரவழைத்து அந்த தீயை அணைத்ததாகவும், ஆகவே தான் கூடுதலான நஷ்டம் ஏற்பட்டதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. ஆகவே இனிமேலாவது அந்த பிராந்தியத்தில் இந்த மாதிரியான விபத்துக்களை தடுப்பதற்கு மார்த்தாண்டத்திலோ அல்லது தக்கலையிலோ ஒரு தீ அணைக்கும் படையை நிறுவ வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது நல்ல யோசனை. இதை பரிசீலிக்கலாம்.

**(இ) குமரி, நெல்லை மாவட்டங்களில், புதிய ரயத்வாரி சட்டப்படி நான்கு ஆண்டுகளுக்கும் சொத்து வரி வசூல் செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எம். சி. பாலன் அவர்களும், திரு. க. மு. கதிரவன் அவர்களும் ஓர் அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. எம். சி. பாலன் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டையிலும் புதிதாக அமுல் நடத்தப்படும் ரயத்வாரி சட்டப்படி கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து வரி வசூலிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. கா. மு. கதிரவன் :** சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டையிலும் புதிதாக அமுல் நடத்தப்படும் ரயத்வாரி சட்டப்படி கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து வரி வசூலிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**The Hon. Thiru K. A. MATHIALAGAN :** Mr. Speaker, Sir, The Tamil Nadu Transferred Territory (Ryotwari Settlement) Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964), came into force in the Transferred Territories of Kanyakumari district and Shencottah taluk in Tirunelveli district on 18th November 1964. The total area to be settled both in Kanyakumari district and Shencottah taluk in Tirunelveli district is 505·92 sq. miles. Out of this, settlement was already introduced in an extent of 206·84 sq. miles during the faslis 1377 and 1378 and the remaining area is proposed to be settled by 1380.

Under section 10 of the Tamil Nadu Act 30 of 1964, every landholder shall, for the fasli year commencing on the 1st July 1964 and for each subsequent fasli, be liable to pay to the Government in respect of his land the assessment under the ryotwari settlement effected under this Act.

The hardships alleged to be caused by the application of Act 30 of 1964 are being examined. Final orders will be passed shortly.

**திரு. எம். சி. பாலன் :** தலைவரவர்களே, இன்னும் பல பகுதிகளில் செட்டில்மெண்டு முடியவில்லை. அந்த பகுதியில் இன்னும் பட்டா விநியோகம் செய்யப்படவில்லை. குமரி மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக எவ்வளவோ கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். அதற்குப் பிறகு கடந்த நான்கு ஆண்டுகளுக்கு ஒன்றுபோல சேர்த்து அவர்களிடம் ரயத்துவாரி அடிப்படையில் வரி வசூலிக்கப்படுவதால் அவர்கள் ரொம்ப சிரமத்திற்கு, ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த கடந்த 4 ஆண்டுகளுக்கான வரிகளை தள்ளுபடி செய்துவிட்டு, பட்டா விநியோகிக்கப்பட்ட பிறகு அவர்களிடம் ரயத்துவாரி அடிப்படையில் வரி வசூலிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள் கஷ்டகாலமாக இருக்கிறது என்று. கஷ்டங்கள் இருக்கலாம் ஆனால் அவர்கள் சொல்லுகிற யோசனையை ஏற்றுக் கொண்டாலும் சிரமங்கள் இருக்கத்தான் இருக்கும். நான்கு ஆண்டுகளுக்கு கொடுப்பது கஷ்டம் என்பது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் இதை எல்லாம் ஏற்கனவே செய்துவிட்டுப் போய் விட்டார்கள். நாங்கள் எவ்வளவோ இது கூடாதென்று எல்லாம் சொன்னோம் என்று இப்போது வேண்டுமானால் நமது பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்கிறார்களே தவிர அப்போது நடந்து விட்டன. எப்படியோ! நாமும் புதிது. அதிக வரி சேர்ந்து விட்டன. நான்கு ஆண்டுகள் என்பதிலே சிரமங்கள் இருக்கலாம். எந்த அளவிற்கு சிரமங்களை குறைக்கலாம் என்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் சொல்லுகிறபடி தள்ளுபடி செய்கிறது என்ற யோசனை தேர்தல் காலங்களிலே மக்களைப் பார்த்து சொல்லுவதற்கு கவர்ச்சியாக இருக்கலாமே தவிர, வாக்காளர்கள் கேட்கிற நேரத்தில் வாக்காளர்கள் சர்க்கார் கஜானா இருக்கவேண்டும் என்பதையும் மனதிலே கொண்டால் நல்லது.

***திரு. க. மு. கதிரவன் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் செங்கோட்டை தாலுக்காவில் உள்ள மக்கள் கேரளாவில் இருக்கின்ற சட்டப்படி அங்குள்ள நிலங்களுக்கு அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் இது வரையில் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அந்த முறையில் பார்த்தால் ஏறத்தாழ ரூ. 3,000 வருமானம் உள்ளவர்கள் அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ரூ. 4,000-க்கு அதிகமாக வருமானம் உள்ளவர்கள்தான் இங்கே அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ்

கட்டிக்கொண்டு வருகிறார்கள். தமிழ் நாட்டில் ஒரே பகுதியைச் சார்ந்த மக்கள், அந்த பகுதி மக்களுக்கு அதிகமாக அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ். அதே சமயத்தில் நில வரியும் அதிகமாக வசூலிக்கப்படுகிறது, இந்த ரயத்துவாரி திட்டப்படி. இந்த ரயத்துவாரி திட்டம் வந்த நேரத்தில் இதே நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், சபாநாயகராக இருக்கக்கூடிய அவர்களும் இதே சட்ட மன்றத்தில் அதை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவு கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆதரித்தோம். வாஸ்தவம் தான். சில விஷயங்களை நாங்கள் ஆதரிக்கிறோம், சில விஷயங்களை எதிர்க்கிறோம். ஆனால் நடந்தது முன்னாலே, அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற முயற்சிக்கிறோம். அது ரொம்ப கெடுதலாக இருந்தால் கைவிடுகிறோமே தவிர 10 வருடம் கழித்து அது தேவையற்றது என்றால் விட்டு விடலாம். அந்த மாதிரி முறையிலே சட்ட அமைச்சர் அவர்களும், நானும், மற்றவர்களும் பேசினோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்த நிலம் இங்கே சேர்ந்திருக்கிறது. அதனால் சில கெடுதல் இருக்கிறது. நன்மைகளும் பல இருக்கின்றன. அதை எடுத்து சொல்லுவதில்லை. அந்த நிலங்கள் திருவாங்கூர்-கொச்சியிலிருந்து இங்கு சேர வேண்டுமென்று அந்த மாவட்டத்தில் போராட்டம் நடத்தினார்கள். அந்த போராட்டத்தில் எத்தனையோ பேர்கள் சிறைச்சாலைக்கு போனார்கள். அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவர்கள் தமிழ் மண்ணிலே இருக்கவேண்டும் என்பதற்காக ஒரு உணர்ச்சிகரமான போராட்டம். அதன் விளைவாக அந்த நிலம் கேரளத்திலிருந்து இந்த பகுதியிலே சேர்ந்தது. இம்மாதிரி மாறுதல்கள் ஏற்படுகின்ற நேரங்களில் தொந்தரவுகள் ஏற்படும். அப்படிப்பட்ட தொந்தரவுகளை களைவதற்கு கண்டிப்பாக இந்த அரசு மிகுந்த பரிவு உணர்ச்சியோடு நடந்துகொள்ளும். திருவாங்கூர்-கொச்சியில் உள்ள தமிழகத்தோடு இணைந்த செங்கோட்டை பகுதி குமரி மாவட்டத்தில் சேரவேண்டும் என்பதற்காக தங்களுடைய உள்ள பூர்வமான ஆதரவையும், மற்ற எல்லாவற்றையும் செய்துகொடுத்த ஒரு கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற நிலைமையில் அந்த மக்கள் இங்கு சேர்ந்ததினால் தங்களுக்கு கெடுதல் விளைந்துவிட்டது என்று எண்ணக் கூடிய நிலைமைக்கு இந்த அரசு விட்டுவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சி. பாலன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தில் ரயத்வாரி சட்டம் எப்படி கொண்டுவரப்பட்டது என்பதை பேரவைத் தலைவர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இந்த நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து விதிக்கப்படுகிற, வசூலிக்கப்படுகிற இந்த வரியை இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளே கட்டிவிட வேண்டும் என்ற தவணையையாவது இந்த அரசு குறைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் முன்பே சொன்னேன். இந்தக் கஷ்டங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம், அது பரிசீலனையில் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்லமுடியும். திரும்பத் திரும்ப சபாநாயகர் சந்தர்ப்பம் கொடுத்தால் நான்கு ஆண்டு என்பதை ஒவ்வொரு ஆண்டாக குறைத்துக் கொண்டே வருவதுபோல தோன்றுகிற யோசனை சொல்வது நல்ல யோசனை அல்ல. மாண்புமிகு பாலன் அவர்கள் இதைச் சற்று யோசனை செய்யவேண்டும். இருந்தாலும், வரி விதிப்பிலுள்ள கஷ்டங்களைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இந்த அரசு மற்றவர்களைக் காட்டிலும் பரிவு உணர்ச்சியோடு, மிக நன்றாக இதைக் கவனிக்கும் என்பது மாண்புமிகு நாகர்கோவில் உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.



(ஈ) மாதவரம் பால் பண்ணையிலுள்ள புட்டியில் பால் அடைக்கும் தொழிற்சாலைப் பகுதிக்கு ஏற்பட்ட சேதமும், உதிரிப் பாகங்கள் கிடைக்காமையால் சுகாதாரமற்ற நிலையில் பால் வழங்கப்பட்டது குறித்து.

**Dr. H. V. HANDE :** I call the attention of the Hon. Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the damage to the parts of the bottling plant at Madhavaram Milk Project and the non-availability of spare parts for immediate repair which has resulted in the milk being distributed in cans under unhygienic conditions.

**The Hon. Thiru P. U. SHANMUGAM :** There are at present three U.D.E.C. Bottling Units at the Madhavaram Central Dairy. Two of them were purchased in 1963 when they had a capacity of bottling 6,000 bottles an hour. The effective capcaity of these two machines has however been reduced considerably because of the wear and tear for 7 years. The third bottling unit has a capacity of 4,000 bottles an hour and was purchased in 1969.

These bottling machines have to handle 50,000 bottles in 5 hours during each shift, and so, if any one of the units has to be stopped for essential repairs or servicing, there is some dislocation in the bottling of milk.

Since the UDEC machines are imported units, there is difficulty in getting spares as and when needed. In the earlier years, some spares were imported, but it is found increasingly difficult, expensive and time-consuming to import spares now–especially because this type of machine is itself outdated in the international market.

Recently one of the older bottling units had to be opened up for complete check and overhauling. This necessitated the distribution of milk to some depots in cans for about 5 days from the 16th to 20th March.

Since the import of spares required for the old units would take time, the department has made arrangements to get some of the essential items locally fabricated. Simultaneously action is being taken to import some of the parts which are difficult to fabricate locally. I am glad however to inform the House that despite these difficulties in keeping the two old units in working condition, the department has restored the supply of milk in bottles to all depots after the 25th of March. Only double-toned milk which has all along been supplied in cans with taps, continues to be sent in cans.

**Dr. H. V. HANDE :** Sir, the Hon. Minister has replied that the particular plant is out-moded and it is very difficult to get spare parts. There are still two plants functioning, on the same model. Will it be possible for Government to :—

(a) keep some spares readily.

(b) whether it is possible to see that new plants which are not out-moded and which belong to the current model, are got and installed so that milk production does not suffer under any circumstances in future?

**The Hon. Thiru P. U. SHANMUGAM :** We are making arrangements to import spare parts.

**(உ) பரம்பிக்குளம் ஆளியார் திட்ட வேலைகள் முடிவடைவதால், அங்கு வேலை செய்யும் தொழிலாளருக்கு மாற்று வேலைகள் கொடுப்பது குறித்து**

**திரு. இ. ராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் -ஆளியார் திட்ட வேலைகள் முடிவடைகின்ற தறுவாயில் இருப்பதாலும், பொதுப்பணித் துறையில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள், வேலை இழக்கவேண்டிய நிலை ஏற்படுமோ என்ற பயமும் பீதியும் தொழிலாளரிடம் ஏற்பட்டுள்ளதாலும் தொடர்ந்து திட்டப் பகுதியில் வேலை கொடுக்கவோ, அல்லது மாற்றுத் திட்டத்தில் வேலை கொடுப்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியார் திட்டத்தில் சுமார் 700 "நிரந்தரமற்ற வேலை நிதியில் ஊதியம் பெறும்" ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் புல்டோசர், ஸ்கிரேப்பர், ரோலர், தண்ணீர் லாரி முதலியவற்றை இயங்கும் பணியையும், பராமரிக்கும் பணியையும் கவனிக்கின்றனர். மூன்றில் ஒரு பகுதியினர் கல் அணைக்கு சாரம் அமைத்தல், இயந்திரங்களையும் சாமான்களையும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லும் அன்றாட வேலைகளைச் செய்கிறார்கள். மீதமுள்ளவர்கள் அநேகமாக சில்லறை மேற்பார்வை வேலைகளை கவனிக்கும் மேஸ்திரிகளும் தலைமைக் கூலிகளும் ஆவர்.

பரம்பிக்குளம்—ஆளியார் திட்டத்தில் ஒரு சிறு பகுதி வேலையைத் தவிர அனேகமாக எல்லா வேலைகளும் முடிவடைந்துவிட்டன. கால்வாய் வேலைகள் முடிவடைந்து விட்டன. ஆளியார் அணை, திருமூர்த்தி அணை, மலைக் கால்வாய், தூனக்கடவு அணை, பரம்பிக்குளம் அணை ஆகியவற்றில் வேலைகள் முடிவடைந்துவிட்டன. தற்போது வேலை நடைபெற்று வரும் சோலையார் அணை வேலைகள் இவ்வாண்டு ஜூலை மாதத்தில் முடிவடையும். சமீபத்தில் துவக்கப்பட்ட நீரார் திட்டம் மிகச் சிறிய திட்டமாகும். இதற்கு ஒரு சில "வேலை நிதியின் ஊதியம் பெறும்" ஊழியர்களே போதுமானது. மேல் நீரார் திட்டத்திலிருந்து வெட்ட இருக்கும் சுரங்க வேலை ஒப்பந்தக்காரரின் மூலம் செய்ய இருப்பதால் இதற்கு அதிகப்படியான "வேலை நிதியின் ஊதியம் பெறும்" ஊழியர்கள் தேவைப்படவில்லை.

பெருவாரிப்பள்ளம் அணை வேலைகள் பாதி முடிவடைந்து விட்டன. மீதி வேலைகள் கேரள அரசின் ஒப்புதலுக்கு பின்தான் துவக்கப்படும்.

இனிமேல் துவக்க வேண்டிய மிகப் பெரிய வேலையான கீழ் நீரார் அணைத் திட்டம் கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்த பிறகு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு இன்னும் கொஞ்சம் காலமாகலாம்.

தற்போது உள்ள நிலையில், இவ்வாண்டு ஜூன், ஜூலையில் சோலையார் அணை வேலைகள் முடிவடைந்ததும், "வேலை நிதியின் ஊதியம் பெறும் ஊழியர்களை" குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். மண் வாரி இயந்திரங்கள், மற்ற இயந்திரங்களை இயக்கும் இயக்குநர்களும் பராமரிப்பவர்களும் அந்த இயந்திரங்களுடன் கடானு, இராமா நதி போன்ற திட்டங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

இத்திட்டத்திலுள்ள சில மேஸ்திரிகளையும், தலைமைக் கூலிகளையும் புதிதாக எடுக்க இருக்கும் திட்டங்களுக்கு மாற்றலாம். ஆயினும் பெரும் பகுதி வேலை ஆட்கள் வேலை இழக்க நேரிடும். இவர்களுக்கு தொழிற்தகராறு சட்டப்படி முன் அறிவிப்புடன் நஷ்ட ஈடு அளிக்கப்படும். கீழ் நீரார் திட்டம் பெருவாரிப்பள்ளம் திட்டம் ஆகியவைகளுக்கு கேரள அரசு ஒப்புதல் அளித்து, வேலைகள் துவக்கப்பட்டால் அநேகமாக பெரும்



பகுதி வேலையாட்களுக்கு இத்திட்டத்தில் தொடர்ந்து 2 முதல் 4 ஆண்டுகள் வேலை அளிக்கலாம். அப்படி இல்லையெனில் வேலையாட்களை மற்ற புதிய திட்டங்களுக்கு மாற்றுவது ஓரளவே சாத்தியமாகும். புதிதாக எடுத்துக்கொள்ளும் திட்டங்களில் கூடிய வரையில் புதிய தொழிலாளிகள் சேர்க்கப்படுவதில்லை. பூர்த்தியடையும் திட்டங்களிலிருந்துதான் இப் புதிய திட்டங்களுக்கு தொழிலாளர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறியபடி பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களில் இயந்திர இயக்குநர்களும் பராமரிப்பவர்களும் மற்ற புதிய திட்டங்களுக்கு மாற்றப்படுவர்.

கேரள அரசின் ஒப்புதல் பெற்று கீழ் நீரார், பெருவாரிப்பள்ளம் வேலைகள் துவக்கப்பட்டால் ஒழிய, இவ்வாண்டு ஜூலைக்குப் பின் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் சிறிதளவு வேலையே மீதி இருக்கும். ஆகவே, இத் திட்டத்திலுள்ள மேஸ்திரிகளையும் தலைமைக் கூலிகளையும், கூலி வேலையாட்களையும் இவ்வாண்டு ஜூன், ஜூலைக்குப் பிறகு வேலை நீக்கம் செய்ய வேண்டிய அவசியமேற்படுகிறது.

இது தவிர, இப்படி வேலை நீக்கம் செய்யப்படுகிற ஊழியர்களில் பெரும்பகுதியினருக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நீரார் திட்டத்தில் வேலை கொடுப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. தலைமைப் பொறியாளர் மூலம் இந்த ஒப்பந்தக்காரர்களிடத்தில் நம்மிடம் பணிபுரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு முதல் இடம் கொடுத்து எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடுமானவரை வேலை நீக்கம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இ. ராமசாமி :** பேரவைத்தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு அரசு போக்குவரத்துத் துறையில், தகுதி வாய்ந்த டிரைவர், சூபர்வைசர் மேஸ்திரி போன்றவர்களை கிளார்க் போன்ற வேலைகளுக்கு போக்குவரத்துத் துறையிலும், இன்னும் பொது சுகாதார துறையிலும் எடுத்துக்கொள்ள பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அதே திட்டப் பகுதித் துறையில் இல்லாவிட்டாலும், வேறு பொது சுகாதாரத் துறை, போக்குவரத்துத் துறைகளில் எடுத்துக்கொள்ள அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் கொடுத்திருக்கும் அறிவிப்பு பொதுப்பணித் துறை சம்பந்தமானது. மாண்புமிகு உறுப்பினர் வேறு பொது நலத்துறை, போக்குவரத்துத் துறை பற்றிய விளக்கத்தைப் கேட்கிறார்கள். அந்த விளக்கத்தைக் கொடுக்க இயலவில்லை. ஆனாலும் நான் முன்பே கூறியபடி, வேலை நீக்கம் செய்யப்படுவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் பற்றியும் ஒப்பந்தக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் எடுத்துக்கொள்ளும் நிலை இருப்பதாகச் சொன்னேன். ஆகவே, உறுப்பினர் அச்சம் அடையத் தக்க அளவுக்கு நிலை இருக்காது என்று தெரிவிக்கிறேன்.

**(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.**

**(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.**

**The Hon. Thiru V. R. NEDUNCHEZHIAN :** Mr. Speaker, Sir, under Rule 21 (3) of the Legislative Assembly Rules, I move that item III—Government Resolutions— and item (2) in IV— Government

[Thiru V. R. Nedunchezhian] [1970 ஏப்ரல் 6

Motions—be taken up before item II—Government Bills, and that the order of Bills in item II— Government Bills—be refixed as follows :—

(1) The Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1970.

(2) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970.

(3) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1970.

(4) The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1970.

(5) The Tamil Nadu Additional Sales Tax Bill, 1970.

(6) The Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1970.

(7) The Tamil Nadu Panchayats (Amendment), Bill, 1970.

(8) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1970.

(9) The Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970.

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

(6) அரசினர் தனித் தீர்மானங்கள்.

**(அ) வெளியூர் பேருந்துகளுக்கு வரி விதத்தை உயர்த்துவது குறித்து.**

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I move—

" That the following draft of a rule to be issued by the State Government under sub-section (1) of section 17 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931), amending Schedules II and III to the said Act, be approved as required by sub-section (3) of the said section.

DRAFT RULE.

In exercise of the powers conferred by sub-section (1) of section 17 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to Schedules II and III to the said Act.

AMENDMENTS.

(1) In the said Schedule II, in clause (*a*) of sub-item (iii) of item 4,—

(*a*) for the entries—

| | | | |
|---|---|---|---|
| " (1) | Does not exceed 270 Kilometres | 50·00 | 65·00 |
| (2) | Exceeds 270 Kilometers | 55·00 | 70·00" |

The following entries shall be substituted, namely :—

| | | | |
|---|---|---|---|
| " (1) | Does not exceed 270 Kilometres | 60·00 | 75·00 |
| (2) | Exceeds 270 Kilometres | 65·00 | 80·00" |

(*b*) in the proviso for the figures " 55 ", the figures " 65 " shall be substituted ;



970 ஏப்ரல் 6] [Thiru S. J. Sadiq Pasha]

2. In the said Schedule III in clause (*c*) of item 4, for the entries—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| " (1) | Does not exceed 270 Kilometres | 6·67 | 20·00 | 8·67 | 26·00 |
| (2) | Exceeds 270 Kilometres | 7·34 | 22·00 | 9·34 | 28·00" |

The following entries shall be substituted, namely :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| " (1) | Does not exceed 270 Kilometres | 8·00 | 24·00 | 10·00 | 80·00 |
| (2) | Exceeds 270 Kilometres | 9·00 | 27·00 | 11·33 | 34·00" |

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

**(ஆ) அனுமதிக்கப்பட்ட எடை பாரத்திற்கு மேல் பொருள்கள் ஏற்றிச்செல்லும் பார வண்டிகளிடமிருந்து கூடுதல் வரி வசூலிப்பது குறித்து.**

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Speaker , Sir, I move—

That the following draft of a rule to be issued by the State Government under sub-section (1) of section 17 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931), amending Schedules II and III to the said Act, be approved as required by sub-section (3) of the said section.

DRAFT RULE.

In exercise of the powers conferred by sub-section (1) of setion 17 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to Schedules II and III to the said Act.

AMENDMENTS.

(1) In the Schedule II,—

(*a*) item (*m*) under the sub-heading "3. Goods Vehicles" shall be relettered as item "(*t*)" :

(*b*) for the item (*l*) under the sub-heading " 3. Goods Vehicles " in column (1) and the entries relating thereto in columns (2) and (3), the following items and entries shall be substituted, namely:—

| | RS. | P. | RS. | P. |
|---|---|---|---|---|
| "(*l*) Vehicles exceeding 10,500 Kgs, but not exceeding 12,000 Kgs. in weight, laden. | 850 | 00 | 1,275 | 00 |
| (*m*) Vehicles exceeding 12,000 Kgs. but not exceeding 12,500 Kgs. in weight, laden. | 900 | 00 | 1,350 | 00 |
| (*n*) Vehicles exceeding 12,500 Kgs. but not exceeding 13,000 Kgs. in weight, laden. | 950 | 00 | 1,425 | 00 |
| (*o*) Vehicles exceeding 13,000 Kgs. but not exceeding 13,500 Kgs. in weight, laden. | 1,000 | 00 | 1,500 | 00 |
| (*p*) Vehicles exceeding 13,500 Kgs. but not exceeding 14,000 Kgs. in weight, laden. | 1,050 | 00 | 1,575 | 00 |

| | | |
|---|---|---|
| (*q*) Vehicles exceeding 14,000 Kgs. but not exceeding 14,500 Kgs. in weight, laden. | 1,100 00 | 1,650 00 |
| (*r*) Vehicles exceeding 14,500 Kgs. but not exceeding 15,000 Kgs. in weight, laden. | 1,150 00 | 1,725 00 |
| (*s*) Vehicles exceeding 15,000 Kgs. in weight laden. | (the rates specified in item (*r*) plus Rs. 50 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (*r*) plus Rs. 75 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.)" |

(*c*) in item (*t*) as so relettered under the sub-heading "3. Goods Vehicles" for the sub-item (xi) in column (1) and the entries relating there to in cloumns (2) and (3), the following sub-items and entries shall be substituted, namely :—

| | RS. P. | RS. P. |
|---|---|---|
| "(xi) For each trailer exceeding 10,500 Kgs. but not exceeding 12,000 Kgs. in weight, laden. | 450 00 | 675 00 |
| (xii) For each trailer exceeding 12,000 Kgs. but not exceeding 12,500 Kgs. in weight, laden. | 500 00 | 750 00 |
| (xiii) For each trailer exceeding 12,500 Kgs. but not exceeding 13,000 Kgs. in weight, laden. | 550 00 | 825 00 |
| (xiv) For each trailer exceeding 13.000 Kgs. but not exceeding 13,500 Kgs. in weight, laden. | 600 00 | 900 00 |
| (xv) For each trailer exceeding 13,500 Kgs. but not exceeding 14,000 Kgs. in weight, laden. | 650 00 | 975 00 |
| (xvi) For each trailer exceeding 14,000 Kgs. but not exceeding 14,500 Kgs. in weight, laden. | 700 00 | 1,050 00 |
| (xvii) For each trailer exceeding 14,500 Kgs. but not exceeding 15,000 Kgs. in weight, laden. | 750 00 | 1,125 00 |
| (xviii) For trailers exceeding 15,000 Kgs. in weight, laden. | (the rates specified in item (xvii) plus Rs. 50 for every 500 Kgs. or part thereof in excess of 15.000 Kgs.) | (the rates specified in item (xvii) plus Rs. 75 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.)" |

(2) In the said Schedule III—,

(*a*) item (*l*) under the sub-heading "3. Goods Vehicles" shall be relettered as item (*s*);



(*b*) for item (*k*) under the sub-heading "3. Goods Vehicles" in column (1) and the entries relating thereto in columns (2) to (5), the following items and entries shall be substituted, namely :—

| | RS. P. | RS. P. | RS. P. | RS. P. |
|---|---|---|---|---|
| "(*k*) Vehicles exceeding 10,500 Kgs. but not exceeding 12,000 Kgs. in weight, laden. | 127 00 | 381 00 | 191 00 | 572 00 |
| (*l*) Vehicles exceeding 12,000 Kgs. but not exceeding 12,500 Kgs. in weight, laden. | 135 00 | 405 00 | 203 00 | 608 00 |
| (*m*) Vehicles exceeding 12,500 Kgs. but not exceeding 13,000 Kgs, in weight, laden. | 142 00 | 426 00 | 213 00 | 639 00 |
| (*n*) Vehicles exceeding 13,000 Kgs. but not exceeding 13,500 Kgs. in weight, laden. | 150 00 | 450 00 | 225 00 | 675 00 |
| (*o*) Vehicles exceeding 13,500 Kgs. but not exceeding 14,000 Kgs. in weight, laden. | 157 00 | 471 00 | 236 00 | 707 00 |
| (*p*) Vehicles exceeding 14,000 Kgs. but not exceeding 14,500 Kgs. in weight, laden. | 165 00 | 495 00 | 248 00 | 743 00 |
| (*q*) Vehicles exceeding 14,500 Kgs. but not exceeding 15,000 Kgs. in weight, laden. | 172 00 | 516 00 | 258 00 | 774 00 |
| (*r*) Vehicles exceeding 15,000 Kgs. in weight, laden. | (the rates specified in item (*q*) plus Rs. 7 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (*q*) plus Rs. 21 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (*q*) plus Rs, 12 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (*q*) plus Rs. 36 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.)". |

(*c*) in item (*s*) as so relettered, under the sub-heading "3. Goods Vehicles" for the sub-item (xi) in column (1) and the entries relating thereto in columns (2) to (5), the following sub-items and the entries shall be substituted, namely :—

| | RS. P. | RS. P. | RS. P. | RS. P. |
|---|---|---|---|---|
| "(xi) For each trailer exceeding 10.500 Kgs. but not exceeding 12,000 Kgs. in weight, laden. | 94 00 | 282 00 | 141 00 | 423 00 |

| | Rs. P. | Rs. P. | Rs. P. | Rs. P. |
|---|---|---|---|---|
| (xii) For each trailer exceeding 12,000 Kgs. but not exceeding 12,500 Kgs. in weight, laden. | 98 00 | 294 00 | 147 00 | 441 00 |
| (xiii) For each trailer exceeding 12,500 Kgs. but not exceeding 13,000 Kgs. in weight. laden. | 102 00 | 306 00 | 153 00 | 459 00 |
| (xiv) For each trailer exceeding 13,000 Kgs. but not exceeding 13,500 Kgs. in weight, laden. | 106 00 | 318 00 | 159 00 | 477 00 |
| (xv) For each trailer exceeding 13,500 Kgs. but not exceeding 14,000 Kgs. in weight, laden. | 110 00 | 330 00 | 165 00 | 495 00 |
| (xvi) For each trailer exceeding 14,000 Kgs. but not exceeding 14,500 Kgs. in weight, laden. | 114 00 | 342 00 | 171 00 | 513 00 |
| (xvii) For each trailer exceeding 14,500 Kgs. but not exceeding 15,000 Kgs. in weight, laden. | 118 00 | 354 00 | 177 00 | 531 00 |
| (xviii) For trailers exceeding 15,000 Kgs. in weight, laden. | (the rates specified in item (xvii) plus Rs. 4 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (xvii) plus Rs. 12 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (xvii) plus Rs. 6 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) | (the rates specified in item (xvii) plus Rs. 18 for every 500 Kgs. or part thereof in excess of 15,000 Kgs.) |

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

**திரு நா. காசிராமன் :** என்னுடைய திருத்தம் ஒன்று இருக்கிறது. "மொபஸல் ரூட் பஸ்களுக்கு டாக்ஸ் அதிகப்படுத்துவது பற்றிய அரசினர் தீர்மானத்திற்கு.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நிறைவேறிப் போய்விட்டதே. திருத்தம் என்னிடம் முன்னதாகவே கொடுக்கப்படவில்லையே. அந்தத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. அவையிலாவது என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.



### (7) நடைமுறைக் கேள்வி.

**ஓர் தீர்மானம் முன்மொழியப்பட்ட பிறகு அதை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு முன் உறுப்பினரின் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்காதது குறித்து.**

**திரு பி. ஜி. கருத்திருமன் :** தீர்மானம் வந்தவுடனேயே, அங்கத்தினர்களைப் பார்த்து, திருத்தம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்கவேண்டும். அப்படிக் கேட்கவேயில்லையே. எடுத்தவுடனேயே ஓட்டுக்கு விட்டுவிட்டீர்கள். It is out of order; I am raising a point of order, Sir. தீர்மானம் வந்தவுடனேயே திடீரென்று ஓட்டுக்குப் போட்டுவிட்டால், எப்படி? திருத்தங்கள் இருக்கின்றனவா என்று கேட்டிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவருக்கு நடைமுறை தெரியும். முன்பாகவே அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். அறிவிப்பே கொடுக்கவில்லையே. திருத்தங்கள் இருக்கின்றனவா என்று கேட்பது வழக்கம் கிடையாது. திருத்தம் இருந்தால், முன்கூட்டியே அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்திருந்தால், அதை அவையில் கேட்கவேண்டும். இல்லை என்றால் வழக்கமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ரெஸல்யூஷன்கள் நேற்று ராத்திரித் தான் வந்து சேர்ந்தன. எப்பொழுது படிக்கிறது? ஒரு நல்ல முறைக்காகச் சொல்லுகிறேன். நல்லது என்று சொல்லுகிறேன்.

**THIRU K. VINAYAKAM :** I rise on a point of order not on the ruling but on the procedure that has been followed. When the Minister in-charge moves that the resolution be approved or that the Bill be passed it is not as if the Speaker should straightway say "Those who are for it please say 'Aye' and those who are against, please say 'No' The Speaker must look at the faces of the Members and see whether any member wants to take part in the general discussion. There need not be any amendment given to the motion. But the Members may be willing to participate in the general discussion. Even that privilege has been denied. The Speaker does not look at the faces of the Members. What you have done is right and I am not questioning your ruling. I am only speaking about the procedure that will have to be followed. It is rudimentary courtesy that you look at our faces.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு விநாயகம் கூறிய கருத்தில் நான் மாறுபடவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட தீர்மானங்களுக்கு திருத்தங்கள் கொடுப்பது, பேசுவது என்பது குறைவு. இப்படி 10 திருத்தங்கள் வந்தால் ஏதாவது ஒன்றிரண்டில் பேசுவது, விவாதம் வைத்துக்கொள்வது, திருத்தங்கள் கொடுப்பது எது முக்கியமானது என்று பார்த்துக் கொடுப்பது பழக்கம். அதுதான் நடைமுறையில் வழக்கம். இதுவும் நடைமுறையில் இருக்கிறது. ஆகவே, நேருக்கு நேராகக் கேட்கவேண்டும் என்பது இல்லை.

**Thiru K. VINAYAKAM:** If the Member wants to speak, you cannot deny it, is it not?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச விரும்பினால் மறுப்பதற்கில்லை. சிலவற்றிற்கு விவாதம் வருகிறது. சிலவற்றிற்கு இல்லை.

### 4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

**(இ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக நூறு கோடி ரூபாய் இருக்கலாம் என்ற மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்படுத்தல் குறித்து.**

**THE HON. THIRU O. P. RAMAN :** Mr. Speaker, Sir, I move....

**"That the proposal of the State Government under sub-section (3) of section 65 of the Electricity Supply Act, 1948 (Central Act LIV of**

1948) to fix the maximum of amount which the Tamil Nadu Electricity Board may, at any time, have on loan under sub-section (1) of the said section as hundred crores of rupees, be approved ."

MR. SPEAKER : The motion is before the House for discussion.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, it would have been better if the Minister had told us what exactly prompted the Ministry to increase the loan amount from 70 crores to 100 crores. If my memory is correct, in the course of the past six years the amount has been increased from 35 crores to 100 crores. If my guess is correct, this increase is to enable the Government to expedite the rural electrification programme. This House has not been taken into confidence as to what exactly this increased amount is for. I assume that it is for rural electrification. In this context, I want to bring out one particular point which, I think, is very pertinent, namely, the need on the part of the Government to reduce the charge for pumpsets and keep it at the same old rate. The Hon. Chief Minister said in his statement that the rate would be reduced to nine paise per unit. But the rate has been reduced only for wells with a depth of 75 feet and more. But there are a number of wells which are not so deep. There has been an agitation all over the State for retaining the rate at 8¼ paise. A number of Members are absent and they are away considering this problem. A number of mass petitions have also been sent. They have been saying that this particular relief does not at all satisfy them and that it does not touch even the fringe of the problem. Is the Hon. Minister going to concede the request of a vast number of ryots, as there is a great deal of unrest in the rural parts of Tamil Nadu ? Has the Electricity Board the machinery to spend these one hundred crores, as there should be a perfect blueprint for giving power connections to the pumpsets in the rural parts of Tamil Nadu ? Will the target set forth become the physical target ? Though this is a resolution approving the proposal of the Government, one hundred crores is very, very frightening, and the House would like to know how exactly this amount is going to be spent.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, ஓரிரு விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தை ஒரு பைசா குறைத்திருக்கிறோம். இதன் காரணமாக சுமார் 1½ லட்சம் கிணறுகளுக்குப் பயன் கிடைக்கும் என்று கருதுகிறேன். முன்பு பத்து பைசா என்று நிர்ணயித்ததை இப்பொழுது ஒரு பைசா குறைத்து இருப்பதால் இது விவசாயிகளுக்கு நன்மையை உண்டாக்கும் என்று கருதுகிறேன். இந்தக் குறைப்பு போதுமானதல்ல, இன்னும் குறைக்க வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டம், சேலம், தர்மபுரி மாவட்டங்களிலே இருக்கின்ற கிணறுகளின் ஆழம் சுமார் 100 அடி, 150 அடி, 200 அடி, 250 அடி என்ற அளவில் இருக்கின்றன. இவைகளிலிருந்து தண்ணீர் இறைக்க வேண்டுமென்றால் புல் ஸ்பீட் மெஷின் வைக்க வேண்டும். இதற்கு அதிகமாகச் செலவாகிறது. எனவேதான் இப்பேர்ப்பட்ட இடங்களில் இருப்பவர்களுக்கு ஏதாவது சலுகை செய்ய வேண்டுமென்ற காரணத்தினால்தான் மின் கட்டணக் குறைப்பு செய்திருக்கிறோம். இதையேதான் விவசாயிகளும் தங்களுடைய விண்ணப்பத்தில் சொன்னார்கள். சராசரி 75 அடி ஆழமுள்ளதாக தமிழ்நாட்டில் சுமார் 4½ லட்சம் கிணறுகள் இருக்கின்றன. இவைகளில் சுமார் 1½ லட்சம் கிணறுகள் இந்த மின் கட்டணக் குறைப்பினால் பயன் அடைகின்றன. கோயமுத்தூர் மாவட்டத்தில் மட்டும் சுமார் 60 ஆயிரம் கிணறுகளுக்கு இந்தச் சலுகை இருக்கிறது. இந்த மின்சாரக் கட்டணக் குறைப்புத் திட்டத்தை எல்லா உறுப்பினர்களும் நமது எதிர்க் கட்சித்தலைவர் அவர்களும்கூட பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்



இரண்டாவதாக, மின்சார வாரியம் 70 கோடி ரூபாய கடன் வாங்க வேண்டுமென்று திட்டமிட்டதை இப்போது 100 கோடி ரூபாய் கடன் வாங்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. மின்சாரபோர்டின் அசெட்ஸ் 360 கோடி ரூபாய் இருக்கிறது. 360 கோடி ரூபாய் அசெட்ஸ் இருக்கும் போது 100 கோடி ரூபாய் கடன் வாங்கினால் எந்த விதமான பொருளாதார சிக்கலும் வந்துவிடாது என்று கருதுகிறோம். இந்தக் கடன் சிறப்புத் திட்டத்திற்காக மட்டும் வாங்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. கிட்டத்தட்ட 62 கோடி ரூபாய்க்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலுவைகள் இருக்கின்றன. அரசாங்கத்திடம், எல்.ஐ.சி. யிடம் வாங்கிய கடன், அந்தக் கடன்களுக்கான வட்டி போன்றவைகளுக்ாக 62 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவேதான் நாம் 70 கோடி ரூபாய் கடன் வாங்கலாம் என்பதை மாற்றி 100 கோடி ரூபாய்க்குக் கடன் வாங்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

மற்றும் கிராமப்புறங்களில் மின் இணைப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திலே கிராமப் புறங்களிலே மின் இணைப்பு செய்து கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த அளவிலேதான் 70 கோடி ரூபாய் என்பதை 100 கோடி ரூபாய் கடன் என்ற அளவில்—உயர்த்த முடிவு செய்திருக்கிறோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, இப்போது எப்படி பணத்தை வினியோகம் செய்வீர்கள் ? எந்த எந்தத் திட்டம் போட்டிருக்கிறீர்கள் ? இன்றைக்கு கிராமப்புறத்திற்கு மின்சார இணைப்பு போட்டிருக்கிறீர்கள். எந்தெந்த அதிகாரிகளை நியமித்திருக்கிறாகள் ? ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? இப்படி கடன் வாங்கிக்கொண்டே போனால் எந்த நிலையில் அது கொண்டுபோய்விடும் ? ஒவ்வொரு ஆண்டும் 10 கோடி, 20 கோடி என்று உயர்த்திக்கொண்டே போனால் என்ன ஆவது, முதலில் 40 கோடி, 50 கோடி என்ற அளவில் இருந்தது. அப்போது கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருந்தார்கள். இந்த ஆறு ஆண்டுக் காலத்தில் 60 கோடி ரூபாய் உயர்ந்து இருக்கிறது. பழைய கடன், பழைய கடனுக்கு வட்டி, இரண்டும் சேர்ந்து மொத்தக் கடன் இப்படியாக போய்க்கொண்டிருந்தால் ஃபைனான்ஷியல் ஸ்டெபிலிட்டிக்கும் ஆபத்து ஏற்படாதா ? இதிலே பொருளாதார நிபுணர்களைக் கலந்துகொண்டு எந்தவிதமான ஆபத்தும் இல்லையென்று தெரிந்துகொள்ள வேண்டாமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மின்சார போர்டிற்கு அசெட்ஸ் 360 கோடி ரூபாய் இருக்கிறது. 360 கோடி ரூபாய் அசெட்ஸ் இருக்கும் போது 100 கோடி ரூபாய் கடன் வாங்குவதிலே எந்தவிதமான பொருளாதார சிக்கலும் நேர்ந்துவிடாது என்பதைச் சொல்லியிருக்கிறோம். இதிலே லீகல் அட்வைஸ் கேட்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். நாம் கடன் எழுப்ப அனுமதி கேட்கிறோமே தவிர, கடன் கொடுக்கப் போவதில்லை. நாம் 70 கோடி ரூபாய் கடன் வாங்கலாம் என்று திட்டமிட்டோம். பிறகு இன்னும் பத்து இருபது கோடிகளைக்கேட்டு, தனித் திட்டங்களைப் போடலாம் என்று திட்டமிட்டோம். இருக்கின்ற. அதிகாரிகளை வைத்தே திட்டங்களைப் போடலாம் என்று இருக்கிறோம். சில நேரங்களில் கிராமப்புறங்களிலே மின் இணைப்புக் கொடுப்பதிலே நல்ல இலாபகரமாக இல்லை. பம்ப் செட் போடும்போதுதான் லாபம் வருகிறது. தமிழ்நாடு முழுவதிலும் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்புக்கொடுக்கின்ற வகையில் கணிசமாக வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## 8. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1970.)

* **மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 6/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவரும்போது, நான் முதலிலே ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால், தொழிலாளர்களுக்காக ஒரு ஆக்கபூர்வமான ஒரு செயலைச் செய்திருக்கிறது. நமது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன் முதலாக மே தினத்திற்கு விடுமுறை தந்து, "மேதினி போற்றுகிற மே தினத்தை" உழைப்பாளர் விடுமுறை நாளாக, தொழிலாளர் விடுமுறை நாளாக விடப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்தார். இந்த அரசு ஆண்டுக்காண்டு இந்த மே தினத்தை விடுமுறை நாளாக விடப்பட வேண்டுமென்று வேண்டுகோள் மூலமாகக் கொடுத்திருக்கிறது. இந்த மேதின விடுமுறையைச் சட்டபூர்வமாக ஆக்கவேண்டுமென்று இன்றைய முதல்வர் நமது கலைஞர் அவர்களும், எனக்கு முன்னால் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும், நமது கல்வியமைச்சர் அவர்களும், நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இன்றைக்குச் சட்டமாகக் கொண்டுவரப்பட இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாகத் தொழிலாளர்களுக்கு ஏறக்குறைய ஆண்டில் பொதுவிடுமுறை நாட்கள் 8 ஆக இருந்தது 9 நாட்களாக உயரக்கூடிய வழிவகை இருக்கிறது. ஜனவரி 26-ம்தேதி, ஆகஸ்ட் 15-ம்தேதி, அக்டோபர் 2-ம் தேதி ஆகிய மூன்று நாட்களை தேசீய விடுமுறை நாட்கள் என்றும், இதைத் தவிர 5 நாட்கள் பண்டிகை விழா நாட்கள் என்றும் ஆக மொத்தம் 8 நாட்கள் என்று ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின் மூன்றாவது பிரிவு விளக்கமாகக் கூறுகிறது. இதை, நாம் இப்பொழுது தேசீய விடுமுறை நாட்களை நான்கு நாட்களாக உயர்த்தியிருக்கிறோம். அதாவது, ஜனவரி 26-ம் தேதி, ஆகஸ்ட் 15-ம் தேதி, அக்டோபர் 2-ம் தேதி என்று இருந்தவைகளோடு மே 1-ம் தேதியையும் இணைத்து, தொழிலாளர்களுக்கு நான்கு நாட்கள் தேசீய விடுமுறை நாட்கள் என்றும், இதைத் தவிர பண்டிகை விழா நாட்கள் 5 என்றும், ஆக மொத்தம் 9 நாட்கள் விடுமுறை என்று கிடைக்க வழி செய்திருக்கிறோம். இதன் மூலமாகத் தொழிலாளர் சமுதாயம் மகிழ்ச்சியடையும், இந்தச் சட்டத்தை வரவேற்கும் என்று கருதுகிறேன்.

ஆனால் முதலாளிகள் தரப்பு சில வாதங்களையும் மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லலாம். இந்தக் கோரிக்கை நீண்ட விரிவான வகையில் நமது தொழிலாளர் நல ஆய்வுக் கூட்டங்களில் எடுத்து வைக்கப்பட்டு, அவர்களாலும் ஓரளவு ஒப்புக்கொள்ளப்பட்டே சட்டமாகவருகிறது. இன்னும் சொல்லப்போனால் பல நிர்வாகங்கள் நாம் குறிப்பிட்டதற்கும் அதிகமாகவே விடுமுறை அளித்து வருகிறார்கள். மெட்டல் பாக்ஸ் நிர்வாகத்தில் 10 நாட்களும், அசோக் லே லண்ட்ஸ் நிர்வாகத்தில் 12 நாட்களும், இந்தியா பிஸ்டன் 14 நாட்களும், விம்கோ 15 நாட்களும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் உள்ள தொழில் அதிபர்கள் ஏற்றுக்கொள்வார்கள், இதில் கண்ட 9 நாட்களுக்கும் விடுதலை தருவார்கள் என்றே நம்பி அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது.

* 21—3—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



மற்றொன்று. இந்தச் சட்டத்தினால் ஏற்கனவே அதிக நாட்கள் விடுமுறை பெற்று வருகிறவர்கள் பாதிக்கப்படுவார்களா என்கிற சந்தேகம் வரும். இந்த மசோதாவில் 11-வது பிரிவு ஏற்கனவே வழங்கப்பட்ட விடுமுறை தினங்கள் குறைக்கப்படக்கூடாது என்று தெளிவாகக் குறிக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை வரவேற்று 1970-ம் ஆண்டு மே முதல் தேதி முதல் மேதினி போற்றுகிற மே தின விடுமுறை அளிக்க வகை செய்யும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக அரசு தொழிலாளர் வர்க்கத்திற்கு மே தினத்தன்று விடுமுறை வழங்க வேண்டுமென்று இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதற்காக நான் என் கட்சியின் சார்பில் ஆதரித்து இதைப் பாராட்டுகிறேன்.

உலகத் தொழிலாளர்கள் ஒருகாலத்திலே அடிமைப்பட்டு இருந்தார்கள். அவர்கள் எல்லாம் சிகாகோ நகரில் ஒன்றுசேர்ந்து மேதின விடுமுறை வேண்டும், 24 மணி நேரமும் உழைத்துக்கொண்டிருக்கிறோம் என்ற கோரிக்கை எழுப்பி ஒரு பிரகடனத்தை ஏற்படுத்தினார்கள். பெரிய கிளர்ச்சிகள் எல்லாம் நடந்து—லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்து—மே தினத்தைப் பெற்றார்கள்.

இந்த மேதினச் சிறப்பை நமது தமிழக அரசும் நன்கு உணர்ந்து தொழிலாளர்களுக்கு அந்தத் தினத்தில் விடுமுறை அளிக்க சட்டமே கொண்டுவந்திருப்பதற்கு நான் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 7 மசோதாக்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகப் பேசவேண்டும்.

**திரு ஆ. கு. சுப்பையா :** படித்தவர்கள் ஒரு சாதி, உடல் உழைப்பால் பாடுபடுகின்ற தொழிலாளர்கள் ஒரு சாதி என்கிற பாகுபாடின்றி இந்த மே தினத்தில் எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொண்டாட—இனி அரசாங்கமே மே தினத்தைக் கொண்டாட பெருவிழா ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இரண்டு சாரார்களிடையேயும் உள்ள மனக்கசப்பு போக, சமரச சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி என் கட்சியின் சார்பில் இதை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**THIRU K. VINAYAKAM :** Mr. Speaker, Sir, it is too late to say anything about the desirability of enjoying May Day as a holiday and it has come to stay and it is going to be there. My objection to this Bill is that this Bill can control only registered establishments, that is, any establishment which comes under labour laws only can enjoy this holiday with pay But what is the provision made in the Bill regarding unregistered establishments where a large number of labourers are working and there are also a large number of such unregistered establishments. What provision is made in this Bill to compel those unregistered shops to declare May Day as holiday with pay. That is the only objection I have got against this Bill.

**DR. H. V. HANDE :** Sir, on behalf of our Party I wish to state that it is a good thing that we have decided to give a holiday and celebrate it as May Day or by any other name. But a particular principle should be laid down for the celebration of these holidays. For instance, we celebrate Ayudha Pooja where we worship the tools used by us or for that matter by the workers. Whatever profession to which we may

belong, it has been the custom in Tamil Nadu to celebrate that particular day by worshipping the tools used by us and that is the philosophy that is followed so far as our State is concerned. In connection with the holiday on May Day, I wish to point out that whenever we celebrate the May Day, we should see that no political twist is given to it as far as possible. In this particular context I also want to point out that a couple of years ago I and Thiru N. V. Natarajan when he was not a Minister discussed how best to celebrate the May Day and then it was decided that it should be purely a non-political affair and no political slogans should be raised on behalf of any political party. Now that the Government have proposed in the Bill to declare a holiday on May Day, they will think of ways and means to celebrate this day on behalf of the Govern ment and the representatives of all political parties will definitely be invited and the representatives of our party also will definitely be invited.

But in this connection, I wish to point out that a couple of years ago there was a procession organised by an all-party committee to celebrate Viet Nam Day and the volunteers wore badges and there was also a meeting to celebrate that Day. But, here I also want to point out that as far as workers are concerned they are above political parties. It is not as though only a political party is interested in workers. We are also interested in workers but we also want that increased employment potential should be created. Somebody may raise a slogan but our slogan may be different. Our policy is that it is only by increasing the employment potential we can increase opportunities for employment of more workers. A mere improvement of the rights of the workers will not reduce the unemployment problem.

The employees should be able to press demands arising in the course of employment. But some leaders have brought in the 'Viet Nam Slogan'. That may be the particular philosophy of a particular section. My contention is this. My request to the Hon. Minister for Labour would be that he should see to it that this May Day is celebrated in such an atmosphere that it is cleansed of all political philosophies, political slogans, etc. and that is purely organised with the only object of ensuring all the facilities and good things that we want to give to the people working and the working class. Thank you.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை.)

முற்பகல் 11-30 **திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகத் தொழிலாளி வர்க்கம் கோரிவந்த இந்த உரிமையை இந்த மாநிலத்திலே நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. இது மிகவும் பாராட்டத் தக்கது. தொழிலாளர்கள் அனைவரும் உண்மையிலேயே மகிழ்ச்சியுறுவார்கள். இதற்கு முன்னதாக மே தினம் விடுமுறை என்று சொன்னால் இருக்கக்கூடிய பண்டிகை விடுமுறைகளில் ஏதாவது ஒன்றை விட்டுக் கொடுத்து அந்தத் தினத்திலே மே தினம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலைமை இருந்து வந்தது. இந்த மசோதா அந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து இருக்கிறது.

மே தினம் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் உலகத் தொழிலாளருடைய உரிமை தினம், அவர்களுடைய உரிமையைக் கோரக்கூடிய நாள். இன்றைக்குள்ள சமுதாயத்தில் தொழிலாளர்கள் உற்பத்தியிலே எல்லாவிதமான உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் அவர்களுடைய உரிமைகளைக் கோரவேண்டுமென்று சொன்னால் கோரிப் பெறவேண்டுமென்றால் தங்களுடைய ஸ்தாபனத்தை அமைத்து மிகப் பெரிய இயக்கங்களையும் போராட்டங்களையும், வேலை நிறுத்தம் போன்றவற்றையும் நடத்திய பிறகுதான் உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. அந்த நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்த மே தினத்தை விழா தினமாகக் கொண்டாட வேண்டுமென்பதை உணர்ந்துதான் அந்தத் தினத்தை விடுமுறை நாளாக அறிவிக்க முன்வந்திருக்கிறார்கள். அதைத் தொழிற் சங்கங்களின் சார்பாகவும் என்னுடைய கட்சியின் சார்பாகவும் பாராட்டுகிறேன்.



இந்தச் சட்டத்திலே பல்வேறு பாதகமான அம்சங்கள் இருக்கின்றன. பாதகமாக இருக்கின்ற எதை எதை நீக்கவேண்டுமென்பதை இந்தத் திருத்தங்களின் மூலம் சொல்ல முடியாவிட்டாலும்கூட அதையெல்லாம் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சட்டம் எந்த எந்தத் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் என்று டெபனிஷனில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற பேக்டரிகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஷாப்ஸ் அண்ட் எஸ்டபிளிஷ்மெண்ட்ஸ் ஆக்டின்கீழ் வரக்கூடிய தொழிலாளர்கள், பிளாண்டேஷன் ஆக்டின்கீழ் வரக்கூடிய தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் இந்தச் சட்டம் பொருந்தும் என்று இருக்கிறது. ஆனால் அதே சமயத்திலே ஒரு விஷயத்தை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஷாப்ஸ் அண்ட் எஸ்டபிளிஷ்மெண்ட் ஆக்டின்கீழ் மூன்று தொழிலாளர்கள் இருந்தால் அந்தச் சட்டம் கட்டுப்படுத்துகிறது, பேக்டரிகளைப் பொறுத்த வரையில் பவர் உபயோகப்படுத்துகின்ற பேக்டரியாக இருந்தால் குறைந்த பட்சம் 10 தொழிலாளர்கள் இருக்கவேண்டுமென்றும், பவர் இல்லாத பேக்டரிகளாக இருந்தால் 20 தொழிலாளர்கள் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. பிளான்டேஷன்ஸ் என்று வரும்பொழுது 30 பேர்களாவது இருக்கவேண்டுமென்று கூறுகிறது. அப்படியானால் மூன்று தொழிலாளர்கள் ஷாப்ஸ் அண்ட் எஸ்டபிளிஷ்மெண்ட்ஸ் ஆக்டின்கீழ் இருக்கவேண்டுமென்றும், 30 பேர்கள் மினிமம் ஆக பிளான்டேஷன் ஆக்டின்கீழ் இருக்கவேண்டுமென்று குறிப்பிடும்பொழுது பல பிளான்டேஷன் முதலாளிகள் இந்த பேக்டரி லேபர் ஆக்டைத் தவிர்ப்பதற்காகவே 30 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலைக்கு வைத்துக்கொள்ளுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த நிலைமையில் அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் இந்தச் சட்டம் பொருந்தாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, திருத்தப்படக்கூடிய சூழ்நிலையில் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்காமல் அரசாங்கத்தால் லைசென்ஸ் பெற்ற எந்தத் தொழிற்சாலைக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அவர்களுக்கும் இந்த விடுமுறை அளித்தால் நலமாக இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செக்ஷன் 5 என்ன சொல்கிறது என்றால் விடுமுறைகளுக்கு....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. தருமலிங்கம்) :** ஒரிஜினல் ஆக்டைப்பற்றிப் பேசவேண்டாம், பில்லைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** ஜெனரல் டிஸ்கஷனில் என்னுடைய அமெண்ட்மெண்ட்கள் ஸ்கோப் ஆப் தி பில்லில் வரவில்லை என்றாலும் அவைபற்றிச் சொல்ல விரும்புகிறேன்......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** இந்தப் பில்லைப்பற்றி மாத்திரம் பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** ஜெனரல் டிஸ்கஷனிலே பேசும்பொழுது அதையும் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்......

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மே தினத்தின் விடுமுறைச் சிறப்பைப்பற்றி அனைவரும் அறிவார்கள். தேசிய விடுமுறை நாட்களில் ஒன்றாக இணைத்துக்கொள்கிறோம். அதைப்பற்றிக் கருத்துக்கள் தெரிவிப்பதுதான் நல்லது. மற்றச் சட்டங்களுக்குள் புகுவது என்றால் அமைச்சர் எல்லாவற்றிற்கும் கருத்துக்கள் கூறுவது சிரமமாக இருக்கும். எனவே, அதைப்பற்றிச் சொல்லாமல் குறிப்பிட்ட பில்லைப்பற்றிச் சொல்லவேண்டும். இன்னும் ஏழு, எட்டு பில்கள் பாஸாக வேண்டியிருக்கிறது. அதை மனதிலேகொண்டு அவர்கள் சீக்கிரம் முடிக்கவேண்டும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தேசிய விடுமுறை நாளாக வந்தாலும் அதை அனுபவிக்க முடியாத சூழ்நிலையும் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் சொன்னேன். பண்டிகை நாள்கள் சில தொழிற்சாலைகளில் 12 கொடுக்கிறார்கள், சில தொழிற்சாலைகளில் 15 கொடுக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மை. இந்த விடுமுறை நாட்கள் ஞாயிற்றுக்கிழமையில் வந்துவிட்டால் அதற்குச் சம்பளம் இல்லாத நிலைமை இருக்கிறது. ஃபெஸ்டிவல் ஹாலிடேஸ் வந்தாலும் இதைப்பற்றி லேபர் இன்ஸ்பெக்டர் எம்ப்ளாயி, எம்ப்ளாயரோடு கலந்து பேசிக்கொள்ளலாம் என்று இருக்கிறது. எனவே விடுமுறை ஞாயிற்றுக்கிழமையிலே வந்துவிட்டால் அந்த உரிமையில்லாமல் போகிறது. அதையும் கவனிக்கவேண்டும்.

என்னுடைய திருத்தம் என்று வரும்பொழுது சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசினர் அவசர அவசரமாகக் கொண்டுவருவதற்குக் காரணம் இந்த ஆண்டிலேயே அமலுக்குக்கொண்டு வரவேண்டுமென்றுதான் என்று கருதுகிறேன். என்னுடைய திருத்தத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டவுடனே அல்லது 1—4—1970 முதல் அமலுக்கு வரவேண்டுமென்று கூறியிருக்கிறேன். அதற்கு அர்த்தம், வரக்கூடிய மே தினத்தன்று, மே 1-ஆம் தேதி அது அமலுக்கு வர வேண்டுமென்பதுதான். எனவே அதையும் கவனிக்கவேண்டும்.

நான் கொடுத்திருக்கிற இன்னொரு திருத்தம் அரசாங்கத் தொழிலாளர் நல அமைச்சராக முன்னாலே இருந்த திரு. மாதவன் அவர்கள் தொழிலாளர் பிரதிநிதிகளையெல்லாம் கூட்டிப் பேசும்பொழுது—அட்வைசரி பாடி என்று கருதுகிறேன்—இந்த மே தினம், திருவள்ளுவர் முக்தி தினம் இரண்டையும் சேர்த்து 10 விடுமுறை நாட்கள் விடுவது என்று கூறினார்கள், அது அரசாங்கத்தினுடைய குறிப்புகளில் இருக்கிறது. அதையும் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தையும் கொடுத்து இருக்கிறேன்.

செக்ஷன் 10 விதிவிலக்குகள் என்று சொல்லப்படுவது. ஸ்கோப் ஆப் தி பில்லுக்குள் வராவிட்டாலும் சொல்கிறேன். மே தின விடுமுறை ஸ்டேட் கவர்ன்மெண்ட் அண்ட் லோக்கல் அதாரடி கீழ் வருகிற இண்டஸ்ட்ரியல் தொழிலாளர்களுக்குப் பொருந்தாது என்று இருக்கிறது. விதிவிலக்கில் அரசாங்கத் தொழில் நிறுவனங்களும், லோக்கல் அதாரடியின் கீழ் உள்ள நிறுவனங்களும் இதில் வராது என்று இருக்கிறது. இப்பொழுது கொண்டுவராவிட்டாலும் அரசினர் தரப்பிலிருந்து அதற்கு விரைவிலே ஒரு திருத்தம் கொண்டுவந்தால்தான் பயன் இருக்கும், இல்லாவிட்டால் பயனில்லாது போய்விடும். அரசினர் தொழில் நிறுவனங்களில் உள்ளவர்களுக்கு விடுமுறையில்லை என்பதைப் பல முதலாளிகள் சுட்டிக் காட்டி உங்கள் நிறுவனங்களிலே சம்பளம் இல்லாமல் விடுமுறை கொடுக்கக் கூடிய நிலைமை இல்லை, எனவே நாங்கள் ஏன் கொடுக்கவேண்டுமென்று கேட்பார்கள். எனவே அதையும் திருத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



அமைச்சர் அவர்கள்கூட ஏற்கனவே இருக்கக்கூடிய உரிமைகள் பறிக்கப்படாது என்று கூறினார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய "ப்ரிவிலெஜஸ் அண்டு அதர் லாஸ்" என்ன என்பதைப் பற்றி முடிவு எடுப்பதிலே முதலாளிகளுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே சிக்கல் ஏற்படும் நிலை இருக்கிறது. அதற்காக ஒரு திருத்தம்கூடக் கொடுத்திருக்கிறேன். ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தமாகிய இந்தத் திருத்தத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும்.

திருவள்ளுவர் தினத்திற்கும் விடுமுறை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.]

***திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய அமைச்சர் அவர்களால் மே தினத்தையும் தொழிலாளர் விடுமுறையாக இணைத்து மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கியது முதற்கொண்டு, அதற்கு முன்னாலேயும் சுயமரியாதை இயக்கத்திலே இருந்தபோது எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு முன்னாலே எந்த அளவு ஆதரவு இருந்தது என்பதைப் பார்த்திருக்கிறோம். எடுத்ததற்கெல்லாம் தொழிலாளர்களுக்கு விடுமுறையா, அலுவலகங்களுக்கு விடுமுறையா, ஒரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கு விடுமுறையா, அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று எதிர்வரிசையில் இருக்கின்றவர்கள் கடந்த 20 ஆண்டு ஆட்சிக் காலத்தின்போது சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியினர் மே தினத்திற்கு விடுமுறை அளிக்க மறுத்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டவுடன்தான் மே தினத்திற்கு விடுமுறை அளிக்க முன்வந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் உயிருடன் இருந்த போதே முன்னால் இருந்த தொழிலாளர் அமைச்சர் அவர்கள் மே தின விழாவுக்குத் தொழிலாளர்களுக்கு விடுமுறை என்று அறிவிப்புக் கொடுத்தார்கள். அது இன்றையதினம் சட்டமாகும் வகையில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் மசோதாவாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் எத்தனை அரசியல் கட்சிகள் இருந்தாலும், முன்னால் ஆண்டு கொண்டிருந்தவர்களானாலும் அவர்களுக்கெல்லாம் இல்லாத பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. மே தின விழாவுக்கு விடுமுறை விட்டதன் காரணமாகத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் ஒருமுகமாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு மீதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் நல்ல நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்தி இந்த மசோதாவை வரவேற்று அமருகிறேன்.

***மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புனிதமான திருத்த மசோதாவின் மீது ஏறக்குறைய ஆறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

பொதுவாக இந்த மசோதா எல்லோராலும் வரவேற்கப்படுகிறது என்பது அவர்களுடைய பேச்சிலிருந்து தெரிகிறது. முதலில் பேசிய வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. சுப்பையா அவர்கள் இதை வரவேற்று, பாராட்டிப் பேசினார்கள். அடுத்துப் பேசிய திரு. விநாயகம் அவர்கள், இது ரிஜிஸ்டர்டு எஸ்டாப்ளிஷ்மெண்டுக்கு மட்டுந்தானா, அன்ரிஜிஸ்டர்டு எஸ்டாப்ளிஷ்மெண்டுக்கு இல்லையா என்று கேட்டார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் இன்று நாட்டில் இருக்கும் 4½ லட்சம் தொழிலாளர்கள் நன்மை பெறுகிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் ஒரு லட்சம்

பேர் நன்மை அடைகிறார்கள். ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ் சட்டத்தின்கீழ் இரண்டு லட்சம் தொழிலாளர்கள் நன்மை பெறப் போகிறார்கள். இதில் அடங்காமல் எங்கேனும் இருப்பார்களானால் அவர்களையும் இதற்குள் கொண்டுவர அந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இதிலே ஒன்றும் புதுமை இல்லை; "இட் இஸ் நாட் நாவல்" என்ற கருத்தைக் கூறினார்கள். மிகப் புதுமையான மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 1958-ம் ஆண்டு இந்த விடுமுறைச் சட்டம் வந்தது என்றாலும் 1962-ம் ஆண்டில் எங்களுக்கு முன்னால் ஆண்டவர்கள் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். காந்தியார் பிறந்த நாள் விழாவுக்காக விடுமுறை விடவேண்டுமென்ற கருத்தில் கொண்டு வந்தபோது தொழிலாளர்கள் எல்லாம் மே தினத்தையும் விடுமுறை நாளில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை அப்போது விடுத்தார்கள். ஆனால் 1967-ம் ஆண்டு வரை, புதிய அரசு பொறுப் பேற்றுக் கொள்ளும்வரை, அதையும் சேர்த்துக் கொள்ளுவதற்கு வழி செய்யப்படவில்லை.

நாட்டில் தேசிய விழாக்கள் என்றால் சுதந்திர நாள் மட்டுமல்ல, குடியரசு நாள் மட்டுமல்ல, இந்த நாட்டுக்கு விடுதலையை வாங்கித் தந்த காந்தியார் பிறந்த நாள் மட்டுமல்ல, தொழிலாளர்கள் உரிமை காத்து, ரத்தம் சிந்திய உலகத் தொழிலாளர் வர்க்கம் 8 மணி நேர வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேரத் தூக்கம் என்பதை நிர்ணயிப்பதற்குக் காரணமாக இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மேதின விழாவுக்கும் விடுமுறை வழங்க வேண்டுமென்ற திருத்தச் சட்டத்தை முன்னாலே இருந்தவர்கள் கொண்டு வரவில்லை; நாங்கள்தான் புதுமையாகக்கொண்டு வந்திருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை, உண்மையும் அதுதான்.

இன்னொன்றையும் சொன்னார்கள். நாட்டிலுள்ள அன்-எம்ப்ளாய்மெண்ட் போன்ற நிலைமைகளையும், தொழில் உற்பத்தித் திறன் பற்றிய பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மறைமுகமாக இந்தச் சட்டமேகூட அதற்கு உதவி செய்கிறது. ஒருநாள் விடுமுறை தொழிலாளர்களுக்குக் கொடுப்பதன்மூலம் அந்த நாள் உற்பத்தியைப் பெருக்க வெளியிலிருக்கும் வேலையில்லாத வாலிபர்களுக்கு வேலை போட்டுக் கொடுக்கலாம். அந்த முறையில்கூட இந்தச் சட்டம் துணை நிற்கும்.

இது உற்பத்தியைப் பாதிக்கும் என்று அவர்கள் சொல்லுவார்களானால் நான் ஒன்றை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கம் 9 நாட்கள் விடுமுறை நாட்கள் என்று வழங்கியிருக்கும்போது தமிழகத்தில் இருக்கும் பெரிய தொழில் அதிபர்கள் 10 நாட்கள் கொடுக்கிறோம், 11 நாட்கள் கொடுக்கிறோம், 15 நாட்கள் கூடக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பர்மாஷெல்லில் 13 நாட்கள் கொடுக்கிறார்கள், இம்பீரியல் டுபாக்கோவில் 12 நாட்கள் கொடுக்கிறார்கள், விம்கோவில் 15 நாட்கள் கொடுக்கிறார்கள், மெட்ராஸ் ரப்பர் பாக்டரியில் 12 நாட்கள் கொடுக்கிறார்கள், இந்தியா பிஸ்டன்சில் 14 நாட்கள் கொடுக்கிறார்கள், பெஸ்ட் அண்டு கம்பெனியில் 12 நாட்கள் கொடுக்கிறார்கள், ஈசன் கம்பெனியில் 12 நாட்கள் கொடுக்கிறார்கள், என்ஃபீல்டு இந்தியாவில் 12 நாட்கள் கொடுக்கிறார்கள். மிக முக்கியமான தொழில் அதிபர்கள் எல்லாம் அரசாங்கம் நிர்ணயித்ததைக் காட்டிலும் மிக அதிகமாகக் கொடுத்துவரும் காரணத்தால், ப்ரொடக்டிவிடி பாதிக்கப்படாது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ப்ரொடக்ஷன் பாதிக்கும் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். தொழிலாளர்களுக்கு நல்ல வாய்ப்புகள் ஏற்பட வேண்டுமென்றால் ஏராளமான வேலைவாய்ப்புகள் ஏற்பட்டால்தான் முடியும் என்று சொன்னேனே தவிர, உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொல்லவில்லை. என்னுடைய கருத்தை நான் மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். இது வரவேற்கத்தக்கது. வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர வேறல்ல.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** நம் எதிரே இருக்கும் மசோதாவுக்கும் வேலை வாய்ப்புக்கும் சம்பந்தம் இல்லை. பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு இந்த மன்றத்தின்மூலம் புதிய சட்டங்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு நன்மை செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் வருகிறோம். அதுபற்றிய பிரச்சினைகள் மற்ற நேரங்களில் கவனிக்கப்படும்.

இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் இந்த மசோதாவைப் பொதுவாக வரவேற்றுப் பாராட்டிப் பேசினார்கள்.

பின்னால் அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் இந்தச் சட்டத்தின்கீழ் வருகிற தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் நன்மை பெறுவார்கள், சிலர் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். முப்பதுக்கு மேற்பட்டவர்களைத்தான் தோட்டத் தொழிலாளர்கள் என்று பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள், அதிகமானவர்களைக்கூட சில தோட்ட முதலாளிகள் எண்ணிக்கையைக் குறைவாகக் காட்டி சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இதற்காக ப்ளான்டேஷன் லேபர் இன்ஸ்பெக்டர்ஸ் என்று இருக்கிறார்கள். தொழிலாளர் சங்கத் தலைவர்கள் அவர்களைப் பயன்படுத்தி எந்தெந்த தொழில் அதிபர்கள் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்களோ அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், தொழிலாளர் சமுதாயத்திற்கு இந்த வசதி போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலச் சட்டத்தின் திருத்தமாக விடுமுறையை அதிகமாக்கும் வகையில் இது இருக்கிறது. மூலச் சட்டத்தில் எந்தெந்தத் தொழிலாளர்களுக்கு இந்த வசதிகள் வரும் என்ற விளக்கம் இருக்கிறது. ஆகவே, புதிதாக இதில் போக வேண்டாமென்று நான் கருதுகிறேன். மே 1-ம் தேதி ஒருவேளை ஞாயிற்றுக் கிழமையில் வருமானால் அதற்குப் பதிலாக இன்னொரு நாள் தரவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். மே 1-ம் தேதிக்கு இன்னொரு நாளைச் சொல்ல முடியாது. 13-ம் தேதியை 1-ம் தேதி என்று சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்களே என்று நினைத்தேன்.

மே 1-ம் தேதி அன்று விடுமுறை விடப்படவேண்டுமென்று சொல்வது அன்றைய தினம் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவர்கள் இன்பமாக, மகிழ்ச்சியாக அந்நாளைக் கழிக்கவேண்டுமென்றும், மாலையில் அவர்கள் நடத்துகிற விழாவில் பங்கு பெறவேண்டுமென்றும், டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல், கட்சி வேற்றுமை இல்லாமல், அரசியல் சார்புடைய தன்மையில்லாமல், உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை நலனை மட்டும் கருதி நாட்டின் தொழில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற முயற்சியை முன்வைத்து அந்நாளைக் கொண்டாட வேண்டுமென்ற முறையில் அது ஒரு விடுமுறை நாளாக இருக்க வேண்டுமென்ற கருத்தில் கொண்டுவரப்படுகிறது. எப்படி அக்டோபர் 2-ம் தேதி

அல்லது ஆகஸ்டு 15, அல்லது ஜனவரி 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையில் வந்துவிட்டால் இன்னொரு நாளை சுதந்தர நாளாக வைத்து நாம் கொண்டாடுவது இல்லேயோ அப்படித்தான் இதையும் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே முதலாளிகள் தரப்பிலிருந்து இதற்கு ஒருவிதமான எதிர்ப்பு அரசுக்கு வந்து கொண்டேயிருக்கிறது. அதே நேரத்தில் பல முதலாளிகள் இதை ஒத்துக்கொள்கிருர்கள். அப்படி ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அரசாங்கம் நடுநிலைமையோடு இதைக் கொண்டுவருகிறது.

திருவள்ளுவர் நாளை விடுமுறைநாளாகச் செய்யவேண்டுமென்றும் சொன்னுர்கள். இந்த சந்தர்ப்பத்தில் அது வராது என்ருலும் இதுபற்றித் தீர்க்கமாக ஆலோசித்த பின்னர்தான் திருவள்ளுவர் நாளைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஏற்கனவே அதற்கு விடுமுறை விடுவதுபற்றி, பொதுவாக அரசாங்க விடுமுறைவிடுவதுபற்றி அமைச்சரவை முடிவு எடுத்திருக்கிறது.

தொழிலாளர்கள் பொறுத்தவரையில் மே தினத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற முறையில் இதைக் கொண்டு வந்திருக்கிருேம். அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் பொறுத்தவரையில் அது பற்றி அரசாங்கம் நல்ல முறையில் முடிவு எடுக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்தச் சட்டம் ஒரு புதுமையானது என்பதற்கு எடுத்துக் காட்டு, கேரளாவைத் தவிர மற்ற மாநிலங்கள் எல்லாம் இப்படிப்பட்டதொரு சட்டத்தைக் கொண்டுவராத நேரத்தில் நாம் இதை முதலில் கொண்டு வந்து இருப்பது தொழிலாளர் வர்க்கத்திற்கு ஒரு வழிகாட்டியாக அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யும் முறையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது முழுமையோடு நிறைவேறும் வகையில் இச்சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் மூலம் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 2 இந்த மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும். "

**THIRU C. GOVINDARAJAN:** Sir, I move the following amendment:

In sub-clause (i) of Clause 2, after the figure and words "1st May" and before the figure and words "15th August" *add* the following:

"Thiruvalluvar Mukthi Day."

The amendment was duly seconded.



**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** 1970-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அதைக் கொண்டுவரலாம் என்ற கருத்தை முதல் பிரிவுக்கான திருத்தத்தில் சொல்லியிருக்கிருர்கள். அரசாங்கத்திற்கும் அந்த எண்ணம்தான் இருக்கிறது. இந்த ஆண்டே அதை அமுலில் கொண்டுவர வேண்டும் என்ற வகையில்தான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. மே தினத்திற்கு விடுமுறை விடவேண்டுமென்பதைப் பற்றிய கருத்தை பல்வேறு தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் வற்புறுத்திக்கொண்டு வருகிருர்கள்.

திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை வழங்கவேண்டுமென்றும் கேட்கிருர்கள். அதே மாதிரி பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளுக்கும் விடுமுறை வழங்கவேண்டுமென்று பல்வேறு மன்றங்களிலிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. இவற்றை எல்லாம் சிந்தித்து அரசாங்கம் இறுதியாக முடிவு எடுக்க வேண்டும். மே தினத்திற்கு முதன்முதலாக விடுமுறை கொண்டு வந்திருக்கிருேம். இது தொழிலாளர்களால் வரவேற்கத்தக்கதாகும். இந்த நிலையில் அதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு அதுபற்றிக் கலந்து பேசலாம் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 3 இந்த மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும். "

**THIRU C. GOVINDARAJAN :** I move—

In clause (3) after the figure and words "1st May" and before the figure and words "15th August" insert the following :—

"Thiruvalluvar Mukthi Day".

The amendment was duly seconded.

**திரு. சி. கோவிந்தராஜன் :** அமைச்சர் அவர்களின் வாக்குறுதியின் பேரில், எதிர்காலத்தில் இதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதால் நான் இதை வற்புறுத்தவில்லை.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 1.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 1 இந்த மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும். "

**THIRU K. RAMAMOORTHI :** Sir, I move the following amendment :—

"In clause 1, sub-clause (2) for the words "on such date as the State Government may by notification appoint," substitute the words "from the year 1971."

THIRU N. KASIRAMAN : I second it.

THIRU C. GOVINDARAJAN : Sir, I move the following amendment :

" In sub-clause (2) of clause 1 for the words " on such date as the State Government may, by notification, appoint " substitute the words " as soon as the Bill is passed or from 1st April 1970."

THIRU V. K. KOTHANDARAMAN : I second it.

**திரு. க. இராமமூர்த்தி :** இது மிக மிகத் தேவையானதொரு திருத்தம் என்பதை முதலில் சொல்லிக்கொள்கிறேன். மே தினத்தைத் தேசிய விடுமுறையாக அறிவிக்கப்படுகிற இந்த நிலை மிக்க வரவேற்புக் குரிய நிலைதான் என்றாலும், இது எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது என்பதைப் பார்க்கும்போது தொழிலாளர்கள்—தொழில் அதி

நண்பகல் 12-00

பர்கள் உறவுமுறை சுமுகமாக இருக்க வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை அடுத்த ஆண்டிலிருந்து அமுலுக்குக் கொண்டுவருவது சிறந்த முறையாக இருக்கும். இந்த ஆண்டு சட்டபூர்வமாகயில்லாமல், அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்து விடுமுறை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். நிச்சயமாக இதை நிறைவேற்றுவதிலே எந்தவித சங்கடமும் இருக்காதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய திருத்தத்தைப் பற்றிய வரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்த மசோதா இன்றையதினம் ஏப்ரல் மாதத்தில் வந்திருக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட விடுமுறைகளை உருவாக்குகின்ற மசோதாக்கள் வருஷ ஆரம்பத்திலோ அல்லது வருஷக் கடைசியிலோதான் கொண்டுவரப்படுவது வழக்கம். டிசம்பர் மாதத்திலோ அல்லது ஜனவரி மாதத்திலோ இருக்கும். அதற்கு காரணம், தொழிற் துறையைப் பொறுத்த வரையில், முதலாளிகளைப் பொறுத்த வரையில் அல்லது தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டிற்கான விடுமுறைகளை வருஷ ஆரம்பத்திலேயோ அல்லது முந்தைய வருஷக் கடைசியிலேயா முடிவு எடுக்கப்படுகிறது. வருகின்ற ஆண்டிற்கு எத்தனை நாட்கள் விடுமுறை நாட்கள் என்று உருவாக்கப்படுகின்றன. ஆனால் இன்றையதினம் ஏப்ரல் மாதம் துவங்கி ஒரு வாரம் ஆகி விட்டது. இந்த நேரத்திலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வருகின்ற நிலைமை ஏற்படுமானால், அதனால் பல வித சங்கடங்கள் ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். எட்டு நாட்கள் தேசிய விடுமுறை நாட்கள் என்று அறிவிக்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதற்கு அதிகமான தேசிய விடுமுறை நாட்கள் அறிவிக்கின்ற தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆனால் எட்டு நாட்கள் அறிவிக்கின்ற தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் சில தொழிற்சாலைகள் இன்றைய தினம் அந்த எட்டு நாட்களில் ஒரு நாளாக இந்த மே தினத்தையும் வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த எட்டு நாட்களிலே ஒரு நாளாக மே தினத்தை வைத்துக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் கூடுதலாக ஒரு நாள் இந்தச் சட்டப்படி, 9 நாட்களாகிற நிலைமையில், கூடுதலாக ஒரு நாள் விடுமுறை கொண்டாடக் கூடிய சங்கடங்கள் ஏற்படுகின்றன.

அப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுவது மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கும் அந்தத் தொழிலை நடத்துபவர்களுக்கும் இது பற்றிய சுமுகமான பேச்சு வார்த்தை ஏற்படவில்லை என்றால் அதன் விளைவாக அந்த தொழில்துறையில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும், தொழிலாளர்களுக்கும் மானேஜ்மெண்டிற்கும் வேண்டப்படாத உறவுகளும் ஏற்பட வேண்டிய நிலைமை ஏற்படும். இந்த நிலைமையை நான் ஏதோ கற்பனையாகச் சொல்லுகிறேன், ஒன்றை எதிர்பார்த்துச் சொல்லுகிறேன் என்பதல்ல. சென்ற ஆண்டு இதை நாம் அனுபவித்தோம்.



நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் மறைந்த நேரத்தில் அதற்காக அரசாங்க விடுமுறை விடப்பட்டது. ஆனால் அந்தவிடுமுறையைப் பொறுத்த வரையில் அனுமதிக்கப்பட்ட விடுமுறையா அல்லவா என்பது பற்றிப் பல கம்பெனிகளில், பல தொழிற்சாலைகளில் தொழிலாளருக்கும் தொழில் நடத்துகிற தொழில் அதிபர்களுக்கும் சுமுகமான உறவு வர முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மாத்திரமல்ல, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். பல தொழிற்சாலைகளில் 8 நாட்களுக்கு அதிகமாக விடுமுறை விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 10 நாட்கள், 12 நாட்கள், 14 நாட்கள்கூட வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் 8 நாட்களுக்கு அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிற தொழிற்சாலைகளில் மே தினத்தை அவர்கள் உள்ளடக்கி அந்த விடுமுறை தினங்களை விடவில்லை என்ற நிலைமை இருக்குமானால் ஒருநாள் இன்னும் அதிகப்படுத்துவதா, அல்லது அந்த 10 நாள், 12 நாள், 14 நாட்கள் அல்லது 8 நாட்களில் ஒரு நாளாக இது அடங்கி விடுகிறதா என்பது இந்த மசோதாவின் மூலம் தெளிவாக்கப்படவில்லை. அதை தெளிவுபடுத்தாது இன்றையதினம் இந்த ஆண்டிலிருந்தே இந்த மசோதா அமுலுக்கு வருகின்ற நிலைமை ஏற்பட்டால் முன்பு சுமுகமாக இருக்கின்ற தொழில் உறவுகள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-ம் தேதி தேசிய விடுமுறையாக அனுமதிக்கப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும் என்று சட்டம் வந்தபோது அந்த ஆண்டிலே அந்த மசோதா நிறைவேற்றப்பட்டதே தவிர அந்த நடைமுறை ஆண்டிலேயே அந்த சட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று கூறாமல், அதற்கு அடுத்த ஆண்டிலே அந்த சட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று கோரி அந்த சட்டம் அன்று கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டபோது. தொழில் அதிபர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டது, அக்டோபர் 2-ம் தேதியை விடுமுறையாக அனுமதிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதைப் போலவே இந்த அரசு அப்படிப்பட்ட கோரிக்கையை வைத்து, இந்த ஆண்டிலே மே தினத்தை விடுமுறையாக்க கொண்டாட வேண்டுமென்று கோரிக்கை வைத்து, அடுத்த ஆண்டிலிருந்து சட்டப்படியாக அதற்கென விடுமுறை விடப்பட வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமேயானால் தொழில் உறவுகள் நல்ல நிலைமையில் இருக்கும்.

அதோடு மட்டுமல்ல, இந்த மசோதாவின் மூலம் ஏதாவது ஒரு சிறு சங்கடம் ஏற்படுகின்ற நிலைமை இருக்குமென்றாலும்கூட அந்த நிலைமை சுமுகமாக தீர்க்கப்படும் என்ற நிலைமையைச் சொல்லி, இந்த மசோதாவை வரவேற்று, இந்த மசோதா செயல் அளவிலே அடுத்த ஆண்டிலிருந்து அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லி, இந்த ஆண்டு அரசாங்கம் வேண்டுகோளாக விடுத்து தொழில் அதிபர்களும், தொழிற்சாலைகளும் அதை ஏற்றுக்கொள்ளுகிற அளவில் அமைத்து நல்ல தொழிலாளர்-மானேஜ்மெண்டு உறவையும் தொழில் நிலைமையையும் பாதுகாத்து அந்த அளவிலே இதனை நிறைவேற்ற என்னுடைய ஆதரவைக் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் இந்த உரையை முடிக்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவரவர்களே, தொழிலாளர்கள் மே தினத்தை விடுமுறையாக்க வேண்டுமென்று இந்த நாட்டில் தொழிலாளர்கள் ஏற்பட்டதிலிருந்து, தொழிற்சங்க இயக்கம் ஏற்பட்டதிலிருந்து கோரி வருகிறார்கள். ஆனால் காங்கிரஸ் அரசு கடந்த 22 ஆண்டுகளாக இருந்த பிறகு கூட, அந்தக் காலத்தில் அன்னிய ஆட்சி இருக்கும்போது இப்படிப் பட்ட விடுமுறைகள் எல்லாம் எப்படி மறுக்கப்பட்டு வந்ததோ அதே

மாதிரி இன்று வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை அன்றே கொண்டு வந்து மே தினத்திற்கு விடுமுறை அளித்து இருக்கலாம். இருந்தாலும் முதலில் அவர்கள் 7 நாட்கள் கொண்டு வந்தார்கள். ஆகஸ்ட் 15, ஜனவரி 26, இரண்டு தேசிய விடுமுறைகள், ஏற்கனவே இருந்த 5 பண்டிகை நாட்கள், இவற்றைச் சேர்த்து 7 நாட்கள் கொண்டு வந்தார்கள். பிறகு காந்தியார் இறந்த பிறகு காந்தி ஜயந்தி என்ற பெயரால் ஒரு நாள் சேர்த்தார்கள். இப்படி எல்லாம் படிப்படியாக சேர்க்கும்போதெல்லாம் இதைச் சேர்க்காமல் தொழிலாளர்கள் உரிமையை மறுத்துவிட்டு, இன்றைய தினம் நண்பர் திரு. ராமமூர்த்தி என்ன கூறுகிறார்கள் என்றால், இவ்வளவு நாட்களாக் இது இருந்தது, அப்போதே சேர்த்திருக்க வேண்டும், காந்தியார் இறந்ததற்கு முன்னதாகவே, அல்லது ஆகஸ்ட் 15 வருவதற்கு முன்னதாகவே, அல்லது ஜனவரி 26 வருவதற்கு முன்னதாகவே, நீண்ட நாட்களாக இந்தத் தொழிலாளர்கள் கோரிக்கை இருந்தது. அப்படி இருந்தும்கூட அந்த கோரிக்கை இந்த அரசினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்கிறார்.

இந்த அரசு கடந்த 3 ஆண்டுகளாக முதலாளிகளுக்குக் கோரிக்கைகளையும், வேண்டுகோள்களையும் விட்டுக்கொண்டுதான் வருகிறது. ஏற்கனவே இருக்கக் கூடிய விடுமுறைகள் மிகவும் குறைவு. மற்ற இடங்களில் இருக்கக் கூடிய விடுமுறைகளைவிட மிகவும் குறைவு. இப்படிப்பட்ட விடுமுறைகள் இருந்தாலும் நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி அவற்றை பல இடங்களில் நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், மே தினம் அரசாங்கச் சட்டப் பிரகாரம் விடுமுறையாக விடப்படக்கூடிய நாளாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் இந்த ஆண்டே அமுலாக்கப்பட வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே இரண்டு உறுப்பினர்கள் இரண்டு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டு திருத்தத் தீர்மானங்களும் ஒருவருடைய வாதத்திற்கு இன்னொருவருடைய வாதம் என்கின்ற முறையில் வந்திருப்பதால், நான் அதிகமாக விளக்கம் சொல்லத் தேவை இல்லை. நமது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் **"It is delayed"** என்று தொடங்கினார். ஆனால் அதற்கு நேர் எதிராக........

**THIRU K. VINAYAKAM : No. Please refer to my speech. I have stated that it is too late in the day to talk about the merits of declaring May Day as a holiday.**

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** ஆக மே தினத்தினுடைய மெரிட்டைப் பற்றிப் பேசுவது ரொம்பக் காலதாமதம் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தை இப்போது நிறைவேற்றிவைக்கலாம், இதை அமல்படுத்துவதை அடுத்த ஆண்டு வரை தள்ளிவைக்கலாம் என்று அவருடைய கட்சியைச் சேர்ந்தவரே சொன்னார். இதிலேதான் மிகப் பெரிய குழப்பம் இருக்கிறது.

கடந்த மூன்றாண்டு காலமாக, அறிஞர் அண்ணா அவர்களும், நம்முடைய அமைச்சரவையைச் சேர்ந்த தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களும் வேண்டுகோள் மூலம்தான் தமிழ்நாட்டிலேயிருக்கும் தொழிலதிபர்கள் மே தின விடுமுறை வழங்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலான தொழிலதிபர்கள் அதை ஏற்றுக்கொண்டு செய்தார்கள். ஆனால் சில இடங்களில் சிக்கல்கள் வந்தன. சட்டம் இல்லாத நேரத்தில் நாம் ஏன் விட வேண்டுமென்று ஓரிரு இடங்களில் தகராறுகள் நடந்தது. பின்னர் அந்தத் தகராறு தீர்க்கப்பட்டது.



திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கேதான் எங்கள் கையைப்பலப்படுத்துகிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வராவிட்டால் அதன் குழப்பம் அதிகமாகிறது. நாங்கள் அதிகமாக ரெஃபர் செய்திருக்கும் மே தினம் பற்றிய வேண்டுகோள்பற்றிப் பிரச்னைகள் இருக்கின்றன. அம்மாதிரி இல்லாமல், தெளிவாகச் சொல்லிவிட வேண்டுமென்றுதான் இந்த ஆண்டு விடுமுறை விடப்பட வேண்டுமென்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

இதை ஆண்டு முதலிலேயே அறிவித்திருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். மே தினம் 1-ஆம் தேதி விடப்போவது இனிமேல் வரப்போகிற நாள். இதை ஜூன் மாதத்திலே கொண்டு வரவில்லை. நல்ல வேளையாக ஏப்ரல் மாதத்திலேயே கொண்டு வருகிறோம். கம்பல்சரி பெய்ட் ஹாலிடே என்று, இனிமேல்தான் மே தினம் வரப்போகிறது, எப்படியாவது இணைத்துக்கொள்ள வேண்டுமென்று சட்டம் கொண்டு வருகிறோம். இனிமேல்தான் குழப்பங்கள் தீர்க்கப்படும். சுமுகமான உறவு இருக்க வேண்டுமென்றால் இதை விரைவில் நிறைவேற்றியாக வேண்டும். இந்த ஆண்டில் இப்பொழுதுதான் சட்டமன்றம் நடைபெறுகிறது. இன்றைக்கு நடக்கின்ற திருத்தச் சட்டங்களில் தொழிலாளர் சட்டம் முதலாவதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. "எர்லியஸ்ட் பாஸிபிள்", முதலாவதாக நான்தான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன், முதலில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைவிட விரைவில் எப்படிச் செய்ய முடியும் ? எனவே, திருத்தங்களை வற்புறுத்த வேண்டாமென்றும், மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**THIRU K. RAMAMOORTHY : Sir, in the earnest hope that the Hon. Minister will bear in mind the argument that I have placed in support of my amendment, I do not press my amendment.**

*திரு. க. இராமமூர்த்தி : திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோரது திருத்தங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.*

*பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

*முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 6/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.*

### (ஆ) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 7/1970.)

**THE HON. THIRU. P. U. SHANMUGHAM : Mr. Speaker, Sir, I beg to move—**

**'That the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill,* 1970 (L.A. Bill No. 7 of 1970) be taken into consideration.'**

**Under Section 3 of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939, every importer and every wholesale dealer should pay on all the sales of motor spirit effected by him, a tax at the rate of 10 paise per**

* Published in the *Fort St. George Gazette*, Extraordinary, dated 23rd March 1970.

litre in the case of petrol, diesel oil or aviation fuel and at the rate of 2 paise per litre in the case of any motor spirit other than petrol, aviation fuel or diesel oil.

As announced by the Hon. Minister for Finance in this House on the 26th February 1970, while presenting the Budget for 1970–71, with a view to augment the resources of the State, the Government have decided to increase the rates of tax on petrol and aviation fuel from 10 paise per litre to 12 paise per litre and in the case of motor spirit other than petrol, aviation fuel or diesel oil from 2 paise per litre to 4 paise per litre. The rate of tax on diesel oil, will however, remain unaltered at 10 paise per litre. The increase in rates of tax has been given effect to from the 26th February 1970.

Sir, I commend the motion for the acceptance of the House.

Dr. H. V. HANDE: Sir, I want to make some minor observations. The Central Government have already increased the tax by about 10 paise per litre. But the State Government have announced it much earlier than the Central Government and that means that there is absolutely no co-ordination between the State and the Centre. It may be that there is a different political party in power here, and a different political party in power at the Centre. Whatever it is, it is really tragic that the Central Government and the State Government have not been able to co-ordinate even on this small issue.

Whatever it be, they could have consulted the State Government or our Hon. Chief Minister could have been told in advance that they were going to levy a tax on motor spirit. It could not amount to a leakage of a Budget proposal and they could have kept it a secret. But today, what is the position ? The proposal to levy a tax of 12 paise per litre is a fantastic one and its implications are very, very serious. If this tax is levied, the transport cost would go up.

It may be argued that the transport cost should not be increased. But it is a fundamental right that if a tax is levied, the concerned transport agency, operating a lorry or a bus or an ordinary tax could be forced to increase their transport fare. Otherwise they would be put to a loss. Also no Government can give a statutory directive that they should not increase the tax. So, either the State Government or the Central Government will have to reduce this tax of 12 paise per litre to at least 6 paise per litre or they will have to allow the transport operators to increase their fare which means that we are indirectly hitting the common man for whom it has become the fashion of the day to talk in season and out of season and inside the House and outside the House.

In this connection, I want to point out that the public view this taxation measure with great alarm and misgivings. Therefore, I want this Government to get in touch with the Centre immediately and persuade them not to levy their tax on a commodity on which we have earlier proposed to tax. Actually this taxation proposal was announced in our Finance Minister's Budget speech on 26th February 1970. The Central Government announced their proposal on the 28th February 1970, that is two days later. So, we have got a right to tell the Central Government that they should give up their proposal and I request the Hon. Minister for Commercial Taxes and Food and the Hon. Chief Minister to consult the Central Minister and withdraw the obnoxious increase in the levy of tax on motor spirit proposed by the latter.



**திரு. நா. காசிராமன்:** தலைவரவர்களே, இப்பொழுது மோட்டார் ஸ்பிரிட்டின் மீதும், மற்ற சில பொருள்கள் மீதும் போடப்பட்டிருக்கும் சேல்ஸ் டாக்ஸை உயர்த்த மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல், கூடுதலாக இரண்டு பைசா சேல்ஸ் டாக்ஸ் நமது சர்க்காரும், 10 பைசா ஒரு லிட்டருக்கு என்று மத்திய சர்க்காரும் போடுகிறார்கள். போட்டி போட்டுக்கொண்டு இதற்கு வரிபோடும் விவகாரமாக இருக்கிறது. இதை உயத்துவதன் நோக்கம், நமது சர்க்காருக்கு வேண்டிய வருமானத்தை இதன்மூலம் உயத்துவதாகச் சொல்லுகிறார்கள். இந்த அரசு ஒரு ஆண்டுக்கு, கிட்டத்தட்ட மூன்றே முக்கால் கோடி, நான்கு கோடி ரூபாய் வரையில் சேல்ஸ் டாக்ஸாக வரக்கூடிய வருமானத்தை இழந்துகொண்டிருக்கிறது என்று பாராமல் இப்பொழுது வரி போடப்படுகிறது என்பதை அழுத்தம் திருத்தமாகச சொல்ல ஆசைப்படுகிறேன்.

லாரிகளும், பஸ்களும் கெரஸின் ஆயிலை உபயோகிக்கக்கூடாது, உபயோகித்தால் குற்றம் என்று மத்திய சர்க்கார் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை இன்னும் அமல்படுத்தவில்லை இந்தச் சர்க்கார். லாரிகளும், பஸ்களும் 'உபயோகப்படுத்தக்கூடாது என்று போட்டார்களே தவிர, அவர்களுக்கு விற்கக்கூடாது என்று கட்டுப்பாடில்லை. இதன்காரணமாக, தமிழகத்தில் உள்ள லாரிகளில் 10,000-க்கும் மேலாக கெரஸின் ஆயிலை உபயோகப்படுத்துகிறார்கள். 1,000 லிட்டர் டீசல் ஆயில் விற்றால் சர்க்காருக்கு 100 ரூபாய் விற்பனை வரியாக வரும். ஆயிரம் லிட்டர் கெரஸின் விற்றால் சர்க்காருக்கு 28½ ரூபாய்தான் விற்பனை வரியாக வருகிறது. இதனால் ஒரு ஆயிரம் லிட்டர் கெரஸின் ஆயில் விற்கப்பட்டால், ஒரு கிலோ லிட்டருக்கு 71 ரூபாய் அளவிற்குச் சர்க்காருக்கு வரவேண்டிய சேல்ஸ் டாக்ஸ் போய்க்கொண்டிருக்கிறது. அதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால், 1 நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் சேல்ஸ் டாக்ஸ் வர வேண்டியது போய்க்கொண்டிருக்கிறது. இந்த வகையில் நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்பு இந்தத் துறையில் அமைச்சராகவிருந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் இருந்தபொழுது நான் காலிங் அட்டென்ஷன் நோட்டீசின் மூலம் சொன்னேன். நாட்டிலே எங்கு பார்த்தாலும், சென்னையிலும், திருச்சியிலும் அவர்கள் மைலுக்கு 40 பேரல், 50 பேரல் என்று வைத்து கெரசின் ஆயிலை விற்கிறார்கள். லாரிகளில் போட்டுகொண்டால் அவர்கள் எஞ்சின்தானே கெட்டுவிடும் என்று சொல்லலாம். கெரஸின் ஆயிலால், ஒவ்வொரு லிட்டருக்கும் 25 பைசா மிச்சமிருப்பதால்தான் இவ்வாறு டீசல் ஆயிலை உபயோகிக்காமல் கெரசின் ஆயிலை உபயோகப் படுத்துகிறார்கள்.

நமக்கு இருக்கக்கூடிய சட்டத்தை, நமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை நல்ல முறையில், ஒழுங்கான முறையில், சரியான முறையில் பயன் படுத்தத் தவறியதன் காரணமாகத்தான், முயற்சி எடுத்துக்கொள்ளத் தவறியதன் காரணமாகத்தான், நமக்கு நான்கு கோடி ரூபாய் வருமானம் குறைகிறது. இதை ஈடு செய்கின்ற வகையில்தான் பல்வேறு வகைகளிலும் பொதுமக்களுக்கு பளு ஏறக்கூடிய அளவில் பெட்ரோலின் மீது வரி, மற்றபடி பொது விற்பனை வரி இவைகளை உயர்த்தி அவர்களுக்குக் கஷ்டம் உண்டாக்குகிறோம்.

இப்படி அதிகமாக வரி போடுவதனால், சென்னையில் ஓடக்கூடிய, தமிழ் நாட்டில் ஓடக்கூடிய டாக்சிகள் தங்களது கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற முறையீடு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி

ஒரு கோரிக்கை வருமானால், அதனால் அவைகளை உபயோகப்படுத்தும் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடும். இன்னும் பலவித இனங்களில் விற்பனை வரி ஏற்றத்தால் உண்டாகிற விலை ஏற்றத்தினால் நாம் எல்லோருமே பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது.

பெட்ரோல் மீது விற்பனை வரி உயர்வைக் கைவிடவேண்டும் என்று அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லி, கெரசின் விற்பனை மூலம் டீசல் ஆயில் விற்கப்படுவது குறைவது மூலம், அரசுக்கு ஏற்படுகிற நஷ்டத்தை ஈடு செய்வதற்கு வழிவகை காணவேண்டும், அந்த வருமானத்தை நாம் அடைவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற யோசனையையும் அரசுக்கு எடுத்துச்சொல்லி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இரண்டு கருத்துக்கள் எடுத்துத் தெரிவிக்கப்பட்டன. ஒன்று, மத்திய சர்க்கார் 10 பைசா போட்டிருக்கிறார்கள். நாம் இரண்டு பைசா கூடுதலாக் 26-ம் தேதி போட்டோம். 26-ம் தேதி நாம் போட்டதற்குப் பிறகு தான் மத்திய அரசு போட்டது. மத்திய அரசாங்கம் போடுவதைப்பற்றி நாம் கேள்வி கேட்பதற்கு எந்தவிதமான சட்டத்திலும் இடமில்லை. நாம் போடுகிறதைப்பற்றியும் கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. நாம் அவர்கள் போடுவார்கள் என்று எதிர்பார்க்காமல்தான் போட்டோம். நமது மாநிலத்திலுள்ள நிதிநிலைமையைச் சரிக்கட்டுவதற்காகத்தான் இதைச் செய்திருக்கிறோம். மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மத்திய அரசோடு கலந்து பேசி அவர்களை எப்படியாவது இணங்கச் செய்ய வேண்டும் இந்த வரியைக் குறைப்பதற்கு என்று சொன்னார்கள். அதை வேண்டுமானால் முயற்சிக்கலாமே தவிர, இந்த மாநில அரசு போடுவதாக எடுத்துக் கொண்டிருக்கிற வரி விகிதத்தைக் குறைப்பதற்கு இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் அடிக்கடி வற்புறுத்திக் கூறிக்கொண்டிருப்பது கெரசின் விற்பனையின் மூலம், டீசல் விற்பனை குறைகிறது. லாரி முதலியவைகள் கெரசினில் ஓட்டப்படுகிற காரணத்தினால், டீசல் ஆயில் விற்பனை குறைந்து, அரசுக்கு வரவேண்டிய விற்பனை வரி வருமானம் குறைகிறது. வரக்கூடிய வருமானம் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதனால் ரூ. 3, 4 கோடி நஷ்டம் ஏற்படுகிறது அரசுக்கு என்று சொன்னார்கள். அவர்கள் சொல்கிற கணக்கு சரியாக இருக்கலாம். நான் அதை மறுக்கவில்லை.

தமிழ்நாட்டில் கெரசின் விற்பதற்கு, ரிடைல் விற்பனைக்கு அரசாங்கம் லைசென்ஸ் வழங்கும், லைசென்ஸ் இல்லாத இடங்களில் கெரசின் விற்க முடியாது. அப்படி லைசென்ஸ் இல்லாமல் கெரசின் விற்றால், அது பறிமுதல் செய்யப்படும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கான உத்தரவு போயிருக்கிறது. இனிமேல் இப்படி கெரசின் விற்பது தவிர்க்கப்படும். நாம் எங்கு லைசென்ஸ் கொடுக்கிறோமோ அந்த இடங்களில்தான் விற்கப்படும். அந்த இடமில்லாமல், சாலை ஓரங்களிலும், நெடுஞ்சாலைகளிலும் விற்கப்படுவதை போகும்பொழுது நாம் பார்க்கிறோம். அவைகளையெல்லாம் எடுத்துவிடவேண்டும், இல்லாவிட்டால் பறிமுதல் செய்ய வேண்டும். அப்படி வைத்திருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு போடுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தின் நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால் தான் வரி போடுவதற்கு அவசியம் ஏற்படுகிறது. மத்திய அரசாங்கமும் வரி போட்டது நமது துர்ப்பாக்கியமாக இருந்தாலும், நமது நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால் தான், இதைக் குறைப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பிரிவு 2.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU N. KASIRAMAN : Sir, I move the following amendment :—

"(i) In line 7 of the clause for the word 'twelve' substitute the word 'eleven',

(ii) In line 9 of the clause for the word 'ten' substitute the word 'eight',

(iii) In line 11 of the clause for the word 'four' substitute the word 'three'."

THIRU K. RAMAMOORTHI : Sir, I second the amendment.

Sir, I move the following amendment:—

"In clause 2, in line 7 of the clause, the words 'petrol or' occurring after the words 'in the case of', be deleted."

THIRU N. KASIRAMAN : Sir, I second the amendment.

தலைவர் அவர்களே, சற்று முன்பு நான் சொன்னேன். அரசாங்கத்திற்கு எவ்வளவு கோடிக்கணக்கில் நஷ்டம் வருகிறது என்ற குறிப்பை எடுத்துச் சொன்னேன். அந்த நஷ்டத்தை தவிர்த்தால், விற்பனைவரி உயர்வை தடுக்கலாம், அதனால் பொது மக்களுக்கு நன்மை ஏற்படலாம் என்று சொன்னேன். நான் அதன் காரணமாக விற்பனைவரியைக் குறைக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். விற்பனை வரியை உயர்த்தினால் பெட்ரோல் விலை உயர்கிறது.

இதற்கு முன்னால் சுகவாசிகள் தான் கார்களை உபயோகப்படுத்தினார்கள் என்ற ஒரு நிலைமை இருந்தது. இப்பொழுது நிலைமை அப்படியில்லை. அவசியமாக எல்லோரும் உபயோகப்படுத்துகிறார்கள். அரசாங்க அலுவலர்கள் கார்களை உபயோகப்படுத்துகிறார்கள். எப்பொழுதும் கொடுக்கப்படுகிற பயணப்படி தான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 22 வருஷங்களுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட பயணப் படி கொடுக்கப் பட்டுவருகிறது என்று சில நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு 6 அணா ஒரு மைலுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. பெட்ரோல் 14 அணா விற்கப்பட்ட காலத்திலிருந்து. இன்றைக்கு பெட்ரோல்

ரூ. 5-க்கு விற்கப்படுகிறபொழுது கூட அதே படி தான் கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி டெப்யூடி சூப்பிரண்டெண்ட் ஆஃப் போலீஸ் 36 பைசா ஒரு கிலோமீட்டருக்கு பயணப்படி வாங்குகிறார், ஒரு காலன் பெட்ரோல் 14 அணா விற்கப்பட்ட காலத்திலிருந்து. இப்பொழுது ரூ. 5 விற்கப்படும் பொழுதும் அதே படி தான் வாங்குகிறார். இப்பொழுது விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறோம் என்பதற்காக இந்த பயணப்படியை நாம் கூடுதலாக்கிக் கொடுக்கப்போவதில்லை. இப்படி பல இலாகாக்களில் வேலை செய்கின்ற அதிகாரிகள் கார்களை உபயோகப்படுத்தித் தான் தீர வேண்டும், வேறு வழியில்லை என்ற நிலையில் இருக்கிற அதிகாரிகளுக்கு பயணச் செலவு அதிகமாக ஆகும். ஆகவே, அதன் மூலம் விருவிருப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும், அவர்களுக்கு இருக்கிற உற்சாகத்தை குறைக்கக்கூடிய வழி ஏற்படும். இதை மனதில் கொண்டு தான் கொடுத்திருக்கிற திருத்தத்தை ஏற்றுக்கொண்டு, விற்பனை வரியைக் குறைத்துப் போடவேண்டுமென்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில், அதற்கான வாதங்கள் இதற்கு முன்பு பேசிய என் நண்பர் திரு. காசிராமன் அவர்களால் சொல்லப்பட்டுவிட்டன. நான் ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய திருத்தத்தை வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்த பெட்ரோலை பொறுத்தவரையில், கடந்த காலத்தில் பணக்காரர்கள் அல்லது அதிக பணம் வைத்திருப்பவர்கள் தான் கார்களை வைத்திருந்தார்கள். அவர்களுடைய கௌரவத்திற்காக, தகுதிக்காக தேவை என்ற அளவில் கார்கள் வைத்திருந்தார்கள். ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. பெரும்பாலும் கார் வைத்திருப்பவர்களைப் பார்த்தாலே சொல்லலாம், இவர்கள் கடன்காரர்கள் என்று, அந்த அளவுக்கு இன்றையதினம் கார்கள் கடனில் ஓடிக்கொண்டிருக்கின்றன. கார்கள் இன்றையதினம் மிகத் தேவையானது என்ற ஒரு நிலைமைக்கு வந்திருக்கிற காரணத்தினால், கார்களை வைத்துக்கொண்டு தங்களுடைய வேலைகளை செய்துகொள்ளவேண்டும், தங்கள் பணிகளை முடித்துக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

பெருமதிப்பிற்குரிய காலஞ்சென்ற முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் அதைப்பற்றிக் கூட சட்ட மன்றத்தில் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் சாதாரணமானவர்கள் கூட கார் வைத்துக்கொண்டு, அவர்கள் செய்யவேண்டிய பணியை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒருமுறை அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் பரிசு அளிக்கப்படுவது பற்றிய வினாவிற்கு பதில் அளிக்கும்பொழுது கூறினார். தங்களால் தாங்க முடியாதுபோனால் கூட, கார் வைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள் பெரும்பாலும் சமுதாயத்தில் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். தங்களுடைய தகுதிக்காக ஒரு காருக்கு மேல் அதிகமாக வைத்துக்கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. கார் உபயோகப்படுத்துகிறவர்கள் பெரும்பாலும் "பர்பஸ்புல்" என்ற காரணத்திற்காகத் தான் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

பெட்ரோலைப் பொறுத்தவரையில், இனிமேல் பணக்காரர்கள் உபயோகப்படுத்துகிற பொருளாகவோ, அல்லது தகுதிக்கு அதிகமாக பணம் வைத்திருப்பவர்கள் பொழுது போக்காக உபயோகப்படுத்துகிற பொருளாகவோ இல்லை. மிகவும் சாமான்யமானவர்கள், பெரும்பாலானவர்கள் உபயோகப்படுத்துகிற பொருள் பெட்ரோல். அதன் மீது வரியை



உயர்த்துகின்ற நிலைமை மாறவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகத் தான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தின் அடிப்படையில் என்னுடைய கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமாக பெட்ரோலுக்கு மட்டும் இந்த வரி உயர்விலிருந்து விலக்குத் தருவதன் மூலம் மிகப் பெரிய அளவில் அரசுக்கு நஷ்டம் வந்துவிடாது. அப்படி ஒருவேளை நஷ்டம் வருகிற நிலைமை இருந்தாலும், பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதாலும், பணக்காரர்கள் அதனால் பாதிக்கப்படுபவர்கள் மிகவும் குறைவானவர்கள், சமுதாயத்தில் நடுத்தரத்தில் இருப்பவர்கள் தான் அதிகமான அளவு பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்திற்காக இந்த வரி விதிப்பிலிருந்து பெட்ரோலுக்கு விதிவிலக்கு அளிப்பார்கள் என்று நம்பி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். பிற்பகல் 12-30.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இருவருடைய திருத்தங்களையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். பெட்ரோலை கார் வைத்திருப்பவர்கள் உபயோகிக்கிறார்கள். திரு. ராமமூர்த்தி வாங்க முடியாதவர்கள் கூட அவசியம் காரணமாக கார் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். என்னால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. கடன் வாங்கி கார் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் யாருக்கு இருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்களுடைய தொகுதியில் யாராவது அப்படியிருந்தால், உடனே காரைக் கொடுத்துவிடச் சொல்லவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் கூட, திரு. ராமமூர்த்தியே கூட வைத்திருந்தாலும், நண்பர் என்ற முறையில் சொல்லுகிறேன், விட்டுவிடவேண்டும் என்று. கடன் வாங்கி வாங்க வேண்டிய அவசியம் என்ன? தமிழ் நாட்டில் ஒரு பழமொழி உண்டு, "வட்டிக்கு வாங்கி அட்டிகை வாங்கினானாம், அட்டிகையை விற்று வட்டி கொடுத்தானாம்" என்று (குறுக்கீடு) கூட்டுறவு சங்கங்களைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள், அது வேறு. ஆகவே வரியை குறைப்பதற்கில்லை, திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தெரிவிக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. நா. காசிராமனின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே—

"1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 7/70) நிறைவேற்றப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 8/70)

THE HON. THIRU P. U. SHANMUGHAM : I beg to move that the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill * 1970 (L.A. Bill No. 8 of 1970) be taken into consideration.

In order to augment the resources of the State, the Government decided to enhance the rates of tax under the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) in respect of luxury articles (items 1 to 14) from 12 percent to 15 per cent, Cement (item 34) from 6 per cent to 8 per cent, precious stones, etc. (item 30), foamed rubbers sheets, etc. (item 40), electrical goods (item 41), scents and perfumes (item 51) and tractors and bull dozers, etc. (item 55) from 7 per cent to 9 per cent. The above decisions were given effect to by a notification issued under sub-section (1) of section 59 of the said Act which took effect from 26th February 1970,the date of publication of the notification in the *Fort St. George Gazette*. These measures would yield an additional revenue of the order of Rs. 1·3 crores in a year.

Consequent on the decision of the Madras High Court in *City Oil Mill v. Joint Commercial Tax Officer, Madras and another* (25. S.T.C. 33) holding copra as not an oil seed, it was decided to tax copra on a par with coconut and subject the same to a single-point tax of 5 per cent at the point of first purchase in the State. This decision has been given effect to by a notification issued under sub-section (1) of section 59 of the said Act amending item 69 of the First Schedule to the Act. It is proposed to give retrospective effect to the amendment from 4th November 1969, the date from which coconut was subjected to the single point purchase tax of 5 per cent.

Under sub-section (2) of section 59 of the said Act, a Bill to replace the notifications referred to above has to be introduced in the Legislature during its present session. Hence the Bill.

I may state in this connection that care has been taken to see that no additional burdens are placed on the common man and that these levies fall on those who can well afford to pay. In deference to the representations made by the trade and having regard to the rates prevailing in the neighbouring States, the Government has already reduced the rate of tax payable by any dealer under the Act on the sales of automobile tyres, batteries (excluding dry cells) and automobile spare parts from 15 per cent to 13 per cent with effect on and from the 1st April 1970. Coconuts have also been exempted from the tax payable under the Act from 18th March 1970.

Sir , I commend the motion for the acceptance of the House.

DR. H. V. HANDE : Sir, I move—

"That the Tamil Nadu General Sales Tax (Second Amendment Bill, 1970 (L.A. Bill No. 8 of 1970) be referred to a Select Committee consisting of......Members of the Assembly." (Names of Members to be given later.)

THIRU K. CHEEMAICHAMY : Sir, I second the amendment.

*Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th March 1970.



THIRU K. RAMAMOORTHI : Sir, I move—

"That the Tamil Nadu General Sales Tax (Second) Amendment Bill, 1970 (L.A. Bill No. 8 of 1970) be referred to a Select Committee consisting of........Members of the Assembly". (Names of Members to be given later.)

THIRU N. KASIRAMAN : Sir, I second the amendment.

DR. H. V. HANDE : The fact that on behalf of our party we have given an amendment of a general nature, of a dilatory nature, shows that we are very much alarmed about the series of items brought in under the present sales tax amendment Bill. Even when it was announced by the Hon. Minister, we expressed our anxiety. That anxiety still persists. In spite of some concessions shown by Government complying with our requests, we express our anxiety. I shall just pass over some items subject to tax :—

Cinemotographic equipment including cameras, projectors, sound recording and reproducing equipment, lenses, films, and parts and accessories required for use therewith.

No. 7 is :—

Photographic and other cameras and enlargers,lenses, films, plates, paper, cloth and other parts and accessories required for use therewith. Recently a number of people connected with photographic industry approached me. They even organised a meeting and I addressed them, and tried to find out their problems. A large number of these people are not able to get on with the trade. A number of them want to close their establishments. They have been hard hit by doses of taxation both Central as well as State taxation. Many of them are running into losses and some have closed. They have submitted a memorandum to the Hon. Minister for Commercial Taxes. I hope and trust that in view of the anxieties expressed by those people, the Hon. Minister will offer some sort of reduction in taxation and announce the same in the House.

With regard to bulbs, the position is more frightening, because the cost of average utility bulb, 40 W and 60 W bulbs mostly used in our Houses is Rs. 16·75 per dozen, plus additional excise duty of 11 per cent viz. Rs. 1.73 totalling Rs. 17.48. The C. S. T. is 3 per cent and M.G.S.T. is 7 per cent. The total thus comes to Rs. 19.26. We are going to electrify rural areas. The rural electrification programme is there involving lakhs of rupees. How much is the Hon. Minister going to get by this taxation ? Hardly Rs. 1.3 crores. My demand would be that the Hon. Minister might have a proper reassessment.

There is one more item and that is about "dressed skins".

So far as items which earn foreign exchange are concerned, they have to be taxed at only one point. Therefore, representations had been made by the Hides and Skins Merchants at Periamet to the Hon. Minister a few months ago that only dressed skins should be taxed and raw skins should not be taxed. I am sure that that representation would be at the disposal of the Hon. Minister. In this context, I want to suggest that he should call for the papers relating to that representation from the concerned head of the department and see what could be done in the

matter so that the large number of traders who are dealing with these foreign exchange—earning items are not ruined. This anxiety was also expressed by Hon. Member representing Vellore when the Sales Taxes Demand was under discussion in this House recently.

Finally, on behalf of the Swatantra Party, I want to make one important observation. This sort of taxation policy also should be completely done away with. Especially sales tax is the only item with which the State Government can tinker or meddle with. There is a feeling among the public that whenever the Treasury Benches tell,the concerned departmental officials that they want an extra Rs. 10 crores, they would immediately think of the sales tax which is the *Khama Denu*. They depend on this for achieving their objective. I feel that the more you tax the total tax return would become less. That is my philosophy or school of thought or economic theory. I have already mentioned it on a former occasion and also brought it to the notice of the Hon. Minister. We should not kill the goose that lays the golden egg.

Of course it is true that tax should be levied to get money for running the administration. At the same time we should see whether by levying more tax on a particular item, we would get more revenue. Now by increasing the tax from 7 per cent to 9 per cent the total tax return would be reduced. So, on behalf of the Swatantra Party we suggest that a Commission of Experts should be appointed to go into the matter and see that a proper optimum taxation policy is evolved. By using the expression 'optimum', I mean that the maximum amount of tax that the public can withstand, should be levied.

In this connection I also suggest that the representatives of the bulb manufacturers and representatives of traders who are dealing with bulbs should be invited for discussion and a method with regard to the levy of taxation should be evolved in consultation with them.

Therefore, I have suggested that if a Commission of Experts is appointed, they will be able to solve the problem. On the other hand if the matter is left to the officials, they will only give some empty figures which will not mean anything. They will only suggest more tax. If you tax more than the trade can bear, the whole trade will collapse and the return from the sales tax will also be reduced.

It is only to consider all these matters dispassionately we have moved an amendment requesting this House to refer this Bill to a Select Committee. The Select Committee will invite representatives of different trades for discussion and see how the trade is not affected adversely by the Bill.

In this connection I also want to point out that unless incentives are given to the trade, they will not prosper. For instance, take the case of Maharashtra.

(At this stage Mr. Deputy Speaker sounded the gong.)

Sir, this is a very important matter and I will conclude my speech in a minute. In Maharashtra there is buoyancy in trade. How is that they are able to achieve it. That is because they have given incentives to the trade. Here we are increasing the taxation to 9 per cent. We can increase it to even 25 per cent but what will happen? The whole trade will collapse.



The argument of the Hon. Minister would be that they are levying only the tax which the trade can withstand but we differ from his view and we feel that the tax that they levy is more than what the tradecan bear. That is why we want an Expert Committee or a SelectCommittee to investigate the whole matter and invite persons belongingto different trades for discussion and then come to a right conculsion.

Thank you, Sir.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தின் பேரில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய கருத்து என்னவென்றால், "லக்ஸரி குட்ஸ்" என்ற அயிட்டமே பல ஆண்டுகளுக்கு முன்னால் அது சுகவாழ்வுக்கான பொருளாக இருந்தது. மாறி வரும் சமுதாயத்திற்கேற்ப அந்தப் பொருள்கள் இன்றைக்கு அவசியமான பொருள்களாக மாறியிருக்கின்றன. எந்தெந்தப் பொருள்கள் சுகவாழ்வுக்கான பொருள்கள் என்று நினைத்தோமோ, அவையெல்லாம் மாறிவிட்ட சமுதாய அமைப்பிலே வாழ்க்கைக்குத் தேவையான, இன்றியமையாத பொருள்களாகிவிட்டிருக்கின்றன. புதிய வரிகள் போடப்படும்போது, ஏற்கெனவே இருக்கிற வரி விதிப்பின்மேல் ஒரு பர்செண்ட், இரண்டு பர்செண்ட் என்று ஆண்டுக்காண்டு போட்டு, வரிகளை உயர்த்திக் கொண்டே வருகிறோம். ஒட்டகத்தின்மீது சுமை ஏற்றுவதுபோல நாம் வரிப்பளுவை உயர்த்திக்கொண்டேயிருக்கிறோம். சில நேரங்களில், ஒட்டகத்தின்மீது ஏற்றியுள்ள பளுவில் ஒரு சிறு துரும்பை எடுப்பது போல, உயர்த்திய வரி விகிதத்தைச் சற்று குறைக்கிறோம். ஆனால் பொதுவாக வரிப்பளு உயர்ந்தே வருகிறது. இந்த மசோதாவின் மூலமாக புதிய சுகவாழ்வுக்கான சாதனங்கள் என்பவற்றிலே எவை எவை வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளாக இருக்கின்றனவோ, அவையெல்லாம் வருகின்றன.

இன்றைக்கு நாம் பல பிரசாரம் செய்கிறோம், பசுமைப் புரட்சி என்கிறோம், குடும்பக் கட்டுப்பாடு என்று பிரசாரம் என்கிறோம், நாம் செய்கின்ற பிரசாரங்களையெல்லாம் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் எப்படி அறிய முடிகிறது. இன்றையதினம் கிராமப்புறங்களில் எல்லாம் ரேடியோ மூலமாகத்தான் நாட்டு நடப்புகளைக் கவனிக்கிறார்கள். அரசாங்கம் கருத்தரங்கு போன்றவைகளை நடத்துகின்ற நேரத்தில் கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் ரேடியோ மூலமாகத்தான் அந்தச் செய்தியைக் கேட்டுப் பயன் பெறுகிறார்கள். விவசாயம், மற்றத் துறைகளையெல்லாம் வளப்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் கருதும் இந்த நேரத்தில் ரேடியோ இன்றையதினம் மக்களுடைய இன்றியமையாத சாதனமாக அமைந்துவிட்டது. அதைச் சுகவாழ்வு சாதனம் என்று கூற முடியாது. இப்பொழுது சாதாரண குடும்பத்திலேகூட ரேடியோ இருக்கிறது. பல இடங்களில் குருவிக்காரர்கள்கூட ரேடியோ வைத்திருக்கிறார்கள்.

அடுத்து, 13-வது அயிட்டத்தின்படி, 'அயர்ன் அண்ட் ஸ்டீல் ஸேஃப்ஸ் அல்மேரா' என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடன் வாங்காமல் வாழவேண்டுமென்று சொன்னாலும் கூட, மாறிவிட்ட சமுதாய அமைப்பில் வாழ்க்கை வசதிகளை எந்த அளவிற்கு அமைத்துக்கொள்ள முடியுமோ, அந்த அளவிற்கு அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. கடன் இல்லாமல் வாழ்வது என்பது முடியாத நிலைமை, அமைச்சர் வேண்டுமானால் வாதத்திற்காக மறுத்தாலும் கூட பல கோடிக்கணக்கான—லட்சக்கணக்கான—மக்களுடைய வாழ்க்கை கடனிலேதான் நடந்துகொண்டிருக்கிறது. கடன் இருக்கிறதே என்பதற்காக நாம் சில தேவைகளைக் குறைத்துக்கொள்வதில்லை. ஸ்டீல் அல்மேராவைப் பொறுத்த வரையில் இது தேவையானதாகிவிட்டது. முதலில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டு இந்த அலமாரியை வாங்கிக்கொள்ளலாம். பாக்கிப் பணத்தைத் தவணை முறைகளில் கட்டலாம் என்ற வசதி இருக்கிறது. பணத்தைச் செலுத்துகின்ற முறையை சுலபமாக்கிவிட்ட காரணத்தால், அந்தப் பொருளை வாங்குவதற்கு சௌகரியம் ஏற்படுகிறது. ஆகவே, இவையெல்லாம் சுக வாழ்வுக்குத் தேவையானஒன்றாக இருக்க முடியாது, இன்றியமையாத பொருளாக ஆகிவிட்டது.

[திரு. க. இராமமூர்த்தி] [1970 ஏப்ரல் 6

அதைப் போலவே சிமிண்டுக்கு வரி விதிப்பு பற்றிய நிதி அமைச்சர் குறிப்பிட்டார்கள். வீடு கட்டுகிற ஒருவருக்கு இதன் மூலம் மிகக் குறைவான தொகையே வரப்போகிறது. இது ஒரு சிரமமா என்றார்கள். ஒவ்வொரு பொருளையும் எடுத்து—இப்படிக் குறைவான தொகைதானே போடப்படுகிறது என்று சொல்லலாம். ஒரு பொருளுக்குப் போடுவது குறைவுதான் என்றாலும்—ஒருவன் தான் இந்த எல்லாப் பொருள்கள் மீதும் போடப்படுகிற கொஞ்ச கொஞ்ச தொகையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் மொத்தமாகப் பார்க்கிறபோது அவன் அதிகமான வரிச்சுமைக்கு ஆளாக்கப்படுகிறான். ஆகவே இந்த முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் சொன்னது போல ஒரு முடிந்த முடிவுக்கு வரவேண்டும். திருத்தங்கள் அடங்கிய முழுமையான சட்டத்தைப் பிரசுரிப்பதோடு, இதற்குமேல் இனி வரி விதிக்கப்பட மாட்டாது என்று செய்ய வேண்டும். இது பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டிய அவசியம் இருப்பதனால் இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்தி முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister.

THIRU N. KASIRAMAN: Sir, I want to speak in the general discussion.

MR. DEPUTY SPEAKER: I think it is only one Member from each party.

THIRU K. VINAYAKAM: On a point of order, it is not correct. In the general discussion, any number of people can speak.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Thiru N. Kasiraman may be allowed to speak.

MR. DEPUTY SPEAKER: Thiru. N. Kasiraman.

**திரு நா. காசிராமன்:** இப்போது வாகனங்களின் மீதுள்ள விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். விற்பனை வரியைக் காமதேனு என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். பாலை அளவோடு கறந்துகொள்ளலாமே தவிர மடியை அறுக்கக் கூடாது.

லக்சுரிப் பொருள்கள் என்று 14 ஐடெம்சுகள் கொடுத்து அவற்றின் மீது 15 சத விகித வரியைப் போட்டிருக்கிறார்கள். ரேடியோ என்று எடுத்துக்கொண்டால், அது அடிப்படைத் தேவையாக மாறியிருக்கிறது. விவசாயத் துறை அமைச்சர் பேசுகின்றபோது ரேடியோ உற்பத்திச் செலவைக் குறைத்து, அதை மலிவான விலைக்கு எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். உற்பத்தி விலையைக் குறை என்று சொல்லிவிட்டு விற்பனை வரியை அதிகப்படுத்துவதனால் ஏழை மக்களுக்கு எப்படி உதவிகரமாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்து, மோட்டார் கார்கள், டிராக்டர்கள் மீது வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அவை இன்றைக்கு அத்தியாவசியத் தேவையாக மாறிவிட்டன. புதிய டாக்சிகளை, புதிய மோட்டார்களைப் போட வேண்டும் என்கிற உற்சாகம் வந்துவிட்டது. இந்த நேரத்தில் ஒரு டாக்சிக்கு 500 ரூபாய் அதிகப்படியாக இந்த வரியினால் செலுத்த வேண்டும். பஸ் என்றால் 2,000 ரூபாய், லாரி என்றால் 1,900 ரூபாய் இனி அதிகமாகச் செலவாகும். இப்படியானால் இத் துறையில் முதலீடு செய்கின்றவர்களுக்கு உற்சாகம் ஏற்படுமா? போக்குவரத்துத் துறை எபிஷியன்ஸி பாதிக்கப்படாதா என்பதைச் சிந்திக்க வேண்டும்.



1970 ஏப்ரல் 6] [திரு. நா. காசிராமன்]

அடுத்து, பசுமைப் புரட்சி என்று பேசுகிறோம். உற்பத்தியைப் பெருக்க நவீன இயந்திரங்கள் கையாளப்பட வேண்டும் என்கிறோம். இந்த நிலையில் டிராக்டர்கள், அக்ரிகல்சுரல் மெக்கானிகல் இம்ப்ளிமெண்ட்ஸ் மீது வரியைப் போட்டிருக்கிறோம். இன்னொருபுரத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து நிலப் பரப்பையும் குறைத்திருக்கிறோம். இதன் காரணமாக, இனிமேல் இது போன்ற உபகரணங்களை வாங்க விவசாயிகளுக்கு உற்சாகம் இருக்குமா, அல்லது நாம் போடுகிற வரி உதவிகரமாக இருக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, அரசு இதுபற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும். பல சுக போகப் பொருள்கள் இன்றைக்கு அத்தியாவசியப் பொருள்கள் ஆகிவிட்டன. அதை மனதில் கொண்டு, வரி விகிதங்களை மாற்ற வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதைப் பொறுக்குக் குழுவுக்கு விடவேண்டுமென்று சுதந்திராக் கட்சி உறுப்பினர் மாண்புமிகு ஹாண்டே அவர்களும், திரு இராமமூர்த்தி அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதை ஏற்பதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இராமமூர்த்தி அவர்களுடைய கட்சியினர்கள்தான் "ஆடம்பரப் பொருள்கள்" என்ன என்ன என்கிற பட்டியலையே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு நாங்கள் அவற்றை நீக்கினால், "பார்த்தீர்களா, நாங்கள் ஆடம்பரப் பொருள்கள் என்று வைத்திருந்தவற்றை இவர்கள் எடுத்துவிட்டார்கள், இவை அத்தியாவசியப் பொருளாம்" என்பதாக வெளியில் பேசவும் ஆரம்பிப்பார்கள். வாதிடுவது என்றால் எப்படி வேண்டுமானாலும் வாதிடலாம். ஆகவே, அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. காசிராமன் அவர்கள் பேசும்போது, 'இதைக் காமதேனு என்று சொல்வார்கள், பாலைக் கறந்துகொள்ளுங்கள், மடியைக் அறுக்காமல்' என்றார்கள். இதைக் காமதேனு என்று முன்பு திரு. கோபால் ரெட்டி அவர்கள்தான் குறிப்பிட்டார்கள் என்று நினைவு. காமதேனு என்றாலே கேட்டதைக் கொடுப்பது என்றார்கள். அதை நான் பார்த்ததில்லை. கேட்டதைக் கொடுக்கின்ற ஒன்றின் மடியை அறுக்க வேண்டிய அவசியமே இல்லை.

தொழில் நசித்துப் போகும்படியாக நாம் ஒன்றும் அதிகமாகவும் வரி போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் நியாயமான கோரிக்கைகளைக் கவனித்து சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. டயர், ட்யூப்புகளை எடுத்துக்கொண்டால், பக்கத்து மாநிலத்தில் என்ன வரி போட்டிருக்கிறார்களோ, அதைவிட அதிகமாக நாம் போட்டால் அங்கேயே வாங்கிப் போவார்கள், அதன் மூலம் இங்கே தொழில் பாதிக்கப்படலாம் என்பதாக இவற்றுக்குப் போடவில்லை. இங்கே தயாரிக்கிற பிஸ்டன், மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ் இவைகளுக்கு எல்லாம் சலுகை அளித்திருக்கிறோம். தொழில் துறையினரும் கேட்டுக்கொண்டார்கள். நாம் இணங்கியிருக்கிறோம். விவசாயக் கருவிகள் என்றாலும், டிராக்டர்கள், டிராக்டர் உபகரணங்களுக்குத்தான் வரியே தவிர மற்றவற்றுக்கு இல்லை. இதையெல்லாம் பாராட்டி ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கலாம். ஆனால், எதிர்க் கட்சியில் உட்கார்ந்து பாராட்டுவதாவது என்று நினைக்கக் கூடும். நாங்கள் அங்கே இருந்தபோதும் அப்படித்தான் எண்ணியிருக்கிறோம். ஆனாலும் நல்லவைகளைப் பாராட்டி ஒரு வார்த்தை சொல்லக் கூடாது என்பதல்ல.

இன்னும் டிரஸ்டு ஸ்லீனை எடுத்துக்கொண்டால், பஸ்ட் சேல் பாயிண்டில்தான் வரி போடப்பட்டிருக்கிறது. இன்னும் எலெக்ட்ரிக் பல்புகளுக்கு வரி போடலாமா என்றார்கள். இதனால் 3 பைசா ஏறப்போகிறது. இது ஒரு பெரிய சுமையா?

பிற் பகல் 1-00

இதற்கெல்லாம் வரி போடக் கூடாது என்று சொல்லுகிறவர்களே அரசாங்க சிப்பந்திகள், மற்றவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் பரவாயில்லை. அந்தப் பிரசினை வருகிறபோது அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பது, பணத்திற்கு என்ன செய்வது, வரி மூலம் கொஞ்சம் வருமானத்தை அதிகப்படுத்தலாம் என்றால் வரி போடக் கூடாது என்றால் அரசாங்கம்தான் என்ன செய்வது? ஏதேனும் ஒரு முறையிலே வரிப் போட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள தொழில்கள் நசித்துப் போகாதவாறு வரிப் போடுவது என்று வைத்து இருக்கிறோம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகின்றபொழுது அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பீல்டிலே உள்நாட்டிலே என்ன நடக்கிறது என்று தெரியாது, அதற்காக தொழில் நுட்பம் தெரிந்தவர்களைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே உள்ள அதிகாரிகளுக்கு அது நன்கு தெரியும். குறிப்பாக விற்பனை வரி இலாகாவிலே உள்ள அதிகாரிகளுக்கு எந்த எந்த வரியைப் போட்டால் தொழில் கெடும் எந்த வரியை உயர்த்தினால் தொழில் நசித்துவிடும் என்ற முழு விவரத்தையும் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது உயர்த்தியிருப்பது எந்தத் தொழிலையும் நசித்துவிடாது.

ரேடியோ, அயர்ன் அன் ஸ்டீல் சேஃப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ரேடியோ ஆண்டுக்கொரு முறை வாங்கப்படுவதுதான். கிரோஸினுக்கு எல்லாம் அவர்கள் வரி போட்டார்கள், அதைப்பற்றியெல்லாம் அவர்கள் கண்டிக்கவில்லை. சில பேர்கள் மட்டும் பயன்படுத்துகின்ற கடிகாரம், டைம்பீஸ்கள் இவற்றிற்கு எல்லாம் வரி போடக் கூடாது என்று சொல்வது சரியல்ல. எனவே இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவதிலே எந்தவிதமான பயனும் இல்லை. எனவே, அவர்களுடைய திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு க. ராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—" தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**பிரிவு 2**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : " பிரிவு 2 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும் ".

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். திருத்தங்களைப் பிரேரேபித்தால் பதில் சொல்கிறேன். இன்னும் மூன்று, நான்கு பில்கள் கொண்டு வரவேண்டியிருக்கிறது. காலம் கொஞ்சமாக இருக்கிறது. இதற்கு வேறு வழியே கிடையாது. இல்லையென்றால் இன்னும் நாலைந்து நாட்கள் சட்டசபைக் கூட்டத்தை வைத்துக்கொள்ள வேண்



டுமென்றால், அதற்குப் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்டி முடிவெடுக்க வேண்டும். இப்பொழுதுள்ள நிலைமைப்படி பிஸினஸ் அட்வைசரி கமிட்டி எடுத்துள்ள முடிவுப்படி சீக்கிரமாக முடித்தாக வேண்டியிருக்கிறது. எனவே சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**Thiru N. KASIRAMAN :** Sir, I move the following amendments :

"(i) In sub-clause (a) in the proposed amendment to First Schedule to the Principal Act, in items 2, 3, 3A and 5 for the proposed figures '15' in column (4), the figures ' 13 ', ' 13 ', ' 13 ' and '10', respectively, shall be substituted.

(ii) In sub-clause (*b*) in the proposed amendment to the First Schedule to Principal Act., in items 41 and 55 for the proposed figures '9' in 'column (4), the figures '8' and 1 respectively shall be 'substituted'"

**Thiru K. RAMAMOORTHI :** Sir, I second it.

**திரு நா. காசிராமன் :** நான் அதிகமாக நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற டிராக்டர்கள், அதோடு சேர்ந்த உபகரணங்கள் இவற்றிற்கு விதிக்கப்பட்டிருக்கிற வரி உயர்வுகளைப்பற்றி மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். டிராக்டரோடு உபயோகப்படுத்தக்கூடிய உபகரணங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு வரியில்லாமல் இருக்க வேண்டும். கேஜ்வீல் டிஸ்க் வீல் ப்ளவர்ஸ் அன் டில்லர்ஸ் எல்லாம் இருக்கின்றன. இவையெல்லாம் மெக்கானிக்கல் இம்ப்ளிமெண்ட்ஸ், இயந்திர சாதனங்களாக இருக்கின்றன. விற்பனை வரியில் இருந்து இவற்றிற்கெல்லாம் விலக்களித்தால்தான் நல்ல முறையிலே விவசாயிகள் இவற்றைப் பயன்படுத்த முடியும். எனக்குத் தெரிந்த ஒருவர் டிராக்டரைச் சேர்ந்த உபகரணங்களும் வரி உயர்வுக்கு உட்பட்டதா என்று அங்கே கும்பகோணத்திலே உள்ள சேல்ஸ் டாக்டஸ் அதிகாரியைக் கேட்டதற்கு அவர்கள் டிராக்டரைச் சேர்ந்த உபகரணங்களுக்கு விதிவிலக்கு இல்லை, விதிவிலக்கு இருப்பது மண்வெட்டி, கடப்பாரை போன்றவற்றிற்குத்தான் என்று சொல்லியிருப்பதால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற முறையிலேதான் நான் இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். டிராக்டருக்கு ப்ரைம் மூவராக இருக்கும் எல்லாவிதமான உபகரணங்களுக்கும் டாக்ஸ் இல்லாமல் செய்து விட வேண்டும். நவீன இயந்திரங்கள் மூலம் பசுமைப் புரட்சி ஏற்படுத்த வேண்டுமென்ற நிலையிலே உள்ள நாம் இதைச் செய்தால்தான் அரசுக்கு உணவு உற்பத்தியில் பெரிதும் உறுதுணையாக இருக்கிற தமிழ்நாட்டு விவசாயிகள்மீது நல்லெண்ணம் கொண்டு அவர்களுக்கு உதவியவர்களாவோம் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டேன். அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**Thiru N. KASIRAMAN :** Sir, I press my amendment.

**திரு நா. காசிராமன் :** அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

குறுந்தலைப்பு முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/70) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

4. **அரசினர் தீர்மானம்**—தொடர்ச்சி.

(ஆ) பேரவை **அலுவல் வரிசையில் மாற்றம்.**—தொடர்ச்சி.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move.—

"That under Rule 21 of the Assembly Rules, the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 10 of 1970) be taken up before all other Bills."

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

8. **அரசினர் மசோதாக்கள்**—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/70).**

* **மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி :** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பஞ்சாயத்துகள் (திருத்த) மசோதா †(சட்டப் பேரவை மசோதா எண் 10/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழக உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள் எல்லாம் நேரடி முறையின் மூலமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையின் முதல் கட்டமாக ஊராட்சி மன்றங்களின் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அரசின் முடிவு சென்ற ஆண்டு இப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதைச் செயல்படுத்தும் முறையில்தான் இம்மசோதாவை உங்கள் முன் வைத்துள்ளேன். ஓர் ஊராட்சியிலுள்ள வாக்காளர்கள் தங்களில் ஒருவரைத் தலைவராகத் தாங்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கு இம்மசோதா வகை செய்கிறது. துணைத் தலைவர் முன்போலவே ஊராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் தலைவருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் கருத்து வேறுபாடு காரணமாக ஒற்றுமை குன்றுமானால், அந்த ஊராட்சியின் நிர்வாகத்தை ஆறு திங்களுக்குத் தலைவரே ஏற்று நடத்துமாறு பணிக்க ஆய்வாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தலைவரையோ அல்லது துணைத் தலைவரையோ பதவியிலிருந்து நீக்குவதற்கு முன் ஊராட்சியின் கருத்தை அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

தன் கடமைகளைச் சரிவர நிறைவேற்றாத ஊராட்சி மன்றங்களைக் கலைத்து உடனடியாகத் தேர்தல் நடத்தி மீண்டும் அமைப்பதற்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குப் பின்பு தேர்தல் நடத்திப் புதிய மன்றத்தை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலவரையறைக்குள், கலைக்கப்பட்டுள்ள ஓர் ஊராட்சி மன்றத்தை அக்கால வரம்பு முடியுமுன் நிர்வாக நலனைக் கருதி முன்னுள் உறுப்பினர்களைக் கொண்டே மீண்டும் அமைப்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் தகுதி இல்லாதவர் என்றோ, தகுதியை இழந்துவிட்டார் என்றோ தீர்மானிப்பதில் தற்போதுள்ள சட்ட நடைமுறையில் சில குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவதால், அப்பிரிவை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஓர் உறுப்பினர் தகுதி இல்லாதவர் அல்லது தகுதி இழந்துவிட்டவர் என்று எடுத்துக் கூறப்படின், அந்த

† 31-3-1970 தேசிய சிறப்பு அரசிதழில வெளியிடப்பட்டுள்ளது.





உறுப்பினருக்கு அதுகுறித்து ஒரு முன் அறிவிப்பு அனுப்ப வேண்டுமென ஊராட்சி நிர்வாக அதிகாரியும், ஊராட்சி ஒன்றிய ஆணையரும் பணிக்கப்பட்டுள்ளனர். அவ்வறிவிப்பைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தின் முன்போ அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுவின் முன்போ வைக்கப்பட வேண்டுமென்றும், அவ்வறிவிப்பில் கண்ட குற்றச்சாட்டை உறுப்பினர் மறுத்தால் இரண்டு திங்களுக்குள் நீதி மன்றத்திற்கு முறையிடு செய்து கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு முறையீடு செய்துகொண்டால், நீதிமன்றம் தன் முடிவை அறிவிக்கும் வரை அந்த உறுப்பினர் தொடர்ந்து பதவி வகிக்கலாமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்கும் முறையில்லாத காரணத்தாலும் நிர்வாக நலனை முன்னிட்டும் ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெறத் தகுதியுள்ள ஒரு வாக்காளர் இந்திய ராணுவத்திலோ அல்லது பிற மாநிலங்களில் சேவை செய்யும் நம் ஆயுதம் தாங்கிய காவல் படையிலோ அல்லது அயல் நாட்டிலோ பணி புரிபவராக இருந்தால் அவர் தனது சரியான முகவரியை ஊராட்சி வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் அதிகாரிக்குத் தெரிவித்தால் அப்பட்டியலில் சேர்த்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

தவிர, ஓர் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற வேண்டுமானால், அதன் மக்கட்தொகை, ஆண்டு வருமானம் ஆகிய அடிப்படைகள் தவிர, நகரத்திற்குரிய தனிப்பட்ட சிறப்பியல்புகள் இருக்கிறதா என்பதையும் கவனித்துச் செயல்படுத்த ஆய்வாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சித் தேர்தல்களை வரும் ஜூலைத் திங்கள் நடத்துவது என்ற அரசின் முடிவை இப்பேரவையில் சில நாட்களுக்கு முன் அறிவித்தேன். தேர்தல் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், தவிர்க்க முடியாத காரணங்களினால் தேர்தல்களை நடத்த இயலாவிட்டால் ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலத்தை மேலும் ஒரு ஆறு திங்களுக்கு நீடிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இம்மசோதாவை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்மானம் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the amendment standing in my name, namely :

"That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 10 of 1970) be referred to a Select Committee consisting of..... Members of the Assembly."

THIRU J. JAMES : I second the motion.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரை கொண்டு வரப்பட்டிருக்கும் நோக்கமும், கருத்துக்களும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும். இந்த மசோதாவை முழு மனதாகக் கொள்கையளவில் வரவேற்கிறோம். இந்த மசோதா உள்ளடக்கி இருக்கும் திருத்தங்களைப் பொருத்தவரை பல்வேறு புதிய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மசோதா மிக மிக முக்கியமான மசோதா என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. முதல் முறையாக பஞ்சாயத்துத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் அரசைப் பொறுத்தவரை பஞ்சாயத்துப் பெருமன்றத்

தலைவர்களும் இப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி வந்தார்கள். இப்போது உடனடியாக முடியவில்லை என்றாலும் பின்னால் அப்படிப்பட்ட நிலைமைதான் வரும் என்று நிச்சயமாக எதிர் பார்க்கிறோம். இந்த நிலைமைகளுக்கு எந்த அளவில் அரசு கொண்டு வந்திருக்கும் திருத்தங்கள் பயன்படும் என்பதைப் பார்க்கும் போது இதைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டியது மிகவும் அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்.

பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை, அவரை நீக்கும் முறை இவற்றைப் பார்க்கும்போது நாம் விரும்பியோ, விரும்பாமலோ சில சூழ்நிலைகளின் காரணமாக ஜனநாயகத்திற்கு எதிரான சர்வாதிகாரம் ஆகிவிடும் நிலைமை ஏற்படுகிறது. பஞ்சாயத்துத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற நிலைமை ஏற்படுமானால் அதற்குப் பிறகு அவருக்கு ஆறு மாத காலம் அவகாசம் இருக்கிறது. அவர் பஞ்சாயத்துத் தலைவராகவே அந்த ஆறு மாத காலம் நம்பிக்கை இல்லை என்று தெரிவித்த பிறகும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அந்த அதிகாரி—இன்ஸ்பெக்டர் முடிவு செய்கிற வரையில் ஆறு மாத காலத்திற்குப் பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்துத் தலைவராகவே இருப்பார். அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கான முறைகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, பஞ்சாயத்துத் தலைவரை நீக்குவதற்கான காரணங்களை இன்ஸ்பெக்டரிடம் கொடுக்க வேண்டும்; அவர் காரணங்கள் சரியானதுதானா என்று விசாரிப்பார்; விசாரித்த பிறகு சரி என்று அவர் நினைத்தால் கூட்டத்தைக் கூட்டுவார் என்ற நிலை இருக்கிறது.

பஞ்சாயத்துத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று கூறினால் அதைப் பற்றி முடிவெடுக்க உடனடியாக வாய்ப்பளிக்க வேண்டும். காரணங்கள் சரிதானா என்று விசாரிப்பதெல்லாம் ஜனநாயகத்திற்கு ஒவ்வாத ஒன்று. "எனக்கு உன் மீது நம்பிக்கை இல்லை" என்று சொன்ன பிறகு அதற்கு என்ன காரணம் தேவை? நம்பிக்கை போய்விட்ட பிறகு காரணத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? பஞ்சாயத்துத் தலைவர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் வருகிறபோது யார் அவரைப் பதவியில் இருந்து நீக்குவது? தேர்ந்தெடுத்த மக்களா அல்லது பஞ்சாயத்தில் அங்கம் வகிக்கிற பஞ்சாயத்து அங்கத்தினர்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். "two-thirds of the sanctioned strength of the panchayat" என்று இருக்கிறது. "சாங்ஷண்டு ஸ்ட்ரெந்த்" என்று சொல்லும் நேரத்தில் பஞ்சாயத்தில் அங்கம் வகிக்கும் நிலையைக் குறிப்பதாக எடுத்துக் கொண்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் இந்தத் தலைவரை வெளியே அனுப்பலாம். யார் தலைவரைத் தேர்ந்தெடுக்கவில்லையோ, அவர்கள் தலைவர் வெளியே அனுப்புகின்ற நிலை இருப்பது சரியா? பஞ்சாயத்துத் தலைவரைப் பொது மக்கள்தான் நேரடியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள்தான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து வெளியேற்ற முடியும் என்ற நிலைமை இருக்குமானால் பொது மக்கள் 2/3 ஸ்ட்ரெங்த் என்ற அளவில் வருகிறார்களா என்ற கணிப்பைப் பொறுத்தவரை பெரும் பிரச்சினையாகிவிடும்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் கீழ்மட்டத்தில் நடைபெறும் தேர்தல்கள் வெகு சூடான தேர்தல்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே கோஷ்டிச் சண்டை, கட்சிச் சண்டை, உருவாகும் சூழ்நிலை ஆரம்பித்துவிடும் நிலைமை உருவாகிறது. அதற்கெல்லாம் இடம் கொடுக்காத முறையில் சட்டம் அமைய வேண்டும். ஒரு பஞ்சாயத்தை அரசு "சூப்பர்சீட்" செய்துவிட்ட பிறகும் கூட பஞ்சாயத்துத் தலைவர் இயங்குகின்ற அளவுக்கு அனுமதி இருக்கிறது. ஆறு மாத



காலம் அல்லது குறிப்பிட்ட காலம் வரை தலைவராகவே தொடர்ந்து பணியாற்றுவதற்கு அதிகாரம் அளிக்கிறது இந்த மசோதா. இந்த நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும். இவற்றைப் பற்றி எல்லாம் தீர விசாரணை செய்கின்ற அளவில் பொறுக்குக் கமிட்டிக்கு இந்த மசோதாவை விட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மசோதா விதிப்படி வந்திருக்கிறது என்றாலும் கூட, ஆற, அமர படித்துவிட்டு வந்து பேசுவதற்கு அவகாசம் தரப்படாத நிலைமையில் வந்திருக்கிறது. ஆகவே, இந்தக் குறையையும் போக்கும் வகையில் பொறுக்குக் கமிட்டிக்குச் சென்று வந்தால், இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்து பூரணமான மசோதாவாக நிறைவேற்ற முடியும் என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் திருத்த மசோதாவை வரவேற்கக்கூடிய அதே சமயத்திலே அதில் இருக்கக் கூடிய, திருத்தப்பட வேண்டிய சில குறைபாடுகளையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதில் பிரதானமாக இருக்கக்கூடியது பஞ்சாயத்துத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது ஒன்று. அடுத்தது அவரை நீக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி நீக்குவது என்பது. 1967-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போதே தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது, பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதாகும். மூன்று வருஷத்திற்குப் பிறகாவது பஞ்சாயத்துத் தலைவர் மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது வந்திருக்கிறது.

மற்றொன்று வரவில்லை. படிப்படியாக வரும் என்று சொல்லலாம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதைப் பார்த்து எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து பிறகு அனுபவ அடிப்படையில் பிறகு கொண்டு வரலாம் எனத் தோன்றுகிறது. 22 வருடங்களாகவே பார்த்துக்கொண்டு வருகிறோம். படிப்படியாக என்பதையும் பார்த்து வருகிறோம். அனுபவத்திலும் பார்த்து வருகிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தலைவரை இன்ஸ்பெக்டர் என்று சொல்லக்கூடிய கலெக்டர் யாராவது புகார் கடிதம் எழுதினால், வேண்டியவர் வேண்டாதவர் என்ற அடிப்படையில் அவரைத் தூக்கி எறியக் கூடிய அளவிற்கு சூழ்நிலை இருந்துவிடக்கூடாது. மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்களால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து எடுக்கவேண்டும் என்றிருக்கிறது.

யார் வோட்டு போட்டு தேர்ந்து எடுத்தார்களோ அவர்களுக்குத்தான் நீக்குவதற்கான அதிகாரம் இருக்க வேண்டும். "ரைட் டு ரீகால்" என்ற அடிப்படையில் இருக்கவேண்டும். ஒரு பிரச்சினையை ஏற்றுக் கொண்ட பிறகு அடுத்ததை ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கவேண்டும்? ஏன் அதில் தயக்கம் இருக்கவேண்டும்? ஆகவே, யார் வோட்டு போட்டு தேர்ந்தெடுக்கிறார்களோ, அவர்களுக்குத் தான் அந்த அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதில் பலவிதமான சாகசங்கள் நடக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் நான் சொல்லாமலேயே புரிந்து கொள்வார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய பிறகு கூட கோர்ட்டில் ரிட்கள் போடப்பட்டு வருடக்கணக்கில் காலதாமதம் ஆகக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதனால் உடனடியாக சார்ஜ் கொடுக்காத நிலைமை இருந்து வருகிறது. எல்லா ரிக்கார்ட்களும், பணமும் தலைவர் கையிலேயே இருக்கிறது. கொடுக்கல் வாங்கள் அவர் கையில்தான் இருக்கிறது. அதன் காரணமாக பஞ்சாயத்துக்களில் ஏற்கனவே எந்த வேலையும் நடைபெறுவதில்லை. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் உடனடியாக வைஸ்-ப்ரசிடண்ட்டிடம் சார்ஜ் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ரிட் போட்டு, விசாரணை நடந்து, தீர்ப்பு வந்த பிறகு, தீர்ப்பு அவருக்கு சாதகமாக இருந்தால் பிறகு அவர்கள் மீண்டும் சார்ஜ் எடுத்து தலைவராக தொடர்ந்து நடத்தலாம். அப்படியிருந்தாலொழிய பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில், ஒழுங்கான முறையில் நடைபெறும் என்ற நிலை இருக்க முடியாது.

பல ஊர்களில் இப்படி நடைபெற்று வருகிறது. உதாரணமாக, குடியாத்தம் தொகுதியில் ஒரு பஞ்சாயத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் அந்தத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அதற்குப் பிறகு அவர் ரிட் போட்டு வைஸ்-பிரசிடென்ட் ஒரு தி.மு.க. என்ற காரணத்தினால், பல வருடங்களாக காலதாமதம் செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். முதலமைச்சர் அவர்கள்......

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வைஸ்-பிரசிடென்ட் தி.மு.க. ஆக இருக்கிற காரணத்தினால் உயர்நீதி மன்றம் அப்படிச் செய்தது என்று கூறுகிறீர்களா ?

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வைஸ்-பிரசிடென்ட் தி.மு.க. என்பதற்காக உயர்நீதிமன்றம் அப்படிச் செய்தது என்று நான் சொல்ல வரவில்லை. இன்றையநிலை, உயர்நீதி மன்றம் அல்லது வேறு எந்த நீதி மன்றமோ, அதன் தீர்ப்பை எதிர்பார்த்து அதுவரை அதிகாரத்தில் இருப்பது சரியல்ல. அந்த வகையில் திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆகவே உடனடியாக வைஸ்-பிரசிடென்டிடம் சார்ஜ் கொடுத்துவிட வேண்டும் அப்படி வைஸ்-ப்ரசிடென்ட் சார்ஜ் எடுத்து நல்லமுறையில் பஞ்சாயத்து நிர்வாகம் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் தான் கொடுக்கப் பட்டிருக்கிற இரண்டு திருத்தங்களையும் வற்புறுத்தி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்றாலும் கூட ஒருசில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது அதை ஆழ்ந்து கவனித்துச் செய்ய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.

இதில் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் தலைவர். அதே நேரத்தில் அந்தந்தப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மற்ற உறுப்பினர்கள் இவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால், அது செல்லுபடியாகும் என்றளவிற்கு வந்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையே அவசியமில்லை என்ற நிலைதான் இருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப்போனால் வேறு ஒருவிதமான சட்டத்தை இதற்குள்ளே போட்டுச் செய்யலாம். மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தலைவர்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டால் இவரை நீக்கிவிடவேண்டுமா வேண்டாமா என்று இன்னொரு தேர்தல் நடத்தும் விதத்தில் அதையும் இதில் சேர்த்து சட்டம் செய்தால் இச் சட்டத்தைக் கொண்டு வருவதன் நோக்கம் ஓரளவிற்கு நிறைவேறும். ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸில்,

**It is proposed to make provision in the Act for authorising the president to carry out the functions which could not be carried out because of the non-co-operation of members.**

என்று கொடுத்திருக்கிறீர்கள். இது இவர்களுக்கு மட்டும்தான், அது தகுமா என்ற பிரச்சினை வருகிறது. யூனியன் தலைவரும் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற முறையையும் கொண்டு வரவேண்டும். அதோடு கூட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் யாரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ, அவர்களிடையே வோட்டுக்குவிடப் பட்டு அவர் இருக்கவேண்டுமா வேண்டாமா என்ற நிலையை அறியக் கூடிய விதத்தில் ஒரு சட்டத்தையும் இதில் புகுத்தினால்தான் இதன்



நோக்கம் நிறைவேறும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்துச் செய்வதற்காக இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டுச் செய்தால்தான் நன்றாகயிருக்கும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

பத்தாண்டுக் காலத்திற்கு முன்னதாக இதே சட்டப் பேரவையில் எங்கள் தலைவர் மறைந்த டாக்டர் அண்ணா அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்தி பேசி வந்தார்கள். ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் பொது வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய சட்டம் நிறைவேற்றப் படுமானால் நாட்டில் தேர்தல்கள் ஒழுங்காகவும், மிக்க நேர்மையாகவும் நடைபெறும் என்பதை இம்மாமன்றத்தில் நாங்கள் எதிர்கட்சியாக இருந்த காலத்தில் எங்கள் தலைவர்களும், மற்ற உறுப்பினர்களும் இங்கு பேசியிருக்கிறார்கள். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்தச் சட்டத்தை இன்றைய தினம் அமலாக்கியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலுள்ள லட்சோபலட்சம் மக்கள் இந்த நல்ல சட்டத்தை மிக்க ஆவலோடு எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் பொது வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலை வருமானால் நாட்டில் நல்லதொரு அரசியல், நல்லதொரு நிர்வாகம், நல்லதொரு உள்ளாட்சித்துறை ஆட்சி நல்லமுறையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு இல்லாமல் போனாலும் அடுத்த ஆண்டிலாவது ஊராட்சி ஒன்றியத்தலைவர் பொது வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை ஏற்பட்டால் இந்த ஆட்சிக்கு மிக நல்லபெயரும், புகழும் கிடைக்கும்.

நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த ஆட்சியின் வளர்ச்சியின் அடிப்படை ஊராட்சிகள்தான் என்று மிக நல்ல முறையில் பேசிவருகிறார்கள். ஊராட்சிகள் நிர்வாகம் மிக்க நாணயத்துடனும், மிக்க நேர்மையுடனும், மிக்க ஒழுக்கத்தோடும் நடைபெறுமானால் நிச்சயமாக இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான பிரச்சனைகள் அதன் மூலமே தீர்க்கப்படும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இருக்க முடியாது.

அந்த வகையில் இன்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவானது நல்ல முறையில் ஒழுங்கான நிர்வாகமும், நேர்மையான நிர்வாகமும் உள்ளாட்சித் துறையில் ஏற்படுவதற்கு இந்த மசோதா நல்ல முறையில் வழிவகை செய்திருக்கிறது.

ஊராட்சிகள் மூலம் பல கோடிக் கணக்கான ரூபாய் நம் நாட்டில் செலவழிக்கப்படுகிற நிலையில் அவற்றிற்கு நல்லதொரு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் இந்த மசோதா ஏற்படுத்தும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. எந்தவிதமான குறைபாடும் இல்லை. நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பது மிகமிக வரவேற்கத்தக்கது என்று கூறிக்கொள்கிறேன்.

அதேபோல் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் எதிர்காலத்தில் பொது வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நல்லதொரு சூழ்நிலை உருவாகுமானால் நாட்டின் மீது பற்றுள்ளவர்களும், தேசத்திற்கு தொண்டு செய்ய

வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்களும், தன் பகுதிக்கு தன் ஊருக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களும் இதிலே வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறி இந்த மசோதாவை ஆதரித்து விடைபெறுகிறேன்.

**THIRU K. VINAYAKAM**: Sir, while welcoming the good features in this Bill, I voice forth some doubts in the actual working of this Bill.

There is an element of democracy in making the entire electrorate elect the president of the panchayat directly. To day the practice is that a majority of the members elect the president. We of course ascribe some kind of misconduct or nefarious activity in this kind of election. That theory is admitted. That is why we want the entire electrorate to elect the president. But in actual working what will happen? Suppose two-thirds of the number of memebers feel that they were not responsible for electing the president, as he was elected by the entire electorate and do not like the president. Two-thirds of the number of members joining together can rout the very basis of this Act. In actual working, we will be set with a lot of difficulties.

A president must be voted down only for two reasons-dereliction of duty or proven miscounduct on his part. Two-thirds of the number of members will join together. That has been my experience in Andhra Pradesh when Tiruttani, the town I now represent, was in Andhra Pradesh. The president was elected by the entire electorate and the members were always at loggerheads with him with the result that in sheer disgust he had to resign. We are heading towards that position. Let us cross our experience with the experience gained by another State.

The second thing is that we are introducing an element of democracy in making the entire electrorate elect the president. Why should we not adopt the same principle for the election of the chairman of the panchayat union council also? All the presidents of the panchayats directly elected will elect the chairman of the Panchayat union council. We are introducing democracy in one stage, stop with it, and say "Let us watch the experiment and then go further". Either we must be completely democratic or we should not introduce this kind of Bill. That is my suggestion to the Government, if they are going to listen to me. Of course I am sure they are not going to listen to me.

The Hon. **THIRU K. A. MATHIALAGAN**: Why should the hon. Member say that?

**THIRU K. VINAYAKAM**: It is evident from the idea of rushing important legislation through at the fag end of the session. This bill should have been brought in a separate session and not in the budget. session. We have been sitting here for the past thrity-five or forty days During the budget session members get tired and everybody is thinking of going back to their homes. The Government is hustling, and the Law Minister will vouch for what I say. Government should not rush or hustle through this Bill. Now it is past 1-30 p.m. and the Government want the Bill to be passed. I know with what anxiety the members are sitting here. I know the Government will have their own way. If ever the Government are sincere about this Bill, they should have convened a separate session and brought in this Bill.



The Minister is seeking the permission of this House for extension of time by six months, if the elections are to be held in July. That means they are preparing for a contingency. I am sure they are not going to hold the elections in July. That is at the back of their mind.

They envisage some difficulty in holding the elections in July.

There are many proposals for bifurcation of panchayats lying before the Government. In almost every panchayat some kind of misunderstanding is there. Members have been asking the Government "Why don't you bifurcate? Even after bifurcation, they will be viable units." Many such instances have been brought to the notice of the Government. The Government have not taken any decision. It is right that they have not taken a decision early. If they kept the door open such of those people who were interested were very active going about the Secretariat to get things done. There are many cases where bifurcation justified on merits, but it was not given effect to.

I still feel that the Government should not hustle this kind of legislation. Better they postpone the consideration of the Bill in the sense of referring to a Select Committee. Let us sit in the Select Committee, reconsider the entire Bill and come back with a legislation, and in a calmer mood is the members will be in a better position to consider it.

As Mr. E. R. Krishnan asked, why should they have direct election for the president of the panchayat only and not for the chairman of the panchayat union council? That point is relevant. Why does not the Ministry concede at least their own partyman's view?

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்**: தன்னிலே விளக்கம்.........

**THIRU K. VINAYAKAM**: Let the hon. Memeber please listen to me. He spoke in Tamil and this is what I understood from his speech.

Therefore, Mr. Deputy Speaker, let us not hustle through, let us sit down calmly in a Select Committee, go through the Bill and then bring in a comprehensive Bill. The Tamil Nadu General Sales Tax Act and even the Panchayats Act have been amended several times. Why should not think of a comprehensive Bill, plugging all the loopholes Then the Government can take credit for being perfect in legislation. I commend for the acceptance of the House this motion for referring the Bill to a Select Committee.

* **திரு. சோ. அழகர்சாமி**: தலைவரவர்களே, இந்த பஞ்சாயத்துக்கள் திருத்த மசோதா சம்பந்தமாக, இன்று பொதுவாக பஞ்சாயத்து தலைவர்களை நேரடியாக மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும், வோட்டார்களே தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது மிகவும் வரவேற்க வேண்டிய நல்ல காரியமாகும். பஞ்சாயத்து தேர்தலிலே தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுப்பது போல ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஒரு திடமான அபிப்ராயம். ஏனென்றால் இன்று பஞ்சாயத்து தலைவர் தேர்தலானாலும் சரி, அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்ந்தலானாலும் சரி, இந்த மாதிரி ஒரு சில குறிப்பிட்ட தலைவர்களோ அல்லது மெம்பர்களோ மட்டும் ஒரு தேர்தலில் வாக்களிக்கக் கூடிய முறை இருந்தால், அவர்கள் தங்கள் மனதிலுள்ளவர்களுக்கு, யாருக்கு ஓட்டுப்போட வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவருக்கு ஓட்டுப்போட முடியாத நிர்ப்பந்த சூழ்நிலைகளையும், இடைஞ்

சல்களையும் பார்த்தோம். மனப்பூர்வமாக யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு வாக்களித்தாலோ, அல்லது வேறு ஒருவருக்கு வாக்களிக்காவிட்டாலோ, அவருக்கு ஏற்படுகின்ற நெருக்கடிச் சூழ்நிலையை பொதுவாக பஞ்சாயத்து தலைவர் தேர்தலிலும் பார்த்தோம், ஊராட்சி ஒன்றியத் தலைவரை தேர்ந்தெடுக்கின்ற தேர்தலிலும் பார்த்தோம். ஆகவே, அந்த முறை மாற்றப்பட வேண்டுமென்று சென்ற காலத்தில் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது அந்தத் திருத்தத்திலே பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் மட்டும் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது என்று வந்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் அதேபோல் நேரடியாகத் தேர்ந்தெடுத்தால் அது சிறந்த முறையிலே, நேரடியாக, ஜனங்கள் விரும்பும் தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இல்லையென்றால் தாங்கள் யாரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத்தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

அதேநேரத்தில் பஞ்சாயத்துக்குத் தேர்ந்தெடுக்கும் தலைவருக்கும், மெம்பர்களுக்கும் இடையே ஏதாவது கருத்து வேறுபாடு ஏற்படக்கூடிய காலத்திலே, பஞ்சாயத்து செயல்பட முடியாத நேரத்திலே, 6 மாத காலம் பஞ்சாயத்தைக் கூட்டாமல், தலைவர் அந்தக் காரியங்களைச் செய்வதற்கான ஷரத்து இதிலே இருக்கிறது. அதே நேரத்தில், இன்ஸ்பெக்டர் தலைவருக்கு அதிகாரம் அளிக்கும் நேரத்தில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து மெம்பர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு, அதற்குமேல் தலைவர் மீது என்னென்ன புகார் சொல்லுகிறார்கள் என்று தெரிந்தபிறகு, இன்ஸ்பெக்டர் அம்மாதிரி ஒரு அதிகாரத்தை அந்தத் தலைவருக்குக் கொடுக்க முயற்சிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தலைவர் மீது, மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியிருந்து புகார் சொல்லி, தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதோ அல்லது அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோ இன்ஸ்பெக்டரால் (கலெக்டர்) முடிவு செய்யலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தைக் கொண்டு இன்ஸ்பெக்டர் என்று சொல்லக் கூடியவர், உத்தரவு பிறப்பித்த பிறகு, அதை நிறுத்தி வைக்கவோ, அல்லது ஒப்பளிப்பு வழங்கவோ அந்தக் கலெக்டர் உத்தரவுக்குமேல், சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பதிலாக ஜில்லா நீதிபதி லெவலுக்கு உள்ள ஒரு கோர்ட்டில் சம்பந்தப்பட்டவர்கள் முறையீடு செய்துகொண்டு அந்த முடிவை ஏற்றுக் கொண்டால் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

***திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, சபையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற பஞ்சாயத்து திருத்த மசோதா மிகவும் பிரதானமான ஒரு மாற்றத்தை நமக்கு எடுத்துக் கூறுகிறது. வாக்களிக்கும் முறையிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு மாற்றம் என்றுகூடச் சொல்லலாம். நமது தேசத்திலேயுள்ள ஓட்டளிக்கின்ற முறை மேலும் மேலும் தூய்மைப்பட வேண்டுமென்றால் இந்த நாடு கிராம யூனிட்டுகளாக அமைந்திருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் முறையிலே, கிராமமக்கள் தாங்கள் சுதந்திரமாக ஓட்டுப் போட்டு, ஒரு தலைவரைத் தேந்தெடுக்க முடியுமென்ற நிலையிலே இந்தத் திருத்தச் மசோதா வந்திருக்கிறது. இது சிறப்புடையது தான்.

மாண்புமிகு மற்ற உறுப்பினர்கள் கூறியதைப் போல இது அங்கே மட்டும் நிற்காமல், அதனோடு இணைந்திருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்திலும் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்னும் சிறந்ததாக இருக்கும். ஏனென்றால் இரண்டும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத இணைபுள்ள அமைப்புகளாக இருப்பதால் சொல்கிறேன். அதோடு, அப்படி செய்யப்படவில்லையென்றாலும் கூட வருங்காலத்தில் அப்படிச் செய்ய வேண்டிய நிர்பந்தத்தை அது கொண்டுவரும் என்று நான் நம்புகிறேன்.



ஆகவே, இன்றைக்கு இங்கே கொண்டு வந்துள்ள திருத்த மசோதாவிலே மற்றவர்கள் குறிப்பிட்டதைப் போல், நானும் பல முரண்பாடுகளை அதிலே காண்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், அது இல்லாதவர்களின் நம்பிக்கையில்லாத காரணத்தால், அவர்கள் வெளியேற வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் அந்த ஓட்டு போட்டவர்களுக்கு, அவரைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதை என்ன என்ற கேள்வி எழுகிறது. அதோடு மட்டுமல்ல, இந்த முரண்பாட்டின் காரணமாக, நேரடியாகத் தேர்ந்தெடுப்பது என்ற முறை ஆரம்பத்திலேயே நின்று விடுமோ என்ற பயமும் தோன்றுகிறது. ஆகவே, இந்த முரண்பாடுகளைப் போக்கி, ஒரு முறையான இணக்கமான வகையிலே அமைப்புகள் இயங்குவதற்கான வழிவகைகளை இந்த அரசு கொண்டு வர வேண்டியிருக்கும் வருங்காலத்திலே.

ஒன்றைப் புதிதாகக் கொண்டு வரும்பொழுது, அதனுடைய முழு உருவத்தைக் கண்டுபிடித்து அதை முழுதாகச் செய்துவிட முடியாது என்பது உண்மைதான். இருந்தாலும்கூட, பர்ட்சார்த்தமாகவேனும், அந்த முரண்பாடுகளைப் போக்குவதற்கான வழிவகைகளைச் சிந்திக்கச் சிறிது நேரமோ, அவகாசமோ இந்தச் சபைக்கு அளித்திருக்க வேண்டும். மிகக் குறைந்த நேரத்திலே, உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைந்து, ஒரு மாறுபாடான, ஒரு புதிதான கருத்தை வெளிக்கொண்டு வரும்பொழுது அது சரியான முறையிலே உருவாக வேண்டுமென்ற எண்ணத்திலே செய்திருந்தால் இன்னும் சிறந்ததாக இருக்கும். ஆகவே, மக்களால், ஓட்டுப்போடும் நிலை ஏற்படும்பொழுது அந்தத் தலைவருக்கு இருக்கும் அதிகாரம், இப்பொழுது இருப்பதைவிட இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டியிருக்கும். அப்படி விரிவுபடுத்தவில்லையென்று சொன்னால், இந்தத் தேர்தலில் உண்டாகும் பயன் நமக்கு இல்லாமல் போய்விடும்.

ஆகவே, அதிகாரத்தைப் பரவலாகச் செய்ய வேண்டுமென்ற வாதத்தின் அடிப்படையிலே, சுதந்திரமாக ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கும் உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்ற முறையிலே இந்த அம்சம் நிலைத்து நிற்க, இதை இன்னும் விரிவுபடுத்தி, வளப்படுத்திக் கொண்டு வருவதன் மூலம் இந்தத் தேசத்தின் ஜனநாயக முறை விரிவுபடுவதற்கு உதவி செய்யும் முறையில், இம்மாதிரி இருக்கும் முரண்பாடுகளைப் போக்கி, இம்மாதிரி இருக்கும் சங்கடங்களையும், சிரமங்களையும் தவிர்ப்பதற்காக, ஏற்கனவே என்னுடைய கட்சியானது தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த உறுப்பினரும், யாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ அவர்கள் விரும்புகின்றபொழுது அவர்களைத் திரும்ப எடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதை இந்தக் கிராம அமைப்பிலேயும் நாம் பரிசீலனை செய்துபார்த்து, நாம் அதை நடைமுறையிலே கொண்டுவந்து பார்த்து, வருங்காலத்தில் தேசம் முழுமைக்கும் கொண்டுவருவதற்கு வழிகாட்டியாக தமிழ்நாட்டின் அமைப்பு ஏற்படும் முறையிலே, நம்பிக்கையில்லாத் தீர்மானமோ அல்லது தலைவரை நீக்க வேண்டிய நிலையோ ஏற்படும்பொழுது அது அந்த வாக்களித்தவர்களாலே செய்யப்படும் நிலைக்கு வழிவகைகளைக் காண்பது நல்லது என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

***திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா சரியானது, வரவேற்கத்தக்கது என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தத் தலைவரை ஒரு அதிகாரி நீக்குவதற்கு அதிகாரம் கொடுப்பது சர்வாதிகார போக்கு என்று கருதுகிறேன். ஜனநாயக அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மீது நம்பிக்கையில்லாத நிலை ஏற்பட்டால் அவரை அதிகாரி நீக்குவது என்ற அளவிற்கு அதிகாரியிடம் அதிகாரத்தைக் கொடுப்பது சரியாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். எனவே, ஓட்டுப்போட்ட

மக்களே திரும்பப் பெறுவதற்கான முறையில் செய்தால், ஜனநாயக முறையில் செயல்படுகின்ற முறையாகும். அதிகாரிகளிடம் கொடுப்பது சரியல்ல என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிகளைப் போலவே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், முனிசிபல் தலைவர்களையும் ஜனங்களே தேர்ந்தெடுக்கக் கூடிய முறையில் வைத்தால் நன்றாக இருக்க முடியும். நம்முடைய உணர்வு சரியான முறையில் அமல் செய்வதற்குச் சாத்தியமாக இருக்கும். எனவே, பஞ்சாயத்துக்களைப் போல ஊராட்சி ஒன்றியங்களிலும், நகர சபைகளிலும் தலைவர்களை ஜனங்களே தேர்ந்தெடுக்கக் கூடிய விதத்தில் இந்தச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வர அரசு யோசனை செய்வது சரியாக இருக்கும். இந்த விதத்தில் அரசு சிந்திக்க வேண்டுமென்ற யோசனையை வலியுறுத்த விரும்புகிறேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** சார், இந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் இருக்கும் ஒரு திருத்தத்தின் பொதுக் கொள்கையை நான் பொதுவாக வரவேற்றாலும்கூட, அதில் திருத்தம் கொண்டு வந்து வைத்திருக்கின்ற வழியும், இடமும் சிலவற்றில் ஒவ்வாததாக இருக்கின்றன. அவைகள் திருத்தப்பட வேண்டுமென்பதற்காக ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

''Statement of Objects and Reasons" என்ற தலைப்பிலே ஐந்தாவது பகுதியிலே இருப்பதைப்போல,

"It is also proposed to avail of this opportunity to make certain other minor amendments to the Act."

என்பதைப்போல, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஜனநாயகத்திற்கு ஜனநாயகக் கொள்கைகளுக்கு ஓரளவு முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஜனநாயகப் பண்பின்படி, பஞ்சாயத்தோ அல்லது நகர் மன்றமோ ஒரு சின்ன சட்டமன்றம்போல, சட்டம் செய்யும் உரிமை கிடையாது. செய்த சட்டங்களை அமல் நடத்துவதாகும். அதற்குப் பொதுமக்களின் தொடர்பு கொண்டு அமல் நடத்துவதுதான் அவர்களின் வழி.

நாம் ஜனநாயக அடிப்படையிலே வைத்திருக்கிறோம். தலைவர்களை தேர்ந்தெடுக்கும்பொழுது எல்லா ஓட்டர்களும் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எப்படி ஜனநாயகத்தை வரவேற்கிறோமோ அதைப்போல் அவர்களை நீக்கும்பொழுதும் அந்த குறிப்பிட்ட மெம்பர்கள் மட்டும், குறிப்பிட்ட பஞ்சாயத்து அங்கத்தினர்கள் மட்டும் அவர்களை நீக்க மூன்றில் இரண்டு பங்கிருந்தால் அவர்கள் நீக்கப்படலாம் என்று சொல்வது, ஜனநாயக அடிப்படையிலே உகந்தது அல்ல. ஏனென்றால் மக்களால் பெரும்பான்மையாகத் தேர்ந்தெக்கப்பட்டவர்கள், சிறுபான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் நீக்க முடியாத என்ற அடிப்படையில் அதிலே ஒரு சில திருத்தங்களைச் செய்ய அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த முதல் பகுதியை பார்க்கிறபொழுது,

"It is proposed to make a provision in the Act for authorising the president to carry out the functions which could not be carried on because of the non-co-operation of members."

என்று இருக்கிற அந்தப் பொதுக்கருத்தை மட்டும் நான் ஆமோதிக்க விரும்பவில்லை. ஏனெனில், பெரும்பாலான உறுப்பினர்கள் ஒரு தலைவரின் பேரில் தவறுதலான அபிப்ராயத்தைக் கொள்ளாமல் கூட, நியாயமான ஒரு வேற்று அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கலாம். வேற்று அபிப்பிராயம் கொண்டிருக்கும்பொழுது, அந்தத் தலைவர் நிச்சயமாக அந்தக் காரியத்தை நாம் செய்து முடிக்க வேண்டும் என்றிருந்தால், அவர் ஒரு கையெழுத்துப் போட்டு, அதிகாரிகளிடம் கொடுத்தால் போதும். ஆகவே, பெரும்பாலானவர்கள், சில நல்ல அபிப்பிராயத்தைச் சொல்லக் கூடியவர்களின் அபிப்



ராயத்தை எடுத்துக் கொள்ள முடியாமல், பிரசிடெண்டு எதேச்சாதிகாரமாக, டிக்டேடர்ஷிப் மாதிரி நடந்துக்கொள்ள வழிவகை இருக்கும் என்ற காரணத்தினால், அதையும் ஏதாவது திருத்தக்கூடிய வழிவகை இருக்குமா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஊராட்சி மன்றங்களில் தலைவர் தேர்தலைப் பொறுத்தவரையில் மக்களாகவே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிற முறையை சட்டமாக்குகின்ற வகையில் கொண்டுவரப்பட்ட மசோதாவின் மீது பல்வேறு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மக்கள் ஆட்சி தத்துவத்தின் அடிப்படைக் களங்கள் என்பதை மனதில் கொண்டு, அவைகள் மிக்க சிறப்பான முறையில் அமையவேண்டும் என்ற கருத்தை இங்கே பலரும் சொன்னார்கள்.

நமது எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இந்த சட்டமன்றக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிற நேரத்தில் இந்தச் சட்டத்தை எப்பொழுது கொண்டு வரப்போகிறார்கள் என்று துடித்தார்கள். நாம் அப்பொழுது அவர்களுக்கு இந்தத் தொடர் கூட்டத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தோம். அவர்களுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இப்பொழுது இந்த மசோதாவைக் கொண்டுவந்தால், இதற்கு என்ன அப்படி அவசரம், இன்னும் கொஞ்சம் அமைதியாக, ஆற அமர சிந்திக்கலாம் என்று சொல்கிற நிலையைப் பார்க்கிறோம். ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

தி.மு.க.வினுடைய லட்சியங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நாம் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் நேரடித் தேர்தல் முறை வரவேண்டும் என்பதை ஏற்கனவே கொள்கை அளவில் ஒத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இதுபற்றி விவாதம் நடைபெற்றபொழுது நான் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்த அடிப்படைக் கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பு முறை கடந்த 10,12 ஆண்டுகளாகத் தான் செயல்பட்டு வருகிறது. அவைகள் பெரிய நிர்வாக இயந்திரங்களாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. மக்கள் ஆட்சி முறையிலே இன்றைய தேர்தல் முறையைப் பார்க்கிறபொழுது, அதில் ஏற்படுகின்ற நிர்வாகச் சிக்கல்களை நாம் ஓரளவுக்கு கண்காணித்துத் தீரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசியதற்கும், திரு. ராமமூர்த்தி அவர்கள் பேசிய கருத்துக்கும் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட நிலை இருந்ததை நாம் பார்த்தோம். பல்வேறு உறுப்பினர்களும் ஒன்றைச் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களுக்கு முழு அதிகாரமும் தரப்பட வேண்டும் என்ற வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, அந்த ஊராட்சித் மன்றத் தலைவருக்கு அங்கே இருக்கிற உட்பகை காரணத்தினால், நட்புறவு இல்லை என்ற காரணத்தினால் ஒரு 6 மாத காலத்திற்கு தான் எதேச்சையாக செயல்படுகிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கலாம் என்பது, ஜனநாயகத்தில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்களைக் கேட்காமல் தலைவர் எதேச்சையாக நடந்துகொள்ள வழிவகுக்கப்படுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள்.

1950-ல் இன்றைய தேர்தல் முறையை ஏற்கனவே ஒரு சட்டமாக ஆக்கிக்கொண்டு வந்து நடத்தியிருக்கிறார்கள். அப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மேலே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருகிற உரிமையைக் கூட உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை. இப்

பொழுது நாம் அந்த உரிமையைக் கொடுத்திருக்கிறோம். மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தங்களுடைய தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்பதற்கு தக்க ஆதாரங்களைக் காட்டி, குற்றச்சாட்டுகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அதன்மீது ஊராட்சித் தலைவரை விளக்கம் கேட்கிற பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். விளக்கம் கேட்ட பிறகு, இவைகள் அனைத்தும் ஊராட்சி மன்றத்தின் கருத்துக்கு வைக்கப்படுகின்றன. அவர்களுடைய கருத்தைக் கேட்டு ஆராய்ந்த பிறகு, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுகிற அந்த நிலையில் உறுப்பினர்கள் அந்தக் காரணத்தைக் காட்டி தலைவரை நீக்குவதற்கு அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கியிருக்கிறோம். ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய ஆலோசனை கோரப்படுகிறது. ஏன் அப்படிச் செய்திருக்கிறோம் என்றால், மக்கள் ஆட்சி முறையில் நேரடித் தேர்தல் நடக்கின்றபொழுது, அடிக்கடி இப்படிப்பட்ட பிரச்னைகள், கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆகவே, அதற்காக உடனடியாக தேர்தல் நடத்துவதென்றால் எவ்வளவு சங்கடமான காரியம் என்பதை உணர வேண்டும்.

ஏறத்தாழ 13,000 ஊராட்சி மன்றங்களை வைத்திருக்கிறோம். கருத்து வேறுபாடு வருகிற நேரங்களிலெல்லாம் மறுதேர்தல் நடத்துவது என்பது இயலாத காரியம். திரு. கோதண்டராமன் அவர்கள் எடுத்துக் காட்டியது போல பல கிராமங்களில் அங்கு இருக்கக்கூடிய கும்பல்களிடையே கருத்து வேற்றுமைகள் வரக்கூடும். சில நேரங்களில் தலைவராக இருப்பவருக்கும், மற்றவர்களுக்கும் பாகுபாடு வரக்கூடும், கருத்து வேற்றுமை வரக்கூடும், சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக கோபம் வரக்கூடும். ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதங்கள் கழித்து கோபம் கொஞ்சம் ஆரக்கூடும். காலம் மனிதனுடைய கோபத்தை ஆற்றக்கூடிய சக்தி படைத்தது. ஆகவே, 6 மாத காலத்திற்குள் மறுபடியும் இவர்கள் இணைந்து, ஒன்றாக இருந்து நிர்வாகத்தை நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படலாம். ஆகவே, 6 மாதத்திற்கு இந்த நிலை நீடிப்பதற்கு வழி வகை செய்திருக்கிறோம். அப்பொழுதும் ஒத்து வரவில்லை என்றால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், மக்கள் பார்த்து அவர்களை நீக்க வேண்டும், வேறு யாரும் நீக்கக் கூடாது என்று சொன்னார்கள். நாடாளுமன்றத்திலும், சட்ட மன்றங்களிலும் அப்படிப்பட்ட நிலைமை வருகின்ற அளவுக்கு ஜனநாயகம் வளருமேயானால், அப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்த முறையை அமுல் நடத்துவதில் சங்கடம் எதுவும் இருக்க முடியாது.

இப்பொழுது கூட பெரும்பாலாக இருப்பவர்களின் கருத்துக்கு சரியில்லை, அப்படியிருப்பவர் எப்படி தலைவராக இருக்க முடியும் என்று கேட்கப்படுகிறது. ஒரு ஊரில் ஊராட்சித் தலைவருக்கு 8 பேர் போட்டி இடுகிறார்கள் என்றால், இந்த 8 பேர்களில் யார் அதிக வாக்கு பெறுகிறார்களோ அவர் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். உள்ளபடியே கணக்கு எடுத்துப் பார்த்தால், ஊரிலுள்ள 1,000 பேர்களில் 8 பேர் போட்டியிட்டால், 150 வாக்குகளை வாங்கியவர் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நியாயப்படி பார்த்தால், மைனாரிடி மக்களின் வோட்டுகளைப் பெற்று ஒருவர் எப்படித் தலைவராக வரமுடியும் என்று சொல்லப்படுகிறது.

ஜனநாயகத்தில் ஒரு முறையை வைத்து தேர்தல் நடத்துகிறோம். அதே நேரத்தில் நிர்வாக ஒழுங்கும் ஏற்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டுதான் இவைகளைச் செய்கிறோம். நாளுக்கு நாள் நம்முடைய மனப்பக்குவம் வளர்ந்து, தக்கவர்களை தேர்ந்தெடுக்கிற முறை வரும்பொழுது இப்படிப்பட்ட குறைகள் நிச்சயம் மாறிப்போய்விடும் என்பதை எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.



அடுத்து, நம்முடைய அழகர்சாமி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு முடிவைச் சொன்ன பிறகு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய நீதிபதி தான் விசாரிக்கவேண்டும், அரசாங்கம் அதில் வரக்கூடாது என்று சொன்னார்கள். அது எந்த முறையிலும் முறையாக இருக்காது. இப்பொழுதே கூட காலம் கடத்தப்படுகிற நிலைமை ஏற்படுகிறது என்று முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் சொன்னார்கள். வழக்கு என்றால் உடனே நீதிமன்றத்திற்குப் போய்விட்டால், தவறு செய்பவர்களுக்கு நீதிமன்றம் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலை வந்து விடுகிறது என்றெல்லாம் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் செய்த முடிவு சரியானதல்ல என்றால், அரசு தலையிட்டு அந்த முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையை வைத்திருக்கிறோம்.

நீதிமன்றத்திற்கு செல்கின்ற உரிமை அவர்களுக்கு எப்பொழுதும் உண்டு. ஒருவர் நீதிமன்றத்திற்குச் செல்லாத நிலையை ஜனநாயகத்தில் ஏற்படுத்தி விட முடியாது. ஆகவே, நீதிமன்றத்திற்குச் செல்லலாம். நீதிமன்றங்களில் எல்லா வழக்குகளிலும்கூட அந்த முறைகளைப் பின்பற்றுவதில்லை. வழக்குகளை ஏற்றுக்கொண்டாலும் கூட நடைமுறையில் இருக்கக்கூடிய விதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு குறுக்கே நிற்பதில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் பார்க்கிறோம்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்டவைகளையெல்லாம் வருங்காலத்தில் நிச்சயம் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த ஐந்தாண்டு காலத்தில் நடைமுறையில் பார்த்து இதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் ஏதாவது இருந்தால், அவைகளையெல்லாம் ஒரு பாடமாக ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டத்தை எந்த முறையில் திருத்த வேண்டுமோ, அப்படியெல்லாம் திருத்தி, வருங்காலத்தில் செய்வதற்கு ஒரு வழிகாட்டியாக, முன்மாதிரியாக இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட முறைகளுக்கு ஏற்ப இந்தச் சட்டத்தை வகுத்திருக்கிறது,
என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்; நன்கு ஆலோசனை பிற்பகல்
செய்து பார்த்து எப்படி எப்படிச் செய்யமுடியும் என்று போடப்பட்டிருக் 2-00
கிறது. ஆகவே, நான் அளித்திருக்கும் விளக்கத்தின் மூலம் அவர்களுக்கு மன நிறைவு ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன், காலம் அதிகமாக இல்லாததால், அதிகமாகச் சொல்லவில்லை.

ஊராட்சி மன்றத் தலைவர் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்பட்டால் தானே ஜனநாயகம் என்று ஆகும் என்று திரு சுப்பராஜா எடுத்துச் சொன்னார்கள். நாம் இப்பொழுது ஒரு படி மேலே வந்திருக்கிறோம். ஊராட்சித் தலைவர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தேர்ந்தெடுக்கும் நிலை மாறி, மக்களே தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தத் தலைவர்கள் அத்தனை பேர்களும் கூடி, தங்களுக்குள்ளே தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்று ஜனநாயகத்தின் அடிச்சுவட்டில் பாதிவழி கடந்து வந்திருக்கிறோம் (குறுக்கீடு) பாதிக் கிணறு என்கிறார்கள், பாதிக் கிணறு இல்லை, பாதி வழி தாண்டி வந்திருக்கிறோம். முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

ஊராட்சி மன்றங்களுக்கு ஜூலை மாதத்தில் தேர்வுகள் வரும். திரு. விநாயகம் சொன்னார்கள், அப்பொழுது, அப்பொழுது சட்டத்திலே கொஞ்சம் கொஞ்சம் திருத்தம் கொண்டு வருகிறார்கள், முழுமையாகக் கொண்டு வர வேண்டும் என்கிற எண்ணமே வரவில்லை என்றார்கள். 1920-ஆம் ஆண்டில் நம்முடைய நகராட்சி சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1947-லிருந்து ஜனநாயகத்தை மேற்கொண்டிருக்கிறோம். இன்று வரையில் திருத்தப் படாமல் இருப்பதையும் மனத்தில் கொண்டு பார்க்க வேண்டும். "காம்ப்ரெஹென்ஸிவ் அமெண்ட்மெண்ட்" என்று முழுமையாக நிறைவேற்றினாலும், அடுத்த ஆண்டிலேயே சில மாற்றங்கள் செய்ய வேண்டிய நிலைகள் வரலாம்.

நகராட்சித் தேர்தல்கள் பற்றி பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம். திருத்தங்கள் வரும்போது, நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகைகள் இருக்கின்றன. இப்பொழுது ஊராட்சித் தேர்தல்களை மூன்று ஆண்டு காலமாகியும் செய்ய வில்லையே என்றார்கள். முன்னாலே 70-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வருவதாக இருந்தது. இப்பொழுது ஆறு மாதங்கள் தள்ளி அந்தக் காரியங்களைச் செய்ய இருக்கிறோம். குறிப்பாகச் சொன்னார்கள், சட்டத்திலே இன்னொரு ஆறு மாதத்திற்கு வழி செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று. தள்ளிவைக்க வேண்டும் என்கிற உள் எண்ணம் கிடையாது. ஆகவே, அத்தகைய அச்சம் தேவையில்லை. ஜூலை மாதத்தில் தேர்தல் நடக்க ஆய்வு வேலைகள் நடைபெறுகின்றன. பாராளு மன்றத்தில், இரண்டு மூன்று மாதங்களுக்கு நிறுத்திவைத்து விட்டு, நாடாளுமன்ற வாக்காளர் பட்டியலை தயார் செய்யச் சொன்னார்கள். அப்படி வந்தால், மறுபடியும், சட்ட மன்றத்தைக் கூட்டி, திருத்தங்கள் கொண்டு வருவது இயலாத காரியம். ஆகவே, பாதுகாப்பாக செய்யப்படும் கவசம் தான் இது. நின்றுவிடுமோ என்ற அச்சம் தேவையில்லை. ஆகவே, நிச்சயமாக ஊராட்சி மன்றத் தேர்தல்கள் வரும் (குறுக்கீடு).

"பைஃபர்கேஷன் ஆப் பஞ்சாயத்ஸ்" என்று சொல்கிறார்கள். 13,000 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. பாதிக்கு மேற்பட்ட மன்றங்களுக்கு நிதிக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறது. அதைப் பிரிக்கச் சொல்லி விண்ணப்பங்களைப் பார்த்தால், இன்னும் ஏறத்தாழ 5,000 வரும். இப்படி எண்ணிக்கைகளை பெருக்குவதில் லாபம் இல்லை. "வயபிள் யூனிட்" ஆக, பொருளாதார ரீதியில், அமைப்பு முறையில் இருக்க வேண்டும். இவற்றிலெல்லாம் நிதிநிலைகள் பெருகவேண்டும். ஜாதி, வெறுப்பு உணர்ச்சிகள் காரணமாக சங்கடங்கள் வருகின்றன. நிதிநிலை பெருகி, தேவையான காரியங்கள் செய்ய வேண்டும். ஊராட்சி மன்றங்களில் எண்ணிக்கையைப் பெருக்குவதைவிட மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும். எண்ணிக்கை பெருகுவதால் நன்மைகள் அதிகமாக வரும் என்று கருத முடியாது.

கோட்டையைச் சுற்றும் நிலையில் உள்ளவர்கள் செய்கிறார்கள் என்றார்கள். மேலவை எதிர்க்கட்சித் தலைவர், திரு. ராஜாராம் நாயுடு பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள், பிரித்துக் கொடுத்திருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்களும் கேட்டதில், நியாயமானதைச் செய்திருக்கிறது. அதனால் அவர்கள் கோட்டையைச் சுற்றிவருகிறார்கள் என்ற பொருளல்ல. வினாயகம் அவர்கள் எத்தனையோ பிரச்சினைகளை எங்களிடம் சொல்லியிருக்கிறார். சொல்கிறவை நியாயமாக இருந்தால், செய்துகொண்டிருக்கிறோம்.

ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பது தேர்தலுக்காகச் செய்யப்படும் காரியம் இல்லை. தொடர்ந்து செய்யப்பட வேண்டிய காரியம். இப்பொழுது பிரிக்கிறோம் என்றால், தேர்தல் நடத்த முடியாது. அப்படிப்பட்ட காலகட்டத்தில் இருக்கிறோம். அவருக்கு அவருடைய பகுதியில் ஒரு ஊராட்சி மன்றத்தைப் பிரிக்க வேண்டும் என்பதை இப்பொழுது—முன்பே சொல்லியிருக்கிறார்கள்—பேசுகின்ற நேரத்தில், நேரிடையாக அப்படிச் சொல்வதானால், அந்த ஃபைலை திறக்க முடியாது. தேர்தல் முடிந்த பிறகுதான் வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

"பைஃபர்கேஷன்" செய்யக்கூடாது என்பதில் கட்சி அடிப்படை இல்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னாலும் நடைமுறைக்கு ஒத்துவராவிட்டால் முடியாது, ஆகவே, விரும்பிய வண்ணம் செய்து கொடுப்பது என்பது இல்லை. இந்தச் சட்டம் வருங்காலத்தில் பல காரியங்களுக்கு முதல் கட்டமாக, சோதனைக் கட்டமாக, எடுத்துப் பரிசீலித்துஆழ்ந்து கவனித்து, செய்யப்பட்ட ஒன்று. அவசரக் கோலத்தில் செய்ததல்ல. ஜனநாயகத்தில் மக்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு உரிமை. ஆகவே, நடைமுறையில் மேலும் சிக்கல்கள் இருந்தால், அதைப் பரிசீலித்துப் பார்த்து திருத்தும் நேரத்தில்



திருத்த வாய்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்று கோருவதால் பொறுக்குக் குழுவுக்குப் போகவேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தத் தேவையில்லை என்று சொல்லி, திருத்தங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டு, மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. இராமமூர்த்தியின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—
"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி.—

"பிரிவு 2 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**Thiru K. RAMAMOORTHI :** Sir, in view of the discussion which has already taken place, I do not move my amendment.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3 முதல் 12 வரையில் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

### பிரிவு 13.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 13 மசோதாவின் உரிய பகுதியாக்கப்படவேண்டும்."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்—

**"In sub-section (11) of the proposed new section 149-A of the principal Act, for the words 'by notification with effect from a date to be specified therein or drop further action', the words 'immediately after the issue of notification or drop further action', shall be substituted."**

**திரு. எம். பூபதி :** சார், நான் வழிமொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து முடித்தவுடனே, அந்தத் தலைவர், உதவித் தலைவரிடத்தில் சார்ஜ் ஒப்படைக்க வேண்டும். அப்பீல், ரிட் போடுவதென்றால், அந்த முறை அமைச்சருக்கும் தெரியும். ஆகவே, அதைப்பற்றி மீண்டும் சிந்தித்துப் பார்த்து, திருத்தமாகக் கொண்டு வரவேண்டும் என்ற நம்பிக்கையோடு என் திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 13—பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 14—பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 15.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 15 இந்த மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், 15-வது பிரிவுக்கு என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்—

In section 152 of the principal Act, the following shall be inserted as new sub-section (12-A):—

"12-A. The President shall be removed if the majority of the voters desire to do so."

**திரு. எம். பூபதி:** நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

**திரு. வி.கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, எந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ, அதே மக்களால் மீண்டும் ரீகால் பண்ணப் படவேண்டும். ஆனால் அமைச்சர் அவர்கள் கூறும்போது சொன்னார்கள், 1952-ம் ஆண்டிலேயே மக்களால் தேர்ந்தெடுக்கக்கூடிய முறை இருந்தது என்று. கை தூக்கி தேர்ந்தெடுக்கக் கூடிய முறைதான் இருந்தது. ரகசிய முறை கிடையாது............................

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கிராம ஊராட்சி மன்றங்களிலே கைதூக்கும் முறை இருந்தது. ஆனால் பேரூராட்சி மன்றங்களிலே ரகசியமுறை தேர்தல் அமல்படுத்தப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, நான் கேட்பது கிராம ஊராட்சியைப் பற்றித்தான். பதின்மூன்றுயிரம் கிராம ஊராட்சி களிலே 500 பேரூராட்சிகள் என்பது எங்கே ? கை தூக்கி தேர்ந்தெடுக்கப் படக்கூடிய முறை இருந்ததே, அதிலே கோளாறு இருந்தது. அந்த முறையைக் கொண்டுவருகிறோம் என்ற தொனியில் கூறப்பட்டது சரியல்ல. ரகசிய முறையில்தான் இருக்க வேண்டும். இதையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து, திருத்துவதற்கு எதிர்காலத்தில் சட்டம் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையால் நான் இதை வற்புறுத்தவில்லை.

திரு வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 15 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 16 முதல் 19 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/1970) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, பேரவை மீண்டும் 8—4—1970-ம் தேதியன்று காலை 9 மணிக்குக் கூடும். பிற்பகல் 2-10

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

@193. Notification issued with G.O. Ms. No. 1252, Rural Development and Local Administration, dated the 18th July 1969, making the Assistant Commissioners in the Corporation of Madras (Conditions of Service), Rules, 1968. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919].

194. Notification issued with G.O. Ms. No. 1798, Public (Services-A), dated the 29th September 1969, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Assistant Lecturer in Drawing in Technical High Schools within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

B. *Reports, Notifications and other papers.*

†139. Annexure to the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 10 of 1970).

† 140. Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1970 (L.A. Bill No. 13 of 1970).

141. List of Unstarred Questions and Answers from Nos. 41 to 64.

@ Laid on the Table of the House on 4th April 1970.
Despatched to Members on 3rd April 1970.

## இணைப்பு 1

[407-ம் பக்கத்தில் 694-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

| மாவட்டம். (1) | 1967 மார்ச் முதல் ஜூன் 1969 வரையில் வந்த அகதிகள் (2) | வாணிபக் கடன் அளிக்கப்பட்ட குடும்பங்கள். (3) | சிந்தனூர் விவசாயத் திட்டத்திற்கு அனுப்பப்பட்ட குடும்பங்கள். (4) | அஸ்தினாபுரத்தில் உள்ள மதன் தொழிற்சாலைக்கு அனுப்பப் பட்டவர்கள். (5) | அதிகச் சுமை ஏற்றப்படும் வண்டிகளில் மெக்கானிக் வலவர் பயிற்சி பெறுவதற்காக மானாவுக்கு அனுப்பப்பட்டவர்கள். (6) | மூப்புக்கான ஓய்வு ஊதியம் வழங்கப் பட்டோர். (7) | தனியார் துறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டோர். (8) | நிலக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டோர். (9) | வீட்டு வசதிக் கடன் அளிக்கப்பட்டவர்கள். (10) | வீட்டு மனை அளிக்கப்பட்ட நபர்கள். (11) | விவசாயத்திற்காக நிலம் அளிக்கப் பட்ட நபர்கள். (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | | 1,063 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| செங்கற்பட்டு | | 1,485 | 27 | .. | .. | .. | | .. | .. | .. | 35 |
| வட ஆற்காடு | | 175 | .. | .. | .. | .. | | .. | 122 | .. | .. |
| தென் ஆற்காடு | | 107 | .. | .. | .. | 4 | | .. | 60 | 99 | 10 |
| தஞ்சாவூர் | | 579 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| திருச்சிராப்பள்ளி | | 578 | 29 | 10 | 47 | 3 | | .. | .. | .. | .. |
| மதுரை | | 255 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| இராமநாதபுரம் | 15,665 | 884 | .. | .. | .. | 13 | 777 | 348 | .. | .. | .. |
| திருநெல்வேலி | | 520 | .. | .. | .. | 1 | | .. | .. | .. | .. |
| சேலம் | | .. | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| தர்மபுரி | | .. | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| கோவை | | 38 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| நீலகிரி | | 5 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| கன்னியாகுமரி | | .. | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | .. | 5,689 | 56 | 10 | 47 | 21 | 777 | 348 | 182 | 99 | 45 |

| District. (1) | Number of repatriates areived from March 1967 to June 1969. (2) | Number of families to whom business loan was granted. (3) | Number of families sent to Sindhanur Agricultura Project. (4) | Number of persons sent to Hastinapur for employment in Madan Industries. (5) | Number of persons sent to Mana for undergoing training in Heavy Vehicle Mechanic-cum-Drivers. (6) | Number of persons granted old age pension. (7) | Number of persons employed in Private Sector. (8) | Number of persons settled under Land Colonisation Scheme. (9) | Number of persons granted Housing loan. (10) | Number of persons allotted plots. (11) | Number of persons allotted agricultural lands for cultivation. (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Madras | | 1,063 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Chingleput | | 1,485 | 27 | .. | .. | .. | | .. | .. | .. | 35 |
| North Arcot | | 175 | .. | .. | .. | .. | | .. | 122 | .. | .. |
| South Arcot | | 107 | .. | .. | .. | 4 | | .. | 60 | 99 | 10 |
| Thanjavur | | 579 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Tiruchirappalli | | 578 | 29 | 10 | 47 | 3 | | .. | .. | .. | .. |
| Madurai | | 255 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Ramanathapuram | 15,665 | 884 | .. | .. | .. | 13 | 777 | 348 | .. | .. | .. |
| Tirunelveli | | 520 | .. | .. | .. | 1 | | .. | .. | .. | .. |
| Salem | | .. | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Dharmapuri | | .. | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Coimbatore | | 38 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| The Nilgiris | | 5 | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Kanyakumari | | .. | .. | .. | .. | .. | | .. | .. | .. | .. |
| Total .. | | 5,689 | 56 | 10 | 47 | 21 | 777 | 348 | 182 | 99 | 45 |

## இணைப்பு-2.

[408-ம் பக்கத்தில் 695-ஆம் எண்ணுள்ள வினவிற்குரிய விடையைக் காண்க.]

### பர்மாவிலிருந்து இந்தியா திரும்பிய அகதிகளின் வாழ்வு செம்மை யுறுவதற்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

(1) தாயகம் திரும்பிய அகதிகள் சிறு தொழில்களை அமைத்துக் கொள்வதற்காக 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய்வரை வாணிபக் கடன் உதவியளித்தல்.

(2) அகதி ஒருவர் மாநில அரசாங்கப் பதவியில் நியமிக்கப்படுவதற்கு பிறவகையில் தகுதிகள் பெற்றிருப்பின், வயது, கல்வித் தகுதி குறித்த விதிகளைத் தளர்த்தல்.

(3) அரசுத் துறைகளில் பணியில் சேர்க்கப்படுவதற்கு வேலை வாய்ப்பு நிலையத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர்களுக்கு உயர் முதன்மை அளித்தல்.

(4) அகதிகளின் மக்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கும் திட்டம்.

(5) (a) கல்வி நிறுவனங்களில், பின்வரும் வகையில் இடம் ஒதுக்கு தல் :—

(1) எம்.பி.பி.எஸ்.—இரண்டு இடங்கள்.

(2) பி.எஸ்.ஸி. (வேளாண்மை)—இரண்டு இடங்கள்.

(3) பொறியியல் கல்லூரி—ஓர் இடம்.

(4) கால்நடை மருத்துவம்—இரண்டு இடங்கள்.

(b) பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்குத் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 5 சத வீதத்திற்கு இடங்கள் ஒதுக்கப்படுதல். தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு சிறப்பான உதவித்தொகை அளித்தல்.

(6) அகதிகள் குழந்தைகளுக்காகத் தங்கும் வசதிகளுடன் இருபாலார்க் குமான பள்ளி ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாத்தூரில் அமைத் தல்.

(7) அகதிகள் வேளாண்மையில் ஈடுபடுவதற்காக நிலம் அளித்து பிற உதவியையும் வழங்குதல்.

(8) நிலையாக குடியேறுவது பற்றிய விதியைத் தளர்த்தி மூப்புக் கான ஓய்வூதியம் அளித்தல்.

(9) அரசு அளித்துள்ள கடன் வசதியுடன் சிறுதொழில் செய்ய அகதிகளுக்கென்று பெட்டிக்கடைகள், விற்பனைக் கடைகள் ஆகியவற்றை உள்ளூர் அதிகாரிகள் அமைத்துக் கொடுத்தல்.

(10) அகதிகளில் ஆதரவற்ற மகளிருக்கென தனிப்பட்ட விடுதி ஒன்றைத் தொடங்குதல்.

(11) தொழில் அல்லது வாணிபம் எதற்கேனும் உரிமம், அனுமதி போன்றவை தேவைப்படும்போது அவற்றை வழங்குவதில் இவர்களுக்கு முதன்மை அளித்தல்.

(12) தஞ்சாவூர் மாவட்டத்தில் மகளிருக்கென தையல் பணி நிலையம் ஒன்றும் புதுப்பட்டினத்தில் சிறுர் பள்ளிகள் இரண்டும் அமைத்தல்.



(13) செங்கற்பட்டு மாவட்டம், மொண்டியம்மன் நகரில் மகளிருக்கென தையல் பணி நிலையம் ஒன்றைத் தொடங்குதல்.

(14) அதிக பாரம் ஏற்றப்படாத வண்டிகளில் வலவர் பயிற்சியை அளித்தல்.

(15) சென்னையிலுள்ள வாணிகப் பயிற்சி நிறுவனத்தில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றிற்கு குறுகிய கால படிப்பு அளித்தல்.

(16) வேளாண்மையல்லாத பிற பணிகளில் ஈடுபட்டுள்ள பர்மா அகதி களின் குடும்பங்களுக்கு கிராமப் பகுதிகளில் ரூ. 2,250 உயர் வரம்புத் தொகை, நகரப் பகுதிகளில் ரூ. 4,600 உயர்வரம்புத் தொகை என்றும் வரம்புக்குட்பட்ட வீட்டு வசதிகள் செய்து கொடுத்தல்.

(17) சென்னையில் கூட்டுறவு அச்சகம் ஒன்றைத் துவக்குதல்.

### *Statement showing the schemes under implementation for the rehabilitation of repatriates from Burma.*

1. Grant of business loans ranging from Rs. 2,000 to Rs. 5,000 to enable the repatriates to set up petty trades.

2. Relaxation of rules regarding age, educational qualifications, etc. for employment in State Government service where the repatriate is otherwise suitable for employment.

3. Grant of high priority in the matter of employment in Government department, when recruitment is made through Employment Exchange.

4. Grant of educational concessions to children of repatriates.

5. (a) *Reservation of seats in educational institutions as follows :—*

1. M.B.B.S.—Two seats.
2. B.Sc. (Agriculture)—Two seats.
3. Engineering College—One seat.
4. B.V.Sc. course—Two seats.

(b) Reservation of five per cent of seats in Industrial Training Institutes for Burma (and Ceylon) repatriates and grant of special stipends for boys admitted in the Industrial Training Institutes.

6. Special Residential School for repatriate children (boys and girls) at Mathur in Tiruchirappalli district.

7. Settling of repatriates in agriculture by grant of land along with other assistance.

8. Grant of old age pension by waiving the rule relating to domicile.

9. Construction of bunks/stalls by local authorities for being allotted to repatriates for setting up petty business with Government loan assistance.

(10) Special Home for unattached women among repatriates.

(11) Priority in the grant of licences, permits, etc., when these are required for any occupation or trade.

12. Establishment of a work centre in tailoring for women and two Balwadi Centres at Pudupattinam in Thanjavur district.

13. Starting of a work centre in tailoring for women at Mondiamman Nagar, Chingleput district.

14. Drivers' training course in light duty vehicles.

15. Condensed course in Typewriting and Shorthand at the Institute of Commercial Practice, Madras.

16. Provision of housing facilities in rural and urban areas to the families of Burma repatriates who are settled in non-agricultural occupation with ceiling of Rs. 2,250 for rural areas and Rs. 4,600 for urban areas.

17. Starting of a co-operative printing press at Madras.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**புதன்கிழமை, 1970 ஏப்ரல் 8.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**கள்ளிக்குடி முருகன் டாக்கீசில் கள்ள டிக்கட்டுகள் கைப்பற்றல்.**

*குறுகியகால வினா எண் 5.— **திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அருகே கள்ளிக்குடியில் உள்ள முருகன் டாக்கீசில் 1970 மார்ச் மாதத்தில், கள்ள சினிமா டிக்கட் இருந்து கைப்பற்றப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அந்த திரைப்பட அரங்கின் பங்குதாரர்கள் யார் யார் ?

(எ) எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) 1970-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8-ம் நாள் திருமங்கலத்திற்கு அருகில் உள்ள கள்ளிக்குடி முருகன் டாக்கீசில் இரண்டாவது காட்சியின் போது போலி அனுமதி சீட்டுகள் கைப்பற்றப்பட்டன.

(உ) கேளிக்கை வரி செலுத்துவதற்கான அனுமதி கோரிய மனுவில் திரு. கே. சண்முக சுந்தரம் என்டவர் உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திரைப்பட அரங்கின் பங்குதாரர்கள் பற்றி தகவல் இல்லை.

(எ) கேளிக்கை வரி அலுவலர் ஏய்க்கப்பட்டவரி, மேல்வரி, ஆகியவற்றை நிர்ணயித்தலும், ஏனைய பிற நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றார்.

**திரு என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 8—3—1970 அன்று கள்ளிக்குடியில் நடத்தப்பட்ட சோதனையில் எத்தனை ரூபாய் பெறுமானம் அளவுக்கு போலி டிக்கட்டுகள் கைப்பற்றப்பட்டன ? இதன் உரிமையாளர் அல்லது பங்குதாரருக்கும் ஆளும் கட்சிக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அன்றைய தினம் நடைபெற்ற காட்சிக்கு கேளிக்கை வரி எவ்வளவு பெறுமானம் என்ற குறிப்பு இல்லை. ஆனால், வரி ஏய்க்கப்பட்ட தொகைக்குப் புள்ளி விவரம் இருக்கிறது. வரி ஏய்க்கப்பட்ட தொகை ரூ. 872 என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. "ஆளுங்கட்சிக்கும் இவர்களுக்கும் தொடர்பு உண்டா ?" என்று கேட்பது அர்த்தமற்றது என்பதை நான் தெளிவாக தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. கே. விநாயகம்.** : சார், இப்படி ஏமாற்றியதன் விளைவாக நமக்கு ஏற்படுகிற நஷ்டங்கள் பல இடங்களில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுப்பதற்கு ஏதாவதொரு "இன்ஸ்பெக்டிங் ஸ்க்வாடு" மாதிரி வைப்பதற்கு அரசு முன் வருமா ? ஆளுங்கட்சியோடு சேர்ந்தவரல்ல என்று சொல்லிவிட்டால் போதும். அது அர்த்த மற்ற கேள்வி என்பதில் என்ன பொருள் இருக்கிறது என்று விளக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, பங்கு தாரர்கள் யார் யார் என்று பெயர்கள் தெரியவில்லை என்று நான் பதில் சொன்னேன். "ஆளுங்கட்சிக்காரரா ?" என்றால், "காங்கிரஸ்கட்சிக்காரர்" என்று நான் சொல்லி விடுவது ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. குற்றச்சாட்டாகக் கூறக் கூடாது. பங்கு தாரர்கள் பெயர் பற்றி எங்களுக்குத் தகவல் இல்லை. ஷிப்பிமாடோ-கிராப் சட்டத்தின்படி கேளிக்கை வரி செலுத்துவதற்கான அனுமதி கோரும் மனுவில் உரிமையாளர் பெயர் மட்டும் தான் இருக்கும். அதில் பங்குதாரர்கள் யார் யார் என்று குறிப்பிட்டிருக்காது. ஒருவேளை கனம் உறுப்பினரிடம் தகவல் இருந்தால் கொடுக்கலாம். அதை விட்டு விட்டு, "ஆளுங்கட்சிக்காரரா ?" என்று கேட்பதென்றால் "இல்லை ; காங்கிரஸ்காரர்" என்று நான் பதில் சொல்லிவிட எவ்வளவு நேரம் ஆகும் ? அதனால்தான், அவ்வாறு குறிப்பிட்டேன்.

மேலும், இதுபோன்ற வரி ஏய்ப்புக்களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று டி.சி.டி.ஓ.க்களுக்கெல்லாம் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. கனம் உறுப்பினர் குறிப்பிடுவது போன்ற ஸ்க்வாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*State quota of I.A S Cadre*

* 710 *Q*—THIRU G GOMATHYSANKARA DIKSHIDAR Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) Whether th State quota of I.A.S. Cadreis being given mainly to officers working in the Revenue Department;

(*b*) the reasons therefor ; and

(c) the steps taken by the Government to uphold the claims of officers working in other departments.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) & (இ) அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள 1954-ம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (பணிக்கமர்த்தும்) விதிகளின் 9-வது விதி, ஒவ்வொரு மாநிலத்தின் இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதிதரத்தின் பதவி உயர்வுப் பங்கீட்டளவில் 85 சதவீதம், ஸ்டேட் சிவில் சர்வீஸ் அதிகாரிகளைக் கொண்டு, அதாவது வருவாய்த்துறை யில் பணியாற்றும் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட வேண்டு மென்றும், எஞ்சிய 15 சதவீதப் பதவி உயர்வுப் பங்கீட்டளவு, ஸ்டேட் ஸிவில் சர்வீசில் அல்லாத பிற பணிகளில் உள்ள அதிகாரி களுக்கு அதாவது, பிற துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்காக், ஒதுக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிடுகிறது.

(உ) ஸ்டேட் ஸிவில் சர்வீஸில் அல்லாத பிற பணிகளில் உள்ள அதிகாரிகளுக்கான பதவி உயர்வுப் பங்கீட்டுச் சதவீதத்தை அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசு நிச்சயித்துள்ள காரணத் தால், இந்த அதிகாரிகளின் நலனும் அந்த அடிப்படையில் பாதுகாக்கப்படுகிறது.



THIRU T. MARTIN : Mr. Speaker, in 1969 the Union Public Service Commission which came here to settle the I.A.S. quota for this State has not settled it. May I know from the Hon. the Chief Minister the reason for the same ? Further, with regard to certain Gazetted Officers, may I know whether some officers holding tenure posts were confirmed in those tenure posts, Sir ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : 1969 நவம்பர் மாதத்தில் வருவதாக தேர்வுக்குழு அறிவித்திருந்தது. அந்த நேரத்தில், நேரடியாக நியமனம் பெற்ற டெபுடி கலெக்டர்கள், தங்கள் ஸீனியாரிடி சரிவர அமைக்கப்படுவதற்கு முன்னால் தேர்வுக்குழு வந்தால், தங்களுக்கு அநீதி ஏற்படும் என்று கோரிக்கை விடுத் தார்கள். அந்தக் கோரிக்கையினுடைய நியாயத்தை அறிந்த அரசு, தேர்வுக் குழு வருவதை ஒத்திப்போடுமாறு கேட்டுக் கொண்டது.

**திரு. கே. விநாயகம்** : மற்ற இலாக்காக்களில் இருப்பவர்களுக்கு, இந்த ஐ.ஏ.எஸ். பெற என்ன வழி இருக்கிறது ? ரெவினியூ டிபார்ட் மென்டில் இருப்பவர்களுக்குத்தான் முதன் முதல் வாய்ப்புத் தரப் படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன முயற்சி செய்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தடுப்பதற்கு அல்ல. ஏற்கனவே முழுவதுமே ரெவினியூ டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்தது. 1956-ஆம் ஆண்டில்தான் ரெவின்யூ டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்கு 85 சதவீதம் என்றும், மற்ற டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்கு 15 சதவீதம் என்றும் ஆக்கியிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்விகள் 711, 712, 713, 714, 715, 716, 717 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

*Special Employment Exchange for Physically handicapped.*

* 718 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Special Employment Exchange for the physically handicapped has receievd applications for the post of District and Sessions Judges ; and

(*b*) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) & (இ) மாவட்ட செஷன்சு நீதிபதிப் பதவிக்கான ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகத்திடம் வந்தது. அது அரசுக்கு அனுப்பப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரியான, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் கீழ் நிலையில் இருக்கக் கூடிய பதவிகளுக்குத் தான் அது மாதிரி வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று சொல்லப் படுகிறது. அப்படியிருக்கிற உயர் பதவிக்கு அவர்கள் மனுப் போடும்போது, அவர்கள் மனுக்களை கவனிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : மாவட்ட நீதிபதி வேலையை மிக உயர்ந்த பதவி என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு டி. மார்ட்டின் :** மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் சர்வீசில் இருக்கக்கூடியவர்களுக்கு 18 என்றும், டைரக்ட் ரெக்ரூட் 6 என்றும் இருந்ததை மாற்ற அரசு நினைத்திருப்பதாகவும், அது கூடாது என்பதற்காக சப் ஜட்ஜ், முன்சீப் மகாநாடு திருச்சியில் நடந்ததாகக் கூறப்படுகிறதே, ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** முதலில் இருந்த விகிதா சாரத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று உயர்நீதி மன்றம் சிபார்சு செய்தது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்க னவே இது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

*Employment Exchange at Erode.*

*719 Q.—Thiru K. SAHADEVA KANDER: Will the Hon. Minister for Industries be pleased to state—

(a) whether an Employment Exchange has been opened in Erode; and

(b) if so, the employment potential in the area?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) வேலைவாய்ப்புத் துணை அலுவலகம் ஒன்று ஈரோடில் திறக்கப்பட்டுள்ளது. இது 19—11—1969 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

(இ) 25 தொழிலாளர்களும் அதற்குமேலும் வேலைக்கு அமர்த்தும் 71 நிறுவனங்கள் ஈரோடு வட்டத்தில் உள்ளன. சுமார் 8,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பஞ்சாலையும் இதில் அடங்கும். வெளுத்தல், சாயம்போடுதல், வண்ண அச்சிடுதல், ஆகிய பணிகளை இந்த வட்டத்தில் முக்கிய பொருளாதார நடவடிக்கை களாகும். இதைத் தவிர தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்கும் கருவி அறைப்பட்டரை ஒன்றும் இருக்கிறது. ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் 2 கல்லூரிகளும இருக்கின்றன. ரயில்வே டீசல் என்ஜின் கொட்டகை ஒன்றும் கூட வேலைவாய்ப்பு அளிக்கிறது. தற்போது இந்த வட்டத்தில் வேலை வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

**அஞ்சல் படிவங்களில் தமிழ்.**

*720—வினா. **திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிடைக்கும் தபால் கார்டு, கவர், தந்தி பாரங்களில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம். அஞ்சல் படிவங்களைப் பொறுத்த வரையில் அவை இந்தி, ஆங்கிலம் வட்டார மொழி ஆகியவற்றில் அச்சிடப்படுகின்றன என்றும், நீளமான படி வங்களைப் பொறுத்த வரையில் இந்தி, ஆங்கிலம், வட்டார மொழி ஆகியவற்றில் அவை தனித்தனியாக அச்சிடப்படுகின்றன என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது. அஞ்சல் அட்டைகள், உள் நாட்டு அஞ்சல் தாள், அஞ்சல் உறைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் எல்லா வட்டார மொழிகளிலும் அவற்றை அச்சிட்டு வெளியிடுவது கடினமென்றும் ஒவ்வொரு வட்டாரத்திற்கென தனித்தனியாக அச்சிடுவதனால் ஏராளமான செலவாகும் என்றும் பிற வட்டார மக்களுக்கு அது புரியாதென்பதும் அவர்களது கருத்தாகும்.



**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மத்திய அரசு பிராந்திய மொழி களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் அஞ்சல் அட்டைகளைப் பிராந்திய மொழிகளில் அச்சிடுவதில் கவனக் குறைவாக இருக்கிறது. பிராந்திய மொழிகளில் அச்சிடுவதே அதிக உபயோகமாக இருக்கும் என்பதனால் நமது அரசு உடனடியாக இதில் அக்கறை காட்டி, பிராந்திய மொழிகளில் அச்சிடுவதை வலியுறுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நம் அரசாங்கத்தின் கருத்தும் அதுதான். எனவே மீண்டும் வற்புறுத்திக் கொண்டு வரு கிறோம்.

**திரு. கே. விநாயகம் :** இன்று ஆட்சியில் இருக்கிற கட்சியின் அடிப் படையான கொள்கையே இது தான். அஞ்சல் அட்டைகள், டெலி கிராப் பாரம் ஆகியவை பிராந்திய மொழிகளிலேயே இருக்க வேண்டு மென்று சொல்லி வந்தும், இந்தக் கட்சி செல்வாக்கு பெற்றிருக்கிற காலத்தில் அதைக் கொண்டுவர முடியவில்லை என்றால் பிறகு எப்படிக் கொண்டுவருவது ? ஆகவே அதைக் கொண்டுவர யோசனை என்ன ? அப்படிக் கொண்டுவர போராட்டம் ஒன்றையே இந்தக் கட்சி நடத்துமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் போராட்டத்திற்கு தலைமை தாங்க முன் வருவாரா ? மாநில சுயாட்சிக் கோரிக்கையிலேயே இது அடங்கியிருக்கிறது.

**திரு. என் வரதராஜன் :** மெஜாரிட்டி மக்களுக்கு—நூற்றுக்கு 66 சத விகித்திற்கு படிக்கத் தெரியாதவர்கள் என்று கணக்குக் கொடுக்கப்பட் பட்டிருக்கிறது. தமிழ்நாடு மக்களும் அதற்கு உட்பட்டவர்கள். ஆகவே, சாதாரண பாரங்கள் எல்லாம் பிராந்திய மொழிகளில் இருந்தால் தான் உபயோகமாக இருக்கும். இந்தப் பிராந்திய மொழிப் பிரச்சினை உணர்ச்சி பெற்று வெடிக்கிறபோது மத்திய சர்க்கார் இதை மதிக்கிறேன் என்று சொல்வது, பின்னாலே மிதிக்கிறேன் என்று சொல்கிற நிலையில்தான் நடக்கிறது. ஆகவே இந்த பாரங்கள் எல்லாம் பிராந்திய மொழிகளி லேயே அச்சிட வேண்டுமென்று வற்புறுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** முன்பு நான் சொன்ன பதிலிலேயே இந்த அரசு அதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது என்று தான் சொன்னேன்.

**மாயூரம் சந்திப்புக்குத் தெற்கே மேம்பாலம்.**

*721 வினா **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சந்திப்பு புகைவண்டி நிலையத்திற்கு தெற்கே ரயில்வே மேம்பாலம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனை யிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா ;** ஆம், இது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையின் கீழ் இருக்கின்றது.

**திரு. என் கிட்டப்பா :** மேற்கண்ட மாயூரம் மேம்பாலத்திற்கு மத்திய மாநில அரசின் பங்குத் தொகையை அறிவிக்க இயலுமா ? அது எப் போது துவங்கப்பட இருக்கிறது என்று அறிவிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் திட்டத்திற்கு ந்யூ சர்வீசாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. காசிராமன் :** இந்த மேம்பாலத் திட்டத்திற்கு என்ன செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பற்றி குறிப்பு இல்லை. முன்பு 3 லட்சம் போடப்பட்டிருந்தது. இப்போது மதிப்பீடு அதிகமாக உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 30, 35 லட்சத்திற்கு வரும் என்று நினைக்கிறேன்.

**தமிழ்நாட்டில் புதிய ரயில் பாதைகள்.**

***722 வினா. திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் புதிய ரயில் பாதைகள் ஏதேனும் ஏற்படுத்த மத்திய அரசை நமது மாநில அரசு கோரியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் அவற்றிற்கு இணைக்கப்பட்டுள்ள வரிசை முறையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இந்திய அரசிடம் பரிவுரை செய்யப்பட்டுள்ளது :—

(i) சென்னை—அரக்கோணம், சென்னை—கும்மிடிபூண்டிப் பிரிவுகளில் மின்சார ரயில் பாதைகள் போடுதல்.

(ii) சேலத்திலிருந்து கரூர் வழியாக திண்டுக்கல் வரை புதிய அகல ரயில் பாதை போடுதல் : மணியாச்சி—திருநெல்வேலி குறுகிய இணைப்புப் பாதை உட்பட திண்டுக்கல்—தூத்துக்குடிப் பிரிவை அகல ரயில் பாதையாக மாற்றுதல்.

(iii) திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரை (நாகர்கோயில்—கன்னியாகுமரி வழியாக) புதிய ரயில்பாதை அமைத்தல்.

(iv) திருச்சிராப்பள்ளி—விழுப்புரம் குறுக்கு ரயில் பாதையை அகல ரயில்பாதையாக மாற்றுதல் ; விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டு வரை கூடுதல் அகல ரயில்பாதை ஒன்று அமைத்தல், அரக்கோணம்—செங்கற்பட்டு ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்றுதல்.

**திரு. என். கிட்டப்பா :** தரங்கம்பாடி—நாகூர்—காரைக்கால் இவற்றை இணைக்கக் கோரி மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்கிற செயற் குறிப்பு ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அத்தகைய செயற் குறிப்பு இல்லை. நாம் ஏற்கெனவே பரிந்துரைத்துள்ள திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கின்றன. அவை நிறைவேற்றப்பட்ட பிறகு இது கவனிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** திருநெல் வேலியில் இருந்து நாகர் கோவில் வழியாகத் திருவனந்தபுரம் செல்லும் திட்டம் 5-வது பிரையாரிடி கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் இந்த ப்ரையாரிட்டி நிர்ணயிக்கப்படுகிறது ? இதற்கு முதலிடம் கொடுத்து இதை நிறைவேற்ற அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த ரயில்வே திட்டம் ஏற்கனவே கைவிடப்பட்டது. இதை நாம் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோம்.

The Government of India in the Ministry of Railways indicated that the recent investigations had revealed that the line would cost about Rs. 8·6 crores and would not be remunerative due to well developed road transport in the area and that the proposal had been deferred for better days when further development in the region consequent on the



development of Tuticorin as major port took place. It has been considered that we should keep on pressing the Government of India though its accomplishment may well be delayed. The Government of India have subsequently indicated that they have decided to carry out a re-assessment of the earlier survey reports for considering the construction of Tirunelveli-Cape Comorin-Trivandrum railway lines and that they have proposed to take up fresh surveys in 1969–70 programme. After consulting the Collectors of Tirunelveli and Kanyakumari, the Government of India have again been urged to take up the line during the Fourth Plan itself.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** சத்தியமங்கலம்— சாம்ராஜ் நகர் ரயில்வே முன் காலத்திலேயே சிபார்சு செய்யப்பட்டது. அதுபற்றி இப்போது எதுவும் குறிப்பிடப்படவில்லையே. மைசூர்—கோவை இணைக்கும் இந்த ரயில் பாதையை ஈரோடு வழியாக அல்லது கோயம்புத்தூர் வழியாக அமைக்க—இதற்கு முதலிடம் கொடுக்க ஏதாவது செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சத்தியமங்கலம்—சாம்ராஜ் நகர் ரயில் பாதை வேண்டுமென்று சிபார்சு இருக்கிறது. சேலம்—பங்களூர் மீட்டர் கேஜ் லைன் மாற்றம் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து ராசிபுரம், தொட்டியம், முசிரி வழியாகத் திருச்சிக்கு இருப்புப்பாதை போடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்வே எல்லாம் அதற்காக செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் தெரிகிறது. இந்தத் திட்டத்திலேயே அதையும் இணைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நம்முடைய அரசு ஆவன செய்கிறது, ஆனல் மத்திய அரசுதான் ஆவன செய்வதில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** மேட்டூரிலிருந்து ஈரோட்டை இணைக்கின்ற ரயில்பாதை ஏற்கனவே போடுவதாக சொல்லப்பட்டு நடவடிக்கைகள் நடந்து வருகிறதாகத் தெரிகிறது. மேட்டூர் இப்பொழுது ஒரு தொழில் நகரமாக இருப்பதால் ஆங்காங்கு உள்ள இடங்களை அதோடு இணைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே மேட்டூர்—ஈரோடு ரயில் பாதையை அரசாங்கம் விரைவிலே எடுத்துக்கொள்ள முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது குறிப்பிலே இல்லை. ஆனாலும் அவர்கள் தனியாக எழுதியனுப்பினல் அதைப்பற்றிக் கவனிப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் படித்த நான்கு பாதைகளைப் பற்றி மட்டும் கேள்வி கேளுங்கள்.

**THIRU K. VINAYAKAM :** Sir, arising out of the answer given by the Hon. Minister, may I know what happens to the proposal to electrify the railway line from Madras to Arkonam. Is there any possibility of extending it to Tiruttani which happens to be a border-town of our State ? Also what happens to the introduction of the broad-gauge line between Madras and Arkonam ?

**THE HON. THIRU S. J. SADIQ PASHA :** Unfortunately Tiruttani is not in the picture.

[1970 ஏப்ரல் 8

*Police escort for night express buses.*

*723 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minsiter for Public Works be pleased to state whether special police escort have been provided to the State Transport buses during nights on long distance routes?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. க. கோமதி சங்கர தீட்சதர் :** நீண்ட நேரம் ஸ்டேட் பஸ்ஸிலே பிரயாணம் செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால் ஏற்படக்கூடிய அபாயங்களைத் தடுப்பதற்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்போது கனம் அங்கத்தினர் சொல்வது போன்ற நிலைமை இல்லை. எனவே பாது காப்புக்குத் தனியாகப் போலீஸ் இருக்க வேண்டுமென்று அரசு கருத வில்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, மதுரைக்கும் திருச்சிக் கும் மத்தியிலே இரவு நேரங்களிலே டாக்ஸிகளையும் பிளஷர் கார்களையும் கொள்ளையடிப்போர் நிறுத்திப் பல தடவைகள் வழிப்பறி செய்து இருக் கிறார்கள். அந்த நிலைமை ஸ்டேட் பஸ்ஸிலேயும் ஏற்படலாம் என்று எதிர்பார்த்து, குறைந்த பட்சம் ஒரு ஆயுதம் தாங்கிய சிப்பாயையாவது கூட அனுப்புவதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது போன்ற எண்ணம் அரசுக்கு இல்லை. ஏற்கனவே டபிள்–டெக்கர் பஸ்களில் ஹெட் கான்ஸ் டபிள் நிலைமையில் உள்ள காவலரை அனுப்புவதற்குத் திட்டம் இருந்தது. 1-9-1969-லிருந்து அது கைவிடப்பட்டது.

**திரு. நா. காசிராமன் :** ஸ்டேட் பஸ்களிலே இரவு நேரத்திலே செல்லும் பொழுது தனியான போலீஸ் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற முறையிலே தமிழ் நாட்டில் பஸ்களில் அக்கிரமங்கள் நடந்திருக்கின்ற இன்றனவா? வழிப்பறி கொள்ளைகள் நடந்திருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசாங்க பஸ்களில் அது போல் நடந்ததாகத் தகவல் இல்லை.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** இரவு நேரங்களில் ஸ்டேட் பஸ்கள் செல்கின்ற நேரத்திலே ஸ்டெப்பினி டயர் இல்லாமல் இருப்பதால் பொது மக்களுக்குப் பல பாதகங்கள் ஏற்படுகின்றன. அதைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்பொழுது அரசாங்க பஸ்களிலே ஸ்டெப்பினி இருந்து வருகிறது.

Thiru B. VENKATASWAMY: Sir, on a former occasion the Hon. Minister for Transport has stated that there is a proposal to introduce night bus service from Madras to Bangalore............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காவல் போட்டு அனுப்புவது பற்றித்தான் கேள்வி. ஆகவே இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்டேட் பஸ்கள் எல்லாமே புகையை அதிகமாகக்கக்குவதனாலே மனிதனுடைய ஆயுளைக் குறைக்கின்ற........

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கேள்வியைப் பாருங்கள் காவல் போட்டு அனுப்புவது பற்றித்தான். எனவே அதைப் பற்றித்தான் கேட்கவேண்டும்.



1970 ஏப்ரல் 8]

**நொய்யல் ஆற்றின் குறுக்கே அணைகள்.**

*724 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம்.

**திரு தோ. மு. நல்லசாமி :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்தின் ஒரு பகுதியைச் செழிக்க வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு நகலிலே திருச்சியினுடைய கடைக்கோடியில் கோவை மாவட்டத்தினுடைய பகுதி யிலே ஒரு அணை கட்டுவதாக ஒரு திட்டம் சொல்லப்பட்டது. அதை எடுத்து நடத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா?

இல்லையென்றால் என்ன காரணம் என்பதை விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பில்லை. கனம் உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் கேட்டிருப்பது 'நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா?' என்பது தான். பல அணைகள் புதுப்பிக்கப்படுகின்றன. இன்னும் சில இருக் கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அணைக்கட்டுத் திட்டம் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். அதைப் பற்றிச் செயற்குறிப்பு இருக்கிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, நொய்யலாற்றின் குறுக்கே கட்டப்படடுள்ள அந்த அணைக்கட்டுக்குப் போடப்பட்டுள்ள எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** புதிதாக அணைக்கட்டுகள் நொய்யலாற்றின் குறுக்கே 24 அணைக்கட்டுகள் இருக்கின்றன. குறிச்சி அணை, சாமூர் அணை, நொய்யல் அணை ஆகிய எட்டு அணைகள் வேலை நடைபெற்றிருக்கின்றன. இரண்டு அணைக்கட்டுகள் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மூன்று அணைக்கட்டுகளுக்கு எஸ்டிமேட் தயாரிக்கப் பட்டிருக்கிறது. ஆறு அணைக்கட்டுகளைப் புதுப்பிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**பிச்சவரத்திற்கு அருகில் உப்பனாற்றின் குறுக்கே பாலம்.**

*725 வினா.—திரு எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, பிச்சவரம் ஆற்றில் ஒரு பாலம் அமைத்து ஷட்டர் போட்டுக் கொடுக்க அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) ஆம். சிதம்பரம் தாலுக்கா, பிச்சவரம் கிராமத்திற்கு அருகில் உப்பனாற்றிற்குக் குறுக்கே பாலம் அமைத்து ஷட்டர் போட்டுக் கொடுக்கும் திட்டத்திற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) தற்சமயம் ரெகுலேட்டர் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது.

## அனைத்திந்திய பொறியியல் அமைப்பு.

*726 வினு—திரு. நா. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசால் தமிழ்நாடு அரசிடம் இந்தியப் பொறியாளர் களின் அமைப்பு (Indian Service of Engineers) அமைப்பது குறித்து ஆலோசனை கேட்கப்பட்டதா ?

(இ) அதனை அரசு ஏற்றுக்கொண்டதா ?

(உ) இல்லை எனில், காரணமென்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) ஆம்.

(இ) & (உ) பொறியியல் போன்ற துறைகள் மாநில ஆட்சியின் வரம்புக்குட்பட்டன. ஆகையால் அனைத்து இந்திய பொறியியல் அமைப்பில் இந்த அரசு பங்கு கொள்ள வேண்டியதில்லை எனக் கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. எனவே, மத்திய அரசினர் செயற்குறிப்பை இவ்வரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மற்ற மாநிலங்களில் அந்த வர்க்கத்திலே சேரவேண்டுமென்று ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலம் அப்படித் தெரிவிக்கவில்லை. கொள்கையளவிலே சர்க்கார் அதை ஆதரிக்கக் கூடிய வகையில் மீண்டும் மறு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மறு பரிசீலனை செய்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

## *Lloyds Road Housing Colony.*

*727 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether a Housing Board Colony has been built near the Infectious Diseases Hospital in Lloyds Road, Madras ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** 1944-க்கு முன் தொத்து நோய் மருத்துவமனையாக இருந்த சென்னை மாநகராட்சி பேணி வரும் நோயுற்றோர், முடமான பிச்சைக்காரர் தனி விடுதிக்கு அருகே லாயிட்ஸ் சாலை குடியிருப்பு கட்டப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் தொகை அதிகமாக உள்ள இடத்தில் அந்த இடம் இருப்பதாலே நோய் பரவுவதற்கு இடம் ஏற்படுவதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற இனியாவது அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, ஏற்கனவே 1944-க்கு முன்னாலே தொத்து நோய் வியாதியஸ்தர்கள் இருந்தார்கள். 1944-இலே மாநகராட்சி நடத்துகின்ற பெக்கர் ஹோமாக மாற்றப்பட்டது. ஆகையினால் தொத்து நோய் வியாதியஸ்தர்கள் அங்கு தங்குவது கிடையாது. 1964-ஆம் ஆண்டில் அந்தக் காலனி கட்டப்பட்டது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, பெக்கர் ஹோமாக இருப்பதால் அங்கே குடியிருப்போருக்கு எந்த விதமான கெடுதலும் ஏற்படாது. எனவே அதை மாற்றுவதற்கு அவசியமில்லை.



## திருமயம் தொகுதியில் வேளாண்மைக்கு ஏற்ற காட்டுப் பகுதிகள்.

*728 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருமயம் தொகுதியிலுள்ள காட்டுப் பகுதிகளிலிருந்து வேளாண்மை செய்வதற்கேற்ற பகுதிகள் பகுக்கப்பட்டு வருவாய் துறைக்கு மாற்றப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், எங்கெங்கு ?

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :** (அ) & (இ) திருமயம் வட்டத்தில் மேலப்பனையூர் கிராமத்தில் உள்ள சுமார் 80 ஏக்கர் காட்டு நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஒன்று வனத் துறைத் தலைவரிடமும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரிடமும் இருக்கின்றது. அது அவர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேலப்பனையூர் கிராமத்தில் உள்ள காட்டு நிலங்களை வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நச்சாம்தொட்டி, ராங்கியம் பகுதிகளில் உள்ள காட்டுப் பகுதிகளையும் வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்பொழுதுள்ள செயற்குறிப்பு 80 ஏக்கர் நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படுகிறது. திருமயத்தில் உள்ள ஏனைய பகுதிகளைப் பொறுத்த வரையில் காட்டிலாகா 4-வது சட்டத்தின் கீழ் மாற்றுவதற்கு விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக அறிவிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

## வாழ்க்கைத் தரப் புள்ளி.

*729 வினு—திரு ஏ. எம். இராஜா : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

சேலம், கோவை, கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், முதலிய நகரங்களில் வாழ்க்கைத் தரப் புள்ளி எண் கடந்த ஆறு மாதங்களில் முறையே எவ்வளவு புள்ளிகள் உயர்ந்துள்ளன, அல்லது இறங்கி உள்ளது ?

**மாண்புமிகு திரு கா. வேழவேந்தன்:** கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில், ஆகிய இடங்களில் 1969 ஜூன் முதல் நவம்பர் மாதம் வரை உள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரங்களை க்காண்பிக்கும் விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவையின் முன்வைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூருக்கான புள்ளி சேலத்திற்கும் பொருந்தும்.

DR. H. V. HANDE : Sometime back I had asked a question whether cost of living reports have been published for the month of March especially for the City of Madras. In view of the fact that there is necessity for this cost of living index to give bonus to workers and employees, even white-collared employees, may I know whether it has been released and if so, whether there has been exorbitant increasein the cost of living in the month of March ? முற்பகல் 9-30

---

@ 638-639ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** இந்த அவையில் முன்பே சொல்லப்பட்டது. சில வாரங்களாக காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ் விவரங்கள் வெளியிடப்படாமல் இருந்தன. மத்திய அரசிடம் சென்னை நகரிலுள்ள அரிசியின் விலையைப் பற்றி ஸப்ஸிடைஸ்டு ரேட் என்று சொல்லப்படுகிற நாம் தருகிற மலிவு விலையில் கணக்கிடுவதா அல்லது வெளி மார்க்கெட்டில் உள்ளபடி கணக்கிடுவதா என்பதைப் பற்றிய விவரத்தை அறிவதற்காக மத்திய அரசிடம் தொடர்பு கொள்ள வேண்டியிருந்த காரணத்தால் தடை ஏற்பட்டது. விரைவில் அதை வெளியிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. எம். பூபதி:** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலின் அடிப்படையில் கடலூர், திருச்சி, மதுரை, கோவை, நாகர்கோவில் இவற்றின் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தப் புள்ளி விவரங்களை விடக் குறைந்த வாழ்க்கைப் புள்ளிதான் சென்னையில் உள்ளது. ஆகவே, மாவட்ட வாரியாகக் கொடுக்காமல் வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் இனிமேல் பஞ்சப்படியைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு கா. வேழவேந்தன்:** எங்கள் புள்ளி விவரத் துறையைப் பொறுத்த வரையில் இருக்கிற புள்ளி விவரத்தைச் சேகரித்து அதன் விவரங்களை இங்கே கொடுத்திருக்கிறோம். இதையொட்டித்தான் பஞ்சப்படி எல்லாம் கொடுக்கப்பட வேண்டும் என்பது விதி. அப்படித்தான் வழங்கப்படும்.

### அனுதைக் குழந்தைகள் இல்லங்கள்.

*730 வினு—**திரு என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இம் மாநிலத்தில் எத்தனை அனுதைக் குழந்தைகள் விடுதிகளுக்கு அரசு உதவியளித்து வருகின்றது ? அவைகள் யாவை ?

(இ) ஆண்டொன்றுக்கு இதற்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது ?

உ) ஒரு குழந்தைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு கா. வேழவேந்தன்:** (அ) குழந்தைகள் இல்லங்கள் 355-ன் பெயர்கள் அடங்கிய பட்டியல் @சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 38·50 லட்சம் வீதம் அனுதைக் குழந்தை இல்லங்களுக்கு அரசு உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

(உ) மலைப் பிரதேசங்களில் நடக்கும் இல்லங்களில் பயிலும் குழந்தை ஒவ்வொன்றுக்கும் மாதம் ரூ. 15 வீதமும், சமவெளியில் நடக்கும் இல்லங்களில் பயிலும் குழந்தை ஒவ்வொன்றுக்கும் மாதம் ரூ. 12 வீதமும் தரப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா:** தமிழ்நாட்டில் அனுதைக் குழந்தைகளின், எண்ணிக்கையைக் கணிசமான அளவில் குறைத்திட அதன் மூல காரணத்தை அறிந்து அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதை விளக்க இயலுமா ?

**மாபுண்மிகு திரு. கா. வேழவேந்தன்:** வளர்ந்துவருகிற குழந்தைப் பெருக்கத்தின் வேகத்தில் இதைத் தடுக்க முடியுமா என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் இங்கு இந்தப் பட்டியலில் நீளம் அதிகமாகிக் கொண்டே போகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

---

@ 639–649ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. ஆர். கருப்பையா:** பொதுவாக, சென்னை, திருச்சி, கோவை போன்ற பெரிய நகரங்களில் அனுதைக் குழந்தைகள்தான் அரசியல் ஸ்ட்ரைக் போன்றவை ஏற்படும்போது அதிகத் தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆகவே, அனுதைக் குழந்தைகள் அதிகமாகப் பெருகுவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பதோடு அவர்களுக்குத் தனியாக நல்ல முறையில் கல்விச் சலுகைகள், மற்ற சலுகைகள் கொடுக்க ஏதாவது புதிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** கடவுளின் குழந்தைகளான அனுதைக் குழந்தைகள் ஒழுங்காக வளரவேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் மானிய உதவி தொகை கொடுத்துக் கொண்டு வருகிறது. சுமார் 38 லட்சம் ரூபாய்க்கு மேல் இந்த அரசாங்கம் தருகிற மானிய தொகையை வைத்துக் கொண்டு அந்தக் குழந்தைச் செல்வங்கள் நல்ல முறையில் ஒழுங்காக வளரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். உறுப்பினர்களும் இதில் கவனம் செலுத்தி எந்தெந்த நிலையங்களில் உள்ள குழந்தைகள் ஒழுங்காக வளர்க்கப் படவில்லை என்ற குறை இருக்கிறதோ அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**Thiru K. S. KOTHANDARAMIAH:** The Hon. Minister said that State aid is being given to orphanages. May I know on what basis the aid is being given and the amount that is given ?

**மாண்புமிகு திரு கா. வேழவேந்தன்:** ஒவ்வொரு குழந்தைக்கும் எல்லாப் பகுதியிலும் மாதத்திற்கு அளிக்கப்படுகிற மான்யத் தொகை ரூ. 12 என்று தரப்படுகிறது. இதை கொண்டு அந்தந்த நிறுவனங்கள் கொடை மூலம் மற்றவற்றின் பலம் பெற்று இல்லங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. மலைப்பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு ரூ. 15 வீதம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** மெய்ப்பொருள் கல்விக் கழகம் குழந்தைகள் இல்லம், திருவாரூர், புனித அந்தோனியர் மாணவியர் குழந்தைகள் இல்லம், நாகப்பட்டினம், புனித வின்சென்ட் டி பால் குழந்தைகள் இல்லம், மன்னார்குடி, டான்பாஸ்கோ குழந்தைகள் இல்லம், வேளாங்கண்ணி, [illegible] குழந்தைகள் இல்லம், வலிவலம் போன்றவைகளுக்கு எவ்வளவு செலவிடப்படுகிறது என்ற புள்ளி விவரங்களைத் தெரிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** 'இம்மாநிலத்தில் எத்தனை அனுதைக் குழந்தைகள் விடுதிகளுக்கு அரசு உதவியளித்து வருகின்றது ? அவைகள் யாவை ?' என்பது கேள்வி. அந்தப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** இந்த 355 அனுதை இல்லங்களில் உள்ள மொத்த அனுதைக் குழந்தைகள் எத்தனை ? அப்படி அவர்கள் அனுதைக் குழந்தைகளாவதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** அனுதைக் குழந்தைகளாவதற்குக் கடவுள்தான் காரணம் என்று அவர்கள் சொல்லலாம். எது எப்படியிருந்தாலும் நம் தமிழ்நாட்டில் 355 அனுதை இல்லங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மொத்தக் குழந்தைகள் எத்தனை என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் கணக்கைக் கூட்டித் தரலாம். இந்த இல்லங்களில் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கின்றது என்று அரசுக்குப் பல விண்ணப்பங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** ஏற்போரும், பார்ப்போரும், காப்போரும் இன்றி இருக்கிற இந்த அனுதைக் குழந்தைகளுக்கு அரசு கொடுக்கிற மானியத் தொகை மலைப்பகுதியாக இருந்தால்

ரூ. 15 என்றும், சமதரைப்பகுதியாக இருந்தால் ரூ. 12 என்றும் கொடுக்கப்படுவதாகக் கூறினார்கள். இப்போதுள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடியிருப்பதால் இதைச் சிறிது கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** சென்ற ஆட்சிக் காலம் வரை 10 ரூபாய் என்றுதான் கொடுக்கப்பட்டு வந்தது. புது ஆட்சி ஏற்பட்ட பின்னர் தான் ரூ. 12 என்று, பல லட்சக்கணக்கான ரூபாய் அதிகமானாலும் பரவாயில்லை என்று, உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. வினாயகம் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அனாதைக் குழந்தைகள் எல்லாம் கடவுளின் குழந்தைகள் என்று சொல்லுகிறார்கள். அப்படியென்றால் கடவுள் பெற்றுப் போட்டாரா அல்லது அவர்களுக்கு தாய் தகப்பன் இந்த உலகத்தில் இல்லையா ?

**மாண்புமிகு திரு கா. வேழவேந்தன் :** அனாதைக் குழந்தைகள் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கின்றன.

**திரு. எஸ். ஆறுமுகம் :** 355 அனாதை இல்லங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவற்றிற்கு நமது தமிழக அரசாங்கம் எவ்வளவு உதவித்தொகை அளித்து வருகிறது ? அனாதைக் குழந்தைகள் தமிழ்நாட்டில் அதிகமாக இருப்பதாக இந்தப் பட்டியலிலிருந்து தெரிய வருகிறது. இதற்கெல்லாம் காரணம் ஊருக்கு மத்தியில் விநாயகர், பிள்ளையாரை வைத்திருப்பதால் அதைச் சுற்றிச் சுற்றி வந்துதான் ....................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த வினா.

*Union for employees of North Arcot District Co-operative Supply and Marketing Society.*

* 731 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there are two employees' unions for the staff of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, Vellore ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** ஆம்.

**திரு கே. வினாயகம் :** இந்த நார்த் ஆர்க்காடு டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேட்டிவ் சப்ளை அண்ட் மார்க்கெட்டிங் சொஸைட்டியில் மொத்தத்தில் எவ்வளவு சிப்பந்திகள் எவ்வளவு வேலையாட்கள் இருக்கிறார்கள் ? அவர்களுக்குள்ளே ஏற்பட்ட தகராரின் விளைவாக இரண்டு யூனியன்கள், இரண்டு அரசியல் கட்சிகள் உள்ளே புகுந்து இருப்பதற்கு யார் காரணம் ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மொத்தம் எவ்வளவு சிப்பந்திகள் இருக்கிறார்கள் என்பதற்கு தனிக் கேள்விபோட வேண்டும். மூலக்கேள்வி, " வேலூரிலுள்ள வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கப் பணியாளர்களுக்கென இரண்டு தொழிலாளர் சங்கங்கள் உள்ளனவா ? " என்பது. வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனை தொழிலாளர்கள் சங்கம், வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனை, மேலும், கற்பகம் கூட்டுறவு பேரங்காடி தொழிலாளர் சங்கம் . 1926-ம் ஆண்டு தொழிற்சங்க சட்டப் பிரிவு 4, உட்பிரிவு 1-ன் படி 7 தொழிலாளர்களுக்குக் குறையாமல் சேர்ந்து சங்கப் பதிவுக்காக மனுச் செய்யலாம் என்றிருக்கிறது. இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்களுக்குத் தெரியும். இந்திய அரசியல் சட்டப்படி அதைக் கட்டுப்படுத்த முடியாது.



**தெற்கு ஆவரங்காடு கிராம அரிசனக் குடியிருப்புகள்.**

* 711 வினா—திரு **எம். முத்தையா :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தெற்கு ஆவரங்காடு கிராம அரிசன நலக் குடியிருப்புகளுக்குச் சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய வேண்டி 13—9—1968-ல் பொது மக்கள் மகஜர் ஒன்று அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) ஒட்டப்பிடாரம் கிராமத்தின் சுற்றூராகிய தெற்கு ஆவரங்காடு கிராம அரிசன நலக்குடியிருப்புக்கு, நாகலாபுரம்-தெற்கு ஆவரங்காடு சாலையிலிருந்து தெற்கு ஆவரங்காடுக்கு சாலை அமைத்தல் பொருட்டு, ஒட்டப்பிடாரம் கிராமத்தில் 0·82 எக்கர் நிலத்தைக் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1894-ஆம் ஆண்டு நிலக் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருவாரூர் தொகுதி அரிசனக் குடியிருப்புகளுக்கு நடைபாதைகள்.**

* 712 வினா—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர் தொகுதியைச் சேர்ந்த அரிசனக் குடியிருப்புகளுக்கு நடைபாதைகள் அமைக்க கோரி இதுவரை எத்தனை மனுக்கள் அரசுக்கு வந்துள்ளன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எட்டு மனுக்கள் வந்துள்ளன. அவை பரிசீலனையில் உள்ளன.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவரவர்களே, எட்டு மனுக்கள் எந்தெந்த கிராமங்களிலிருந்து வந்திருக்கின்றன ? அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இவைகள் எந்தெந்த கிராமங்களிலிருந்து வந்துள்ளன என்ற தகவல் இல்லை. ஆனால் அவைகளைப் பரிசீலனை செய்யும் பொறுப்பு பஞ்சாயத்து ஒன்றிப்பு கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அது குறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மனைகள் வழங்கி, ரோடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதை விட, நேரடியாக அரிசன் இலாக்கா மூலம் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்த எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

*Representation from Harijans of Kilkuthur.*

* 713 *Q.*—Thiru K. SAHADEVA GANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(*a*) Whether any representation has been received by the Hon. Minister from the inhabitants of the Harijan Colony at Kilkuthur Colony in Tiruvannamalai in North Arcot district about 2—12—1969;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) கோரிக்கை எதுவும் அரசிடம் கிடைக்கப்பெறவில்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு மனை எப்பொழுது வழங்கப்படும் என்பதைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மனுக்களே வரவில்லை என்று கூறும்பொழுது நடவடிக்கை பற்றி எப்படிப் பரிசீலனை செய்ய முடியும் ?

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவரவர்களே, மனுக்கள் வராவிட்டாலும் பட்டா வழங்கி மூன்று வருஷங்களாகின்றன. எனவே, மீண்டும் பரிசீலனை செய்து எப்பொழுது மனைகள் கொடுக்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எந்தெந்த இடத்திலே பட்டாக்கள் வழங்கி நிலங்கள் கொடுக்கப்பட்டன என்று அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட நல அதிகாரிகள் செயற் குறிப்பு அனுப்புகிறார்கள். அதிலே இவைகள் இடம் பெற்றால் கவனிக்கலாம். மற்றபடி அவர்கள் கூறுகின்ற இடத்திலுள்ள அரிசன மக்கள் மத்தியிலிருந்து எந்தவிதமான விண்ணப்பமும் வரவில்லை என்றுதான் கூறினேன்.

**பரும்பூர் அரிசனங்களுக்கு வீட்டு மனை.**

* 714 வினா—திரு **எம். முத்தையா :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுக்கா, ஒட்டப்பிடாரம் சப் தாலுக்காவைச் சேர்ந்த பரும்பூர் அரிசன மக்கள் வீட்டு மனை கோரி, 27–2–1960–ல் முதல் அமைச்சர், கலெக்டர், அரிசன நல அமைச்சர், அரிசன நல அதிகாரி இவர்களுக்கு எல்லாம் மனு அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. துரைராஜ் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது அரசாங்கத்தின் பரிசீலயில் இருக்கிறது என்று கூறினார்கள். அதை விரைவாகப் பரிசீலித்து, அந்தக் கிராம மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய விரைவான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அவர்கள் கேட்கின்ற இடத்தில் ஒரு ஓடை அமைந்திருக்கிறது. அந்த ஓடையைத் தூர்க்க வேண்டும். இல்லையென்றால் வேறு இடமாவது பரிசீலனை செய்து எடுக்க வேண்டும். வேறு இடம் அங்கே இல்லை. எனவே, ஓடையைத் தூர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடுவதென்றால், அதற்குச் செலவு எவ்வளவு ஆகும், எப்படித் தூர்ப்பது, தூர்ப்பதால் ஏற்படும் நஷ்டம் என்ன, லாபம் என்ன என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். பரிசீலனை முடிவுற்ற பிறகு உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

**மாயூரம் நகர சுத்தித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு.**

*715 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கென குடியிருப்புக் காலனி அமைத்துக் கொடுக்கும் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய வீட்டு மனை மாயூரம் நகராட்சி வசம் இல்லை. ஆகவே அரசு உதவித் தொகை அந் நகராட்சிக்கு அளிக்கப்படவில்லை. அரசு புறம்போக்கு நிலத்தை மாயூரம் நகராட்சிக்கு ஜாரி செய்யுமாறு மாயூரம் நகராட்சியின் தனி அதிகாரி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக்கொண்டுள்ளார். நிலம் கிடைத்தவுடன் தான் வீடு கட்டுவதற்குரிய மானியத் தொகை கொடுக்க இயலும்.

**திரு. என் கிட்டப்பா :** தலைவரவர்களே, மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக் காலனி திட்டத்திற்காக தமிழக அரசு முன்னரே 64,000 ரூபாய் மானியமாக வழங்கியிருந்தும், நகராட்சியில் கட்சித் தகராறு ஏற்பட்டதன் விளைவாக, இடத்தை ஒதுக்குவதில் ஏற்பட்ட தகராறின் விளைவாக, காலனி அமைக்கின்ற சூழ்நிலை இல்லாமலிருக்கிறது. எனவே, நகராட்சி தனி அலுவலர் தருகின்ற திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாயூரம் நகராட்சியிலிருக்கின்ற கட்சித் தகராறுகள் பற்றி இங்கே தகவல் எதுவுமில்லை. ஆனால் வருவாய்த் துறையிலே உள்ள பல இடங்களை எடுக்க வேண்டுமென்று அங்கே கேட்டுக்கொண்டார்கள். 934–2, 936 ஆகிய சர்வே எண்கள் உள்ள, வார்டு நெம்பர் 6–ல் இருக்கும் இடங்கள் வேண்டுமென்று வருவாய்த் துறையிடம் அணுகினார்கள். அவர்கள் அதைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். பிறகு, 936, 937, 938, 946 என்ற அதே 6–ஆம் நெம்பர் வார்டிலுள்ள இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று நகராட்சியினர் கேட்டார்கள். அதையும் ரெவின்யூ ஆபீசர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். நகராட்சிக்குச் சொந்தமான இடம் எதுவுமில்லை. வருவாய்த் துறையில்தான் இருக்கின்றன. அந்த இடங்களை ஒவ்வொன்றாகக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அது மறுக்கப்பட்டு வருகிறது. பிறகு 868–2 என்ற இடத்தைக் கட்டாயம் எடுக்க வேண்டுமென்று நகராட்சியிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதற்கு வருவாய்த் துறையினரும் இசைந்திருக்கிறார்கள். அந்த இடம் எடுக்கப்பட்டதும், மானியம் வழங்கப்பட்டு, வீடுகள் கட்டித் தரப்படும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதைப் போல், நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து கொடுக்க அரசாங்கத்தில் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதுவரையில் அவர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கொடுக்கும் திட்டம்தான் இருக்கிறது. அவர்களுக்குச் சொந்தமாக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம் இல்லே. அவர்களெல்லாம் நகராட்சி மன்றங்களைச் சேர்ந்த இடங்களைச் சுற்றிவந்து நகர மக்களுக்குப் பணி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் நகரத்திலே வாழ வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அந்தத் தொழிலில் மாறி மாறி வந்துகொண்டிருக்கிருர்கள். ஒருவருக்கே கொடுத்துவிட்டால், அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டால், மற்றபடி வருகிற தொழிலாளர்களுக்கு நகரத்தில் இடம் கொடுப்பது கஷ்டமாகிவிடும். எனவே, நகரத்திலே பணி புரியும் நகர சுத்தித் தொழிலாளர்கள் நகர வட்டாரத்திலே பணி செய்கிருர்கள், அங்கே வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுக்கும் வகையிலேதான் இப்பொழுது திட்டம் இருக்கிறது.

**திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள், நகர சுத்தித் தொழிலாளர்களின் சம்பளம், பஞ்சப் படி, வீட்டு அலவன்ஸ் குறைந்த அளவாக மூன்று ரூபாய் கொடுக்கிருர்கள் என்று தெரியும். ஆகவே, சர்க்கார் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து குறைந்த பட்சம் அவர்களுக்குக் குடியிருப்பு வீடுகளைக் கட்டி இலவசமாகக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் அதைத் தான் சொன்னேன். நாங்கள் அதைப் பற்றிப் பரிசீலனை செய்தோம், அவர்களுக்குச் சொந்தத்திலேயே வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று. நகரத்திலே பணி செய்பவர்கள் அவர்கள், குறிப்பிட்ட சில பேர்தான் இருக்கிருர்கள். அவர்கள் ஒருவரே அந்தப் பணியைச் செய்வது கிடையாது. தொடர்ந்து பல பேர் வருகிருர்கள். நகராட்சியில் பணி செய்பவர்களுக்கு, நகராட்சி மூலம் கட்டித் தரும் வீடுகளைச் சொந்தமாகக் கொடுத்துவிட்டால், அடுத்தடுத்து வருபவர்களுக்குக் கொடுக்க முடியாது. அப்படி வருபவர்களுக்கும் நகரத்திலேயே எப்படிக் கொடுப்பது ? அவர்கள் நகரத்திலேயே பணி செய்ய வேண்டியிருப்பவர்கள். ஆகவே, இந்தச் சிக்கல் இருப்பதால் பணி செய்யும் வரையில் வாடகை வீடாகக் கொடுத்து விடலாம் என்றும், ஓய்வு பெற்ற பிறகு, கிராமத்திலே அவர்கள் வாழும் நிலையிருந்தால் அரிசன மக்களுக்குத் தருவதைப் போல், இலவசமாகக் கொடுக்கலாம் என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இன்றையதினம் நகர சுத்தித் தொழிலாளர்கள் சுத்தமில்லாத இடங்களில், வீட்டு வசதி இல்லாமல் பல இடங்களில் இருக்கிருர்கள். அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது, வாடகை அடிப்படையில் வீடு கட்டிக் கொடுக்கப் படுவதாகச் சொன்னுர்கள். அப்படி எத்தனை நகரசபைகளில் வாடகை அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் எத்தனை நகரசபைகளில் வீட்டு வசதியில்லாமல் நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்தத் தகவல் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அடுத்த முறையாவது பதில் சொல்லலாம்.

*Family and Child Welfare Projects.*

*** 716 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :**

**(*a*) whether the Tamil Nadu Government proposes to extend the family and child welfare programmes to more Panchayat Union Blocks in the State ; and**

**(*b*) if so, what they are ?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1968-69-ல் செங்கற்பட்டு மாவட்டம் வில்லிவாக்கம் வளர்ச்சி வட்டாரத்தில் ஒன்றும், தென்னுற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி வளர்ச்சி வட்டாரத்தில் ஒன்று



மாக, குடும்ப நல, குழந்தைகள் நலத் திட்டங்கள், திட்டப் பணிகள் இரண்டு தொடங்கப் பெற்றன. 1969-70-ல், கோயம்புத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கனபாளையத்தில் ஒன்றும், மதுரை மாவட்டம் ஆத்தூரில் ஒன்றுமாக மேலும் இரண்டு திட்டங்கள் தொடங்கப் பெற்றன. இவற்றைத் தவிர, வேறு திட்டங்கள் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

*One orchard for each district.*

*** 717 *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether as, has been recommended by the Estimates Committee, it is proposed to establish one orchard for each district, when there are assured irrigation facilities available ?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இம் மாநிலத்தில், எட்டு மாவட்டங்களில் ஒன்பது மாதிரிப் பழத் தோட்டங்கள் செடி வளர்ப்புப் பண்ணைகள் முன்னமேயே உள்ளன. இருப்பினும், பாசன வசதி உறுதியாகக் கிடைக்கும்போது மாவட்டம் ஒவ்வொன்றிலும் பழத் தோட்டம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து மதிப்பீட்டுக் குழு செய்த பரிவுரை அரசின் ஆலோசனையில் உள்ளது.

**முதலமைச்சரின் இலங்கைப் பயணம்.**

***732 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலங்கைப் பயணம் எப்போது என முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** இது பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** பேரறிஞர் அண்ணு அவர்களின் வழிவந்த கலைஞர் அவர்கள் தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் ஆட்சிபுரிவதை அறிந்து, அவர்களைக் காண இலங்கைத் தமிழர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில், தமிழக முதல் அமைச்சர் அவர்கள் விரைவில் இலங்கைக்குச் சென்று வர முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** நான் செல்வதற்குத் தடை இல்லை. ஆனல், அவர்கள் அழைப்பதற்குத்தான் தடை விதிக்கிருர்கள்.

**திரு. கே. விஞயகம் :** பொதுவாக சிலோன் நாட்டில் ஏற்பட்டிருக்கிற அரசியல் சந்தேகத்தின் விளைவாக நமது ராஜ்யத்திலிருந்து எந்த டி.எம்.கே. கட்சித் தலைவர்களும் அங்கு வரக் கூடாது என்று அவர்கள் "Ban" செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இதை மத்திய சர்க்காருக்கு, நம்முடைய சர்க்கார் எடுத்துச் சொல்லி, நாங்கள் போவது அங்கே இருக்கிற குழப்பத்தை அதிகப்படுத்துவதற்காக அல்ல, கலாசாரப் பிரசாரத்திற்காகப் போகிறேம் என்று முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, எப்படியாகிலும் தமிழ்க் கலையை அங்கே பரப்புவதற்கு முதல் அமைச்சர் போக முயற்சிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** நான் இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்று எதிர்க் கட்சியில் இருந்தபொழுது விரும்பிய நேரத்தில் அப்பொழுது இங்கு இருந்த அரசு தடுத்தது. நான் ஆளும் கட்சிக்கு வந்த பிறகு அங்கிருக்கும் அரசு தடுக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** இலங்கை தி.மு.க.-விற்கும், தமிழ் நாட்டிலுள்ள தி. மு. க.-விற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று

முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லியதற்குப் பின்னாலும் அவர்கள் வரக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் அங்கு செல்வதனால், அங்கு அப்பொழுது நடைபெறுவதாக இருந்த பொதுத் தேர்தல் சூழ்நிலையில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று சந்தேகித்து, அங்குள்ள சில பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதினார்கள். அதையொட்டித்தான் இலங்கை அரசும் நான் அங்கே வருவதை விரும்பவில்லை என்று அறிந்துகொண்டேன். புதிய சிக்கலை இலங்கையிலுள்ள அரசுக்கும், ஒரு புதிய பாதகமான பிரச்னையை இலங்கைத் தமிழர்களுக்கும் ஏற்படுத்த விரும்பாத காரணத்தினால், இதிலே கௌரவப் பிரச்னை எதுவும் பார்க்காமல், இலங்கைத் தமிழர்களும், தமிழ் நாட்டுத் தமிழர்களும் சகோதர உணர்ச்சியோடு வாழவேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில் என்னுடைய பயணத்தை ஒத்தி வைத்துள்ளேன்.

**திரு. ஜே. கருணைநாதன் :** இலங்கைக்கு பல தலைவர்களும் செல்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகத்தை கண்காணிக்க அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்களா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களுக்கு வேறு எந்த வெளி நாடுகளிலிருந்து அழைப்புகள் வந்துள்ளன. அவற்றில் எந்தெந்த நாட்டினுடைய அழைப்பை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பல வெளி நாடுகளிலிருந்து அழைப்புகள் வந்திருக்கின்றன. எல்லா அழைப்புகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால், செல்வதற்கான தேதியைத்தான் இன்னும் நிர்ணயிக்கவில்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அகில இலங்கை முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கிருக்கிற தமிழ் கலாச்சார கழகங்கள் நம்முடைய முதல் அமைச்சரை ஆவலோடு எதிர்பார்க்கின்றன. அந்த நாட்டின் தேர்தல் முடிவான பிறகு நமது முதல் அமைச்சர் கலாச்சார சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்றைக்கு அங்குள்ளவர்களுக்கு எந்தவிதமான தீங்கும் ஏற்படாது என்று இலங்கையிலே இருக்கிற அரசு திட்டவட்டமாக கருதி சுமுகமான சூழ்நிலையில், என்று என்னை அழைப்பதற்கு முன்வருகிறார்களோ அன்றைக்குப் போகலாம். அதை விட்டு, போட்டி மனப்பான்மையில் அதை அணுகி, எப்படியும் போய்த்தான் தீரவேண்டும் என்ற எண்ணத்தில் இலங்கைக்குச் செல்கின்ற அந்த பயணத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** முதல் அமைச்சர் அவர்களுக்கு இலங்கை அரசிடமிருந்து அங்கே போவதற்கு அழைப்பு இல்லை. ஆனால், இலங்கையில் உள்ள தமிழர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அங்கே வரவேண்டும் என்று மிக்க ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்வார்களா ? அல்லது, மத்திய அரசாங்கத்தினிடம், வேறு நாட்டுத் தமிழர்கள் அழைக்கிறபொழுது, தமிழக முதலமைச்சர் அங்கு வரக் கூடாது என்று தடை விதித்திருப்பது பற்றி ஒரு ஆட்சேபணைக் குறிப்பை நம்முடைய அரசு தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இலங்கையில் பொதுத் தேர்தல் சிக்கல்கள் தீர்ந்துவிட்ட பிறகு, அங்குள்ள தமிழர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அங்கு அமைகிற அரசு தடையாக இருக்காது என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலை உருவாகின்ற நேரத்தில் நான் இலங்கைக்குச் செல்லக்கூடும் என்று நம்புகிறேன்.

**திரு. மா. பொ. சிவஞானம் :** இலங்கையில் உள்ள தமிழர்கள் மன்றங்கள் அல்லாமல், வேறு அரசியல் தொடர்பும் அல்லாமல், பௌத்த சங்கங்கள் அழைத்தால் நமது முதலமைச்சர் செல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் நிச்சயம் செல்வேன்.

**திரு. ஆர். கருப்பையா :** முதல் அமைச்சர் இலங்கை செல்கிற பயணம் இப்பொழுதில்லை என்றாலும், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னால் இலங்கையில் உள்ள தமிழர்கள் அங்குள்ள ராணுவத்தினால் தாக்கப்பட்டார்கள். அதைப்பற்றி அந்த அமைச்சருக்கு முதல் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதியுள்ளாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இலங்கை நாட்டு அரசினுடைய நடவடிக்கைகள் வெளி நாட்டு விவகாரங்களுக்கு உட்பட்டிருக்கிற காரணத்தினால், நம்மைப் பொறுத்தவரையில் வெளி நாடு விவகாரங்களில் தலையிடுகிற உரிமை மத்திய அரசுக்கு இருப்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசுதான் இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் அல்லது வேறு கடல் கடந்த நாடுகளில் உள்ள தமிழர்களுக்குத் தீங்கு ஏற்பட்ட நேரத்தில், அவர்களைக் கவனிக்குமாறு மத்திய அரசிடம் தமிழர்கள் சார்பாக இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

**திரு. கே. ஆர். கோவிந்தன் :** இது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களுக்கு ஆட்சேபணை ஏதேனும் எழுத்து மூலம் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளதா ? ஆமெனில் ஏதாவது காரணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எழுத்துமூலம் வரவில்லை. ஜாடை புரிந்துகொண்டேன். ஆகவேதான் பயணத்தை நிறுத்திவிட்டேன்.

**Dr. H. V. HANDE :** Sir, may I know what was the agency that invited the Hon. Chief Minister and what was the answer given by the Hon. Chief Minister to that agency ? Also, whether the Hon. the Chief Minister has got into touch with the Central Government and what was the attitude taken by the Central Government on this issue ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இலங்கையில் இருக்கிற தமிழ்ச் சங்கங்கள், தமிழ்ப் பண்பாட்டு நிறுவனங்கள் ஆகியவைகள் வெகு நாட்களாக நான் அங்கு வரவேண்டும் என்று அழைத்து வருகின்றன. நான் அங்கு வரப்போகிறேன் என்று அங்குள்ள செய்திப் பத்திரிகைகள் அவசரப்பட்டு, ஒரு ஆர்வத்தின் காரணமாக, செய்திகளை வெளியிட்டார்கள். அங்கிருந்து சில பத்திரிகை நிருபர்கள் இங்கு வந்தார்கள். சன் பத்திரிகை நிருபரும், இன்னொரு பத்திரிகை நிருபர், சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகை நிருபரும், இவர்களெல்லாம் இங்கு வந்தார்கள். வந்து என்னை பேட்டி கண்டார்கள். பேட்டி கண்ட நேரத்தில், இலங்கையில் உள்ள தி.மு.க.விற்கும் தமிழகத்தில் இருக்கிற தி.மு.க.விற்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றிக் கேட்டார்கள். நான் தமிழகத்திலுள்ள தி.மு.க.விற்கும் இலங்கையில் உள்ள தி.மு.க.விற்கும் எந்தவிதமான தொடர்பும் இடையாது என்று கூறினேன்.

அதுமாத்திரமல்லாமல் இலங்கை தி.மு.க. ஏதோ வன்முறைச் செயலில் ஈடுபட வேண்டும் என்று ஒரு கூட்டத்தில் அவர்கள் தலைவர் பேசினார், பிறகு அவரே மறுத்துவிட்டார், அது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் அப்படிப் பேசியது வருந்தத்தக்கது, அதை அவரே பிறகு மறுத்துவிட்டார், அது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்று நான் கூறினேன். என்னிடம் சுமுகமாகப் பழகிய பத்திரிகை நிருபர்கள் அங்கு சென்ற பிறகு, அதே பத்திரிகைகளிலே நான் கூறியதை மறுத்து நீண்ட தலையங்கங்கள் தீட்டினார்கள். அந்தக் காரணத்தினால் நாமே ஒரு முடிவு செய்து கொள்ளலாம் என்று எண்ணி, நான் அங்கே போகாமல் இருப்பதால் அங்கிருக்கிற தமிழருக்கும் நல்லது, அங்கு இருக்கிற சிங்களருக்கும் நல்லது, அங்கு இருக்கிற அரசுக்கும் சிக்கல் இல்லாத சூழ்நிலை ஏற்படும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நான், மத்திய அரசைத் தொந்தரவுபடுத்த விரும்பவில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** இலங்கை அரசு வரக்கூடாது என்று தடை விதித்திருப்பது பற்றி நமது மத்திய அரசு அதற்காகவேண்டி என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் வரக்கூடாது என்று வெளிப்படையாக எதுவும் தடை போடவில்லை. தமிழ் நாடு முதல் அமைச்சர் இலங்கைக்கு வரக்கூடாது என்று அந்த அரசு தடைபோட்டு விடவில்லை. நான் அவர்களுடைய சங்கடத்தைப் புரிந்துகொண்டேன். நான் அங்கே போவதன் காரணமாக அவர்களுக்கு சங்கடம் ஏற்பட்டு விடக்கூடாது என்று என் பயணத்தை நிறுத்தி விட்டேன்.

**திரு. கே. விநாயகம் :** "அழையா வீட்டிற்கு நுழையா சம்பந்தி" என்று தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. அவர்கள் நம்மை நேரிடையாக அழைக்கவில்லை, மத்திய அரசுக்கு எழுதி, முன்பு வரக்கூடாது என்று சொல்லி, பிறகு இப்பொழுது வரலாம் என்று சொன்ன பிறகு, இவரே மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டாலொழிய இவர்கள் போகாமல் இருப்பாரா என்பதற்கு இந்தச் சபையில் உத்தரவாதம் தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதிலிருந்து நான் இலங்கைக்குப் போவதை திரு. விநாயகம் அவர்கள் விரும்பவில்லை என்று தெரிகிறது.

**திரு. எல். கணேசன் :** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி பிரான்ஸ் நாட்டிற்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் செல்வார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. எப்பொழுது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன என்றால், அந்தச் செய்திகள் அதிகாரபூர்வமானவை அல்ல. ஆனால், உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி, தமிழக அரசின் சார்பில் அமைச்சர் செல்லக்கூடும். அது எந்த அமைச்சர் என்று இன்னும் திட்டவட்டமாக நிர்ணயிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அவையுரிமைக் கேள்விகள்

(அ) " நாத்திகம் " நாளிதழில் வெளிவந்த செய்தி குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு எம். சுரேந்திரன் அவர்கள் ஓர் அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். 8—4—70 நாளிட்ட " நாத்திகம் " என்ற பத்திரிகையில், "தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை விலை பேசி விற்றதாக, சென்ற சட்டமன்றத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரதுரை ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டினார். அதுபற்றி சபாநாயகர் " ரூலிங் " தருவார் என்று அன்று கூறப்பட்டது. தி.மு.க. ஆட்சியே ! சபாநாயகரின் " ரூலிங் " இன்றுவரை வரவில்லையே, அதன் காரணம் என்ன ? " என்று எழுதியிருக்கிறது. சபாநாயகர் மீது குற்றம் சாட்டும் முறையில் இருப்பதால், இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று எழுதியிருக்கிறார். இதுபற்றி பேரவையின் இன்னொரு கூட்டத்தில் எடுத்துக் கூறுகிறேன். முற்பகல் 10-00

(ஆ) மாநிலங்கள் அவைத் தேர்தலிலே இரண்டு வாக்குகள் செல்லாதவை ஆகியது பற்றிய திரு. டி. மார்ட்டின் அவர்கள் பேச்சு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். அக்னிராஜு அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதன் மீது இன்று தீர்ப்பளிப்பதாகக் கூறியிருந்தேன். 31—3—70 அன்று திரு மார்ட்டின் அவர்கள் பேசுகின்றபோது, மாநிலங்கள் அவைத் தேர்தலிலே இரண்டு வோட்டுகள் செல்லாத வோட்டுகளாகிவிட்டன என்று குறிப்பிட்டார்கள். இரண்டு வாக்குச் சீட்டுக்கள் செல்லாதனவாகியுள்ளன என்பது உண்மையாதலாலும், எந்த ஓர் உறுப்பினர் பெயரும் சுட்டிக்காட்டப்படவில்லையாதலாலும், அவ்வாறு கூறியதில், எந்தவிதமான உரிமையும் மீறப்படவில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைத் தந்தார் என்று கூறப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், மாண்புமிகு தொழில் அமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். 28—3—70 அன்று தான் பேசும்போது, குறுக்கிட்டு, மாண்புமிகு தொழில் அமைச்சர் தன்னுடைய கூற்றை மறுத்துப் பேசுகையில் சட்ட அமைச்சர், தனிப்பட்டவர்களும் நில ஆர்ஜிதம் செய்கிறார்கள், நில ஆர்ஜிதம் செய்வதற்குச் சட்டப்படி எந்த விதமான தடையும் இல்லை, ஆட்சேபனையும் இல்லை, சர்க்காருக்கும், இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை, கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் சம்மதப்பட்டால் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது என்று சொன்னது உண்மைக்கு மாறானது, விதிகளுக்கு (நில ஆர்ஜித விதிகள்) புறம்பானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் கூறியிருப்பது எந்த விதிகளுக்கும் முரண்பட்டதாகவோ மீறியதாகவோ தெரியவில்லை. ஆகவே, உரிமை எதுவும் மீறப்படவில்லை இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) பேரவைத் தலைவரால் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்ட பகுதிகளை " நவசக்தி " நாளிதழ் வெளியிட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 6—4—70 அன்று இப்பேரவையில் அவை உரிமைக் கேள்வி ஒன்றை எழுப்பினார்கள். 4—4—70 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் பேசிய பேச்சில் ஒரு பகுதியை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படியும், அப்பகுதி பத்திரிகைகளில் வெளியிடப்படக் கூடாது என்றும் நான் அன்றே இப்பேரவையில் அறிவித்திருந்தும் 5—4—70

தேதியிட்ட "நவசக்தி" நாளிதழில் அப்பகுதி வெளியிடப்பட்டிருப்பதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கபட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை வெளியிடுவது இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே அது பற்றி விசாரித்து இந்த அவைக்கு அறிக்கை கொடுக்கும்படி, நான் இதை இப்பேரவையின் 192-வது விதிபபடி அவையுரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

(உ) திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புகு தொழில் அமைச்சரின் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி சாட்டிய குற்றச்சாட்டு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 28—3—70 அன்று நடைபெற்ற இறுதித் துணைமானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு என். எஸ். வி. சித்தன் அவர்கள், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கும் சொத்துக் கணக்கு பற்றிக் குறிப்பிடும்போது, "31—3—67" முடிய என்ற தலைப்பின் கீழ் "புஞ்சை ஏக்கர் மனையிடங்கள் 5" என்று போட்டு, 5 ஏக்கருக்கு ரூ. 5,000 மதிப்பு கொடுத்திருக்கிறார்கள். பின்னால் "31—3—1968 முடிய" என்ற தலைப்பின்கீழ் 31—3—67-ல் உள்ள அதே சொத்து விவரக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். "31—3—69 முடிய" என்ற தலைப்பின்கீழ் "புஞ்சை ஏக்கர் மனையிடங்கள் 3, மதிப்பு ரூ. 3,000" என்று கொடுத்திருக்கிறார்கள். 1967, 1968-ல் கொடுத்ததை விட இரண்டு ஏக்கர்கள் குறைத்திருக்கிறார்கள். கடைசியில் பின்னாலே உள்ள குறிப்பில் "சிங்கம்புனரியில் புஞ்சை நிலம் மனையிடமாக 1·54 ஏக்கர் நில ஆர்ஜிதத்தில் எடுத்துக் கொண்டு தரப்பட்ட தொகை ரூ. 34,000" என்று கொடுத்திருக்கிறார்கள். முதல் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விவரம் 5 ஏக்கர், ரூ. 5,000 மதிப்பு, அதிலே 1·54 ஏக்கருக்கு ரூ. 34,000 தரப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இது பற்றி விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி வெளியிலே பரவலாகப் பேசப்படுகிறது. அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குற்றம் சாட்டினார்கள்.

உடனே மாண்புமிகு தொழில் அமைச்சர் குறுக்கிட்டு, "பேசுவதற்கு முன்னால் நன்றாக விசாரித்துவிட்டுப் பேசவேண்டும். இதுபோன்ற குற்றச்சாட்டுகளை உறுப்பினர்கள் கூறும்போது, அதை எந்தமாதிரி நாம் விசாரிக்க வேண்டும் என்பதற்கான ஒரு முறையை வகுப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அரசாங்கத்திற்காக நிலம் கூடுதல் விலையில் வாங்கப்பட்டது என்பதுதான் உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னது....நிலம் இருப்பதை சட்டமன்றத்தில் சொல்கிறோம். அதனுடைய விலை குத்து மதிப்பாக எவ்வளவு வரும் என்று சொல்கிறோம். பின்னாலே விலை கூடுதலாகப் போகிறதா, யாரும் கூடுதல் விலைக்கு வாங்குகிறார்களா என்பதை இப்பொழுதே ஊகித்துக்கொண்டு சொல்ல முடியாது. கூடுதல் விலைக்குப் போனால் சட்டமன்றத்தில் கூடுதல் விலைக்குப் போயிற்று என்று சொல்கிறோம்....ஒன்று அங்கத்தினர் அதை வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திற்காகக் கட்டப்படும் வீடுகளுக்காக அரசாங்கப் பணத்திலிருந்து எந்தவிதமான நில ஆர்ஜிதமும் சிங்கம்புனரியில் நடக்கவில்லை என்பது என்னுடைய வாதம். இப்படிப்பட்ட கருத்தை அவர்கள் இங்கே சொன்னதினால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் கூறியதை சட்டசபைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

திரு. சித்தன் அவர்கள் இடைமறித்து, "இங்கே குற்றம் சாட்டுகிறேன் என்றால் சில விவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் அடிப்படையிலேதான் குற்றச்சாட்டுகளைக் கூறுகிறேன்" என்றார்கள்.



அப்பொழுது, பேரவைத் தலைவர், "அமைச்சர் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஐயாயிரம் ரூபாய் போடப்பட்டது மூன்று ஆண்டுகளிலே இவ்வளவு ரூபாய் கூட்டிப் போட்டிருக்கிறார்களே, இது எப்படி விலை கூடிற்று என்று விளக்கம் கேட்கலாம். விளக்கம் கேட்கிற முறை வேறு. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது நில ஆர்ஜிதம் செய்து இருக்கிறீர்களே, சர்க்கார் இன்ன விலை கொடுத்து இருக்கிறதே, சர்க்காரிலே அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே இவ்வளவு விலை கொடுத்து விடலாமா என்று கேட்டார்கள். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். இப்படிக் குற்றச்சாட்டு இல்லாமல் விளக்கம் கேட்கிற முறையிலே சொல்லுங்கள். "நான் அமைச்சர் அவர்கள் மீது குற்றம் சொல்ல வேண்டுமென்ற முறையிலே சொல்லவில்லை, விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். நான் இந்த அவையிலே அமைச்சர் மீது குற்றம் சாட்டிச் சொன்னதையெல்லாம் திரும்பப் பெறுகிறேன்" என்று சொல்லிவிடுங்கள். "அமைச்சர் அவர்கள் மீது குற்றம் சாட்டுகிற முறையிலே நான் கூறியிருந்தால் திரும்பப் பெறுகிறேன்" என்று கூறிவிடுங்கள்" என்று பேரவைத் தலைவர் திரு. சித்தன் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கு திரு. சித்தன் அவர்கள், "அமைச்சர் அவர்களுடைய நிலத்திற்கு 34,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது நில ஆர்ஜிதத்தில் என்றுதான் கூறியிருக்கிறேன். அமைச்சராக இருக்கிற காரணத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை" என்று சொன்னார்கள்.

அப்பொழுது மாண்புமிகு தொழில் அமைச்சர் குறுக்கிட்டு, "மாண்புமிகு உறுப்பினர் இப்போதும் தவறு செய்கிறார். ஒரு மதிப்பை முதலில் கொடுக்கிறோம். கொஞ்சகாலத்திற்குப் பிறகு விலை ஏறுகிற காரணத்தினால் மதிப்பு அதிகரிக்கிறது. இப்படி விலை ஏறுவதற்குச் சட்டப்படி எந்தவிதமான தடையும் இல்லை. இது ஒரு சாதாரண நிகழ்ச்சி. மார்க்கெட் நிலவரப்படி விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றித் தவறாக கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதை இந்த மன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. விளக்கம் வேண்டுமென்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இதுபற்றி நான் ஒரு சிறு விளக்கம் கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன். அந்த ஊரிலே பல ஆண்டுகளாக ஒரு கூட்டுறவுச் சங்கம் இருந்து வருகிறது. அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீடு கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்தார்கள். அரசாங்கப் பணத்திலிருந்து அல்ல, கூட்டுறவுச்சங்கத்தின் சொந்தப் பணத்திலிருந்து. அவர்கள் இப்படி நில ஆர்ஜிதம் செய்வதற்கு சட்டப்படி எந்தவிதமான தடையும் இல்லை. ஆட்சேபணையும் இல்லை. சர்க்காருக்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கூட்டுறவுச் சங்கம் நிலம் வாங்குவதற்கு எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் சம்மதப்பட்டால், அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது. அரசாங்கப் பணம் இதில் சம்பந்தப்படவில்லை. அரசாங்கத்தின் பணம் சம்பந்தப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் குற்றம் சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த சட்ட ஞானத்தில் இரண்டு பேர் சம்மதப்பட்டுவிட்டால் அதில் மற்றவர்கள் எதுவா செய்ய முடியாது. அதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையபது. மாண்புமிகு உறுப்பினருடைய குற்றச்சாட்டு குறைவாகப் போடப்பட்டது என்பதல்ல, அமைச்சராக இருக்கிற காரணத்தினால் அதிகம் ரோட்டுவிட்டார்கள் என்று வேண்டுமென்றே மாசு கற்பிக்க வேண்டுமென்று குற்றம் சாட்டியிருக்கிறார்......இன்னும் இதில் விளக்கம் சொல்ல வேண்டுமானால், நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக உள்ள அங்கத்தினர்களிடமிருந்து சென்ட் ஒன்றுக்கு 225 ரூபாய் வீதம் வாங்கப்பட்டது. அதே அங்கத்தினர்களுக்கு திரும்ப நிலம் கொடுக்கப்பட்டபோது சென்ட் ஒன்றுக்கு 450 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. அந்த அங்கத்தினர்களுக்கு ஒரு பனிஷ்மெண்ட் போலகொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே லாபம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இன்னொன்றையும்

சொல்ல ஆசைப்படுகிறேன். விலை குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே ஊரிலே அந்த நிலத்திற்குப் பக்கத்திலே இருக்கும் நிலம் செண்ட் ஒன்று 750 ரூபாய் வீதம் விற்கப்பட்டிருக்கிறது......வேண்டுமென்றே இந்த அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுவது கேடானது. இந்த அவையின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதாக ஆகும்" என்று அவர்கள் சொன்னார்கள்.

கடைசியாக பேரவைத் தலைவர், "மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கணக்கு பற்றி விளக்கம் கேட்பதிலே தவறு இல்லை. அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால், அமைச்சர் அவர்கள் மீது மாசுக் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் குற்றச்சாட்டை சாட்டியிருக்கிறார். அந்த முறையிலே அவர் பேசியிருக்கிறார். அவர் அப்படிப் பேசியது இந்த சபை நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்படும்" என்று அன்று கூறினேன்.

அதன் பிறகு 1-4-1970 அன்று திரு சித்தன் அவர்கள், ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்கள். "28-3-1970-ம் தேதியன்று நான் இந்த மன்றத்தில் பேசிய பேச்சில் சில பகுதிகளை நீக்கப்போவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது நான் அவருடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்" என்றார்கள்.

அப்பொழுது பேரவைத் தலைவர் அவர்கள், "28-3-1970 அன்று திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் இந்த அவையில் பேசியபொழுது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தம் பகுதியில் நிலம் வாங்கியதைப் பற்றியும், அவருடைய சொந்த நிலத்தை அரசாங்கத்திற்கு விற்றது பற்றியும் ஒரு கருத்தைக் கூறினார்கள். அமைச்சர் என்பதனாலே அதிகமான விலைக்கு அந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டதாகக் குற்றம் சாட்டினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதற்கு விளக்கம் கூறினார்கள். அப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறிய பிறகு நான் திரு சித்தன் அவர்களிடம், "அப்படிக் கூறியதற்காக வருந்துகிறேன், அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்" என்பதாக அவர்களே கூறிவிடுவது நல்லது என்று பல முறை சொன்னேன். அப்போதும் "நான் அப்படிக் கூறவில்லை" என்பதாகக் கூறினார்கள். நான் உடனேயே "அப்படிக் கூறியிருந்தால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்" என்பதாகச் சொன்னாலும் போதும் என்றேன். அதற்கும் அவர்கள் இசைவு தரவில்லை. நான் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அதன் காரணத்தினால் நான் அவருடைய உரையில் இருந்து அந்தப் பகுதி நீக்கப்படும் என்று அப்போதே அறிவித்தேன்.

பிறகு அவருடைய உரையின் சட்டசபைக் குறிப்பை எடுத்துப் பார்த்த நேரத்தில் 'நான் கூறவில்லை' என்று அவர் சொன்னது அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று திரு. சித்தன் அவர்களே கூறியிருக்கிறார்கள். இது அவையின் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன்.

"ஆனாலும், மேலும் ஒன்றையும் கூறிவிட விரும்புகிறேன். அவையில் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் கூறிவிடுவது, எப்படிப்பட்ட குற்றச்சாட்டை வேண்டுமானாலும் கூறிவிடுவது, கூறிவிட்ட பிறகு அதற்கு ஆதாரம் இல்லை என்ற அளவில் அதை சபைக் குறிப்பில் இருந்து நீக்குவது என்ற முறை பேரவையின் பெருமையை, கண்ணியத்தைக் காப்பாற்றுவதாக இருக்காது."



"திரு. சித்தன் அவர்கள் தாம் கூறவில்லை என்ற தொடரைக் கூறியிருக்கிறார்கள். "கூறியிருந்தால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்" என்று கேட்டுக்கொள்ளச் சொன்னதற்கும் மறுத்து இருக்கிறார்கள். இப்போது அவர் கூறிய அந்தப் பகுதி அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுவதாக இருந்தாலும், அது அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதாக இருக்காது. இதைப்பற்றி என்ன முடிவு எடுப்பது என்பதுபற்றி யோசித்துப் பிறகு திர்ப்புத் தெரிவிக்கிறேன்" என்றும் சொல்லியிருக்கிறேன்.

பிறகு, திரு. சித்தன் அவர்கள் கூறிய குற்றச்சாட்டை மெய்ப்பிக்க வேண்டுதற்கும், தேவையான விளக்கத்தைத் தருமாறும் திரு. சித்தன் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கும் பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தில் வருகின்ற ஏப்ரல் மாதம் 5-ம் தேதி பிற்பகல் 1 மணிக்கு சட்டப்பேரவை உறுப்பினர் (பழைய) விடுதியில் விசாரணை நடைபெறும் என்று எழுதியிருந்தேன். திரு. சித்தன் அவர்கள் தம் ஊரிலே இருந்து, தமக்கு உடல் நலம் இல்லையென்றும், ஆகவே, விசாரணையை ஒற்றிவைக்க வேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்கள். அன்று நடந்த விசாரணையைப் பற்றிய தகவல்களை இப்பொழுது ஆங்கிலத்திலேயே படித்துவிடுகிறேன்.

The enquiry was held at 1 p.m. on Sunday, the 5th April 1970, at the Legislators' Hostel (Old), Government Estate. Thiru N. S. V. Chithan was not present. The Hon. Minister for Industries was present and he represented that his witnesses had come from far and distant places and had also brought with them the necessary documents in support of his case. He requested that these witnesses be examined and the documents marked, as otherwise an adjournment would cause great hardship and inconvenience to them. The Hon. Speaker held that though reasonable opportunity was given to Thiru N. S. V. Chithan, he did not attend the enquiry; nor did he produce any witnesses or documents in support of his allegations.

(திரு. கே. விநயகம் : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்......

அங்கே விசாரிக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலும், கொடுத்த ஆதாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. விநயகம் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தீர்ப்புக் கொடுக்கிற நேரத்திலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பக் கூடாது. நான் தீர்ப்புக் கொடுத்த பிறகுதான் பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்ப வேண்டும். (திரு.கே. விநயகம் எழுந்தார்) பேரவைத் தலைவர் அவர்கள் எழுந்து நின்று கொண்டிருக்கும்பொழுது உறுப்பினர்கள் எவரும் எழுந்திருக்கக் கூடாது.

Thiru Tilakar, Assistant Sub-Taluk Office, Karaikudi was then examined as P.W. 1. He produced Exhibits A-1 (*a*) to (*h*) from proper custody. He also produced Exhibit A-2 (*a*).

Exhibit A-1 contains the papers in regard to acquisition of lands in North Singampunari village, for construction of houses for the members of the Co-operative Building Society in North Singampunari village.

Exhibit A-1 (*a*) is the valuation report submitted by the Revenue Divisional Officer to the District Revenue Officer together with the valuation statement for 7·28 acres of land of the total value of Rs.1,33,952 It is seen therefrom that not only the land of 1·54 acres of the Hon Minister

for Industries, but also other lands of several persons of the total extent of 7·28 acres have been valued. In consideration of the sale of a piece of land of the extent of 1¼ cents in Survey No. 557/16 for Rs. 200 in Document No. 620, dated 6th June 1967, the Revenue Divisional Officer fixed Rs. 16,000 per acre as reasonable market value of lands in the area.

Exhibit A-1 (*b*) contains the approval of the valuation report of the Revenue Divisional Officer by the District Revenue Officer and is addressed to the Secretary, Singampunari Co-operative Building Society wherein the Secretary was required to countersign the valuation statement and to provide necessary funds at the disposal of the Revenue Divisional Officer, so as to enable him to make the award.

Exhibit A-1 (*c*) is the Special Report of the Revenue Divisional Officer to the District Revenue Officer, dated 28th November 1968.

Exhibit A-1 (*d*) is the approval of the Valuation Report of the Revenue Divisional Officer by the District Revenue Officer, dated 11th December 1968.

Exhibit A-1 (*e*) is a copy of the Sale Document for the Data land.

Exhibit A-1 (*f*) is the intimation sent to the Secretary, Singampunari Co-operative Building Society by the Revenue Divisional Officer.

Exhibit A-1 (*g*) is the letter from the Deputy Registrar of Co-operative Societies, Sivaganga, to the Revenue Divisional Officer with chalan for remittance of the money.

Exhibit A-1 (*h*) is the proceedings of the Land Acquisition Officer and Revenue Divisional Officer, Devakottai.

Exhibit A-2 (*a*) discloses the rates at which and the prices for which the lands have been sold to North Singampunari Co-operative Building Society.

P.W. 2 is N. Gopalan, Sub-Registrar, Singampunari. He has produced A-3, the Register of copies of documents.

Exhibit A-3 (*a*) is the copy of the document for the sale of land in Survey No. 554 (3) of the extent of 20 cents for Rs. 2,069 in the village of North Singampunari.

Exhibit A-4 is the Register of copies of documents (Volume No. 351–1010/67).

Exhibit A-4 (*a*) is the copy of the document for the sale of land comprised in Survey Nos. 204 and 208 of the extent of two cents for Rs. 1,500 in North Singampunari.

Exhibit A-5 is the Register of copies of documents (Volume No. 378–1375/68).

Exhibit A-5 (*a*) is the copy of the document for the sale of land in Survey No. 560/6 for Rs. 2,175·50 in North Singampunari.

Exhibit A-6 is the Register of copies of documents (Volume No. 386–198/69).

Exhibit A-6 (*a*) is the copy of the document for the sale of land in Survey No. 559/2 of the extent of three cents for Rs. 3,000 in North Singampunari.



Exhibit A-7 is the Register of copies of documents (Volume No. 397–1025/69).

Exhibit A-7 (*a*) is the copy of the document for the sale of land in Survey No. 560/6 for Rs. 2,317·50 in North Singampunari.

These copies of sale deeds are produced in support of the valuation contained in Exhibit A-1, the Revenue Divisional Officer's Report a Statement of Valuation.

P.W. 3 is Thiru P. N. S. Ramaswamy, President, Singampunari Co-operative Building Society. He has filed Exhibit A-8, a statement about the acquisition of lands of the extent of 10 97 acres for house construction purposes. He has stated therein that in North Singampunari village house-sites have been sold at the rate of Rs. 3,50,000 per acre.

P.W. 4 is Thiru S. Karuppiah, Co-operative Sub-Registrar-Secretary. Singampunari Co-operative Building Society. He has filed Exhibits A-9 (*a*), (*b*) and (*c*)–receipts obtained from the parties for the payment of extra amount of Rs. 41 per cent for lands acquired from them for the Singampunari Co-operative Building Society.

The Hon. Minister for Industries, Thiru S. Madhavan has filed Exhibits A-10, A-11, A-12, and A-13, the original title deeds for lands in Singampunari village disclosed in his Statement of Assets and Liabilities.

Exhibit A-10 is the document for purchase of Land in Survey No. 556/9 of the extent of 29 cents for Rs. 100, dated 24th October 1940.

Exhibit A-11 is the document for purchase of land in Survey No. 554/6 of the extent of 28 cents for Rs. 100, dated 23rd October 1940.

Exhibit A-12 is the document for purchase of land in Survey Nos. 554/7 and 556/6 of the extent of 82½ cents for Rs. 1,200 dated 21st June 1950.

Exhibit A-13 is the document for purchase of land in Survey No. 556/8 of the extent of 20 cents for Rs. 500, dated 2nd August 1960.

The Enquiry has revealed that the lands of the Hon. Minister for Industries in Singampunari village of the total extent of 1·59½ acres were purchased between the years 1940 and 1960. Exhibits A-10, A-11, A-12 and A-13 are the original title deeds. They go to show that in 1940, 29 cents of land was purchaced for Rs. 100 and in 1960, 20 cents of land was purchased for Rs. 500 only. Hence it is seen that the land of the extent of 1·59½ acres was purchased only for Rs.1,900 between the years 1940 and 1960. The Hon. Minister for Industries has given the value at Rs. 1,000 per acre in his Statement of Assets for the year 1967 to 1969. It cannot therefore be said that the valuation is low. On the contrary, it is based on documents of title.

Secondly, the Hon. Member Thiru Chithan has alleged that whereas the value even as given by the Hon. Minister for Industries is only Rs. 1,000 per acre, it is seen from the Statment of Assets that the land of an extent of 1·54 acres has been acquired at Rs. 34,000. He therefore proceeds to allege that this high price has been paid perhaps because the person happens to be a Minister. This is the charge levelled by him

against the Hon. Minister for Industries and it implies and insinuates that the Hon. Minister for Industries has misused or abused his position to secure this high price. This is a reflection and an aspersion on the Minister.

As regards the charge itself, the abundant documentary evidence, namely, the valuation report of the Revenue Divisional Officer, the approval thereof by the District Revenue Officer, and the copies of sale deeds of such and similar lands in and around the locality filed in the course of the enquiry prove beyond the shadow of a doubt that these lands have been valued and were in fact sold at the rate of about Rs. 16,000 per acre. It is singularly significant that the land of the Hon. Minister for Industries of the extent of 1·54 acres is but a part of the total extent of about 7·28 acres acquired for a total value of Rs. 1,33,952 for the Singampunari Co-operative Building Society. The other lands belonged to several persons and these lands were also purchased at this rate of Rs. 16,000 per acre.

The Revenue Divisional Officer stated in his report that Rs. 16,000 per acre was a reasonable rate and reflected the market value of lands in and around the area. Above all, the Secretary of the Singampunari Co-operative Building Society had accepted this valuation and had remitted the money. To reinforce this position, the President of the Singampunari Co-operative Building Society has tendered evidence to the effect that in all an extent of 10·97 acres had been acquired for house construction purposes in the North Singampunari village. In his opinion, in North Singampunari village house-sites had been sold at the rate of Rs. 3,50,000 per acre. The Secretary had further stated that over and above the Award price, the owners were paid extra amounts at Rs. 41 per cent because the Society had agreed to purchase at a higher rate, the same being covered by receipts-Exhibits 1-9 (*a*), (*b*) and (*c*).

From the above it is abundantly clear that the value paid for the land of the Hon. Minister for Industries was in accord with the market value prevalent at that time and for the lands in the locality. Hence it cannot be said that the Hon. Minister in any way misused or abused his position as Minister in order to secure this high price.

The conclusion is therefore irresistible that the charge levelled by the Hon. Member, Thiru N. S. V. Chithan, is totally baseless and stands repudiated by unimpeachable documentary evidence.

ஆக இந்த விசாரணையின் காரணத்திலே கொடுக்கப்பட்டிருப்பது மார்க்கெட் விலைதான் என்பதும், அமைச்சர் அவர்கள், தாம் பெற்றிருக்கிற பதவியைப் பயன்படுத்தி அதிக விலை பெற்றுர்கள் என்கிற குற்றச்சாட்டுக்கு ஆதாரமே இல்லை என்பதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தாம் இந்த அவையில் அப்படிக் கூறவில்லை என்று சொன்னபோது 'கூறியிருந்தால் திரும்பப்பெறுகிறேன் என்று சொல்லி வருத்தம் தெரிவித்துக் கொள்ளுங்கள்'' என்று ஒரு முறை அல்ல மூன்று முறை கேட்டும் அப்படிச் செய்ய மறுத்திருப்பதன் காரணமாக, இது வேண்டுமென்றே அமைச்சர் மீது மாசு கற்பிக்க திட்டமிட்டே கூறியதாகும் என்கிற காரணத்திஞல் இது உரிமையை மீறிய நிகழ்ச்சியே ஆகும்.

ஆகவே, இதன்மீது இந்த அவையே என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



4. நடைமுறைக் கேள்வி.

ஓர் உறுப்பினர் Or அமைச்சர் மீது சாட்டிய குற்றச்சாட்டை விசாரிக்க பேரவைத் தலைவருக்கு உள்ள அதிகாரம் குறித்தும் குற்றம் சாட்டிய உறுப்பினரை விசாரிக்காமல் ஒரு தலைப் பட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டது குறித்தும்;

**Thiru K. VINAYAKAM**: On a point of order, Sir. I am not going into the relative merits of the case. You are at perfect liberty to come to any conclusion. Let the House know under what rule of procedure in our Assembly Rules you are empowered to hold an enquiry. This is my preliminary objection. If however an enquiry is wanted it is not the Speaker who should hold the enquiry. He should refer it under the Commission of Enquiry Act.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சபாநாயகர் விசாரிக்கக் கூடாது, வேறு ஒருவரிடம் கொடுத்துத்தான் விசாரிக்க வேண்டுமென்று எந்த விதியில் இருக்கிறது?

**Thiru K. VINAYAKAM**: There is no rule. I know you will take cover under the prorogative powers inherent in you. You may take cover under the inherent powers vested in a Speaker. You have got to give me an opportunity to go through thousands of volumes of Hansard and other literature to find out whether any such power is vested in the Speaker. Then only I can clear my conscience that it has all been done well.

When the Member says 'I am not well, I cannot come for the enquiry', can the Speaker pass an ex-parte judgment ? Is it proper? It has not been heard of even in British days and in dictatorial countries.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இது இந்த அவையின் நடைமுறையைப் பொறுத்த பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**Thiru K. VINAYAKAM**: This ex-parte judgment is not befitting the status of this House. That is my fear. Afterwards, whatever judgment you are going to pass, we have to take it and then we have to think of any other repercussions and all those things.

2. அவையுரிமைக் கேள்விகள்—தொடர்ச்சி.

திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு தொழிலமைச்சரின் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி சாட்டிய குற்றச் சாட்டு குறித்து தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தங்கள் மூலமாக நான் மாண்புமிகு திரு. விநயகம் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், தான் சொன்ன குற்றச்சாட்டை நிரூபிக்கத் தயாராய் இருக்கிருர்களா ? அமைச்சர் தன் பதவியை துஷ்பிரயோகம் செய்து நிலத்தை அதிக விலைக்கு எடுத்துக் கொள்ளச் செய்திருக்கிருர்கள் என்பதை நிரூபிக்கத் தயாராய் இருக்கிருர்களா என்பதுதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: சபாநாயகர் அவர்களே, இப்போதுள்ள பிரச்சினை; என் கட்சி அங்கத்தினர், அமைச்சர் தன் பதவியை துஷ்பிரயோகம் செய்து நிலத்திற்கு அதிக விலை பெற்றிருக்கிருர் என்று கூறிய குற்றச்சாட்டு. சட்டசபையில் எங்களுக்குச் சில தகவல்கள், புள்ளி

விவரங்கள் கிடைக்கின்றன. சில சமயம் ஆதாரமான தகவல்களும் கிடைக்கின்றன. சில தவருகவும் போய்விடுகின்றன. ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய நிலம் 34 ஆயிரத்திற்கு விற்கப்பட்டிருக்கிறது என்கிறபோது பொது மக்களிடையே பரவலாக அமைச்சர் தம் பதவியை உபயோகித்தே பெற்றிருக்கிருர் என்பது போன்ற சந்தேகம் எழத்தான் செய்கிறது. நாங்கள் அதை இங்கே சொல்கிறபோது, அப்படியில்லை என்று அமைச்சர் விளக்கம் கொடுக்கலாம். அதை எழுப்புவதற்கே அங்கத்தினருக்கு உரிமை இல்லை என்று சொல்ல முடியாது. தாங்கள் நீதி மன்றம் போல இதை விசாரிப்பது என்ருல்—விசாரிக்க என்ன விதி இருக்கிறது, ரூல் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. நான் வக்கீல் இல்லை—அதுவும் அங்கத்தினர் தனக்கு உடல் நலமில்லை என்று கடிதம் எழுதியிருந்த போதும் எக்ஸ்பார்ட்டியாக விசாரிப்பது, தீர்ப்பளிப்பது என்றெல்லாம் வந்தால் இது எங்கே கொண்டுபோய் விடும் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அவையிலேயே திரு. சித்தன் அவர்களை அவர் ⁄ கூற்றை வாபஸ் பெறும்படியாக 3 முறை சொல்லியும் அவர்கள் மறுத்திருக்கிருர்கள். நீங்கள் அப்படிப் பேசியிருக்கிறீர்கள் என்று சுட்டிக்காட்டிய போது முதலில் பேசவில்லை என்றே மறுத்திருக்கிருர்கள். பேசவில்லை என்ருலும் பேசியிருந்தால் வாபஸ் பெறுகிறேன் என்று சொல்லுங்கள் என்ற போதும், மறுத்து விட்டார்கள். அவர் அதைத் திரும்பப்பெறுகிறேன் என்று சொல்லியிருந்தால் இவ்வளவு வந்திருக்காது. வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த குற்றச்சாட்டு இது என்பதற்கு இதுவே போதும்.

முற்பகல் 10-30. **திரு. என். எஸ். வி. சித்தன் :** அதைப்பற்றி விவாதம் நடைபெற்றபொழுது இரண்டாவது நாள் பேசியபொழுது நான் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடைமறிக்கப்பட்டு இருக்கிறது, நான் முடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். தலைவர் அவர்கள் அந்தக் குறிப்பேடுகளைப் பார்த்தால் தெரியும், நான் பேசி முடித்துவிட்டேனு அல்லது இடைமறிக்கப்பட்டிருக்கிறேனு, விட்டிருந்தால் என்ன சொல்லியிருப்பேன் என்பது வேறு விஷயம்—என்பதையும் தாங்கள் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது நாள் கூட்டுறவுத் துறை மானியத்தின்போது பேசுகின்றபொழுது என்ன சொல்லியிருக்கிறேன் என்பதையும் தாங்கள் சொல்லவேண்டும். உடல் நலக் குறைவாக இருப்பதால் வரமுடியாது என்று தந்தி கொடுத்திருக்கிறேன். எனவே அவர்கள் பின்னுலே நடத்தியிருந்தால் நல்லது. திரு. விநயகம் அவர்கள், "எந்தச் சட்டத்தின் பேரில் நீங்கள் விசாரணை நடத்துகிறீர்கள்?" என்று கேட்டார்கள், அதற்கெல்லாம் நீங்கள் தீர்ப்புக் கொடுத்துக் கொள்ளுங்கள். நான் முதல்நாள் பேசியதைக் குறுக்கிட்டு இருக்கிருர்களா, அல்லது நான் முடித்து விட்டிருக்கிறேனு என்பதைச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தாங்கள் விளக்கமாக இதுவரை சொன்னீர்கள். என்னையும் விளக்கமாகச் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். நான் என்னுடைய பேச்சில்—முதல் நாள் பேச்சில்—என்ன சொல்லியிருக்கிறேன், இரண்டாவது நாள் பேச்சில் என்ன பேசியிருக்கிறேன் என்பதைத் தாங்கள் பார்க்கவேண்டும். அதோடு விசாரணை வைத்திருக்கிறீர்கள், உடல் நலம் சரியில்லை என்று தெரிவித்ததற்குப் பிறகு நடத்தியிருக்கிறீர்கள். திரு. விநயகம் அவர்கள் பேரவைத் தலைவருக்கு அந்த உரிமை இருக்கிறதா என்று கேட்டிருக்கிருர்கள். அதையும் நான் வந்தவுடனே தங்களுக்கு கடிதம் மூலமாகக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்பொழுது கொடுத்திருக்கிறீர்கள்?**



**திரு. என். எஸ். வி. சித்தன் :** இன்றைக்குத்தான் வந்தேன். வந்தவுடனே கடிதம் கொடுத்திருக்கிறேன். உடல்நலம் சரியில்லையென்று சொல்லியிருப்பதால் பின்னுலே வைத்துக்கொள்ளலாம் என்று கடிதம் கொடுத்திருக்கிறேன். அதையும் பார்த்து தாங்கள் முடிவுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முற்பகல் 1-36 மணி

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நண்பர் திரு. சித்தன் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சராக இருக்கிற காரணத்திஞல் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். இப்பொழுது அதையே வற்புறுத்துகிறீர்களா? அல்லது அந்தப் பகுதியிலே உள்ள மற்றவர்களுடைய நிலங்க்ள் எந்த விலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விலைக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது இருக்கும்படியான பிரச்னை சட்டமன்ற உறுப்பினர், அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று தந்தி கொடுத்திருக்கிருர்கள், நானும் திரு. சித்தன் அவர்கள் வரவில்லை என்று தகவல் கொடுத்திருந்தும்கூட அவ்வளவு அவசர அவசரமாக ஏன் செய்யவேண்டும்? தாங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாமா இல்லையா என்பது திரு. விநயகம் அவர்களுடைய விஷயம். ஏன அவ்வளவு அவசரம்? என்ன தேவை? எத்தனையோ விஷயங்கள் குற்றச்சாட்டுகள் சாட்டப்படுகின்றன. ஒருவர்மேல் மாசு கற்பிக்கும் படியான எண்ணத்தோடு சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவரும் குற்றச்சாட்டு இல்லை என்று சொல்கிருர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர், என்ன அவசரம் என்று கேட்கிருர்கள். ஏதோ ஒரு காரணத்திஞலே அவசரப்பட்டு பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுக்கிருர் என்பதுமாதிரிச் சொல்கிருர்கள். அப்படியல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் இப்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவர் மூலமாகவும் தங்கள் மூலமாகவும் நண்பர் சித்தன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அவகாசம் கேட்கிருர்கள், நிரூபிப்பதற்காகவா? வேறு எதற்காகக் கேட்கிருர்கள்?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாசு கற்பிக்கும் அளவிலே நான் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. அன்றைய தினம் என்னுடைய பேச்சு முடியவில்லை. நிகழ்ச்சி குறிப்புகளைப் பார்த்தால் தெரியும். வாக்கியம் முடிக்காமல் இருப்பது நன்ருகத் தெரியும். அதைத்தான் அன்றைக்கும் சொன்னேன். இன்றைக்கும் சொல்கிறேன். அப்படிப் பேசியதிலிருந்து நான் எள்ளளவும் பின்வாங்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எள்ளளவும் பின்வாங்குவதில்லை என்ருல் இந்தச் சபையின் தீர்ப்பும் பின்வாங்காத நிலைமைக்குப்போய் விடும். அது வேறு விஷயம்.

அவர்கள், "அமைச்சராக இருக்கிற காரணத்திஞல் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று பேசியிருக்கிருர்கள். வாக்கியம் பூர்த்தியாகவில்லையென்ருல், தமிழ் படித்த பெரியவர்கள் அறிவார்கள், அவர்களுக்குத் தெரியும், எனவே வாக்கியம் பூர்த்தியாகவில்லை என்று சொல்வது சரியல்ல. "அமைச்சராக

இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" முற்றுப்புள்ளி. இதற்குப் பிறகு எங்கே வாக்கியம் பாக்கியிருக்கிறது? உடனே திரு மாதவன் அவர்கள் எழுந்து, மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். மாசு கற்பிப்பதற்குக் குற்றம் சாட்டவில்லை என்று இப்பொழுதுகூடக் கூறப்பட்டது. குற்றம் சாட்டியது ஒப்புக்கொள்கிறார்கள், ஆனால் மாசு கற்பிக்கவில்லை என்று சொல்கிறார்கள், என்ன பொருள் என்பது புரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குற்றஞ்சாட்டுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு. அதற்காகத்தான், வேறு எதற்காக, நாங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் எங்களை மிரட்டமுடியாது. என்ன தண்டனை கொடுத்தாலும் நாங்கள் தயாராக இருக்கிறோம். எவ்வளவு தூரம் நிற்குமோ அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். மிரட்டி மீன் பிடிக்கமுடியாது. என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். என் கட்சிக்காரர்கள் இல்லாமல் சட்டசபையை நடத்திக்கொள்ளலாம் என்ற நிலைமையா? அந்த நிலைமைக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு விநாயகம் அவர்கள், எந்த விதியின் கீழ் விசாரணை நடத்தியிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள் "inherent powers of Speaker" என்று பதில் சொல்லிவிட்டார்கள்.

**Thiru K. VINAYAKAM:** The whole thing is *ab initio* wrong.

(Thiru J. James rose)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.:** எந்த விதியின்கீழ் பேசுகிறீர்கள்? நான் அவர்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தெளிவாக அமைச்சர்மீது களங்கம் கற்பிக்கும்படியான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. தாங்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி அவர்கள் சொன்னார்களானால் அதற்கு அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். சொல்லவில்லையென்றால் தவறு என்று சொல்லிவிடவேண்டும். அமைச்சர்மீது மாசு கற்பிக்கும் வகையிலே, அவர்களுடைய பொறுப்பைத் துஷ்பிரயோகம் செய்வது மாதிரியான விளைவை ஏற்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விளைவை ஏற்படுத்தியிருப்பதால் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிரூபிக்கவேண்டும். நிரூபிக்காமல் நழுவுவது சரியல்ல. முதலமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி அவர்கள் இந்த மாமன்றத்திலே எல்லா உரிமைகளையும் பாதுகாக்கவேண்டிய கடமை இருக்கிறது. பேச்சுரிமை இருக்கிறது, ஆனால் அதற்காக எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்பது அல்ல. குற்றச்சாட்டுகள் சொல்ல வேண்டுமென்றால் ஆதாரங்கள் தேவை. இங்கே அவர்கள் சொல்லியது ஆதாரங்கள் இல்லாதது மட்டுமல்ல, பொதுமக்கள் மத்தியிலே தவறான கருத்தை சொல்லும்படியான நிலைமையெல்லாம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் ஒன்று நிரூபிக்கவேண்டும், இல்லையென்றால் முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, தவறு என்று சொல்லிவிட வேண்டும். எனவே அதற்கு முறையாக அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குற்றச்சாட்டு சாட்டுவதற்கு என்பது இல்லை. முடிந்தவரை ஆதாரமாக இருக்கவேண்டும், மனதிலே களங்கம் கற்பிக்கும்படியான எண்ணத்தை வைத்துக்கொண்டு சொல்வதில்லை. அமைச்சர் அவர்கள் அதைவிட



அதிகமான விலைக்குப் போயிருக்கிறது என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். அதற்காகக் குற்றமே சாட்டக் கூடாதா? உடல் நலம் சரியில்லை என்று சொன்னாலும்கூட தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னாலே அவர்கள் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள், அதை இல்லையென்று மறுக்கமுடியாது. அமைச்சர் இருக்கிறார்கள் அவர்கள் சொல்லித்தான் பண்ணுகிறார்களா இல்லையா என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்? அவர்கள் வாக்கியத்தை முடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாக்கியத்தை முடிக்கவில்லை என்று சொன்னார்கள். சித்தன் அவர்களை நான் எதிர்க்கட்சித் தலைவர் மூலமாகவும் தங்கள் மூலமாகவும் கேட்டுக் கொள்கிறேன். "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்பதோடு என்ன சேர்த்து முடிக்கப்போகிறார்? இப்பொழுது அதை முடித்துவிடவேண்டும்.

**Thiru K. VINAYAKAM:** Sir, on a point of order. Proceedings are recorded every day and there is an end of the proceedings. Now you cannot reopen the issue. Under what rule can you compel the hon. Member to finish the speech delivered the other day? The whole thing is *ab initio* void. This is not the way how the proceedings of this House should be conducted and with all due deference to you, I submit this.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இந்த மன்றத்தின் எந்த உறுப்பினரையும் கடுமையாகத் தண்டிக்கவேண்டும் என்றோ அல்லது அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றோ விரும்புகிறவன் அல்ல. அப்படிப்பட்ட பண்பும் கொண்டவன் அல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னைப்பற்றி நன்றாக அறிவார்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். "மிரட்டி மீன் பிடிக்க வேண்டாம்" என்றெல்லாம் சொன்னார்கள். அதற்காக நான் உள்ளபடியே வருந்துகின்றேன். திரு. சித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ஒருதுளியும், 'எள்ளளவும்' பின்வாங்கப்போவதில்லை என்று சொன்னார்கள். அவர் சொன்னதுதான் மிரட்டலேதவிர நான் சொன்னது மிரட்டல் அல்ல. நான் இப்போது கேட்டுக்கொள்ளுவதெல்லாம், இந்த மன்றத்தின் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளித்துவிட்டாலும், நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், இந்த மன்றத்தின் நடவடிக்கைகள் முடியப்போகின்ற நேரத்தில், சுமுகமான சூழ்நிலையில் கலைந்து சென்றோம் என்ற நிலை உருவாகவேண்டும் என்ற எண்ணத்தில் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், சித்தன் அவர்கள் இந்த வாக்கியத்தை எப்படி முடிக்க இருந்தார் என்று சொல்லிவிட்டால் போதுமானது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதே வாக்கியத்தில் அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார். வெளியில் பரவலாகப் பேசப்படுகிறது, அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் குறைந்த மதிப்பு வந்தாலும் குறையாமல் மதிப்பு தரப்பட்டிருக்கிறது என்று முடிக்காமல் தொடர்ந்து அதே வாக்கியத்தில் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்கு சாட்சியைக் கொண்டுவா, டாக்குமெண்டரி எவிடன்ஸ் கொண்டுவா.......

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எதிக்கட்சித் தலைவர் அவர்கள், தம்முடைய கட்சி அங்கத்தினருக்காக வாதாடுவதை மறுப்பதற்கில்லை. பாராட்டுகின்றேன். அவர்களை இந்த விசாரணைக்கு வரவேண்டும் என்று அழைத்து, அவர்களும் மனமுவந்து வந்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்ணியத்தோடு இந்தப் பகுதியில் இருக்கின்ற அங்கத்தினர்களை மதிக்

கின்றார்கள் என்பதில் எனக்குப் பெருமை. உள்நோக்கம் இல்லை, விளக்கம் கேட்கும்போது பேசிவிட்டார் என்று அவர்கள் சொல்லுவது உண்மையான மனச்சாட்சிக்கு விரோதமாகும் என்று குறிப்பிட ஆசைப் படுகிறேன். ஏனென்றால் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள், "இதை விசாரித்துவிட்டுச் சொல்லுங்கள், அவசரப்பட்டுப் பேசாதீர்கள் என்று சொன்னேன், கேட்காமல் இங்கே வந்து பேசிவிட்டார்கள்" என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்ணியத்தோடு சொல்லியிருக்கின்றார்கள். நாங்களும் இந்த மன்றத்தின் உறுப்பினர் கள், எங்களின் உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லியிருக்கின்றார்கள் என்பதில் எனக்குப் பெருமை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னிடம் அவ்வாறு சொன்னதை நான் குற்றமாகக் கூறவில்லை. இது எப்படி நடந்திருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும்.

முன்னால்கூட, பல நாட்களுக்கு முன்னால் சட்ட மேலவையில் வாதாடியிருக்கிறார்கள். வாதாடி சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் வாதாடி விசாரித்து தெரிந்துகொண்டு, மீண்டும் இப்படிச் சொல்லுவது களங்கம் கற்பிப்பது ஆகாதா என்று சொன்னேன். அமைச்சருக்கும் தெரியும் என்று எனக்குத் தெரியும் என்று சொன்னார் கள். அதுதான் மிரட்டுவதுபோல் தோன்றியிருக்கிறது. இந்த மன்றத்தில்கூட ஒருமுறை அல்ல, மூன்று முறை சொல்லியிருக்கிறார். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ன பதில் சொல்லப்போகிறார்? முதலில் சொன்னார். விளக்கம் சொன்னோம். மறுபடியும் சொன்னார். விசாரிக்கவேண்டும் என்று சொன்னோம். மீண்டும் இங்கே பேசி யிருக்கிறார்கள். மூன்றாவது முறையும் சொல்லியிருக்கிறார். இதற்குப் பெயர் தெரியாமல் சொல்லுவதா?

அவருக்கு உடல் நலம் இல்லை என்று சொன்னார்கள். இங்கே உடல் குணமடைந்து வந்திருக்கிறார்கள். வங்கித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். உடல் நலம் இல்லாத காலத்தில் வெற்றி பெற்றிருக்கிறார் சிங்கம்புணரிக்குப் போயிருக்கிறார்கள். வீடுகளை எல்லாம் பார்த்திருக் கின்றார்கள். இவைகளையெல்லாம் செய்துவிட்டு இருக்கும்போது, அவர் களங்கம் கற்பிக்கவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் சித்தன் அவர்களுடைய நடவடிக்கைகள், பேச்சு களங்கம் கற்பிப்பதாக இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகிறார் என்றால் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் அவருடைய தரப்பு அங்கத்தினர் அப்படிச் சொல்லவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இப்போது இந்தப் பிரச்னை வளர்ந்து கொண்டு வருகிறது. அன்றைக்கு விசாரணைக்கு வந்த போது, புரொடெஸ்டு செய்திருக்கிறேன். இதை சபாநாயகர் நடத்தக் கூடாது, நான் வருவதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறேன். தனிப் பட்ட முறையில் அமைச்சரிடத்தில் சொல்வதெல்லாம் சட்டமன்றத்துக்கு வருவதாக இருந்தால், என்ன சொல்லுவது? தனிப்பட்ட முறையில், எவ்வளவோ சொல்லலாம். (சிரிப்பு). சிரிக்காதீர்கள். இங்கே என்ன நமக்குள் டைவோர்ஸா? உங்கள் தரப்பில் இருப்பவர்கள் எங்களிடத்தில் பேசியது கிடையாதா, என்னென்னவோ சொன்னது கிடையாதா? நான் விசாரணைக்கு வந்தபோதே சொன்னேன்—"ஐ புரொடெஸ்ட்" என்று சொல்லியிருக்கிறேன். நான் அப்படிச் சொன்னது உண்டா இல்லையா என்பதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சொல்லவேண்டும். இது மாதிரி விசாரணை கூடாது. அவருக்கு உடல்நிலை சரியாக இல்லை என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். டெலிபோனில் எவ்வளவோ பேசுகிறோம். அதையெல்லாம் டேப் ரிகார்டு செய்து இங்கே வந்து சொல்லுவது என்றால் நன்றாக இருக்காது.



நாங்கள் ஆட்சியில் இருந்தபோது உங்கள் அங்கத்தினர்கள் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள் குறிப்புடன் பேச வேண்டும் என்று எதைப் பேசியிருக்கிறார்கள்? எதை நிரூபித்திருக்கிறார்கள்? நீங்களே சொல்லுங்கள். அதற்கு விசாரணை போடுங்கள். டேபிள் டாக் (Table talk) ஆக அப்போது நீங்கள் பேசியதையெல்லாம் இங்கே வந்து சொன்னால் நன்றாகவா இருக்கும்? சொன்னால் நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்கமுடியாது. எவ்வளவோ உங்கள் பத்திரிகையில் எழுதி யிருக்கின்றீர்கள். பேசிவிட்டு இல்லை என்று மறுத்துவிட்டிருக்கின்றீர்கள் "ரிக்ரெட்' பண்ணியிருக்கின்றீர்கள். எவ்வளவோ பேசுகின்றோம். நியாயம் இருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால்..

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 28-ம் தேதி பேசிய சித்தன் அவர்கள் பேச்சில் நேர் முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. அமைச்சராக இருக்கிற காரணத்தால் இவ்வளவு தொகை கொடுக்கப் பட்டிருக்கின்றது என்று அவரே சொல்லியிருக்கின்றார். அது முதல் பக்கத்தில் இருக்கின்றது. அதற்கு மறுப்புகள் இங்கே தரப்பட்டவுடன் 6-ம் பக்கத்தில் "அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் கொடுக்கப் பட்டது" என்று சொல்லவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது முன்னுக்குப்பின் முரண் அல்லவா? அமைச்சராக இருக்கின்ற காரணத்தால்தான் இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார், மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் மறுத்த பிறகு அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்போதுதான் சபாநாயகர் அவர்களே நீங்கள் பேசியிருக்கிறீர்கள். சித்தன் அவர்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லிப் பேசியிருக்கிறார்கள். அப்படி பேசிய காரணத்தால்தான், நான் பேசியிருந்தால் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள் என்று சபாநாயகர் கேட்டார். அப்படிக் கேட்டும் திரும்பப் பெற்றுக்கொள்ள சம்மதிக்க மறுத்திருக் கிறார்கள். இது நியாயமா என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பி.ஜி. கருத்திருமன்:** முதலமைச்சர் அவர்களே சித்தன் அவர்கள் இரண்டு விதமாகப் பேசியிருப்பதாகச் சொல்லுகிறார். சபாநாயகர் என் ஒரு லைனை மட்டும் எடுத்துக்கொள்ளுகிறார்? முன்னால் இப்படிச் சொன்னார், பின்னால் இப்படிச்சொன்னார் என்றால், அவ்வப்போது வந்த தகவல்படி சொல்லுகிறார். எந்தவிதமான கெட்ட நோக்கத்தோடு சொல்லுவதும் கிடையாது. ஒரு அமைச்சர்மீது எவ்வளவோ சொல்லப் படுகிறது. அவர்மீது கோர்ட்டில் கேஸ் இருக்கிறது என்று சொன்னேன். சொல்லக்கூடாதா? இப்படிச் சொல்லுவதற்கெல்லாம் எந்தக் கெட்ட எண்ணத்தோடு சொல்லுவது கிடையாது. இப்படிச் சொல்லப்படுகிறது, நீங்கள் திருத்திக்கொள்ளவேண்டும் என்றுதான் புத்தி சொல்லி யிருக்கிறார். இதில் என்ன தப்பு ?

**மாண்புமிகு திரு. மு.கருணாநிதி:** புத்திநாங்கள் சொல்லவேண்டியிருக் கிறது. நான் சொல்ல வேண்டியதை நீங்கள் தெரிவித்துக்கொண்டிருக்கிறீர் கள். யார் யாருக்கு எப்படி புத்தி சொல்லவேண்டும் என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத்தெரியும். இது பரம ரகசியமான காரியம். அதை வெளியிட நான் விரும்பவில்லை. சித்தன் அவர்கள் சொன்னது அமைச்சராக இருக்கிற காரணத்தால் இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அதைச் சொல்லிவிட்டு, பின்னால் அமைச்சராக இருக்கிற காரணத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்ல வில்லை என்று சொல்லுகிறார். இரண்டில் எதை எடுத்துக் கொள்ளுவது?

**THIRU K. VINAYAKAM :** Sir, on a point of information. Whenever there are two conflicting opinions, the opinion which is advantageous to the accused should be taken into account. Also, both the opinions should be read together and not separately.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு விநாயகம் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னதை மறுக்கிறார். அது நியாயமா என்று கேட்கிறேன். முதலில் சொல்லி யிருக்கிறார். அமைச்சராக இருக்கிற காரணத்தால் இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாசு கற்பிக்கின்ற குற்றச்சாட்டை உள் நோக்கோடு சொல்லியிருக்கிறார். நீங்கள் சொன்னீர்கள், சொன்னதை நிரூபியுங்கள், இல்லாவிட்டால் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னபோது, அவர் நான் அப்படிச் சொல்லவில்லை நான் ஏன் வாபஸ் வாங்கவேண்டும் என்று சொன்னால் நியாயமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விநாயகம் அவர்களின் கேள்விக்கு முன்பே பதில் சொன்னேன், அவர்கள் கேள்வியிலேயே விடை இருக்கிறது என்று.

"In the House of commons the disciplined powers of privilege are reinforced by the summary powers conferred on the Chair by Standing Orders........"

இது மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸில் உள்ளது. அன்று நடைபெற்ற நிகழ்ச்சி, சித்தன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்று பார்ப்பதற்காக அந்த நிலம் எப்படி வாங்கப்பட்டது என்பதற்கான சான்றுகளை அவைத் தலைவர் பார்த்து இதில் தவறு நடந்திருக்கிறதா இல்லையா என்பதைத் தலைவர் தெரிந்து கொள்ள விரும்புகிறார். சித்தன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டேன். அவர்கள் அந்த நிலம் வாங்கப்பட்ட தற்கான தஸ்தாவேஜுகளை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். வேறு யாரோ சொன்ன சாட்சியல்ல. வாய் மூலம் வந்த சாட்சியல்ல. எழுத்து மூலம், ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன. அந்த ரிக்கார்ட்களைப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார் பேரவைத் தலைவர். நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன.

முன்பு ஒரு முறை இங்கு சொல்லியிருக்கிறேன். அஸாம் மாநிலத் தில் ஒரு அமைச்சர்மீது ஒரு குற்றச்சாட்டு சொன்னபோது அதை விசாரிக்கிற முறையில் பேரவைத் தலைவர் ரிக்கார்ட்ஸை வாங்கிப் பார்த்து தவறு இல்லை என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். திரு. கரியப்பா பற்றி குற்றச்சாட்டு சாட்டியவுடன் அதற்குரிய ரிக்கார்ட்ஸை டெல்லியில் உள்ள மக்கள் அவைத் தலைவர் அவர்கள் அதுபற்றி விசாரித்து அவர் கூறிய கூற்றில் எந்த விதமான தவறும் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இதற்கு ஒரு கமிஷன் தேவை என்று சொன்னபோது நானே கமிஷனாக இருக்கிறேன், என்னிடம் கொடுங்கள் என்று சொன்னபோது அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு என்ன அவசரம் என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இதில் எந்தவிதமான அவசரமும் இல்லை. உரிய ரிக்கார்டுகளைப் பார்க்க வேண்டுமென்று பார்த்தேன். சித்தன் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று அதை அவர்கள் பார்க்கலாம் என்றேன். இதில் குறுக்கு விசாரணை ஒன்றுமில்லை. எல்லாம் அழிக்கப்படாத ரிக்கார்ட்கள். அங்கி ருந்து கொண்டுவந்து காட்டப்பட்டிருக்கின்றன. உரிய அதிகாரிகள் காட்டி யிருக்கிறார்கள்.

திரு. சித்தன் அவர்கள் சொல்லவேயில்லை என்று சொன்னார்கள். சொல்லப்பட்ட இரண்டும் இரண்டு விதமான ஸ்டேட்மெண்டுகள் அல்ல. இப்படி ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறீர்கள், அப்படிக் கூறவில்லை என்றால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அமைச்சர் பதவியில் இருக்கிற காரணத்தினால் அதிக விலை வாங்கிக் கொடுத்தார்கள் என்ற குற்றச் சாட்டு இருக்கிறது. அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை. திரு. சித்தன் அவர்களை என் அறைக்குக் கூப்பிட்டு, "நிலைமை இப்படியிருக்கிறது, இதை மேலும் வளரவிடுவது



நல்லதல்ல, ஆகவே அவைக்கு வந்தவுடன் நேற்று தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டினார். அப்படிப் பேசியதாக எனக்கு நினைவில்லை, ஆனால் இப்போது அப்படிப் பேசியிருப்பதாக தெரிய வருகிறது, ஆகவே அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன், அதற்காக என் வருத்தத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன்" என்று சொல்லுங்கள். இதை முடித்துவிடு கிறேன் என்று நான் சித்தன் அவர்களிடம் சொன்னேன்.

இன்று காலையில்கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை போனில் கூப்பிட்டு அவையில் இப்படிப்பட்ட நிலை வருவது நல்லதல்ல, இது பற்றி விசாரித்ததில் தவறு நடைபெறவில்லை என்று தெரிகிறது, அந்த ஆதாரங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள், முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி இதில் ஒரு முடிவிற்கு வந்துவிடுங்கள், எனக்கு ஒரு இடர் பாடான நிலை அவையில் வரக்கூடாது என்று அவர்களிடம் சொன்னேன். முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து சொல்லலாம் என்றால் அவர்களுக்குக் கண் வலி என்ற காரணத்தினால் எழுந்திருக்கவில்லை என்றதால் சந்திக்க முடியவில்லை. எந்த ஒரு கட்சிக்காரர்மீதும் ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சாட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் எதையும் செய்யவில்லை. நடக்காததை நடந்ததாக ஒரு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அது மறுக்கப்பட்டிருக் கிறது. அதிகாரபூர்வமாக மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லியும்கூட குற்றஞ்சாட்டியிருப்பதால் இது உரிமை மீறிய நிகழ்ச்சியாக இருக்கிறது. இதில் எந்த முடிவையும் பேரவைத் தலைவர் எடுக்கவில்லை, அதை இந்த அவையின் முடிவிற்கு விட்டுவிடுகிறேன். அவை முடிவு எடுக்கட்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** போனில் பேசினதைச் சொன்னதால் நான் ஒன்றைச் சொல்வது மிகவும் அவசியம். உங்கள் பெயரை இழுக்க வில்லை என்று நீங்கள் வாக்குறுதி கொடுத்தது உண்டா என்று கேட் கிறேன். நான் வந்ததாக ஒத்துக்கொள்ளப் போவதில்லை. போனில் பேசியதாக ஒத்துக் கொள்ளப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா ? ப்ரொட்டஸ்ட் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் இப்போது சொன்னதிலிருந்து ஏதோ எங்கள் அங்கத்தினர் தவறை ஒத்துக்கொள்வது மாதிரியான ஒரு தவறான சூழ்நிலை ஏற்படும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வந்ததோ அல்லது போனில் பேசியதைப் பற்றியோ இங்கு குறிப்பிடப் போவதில்லை என்று சொல்லி விட்டு இங்கு வந்து சொல்வது நியாயமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொண்ட பிறகுதான் சொன்னேனே தவிர, அதற்கு முன்வரை சொல்லவில்லை. அதுவரை அதைப்பற்றி எதையும் நான் சொல்லவில்லை. அவசரப்படுவானேன் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். எந்தளவிற்கு மனிதாபிமானத் தோடு நடந்துகொண்டிருக்கிறேன். எந்த அளவிற்கு ஆளும் கட்சிக்கு விரோதமாக எதிர் கட்சியிடம் எந்த அளவிற்கு நல்லெண்ணத்தோடு நடந்துகொண்டிருக்கிறேன் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சொன்னேன். வேறொன்றுமில்லை. எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்ற முறையில் சொல்லவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** இன்று மிக முக்கியமான பில்கள் எல்லாம் பாஸாக வேண்டியிருக்கிறது. சபை நேரத்தை, ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டு இரு தரப்பிலிருந்தும் வாதம் செய்யப்பட்டது. ஆகவே தலைவர் அவர்கள் தீர்ப்பளித்து இப்பிரச்னையை உடனடியாக முடிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**THIRU K. VINAYAKAM :** Sir, my submission is that even if the Hon. Speaker is empowered to hold an enquiry according to May's Parliamentary Practice–which I am conceding now–why not a reasonable

opportunity be given to a person who is supposed to be an accused before you. He has written to you and also sent a telegram but still you hurried through the entire affair. I submit that if you want to maintain some kind of cordiality at least give him an opportunity to have his say in the enquiry and do not come to any *prima facie* conclusion even before hearing him. That is not proper justice. But he must be given an opportunity to explain his stand. I do not question your right and you are an honest gentleman and you are in possession of the documents and about the relevancy of the documents you are convinced. But let the accused also see them and let him be convinced about it. Then he may revise his opinion, who knows. After all wiser counsel dawns after experience. So you cannot hold him and call him a dog and then hang him. That is improper and anybody will laugh at us . . . (மணியடிக்கப்பட்டது.)

முன் ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன்.

(3) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி.

(ஆ) ஓர் உறுப்பினர் ஓர் அமைச்சர்மீது சாட்டிய குற்றச் சாட்டை விசாரிக்கப் பேரவைத் தலைவருக்கு உள்ள அதிகாரம் குறித்து

THIRU T. MARTIN: Sir, on a point of order. Article 194 (3) says—

' In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of a State and of the members and the committees of a House of such Legislature, shall be such as may from time to time, be defined by the Legislature by law, and, until so defined, shall be those of the House of Commons of the Parliament of the United Kingdom, and of its members and committees, at the commencement of this Constitution.'

If we take Article 208, the procedure laid down generally is.—

Clause (1) A House of the Legislature of a State may make rules for regulating, subject to the provisions of this Constitution its procedure and the conduct of its business.

Mr. Speaker, Sir, pursuant to that our Legislature has framed certain rules under Article 208 Clause (1) of the Constitution of India, which is a self-contained Code. So our rules have been framed under that Article of the Constitution.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் வேண்டாம்.

THIRU T. MARTIN: Please allow me to explain my point of Order. Freedom of an hon. Member is now disturbed. Please allow me. Here we are all Members. We have to function under our Rules. Under Article 208 (1) the rules have been framed. It is a self-contained Code. Nowhere do I find there in our rules anything about Speaker holding 'inquiry'. May I know from the Hon. Chair under what rule, the power of enquiry, much less ex-parte enquiry, has been granted to be exercised by the Hon. Speaker?

MR. SPEAKER : Come to the point of Order.

THIRU T. MARTIN : Yes, I am coming to it. The Hon. Speaker has said that he has got inherent power of holding an enquiry. The Speaker's post is an elective post. Is it not ? We are all living under a



democratic set up. The majority party elects the Speaker. Now what has happenned ? The hon. Member who has asked for adjournment on grounds of health has been denied that opportunity. May I request the Hon. Speaker under which document the inherent power is there ? If there is an inherent power, it should be specific. It should be specified in the Rules or in the Constitution. Now the Chair refers to May's Parliamentary Practice. They are not Rules but are only Standing Orders. What are these Sanding Orders ? They have not been codified. No citizen should be punished for a violation of a Standing Order which he does not know. No man should be punished by a law which is not known to him. Under these circumstances I want to know from the Hon. Chair whether he has got any specific power, under our Assembly Rules or under the Constitution or any Standing Order which has been codified and made known to the public, for holding an enquiry like this.

Thiru T. Martin : My point of order is different :

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நண்பர் திரு. மார்டின் அவர்களுடைய வாதம், அவர்களுக்கு ஒரு வாய்ப்பு இல்லை என்பது. திரு. சித்தன் அவர்கள் ஹெல்த் கிரவுண்ட்ஸ் என்று சொல்லியுங்கூட, வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பதாகும். திரு. சித்தன் அவர்களும் அதையே தான் சொன்னார்கள், மற்றவர்களும் அதையே சொன்னார்கள். வாய்ப் பளிக்கவில்லை வாய்ப்பளிக்கவில்லை என்பது பெரிது படுத்தப்படுகிறது. இப்பொழுதுகூட அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தவறான விஷயத்தைக் கூறியதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அதை நிரூபிக்கிறேன் என்று சொல்லவும் இல்லை. அதற்குப் பிறகு அப்படிச் சொல்லவும் இல்லை என்று வாபஸ் வாங்கவும் மறுத்து விட்டார்கள். இப்பொழுது அளிக்கப்படும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, திரு. சித்தன் அவர்கள் அதைப் பற்றி அபிப்பிராயம் என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லுகிறேன், இருங்கள். நம் முடைய சட்டமன்ற விதிமுறைகளிலே தெளிவுபெறாத நேரத்திலே,—எல்லாம் இதிலே அடங்கிவிட்டது என்று சொல்லவில்லை—இதிலே தெளிவு பெறாத நேரத்திலே நமக்கு வழிகாட்டியாக இதைக் கொள்ள வேண்டு மென்று கான்ஸ்டிட்யூஷனிலே விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. விளக் கம் இல்லாமல் இருந்தால் அதைப் பார்க்க வேண்டுமென்று சொல்ல வேண்டிய தேவையில்லை. கான்ஸ்டிட்யூஷனிலேயே இருக்கிறது. தெளிவு பெறாமல் இருந்தால் அதைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறது. இன்னொன்றும் சொல்கிறேன். நம்முடைய விதி 242-இலே—

The Speaker shall have power to regulate the conduct of business of the Assembly in all matters not provided for in the Constitution or the Rules".

என்றிருக்கிறது. ஆகவே, தலைவர் எப்படிப் பேரவையை நடத்திச் செல்ல வேண்டும் என்பது பற்றி விதிமுறைகள் இருக்கின்றன. அடுத்து, திரு. சித்தன் அவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

(2) அவையுரிமைக்கேள்விகள்—தொடர்ச்சி

(2) திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு தொழிலமைச்சரின் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி சாட்டிய குற்றச்சாட்டு குறிலது—தொடர்ச்சி.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே என்னுடைய பேச்சைப் பற்றி இரண்டாவது நாளும் குறிப்பிட்டேன். நான் பேசும்பொழுது கூறியதில் ஒரு வாக்கியத்தை மட்டும் எடுத்துக்கொண்டு சொல்லப்படுகிறது. நான் பேசியது, "அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி

வெளியிலே பரவலாகப் பேசப்படுகிறது. அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறேன். என்னை அந்த வாக்கியத்தை முடிக்கவிட்டிருந்தால், "அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வெளியிலே பேசிக் கொள்கிறார்களாம்" என்று தான் முடித்துக் கொள்ளுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுவும் தப்புதான்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஆகவே, எனக்குக் கிடைத்த தகவலை இங்கே கொடுத்திருக்கிறேன். சொத்துக் கணக்குக் கிடைத்திருக்கிறது. இதிலே உள் நோககம் கற்பிக்கும் நோக்கம் எனக்குக் கிடையாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வெளியிலே பேசிக்கொள்கிறார்கள், இதிலே உள் நோக்கம் இல்லை என்று சொல்லுகிறார்கள். திரு. சித்தன் அவர்கள் கூட இண்டிகேட்டிற்குப் போவதாக இருந்தார்கள். அதைத் தடுத்துவிட்டார்கள், அதற்கு என்ன காரணம் என்று வெளியிலே பேசிக்கொள்கிறார்கள் என்று சொல்லலாமா? ஆகவே, அவர்கள் கூறுவது முறையானது அல்ல. வெளியிலே பேசிக் கொள்கிறார்கள், அந்தத் தகவலைக் கொடுத்திருக்கிறேன், உள் நோக்கம் இல்லை என்று கூறிக் கொண்டு பேசுவது நல்லது அல்ல. அதை அவர்கள் நம்புகிறார்களா?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உள் நோக்கம் கிடையாது என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் குற்றச்சாட்டை வற்புறுத்தவில்லை அல்லவா?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** வற்புறுத்தவில்லை. எனக்குக் கிடைத்திருக்கிற விவரங்களைச் சொல்லிவிட்டேன். சொத்துக் கணக்கு விவரங்களைச் சொல்லிவிட்டேன் என்று சொல்லிவிட்டேன்! நான் உள் நோக்கம் கற்பிக்கவில்லை. வற்புறுத்தவில்லை என்று சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) நிச்சயமாக அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். சட்டமன்றத்திற்கு வெளியிலே இருக்கும் பொறுப்பற்றவர்கள் பேசும் பேச்சை இங்கே பேசுவது கூடாது. பொறுப்போடு பேச வேண்டும். ஆதாரம் இருக்கும் விஷயங்களைப் பேச வேண்டும். வெளியிலே, யார் யாரோ எதை எதையோ பேசுவார்கள். எனவே அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லுகிறேன். வற்புறுத்த வில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். எதை வற்புறுத்தவில்லை என்று தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**திரு. மி.ஜி. கருத்திருமன் :** பாதுகாப்பு எங்களுக்கும் வேண்டும். அமைச்சர் என்ற முறையில் எங்களைக் கண்டபடி பேச முடியாது. விட்டுவிட வேண்டுமென்றால் தள்ளிவிட வேண்டுமே தவிர, உங்களுக்குத்தான் எல்லாவிதமான சக்தியும் இருக்கிறது என்று சொல்வதா? சட்டமன்றத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் தான் பாதுகாப்பு வேண்டும். அமைச்சர்களுக்கு மட்டும் தனியாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பலமுறை நான் கூறியிருக்கிறேன். குற்றச்சாட்டுகளை யார் மீது யார் வேண்டுமானாலும் கூறலாம். அமைச்சர்கள் மீது எதிர்கட்சியைச் சார்ந்தவர்கள் குற்றச் சாட்டுகளைக் கூறலாம், எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் மீது ஆளுங்கட்சியிலிருப்பவர்கள் குற்றச்சாட்டுகளைக் கூறலாம். அதற்கு முழு உரிமையும் இருக்கிறது. ஆனால்,



அப்படிக் கூறுகின்ற நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டுகளை ஆதாரமுடைய குற்றச்சாட்டுக்களாகக் கூறவேண்டும். வெளியிலே கூறினார்கள். அதைச் சொல்லிவிட்டேன் என்ற முறையில் கூடாது. அதைப் பல தடவை சொல்லியிருக்கிறேன். நான் ஒரு முறை சொல்லியிருக்கிறேன். ஒரு பெட்டிஷனில் ஒரு குற்றச்சாட்டைக் கூறி புகார் கொடுத்தார்கள். ஓர் உறுப்பினர் எழுதிய பெடிஷன் அல்ல. ஓர் உறுப்பினர் வேறு யாரோ எழுதிய குற்றச்சாட்டை அமைச்சரிடத்தில் அவையிலே கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்தவுடனே, அதிலே கூறியிருக்கும் குற்றச்சாட்டுகளை விசாரித்தார்கள். அது உண்மையில்லை என்று தெரிந்தவுடனே, அந்த மனுவை எழுதி கொடுத்தவர் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்களோ தெரியவில்லை. ஆனால் அந்த மனுவை அமைச்சரிடத்திலே கொடுத்தாரே அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** இங்கே எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேறு எங்கேயோ, வெளியிலே தான். ஆகவே, கூறுகின்ற உறுப்பினர்கள், வெளியிலே கூறுகிறார்கள். பேசிக்கொள்கிறார்கள் என்ற அளவிலே இந்த அவையிலே குற்றம் சொல்லக்கூடாது. அப்படிக் கூறுவது கண்ணியமாகாது. குற்றச்சாட்டைக் கூறினால், அதைக் கூறுகின்றவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். கொடுக்கின்ற ஸ்டேட்மெண்டிற்க்கு, உறுப்பினர்கள் கேள்விநேரத்திலேயோ, பேசுகின்ற நேரத்திலேயோ எந்தவிதமான தகவல் கொடுத்தாலும் அந்தத் தகவலைக் கூறுகின்றவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று தெளிவாக இருக்கிறது. ஆகவே, இது எல்லோருக்கும்தான். இரு தரப்பாருக்கும்தான் அந்தப் பாதுகாப்பு. அமைச்சர்களுக்கும் அந்தப் பாதுகாப்பு உண்டு. இந்தப் பக்கத்திலே உள்ள அங்கத்தினர்களுக்கும் அந்தப் பாதுகாப்பு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கூறுகின்ற நேரத்தில் ஆதாரமுடைய குற்றச்சாட்டுகளைச் சொல்லுங்கள். ஆதாரமில்லாதவைகளைக் கூறுதீர்கள் என்று சொல்லி, ஒரு வழிகூடச் சொன்னேன். பேரவைத் தலைவர்கள் கூடிய மாநாட்டிலே, யாராவது ஒரு உறுப்பினர் ஒரு அமைச்சர் மீதோ, ஒரு உறுப்பினர் மீதோ குற்றச்சாட்டைக் கூறுவதாகயிருந்தால், பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற வேண்டும், இந்த அமைச்சரைப் பற்றி என்ன குற்றச்சாட்டு என்பதை அல்ல. குற்றச்சாட்டு கூறப்போகிறேன் என்று சொன்னால் அந்த அமைச்சர் இருந்து பதில் கூறுவதற்கு வாய்ப்பிருக்க முடியும். அப்படிப்பட்ட முறையை, மரபை மேற்கொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர்கள் கூடிய மாநாட்டிலே முடிவெடுக்கப்பட்டது. அதை நம் அவையிலே மேற்கொள்வது நல்லது என்று கூறியிருக்கிறேன். ஆதாரமுள்ள குற்றச்சாட்டுக்களைக் கூற வேண்டும். ஆதாரமில்லாதவைகளைக் கூறக் கூடாது. அப்படிக் கூறுவது கண்ணியத்தைக் குறைப்பதாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. கே. விநாயகம் :** முன்பு ஒரு முறை சென்னையிலே குடிசைகள் தீப்பற்றி எரிந்தபொழுது, அப்பொழுது காங்கிரஸ்காரர்கள் தீ வைத்தார்கள் என்று குழாயடியிலே ஒரு கிழவி சொன்னதாக அண்ணா அவர்களே சொன்னார்களே, பிறகு அதை நிரூபணம் செய்ய முடியவில்லையே. அப்படிப்பட்டதெல்லாம் மந்திரி அவையிலிருந்து வரும் பொழுது நாங்கள் சொன்னதுதான் பெரிய தவறாக ஆகிவிட்டதா உங்களுக்கு?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அண்ணா அவர்கள் (சிரிப்பு) "ஹா, ஹா" என்று சிரிப்பதற்கு இதில் ஒன்றுமில்லை. அண்ணா அவர்கள் இந்தச் சபையிலே இருந்து யார் பேரிலும் குற்றச்சாட்டுச் சாட்டி, "இப்படி உங்களைப்பற்றி வெளியே பேசுகிறார்கள்" என்று சொல்லவில்லை. அவர்கள் வெளியிலே, தேர்தலின் காரணமாக ஏற்பட்ட புகைச்சலினால் இந்தக்

காரியங்கள் நடைபெறுகின்றன என்று பொதுக் கூட்டத்தில் பேசினார்கள் அறிக்கை விட்டார்கள். சட்டசபையில் பேசவில்லை. சட்டசபையில் யாரையும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டி, திரு. விநாயகம் அவர்கள் குடிசைகளைக் கொளுத்தினார்கள் என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது என்று அண்ணா அவர்கள் சொல்லவில்லை. ஆனால், இங்கே ஓர் உறுப்பினர், திரு. மாதவன் அவர்கள் அமைச்சராக இருக்கிற காரணத்தினால், அவர்களுடைய நிலத்திற்கு அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டது என்று சொல்லிவிட்டு, அப்படிப் பரவலாக வெளியே பேசுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்டு இந்த அவையிலே ஒருவரைப்பற்றி சொல்லப்பட்ட விஷயம் இது. ஆகவே, அது வேறு, இது வேறு.

**திரு. கே. விநாயகம் :** What is your ruling, Sir?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கெனவே இந்த அவைக்குச் சொல்லிவிட்டேன். மேலெழுந்தவாரியாக உரிமை மீறிய நிகழ்ச்சி தான் இது என்று இந்த அவையிலே சொல்லிவிட்டேன். உறுப்பினரே மறுத்துத்திருக்கிற காரணத்தினாலும்,அவரே"இந்தக் குற்றச்சாட்டை நான் கூறவில்லை, அதை நான் வற்புறுத்தவில்லை" என்று கூறியிருக்கிற காரணத்தினாலும், அவை அதுபற்றி எந்த முடிவு எடுக்கவேண்டுமென்று நினைக்கிறதோ அந்த முடிவை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. சித்தன் அவர்கள் அமைச்சர் மாதவன் அவர்களுடைய நிலம் என்கிற காரணத்தினால், அதற்கு அதிக விலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பலரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, பிறகு அன்றையதினமே நான் அப்படி சொல்லவில்லை என்று கூறி,தாங்கள் அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லிய நேரத்தில், அதை வாபஸ் வாங்கவில்லை. உள்ளபடியே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கலாம். முரண்பாடு வந்துவிட்ட பிறகு அதை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியிருக்கலாம். என்ன காரணத்தினாலோ தவறிவிட்டது.

இப்பொழுது திரு சித்தன் அவர்கள் "தான் இந்தக் குற்றச்சாட்டை வற்புறுத்தவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிற காணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள்மீது கற்பித்த அந்தக் களங்கம் விலகிப் போய்விட்டது. என்ற காரணத்தினாலும் அந்தக் களங்கத்திற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை என்று தங்களுடைய விசாரணையிலிருந்து தெரிய வருகிற காரணத்திலும், ஒரு உண்மை உலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பேரவைக்கு உரிமை இருந்தாலும்கூட, ஒரு எச்சரிக்கை என்ற அளவிலே, இனிமேல் இப்படிப்பட்ட நிலைமைகள் கூடாது என்று தாங்கள் அறிவித்திருக்கிற அளவில், இந்தப் பிரச்னையை இந்த அளவோடு விட்டுவிடலாம் என்ற என்னுடைய கருத்தைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்தை நான் கீழ்க்கண்ட தீர்மானமாக முன்மொழிகிறேன்.

"மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மீதுள்ள உரிமைப் பிரச்னையை இந்த அளவோடு எச்சரித்து விட்டுவிடலாம்."

**தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.**

**(2) அவையுரிமைக் கேள்விகள்—தொடர்ச்சி.**

**(ஊ) திரு. ராமச்சந்திரதுரை, மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் மீது சாட்டிய குற்றச்சாட்டு குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரதுரை அவர்கள் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு 23-ம் தேதியன்று நடைபெற்ற துணைமானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய நேரத்தில்—



" நாமக்கல் கல்லூரி நிறுவப்படுவதற்கு பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. நாமக்கல் கல்லூரி நிறுவப்படுவதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் பொது மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வசூலில் கல்லூரிகள் என்ற பெயரால் ஒரு டிக்கெட் அடிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி என்ற பெயரால் ஒரு டிக்கட் அடிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் என்ற பெயரால் அடிக்கப்பட்ட டிக்கெட்களின் வரவு செலவு கணக்குத் தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். வரவு செலவு கணக்குப் புத்தகத்திலே வந்திருக்கிறது. ஆனால், கல்லூரி என்ற பெயரால் அடித்த டிக்கெட்டை அவர்கள் மக்களிடையே கொடுத்திருக்கிறார்கள் பணம் வசூல் செய்திருக்கிறார்கள். அந்த டிக்கெட்டுகள் மக்களிடையே இருக்கின்றன. கல்லூரி என்ற பெயரால் கொடுக்கப்பட்ட அந்த டிக்கெட்களினுடைய வரவு செலவுக் கணக்குகள் கணக்கு புத்தகத்திலே வரவில்லை. அத்துடன் நமது மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களிடத்திலே ரூ. 4.051 ஒரு பஞ்சாயத்துத் தலைவர் நன்கொடையாக கொடுத்திருக்கிறார்கள். இந்த ரூ. 4,051 வரவு-செலவு கணக்குப் புத்தகத்தில் வரவில்லை என்று காணுகின்ற நேரத்தில், இந்தப் பணம் எந்த வகையிலே போனது, யாரிடத்தில் இந்தப் பணம் இருக்கிறது என்பதை காணுகின்ற நேரத்தில் இதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பதில் கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன்." என்று சொன்னார்கள்.

அமைச்சர் அவர்கள் அதற்கு விடை அளிக்கின்ற நேரத்தில் "நாமக்கல்லில் கலைக்கல்லூரி ஒன்று அமைப்பதற்காக 1967-ம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் சர்வ கட்சியைச் சார்ந்தவர்களும் அங்கம் வகித்தார்கள். இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊர் பெருமக்கள் ஆகிய அவ்வளவு பேர்களையும் கொண்ட குழுவாக அது அமைக்கப்பட்டது. அதன் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன். அந்தக் குழுவின் செயலாளராக கோட்டாட்சித் தலைவரவர்கள் அரசாங்கத்தின் அனுமதியோடு நியமிக்கப்பட்டார். அதுவல்லாமல் பொருளாளர் ஒருவரும் அந்தக் குழுவாலே தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்லூரி வசூல் முழுவதையும் நாமக்கல்லில் உள்ள ஸ்டேட் பாங்க் அக்கவுண்டில் வைக்க வேண்டுமென்று விதிமுறைகள் ஆக்கப்பட்டது. அப்படிப் போடும் கணக்கு பொருளாளர் பெயராலே போட வேண்டும், பணத்தை எடுப்பதற்கு பொருளாளர், செயலாளர் ஆகிய இருவரும் கூட்டுக் கையொப்பமிட்டு, குழுவின் ஒப்புதல் பெற்று காரியங்களை ஆற்ற வேண்டுமென்ற விதிமுறைகளெல்லாம் அப்பொழுது செய்யப்பட்டது. முதலிலே அந்தக் குழு அமைக்கப்பட்ட பொழுது நாமக்கல்லில் ஒரு கல்லூரி மட்டுமே அமைக்கவேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குழுவினுடைய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, அந்த அடிப்படையில் வேண்டுகோள்களும் அச்சிடப்பட்டன".

"ரசீது புத்தகங்களும் 'அச்சிடப்பட்டன ஆகவே, முதலில் ரசீதில் 'நாமக்கல்கலைக்கல்லூரி நன்கொடை' என்று போட்டு வசூலித்து வந்தார்கள். குழுவின் ஆர்வத்தின் காரணமாக, இரண்டு கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டுமென்றும், ஆண்கள் கல்லூரி ஒன்று பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டுமென்றும், ஆகவே, அந்த வகையில் வசூலை நடத்த வேண்டுமென்றும் விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். அந்த அடிப்படையிலே இரண்டு கல்லூரிகளுக்கும் சேர்த்து வசூல் செய்ய முடிவெடுக்கப்பட்டு அதற்குப் பின்னால் தொடர்ந்து அச்சிடப்பட்ட ரசீதுகளில் கலைக் கல்லூரிகளின் நன்கொடை என்று போடப்பட்டது."

"அவைகளெல்லாம் அந்தந்த உறுப்பினர்கள் அல்லது ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடம் கொடுக்கப்பட்டு, அவர்கள் வசூல் செய்து தரும் பொறுப்பை மேற்கொண்டார்கள். அப்படி மேற்கொண்டிருக்கும் நேரத்தில் பள்ளிக்கூட மாணவர்களிடமிருந்தும் நன்கொடை பணம் பெறப்பட்டன. அவைகளுக்கு டிக்கெட்டுகள் அச்சிட்டு வழங்கப்பட்டது."

"இந்த நிலையில் நிதி வசூலை மேலும் தீவிரப்படுத்தவும், குறிப்பிட்ட காலத்திற்குள் நிதி வசூலை முடிக்கக் கருதியும் நம்முடைய பெருமதிப்பிற்குரிய புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் "குன்றுடையான்" என்ற நாடகத்தை நடத்த வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி நாடக டிக்கெட்டுகள் அச்சிடப்பட்டு அவைகள் அந்த அந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மூலமாக வழங்கப்பட்டன", "நாடகம் நடத்தப்படும் நாளன்று நான் அங்கு சென்றிருந்தேன். எதிர்பாராத வகையில் அன்று எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வர முடியவில்லை, நாடக டிக்கெட்டுகள் விற்ற அந்தப் பணத்தை ஊராட்சி மன்றத் தலைவர் என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், 4,051 ரூபாய் என்று கருதுகிறேன். அதை ஒரு பள்ளிக்கூடத் திறப்பு விழாவின் போது மேடையில் என்னிடம் கொடுத்தார்கள் உடனடியாக, நான் அதை கோட்டாட்சித் தலைவரிடம் கொடுத்து அது பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் செய்தி கிராம நலம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியை வைத்துக் கொண்டு. அது கணக்கிலே வரவில்லை என்று குற்றம் சாட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன்."

அந்த "குன்றுடையான்" நாடக வசூல் முழுவதும் கணக்கில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாண்டுக் காலத்தில் ஏறக்குறையாக 11 இலட்சம் ரூபாய்க்கு மேல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 10 லட்சம் ரூபாயை கல்லூரிகள் கட்ட வேண்டுமென்ற விதிப்படி கட்டப்பட்டது. மீதியிருப்பது அந்தக் கல்லூரிக் குழுவினுடைய, ஏற்கனவே விதித்த முறைகளின் படி பேங்க் அக்கவுண்டில் போடப்பட்டிருக்கிறது. இதற்கான கணக்குகள் முழுவதும் பொதுக் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட செயற்குழுவால் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் செயற்குழு, தணிக்கைக்குழு அமைத்து அந்தத் தணிக்கை குழுவில் பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் ஆடிட் செய்தார்கள். அத்துடன் இல்லாமல், முறையான ஆடிட்டரிடம் கொடுத்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆடிட்டரிடம் கொடுத்து கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். எவ்வளவு டிக்கட்டுகள் அச்சிடப்பட்டன, எவ்வளவு விற்கப்பட்டன, எவ்வளவு நன்கொடை ரசீதுகள் அச்சிடப்பட்டன, எவ்வளவு விற்கப்பட்டன என்ற கணக்குகள் அத்தனையும் மொத்தமாக ஆடிட் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"கிராமநலம் பத்திரிகையில் வந்திருக்கிற பணம் கணக்கிலே வரவில்லை என்று சொல்லி போட்டோ இருப்பதை எடுத்து வைத்து கொண்டு சொல்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட அந்த ஊராட்சி மன்றத்தலைவரே அந்தக் குழுவினிடத்தில் எழுதிக்கொடுத்திருக்கிறார். இதிலே என்னுடைய சொந்த பணம் எதுவுமில்லை. "குன்றுடையான்" நாடகத்திற்காக, என்னிடத்திலே கொடுத்திருந்த டிக்கட்டுகளை விற்பனை செய்த தொகையாகும், அமைச்சர் அவர்கள் வரும்பொழுது அவர்கள் கையிலே கொடுக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டது. என் சொந்தப் பணம் இல்லை, வசூல் செய்துதரப்பட்ட பணம் என்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். பணத்தை எடுத்துக்கொள்ளும் அளவுக்கு இருந்தால், கிராம நலத்திலே அந்தப் படத்தைப் போட்டு கையாள்வது என்றால் அது கேட்பதற்கு மிகவும் விந்தையான செய்தியாக இருக்கிறது. இன்றைக்கும் எதிர்கட்சி தலைவரானாலும். அவரால் நியமிக்கப்பட்ட குழுவோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திர துரை அவர்களோ எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், வந்து தணிக்கை செய்வதற்குத் தயாராகவைக்கப்பட்டிருக்கிறது."

"இந்த மாநிலத்திலேயே கல்லூரிகளுக்காக அமைக்கப்பட்ட குழுக்களில் முறையாகக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு, அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பெருமை எங்களுக்கு உண்டு என்று எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஒருவர்



கொடுத்திருக்கும் நோட்டீசுக்கு, தேவையான விளக்கம் கல்லூரி குழுவால் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளெல்லாம் மறந்து, ஏதோ பெரிய ஊழல் நடந்துவிட்டது போலப் பேசுவது பொறுப்புள்ள எதிர்கட்சி உறுப்பினருக்கு பொருந்தாது என்று தெரிவித்து கொள்கிறேன். ஆகவே, கிராமநலத்தில் வநதிருக்கும் அந்தப் பணம் தனிப்பட்ட ஒருவர் கொடுத்தது அல்ல, டிக்கெட் மூலம் வசூல் செய்த பணத்தை மொத்தமாகச் சேர்த்து கொடுத்திருக்கிறேன் என்று ஊராட்சி மன்ற த்தலைவரவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் அந்த டிக்கெட்டுகளின் கணக்குகள் புத்தகத்திலேயே அச்சிடப்படடு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக்கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டிருக்கின்றன அந்தப் புத்தகத்தை வேண்டுமானாலும் பெருமதிப்பிற்குரிய ராமச்சந்திர துரை அவர்களுக்கு காட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்." என்று கூறியிருக்கிறார்கள.

இவ்வளவு விளக்கம் தந்தபின் திரு. ராமச்சந்திர துரை அவர்கள் "தலைவரவர்களே, இந்த நோட்டீசிலே அச்சிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டானது 4,051 ரூபாய் வரவு செலவுக்கணக்கில் வரவில்லை. இன்னின்னார் கொடுத்தார்கள் என்று கொடுத்தவர்களின் பெயர்கள் இதிலே போடப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய் கொடுத்தவர்களிலிருந்து 11 பைசா கொடுத்தவர்களிலிருந்து இந்தக் கணக்கில் வருகிறது. ஆனால், கிராமநலத்திலே போடப்பட்டிருக்கும் இந்த 4,051 ரூபாயை பிரசிடெண்டினால் கொடுக்கப்பட்டிருப்பதாக வரவு இல்லை. ....இதைப்பற்றி விசாரணை நடத்தினால் அதை நான் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று சொன்னார்.

உடனே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எழுந்து, "தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் அளித்த விளக்கத்திற்குப்பிறகு அதைப்பற்றி விசாரணை நடத்தினால் நான் ஏற்றுக் கொள்கிறேன், என்று திரு. ராமச்சந்திர துரை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தில் "குன்றுடையான்" நாடகத்திற்காக விற்ற பணம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ரூபாய் 4051 டிக்கட் விற்ற பணத்தோடுதான் சேர்நதிருக்கிறது. அந்தப் பணத்தை தனியாக ஒரு விழாவிலே அமைச்சரிடத்திலே அவர் கொடுத்திருக்கிறார். ஆக, டிக்கெட் இந்த நம்பரிலிருந்து இந்த நம்பர் வரை விற்கப்பட்ட பணத்தில் அது அடங்கியிருக்கிறது. என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார். உறுப்பினர் கேட்ட அந்த விசாரணையினுடைய முடிவுக்குப் பிறகு எந்த நிபந்தனையை ராமச்சந்திர துரை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்." எனச் சொல்லியிருக்கிறார்.

பிறகு திரு ராமச்சந்திர துரை குறிப்பிட்டிருக்கிறார்.

"தலைவர் அவர்களே, இந்த விசாரணைக்கு நானும் தயாராக இருக்கிறேன். அதில் என் முடிவு, நான் சொல்வதிலே குறை இருந்தால் இந்த மன்றம் என்ன தீர்ப்பளிக்கிறதோ அதை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன்."

இதையொட்டி 1970 ஏப்ரல் 2-ம் தேதி அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இதுபற்றி விசாரணைக்கு வரவேண்டும் என்றும், அது ஏப்ரல் 5-ம் தேதி ஒரு மணிக்கு நடைபெறும் என்றும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதிலே 18 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். 29 ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஒன்றைச் சொல்ல வேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தாங்கள் அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அதில் எந்தவிதமான

தவறுகளும் இல்லை என்று கண்டிருக்கிறீர்கள். ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்கள் தன் குற்றச்சாட்டை வற்புறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நண்பர் ராமச்சந்திர துரை அவர்கள் எழுப்பிய பிரச்சினை மீது, அவர்களே விசாரணை வேண்டும் என்று கேட்டு, தாங்கள் விசாரணை வைத்திருக்கிறீர்கள். பெரும்பாலும், சாட்சிகள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருந்தவர்கள், பழைய காங்கிரஸ்காரர்கள். பழைய காங்கிரஸில் இருப்பவர்கள் சாட்சியங்களிலிருந்து அமைச்சர் முத்துசாமி அவர்கள் மீது கூறிய குற்றச்சாட்டுகள் எதற்கும் ஆதாரம் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் அறிவித்திருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு ராமச்சந்திர துரை அவர்கள் எழுப்பிய குற்றச்சாட்டுகளை வற்புறுத்த மாட்டார் என்று கூறியதிலிருந்து, நானும் அவ்வாறு கருதுகிறேன். அந்த நிலை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கே தெரிந்திருக்கும்போது நானும் அவர்கள் பேச்சிலே நம்பிக்கை வைத்து சொல்லுகிறேன். திரு ராமச்சந்திர துரை தன் விளக்கத்தை அளித்துவிட்டார் என்றால், அதன் பிறகு சபை என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** தலைவர் அவர்களே, அன்று நான் சட்டப்பேரவையில் எழுப்பிய பிரச்சினைகளெல்லாம், தாங்களே விளக்கமாக படித்துக் காட்டினீர்கள். அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் தாங்கள் படித்து காட்டினீர்கள். நானும் விசாரணைக்குத் தயார் என்று சொன்னேன். அதற்குப் பிறகு 23—8—1969 அன்று நடந்த 1969–70-ம் ஆண்டு துணை நிதி மதிப்பீட்டிற்கான பொது விவாதத்தின்போது, நாமக்கல் கல்லூரிக்கு நன்கொடை வசூலித்தது பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது குற்றச்சாட்டு சாட்டியது நினைவிருக்கலாம். அதற்கான ஆதாரங்களை நாங்கள் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியதும் நினைவிருக்கலாம். அப்படி ஆதாரங்கள் இருப்பின் அவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு 20–3–1970 அன்றைக்குள் கிடைக்கும்படி அனுப்பிக்குமாறு தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்" என்று கடிதம் 12-ம் தேதி எனக்கு வந்தது. 20-ம் தேதியன்று நான் தங்களுக்கு ஒரு ஸ்டேட்மெண்டு **under Rule 81 of the Assembly Rules** கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) விளக்கத்தைச் சொன்னால்தான் சரியாக இருக்கும். 'வேஸ்ட் ஆப் டைம்' என்றால் குற்றச் சாட்டின்மேல் விசாரணை என்றால் பேசாமல் என்ன செய்வது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது தாங்கள் கூறவேண்டியது தந்நிலை விளக்கம் அல்ல. அது அன்றைக்கே ஆகிவிட்டது. தாங்கள் கேட்டதற்கு என்னென்ன நிலையில் விசாரிக்கப்படும் என்பதெல்லாம் தங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** நான் இல்லாமலே விசாரணை நடந்திருக்கிறது. கருப்பையா என்கிற ஒருவர், நோட்டீஸ் அடித்திருப்பதாகவும், நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், குற்றச்சாட்டு. இன்னாரும் அமைச்சர் பிரசிடெண்ட் என்ற முறையில். . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், உறுப்பினர் வற்புறுத்தப் போவதில்லை. ஆகவே தாங்கள் முடிவுரை கூறவேண்டியது இல்லை என்றார்கள். அதற்காக நான் கேட்டேன். இப்பொழுது உறுப்பினர் குற்றச்சாட்டை வற்புறுத்துகிற அடிப்படையில் பேசிக்கொண்டு போகிறார்கள். அப்படிக் குற்றச்சாட்டை வற்புறுத்துவதாக இருந்தால், அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** இது பெரிய விஷயம். பேசுவதைக் கேட்டால்தானே (குறுக்கீடு) ஜுடீஷல் என்க்வொயரி வையுங்கள் நிருபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தாங்கள் உறுப்பினரை விசாரணைக்கு அழைத்திருக்கிறீர்கள். அவர்கள் சென்னையில் இருந்துகொண்டே வருவதற்கில்லை, என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே தங்களுடைய ரூலிங்கைத் தாங்கள் அறிவித்த பிறகு, சபையின் முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** பன்னிரண்டரை மணிக்கு, ஒரு மணிக்கு விசாரணை என்று வந்திருக்கிறது. எப்படி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை அவைக்குக் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். முதல் லெட்டர் 12–3–1970 அன்றைய கடிதம் 20–3–1970-க்குள் தகவல் கொடுக்க வேண்டும் என்று கொடுக்கப்பட்டது. அடுத்து 2–4–1970 அன்று செயலாளர் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

I am to inform you that the Hon'ble Speaker has fixed 1 p.m. on Sunday, the 5th April 1970 at the Old Legislators' Hostel as the time, date and place at which he desires to enquire into the allegation made by you against the Hon'ble Minister for Local Administration.

என்று ஏப்ரல் 2-ம் தேதியே உங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் 4-ம் தேதி அன்று விளக்கம் கேட்டு எழுதியிருக்கிறீர்கள்.

I am in receipt of your letter D.O.No. 6070/70-3, TNL (B), dated 2nd April 1970 informing me that you have fixed 1 p.m. on Sunday, the 5th April 1970, at the Old Legislators' Hostel at which you desire to enquire into the allegation made by me against the Hon. Minister for Local Administration and further you called upon me to produce all evidence in support of the said allegation.

In your letter the nature and manner of enquiry are not indicated. I wish to know under what rule the Hon. Speaker proposes to hold the enquiry. I wish to know the rules of evidence which will be followed for the enquiry. In my explanation dated 20th March 1970, I have requested you to summon relevant documents which are in the possession and the control of the Hon. Minister for Local Administration and the College Committee for the enquiry.

என்று கேட்டிருக்கிறீர்கள். அதற்கு பதில் அன்றே அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கொடுக்கிற எல்லாத் தகவல்களும் கவனத்தில் கொள்ளப்படும் என்றும், 5–4–1970 அன்று 1 மணிக்கும், 4 மணிக்கும் இடையில் விசாரணை நடைபெறும், தாங்கள் விரும்புகிறபடி மறு விசாரணைக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் கடிதம் எழுதப்பட்டது. அந்தக் கடிதம் தான் 5-ம் தேதி பகல் 12½ மணிக்கு தாங்கள் பெற்றதாகச் சொல்கிறீர்கள். அப்பொழுதும், உங்களுடைய அறைக்கு ஆள் அனுப்பி, நாமக்கல்லிலிருந்து சாட்சிகள் வந்திருக்கிறார்கள் அவைகளே வந்து விசாரியுங்கள் மறுபடியும். விசாரணை வேண்டும் என்றால், மறுபடியும் வாய்ப்பு அளிக்கிறோம் என்ற தகவலும் கொடுக்கப்பட்டது. அதன் பிறகும் வரவில்லை. என்னுடைய அட்வொகேட்டைக் கலந்து கொண்டுதான் வரமுடியும் என்று கூறிய தகவல் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரும் இருந்துகொண்டு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த போது வந்தது. அந்த நேரத்தில் தந்த வாய்ப்பைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, 2-ம் தேதி எழுதிய கடிதம் எனக்கு 3-ம் தேதி கிடைத்தது. 3-ம் தேதி கிடைத்த கடிதத்திற்கு 4-ம் தேதி பதில் கடிதம் கொடுத்திருக்கிறேன். இதை ஒற்றி ... க்க ... மன்று கடிதம் கொடுத்திருக்கிறேன். 5-ம் தேதி 12½ மணிக்கு எனக்கு ... தம் வந்திருக்கிறது. 12½ மணிக்கு வந்த கடிதத்திற்கும்

முற்பகல் 11-30.

அதற்குப் ... கு தங்கள் கடிதத்திற்கும் பதில் அனுப்பியிருக்கிறேன். நான் இல்லாமலேயே விசாரணை நடைபெற்றிருக்கிறது. நான் நேரடியாக இருந்திருந்தால் என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன எது நியாயம் என்பதை அறிந்திருப்பேன். நான் வராமலேயே நீங்கள் விசாரணையை நடத்தியிருக்கிறீர்கள்.....................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். எத்தனை பேர்களை விசாரிக்கப் போகிறீர்கள், ஸ்டேட்மெண்டிலே இன்னின்ன விசாரிக்கவேண்டுமென்று கொடுத்த அவ்வளவும் வந்திருக்கிறதா, நான் விரும்புகின்ற சாட்சியங்களை விசாரிக்க அனுமதிக்க முடியுமா என்று அதற்குப் பதில் எழுதியிருக்கிறேன். "நீங்கள் விரும்புகின்ற அவ்வளவும் விசாரிக்கப்படும். எந்தெந்த சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று கேட்கிறீர்களோ அவர்கள் விசாரிக்கப்படுவார்கள், என்ன என்ன டாக்குமெண்டுகளைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவ்வளவும் இருக்கின்றன. நீங்கள் விசாரணைக்கு வரலாம். சாட்சியங்களை விசாரிக்கக்கூடிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும்" என்று கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். அந்தக் கடிதம் நான் உங்களுக்கு 12½ மணிக்குக் கிடைத்தது. விசாரணையில் அங்கத்தினர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்ற காரணத்தினால்தான் கடிதம் முன்கூட்டியே எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, போதிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லையென்பது முறையான குற்றச்சாட்டாக ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தாங்கள் 2-ம் தேதியன்று சட்டப் பேரவையில் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். "வருகிற 5-ம் தேதியன்று 1 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் திரு. சித்தன் அவர்கள் எழுப்பிய பிரச்சினையையும், திரு. ராமச்சந்திரதுரை அவர்கள் எல்.ஏ. மினிஸ்டர் அவர்கள்மீது எழுப்பியிருக்கிற பிரச்சினையையும், இரண்டையும் அவரவர்களை அழைத்து விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்று. திரு. ராமச்சந்திரதுரை 5-ம் தேதியன்று ஊரிலே இருந்திருக்கிறார். மாறுவேடப் போட்டிக்கு வந்து மனமகிழ்ச்சியோடு கலந்துகொண்டிருக்கிறார். ஊரிலே இருந்துகொண்டு விசாரணையில் கலந்து கொள்ளாமல் அவர்கள், தாங்கள் ரூலிங் கொடுக்கப்படும்போது— முக்கால்வாசி ரூலிங் ஆன பிறகு— தனக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. அவருடைய தலைவர் அவர்கள் வற்புறுத்த மாட்டார் என்று சொன்னதற்குப் பிறகும் வற்புறுத்துகின்ற முறையில் சொல்வது முறையாக இருக்காது.

**திரு ரா. ராமச்சந்திரதுரை :** தலைவர் அவர்களே, அந்த விசாரணையைப் பற்றி எனக்கு 2-ந் தேதியே தகவல் கொடுத்ததாக வைத்துக்கொள்வோம்...............................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விளக்கம் எல்லாம் தேவையில்லை. என்ன குற்றச்சாட்டு என்று சொல்லுங்கள். இவ்வளவு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. டாக்குமெண்ட் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவும் கொடுத்துவிட்டு, இந்த விசாரணையிலே திருப்தி ஏற்படவில்லையென்றால் முழுவதும் விசாரிக்க மீண்டும் வாய்ப்பு அளிக்கிறோம் என்று சொல்லுகிறோம். நீங்கள் அந்த விசாரணையிலே கலந்துகொண்டு மீண்டும் முழு விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கலாம். நீங்கள் இங்கேயே இருந்துகொண்டு, மறுபடியும் விசாரணைக்கு வாய்ப்பு அளித்திருந்தும்கூட, போதிய வாய்ப்பு அளிக்கவில்லையென்று குற்றஞ்சாட்டுவது சரியாகாது. நான் விசாரணையில் கண்ட முடிவை



இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டியிருக்கிறது. வேறு விளக்கங்கள் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முடிவு கண்ட அளவிற்கு, நான் அறிந்த அந்த முடிவிற்கு நீங்கள் ஏதாவது கூறுவதாக இருந்தால் பிறகு கூறுங்கள். இப்பொழுது என்னுடைய முடிவை அறிவிப்பதற்கு நீங்கள் குறுக்கே நிற்கக்கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "வற்புறுத்த மாட்டார்கள்" என்று சொன்னார்களே, அந்த அளவிலே ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** நான் நேரடியாக விசாரணையில் கலந்து அவைகளைப் பார்த்து எனக்குத் திருப்தி ஏற்படாத வரையில், இந்தக் குற்றச்சாட்டை வற்புறுத்தாமல் இருக்க முடியாது.......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் விசாரணையின் முடிவிலே கண்ட முடிவைச் சொல்ல இருக்கிறேன். இதிலே 18 பேர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்பதையும் படித்து விடுகிறேன்.

Thiru Chockalingam, the then Deputy Collector at Namakkal and ex-officio Secretary of Namakkal Arts College Committee.

Thiru Chidambaram Pillai, formerly Block Development Officer, Namakkal.

Thiru S. Marappan, Chairman, Paramathi Panchayat Union, Namakkal Taluk.

Thiru D. Jayaramulu, Advocate, Namakkal and a Member of the Executive Committee and Audit Committee of the Arts Colleges Committee, Namakkal.

Thiru R. Soundararajan, a member of the Executive Committee of the Government Arts Colleges, Namakkal.

Thiru N. Balasubramanian, Chartered Accountant, Namakkal.

Thiru Kuppanna Gounder, Chairman, Kathappalli Panchayat, Namakkal Taluk.

Thiru Subbaraya Gounder, son of Thiru Kuppanna Gounder.

Thiru M. K. Ramasamy, Vice-President of the Namakkal Panchayat Union.

Thiru A. Eswara Chettiar, Correspondent of Sri Ambika Press, Guhai, Salem.

Thiru R. Pandarinathan, Manager, Satya Sayee Press, Namakkal.

Thiru S. Kumaravel, District Khadi and Village Industries Officer, Salem. At the relevant time he was the Block Development Officer, Salem.

Thirumathi C. Nallammal, Headmistress, Panchayat Union School, Muthalaipatti, Namakkal.

Thiru N. Rajarathnam Durai Singh, Teacher, N.P.M. School, Namakkal.

Thiru P. Kuppuswami, Headmaster, Ramapurampudur Panchayat Union Elementary School, Namakkal.

Thiru S. R. Ananthanarayanan, Commissioner, Panchayat Union, Senthamangalam.

Thiru V. Katha Pillai, Assistant, Revenue Divisional Officer's Office, Namakkal, and formerly Assistant, Panchayat Union Office Mohanur.

Thiru R. Muthuswami, Ex-Grama Sevak, Kathapalli, Namakkal Panchayat Union and now Grama Sevak, Dharamangalam Panchayat Union.

ஆக, இவ்வளவு பேர் இதிலே சாட்சியங்களாக விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கமிட்டியிலே இருக்கின்றவர்கள் எல்லோரும் விசாரணைக்கு வந்த உறுப்பினர்கள். அத்தனை பேரும் பழைய காங்கிரஸ்காரர்கள். அவர்கள் இன்றும் காங்கிரஸ்காரர்கள்..................

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, "காங்கிரஸ்காரர்கள்" என்று சொல்லிவிட்டால் போதுமே, இதிலே இரண்டு காங்கிரஸ்காரர்கள்—பழைய காங்கிரஸ்காரர்கள், புதிய காங்கிரஸ்காரர்கள்—என்று ஏன் சொல்ல வேண்டும். ?.....................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் காங்கிரஸ்காரர்கள் தான்—பழைய காங்கிரஸ்காரர்கள்—சொன்னார்கள். அவர்கள் எல்லாம் —எதிர்க்கட்சித் தலைவர்கள் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்த— திரு. காமராஜரிடத்திலே சென்று "நாமக்கல் கல்லூரி பற்றிய நோட்டீஸை" காட்டியவுடன் "நீங்கள் கூட இருந்து, கல்லூரி வருவதற்கு வழி செய்ய வேண்டுமே தவிர, இப்படி யார் நோட்டீஸ் போட்டது - என்று கண்டித்தார் என்ற செய்தியையும் சொல்லியிருக்கிறார்கள். பொதுத் தேர்தல் வருகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை எதிர்த்து வேலை செய்யவேண்டும் என்று சொன்ன காங்கிரஸ்காரர்கள் தான் விசாரணையின்போது சாட்சி சொல்லியிருக்கிறார்கள். விசாரணையிலே கண்ட உண்மையை, முடிவை அறிவித்துவிடுகிறேன்...................

**THIRU K. VINAYAKAM :** On a point of order, Sir.

(Interruption)

Why do you get angry with me ? After all I am helping the House. At least does the Speaker concede this point that a reasonable opportunity was not given to the member to make his stand clear ? Then why don't you give another opportunity ? It will mean......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல நீங்கள் உட்காருங்கள். போதிய வாய்ப்பு கொடுக்கவில்லையென்பதைப் பேரவைத் தலைவர் உணருகிறாரா என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, அதைப் பேரவைத் தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கனம் உறுப்பினருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர் அந்த வாய்ப்பை மறுத்துவிட்டார். இன்னொருமுறை வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்பது வேறு, கொடுக்கவில்லையென்று குற்றம் சொல்வது வேறு முறை.

From the oral and documentary evidence adduced at the enquiry' it is made abundantly clear that the first charge levelled by the hon. Member Thiru R. Ramachandra Durai, namely, that the sum of Rs. 4,051 presented by Thiru Kuppanna Gounder to the Hon. Minister for Local Administration on 10th March 1968 at a school function did not find a place in the accounts is totally baseless. Thiru Kuppanna Gounder himself has deposed that this amount is represented not as a separate contribution or donatiion, but only as sale proceeds of the tickets sold or "Kunrudaiyan Drama" and that included the sum of Rs. 3,500



collected by way of sale of tickets for "Kunrudaiyan Drama" by Thiru Kuppanna Gounder, as also the sum of Rs. 501 received from Thiru Palani Gounder.

In point of fact this sum of money has been brought into account as such. Hence, there is no modicum of truth in the allegation that this sum of Rs. 4,051 presented to the Hon. Minister for Local Administration had not been brought into account. The documentary and oral evidence is unimpeachable.

As regards the second charge levelled by the hon. Member Thiru Ramachandra Durai that some tickets were printed with the word 'கல்லூரி' and some with the word 'கல்லூரிகள்' and that only sale proceeds of the tickets with the words 'கல்லூரிகள்' had been brought into account and no the sale proceeds of tickets with the word 'கல்லூரி' it is again established by oral and documentary evidence clearly that there is no substance in the charge. Witnesses whose veracity cannot be doubted have stated that originally the College Committee decided to establish only one college and hence, the singular 'கல்லூரி' was printed on the ticket, but that later encouraged by the response from the public, the Committee decided to establish two colleges and hence, the latter tickets were printed with the plural 'கல்லூரிகள்'. It is further evident from the deposition of witnesses as well as the documents that both the tickets were bound in several books, but that they were all serially numbered morever, the rendition of account in regard to sale of tickets with the word 'கல்லூரிகள்' includes the sale proceeds of tickets with the word 'கல்லூரி' as well. Therefore, the insinuation that some tickets sold were not brought into account is contrary to facts and unfounded.

The third charge is a trivial one. It relates to small sums of money. 11 paise, 50 paise and so on. From the books of account and the receipts produced in the course of enquiry, it is seen that where such small sums of money have been paid, they have been accounted for separately and were covered by tickets issued in this behalf. The further allegation that a payment of Rs. 111 had been entered as 11 paise stands refuted in the light of this evidence.

To sum up, all the charges levelled by the hon. Member Thiru R. Ramachandra Durai against the Hon. Minister for Local Administration stand disproved by oral and documentary evidence. It must, therefore, be held that they are baseless.

The inference is irresistible that the member has caused a reflection and aspersion on the conduct of the Hon. Minister for Local Administration as the Chairman of the Namakkal Government Arts Colleges Committee, so as to affect his reputation and character.

ஆக திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சர்மீது சாட்டிய மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் போதுமான ஆதாரமில்லை. அவை நிரூபிக்கப்படவில்லை. விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் மூலம் இது வேண்டுமென்றே உள்ளாட்சித்துறை அமைச்சரது புகழுக்கு இழுக்குத் தேடுகிற வகையில் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளாகும் என்று தெரிகிற காரணத்தினால் இதில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறிய நிகழ்ச்சி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுபற்றி இந்த அவையே முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் உள்ளாட்சி அமைச்சர்மீது சாட்டிய குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று தாங்கள் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். ஓர் உறுப்பினர் மீதோ, ஓர் அமைச்சர் மீதோ ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது அவை உரிமையை மீறிய செயலாகும் என்றும் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். ஆகவே, " உள்ளாட்சித்துறை அமைச்சர்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்திய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரதுரை அவர்களை இந்தப் பேரவையில் இருந்து ஒரு கூட்டத்தொடருக்கு நீக்கி வைக்கவேண்டும் " என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு எஸ். முருகையன் :** இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் கருத்தின் மீது திரு ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். ஆளும் கட்சியின் சார்பில் அதை வழிமொழிந்தும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லுபவர்களுக்குத் தண்டனைகள் உண்டு. அதை சட்டப்பேரவையே நிர்ணயிக்கிறது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இதுபற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதும் பொருத்தம் என்று கருதுகிறேன்.

தாங்கள் சாட்சிகளை எல்லாம் அழைத்து விசாரித்திருக்கிறீர்கள். அதில் வெறும் அதிகாரிகள் மாத்திரம் அல்ல, அந்த வட்டாரத்திலே டிக்கெட் புத்தகங்களை அச்சிட்டவர், தொடர்புடைய அதிகாரிகள், அவர்கள் மாத்திரம் அல்லாமல் பொறுப்புள்ள அந்த வட்டார ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்—அதுவும் உறுப்பினர் திரு. இராமச்சந்திரதுரை எந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறாரோ அதே கட்சியைச் சார்ந்த பெரியவர்கள் அவர்கள் எல்லாம் சாட்சியம் அளித்திருக்கிறார்கள். இதில் எந்தவிதமான தவறும் நடக்கவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் மீது வேண்டுமென்றே இந்தக் குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அவைகளைத் தாங்கள் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இடையிலே குறுக்கிட்டு " உறுப்பினர் திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் தமமுடைய குற்றச்சாட்டை வற்புறுத்தமாட்டார்கள் " என்று தெரிவித்தார்.

நானும் அதற்குச் சம்மதித்து திரு. இராமச்சந்திர துரை அத்தகைய விளக்கத்தைக் கொடுத்துவிட்டால் தாங்கள் மேலும் தொடர்ந்து சொல்லத் தேவையில்லை என்று சொன்னேன்.

ஆனால் திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் விளக்கம் அளிக்கிறபோது நிலையை வேறு திசைக்குத் திருப்புவதிலே முற்பட்டார்கள். தமக்குப் போதுமான வாய்ப்பு விசாரணையில் அளிக்கப்படவில்லை என்பதாக உண்மைக்கு மாறான ஒன்றைச் சொன்னார்கள்.

அவருக்குப் போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது, " இன்ன இன்ன விசாரிக்கப்படுமா ? " என்று அவர் கேட்டதற்கும் " விசாரிக்கப்படும், உங்களுக்குத் தேவையான தகவல்கள் எல்லாம் தரப்படும் " என்று சொல்லப்பட்டிருக்கிறது. " நீங்கள் விரும்பினால் இந்த ஒரு விசாரணை மட்டும் அல்ல, அடுத்த ஒரு விசாரணைக்கும் வாய்ப்பு அளிக்கலாம் " என்று அவர்களுக்கு எழுதியும் அவர்கள் வரவில்லை என்று தாங்கள் சொன்னீர்கள். இப்படி அளிக்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல், வாய்ப்பு அளிக்கவில்லை என்று கூறுகிறார்,



இது தண்டனைக்குரிய ஒன்று தான். இது நியாயம்தான். இதில் ஒரு மாற்றமும் நான் காணவில்லை. நீங்களே இதுபோன்ற குற்றத்திற்கு எத்தகைய தண்டனை வழங்கப்படலாம் என்பதற்கும் அஸ்ஸாம் மாநிலத் தீர்ப்பை முன்பே கூறியிருக்கிறீர்கள். தற்போது திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள், ஒரு கூட்டத்தொடருக்கு உறுப்பினரைத் தள்ளிவைக்குமாறு கோரியிருக்கிறார்கள். இந்த தண்டனை வழங்கலாமா, இல்லையா என்பது அல்ல பிரச்சினை.

அவரது கட்சித் தலைவர் திரு காமராஜ் அவர்களே—திரு. இராமசந்திரதுரை அப்படிக் குற்றஞ்சாட்டியிருப்பது நியாயம் அல்ல என்று கூறியதாக அந்த வட்டாரக் காங்கிரஸ்காரர்களே தங்களிடம் சாட்சியம் அளித்திருக்கிறபோது கூறியிருப்பதை எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே எனக்கு அவர்களது நல்லெண்ணம் தெரிகிறது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் இதில் உள்ள உண்மையை நிச்சயமாக உணர்வார்கள். தாங்களே சட்டசபையில் அறிவித்ததுபோல அவர்களும் விசாரணையின்போது இருந்தார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை, இவை நியாயமற்றது என்கிற உண்மையை அவர்களும் உணர்ந்திருப்பார்கள். அதன்காரணமாகத்தான் திரு. இராமச்சந்திரதுரை வற்புறுத்துமாட்டார்கள் என்று சொன்னார். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இந்தக் குற்றச்சாட்டு தவறு என்று உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய கட்சித் தலைவர் திரு காமராஜ் அவர்களும் தன் கட்சி உறுப்பினர் செய்த குற்றச்சாட்டு தவறு என்று உணர்ந்திருக்கிறார்கள். பேரவை முன்னுள்ள தீர்மானத்தை நாம் நிறைவேற்றினால் நாம் அவர்களுடைய நல்லெண்ணத்தையெல்லாம் மதிக்கவில்லை என்று பொருளாகிவிடும்.

இது ஒரு தனி உறுப்பினரைத் தள்ளி வைக்கிற—ஒரு தனிப்பட்ட உறுப்பினருக்குத் தண்டனை அளிக்கிற பிரச்சினை அல்ல. கட்சியின் பெரும் தலைவர்கள் நல்லெண்ணம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் அறியவேண்டும். கட்சியின் பெரும் தலைவர்களைப் போலவே கட்சி உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. நல்ல மரத்திலும் புல்லுருவிகள் உண்டு என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கண்ணியத்தோடும், கடமை உணர்ச்சியோடும் திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் இந்தக்குற்றச்சாட்டை வற்புறுத்தமாட்டார்கள் என்று சொல்லியதில் இருந்தும், திரு. காமராஜ் அவர்கள் கொண்டிருக்கிற நல்லெண்ணத்தையும் உணர்ந்து திரு ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் தீர்மானத்தை வலியுறுத்தத்தேவையில்லை. முன்பு வேறு ஒன்றினுக்கு அளித்த தீர்ப்பினைப்போலவே இதிலும் எச்சரிக்கை என்ற அளவில் விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன்மீது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன்.

அவையின் நேரத்தினை இதற்காக செலவழித்திருக்கிறோம். என்னுடைய கருத்து என்னவென்றால் இந்த அவையிலே ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர்மேலே குற்றஞ்சாட்டி ஆதாரமில்லாத நிலைமையிலே இருந்தால் அது அவருடைய உரிமையைப் பாதிக்கும். மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ அது உரிமைப் பிரச்சினையாகிறது. இந்தக் காரணத்திலே இங்கே அதைப்பற்றி விவாதித்தால் சபையிலே குழப்பங்கள் ஏற்படலாம். இதற்காக ஒன்றரை மணி நேரம் எடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட சிக்கலான பிரச்சினைகள் வருகின்ற நேரத்திலே எந்த ஒரு உறுப்பினரும் இன்னொரு உறுப்பினரைக் குற்றஞ்சாட்டினாலும் பேரவைத் தலைவர் அவர்களே அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி—உரிமைக் குழுவிலே எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். விரிவாகப் பேச

வதற்கு வாய்ப்பு இருக்கிறது, உறுப்பினர்கள் விளக்கமாகப் போவதற்கு அதிலே இடம் இருக்கிறது—எனவே அந்த முறையைக் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டத் தொடர் இன்று முடிகிறது, இன்றைக்கு இறுதியான நாள். அவர்கள், கூட்டத் தொடக்குருகு விலக்கி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது கடுமையான தண்டனை என்பதை என்னுடைய கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களையொட்டி அவற்றை ஆதரித்து, நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** இப்பொழுது வந்திருக்கிற பிரச்சினையை சட்டமன்றத்திலே உரிமைக் குழுவிற்கு அனுப்பி அந்தக் குழு அறிக்கை கொடுத்தால் அந்த அறிக்கையின் மீது சட்டமன்றம் விவாதிப்பதற்கு வசதி இருக்கும். இப்படித் திடீரென்று வரும்பொழுது எங்களைப் போன்றவர்களுக்கு, குற்றச்சாட்டு கொண்டுவந்த ஒருவருக்கும் சபாநாயகருக்கும் இடையே நடந்த விவகாரமாகத்தான் அது தெரியும். திடீரென்று கொண்டுவரப்படுவதால் அதிலேயுள்ள நியாய அநியாயங்கள் பற்றியெல்லாம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புதவற்கு முடிவு எடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து பேரவைத் தலைவர் சொல்லலாம். அதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்த அவைதான் முடிவு செய்ய வேண்டும். உரிமைக் குழுவிற்கு அனுப்புவதோ அல்லது இந்த அவையே முடிவு செய்ய வேண்டும் என்பதோ இந்த அவை முடிவு செய்ய வேண்டியது. மேலெழுந்தவாரியாக உரிமைப் பிரச்சினை இருக்கிறது. எனவே அவையின் முடிவிற்கு இதை விட்டு விடுகிறேன். அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமா அல்லது திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமா என்பது அவையினுடைய உரிமையாகும்.

**THIRU K. VINAYAKAM :** I move the following resolution :—" Thatthe matter be referred to the Committee of Privileges."

**THIRU R. PONNAPPA NADAR :** I second it.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** பிரிவலஜ் கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். திரு விநயகம் அவர்கள் கவனிக்க வேண்டும். அவர்கள் உரிமைகளைப் பற்றி நிரம்பத் தெரிந்தவர்கள். குற்றச் சாட்டுக்கு சாதாரண அடிப்படையே இல்லை என்பதைப்பற்றி சபாநாயகர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது. எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாமல் எச்சரித்து விட்டுவிடலாம் என்று சொன்னேன். திரு. விநயகம் அவர்கள் அதை உரிமைக் குழுவிற்கு விடலாம் என்று சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டு அதற்குப் பிறகு நான் என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உரிமைக் குழுவிற்குப் போகவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் முதலிலே தந்த என்னுடையகருத்திற்கிணங்க கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.



" மாண்புமிகு உறுப்பினர் திரு ரா. ராமச்சந்திரதுரை அவர்கள் மீதுள்ள உரிமைப் பிரச்சினையை இந்த அளவோடு எச்சரித்து விட்டு விடலாம்."

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** தலைவரவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. கே. விநயகம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விதியில் (20)-ல்

Sittings of the Assembly shall, unless the Speaker otherwise directs; ordinarily commence at 9·00 a.m. and conclude at 1·30 p.m.

என்று இருக்கிறது. முன்னாடியே ஸ்பீக்கர் அறிவித்து விட்டால் நல்லது, உணவு விடுதியில் இல்லாவிட்டால் சாப்பாடு கிடைக்காது. எத்தனை மணி நேரம் வரை நடக்கும் என்று அறிவித்து விட்டால் அதுவரைக்கும் சாப்பாடு வைத்து இருக்குமாறு உணவு விடுதிக்கு டெலிபோன் செய்து விட்டால்தான் சாப்பாடு கிடைக்கும்.

**(4) அமைச்சரின் விளக்க உரை: இந்துக்கள் அல்லாதவரையும் கோவில்களில் நுழைய அனுமதிப்பது குறித்து முதலமைச்சரின் விளக்கவுரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 82-வது விதியின்கீழ் இந்த மன்றத்தில் கீழ்க்காணும் அறிக்கையை அளிக்கிறேன்:—

இந்துக்கள் அல்லாதவர்களையும், ஆலயங்களில் அனுமதிக்கும் வகையில், ஆலய நுழைவு விதிகளில் 3-வது விதியின் துணைவிதி (a)-யை நீக்கி அமைத்தது இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. இந்துக்கள் அல்லாதவர்கள் கோயிலுக்குள் செல்லுவது கோவில் அதிகாரிகளால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் என்பது முன்பே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்துக்கள் அல்லாதார் அனுமதிக்கப்படுவதால், கோயிலின் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று சிலர் அச்சப்பட்டதைத் தவிர்க்கும் வகையில் அரசு கீழ்க்கண்ட அறிவுரைகளை கோவில் நிர்வாக அதிகாரிகளுக்குப் பிறப்பிப்பது அவசியம் என்று கருதுகிறது.—

(அ) இந்துக்கள் அல்லாதவர்கள் பூஜை நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் மட்டுமே கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

(ஆ) மகா மண்டபம் வரையில், இந்துக்கள் அல்லாதவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். வழிபாட்டுக்குரிய அர்த்தமண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(இ) கோயிலுக்குள் செல்லுவதற்கான நோக்கத்தைக் காட்டி அதற்குரிய அனுமதிச் சீட்டைப் பெற்று, கோயில் வழிகாட்டியுடன் செல்ல வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றுச் செல்பவர்கள் கோயிலுக்கான பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

(ஈ) பொதுவாகவோ, சிறப்பாகவோ கோயிலின் தூய்மை, மரியாதை இவற்றைச் செல்லுபவர்கள் பேணிக் காப்பாற்ற வேண்டும்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** இந்த உச்ச வரம்பு குறைப்பு மசோதாவை மாலை 5 மணி அளவில் வைத்துக்கொண்டால் நிலை குறைவு ஏற்படுகிறது என்ற கவலை அல்ல. முதலமைச்சருக்கும் உழைப்பதற்குக் கொஞ்சம் சக்தி குறையும். அதிலும் என்னைப் போன்ற வயதானவர்கள் இருக்கின்ற காரணத்தால் நாளை எடுத்துக் கொள்ளுவது நல்லது. சாவகாசமாக விவாதிக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று எண்ணுகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** அவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த மசோதாவின் மீது கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் எல்லாம் அட்மிட் செய்யப்பட்டிருக்கின்றனவா என்ற பிரச்சினை இருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் பூராவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்று தெரியாமல், நாங்கள் கொடுத்திருக்கும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றனவா என்பது தெரியாமல்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருப்பவற்றில் சில திருத்தங்கள் முறையாக இல்லாமல் இருப்பதால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தெரிவிக்கப்படாத திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று பொருள். ஆகவே அந்த அளவில் அந்தத் திருத்தங்கள் வரும்போது இங்கே அங்கத்தினர்கள் முன்மொழிந்து வழிமொழியலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் எல்லாத் தலைவர்கள் கருத்துக்கும் முரண்பாடாகச் சொல்லுகிறேன் என்று கருதக் கூடாது. சிலம்புச் செல்வர் வயதானவர் என்பதனால் அவர் வேண்டுமானால் 5 மணியிலிருந்து 6 மணி வரையில், அவரால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு, இருந்தால் போதும். அப்படியொன்றும் அவருக்கு இதில் பெரிய அக்கறை இல்லை என்று எனக்குத் தெரியும்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தயவு செய்து தேசப்பற்று உள்ள யாருக்கும் இந்த விஷயத்தில் அக்கறை உண்டு என்பதில் என்னையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மற்றவர்கள் சந்தேகக் குரல் எழுப்புவதுபோல் மாண்புமிகு சிவஞானம் அவர்கள் இதில் எழுப்ப வேண்டியிருக்காது என்று தான் சொன்னேன். இன்றைக்கு மாலை 5 மணிமுதல் கிட்டத்தட்ட 5 மணி நேரம் வேண்டுமானாலும் வைத்துக் கொண்டு. அதில் முடியவில்லை என்றால் நாளைக்கு முடித்துக் கொள்ளலாம். அப்போது தான் மேலவையிலும் நிறைவேற்ற எதுவாக இருக்கும். அந்தக் காரணத்தால்தான் சொல்லுகிறேன். ஆகவே சில அங்கத்தினர்கள் சொன்னதை மாற்றிச் சொல்லுகிறேன் என்று தவறாகக் எடுத்துக் கொள்ளாமல் நான் எடுத்துச் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காலை 9 மணி முதல் பிற்பகல் 1½ மணி வரை 4½ மணி நேரத்தில் 1 மணி நேரம் கேள்விகள் அதற்குப் பின்னால் மற்ற கருத்துக்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு எல்லாம் இரண்டு மணி நேரம் ஆகிவிட்டிருக்கிறது. மாலையில் 5 மணி நேரம் கிடைக்கிறது. அதற்குள் மசோதா விவாதம் முற்றுப்பெற இயலவில்லை என்றால் நாளைக்கும் நேரம் கிடைக்கும் என்று கூறவிரும்புகிறேன்.

**(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவனங்கள் நிதி (திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/70)**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி நிறுவனங்கள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 15/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகின்றேன்.

* 4—4—1970 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1939-ம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் 4எ பிரிவின் கீழ், திரைப்படக் காட்சிகளுக்கு அவை நடத்தப்படும் இடத்தைப் பொறுத்து, அதாவது சென்னை மாநகரம், சிறப்பாக அறிவிக்கப்பட்ட நகராட்சி, பிற நகராட்சி, மற்ற இடங்கள் என்னும் வகையில், காட்சி ஒன்றுக்கு முறையே ரூ. 2·50, ரூ. 2·00. ரூ. 1·50, ரூ. 1·00 என்னும் வீதத்தில் ஒரு கூடுதல் வரி விதிக்கப்படுகிறது. இப்பேரவை முன்பு 1970–71-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை வைத்தபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அறிவித்தது போல, அரசின் வருவாயைப் பெருக்கும் நோக்குடன் திரைப்படக் காட்சிகளின் மீது விதிக்கப்படும் காட்சி வரியை, தற்போது விதிக்கப்படும் வீதத்தைப் போல இரண்டு மடங்காக அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

1961-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிச் சட்டத்தின் 3 (1) (b) பிரிவின் கீழ், உள்ளாட்சி நிறுவனங்கள், அவற்றின் எல்லைகளுக்குள் நடத்தப்படும் திரைப்படக் காட்சிகள் மீது, மேல்வரி விதிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த மேல்வரி, உள்ளாட்சி நிறுவனங்கள் முடிவு செய்யக் கூடிய வகையில் 1939-ம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் 4எ பிரிவின் கீழ் விதிக்கப்படும் காட்சி வரிக்கு மூன்று மடங்குக்கு மேற்படாதது ஆகும். உத்தேசித்துள்ள காட்சி வரி போல, மூன்று மடங்கு மேல்வரி விதிக்கப்படின் திரைப்படத் தொழிலை அது வெகுவாகப் பாதிக்கும் என திரைப்பட அரங்குகளின் உரிமையாளர்கள் அரசுக்கு முறையிட்டனர். நியாயமான அவர்களின் கோரிக்கையை ஏற்று 1939-ம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டத்தின் 4எ பிரிவின் கீழ் மாறுதல் செய்ய உத்தேசித்துள்ள காட்சி வரி போன்று, ஒன்றரை மடங்குக்கு மேற்படாத வகையில், மேல்வரி விதிக்க உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வகை செய்தால் போதும் என்று அரசு முடிவு செய்துள்ளது. திட்டமிடப்பட்ட மாறுதலினால், உள்ளாட்சி நிறுவனங்கள், தங்களுக்கு தற்போது கிடைத்துவரும் வருவாயைத் தொடர்ந்து பெற்று வரும்.

மேல் வரி வீதத்தில் மாற்றம் ஏதேனும் செய்யப்பட்டிருப்பின், அதை உள்ளாட்சி மன்றங்கள் அடுத்துவரும் நிதி ஆண்டு தொடக்கத்திலிருந்து தான் செயலுக்குக் கொண்டுவர முடியும் என 1961-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவனங்கள் நிதி சட்டத்தின் 3 (3) பிரிவின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த விதித்துறையின் காரணமாக, உள்ளாட்சி நிறுவனங்கள், 1970–71-ம் ஆண்டில் காட்சி வரி மீதான மேல்வரி வீதத்தில் எந்த விதமான மாறுதலும் செய்ய இயலாது. இந்த இடையூறைத் தவிர்க்க இந்தச் சட்டத்தில் 3 (3) பிரிவை விலக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. மேலும் உள்ளாட்சி மன்றங்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள், திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ், உள்ளாட்சி மன்றங்களின் புதிய தீர்மானங்கள் செயல்படுத்தப்படும்வரை, தொடர்ந்து செயலிலிருந்து வர திட்டவட்டமாக வகை செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த காட்சி வரி உயர்வு, 1970-ம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஐயா, இந்தப் பிரேரணையை இம்மன்றம் ஏற்க வேண்டுமென நான் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றிரண்டு விளக்கங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். கிராமங்களில் ஏராளமான டெண்டுகளைப் போட்டு சினிமா நடத்துகின்றார்கள். அவற்றில் சில அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இந்தச் சட்டத்தில் உள்ள விதிகள்

சரியான வகையில் அதிகாரிகளால் அமுல்படுத்தப்படுகின்றனவா, சுகாதார வசதிகள் கொடுக்கப்பட வேண்டிய அளவுக்குத் தரப்படுகின்றனவா என்று கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதிலும் குறிப்பாக இந்த "டெண்டு" கொட்டகைகளில் ஸ்கிரீன் இருக்கின்றதல்லவா, அதற்குப் பக்கத்தில் ஏராளமான மாணவர்கள் வந்து உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். ஸ்கிரீனுக்கும் இறுதி வகுப்பில் இருப்பவர்களுக்கும் இடையே இவ்வளவு தூரம் இருக்க வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அந்த சினிமாடோகிராப் விதிகள் சரியான வகையில் அமுல் நடத்தப்படுவதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எல்லா இடங்களிலும் அந்த விதிகள் சரியான வகையில் அமுல் நடத்தப்படுகின்றன என்ற அதற்கான வாக்குறுதியும், அதற்கான கண்காணிப்பு, வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற வாக்குறுதியும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே நமது சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் சினிமா கொட்டகைகளில் பல இடங்களில் எக்ஸாஸ்டு (Exhaust) விசிறிகள் சரியான வகையில் ஓடுவதில்லை. 3 மணி நேரம் உட்கார்ந்த பிறகு, சினிமா பார்க்கின்றவர்கள் நோயில் சிக்கிக் கொள்ளுகிறார்கள். இது சிறிய விஷயமாக இருந்தாலும், சினிமா பார்க்கச் செல்லுகின்றவர்கள் தங்களையும் அறியாமல் நோய்வாய்ப்படும் சூழ்நிலை இருப்பதால், அரசாங்கம் உடனடியாக ஓர் உத்தரவு பிறப்பித்து எல்லா இடங்களிலும் சுகாதார வசதி சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, டாக்ஸ் இவ்வளவு என்று டிக்கட்டில் போட்டிருக்கிறார்கள். கிராமங்களில் டிக்கட் இல்லாமல் ப்ரைவேட்டாகப் பணம் வாங்கிக் கொண்டு சினிமா பார்க்க விடும் விதத்தில் என் ரஃப் எஸ்டிமேட்படி கால் பாகம், கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் வரை சர்க்காருக்கு வரவேண்டிய தொகை வராமல் இருக்கிறது. அது நியாயமாக சர்க்காருக்கு வரவேண்டிய தொகை. அதையும் கவனிக்க வேண்டும். சினிமாக் கொட்டகைகள் கட்டும்போது இவ்வளவு மோட்டார் வெகிக்கிள்ஸ்க்கு பார்க்கிங் ஸ்பேஸ் இருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் அது சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதையும் பார்த்து, வேண்டியதைச் செய்ய வேண்டும்.

***திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1967–68-ஐ விட 1968–69-ல் இந்தத் தமாஷா வரி மூலம் அரசுக்கு அதிகப்படியான வருவாய் கிடைத்திருக்கிறது. 1968–69-ஐ விட 1969–70-ல் கூடுதலாகக் கிடைத்திருப்பது பாராட்டுக்குரியது. இத்துறை மூலம் அதிகப்படியான வருவாய் அரசுக்குக் கிடைப்பதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இப்போதுள்ள முறை, சினிமாக் கொட்டகைகளில் டிக்கட்டுகள் விற்கும்போது முன்கூட்டியே கொட்டகைக்காரர்கள் ஒரு நாளைக்கு இவ்வளவு ஆயிரம் டிக்கட்டுகள், என்று ஸீல் அடித்துக்கொண்டு வர அதிகாரிகளிடம் எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அது சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லை என்பது பலதரப்பட்ட செய்திகளிலிருந்து வரக்கூடிய ஒரு செய்தியாகும்.

ஒழுங்கான முறையில் இந்த வருவாய் அரசுக்குக் கிடைக்க இரண்டொரு யோசனைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னால் டிக்கட்டில் ஸ்டாம்ப் ஒட்டும் முறை இருந்தது. தபால் ஸ்டாம்ப் போன்று அந்த ஸ்டாம்பை டிக்கட்டுக்குப் பின்னால் ஒட்டி அவை விநியோகிக்கப்பட்டு வந்தன. குறைபாடு எதுவும் ஏற்படாமல் இருக்கக் கூடிய ஒரு முறையாகும் அது.

அடுத்து, டிக்கட்டுகள் அரசினரே அச்சடித்து ஒவ்வொரு கொட்டகைக்கும் விநியோகிப்பது. அதைப் பின்பற்றினால் யாரும் தவறான டிக்கட்டுகளை விநியோகிக்கும் ஒரு நிலை ஏற்படாது. இன்னொன்று, கம்பவுண்டிங் முறையைப் பின்பற்றி ஒரு மூன்று மாத காலத்திற்கு இவ்வளவு வசூலாகும் என்று நிர்ணயித்து அதன் அடிப்படையில் ஒரு நிர்ணயிக்கப்பட்ட அளவிற்குள்ள வரியைக் கட்ட வேண்டுமென்று ஒரு உத்தரவு இடுவது நல்லது. இந்த மூன்று முறைகளில் அரசினருக்கு எந்த முறை உசிதமாகத் தோன்றுகிறதோ அதைப் பின்பற்றினால் நாம் எதிர்பார்ப்பதை விட அதிகமான அளவிற்கு கிட்டத்தட்ட ரூ. 15 கோடி அளவிற்கு இந்த தமாஷா வரி மூலம் நமக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.



விற்பனை வரி என்றால் பொது மக்களிடமிருந்து வாங்குவதும் இல்லை, அரசுக்குச் செலுத்துவதும் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. ஆனால் இந்தத் தமாஷா வரியைப் பொது மக்களிடமிருந்து வசூலித்து அதை அரசுக்குக் கட்டாமல் தாங்களே எடுத்துக் கொள்கிற ஒரு பெரிய குற்றத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே நான் குறிப்பிட்ட முறைகளில் ஒன்றைப் பின்பற்றினால் அரசுக்குக் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் இதிலிருந்து வருவாய் வரும். அதோடு பொது மக்களிடமிருந்து வாங்கும் பணத்தை அரசுக்குக் கட்டக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி டிக்கட்டுகளில் ஸ்டாம்ப் ஒட்டுவது, அல்லது அரசினர் அச்சடித்து டிக்கட்டுகளைக் கொடுப்பது, அல்லது கம்பவுண்டிங் முறை, இதில் எதையாவது பின்பற்றினால் அடுத்த ஆண்டு எதிர்பார்ப்பதை விட அதிகப்படியான வருவாய் இதிலிருந்து வரும் என்று கூறி இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸில் சில மாறுதல்களைச் செய்து ஷோ டாக்ஸ்க்கு அதிகப்படியான வரி போட உத்தேசித்திருக்கிறார்கள். இந்த வரி உயர்வினால் டிக்கட்டுகளின் விலை உயராத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டிலுள்ள பல ஏழை மக்களுக்கு மிகக் குறைந்த செலவில் உள்ள ஒரு பொழுதுபோக்கு இந்த சினிமாவாகும். ஆகவே இன்றில்லாவிட்டாலும் வருங்காலத்தில் இந்த வரி உயர்வினால், இந்த வரி உயர்வு டிக்கட்டுகளின் மீது ஏறி, பொழுதுபோக்கிற்காக வரும் ஏழைகளின் மீது அதிகப்படியான சுமையாக ஆகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் போடும்போது பக்கா சினிமாக் கொட்டகைகளை விட்டுவிட்டு டெண்ட்களாக இருப்பவற்றிற்கும், டெம்பரரியாக ஆறு மாத காலத்திற்கு மேற்படாத அளவில் வைத்துக் கொண்டிருக்கும் கொட்டகைகளுக்கும் ஒரு கன்செஷன் கொடுக்கும் முறை இருந்தால் அவர்களுக்கு அது மிகவும் வசதியாக இருக்கும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதுபோல், பல சினிமாக் கொட்டகைகளில், அது நகரத்திலானாலும் சரி அல்லது கிராமத்திலானாலும் சரி, சுகாதார வசதிகள் நல்ல முறையில் பின்பற்றப்படுவதில்லை. ஆண்களுக்காகட்டும் அல்லது பெண்களுக்காகட்டும், சினிமாக் கொட்டகைகளில், "லட்ரின்" வசதிகள் சரியாக இல்லை, பல இடங்களில், "லாபி"யில் கூட இந்த "லட்ரின்"கள் மிகவும் பக்கத்தில் பக்கத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றன. அப்படியிருப்பதன் காரணமாக சங்கடமான சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அவற்றை நல்ல முறையில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

சினிமாக் கொட்டகைகளில் புகை பிடிக்கக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் அச்சட்டம் சரியான முறையில் அமுல் ஆக்கப்படுவதில்லை. பல இடங்களில் கொட்டகைகளில் புகை பிடிப்பதைப் பார்க்கிறோம். இதனால் பல ஆபத்துக்கள் விளைவதோடு கூட அங்கிருப்பவர்களின் சுகாதாரமும் கெட்டுவிடுகிறது. ஆகவே அதுவும் தடுக்கப்படவேண்டும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தியேட்டர் ஓனர்கள் சரியான முறையில் டிக்கட்டுகளை விநியோகிப்பதில்லை என்று சொன்னார்கள். திரு கிருஷ்ணன் அவர்கள் சொன்னதுபோல் ஸ்டாம்ப் ஒட்டிக் கொடுக்கும் வழக்கத்தை கடைப்

பிடித்தால் அல்லது வேறு முறையில் சரியான முறையில் கண்காணிக்கப் பட்டால் அரசுக்கு வர வேண்டிய தொகை வந்து சேரும். ஆகவே அரசுக்கு வந்து சேர வேண்டிய வருவாய் எந்த வகையிலும் பாழாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்களும் இரு சட்டங்களைப் பற்றிப் பேசினார்கள். அவை சினிமாட்டோகிராஃப் ஆக்டின் கீழ் வரக்கூடியவை. அதன்கீழ் இருக்கிற சில தவறுகளைச் சுட்டிக் காட்டினார்கள். கொட்டகைகளில் புகை பிடிக்கிறவர்களைப் பிடிக்கப் போலீஸாருக்கு அவ்வப்போது உத்தரவுகள் போடப்படுகின்றன. அவர் களும் பிடித்து வழக்குகள் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். வேறு சில பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவையும் சினிமாட்டோகிராப் ஆக்டின் கீழ் வருபவை. அவை, முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டிய பிரச்சினைகள். அவர்களிடம் அதுபற்றி எடுத்துச் சொல்லலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்ன சில யோசனைகளை ஒப்புக் கொள்ளலாம் என்று அரசு பரிசீலித்தது. பின்புறம் ஸ்டாம்ப் ஒட்டலாம் என்ற யோசனை இருந்தது. ரூபாய் நோட்டுகளையே கள்ள நோட்டு அடிக் கும் காலத்தில் அரசு டிக்கட்டுகள் அச்சடிப்பதனால் பெரிய பலன் ஏற்படும் என்று தோன்றவில்லை. சினிமா கொட்டகைகளில் திடீர் திடீரென்று சோதனை செய்ய "ஃப்ளையிங் ஸ்க்வாட்" போன்று ஒரு பறக்கும் படை நிறுவ யோசித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு டி.வி.டி.ஓ—க்கும் ஒவ்வொரு ஜீப் கொடுத்து சினிமா கொட்டகைகளைச் சோதனையிட வேண்டு மென்று அதற்கு வழி செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இதுபோன்ற புகார்களைக் கண்டுபிடித்து விடலாம். இது கேளிக்கை வரிச் சட்டமல்ல. ஷோ டாக்ஸை அதிகமாக உயர்த்தும் சட்டம் இது. இதை யாரும் எதிர்க்கவில்லை என்று கருதுகிறேன். இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின்முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 15/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 16/70).**

**THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker Sir, I beg to move "that the Tamil Nadu Additional Sales Tax Bill,* 1970 [L. A. Bill No. 16 of 1970] be taken into consideration.**

*** Published in the Fort St. George Gazette Extraordinary, dated 4th April 1970.**



One of the measures proposed in the Budget for 1970-71 to increase the resources of the State relates to the introduction of an additional levy on assessees with annual turnover exceeding Rs.5 lakhs,in the form of an additional tax at 7½ per cent on the sales tax assessed for the dealer each year from the assessment year 1969-70 onwards, and an additional tax of 7½ per cent on dealers covered by the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939). No dealer would be entitled to collect the additional tax from the consumers. The additional yield anticipated from this measure was of the order of Rs. 1·1 crores.

Since the announcement about the above measure was made, there has been a number of representations in regard to the additional tax proposed. After fully considering the representations, and with a view to help the business community in spite of serious financial difficulties faced by the Government, it has been decided to raise the turnover limit for the additional levy in respect of general sales tax from Rupees 5 lakhs to Rupees 10 lakhs so that dealers with total turnover of not more than Rupees 10 lakhs in a year will not be liable for the additional tax. It has further been decided to reduce the proposed rate of additional sales tax from 7½ per cent to 5 per cent (which is the rate prevalent in Kerala) and also to bring the levy into force from the assessment year 1970-71 onwards. The concessions regarding the rate of tax and the year of commencement of the levy will also apply to the additional tax payable in respect of the tax under the Tamil Nadu Act VI of 1939.

The Bill now before the House contains the necessary provisions accordingly. May I now explain the salient features of the provisions of the Bill ?

Clause 1 (2) of the Bill seeks to give effect to the proposed additional sales tax from 1st April 1970.

Clause 2, sub-clause (1) seeks to increase the tax payable under Tamil Nadu General Sales Tax Act, by a dealer whose total turnover for a year exceeds ten lakhs of rupees. The increase is at the rate of five per cent of the tax payable by the dealer.. As will be clear from the preamble, what is sought to be levied is only a tax on sale or purchase of goods. It will be seen that all dealers whose total turnover exceeds ten lakhs of rupees are liable to pay the proposed additional tax. The provisions of the 1959 Act will apply to the levy of the additional tax as they apply in relation to the levy of the tax under that Act.

The proviso to this sub-clause deals with declared goods. Under this proviso, the rate of additional tax together with the tax payable in respect of sale or purchase of declared goods, should not exceed three per cent. This limitation is sought to be placed in view of the provisions of section 15 (*b*) of the Central Sales Tax Act, 1956, which seeks to fix the rate of tax as three per cent in respect of declared goods. By reasons of Article 286 (3) of the Constitution, a law made by the State Legislature should be subject to the provisions of the said section 15 (*b*).

Sub-clause (2) of clause 2 provides that no dealer shall be entitled to collect the additional tax from customers or other dealers.

Sub-clause (3) of clause 2 relates to the punishment for contravention of the provisions of sub-clause (2).

Clause 3 relates to the levy of additional tax of five per cent under the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939. Though this additional tax is also an additional tax payable on the sale of motor spirit, referable to Entry 54 of the State List, a separate provision is considered necessary for the reason that in the case of the General Sales Tax Act, the tax is payable on the turnover, whereas, in the case of the Motor Spirit Taxation Act, the tax is payable on volume. Since the volume is the basis for the purpose of Tamil Nadu Act VI of 1939, it is considered that all dealers should be liable to pay the additional tax.

Clause 4 relates to the rule making power of the State Government.

Sir, I commend the motion for the acceptance of the House.

Mr. SPEAKER: The motion is before the House for discussion.

Dr. H. V. HANDE: Sir I move—

That the Tamil Nadu Additional Sales Tax Bill, 1970 (L.A. Bill No. 16 of 1970) be referred to a Select Committee consisting of........ Members of the Assembly (Names of members to be given later).

Thiru K. CHEEMAICHAMI: I second it.

Dr. H. V. HANDE: In support of the amendment I have moved on behalf of my party, I wish to say a few things.

I feel that this Bill is a very small one in that it does not make any major changes, except that it cuts at the very root of the taxation structure. I wish to state that the Bill must be properly analysed and proper legal sanction obtained. I consider that this Bill is anti-Constitutional also. I am afraid certain important articles of the Constitution are completely disregarded in this Bill. My submission is that, whenever a Bill is introduced we should analyse and see whether any articles of the Constitution is violated or not. I shall briefly explain how we have violated the Constitution in this Bill.

Normally whenever a taxation proposal is made, we have to take care to see that we do not entrench on the area of taxation earmarked for the Central Government. There are articles in the Constitution earmarking certain areas for Central taxation and certain areas for State taxation. The Minister in his statement said that a dealer should not collect the tax from the customers. That means that the person who is taxed cannot collect the tax from the customer. In the case of Sales Tax the dealer collects the tax from the customer at the rate of three paise per rupee or whatever the rate is and passes it on to the Government. He has been an honorary or unpaid sales tax officer of the Government. Whenever a Minister addresses the dealers, he says: 'You are doing a sacred job, you have been an honorary sales tax officer'. They have been doing this job all these years in such a manner that they have earned the appreciation of the Government.

Originally the Government said that the tax shall be on dealers whose total turnover exceeds five lakhs of rupees. Being sensitive to public opinion, the Government have raised that turnover limit to exceeding ten lakhs of rupees. I congratulate the Government on this. A tax of five per cent comes to a phenomenal amount. It will come to five thousand rupees per year. That is my submission.

The dealers cannot collect the tax from the customers. This is indirectly an income-tax and not a sales tax. Whether the levy is



constitutionally valid is a question which I want to place before this August House. It may be argued that Sales Tax as such is in the State list. But the Sales tax is a tax which the dealer collects from the customer. This tax is even worse than income-tax. Income-tax is a tax on one's income. Even if a dealer does not make any profit but has a turnover exceeding ten lakhs of rupees, he is liable to this tax. Ultimately what does it boil down to ?

It boils down to the fact that the merchant class is making extraordinary profit. The contention of the Government may be that these persons having a turnover of more than Rs. 10 lakhs are making extraordinary profit. But if they do not make any profit and only a margin of profit, how can they maintain business? Either they have to suffer the loss or their basic income would get reduced, or they would have to pass on the tax to the consumers in an indirect manner by increasing the prices of goods and thus earn profit. That means inflation will set in. Also I want to make a strong plea that this tax will increase the prices of goods and I also want to point out that it is unconstitutional to levy this tax. முற்பகல் 12-30

Sir, I want another very important point to be considered by this Government. There are certain items on which a single-point tax is levied and there are certain other items on which a multi-point tax is levied. The turnover will relate to both the single-point tax and multi-point tax and how are they going to find out whether a particular turnover comes under a single point tax or a multi-point tax. This a lacuna I want to point out to this Government.

Already I have pointed out that this tax is unconstitutional and it is an inflationary measure. That is why I have moved an amendment to refer this Bill to a Select Committee and let them not pass this Bill in a haste. As I have suggested on a former occasion let an Expert or High Power Body go into the whole matter.

Of course in the Kerala State a similar Bill was passed and it went to the Court and the person who questioned its validity lost his case and the Government won it. But I feel that there is every risk of this Bill being declared unconstitutional. I want the Government to take the view of the experts. We have an expert like the Hon. Minister for Law. Of course he would have already been seized of the matter. But I want the Government to explain how it is constitutional. From our side we have pointed out that it is unconstitutional. With these words, and with the hope and trust that the Government would agree to refer the Bill to a Select Committee, I wind up my speech.

திரு நா. காசிராமன் : தலைவர் அவர்களே, அரசினரால் கொண்டு வரப்பட்ட அடிஷனல் ஸேல்ஸ் டாக்ஸ் மசோதா பற்றி என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆரம்பத்திலேயே பட்ஜெட் உரையிலேயே இந்தப் பிரச்னையைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரூ. 5 லட்சம் டர்ன்ஓவருக்கு மேலே உள்ளவர்களிடம் 7½ சதவீதம் வரி விதிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அதுவும் 1—4—1969 முதல் என்று சொன்னார்கள். பிற்பாடு மக்கள், வியாபாரத்தில் ஈடுபட்டவர்களின் முறையீடுகளைக் கேட்ட பிறகு, அதைக் குறைத்து 5 சதவீதம் ஆகச் செய்திருக்கிறோம், ஆனால் 1—4—69 முதல் அல்ல என்று மாற்றிச் சொன்னார்கள். சந்தோஷத்தோடு வரவேற்கக்கூடிய விஷயம் அது. வியாபாரத் துறையில் ஈடுபட்டவர்களிடமிருந்து வந்துள்ள மனுக்களை எப்படிக் கருணையோடு

பார்த்தார்களோ, அதேபோல, அந்த மனுக்களில் குறிப்பிட்டிருக்கிற விவரங்களையும் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரி உயர்வைப்பற்றிப் பதில் அளிக்கும்பொழுது சில நாட்களுக்கு முன்பு கூறப்பட்டது என்னவென்றால், இந்த வரியைப் பொறுத்த வரையில், லாபத்தில் ஒரு பங்கைத்தான் எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று சொன்னார்கள். வருகின்ற வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளப்போகிறோம் என்று சொன்னார்கள். அது சரியல்ல. வருமான வரியைப் பொறுத்த வரையில் லாபம் வந்தாலும் சரி, நஷ்டம் வந்தாலும் சரி, வரி கொடுக்க வேண்டும். அதேமாதிரி இந்த வரியைப் பொறுத்த வரையிலும், லாபம் வந்தாலும் சரி, நஷ்டம் வந்தாலும் சரி, இந்த வரி கண்டிப்பாக இருந்தே தீரும் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. போனஸ் சட்டத்தின் கீழ் லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும், தொழிலாளர்களுக்கு 4 சதவீதம் போனஸ் கொடுத்தாக வேண்டும். தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறோம், நம்மிடம் இருப்பவர்களுக்குக் கொடுக்கிறோம், தொடர்ந்து அவர்கள் நம்முடைய தொழிலில் இருக்கிறார்கள், தொழில் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் இந்த வரி, லாபம் வந்தாலும் சரி, நஷ்டம் வந்தாலும் சரி, கொடுத்த வரி அரசாங்கத்திற்குப் போய்விடுகிறது. வியாபாரிக்கு எந்த விதமான ஆதாயமும் இல்லை. இன்கம்டாக்ஸ் போலவே ஆகிவிடுகிறது. ஆகவே, இந்த வரி போடுவது சரியானது அல்ல. ஆகவே, இதுபற்றி ஆலோசனை செய்து முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரியைப் பொது மக்களுக்கு எந்தவிதத்திலும் மாற்றம் செய்து விடக்கூடாது என்று சொல்கிறார்கள். அதாவது வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த வரியைப் பொது மக்களிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. நடைமுறையில் "பில்"லில் இது வரி ரூபத்தில் இல்லாமல் இருக்கலாம். ஆனால், நாட்டில் இருக்கிற கிட்டத்தட்ட 100-க்கு 95 பொருள்களுக்கு, "கன்ஸ்யூமர்ஸ் குட்ஸு"க்கு விலை நிர்ணயமே கிடையாது. கண்டிரோல் கிடையாது. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் ஒரு அரிக்கன் லாந்தர் ரூ. 15 என்றால், அடிஷனல் டாக்ஸ் வியாபாரிக்குப் போடுவது சாதாரணமாக 25 பைசாவாக இருக்கும். விலையில் ஒரு ரூபாய் ஏற்றினால், ரூ. 15 என்பது ரூ. 16 ஆகிவிடும். ஒவ்வொரு பண்டத்தின் விலையையும் இப்படி ஏற்றிக்கொண்டே போவார்கள். காரணம் சொல்லாமல் விலையைக் கூட்டி, பொது மக்களிடமிருந்து வாங்கக் கூடிய நிலைமைதான் ஏற்படும். எல்லாப் பொருள்களின் விலையும் ஏறும், அதிக வரியினால் மறைமுகமாகப் பொது மக்கள் தாங்கள் வாங்கும் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமை ஏற்படும். அதனால் பொது மக்களுடைய அன்றாட வாழ்க்கையையே பாதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டு விடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நாம் இந்த சட்ட சபைக்குள்ளே இந்த வரி வேறு முறையிலே பொது மக்களுக்கு மாற்றப்படக் கூடாது என்று பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் பொது மக்கள் தலையில்தான் அது வந்து விடியும். எந்த ஒரு வியாபாரியும், அதிகப்படியான வரி கொடுக்க வேண்டுமென்றால், அதை வரி என்று 'பில்' லிலே போடாமல், விலையைக் கூட்டி, மக்களிடமிருந்து வசூலிக்கக் கூடிய நிலைமைதான் ஏற்படும். அப்பொழுது பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சட்டசபையில் இந்த மசோதா வரும்பொழுது ரூ. 10 லட்சத்திற்கு மேல் டர்ன்ஓவர் இருந்தால், 5 சதவீதம் என்று போட்டிருக்கும் பொழுது, டாக்சபிள் குட்ஸின் டர்ன்ஓவருக்கு மட்டுந்தானா, நான்-டாக்சபிள் குட்ஸ் டர்ன்ஓவரைக் கழித்து, பிறகு டாக்சபிள் டர்ன்ஓவர் ரூ. 10 லட்சத்திற்கு மேல் இருந்தால் அதற்கு 5 சதவீதம் வரி என்பதற்குச் சரியான முறையில் ஒரு விளக்கம் இருந்தால், நன்மையாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். இதிலே பலவிதமான பெர்சென்



டேஜ் டாக்ஸ் போடப்படுகிற பொருள்கள் இருக்கின்றன. சில பொருள்களுக்கு 15 சதவீதம் டாக்ஸ் இருக்கிறது, 8 சதவீதம் டாக்ஸ் இருக்கிறது, 9 சதவீதம் டாக்ஸ் இருக்கிறது. பல விகிதாசாரங்களில் டாக்ஸ் போடப்படுகிறது. 3 சதவீதம் வரியுள்ள குட்ஸின் டர்ன்ஓவரின் பேரில் 5 சதவீதம் அடிஷனல் டாக்ஸ் போட்டால், அது குறைவான ரூபாயாகத் தான் வரும். ஆனால் விலை மதிப்பு அதிகம் உள்ள பண்டங்களில் டர்ன்ஓவரின் பேரில் டாக்ஸ் போட்டால்,

உதாரணத்திற்கு நான் சம்பந்தப்பட்ட தொழிலை எடுத்துக் கொண்டால் ஒரு மோட்டார் "சாஸிஸ்" ரூ. 50,000 விற்கிறது. ரூ. 10 லட்சம் டர்ன்ஓவர் என்றால், 50, 60 சாஸிஸ்கள் விற்றால் கூட, கார்கள் விற்றால் கூட, அந்த அளவுக்கு டர்ன்ஓவர் வெகு சுலபமாக வந்துவிடும். அதற்கு வரி 15 சதவீதம். அதற்கு மேல் 5 சதவீதம் வரி போடுவதென்றால், அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களை அது மிகவும் பாதிக்கக்கூடும். தாங்கள் கையாள்கிற பண்டமும் அதிக விலை மதிப்பு உள்ளதாக இருந்து, வரி விகிதமும் அதிகமாக இருக்கிற காரணத்தினால், இப்படிப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, ஒரு கன்செஷன் கொடுத்தால் நல்லது என்பதை கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ.அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று. டாக்ஸ் மேலே டாக்ஸ், முதலில் இருப்பது பர்சேஸ் டாக்ஸ் என்று சொல்லிவிட்டால் கூட நல்லது. இப்பொழுதுதான் ஸேல்ஸ் டாக்ஸ் வருகிறது. அதிலே ஒரு இன்டர்பிரடேஷன் எப்படி வருகிறது என்று சொன்னால், ஒரு டாக்ஸ் இப்பொழுது போடப்பட்டிருக்கிறது, அதற்கு மேலே இன்னொரு டாக்ஸ் போடப்பட்டிருக்கிறது. இதிலே எனக்கு சந்தேகம் என்னவென்றால், அநேக லீகல் பாயின்ட்ஸ் இருக்கின்றன. ரூ. 10 லட்சம் டர்ன்ஓவராக இருக்கலாம், 20 லட்சம் டர்ன்ஓவராக இருக்கலாம், 5 லட்சம் டர்ன்ஓவராக இருக்கலாம். இதிலே மார்ஜின் ஆப் பிராபிட் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். ஒருவருக்கு நிறைய விற்பனையாகலாம். ஆனால், மார்ஜின் ஆப் பிராபிட் குறைவாக இருக்கலாம். அல்லது மார்ஜின் ஆப் பிராபிட் இல்லாமல் நஷ்டம் வரலாம். விற்பனை குறைவாக இருக்கலாம். மார்ஜின் ஆப் பிராபிட் நிறைய இருக்கலாம். வியாபாரிகள் லாபம் இல்லாமல் வியாபாரம் செய்ய முடியாது. யார் தலையிலாவது கொண்டு போய் போட்டுத்தான் ஆக வேண்டும். டர்ன்ஓவர் 10 லட்சம் இருந்தாலும், மார்ஜின் ஆப் பிராபிட் இல்லாத காரணத்தினால், பொருள்களின் விலையை மாற்ற மாட்டார்கள் என்ற ஒரு வாக்குறுதியை, அதே மாதிரி ஏற்படாது மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னால் மிகவும் தெளிவாக இருக்கும்.

அதே போல என்ன செய்யவேண்டும் என்றால், டாக்ஸ் போடும்போது, மார்ஜின் ஆப் பிராபிட் என்ன என்று பார்க்க வேண்டும். நியாயமாக இருக்கலாம். கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும். கண்டிப்பாக எல்லாப் பொருள்களின் விலையையும் ஏற்றுவார்கள். எந்த முறையில் அதை நிறுத்தமுடியும் ? ஒரு காலத்தில் விற்ற விலையில் விற்கவேண்டும் என்று சொல்லமுடியாது. அப்படிச் சொன்னால், அவர்கள் சொல்வார்கள், எங்களுக்கு காஸ்ட் ஆப் ப்ரொடெக்ஷன் அதிகமாகிப் போய்விட்டது, டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகிவிட்டது என்றெல்லாம் சொல்லி தப்பித்துக் கொள்வார்கள். வாயளவில் சொல்லலாம். ஆனால் நிரந்தரமான உறுதிமொழி அமைச்சர் கொடுக்க முன் வரவேண்டும்.

இரண்டே இரண்டுதான். மக்களுக்கு சர்க்கார் போடும் இந்த ஸர்சார்ஜ் மூலமாக பொருள்களின் விலைகள் கூடுதலாகாமல் இருக்கும் என்பதற்கு என்ன ஆதாரம் என்று சொல்ல வேண்டும். அதே நேரத்தில் இருக்கின்ற டாக்ஸ் மேல் இன்னொரு டாக்ஸ் போடலாமா ? இதற்கு அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, வரிக்கு மேல் வரி போடுவதா என்று, அது முறையா, அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டது இல்லையா என்று சட்டப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கிளப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்களும், அதையே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்களும் கிளப்பினார்கள். சந்தேகத்திற்கு இடம் இல்லை. இப்படிப் போடுவதில் தவறு இல்லை. இதற்கு நீதி மன்றத் தீர்ப்புக்கள் இருக்கின்றன. விற்பனை வரிக்குமேல் விற்பனை வரி போடுவதற்கு நீதி மன்றத் தீர்ப்பு இருக்கிறது. அதைச் சொல்லிவிட்டு, இந்த வரியைப் பொது மக்களிடத்திலிருந்து வாங்கக் கூடாது, வசூலிக்கக் கூடாது என்று போட்டிருக்கிறீர்கள், இது முறைதானா என்று கேட்டார்கள். இதற்கு உயர் நீதி மன்றத் தீர்ப்பு இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பும் இருக்கிறது. அது சாதகமாக இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எடுத்துச் சொல்வதே சாலச் சிறந்தது என்று கருதுகிறேன்.

"This Court has already decided in the case of Tata Iron and Steel Company Limited *vs.*, State of Bihar that in law, a sales-tax need not be an indirect tax and that a tax can be a sales-tax though the primary liability for it is put up on a person without giving him any power to recoup the amount of the tax payable from any other party."

அப்படிப் போடலாம் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. எனவே, இதில் சட்டப்பிரச்சினை எதுவும் இல்லை. சட்டச் சிக்கல்களை ஆராயாமல் போட்டுவிட்டீர்களா என்றார்கள். ஸர்சார்ஜ் என்பதை அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்று, ஆராய்ந்தபிறகு தான் மாற்றியிருக்கிறோம். அப்படி மாற்றியதற்குக் காரணம், அட்வகேட்-ஜெனரல் அவர்களை இந்த மசோதாவைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுங்கள் என்றபோது, அவர்கள் இப்படிப் போடலாம், ஆனால் ஸர்சார்ஜ் என்று விதிக்க வேண்டாம், அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்று போட்டுவிடலாம் என்று யோசனை சொன்னார்கள். அதன் பேரில்தான் பெயரை மாற்றிப் போட்டிருக்கிறோம்.

பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டார்கள். சென்ற மாதம் நடைபெற்ற மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுவினால் இது ஆலோசிக்கப்பட்டது. அதைப்பற்றி சந்தேகங்கள் கேட்கப்பட்டு, பதில் கொடுக்கப்பட்டது. அப்பொழுதே இதைப்பற்றிக் கலந்தாலோசித்து, தள்ளிப் போடுவது சரியில்லை, அண்டை மாநிலத்தில் வசூலிக்கிறார்கள் என்று கருதப்பட்டது.

இந்த வரி போடுவதன் மூலம் பொருள்களின் விலை ஏறுமா என்று திரு. சுப்பராஜா கேட்டார்கள். விலை ஏற்றத்திற்கு இது போடவில்லை. வாங்குகிறவர்களிடம் வசூலிக்கக் கூடாது. வசூலித்தால் கடுமையான தண்டனை இருக்கும் என்று போட்டிருக்கிறது. சட்டத்தில் வழி இருக்கிறது. ஆகவே, அந்த அச்சம் தேவையற்றது. பண்டங்களின் விலை ஏறாது. இது நியாயமான வரி. பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவதற்கு அவசியம் இல்லை. அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : Has our Government analysed this and got it examined ? Let us not bother about other Court's judgment. What I want to know is whether we are entitled to tax on income. We have no right to tax on income. It then becomes an income-tax and we have no right to levy income-tax.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I have read out the judgment of the Supreme Court. What more authority does the hon. Member Dr. Hande want ?, I cannot understand. We have got every right to collect.



டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—
"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 16/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**பிரிவு 2.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—
"பிரிவு 2 இந்த மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்."

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendment:—

In sub-clause (1) of Clause 2, in line 15, for the words "five" substitute the word "half".

THIRU N. KASIRAMAN: I second it.

Sir, I move the following amendment:—

"In sub-clause (1) of Clause 2, for the words 'whose total turnover for a year exceeds ten lakhs of rupees' substitute the words "whose total turnover for a year exceeds twentyfive lakhs of rupees".

THIRU K. RAMAMOORTHI : Sir, I second it.

தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் விற்பனை வரியைப் பொறுத்தவரையில், இது தேவையற்ற வரி என்பதை முதலிலே சொல்ல விரும்புகிறேன். அரசினர் இந்த வரியைப் போடுவது என்று தீர்மானித்து விட்டதால், அதைக் குறைவாக விதிக்கலாமே என்ற அளவில் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில், சிலவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒன்று நமக்கு நன்றாகத் தெரிகிறது. அரசு ஏற்கனவே முடிவு எடுத்து, மசோதாவைக் கொண்டு வந்திருந்தாலும், இன்றையதினம் வரையில் மாற்றங்களைத் தெரிவித்துக் கொண்டு இருப்பதால், முடிவான முடிவுக்கு முன்கூட்டியே வரமுடியவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தக் கூடுதல் வரியைப் பொறுத்தவரையில், வாங்குகிறவர்கள் மீது வரிப்பளு விழாமல் பாதுகாப்புத் தந்தாலும், நடைமுறையில், செயல் அளவில், வாங்குகிறவர்கள் மேல்தான் விழும், வரிச்சுமையாக இது இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் என்ன விலைக்கு விற்பது என்பதை முடிவு செய்து வைக்கிறார்கள். இப்படித்தான் இந்த விலைக்கு என்று ஒரு முடிவுக்கு வந்தபிறகு, நிச்சயமாக அவர்கள் தங்களுடைய லாபத்தின் சதவிகிதத்தைக் குறைக்கும் அளவில் செய்வதில்லை. கூடுமான வரையில், முன்னால் என்ன விலைக்கு இருந்ததோ அதே விலையில் மாறுதல் இல்லாமல் இருக்க வேண்டும் என்கிற உத்தரவாதத்தை அரசாங்கம் கொடுத்தால் நலமாக இருக்கும். இது நடைமுறையில் நடக்காது. உற்பத்திப் பொருள்களின் விலையை மாற்றுகின்ற நிலை உற்பத்தியாளர்களுக்கு இருக்கும் வரையில், வரிகளின் சுமை கண்டிப்பாக நிச்சயமாக வாங்குகிறவர்கள் மீதுதான் விழும். அதை மறுக்கமுடியாது. ஒரு பொருளின் விலை 100 ரூபாய் என்றால், விற்பனை விலையை வரியின் மூலமாக உற்பத்தியாளர் 105 ரூபாய் என்று அச்சிலிடுகிறார்கள்

பொருளின் மீது 15 சதவீதம் விற்பனை வரியை வசூலிக்கிறோம். கூடுதல் வரி எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

இந்த வரியைப் பொறுத்தவரையில் இன்னொன்றையும் சொல்லவிரும்பு கிறேன். உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் குறிப்பிட்டது போல, 'மார்ஜின் ஆப் ப்ராபிட்' என்ற அடிப்படையில் வைத்துத்தான் வரி இருக்க வேண்டும். டர்ன் ஓவர் மீது வைத்து வரி விதிப்பது சரியாக இருக்காது. பெரிய அளவில் வியாபாரம் என்றால், பெரிய லாபம் என்பது பழைய காலத்திற்குப் பொருந்தும். இப்பொழுது அப்படியில்லை. இன்றைய பொருளாதார நிலையில் போட்டியில் வியாபாரம் நடைபெறுகிறது. லாபம் நிலையற்றதாக இருக்கிறது.

ஆகவே, 5 லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் என்றால் மார்ஜின் ஆப் ப்ராபிட் குறைவாக இருக்கும். பத்து லட்சம் டர்ன்ஓவர் என்றால் அதிகமாக சம்பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். "டர்ன்ஓவர்" மீது வரி விதிப்பது சரியான நிலைமை அல்ல.

இன்னொன்று, நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் மற்ற மாநிலங்களிலே உற்பத்தியாகின்ற பொருள்களோடு போட்டி போடக்கூடிய நிலைமை இருக்கிறது. மற்ற மாநிலங்களில் உற்பத்தியாகும் பொருள்களோடு போட்டி போட்டுக்கொண்டு விற்கும் நிலையில் நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் இல்லை. நம்முடைய மாநிலத்தில் மார்க்கெட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருப்பதுதான் காரணம். நம்முடைய மாநிலத்தில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமான வரி விதித்திருக்கிறோம். ஆந்திர மாநிலத்தில் விற்பனை வரி 12 சதவீதம் இருக்கிறது. டர்ன் ஓவரில் கால் சதவிகிதம்தான் விதிக்கிறார்கள். மைசூரைப் பொறுத்த வரையில், **there is an octroi duty in Bangalore city alone** என்று இருக்கிறது. பெங்களூர் நகரத்திற்குள்ளே மட்டும் லாரி முதலானவற்றில் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு ஒரு வரி வைத்திருக்கிறார்கள். அதுவும் மிகக் குறைந்த அளவில் இருக்கிறது. மைசூர் மாநிலத்தில் 12 பர்சென்ட்தான் வரி இருக்கிறது. தொழில்கள் எல்லாம் வளர வேண்டுமென்று சொல் கிறோம். இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம் தொழில் மயமான மாநிலம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். புதிய வரி விதிப்புகளின் மூலமாக புதிய தொழில்கள் வளருவதற்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரி விதிப்பு தேவை இல்லாதது என்பது என்னுடைய கருத்து. மசோதா ஏற்கனவே வந்து விட்டது. வரிவிதிப்பை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இந்த அடிஷனல் ஸேல்ஸ்டாக்ஸ் போடுவது என்பது முடிவாகிவிட்டது. 5 லட்சம் டர்ன் ஓவருக்கு 7½ சதவிகிதம், பத்து லட்சம் டர்ன் ஓவருக்கு 5 சதவீதம் என்று கூறியிருக்கிறார்கள். டர்ன் ஓவர், டாக்ஸ் போன்றவைகளையெல்லாம் கமர்ஷியல்டாக்ஸ் ஆபீஸ்லே இருக்கிற அதிகாரிகள் கணக் கெடுக்கிறார்கள். 9 லட்சம், 10 லட்சம் என்று வியாபாரம் செய்யும் வியாபாரிகள் மிகவும் அதிகமான பேர் இருக்கிறார்கள். டர்ன் ஓவர் செய்யும் போது இந்த அதிகாரிகள் தங்களுக்கிருக்கும் ஆர்வத்தின் காரணமாக, அரசுக்கு அதிகப் படியான வருமானத்தைத் தேடித் தர வேண்டுமென்ற காரணத்தினால் டர்ன் ஓவரை உயர்த்திக் காட்டுகிறார்கள். "நான்-டேக்ஸபிள் குட்ஸ்" என்று வியாபாரிகள் சொல்வதையெல்லாம் "டேக்ஸபிள் குட்ஸ்" என்று கணக்கில் எடுத்துக் கொண்டு அதிமாகக் காட்டுகிறார்கள். பத்து லட்சத்திற்குக் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் கூட ஐந்து சதவீதம் வசூலித்து விடுகிறார்கள். பத்து லட்சம் டர்ன் ஓவர் என்பது மிகவும் குறைவானதாகும். இது வியாபாரிகளைப் பாதிக்கும். 25 லட்சமாக உயர்த்



தினால் பாதிக்கப்படுபவர்கள் பெரிய வியாபாரிகள்தாம். சிறிய வியாபாரிகளை அது பாதிக்காது என்பதுதான் நான் கொடுத்த ஒரு திருத்தரி தீர்மானம்.

பசுமைப் புரட்சி, பசுமைப் புரட்சி என்றெல்லாம் சொல்கிறோம். ஒரு டிராக்டர் விலை 15 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இதற்கு சேல்ஸ் டாக்ஸ் 9 பர்சென்ட் இருக்கிறது. அதில் இருக்கிற லாபம் மிகக் குறைவு. ஆகவே, டர்ன் ஓவர் தொகையை 10 லட்சத்திலிருந்து 25 லட்சத்துக்கு உயர்த்தினால் பெரிய வியாபாரிகள்தாம் பாதிக்கப்படுவார்கள். சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று கூறிக் கொண்டு என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்த இரண்டு திருத்தங்களையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்து சதவீதம் என்பதை அரை சதவீதம் என்று ஆக்க வேண்டுமென்றும், டர்ன் ஓவர் 10 லட்சம் என்பதை 25 லட்சம் ஆக ஆக்க வேண்டுமென்றும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான வாதத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கூடுதல் விற்பனை வரியை 5 சதவீதத்திலிருந்து 7½ சதவீதத்திற்கு முதலில் உயர்த்தியதை நண்பர்களும், வியாபாரிகளும், மற்றவர்களும் வந்து முறையிட்டதால் மீண்டும் ஐந்து சதவீதமாகக் குறைத்திருக்கிறோம். கூடுதல் வரி சம்பந்தமாகப் பல முறையீடுகள் வந்துள்ளன. வணிகப் பெருமக்களுக்கு உதவும் நோக்கத்தில் பொது விற்பனை வரியைப் பொறுத்த மட்டில் கூடுதல் வரி விதிப்பிற்கான விற்பனை அளவை ஐந்து லட்சம் ரூபாயிலிருந்து பத்து லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தினோம்.

நாம் வியாபாரிகளுக்கு இப்படிச் சலுகைக் காட்டியிருப்பதால் நண்பர் ராமமூர்த்தி அவர்கள் தவறான வாதத்தைச் சொன்னார்கள். பொது மக்களுடைய கோரிக்கைக்குச் செவி சாய்க்கிறது இந்த அரசு. ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் வியாபாரம் செய்கிறவர்களின் விற்பனைவரியின் மீது ஐந்து சதவீதம் போடுவதால் என்ன தவறு? நண்பர் ராமமூர்த்தி அவர்கள் இப்படி வாதிடுவார்கள் என்று எதிர் பார்க்கவில்லை. வியாபாரிகளைக் கேட்டாலும் கொடுப்பதற்கு நியாயம் இருக் கிறது.

**THIRU K. RAMAMOORHI: Ultimately it goes to the consumer.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மறுபடியும் தவறான வாதம் செய்கிறார்கள். அப்படி கன்ஸ்யூமர்களிடமிருந்து வாங்குபவர்களுக்கு தண்டனையைப் போட்டிருக்கிறோம். **Ultimately it goes to the consumer** என்று கூறுவது பொருத்தமற்ற வாதமாக இருக்கிறது. எனவே, இரண்டு திருத்தங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லையென்பதைக் கூறிக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி** அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**திரு. நா. காசிராமன்** அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரி மசோதா (சட்டப் பேரவை

மசோதா எண் 16/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, **மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**

**(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/70)**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

பிற்பகல் 1-00 யூனிட் ஒன்று 15 காசுக்கு மேற்பட்ட விலையில் விற்கப்படும் மின்சக்திக்காக ஒரு யூனிட்டுக்கு 3 காசு வீதம் கணக்கிடப்பட்ட தீர்வையை, உரிமைதாரர் ஒவ்வொருவரும் மாநில அரசுக்குச் செலுத்த வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன், உரிமைதாரர்களுக்குப் பெருமளவில் வழங்கப்படும் மின்சக்திக்கான கட்டண வீதங்கள் 1969, நவம்பர் 1-ம் நாள் முதல் உயர்த்தப்பட்டன. அதன் விளைவாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின்சக்தி வாங்குவதற்காகச் செலுத்த வேண்டிய கூடுதல் தொகைகளை ஈடு செய்வதற்காக, சில உரிமைதாரர்கள் மின்சாரம் பயன்படுத்தும் பல்வேறு வகையினருக்கான மின்சாரக் கட்டணவீதங்களை உயர்த்தியுள்ளனர். குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்துபவர்களுக்கும், தெரு விளக்குகளுக்கும் இந்த மின்சாரக் கட்டண வீத உயர்வு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே வரிக்குட்பட்ட யூனிட்டுக்கு பதினைந்து காசிலிருந்து, யூனிட்டுக்கு 18 காசாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அப்போதுதான் உரிமைதாரர்கள் குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்துவோருக்கும், தெரு விளக்குகளுக்கும் உரிய கட்டண வீதங்களைக் குறைக்க இயலும். இத்திருத்தத்தை 1-11-1969 முதற் கொண்டே செயலுக்குக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

இம்மசோதாவை இப்பேரவை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரிசிடி ட்யூடி ஆக்டைப் பார்க்கும்போது—15 காசில் இருந்து 18 காசாக உயர்த்தியிருப்பதனால் என்ன ஆகும் என்று சம்பந்தப்பட்டவர்களை நான் விசாரித்தேன். இதன் மூலமாக குறைந்த அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு, விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கட்டண வீதங்களைக் குறைக்க வாய்ப்பு இருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் சில சலுகைகளை எல்லாம் அளிக்க முடியும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த மசோதாவை நிறைவேற்றுகின்ற இந்த நேரத்தில் அந்த வாய்ப்புகளை இந்த அரசு நல்ல முறையில் கவனித்து—விவசாயிகளுக்கு—குறைந்த அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துவோர்களுக்கு அத்தகைய சலுகை கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற கருத்தை அரசுக்குக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இதில் என்னுடைய கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் 10 பைசா கட்டணத்தை 9 பைசாவாகக் குறைத்தது சேலம், கோயம்பத்தூர், தர்மபுரி ஆகிய 3 மாவட்டங்களுக்கு மட்டும்தான்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 75 அடி ஆழத்திற்கு மேல் உள்ள கிணறுகளுக்கு அந்த 1 பைசா சலுகை அளித்த விஷயம் வேறு.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தனிப்பட்ட கார்ப்பரேஷன் மூலமாகப் பேசப்பட்டபோது இந்த மாதிரி சலுகை கொடுத்தால் லோ டென்ஷன் கட்டணத்தைக் குறைக்கிறோம் என்று உறுதி கொடுத்திருக்

* 1970 ஏப்ரல் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.



கிறார்கள். கனம் உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல லோ டென்ஷன் கட்டணத்தை, தெருவிளக்குகள் சம்பந்தப்பட்ட கட்டணத்தைக் குறைக்க அவர்களே ஒப்புக் கொண்டிருப்பதனால் அரசாங்கம் அது பற்றி கவனம் செலுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

**(ஈ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/1970)**

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, *1970 (L.A. Bill No. 14 of 1970) be taken into consideration."

Chapter VIII of the Act relating to cultivating tenants' ceiling areas was intended to remain in force for a period of three years from the date of publication of the Act, namely, the 2nd May 1962. By the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1965 (Tamil Nadu Act 10 of 1965), the life of this Chapter was extended by three years from the 2nd May 1965. The life of this chapter was further extended by another two years by the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1967 (Tamil Nadu Act 22 of 1967). The life of this Act will now expire on the 2nd May 1970.

A proposal to enact a comprehensive Tenancy Act is separately under consideration of the Government. This proposal is not likely to materialise before the expiry of the life of the said Chapter VIII. It has therefore been decided to amend section 59 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) so as to extend the life of Chapter VIII for a further period of two years from the 2nd May 1970.

The Bill seeks to achieve the above object. I request the House to accept the motion.

MR. SPEAKER:—The motion is now before the House for discussion

**திரு. என். சங்கரய்யா :**—பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இப்போது அவைமுன் கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா ஏற்கெனவே பத்து வருஷத்திற்கு முன்பாக குத்தகை, வார விவசாயி

*Published in the Fort St. George Gazette Extraordinary, dated 4th April 1970.

களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம், பத்து வருஷங்கள் ஆகிவிட்ட பிறகும் இரண்டு இரண்டு வருஷமாக அதன் ஆயுளை நீட்டிக் கொண்டுபோகிற நிலைதான் இருக்கிறதே தவிர இவற்றை எல்லாம் உள்ளடக்கிய ஒரு விரிவான மசோதா வருவதாகத் தெரியவில்லை.

இந்த மசோதாவிலேயே "**A proposal to enact a single comprehensive Tenancy Act is separately under consideration of the Government.**" என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது கொண்டு வரப்படும் என்கிற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டும். உடனடியாக இது பற்றி விரிவான ஒரு மசோதா கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவை இரண்டாண்டு, மூன்று ஆண்டு என்று விஸ்தரித்துக் கொண்டே போகாமல் உழுகிறவர்களுக்கு உரிமை, மொத்த விளைச்சலில் நிலக்காரருக்கு 20 பங்கு என்கிற விகிதாச்சாரத்தில் விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தாக வேண்டும். அது எப்போது வரும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொன்னால் தமிழ் நாட்டில் உள்ள விவசாயிகள் ஆறுதல் அடைவார்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் திருத்த மசோதா சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஒரு குத்தகைதாரர் 5 எக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்கிற சட்டத்தை மேலும் 2 வருஷ காலத்திற்கு நீட்டிக்க இப்போது அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் குத்தகைதாரர்களுடைய நிலைமையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். குத்தகை பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தபோது குத்தகைக்கு 5 எக்கருக்கு மேல் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று வரம்பு விதிக்கப்பட்டது. அவ்வாறு விதித்திருந்தும் குத்தகை தாரர்களுக்கு 60 என்கிறபோது கட்டுப்படியாகவில்லை. செலவு அதிகரித்துவிட்டது. குறைந்த வருமானத்தைப் பெற்று நட்டம் அடைந்தார்கள். குத்தகை பாக்கிக்காக நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். வெளியில் கடன் வாங்கி மிகவும் சிரமப்படுகிறார்கள். குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் சரிவர அமல்படுத்தப்படவில்லை. இந்த நேரத்தில் 75 சதவீதம், 25 சதவீதம் என்ற அடிப்படையில் விரிவான ஒரு சட்டத்தையே கொண்டுவர இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும்.

ஆகவே இந்தச் சட்டத்தை 2 ஆண்டுகள் நீடிப்பதற்குப் பதிலாக மேலும் 3 ஆண்டுகள் நீடிக்கவேண்டும் என்பதற்காக 5 ஆண்டுகள் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்தை இங்கே எடுத்துச் சொன்னேன். மே 2-ஆம் தேதியோடு அந்தச் சட்டம் காலாவதியாவதனால் மேலும் 2 ஆண்டுகள் நீட்டிக்கவேண்டும் என்பதற்காக இதைக் கொண்டுவந்திருக்கிறேன். அதற்குக் காரணம் குத்தகைதாரர்களுடைய நிலைமையை அப்படியே விட்டுக்கொண்டுபோக வேண்டும் என்பதல்ல.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் எப்போது விரிவான சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்க வேண்டும் என்றார்கள். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இத்துறையில் பலவிதமான சட்டங்கள் வந்திருக்கின்றன. இன்று மாலையில் கூட ஒரு சட்டம் வர இருக்கிறது. "ரெக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ் ஆக்ட்" கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். கிழக்குத் தஞ்சாவூர் பகுதி விவசாயக் கூலி சம்பந்தமாக சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். இடைத்



தரகர் நீக்கத்திற்கு வழி செய்திருக்கிறோம். கூடலூர் ஜன்மி ஒழிப்புச் சட்டம், புதுக்கோட்டை இனாம் ஒழிப்புச் சட்டம் எல்லாம் இந்த ஆட்சி வந்த பிறகுதான் கொண்டுவரப்பட்டன.

இப்போதுதான் "ரெக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ் ஆக்ட்" செயல்படத் தொடங்கியிருக்கிறது. யார் குத்தகைதாரர், யார் நிலக்காரர் என்கிற சரியான விவரங்கள் எல்லாம் தெரிந்தவுடன்—இந்த குத்தகை தாரர் பாதுகாப்புச் சட்டத்தையும், மற்றவற்றையும் இணைத்து விரிவான ஒரு மசோதா கொண்டு வருவதற்குச் சரியான வாய்ப்பு ஏற்படும். அதன் காரணமாகத்தான் இப்போது இந்தச் சட்டத்தை 2 ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என்று கோரியிருக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் இதை 5 ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என்று ஏன் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அவ்வளவு காலம் விரிவான சட்டம் கொண்டு வருவதற்குத் தாமதப்படும் என்று கருதுகிறாரா என்று புரியவில்லை. அவ்வளவு காலம் ஆகாது. "ரெக்கார்டு ஆப் டெனன்ஸி ரைட்ஸ் ஆக்ட்" வேலை முடிந்த பிறகு இந்தச் சட்டம் வந்துவிடும். ஆகவே திருத்தத்தை வற்புறுத்தாது, இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பிரிவு 2.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2, இம் மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**THIRU K. RAMAMOORTHI :** Sir, I move the following amendment :

"In clause 2, for the word 'ten' substitute the word 'nine,"

The amendment was duly seconded.

**திரு ஆ. கு. சுப்பையா :** அமைச்சர் அவர்கள் விரைவிலேயே விரிவான சட்டம் கொண்டுவரப்போவதாகச் சொல்வதனால் நான் என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கவில்லை.

**திரு சோ. அழகர்சாமி :** நானும் என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கவில்லை.

**திரு க. இராமமூர்த்தி :** ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்த விரும்புகிறேன். என்னுடைய திருத்தத்தைப் பொறுத்த வரையில், இரண்டு ஆண்டுகள் நீட்டிக்க அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். ஓர் ஆண்டாக அதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். அமைச்சர் அவர்கள் இந்த நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகப் பல மசோதாக்கள் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட தாய்ச் சட்டத்தின் மீது கொண்டுவரப்பட்ட ஃபாலோ ஆப் மெஷர்கள் தான். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை திரு. காமராசர்

[திரு. க. இராமமூர்த்தி]

கொண்டுவந்தார். அவரே தொடர்ந்து பதவியில் இருந்திருந்தால் மற்ற வைகளையும் கொண்டுவந்திருப்பார். அவர் வேறு பொறுப்புக்கள் காரண மாக வெளியே சென்றதனால் இவர்கள் ஃபாலோ ஆப் மெஷராகக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்காக நான் ஒருவகையில் மகிழ்ச்சி அடை கிறேன். எனக்குப் பெருமையும் கூட.

உச்சவரம்பு 30 எக்கர் என்பதை இப்போது 15 எக்கர் என்பதாக குறைக்கும் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிச்சயமற்ற நிலைமை நீடித்துக்கொண்டே போவதனால் விவசாயத் துறையில் ஒரு ஸ்திரமற்ற தன்மைதான் இருக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டு மானால் ஒரு விரிவான சட்டம் ஓராண்டுக்குள் கொண்டுவந்தாக வேண்டும். ஆகவேதான் இந்த மசோதாவுக்கு இரண்டு ஆண்டு தேவையில்லை, ஓர் ஆண்டே போதும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் நெருங்க நெருங்க பல நன்மைகளை உண்டாக்கி அரசியல் லாபம் அடைய முயற்சிப்பது கூடாது. ஆகவே, ஓராண்டுக்குள் இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி ஒரு விரி வான சட்டத்தைக் கொண்டுவந்து நிலத்துறையில் ஒரு ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு உதவு கின்ற வகையில், இந்த மசோதாவை ஓர் ஆண்டு நீடித்தால் போது மானது என்று சொல்லி என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இரண்டு வருடம் என்பதா லேயே இரண்டு வருடங்கள் இருக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. திரு சங்கரய்யா அவர்கள் கூடக் குறிப் பிட்டார்கள். மூன்று மாதங்கள் கூட இருக்கலாம். விஸ்தரிக்கிற ஒரு மசோதா என்ற வகையிலே இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு க. இராமமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இரண்டு வருடங்கள் எடுத்துக்கொள்ள மாட்டார்கள், நான் சொல்லிய ஒரு ஆண்டி லேயே முடித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய திருத் தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திரு க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

குறுந்தலைப்பு முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடி விற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** "தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/70) நிறைவேற்றப் பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவை ஒத்தி வைக்கப் பகல் 1.21 பட்டு, மீண்டும் மாலை ஐந்து மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

[மாலை 5.00 மணி].

**பேரவை மாலை மணி 5 அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் கூடியது.**



(8) அறிவிப்பு.

**தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 11/70).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 11/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரி வித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதா அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணா னது என்பது குறித்து.

DR. H.V. HANDE: Mr. Speaker, Sir, before this Bill is taken up for consideration, I want to raise a point of order under Rule 91 of the Assembly Rules. It says—

'If notice is given of any motion in respect of a Bill or an amendment which, in the opinion of the Speaker, cannot be made except on the recommendations of the Governor or with the previous sanction of the President, the Speaker, shall, as soon as may be after the receipt of the notice, refer the Bill or the amendment to the authority who would have the power to grant the recommendation or sanction, and the motion shall not be placed on the list of business unless the recommendation or previous sanction required has been granted.'

Sir, we were told the other day when the Bill was introduced by the Hon. Minister that the Bill was referred to the President of India for his consent to its introduction. He then told us that he had not given his consent to it. Now I would like to know whether the sanction of the President has been given and if so, when it has been given by the President. According to the rule I have just now referred to, if the Hon. Speaker thinks it has to go to the President for prior sanction, till that sanction has been granted, the Hon. Speaker cannot authorise the Ministry or anybody to put it in the list of business. So, I want to know whether it has been granted or not. That is point No. 1. My main point is that this Bill is out of order.

I come to the next point. This is in effect an Amending Bill. Bue in the short title of the Bill it is not stated that it is an amending Bill, nor it is stated by the Hon. Minister while introducing the Bill. In the printed copy of the Bill, it is stated—

'*Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970.'

**So, in the short title there is no reference that it is an amending Bill. But if we go into the provisions of the Bill, we will find that clause 3 of the Bill refers to the principal Act and therefore it is an amending Bill. It is not stated so in the title of the Bill. This Bill has been drafted in a very haphazard manner. I do not know who are the persons who have drafted this Bill. So my point is that it is clear that this is an amending Bill to the Original Act.**

I now come to point No. 3. This Bill is *ultra vires* of the Constitution. My submission is that we have no right to bring forward any Bill which is *ultra vires* of the Constitution. The Supreme Court had struck down the entire Land Ceiling Act on the ground that Sections 5 and 50 are the pivotal provisions of the Act and Section 5 (i) is violative of the fundamental rights and is void. As the Supreme Court has struck down the Act, the 17th Amendment of the Constitution was passed. The validity and the power of the Parliament was challenged in the Golaknath case (1967—2 M.L.J., page 486). The following judgment was delivered by Mr. Justice Subba Rao :—

'It was held in that case by a majority of Judges that Parliament will have no power from the date of the present decision to amend any of the provisions of Chapter III of the Constitution so as to take away or abridge the fundamental rights enshrined therein.'

According to this decision no State Legislature or the Parliament canintroduce any Bill abridging the fundamental rights.

It is further stated in the judgment—

'If the present decision is given effect retrospectively, it would introduce chaos and unsettle the conditions in our country, and hence we apply the prospective over-ruling, i.e., the Court declares the law and refuses to give retrospective effect.'

I am sorry that our distinguished Minister for Law is not here now. Further it is stated—

'The Supreme Court having now laid down that the Fundamental Rights cannot be abridged or taken away by the exercise of mandatory process in Article 368, any further inroad in those rights as they exist to-day will be illegal and unconstitutional unless it complies with Part III in general and Article 13 (2) in particular.'

So on these three grounds, I feel that the Hon. Speaker should rule this Bill as absolutely out of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது இந்த மசோதாவை இந்த அவைக்குக் கொண்டுவருவதற்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் தமது சம்மதத்தை அளித்துவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி அளித்துவிட்ட பிறகு இதை அவைக்குக் கொண்டுவருவதில் எந்த விதமான................

**Dr. H. V. HANDE :** May I know the date on which it was given ? In the previous time when the Bill was introduced in the House, the Hon. Minister did not say so.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதி கிடைத்தது என்ற தகவலைத்தான் சொல்லுகிறேன். குடியரசுத் தலைவரின் சம்மதம், அனுமதி கிடைத்திருக்கிறது.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** நண்பர் திரு இராமமூர்த்தி அவர்களும், நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களும் முன்னாலே இங்கே எடுத்துரைத்ததைத்தான் இங்கு சொல்லுகிறார்கள். நம்முடைய சொத்துரிமை 31-வது விதியின்படி அதனால் ஏற்படும் நஷ்டங்கள் இவர்களைப் பொறுத்த வரையில் கொடுக்க வேண்டுமென்று ஒத்துக்கொண்டார்கள். அவர்களை நாம் கேட்பது ஒரு அனுமதியே தவிர, அந்த அனுமதியே இல்லாவிட்டாலும் கூட, இந்தச் சட்டமன்றத்தில் கொண்டுவருவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை உண்டு. இன்னொன்று கோலக்நாத்



கேஸ் பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றியும் ஒன்றும் பயப்படவேண்டியதில்லை. நம்முடைய சட்ட விதிகளுக்கு உட்பட்டதுதான். அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றெல்லாம் சொன்னார்கள். அம்மாதிரியான நிலை அல்ல. அதைப்பற்றிய சட்ட நிலைமையை நான் உங்களிடத்திலே கூறிவிடுகிறேன்.

The challenge to this Act from Dr. Hande is from the decision in Golaknath's case, in which the Supreme Court stated that there should be no further infringements of the fundamental rights. That case had to consider the effect of the amendments to the Constitution which had introduced amendments to the fundamental rights in particular by virtue of Article 31A and 31B. These two Articles were definite inroads into the fundamental rights that had originally been set out in the Constitution, but the Supreme Court in Golaknath's case, applying the doctrine of prospective over-ruling, has affirmed that those amendments will stand, notwithstanding the fact that they are amendments to the fundamental rights as they originally stood in the Constitution. It will therefore follow that any Act that is now passed cannot be challenged if it can fall within the ambit of Articles 31A or 31B of the Constitution. The judgment in Golaknath's Case does not prohibit any infringements of the rights of parties provided those infringements come within any of the Articles in the Chapter on Fundamental Rights and the restrictions laid down thereunder. Any amending Bill therefore which falls within Article 31A and 31B will be valid.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது கொண்டுவரப்படும் மசோதாவைக் கொண்டுவரக் கூடிய உரிமை இருக்கிறதா, இல்லையா, அது செல்லுபடியாகுமா, இல்லையா, என்பது பற்றி எல்லாம் தீர்ப்பளிப்பதற்குப் பேரவைத் தலைவருக்கு உரிமை இல்லை. அதைப் பற்றிக் கோர்ட்டிலே தான், நீதிமன்றத்திலேதான் தீர்ப்பளிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இரண்டு விஷயங்கள் சொன்னார்கள். அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். அதற்கான உள்துறை, ஹோம் டிபார்ட்மெண்டிலே இதற்கான அனுமதி கொடுக்கப்பட்டு, இரண்டு மூன்று துறைகள் பார்க்க வேண்டும். இப்பொழுது பாதுகாப்புத் (டிஃபென்ஸ்) துறையிலே நம்முடைய பில் இருக்கிறது என்பதையும், அதிலே ஏதோ சங்கடமோ, தடுக்கப்படுகிறதோ என்றும் கருத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அந்த முறைகளை கூட நாம் வாங்கும் சம்மதம் என்று சொல்வது ஒரு சம்பிரதாய முறையே தவிர, சம்மதமில்லாமலே கொண்டுவர உரிமை உண்டு. அதேபோல் Golaknat வழக்கைக் குறிப்பிட்டு அது அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று சொன்னார்கள். அம்மாதிரி அரசியல் சட்டத்துக்கு முரணானது அல்ல, சட்டப்படி உள்ள நிலைமைகளாகும். சட்ட நிபுணர்கள், அட்வகேட்-ஜெனரல் இவர்களின் கருத்தைத்தான் எடுத்துச் சொல்கிறேன் என்பதையும் நான் தெரியப்படுத்திக்கொண்டு, இதிலே எந்தவிதமான சந்தேகமான நிலையும் இல்லை, அனுமதிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை.

**Thiru SOWDI S. SUNDARA BHARATHI :** I will add one more point to the point raised by Dr. Hande.

சபாநாயகரவர்கள், ஒரு சட்டம் செல்லுமா, இல்லையா என்பதைப் பற்றி சபாநாயகர் தீர்ப்பளிக்க அதிகாரம் இல்லை என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் ஒரு மசோதாவை நமது சபையிலே அறிமுகப்படுத்தும் நேரத்தில், அந்த மசோதாவிற்கு ஆளுநர் அல்லது பிரசிடென்டினுடைய சான்க்ஷன் வேண்டுமோ, வேண்டாமா என்பது

சபாநாயகரவர்கள் தனித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். அரசாங்கத் தரப்பிலே, அந்த பில் ஆளுநரின் சாங்ஷனுக்கோ அல்லது பிரசிடெண்டினுடைய சாங்ஷனுக்கோ உட்பட்டதா இல்லையா என்பதற்கு அரசாங்கம் ஒரு கருத்துக் கொண்டிருக்கலாம். அரசாங்கமானது இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே ஆளுநரின் சாங்ஷன் வேண்டும் அல்லது வேண்டாம் என்று கருத்துக் கொள்ளலாம். ஆனால், அதே கருத்தை சபாநாயகர் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அந்த மசோதாவைப் பற்றி சபாநாயகர் பரிசீலித்து, அந்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்தாலும், அரசாங்கத்தின் கருத்து எதுவாகயிருந்தாலும் அதன் மீது சபாநாயகரவர்கள் தனிப்பட்ட முறையிலே தங்களுடைய சொந்த, in his own opinion. ஆக அந்த மசோதாவிற்கு ஆளுநர் அவர்களின் அல்லது பிரசிடென்டின் அனுமதி வேண்டுமா அல்லது வேண்டாமா என்று தனிப்பட்ட முடிவு செய்ய வேண்டிய விஷயம். இந்தக் குறிப்பிட்ட மசோதாவைப் பொறுத்த வரையிலும் முதலில் ஒரு அமைச்சரவர்கள் இந்த மசோதாவிற்கு ஆளுநர் அல்லது பிரசிடென்டின் அனுமதி தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதே நேரத்தில் மற்றொரு அமைச்சரவர்கள், இந்த மசோதாவிற்கு ஏற்கனவே ஆளுநர் அவர்கள் தம்முடைய சம்மதத்தை அளித்துவிட்டார்கள் என்று கூறுகிறார்கள். அரசாங்கத்திற்கு இந்த மசோதாவைப் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு கருத்து, இந்த மசோதாவிற்கு ஆளுநர் அல்லது பிரசிடென்டின் அனுமதி தேவையில்லை என்பது. இன்னொரு கருத்து, ஏற்கனவே அந்தக் கருத்து இருந்தாலும்கூட, ஆளுநர் அல்லது பிரசிடென்டின் அனுமதி தேவையில்லை, அனுப்ப வேண்டிய அவசியமில்லை, ஆனால் அனுப்ப இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த நிலையிலே சபாநாயகரவர்கள் சிந்தித்துப் பார்த்து, இந்த மசோதாவிற்கு பிரசிடென்டின் முன் அனுமதியோ அல்லது ஆளுநரின் முன் அனுமதியோ வேண்டுமா வேண்டாமா என்பதை, அரசாங்கம் எப்படிக் கருத்துக் கொண்டிருந்தாலும், தனிப்பட்ட முறையில் ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நான் தெரிந்துகொண்ட அளவில் இந்த மசோதாவிற்கு ஆளுநரின் முன் அனுமதியோ, அல்லது பிரசிடென்டினுடைய முன் அனுமதியோ கிடைத்தால்தான் வர முடியும் என்று கருதுகின்றேன். 'மணி பில்' லுக்கு முன் அனுமதி வேண்டுமென்ற கருத்தை நான் அறிகிறேன். ஆனால், 'மணி பில்' லுக்குத்தான் ஆளுநரின் முன் அனுமதியோ அல்லது பிரசிடென்டின் முன் அனுமதியோ வேண்டும் என்பதில்லை. எந்த மசோதாவாக இருந்தாலும், அது 'மணி பில்' லாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மசோதாவாக இருந்தாலும் சரி, நம்முடைய சபாநாயகரவர்கள் தனிப்பட சிந்தித்து, இதற்கு முன் அனுமதி வேண்டுமா, வேண்டாமா என்ற முடிவிற்கு வரவேண்டும். சபாநாயகரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மசோதாவிற்கு முன் அனுமதி வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

94-வது விதியில் திட்டவட்டமாக சபாநாயகருக்குள்ள ஒரே வழியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சபாநாயகர் முடிவு செய்ய உரிமை இருக்கிறதே தவிர, மற்றப் பிரகாரம் ஆளுநரின் சாங்ஷன் அல்லது பிரசிடென்டினுடைய சாங்ஷன் இதற்கு வேண்டுமென்ற முடிவிற்கு வந்துவிட்டால் சபாநாயகருக்குள்ள பொறுப்பு ஒன்றே ஒன்றுதான். அது என்ன என்பதைப் பற்றி நம்முடைய விதிமுறைகள் தெளிவாகச் சொல்லுகின்றன. **The motion shall not be placed on the list of business unless the recommendations or previous sanction required has been granted.** எனவே, சபாநாயகரவர்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டால், ஆளுநர் அவர்களின் சாங்ஷனோ அல்லது பிரசிடென்டின் சாங்ஷனோ வேண்டுமென்ற ஒரு முடிவிற்கு வந்துவிட்டால், அவர்களுக்குள்ள ஒரே 'பவர்' ஒரே 'மோட்டிவ்', இந்தச் சபையிலே கொண்டுவரக் கூடாது என்பதுதான்.



இந்த நேரத்திலே சபாநாயகரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம்முடைய சபாநாயகரவர்கள் இந்த 'பில்லை'ப் பற்றித் தம்முடைய சொந்த அபிப்பிராயமாக, சாங்ஷன் வேண்டுமா, வேண்டாமா என்ற முடிவிற்கு வரலாம். அது சரியானதோ அல்லது தவறானதோ, ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், இந்த 'பில்லு'க்கு பிரசிடெண்ட் அல்லது ஆளுநரின் அனுமதி வேண்டுமென்ற ஒரு முடிவிற்கு வந்துவிட்டால், இதிலே நாம் விவாதிப்பதற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. என்னுடைய கருத்துப் பிரகாரம் ஏற்கனவே அவர்களின் சாங்ஷன் வேண்டுமென்பதுதான். அப்படியிருக்கும் நேரத்திலே, விவாதிப்பதால், இந்தச் சட்டம் நிச்சயமாகச் செல்லுபடியாகாது என்ற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கு உரிய தீர்ப்பைத் தாங்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சபாநாயகரவர்களே, மீண்டும் மீண்டும் அதையேதான் சொல்லுகிறேன். இந்தச் சட்டத்திற்கு நில உரிமையாளர்களுக்காக ரொம்பவும் வாதாடுவதிலே ரொம்ப காரசாரமாக இருந்தது. இரண்டே இரண்டு விஷயங்களைத்தான் திரும்பவும் சொல்ல வேண்டும். இந்த மசோதாவின் மீது விவாதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் இரண்டு மிகத் தெளிவான விஷயங்கள் இருக்கின்றன. ஜனாதிபதியின் அனுமதி இதற்கு முன்கூட்டியே தேவை என்று சொல்லுகிறார்கள். ஒன்றை நான் தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். நம்முடையது sovereign legislature. இந்தக் கட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. சம்பிரதாயத்திற்காக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஜனாதிபதி என்று போட்டிருக்கிறதே தவிர, இலாக்காவில் ஒவ்வொருவராகப் பார்க்க வேண்டும். அதைக் கூடச் சொன்னேன். அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை என்று பயப்பட வேண்டியதில்லை. ஏறக்குறைய இன்று வந்திருக்கலாம். 'பில்'லுக்கு 'கிளியரன்ஸ்' கிடைத்திருக்கிறது. ஜனாதிபதி அனுமதி கொடுத்தாரா இல்லையா என்பது இந்த மன்றத்தின் உரிமை பற்றியது அல்ல. சம்பிரதாயமே தவிர, புரொசீஜரே தவிர, மற்றப்படி எந்தவிதமான நிலைமையுமில்லை.

நான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். இன்னும் அவர்களுடைய கருத்து, இந்த 'பில்' நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசாங்கத்தின் கருத்து. ஏதோ அவர்கள் அனுமதி கொடுக்க மாட்டார்கள், நான்கு நாட்களில் விழுந்துவிடப் போகிறது என்ற நிலைமை இருப்பது போல் பேசப்படுகிறது. நான் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு இடத்திலும் அங்கீகாரம் பெறப்படுவது என்பது ஒரு சம்பிரதாயம்தான். அனுமதி இல்லாவிட்டால்கூட செல்லும், என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய வாதம். அதுதான் தெளிவான கருத்து.

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு சௌடி. எஸ். சுந்தர பாரதி அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டப்படி செல்லுபடியாகாது என்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களும் அதையே சொன்னார்கள். நான் தெளிவாக, திட்டவட்டமாக, ஏற்கனவே சொன்னேன். ஏதோ அவர்களுக்குத்தான் அக்கறை இருப்பது போல, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணாகச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணான ஒரு சட்டத்தைக் கொண்டுவரக்கூடிய அளவுக்கு, சட்டப் பிரச்னையில் நிதானமில்லாத அரசு அல்ல இது. இதை ஒரு நோக்கத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. நன்றாகக் கருத்துக்களைச் சொல்லுங்கள் ; ஆயிரம் கருத்துக்களைச் சொல்லுங்கள் ; நிலை நாட்ட வேண்டும் என்று பாடுபடுங்கள். நாங்கள் ஏதோ பாடுபடுகிறோம், போராடுகிறோம் என்பதற்காக விவாதத்தை ஆரம்பிக்கும் நேரத்திலேயே சட்டமன்றத்தில் உங்களுடைய உறுதியை நிலைநாட்டுவதற்காகச் சொல்கிற நேரத்திலே, ஆதாரமற்ற வாதத்தைச் சொல்ல வேண்டாம் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

ஜனாதிபதி அனுமதி பெறுவது என்பது சம்பிரதாயமான ஒன்றே தவிர அனுமதி கிடைத்திருக்கிறதா, இல்லையா என்று கூட இந்த மன்றத்திற்கு தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு சரியானதுதான், செல்லுபடியாகக் கூடிய சட்டம்தான். எங்களுடைய சட்ட ஆலோசகர்கள், அட்வகேட்–ஜெனரல் எல்லோருடைய கருத்துக்களின் அடிப்படையிலேதான் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்திக்கொண்டு மேல் நடவடிக்கைக்கு அருள்கூர்ந்து அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குள்ளே கூட நுழைய விரும்பவில்லை. மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் பிரசிடெண்ட் அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்று மிகத் தெளிவாக எல்லோரும் தெரிந்துகொள்ளும்படிச் சொன்னார்கள். பிரசிடெண்ட் அனுமதி கொடுத்திருக்கிறார்கள், பிரசிடெண்ட் அனுமதியை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்று மிகத் தெளிவாக சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல துறைகளில் இருக்கின்றன. அதற்கான அனுமதி கொடுக்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் காண்கிறோம் என்று சொன்னார்கள். சபாநாயகர் அவர்கள், 'பிரசிடெண்ட் அனுமதி கொடுத்துவிட்டார்கள்' என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்கள் 'கொடுக்கவில்லை' என்று சொன்னார்கள். (குறுக்கீடு).

நான் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குள் நுழையவில்லை. ரூல்ஸைப் பொறுத்த வரையில், 91–வது விதியில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு முறை சபாநாயகர் அவர்கள் ஜனாதிபதி அவர்களுடைய அனுமதி தேவை என்று அவர் மனதிலே பட்டு, அவர் அதற்காக அனுப்பிய பிறகு, எந்த ஏஜென்ஸிக்கு அனுப்பினார்களோ, அந்த ஏஜென்ஸி அனுமதி கொடுக்காமல், லிஸ்டில் போடக் கூடாது என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி அனுமதி கொடுத்திருக்கிறார் என்றால், எப்பொழுது கொடுத்திருக்கிறார், எங்கே இருக்கிறது, அந்த ஆதாரத்தை இந்த அவை தெரிந்துகொள்வதற்கு முழு உரிமை இருக்கிறது. இரண்டாவதாக, அப்படி அனுமதிக்குப் போன பிறகு, அவர்களுடைய அனுமதியில்லாமல், மீண்டும் இது எப்படி லிஸ்டில் போடப்பட்டிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக சபாநாயகர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பிரசிடெண்ட் அனுமதி பெற வேண்டும், பெறக் கூடாது என்பதைப்பற்றியெல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விதிமுறைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. விதிமுறைகளைப் பொறுத்த வரையில், அனுமதியைப் பொறுத்த அளவிற்கு, முன்கூட்டி அனுமதி பெறவேண்டுமா, அல்லது சட்டம் போட்டதற்குப் பின்னால் அனுமதி பெற்றால் போதுமா என்பது பற்றியும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் நேற்று இந்த மன்றத்தில் இதுபற்றிச் சொல்லியபொழுது, இந்த சட்ட சபையைப் பொறுத்த வரையில், முன்கூட்டியே அனுமதி பெறத் தேவையில்லை என்பது அரசாங்கத்தின் வாதமாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறியபடி, மாநிலங்களுடைய உரிமைகள், அதாவது ஸ்டேட் லிஸ்டில் வரக்கூடிய ஸப்ஜெக்ட் எதுவாக இருந்தாலும், இந்த அரசு தன் இச்சையாகச் சட்டம் கொண்டுவரலாம். யாருடைய அனுமதியும் தேவையில்லை என்பது இந்த அரசாங்கத்தின் வாதமாகும். யூனியன் லிஸ்டில் உள்ள ஸப்ஜெக்டுகளைப் பொறுத்த வரையில், நமக்கு அதிகாரமே கிடையாது. கன்கரெண்டு லிஸ்டைப் பொறுத்தவரையில்தான் இந்தப் பிரச்னை வருகிறது. 'கன்கரெண்டு' லிஸ்டில் கூட, அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில சப்ஜெக்ட்ஸ் பொறுத்த வரையில் முன் அனுமதி பெற்றுத்தான் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.



உதாரணமாக, காமர்ஸ் அண்டு டிரேட், அதைப் பொறுத்த அளவுக்கு இந்த மாநில சட்ட அவையிலே சட்டம் கொண்டுவருவதற்கு முன்கூட்டியே பிரசிடெண்ட் அனுமதி பெறவேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு பிரிவு இருக்கிறது. பொதுவாக கன்கரெண்டு லிஸ்டில் உள்ள ஸப்ஜெக்டுகளைப் பொறுத்த வரையிலும், இப்படி அவர்கள் முன்கூட்டியே அனுமதி கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது நம்முடைய வாதமாகும். அரசியல் அமைப்புச் சட்டத்திலும் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. பிஸினஸ் ரூல்ஸ் என்று வைத்திருக்கிறோம். நீங்கள்கூட உங்கள் தீர்ப்பிலே அதைப் பற்றிக் கூறினீர்கள். கன்கரெண்டு லிஸ்டில் வரக்கூடிய ஸப்ஜெக்டுகள் சம்பந்தமாக நாம் இங்கே சட்டம் கொண்டுவந்துவிட்டு பின்னாலே அவர்கள் அனுமதி தராவிட்டால், ஒரு குழப்பம் ஏற்படும், முரண்பாடு ஏற்படும். ஆகவே, நம்முடைய விதி முறைகளில் நாம் முன்கூட்டியே அவர்களைக் கலக்க வேண்டும் என்ற வரைமுறையை வகுத்திருக்கிறோம். அந்த வரைமுறை விதியிலே இருக்கிறது.

இது போன்று லாண்டு ரிபார்ம்ஸ் பற்றி அரசியல் அமைப்புச் சட்டத்தில் 31–ஏ பிரிவு இருக்கிறது. அதில் கூட பிரசிடெண்ட் அனுமதி வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர, முன் அனுமதி வேண்டும் என்று சொல்லப்படவில்லை. 31–ஏயில் ப்ரொடக்ஷன் காம்பன்சேஷன் பற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அது கிடைக்காமல் போகலாம் என்று ஒரு கருத்துப்படக் கொடுத்திருக்கிறார்கள். கன்கரெண்டு லிஸ்டைப் பொறுத்த அளவிற்கு, இருக்கக்கூடிய சட்டங்கள் எப்படி அமைந்திருக்கிறது என்றால், நாம் சட்டம் கொண்டுவரலாம், அந்தச் சட்டத்திற்கு பிரசிடெண்ட் அனுமதி கொடுத்துவிட்டால் அது செல்லும், அப்படி அனுமதி கொடுக்காவிட்டால் மத்திய அரசு வேறு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டால், அந்தச் சட்டம் செல்லும். இப்படி ஒரு முரண்பட்ட நிலையில் எந்தச் சட்டத்திற்கு எப்படி விளக்கம் கொடுக்கலாம் என்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் இருக்கிறது. எந்தவிதமான காரணத்தையும் ஒட்டி, சட்டப்படி இந்த மசோதாவை இப்பொழுது இங்கு கொண்டுவரக் கூடாது என்று சொல்லுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

நான் அன்றைக்கே குறிப்பிட்டேன். இப்படி ஒரு நடைமுறைச் சிக்கலை தவிர்ப்பதற்கு முன் அனுமதி பெறலாம். ஆனால் முன் அனுமதி பெறாமலே வரக்கூடாது என்று சொல்வதற்கில்லை. முன் அனுமதி பெறாமல் கொண்டுவந்தால், அது சட்டத்தை எந்தவிதத்திலும் பாதிக்காது. சட்டம் 'பாஸ்' செய்யப்பட்டதற்குப் பின்னால் கூட குடியரசுத் தலைவரின் அனுமதிக்குக் கொடுக்கலாம் என்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் இருக்கிறது. இந்தச் சட்டத்திற்கு எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படாது.

நடைமுறைச் சிக்கல் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதை ஒட்டி, 31–ஏ பிரிவின்படி நாம் மத்திய அரசைக் கலக்க வேண்டும் என்ற ஒரு விதியை நாமே வகுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த விதியின்படி நாம் கலந்தோம். அங்கிருந்து தந்தி வந்திருக்கிறது. இந்த மசோதாவை இந்த மன்றத்தில் பிரேரேபிப்பதற்கு நாங்கள் அனுமதிக்கிறோம் என்று தந்தி வந்திருக்கிறது. அப்படித் தந்தி வருவதுதான் வாடிக்கை. அதற்குப் பின்னால் அவர்கள் ஆலோசனை கூறலாம். அந்த ஆலோசனைகளை நாம் ஏற்கலாம். நாம் ஏற்காமல் இருக்கலாம். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியும், நம்முடைய விதியின்படியும், எந்தவிதமான தவறையும் அரசாங்கம் இழைக்கவில்லை. சட்டப்படி இது செல்லும், சட்டப்படி இதை நிறைவேற்றுவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை இருக்கிறது என்பதை மட்டும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நம்முடைய ஜனாதிபதியினுடைய ஒப்புதல் கிடைத்தது என்று சொல்லியதை ஒட்டி, நம்முடைய மாண்புமிகு சட்ட, தொழில் அமைச்சர் அவர்கள் அங்கேயிருந்து

இந்தச் சட்டம் இந்த மன்றத்தில் வருவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்று ஒப்புதல் வந்திருக்கிறது என்ற செய்தியை சொல்லியிருக்கிறார்கள். ஜனாதிபதி அனுமதி வருவது, வராதது என்பதெல்லாம் அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளாகும். நம்முடைய அவைக்கு அறிவிக்கின்ற முறையில் குடியரசுத் தலைவர் அனுமதி பெற்ற செய்தியை எந்த பில்லிலும் இந்த அவையிலே கொண்டுவந்து அறிவிப்பதில்லை. ஆளுநர் இசைவு அளித்திருக்கிறார்கள் என்பதை மட்டும் அவைக்கு அறிவிப்பது வழக்கம். ஆகவே, அந்த முறையில், ஆளுநர் அனுமதி பெற்று, ஆளுநர் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்று நான் இந்த அவைக்கு அறிவித்திருக்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வந்திருக்கிறது என்று சொல்லுவதற்கும், வரவில்லை என்று சொல்லுவதற்கும் இடையே இருப்பது ஜனாதிபதி ஆட்சேபிக்கவில்லை என்ற அர்த்தம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் சொல்லியதைப் போல சில நேரங்களில்—அதனால் நான் வேறு வாதத்திற்குப் போகிறேன் என்பது பொருள் அல்ல—சில சட்டங்களை உரிய நேரத்தில் விரைவாகக் கொண்டு வரவேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்படுகிற நேரத்தில், அவர்கள் யாருடைய அனுமதியும் பெறாமல் சட்டத்தைக் கொண்டுவந்து தீர்மானத்தை நிறைவேற்றலாம். தீர்மானம் நிறைவேறிய பிறகு எவ்வளவு விரைவிலே அவர்களுக்குத் தெரிவித்து, அவர்களுடைய அனுமதி பெறலாமோ அப்படிப் பெறுவதற்கு, அப்படிப்பட்ட முறைக்கு நமது விதி முறைகளை வகுத்திருக்கிறார்கள்.

இரண்டாவது, அரசு இவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டு, ஒரு சட்டம் வருகிறது என்கிறபோது, சட்ட சபைக்கே வருவது முறைகேடா என்று பார்க்கும் பொறுப்பையும் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்வதில்லை. முன்பே கூட, ஒரு பேரவைத் தலைவர், ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5-30

I do not think I should take upon myself the onerous responsibility of seeing that the proposed legislation which the Government are bringing after elaborate consideration is *ultra vires* of the powers of this House. என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதில் எந்தவிதமான முறைகேடும் நடைபெற்றுவிடவில்லை.

### (7) அரசினர் மசோதாக்கள்—(தொடர்ச்சி).

**(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 11/70).**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker Sir, I move-That the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill* 1970 (L.A. Bill No. 11 of 1970) be taken into consideration.

Under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) the ceiling area in the case of every person and in the case of every family consisting of not more than five members, is 30 standard acres. The Government consider that even after the implementation of the above Act, there is disparity in the ownership of agricultural land, leading to the concentration of such lands in the hands of certain persons to the common detriment. As a measure of further

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 31st March 1970.



step towards agrarian reforms, the Government have decided to reduce the ceiling area from 30 standard acres fixed under Tamil Nadu Act 58 of 1961 to 15 standard acres. An announcement in this behalf was made in my budget speech on 26th February 1970. The Bill now before the House contains necessary provisions for this purpose. May I now explain the salient features of the provisions of the Bill ?

Clause 1 relates to short title and commencement of the Bill. The provisions of the Bill are given effect to with effect from 26th February 1970. However on further consideration, the Government consider that the legislation should be given effect tofrom 15th February 1970. I am separately moving an official amendment to give effect to the provisions of the Bill with effect from 15th February 1970 and alter clause (1) and the other provisions suitably for this purpose.

Clause 2 of the Bill seeks to amend section 5 of Tamil Nadu Act 58 of 1961 for reducing the ceiling limit from 30 standard acres to 15 standard acres and also to make necessary consequential amendment to the various provisions of the Act, that is, sections 3, 8, 9, 10, 21, 22, 23, 60 and 96.

Under clause 2 (1) (*c*) provision is made for recognising partitions in the case of minor sons and minor grand-sons up to the notified date. As the existing explanation benefits only minor sons and minor grand-sons in the case of persons governed by Hindu Law, it has been considered necessary that voluntary transfers effected in the case of unmarried daughters and unmarried grand-daughters governed by Hindu Law should also be recognised up to the notified date. The existing explanation is confined only to Hindus. It is considered that persons governed by any Law other than Hindu Law, namely, Christians ,Muslims and others should also be given the benefit of making voluntary transfers in the case of minor sons, unmarried daughters minor grand-sons or unmarried grand-daughters up to the notified date. The amendment I have moved separately seeks to achieve this object. With this amendment, Hindus, Christians and Muslims and others have been treated equally, notwithstanding the existence of different personal laws governing the communities concerned.

New section 21-A as proposed to be inserted by clause 2 (7) of the Bill provides that partitions effected before the notified date will be valid. It also provides that voluntary transfers effected in favour of educational institution or hospital of a public nature solely for the purpose of such institution or hospital will also be valid. But in the case of educational institution or hospital, an important condition is laid down, namely, that the land should solely vest in the institution or hospital and should be appropriated for the institution or hospital. I have separately given notice of an amendment to new section 21-A providing that if a parent or grand-parent has voluntarily transferred any land on account of natural love and affection to any minor son— unmarried daughter, minor grand son or unmarried grand–daughter in the male line, such transfer shall be valid.

In this connection I may add that in the neighbouring State of Kerala, similar provisions have been made. The Kerala Act recognises partitions and transfers on account of natural love and affection and also in favour of persons who are the tenants of the holding. The said Kerala Act also recognises voluntary transfers in favour of religious, charitable or educa-

tional institutions of a public nature solely for the purposes of the institutions. But our proposal restricts recognition only in the case of partitions and voluntary transfers on account of natural love and affection by parents and grand-parents only.

Clause 3 is a saving provision and seeks to provide that any action or proceeding taken, order made, notification issued, etc. under the existing Act can be continued and enforced even after 26th Feburay 1970 (now proposed to be revised as 15th February 1970) in accordance with the provisions of that Act.

Sir, I commend the motion for the acceptance of the House.

Mr. SPEAKER: The motion is now before the House for discussion

DR. H. V. HANDE : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970) be circulated for the purpose of eliciting opinion thereon."

THIRU K. CHEEMAICHAMI : I second the amendment. Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970) be circulated for the purpose of eliciting opinion thereon."

DR. H. V. HANDE : I second the amendment.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970) be circulated for the purpose of eliciting opinion thereon."

The amendment was duly seconded.

THIRU K. RAMAMOORTHI : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L.A. Bill No. 11 of 1970) be referred to a Select Committee consisting of.............Members of the Assembly."

THIRU N. KASIRAMAN : I second the amendment.

THIRU A. A. SUBBA RAJA : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 (L. A. Bill No. 11 of 1970) be referred to a Select Committee of the House consisting of ....................Members (Names of members to be given later.

The amendment was duly seconded.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, நாங்கள்—சுதந்திராக் கட்சியினர்—இந்த மசோதாவைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேச விரும்புகிறோம். அமைச்சரவர்கள் முன்னாலேயே சொல்லுகிறபோது, நிலச்சுவாந்தார்களுக்காக வாதாடுகிறீர்கள் என்றார்கள். நிச்சயமாக நான் சொல்லுகிறேன், சுதந்திராக் கட்சிதான் விவசாயிகளுக்காக வாதாடுகிறது, வக்காலத்து



வாங்குகிறது. உண்மையிலேயே பார்க்கிறபோது, இந்த நிலச் சட்டம் நிதானம் தவறி வந்திருக்கிறது. நிதி அமைச்சர் சொன்னார்கள், நிதானத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று. நான் சொல்லுகிறேன்—நிதானம் தவறி, அவசரக் கோலத்தோடு இது வந்திருக்கிறது.

இதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருக்கிறபோது, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னால், இப்பொழுது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. இது யார் நிலம் விவசாயிகள் பாட்டன் சொத்து, அதற்குப் பின்னால் அவர்களுடைய தகப்பனார் சொத்து. ஆகவே, அந்த நிலங்களெல்லாம் அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சேர வேண்டும். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்குக் கொடுப்பது போல, யார் சொத்தையோ எடுத்து யாருக்கோ கொடுப்போம் என்றால், யார் நிலம் ? இப்படி நிலத்தைக் கொடுப்பதால் ஏற்றத்தாழ்வுகள் முடிந்துவிடுகின்றனவா என்பதை நிதி அமைச்சர் தன் பதிலில் தெளிவாகச் சொல்லவேண்டும். நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதால், ஏற்றத்தாழ்வுப் பிரச்னை தீர்ந்து போகிறதா ? எந்த அடிப்படையில் சட்டம் கொண்டுவரப்படுகிறது ? இந்தச் சட்டம் கொண்டுவருவதால், தமிழ்நாட்டில் எத்தனை நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும் ? நிலம் இல்லாதவர்களுடைய கணக்கை நிதி அமைச்சர் கடைசியில் சொல்ல வேண்டும்.

இந்தச் சட்டம் நிச்சயமாக உற்பத்தியைப் பாதிக்கும். இதைப் பற்றி நில வருவாய்த் துறை மானியத்தின் மீது பேசும்போதே சொன்னேன். நில உச்சவரம்புச் சட்டத்தினால் எந்த அளவுக்கு உற்பத்தி பாதிக்கப்படும் என்பதைப் பற்றிச் சொன்னேன். இந்தச் சட்டத்தின் காரணமாக நிலம் இல்லாத எத்தனை பேர்களுக்கு நிலம் கொடுக்க முடியும் ? எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப் போகிறார்கள் ? என்று கேட்க விரும்புகிறேன்.

இதிலே எவ்வளவு ஏக்கர் நிலம் உபரியாக வரும் ? அதை யார் யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள் ? நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்போம், விவசாயிகளுக்கு நிலம் கொடுப்போம் என்று சொல்லுகிறபோது, நிலம் இல்லாதவர்கள் மாடுகள் இல்லாதிருப்பார்கள். விவசாயம் செய்ய மாடுகள், விதைகள் வேண்டும். இவ்வளவையும் கொடுத்து, இந்த அரசாங்கம் அவர்களுக்குப் பணத்தையும் கடனாகக் கொடுக்கப் போகிறதா ? அப்படிக் கடனாகக் கொடுப்பதாக இருந்தால் அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

ஆகவே, இந்தச் சட்டம் அவசரக் கோலத்தோடு கொண்டுவரப்பட்டது. முதலில் 30 ஸ்டாண்டார்டு ஏக்கர் என்று காங்கிரஸ் ஆட்சியில் சொல்லப்பட்டது. பிறகு 15 ஸ்டாண்டார்டு ஏக்கர் என்று இப்போது ஆகியிருக்கிறது. இனிமேல் 10 ஏக்கர் என்று கூடச் சொல்லலாம். இப்படி படிப்படியாகக் குறைத்துக்கொண்டு வருகிறபோது, ஒரு ஏக்கர், பிறகு எல்லாமே அரசுடைமை என்று சொல்லும்போது, அது கம்யூனிஸத்துக்கு வழி வகுக்கும். விவசாயிகளுக்கு உடைமை அளிக்கின்ற சட்டம் இந்த நில உச்சவரம்புச் சட்டம் என்று சொல்லுகிறபோது, இதைப் பொதுமக்கள் அபிப்பிராயத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். தமிழ்நாட்டில் 100-க்கு 80 பேர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் இந்தச் சட்டத்தைப் பற்றி என்ன கருத்துச் சொல்லுகிறார்கள், எந்த அளவுக்கு அவர்கள் கருத்து இருக்கிறது என்று பரிசீலனை செய்ய இந்த நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடவேண்டும்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** பொதுமக்களுடைய அபிப்பிராயத்துக்கு விடவேண்டும் என்றால் எந்த முறையில் ? வாக்கெடுப்பு நடத்துவதா, அல்லது வேறு எந்த வகையில்........

**திரு கரு. சீமைச்சாமி :** அது உங்களுக்குத் தெரியும். அதற்கு செக்ரடேரியட்டில் ஒரு முறையிருக்கிறது. சேம்பர் ஆப் காமர்ஸ், ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள், சங்கங்கள் தொழிற்சங்கங்கள் போன்றவற்றிற்கு சர்குலேட் செய்து அதற்குப் பின்னால் சபையில் வைத்து முடிவு செய்வது.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது இப்படிப் பொதுமக்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து எவ்வளவு சட்டங்களைக் கொண்டுவந்தார்கள் ?

**திரு கரு. சீமைச்சாமி:** அது வேறு விஷயம். பொருளாதார, ஜீவாதார உரிமையைப் பறிக்கின்ற சட்டம் அவர் ஆட்சியில் வரவில்லை. ராஜாஜி ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. விவசாயிகளைக் காப்பாற்றி இருக்கிறார்கள். இப்போது ஜீவாதார உரிமையைப் பறிக்கின்ற வகையில், பாட்டன் காலத்தில் சம்பாதித்த சொத்தை அரசாங்கம் பறித்து யாருக்கோ கொடுக்கிறது என்று வருகிறபோது, அதில் பிரச்னைகள் வருகின்ற காரணத்தால், பொதுமக்களுடைய அபிப்பிராயத்திற்கு இந்தச் சட்டத்தை விடவேண்டும். அதற்கு சில முறைகள் இருக்கின்றன. அந்த முறைப் பிரகாரம் கருத்தை அறிந்து சட்டம் கொண்டுவந்து பின்னால் என்ன செய்யலாம் என்று முடிவு எடுக்க வேண்டும் என்ற காரணத்துக்காக இந்த மசோதாவைப் பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கின்றேன்.

***திரு ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவைமுன் கொண்டு வந்துள்ள நில உசசவரம்புக் குறைப்புச் சட்டத்தை நான் மனநிறைவோடு வரவேற்கிறேன். இத்தகைய ஒரு முயற்சி நீண்ட காலத்துக்கு முன்பே எடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. முதலில் வந்த நிலவுடமை உச்சவரம்புச் சட்டம் மகத்தான ஏமாற்றத்தில் முடிந்தது மட்டுமல்ல, உழவர்களிடம் அதிருப்தியையும், ஆத்திரத்தையும் வளர்த்து விட்டது. அதைக் குறைத்து உழவர்களுக்கும் உடைமையாளர்களுக்குமிடையே சமரசத்தை உருவாக்க இந்தச் சட்டம் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையோடு இதை நான் வரவேற்கிறேன்.

விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி இது என்பதையும் நான் நினைப்பூட்ட விரும்புகிறேன். " ப்யூடலிசம் " (Feudalism) என்று சொல்லப்படும் நிலப் பிரபுத்துவத்தை ஒழிக்கின்ற கொள்கை விடுதலைப் போராட்டத்தின் ஒரு அம்சமாகவே இருந்தது—மக்களுக்கு அந்த நாளில் உறுதி கூறப்பட்டது. அந்த ப்யூடலிசத்தை ஒழிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், சமஸ்தானங்கள் ஒழிக்கப்பட்டன; அதனை அடுத்து ஜமீன்கள் ஒழிக்கப்பட்டன; அதனை அடுத்து இனாம்கள் அகற்றப்பட்டன. இப்போது அதன் கடைசிப் பகுதியாக மிராசுகளை அகற்றத்தான் இத்தகைய சட்டம் இங்கே வந்திருக்கிறது என்று நினைக்கிறபோது, நீண்ட நெடுங்காலமாக அரசியலில் பங்கு கொண்டவன்—விடுதலைப் போராட்டக் காலத்தில் தலைவர்களானோர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைப் பிரசாரம் செய்ததில் பங்கு கொண்டவன் என்ற முறையில் அந்த விடுதலைப் பாரம்பரியத்தின் சார்பில் இந்த மசோதாவை வரவேற்று இந்த ஆட்சிக்கு ஆசி கூறுகிறேன் என்று தெளிவாகச் சொல்லுகிறேன்.

என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் சீமைச்சாமி சொன்னார்கள் " யார் அப்பன் வீட்டுச் சொத்தை எடுத்துக் கொடுப்பது?" என்று நான் கொஞ்சம் இலக்கியம் படித்தவன் என்ற முறையில், அப்பன் வீட்டார்—பாட்டன் வீட்டார்—முப்பாட்டன் வீட்டார் என்ற பழைய காலத்துக்கு பின்நோக்கிப் போக விரும்புகிறேன். நான் படித்த இலக்கியங்களில் நிலம் தனி நபர் உடைமை என்பது பண்டைக்காலத்தில் இல்லவே இல்லை. நிலம் அனைத்தும் நாட்டின் சொத்து—அரசின் சொத்து. அரசுடைமை ஆவதற்குத் தகுதியுடைய பொருள் ஏதேனும் இருக்குமேயானால், அது நிலம்தான் என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மிகப் பிற்காலத்தில் அவரவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்ட நிலம் அவரவர்கள் மீது பட்டா



செய்யப்பட்டது. கோவில் குருக்களுக்கு—மேளக்காரனுக்கு—நாட்டியக்காரனுக்கு—இசைவாணருக்கு பயிரிட்டுக்கொள்ளத்தான் மன்னர்கள் நிலம் கொடுத்தார்கள். பட்டா செய்துகொள்ள நிலம் கொடுத்தது இடையாது. பின்னால் எங்கிருந்தோ வந்த வெள்ளை ஏகாதிபத்தியம் நிலத்தைப் பிரித்து நிலச்சுவான்தார்களை சிருஷ்டித்தது. அவர்களைத் தங்கள் கையாட்களாக உபயோகித்துக்கொள்ள "செட்டில்மெண்ட்டு " என்ற பெயரால் தனி நபர்களுக்கு பட்டா செய்து கொடுத்தது. அந்த பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் போன போக்கில் இந்த மிராசுகளும் போய்த்தான் தீரவேண்டும் மிராசுகளைப் போக்கித்தான் தீரவேண்டும் என்ற உணர்வு உழவர்களிடம் வளர்ந்து வருவதை நெடுங்காலம் புறக்கணித்துக் கொண்டிருக்க முடியாது.

அடுத்து, இன்னொன்று. இன்று நக்சல்பாரிகளைப் பற்றி பேசப்படுவதைப் பார்க்கிறோம். நான் முன்னமே சொல்லியிருக்கிறேன். மேற்கு வங்கம் போன்று நாடு முழுவதும் ஆகாமல் இருக்க வேண்டுமானால், நாட்டில் அமைதியும் சாத்வீகமுமான முறையில் சட்டரீதியான வழிகளில் நிலவுடமைச் சீர்திருத்தம் ஏற்படுத்தான் ஆகவேண்டும்.

காந்தியடிகள் தனியுடைமையை வேறு வகையில் ஒப்புக்கொண்டு அதில் தர்மகர்த்தர்த்தனத்தை புகுத்தினார். தான் சேர்த்த உடைமையைத் தன் கையில் வைத்துக்கொண்டு, அதைத் தன்னுடைமையாக எண்ணாமல் மக்கள் உடைமையாக எண்ணி, தன்னை தர்மகர்த்தாவாகக் கருத வேண்டும் என்று கூறினார். அவர்கூட தொழில்களுக்கு—பணத்துக்கு—பாங்குக்குத்தான் சொன்னாரே ஒழிய, நிலத்தைப் பொறுத்தவரையில் தர்மகர்த்தா பொதுவுடைமையை அறிமுகப்படுத்தவில்லை. அது மட்டுமல்ல, நஷ்ட ஈடு இல்லாமல் விளை நிலங்கள் எடுக்கப்பட்டாக வேண்டும் என்று சொன்னார்.

'இந்த பாரத நாட்டில் மக்கள் என்றால் விவசாயிகள்தான்" என்று காந்தியடிகள் விளக்கி, " விவசாயிகளுக்கு அவர்கள் உழுகிற நிலம் உரிமையாக்கப்படும் " என்று சொன்னார். " அப்படியானால் உடைமையாளர்கள் எதிர்க்க மாட்டார்களா ? " என்று கேட்டார். "முதலில் எதிர்ப்பார்கள். ஆனால், நடைமுறைக்கு வந்துவிட்ட பிறகு தங்களைச் சரிப்படுத்திக்கொள்ளுகிற புத்திசாலித்தனம் அவர்களிடம் உண்டு" என்று அடிகள் சொன்னார். " நஷ்ட ஈடு இல்லாமலா ?" என்று கேட்டதற்கு, " நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பதை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது " என்று சொன்னார்.

நாட்டில் பொருளாதார சமத்துவம் ஏற்படவேண்டுமானால், இந்த நாடு விவசாய நாடாக இருக்கின்ற காரணத்தால், அந்த சமத்துவம் விளை நிலத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும்; நகர சொத்துக்களுக்கு வரம்பு கட்டுவதனை நான் எதிர்க்கவில்லை. ஆனால் நகர சொத்துக்கு உச்சவரம்பு கட்டுவதன் மூலம் விவசாய நாடான பாரதத்தில்-மகத்தான சமுதாய சமத்துவத்தைக் கொண்டுவர முடியாது. மிக அதிகமான அளவுக்கு விவசாயிகளைக் கொண்ட பாரத நாட்டில், நில உடைமைச் சீர்திருத்தம்தான் மிகப் பெரிய பொருளாதாரச் சீர்திருத்தம், மேல் சாதி—கீழ் சாதித் தன்மையைப் போக்க இந்தச் சீர்திருத்தம் வந்தாகவேண்டும் என்று கூறி வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

லூயி பிஷர் என்ற அமெரிக்க அறிஞன் காந்தியடிகளைப் பேட்டி கண்டார். ' காந்தியடிகளோடு ஒரு வாரம்" என்று லூயி பிஷர் எழுதி வெளியிட்டுள்ள நூலில் அந்தப் பேட்டி விவரம் வெளியாகியிருக்கிறது. "சுதந்திர இந்தியாவில் நீங்கள் மக்களுக்கு கொடுக்கவிருக்கிற பரிசு என்ன ? " என்று கேட்டிருக்கிறார் பிஷர்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு காந்தியடிகள் சொன்ன அளவுக்குத் தீவிரமாகப் போகாமல் நஷ்ட ஈடு கொடுத்து எடுக்கும் முறையை வகுத்திருப்பதைப் பார்க்கும்போது, விடுதலைப் போராட்டக் காலத்தில் கொடுக்கப்பட்ட உறுதிமொழி அளவுக்குக்கூட நாம் போகமுடியவில்லை என்பது புலனாகிறது. அதுமட்டுமல்ல; நிலஉடைமை அடியோடு கூடாது என்றும் சொன்னார். அப்படிச் செய்யவில்லை. தி.மு.க அரசு உச்சவரம்பு 15 ஏக்கர் என்று வைத்து சில சலுகைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது நல்ல எண்ணத்தோடு. என்னுடைய பயம் எல்லாம், இந்த ஆட்சி நல்லெண்ணத்தோடு கொடுக்கின்ற சலுகைகளை உடைமையாளர்கள் எப்படி எப்படிப் பயன்டுத்துவார்களோ, அவ்வாறு பயன்படுத்தி இந்தச் சட்டத்தை. அசலே இல்லாமல் செய்துவிடுவார்களோ என்ற பயம் எனக்கு இருக்கிறது.

நம்முடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டுத் தோழர்கள்—என்னைவிடத் தீவிரவாதிகள் என்று சொல்லிக்கொள்ளுகிற சோஷலிஸ்டுக் கட்சிக்காரர்கள்—இதைவிடவும் தீவிர மசோதாவை விரும்பலாம்; இதைவிடத் தீவிர சட்டத்தை விரும்பலாம். அந்த விருப்பம் எனக்கும் உடன்பாடுதான். ஆனால், ஒஅறை நினைவில் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த இந்த மசோதாவை நாம் ஆதரிக்க வேண்டும். அமைதியான முறையில் சட்ட ரீதியான வழியில்—ஜனநாயக நெறியில் நிலவுடைமைச் சீர்திருத்தம் வர வேண்டுமானால், வளைந்து நெளிந்து சில பல சலுகைகளை வழங்கித்தான் தீரவேண்டும். இதை விட வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆக்வே, சில சலுகைகள், கொஞ்சம் அதிகமாகத் தோன்றலாம். சில சலுகைககள் துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்ற அச்சம் ஏற்படலாம். துஷ்பிரயோகம் செய்யப்படுகிறபோது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அதனைத் தவிர்ப்பதற்கு, அந்தக் கேடுகளை அகற்றுவதற்கு, அவ்வப்போது வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, இந்தச் சட்டத்தினுடைய பலன் மக்களுக்கு கிடைக்கும்படி செய்வதில் உறுதியாக நிற்கும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்ன என்பதை ஆட்சி இன்னும் கொஞ்சம் தெளிவுபடுத்தியிருக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த மசோதாவைக் கொண்டுவந்ததன் நோக்கத்தை குறிப்பிடும்போது.

" தமிழ் நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் 5-வது பிரிவிற்கிணங்க உச்சவரம்புப் பரப்பளவு, ஒவ்வொருவரைப் பொறுத்தும், ஐந்து பேருக்கு மேற்படாமலுள்ள ஒவ்வொரு குடும்பத்தைப் பொறுத்தும், 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகும். மேற்படி சட்டத்தை நிறைவேற்றிய பிறகும், வேளாண்மை நிலத்தின் உரிமையில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. இதனால் பொது நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் ஒரு சிலர் வசமே அத்தகைய நிலங்கள் குவிந்து விடுகின்றன. நில உடைமைச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரும் வகையில் மேலும் எடுக்கப்படும் ஒரு நடவடிச்கையாக, அத்தகைய ஏற்றத்தாழ்வைக் குறைப்பது அவசியமெனக் கருதப்படுகிறது. இந்தக் குறிக்கோளை எய்தும் நோக்கத்துடன் உச்சவரம்பு பரப்பை 30 ஸ்டாண்டர்டு எக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைப்பது அவசியமெனக் கருதப்படுகிறது." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த வாசகம் மசோதாவின் குறிக்கோளைச் சொல்லுகின்றது. நிலம் அற்றவர்களுக்கு நிலம் வழங்கவேண்டும் என்ற குறிக்கோள் அதில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. அந்த அடிப்படையில் உச்சவரம்பு கட்டும் சட்டம் வர வேண்டும். " உழுபவனுக்கு நிலம் சொந்தம் " என்பதைக் குறிக்கோளாக்கி—உழுபவனுக்கு நிலத்தை





உரிமையாக்குவது என்பதைக் கொள்கையாக்கி மசோதா வருகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அப்பிராயம். நிதி அமைச்சரவர்களுடைய முடிவுரையில் அத்தகைய கருத்து உறுதிப்படுத்தப்படும் என்று நினைக்கிறேன்.

நண்பர் சீமைச்சாமி அவர்கள் கேட்டார்கள். " உழுகிற விவசாயிக்கு என்ன நிலம் கொடுக்கப் போகிறீர்கள் ? எவ்வளவு நிலம் கொடுக்கப் போகிறீர்கள் ? கொடுக்க நிலம் எது ? என்று. அதுதான் எனக்கும் கவலை. சீமைச்சாமி அவர்கள் கட்சி ஒத்துழைத்தால்—மசோதாவிலுள்ள சலுகைகளை அகற்றி, வரம்பை இன்னும் கொஞ்சம் குறைத்தால் நிறையப் பேர்களுக்குக் கொடுக்க நிலம் கிடைக்கும். இதற்கே ஆட்சேபணை எழுப்புகிறவர்கள், குடியானவர்களுக்குக் கொடுக்க நிலம் கிடைக்காதே என்று கவலை காட்டுவது, தடுப்பதற்கான தந்திரம் என்றுதான் கொள்ள வேண்டும்.

நான் நிலச்சுவான்தார் அல்ல ; நிலச்சுவான்தார் குடியில் பிறந்தவன் அல்ல ; விளைநிலத்தின் சிறப்பியல்புகளைத் தெரிந்தவன் அல்ல. ஆனால், விவசாயிகள் படும் கஷ்டங்களை நீண்ட நெடுங்காலமாக உணர்ந்தவன்—அறிந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன். என்னுடைய பெருமதிப்பிற்குரிய, சுதந்திராக் கட்சி நண்பர்களுக்குச் சொல்லுகிறேன்—மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் இந்த மாநிலத்தில் இந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதைத் தவிர்த்திருக்க மாட்டார் ; (ஆரவாரம்) நிறைவேற்றியே இருப்பார் என்று—அவர் உள்ளத்தை மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்தவன் என்ற உரிமை எடுத்துக் கொண்டு சொல்லுகிறேன். அவர் பதவியில் இல்லாமற்போனது ஒரு குறையே தவிர, அவர் இருந்திருந்தால் இதற்குக் குறைவாக நடவடிக்கை எடுத்திருக்க மாட்டார் என்று சொல்லுகிறேன்.

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்த நேரத்தில், அந்தச் சட்டத்திற்கு ஆதரவு தேடுவதற்காக, ராஜாஜி அழைத்து நானும் அவரோடு தஞ்சை மாவட்டத்தில் சுற்றுலா செய்தேன். முதன் முதலாகத் தஞ்சை நகரில் காலையில் மிராசுதார்கள் கட்டத்தைக் கூட்டினார். மிராசுதார்கள் கூட்டத்தைக் கூட்டி, " நீங்கள் இந்தப் போக்கிலேயே போய்க் கொகண்டிருந்தால்—கோடைக்கானலில் ஒரு பங்களா, உதகையில் ஒரு பங்களா, சென்னையில் ஒரு பங்களா என்று வைத்துக்கொண்டு, சுகஜீவனம் நடத்துகிறீர்கள் ; உழவர்கள் இதையெல்லாம் பார்க்கிறார்கள் ; யார் உழைப்பால் இதெல்லாம் வருகிறது என்று அவர்களுக்குத் தெரிகிறது. இந்தப் போக்கிலே நீங்கள் போய்க்கொண்டு, நிலவுடைமைச் சீர்திருத்தங்களை ஏற்க மறுத்தால் என் வாழ்நாளிலேயே உங்கள் கையிலுள்ள நிலங்கள் பறிபோவதை நான் பார்க்க வேண்டி ஏற்பட்டுவிடும். அதைத் தவிர்க்க வேண்டுமானால் சீர்திருத்தங்களை அந்தந்தக் கட்டத்தில் ஏற்று, வளைந்து கொடுத்து, மக்களுக்கு வாழ்வு அளியுங்கள் " என்று தஞ்சையில் அவர் பேசியதை என் காதால் கேட்டேன். பத்திரிகையிலும் வெளியாயிற்று. திரும்பவும் சொல்லுகிறேன். அவர்கள் எடுத்துக்கொண்ட அரசியல் கொள்கைப்படி இதை எதிர்ப்பது அவசியமாக இருக்கலாம். ஆனால் ஒன்றை உறுதியாகச் சொல்லுகிறேன். இந்தச் சீர்திருத்தச் சட்டம் ஜனநாயக அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டிய அவசியம் இல்லையானால், இதைவிடவும், தீவிரமாக இருந்திருக்கவேண்டும் ; இதை விடவும் திவிரமாக இருந்திருக்கும். ஆனால், உறுதியாகச் சொல்லுகிறேன். நிலவுடைமையை ஆதரிக்கிற கட்சி எதிர்க்கட்சியாகவும், நிலவுடைமையை மறுக்கிற கட்சி ஆளுங்கட்சியாகவும் இருந்து வருகிற இந்த ஜனநாயக

அமைப்பில் இதைவிட நாம் அதிகமாக எதிர்பார்ப்பதற்கில்லை என்னும் நிலையில், இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிற திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பாராட்டுகிறேன்.

ஆனால், ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். இந்த மசோதாவில் சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளைகளுக்கு, பேரப்பெண்களுக்கு என்றெல்லாம் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகைகளெல்லாம் வழுக்கி விழ இடமாகி விடக்கூடாது. உறுதியாக நிற்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்துதான் பெரும்பாலும் கூச்சல் வருகிறது. மிராசுதார்கள் ஊர்வலம் வருகிறது என்று சொல்லி விட்ட பிறகு வேறு என்ன இருக்க முடியும் ? தஞ்சை மாவட்டக்காரர் முதலமைச்சராக இருக்கும் இந்த நேரத்தில் இந்தச் சட்டம் வருகிறது. அந்த மாவட்டத்தை நன்றாகப் புரிந்தவர் இதைக் கொண்டுவருகிறார்கள். நிலப் பிரபுத்துவத்தில் தஞ்சைக்கு அடுத்த மாவட்டம் கோவை மாவட்டம் ஆகும். அந்தக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சரவர்களும் சேர்ந்து இதைக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள்—மிக மிக உருக்கமாக வேண்டிக் கொள்ளுகிறேன். இந்த நாட்டின் ஏழை எளிய மக்களை நாம் நீண்ட நெடுங்காலமாக இப்போதைய நிலையிலேயே வைத்திருக்க முடியாது.

பட்டித்தொட்டி கிராமங்களைப் பாருங்கள். கண்ணீர் வடிக்கும் அளவுக்கு சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக் காலத்துல் இருந்ததை போன்றே இன்னும் நம்முடைய கிராமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்றால், இந்தப் போக்கிலேயே சென்றால், போலீசையும் இராணுவத்தையும் வைத்துத்தானா நம் நாட்டின் சட்டத்தையும் அமைதியையும் காக்கவேண்டும் ? அப்படியானால் நம்முடைய தர்மம், வேதம், ஆகமம், நீதிசாத்திரம், திருக்குறள் எல்லாம் எங்கே போவது என்று நான் கேட்கிறேன்.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் இந்த மசோதாவை நான் உறுதியாக வரவேற்கிறேன், ஒரு கலாச்சார இயக்கத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன். நான் காணும் கலாசாரம், ஒருவனை ஒருவன் எய்த்துப் பிழைக்காத கலாசாரம். நான் அமைக்க விரும்புகிற தமிழகம், ஆண்டான்-அடிமை இல்லாத தமிழகம். நான் விரும்புகிற தமிழ்நாட்டின் பண்பாடு சுரண்டுபவர் சுரண்டப்படுபவர் இல்லாத பண்பாடு. அத்தகைய அமைப்புக்கு இது ஒரு முன்னோடி—முடிவானது அல்ல—என்று நம்பி இந்த மசோதாவிற்கு மன நிறைவோடு தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆதரவைத் தருகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அவை முன் கொண்டுவரப்பட்டிருக்கிற நில உச்ச வரம்பு மசோதாவைக் கொள்கை அளவில் வரவேற்று, இது வந்திருக்கும் முறை, வந்திருக்கும் நேரம் ஆகியவற்றையும், இந்த மசோதாவில் இருக்கும் குறைபாடுகளையும் என்னுடைய கட்சியின் சார்பில் கண்டித்து, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நிலத்திற்கு உச்ச வரம்பு சட்டும் சட்டம் முதன் முதலில் 1962-ம் ஆண்டில் தலைவர் காமராஜ் அவர்களால் கொண்டுவரப்பட்டது. சட்டமாக்கப்பட்ட அந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் அந்த உச்ச வரம்புச் சட்டம் சிலரைத் தப்பிக்க வைப்பதற்காகவே கொண்டுவரப்பட்டது, அது சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை, அதற்கான ஃபாலோ-அப் மெஷர்ஸ்—பின்னால் படிப்படியாக எடுக்க வேண்டிய



நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை—பின்னால் படிப்படியாக வரவேண்டிய சட்டங்கள் சரியான முறையில் கொண்டுவரப்படவில்லை என்று இத்தனை ஆண்டுக் காலமாகச் சொல்லிவந்தது. ஆனால், சென்ற மூன்று ஆண்டுக் காலமாக அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்தச் சட்டத்தில் என்ன குறைகள் இருந்தன என்று அவர்கள் சொன்னார்களோ அந்தக் குறைகளைப் போக்கியிருக்கிறார்களா, அந்த ஓட்டைகளை அடைத்திருக்கிறார்களா, அந்த ஓட்டைகளின் வழியாகத் தப்பியவர்களை புதிய சட்டத்தின் விளைவாகப் பிடித்திருக்கின்றார்களா, என்று பார்த்தால், அப்படிப்பட்ட நிலைமை இந்தப் புதிய மசோதாவில் காணப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தலைவர் காமராஜ் அவர்கள் அன்றையதினம் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் சட்டம் கொண்டு வந்தபோது, இதனைப் பின்தொடர்ந்து பல்வேறு சட்டங்களைப் கொண்டு வருவதன் மூலம் சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதலைக் கொண்டு வர நினைத்திருந்தார்கள். ஆனால், நாட்டின் நிலைமையில், அவருடைய சேவை வேறொரு துறைக்குத் தேவைப்பட்ட காரணத்தால் அவர் இங்கு இல்லாத நேரத்தில் அவருடைய கொள்கைகளை இங்கு முழுமையாகச் செயல்படுத்தமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. செயல்படுத்தப்படவில்லை என்பதைநாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால், அன்று முதல், மசோதாவைக் கொண்டுவந்து இந்த அவைமுன் வைக்கப்பட்ட நாள் வரை, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் சொல்லிவந்த பெருங்குறை, இந்தச் சட்டம் உச்சவரம்புச் சட்டம் அல்ல, மிச்ச வரம்புச் சட்டம் என்பதாகும். ஆனால் இன்றையதினம் எந்த அளவில் இந்த மசோதா உச்ச வரம்பைக் குறைத்திருக்கிறது என்பதைச் செயல் அளவில் பார்த்தால், இது கொஞ்சங்கூட உச்ச வரம்பைக் குறைக்கவில்லை, உச்ச வரம்பு எல்லையைக் குறைக்கவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் என்ன எதிர்பார்த்தோமோ அதற்கு மாறாக, இது உச்ச வரம்பை அதிகப்படுத்தி, நிலத்தை வைத்திருப்பவர்களுக்குத் துணை போகிறது என்பதைக்கூட சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பற்றி இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தையும் தொழிலாக நாம் கருத வேண்டும் என்று கடந்த காலத்தில் சொல்லிவந்திருக்கிறோம். பல இடங்களில் பேசி வந்திருக்கிறோம். ஆனால், அதை ஒரு தொழிலாக, இன்டஸ்ட்ரியாக நாம் கருதி அதற்கு மதிப்பு அளிக்க வேண்டும். விவசாயத்தைப் பொறுத்த வரையில், அதன் தலையில் நாம் 1962-ம் ஆண்டிலேயே கைவைத்துவிட்டோம். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்களிடமுள்ள நிலத்தைக் குறைத்து, முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் அதிகபட்சம் வைத்திருக்க முடியும் என்ற முடிவை எடுத்துவிட்டோம். அதை செயல்படுத்தியும் இருக்கிறோம். அதில் குறைபாடு இருந்திருந்தால் அந்தக்
பிற்பகல் 6-00
குறைபாட்டை நீக்கியிருக்க வேண்டும். ஆனால், அதற்குமாறாக இன்றையதினம் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதைப் பதினைந்து என்று குறைக்கிறோம். பரவாயில்லை. ஆனால் அப்படிக் கூறுகின்ற நேரத்தில் மற்றத் துறைகளில் நாம் கை வைத்திருக்கிறோமா என்றால் இல்லை. தொழிலதிபர்களைப் பார்க்கிறோம். "நீங்கள் புதிதாக எத்தனை லட்சம் வேண்டுமானாலும் போட்டு தொழில்களை ஆரம்பியுங்கள், பாதுகாப்பு அளிக்கிறோம்" என்று சொல்வதைப் பார்க்கிறோம். நகர்ப்புறங்களில் தங்களுடைய பணத்தைக் கொண்டுவந்து வீதிவீதியாக வீடுகளைக் கட்டிவிட்டு, சமுதாயத்தை ஆட்டி வருகின்றவர்களைப் பார்க்கிறோம். அவர்கள் பக்கம் எல்லாம் கை திரும்பவில்லை. திரும்பத் திரும்ப விவசாயத்திலேதான் கைவைக்கிறார்கள். பெரும் பணக்காரர்களின் மத்தியிலே கைவைத்தால், அவர்களால், கேடு வரும். ஒரு ஆர்கனைசேஷன் இல்லாமல், ஒரு சங்கமாக இல்லாமல் இருக்கின்ற நிலச் சொந்தக்காரர்களைப் பொறுத்தவரையில் எந்த நேரத்திலும், எப்படியானாலும் கை வைக்கலாம் என்ற அளவில் இருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்களை மட்டும் சமூக விரோதிகளாக,

நாம் விரும்பியோ, விரும்பாமலோ நம் மனத்தில் கற்பனை செய்து கொண்டிருக்கிறோம். அந்த நிலைமை நீடிக்குமானால், இன்றையதினம் சொல்லிக்கொண்டிருக்கிற பசுமைப் புரட்சியை அது பாழடித்து விடும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். கேரள மாநிலத்திலே 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது, சட்டம் நிறைவேறியிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில், கேரளத்தில் இருக்கின்ற நிலைமையையும், இங்கே இருக்கின்ற நிலைமையையும் அனுசரித்துப் பார்க்க வேண்டும். கேரளத்தில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் அங்கே வருகின்ற வருவாய் என்ன — இங்கே இருக்கின்ற நிலைமை என்ன, வருவாய் என்ன என்பதை ஆராய்ந்தார்களா ? அவைகளையெல்லாம் ஆராய்ந்து, வருவாயின் அடிப்படையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்களே, விவசாயக் கூலிகள் நிர்ணய சட்டம் கொண்டு வர இருக்கிறோம் என்று, அந்த மசோதாவை முதலில் கொண்டுவந்துவிட்டு, அதற்குப் பிறகு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருந்தால் நியாயபூர்வமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு செலவு இருக்கிறது. எதன் மூலம் இதை நிர்ணயிக்க முடியும் ? அவர்கள் விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்கிறோம் என்பதை அடிப்படையாக வைத்து செலவுகளை நிர்ணயிக்க முடியும். இன்றைக்குத் தலைகீழ்ப்பாடமாக இருக்கிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டிவிட்டு, பின்னர் வேலை செய்கின்ற விவசாயிகளுக்குக் கூலி இவ்வளவு என்ற மசோதா வந்தாலும் வரலாம், வராவிட்டாலும் போகலாம் என்ற நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு சட்டம் அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததுபோல வந்திருக்கிறது. இதைக் கொண்டுவருகின்ற நேரத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

"இது ஜனாதிபதிக்குப் போயிற்றா ?" "இதை ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டுமா, வேண்டாமா ?" என்பதைப் பற்றியெல்லாம் இங்கே பேசியாகிவிட்டது. இந்த மசோதாவைக் கொண்டுவந்த பிறகு அரசாங்கமே அதற்கான திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கின்றது. அவர்கள் யாரைக் கலந்து பேசினார்களோ, அவர்களிடம் தாங்கள் நினைத்ததையெல்லாம் தெளிவாகச் சொல்லியிருக்க முடியாது. இவர்கள் யாருக்கு இந்த மசோதாவை அனுப்பினார்களோ, என்ன என்ன பிரிவு, எப்படி எப்படி இருக்க வேண்டுமென்று மனதிலே நினைத்துக் கொண்டிருந்தார்களோ அவர்களிடம் அதைத் தெளிவாக கலந்திருக்க முடியாது. அதற்குப் பிறகு திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற நிலைமை முன்னாலே இருந்தது. இன்றைக்கு 75 ஸ்டாண்டர்டு ஏக்கர்களை இந்தச் சட்டத்தின்படி வைத்திருக்க முடியும். இது காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்த நிலைமையை ஒத்திருக்கிறதா அல்லது அதைவிடக் குறைந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆளுக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைத் தாங்கள் ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா ?

**திரு க. இராமமூர்த்தி :** எங்களுடைய சட்டத்திலே இருந்த ஓட்டைகளை அடைப்பதற்குப் பதிலாக, புதிதாக ஓட்டைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். பழைய ஓட்டைகளை நீங்கள் அடைக்கவும் இல்லை, அதே நேரத்தில் புதிய ஓட்டைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் சொல்கிற நேரத்திலே, குறைகளை நிவர்த்திக்க வேண்டிய வழிகளையும் சொல்ல வேண்டும். உங்களுடைய குழந்தைகளுக்கும் நிலம் கொடுக்கலாம் என்பதுபற்றி இருக்கிறது. இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன ?

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த மசோதா இன்றையதினம் அவசரம் அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது (ஆளும் கட்சித்தரப்பில் சிரிப்பு). பழைய சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளை அடைப்பதற்கு நீங்கள் பயந்திருக்கிறீர்கள். முன்பெல்லாம், வடபாதிமங்கலம், மன்றாடியார் என்றெல்லாம் பேசினீர்கள். இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களைக் கொண்டு வர ஏன் தயங்குகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விதிவிலக்குகள் சம்பந்தமாக ஒரு தீர்மானமே வரப் போகிறது. எங்களைப் பார்த்து, "அவசரப்படுகிறீர்கள்" என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லிவிட்டு, அவர் ஏன் அவசரப்படுகிறார் ? விதிவிலக்கு சம்பந்தமாக ஒரு தீர்மானம் வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** அதிலேதான ஒரு சூழ்ச்சி. இதைக்கொண்டு வந்தது அரசு. விதிவிலக்கிலே போகும்போது எல்லா கட்சிகளையும் பார்த்து, "என்ன சொல்கிறீர்கள் ?" என்று கேட்டு, பழிபோட்டு விடுவீர்கள். இதிலே அரசு எடுத்துக்கொண்ட பொறுப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விதிவிலக்கைப் பொறுத்த வரையில், தோப்புகள், காபித் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்கள் போன்றவை ஒவ்வொரு இடத்திற்கும் வித்தியாசப்படுகின்றன. அந்தக் காரணத்தினாலேதான் ஒரு கமிட்டி போட்டு, அந்தக் கமிட்டி சுற்றுப்பயணம் செய்து, ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கையின் அறிவுரைப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம். ஒரு கமிட்டி போடலாம் என்ற தீர்மானம் வருகிறது. நில உச்ச வரம்பைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் அரசு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பு என்று நிர்ணயித்துவிட்ட காரணத்தினால் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருப்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதாக ஆக்கி, சில திருத்தங்களைச் செய்கிறோம். அதற்கு ஒரு கமிட்டி போட வேண்டியதாக இருக்கிறது.

விதிவிலக்கைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு நிலைமை இருக்கிற காரணத்தால் பல்வேறு பிரச்சினைகளையும் அந்தந்த மாவட்ட நிலைமைகளையும் ஆராய்ந்தறிவதற்காகக் கமிட்டி போடலாம். கமிட்டி மூலமாக நிலைமைகள் ஆராயப்பட்டு, அதிலே ஒரு நல்ல முடிவு எடுக்கலாம் என்று தீர்மானம் கொண்டுவரப் போவதாக நான் சொன்னேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தத் தோப்புகள் போன்றவற்றிற்கு, எதெதற்கு எக்ஸம்ப்ஷன் கொடுப்பது என்பதற்கு ஒரு கமிட்டி தேவை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைவிட ஸ்டாண்டர்டு ஏக்கரா அந்தந்தப் பகுதியில் எப்படி எப்படி அமைந்திருக்கிறது என்பதை நிர்ணயித்துவிட வேண்டும். 1962-லே எங்கள் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் உச்ச வரம்புச் சட்டம் சட்டமாகும் போது அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டிருந்த கொள்கைகள் வேறு. அதைத் தொடர்ந்து இன்றையதினம் கொண்டு வரவில்லை. அதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டிய திராவிட முன்னேற்றக் கழகம், மாறாக, ஓட்டைகளை அடைப்பதற்கு மாறாக, உச்சவரம்பைக் குறைக்கப் போகிறோம் என்று சொல்லி, 30 ஏக்கருக்கும் அதிகமான அளவிலேதான் வைத்திருக்கிறார்கள். ஆகவே இது குழப்பம் மிகுந்த சட்டம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரு. இராமமூர்த்தி அவர்கள் "60 எக்கர் என்று இருக்கும்போது, 70, 75 எக்கர் என்று வைத்துக் கொள்கிறார்களே, 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்லிவிட்டு, அதிகமாகத் தருகிறார்கள்" என்று சொல்கிறார்கள். நண்பர் அவர்கள் குறை சொல்கிற வகையிலே சொல்கிறார்களே தவிர, அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** பழைய சட்டத்திலே இருக்கின்ற ஓட்டைகளை அடைக்க வேண்டும். (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு.) அதன் தொடர்பான சட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும்.

அடுத்தது, இந்த மசோதா அவசரம் அவசரமாக, அவசரக் கோலத்தில் நல்ல முடிவு எடுக்காமல், நன்றாக ஆராயாமல் கொண்டுவரக் கூடியதாக இருக்கிறது. ஆகவே, இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, ஆராயப்பட்டு, அதன்பிறகு கொண்டு வரப்பட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நல்ல வேளையாக, நமது நண்பர் ஒரு பேருண்மையை ஒத்துக்கொண்டிருக்கிறார். பழைய சட்டத்திலே ஓட்டைகள் இருக்கின்றன என்ற பேருண்மையை ஒத்துக் கொண்டதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் பதினைந்து உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. அதன் பின்னர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரை ஆற்ற வேண்டியிருக்கிறது. இன்றோடு இந்த அவைக் கூட்டம் முடிய வேண்டியிருக்கிறது.

**THIRU K. VINAYAKAM :** Sir, we can carry it to tomorrow also. This is a Bill of far-reaching importance. But I am bound by your ruling.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் பேரவைதான் முடிவு செய்ய வேண்டும்.

**THIRU K. VINAYAKAM :** Sir, I am helping the House. (Interruption). Yes, the discussion can be continued if necessary, tomorrow also.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள்தான், இந்த அவைதான் முடிவு எடுக்க வேண்டும். 15 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேசி, அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்குப் பொது விவாதம் முடியுமா ? நாளைக்கு கிளாஸ் பை கிளாஸ் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. காலையில் கிளாஸ் பை கிளாஸ் கன்ஸிடரேஷன் முடித்துவிட முடியுமா ?

**திரு. கே. விநாயகம் :** காலையில் முடியாவிட்டால் ஈவினிங் வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஈவினிங் முடியாது, ஈவினிங் கவுன்சில் இருக்கிறது.

**THIRU K. VINAYAKAM :** We are not concerned with what heppens in the Council. We can't be hustled like this. He has asked me to do this. With his consent I am doing this. Please do justice to hon. Members.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் பேசாமல் இருக்கிறார்கள். அவர்கள் உங்களைச் சொல்லச் சொன்னார்களா ? எதிர்க்கட்சித்தலைவர் என்ன சொல்கிறார்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விவாதம் நடக்கட்டும். ஜாமம் வரைக்கும் போகட்டும், நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள் ?

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான "பில்" லாக இருப்பதால் பேச விரும்புகின்ற அங்கத்தினர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யார் யார் பெயர் கொடுத்து இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் சேர்த்திருக்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பொது விவாதம்தானே, என் எல்லோரும் பெயர் கொடுக்க வேண்டுமென்று நினைத்து என்னுடைய பெயரைக் கொடுக்க மறந்துவிட்டேன். தயவுசெய்து என்னுடைய பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு எஸ். ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் உச்ச வரம்புச் சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்ற நாம் இருக்கிறோம்.

இந்த உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவருவதை நான்கு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை ; பேறிஞர் அண்ணாவின் இலட்சியம் ; கலைஞருடைய திட்டம்; நிதியமைச்சர் மதியழகன் அவர்களுடைய சட்டம் என்று நான்கு வகையாகப் பிரித்துப் பார்க்கிறபோது நாட்டிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயத் தொழிலாளர்கள் அத்தனை பேர்களும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

1961-வது ஆண்டு உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்த பொழுது அந்தச் சட்டத்தினாலே எவ்வளவு நிலம் நமக்குக் கிடைக்கப்பெற்றது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஐந்து பேர்கள் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 30 ஸ்டாண்டர்டு எக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று கொண்டு வந்தார்கள். இன்றைய தினம் நம்முடைய அரசு ஐந்து பேர்களுடைய குடும்பத்திற்குப் பதினைந்து ஸ்டாண்டர்டு எக்கர் என்ற அளவில் சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. இதிலே மைனர்களுக்குப் பங்குண்டா இல்லையா என்பதைப்பற்றியெல்லாம் முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் குறிப்பிட்டார்கள். நான் இந்த அரசின் சார்பாகவும், முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடும், தலைவர் அவர்களுடைய அனுமதியோடும் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு சட்டம் கொண்டு வருகிறது என்று சொன்னால் அந்தச் சட்டத்தினால் சமுதாயத்திலே இருப்பவர்கள் யாரும் பாதிக்கப்படக் கூடாது. ஆனால் அதே நேரத்தில் பெரும் நிலச்சுவான்தார்கள் பாதிக்கப்படுவதைப் பற்றி நாம் கவலை எடுத்துக் கொள்ளாது, நடுத்தர மக்கள், சாதாரண ஏழை விவசாய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற அளவில் தான் அந்தச் சட்டத்தை நாம் கொண்டுவரவேண்டும்.

ஒரு குடும்பத்தில் ஐந்து பேர்களுக்கு மேல் ஒரு குழந்தை இருந்தால் அதற்கும் பாகம் உண்டு என்று சொல்லலாம். சட்டம் இயற்றப்படுகிற பொழுது ஐந்து பேர்கள் கொண்ட குடும்பம் இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் எல்லாம் மேஜராக இருப்பவர்கள் என்று சொன்னால் மைனராக இருக்கக்கூடியவர்கள் இரண்டு, மூன்று பேர்கள் அந்தக் குடும்பத்திலே இருப்பார்கள் என்றால் அவர்களுக்கும் நிலம் கிடையாது, தகப்பனாருடைய சொத்தில், என்பதில்லை என்று இந்தச் சட்டத்தை இயற்று

வதின்மூலம் சமுதாயத்திலே ஒரு பெரிய பழிச்சொல்லுக்கு ஆளாகக் கூடாது என்ற வகையிலே அவர்களுக்கும் பங்குண்டு என்ற வகையிலே இந்தச் சட்டத்தை நம்முடைய சர்க்கார் கொண்டுவருகிறது.

இதிலே கல்வி, மருத்துவம் போன்ற பொதுத் துறைகளுக்குத் தானம் எழுதிவைப்பவர்கள் தாராளமாக எழுதிவைக்கலாம். ஆனால் அது சர்க்காருடைய அங்கீகாரம் பெற்றதாக இருக்கவேண்டும். தானத்தின் மூலம் வரக்கூடிய வருமானம் நேரடியாகக் கல்விக்கும் மருத்துவத்திற்கும் சேரக்கூடிய வகையில் இருக்குமானால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொல்வது பாராட்டுக்குரியதாகும்.

நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவருவதின் மூலம் நாட்டில் உணவு உற்பத்தி குறையும், உணவுப் பஞ்சம் ஏற்படும் என்ற சில குரல்கள் எழுவதைப் பார்க்கிறோம். உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அமெரிக்காவில் 100, 200 எக்கர் நிலம் என்ற அளவிலே வைத்து இருக்கிறார்கள், அப்படிப்பட்ட நாடுகளில் உணவு உற்பத்தியைப் பெருக்கி உலகத்தின் பிற நாடுகளுக்கு உணவு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஜப்பான் நாட்டில் மிகக் குறைந்த நிலங்கள், 7 எக்கர் என்ற அளவிலே வைத்திருக்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நாடுகளிலும் உணவு உற்பத்தியை அதிகமாக்கி உலகத்தாருக்கு வழங்கக்கூடிய நிலையில் அவர்களும் இருக்கிறார்கள். எனவே நில உச்சவரம்புச் சட்டத்தினால் உணவு உற்பத்தி குறையும் என்று வாதாடுவார்களானால் அவர்கள் இதையும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் கணக்குப்படி உத்தேசமாக இரண்டு லட்சம் எக்கர் நிலம் நமக்கு மீதம் கிடைக்கும் இந்தச் சட்டத்தின் மூலமாக என்று கணக்கு இருக்கிறது. எத்தனை பேர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் போகிறார்கள் என்று சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கேட்டார்கள். இரண்டு லட்சம் எக்கர் நிலத்தைக் கொடுப்பதற்கு ஐந்து ஸ்டாண்டர்டு எக்கர் ஒரு குடும்பத்திற்கு என்று வைத்தால், 40 ஆயிரம் குடும்பங்களுக்குப் பிரித்துக் கொடுக்கக் கூடிய அளவிலே சட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது.

இதைத்தான் நம்முடைய ம.பொ.சி. அவர்கள் அழகாகச் சொன்னார்கள். இப்படி நாம் எடுக்கிறபொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவுக்கு நட்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று நம்முடைய அரசு கருதி பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்கலாம் என்ற வகையிலே சட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது.

விதி விலக்குகள் இருப்பதைப் பற்றி உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். பழ வகைகள் உற்பத்தி செய்வது, சவுக்குத் தோப்புகள், கால்நடைக்காக மேய்ச்சல் காடுகள் இவை போன்றவற்றிற்கு உச்சவரம்புச் சட்டத்திலே விதி விலக்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொன்னார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் இத்தகைய துறையிலே மாறுபட்ட நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினாலே இதைப் பரிசீலனை செய்து, இதற்கு எந்த அளவுக்கு உச்சவரம்பு வைக்கலாம் என்பதைக் கமிட்டி அறிக்கை கொடுத்த பிறகு, சட்டமாக நிறைவேற்றலாம் என்ற நிலையிலே அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் யார் பாதிக்கப்படுவார்கள் என்றால் சாதாரண விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல் இருக்கிறது என்று சுதந்திராக் கட்சித் தலைவர் பேசினார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு நிலம் திரு, வி. எஸ். தியாகராஜ முதலியாரிடம் இருக்கிறது.



இன்னொரு மூன்றில் ஒரு பங்கு நிலம், பண்டார சந்நிதியினர் வைத்து இருக்கிறார்கள், மீதி மூன்றில் ஒரு பங்கு நிலம்தான் சாதாரண விவசாயிகளிடத்தில் இருக்கின்றது. இரண்டு பங்கு நிலத்தை அதிகமாக வைத்து கொண்டிருக்கின்றவர்களிடம் எடுப்பதின்மூலம் யார் பாதிக்கப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சபாநாயகர் அவர்கள் மூலம் நான் அமைச்சர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் நிறைய நிலங்கள் சுலபமாக எடுத்துக்கொள்ளக் கூடிய வகையில் கண்ணோட்டம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களுக்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டுவர வேண்டும். மடாலயங்களைச் சேர்ந்த நிலங்களுக்கும் உச்சவரம்பு செய்ய வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவில் நிலங்களாக 89,119 எக்கர் நிலம் இருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் 45,944 எக்கர் நிலம் கோவில் நிலமாக இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 23,858 எக்கர் நிலம் இருக்கிறது. தமிழ்நாடு பூராவும் மொத்தத்தில் பார்த்தால் 258,699 எக்கர் நிலங்கள் கோவில்களின் பெயரால் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோவில் நிலங்களுக்கு நாம் ஒரு உச்சவரம்பு நிர்ணயம் செய்வதன் மூலம் நமக்கு நிறைய நிலங்கள் உபரியாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த நிலவுடைமைக்குப் புதியதொரு உச்சவரம்பு கட்டக் கூடிய இந்த மசோதாவின் மீது நாம் பொதுவாக விவாதிக்கக் கூடிய நேரத்தில், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பின்வரும் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால் தமிழ் நாட்டில் இந்த மசோதாவின் காரண நோக்கங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டிருக்கக் கூடிய சிறிய அளவிற்காவது நிலவுடமை குவிந்து கிடப்பதைத் தடுக்க முடியும் என்றுதான் நாங்கள் முதலிலே கருதினோம். ஆனால், இப்போது அரசாங்கச் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும்போது இந்த மசோதாவினால் எந்தப் பலனும் ஏற்படாது என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று இங்கு சுதந்திராக் கட்சி சார்பிலும், காங்கிரஸ் கட்சி சார்பிலும் பேசக்கூடிய நேரத்தில் சுற்றி வளைத்து இது மிகவும் பயங்கரமானதொரு மசோதா என்று சொல்லப்பட்டது. அவர்கள் அப்படிக் கவலைப்படுவதற்கு எதுவுமே இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். காரணம், 30 ஸ்டாண்டார்ட் எக்கர் என்பதை ஐந்து பேர்களுக்கு மேற்படாத ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டார்ட் எக்கர் என்பதை—15 ஸ்டாண்டார்ட் எக்கராவாகக் குறைக்கக் கூடிய அளவில் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதைக் கொண்டுவரவில்லை என்பதை அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

காங்கிரஸ் அரசு கொண்டுவந்த சட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று நிர்ணயிக்கக் கூடிய நேரத்தில் செக்ஷன் 5 5-வது உப பிரிவில் மற்றொன்றையும் கூறினார்கள். ஐந்து பேர்களுக்கு மேற்பட்ட அந்தக் குடும்பத்தில், அவர்கள் 15 பேர்களாக இருந்தால் 75 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று கணக்கிட முடியாது. என்னவாக இருந்தாலும் ஒரு குடும்பம் என்று நிர்ணயிக்கப்பட்டு அதற்கு 30 ஸ்டாண்டார்ட் எக்கர், அதாவது இரண்டு மடங்கு 60 எக்கர்களுக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் ஒரு குடும்பம் வைத்திருக்க முடியாது என்று அந்த உப பிரிவில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, 30 ஸ்டாண்டார்ட் எக்கர் என்பதை 15 ஸ்டாண்டார்ட் எக்கராவாகக் குறைக்கிறோம் என்று சொல்லும்போது எக் காரணத்தைக் கொண்டும், எந்தெந்த வழியாக இருந்தாலும், அதிக பட்சமாக ஒரு குடும்பம் வைத்திருக்கக் கூடியது 60 ஸ்டாண்டார்ட்

எக்கராவிலிருந்து 30 ஸ்டாண்டார்ட் எக்கராவாகக் குறைக்க வேண்டுமென்று சொல்லுவது சாதாரண இயல்பு. தர்க்க ரீதியிலும், நியாயத்தின் அடிப்படையிலும் அதுதான் சரியானதாகும். என் அரசாங்கம் அதைச் செய்யவில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, சுதந்திரா அல்லது காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்களுக்குப் புத்தி சொல்லுவதற்கு இவர்களை நாங்கள் கேட்கவில்லை. அவர்களது கொள்கையைப் பற்றிச் சொல்லட்டும். இல்லாவிட்டால் நான் பேசும்போது அவர்களுக்காகப் பேச வேண்டிவரும்.

**திரு. என். சங்கரய்யா :** புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய இந்தத் திருத்தச் சட்டத்தில் "நோட்டிபைட் டேட்" என்று சொல்லக்கூடிய தேதி வரையில்—பெப்ரவரி 26-ம் தேதி என்று துவக்கத்தில் இருந்தது. இப்போது 15–2–1970 என்று போட்டிருக்கிறார்கள். 15–2–1970–ல் இருந்து இதைப் பற்றிப் பேசி, இது நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்து பின்பு மாநில அரசு தன் கெஸட்டில் டேட் நோட்டிபை பண்ணும் தேதி வரையில் எந்த நிலப் பிரபுவும் அவர்கள் இந்து குடும்பமாக இருந்தால் என்ன செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் கல்யாணம் ஆகாத மகள்கள் இருந்தால், ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து பேர்கள் இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் **Natural love and affection** தன் சொந்த நேசத்தின் அடிப்படையில் எழுதி வைக்கலாம் என்றிருக்கிறது. எவ்வளவு என்று அதன் வரம்பு குறிக்கப்படவில்லை. எவ்வளவு எழுதி வைக்கலாம் என்றால், அதிகப்படியாக 60 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு வரும் வரையில் எழுதி வைக்கலாம். கல்யாணம் ஆகாத பெண்கள் இருந்தால், ஒருவர் இருந்தாலும் சரி, அல்லது மூவர் இருந்தாலும் சரி, நோட்டிபைட் டேட் வரையில் இன்றைக்கு எழுதி வைக்கலாம் என்றிக்கிறது. மகன் வயிற்றுப் பேத்தி கல்யாணம் ஆகாதிருந்தால் எழுதி வைக்கலாம் என்றும் இருக்கிறது. 44,000 நிலப் பிரபுக்களிடமிருந்து உபரி நிலம் எடுக்கப்படும் என்கிறோம். இந்த உரிமையைக் கொடுத்த பிறகு நோட்டிபைட் டேட் வரையில் பங்கு போட்டுப் பிரித்து எழுதிக் கொண்ட பிறகு நமக்கு என்ன கிடைக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, 15 ஸ்டாண்டார்ட் எக்கர் என்ற அடிப்படையில் பார்க்க முடியாது. 60 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே அதற்கு மேல் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எண்பது சென்ட் நிலம் ஒரு ஸ்டாண்டார்ட் எக்கர் என்பது மிகவும் வசதியுள்ள சில இடங்களில்தான் இருக்க முடியும். $1\frac{1}{2}$, 2, 3 அதிகபட்சம் நான்கு எக்கர்கள் வரை ஒரு ஸ்டாண்டார்ட் எக்கர் என்பது வரும். கோவை, சேலம் மாவட்டங்களில் இன்று வரி அடிப்படையில் ஸ்டாண்டார்ட் எக்கர் நிர்ணயிக்கப்படுகிறது.

ஆகவே, 60 ஸ்டாண்டார்ட் எக்கர்கள் என்றால் $60 \times 4 = 240$ எக்கர் வரையில் அவர்கள் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலை ஏற்படும். புன்செய் நிலம் என்றால் நான்கு எக்கர்கள் வரை ஒரு ஸ்டாண்டார்ட் எக்கருக்குப் பொருந்தும். ஆகவே, புன்செய் நிலம் என்றால் 240 எக்கர்கள் வரை வைத்துக்கொள்ளலாம். அப்படியானால் எவ்வளவு மிச்சம் வரும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் முப்பது ஸ்டாண்டார்ட் எக்கருக்கு மேல்—இப்போது 15 என்று செய்யும்போது—எந்த ஒரு குடும்பமும் வைத்திருக்கக் கூடாது என்ற ஷரத்தை இத்திருத்தச் சட்டத்தில் சேர்க்க வேண்டும். அப்போதுதான் நாம் நினைக்கும் பயன் கிடைக்கும். 30 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று வரம்பு கட்டும்போது அக் குடும்பத்தில் ஐந்து பேர்களுக்கு மேற்பட்டிருந்தால் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஸ்டாண்டார்ட் எக்கர் வீதம் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இப்போது நாம் 30 ஸ்டாண்டார்ட் எக்கராவை 15 என்று



குறைக்கும்போது அந்த 5 ஸ்டாண்டார்ட் எக்கர் என்பதை $2\frac{1}{2}$ ஸ்டாண்டார்ட் எக்கர் என்றுதானே குறைக்க வேண்டும்? ஆகவே, 15 என்று குறைக்கும்போது அதை $2\frac{1}{2}$ என்று குறைப்பதுதான் லாஜிக்கல் கான்ஸிக்வன்ஸ் ஆக இருக்க முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேரளாவில் கம்யூனிஸ்டு கட்சி ஆண்ட நேரத்தில் கொண்டுவந்த இந்தச் சட்டத்தில் இதுவே இருக்கிறது. நீங்கள் என்ன குற்றம் சாட்டிப் பேசியிருக்கிறீர்களோ, அதுவே இருக்கிறது.

By way of partition or on account of natural love and affection or in favour of a person who was a tenant of the holding before 27th July 1960 and continued to be there till the date of transfer or in favour of religious or charitable or educational institution of a public nature solely for the purpose of institution,

என்று கேரளாவில் அப்போது அமைச்சராக இருந்த திருமதி கௌரி அவர்கள் கொண்டுவந்த "பில்" லில் இவைகள் எல்லாம் இருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்போது சீஃப் மினிஸ்டர் யார்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள்.

**திரு. என். சங்கரய்யா :** குறுக்கீட்டிற்கு நன்றி. அதற்குப் பூரணமாக பதில் அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி அமைச்சர் அவர்களும் ஆரம்ப உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கும் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முப்பது ஸ்டாண்டார்ட் எக்கர் என்பதை 15 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று குறைக்கும்போது முதலில் 30 என்றிருக்கும்போது சீதனத்திற்காக 10 ஸ்டாண்டார்ட் எக்கர் கொடுக்கலாம் என்றிருந்தது. 15 ஸ்டாண்டார்ட் எக்கராக்கள் என்று குறைக்கும் விதத்தில் மசோதா கொண்டுவரும்போது அந்த 10 ஸ்டாண்டார்ட் எக்கர் என்பதை 5 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று குறைப்பதுதான் நியாயத்துக்குப் பொருந்தும் என்பதை இம் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆனால், இது செய்யப்படவில்லை. ஆகவே மற்றொரு விஷயத்திற்குப் போவதற்கு முன்னால் கேரளாவைப் பற்றி நிதியமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் கூறிக் குறுக்கிட்டார்கள். அதற்கு விளக்கம் கூற விரும்புகிறேன். கேரளா சட்டத்திலே, '**Natural love and affection**' என்ற முறையிலே பங்கு போட்டுக்கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. நோட்டிபைட் டேட் வரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலேயுள்ள ஒரேவொரு பிரச்னை கேரளாவிலே **Adult Unmarried Person** அதாவது கல்யாணமாகாத வயது வந்த ஒருவருக்கு கேரளா சட்டப்படி 5 ஸ்டாண்டார்ட் எகக்ர் மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தில் உள்ள கடந்த காலச் சட்டத்திலேயும், அல்லது இப்பொழுது கொண்டு வந்திருக்கும் சட்டத்திலேயும் ஒரு குடும்பம் என்று ஒருவராக இருந்தாலும் அவருக்கு 15 ஸ்டாண்டார்ட் எக்கரா வழங்கப்படுகிறது.

பிற்பகல் 6-30

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இங்கே ஒரு ஸ்டாண்டர்ட் எக்கராவுக்கு 400 ரூபாய் வருமானம் என்றால், அதே ஸ்டாண்டார்ட் எக்கராவுக்கு கேரளாவிலே 2,000 அல்லது 3,000 ரூபாய் வருமானம் வரும். எனவே, அதை வைத்து ஸ்டாண்டர்ட் எக்கராவைப் பார்க்க வேண்டும்.

**திரு. என். சங்கரய்யா :** அதற்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே கொண்டுவரக்கூடிய வரம்பு கல்யாணகமாகாத, வயது வந்த ஒருவருக்கு 5 ஸ்டாண்டார்ட் எக்கர் என்பது மட்டுமல்ல, ஸ்டாண்டார்ட் எக்கர் என்று விட்டுவிடவில்லை. சாதாரண எக்கர்களில் ஏழரை எக்கர்களுக்கு மேல் இருக்கக் கூடாது. ஐந்து ஸ்டாண்டார்ட் எக்கர்

அல்லது சாதாரண ஏழரை எக்கர், இதைவிட அதிகமாக ஒருவர் வைத்துக்கொள்ள முடியாது. ஆனால், தமிழகத்தில் கடந்த காலத்தில் கொண்டுவந்த சட்டத்திலேயும், இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்திலேயும், தனி நபராக இருந்தாலும், ஒரு குடும்பம் என்று கருதி 15 ஸ்டாண்டார்ட் எக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பேர் உள்ள குடும்பமாக இருந்தால் கேரளாவிலே 10 ஸ்டாண்டார்ட் எக்கர் அதாவது சாதாரண எக்கர்களில் 15 ஸ்டாண்டர்ட் எக்கர், இதற்குமேல் வைத்துக்கொள்ள முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக 5 பேர்களுக்கு மேல் உள்ள ஒரு குடும்பத்திற்கு 10 ஸ்டாண்டர்ட் எக்கர் என்றும், அதற்கு மேற்கொண்டு மிகையாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்டாண்டார்ட் எக்கர்தான் கேராளாவிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்படி 15 பேர்களுக்கு மேல் இருந்தால் அதற்கு உச்ச பட்சம் வைத்திருக்கிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும், அது சாதாரண எக்கரிலே 20 எக்கருக்கு மேல் போகக் கூடாது, ஸ்டாண்டர்ட் எக்கர் அல்ல, சாதாரண 20 எக்கருக்கு மேல் போகக் கூடாது. குடும்பம் என்று வரையறுப்பு அங்கே இருக்கிறது. நம்முடைய சட்டத்திலே, ஒரு குடும்பத்தில் ஒருவர் இருந்தாலும், தனித்தனியாக குடும்பத்தை வைத்துக் கொண்டதாகக் கருதப்படும். அங்கே கல்யாணமாகாத குழந்தைக்கு, தாத்தா, ஆண் வயிற்றுப் பேத்திக்கு குடும்பம் என்று கொடுத்தால் 20 எக்கருக்கு மேல் எந்தக் குடும்பத்திற்கும் வைத்துக்கொள்ள முடியாது என்று சொன்னால் பாகப் பிரிவினையில் அடிபட்டுவிடும். ஆகவே, நம்முடைய சட்டத்தில் இதைச் செய்ய தயார்தானா ? யார் வேண்டுமானாலும் என்ன மாற்றம் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். அவர்கள் குடும்பத்தின் அங்கத்தினராகக் கருதிக்கொண்டு, எக்காரணத்தைக் கொண்டும், 15 எக்கருக்கு மேல், இரண்டு மடங்கு, 30 ஸ்டாண்டார்ட் எக்காராவிற்கு மேல் கொண்டுவரக் கூடாது என்றெல்லாம் இருக்கிறது.

முதலமைச்சரவர்கள் கேட்டார்கள், கேரளாவிலுள்ள நிலத்தின் வருமானத்தைப்பற்றி. கேரளாவில் நிலத்தை 50 செண்ட் ஒரு ஸ்டாண்டார்ட் எக்கரா என்று வரையறை செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் 50 செண்ட் உள்ள பாக்கு விளையும் நிலத்தை ஒரு ஸ்டாண்டார்ட் எக்கர் என்று வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் விளையும் பொருள்களுக்கேற்றபடி அதன் அடிப்படையில் நிச்சயம் நிர்ணயிக்கப்படவில்லை. கேரளாவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையும் பயிர் என்ன, வருமானம் என்ன என்று கணக்கிட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையும் பயிர் வாரியாக ஸ்டாண்டார்ட் எக்கரா கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமாக, பொருத்தமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் புஞ்சை நிலம் என்ற பெயரை வைத்து, கிஸ்தி குறைவாகச் செலுத்துவதினால் இன்று அதைப் பொறுத்த வரையில், இரண்டு எக்கரா மூன்று எக்கரா சேர்ந்து ஒரு ஸ்டாண்டார்ட் எக்கராவாக வருகிறது. அப்படிச் செய்தால் அதிகப்படியான நிலம் கிடைக்க வழியிருக்கிறதா ?

ஆகவே, திரு. காசிராமன் அவர்கள் திருத்தம் கொடுத்தார்கள், காங்கிரஸ்காரர்களின் வற்புறுத்தலினாலே திருத்தம் கொடுத்ததை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். நானும் திருத்தம் கொண்டுவந்திருக்கிறேன். 15 ஸ்டாண்டார்டு எக்கார என்பது சாதாரண 20 எக்கருக்கு மேல் போகக் கூடாது என்று கொடுத்தார்கள். அனுபவத்தை வைத்துத் திருத்தம் கொடுத்தார்கள். அதைத்தான் நானும் சொல்லுகிறேன். அதைச் செய்தால் ஸ்டாண்டார்ட் எக்கராவிற்கு சாதாரண எக்கர் இவ்வளவு என்ற கணக்கு இன்றைக்கு ஏற்படும். ஸ்டாண்டார்ட் எக்கர் என்று அவர்கள் எழுத உரிமை இருக்கிறதா, இல்லையா, எழுதினாலும் ஒட்டுமொத்தமாக எக்கராவிற்குக் கொண்டுவரும்பொழுது 15 ஸ்டாண்டார்ட் எக்கரா, இரண்டு மடங்கு 30 ஸ்டாண்டார்ட்டு எக்கராவிற்கு மேல் இருக்கக் கூடாது என்ற ஷரத்தை எழுதி வைத்துவிடலாம்.



இன்றைக்கு அரசாங்கம் எந்த அடிப்படையில் இரண்டு லட்சம் எக்கரா கிடைக்கும் என்று கூறுகிறார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை அது மட்டுமல்ல......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இரண்டு லட்சம் எக்கராக்கள் எப்படிக் கிடைக்கும் என்று கேட்கிறார்கள். இன்னும் நிறைவேற்றப்பட இருக்கிற தீர்மானம் இருக்கிறது. விதி விலக்கு பற்றித் தீர்மானம் வர வேண்டியிருக்கிறது. கேரளாவைப் பற்றிக் கூறுகிறேனென்றால், **Natural love and affection** என்பதில் இங்கு நாம் நிர்ணயித்திருப்பது மகள், மகன் வழிப் பேத்தி என்று இரண்டு மாத்திரம்தான் நிர்ணயித்திருக்கிறோம். கேராளாவிலே எல்லா லவ்வும், எல்லா அஃபெக்ஷனும் என்ற அளவுக்குத்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, கேராளாவிலே இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு ஒரு காணி நிலம் கூட இதுவரையில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

**திரு. என். சங்கரய்யா :** முதலமைச்சரவர்களுக்கு மீண்டும் பதிலளிக்க விரும்புகிறேன். யார் யாருக்கு எழுதுகிறார்கள் என்பது அல்ல பிரச்னை. மகன் வழிப் பேத்தியா, மகள் வழிப் பேத்தியா என்பது அல்ல. எவ்வாறு வழங்கினாலும் ஒரு குடும்பம் என்ற அளவில் 20 எக்கர்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற திருத்தத்திலே அடிபட்டுவிடுகிறது. இங்கே 60 ஸ்டாண்டார்ட் எக்கர் வைத்துக்கொள்ளலாம். ஆகவே, சூட்சுமம் இங்கேதான் இருக்கிறது. இவர்களுக்கு வழி வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கேரளாவின் வளத்திற்கும், தமிழகத்திலுள்ள வளத்திற்கும் இருக்கின்ற வேறுபாட்டுக்காகத்தானே தவிர, வேறொன்றுமில்லை.

**திரு. என். சங்கரய்யா :** இதற்கு நாம் அவ்வாறு கூறினால், அரசாங்கம் ஒருவேளை இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததே தவறு, மசோதாவைக் கொண்டுவருவதே தவறு என்றுதான் சிந்திக்க வேண்டியிருக்கும். அதற்குக் காரணம், மசோதாவின் நோக்கத்தில் கூறுகிறோம், சென்ற காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 30 ஸ்டாண்டார்ட் எக்கர் என்று கொண்டு வந்ததில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதால், 15 ஸ்டாண்டார்ட் எக்காரவாகக் குறைக்கிறோம் என்று சொல்லுகிறோம். இன்று 60 எக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்பொழுது, பிப்ரவரி மாதம் 15-ம் தேதியிலிருந்து சட்டமாக நிறைவேறும் தேதி, நோட்டிபைஃட் தேதி வரையில் மகள் வயிற்றுப் பேரன், பேரன், பேத்தி, அத்தனைபேருககும் மற்றும் இந்துச் சட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அவர்கள் மகள்கள், பேத்திகள், எல்லோருக்கும் எழுதிக்கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு வரம்பு போட்டால்தான் பிரயோஜனப்படும். **Natural love and affection** என்றாலும், ஒட்டுமொத்தத்திலே எக்காரணத்தைக் கொண்டும், 30 ஸ்டாண்டார்ட் எக்கராக்களுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்றால் எல்லாம் அடிபட்டுவிடும்.

அறுபது ஸ்டாண்டார்ட் எக்கரா வைத்துக்கொள்ளலாம் என்றால், இவ்வாறு பங்கிட்டுக்கொள்வாரானால், கடைசியில் இன்று என்ன ஏற்படப் போகிறது ? மகளுக்கு எழுதி வைத்துக்கொள்ளுவார்கள், மகள் வயிற்றுப் பேத்திக்கு எழுதி வைத்துக்கொள்ளுவரார்கள். குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டார்டு எக்கரா என்றால் அவருக்கும் அவரது மனைவிக்கும் மட்டும்தான், குடும்பம் என்று கொடுத்துவிட்ட பிறகு, அந்த 15 ஸ்டாண்டார்ட் எக்கரா என்பது அவருக்கும் அவர் மனைவிக்கும்தான் என்று வைத்தால் அது மசோதாவையே பயனற்றதாகச் செய்துவிடும் என்று மிகப் பணிவன்புடன் கூற விரும்புகிறேன்.

மற்றப்படி, கேரள சட்டத்திலே இருக்கிறது, அதனால் தமிழகத்தில் வேண்டுமென்று கூறவில்லை. ஆனால் அப்படி ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய நிலை ஏற்படுகிற நேரத்தில், கேரளாவில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில செய்திருக்கும் காரியங்களுக்கும் நம்முடைய மசோதா கொண்டுவருவதற்

கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பார்க்கும்பொழுது, கோயில்கள், மடங்கள், ஸ்தானங்கள் போன்றவைகளுக்கு அந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டத்திலேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், கேரளாவில் விரிவான நிலச் சீர்திருத்தம் முதலாவதாக வந்தபொழுது, குத்தகை விவசாயிகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்தக் கோயிலைச் சேர்ந்திருந்தாலும், எந்தச் சர்ச்சைச் சேர்ந்திருந்தாலும் குத்தகை விவசாயியாகத்தான் கருதப்படுவார்கள், நிரந்தர உரிமை உண்டு, என்று விரிவாகக கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நிரந்தர உரிமைக்கு ஏற்பாடு செய்யவில்லை. கோயில்கள், மடங்கள், ஆகியவைகளின் நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும் குத்தகைக்காரர்கள், நிரந்தரச் சாகுபடியாளர்கள், அவர்களை வெளியேற்ற முடியாது, அவர்கள் நிலத்தை வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்க வேண்டும். இன்றைய தினம் அப்படி இல்லாத நிலைமையில் ஏற்றத் தாழ்வுகள் வருகின்றன. நிலவரி வரம்பு, தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, சவுக்குத் தோப்புகள், பாக்குத் தோப்புகள், பழத் தோட்டங்கள், மலைப் பிரதேசங்கள், போன்றவைகளுக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் குத்தகை விவசாயிகளிடமிருந்து ரிஸம்ஷன் செய்ய முடியாது. கேரளாவில் பப்ளிக் டிரஸ்டுகளுக்கு மட்டும் விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் யாதொரு டிரஸ்டுக்கும், பிரைவேட் டிரஸ்டுக்கும் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஒரு குடும்பம் என்றால் என்ன என்பதற்கு நம்முடைய சட்டத்தில் ஏற்கனவே விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அத்தியாயம் இரண்டு, **செக்ஷன் 5 இரண்டாவது உபபிரிவிலே சொல்லப்பட்**டிருக்கிறது. . . . . . . . . . . "(2) **இப்பிரிவின் காரியத்திற்காக** ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனித் தனியாக அல்லது அக் குடும்பத்தில் சிலர் அல்லது எல்லோரும் கூட்டாக வைத்துள்ள எல்லா நிலங்களும், அந்தக் குடும்பத்தார் வைத்துவருகிற நிலங்களெனக் கருதப்படும்."

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேரளாவில் விதி விலக்கு இல்லை என்று சொன்னார்கள். பிரைவேட் ஃபாரெஸ்ட்ஸ், பிளாண்டேஷன்ஸ் ஆகியவைகளுக்கு விதி விலக்கு இருப்பதாகக் கேரளாவின் சட்டத்தில் இருக்கிறது. அது உண்மையா ?

**திரு. என். சங்கரய்யா :** பிரைவேட் ஃபாரெஸ்ட், பிளாண்டேஷன்களுக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரைவேட் ஃபாரெஸ்ட் அரசாங்கத்தினால் வாங்கப்பட்டு அதற்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிளாண்டேஷனுக்கு விதி விலக்குக் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. இப்பொழுதே இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் பிளாண்டேஷன் மட்டும் இல்லை, மலைப் பிரதேசம், ஹில் ஏரியாஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், ஏற்காடு சப் டாலுக், ஜவ்வாது மலை, கொல்லிமலை, திண்டுக்கல்லில் அந்தோணியார் மலை, வட ஆர்க்காடு ஜில்லாவில் பல கிராமங்கள் இப்படி ஹில் ஏரியாஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஹில் ஏரியாஸ் என்று பார்த்தால் ஒரு மாவட்டம் பூராவும் விதி விலக்குக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் முதலிலேயே சொன்னேன். விதி விலக்கு எதற்கும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் பேரணி நடந்தபோது, கோஷங்கள் எழுப்பப்பட்ட நேரத்தில் "விதி விலக்கை ரத்து செய்" என்ற கோஷத்தையும் எழுப்பினார்கள். பிரைவேட் ஃபாரெஸ்ட்ஸ், பிளாண்டேஷன் இரண்டிற்கும் கேரளாவில் விதி விலக்கு இருப்பதாக ஒத்துக்கொண்டார்கள்.

அது மாத்திரமல்ல, ரிலிஜியஸ், சாரிடபிள் அண்டு எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன் ஆப் பப்ளிக் நேச்சர், அதற்கும் விதி விலக்குத் தரப்பட்டிருக்கிறது. பப்ளிக் டிரஸ்டு அதற்கும் விதி விலக்கு தரப்பட்டிருக்கிறது.



**திரு என். சங்கரய்யா :** நான் மறுக்கவில்லை. நான் குறித்து வைத்திருக்கிறேன்.

Private forests, plantations, industrial or commercial undertakings.

அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த நிலத்தைப் பயன்படுத்த வேண்டும்.

House-sites, sites of temples, etc., sites of buildings, commercial sites, lands occupied by educational institutions, Bhoodan Yagna lands, lands owned or held by University, a religious charitable or educational institution of a public nature, a public trust including a Wakf.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், சவுக்குத் தோப்பு, பாக்குத் தோட்டம், பழத் தோட்டம், மலைப் பிரதேசம், பால் பண்ணை பிரைவேட் டிரஸ்டு முதலியவைகளுக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு இல்லாததை நான் எடுத்துக்கொண்டேன். தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உயர்ந்துகொண்டே போகிறது....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் விதி விலக்குத் தரப்பட்டதற்குக் காரணம் கேட்கவில்லை. கேரளாவில் விதி விலக்கு இருக்கிறதா? இல்லையா ?

**திரு. என். சங்கரய்யா :** விதி விலக்கு இருக்கிறது. எதற்கு அங்கே விதி விலக்கு இருக்கிறது என்பதற்கு ஒரு பட்டியலையே படித்தேன். தமிழ் நாட்டில் நாம் கொடுத்திருக்கக்கூடிய பெரும்பான்மையான விதி விலக்குகள் அங்கே இல்லை என்று குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தத் திருத்த மசோதா கொண்டுவரும்பொழுது இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக ஒரு தீர்மானம் வருகிறது. இந்த மாமன்றத்தில் நடக்கும் விவாதத்திலே உதவி புரிய வேண்டும். அதனால்தான் நான் குறுக்கிடுகிறேன். விதி விலக்கைப் பொறுத்த வரையில், ஒரு மாநிலத்திற்கு மாநிலம் பல நிலைமைகள் இருக்கின்றன. பல வித்தியாசங்கள் இருக்கின்றன. ஏற்கனவே பல விதி விலக்குகள் இருக்கின்றன. எந்த விதி விலக்குக் கொடுக்கத் தேவையில்லை, எந்த விதி விலக்கு இருந்து தீர வேண்டும் என்பதற்காக இந்த மாமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், மேலவையைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அரசாங்கத்திற்கு அந்தக் குழு விதி விலக்குகள் பற்றி யோசனை சொல்லலாம் என்ற முறையில் ஒரு தீர்மானம் வர இருக்கிறது.

இங்கே உறுப்பினர் அவர்கள் விமர்சனம் செய்தபோது, ஏதோ வடபாதி மங்கலத்திற்கு, பழையகோட்டை பட்டகாரருக்கு இந்த அரசு நன்மை செய்வது போல் சொன்னார்கள். இந்த அரசு அப்படிச் செய்ததாக ஆகாது. இந்த அரசு அதைப் பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. முடிவு எடுத்ததற்கு பிறகு அதைப் பற்றிச் சொல்லுவதற்கு இடம் இருக்கிறதே தவிர, இப்பொழுது இல்லை. இப்பொழுது நீங்கள் தாராளமாகச் சொல்லுங்கள். இதற்கு விதி விலக்குக் கொடுக்க வேண்டும், இதற்கு விதி விலக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுங்கள். ஏதோ இந்த அரசு வடபாதிமங்கலத்திற்கும், பழையகோட்டை பட்டகாரருக்கும் நன்மை செய்துவிட்ட மாதிரி பேசிக்கொண்டு போவதை நிறுத்த வேண்டும். ஏதோ நடந்துவிட்ட காரியமாகச் சொல்லிக்கொண்டு போவது அவ்வளவு சரியானது அல்ல.

இந்த மன்றத்தில் ஒரு கட்டமாக இந்த உச்ச வரம்பு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்த விதி விலக்குகள் பற்றித் தனியாக எல்லோரையும் கலந்துகொள்ளும் வகையில், அந்த அளவிலே இதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் வர இருக்கிறது. இந்த விவாதத்தில் விதி விலக்கைப் பற்றிச் சொல்ல வேண்டாம்

என்று சொல்லவில்லை. எதற்கு விதி விலக்கு, எதற்கு விதி விலக்கு கூடாது என்பது பற்றிப் பேசலாம். ஏதோ இந்த விதி விலக்குகளுக்கெல்லாம் இந்த அரசாங்கம் உடன்பாடு கொண்டிருக்கிறது, அந்த விதி விலக்குகளைப் பற்றி ஒன்றுமே கவனிக்கவில்லை, மற்ற இடங்களில் எடுத்துக்காட்டாக இருக்கின்றன என்ற வகையில் பேசத் தேவையில்லை. நன்ருகச் சொல்லட்டும், எதற்கு விதி விலக்குத் தேவையில்லை என்பதைப் பற்றி இங்கே விவாதிக்கலாம், எதற்கு விதி விலக்கு இருக்கட்டும் என்பதைப் பற்றிக் கூறலாம்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நோக்கம் எல்லாம் கேரளாவில் இருப்பதைப் பற்றி நாளுகக் குறிப்பிடவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் உரையிலே அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பிறகு முதல் அமைச்சர் அவர்களும் அதைப் பற்றிச் சொன்ஞர்கள். அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்றுதான் நான் சொன்னேன்.

என்னுடைய நோக்கம் என்னவென்ருல், தமிழ் நாட்டில் இருக்கிற நிலைமைகளை வைத்துக்கொண்டு பார்த்தால், இந்த மசோதாவை இப்பொழுது கொண்டுவந்திருக்கிறபடி நிறைவேற்றிஞல், உபரி நிலம் அதிகமாகக் கிடைக்காது. இப்பொழுது உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு எக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு . யாதொரு காரணத்தைக் கொண்டும், 60 எக்கருக்கு மேல் போகக்கூடாது என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, அதற்கு, செக்ஷன் 5, உபபிரிவு (5)-க்கு கான்ஸிகுவென்ஷியல் அமென்மெண்டு கொண்டுவர வேண்டும். அதை 30 ஸ்டாண்டர்டு எக்கராகக் குறைக்க வேண்டும். ஐந்து பேர்களுக்கு மேல் ஒரு குடும்பத்தில் இருந்தால், அதற்கு மேல் இருப்பவர் ஒவ்வொருவருக்கும் ஐந்து எக்கர் என்று இருப்பதை $2\frac{1}{2}$ எக்கர் என்று குறைக்க வேண்டும். மேலும் 10 ஸ்டாண்டர்டு எக்கராவுக்கு மேற்படாத ஸ்ரீதன நிலத்தை ஒரு பெண் தன் உடைமையாக வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அதை 5 ஸ்டாண்டர்டு எக்கராகக் குறைக்க வேண்டும். இப்படியெல்லாம் எல்லாத் துறைகளிலும் கான்ஸிகுவென்ஷியலாக உச்சவரம்பு அளவைக் குறைக்க வேண்டும். அப்பொழுதுதான் ஓரளவுக்கு விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கு நிலம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படியில்லாமல், ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்களும் பாகப்பிரிவினை என்ற பெயரால் 15 ஸ்டாண்டர்டு எக்கர் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்ருல், இப்படி அவர்கள் தங்களுடைய நில உடைமைக் குவியலைக் குவித்து வைத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலைதான் ஏற்படும். இப்படிப்பட்ட ஒரு நோடிபைட் பேட் இருக்க வேண்டும். அப்படி ஒரு வசதி வேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது என்ருல், அது எதை எடுத்துக் காட்டுகிறது ? இதற்கு முன்ஞல் செய்யவில்லை, இப்பொழுது செய்ய முன்வந்திருக்கிருர்கள் என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது. என்னுடைய கட்சியின் சார்பாக நான் சொல்லக்கூடிய நேரத்தில் நான் சொன்ன கருத்துக்களை ஒட்டி, 21-ஏ பிரிவுக்கு அரசாங்கம் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களை வாபஸ் வாங்கிக்கொண்டு, நான் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களை ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டத்தைப் பாஸ் செய்தால்தான், இந்தச் சட்டத்திஞல் விரும்பக்கூடிய பலனை நாம் அடைய முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** கழக அரசின் நோக்கம், ஒருவர் கழுத்தில் இரண்டு சங்கிலி போட்டுக்கொண்டிருந்தால், ஒன்றைக் . கழற்றி இன்னெருவருக்குப் போடுங்கள் என்பதுதான். ஆஞல், சங்கரய்யா அவர்கள், " சங்கிலியையும் கழற்றி விடுங்கள், கழுத்தையும் முறித்துவிடுங்கள் " என்று சொல்கிருர்கள். அது கழக அரசாங்கத்தின் நோக்கம் அல்ல.

**திரு. என். சங்கரய்யா :** நான் அப்படிச் சொல்லவில்லை. 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று இருப்பதை 15 எக்கராகக் குறைக்கும்பொழுது, குடும்பத்திற்கு நியாயமான அடிப்படையில் எல்லாவற்றையும் சேர்த்து இரட்டிப்பு



மடங்குக்கு மேல் இருக்கக்கூடாது என்றுதான் சொன்னேன். 60 எக்கர் என்று இருப்பதை 30 எக்கர் என்று குறைக்க வேண்டுமென்றுதான் சொன்னேன். இதிலே கழுத்தை முறிப்பது ஒன்றுமில்லை.

**திரு. அ. சேஞபதி:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று அரசு கொண்டு வந்திருக்கும் உச்ச வரம்பு குறைப்பு மசோதாவைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற காங்கிரஸ் ஆட்சியில் 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று வரையறுத்து சட்டம் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இருந்த நிலை நிலங்களெல்லாம் ஆயிரக்கணக்கான எக்கர்கள் என்ற நிலையில் வைத்திருந்தார்கள் ; 2,000, 3,000 எக்கர்கள் என்று வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நிலையில் சட்டத்தைக் கொண்டு வந்து நிலப்பிரபுத்துவம் வளர்த்து ஆதிக்கம் செலுத்தி வந்தார்களே அதையெல்லாம் ஒழித்து நாம் மகாராஜாக்கள், ஜமீன்தார்கள் இவர்களை ஒழித்தது போல், 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று கொண்டு வந்தார்கள். இப்பொழுது நமது அரசு 15 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள்.

இதைப் பார்க்கும்போது, அரசியலுக்காகவா அல்லது . விவசாய அபிவிருத்திக்காகவா இந்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பார்க்க வேண்டும். விவசாயத்தில் அரசியலைப் புகுத்திஞல், நாட்டில் உள்ள நிலை மிக மோசமாகப் போய்விடும். இது உற்பத்தியைப் பாதிக்கும் அளவுக்கு வரும். ஆகவே தான், 15 ஸ்டாண்டர்ட் எக்கர் என்கிற புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் நேரத்தில், விவசாயிகளுடைய முறையீட்டின் பேரிலும் மற்றக் காரணங்களாலும் சில சலுகைகளைக் கொடுக்கிருர்கள். உண்மையாகவே, 30 ஸ்டாண்டர்ட் எக்கர் வைத்திருக்கிரும் விவசாயி சுகபோகங்களை அனுபவிக்கும் மனிதன் அல்ல. எந்த உழவருக்கும் இந்த 15 எக்கர் என்பது என்ன ஒரு சொத்தா ? சாதாரண விஷயம் தானே, இந்த மாதிரி ஒரு சட்டம் கொண்டு வருவதைவிட, விவசாயிகளை முன்னேற்றும் வகையில் நல்ல யோசனைகளைச் செய்து காரியங்களைச் செய்யலாம். ஏதோ பலர் கேட்டுக்கொண்டதன் பேரில், சிற்சில விதிவிலக்குக் கொடுத்திருக்கிருர்கள்.

நாலு பிள்ளை பெத்தவளுக்கு மலடி மருத்துவம் செய்தாள் என்பது போல, கம்யூனிஸ்ட் நண்பர் சொல்வது இருக்கிறது. தொழில் துறையில் புகுந்து தொழில்களைக் கெடுத்தாகிவிட்டது ; விவசாயிகள் நிலையையும் அப்படிச்செய்யச் சொன்ஞல் என்ன அர்த்தம் என்று புரியவில்லை. விவசாயம், ஜனங்களின் ஜீவாதாரமானது. நாட்டின் அடிப்படை, பொருளாதாரம். எத்தனை எக்கர் நிலம் வைத்து விவசாயம் செய்திருக்கிருர்கள். எத்தனை குடும்பங்கள் பிழைக்கலாம், காலட்சேபம் செய்யலாம் எத்தனை எக்கரில் என்று தெரியுமா ? கிளர்ச்சிக்காகவும், குழப்பத்தை உண்டு பண்ணவும், அரசியலுக்காகக் கம்யூனிஸ்டு நண்பர்கள், 5 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று செய்கிரும், எனக்கு ஓட்டுப் போடுங்கள் என்பார்கள். அரசு இந்த சட்டத்திலேயே 10 ஸ்டாண்டர்ட் எக்கருக்கு மேல் யாரும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று செய்து விடுவது கூட நலமாக இருக்கும். அதைவிட்டு, நிரந்தரம் அற்று, திருப்பித் திருப்பி இப்படிக் குறைத்துக் கொண்டேபோஞல், விவசாயம் அழியும். படி அரிசி போடுகிரும் என்று திட்டம் நடத்துகிரும் ; அதெல்லாம் வீணகப் போய்விடும். இதையெல்லாம் மனதில் கொண்டு விவசாயம் எந்த அளவுக்கு எந்தப் பகுதியில் எப்படி இருக்கிறது என்று பார்த்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை ஜில்லாவில் நிலம் இஞமாகவா கிடைத்தது ? அவன் அவன் கஷ்டப்பட்டு, பணத்தைச் செலவழித்து, காட்டைப் பண்படுத்தி, செய்நேற்றி செய்து, பல லட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, உடைமையுண்டாக்கிக் கொண்டிருக்கிருன். நாலு ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைத்தது தவறு என்று கம்யூனிஸ்ட் நண்பர் சொன்ஞர்கள். கேரளாவில்

முதல் அமைச்சர் சொன்னதுபோல், 50 சென்டில் வரும் வரும்படி, 10 எக்கரில் கோவை ஜில்லாவில் வராது. இங்கே 10 எக்கரில் வரும் வரும் படியை 50 சென்டில் மலேயாளத்தில் எடுக்கலாம். அதெல்லாம் எங் களுக்கு நன்ருகத் தெரியும். கேரளாவின் பக்கத்தில் தான் நாங்களும் இருக்கிறேம்.

ஸ்டாண்டர்ட் விஷயத்தில் நான் நினைக்கிறேன், கோவை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் 10 எக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைக்கலாம். எக்கர் கணக்கில் வைப்பது கூடச் சரியில்லே. விவசாயத்திலிருந்து வரும் வரும்படியைக் கணக்கு வைத்துச் செய்யலாம். என் 200 எக்கராவைத் தந்துவிடுகிறேன். 10 எக்கர் காளிங்கராயன் பாசனத்திலோ அல்லது தஞ்சாவூரிலோ கொடுத்தால் விட்டு விடத் தயாராக இருக்கிறேன். கோவை ஜில்லாவில் 200 எக்கர் மற்ற இடத்தில் 10 எக்கருக்குச் சமம். நிச்சயமாக நீர்ப்பாசனம் இருப்பது சிறந்தது. நிலவளம் இல்லாவிட்டால் விவசாயம் கிடையாது. மழையைப் பார்த்து இருக்கும் இடத்தில், எக்க ரைப் பற்றி பேசுவது சரியாக இருக்காது. வருமானத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஸ்டாண்டர்ட் எக்கர் நிர்ணயிக்க வேண்டும்.

இப்பொழுது இருக்கக் கூடிய 4 எக்கர்கூட எங்கள் வட்டாரத்தில், தாராபுரம் பகுதியில் சரியாக இல்லே. அங்கே உள்ள 5½ லட்சம் எக்கர் நிலத்தில், 75,000 எக்கர் நிலந்தான் நீர்ப்பாசன வசதி உள்ளது. அதுவும் மூன்று வருஷத்திற்கு ஒரு தண்ணீர், அமராவதி, லோயர் பவானித் திட்டத்தில், ஒரு போகம், மீதி 4½ லட்சம் எக்கர். அங்கே 15 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று சொன்னுல், 60 எக்கர் ஆகும். ஒரு எக்கரில் 10 ரூபாய் வரும். ஆக 600 ரூபாய் கிடைக்கும். இதை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் நடத்த வேண்டும். காங்கயம் பகுதியில் 600 ரூபாயை வைத்துக் கொண்டு குடித்தனம் செய்ய வேண்டும் என்கிற நிலே.

சிவஞான கிராமணியார் சொன்னுர்கள், ஊட்டியில் பங்களா, கொடைக் கானலில் பங்களா வாங்கியிருக்கிறுர்கள் என்று. வாடகைக்குக் கூட நான் வீடு அங்கெல்லாம் வாங்கவில்லே. அந்த அளவுக்கு இருக்கிறேம். அந்த நிலேயில், சென்னேப் பட்டணத்தில் இருக்கிற பெரியவர்கள், 60,000 ரூபாய் காரில் போகிறுர்கள், ஆறு அடுக்கு மாடியில் இருக் கிறுர்கள் என்பதை வைத்துக் கொண்டு சிவஞான கிராமணியார்.......

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** ம.பொ.சி. அப்படிச் சொல்ல வில்லே. ராஜாஜி தஞ்சாவூரில் பேசியதைச் சுட்டிக் காட்டினுர்.

**திரு. அ. சேனுபதி :** உச்ச வரம்பில் செய்கிற காரியம் விவசாயத்தைப் பாதிக்கக் கூடாது. அதை ஒட்டித்தான் மதிப்பிற்குரிய அமைச்சரவை கொஞ்ச நாளுக்குத் தொடர்ந்து இருக்கட்டும். இல்லாவிட்டால், "ஹார்ட் அட்டாக்" வந்துவிடும் என்று கொஞ்சம் நாளேக்குச் சில சலுகைகளேக் கொடுத்திருக்கிறுர்கள். அதை வரவேற்கிறேம். வரவேற்க வேண்டும். உச்ச வரம்பில் மிச்ச பூமியை, இரண்டு லட்சம் எக்கர் என்று சொல்கிறுர் கள். எங்கே பார்க்கிறுர்கள்? 10 இடத்தில் கிடைக்குமா? 2 லட்சம் இடத்தில் 2 லட்சம் எக்கர் கிடைக்கப்போகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** மத்திய சர்க்கார் திட்டக் குழு நிலச் சீர்திருத்தம் (லாண்ட் ஸீலிங்) கொண்டு வரவேண்டும் என்று தாக்கீது அனுப்பியிருக்கிறுர்கள். மத்திய சர்க்காரின் கட்சியைச் சேர்ந் தவர் முரண்பாடாகப் பேசுகிறுர்களே, இதில் எதை எடுத்துக் கொள்வது?

**திரு. அ. சேனுபதி :** மத்திய சர்க்காருடைய கொள்கை பற்றிச் சொல் கிறுர்கள் முதல்அமைச்சர். மத்திய சர்க்கார் உங்கள் பிரதேசத்தில் இருக்கும் நிலேயைப் பார்த்து ஸ்டாண்டர்ட் எக்கர் வைக்கவேண்டும் என்று சொல்லு கிறுர்கள்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** எந்த வழியாக வந்தது அந்தத் தகவல் என்று தெரியலாமா?



**திரு. அ. சேனுபதி :** பஞ்சாப் மாநிலத்தில் 30, 40 எக்கர் வைத்திருப் வர்களே லட்சாதிபதி என்று சொல்லப்படுகிறது. அதைப் பார்த்து ளானிங் கமிஷன் சொல்லியிருக்கலாம். காங்கய நாட்டுக்கு வந்து பார்த்து விட்டுப் ப்ளானிங் கமிஷன் சொன்னுல் எற்றுக் கொள்ளத் தயார். மத்திய சர்க்கார் கொள்கை எப்படியிருந்தாலும், தமிழ்நாட்டில் விவசாயிகள் சுபிட்சமாக வாழ வேண்டும், அவர்கள் உழைத்து எராளமான விவசாயப் பொருள்களே உண்டாக்க வேண்டும், விவசாயத்தில் அரசியலேப் புகுத்தக் கூடாது. இன்று நாங்கள் அரசுக்கு வந்தால் 5 எக்கர் கொடுக் கிறேம் என்று வருவார்கள். பாமர மகன் ஓட்டு அளிப்பான். அதனுல் ஒருத்தருக்கும் ஒன்றும் கிடைக்காது.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** மத்திய சர்க்கார் சொல்வது வேறு. மன்னுர்குடி மாநாட்டில் உச்ச வரம்புத் தீர்மானம் போடப்படுமா?

**திரு. அ. சேனுபதி :** நான் ஆதரித்துத்தான் பேசிக் கொண்டிருக் கிறேன்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** மன்னுர்குடி மாநாட்டில் 10 எக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் எக்கர் என்று போடுவார்களா?

**திரு. அ. சேனுபதி :** இப்பொழுது கொள்கையளவில் இதை நான் எதிர்த்துப் பேசவில்லே. ஆனுல், சில அங்கத்தினர்கள் விவசாயத்தை உடமையாகக் கொண்டவர்களேத் தவருகப் புரிந்து கொண்டிருக்கிறுர்கள். அதற்கு விளக்கம் தந்தேன். உச்ச வரம்பைப் பாராட்டுகிறேன். ஆனுலும் சாதாரண விவசாயிகளும் பாதிக்கப்படுகிறுர்கள். பேரன் பேத்திக்குக் கொஞ்சம் இருக்கட்டும் என்று செய்திருக்கிறுர்கள். கம்யூனிஸ்ட் நண்பர் புருஷன் பெண்டாட்டிக்கு 15 எக்கர் என்கிறுர்கள். புருஷன் பெண்டாட்டி போய்விட்டால், அப்புறம் அரசுக்குத்தானே சேரும்? உச்ச வரம்பில் பேரன், பேத்திக்கு அரசு மானியம் அளித்திருக்கிறது.

காம்பென்ஸேஷன்பற்றி வரும்போது, நஷ்ட ஈடு கொடுப்பது கூடுமான வரையில் நல்ல முறையில் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும். பண மாகக் கொடுக்கப்பட வேண்டும். நிலத்தை விட்டுவிட்டு வேறு தொழிலுக் குப் போகவாவது வாய்ப்பாக இருக்கும். உச்ச வரம்புக்கு உட்பட்டது போக பாக்கி நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** தேசியமயம் ஆக்கப்பட்ட பாங்கு களுக்கு அதுபோல நஷ்ட ஈடு தரப்பட்டிருக்கிறதா? இரவு 7-00

**திரு. அ. சேனுபதி :** அதற்கு டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். எனக்குத் தெரியாது. இந்த இடத்தில் நான் வேண்டிக் கொள்ளுவது என்னவென்ருல், இன்னும் எதாவது விதிவிலக்குக் கொடுத்து நஷ்ட ஈடு கொடுக்கின்ற பிரச்சினே வராமல் இருந்தால் சந்தோஷம். நஷ்ட ஈடு என்பது பொதுமக்களுடைய பணத்தை எடுத்துக் கொடுக்கப் போகிறேம். பக்கத்தில் இருப்பவன், விவசாயிக்கு அடுத்த பண்ணேயில் இருப்பவன் இரண்டு எக்கரா எனக்குச் சேர்ந்திருந் தால் தேவலே என்று நினைப்பான். அவன் எதோ தொகையைக் கொடுத்து, கடன் எழுதிக் கொடுத்து வாங்கிக் கொள்ளுவான். அவனுக்கு இல்லாமல் செய்ய, யாருக்கோ இரண்டு பேருக்குக் கொடுத்தால், இந்த இரண்டு பேரும் பணம் கட்டமாட்டான். அரசாங்கம்தான் கட்ட வேண்டி வரும். ஆகவே அதை என்னுடைய பகுதியில் கமிட்டி வரும்போது நன்ருக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விதிவிலக்கில் கால்நடைகளுக்கு என்று இருக்கிறது. கால்நடைகளே வைத்திருப்பவனுக்கு, கால்நடைகளேத் தவிர வேறு வருவாய் இல்லே என்ற நிலே இருக்கின்ற காரணத்தால் தான், கால்நடைகளுக்கு விதி விலக்குக் கொடுத்தார்கள். அவனுக்கு ஆயிரக்கணக்கான எக்கர் நிலம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளவில்லே. ஒரு விவ சாயிக்கு இரண்டு ஏர் கட்டவேண்டும். அதை வளர்க்க, 25, 30 எக்கர்

மேய்ச்சல் தரிசு இல்லையென்றால் விவசாயம் இல்லை. இந்த நிலையில் நீங்கள் அவசியம் அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நமது ஔவைப் பிராட்டிகூட சொல்லியிருக்கிறார். ஔவைப் பிராட்டிக்குத் தெரிந்த விவசாயம் நாம் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோம்.

"ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய், நீர் அருகே உள்ள நிலமுமாய் சென்றுவர எளிதாய் உழுவோரும் சொற்கேட்டால் என்றும் உளதே இனிது."

என்று ஔவைப் பிராட்டி சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு ஏர் மாடு என்றால் எவ்வளவு என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. சேனாபதி :** இரண்டு ஏர் என்றால் 4 மாடு.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 4 மாடுகளுக்கு 25 ஏக்கர் என்றால் ஒரு வேளை அந்த மாடுகளே பயிர்செய்து சாப்பிடுமா ?

**திரு. அ. சேனாபதி :** மாடு உற்பத்தி பண்ண 4 பெட்டை மாடு வேண்டும். 4 பெட்டை மாடு இருந்தால் தான் 4 உழவு மாடு வைத்திருக்க முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான்கு ஆண்மாடுகளும் 4 பெட்டை மாடுகளும் இருந்தால் இடையில் தூது போக வேறு 4 மாடுகள் வேண்டியிருக்கும். ஆக 12 மாடுகள் வைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. அ சேனாபதி :** ஔவைக்குத் தெரிந்த விவசாயம் நமக்குத் தெரியவில்லை.

"ஏரும் இரண்டு உளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீர் அருகேஉள்ள நிலமுமாய், சென்றுவர எளிதாய், உழுவோரும்
சொற்கேட்டால் என்றும் உளதே இனிது."

என்று .சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு கம்யூனிஸ்டுகள் இருந்திருப்பார்களோ என்னவோ. இரண்டு ஏர் என்றால், நான்கு மாடுகள், 4 பெட்டை மாடுகள், கன்றுக்குட்டி 4, பெரிய கன்றுக்குட்டி 4, இப்படி 12 உருப்படிகள் இருக்கும். ஆக ஒரு விவசாயிடத்தில் போனால் 20 மாட்டுக்குக் கம்மியாக வைத்திருக்கமாட்டான். இந்த 20 மாட்டுக்கு நீங்கள் கொடுப்பது ஒன்றுமில்லை. அவன் சொத்தில் 25 ஏக்கராவில் மாடு மேய்த்துக் கொண்டு போங்கள் என்று சொல்லப்போகிறீர்கள்.

**THIRU K. VINAYAKAM :** On a point of information, Sir. There are the Board's Standing Orders. It is very clear from them that every head of cattle should have at least one acre of pasture land. That is the order. The Government have not cancelled or abrogated that rule. My friend is not far wrong. He is very near that.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதெல்லாம் அந்தக் காலத்திலேயே போய்விட்டது. இந்த மாதிரி ஓர் ஊரில் 30 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால், அவர் சொல்லுகிற மாதிரி இரண்டு எருதுகள், 4 எருதுகள் இருந்தால் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், Grazing Ground என்று எழுதி விடுவார். அது பைத்தியக்காரத்தனமான காலம் என்று கான்சல் (cancel) செய்யப்பட்டிருக்கிறது. நான் சொல்லுகிறேன், அரசாங்க சார்பில் மந்திரி சொல்லுகிறார் என்றால் அந்த வார்த்தைக்கு அவர் பொறுப்பாகும். ஒரு காலத்தில் இருந்தது. இப்போதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 25 ஏக்கர் வேண்டும் மாடுகளுக்காக என்று சொன்னார்கள். ஒரு வேளை அவர் பகுதியில் எல்லாம் மழை பெய்யாத காரணத்தால் புல் முளைப்பதில்லை என்பதால் சொல்லியிருக்கிறாரோ என்னவோ.



**திரு. அ. சேனாபதி :** நான் இதை விசேஷமாகச் சொல்ல வேண்டிய அவசியம் எல்லாம் தாராபுரம் தாலுக்காவைப் பொறுத்தவரையில் காளக்காடு கண்மாய் ஏரியாவில் 12 அங்குலம் மழைகூட இல்லை. பருவத்தில் மழைபெய்து வேளாண்மை செய்து கண்டதில்லை. மழை பெய்தால் முளைக்கின்ற புல்லைத்தவிர வேறு அங்கு கண்டதில்லை. அதைத் தெரிந்து தான் அந்தக் காலத்தில் மாடு வளர்க்கின்ற தொழில் என்று ஏற்பட்டு, மாடுகளை வளர்த்து அங்கே இருப்பவர்கள் வைத்துக்கொள்ளாமல், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களுக்கு எல்லாம் காங்கேயத்தில் வளர்க்கப்படுகின்ற மாடுகளை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்காக இதைச் சொல்லுகிறேனே தவிர, வேறு எந்த உள்நோக்கத்தோடும் சொல்லவில்லை என்று தெரிவித்துக்கொண்டு இந்த விஷயங்களை தீர்க்கமாக ஆராய்ந்து காரியத்தை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டு உரையை முடிக்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் நிலச் சொத்தில் நிறைய ஏற்றத் தாழ்வு இருக்கிறது; அந்த ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க இந்த மசோதா கொண்டுவருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அது தவறு என்பது என்னுடைய கருத்து. ஏற்றத் தாழ்வுகள் என்பது நிலத்தில் மட்டுமல்ல, எல்லா வகையிலேயும் இருக்கின்றன நமது நாட்டிலே. ஆனால் மற்ற ஏற்றத் தாழ்வுகளை விட்டுவிட்டு இந்த ஏற்றத் தாழ்வைமட்டும் குறைக்க என் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கேள்வி எழும். என்னைப் பொறுத்தவரையில் நிலச் சீர்த்திருத்தம் என்பது ஏற்றத் தாழ்வைக் குறைக்க மட்டுமல்ல, அது செகண்டரி நோக்கம், பிரைமரி நோக்கம் என்ன என்று பார்க்கின்ற போது, நாட்டில் இருக்கின்ற பெரும்பகுதி மக்கள், 70 சதவிகித மக்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கவில்லை என்றால், தொழில்துறை வளர முடியாது. ஆகவே நாட்டில் தொழிற்துறையை வளர்க்க, தொழில் வளத்தைக் கூட்ட, விவசாயிகளுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்ற கருத்தில்தான் இந்த நிலச்சீர்த்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

நம் நாட்டில் எப்படிப் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்கின்றபோது, தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டிருப்பது தெரிகிறது. குறிப்பாகப் பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால் இந்த நாட்டில் துணி உற்பத்தி தேங்கிப் போயிருக்கிறது. கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. மில்களில் நூல் தேங்கியிருக்கிறது. மில்கள் மூடப்பட்டு வருகின்றன. என்ன காரணம் ? தேவையான அளவுக்குத் துணி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதா என்றால், வெளிநாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது நம் நாட்டில் துணி மிகக் குறைவாக உபயோகப்படுத்தப்படுகிறது. இருந்தாலும் துணி தேங்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், 70 சதவிகித மக்களுடைய பொருளாதார நிலை உயரவில்லை. ஆகவே, தொழில்துறை வளர்ச்சி பெறவேண்டுமானால், விவசாயத்தை நம்பி இருக்கின்ற மக்களைத் தொழில் துறைக்குத் திருப்ப வேண்டுமென்றால், அவர்களின் வாங்கும் சக்தியை அதிகரித்தாக வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு இந்த நிலச் சீர்த்திருத்த மசோதாவை நான் பார்க்கின்றேன்.

அப்படிப் பார்க்கின்றபோது எந்த அளவுக்கு இந்த லட்சியத்தை இந்த மசோதாவினால் எட்டிப்பிடிக்க முடியும் என்று பார்க்கின்றபோது, அந்த லட்சியத்தை நாம் அடையவே முடியாத நிலையை ஏமாற்றமான நிலையைத் தான் இந்த மசோதாவிலிருந்து காண்கிறோம். ஒருவர் 15 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்று உற்சாகத்தோடு இந்த மசோதாவை அரசாங்கம் கொண்டுவந்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் இதன் விளைவைப் பார்த்தால் அரைக் கிணறு தாண்டிய விளைவுதான் ஏற்பட்டிருக்கிறது. முழுவதுமாகத் தாண்டவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த மசோதா சாதாரண மக்களின் நிலையை உயர்த்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது விதிவிலக்குகளை எல்லாம் ரத்துசெய்து கொண்டுவந்திருந்தால், நிலம் இல்லாத பகுதியினருக்கு நாம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற காரியத்தைச் செய்திருக்க முடியும். விதிவிலக்குகள் சம்பந்தமாகப் பின்னால் கவனிக்கப்படும் என்று அரசாங்கத்தில் கூறுகிறார்கள். அதற்காகத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம். எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டுவந்திருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

ஆகவே இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்னால் நிலங்களை எல்லாம் ரீகிளாசிபை (Reclassify) ரீசெட்டில்மெண்ட் (Re-settlement) பண்ணியிருக்கவேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை. வெகுகாலத்திற்கு முன்னால் தரிசாக இருந்த நிலங்கள் பண்படுத்தப்பட்டு விளைச்சல் தரும் நிலங்களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், எந்தோ ஒரு காலத்தில் செய்த செட்டில்மெண்டை வைத்துக்கொண்டு செய்திருக்கக் கூடாது. புஞ்சைக்கு சுமூகமாக ரூபாய் தீர்வை என்றும், இன்றைக்கும் அதே அளவுக்குத் தரிசாக இருக்கிறது என்றும் கொள்ளக் கூடாது. ஆகவே, அந்த நிலங்களையெல்லாம் ரீ கிளாசிபை பண்ணி சட்டத்தைக் கொண்டுவந்தால் இன்னும் அதிகப்படியான நிலங்கள் நமக்குக் கிடைக்க ஏதுவாக இருக்கும். அதைச் செய்ய அரசாங்கம் தவறிவிட்டது.

கோவில், அற நிலையங்களின் சொத்துக்களை எடுத்து வீணாக்கிவிடுவார்கள் என்று வெளியிலே பேசப்படலாம். ஆனால், கோயில்கள், தரும ஸ்தாபனங்கள் வைத்து நடத்தும் காரியங்களைத் தடை செய்ய வேண்டும் என்று நாங்கள் கருதவில்லை. மதிப்பிற்குரிய ஸர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் திருவாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தின் திவானாக இருந்த போது, அங்கு கோவில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை அரசாங்கம் தேவஸ்வம் போர்டு ஒன்றை அமைத்து அதனிடம் ஒப்படைத்து, கோவில் நிர்வாகத்திற்குத் தேவையான பணத்தைக் கொடுத்து, நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது நாற்பதாண்டுகளுக்கு முன்னால் அங்கே நடந்திருக்கிறது. ஆனால், நாற்பதாண்டுக் கழித்துக்கூட நாம் அவ்வாறு செய்யத் தயாராக இல்லையென்றால் எப்படி விவசாயிகளினுடைய நிலை உயர முடியும் என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும். கோயில் பூசை தாராளமாக நடக்கட்டும். ஆனால், நிலத்தை வைத்துக்கொண்டுதான் கோயில் பூசை நடக்க வேண்டும் என்ற கருத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகவே, அதற்குச் சரியான வழிவகை செய்யவேண்டும்.

இந்த மசோதாவில் விலக்குகளுக்கெல்லாம் இடம் அளித்த பிறகு, இது "அனௌன்ஸ்" பண்ணப்பட்ட தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்று முதலில் சொல்லி, அதாவது பிப்ரவரி 26-ந் தேதி அமலுக்கு வரும் என்று சொல்லிவிட்டு, இப்பொழுது பிப்ரவரி 15-ந் தேதி அமலுக்கு வரும் என்று அரசாங்கத்திலிருந்து திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அது போதாது. ஏனென்றால், சட்டம் வரும் என்று தெரிந்து—எப்படித் தெரிந்தது என்பது எனக்குத் தெரியாது—பலர் மாற்றங்கள் செய்துகொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த நிலைமையை நாம் அனுமதிக்கக்கூடாது. இப்பொழுதுள்ள ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படி, பத்திரம் எழுதிய தேதியிலிருந்தே அமலுக்கு வந்ததாகக் கொள்ளப்படுகிறது. ரிஜிஸ்தர் ஆன தேதியிலிருந்து அமலாக்கப்படும் என்றுகூட நாம் சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். ஆனால், அது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கும். நான்கு மாதங்களுக்கு முன்பிருந்தே இந்தச் சட்டம் அமலாக்கப்படும் என்று அரசாங்கம் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். பிப்ரவரி 15 என்று செய்வது போதாது பிப்ரவரி 15 என்னும்போது என்ன ஆகிறது? ஏமாந்தவர்கள், தெரியாதவர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள், தெரிந்தவர்கள் தப்பித்துக் கொண்டார்கள் என்ற நிலைதான் ஏற்படுகிறது. சட்டம் கொண்டுவரும்போது அது எல்லோருக்கும் சமமாக இருக்கவேண்டும். ஆகவே, நான்கு மாதங்களுக்கு முன்பே ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்துச் சட்டத்தை அமலாக்க வேண்டும்.



இந்த மசோதாவில் 21-எ என்கிற ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் மோசமான ஷரத்தாகும். இந்த ஷரத்தை அப்படியே வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் அரசாங்கம் எதிர்பார்க்கப்படுகிறபடி ஒரு குழி நிலம்கூட, ஒரு செண்ட் நிலம்கூட உபரியாகக் கிடைக்க வழி இல்லை; கிடைக்கவே கிடைக்காது. அந்த ஷரத்தை இதோடு சேர்த்து இந்த மசோதாவை நிறைவேற்றுவதைவிட, இந்த மசோதாவைக் கொண்டுவராமல் இருந்தால்கூட, அதனால் ஒன்றும் பாதகம் ஏற்பட்டுவிடாது என்பது என்னுடைய கருத்தாகும். 21-எ ஷரத்தை நிச்சயமாகக் கைவிட்டுவிடவேண்டும். அதைச் சேர்த்து இந்தச் சட்டம் செய்யக் கூடாது.

முன்னால் இருக்கும் சட்டத்தில் ஒரு குடும்பம் என்பது ஐந்து பேர் கொண்டது என்று கூறி, அதற்குமேல் இருக்கிற ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர் என்ற குறிப்பு இருக்கிறது. அதிலே "மேஜர் ஸன்" தனி யூனிட்டாக கருதப்படுகிறது. பாகப் பிரிவினையால் ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுத்தது போக ஒவ்வொருவருக்கும் பத்து ஏக்கர்கூட இருக்காது. மிச்சம் இருப்பதைக் கோவிலுக்கு என்று எழுதி வைத்தால் அதுவும் சரியாகப் போய்விடும். நிலம் பகிர்ந்து கொடுக்கப்படுவதற்கு நமக்கு வரவே வராது.

கோயில், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் என்று இவைகளுக்கு ட்ரஸ்ட் சேர்க்க வேண்டும் என்று கருதுகிறோம். உழுபவனுக்கு நிலம் (லாண்டு டு தி டில்லர்) என்பது நீண்ட நாட்களாகச் சொல்லிக்கொண்டு வரப்படுகிற வாதம். உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்க வேண்டும், வேறு யார் கையிலும் இருக்கக்கூடாது. நிலத்திற்குச் சொந்தக்காரராக யாரோ எங்கோ இருந்துகொண்டு, ஒருவரை முன்னால் வைத்து, அதிலிருந்து ஒரு பகுதியை வாரமாகப் பெற்றுக்கொண்டிருக்கும் நிலை எல்லாம் இருக்கிறது. நிலத்தில் அதிகமான கவனம் செலுத்த முடியாமலும், உற்பத்தியைப் பெருக்க முடியாமலும் உள்ள துரதிருஷ்டவசமான நிலையைப் போக்குவதற்காகத்தான் ட்ரஸ்ட்களைக்கூட நாம் போக்க வேண்டும், கோவில்களுக்குச் சொந்தமாக இருக்கும் சொத்துக்களைக்கூட சட்டத்திற்கு உட்படுத்த வேண்டும் என்ற கருத்து மேலோங்கி இருக்கிறது. இந்த நிலையில் புதிய ட்ரஸ்டுகளை ஏற்பாடு செய்யவேண்டும் என்ற அவசியம் என் இருக்கவேண்டும்.

இந்த நிலையில் சாதாரண விவசாயிகளின் நிலையை எப்படி உயர்த்த முடியும்? காளிமுத்து என்பவருக்கு இதுவரை குத்தகை கொடுத்துக் கொண்டு வந்த குத்தகைக்கார விவசாயி, இனி பள்ளிக்கூட ட்ரஸ்டுக்குக் குத்தகை கொடுக்கப்போகிறான். அவ்வளவுதான். ஆகவே, 21-எ ஷரத்தை இந்த மசோதாவிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த 21-எ ஷரத்தைக் கைவிடவில்லையென்றால் இந்தச் சட்டத்தினால் என்ன பலன் ஏற்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அந்த இலட்சியம் நிறைவேறப் போவதில்லை. நமக்கு ஒரு செண்ட் நிலம்கூடக் கிடைக்காது என்று கூறி, நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பயனுள்ளதாக ஆக்குவற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

***திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, எனது சட்டசபைக் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசியதற்குப் பின்னர் நானும் பேசுவது அதில் விட்டுப்போன சில கருத்துக்களைக் கூறுவதற்கு மட்டும்தான்.

இங்கே கொண்டுவந்திருக்கும்படியான இந்த மசோதா மிகவும் முற்போக்கானது என்று நான் ஏற்கெனவே பாராட்டியிருக்கின்றேன். ஆனால், முற்போக்கானது என்று பாராட்டியதற்குப் பின்னால் மசோதாவாக வந்து அதில் இப்பொழுது அடைக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்களையெல்லாம் பார்க்கும்போது, மசோதாவினுடைய தலைப்பு மட்டும் முற்போக்காகவும் உள்ளடக்கம் பிற்போக்காகவும் இருக்கிறது என்று சொல்ல

வேண்டியிருக்கிறது. ஆகவே, முற்போக்கு என்று சொல்வதற்கு அர்த்தம் அந்த முற்போக்கில் அடங்கியிருக்கின்ற அம்சங்கள் மக்களுக்கு எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதைப் பொறுத்துத்தானேதவிர, அதிலே இருக்கின்ற வார்த்தைகளில் முற்போக்கு என்று சொன்னால் அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த நில உச்சவரம்பை இப்படிக் குறைத்துக் கொள்ளுவதன்மூலம் ஏதோ சில பேர்கள் கூறுகிறார்கள், உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுவிடும் என்று. உலகமே இருண்டுவிடும் என்று இன்னும் சில பேர்கள் பேசினார்கள். நான் கூறுகிறேன், இப்பொழுது நிலத்தை அதிகமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் அந்த நிலத்துன்மீது அக்கறை செலுத்தி மெக்கனைஸ் செய்வதற்கோ அல்லது விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கோ அக்கறை காட்ட வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கிறது. ஏதோ தங்களுடைய தேவைக்கு அதிலே வருகிறது. அப்படி வருவதை எடுத்துச் செலவு செய்துகொண்டு ஜாம் ஜாம் என்று நடந்து கொள்ளலாம் என்று பல பேர் நினைக்கிறார்கள். ஆனால், இப்படிக் குறைத்துக் கொள்ளும்போது அவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பணத்தை உண்டாக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படும் போது, அதிலே என்ன என்ன முற்போக்கான காரியங்களைச் செய்யலாம் என்ற எண்ணம், அதற்கான ஊக்கமும் ஆக்கமும் ஏற்படுமேதவிர, இப்பொழுது ஏற்படாது. அதனால்தான் நம்முடைய நாட்டிலிருக்கின்ற விவசாய நிலம் இன்றைக்கும் முற்போக்கான முறையில் முயற்சி எடுத்துக் கொண்டு விவசாயம் செய்ய முடியாமல் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டிய நிலத்திலே அதிகப்படுத்தாமலிருக்கும் நிலைமையைக் காண்கிறோம்.

இந்தச் சீர்திருத்தங்கள்மூலம் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு நிலம் அபிவிருத்தி அடைந்து ஜப்பானில் ஏற்பட்டிருக்கின்ற உணவு உற்பத்தியின் அளவுக்குக் கொண்டுவருவதற்கு முடியுமா என்பதை யோசிக்கவேண்டும். இப்பொழுது அத்தகைய நிர்ப்பந்தம் இல்லாத நிலையில் இருக்கிறோம். நாளைக்குப் பலவந்தமாகக் கொண்டுவரும் நிலைக்கு இந்தச் சீர்த்திருத்தங்கள் உதவுகின்றன. ஆனால் இப்படி ஏற்படும் சீர்த்திருத்தத்தை இரண்டு வகையான கண்ணோட்டத்துடன் பார்க்கிறோம். ஒன்று—நிலம் என்பது எல்லாச் செல்வத்திற்கும் அடிப்படையாக இருக்கின்ற அம்சம் ஆகும். அந்த அடிப்படையாக இருக்கும் அம்சத்தின்மீது யார் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு இருக்கிறார்களோ அவர்களுடைய கையில் அரசியல், பொருளாதாரம், நிர்வாகம் எல்லாமே அமைந்துவிடுகிறது. இன்றைக்கு ஆதிக்கத்தை மாற்றுவதற்கான ஒரு தீவிர முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கும்போது, இந்த மசோதாவில் அரசாங்கம் புதிதாகச் சேர்த்திருக்கிற வகுப்புகளும், புதிதாகக் கொண்டுவந்திருக்கும் திருத்தங்களும் சேர்ந்து, இருக்கிறதை அப்படியே வைத்துக்கொள்ளுவதற்கான வழியை உண்டாக்கி இருக்கிறது. ஆகவே, சீர்த்திருத்தச் சட்டத்தின்மூலம், உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் எவ்விதமான ஆதிக்க மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

(திரு. ஆர். என். அரங்கநாதன்—தலைமை)

அங்கிருக்கும் விவசாயிகள் நிர்ப்பந்தத்திற்குச் செயல்பட்டு, உற்பத்தியைப் பெருக்கவேண்டும், விஞ்ஞான ரீதியில் நிலத்தை விவசாயம் செய்வதற்கு வழி காணவேண்டும் என்ற எண்ணத்தை இந்த மசோதா உண்டாக்கவில்லை.

மூன்றாவதாக, பொருளாதார அபிவிருத்தியடைய வேண்டுமானால் என்னுடைய கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல தொழிற்சாலைகள் வளர வேண்டுமானாலும் பொது ஜனங்களுக்குப் பொருள்களை வாங்குவதற்கான சக்தி இருக்க வேண்டும். நிலமில்லா



தவர்கள் ஏராளமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் விரும்புவதுபோல தொழிற்சாலைகளையும் மேலும் மேலும் உண்டாக்கிக்கொண்டே போனால் நஷ்டம் ஏற்படுகிறது. சரக்குகள் செலவாகவில்லையென்றால் மந்த நிலைமை ஏற்பட்டுவிடும். மக்களின் கையிலே பணம் உண்டாவதற்கான வழி செய்ய வேண்டும்.

பெரிய பெரிய நிலச்சுவான்தார்களாக இருக்கின்றவர்கள் சென்னை போன்ற பெரிய நகரங்களிலேயே உட்கார்ந்துகொண்டு அந்த நிலங்களுக்கு உரிமை பாராட்டிக்கொண்டு, அதன் மூலமாகக் கிடைக்கும் பணத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நிலத்தின்மீது அளிக்கப்படுகிற நஷ்ட ஈட்டுப் பணத்தை அவர்கள் சும்மா வைத்திருக்க முடியாது. வேறு காரியங்களில் அந்தப் பணத்தை மூலதனமாகப் போட்டு காரியங்களைச் செய்வார்கள். இந்த முறையிலே இந்தச் சட்டத்தைப் பார்த்தால், இதைச் சிந்திக்கின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முற்போக்கான சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டு, அனுபவிக்கின்றவர்களுக்குக் கிடைக்காதபடி ஷரத்துக்களை ஏன் மறுபடியும் சேர்த்திருக்கிறார்கள் ? ஏன் மீண்டும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று புரியவில்லை ? சமுதாய அமைப்பில் பல மாதிரியானவர்கள் இருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் பல்வேறு கோணங்களிலே, பல்வேறு சிந்தனைகளிலே உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது தெரியும். அப்பேர்பட்டவர்களின் நிர்பந்தத்தின் காரணமாக திருத்தங்கள் வந்திருக்கின்றனவா என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை மீண்டும் பரிசீலித்து, முற்போக்கான தலைப்பைப் போலவே, உள்ளே இருக்கின்ற கருத்துக்களையும் முற்போக்காக மாற்றுவதற்கு வழி செய்ய வேண்டும். இதை ஒன்றும் அவசரமாகச் செய்யவேண்டும் என்பது அல்ல, செய்கின்ற காரியத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். குற்றங் குறைகளைச் இல்லாமல் செய்ய வேண்டும். எந்த நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறும் வகையில் செய்ய வேண்டும். அந்த வகையிலே இந்த மசோதாவைத் திருத்தி, மாற்றியமைத்து, முறையான மசோதாவாக மாற்ற வேண்டுமென்று முறையாகக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, என் பேச்சை ஆரம்பிக்கும் முன்பாக ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். நான் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி அதிகமான அளவிலே என்ன பேச முடியும் என்று எண்ணாமல், அப்படிப் பேசக்கூடிய நேரத்திற்கு உச்ச வரம்பு வைக்காமல் அதிகமான நேரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொள்கை அளவிலே நிலத்தின்மீது உள்ள பிடிப்பு குறைய வேண்டும். அப்போதுதான் நாட்டு மக்கள் எல்லோருக்குமே நிலம் கிடைக்கும். விவசாயம் செய்வதற்கு வேண்டிய அளவில் நிலம் கிடைக்கும், உணவு உற்பத்தி பெருகும் என்று என் கட்சி நினைக்கிறது. நிலத்தின் மீதுள்ள பிடிப்பைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் எங்கள் கட்சி முன்பு உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டுவந்தது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு நீங்கள் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். கொள்கையளவில் ஒன்றும் வித்தியாசம் கூறுவதற்கு இல்லை.

முதலாவதாக, சொத்து என்று சொல்லும் போது நிலம் என்று இருந்தது. முதன்முதலில் உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டது. இப்போது இரண்டாவது தடவையாக உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டுவந்தது தவறு அல்ல. இதைப் கொண்டுவருவதற்கு முன்பாக அரசாங்கத்தின் சார்பிலும் சரி, ஆளுகின்ற கட்சியின் சார்பிலும்சரி, "காங்கிரஸ் கட்சி கொண்டு

வந்த உச்ச வரம்பு சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களை அடைக்க போகிறோம்" என்று சொல்லி வந்தார்கள். மேய்ச்சல் நிலம், தோப்புகள் என்ற பெயரால் ஏராளமான நிலம் நிலப்பிரபுக்களின் கையில், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது, அதைக் குறைக்கப் போகிறோம், அதற்குத் தகுந்தாற்போல சட்டங்கள் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்கள். இந்தத் திருத்தத்தை பார்க்கும்போது, அப்படி அவர்கள் சொன்னபடி நடந்திருக்கிறதா, அப்படி நடக்கும் என்பதற்கான அறிகுறி இருக்கிறதா என்பனவெல்லாம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், முதலில் மடங்களை எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவு மடங்கள் இருக்கின்றன ? அவைகளுக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு நிலப் பரப்புகள் என்பதைப் பார்க்க வேண்டும். இங்கு பேசிய நண்பர் ஒருவர், "சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் வெகு காலத்திற்கு முன்பே கேரளத்திலே திவானாக இருந்த சமயத்தில் கோயில்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமான நிலங்களை எடுத்துப் பண்ணைகளை அமைத்தார்" என்று கூறினார். இப்படி கோயில் நிலங்களையும் மடங்களின் நிலங்களையும் எடுத்ததாலேயே அவரை "நாஸ்திகர்" என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். அவர் "ஆஸ்திகர்தான்". ஆகவே, அதுபோலவே, கோயில்களின் நிலங்களுக்கும், மடங்களின் நிலங்களுக்கும் உச்ச வரம்பு வைக்க வேண்டும். இவைகளுக்குள்ள மொத்த நிலங்களை எடுத்து, விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இதைக் கொண்டு சொத்தின் மீதுள்ள பிடிப்பை குறைக்க முடியும். கோயில்களின் நிலங்களுக்கும் மடங்களின் நிலங்களுக்கும் உச்ச வரம்பு கொண்டு வந்து, அவைகள் விவசாய மக்களுக்குப் பயன்படும் வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று கொண்டு வரும்போது செக்ஷன் 3, சப்-செக்ஷன் (40)-லே சில விதிகள் கொடுத்திருக்கிறார்கள். நிலவரி வருமானத்தின் மீது போடப்பட்டிருக்கிறது. வெகு நாட்களுக்கு முன்பு, பிரிட்டிஷ்காரர் ஆட்சிக்கு வந்தபோது அப்போது நிலங்களிலிருந்து அந்தந்தப் பகுதியிலிருந்த நிலத்தின் மீதான வருமானத்திற்கேற்ப நிலவரி விதிக்கப்பட்டது. ஆற்றுப் பாசன நிலங்கள் எல்லாம் அருமையான நிலங்கள் என்று சொல்லப்பட்டது, நல்ல வருமானம் வரும் என்று அவற்றிற்கு அதிக வரி விதிக்கப்பட்டன. ஆற்றுப்பாசனம் அல்லாத புஞ்சை நிலங்கள் அதிக வருமானம் தராத நிலங்கள் என்று அப்போது இருந்தது. காலம் மாறிக்கொண்டே வருகிறது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகவும், சர்க்கார் தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகிற நடவடிக்கைகளின் காரணமாகவும் நிலைமை மாறிக் கொண்டே வருகிறது. நிலம் எல்லாம் பொன்கொழிக்கும் பூமியாக மாறிக்கொண்டு வருகிறது. ஆற்றுப் பாசனத்தில் இப்போதும் இருக்கின்ற நிலங்களில் சரியான வருமானம் வருகிறதா என்று பார்த்தால், இந்த அமைச்சரவையைச் சேர்ந்த ஒரு அமைச்சர்—பசுமைப் புரட்சி, பசுமைப் புரட்சி என்று சொல்லி வருகிறவர், அவர் தற்சமயம் பேரவையில் இல்லை, திரு. ஆதித்தனார் அவர்கள், "ஆற்றுப் பாசனத்தை மாத்திரம் நீங்கள் நம்பியிருக்க வேண்டாம்" என்று சொல்லியிருக்கிறார். அது எதைக் காட்டுகிறது ? ஆற்றுத் தண்ணீரை அந்த அளவிற்கு இப்போது பயன்படுத்த முடியவில்லை. ஆற்றுத் தண்ணீரை நம்பியிருக்கின்ற நிலப்பரப்பானது, பருவமழை தவறுகின்ற காரணத்தாலும், அண்டை மாநிலங்களில் ஏற்படுகின்ற தகராறுகளினாலும் எந்த நேரத்தில் பாதிக்கப்படுமோ என்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆற்றுத் தண்ணீரை நம்பி விவசாயம் செய்ய முடியாத பயங்கர நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



அடுத்தபடியாக், ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று சொல்லும்போது, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தகுந்தாற்போல எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பதைக் கணக்கிட்டு, அந்த அடிப்படையில் பிரித்தால் தான் நன்றாக இருக்கும், ஒரு மாவட்டத்தில் உள்ளதில் அதிகப்படியான நிலப்பரப்பை வைத்துக்கொள்ளவும், சில மாவட்டங்களில் குறைவான நிலப்பரப்பை வைத்துக்கொள்ளவும், இருக்கும்படியான சூழ்நிலை உண்டாகும். ஆகவே, ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று பிரிக்கும்போது, நியாயமான முறையில், நல்ல முறையில் சிந்தித்து நிலங்களின் கிளாஸிபிகேஷன் முறையில் மாற்றியமைத்துச் செய்ய வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அதிகமான நிலங்களை வைத்திருப்பவர்கள், தங்களுடைய நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொள்ளும்போது. எதிர்ப்பு தெரிவிப்பது நியாயம். இந்த எதிர்ப்பு தெரிவிப்பதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும். நிலங்களை சர்க்கார் மேற்கொள்ளும்போது அந்த நிலங்களுக்கு உண்டான நியாயமான நஷ்ட ஈட்டைத் தர வேண்டும். "வாங்குவதற்கு ஒரு தராசும் விற்பதற்கு ஒரு தராசும்" என்று சில வியாபாரிகளிடத்தில் இருப்பதுபோல சர்க்கார் நடந்துகொள்ளக்கூடாது, சர்க்கார் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசில் உள்ளபடி, மார்க்கெட் விலைப்படித்தான் அந்த நிலங்களை எடுத்துக்கொண்டு, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறபோது, துரிதமாக மூன்று நான்கு மாதங்களில் பணம் அவர்களுக்குக் கிடைக்கும்படியான வழிவகைகளைச்செய்ய வேண்டும். முன்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்தபோது தொகை அதிகமாக இருந்தது. அதனால் நீண்ட நாட்களில் சர்க்கார் காம்பன்சேஷன் தொகையைக் கொடுத்திருக்கலாம். இப்போது நிலம் குறைவு. தொகையும் குறைவு. ஆகவே, உடனுக்குடன் காம்பன்சேஷன் தொகையைக் கொடுக்க வழி செய்ய வேண்டும். உடனடியாகப் பணத்தைக் கொடுத்தால் அவர்கள் அந்தப் பணத்தை வேறு தொழில்களில் முதலீடு செய்ய உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பத்து வருஷத்திற்கு 4 பர்செண்ட் வட்டி என்ற முறையில் இல்லாமல் ஐந்து வருஷத்திற்குள்ளாக பணம் கிடைக்க வழிசெய்தால் மிக்க உதவியாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது உச்ச வரம்பு நிலத்திற்கு மட்டும், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும் என்று வைத்து மற்ற மற்ற தொழில் களுக்கு உச்ச வரம்பு வைக்காமல் இருப்பது நியாயம் அல்ல என் இரவு 7-30
பதை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது எந்தத் தொழிலாக இருந்தாலும் —பஸ்தொழிலாக இருந்தாலும், பாங்கில் பணம் போட்டு வட்டி சம்பாதிக்கிற தொழிலாக இருந்தாலும் உச்ச வரம்பு விதிப்பதுதான் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில்தான் நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவந்திருப்பதை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமனது யோசனையைக் கருத்தில்கொண்டு முதற்படியாக அடுத்தது பஸ்களுக்கு உச்சவரம்பு வைக்கலாமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** என்னுடைய யோசனையை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி, மிக்க மகிழ்ச்சி.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தை. 22-ஆம் தேதி உச்சவரம்புச் சட்டம் அறிவிக்கப்பட்டது. பிறகு கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் முகமாக ஒரு பட்டியலை 24, 25, 26-ஆம் தேதிகளில் கொடுக்கப்பட்டது. இந்த 3 நாட்களில் எவ்வளவு நிலங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்கிற விவரத்தை அரசாங்கமே கொடுத்திருக்கிறார்கள். அவற்றை வைத்து ஒரு கணக்குப் போட்டதில் எவ்வளவு நிலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தத் தேதிகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றின் மதிப்பு என்ன என்று பார்க்கிறபோது 11·76 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் இந்த மூன்று நாட்களில் கோயம்புத்தூர் ஜில்லாவில் தான் அதிகமாக மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது. இது சரிதானா? இந்தமாதிரி நடந்திருப்பது விந்தைதானா? அல்லது ஒவ்வொரு ஆண்டும் இந்த மாதம் இந்தத் தேதிகளில் இப்படி நடந்திருக்கிறதா? இல்லை என்றால் இந்த ஆண்டு மட்டும் கோவை மாவட்டத்தில் இவ்வளவு அதிகமாக மாற்றம் செய்யப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்பதனைப் பரிசீலித்து இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் மட்டும் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் தெளிவாகப் பேசவேண்டும். கோயம்புத்தூரில் நடந்திருக்கிறது. என்றால் கும்பகோணத்திலும் நடந்திருக்கிறது. இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்ட உறுப்பினருக்கு உரிமை உண்டு. ஆனால், ஆதாரம் இல்லாமல் ஒரு அபவாதத்தை கிளப்புவது கூடாது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகமாக நடந்திருக்கிறது என்றால்-கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் மந்திரியாக இருக்கிறார். முன் கூட்டியே தன் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லியிருக்கிறார், அதனால் அதிகமான மாற்றம் இந்தத் தேதிகளில் நடந்திருக்கிறது என்பதாக எல்லாம் வீணான சந்தேகப் புழுதியைக் கிளப்புவிடுகிறது. லேசாகச் சொன்னதுபோலச் சொல்லிவிடுகிறாரா என்பதையும் தெளிவாக்கவேண்டும். விஷயத்தை சரியாக விளக்காமலேயே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாது.

இதுபற்றி நான் அதிகாரிகளிடத்திலும் விசாரித்தேன். கடந்த வருஷத்தைவிட இந்த ஆண்டு இந்த மாதங்களில் குறைவாகத்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

கனம் உறுப்பினருக்கு எந்தக் கருத்தையும் சொல்ல உரிமை உண்டு. அவற்றை ஆதாரத்தோடு தெளிவாகச் சொல்லிவிட.வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** அரசினர் சார்பில் நாங்கள் கேட்ட கேள்விக்கு அளித்த பதில்களை அடிப்படையாக வைத்துத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் அதிகமாகச் சொத்து மாற்றம் செய்யப்பட்டிருப்பதில் தவறு இருந்தால் சொல்லுங்கள். குறை இருந்தால் சொல்லுங்கள். குற்றம் இருந்தால் சொல்லுங்கள். ஆனால் ஒரு சந்தேகத்தை எழுப்புகிற வகையில்-புழுதியைக் கிளப்புவது மாதிரியாக தெளிவு இல்லாமல் பேசக்கூடாது. வெளியில் இருக்கிற மக்கள் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

**திரு. நா. காசிராமன் :** இருக்கக்கூடிய விவரங்களை வைத்துத்தான் நான் சொன்னேன். விளக்கத்திற்கு நன்றி. சென்ற ஆண்டிலும் இந்த ஜில்லாவில் இந்த மாதம், இந்த நாட்களில் இவ்வளவு பத்திரப் பதிவுகள் நடந்திருக்கின்றனவா, சராசரியாக இந்த நாட்களில் எவ்வளவு நடந்து வந்திருக்கிறது என்கிற விவரங்களையும் கொடுத்தால் இதுபற்றி ஒருமுடிவுக்கு வர சௌகர்யமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குற்றம் சொல்வதாக இருந்தால் ஆதாரத்தோடு விளக்கமாகவே எடுத்துச்சொல்வது நியாயமாக இருக்குமே தவிர அரசாங்கம் ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் அதற்கு ஒரு மாசு கற்பிப்பதாக எதையும் சொல்வது சரியல்ல. கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்தவர் அமைச்சராக இருந்தால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு வேண்டியவரா? தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு வேண்டாதவரா? அமைச்சர் எல்லா மாவட்டங்களும் ஒன்றுதான். — காலையிலேயே 2 மணிநேரம் விவாதம் நடந்திருக்கிறது.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் கேட்ட கேள்வி, அதற்குக் கொடுத்த விவரங்களை இவற்றை வைத்துத்தான் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் கொடுத்த விவரத்திலே கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்தனை ரூபாய் வரைக்கும் சொத்து மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்கிறபோது சந்தேகம் தான் கிளம்புகிறது. கொடுத்த விவரத்தை வைத்து ஒன்றைச் சொல்வதற்குள் அமைச்சர் இப்படிப் பேச ஏன் முன் வருகிறார் என்றபோது சந்தேகம் வராது என்ன செய்யும்? சென்ற ஆண்டும் இந்தத் தேதிகளில் இதுபோல் பதிவு ஆகியிருக்கிறதா? இன்னும் பசுமைப் புரட்சி என்று பேசுகிற ஒரு அமைச்சரே என்ன செய்திருக்கிறார் என்பதை நான் பேசும்போது விவரங்களோடு குறிப்பிடுகிறேன். ஒன்றைச் செய்வதாக இருந்தால் திடீரென்று செய்யவேண்டும், மற்றவர்கள் யாருக்கும் தெரியாது செய்யவேண்டும்,

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு அமைச்சரே என்ன செய்திருக்கிறார் என்பதைச் சொல்வதாகச் சொன்னார். ஆதாரத்தோடு சொல்வதாகச் சொன்னார். வழக்கம்போல ஆதாரம் தந்தாலும் தரலாம். ஆனால் 1970 ஜனவரி மாதத்தில் மொத்தமாக 19524 லட்சம் மதிப்புள்ளது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பிப்ரவரி மாதத்தில் 21,538 லட்சம் ஆக மொத்தம் 41,062 லட்சம். சென்ற ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதத்திலும் இதே அளவுக்கு ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. நாம் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வருகிற முறையில் ஆன ரிஜிஸ்தர் அல்ல. ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ரிஜிஸ்ட்ரேஷன் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்த ஆண்டில் சென்ற ஆண்டைப்போலத் தான் ஆகியிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்றாலும் கூட இதன் நோக்கம் என்ன? நோக்கம் நிறைவேறுமா என்று பார்த்தால் அது நிறைவேறக்கூடிய சூழ்நிலை இல்லை என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். **As a further step towards agrarian reform, it is considered necessary to reduce such disparity.** என்ற வகையில் இந்த மசோதாவின் நோக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. டிஸ்பாரிடி என்ற வகையில் என்ன என்ன என்பது தெளிவாகச் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறது.

முதலிலே அரசியல் சாசனச் சட்டப்படி இது இருக்கிறதா என்றால் இதற்கு முன்னாலே பேசிய அமைச்சர்கள் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் அரசியல் சாசனப்படி இந்த சீலிங் பில் செல்லாது என்று ஆதாரங்களோடு கூறுகிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இதைத் தெரிந்து விளக்கம் தெரிவித்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்னார்கள் 31-ஏ படி **Notwithstanding anything contained in Article 13, no law providing for—**

**(*a*) the acquisition by the State of any estate or of any rights therein or the extinguishment or modification of any such rights.**

என்ற முறையிலே சட்டமன்றத்திற்கு பவர்கள் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்திலே அத்தனை சட்டங்களும் எந்த நிலைமையில் இருக்கும் என்பதையும் பார்க்கவேண்டும்.

**Provided that where such law is a law made by the Legislature of a State, the provisions of this article shall not apply thereto unless such law, having been reserved for the consideration of the President has received his assent.**

என்றபடி அஸண்டும் வாங்கியாகிவிட்டது. அதற்குமேலே ப்ரொவிஸோ 2-ஐ நன்றாகப்படித்துப் பார்க்கவேண்டும்.

**Provided further that where any law makes any provision for the acquisition by the State of any estate and where any land comprised**

therin is held by a person under his personal cultivation, it shall not be lawful for the State to acquire any portion of such land as is within the ceiling limit applicable to him under any law for the time being in force or of any என்று இருக்கிறது "டயம் பீயிங் இன் ஓர்ஸ்" என்று இருக்கிறதாலே இப்பொழுது இருக்கிற 30 எக்கர் என்று சீலிங் என்று லிமிட் வைத்து இருக்கிறதுபோது இன்னொரு சீலிங் கொண்டு வந்தால் அது தப்பு என்று இருக்கிறது. அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ceiling limit applicable to him under any law for the time being in force or any building or structure standing thereon or appurtenant thereto, unless the law relating to the acquisition of such land, building or structure, provide for the payment of compensation at a rate which shall not be less than the market value thereof.

என்று இருக்கிறது. இதன்படி பார்த்தால் மார்க்கெட் வால்யூ கொடுத்துத் தான் ஆகவேண்டும். என் என்று சொன்னால் ஆல்ரெடி ஒரு சீலிங் வைக்கப்பட்டிருக்கிறது. "டைம் பீயிங் இன் போர்ஸ்" என்று இருக்கிற காரணத்தினாலே இந்தச் சட்டம் செல்லாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

No property shall be compulsorily acquired or requisitioned save for a public purpose and save by authority of a law which provides for compensation for the property so acquired or requisitioned and either fixes the amount of the compensation or specifies the principles on which and the manner in which, the compensation is to be determined and given ;and no such law shall be called in question in any court.
நீங்கள் பிரின்ஸ்பிள்களை வகுத்துக் கொள்வது எல்லாம் முதலிலே எப்பொழுது கொண்டு வந்தார்களோ அதற்குத்தான் சேரும். இப்பொழுது திடீரென்று மற்றொரு ரிடக்ஷன் பில் கொண்டுவந்தால் அதற்கு மார்க்கெட் வால்யூ கொடுத்துத்தான் ஆகவேண்டும். மார்க்கெட் வேல்யூ கொடுப்பதைப் பற்றி இதிலே எங்கேயும் குறிப்பிடவில்லை. சுப்ரீம் கோர்டில் நடந்து இருக்கிறது. மார்க்கெட் வால்யூ இல்லாமல் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் சட்டம் செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். இந்தச் சிக்கலிலே விழுந்து விடக்கூடாது. என்றுதான் ஒரு சிறிய திருத்தத்தைக் சரியானபடி இதிலே சேர்க்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்கெட் வால்யூ கொடுக்கவேண்டும். இந்தப் பிரச்னையை ஆழ்ந்து சிந்தித்து திருத்தம் செய்யாவிட்டால் இந்த 31-எயிலே உள்ள இரண்டாவது புரவிசோ சம்பந்தமாகச் சிக்கல் வரும் என்பதைச் சொல்லியிருக்கிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்தினால் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ப்ரோவைஸோ 1 இருக்கிறது அதற்காக தந்தி வந்திருக்கிறது, அஸன்ட் வாங்கியாகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டவாது ப்ரோவைஸோ என்று வரும் பொழுது மார்க்கெட் வால்யூ கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் சுப்ரீம் கோர்டிலே செல்லாது என்று சொல்லிவிடுவார்கள். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உழுபவனுக்கே நிலம் சொந்தம். வாஸ்தவம். உழுபவனுக்கே நிலம் என்று சொன்னால் ஒரு குடும்பத்திற்கு ஐந்து பேர்கள் என்று வைத்துள்ளார்கள். 5 பேர்கள்தான் உழவேண்டும், வேறு யாரும் உள்ளே வரக்கூடாது. பயிர் செய்வது, களையிடுவது எல்லாம் அவர்களே மாற்றி மாற்றிச் செய்யவேண்டுமென்று நிலைமை இருக்கும். நஞ்சை என்றால் ஒரு எக்கர் என்றும் புஞ்சை என்றால் 2 எக்கர் என்றும் செய்யலாம். அவ்வளவுதான் கொடுக்கலாம் ஒரு குடும்பத்திற்கு. 15 எக்கர் என்று வைத்திருப்பதே தப்பு. ம. பொ. சி. அவர்கள் சொன்னார்கள். ஐந்து பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு ஒரு எக்கர் நஞ்சை இல்லையென்றால் 2 எக்கர் புஞ்சை. அதற்குமேலே கொடுப்பது என்று சொன்னால் கூலியாட்கள்தான் அவர்கள் வைக்கவேண்டும், அவர்களாலேயே அவ்வளவையும் செய்ய முடியாது; இந்த நிலைமையில்



Where is the disparity for reducing to the maximum extent ஒன்று எல்லோருக்கும் நிலம் கிடையாது என்று சொல்லி ஸ்டேட் பார்மிங் வையுங்கள், லாபத்தைப் பகிர்ந்துகொடுங்கள். அப்படியில்லாமல் உழுபவனுக்கே நிலம் என்று சொல்லி 5 எக்கர் என்ற "வீதத்திலே கொடுத்தால் அவன் உழைத்து பாடுபட்டு மற்றவர்களுக்குப் போடுவானா ? ஒரு எக்கர் தான் அந்தக் குடும்பம் விவசாயம் பண்ண முடியும்

இப்படிக் கொண்டு வந்திருப்பது ஒரு பெரிய சீர்த்திருத்தமல்ல. இன்னும் தீவிரமாகப் பண்ணவேண்டும். லெப்ட் கம்யூனிஸ்ட்டுகள்கூட சரியாகச் சொல்லவில்லை. 5 எக்கர் கொடுத்துவிட்டால் அவன் உழைத்துக் கொடுப்பதா ? ஒன்று நிலம் யாருக்குமே சொந்தம் கிடையாது, ஸ்டேட்டுக்குச் சொந்தம் என்று ஆக்கிவிட்டு ஸ்டேட் பார்மிங் பண்ணுங்கள். அல்லது இன்கம் பேஸிஸ் வையுங்கள். எவ்வளவு இன்கம் வருகிறது என்று பார்த்துச் செய்யுங்கள் அப்படிச் செய்தால்தான் டிஸ்பாரிடி இல்லாமல் செய்யமுடியும்.

இப்பொழுது இருக்கிற அசஸ்மெண்ட் பொறுத்தவரையில் எத்தனையோ நாட்களுக்கு முன்னாலே விதிக்கப்பட்டது. புஞ்சையை இப்போது 2 போகம் செய்கிறார்கள், நஞ்சையை மூன்றுபோகம் செய்கிறார்கள், பழைய ரெவின்யூ ரிக்கார்டுகளைப் பார்த்து அதே அளவுக்குத்தான் தீர்வையை விதித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் இருக்கிறது. டிஸ்பாரிடியைப் குறைக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு பெருக்கிக்கொண்டே இருக்கிறார்கள். இதை யெல்லாம் கவனமாக ஆழ்ந்து சிந்தித்துச் செய்யாவிட்டால் இந்தச் சட்டம் கொண்டு வந்துவிடுவதில் அர்த்தமே இல்லை என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நஞ்சையிலே கரும்பு போடலாம், பருத்தி போடலாம், இவை போன்ற காஷ் கிராப்ஸ் போட்டால் நல்ல வருமானம் வரும். ஆனால் நெல் போட்டால் குறைந்த வருமானம்தான் வரும். இந்த நிலைமையிலே Where have you reduced the disparity எனவே எக்ஸ்டண்டில் டிஸ்பாரிடியைக் குறைத்தால் போதுமா ? 15 எக்கர் என்று குறைத்து விட்டால் போதுமா ? இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவித்தால் நல்லது.

அதற்காகத்தான் நான் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று அமெண்ட்மெண்ட் கொடுத்து இருக்கிறேன். ஒரு எக்கர் நஞ்சை என்று வைத்துவிடலாம். இதைத்தவிர பருத்தி, கரும்பு போன்றவை போட்டால் துட்டு வரும். ஆனால் நெல் போட்டால் கடன்தான் இருக்கும். கடன்களுக்கு அவன் நம்மிடம் தான் வருவான் எனவே ஒருகமிட்டி போட்டு, ரீஅசஸ்மெண்ட் செய்யவேண்டும். எந்த எந்த இடத்திலே பாசன வசதிகள் எப்படி இருக்கின்றன. பசுமைப் புரட்சியிலே பழைய புஞ்சை, நஞ்சையாக இருக்கும். ஆகவே அதையெல்லாம் பார்த்து ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொண்டால் நல்லது.

இடதுசாரி கம்யூனிஸ்ட்கள்கூட 15 எக்கரைக் குறைத்து ஒரு எக்கர் இரண்டு எக்கர் என்று வையுங்கள் என்று சொல்லவில்லை, எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி நல்லமுறையிலே பொதுமக்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளலாம். கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம் 31-எ யிலே ப்ரோவைஸோ 2-ன்படி இந்தச் சட்டம் செல்லாததாகிவிடும் மார்க்கெட் வால்யூ கொடுக்காவிட்டால். எனவே, சட்ட அமைச்சர் அவர்கள் இந்த ப்ரோவைஸோ 2·பார்த்து அதன்படி இது செல்லுமா செல்லாதா என்பதற்கு விளக்கம் அளிக்க வெண்டுமென்று கெட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, பொதுவாக உழுபவனுக்கு நிலம் தரவேண்டும் என்ற முறையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும் ஒரு விஷயத்தை இந்த ஆட்சியும், அதன் முதல்வர் அவர்களும் அங்கீகரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

எழுதத் தெரிந்தவன் கையில் பேனாவும் படிக்கத் தெரிந்தவன் கையில் புத்தகமும் இருப்பதுபோல் உழத் தெரிந்தவன் கையில் நிலம் இருக்கவேண்டும் என்ற கொள்கையை ஆளும் கட்சியும், ஆளும் கட்சியின் முதல்வர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த நிலப் பிரச்னை என்பது ஒரு தேசிய பிரச்னை. எந்த அளவிற்கு நிலச்சுவாந்தார்களிடம் நிலம் இருக்கிறது, எந்த அளவிற்கு நாம் அதைப் பெற்று நாட்டை சுபிட்சமாக்க முடியும் என்ற முறையில் பிரச்னையை அணுகி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

மன்னார்குடியில் மறைந்த முதல்வர் அண்ணா அவர்கள் தலைமையில் ஒரு கருத்தரங்கு நடந்தது. அதில் தஞ்சை மாவட்டத்திலுள்ள பெரிய மிராசுதாரர்கள் எல்லாம் பேசினார்கள். அன்றையதினம் அண்ணா அவர்கள் பேசுகிற நேரத்தில் இன்றைதினம் அமெரிக்காவிற்குச் சென்று உணவு வாங்க வேண்டிய துர்பாக்கியகரமான நிலை இல்லாதிருக்க வேண்டுமென்றால் காங்கிரஸ் செய்த தவறைத் திருத்தவேண்டும் என்று சொன்னார்கள். உழுபவர்களை வெளியேற்றுவதற்கு எங்களுக்குச் சுதந்திரம் கொடுத்தால் உற்பத்தி கண்டிப்பாக அதிகமாகும் என்று பெரும் நிலப்பிரபுக்கள் பேசினார்கள். என்னையும் பேசவேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள் நானும் பேசினேன். அப்போது அண்ணா அவர்கள் அழகாகப் பேசினார்கள். எம்.ஏ. படித்துவிட்டு டெல்லியில் வேலை, இங்கே நிலம் என்ற நிலை மாறவேண்டும் என்று சொன்னார்கள். படித்தவர்கள் எல்லாம் உழ கற்றுக்கொள்ளவேண்டும். யாருக்கு எவ்வளவு உழ முடியுமோ அந்த அளவிற்கு வைத்துக் கொண்டால்தான் நியாயமாக இருக்க முடியும், அதுதான் எங்கள் கட்சியின் கொள்கை, அதைத்தான் இந்த அரசு செய்யும் என்று சொன்னார்கள். ஆகவே அந்த முறையில் இப்பிரச்னையை அணுகவேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி கொண்டுவந்த சட்டம் எங்கள் மாவட்டத்தில் எந்த அளவிற்கு அமுலாகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த அரசால் ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று மசோதா கொண்டுவரப்பட்டது. ஆனால், பின்னால் வந்திருக்கக்கூடிய திருத்தங்களைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. இந்த மசோதாவை அறிவித்ததற்குப் பிறகு தஞ்சையில் உள்ள பெரும் நிலப் பிரபுக்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். ஸ்டாம்ப் வாங்குவதற்காக. இந்த மசோதாவை கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தங்களோடு நிறைவேற்றினால், எந்த அளவிற்கு பினாமி டிரான்ஸாக்ஷன் ஏற்படும், எந்த அளவிற்கு மோசமானதொரு நிலை ஏற்படும் என்பதை அரசு யோசிக்கவேண்டும். யோசித்து உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற நிலை வரவேண்டும்.

விதி விலக்குகள் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கமிட்டி போடப்போகிறோம் என்று. அதற்குக் கூடத் தேவையில்லை. எங்கள் மாவட்டத்தில் நாலைந்து மடங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. மண்ணைத் துறந்து, பொன்னைத் துறந்து, காவி உடுத்திக்கொண்டிருக்கும் சாமியார்களுக்கு 75,000 ஏக்கர், 80,000 ஏக்கர் நிலம் என்றிருக்க வேண்டியதன் அவசியம் என்ன ? பேசாத சாமிக்கு எதற்காக நிலம் என்று கேட்கிறேன். கடவுளை, சாமியை பக்தர்கள் காப்பாற்றிக்கொள்கிறார்கள். நிச்சயமாக சாமி சர்வ வல்லமை உள்ளவரானால் திருவாரூர் தியாகராஜசாமி தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ளாதா ? சாமிக்கு நிலம் வேண்டாம், சாமியாருக்கு நிலம் வேண்டாம், ஆனால் உழுபவனுக்கு நிலம் வேண்டும் என்ற அடிப்படையில் இப் பிரச்னையை அணுகினால் இப் பிரச்னையில் சிக்கல்கள் இருக்காது.

தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் சொன்னது போல இவை யாருடைய தகப்பன் அல்லது பாட்டன் வீட்டு நிலம் அல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்சி புரிந்துவந்த காலத்தில் தங்கள் ஆட்சியை நிலை



நிறுத்த இந்த நிலவுடமை முறையை உண்டுபண்ணினார்கள் என்பது சரித்திரம் கண்ட உண்மை. தஞ்சை போன்ற இடங்களில் உள்ள ஏழை விவசாயிகள் சர்க்காரிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நான் இந்த அரசாங்கத்தை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், பின்னால் கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தங்களை தயவுசெய்து எடுத்துவிடுங்கள். 15 ஸ்டாண்டார்டு ஏக்கர் என்றுதான் இருக்க வேண்டும். ஏக்கர் என்று சொல்லும்போது வருமான அடிப்படையில் ஸ்டாண்டார்ட் ஏக்கர் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். நில வரி அடிப்படையில் நிர்ணயிப்பது நியாயமாக இருக்காது. நிலத்திலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறதோ அந்த வருமான அடிப்படையில் ஸ்டாண்டார்ட் ஏக்கர் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். 15 ஸ்டாண்டார்ட் ஏக்கருக்கு மேல் ஒரு குடும்பத்திற்குப் போகக் கூடாது. அதிகபட்சமாக 30 ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு மேல் நிச்சயமாக இருக்கக் கூடாது. ஆகவே, லிட்டிகேஷனுக்கு இடம் கொடுக்காமல் சட்ட நிபுணர்கள் சட்டமன்றத்தில் வாதாடுவதற்கான இடம் கொடுக்காமல் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் உதவிகரமாக இருக்கும். அப்போது உழவர்கள் பாராட்டுவார்கள். அந்த முறையில் தி.மு.க. அரசு இப்பிரச்னையை அணுக வேண்டும்.

உங்கள் நோக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. நிச்சயமாக அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆகவே உங்கள் குறிக்கோள் நிறைவேற வேண்டுமென்றால், பின்னால் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களை எடுத்துவிட வேண்டும். எந்த நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்களோ அது வீணாகிவிடும் இந்தத் திருத்தங்கள் மூலம். ஆகவே, தயவு செய்து இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தச் சட்டத்தில் இல்லாத ஒன்றையும் யோசிக்க வேண்டும். 30-3-1970 அன்று பார்லிமெண்டில் திரு சேதி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அர்பன் ப்ராப்பர்ட்டீஸுக்கு ஸீலிங் கொண்டுவர வேண்டும், அதை மாநிலங்களின் பொறுப்பில் விட்டிருக்கிறோம், முதல் அமைச்சர்களை எல்லாம் கூட்ட இருக்கிறோம் என்று பார்லிமெண்டில் பேசியிருக்கிறார்கள். அது குறித்து, நம் அரசு என்ன செய்திருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும்.

சாதாரண மக்களுக்கு நன்மை கிடைக்க எல்லா வழியிலும் இவ்விஷயத்தைப் பார்க்க வேண்டும். உழுபவர்களுக்கு நிலம் கிடைக்க வேண்டும். அதற்காக சட்டம் கொண்டு வரும்போது அதை நிலப் பிரபுக்கள் மடாதிபதிகள் எதிர்ப்பார்கள் என்றால், நான் தைரியமாகக் கூறுகிறேன், அவர்கள் எதிர்ப்பிற்கு தமிழ் நாடு விவசாயிகள் அத்தனை பேர்களும் அம் முயற்சியில் அரசாங்கத்திற்குப் பின்னணி நின்று அதை முறியடிக்கும் சக்தி இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** திரு ஞானசம்பந்தன் அவர்கள் சொல்கிறார்கள், நிலப் பிரபுக்கள் எதிர்த்தால் நாங்கள் இருக்கிறோம், பயப்படாதீர்கள் என்று. ஆனால் அவர்களுடைய இரகசியக் கூட்டத்தில் என்ன பேசினார்கள் என்று எனக்குத் தெரியும். என்ன பேசினார்கள் என்றால், நல்ல எதிர்ப்பு தி.மு.க.விற்கு வந்திருக்கிறது நிலச்சுவாந்தார்களிடத்திலிருந்து. இது தான் நேரம், நாம் அடுத்த தடவை வெற்றி பெறுவதற்கு என்று அவர்கள் பேசிய செய்தி எனக்குத் தெரியும் (ஆரவாரம்). (திரு கொ. இர. ஞானசம்பந்தன் : யார் சொன்னது ?) வெளி மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து சுற்றுப் பயணம் செய்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களின் ரெவ்யூ இது.

(திரு என். சங்கரய்யா அவர்கள் எழுந்தார்கள்.)

**THIRU K. VINAYAKAM :** How does it arise, Sir ! How can the Hon. Member Thiru Sankaraia take up 'vakalat' for the Hon. Member Thiru Gnanasambandam ! He has no business.

THIRU N. SANKARAIAH : How can the Hon. Member say that I have no business?

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir. Under what rule does this gentleman, Thiru Sankariah get up to argue on behalf of another Hon. Member ?

MR. CHAIRMAN (THIRU R. N. ARANGANATHAN): Let us hear what he has to say ?

THIRU K. VINAYAKAM : Under what rule ' Sir? The Hon. Member Thiru Gnanasambandam was speaking. He is in possession of the House. At that time Thiru Sankariah has got up to explain, after interruption of Hon. Chief Minister. The Hon. Chief Minister has got liberty to interrupt. It is for the Hon. Member Thiru Gnanasambandam to explain his stand and not for Thiru Sankariah. This gentleman cannot get up and explain on behalf of another. Our rules do not permit that.

MR. CHAIRMAN (THIRU R. N. ARANGANATHAN) : I am able to see that the Hon. Member Thiru Gnanasambandam is not yielding.

(The Hon. Member Thiru Gnanasambandam resumed his seat).

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசும் போது அமைச்சர்கள் சார்பில் குறுக்கீடுகள் வந்தால் கட்சித் தலைவரோ அல்லது உப தலைவரோ குறுக்கிட்டு விளக்கம் தருவது முறையாக இருக்கிறது. அதை விநாயகம் அவர்கள் ஏன் ஆட்சேபிக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் வெளி மாநிலத் தலைவர் ஒருவர் தஞ்சைக்கு வந்து பேசும்போது, நிலப் பிரபுக்களுக்கு விரோதமான நிலையை உண்டாக்க வேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். என்னிடம் பேசும் போது குறிப்பிட்டார்கள். தோழர் ஏ. கே.கோபாலன் அவர்களை மனதில் வைத்துக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். திரு கோபாலன் அவர்கள் தஞ்சையில் ஒரே ஒரு நாள் தான் சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்போது திரு ஞானசம்பந்தன் அவர்கள் கூடவே இருந்தார்கள். பதினொரு கூட்டங்களில் பேசினார்கள். எந்தவித ரகசியக் கூட்டமும் நடைபெறவில்லை. தவறான தகவல்கள் வந்திருந்தால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** நானே இதற்குப் பதில் சொல்லியிருப்பேன். அவர்கள் சிரமப்பட்டிருக்க வேண்டாம். நான் தமிழ்நாடு விவசாயச் சங்கத் தலைவர். தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு உறுப்பினர் நான். எந்த இரகசியக் கூட்டமும் நடைபெறவில்லை. ஆகவே இம்மாதிரி அனாவசியமான வதந்திகளை நம்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** அவர்கள் நல்லெண்ணத்தோடு நடப்பவர்களாக இருந்தால் உள்ளபடியே ஆழ்ந்த வருத்தத்தோடு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். உழவர்களுடைய பேரணி கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடத்தப்பட்டது. அதற்கு முன்பு தஞ்சை மாவட்ட நிலக்கிழார்கள், மிராசுதார்கள் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. நாங்கள் அமைச்சரவை அளவில் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். எந்தத் தூதுக் குழுவானாலும், ஊர்வலமானாலும், சபை நடக்கிற நேரத்தில், ஒரு இடத்தில் நின்று அவர்களுடைய தூதுவர்களை, பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்றும், சபை நடக்காத நேரத்தில் அவர்கள் ஓரளவிற்கு அனுமதிக்கப்பட்டு, அவர்கள் பிரதிநிதிகள் அமைச்சர்களைச் சந்திக்க வேண்டும் என்றும் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மிராசுதார்கள் வந்த நேரத்தில் கூட அவர்கள் அப்படித்தான் ஊர்வலத்தை ஒருபுறம் நடத்திவிட்டு, முன்னறிவிப்பு கூடக் கொடுக்காமல் வந்தார்கள். அப்போது நான் அவசரமாகச் சென்னை பொது மருத்துவ



மனைக்கு—ஜி.பி. சோமசுந்தரம்,எம்.பி. அவர்கள் திடீரென்று சுகவீனப்பட்டு இரவு 8-00
அவரது நிலை அபாயகரமான நிலையில் இருந்தது—அவர்களைக் காணப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது மிராசுதார்களின பிரதிநிதிகள் உள்ளே வந்தார்கள். நான் காரில் ஏறியவன் உடனே இறங்கி, அவர்களை விசாரித்து, அவர்களது கோரிக்கையைப் பெற்றுக் கொண்டு, அவைகள் கவனிக்கப்படும் என்று சொல்லிவிட்டுப் போனேன். அதிலே கூட அவர்களுக்கு வருத்தம், நிறுத்தி வைத்துப் பேசிவிட்டுப் போய்விட்டாரே என்று.

கம்யூனிஸ்ட் கட்சியின் பேரணியில் நடத்திய ஊர்வலம் எங்கே முடிவடைகிறதோ அந்த இடத்திற்கு முதலமைச்சர் வந்து கோரிக்கையைப் பெற்றுக்கொண்டு பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படி வருவதால் கௌரவக் குறைவு என்று கருதவில்லை. இதே முறையை மற்ற ஊர்வலங்களுக்கும் பின்பற்ற வேண்டிய நிலைமை வந்து விடும் என்று கூறினேன். அன்று முக்கியமான நிகழ்ச்சி, திரிகுணசென் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியிருந்தும் கூட, ஊர்வலத்தினர் கோரிக்கையைக் கொண்டுவரும் வரையில், மேலவையில் நிகழ்ச்சிகளில் கூட கலந்துகொள்ளாமல், என்னுடைய முதலமைச்சர் அறையில் இருந்த பொழுது திரு. எம்.ஆர். வெங்கட்டராமன் அவர்களும், சங்கரய்யா போன்ற எம்.எல்.ஏ.க்களும் வந்து கோரிக்கையைக் கொடுத்தார்கள். அரை மணி நேரம் என்னுடன் பேசினார்கள். அவர்களுடைய முறையீடுகளைப் பெற்றுக் கொண்டு, முடிந்த அளவிற்கு ஏற்ற அளவிற்குச் செய்கிறேன் என்று கூறி அனுப்பினேன்.

இங்கு மிகுந்த அமைதியோடு காணப்படுகின்ற திருமதி ஜானகியம்மாள் அவர்கள் பொதுக்கூட்டத்திலே பேசுகின்ற நேரத்தில், வி. எஸ். தியாகராஜ முதலியார் பொன்னாடை போர்த்தினால் போவார், நாங்கள் வந்து அழைத்தால் வருவாரா என்ற அளவிற்கு அங்கே பேசியிருக்கிறார்கள். நான் அரை மணி நேரம் உட்கார்ந்து பேசி, கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, திரு திரிகுணசென் அவர்களைக் கூட அரை மணி நேரம் காக்க வைத்துவிட்டு, இவர்களது கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால் பொதுக் கூட்டம் கூட்டி, தஞ்சை மாவட்டம், மற்ற மாவட்டங்களிலிருந்து வந்திருக்கின்றவர்களிடம், முதலமைச்சர் அவர்களையெல்லாம் மதிக்கவில்லை என்ற கருத்துச் சொல்லப்பட்டதற்காக உள்ளபடியே நான் வருந்துகிறேன். அதிலேயும் கூட, இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஆடவர்களெல்லாம் அப்படிப் பேசியிருந்தாலும் கூட கொஞ்சம் வேகத்திலே பேசியிருக்கலாம் என்று கருதிக் கொள்ளலாம். ஆனால், மிகுந்த அமைதியோடு இருக்கின்ற, இன்னும் சொல்லப்போனால், தாய் போல் இருக்கின்ற திருமதி ஜானகியம்மாள் அவர்கள் அப்படிப் பேசியதற்காக நான் மிகுந்த வருத்தப்படுகிறேன், வேதனையடைகிறேன். ஆகவே, எப்படியும், உழவர்களிடத்திலேயும், தொழிலாளர்களிடத்திலேயும் இந்த அரசு அவர்கள் அரசு அல்ல என்று கருதக் கூடிய முயற்சியிலே நீங்கள் ஈடுபடுகிறீர்கள்.

திரு. ஏ. கே. கோபாலனைப் பற்றிச் சொன்னார்கள், இரகசியக் கூட்டம் நடத்தவில்லை என்று. கம்யூனிஸ்டு கட்சி இரகசியக் கூட்டத்தைச் சொல்லிவிட்டு நடத்துவது இல்லை. திரு ஏ. கே. கோபாலன் பேசியதைப் பற்றி ஒரு ரெவ்யூ எனக்கு வந்திருக்கிறது. "நன்றாக வசதியாக, சிக்கிக் கொண்டார்கள், இவர்களை ஆதரித்தவர்கள் பெரும்பாலும் நடுத்தர மக்கள், 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கொண்டுவந்த பிறகு, அவர்கள் 1972-இல் இவர்களை அனுப்பப் போவதில்லை. ஒருசேர காங்கிரஸ் கட்சியையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் 1972-இல் தொலைத்துவிட்டு, இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி ஆட்சிக்கு வருவதற்கான நல்ல சூழ்நிலை உருவாகி இருக்கிறது" என்று பேசியிருக்கிறார்கள். அது எனக்குக் கிடைத்திருக்கிறது. பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்ததில், "இந்த அரசு தானாக எந்த நல்ல காரியத்தையும் செய்யவில்லை. நாம் தூண்டிவிட்டுக் கிளர்ச்சிகளைச் செய்தால், பிறகு நல்ல காரியங்களைச் செய்ய முன் வருகிறது" என்று பேசியிருக்கிறார்கள். இது ஒன்று போதும், நான் முன்பு சொன்ன விஷயத்திற்கும் இதற்கும் இந்தச் சான்று போதும்.

**திரு. என். சங்கரய்யா :** என்னுடைய கட்சியைப் பற்றிச் சொல்லியிருப்பதால், அதைப் பற்றி நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவசாயிகள் பேரணியை முதலமைச்சரவர்கள் நேரிலே வந்து சந்தித்து, அந்த மனுவை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று தோழர் வெங்கட்டராமன் கூறியபோது முதலிலே அவர்கள் கூறியதைப்பார்த்தால் அநேகமாக வந்து வாங்கிக்கொள்வதற்கு யோசனை செய்வதாக எனக்குப் பட்டது. பிறகு பல தினங்கள் கழித்துத்தான், "அவ்வாறு முடிவு செய்யவில்லை, உங்களிடத்திலே நேரில் வந்து வாங்கினால் மற்றவர்களும் கேட்பார்கள் என்று சொன்னேனே தவிர, நான் ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொன்னார்கள். கட்சிக் காரியதரிசியான திரு எம். ஆர். வெங்கட்டராமன் அவர்கள் கட்சியிலுள்ள பல நண்பர்களிடம், முதலமைச்சரவர்கள் வந்து வாங்கிக்கொள்வதாக ஒப்புக்கொண்டுவிட்டார் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, பல சட்டசபை உறுப்பினர்களுக்கும், ஜில்லாவிலுள்ள கட்சித் தலைவர்களுக்கும், முதலமைச்சர் வந்து இடையிலே வாங்கிக்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுவிட்டது. பிறகு அது அல்ல என்று வரும்பொழுது அதனால் ஏற்பட்ட மன வருத்தத்தினால் ஏமாற்றம் ஏற்பட்டது. மேலும், முதலமைச்சரவர்களைச் சந்திக்கும்பொழுது, ஏற்பட்ட இம்மாதிரியான இம்ப்ரஷனில் நாங்கள் தகவல் கொடுத்ததிலே பெரிய சிக்கலாகிவிட்டது. எவ்வாறு சமாளிப்பது என்று முதலமைச்சரவர்களிடத்தில் கூறினோம். அவர்களே அப்பொழுது கூறினார்கள், எப்படியாவது சொல்லி விளக்கிக்கொள்ளுங்கள் என்று.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** நீங்கள் உழவர்களிடத்தில் விளக்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். விளக்குவது இப்படித்தானா ? வி. எஸ். தியாகராஜ முதலியார் பொன்னுடை போர்த்தினால் வந்து வாங்கிக்கொள்ளுவார் என்றுதான் உழவர்களிடத்தில் விளக்குவதா ? வி. எஸ். தியாகராஜ முதலியார் பொன்னுடை போர்த்தினாலும், அதற்குக் கருணாநிதியோ அல்லது எங்கள் கட்சியிலுள்ள யாருமோ மயங்குபவர்கள் அல்ல.எனக்குத் தெரியும், யார் யார் எவ்வளவு முற்போக்கு எண்ணம் உடையவர்கள், பணதிபதிகளோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்.

**திரு என். சங்கரய்யா :** அடுத்தபடியாக, ஏ. கே. கோபாலன் பேசியதைப் பற்றி ரெவ்யூ என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கூறுகிறேன், அதிகார பூர்வமாக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1972 தேர்தலில் வரப்போகிறது என்று எங்கள் கட்சியின் எந்த உறுப்பினரும் கருதவில்லை. மார்க்ஸிஸ்ட் தோழர்களின் ஆதரவோடு அமைந்த அமைச்சரவை என்றாலும் கூட, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எந்த அமைச்சரவையிலும் சேராது என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, 1972 தேர்தலிலே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துக்கு வரும் என்று அரசியல் அடிப்படையிலே கருதவில்லை. ஆகவே, அந்த அறிக்கை ஆதார பூர்வமான அறிக்கை இல்லை. ஆனால், கட்சியின் சார்பாக, திரிகரண சுத்தியாகச் சொல்லுகிறேன், அப்படி ஒரு ரெவியூ ஏ. கே. கோபாலன் கொடுத்திருக்க முடியாது. மேலும் இதைப் பற்றிப் பேச....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு ஏ. கே. கோபாலன் தஞ்சை மாவட்டத்தில் ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். கேரளாவைப் போல், மேற்கு வங்கத்தைப் போல், புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்ளுங்கள் என்று அங்கே பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய மறுநாளே சில புறம்போக்கு நிலங்களை அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். பிறகு அந்தப் பகுதியிலிருந்த மக்களின் தலையீடு காரணமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வேறு மாநிலத்திலிருந்து இந்த மாநிலத்திற்கு வந்து, இங்குள்ள சுமுகமான நிலையைக் கெடுப்பதற்கான காரியமல்லவா இது ? இப்படிப்பட்ட அடிப்படையிலே இந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதைத்தான் இந்த அவையிலே விளக்கக் கடமைப்பட்டிருந்தேன்.



**திரு. என். சங்கரய்யா :** தோழர் ஏ. கே. கோபாலன் அவர்கள் விவசாயிகள் சங்கத்தலைவர் ' என்ற வகையிலேதான் பேசியிருக்கிறாரே தவிர, வெளி மாநிலத்திலேயிருந்து வந்தவர் என்ற பிரச்னை இல்லை. புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டிருக்கிறது, சோஷலிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டிருக்கிறது. கிளர்ச்சி நடக்கிறது. மக்கள் அதிகமாகப் பங்கு கொள்ள வேண்டுமென்ற அர்த்தத்திலேதான் சொல்லியிருக்கிறாரே தவிர, வேறு மாநிலத்திலேயிருந்து வந்து குழப்பம் விளைவிக்கப் பேசவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அரசு தொடங்கி மூன்று, மூன்றரை ஆண்டுக் காலத்தில் இதுவரையிலும் ஒன்றரை லட்சம் ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் இந்த ஏழை எளிய மக்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதிலேயிருந்து முதலமைச்சரவர்கள் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியின் அந்தரங்க சுத்தி என்ன என்பதை உணர்ந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, இந்த நேரத்திலே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லி ஏதாவது செய்யலாம் என்று பார்க்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. கூட்டணிதான் எப்படியிருக்கிறது என்று தெரிகிறதே !

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** நிச்சயமாகப் பெருந்துறையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து நான் பேசப்போகிறேன். எனவே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்த வேலையை இங்கு செய்ய வேண்டாமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதையும் நம்பி முதலமைச்சரவர்கள் ஏமாற வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எங்களை அவர்களும் ஏமாற்ற முடியாது, நீங்களும் ஏமாற்ற முடியாது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, மீண்டும் சொல்லுகிறேன், தஞ்சை மாவட்டத்தில் ஏ. கே. கோபாலன் சுற்றுப்பிரயாணம் செய்ததற்கு நான்தான் பொறுப்பு. கட்சிக்கும் பொறுப்பு, விவசாயிகள் சங்கத்திற்கும் பொறுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியபடி ஏ. கே. கோபாலன் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்த நேரத்திலே எங்கேயும் புறம்போக்கு நிலங்களில் எந்தக் குடிசையும் நிச்சயமாகப் போடப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குக் கிடைத்திருப்பது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விஷயத்திற்கு வரலாம் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இம்மாதிரி உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவரும்பொழுது நாங்கள் சொன்ன கொள்கைகளை முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ளும் நிலை இல்லை. பின்னாலே கொண்டுவந்திருக்கும் நேரத்தில் 15 ஏக்கராவிற்கு மேல் ஒரு குடும்பத்திற்குக் கூட 30 ஏக்கருக்கு மேல் எந்தப் பாகப் பிரிவினை என்ற அளவிலே, சீதனச் சொத்து என்ற அளவிலே என்றும், வருமானத்தின் அடிப்படையிலே ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயிப்பது என்ற அளவிலே கொண்டுவந்தால் உண்மையாகவே நிலம் கிடைக்கும்.

விதி விலக்கைப் பொறுத்த வரையில், இம்மாதிரிப் பிரச்னைக்குக்கோயில், மடம், மடாதிபதி இம்மாதிரி நிலங்களை விலக்குகளை ரத்து செய்து அரசு எடுத்துக்கொண்டு செய்தால் நிலம் கிடைக்கும். அது மட்டுமல்ல. அது சமுதாயத்தின் பிரச்னை. வாங்கும் சக்தியின் பிரச்னை. அந்த முறையிலே இதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தவறான வதந்திகளை நம்பாதீர்கள் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பை 15 ஏக்கராவாக குறைக்கப் போவதாக அறிவிப்பு வந்தவுடனேயே, இதை தமிழ் நாட்டிலுள்ள கிராமப்புறங்களிலுள்ள ஏழை எளிய விவசாயிகள், கூலி வேலை செய்யக்கூடியவர்கள் எல்லோரும் பாராட்டுவார்கள், இதை வரவேற்பார்கள் என்று நான் சொன்னேன். கிராமத்திலுள்ள வாரத்திற்கு அல்லது கட்டுக் குத்தகைக்கு உழக்கூடியவர்கள், அவர்களுடைய குடும்பத்தோடு பாடுபட்டாலும் கூட, கிடைக்கக்கூடிய நெல்லில், நிலச்சுவான்தார்களுக்குச் சேரவேண்டிய பங்கை அவர்களுக்குக் கொடுத்தது போக, மீதி இருக்கிற அந்த வருமானத்தைக் கொண்டு தங்களுடைய குடும்பத்தை எப்படி நடத்திக்கொண்டு போவார்கள் என்பதை, நஞ்சைப் பிரதேசத்தில், நெல் வயலில் வயலோடு வயலாக சேற்றிலும் சகதியிலும் நின்று பாடுபடக்கூடிய அந்த விவசாயி எந்த நிலையில் இருக்கிறான் என்பதை கொஞ்சம் புரிந்துகொண்டிருந்தால், இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் எப்படி இருக்கவேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வரலாம்.

திரு. மா. பொ. சி. அவர்கள் சொன்னார்கள். கிராமப் பகுதிகளிலே உள்ள மக்கள் முன்னால் சோழ, பாண்டியன் காலத்தில் இருந்த நிலைமையில் கூட இப்பொழுது இல்லை, அதைவிட மோசமான நிலையில் ஏழை எளிய விவசாயிகள் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். மனிதன் மனிதனாக வாழ முடியாமல், அடிமைக்கும் அடிமையாக இருந்து, நிரந்தரமாக வருமானம் இல்லாத நிலையில், வரக்கூடிய வருமானத்தில் நிலச்சொந்தக்காரர்களுக்கு ஒரு பங்கை கொடுத்துவிட்டு, நிலம் எங்கிருக்கிறது, எப்படி விளைகிறது என்பதே தெரியாமல் இருக்கும் நிலச்சுவான்தார்களுக்கு வாரத்தையும், குத்தகையையும் கொடுத்துவிட்டு, தான் வாழ்க்கை நடத்த முடியாத நிலைமையில் இருக்கிறான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பரம்பரை பரம்பரையாக பாட்டன், அதற்குப் பிறகு தகப்பன், தகப்பனுக்குப் பின்னால்தான், என்று இப்படி பாடுபடக்கூடிய தனக்கு அந்த நிலம் சொந்தமாக ஆகக்கூடிய நிலை இந்த சட்டத்தின் மூலம் வந்துவிடாது. குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று சொன்னால், விதிவிலக்கு இல்லாமல் இருந்தால், சாகுபடி செய்யக்கூடிய சாகுபடியாளருக்கு அந்த நிலம் சொந்தமாகும். அப்பொழுதுதான் சர்க்காருக்கும் அவர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு நிலச்சொந்தக்காரருக்கு தாங்கள் வாரம் கொடுக்கவேண்டும் என்ற நிலைமாறி, நிலம் தங்களுக்குச் சொந்தமாகும் என்று மேலும் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் தாங்கள் பாடுபடவேண்டும் என்ற நிலை ஏற்படும்.

இப்பொழுது இந்த மசோதாவுக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த இந்தத் திருத்தங்கள் வந்ததற்குப் பிறகு, முன்பு காங்கிரஸ்காரர்கள் நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லி, தங்களுடைய நிலத்தை, பிள்ளை, பேரன் என்று இப்படி குடும்பத்திலுள்ள அத்தனை பேர்களுக்கும் பாகப் பிரிவினை செய்துவைத்துவிட்டு எப்படி உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்தார்களோ, அப்படித்தான் இந்த மசோதாவும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

இப்பொழுது ஆளும் கட்சியாக இருக்கிறவர்கள் அப்பொழுது காங்கிரஸ்காரர்கள் இந்த சட்டத்தைக் கொண்டுவந்தபொழுது, உச்ச வரம்புச்



சட்டமா, மிச்ச வரம்புச் சட்டமா என்றெல்லாம் சொன்னார்கள், எந்த விதமான மிச்ச நிலமும் இருக்காது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களே 15 ஏக்கர் உச்ச வரம்பு என்று ஒரு மசோதாவைக் கொண்டுவந்துவிட்டு, அதிலே தங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் எப்படி வேண்டுமானாலும் பாகப் பிரிவினை செய்துகொள்ளலாம், அதற்கு மேலே மிச்சம் இருந்தால், பள்ளிகளுக்கு எழுதி வைக்கலாம், அதற்கும் மேலே மிச்சம் இருந்தால் ஆஸ்பத்திரிக்கு எழுதி வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நிலைமை இருந்தால், நிலத்தில் பரம்பரை பரம்பரையாக பாடுபட்டு உழைத்துவரும் விவசாயிக்கு அந்த நிலம் எப்பொழுது சொந்தமாகும்? அவர்களுக்கு எப்படி மேலும் உற்சாகம் வந்து பாடுபடுவார்கள், எப்படி உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா, மாரிமுத்து ஆகியோர்கள் கேரள சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அங்கேயுள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர், வேறு பல சட்டமன்ற உறுப்பினர்களோடு நான் பேசியிருக்கிறேன். அங்கே இந்த சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால், குத்தகைக்காரர்கள் நிலச்சுவான்தார்களுக்கு எந்தவிதமான குத்தகையும் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படப் போவதில்லை என்று சொன்னார்கள்.

இன்னும் ஒரு கருத்தை திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டில் இருக்கும் பல தொழிற்சாலைகளில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு மார்க்கெட் கிடைக்காமல் போவதற்கு பிரதான காரணம், கிராமப் பகுதியில் இருக்கும் படியான செல்வம் ஒரு சிலர் கையில் குவிந்து, ஒரு சிலரே அதிக வருமானம் பெறக்கூடிய சூழ்நிலை இருப்பதுதான். குத்தகைக்காரர்களுக்கு ஒன்றும் கிடைக்காமல், அவர்களுக்கு வரவேண்டிய வருமானத்தை நிலச்சுவான்தார்கள் சுரண்டும் முறை நீடிக்கிறது. அதனால், விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிடைக்காமல் போகிறது. வருமானம் பூராவும் நிலச்சுவான்தார்கள் சுரண்டிக்கொண்டு போகிறார்கள். நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளியவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வாங்கும் சக்தி அவர்களிடம் கிடையாது. ஏனெனில் அவர்களுக்கு வருமானம் மிகவும் குறைவு. நிலச்சொந்தக்காரர்கள் எந்தவிதமான உழைப்பும் இல்லாமல், நிலத்திற்குப் பக்கத்திலேயே போகாமல், பாடுபட்டு உழைக்கும் குத்தகைக்காரர்களிடமிருந்து வருமானத்தைச் சுரண்டுகிற முறை இருக்கிறதே, அதை நீக்கவேண்டும். அந்த முறையில் நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்துவதற்கு கம்யூனிஸ்டு கட்சி இடைவிடாமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது தகப்பனுக்கு குத்தகைக்காரர் வாரம் கொடுத்துக்கொண்டிருந்தால், நிலத்தை மூன்று பிரிவாக பிரித்து, மகன், பேரப்பிள்ளை இப்படி பாகம் பிரித்துவிட்டால், தகப்பனுக்கு, மகனுக்கு, பேரப்பிள்ளைக்கு குத்தகை விவசாயி வாரம் கொடுக்கவேண்டிய நிலைதான் ஏற்படும். உழைத்துப் பாடுபடுபவனுக்கு நிலம் சொந்தமாகக்கூடிய நிலையை இந்த சட்டம் ஏற்படுத்தப் போவதில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தின் நோக்கமே, பாடுபடக்கூடிய, உழைக்கக்கூடிய விவசாயிக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் என்பதுதான். நிலம் ஒருவருக்குச் சொந்தம், பாடுபடுபவனுக்கு, உழைக்கிறவனுக்குக் கிடைக்கக்கூடிய பலனை நிலச்சுவான்தார் சுரண்டிக்கொண்டு போகக்கூடிய நிலைமை தவிர்க்கப்படவேண்டும். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். ஆகவே, உச்சவரம்பு என்றால், ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை கறாராக அமல் நடத்த வேண்டும்.

மேஜர், வயது வந்தவர்கள் என்று சொன்னால், பாகம் வைத்துக் கொள்வதற்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால், வயது வராமல் இருக்கும்

பிள்ளை, பேரப்பிள்ளை இவர்களும் பாகப்பிரிவினை செய்துகொள்ளலாம் என்ற நிலைமை இருக்கக்கூடாது, அதை அனுமதிக்கக்கூடாது. ஒரு குடும்பத்தில் 5 பேர்கள் இருந்தால், 5 பேரும் பாகப்பிரிவினை செய்து கொண்டு, ஒவ்வொரு நபரும் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலை இருக்குமானால், எந்த நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறதோ, எதற்காக உச்சவரம்பு குறைக்கப்படுகிறதோ, அந்த நோக்கமே நிறைவேறாது. நாட்டிலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை எளிய விவசாயிகளுக்கு நிலத்தில் உழைப்பவர்களுக்கு நிலம் சொந்தமாகவேண்டும் என்ற நோக்கம் நிறைவேறப்போவதில்லை.

திட்டக் கமிஷன், முற்போக்குக் கட்சிக்காரர்கள் ஆகியோர்கள், நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், நாட்டில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்றால், நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் கிராமப் புறங்களிலுள்ள ஏழை எளிய விவசாயிகளின் வருமானம் கூடி, அவர்களுடைய வாங்கும் சக்தி அதிகமாகவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளின் வாங்கும் சக்தி உயர்ந்தாலன்றி, நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படாது. ஆகவே, கிராமப்புறங்களிலுள்ள ஏழை எளிய விவசாயிகள் சுதந்திரமுள்ள மனிதனாக வாழவேண்டும் என்றால், நில உடைமை அவர்களுக்கு மாற்றப்படவேண்டும். அவர்கள் தலை நிமிர்ந்து நாட்டினுடைய சுதந்திரமான பிரஜையாக வாழவேண்டும் என்றால், கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள், உழைக்கக்கூடியவர்கள், நிலத்தில் பாடுபடக்கூடியவர்கள் இவர்களிடமிருந்து நிலச்சொந்தக்காரர்கள் வாரத்தின் பெயரால், வருமானத்தை சுரண்டிக்கொண்டு போகக் கூடிய நிலையை மாற்றவேண்டும். உழைப்பவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற நிலை ஏற்படவேண்டும்.

பொது விவாதத்தின்போது இம்மாதிரி ஒரு சட்டம் வரப்போகிறது என்று சொன்னவுடன் நான் அதை வரவேற்றேன். ஆனால், இப்பொழுது வந்திருக்கிற மசோதாவையும், திருத்தங்களையும் பார்க்கிறபொழுது, கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுக்கு தலைக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் என்ற அளவுக்குக் கூட கொடுக்க முடியாத நிலைமைதான் ஏற்பட்டுவிடும். ஒரு குடும்பத்தில் இருப்பவர்கள் பாகம் செய்துகொண்டு விட்டால், அத்தனை பேர்களும் இருக்கிற நிலத்தை பிரித்துக்கொண்ட பிறகு, அவர்களுக்கே வேறு நிலம் வேண்டும், சர்க்கார் புறம்போக்கு நிலம் வேண்டும், அதில் 2 ஏக்கர் வேண்டும் என்று நிலச்சுவான்கள் தங்களுக்குக் கேட்கக்கூடிய நிலைமை வந்தாலும் வந்துவிடும். செக்ஷன் 21ஏ-க்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த திருத்தம் நிறைவேற்றப்பட்டால், அந்த நிலைமைதான் ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கி கொண்டு உண்மையாகவே ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நில உச்ச வரம்பு என்ற நிலையில், ஒருவருக்கு 15 ஏக்கர் என்ற நிலையில் இல்லாமல், இந்த உச்ச வரம்புச் சட்டத்தை அமல் நடத்தி, நிலத்தில் பாடுபடக்கூடிய விவசாய மக்களுக்கு, வார குத்தகைதார்களுக்கு நிலம் சொந்தம் ஆகும் என்ற நிலைமை ஏற்படக்கூடிய அளவில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி, எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, நில உச்ச வரம்பைக் குறைப்பதின் நோக்கம், உழவர்களுக்கு நிலம் கிடைப்பதோடு, இவர்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வைக் குறைத்து, சமத்துவம் உண்டாக்குவது என்ற நோக்கத்தில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நோக்கம் முழுவதும் உண்மையிலே நிறைவேறுமா என்பதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் சமத்துவம் செய்தால் போதுமா? கிராமங்களில் போய் சமத்துவம் செய்வதற்கு முன்னால், பெரிய நகரங்களில் நடை பாதைகளில் தோன்றி, அங்கேயே வாழ்க்கையை நடத்தி, உண்டு, வாழ்ந்து, பிறந்து, செத்துப் போகிறார்களே அவர்களின்பேரிலும், இன்னும் பெரிய மாளிகை, ஏர்-கண்டிஷன்



வீட்டுக்காரர்கள், கார்களில் போகிறவர்கள் இவர்களின்பாலும் கொஞ்சம் கவனம் செலுத்திவிட்டு, அதற்கப்புறம் கிராமப்புறங்களுக்கு வந்தால், நலமாக இருக்கும் என்பதை முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 15 ஏக்கர் உச்சவரம்பு என்ற நிலையை கொண்டு வந்தால், 2 லட்சம் ஏக்கர் மிச்சமாகும், அதை 2 லட்சம் பேர்களுக்குக் கொடுக்கலாம் என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். உண்மையில் ஆளுக்கு ஒரு ஏக்கர் கொடுத்தால், அவன் பிழைப்பானா? எந்த இடத்தில் எந்த மாதிரி பூமியில் ஆளுக்கு ஒரு ஏக்கர் கொடுத்து பிழைக்க முடியும் என்பதை கொஞ்சம் சிந்திக்கவேண்டும்.

ஏற்கனவே 4, 5, 6 ஏக்கர் உள்ளவர்கள் என்னுடைய பண்ணையிலேயே கூலிகளாக வேலை செய்கிறார்கள். தன்னுடைய பூமியை குத்தகைக்கு விட்டு விட்டு, அந்த நிலையில் தலைக்கு ஒரு ஏக்கர் என்று வந்தால், அது காரிய சாத்தியமா என்று சிந்திக்க வேண்டும். அதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. இன்றைக்கு 2 லட்சம் ஏக்கர் வரும் என்கிறார்கள். இன்றைக்கு கிடைக்குமா, இப்பொழுது கொடுத்திருக்கும் சலுகைகளைக் கொடுத்த பிறகு? 20,000 ஏக்கர்கூட கிடைக்காது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படியானால் சலுகைகளை எடுத்துவிடலாம் என்பது உறுப்பினர்களுடைய எண்ணமா?

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இந்தச் சட்டமே ஆகாது என்பது தான் உறுப்பினருடைய எண்ணம், சலுகைகள் மட்டுமல்ல. எப்படியாவது உங்கள் நோக்கம் நிறைவேறவேண்டும், நினைத்தமாதிரி உற்பத்தி பெருகவேண்டும், சமத்துவம் கிடைக்க வேண்டும், ஓட்டுக் கிடைக்கவேண்டும். இவை ஒன்றும் கிடைக்காது என்பது என் அபிப்பிராயம். தயவுசெய்து அவர்களையே விற்றுவிடுங்கள் என்று சொல்லிவிடுங்கள். நீங்கள் ஏன் எடுத்து சமத்துவம் செய்கிற மாதிரிச் செய்யவேண்டும். 15 ஏக்கரை மட்டும் வைத்துக்கொண்டு, பாக்கியை விற்று விடுங்கள் என்று சொல்லி விடுங்கள். நீங்கள் ஏன் எடுத்துக் கொடுக்கவேண்டும்? ஏமாற்றிச் சும்மா பிடுங்கிக் கொள்வதா? அது என்ன கொள்ளை அடித்த சொத்தா?

ம. பொ. சி. பேரறிஞர் பேசினார்கள், உலகத்திலுள்ள பூமி அனைவருக்கும் சொந்தம் என்று. இங்கேயிருக்கும் காற்றும், தண்ணீரும் போலச் சொந்தம் என்று நினைத்து கொண்டாரா? அந்த அந்த காட்டில் லட்ச ரூபாய்களைச் செலவுசெய்து, கிணறு வெட்டி, கருவிகளை வைத்து, இரவும் பகலும் தூங்காமல் உழைத்து இருக்கிறான் என்பதைச் சிந்தித்து இருந்தால் தெரியும். கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளம் தெரியாது. என்ன வேண்டுமானாலும் பேசலாம். தயவுசெய்து அவரவர்களே விற்றுவிட்டால், உங்களுக்குத் தலைவலி குறையும். நீங்கள் எடுத்துக் கொண்டால், அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும். நிலத்தைக் கொடுக்கப் போகிறவர்களும் உங்களுக்குப் பணம் கொடுக்கப் போவதில்லை. அதோடு, அவர்களுக்கு நீங்களே மாடு வாங்குவதற்கும் மற்றவைகளுக்கும் பணம் கொடுக்க வேண்டும். கருவிகளுக்கும் பணம் கொடுக்க வேண்டும். அந்தப் பணமும் வராது, இந்தப் பணமும் வராது, எல்லாம் "கோவிந்தா" ஆகும். எந்த மக்களுக்கு பாடுபடுகிறோம் என்று சொல்கிறார்களோ, அந்த மக்கள் பேரிலேயே வரியாகச் சுமத்த வேண்டிவரும். ஏழை எளியவர்களெல்லாம் எண்ணி எண்ணி ஏமாந்துபோகப் போகிறார்கள்.

இதுவரையில் எத்தனையோ பூதானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பட்டா வழங்கு தானம் செய்தாகிவிட்டது. மிலிடிரியில் இருந்து திரும்புகிறவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டது. புள்ளிவிவரம் சேகரியுங்கள். இதுவரையில் எத்தனை பேர்கள் கொடுத்த நிலத்தை உழுது பயிரிட்டு, உற்பத்தி செய்து வாழ்கிறார்கள் என்பதை கணக்குப் பார்க்க வேண்டும். ஒரு 10 பர்செண்ட் கூட உண்மையாக தனக்கென்று உபயோகப்படுத்து

பவர்கள் இருக்கமாட்டார்கள். அப்படி உபயோகப்படுத்துகிறார்கள் என்று கண்டால், எல்லாவற்றையும் பொதுவுடமையாக்கி விடுங்கள், சாலஞ்ஜ் பண்ணுகிறேன். அது நடக்காத காரியம், அந்த அந்த துறையில் அக்கறை உள்ளவன்தான் செய்யவேண்டும்.

வாங்குகிறவனும் பூமியை உழுது உற்பத்திச் செய்யாமல், இப்பொழுது உள்ளவனையும் கெடுத்துவிடும் இந்த ஏற்பாடு. அரசாங்கத்திற்கு வேண்டியவர்களுக்கு வேண்டுமானால் சலுகைக் கிடைக்கலாம். நாடு நாசமாகும். எந்த ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும் என்கிறார்களோ, அந்த ஏழைகளையே இது பாதிக்கும். நான் கோபத்தோடு சொல்வதாக நினைக்க வேண்டாம், நான் சத்தியத்தை, உண்மையைச் சொல்லுகிறேன். சத்தியத்திற்கு விரோதமாக ஒரு வார்த்தை வராது என்று மிக மிகப் பணிவோடு தெரிவிக்கிறேன். மேலும் இயந்திர கருவிகள் குதிரைக் கொம்பாகப் போய்விடும். இயந்திரங்களை வைத்து விவசாயம் செய்வது என்பது சாத்திய மற்றதாகப் போகும்....

**திரு. எம். சுரேந்திரன்:** "சத்தியம், உண்மை" என்கிறார்களே, சத்தியத்திற்கு விளக்கம் சொல்லமுடியுமா என்று கேட்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** சத்தியத்திற்கு விளக்கம் வேண்டுமாம், நண்பருக்கு. விளக்கமா, அது உள்ளதைச் சொல்வதுதான் சத்தியம் என்பது கூட புரிந்துகொள்ளாத அவர்களுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

இனி, எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தால் என்ன ஆகும்? ஒரு சின்ன உதாரணம் சொல்லுகிறேன். ஒரு ரெயில் வண்டி என்றால், 100 பெட்டிகள் இருக்கின்றன என்றால், அதற்கு இவ்வளவு என்ஜின் என்று போடுகிறார்கள். அதைவிட்டு, ஒரே எஞ்ஜினைப் போட்டால் எவ்வளவு லாபகரமாக இருக்கும் என்று பார்க்கவேண்டும் என்றால் நிச்சயமாக அப்படிச் செய்தால் எவ்வளவு தொல்லையாக இருக்குமோ அதே விளைவுதான் இப்பொழுதும் இருக்கும். வித்தியாசம் இருக்காது.

இனி, மக்களை மதிக்காவிட்டாலும், உண்மை என்ன என்று புரிந்து கொண்டு, சட்டத்தையாவது மதிக்க வேண்டும். சட்டத்திற்கும் மதிப்புக் கொடுக்கவில்லை. அமைச்சர்கள் சொல்லுகிறார்கள், நிபுணர்களையெல்லாம் கலந்துதான் செய்திருக்கிறோம் என்று. ஆராயாமல் எதையும் செய்வது இல்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆனாலும் எத்தனை சட்டங்கள் அடிபட்டுக் கொண்டே இருக்கின்றன என்பதையும் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். ஏதோ சில நோக்கங்களுக்காக, தனக்கு வேண்டும் என்பதற்காகச் செய்யும்போது, சட்டம் வளைந்து கொடுப்பதாக இல்லை அதையும் கவனிக்க வேண்டும். ஏற்கனவே 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று செய்திருந்தது, சுப்ரீம் கோர்ட்டில் செல்லாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதைச் செல்லாதது என்றதால், 17-வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதற்கடுத்தாற்போல கோலக்நாத் கேசில் தெளிவான தீர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்புபற்றி சட்ட அமைச்சரவர்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை, நினைவூட்டுகிறேன். அந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலிருந்து இரண்டு ஒரு வார்த்தைகளை மட்டும் இங்கே வாசிக்க விரும்புகிறேன். இது அத்தனையும் அந்த கேஸ் பற்றியதுதான் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். **The result is that the Constitution Seventeenth Amendment Act, 1964, inasmuch as it takes away or abridges the Fundamental Right, is void under Article 13 (2) of the Constitution.** ஆகவே, 13 (2)-படி அது நிச்சயமாகச் செல்லாது, சட்ட விரோதமானது என்று சுப்ரீம் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அதோடு விடவில்லை, **In the Constitutional field therefore to meet the extraordinary situation that may be caused by our decision, we must evolve some doctrines which**



**have roots in the recent precedents so that the past may be preserved and the future protected.** என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்னும் அதிகம் விளக்கமாக இருக்கிறதே தவிர செய்துவிட்டார்கள் தவறு தவறுதான், நடந்துவிட்டது, என்பதையெல்லாம் **Prospective over-ruling** என்ற அளவில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், **The law declared by the Supreme Court is the law of the land** என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். எத்தனையோ தெளிவான கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களுக்கு ஒவ்வாதவகையில், அவசரக் கோலத்தில், நிறைவேற்றி, நாட்டுமக்களைக் கெடுத்து, உற்பத்தியையும் குறைக்க வேண்டாம் என்று மிகமிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இனி, ஒரு சின்னக்கருத்தை நண்பர் அவர்கள் சொன்னார்கள். ஜப்பானில் இரண்டு ஏக்கர், ஏழு ஏக்கர் என்று வைத்துக் கொண்டு உழவில்லையா, இங்கே மட்டும் என்ன வந்தது என்கிறார். உண்மைதான். ஜப்பானில் 2 ஏக்கர், 7 ஏக்கர் வைத்திருக்கிறார்கள் என்றால், அந்த நாட்டின் நிலை என்ன, நம் நாட்டின் நிலை என்ன என்பதைப்பார்க்க வேண்டும். இங்கே நம்முடைய மக்களுக்கு விவசாயமே தொழிலாக இருக்கிறது. அங்கே இரண்டு ஏக்கர் வைத்திருப்பவருக்கு அது பொழுது போக்கு. இரண்டரை ஏக்கரை வைத்துக்கொண்டு பிழைக்கவில்லை. அவன் ஏதோ கொஞ்சம் ஓய்வு நேரத்தில் சில மணி நேரம் நிலத்தில் வேலை செய்வது என்று வைத்துக் கொண்டிருக்கிறான். அதோடு இந்திய நாட்டில் இருக்கும் நிலையை ஒப்பிட்டுச் சொல்வது, அவனைப் போலவே இங்கே காப்பியடிப்பது என்பது எப்படிப் பொருந்தும். இங்கே பவர் ட்ரில்லர் விலை 10 ஆயிரம் ரூபாய்; ஆனால் அதுவே அங்கே ரூ. 1,500 தான். அதையெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். அதேபோல ஒரு மூட்டை அமோனியா சல்பேட் வாங்கவேண்டுமென்றால், இங்கே, நாம் $4\frac{1}{2}$ மூட்டை நெல் விற்கவேண்டும். ஆனால் அங்கே $1\frac{1}{2}$ மூட்டை நெல் விற்றால் போதும். விவசாயத் தொழில் அங்கே அவ்வளவு லாபகரமாக இருக்கிறது. இயந்திரங்களை வைத்துக் கொண்டு சிக்கனமாக, ஏதோ ஒரு தமாஷாவாக பொழுது போக்குக்காகச் செய்கிறார்கள். ஆகவே, (மணியடிக்கப்பட்டது) ஒரு நிமிஷம் கொடுங்கள்.

ஆகவே, மண்ணாசை என்பது உண்மைதான். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பதில் முதன் முதலில் மண்ணாசைதான். ஆண்டவனையோ, இயற்கையையோ நம்பி, தான் உழைத்து, நாட்டுக்குச் சேவை செய்ய இருக்கிறான் உழவன். மாடு கன்றுக்காக வைத்து நமக்குப் பால் கொடுப்பது போல, ஆசை இல்லை என்றால், எதுவுமே கிடையாது. ஒரு கணக்குப் போடுங்கள். 30 ஏக்கர் என்று வைத்தபோது, எத்தனை ஏக்கரில்....(மணியடிக்கப் பட்டது) தயவு செய்து அரை நிமிஷம் கொடுங்கள். கொஞ்சம் பொறுங்கள்.

30 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவன், 15 ஏக்கரிலிருந்து 30, ஏக்கர் வரையில் வைத்துக்கொண்டிருப்பவன் எவ்வளவு கடனாளியாக
இருக்கிறான் என்று பாருங்கள். அவன் ஊதாரித்தனம் செய்கிறானா இரவு 8-30
எவ்வளவு ஊதாரித்தனம் செய்கிறான் என்று பாருங்கள். அவன் எவ்வளவோ கஷ்டப்பட்டு தன்னை காப்பாற்றிக்கொள்ளமுடியாமல், நாட்டை காப்பாற்றுகிறான். கன்றுகுட்டியின் மேல் உள்ள ஆசையினால் மாடு கஷ்டப்படுவதைப் போல, அவன் தன் கஷ்டத்தை பொருட் படுத்தாமல் நாட்டைக் காப்பாற்ற ஆசைப்படுகிறான். அவனுடைய அந்த ஆசையை வேறுவிதமாகக் கொள்ள வேண்டாம். ஆகவே உண்மையிலேயே நேர்மையாகச் சட்டத்தை இயற்ற வேண்டும். அப்படித் தவறினால் அது நாட்டுக்கு நல்லது அல்ல, உங்களுக்கும் நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, speaking generally on this Bill, I am in complete agreement and consonance with this Bill If, however, I pass any remarks, the motive is just to better the Bill or perfect the Bill. I am no conservative in outlook; I am a progressive rationalist in temperament. So the idea behind my remarks is only to better the Bill.

A doubt lurks in my mind about the constitutional or legal validity of this bill. If I were in your position, I would have asked the Advocate General to come and enlighten this House on the legal implications and whether this Act would not be struck down by the Supreme Court like the previous Act. You are a better authority. Because it is your own pigeon, you cook your own soup.

You are now trying to replace the old Act by deleting the clause relating to 30 standard acres and introducing a clause for 15 standard acres. You yourself had been criticising the old Act and saying that there had been many loopholes. You have been saying in season and out of season that you have got to plug the loopholes. What steps have you taken to plug the loopholes and should you not consider it? The sponsors of the old Act may be the Congress Party. You were saying that the Congress Party was saying 'Tiger is coming, tiger is coiming' and that the landholders woke up and entered into nefarious transactions. What is the action you have taken? You may say that you have announced in your election manifesto that you would reduce the ceiling on land to 15 acres. You have been saying this for the past three years. If ever you have been serious about it, you should have brought this into force from the day you came to power. Why did you date back the coming into force of this Act to 15th February? You announced that it would come into force from 26th February. There were a series of main questions and supplementary questions and you have been saying with vehemence that any transaction from 26th February will be null and void. I appreciate your stand. What has transpired in between and why did you date back the coming into force of this Act to 15th February? I doubt your bona fides and you owe an explanation to this House. I would advise you to date it back to the very day you came to power. That would have been better. (Interruption) It is your job. I am not here to help the Government. I am hereto criticise and point out the defects in the Bill. If you are serious, please rectify the defects; otherwise, allow it to go as it is.

I believe that the very idea of standard acre is fallacious. What is the theory we have adopted? By 'we' I mean the Government or my Party. That is the very reason why this Bill has been torn to pieces here and there. We have defined the standard acre on the basis of the tax paid. But that has proved to be not practicable. The income from paddy land is much less than the income from a garden land, tea estate, or coffee or sugar cane plantation. Do you equate both these types of lands? My plea is that you should show some concession to lands where only paddy is grown, like the lands in Thanjavur District, as against lands where cash crops are grown. Therefore the standard should vary and you should consider this aspect. You should not simply say 'fifteen standrard acres'. It really hits some poor people. But it does not hit the people with whom you have some quarrel. I say that the definition of standard acre will have to be recast. That is my feeling.



The Chief Minister has pointed out that fifteen acres is the ceiling in Kerala. But there fertility and the crop grown on the land are taken into consideration. Fifteen acres may be a viable unit as far as Kerala is concerned. By no stretch of imagination can we equate 15 acres of land in Tamil Nadu, say in Chingleput or Tiruttani, the driest part of the State, with fifteen acres in Kerala. My Friend is goading me to say about Ramanathapuram. In Ramanathapuram even 100 acres is not a viable aunit. It is a parched area and there is very little rain. If you can appreciate my point I am satisfied. So viability must be our consideration, and not the tax payable on the land.

Everybody is bringing in legislation which is hitting the farmer. I am not taking any vakalat for the farmer. I am not a farmer and I do not know much about agriculture.

What about the urban income? You may be thinking on this line that the intelligentsia is making a lot of money. You are terribly afraid of them. The poor man, who is not vocal, who is not vociferous, is the man you are always thinking of in any reform.

(The Hon. Chief Minister was seen conversing with Thiru K. Cheemaichamy.)

I know what the Chief Minister is talking about. He is perhaps asking why educational institutions or Vidyalayas should not be taxed. (Interruption: Hotels) You have no idea. Hotels are not making so much profit as you believe. Hotels are paying income-tax, sales tax and so many taxes.

Joking apart, one of the clauses provide that unmarried girls should be given only ten acres, whereas an unmarried boy is given fifteen acres. Why should there be this disparity? Both men and women must be considered equals before law. If there is no such disparity, I leave the matter there. I speak subject to correction. (Interruption: Stridhana). I am coming to that. Why should a girl who gets married and goes to the family of her spouse be denied an equal share with the boys? (Interruption.) I may commit a mistake. Are you going to continue that mistake? Stridhana should also be equated to the boy's share and changed to 15 acres.

Sir, I am very sorry to refer to your tactics. You are only playing to the galleries. You are not very serious about it. If you were serious you should have thought about it even on the day when you came to power. Of course, it finds a place in the election manifesto. But why did you wait for so many years? I am led to believe that somebody in the unholy electoral alliance is forcing your hands to bring forward this Bill. As the Hon. Chief Minister has stated, on this side the Congress Party is not satisfied and on the other side the Communist Party is not satisfied. So also the Swatantra Party is not satisfied. Thus you are not satisfying anybody but you are only playing to the galleries. You must be terribly afraid of the leftist parties and they are goading you. You have been silent for three years and now only you have brought forward this Bill. My fear is that somebody is forcing your hands to bring it in this House.

Lastly, whatever may be the object of the legislation, you must think whether this ceiling on landholdings is a proper one. It must be a viable unit. We have been saying on so many occasions that everything must

be economically viable. Even in the Report of the Ganapatyiha Pillai Committee it is stated that the income from a 30-acre farm will not be more than Rs. 5,000 per annum. Taking that as a basis if you reduce the extent to 15 acres, what will be the income ? It will be about Rs. 2,500. Do you think that in any circumstances a person who owns 15 acres can educate his children and also maintain his family ?

Now I may develop a new thesis. For instance, my son is a student in a medical college and my daughter is a student in some college. I am in a position to educate them because I get an urban income. But how can a person who owns only 15 acres educate his children ? So you must make the holding an economically viable unit.

Lastly, I am afraid production. . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் அவர்கள் பேச்சை ஆரம்பிக்கும் நேரத்தில், நான் ப்ரொக்ரெஸிவ்-வாதி, முன்னேற்றக்காரன் என்றெல்லாம் ஆரம்பித்தார்கள். இப்பொழுது வேறு விதமாகப் பேசுகிறார்கள். என்ன முடிவு இந்த அரசு எடுக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லுவார்களா ?

**THIRU K. VINAYAKAM :** That is not my job. I will never walk into your trap. I know you are laying a trap for me. My job is only to criticise the Bill. I am not going to tell you any solution and that is not my job.

**THE HON. THIRU P. U. SHANMUGAM :** The duty of an honest Opposition Party is not only to criticise it but also offer a solution to solve it.

**THIRU K. VINAYAKAM :** Did you consult us before you brought forward this legislation ? You have never taken us into your confidence. You never gave an inkling. . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் இந்த "பில்" கொண்டு வந்த போது "முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர்" என்று இருந்த நேரத்தில் அதை "15 ஸ்டாண்டர்டு ஏக்கராக ஆக்குங்கள்" என்று எதிர்க் கட்சியின் சார்பில் நாங்கள் பேசினோம். நாங்கள் விமர்சனம் செய்தோம். அதே நேரத்தில் எங்களுடைய அபிப்பிராயத்தையும் சொன்னோம். அது போல் தாங்கள் சொல்லும் அபிப்ராயம் என்ன ? என்று கேட்கிறேன்.

**THIRU K. VINAYAKAM :** I will reserve my opinion. If you ask me in privacy I will tell you.

So, this Government owe an explanation to this House on the point, viz., why they have advanced the date of commencement of this Bill from 26th February to 15th February. Are there any nefarious transactions in between those two dates? If you are really serious, you should have dated it back to the day on which you came to power. With these words, I close my speech.

**திரு. எம். சுரேந்திரன் :** உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தம்முடைய கருத்தைத் தனியாகக் கேளுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய பிரதிநிதியாகப் பேசினாரா ? அல்லது தனி உறுப்பினராகப் பேசினாரா ?



**THIRU K. VINAYAKAM :** I spoke as a representative of the Congress Party. I am in general agreement with the Bill but there are some defects. As a lawyer I have pointed out some of them and the Hon. Minister for Law is there to safeguard the interests of the Government by plugging the loopholes in the Bill.

**DR. H. V. HANDE :** Sir, on befalf of the Swatantra Party we have moved an amendment namely that the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Bill, 1970 be circulated for the purpose of eliciting opinion thereon. Sir, when the leader of our party Thiru Cheemaichamy, was speaking on the Bill, the distinguished Chief Minister intervened and asked whether our revered leader, Rajaji, had referred any Bill for eliciting public opinion during his term of office. I wish to inform him and the House that on 4th January 1954 the Hon. Thiru Manickavelu Naicker who was then a Minister introduced the Bill by saying—

'I beg to introduce the Madras Hereditary Village Officers (Extension to Pudukottai) Bill, 1953.'

Then the hon. Member, Thiru K. P. Gopalan moved the following amendment :—

'That the Madras Hereditary Village Offices (Extension to Pudukkottai) Bill, 1953, be circulated to elicit public opinion thereon.'

Subseqently there was discussion on the amendment. Then the hon. Member, Thiru Vinayakam asked—

'Sir, are the Government withdrawing the Bill. If so, I want to speak '.

Then the Hon. Speaker intervened and said —

"The Government have accepted the amendment of the hon. Member Mr. Gopalan. The Bill will be circulated for eliciting public opinion, if the amendment of Mr. Gopalan is approved by the House. I shall put the amendment of Mr. Gopalan to the vote of the House '.

Then the amendment was put to the vote of the House and carried.

Now, the most important thing that I want to point out is that even earlier than that in 1937 when my revered leader Rajaji was the Chief Minister, the Agricultural Debt Relief Bill was referred for eliciting public opinion.

Then our Hon. Chief Minister asked the leader of our Party, what he meant by public opinion. There is no confusion about it as far as our party is concerned. There may be confusion here and there as far as other parties are concerned. We want this Bill to be circulated for eliciting the opinion of the High Court. My hon. Friend Thiru Vinayakam has suggested that the Advocate-General himself should come here and speak on this Bill and I agree with his suggestion. Sir, this Bill is terribly ill-conceived and ill-drafted and there are lacunae in this Bill. This Bill will be struck down, if challenged, by the High Court and the Supreme Court and this is the prediction I am making now. After a couple of years people will remember that such and such a person on behalf of the Swatantra Party has made this statement and it has become a fact.

Then, Sir, the Advocate-General must come here and explain the implications of the Bill. We must know how exactly this is not *ultra vires* of the Constitution. Also this Bill should be circulated to the Bar Council, Chambers of Commerce, Cultivators' Association, etc. Sir, we have not moved our amendment in a haphazard manner and our party has discussed it very clearly and calmly.

Now I come to the Bill. As I have stated earlier in my point of order, this Bill has been very badly drafted. The short title of the Bill says—

'This Act may be called the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970.'

No mention is made about the amendments made to the original Act Also in clause 2 of the Bill it is stated—

'......in section 3 of the pricipal Act......'

'....for clause (12), the following clause had been substituted....

'......for the figures and words "25 standard acres",

'"30 standard acres", "5 standard acres", "30 standard acres" and "5 standard acres", the figures and words "10 standard acres," "15 standard acres," "5 standard acres". "15 standard acres" and "5 standard acres" had been respectively substituted ........'

Thus this Bill is an amending Bill and it has been badly drafted. This will definitely be struck down because of the flimsy drafting.

Because the time at my disposal is very little, I shall briefly mention certain other points. Personally our Party has nothing to gain by talking in the manner in which we are talking. My submission is that there are landlords on both sides of the House. There are landlords who own more than 15 acres and more than 30 acres under different names. By talking in the manner in which we are talking in this House, do we get the support of the landlords? The answer is 'No'. We are not bothered about the election and the vote. We mention what is correct, what is Satya irrespective of whether we please any group or not. This is a Bill which will do good neither to the land, nor to the cultivator nor to the Government.

In the beginning itself I said that this Bill was inhuman and unconstitutional. I have explained clearly how it is unconstitutional. Now I will explain how it is inhuman. Are we not systematically and scientifically ruining agriculture by enacting this law? That is the question which I want the Chief Minister to consider. For everything you think of ruining only the farmer. By raising the electricity tariff, you are ruining the farmer. By procurement of food-grains, you are ruining the farmer. Now by enacting this law for reducing the land ceiling, you are again ruining the farmer. One man is easily available for being ruined. For everything the person you think of is the farmer.

The next point I want to stress is that even those who own above 15 standard acres are going in for loans. Does this not show their acute want of capital to develop their lands? What will be the fate of those



who own much less than 15 or 10 acres? When even a person who owns more than 15 acres goes in for loans, how can a small land holder carry on cultivaion? The plight of a small man is pitiable Will he be able to cultivate the land? Will he not make benami transaction, if he is not able to cultivate? How is the surplus land to be distributed? Will the workers be provided with work? How many will get employment? Will we be able to cater to the needs of at least one-tenth of the farmers? It is impossible.

I want to stress another point. What about mechanisation? If we think even 30 acres is uneconomical for introducing mechanisation any further reduction will be detrimental to production. In course of time partition will take place and even this land will be broken into pieces. Dr. A. Lakshmanaswami Mudaliar has been harping on this for a number of years. It is a very serious point which I want the Government to consider. What is the minimum holding for a tractor?. On one side we want to encourage the use of tractors and on the other we cut the lands into small pieces. There is no point in bringing in this enactment, and in providing a place for some members of the House on the proposed committee. We are not interested in the committee and we are not going to serve on it either.

If production is less, it means further introduction of control and going to the Centre with a begging bowl. If the present Government wants to go to the Centre permanently, we have no comments. The present Government should realise that they came to power because of the non-availability of rice in 1967. If rice production goes down it will be a very serious thing. It will affect not only the rural parts but also the urban parts. I would prefer the Government allotting waste lands and fallow lands with the provision of pumpsets and allocating more waste lands and fallow lands to the poor with pumpsets and other facilities and ask them to produce more, instead of transferring excess lands coming under the Ceiling Act. This is not in any way going to increase the production nor all landless people are going to get lands.

What about mortgaged lands? Has that point been taken into consideration? How can the Government get back the mortgaged land?

(The time bell was rung).

Every point we have analysed calmly and then brought before the House. Our Party alone has taken a different stand from the stand of the other parties who have all combined on this issue. That is why I request the Speaker to give us a little more time.

Mr. Subba Raja and some Members from the new Congress were talking about compensation. The compensation as per Supreme Court verdict on Bank Nationalisation is going to be more than Rs. 100 crores. Taking the extent of the excess lands, which the Government presumes is about 2 lakh acres, do the Government have enough money to pay the market value? Even article 31-A says that we have to give the market value. If that is done, even the unconstitutional thing will get constitutional validity. Instead of this, if the compensation amount is utilised on waste and fallow lands, production will increase.

I would prefer no ceiling for rice production. Rice is much more important than sugarcane. What is the point in putting a ceiling on rice production ? We have pumped lakhs an lakhs of rupees into agriculture in the Five Year Plans and we have failed. Why ? Because it is unscientific. About Japan, Is have got statistics.

Landholders have got into the habit of not bothering about anything. Whenever a measure is brought forward, they try to play the game of the ruling party, whether it is the Congress or the D.M.K. and approaching the ruling party for favours. My erstwhile Colleugues in the Legislative Council Dr. A. Lakshmanaswami Mudaliar and Sri K. Balasubramania Ayyar have sounded a note of warning. In 1961 when the Congress Party brought forward a ceiling of 30 standard acres, persons owning between 15 and 30 acres thought that they were safe, This is a warming to all landholders—big and small. To-day look at the amendment given notice by the Communist Member. Even the persons owning between 5 and 10 acres will be finished. It is a very serious thing. All the persons who own above 5 acres will be robbed by the future Government. A stage may come in the history of India when owning even one acre will be a sin !

There are lakhs and lakhs of agricultural labourers. Do you think it is possible to look after these people by cutting the land into pieces ? The very people who will employ them are going to be removed. This will hit the agricultural labourers more than the landholders. There will be no one to employ them. They will feel as desperate as factory workers will feel when factories are closed. It is impossible to give adequate lands even to one-tenth of the landless labourers. By this enactment the Government are deliberately throwing the labourers out of employment.

(The time bell was rung)

I will finish my speech soon. Ours is the only party with a different policy and principle. Let the Government hear the other side of the case. I cannot speak in such a fiery manner as my distinguished Friend Mr. N. Sankariah. I request that a few more minutes may be allowed to me.

The proposal to reduce the ceiling limit further to 15 acres will be wholly insufficient for a decent agricultural family depending on lands alone for sustenance. Even under modern and improved method of agriculture, the maximum return that could be expected from 15 acres would be only Rs. 3,000. Recently the Central Government has fixed the exemption limit for income-tax at Rs. 5,000 on the basis that it would be the minimum income in these days for a family. The income from 15 acres will be only about Rs. 250 per month, which is only about half of that income Therefore it is a very serious thing and the Government should consider it.

Then, Sir, it is generally accepted that agriculture needs capital and skill for its efficient operation and you will be ruining the very operation of agriculture. Costs of cultivation have increased beyond measure. For improved methods of agriculture and mechanisation to a minimum extent there should be an optimum extent of holding. What is the solution for this problem ? I have got a solution for it. Efforts should be taken by the Government to promote agro-industries and other rural-based enterprises which would help the landless .



Sir, we are talking of the land reforms introduced in the Communist countries. I have got statistics with regard to those countries. In Yugoslavia they have increased the extent of holding from 25 acres to 40 acres. In other countries also there is a minimum holding which would ensure optimum and increased production.

Then the immediate effect of the change, if it is given legal effect, will be a serious setback to the efforts which have been made by the Tamil Nadu Government to increase food production. The effect even on those whose holdings are less than 15 standard acres will be adverse to agricultural progress. Many of those whose holdings are too small will now be fired with the hope of enlarging their holdings andwill concentrate on retaining their savings for such purchase instead of investing them in improvements.

Then, Sir, the long-term effects will be even more disastrous. Economic progress has meant in all countries the change-over from a subsistence agriculture to scientific cultivation for the market. In the U.K. where the population is more dense than in Tamil Nadu, 20 acres are considered to be the minimum holding which deserves to get any assistance from the Government.

Then, Sir, during the discussion on the Budget, my distinguished friend Thiru Balasubramanian referred to the individual holdings in Japan. I have got statistics about Japan. In Japan an individual has got 5 chos or 9 acres for cultivating paddy and vegetables and 10 chos or 18 acres for cultivating corn and other things, irrespective of the family members, whether minor or major. The entire cultivable land area of the Thanjavur district and Japan are roughly equal. The method they adopted was that they used to plaster or cement the ground, fill the same with rich sand upto 1 to 1½" in certain areas and 3/4" in certain areas. This involves heavy capital expenditure but the water will be stagnant and manure will not go beyond the plastered portion thereby diverting all manure and other minerals to the plant. By this method what we get by way of production in 100 acres they get in 8 to 10 acres. We have vast land area and does any one really believe that such methods are possible here. Why is Russia finding a great shortage in food production ?

Now to sum up, this Bill is an anti-production and anti-labour measure and this will end up in a spate of litigation which would completely destroy the very farmers for whom we are talking so much in season and out of season. If such an ill-conceived measure is passed into law, the concerned people will go to the court and impoverish themselves. So, I request the Hon. Minister to accept our amendment which seeks to refer the Bill for eliciting public opinion.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் பேசுகின்ற நேரத்தில் திரு. சீமைச்சாமி கேட்ட ஒன்றுக்குப் பதில் அளித்தார். இந்த மசோதாவைப் பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு விட வேண்டும். திரு. ராஜாஜி*

காலத்தில் அவ்வாறு மசோதாக்கள் பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டிருக்கின்றன என்கிற ஒரு விளக்கத்தையும் தந்தார்கள். சட்ட சபை ரெவியூ என்பதில் ராஜாஜி காலத்தில் எவ்வளவு மசோதாக்கள் பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டிருக்கின்றன என்று பார்க்கிறபோது

'During the term of this Assembly only one Bill was circulated for eliciting opinion thereon. The Bill was accordingly circulated and the opinions received were printed and circulated to all the members of the Assembly on the 17th March 1954 but the Government did not proceed further with the Bill.

என்று ஆரம்பிக்கப்பட்டு, முடிவு என்ன ஆகியிருக்கிறது

என்றால் "On 22nd August 1955 the Bill was withdrawn with the permission of the House". பிறகு திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. திரும்பப் பெறுகிற நோக்கத்தோடு பொது மக்கள் பார்வையில் அந்த மசோதா வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த உச்ச வரம்புச் சட்டத்தைத் திரும்பப் பெறுகிற நோக்கம் அரசுக்கு இல்லாததனால் பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு விடவேண்டியதில்லை. பொது மக்கள் அபிப்பிராயம் தனியாகக் கேட்கவேண்டும் என்பதல்ல. எங்களுடைய தேர்தல் பிரகடனத்திலேயே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதாக உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படும் என்பதாக கொள்கையை எடுத்துச் சொல்லி, மக்களிடத்தில் வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஏற்கனவே பொது மக்கள் அபிப்பிராயம் கிடைத்திருக்கிறது என்பதை திரு ஹாண்டே அவர்கள் அறிவார்கள். அந்த அபிப்பிராயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை அரசு கொண்டு வருகிறது.

**Dr. H.V. HANDE:** Sir, the very idea of our asking the Government to concede our requests namely the circulation of the Bill for eliciting public opinion, is that if it is left to the public opinion the people especially experts will definitely say that this Bill is absolutely unwanted. That is why we have requested the Hon. Chief Minister to circulate it for eliciting public opinion.

• **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, 'நில உச்ச வரம்புச் சட்டத்தை திருத்தச் சட்டமாக கொண்டு வந்திருப்பது சட்டப்படி செல்லுமா என்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தைப் படித்துக் காண்பித்து விளக்கம் கேட்டார்கள். சட்ட அமைச்சர் என்கிற முறையில் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்து விட்டால் இந்த பயம் வெளியே இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது மிகுந்த உணர்ச்சிவசப்பட்டு "யார் இந்த மசோதாவைத் தயாரித்தது. என்ன அபத்தம்—ப்ரின்சிபல் ஆக்ட் என்று அங்கங்கே வருகிறதே, எங்கே பிரின்சிபல் ஆக்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறது ?" என்றெல்லாம் கேட்டார்கள். எனக்குக் கூடச் சற்று வருத்தமாக இருந்தது. காரணம் நானே தான் அந்த மசோதாவை பல இரவுகள் முழுவதும் படித்துப் படித்துத் திருத்தம் செய்துகொண்டிருந்தேன். திரு. ஹாண்டே அவர்கள் கோபப்படாமல் சற்று நிதானத்துடன் அவர் படித்த வாக்கியத்திற்கு மேல் வாக்கியத்தையும் படித்திருந்தால்—பிரின்சிபல் ஆக்ட் என்ன என்பது சொல்லப்பட்டிருப்பது தெரிந்திருக்கும். அவர் படிக்கவில்லை.

சட்டமே மோசமாக டிராப்ட் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார். இந்தச் சட்டமே செல்லாது என்று வாக்குக் கொடுத்துவிட்டார்கள். இப்படிச் சொல்லக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும்,



அப்படி ஒருகால் இந்தச் சட்டம் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டு செல்லாததாக ஆக்கப்படுமானால்— இந்தத் திருத்தச் சட்டம் ஒன்றுதான் செல்லாது போகுமே தவிர பிரின்சிபல் ஆக்ட் அப்படியே இருக்கும். அதுவும் செல்லாது போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் மிகுந்த கெட்டிக்காரத்தனமாக ப்ரின்சிபல் ஆக்டையே திருத்தாது—இதை ஒரு தனி திருத்தச் சட்டமாகக் கொண்டுவந்திருக்கிறோம் என்று நான் பெருமையோடு எண்ணிக்கொண்டிருக்கிறேன். இது போல சட்டம் செய்வதற்கு ஏதாவது முன்னோடி இருக்கிறதா என்று பார்த்ததில் பம்பாய், லாண்டு அக்விசிஷன் ஆக்ட்டில்—இதுபோல திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். "ஆஸ் இப்" என்று வார்த்தைப் போட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக திருத்தச் சட்டம் அடிபட்டாலும் பிரின்சிபல் ஆக்ட் அப்படியே இருக்கும் . அதைப் பார்த்து—அப்படியே நாமும் இங்கே போட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோலக்நாத் கேஸ் வந்ததற்கு பின்னாலே இந்த சட்டம் செல்லுமா என்ற வாதம் எழுப்பப்பட்டது. அட்வகேட் ஜெனரலை அழைத்து வர வேண்டாமா என்று கேட்டார்கள். அட்வகேட் ஜெனரலை அழைத்து வர வேண்டுமா, வேண்டாமா என்பதை இந்த அரசாங்கம்தான் முடிவு செய்ய வேண்டும். அட்வகேட் ஜெனரலைக் கலந்தோம். அவர்கள் கைப்பட எழுதி வாங்கியும் இருக்கிறோம். இந்தச் சட்டத்தை கோலக்நாத் கேஸ் கொஞ்சங்கூடப் பாதிக்காது என்று ஒபினியன் வாங்கித்தான் செய்திருக்கிறோம். அவர்களுக்கும் சட்டம் தெரியும் நமக்கும் சட்டம் தெரியும். அரசியலமைப்புச் சட்டத்தில் 31-ஏ பிரிவு 31-பி பிரிவு என்ற இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. 31-ஏ பிரிவுப்படி நிலச் சீர்திருத்தம் என்று எதைக் கொண்டு வந்தாலும் செல்லும் என்பதுதான். அப்படியே செல்லாது என்று யாராவது சொல்லிவிடுவார்களோ என்றுதான் 31-பி பிரிவு கொண்டு வரப்பட்டது. 1962-ஆம் வருஷத்திய நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபொழுது அந்தச் சட்டம் 9-வது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டிருந்தாலும் செல்லாது என்று சொல்லப்பட்டது. கோலக்நாத் கேஸ் தீர்ப்புப்படி 31-பி பிரிவு 9-வது ஷெட்யூலுக்குள் வராது என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் 31-ஏ பிரிவு அதற்குள் வரும்.

லேண்ட் ரிபார்ம்ஸ் என்று வரக்கூடிய சட்டம் எல்லாம் 31-ஏ பிரிவின்படி செல்லும். ஆனால் அதற்கு பிரஸிடெண்டினுடைய அனுமதி பெற்றால் தான் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் அதைப் பெற்றுவிட்டோம் ; அதைப் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசாங்கம் அந்த அனுமதியைக் கொடுக்க வேண்டுமோ அந்த அரசாங்கம் தான் நாள் தோறும் இப்படிப்பட்ட நிலச் சீர்திருத்தங்கள் இதை விட மிக வேகமாகச் செய்ய வேண்டுமென்று மாநிலங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஆட்சியின் அனுமதியைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையோடுதான் இதைக் கொண்டு வந்தோம். அதுவும் கிடைத்து விட்டது.

31-ஏ பிரிவின்கீழ் ப்ரொட்டக்ஷன் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நஷ்ட ஈடுக்கு ப்ரொட்டக்ஷன் கிடைக்குமா என்று கேட்டார்கள். நேஷனலைசேஷன் ஆப் பேங்ஸ் வந்த பொழுது கூடச் சொன்னார்கள். 31-ஏ பிரிவு லேண்ட் ரிபார்ம்ஸ் பற்றி மட்டும் இல்லை ; வேறு சிலவற்றைப் பற்றியும் இருக்கிறது. 31-ஏ பிரிவின் கீழ் பாதிக்கப்பட்ட வங்கிகளைச் சேர்ந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டி வருமா என்று வாதிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை முழுவதையும் தொடாமல் விட்டுச் சென்றிருக்கிறார்கள். லேண்ட் ரிபார்ம்ஸ் பொறுத்த வரையிலே அது சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

31-ஏ பிரிவில் செல்லாது என்பதும் சொல்லப்படவில்லை. 31-ஏ பிரிவில் ஒரு ப்ரோவைஸோ இருக்கிறது. அதிலே எக்ஸிஸ்டிங் ஆக்ட் என்று கொடுத்திருக்கிறார்கள். அதற்குட்பட்டால் மார்க்கட் வால்யூ கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். எக்ஸிஸ்

டிங் ஆக்ட் என்றால் என்ன பொருள் என்று பார்த்தோம். 1961-ஆம் ஆண்டிலே 30 ஏக்கர் என்று கொண்டு வரப்பட்ட உச்ச வரம்புச் சட்டமா அல்லது இன்றைக்கு அமலாக்க விரும்புகிறோமே இந்த 1970-ஆம் ஆண்டு உச்சவரம்புக் குறைப்புச் சட்டமா என்ற வாதம் இன்றைக்கல்ல அரசியல மைப்புச் சட்டத்திற்கு 17-வது திருத்தம் கொண்டுவரப்பட்ட நேரத்தில் அங்கே ஒரு உறுப்பினர் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். அப்பொழுது அங்கே சட்ட அமைச்சராக திரு ஏ. கே. சென் அவர்கள் இருந்தார்கள். அன்றைக்கு இருக்கக்கூடிய சட்டம் தானே என்று நேரடியாக அப்பொழுது கேட்டார்கள். ஆனால் அந்தச் சட்ட அமைச்சர் அவர்கள் மக்கள் சபையிலே ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இல்லை. எந்த சீலிங் கொண்டு வருவதாக இருந்தாலும் அது அந்தந்த மாநிலங்களின் அதிகாரத்திற்குட்பட்டது. அந்த அந்த மாநிலங்கள் எந்த சீலிங் நிர்ணயிக்கின்றனவோ அவையெல்லாம் செல்லும் என்பதை அந்தச் சட்ட அமைச்சர் தெளிவாக்கியிருக்கிறார்கள்.

அன்றைக்கும் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு எக்ஸிஸ்டிங் ஆக்ட் என்றால் அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு எந்த எந்த மாநிலங்கள் எப்படி எப்படி எந்த எந்த சீலிங் கொண்டுவருகின்றனவோ அதற்கெல்லாம் நஷ்ட ஈடு பொருந்தும் என்ற வாதம் எடுத்துச் சொல்லப்பட்டது. பல மாநிலங்களிலே நீதி மன்றங்களில் இந்தச் சட்டம் மட்டுமல்ல பல சட்டங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது எக்ஸிஸ்டிங் ஆக்ட் என்றால் அன்று அன்றைக்கு எப்படி இருக்கிறதோ அதைத் தான் சொல்லியிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டிலே இந்தப் பிரச்சினை வந்தது. 1970-லே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் விளக்கமாக **the law prescribing the Ceiling limitation must be in force at the date of acquisition.** என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த நாள் நாம் எடுக்க விரும்புகிறோமோ அந்த நாளிலே உள்ள சட்டப்படி 31-ஏ பிரிவுப்படி நஷ்டஈடு நிர்ணயிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கோலக்நாத் கேஸிலே 31-ஏ, 31-பி என்ற இந்த இரண்டு திருத்தங்களைப்போல் இனிமேல் திருத்தங்கள் கொண்டுவரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். 31-ஏ பிரிவினுடைய திருத்தம் செல்லும் என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். செல்லும் என்றால் பொருள் என்ன ? 31-ஏ பிரிவு இருக்கும்வரை கொடுத்திருக்கின்ற ப்ரொட்டக்ஷன் அடிப்படையிலே எந்த நிலச் சீர்திருத்தமும் கொண்டுவரலாம். அது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் அந்த கேஸிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே சுப்ரீம் கோர்ட் 29—10—1969 அன்று ப்ராஸ்பெக்டிவ் ஓவர்ரூலிங் கொடுக்கிறோம் என்று சொல்லியிருககிறார்கள். அமெரிக்க நாட்டு அரசியலமைப்புக்குத்தான் அந்தத் தத்துவம் பொருந்தும், நம்முடைய அரசியலமைப்புக்கு அந்தத் தத்துவம் பொருந்தாது ஆனால் அதையும் தலைமை நீதிமன்றமே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 31-ஏ பிரிவு இருக்கும்வரை எந்தச் சட்டமும் கொண்டுவரலாம் என்று கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். அப்படிக் கோடிட்டுமட்டும் காண்பித்தால் டாக்டர் ஹண்டே போன்றவர்களுக்குச் சந்தேகம் வரும் என்பதால் 29—10—1969 அன்று ப்ராஸ்பெக்டிவ் ஓவர்ரூலிங் என்றால் என்ன என்பதற்கும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்க நாட்டிற்குத் தான் பொருந்தும், நம்முடைய பிரச்னைக்குப் பொருந்திவராது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 31-ஏ பிரிவு செல்லும், 31-ஏ பிரிவின் அடிப்படையிலே கொண்டுவரக்கூடிய திருத்தச் சட்டங்களும் செல்லும் என்ற விளக்கத்தை லேட்டஸ்ட் ஜட்ஜ்மெண்டிலே தெளிவாக்கியிருக்கிறார்கள்.

**They did not accept the doctrine of prospective over-ruling in all its implications as understood by the American Courts. They merely denied to Parliament the Power after February 27, 1967( date of Golaknath's case judgment) to amend the Constitution so as to take away**



**any of the fundamental rights of the people with amendments made prior to that date (prior to Golaknath's case) and action taken pursuant to that amendment to Article 31-A before and after 27th February 1967.**

17-வது திருத்தச் சட்டம் செல்லும், திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே கொண்டுவரப்பட்ட சட்டங்கள் கோலக்நாத் கேஸுக்கு முன்னாலேயும் செல்லும் பின்னாலேயும் செல்லும் என்று வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டம் அதனால் பாதிக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குள்ள சட்டப்படி இந்தச் சட்டம் செல்லும். செல்லாவிட்டால் எந்த அளவிற்குப் பாதகம் என்பதற்கும் விளக்கம் சொன்னார்கள்.

இன்னொரு விளக்கத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு சட்டம் கொண்டுவரப்படும்பொழுது அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருக்கிறதா என்று வாதிட்டுப் பார்க்கிறோம். அந்தத் தரப்பிலே இருந்து வாதங்களைச் சொன்னார்கள். நாங்களும் சொல்கிறோம். ஆனால் என்றைக்கோ ஒருநாள் —டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆசைப்பட்டார்கள். அவர்களுடைய ஆசை நிராசையாகவேண்டும் என்று நான் சொல்லவில்லை, அவர்கள் ஆசைப்படட்டும்—அவர்கள் ஆசைப்படுவதுபோல் சுப்ரீம் கோர்ட் செல்லாது என்று சொல்வார்கள் என்று அச்சப்பட்டுக்கொண்டு ஒரு சட்டத்தை, சீர்திருத்தச்சட்டத்தை, மக்களுக்கு நன்மைதரக்கூடிய சட்டத்தைக் கொண்டுவராமல் இருக்கக்கூடிய கோழைகள் அரசு அல்ல இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செல்லாது என்று சொன்னால் அந்தத் தீர்ப்புக்கிடையேயும் மீண்டும் அந்தச் சட்டத்தை எப்படிச் செல்லுபடியாக்குவது என்று முயற்சிசெய்வோமே தவிர அதற்காக பயந்து அச்சப்பட்டு அமர்ந்துவிடமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குக்கூட மத்திய அரசை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். ஃபண்டமென்டல் ரைட்ஸை, அடிப்படை உரிமையை எடுக்கவே கூடாது என்று ஒரு காலத்தில் சுப்ரீம்கோர்ட் சொன்னது. அதற்குப் பின் ஃபண்டமென்டல் ரைட்ஸை ஓரளவிற்கு மக்களுக்கு நன்மை செய்வதற்காக கட்டுப்படுத்தலாம் என்று அதே சுப்ரீம் கோர்ட் சொன்னது. இன்று அதையெல்லாம் மாற்றி அடிப்படை உரிமையை மாற்றக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சிலகாலத்திற்குப் பிற்பாடு மீண்டும் அடிப்படை உரிமையைச் சமுதாய நன்மைக்காக—டயரக்டிவ் பிரின்ஸ்பில், அதே அரசியல் சட்டத்தில் சொல்லியிருக்கிற சோஷியல் ஜஸ்டிஸ், சமுதாய நீதியைப் பெற்றுச் செல்வதற்காக மாற்றலாம் என்று நாளைக்கு வேறு நீதிபதி அதே தலைமை நீதிமன்றத்தில் சொன்னாலும் சொல்லலாம். அதையெல்லாம் எதிர்பார்த்து இப்படிச் சொல்வார்களோ என்று எதிர்பார்த்து சட்டமே நாம் கொண்டுவரக்கூடாது என்று சொல்வது சரியல்ல.

நாட்டு மக்களின் நன்மைக்காக நாம் சட்டங்களைக் கொண்டுவருகிறோம். தலைமை நீதிமன்றம் பரிந்துரை சொன்னால் அதற்குத் தலை வணங்குவோம். தலை வணங்கிவிட்டு மீண்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி சமுதாய நீதியைப் பெற்றே தீருவோம், அதுதான் எங்கள் கட்சியின் கொள்கை என்று சொல்லிக்கொள்ளி விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் கோளாறு எதுவும் இல்லை. அரசியல் சட்டப்படி இதில் எந்தவிதமான பாதகமும் இல்லை. இந்தத் திருத்தச் சட்டத்தின் பெயரை உன்னிப்பாகக் கவனித்தால் வேறு பெயர் கொடுத்திருக்கிறோம். **Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act 1961.** 1961-ம் ஆண்டுச் சட்டம் **Reduction of Ceiling Act**—இது 1970-ம் ஆண்டுச் சட்டம். ஆழ்ந்து சிந்தித்துத்தான் கொண்டு வந்திருக்கிறோம்.

**Dr. H. V. HANDE :** My submission is this: This title is very clear This is an Amending Act. But under this title, we have several sub-clauses where we refer to the Parent Act. That is why, I say according to ordinary precepts of law as known to me, we could clearly mention this as Amending Act. The Hon. Minister thinks that there is a possibility of the Parent Act also being struck down. He has got misgivings that the Parent Act might be struck down. Otherwise why should he say like that ? Even when introducing the Bill, he is not confident. If they are combined, he thinks there is a possibility of the Parent Act being struck down. They are not clear. They have some sort of reservation. Otherwise why should they think of the possibility of the Parent Act being struck down ?....

(The Hon. Speaker sounded the gong.)

**Dr. H.V. HANDE :** Within a minute, I shall finish. After the seventeenth amendment to the Constitution, it has been clearly laid down that any law relating to acquisition as such of land should provide for payment of compensation which shall not be less than the market value thereof. This is very clear. Compensation on the basis of market value had to be paid. That is the only point I want to stress. The Hon. Minister may answer to the points I have raised (though not now) at least finally when he is replying.

**திரு ஏ.அ. சுப்ராஜா :** இந்த காம்பென்ஸேஷன்..................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடியவில்லை. முடிந்த பிறகு கேட்கலாம்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** மீண்டும் அந்தக் கோபத்தை விட மாட்டேன் என்கிறார்கள். இதைப் படித்துப் பார்த்தால் தெரியும். இரண்டாவது பிரிவில் **Tamil Nadu Land Reforms Fixation of Ceiling on Land Act, 1961** என்றிருக்கிறது. அதுதான் ப்ரின்ஸ்பல் ஆக்ட். அதைத்தான் பின்னால் சொல்கிறோம். , as if என்று அந்த ஆக்டை இப்படி மாற்றிக் கொண்டால் எப்படியிருக்குமோ அப்படி இருக்கவேண்டும்.

பிரின்ஸிபல் ஆக்ட் என்று போட்டிருக்கிறோம். இதில் எந்தவிதமான தவறும் இல்லை. காம்பன்ஸேஷன் பற்றிச் சொன்னார்கள். மார்க்கெட் வால்யு கொடுப்பது வேறு பிரிவு. ஆனால் லாண்ட் ரிபார்ம்ஸ் பொறுத்த வரையில் மார்க்கெட் வால்யூ கொடுக்கவேண்டாம். அதுதான் நமக்குக் கொடுத்திருக்கும் ப்ரொட்டக்‌ஷன் 31 (எ). அவர்கள் சொன்ன அதில் ஒரு ப்ரொவைஸோ போட்டு ஸீலிங் ஆக்டுக்குள் வந்தால் அதை எடுத்தால் மார்க்கெட் வால்யூ கொடுக்கவேண்டுமென்று ப்ரொவைஸோ இருக்கிறது. 17-வது அமெண்ட்மெண்ட் வந்த காலத்தில் இது எழுப்பப்பட்டது. அப்போதே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவில் 15 ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று சொல்லியிருக்கிறோம்.

அக்வயர் செய்யும்போது அப்போதுள்ள ஸீலிங்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் அதுபற்றிய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை வாசித்துக் காண்பித்தேன். ஸீலிங் என்றால், **not fixed by the Central Act but as fixed by State Legislatures as and when they pass separate Acts.**

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்தச் சட்டம் நீதிமன்றத்தில் ஒருவேளை தவறு என்று சொல்லப்படுமானால் பழைய சட்டத்திற்கு ஆபத்து வந்துவிடும் என்று கூறுகிறீர்களே, அப்படியானால் நீங்களே நம்பிக்கையில்லாமல்



இதைக் கொண்டு வருகிறீர்களா என்று கேட்டார்கள். நாங்கள் நம்பிக்கையோடுதான் கொண்டுவருகிறோம். நம்பிக்கையோடு கொண்டுவருகிற அதே நேரத்தில் புதிதாகச் சட்டச் சிக்கல் ஏற்பட்டு ஒரு வேளை தீர்ப்பு வேறு விதமாக இருக்குமானால் இந்தப் பழைய சட்டத்திற்கு ஆபத்து வந்து விடக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியோடு அரசு நடந்து கொள்வது தவறு அல்ல. அந்த வகையில்தான் முதலில் நம்பிக்கை பெற்றிருக்கிறோம்.

அடுத்தபடியாக, ஆபத்து ஏற்பட்டால் பழைய சட்டத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியைப் பெற்றிருக்கிறோம். ஒருவேளை யாராவது வழக்குமன்றத்திற்குச் சென்று தீர்ப்பு வேறுவிதமாக இருக்குமானால் என் இந்தத் தீர்ப்பு இப்படி அளிக்கப்பட்டது என்ற வகையில் அதில் ஏற்பட்டிருக்கிற சிக்கலை ஆராய்ந்து வேறுவிதத்தில் சட்டத்தைத் திருத்தி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருப்பதற்கு இந்தத் தீர்ப்பானால் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றளவிற்குக்கூட அதை மாற்றுகிற அளவிற்கு ஒரு நல்ல திருத்தத்தைக் கொண்டு வருகிற அந்த உறுதியோடும் இருக்கிறோம். நம்பிக்கை இருக்கிறது, பழைய சட்டத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியும் இருக்கிறது. தீர்ப்பு வேறுவிதமாக அமைய யாராவது வழக்குமன்றத்திற்குச் செல்வார்களேயானால் தீவிரமான ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்ற உறுதியும் இந்த அரசுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

**பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**

**(9) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.** இரவு 9—28

*A. Statutory Rules and Orders.*

* 195. Notification issued with G.O. Ms. No. 3015, Revenue, dated the 17th December, 1969 in regard to coming into force of certain provisions of Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 in certain inam estates of Tirunelveli District. (*Laid on the Table of the House under Section* 73 (5) *of the Tamil Nadu Inam Estates* (*Abolition and Convertion into Ryotwari*) *Act*, 1963 (*Tamil Nadu Act* 26 *of* 1963).

* 196. Notification issued with G.O. Ms. No. 3023, Revenue, dated the 17th December, 1969 in regard to coming into force of certain provisions of Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 in certain inam estates of Tirunelveli District. (*Laid on the Table of the House under Section* 73 (5) *of the Tamil Nadu Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Tamil Nadu Act* 26 *of* 1963).

197. Notification issued with G.O. Ms. No. 3168, Home, dated the 23rd December, 1969 in regard to exemption from payment of motor vehicles tax in respect of propaganda van MSY 7496, belonging to the Harijan Sevak Sangh, Madurai. (*Laid on the Table of the House under Section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*,1931 (*Tamil Nadu Act III of* 1931).

198. Audit Report on the Accounts of the Tamil Nadu State Housing Board for 1964-65. (*Laid on the Table of the House under Section* 125 *of Tamil Nadu State Housing Board Act*, 1961.)

---

* Laid on the Table of the House on 6th April 1970.

*B. Reports, Notifications and other papers.*

142. Notifications issued with G.O. Ms. No. 325, Public Works (Electricity), dated the 25th February, 1970 in regard to certain amendments to Tamil Nadu Electricity Board (Term of Office, reappointment, remuneration, allowances and other conditions of service of Chairman and (Members) Rules, 1958, published at pages 363—364 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 20th August, 1958).

† 143. Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1970 (L.A. Bill No. 14 of 1970) with Annexure.

† 144. Tamil Nadu Entertainments Tax and Local Authorities Fianance (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 15 of 1970) with Annexure

† 145. Tamil Nadu Additional Sales Tax Bill, 1970 (L.A. Bill No. 16 of 1970).

† 146. Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 12 of 1970) with Annexure.

147. Notification issued with G.O. Ms. No. 726, Rural Development and Local Administration, dated the 17th April, 1969 in regard to amendment to the Tamil Nadu Town Planning Rules, 1933 published at pages 111 to 122 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 28th March, 1933.

148. Return of assets submitted to the House by Hon. Deputy Speaker and 24 Members of the Tamil Nadu Legislative Assembly in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 27th August 1969 for the period ending 31st March 1967, 31st March 1968 and 31st March 1969.

## இணைப்பு-1.

[499-ம் பக்கத்தில் 729-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**வெளியூர் நகர நிலையங்களின் வாழ்க்கைத் தரப்புள்ளி விவரம்.**

| | | 1969. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஜூன். | ஜூலை. | ஆகஸ்ட். | செப்டம்பர். | அக்டோபர். | நவம்பர் |
| | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கடலூர் | (1) | 739 | 748 | 758 | 764 | 764 | 773 |
| திருச்சிராப்பள்ளி | (1) | 739 | 740 | 741 | 737 | 751 | 763 |
| மதுரை | (1) | 693 | 691 | 705 | 707 | 708 | 708 |
| கோயம்புத்தூர் | (1) | 751 | 758 | 757 | 760 | 767 | 772 |
| நாகர்கோவில் | ..(2) | 805 | 811 | 815 | 823 | 841 | 858 |

(1) அடிப்படை : ஜூன் 1936=100.

(2) அடிப்படை : ஆகஸ்டு 1939=100.

† Despatched to Members on 4th April 1970.



## COST OF LIVING INDEX NUMBERS FOR MUFFASSAL URBAN CENTRE.

| | | 1969. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *June.* | *July.* | *August.* | *September.* | *October.* | *November.* |
| | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| Cuddalore | (1) | 739 | 748 | 758 | 764 | 764 | 773 |
| Tiruchy | (1) | 739 | 740 | 741 | 737 | 751 | 763 |
| Madurai | (1) | 693 | 691 | 705 | 707 | 708 | 708 |
| Coimbatore | (1) | 751 | 758 | 757 | 760 | 767 | 772 |
| Nagercoil | ..(2) | 805 | 811 | 815 | 823 | 841 | 858 |

(1) Base: Year ended June 1936=100.

(2) Base: August 1939=100.

## இணைப்பு-2.

[500-ம் பக்கத்தில் 730-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**தமிழ் நாட்டில் அரசு உதவி பெறும் அனாதைக் குழந்தை விடுதிகளின் பெயர்களைக் காட்டும் விவர அறிக்கை.**

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 1 | சென்னபுரி அன்னதான சமாஜம் குழந்தைகள் இல்லம், கதவிலக்கம் 9, நைனியப்ப நாயக்கன் தெரு, பூங்கா நகர், சென்னை-3. |
| 2 | புனித அந்தோனியார் பெண் குழந்தைகள் இல்லம், வேப்பேரி, சென்னை-7. |
| 3 | புனித அன்னி குழந்தைகள் இல்லம், இராயபுரம், சென்னை-13. |
| 4 | ஒய்.எம்.சி.ஏ. பையன்கள் இல்லம், கோட்டை, சென்னை-9. |
| 5 | டாக்டர் வரதப்ப நாயக்கர் குழந்தைகள் இல்லம், வண்ணாரப் பேட்டை, சென்னை-21. |
| 6 | திருமதி சி. கமலாட்சியம்மாள் குழந்தைகள் இல்லம், கதவிலக்கம் 16–A, பிடாரியார்கோவில் தெரு, புனித ஜார்ஜ் நகரம், சென்னை-1. |
| 7 | ஔவை குழந்தைகள் இல்லம், அடையாறு, சென்னை-20. |
| 8 | ராவ்சாகிப் ரத்னசபாபதி பிள்ளை குழந்தைகள் இல்லம், திருவல்லிக் கேணி, சென்னை-5. |
| 9 | அஞ்சுமன் E. ஹிமாயத், E. இஸ்லாம் முகமதியர் பெண்கள் குழந்தைகள் இல்லம், கிருஷ்ணாம்பேட்டை, சென்னை-5. |
| 10 | அன்பின் குழந்தைகள் இல்லம், சாந்தோம், சென்னை-4. |
| 11 | புனித லாசரஸ் குழந்தைகள் இல்லம், மயிலாப்பூர், சென்னை-4. |
| 12 | இராமகிருஷ்ண மிஷன் மாணவர்கள் இல்லம், மயிலாப்பூர், சென்னை-4. |

[ 1970 ஏப்ரல் 8

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 13 | புனித பிரான்ஸ் சேவியர் குழந்தைகள் இல்லம், ஆழ்வார்ப் பேட்டை, சென்னை-18. |
| 14 | சேவாசதன் குழந்தைகள் இல்லம், சேத்துப்பட்டு, சென்னை-31. |
| 15 | அஞ்சுமன் E. ஹிமாயத், E. இஸ்லாம் முகமதியர்மாணவர் குழந்தைகள் இல்லம், தியாகராயநகர், சென்னை-17. |
| 16 | சி.எஸ்.ஐ. மாணவியர் குழந்தைகள் இல்லம், செங்கல்பட்டு. |
| 17 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், மதுராந்தகம். |
| 18 | சி.எஸ்.ஐ. மாணவர் குழந்தைகள் இல்லம், மேல்ரோஷபுரம். |
| 19 | புனித ஜோசப் மாணவியர் குழந்தைகள் இல்லம், செய்யூர், மதுராந்தகம் வட்டம். |
| 20 | சிவானந்தா குழந்தைகள் இல்லம், காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம். |
| 21 | குருகுலம் குழந்தைகள் இல்லம், மாம்பாக்கம், மதுராந்தக வட்டம். |
| 22 | புனித ஜோசப் குழந்தைகள் இல்லம், கே. கே. புதூர், மதுராந்தகம். |
| 23 | புனித ஜோசப் குழந்தைகள் இல்லம், கூத்தவாக்கம். |
| 24 | டி.யி.எல்.சி. குழந்தைகள் இல்லம், பாண்டூர், திருவள்ளூர். |
| 25 | லிட்டில் ஃப்ளவர் குழந்தைகள் இல்லம், ரோஷ நகரம் (வழி), கும்மிடிபூண்டி, செங்கல்பட்டு மாவட்டம். |
| 26 | புனித இக்னாஸ் குழந்தைகள் இல்லம், ஆரம்பாக்கம். |
| 27 | ஸ்ரீ ஜெயலக்ஷ்மி குழந்தைகள் இல்லம், மீஞ்சூர். |
| 28 | சென்னை, யதிஞகாஞஹரிசைனி குழந்தைகள் இல்லம், ஹைசைனுபாத், பரங்கிமலை, மதருஸ்-16. |
| 29 | நேரு நினைவார்த்த குழந்தைகள் இல்லம், மணப்பாக்கம். |
| 30 | கிரைஸ்டு கிங், குழந்தைகள் இல்லம், தாம்பரம். |
| 31 | வள்ளுவர் குருகுலம் குழந்தைகள் இல்லம், தாம்பரம். |
| 32 | புனித எலிசபெத் குழந்தைகள் இல்லம், மாதவரம், சென்னை. |
| 33 | தயாசதன் குழந்தைகள் இல்லம், நெற்குன்றம். |
| 34 | கன்யாகுருகுலம், குழந்தைகள் இல்லம், சாத்தாங்காடு, திருவொற்றியூர். |
| 35 | சி.எஸ்.ஐ. மாணவியர் குழந்தைகள் இல்லம், ஈக்காடு. |
| 36 | சி.எஸ்.ஐ. மாணவர் குழந்தைகள் இல்லம், ஈக்காடு. |
| 37 | புனித அன்னம்மாள் குழந்தைகள் இல்லம், கிலாச்சேரி. |
| 38 | புனித தாமஸ் குழந்தைகள் இல்லம், அல்ஃபென்சாபுரம். |
| 39 | லிட்டில் ஃப்ளவர் குழந்தைகள் இல்லம், தெரசாபுரம். |
| 40 | தியாகி குழந்தைகள் இல்லம், காஞ்சீபுரம். |
| 41 | P. T. V. செங்கல்வராயன் நாயக்கர் குழந்தைகள் இல்லம், காஞ்சிபுரம். |
| 42 | ஸ்ரீ தேவி கருமாரியம்மன் குழந்தைகள் இல்லம், திருவேற்காடு. |
| 43 | புனித லூயிஸ் குழந்தைகள் இல்லம், செல்லம்பட்டிடை. |
| 44 | W. T. மாசிலாமணி முதலியார் குழந்தைகள் இல்லம் வாலாஜாபாத். |
| 45 | ஆக்சிலம் குழந்தைகள் இல்லம், ஆவடி, சென்னை-54. |



1970 ஏப்ரல் 8]

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 46 | G. T. மாணிக்க நாயக்கர் குழந்தைகள் இல்லம், காவனூர். |
| 47 | T. E. L. C. குழந்தைகள் இல்லம், சிதம்பரம். |
| 48 | பர்வதராஜ குருகுலம், குழந்தைகள் இல்லம், காட்டுமன்னூர் கோயில். |
| 49 | டேனிஷ் மிஷின் மாணவியர் குழந்தைகள் இல்லம், மேல்பட்டம் பாக்கம். |
| 50 | புனித அந்தோனியார் குழந்தைகள் இல்லம், புதுப்பாளையம். |
| 51 | சேவாமந்திர் குழந்தைகள் இல்லம், பரங்கிப்பேட்டை. |
| 52 | பூவராக ஏழை மாணவர்கள் குழந்தைகள் இல்லம், ஸ்ரீமுஷ்ணம். |
| 53 | திருவள்ளூர் குழந்தைகள் இல்லம், பன்னப்பட்டு. |
| 54 | மணிமேகலை குழந்தைகள் இல்லம், சேத்தியாதோப். |
| 55 | திருப்பனுள்வார் குழந்தைகள் இல்லம், ஸ்ரீமுஷ்ணம். |
| 56 | யோகசமாஜம் குழந்தைகள் இல்லம், கடலூர். |
| 57 | வள்ளலார் குழந்தைகள் இல்லம், வலயமாதேவி. |
| 58 | அன்புக்கரசி குழந்தைகள் இல்லம், வீரமுடையாதம் (வழி), சேத்தியாதோப்பு. |
| 59 | திருவருட்பாராயண நிலையம், குழந்தைகள் இல்லம், வடலூர். |
| 60 | ஆர்.சி. குழந்தைகள் இல்லம், உடையார்குடி, காட்டுமன்னூர் கோயில். |
| 61 | டி.எம். மாணவியர் குழந்தைகள் இல்லம், திருக்கோயிலூர். |
| 62 | ஸ்ரீ வள்ளலார் மாணவர் இல்லம் குழந்தைகள் இல்லம், திருக் கோயிலூர். |
| 63 | ரெட்டியாப்பட்டி அடிகளார் மாணவர் இல்லம், குழந்தைகள் இல்லம், அருள் நகர். |
| 64 | ஸ்ரீ சாராதாமணி மாணவர் குழந்தைகள் இல்லம், கோனூர் விழுப்புரம். |
| 65 | புனித ஜோசப் மாணவர் குழந்தைகள் இல்லம், திண்டிவனம். |
| 66 | புனித ஜோசப் மாணவியர் குழந்தைகள் இல்லம், திண்டிவனம். |
| 67 | மைக்கேல் குழந்தைகள் இல்லம், கிருஷ்ணுபுரம், செஞ்சி. |
| 68 | பொதுநலச் சங்கம் குழந்தைகள் இல்லம், கீழ்சிவேரி, திண்டிவனம். |
| 69 | டான்பாஸ்கோ குழந்தைகள் இல்லம், வேடந்தாங்கல், செஞசி. |
| 70 | வி. எம். குழந்தைகள் இல்லம், பெரியவடவாடி. |
| 71 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், உலகன் காத்தான். |
| 72 | லிட்டில் ஃப்ளவர் குழந்தைகள் இல்லம், சின்னசேலம். |
| 73 | பாரதியார் குழந்தைகள் இல்லம், சாத்தியம், விலாங்காட்டூர். |
| 74 | காந்திகலா நிலையம் குழந்தைகள் இல்லம், காவனூர். |
| 75 | புனித என்ஜல்ஸ் குழந்தைகள் இல்லம், கும்பகோணம். |
| 76 | லிட்டில் ஃப்ளவர் மாணவர் குழந்தைகள் இல்லம், கும்பகோணம். |
| 77 | புனித சூசையப்பர் மாணவியர் குழந்தைகள் இல்லம், கும்பகோணம். |
| 78 | புனித கேப்ரியல்ஸ் குழந்தைகள் இல்லம், பசுபதி கோயில். |
| 79 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், அம்மாபேட்டை. |
| 80 | வள்ளலார் மாணவர் குழந்தைகள் இல்லம், கிழக்கு கோட்டையூர். |

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 81 | கரந்தை தமிழ்ச்சங்கம் குழந்தைகள் இல்லம், தஞ்சாவூர். |
| 82 | புனித ஃபிரான்சிஸ் சேவியர் குழந்தைகள் இல்லம், பூக்காரத் தெரு, தஞ்சாவூர். |
| 83 | புனித உள்ளம் மாணவியர் குழந்தைகள் இல்லம், தஞ்சாவூர். |
| 84 | புனித அந்தோனியார் மாணவியர் குழந்தைகள் இல்லம், மானம்புச் சாவடி. |
| 85 | புனித மைக்கேல் குழந்தைகள் இல்லம், மைக்கேல்பட்டி. |
| 86 | சின்னராணி குழந்தைகள் இல்லம், பூண்டி. |
| 87 | விவேகானந்தா குழந்தைகள் இல்லம், வல்லம்பெரம்பூர். |
| 88 | புனித மைக்கேல் குழந்தைகள் இல்லம், தஞ்சாவூர். |
| 89 | லிட்டில்ப்ளவர் குழந்தைகள் இல்லம், மேகலத்தூர். |
| 90 | அமலி குழந்தைகள் இல்லம், வல்லம். |
| 91 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், தஞ்சாவூர். |
| 92 | புனித மேரி குழந்தைகள் இல்லம், திருப்பன்துருத்தி. |
| 93 | பாரதி குழந்தைகள் இல்லம், ஒரத்தூர். |
| 94 | புனித ஃபிலோமினு குழந்தைகள் இல்லம், முத்தாண்டிப்பட்டி. |
| 95 | உக்கடை ஜானகி அம்மாள் குழந்தைகள் இல்லம், பல்லவராயன் பேட்டை. |
| 96 | வள்ளுவர் குழந்தைகள் இல்லம், சித்ரகுடி. |
| 97 | காந்திகுடில் குழந்தைகள் இல்லம், கணபதிநகர், தஞ்சாவூர். |
| 98 | புனித சூசையப்பர் மாணவியர் குழந்தைகள் இல்லம், திருவை யாறு. |
| 99 | புனித அன்னம்மாள் குழந்தைகள் இல்லம், தேவதானம். |
| 100 | மெய்ப்பொருள் கல்விக் கழகம் குழந்தைகள் இல்லம், திருவாரூர். |
| 101 | புனித அந்தோனியார் மாணவியர் குழந்தைகள் இல்லம், நாகப் பட்டினம். |
| 102 | புனித வின்செண்ட்டி பால் குழந்தைகள் இல்லம், மன்னார்குடி. |
| 103 | டான்பாஸ்கோ குழந்தைகள் இல்லம், வேளாங்கண்ணி. |
| 104 | கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் குழந்தைகள் இல்லம், வேதாரண்யம். |
| 105 | அருளானந்தா குழந்தைகள் இல்லம், பல்லன்கோயில். |
| 106 | ஆரூரன் மாணவர் இல்லம், குழந்தைகள் இல்லம், திருவாரூர். |
| 107 | புனித தெரசா குழந்தைகள் இல்லம், திருத்துரைப்பூண்டி. |
| 108 | ஆர். சி. பாத்திமா குழந்தைகள் இல்லம், திருவாரூர். |
| 109 | திருவள்ளுவர் மாணவர் இல்லம், திருமன்னன்குடி. |
| 110 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், கருங்கண்ணி. |
| 111 | வலிவலம் தேசிகர் குழந்தைகள் இல்லம், வலிவலம். |
| 112 | அவர் லேடி ஆப் ஹெல்த் குழந்தைகள் இல்லம், வேலிப் பாளையம். |
| 113 | டி.யி.எல்.சி. குழந்தைகள் இல்லம், பொறையார். |
| 114 | புனித பால் குழந்தைகள் இல்லம், மாயுரம். |
| 115 | எஸ்.பி.ஜி. மாணவக் குழந்தைகள் இல்லம், நங்கூர். |
| 116 | காந்திமதி குழந்தைவேலு குழந்தைகள் இல்லம், மதிர்வேலூர். |
| 117 | புனித தெரசா குழந்தைகள் இல்லம், தரங்கம்பாடி. |



| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 118 | வள்ளுவர் குழந்தைகள் இல்லம், ஆக்கூர். |
| 119 | டி.யி.எல்.சி. மாணவர் குழந்தைகள் இல்லம், தரங்கம்பாடி. |
| 120 | டி.யி.எல்.சி. மாணவியர் குழந்தைகள் இல்லம், மாயவரம். |
| 121 | புனித மைக்கேல் குழந்தைகள் இல்லம், பட்டவர்த்தி. |
| 122 | புனித ஃபிரான்சிஸ் சேவியர் குழந்தைகள் இல்லம், பாதூர், மேலக்கரை, கொரடாச்சேரி. |
| 123 | புனித ஜான் போஸ்கோ குழந்தைகள் இல்லம், பெரும்பண்ணையூர். |
| 124 | புனித தாமஸ் குழந்தைகள் இல்லம், பட்டுக்கோட்டை. |
| 125 | ப்ராவிடன்ஸ் குழந்தைகள் இல்லம், ஒரத்தநாடு. |
| 126 | கே. எஸ். குழந்தைகள் இல்லம், ஆனைக்காடு. |
| 127 | கே. எஸ். குழந்தைகள் இல்லம், பட்டுக்கோட்டை. |
| 128 | மீனாட்சி குழந்தைகள் இல்லம், நந்திக்கோயில்பட்டி. |
| 129 | புனித மேரி குழந்தைகள் இல்லம், மதுரை. |
| 130 | ஹோலி பேமிலி குழந்தைகள் இல்லம், ஞானஒளிபுரம், மதுரை. |
| 131 | பறவைக்கூடு குழந்தைகள் இல்லம், ரச்சநாசபுரம், மதுரை. |
| 132 | பாலமந்திர் குழந்தைகள் இல்லம், மதுரை. |
| 133 | ஜே. பி. கென்னத் ஒய்.எம்.சி.ஏ. மாணவர் குழந்தைகள் இல்லம். மதுரை. |
| 134 | மீனாட்சி குழந்தைகள் இல்லம், நாகமலை. |
| 135 | பசுமலை குழந்தைகள் இல்லம், பசுமலை. |
| 136 | எல்.பி.என்.ஐ. குழந்தைகள் இல்லம், ராச்சநேசபுரம். |
| 137 | பாலர் குழந்தைகள் இல்லம், திருநகர். |
| 138 | கிருபாகரன் குழந்தைகள் இல்லம், கல்லிமண்டையம். |
| 139 | டி.யி.எல்.சி. குழந்தைகள் இல்லம், திண்டுக்கல். |
| 140 | டான்போஸ்கோ குழந்தைகள் இல்லம், திண்டுக்கல். |
| 141 | புனித தெரசா குழந்தைகள் இல்லம், என். பஞ்சம்பட்டி. |
| 142 | புனித ஃபிலோமினு குழந்தைகள் இல்லம், மேட்டுப்பட்டி. |
| 143 | லிட்டில் ப்ளவர் குழந்தைகள் இல்லம், பழனி. |
| 144 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், திண்டுக்கல். |
| 145 | சத்திய தர்ம குழந்தைகள் இல்லம், கீரனூர், பழனி. |
| 146 | ஆர்.சி. லிட்டில் ப்ளவர் குழந்தைகள் இல்லம், உசிலம்பட்டி. |
| 147 | திரு முருகன் அருள்நெறி புண்ணிய விடுதி குழந்தைகள் இல்லம், உசிலம்பட்டி. |
| 148 | சி.எம்.எஸ். குழந்தைகள் இல்லம், டி. கல்லுப்பட்டி. |
| 149 | காந்தி மாணிக்கவாசகம் குழந்தைகள் இல்லம், ஓடைப்பட்டி. |
| 150 | புனித ஆகனஸ் குழந்தைகள் இல்லம், ராயப்பன்பட்டி. |
| 151 | ஏ. பி. மல்லம்மாள் ஞாபகார்த்த குழந்தைகள் இல்லம், கன்னி சேர்வைபட்டி. |
| 152 | புனித அலோயிசியஸ் குழந்தைகள் இல்லம், ராயப்பன்பட்டி. |
| 153 | வள்ளுவர் அனுதை இல்லம், குழந்தைகள் இல்லம், தர்மபுரி. |
| 154 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், வத்தலக் குண்டு. |
| 155 | புனித தெரேசா குழந்தைகள் இல்லம், பம்பராபுரம். |
| 156 | புண்ணியவிடுதி ஜோதி குருகுலம் குழந்தைகள் இல்லம், மணலூர் |

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 157 | பாலர் பொதுக்காப்பு விடுதி, சிவகங்கை. |
| 158 | கலைவாணர் என்.எஸ்.கே. குழந்தைகள் இல்லம், சிவகங்கை. |
| 159 | கிருஸ்டோபர் குழந்தைகள் இல்லம், நெடுங்குளம். |
| 160 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், அருப்புக்கோட்டை. |
| 161 | காந்தி மகளிர் இல்லம் குழந்தைகள் இல்லம், அமராவதிப்புதூர். |
| 162 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், ராம்நகர். |
| 163 | திரு.வி.கா. வடுவூரான் புண்ணிய விடுதி, குன்றக்குடி. |
| 164 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், திருவாடானை. |
| 165 | ஆர்.சி.எம். குழந்தைகள் இல்லம், அண்டவூரணி. |
| 166 | அடிகளார் புண்ணிய விடுதி குழந்தைகள் இல்லம், பிரான்மலை. |
| 167 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், மானாமதுரை. |
| 168 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், திருவரங்கம். |
| 169 | டி.இ.எல்.சி. குழந்தைகள் இல்லம், அரண்மனைமேடு, கமுதி. |
| 170 | டி.இ.எல்.சி. குழந்தைகள் இல்லம், பரமக்குடி. |
| 171 | கே. எஸ். குழந்தைகள் இல்லம், தியாகராயநகர். |
| 172 | புனிதமேரி குழந்தைகள் இல்லம், சுர்ணம். |
| 173 | புனித ஃபிலோமினா குழந்தைகள் இல்லம், தங்கச்சிமடம். |
| 174 | புனித ஆண்டு குழந்தைகள் இல்லம், இராமநாதபுரம். |
| 175 | ஸ்வார்ட்ஸ் குழந்தைகள் இல்லம், இராமநாதபுரம். |
| 176 | புனித மாயிக்கேல் குழந்தைகள் இல்லம், சாலிக்கிராமம். |
| 177 | சி.எம்.எஸ். குழந்தைகள் இல்லம், சச்சியாபுரம். |
| 178 | புனித குழந்தைகள் இல்லம், பொட்டல்பட்டி. |
| 179 | புனித ஃப்ரேன்சிஸ் ஜேவியர் குழந்தைகள் இல்லம், ஸ்ரீவில்லி புத்தூர். |
| 180 | புனித தொரசா குழந்தைகள் இல்லம், சாத்தூர். |
| 181 | டி.இ.எல்.சி. குழந்தைகள் இல்லம், விருதுநகர். |
| 182 | டி.இ.எல்.சி. குழந்தைகள் இல்லம், சாத்தூர். |
| 183 | ஜோதி பக்தி பெண்கள் கழகம் குழந்தைகள் இல்லம், விருதுநகர். |
| 184 | வி.வி. வண்ணியப்பெருமாள் அன்பு இல்லம் குழந்தை இல்லம், விருதுநகர். |
| 185 | ஒளியாறுதனம் குழந்தைகள் இல்லம், பாளையம்பட்டி. |
| 186 | ஏழு டாலர்கள் குழந்தைகள் இல்லம், பாளையங்கோட்டை. |
| 187 | சி.எம்.எஸ். அருணோதய மாணவியர் குழந்தைகள் இல்லம், நல்லூர், ஆலங்குளம். |
| 188 | ருக்குமணி குழந்தைகள் இல்லம், மங்களபுரம். |
| 189 | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் குழந்தைகள் இல்லம், பாளையங்கோட்டை. |
| 190 | புனித தாமஸ் குழந்தைகள் இல்லம், குறிச்சி. |
| 191 | புனித குடும்ப குழந்தைகள் இல்லம், வடக்கன்குளம். |
| 192 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், கல்லிக்குளம். |
| 193 | புனித அன்னை குழந்தைகள் இல்லம், மன்னபுரம். |
| 194 | ஏழு டாலர்கள் குழந்தைகள் இல்லம், திசையன்விலை. |
| 195 | புனித உள்ளம் குழந்தைகள் இல்லம், இருதயக்குளம். |
| 196 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், இருதயகுளம். |
| 197 | புனித சூசையப்பர் மாணவியர் குழந்தைகள் இல்லம், கல்யாணி புரம். |
| 198 | திருவள்ளுவர் குழந்தைகள் இல்லம், வீரவநல்லூர். |
| 199 | ஸ்ரீ சத்திரி உயர் நிலைத் துவக்கப்பள்ளி குழந்தைகள் இல்லம், சிவசைலம். |
| 200 | புனித இக்னேஷியஸ் மாணவர் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி. |
| 201 | புனித சூசையப்பர் மகளிர் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி. |
| 202 | ஹோலிகிராஸ் இந்திய பெண்கள் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி. |
| 203 | ஆறுமுகசாமி அன்பு ஆசிரமம் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி. |
| 204 | சின்னமணி உண்ணாமலை குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி. |
| 205 | புனிதமேரி குழந்தைகள் இல்லம், வ.உ.சி. நகர், தூத்துக்குடி. |
| 206 | புனித சூசையப்பர் பையன்கள் குழந்தைகள் இல்லம், அடைக்கல புரம். |
| 207 | புனித சூசையப்பர் பெண்கள் குழந்தைகள் இல்லம், அடைக்கல புரம். |
| 208 | புனித ஜான் பையன்கள் குழந்தைகள் இல்லம், நாசரத். |
| 209 | புனித மாங்குழந்தைகள் இல்லம், கிருஸ்துவ நகரம். |
| 210 | வள்ளியம்மாள் குழந்தைகள் இல்லம், குலசேகரப்பட்டினம். |
| 211 | செவன் டாலர் குழந்தைகள் இல்லம், பிரகாசபுரம். |
| 212 | புனித வின்செண்ட் குழந்தைகள் இல்லம், மணப்பாடு. |
| 213 | திரு ஜி. கல்யாணசுந்தரம் நாடார் குழந்தைகள் இல்லம் கச்சனவிளை. |
| 214 | புனித தாமஸ் குழந்தைகள் இல்லம், வேதகோட்டைவிளை. |
| 215 | சி.எம்.எம்.எல். குழந்தைகள் இல்லம், வடமலபுரம். |
| 216 | கிருபை இல்லம் குழந்தைகள் இல்லம், நாரைக்கிணறு. |
| 217 | ஞானசுந்தர அம்மாள் உயர்தர துவக்கப்பள்ளி குழந்தைகள் இல்லம், சுவாமிநாதபுரம். |
| 218 | புனித சூசையப்பர் பெண்கள் குழந்தைகள் இல்லம், சேந்தமரம். |
| 219 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், வேப்பூர். |
| 220 | லிட்டில் ப்ளவர் இல்லம், பள்ளிக்கொண்டா. |
| 221 | புனித மேரி பெண்கள் குழந்தைகள் இல்லம், வேலூர். |
| 222 | வ.எம்.ஐ. முஸ்லீம் குழந்தைகள் இல்லம், மேல்விஷாரம். |
| 223 | லிட்டில்பிளவர் குழந்தைகள் இல்லம், ராணிப்பேட்டை. |
| 224 | வி.ஆர்.வி. பெண்கள் குழந்தைகள் இல்லம், ராணிப்பேட்டை. |
| 225 | காந்தி மிஷன் குழந்தைகள், வாலாஜாப்பேட்டை. |
| 226 | சி.எஸ்.ஐ. பெண்கள் குழந்தைகள் இல்லம், சோளிங்கர். |
| 227 | புனித அந்தோணியர் பெண்கள் குழந்தைகள் இல்லம், சேத்துப் பட்டு. |
| 228 | எம்.டி. உயர்தர துவக்கப்பள்ளி குழந்தைகள் இல்லம், ஆரணி. |
| 229 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், ஆரணி. |
| 230 | டி.எம். குழந்தைகள் இல்லம், மேல்டிகன். |

[1970 ஏப்ரல் 8

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 231 | புனித ஆலோசியஸ் பெண்கள் குழந்தைகள் இல்லம், வேட்டவலம். |
| 232 | சேவாஸ்ரம் பையன்கள் குழந்தைகள் இல்லம், திருவண்ணாமலை. |
| 233 | சேக்ரட் ஹார்ட் பையன்கள் குழந்தைகள் இல்லம், போ[illegible]ர். |
| 234 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், காட்பாடி. |
| 235 | டான் போஸ்கோ குழந்தைகள் இல்லம் காட்பாடி. |
| 236 | டோமனிக் சேவியர் குழந்தைகள் இல்லம், திருப்பத்தூர். |
| 237 | புனித மேரி இமாகுலேட் குழந்தைகள் இல்லம், திருப்பத்தூர். |
| 238 | எம்.டி. பையன்கள் குழந்தைகள் இல்லம், காட்பாடி. |
| 239 | மரிய தெரேசா குழந்தைகள் இல்லம், காட்பாடி. |
| 240 | புனித ஆண்ட்ரூஸ் பையன்கள் இல்லம், அரக்கோணம். |
| 241 | சி.எ.எம். பெண்கள் குழந்தைகள் இல்லம், அரக்கோணம். |
| 242 | இராஜன் குழந்தைகள் இல்லம், பரவத்தூர். |
| 243 | சேக்ரட் ஹார்ட் குழந்தைகள் இல்லம், வந்தவாசி. |
| 244 | அவ்வர்லேடி ஆர் லூர்டஸ் அம்மையார் குழந்தைகள் இல்லம், செய்யாறு. |
| 245 | மஜ்லிசால் உலமா குழந்தைகள் இல்லம், ரேஸ்கோர்ஸ், திருச்சிராப்பள்ளி. |
| 246 | டி.ஈ.எல்.சி. பையன்கள் குழந்தைகள் இல்லம், திருச்சிராப்பள்ளி. |
| 247 | புனித சூசையப்பர் தொழில் பள்ளி குழந்தைகள் இல்லம், திருச்சிராப்பள்ளி. |
| 248 | உருமு சேஷாசலம் செட்டியார் குழந்தைகள் இல்லம், திருச்சிராப் பள்ளி. |
| 249 | தமிழ்நாடு மாணவர் இல்லம் குழந்தைகள் இல்லம், பாரதிபுரம் திருவரும்பூர். |
| 250 | ஹோலிகிராஸ் குழந்தைகள் இல்லம், தெப்பகுளம். |
| 251 | ஹோலிகிராஸ் இந்திய குழந்தைகள் இல்லம், பொன்மலிப்பட்டி. |
| 252 | டி.யி.எஸ்.சி. பெண்கள் குழந்தைகள் இல்லம், கெம்ப்ஸ் நகரம், திருச்சிராப்பள்ளி. |
| 253 | புனித அன்னி குழந்தைகள் இல்லம், கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி. |
| 254 | ராமலிங்க அடிகளார் குழந்தைகள் இல்லம், குமரவயலூர். |
| 255 | சேவாசங்கம் குழந்தைகள் இல்லம், திருச்சிராப்பள்ளி. |
| 256 | செவன் டாலர் குழந்தைகள் இல்லம், தெரேசாபுரம். |
| 257 | ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் குழந்தைகள் இல்லம், திருச்சிராப்பள்ளி. |
| 258 | கஸ்தூரிபாய் குழந்தைகள் சேவா இல்லம், ஸ்ரீரங்கம். |
| 259 | நாகமய்யர் பெண்கள் குழந்தைகள் இல்லம், புத்தூர், திருச்சிராப் பள்ளி. |
| 260 | லிட்டில் பிளவர் குழந்தைகள் இல்லம், முசிறி. |
| 261 | புனித ஜேம்ஸ் குழந்தைகள் இல்லம், அம்மாபேட்டை. |
| 262 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், குளுமூர். |
| 263 | வள்ளலார் குருகுலம் குழந்தைகள் இல்லம், செட்டிகுடம். |
| 264 | லூதர் மிஷன் குழந்தைகள் இல்லம், பெரம்பலூர். |
| 265 | சிரத்துள் முஸ்தகான் பையன்கள் குழந்தைகள் இல்லம் பெரம்பலூர். |



1970 ஏப்ரல் 8]

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 266 | திருவள்ளுவர் குழந்தைகள் இல்லம், லிங்கத்தாடிநாடு. |
| 267 | திலகர் குழந்தைகள் இல்லம், அன்னமங்கலம். |
| 268 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், அரியலூர். |
| 269 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், கொக்குடி. |
| 270 | எஸ்.பி.ஜி. குழந்தைகள் இல்லம், புகலூர், ஜயங்கொண்டான். |
| 271 | ஆர்.சி. பாத்திமா குழந்தைகள் இல்லம், ஜயங்கொண்டான். |
| 272 | டி.யி.எல்.சி. குழந்தைகள் இல்லம், செங்கரையூர். |
| 273 | டி.வி.சி.ஏ. பையன்கள் குழந்தைகள் இல்லம், புல்லம்பாடி. |
| 274 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், வடுகார்பேட்டை டால்மியாபுரம். |
| 275 | ஆரோக்கிய குழந்தைகள் இல்லம், மார்த்தாண்டபுரம். |
| 276 | கிருஸ்து ராஜ இல்லம், இருதயகுளம். |
| 277 | ஸ்ரீநாராயண சுவாமி குழந்தைகள் படிப்பகம், முத்துலட்சுமி மகளிர் இல்லம், புதுக்கோட்டை. |
| 278 | புனித சூசையப்பர் பெண்கள் குழந்தைகள் இல்லம், கொட்டை காடு. |
| 279 | புனித மைக்கேல் குழந்தைகள் இல்லம், கம்மங்குடிபட்டி. |
| 280 | சி.எஸ்.ஐ. பையன்கள் குழந்தைகள் இல்லம், கரூர். |
| 281 | சி.எஸ்.ஐ. பெண்கள் குழந்தைகள் இல்லம், கரூர். |
| 282 | புனித தெரசா பெண்கள் குழந்தைகள் இல்லம், மணப்பாரை. |
| 283 | சி.எஸ்.ஐ. குழந்தைகள் இல்லம், மணப்பாறை. |
| 284 | புனித ஜான் பையன்கள், குழந்தைகள் இல்லம், மஞ்சியம்பட்டி, மணப்பாறை. |
| 285 | புனித தெரேசா குழந்தைகள் இல்லம், மரவநேரி. |
| 286 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், சூரமங்கலம். |
| 287 | புனித கேப்பிரியல் குழந்தைகள் இல்லம், மீனாட்சி அக்கிரகாரம், சேலம். |
| 288 | புனித மேரி குழந்தைகள் இல்லம், அரிசிப்பாளையம். |
| 289 | ஆண்டர்கள் நினைவு குழந்தைகள் இல்லம், சேலம். |
| 290 | புனித பாட்ரிக் குழந்தைகள் இல்லம், செவ்வாய்பேட்டை. |
| 291 | எக்னஸ் குழந்தைகள் இல்லம், நாமக்கல். |
| 292 | ஆர்.சி. சேக்ரட் ஹார்ட் குழந்தைகள் இல்லம், ராசிபுரம் |
| 293 | புனித மேரி குழந்தைகள் இல்லம், கக்கவேரி, ராசிபுரம். |
| 294 | இம்மானுவேல் மிஷன் மோரியா மொரல்லி நினைவு குழந்தைகள் இல்லம், கக்கவேரி, ராசிபுரம். |
| 295 | மதர் ஜொடாபெட்டர்சன் நினைவு குழந்தைகள் இல்லம், ராசிபுரம். |
| 296 | வினோபாஜி குழந்தைகள் இல்லம், சேந்தமங்கலம். |
| 297 | வள்ளுவர் குழந்தைகள் இல்லம், தெங்கல்பாளையம். |
| 298 | புனித நிக்கோலஸ் குழந்தைகள் இல்லம், செட்டிப்பட்டி. |
| 299 | புனித மேரி குழந்தைகள் இல்லம், மேட்டூர் அணை. |
| 300 | புனித தெரசா குழந்தைகள் இல்லம், இளநகர். |
| 301 | புனித தாமஸ் ஆர்.சி. பெண்கள் குழந்தைகள் இல்லம், கோவிலூர். |

| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர். (2) |
|---|---|
| 302 | இந்திய காந்தி குழந்தைகள் இல்லம், மதகொண்டப்பள்ளி. |
| 303 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், எலத்தகிரி. |
| 304 | புனித ஃபிரான்சிஸ் குழந்தைகள் இல்லம், எலத்தகிரி. |
| 305 | ப்ரெசென்டேசன் கான்வென்ட் குழந்தைகள் இல்லம், கோயம்புத்தூர். |
| 306 | சத்குரு சேவாஸ்ரம் குழந்தைகள் இல்லம், ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர். |
| 307 | புனித மைக்கேல் குழந்தைகள் இல்லம், கோயம்புத்தூர். |
| 308 | சி.எஸ்.ஐ. பையன்கள் குழந்தைகள் இல்லம், கோயம்புத்தூர். |
| 309 | இம்மாக்குலேட் கன்செய்சன் கான்வென்ட் பெண்கள் குழந்தைகள் இல்லம், கோயம்புத்தூர். |
| 310 | சி.எஸ்.ஐ. பெண்கள் குழந்தைகள் இல்லம், அவினாசி ரோட், கோயம்புத்தூர். |
| 311 | சேவாநிலையம் குழந்தைகள் இல்லம், கோயம்புத்தூர். |
| 312 | பி.எஸ்.ஜி. கன்யா குருகுலம் குழந்தைகள் இல்லம், பீளமேடு. |
| 313 | சி.எஸ்.ஐ. பையன்கள் குழந்தைகள் இல்லம், தாராபுரம். |
| 314 | சி.எஸ்.ஐ. பெண்கள் குழந்தைகள் இல்லம், தாராபுரம். |
| 315 | சி.எஸ்.ஐ. பெண்கள் குழந்தைகள் இல்லம், ஈரோடு. |
| 316 | சி.எஸ்.ஐ. பையன்கள் குழந்தைகள் இல்லம், ஈரோடு. |
| 317 | புனித சூசையப்பர் பையன்கள் குழந்தைகள் இல்லம், தாராபுரம். |
| 318 | அருள்நெறி திருப்பாவை புண்ணிய குழந்தைகள் இல்லம், ஈரோடு. |
| 319 | வள்ளுவர் மாணவர் விடுதி குழந்தைகள் இல்லம், தாராபுரம். |
| 320 | புனித ஃபிரேன்ஸ் சேவியர் பெண்கள் குழந்தைகள் இல்லம், தாராபுரம். |
| 321 | குழந்தைகள் இல்லம், கஸ்தூர்பாகிரம், ஈரோடு. |
| 322 | எஸ்.எஸ்.என்.எம். குழந்தைகள் இல்லம், காரடிவாவி. |
| 323 | டி.யி.எல்.சி. பெண்கள் குழந்தைகள் இல்லம், கருணாகரபுரி. |
| 324 | புனிதமேரி இந்திய குழந்தைகள் இல்லம், கருமத்தம்பட்டி. |
| 325 | ஸ்ரீவெங்கடேஸ்வரா குழந்தைகள் இல்லம், அப்பநாயக்கன்பட்டி பல்லடம். |
| 326 | டி.யி.எல்.சி. பையன்கள் குழந்தைகள் இல்லம், பல்லடம். |
| 327 | டி.யி.எல்.சி. குழந்தைகள் இல்லம், பொள்ளாச்சி. |
| 328 | கஸ்தூரிபாய் காந்தி குடிசைத்தொழில் குழந்தைகள் இல்லம், எம்மாகவுண்டன்பாளையம். |
| 329 | டி.யி.எல்.சி. குழந்தைகள் இல்லம், கிணத்துக்கடவு. |
| 330 | திருவள்ளுவர் குழந்தைகள் இல்லம், நாதகவுண்டன்பாளையம். |
| 331 | சொக்கன்செட்டியார் மல்லம்மாள் குழந்தைகள் இல்லம், வடம்பாச்சேரி. |
| 332 | சகாய அன்னை குழந்தைகள் இல்லம், சின்னபள்ளம், அம்மாப் பேட்டை. |
| 333 | புனித ஃபிரேன்சிஸ் சேவியர் பெண்கள் குழந்தைகள் இல்லம், கொடிவேரி. |
| 334 | புனித ஜான் பிரட்டா பையன்கள் குழந்தைகள் இல்லம், சத்திய மங்கலம். |



| தொடர் எண். (1) | குழந்தைகள் இல்லத்தின் பெயர் (2) |
|---|---|
| 335 | சௌந்தர்ய இல்லம் குழந்தைகள் இல்லம், ராஜன் நகர். |
| 336 | புனித சூசையப்பர் பையன்கள் குழந்தைகள் இல்லம், ஊட்டி. |
| 337 | நசரேத் கான்வென்ட் குழந்தைகள் இல்லம், உதகமண்டலம். |
| 338 | புனித மைக்கேல் குழந்தைகள் இல்லம், கெட்டி. |
| 339 | புனித மேரி குழந்தைகள் இல்லம், கோத்தகிரி. |
| 340 | ஸ்ரீசர்குரு புண்ணிய விடுதி குழந்தைகள் இல்லம், காந்திநகர், கூனூர். |
| 341 | ஸ்ரீகன்யா குருகுலம் ஆசிரமம், கன்னியாகுமரி. |
| 342 | புனித லாரன்ஸ் குழந்தைகள் இல்லம், நாகர்கோயில். |
| 343 | லிட்டில்ப்ளவர் குழந்தைகள் இல்லம், ராமன்புதூர். |
| 344 | இன்பேண்ட்நேசு குழந்தைகள் இல்லம், முளகுமூடு. |
| 345 | விமலா குழந்தைகள் இல்லம், கொடுங்குளம். |
| 346 | புனித தெரசா குழந்தைகள் இல்லம், மணலிக்கரை. |
| 347 | ராமகிருஷ்ண குழந்தைகள் இல்லம், தில்லை ஸ்தானம், தஞ்சாவூர். |
| 348 | பாத்திமா பெண்கள் குழந்தைகள் இல்லம், கூடலூர், நீலகிரி. |
| 349 | புனித சூசையப்பர் குழந்தைகள் இல்லம், விச்சூர், அறந்தாங்கி. |
| 350 | புனித ஃபிரேன்சிஸ் சேவியர் குழந்தைகள் இல்லம், புத்தன்துறை. தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம். |
| 351 | சி.எம்.எஸ். குழந்தைகள் இல்லம், ரெட்டியார்ப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம். |
| 352 | இன்டர்ஃபெய்த் குழந்தைகள் இல்லம், ஒட்டபிடாரம், திருநெல்வேலி மாவட்டம். |
| 353 | ஒய்.எம்.சி.ஏ. பையன்கள் குழந்தைகள் இல்லம், முழுகோடு, அருமனை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 354 | ஆர்.சி. பாத்திமா குழந்தைகள் இல்லம், வடவீக்கம், தண்டலை அஞ்சல் நிலையம், திருச்சி மாவட்டம். |
| 355 | புனித ஃபிரேன்சிஸ் குழந்தைகள் இல்லம், மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம். |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

**வியாழக்கிழமை, 1970 ஏப்ரல் 9.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-12 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு ஜி. ஆர். எட்மண்ட்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 22-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 22-வது பிரிவின் கீழ், கேள்வி நேரத்தை நிறுத்தி வைத்துவிட்டு, மற்ற இனங்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்கிற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### (ஆ) விதி 23 (1)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 23 (1)-வது விதியைத் தள்ளிவைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்கிற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (2) நடை முறைக் கேள்வி

### பேரவை தாமதமாகக் கூடியது குறித்து

**THIRU T. MARTIN :** Sir, on a point of order. In the Agenda for today, we find the ' List of Business for the meeting of the Assembly to be held in the Legislative Assembly Chamber, Fort St. George, Madras, at 9-00 A.M. on Thursday, the 9th April 1970. But, to-day the Hon. Deputy Speaker has come and the business for the day has commenced at about 9·15 A.M. Sir, may I know the reason for this delay from the Hon. Deputy Speaker ?

**MR. DEPUTY SPEAKER :** It is due to want of quorum.

## (3) அவையுரிமைக் கேள்வி

### நாத்திகம் நாளிதழில் பேரவைத் தலைவரின் தீர்ப்பைப் பற்றி விமர்சித்து வந்துள்ள செய்தி

MR. DEPUTY SPEAKER : Hon. Memeber Thiru N. Veeraswamy has given notice of the following Privilege Matter :—

" Under Rule 184 of the Assembly Rules, I seek your permission to raise a matter of privilege against the Editor and Publisher of the Tamil Daily 'NATHIGAM', dated the 9th April, 1970 in respect of the matter mentioned below :

In the 'Nathigam', dated 9th April 1970 on page 1 of the paper, they have published the report of the proceedings of the House in respect of the ruling of the Hon. Speaker on the allegation made by Thiruu R. Ramachandra Dorai against the Hon. Minister for Local Administration and the further proceedings thereon, with the Caption . . .

சென்னை சட்ட மன்றத்தில்

*ராமச்சந்திரதுரை சாட்டிய குற்றச்சாட்டுகள் பொய்யா ?*

and among other things, the paper has also published as follows :

*"அவருக்கு கிடைத்த தீர்ப்பு அரசுக்குக் கிடைத்த அவமானமே ஆகும்.*

I submit that this is a reflection on the ruling of the Hon. Speaker. The tone and tenor of the report insinuates partiality to the Speaker in the ruling given by him and is also a distorted, perverted publication of the proceedings of the House with a view to bring the House into contempt in the eyes of the public.

Hence a *prima facie* case of breach of privilege arises and I seek your permission to raise this."

*என்று ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிப் பரிசீலித்து இன்னொரு நாள் தீர்ப்பு அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.*

**திரு. நா. வீராசாமி :** *துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் விளக்கம் சொல்ல வேண்டாமா?*

**திரு. கே. வினாயகம் :** *விளக்கம் தர அவருக்கு அனுமதி அளிப்பதாயிருந்தால் எங்களுக்கும் விளக்கம் தர அனுமதி அளிக்கவேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *அவரிடம் விளக்கம் கேட்கவில்லை. இதைப்பற்றிப் பரிசீலித்து இன்னொரு நாள் தீர்ப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.*

**திரு. கே. வினாயகம் :** *அது, பத்திரிகையாளர்களுடைய "காமெண்ட்" ஆக இருக்கலாம். ப்ரொஸீடிங்ஸைப் போடுவதுதான் தப்பு. சபாநாயகர் தீர்ப்புக்கு அல்ல. காமென்டரி எழுதுவதில் தப்பு இல்லை.*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *தப்பா, இல்லையா என்பதை, மறுபடியும் விவாதத்திற்கு வரும்போது விளக்கலாம். சபாநாயகர் தீர்ப்பே அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அவமானம் என்று பத்திரிகையில் வந்திருப்பதாகக் குறிப்பிடுகிறார். நானும் அந்தப் பத்திரிகையைப் பார்க்கவில்லை. அவருக்கு அளித்த தீர்ப்பு சபாநாயகர் அளித்த தீர்ப்புதான்.*



## (4) அரசினர் மசோதா

### தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின்மீதான உச்ச வரம்பு குறைத்தல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 11/70)—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *இப்பொழுது தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்ச வரம்பு குறைத்தல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 11/70) தொடர்ந்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது அவர்கள் பேசுவார்கள்.*

***ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** *பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நில உச்சவரம்புக் குறைப்பு மசோதாவின்மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய சார்பில் என்னை பேச அனுமதித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

*முதன் முதலில் 15 ஏக்கர் உச்ச வரம்பு என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பிரகடனப்படுத்திய நேரத்திலேயே பொது விவாதத்தின்போது நான் அதை மனப்பூர்வமாக ஆதரித்துப் பேசியிருக்கின்றேன்.*

*உலகமளாவிய முற்போக்கான சிறந்ததொரு இஸ்லாமிய சட்டத்தினுடைய பிரதிநிதி என்ற அடிப்படையில் உலகத்தில் எந்த நாட்டிலும் மிகச் சிறந்த முற்போக்கான ஒரு சட்டம் வருமானால் அந்தச் சட்டத்தை வரவேற்றுப் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தக் கடமையை அடிப்படையாக வைத்துத்தான் முதலில் நான் பாராட்டினேன்; அதை வரவேற்றேன். அதே நேரத்தில், மூலச் சட்டத்திற்கு ஒரு சிறிய திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கொடுத்திருக்கிறார்கள். "பாகப் பிரிவினை" என்ற பெயரால் இந்துப் பெருங்குடி மக்களுடைய சட்டத்தை அடிப்படையாக வைத்து அவர்களுக்கு மட்டிலும் கிடைத்த ஒரு சலுகையை, இந்த நாட்டிலேயிருக்கும் இஸ்லாமிய, கிறித்துவ மைனாரிடி சமூக மக்களும் இந்தச் சட்டத் திருத்தத்தின் பெயரால் அனுபவிக்கலாம் என்கிற திருத்தத்தையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எல்லா குடிமக்களும் சமமான ஒரு சலுகையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிற ஒரு தூய நோக்கோடு கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். அதற்காக அமைச்சரவர்களுக்கு நான் என்னுடைய இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.*

*ஆனால், எங்களுக்கு ஒரு சட்டச் சிக்கல் பிரச்னை இதில் எழுகிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்து சமயச் சட்டப் பிரகாரம், குழந்தை பிறந்தவுடனே தன்னுடைய பாட்டனுடைய சொத்து என்ற அடிப்படையில் அந்தச் சொத்திற்கு உரிமை அடையும் அளவில் இந்து சமய சட்ட அடிப்படை இருக்கிறது. ஆனால் இஸ்லாமிய சமய சட்ட அடிப்படை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தன்னுடைய தந்தை இறந்த பிறகுதான், மகனுக்கோ அல்லது மகளுக்கோ தந்தையின் சொத்தில் உரிமை இருக்கிறது என்ற அடிப்படை இஸ்லாமிய சமயத்தின் சட்ட அடிப்படையாக இருக்கிறது. அந்த அடிப்படையின் நோக்கமே, தந்தையின் சொத்தில் மகன் எதிர்பார்த்து வாழக்கூடாது, தன்னுடைய தேவைக்கு தானே பொருளீட்டி வாழ வேண்டுமென்ற ஒரு புனிதமான அடிப்படையில் இஸ்லாமிய சட்டம் இந்த முறையில் சட்ட அமைப்பை வைத்திருக்கிறது.*

*அந்த அடிப்படையை வைத்துப் பார்க்கும்பொழுது, பாகப்பிரிவினை செல்லும் என்ற அந்தச் சலுகையை முஸ்லீம்களுக்கும் நாங்கள் தருகிறோம் என்று சொல்லும்பொழுது இந்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்து கோர்ட்டுக்குப் போகும்பொழுது, இந்து சமயத்திற்கான சட்டத்தைக் கொண்டுவந்து இந்தச் சட்டம் முஸ்லீம்களுக்குச் செல்லுபடியாகாமல் போய்விடக்கூடாது என்பதை இந்தச் சட்டத் திருத்தத்திலோ அல்லது*

மூலச் சட்டத்தின் அமைப்பிலோ ஒரு தெளிவான விளக்கம் இருக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், இஸ்லாமிய சட்டப்பிரகாரம் பாகப்பிரிவினை செய்து கொள்வதற்கு அனுமதி இல்லை. ஆனால் தந்தை விரும்பினால் நன்கொடையாகக் கொடுத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படை உரிமை இருக்கிறது. நன்கொடை மூலம் அந்தச் சலுகையை முஸ்லீம்களுக்குத் தரலாம் என்று திருத்தம் வந்தாலும், நன்கொடைக்காகப் போடப்படும் வரி ஒன்றிருக்கிறதே, அந்த வரியைக் கொடுக்க முடியாத நிலைமை, அந்த நன்கொடை அடிப்படையில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தும்பொழுது, முஸ்லீம் பெருமக்களுக்குப் பொருளாதாரச் சிக்கல் ஏற்படும். இதை அரசு தன்னுடைய கவனத்தில் வைத்து அதில் ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேநேரத்தில் **Voluntary transfer** என்று போடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன பொருள் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். செட்டில்மெண்ட் செய்துகொள்ளலாம் என்ற நிலையிருந்தாலும், அந்த செட்டில்மெண்டிற்குக்கூட வரி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் நம்முடைய சட்ட இலாகா கவனித்து, இந்த நாட்டிலேயுள்ள முஸ்லீம் மைனாரிடி சமூக மக்களுக்கு, மற்ற மக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்க வேண்டுமென்ற பெருந்தன்மையான நோக்கத்தோடு, சட்டபூர்வமாகப் பயன்படுத்துகின்ற அளவுக்கு, சட்டத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மைனாரிடி மக்களுக்கு நான் கோரும் அந்தச் சலுகை கிடைக்கச் செய்வதற்காக அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மருத்துவ மனைகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் கொடுக்கின்ற நன்கொடையாக இருந்தால் இந்த உச்ச வரம்பு குறைப்புச் சட்டத்தில் விதிவிலக்கு இருக்கிறது என்ற நிலை வரவேற்கத் தக்க ஒரு நிலைதான். ஏனென்றால், அறக்கொடையை ஆதரிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே அரசு இந்தச் சலுகையைச் செய்திருக்கிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

பள்ளிக்கூடங்கள் என்கின்ற நிலைமை வரும்பொழுது இந்த நாட்டில் ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் என்று இருக்கின்றன. எங்கள் சமயத்தவர்கள் அரபி மதராசா என்ற பெயரால் பள்ளிகளை நடத்தி வருகிறோம். அந்தப் பள்ளிகளின் இலட்சியமே "கல்வி கற்க உள்ளே வாருங்கள், கற்ற கல்வியைக் கொண்டு சேவை செய்வதற்காக வெளியேறுங்கள்" என்ற ஒரு இலட்சியத்தின் அடிப்படையில்தான் அரபி மதராசாக்கள் நடைபெறுகின்றன. அப்படி நடத்தப்படும் மதராசாக்கள் அரசாங்கத்தின் இடமிருந்து மானியமாகவோ, உதவியாகவோ பெறுவதில்லை. பள்ளிகளுக்கு நன்கொடை கொடுத்தால் அதற்கு விதிவிலக்கு உண்டு என்கிற பிரச்னை வருகின்றபொழுது அந்த விதிவிலக்கு மதராசாவிற்கும் கொடுக்கக்கூடிய அளவிற்கு சட்டத்தில் ஒரு தெளிவான விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எப்படி மருத்துவ மனைகளுக்கு, பள்ளிக்கூடங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்தால் விதிவிலக்கு உண்டு என்று சட்ட அமைப்பு கூறுகிறதோ அதேபோல ஏற்பாருமின்றி, பார்ப்பாருமின்றி, காப்பாருமின்றி அனாதையாகத் திரிகின்ற குழந்தைகளுக்கு உடை கொடுத்து, உணவு கொடுத்து, உறைவிடம் கொடுத்து, உயர்ந்த கல்வியைக் கற்றுத்தரும் மிகச் சிறந்த சேவை செய்து வருகின்ற அனாதை நிறுவனங்களுக்கு சொத்துக்கள் நன்கொடையாகக் கொடுக்கப்படுமானால், அந்தச் சொத்தையும் இந்த விதிவிலக்குக்கு உரிய இடத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால் மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் எப்படி மனிதசமுதாயத்திற்கு, அறத்தை அடிப்படையாக வைத்துத் துணை



புரிவதாக இருக்கின்றதோ அதுபோன்ற சிறந்த ஒரு நிலை அனாதைகளை ஆதரிக்கும் நிலை, வளர்க்கும் நிலை, பராமரிக்கின்ற நிலை. ஆகவே, அனாதை நிறுவனங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தால் அதற்கும் இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு தர வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

உலகளாவிய முற்போக்குச் சட்டத்தினுடைய பாரம்பரிய பிரதிநிதி என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து என்னுடைய உரையை நிறைவுபடுத்திக் கொள்ளுகின்றேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** கனம் உதவி சபாநாயகரவர்களே, இந்த நில உச்சவரம்பு குறைப்பு மசோதாவின்மீது என்னுடைய தனிப்பட்ட கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதாவினுடைய உட்பிரிவுகளிலே நுழைந்து அதன் தன்மையைப் பற்றி விவாதிக்கவோ, சிலாக்கியம் செய்யவோ விரும்பவில்லை. அதற்குப் பதிலாக இந்த மசோதா எந்த நோக்கத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும், இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கும் அந்த நேரம் என்ன என்பதைப்பற்றியும் வைத்து மூன்று கோணங்களிலே இதைப்பற்றி நான் இந்த மசோதாவில் விவாதிக்க நினைக்கிறேன்.

முதன்முதலாக, கடந்த இரண்டு வருஷ காலமாக நாம் நம்முடைய தேவைக்கேற்ப, வேண்டிய உணவை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மிகுபயன்தரும் விதைகள், இரசாயன உரங்கள், இன்னும் விஞ்ஞானக் கருவிகள் இவைகளையெல்லாம் வைத்து அதிகமாக, குறிப்பிட்ட நிலத்திலிருந்து விளைச்சல் காண்பதற்காக நல்ல ஏற்பாடுகளைச் செய்து, அந்த ஏற்பாடுகளின் மூலமாக நல்ல பலன்களை இந்த நேரத்தில் கண்டு கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே, நம்முடைய பொருளாதாரக் கொள்கைக்கு, நம்முடைய அதிக உற்பத்திக்கு, இப்பொழுது கொண்டு வரப்படும் இந்த மசோதா வருவதன் மூலமாக அதற்கு ஏதாவது இடைஞ்சல் ஏற்படுமா, ஏற்படாதா என்பதைப்பற்றிச் சிறிதேனும் காண வேண்டுமென்ற நிலையிருப்பதாக எனக்குத் தென்படவில்லை. இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், நாம் ஒரு மசோதா கொண்டுவந்தால், அதன் மூலமாக நம்முடைய நாட்டு மக்களுக்கு எவ்வளவு அதிகப்படியான நன்மைகள் கிடைக்கும் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இதைப் பற்றிப் பொருளாதார நிபுணர்களையெல்லாம் வைத்துக்கொண்டு, அதிகமான உற்பத்திக்காகப் பாடுபட வேண்டுமென்ற நேரத்தில், இதைச் செய்வதன் மூலமாக இது நமக்கு நல்ல பயனைத் தருமா, அதிக விளைச்சல் பாதிக்கப்படுமா, பாதிக்கப்படாதா என்று இந்த நேரத்தில் யோசித்ததாகத் தென்படவேயில்லை. இந்தப் பகுதியை இந்த நோக்கத்தில் யோசித்திருந்தால் என்ன பதில் என்று தெளிவாகத் தெரிந்துகொண்டிருந்தால் மிகவும் சிலாக்கியமாக இருக்கும். இந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்து சிந்தித்துப் பார்த்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று நமது அரசவையைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதற்கடுத்தபடியாக, நாம் இந்த நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு, இந்தச் சமுதாயத்தில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் சமூக நீதியை அவர்களுக்கு நல்லமுறையிலே கிடைக்கச் செய்ய வேண்டும். இந்த நிலத்தை வைத்து வாழக் கூடியவர்களெல்லாம் அதனுடைய வருமானத்தை வைத்து வாழ்க்கை நடத்தக்கூடியவர்களுக்கு சரியான நீதி கிடைக்குமா என்பதை இந்த மசோதாவைக் கொண்டுவரும் நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எதற்காகக் கூறுகிறேன் என்றால், நம்முடைய தனி உடைமைக்கு ஒரு வரம்பு கட்டுவது என்பது நல்ல கொள்கை, சிலாக்கியமான கொள்கை, வரவேற்கவேண்டிய கொள்கை. ஆனால் அதேநேரத்திலே, நாம் ஒரு பகுதியினருக்கு மட்டும் வரம்பு

கட்டி விட்டு மற்றப் பகுதியினருக்கு வரம்பு கட்டாமல் போய்க்கொண்டிருந்தால் அது நல்லதா? சமூகம் வளருவதற்கான முயற்சி எதை நோக்கிச் செல்லுகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காங்கிரஸ் ஆட்சியிருந்த காலத்திலே அவர்கள் நிலம் வைத்திருந்தவர்களுக்கு ஒரு வரம்பை, 15 ஏக்கரா அல்லது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்ற முறையிலே அவர்கள் கட்டினார்கள். ஆனால் அதற்கடுத்த முற்போக்கான முயற்சியை நாம் என்ன செய்திருக்கிறோம்? இந்த நாட்டிலே நிலம் வைத்திருப்பவர்கள் மட்டும்தான் அதிகமாக இருக்கிறார்களா? முதலமைச்சரவர்கள் நேற்று கூறினார்கள், இரண்டு சங்கிலி வைத்திருப்பவரிடத்திலிருந்து ஒரு சங்கிலியை வாங்கி இன்னொருவருக்கு இந்த மசோதாவின் மூலம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த நாட்டிலே இரண்டு சங்கிலிகள் வைத்திருப்பவர்கள் மட்டுமல்ல, உடலெல்லாம் பொன்னாகவும், உடலெல்லாம் வைரமாகவும் இழைத்துக்கொண்டிருப்பவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களின் நகையை இன்று என்ன செய்திருக்கிறோம்? முதன்முதலாக அதிகமாக வைத்திருப்பவர்கள் நிலம் வைத்திருப்பவர்கள் என்பது மட்டும்தானா? வேறு எந்தத் தொழிலில் இருந்தவர்களுக்கெல்லாம் என்ன வரம்பு கட்டியிருக்கிறோம்? அதற்கு என்ன முயற்சி எடுத்திருக்கிறது? அதைச் செய்துவிட்டு, நிலத்திற்கு கட்டுப்பாடு வந்திருந்தால் நலமாக இருக்கும். இல்லாவிட்டால் நாம் இந்த விவசாயத்தை நம்பி வாழும் மக்களுக்கு நிச்சயமாக ஒரு சமூக நீதியைச் செய்துவிட்டோம் என்று சொல்லமுடியாது.

முற்பகல் 9-30 நம்முடைய உள்ளம் சுத்தமாக இருந்தால், நமக்கு நல்லெண்ணம் இருந்தால், உள்ளத்தில் ஒரு கருத்தையும், வெளியே ஒரு கருத்தையும் கொள்ளாமல் இருக்கிறோம் என்று சொன்னால், எல்லாவற்றிற்கும் நிதர்சனமாக வரம்பு கட்டவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் பஸ்களுக்கு வரம்பு கட்டுவது பற்றி யோசிப்பதாகக் குறிப்பிட்டார்கள். அது மிகவும் வரவேற்கக்கூடிய கருத்து. அதைப்பற்றி யோசிக்கவே வேண்டாம். நமது முதல் அமைச்சர் எப்பொழுதுமே உடனே ஒரு முடிவை எடுத்து, அதை நிறைவேற்றுவதிலே மிகவும் பிரசித்தி பெற்றவர்கள் என்பது நாம் எல்லோரும் நன்றாக அறிந்த விஷயம். அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். உடனே முடிவெடுத்து, அதைச் செயல்படுத்தவேண்டும். எல்லாவற்றிற்கும் ஒரு வரம்பு கட்டுங்கள்.

பதினைந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்தால், ஒரு விவசாயிக்கு அதிகப்படியாக எவ்வளவு வருமானம் வரும் என்று நிர்ணயித்திருக்கிறோம். ஒரு வருஷத்திற்கு ரூ. 6,000 வருமானம் நிலத்தின் மூலம் கிடைக்கும், ஒரு குடும்பத்திற்கு ரூ. 6,000 கிடைக்கும். அதே வருமானம் தான் எல்லோருக்கும் இருக்கவேண்டும் என்று வரம்பு கட்டவேண்டும். அப்படிச் செய்தால் தான், விவசாயிகள் தனக்கு மட்டும் வரம்பு இல்லை, எல்லோருக்கும் வரம்பு இருக்கிறது என்று நினைக்கக்கூடும். தனக்கு ஒரு நீதி, மற்றவருக்கு ஒரு நீதி என்று இல்லாத முறையில், எல்லோருக்கும் சமமாக நீதி கிடைத்திருக்கிறது என்பதை மனமுவந்து ஏற்றுக்கொண்டு, தன்னுடைய பண்பைக் காட்டி, தேசத்திற்கு தேச மக்களுக்கு உதவக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த மசோதாவை இந்த மசோதாவோடு இணைத்துக் கொண்டு வருவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** நானும் அதைத் தான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், முன்பிருந்த அரசாங்கம் ஒரு வரம்பு போட்டது ஒரு சொத்துக்கு. இப்பொழுது இருக்கக் கூடிய அரசு இந்த மசோதாவைக் கொண்டுவருவதோடு, அந்த மசோதாவையும் சேர்த்து இரண்டு மசோதாவாகக் கொண்டு வந்தால் மிகவும் நலமாக இருக்கும்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் தாங்கள் ஆதரிக்கிறீர்களா? தாங்கள் சார்ந்திருக்கிற பார்வேர்டு பிளாக் கட்சி இந்த மசோதாவைப்பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறது?.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** முதல் அமைச்சர் அவர்கள் நான் இந்த மசோதாவை ஒட்டிய கருத்துக்களைக் கூறிக்கொண்டு வரும்பொழுது அதைப்பற்றி நான் என்ன சொல்கிறேன் என்பதை ஊகத்தினால் புரிந்து கொள்ளக்கூடியவர்கள். என்னுடைய பேச்சின் மூலம் என்னுடைய கருத்து என்ன என்பதைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளலாம் என்பதைச் சொல்லிக்கொண்டு, மேற்கொண்டு பேச்சைத் தொடர்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தங்களுடைய அடிப்படைக் கொள்கை என்ன? நீங்கள் 1,000 யோசனை சொல்லுங்கள், தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன். உங்களுடைய அரிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம். அவைகளைப் பரிசீலிப்பதற்காகத் தான் இருக்கிறோம். ஆனால், அடிப்படை கொள்கை என்ன? இந்த மசோதாவை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா? பார்வேர்டு பிளாக் கட்சி என்பது மிகுந்த முற்போக்குக் கட்சி, அதனால் தான் சுதந்திராக் கட்சியிலிருந்து பிரிந்து போயிருக்கிறது. அப்படிப் பட்ட ஒரு கட்சியின் சார்பிலே இந்த மசோதாவைப்பற்றி என்ன கருதுகிறீர்கள் என்ற அடிப்படை விளக்கத்தைச் சொல்லிவிட்டு, பிறகு 1,000 யோசனைகளைச் சொல்லுங்கள், கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** அதைத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன் என்னுடைய பேச்சில். நான் என்ன முடிவுக்கு வருகிறேன் என்பதைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த மசோதாவைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிற நேரத்தில் எனது கருத்து நிச்சயமாக தெளிவாகப் புலனாகும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒரு வேளை தாங்கள் சொல்வதில் தெளிவு இல்லையோ அல்லது அதைப் புரிந்துகொள்ளக்கூடிய சக்தி எனக்கு இல்லையோ தெரியாது. ஆகவே, அப்பட்டமாகச் சொல்லி, புரியாமல் இருப்பதை புரியவையுங்கள். இந்த மசோதாவை ஆதரிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** நான் சொன்னேன், இந்த மசோதாவை மூன்று கோணங்களிலிருந்து பார்க்க வேண்டுமென்று சொன்னேன். முதலாவது கோணமாக உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இது எந்த முறையில் நல்லது என்பதைப்பற்றிச் சொன்னேன். அடுத்தபடியாக, நாம் இதில் ஒருவருக்கு செய்யக் கூடிய நீதியைப் பொறுத்த அளவில், இது எந்த அளவில் நீதி அளிப்பதாக இருக்கிறது என்பதைப்பற்றிச் சொன்னேன். அடிப்படைக் கொள்கை, அதாவது உடைமைக்கு ஒரு வரம்பு கட்டவேண்டும் என்ற கொள்கையின் ரீதியில், அந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்த மசோதாவைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கொள்கை அடிப்படையில் பார்க்கும்பொழுது, ஆரம்பத்திலேயே சொன்னேன். கொள்கை அடிப்படையில் இந்த மசோதாவைப் பார்க்கிறபொழுது மிகவும் வரவேற்கத்தகுந்த ஒரு மசோதா என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். நான் எதையும் அப்பட்டமாகக் கூறாமல் இல்லை.

நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். கொள்கையின் அடிப்படையில் இதை யாருமே எதிர்க்க முடியாது என்று நான் தெள்ளத் தெளிவாகச் சொன்னேன். தான் ஒரு சோஷலிஸ வாதி, முற்போக்கு வாதி என்று சொல்லிக்கொண்டு போவது இப்பொழுது ஒரு பாஷனாகப் போய்விட்டது. அம்மாதிரி உள்ளத்தில் ஒரு கருத்தை வைத்துக் கொண்டு, வெளியே ஒரு கருத்தை வைத்துக்கொண்டு நாம் நடமாடக் கூடாது. நம்முடைய கருத்து என்ன என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உண்மையான சோஷலிஸ வாதி, உள்ளேயிருக்கும் கருத்திற்கும், வெளியே இருக்கும் கருத்திற்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்று நாம் காட்டிக் கொள்ளவேண்டுமென்றால், எல்லாவற்றிற்கும் ஒரு வரம்பு வேண்டும். யார் மனதையும் புண்படுத்தவேண்டுமென்ற அவசியமில்லை. வரம்பு இருக்கிறது என்றால், எல்லாச் சொத்துகளுக்கும் வரம்பு இருக்கட்டும். எல்லாச் சொத்துக்களையும் தேச உடைமையாக்குவோம் என்றால், அதற்கு என்னுடைய கட்சி தயாராக இருக்கிறது. வேண்டிய உழைப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள், வேண்டிய ஆதாயத்தைக் கொடுங்கள், அந்த அளவுக்குப் போதும் என்பதுதான் என்னுடைய கட்சியின் கொள்கையும், நோக்கமுமாகும்.

இந்த அடிப்படையின் பேரில் நாம் எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். மூன்று கோணத்தில் இதை நாம் அணுகவேண்டும் என்று என்னுடைய பேச்சை ஆரம்பித்தேன். ஒரு கொள்கையை எடுத்துக்கொண்டால் கூட, கொள்கையின் அடிப்படையில் மற்றவர்களுக்கும் நீதி, நியாயமாக நடக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்வதற்கு, மற்ற சொத்துக்களுக்கும் வரம்பு கொண்டுவந்து, இந்த மன்றத்தில் அதோடு இதையும் இணைத்துச் சேர்த்துக் கொண்டு வரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த மசோதாவை வரவேற்று, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவர் அவர்களே, இந்த அவை முன்பு விவாதித்துக்கொண்டிருக்கிற இந்த மசோதா, நிலச் சீர்த்திருத்த உச்ச வரம்புக் குறைப்பு, 1970 மசோதா என்கின்ற ஒரு பெயரால் நமக்கு முன்பு வந்திருக்கிறது.

அரசு தன் கொள்கைக்கு ஆரம்பத்தில் ஒரு விளக்கம் தந்தது. பிறகு திருத்தங்கள் மூலம் சில விளக்கங்கள் தந்திருக்கிறது. அதன் பிறகு சில திருத்தங்களும் வந்திருக்கின்றன. நேற்று நடந்த இந்த விவாதத்தில் அரசுத் தரப்பில் சில சமாதானங்கள் சொல்லப்பட்டன. சில கொள்கை விளக்கங்கள் தரப்பட்டன. காங்கிரஸ் அன்பர்கள், மற்றும் கம்யூனிஸ்ட் அன்பர்கள், சோஷலிஸ்டு அன்பர்கள், தமிழரசுக் கட்சி அய்யா அவர்களும் நேற்றுப் பேசினார்கள்.

சுதந்திராக் கட்சி விவசாயிகளுக்காக, விவசாயத்திற்காக உள்ள கட்சி என்று எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியபொழுது, விரும்பியோ, விரும்பாமலோ ஒரு ஆரவாரம் எழுந்தது. அதன் பொருளைப் பார்ப்போமானால், சுதந்திரா கட்சி இதுவரையில் விவசாயத்திற்கு என்ன செய்திருக்கிறது என்ற கேள்வியைக் கேட்கக்கூடிய ஆரவாரமாக அது இருந்திருக்கலாம். அக்ரிக்கல்சரிஸ்ட்ஸ் டெட் ரிலீப் ஆக்ட் கொண்டுவந்தது ராஜாஜி காலத்தில். பண்ணையாள் ப்ரோடெக்ஷன் ஆக்ட் கொண்டு வந்தது ராஜாஜி காலத்தில். விவசாயிகளுக்காக விவசாயத்திற்கு வேண்டியது அனைத்தையும் கொண்டு வந்தது ராஜாஜி அவர்கள். ஏற்கெனவே அவர்கள் கொண்டு வந்து, அதற்குப் பிறகு சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல், அவ்வப்பொழுது இருந்த அரசு அதை மாற்றிக்கொண்டு வந்திருக்கிறது. முற்போக்கின் பெயரால் சில முற்போக்கு சக்திகள் மாற்றிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தமிழரசுக் கட்சி அய்யா அவர்கள் ராஜாஜி இப்பொழுது இருந்திருந்தால், பழைய சான்றுகள் சிலவற்றைக்



காட்டி, ராஜாஜி இந்த அமைச்சரவையில் இருந்திருந்தால், இன்னும் காரசாரமாக ஒரு முற்போக்கு சக்தியைக் காட்டி அவர்கள் அதைக் கொண்டு வந்திருப்பார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, சுதந்திராக் கட்சித் தோழர்கள் ஏன் அதை எதிர்க்கிறார்கள் என்று கேட்டார்கள்.

சுதந்திரா கட்சி நிலையை விளக்குகிறேன். இப்பொழுது இதை எதிர்க்கவுமில்லை, ஆதரிக்கவுமில்லை. முதல் அமைச்சர் அவர்கள் திரு சௌடி சுந்தரபாரதியை "நீங்கள் எதிர்க்கிறீர்களா, ஆதரிக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். அவர்கள் அதற்குப் பதிலாக சில வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அதே கேள்வி எனக்கும் எழக்கூடும். இந்தச் சமயத்தைப் பொறுத்த அளவில், சுதந்திராக் கட்சியைப் பொறுத்த அளவில், இப்பொழுது இதை ஆதரிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை. ஆனால், பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தை, மக்களுடைய அபிப்பிராயத்திற்கு, எந்த மக்கள் சர்க்கார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமா அந்த மக்களுடைய அபிப்பிராயத்திற்கு, சர்க்காரை ஏற்படுத்திய அந்த மக்களுடைய அபிப்பிராயத்திற்கு, இதை விடுங்கள். எல்லா மக்களுக்கும் சட்டம் நன்மை தரக்கூடியதாக இருக்கவேண்டும், ஒவ்வொரு சட்டத்திலும் மக்களுடைய நன்மை பரிமளிக்கவேண்டும், எல்லோருக்கும் உலகத்திலுள்ள அத்தனை பேர்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கவேண்டும் என்று எந்த மக்கள் நினைக்கிறார்களோ அந்த மக்களுடைய அபிப்பிராயத்தைக் கேளுங்கள். அவர்கள் 15 என்று சொன்னால், 15 ஏக்கர் பொருந்தும் என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லை 10 என்று சொன்னால் அதற்கும் சரி என்று சொல்லுங்கள், 5 என்று சொன்னால் அதற்கும் சரி என்று சொல்லுங்கள், ஒன்றுமே வேண்டாம் என்று சொன்னால், அதற்கும் சரி என்று சொல்லுங்கள், 30 ஏக்கரே இருக்கட்டும் என்று சொன்னால் அதற்கும் சரி என்று சொல்லுங்கள், 15-க்கு மேலே 30-க்குள்ளே இருக்கலாம் என்று சொன்னால், அதற்கும் சரி என்று சொல்லுங்கள். முக்கியமாக ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். அதைப்பற்றித் தான் விளக்கம் கொடுத்தேன். இதைத் தவிர்த்து வேறு ஒன்றும் சொல்லிக்கொள்ள விரும்டவில்லை.

அதே சமயத்தில், ம.பொ.சி. ஐயா, ராஜாஜி இங்கே இருந்திருந்தால், இன்னும் காரசாரமாக, முற்போக்காகக் கொண்டுவந்திருப்பார்கள் என்று சொன்னார்கள். கட்சிக் கண்ணோட்டத்தில், தலைவருடைய சொல்லுக்குக் கொஞ்சமும் மாறுபடாமல், நாங்களும் இருந்துகொண்டிருக்கிறோம். ராஜாஜி அவர்கள் இங்கே இல்லாவிட்டாலும், நாங்கள் அவர்களைக் கேட்கிறோம். அவர்கள் இங்கே நேரே பேச முடியாவிட்டாலும், அல்லது பொதுக் கூட்டங்களில் பேசக்கூடிய நிலைமையில் இல்லாவிட்டாலும், அவர்கள் பேனாவின் வன்மையால் சுயராஜ்யம் பத்திரிகையிலும், இன்னும் பத்திரிகைகளிலும், எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை ம.பொ.சி. பார்த்திருந்தால், ராஜாஜி அவர்கள் இந்த மசோதாவைக் குறித்து என்ன கருத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பது தெரியும். அவர்கள் இதைப் பொது மக்களுடைய கருத்துக்கு விடவேண்டும் எனறு சொல்கிறார்கள். இதை ஆதரித்தோ, வெட்டியோ, ஒட்டியோ பேசவில்லை.

நான்காம் தேதிக்குள் திருத்தப் பிரேரணைகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னபோதே, நான் முதன்முதலாகப் பிரேரணையைக் கொடுத்தேன். "அமெண்ட்மெண்ட்" என்ற வார்த்தை வரவேண்டும் என்று சொல்லியிருந்தேன். சட்ட அமைச்சர் திரு. மாதவன், நேற்று பேசும் போது இன்ன காரணத்திற்காக, "அமெண்ட்மெண்ட்" என்று போடவில்லை என்றும், ஆனால், "பிரின்சிபல் ஆக்ட்" என்று சொன்னவுடனேயே " as if " என்று போட்டிருக்கிறோம். ஆகவே, இருந்திருந்தால் எப்படியோ அப்படித்தான் என்றும் சொன்னார்கள். சட்ட பிரச்சினைகளில் பார்க்கும்போது, சட்டத்திலே அமைச்சராக இருப்டவர்கள், சட்டத்

திலே பெரிய வல்லுநர்கள், பெரியவர்கள் ஒரு அபிப்பிராயத்தில் இருக்கலாம். மற்ற எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் வேறு கருத்தில் வாதாடுகிறார்கள். வேறு அபிப்பிராயத்தில் இருக்கலாம். அதை யெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து, நீதிபதி ஒரு கருத்தைச் சரி என்று சொல்லலாம், அல்லது வேறு கருத்தைச் சரியென்று சொல்லலாம், இல்லையென்றால், இரண்டையுமே சரியில்லை என்று சொல்லிவிடலாம். ஆகவே சட்டம் என்பது வளர்ந்து வருகிற ஒன்று. அப்படி கருத்துக் களை ஆராய்ந்து பார்க்கும்போது, "as if" என்று சொன்னாலும், "பிரின்சிபல் ஆக்ட்" என்ற வார்த்தைகள் இருக்கின்றன.

இந்தச் சட்டத்தின் மூலம் என்னென்ன செய்கிறோம் என்று பின்னால் வருகிற வார்த்தைகள் கூறுகின்றன. திருத்தம் என்று சொன்னால் ஒழிய, திருத்தங்கள் என்னென்ன, எப்படி எப்படி திருத்தப்பட்டிருக் கின்றன, எந்த சந்தர்ப்பத்திற்காக திருத்தப்பட்டிருக்கின்றன என்ப தெல்லாம் புலனாகாமல் போய்விடும். தீர்ப்புகள் வழங்கப்படும்போது, நீதிபதி எதைப் பார்ப்பார்கள் என்றால், உள்நோக்கம் என்ன, எதற்காக, எந்த சந்தர்ப்பத்தில், மக்களுக்கு வேண்டிய அளவுக்கு சட்டம் இருக்கிறதா "Preamble, short title" இவற்றில் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்ப்பார்கள். அப்படிப் பார்க்கும் போது, நாம் எதைத் திருத்தம் என்று சொல்கிறோமோ அதற்கு வேறொரு வார்த்தை சொன்னால், சட்டத்தின் கீழே நுழைந்து பார்க்க வேண்டிய நிலைகள் வரும்.

கொள்கைக்காக, பொது மக்களுக்குத் தேர்தலில் உழுகிறவனுக்கு நிலம் சொந்தம் என்று சொன்னோம், 15 எக்கர் என்று நாம் சொன்னதை நம்பித்தானே ஓட்டுப் போட்டார்கள், வாக்குரிமை கொடுத்தார்கள், ஆகவே மக்கள் அபிப்பிராயம் அதுதான் என்றால், அதற்கு மாறுபட்ட கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தேர்தலில் எத்தனையோ விஞ்ஞாபனங்கள் கொடுக்கிறோம். மக்களுக்கு உகந்ததாக சில இருக்கலாம்; பல மக்களுக்கு உகந்ததாக இல்லாமல் இருக்கலாம். பலதரப்பட்ட மக்கள் விஞ்ஞாபனங்களைப் பார்க்கும்போது, பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் ஏற்படலாம். ஆகவே, அதையெல்லாம் வைத்துத் தானே நம்மைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று சொல்வது பொருந்தாது. குறிப்பிட்ட அளவுக்கு ஒரு சட்டத்தைக்கொண்டுவரும்போது, விவசாயத்தைப் பாதிக்கும் அளவுக்கு நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத்தைப் பற்றியிருக்கும்போது, விவசாயிகளின் தலையிலே கையைவைக்க, விவசாயியின் கையை முறிக்க வேண்டியிருக்குமே என்று மக்கள் அரசு, மக்களுக்காக இருக்கும் அரசு, இந்த விவசாயிகளுடைய அரசு, விவசாய அரசு கவனிக்க வேண்டியது முக்கியம் என்று தாழ்மையோடு சொல்ல விரும்புகிறேன்.

"ஸீலிங்" என்று சொன்னால் என்ன? ஸீலிங் என்பது உச்ச வரம்பு. ஒருவனுக்கு சந்தர்ப்பத்தை ஒட்டி உச்சத்தில் இருக்கவேண்டும் என்கிறோம். 9 அடி உச்சம் இருக்கவேண்டும் என்று சொல்கிறோம், முனிசிபல் ஆக்டுகளில் செய்திருக்கிறோம். அதற்குக் கீழே குறைந் திருந்தால் முனிசிபாலிடிகள் ஆட்சேபிப்பார்கள். 9 அடிக்கு உச்ச வரம்பு கட்ட, இப்பொழுது 18 வீடுகள் வேண்டியிருக்கிறது, 9 அடி யைக் குறைத்து, 6 அடி என்று செய்து இவன் மூன்று அடியில் இருக்கட்டும், 6 அடிக்காரனை குனிந்து போ, தட்டிப்போ, வெட்டிப்போ என்று சொல்லும் அளவுக்கு உச்சவரம்பு கட்டுவது என்றால் அது பொருள் உள்ள கருத்தா? இது ஒரு வரம்பா? இது ஒரு சட்டமா? என்று இதன் ஆரம்பத்தைப் பார்க்கும் போது சந்தேகங்கள் ஏற்படும்.

திருத்தம் என்ற பெயரில் சொல்லுங்கள் என்றால், ஏற்கெனவே உள்ள சட்டம் செல்லும், ஆனால் இந்தச் சட்டம் செல்லாது என்று நீதிமன்றத்திலே தீர்ப்பு கொடுத்தாலும், சட்ட அமைச்சர் சொன்னார்கள்,



31-ஏ படி சந்தேகங்கள் எழுந்தால், உறுதியாக இல்லாமல் சந்தேகம் என்று அப்படிபட்ட நிலை இல்லாமல் இல்லை, அப்பொழுது, 1970-வது சட்டம் செல்லுபடியாகாமல் போனாலும் போகட்டும், 1961-வது சட்டம் இருக்கட்டும் என்று போட்டோம் என்று சொல்லும்போது, அதிலே இருக்கும் ஓட்டைகளும் இருக்கட்டும் என்கிறார்களா? ஓட்டைகளை எவ்விதம் அடைத்தார்கள் காங்கிரஸ்காரர்கள்? பல ஓட்டைகள் புகுந்து இருக்கின்றன. ஓட்டைகளைப் புகுத்துவதற்கே இருக்கிறார்கள், புகுத்திக் கொண்டே இருக்கிறார்கள். சட்டத்தையே தொழிலாகக் கொண்டவர்கள், ஒவ்வொருவரும் தலையிட்டு, புகுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

உச்சவரம்பு கட்டிய அந்த நேரத்தில், 3,000 எக்கரோ, 300 எக்கரோ, 6 வேலியோ, 8 வேலியோ வைத்துக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் 1½ எக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்களும், நிலம் இல்லாதவர்களும் இருந்தார்கள். அந்தச் சமயத்தில், உச்ச வரம்பு கட்டவேண்டும் என்று சொல்லி, ஒரு மனிதனுக்கு 30 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைக்கும் போது, உண்ண உணவு, படுக்கப் பாய், உடுக்க வேட்டி இவை வேண்டு மென்று பார்க்கும்போது, இந்த மூன்றையும் மனத்தில் வைத்துக் கொண்டு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று சொன்னார்களா? சாப்பாட்டுக்கு எத்தனை எக்கர், பருத்திக்கு எத்தனை, காபிக்கு சர்க்கரைக்கு எத்தனை, எவ்வளவு மிளகாய், மல்லி இவைகள் வேண்டும், கோதுமை எவ்வளவு வேண்டும், குடும்பத்தில் இருக்கும் மக்கள் எத்தனை, இவற்றை யெல்லாம் யோசித்துப் பார்த்தோமா என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இதெல்லாம் விவசாயிகளுக்குத் தெரியும்போது, நீங்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். ஆகவே, பப்ளிக் ஒபினியனுக்கு விட்டால் இதெல்லாம் தெரியும். அவர்கள் சொல்லுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது நிராகரிக்கலாம், அவைகளை வேண்டாம் என்று சொல்லலாம். ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி, அல்லது செலக்ட் கமிட்டி என்று போட்டால், அவரவர்களுக்கு வேண்டியவர்களை எடுத்துக் கொண்டு சாட்சியங்கள் வரும். அதை விட்டு பொது ஜன அபிப்பிராயத்திற்கு விடவேண்டும் என்று சொல்கிறோம். எது முற்போக்கு கட்சி? சுதந்தராக் கட்சி பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடவேண்டும் என்கிறோம்..................

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒரிசா மாநிலத்தில் சுதந்தரா கட்சி ஆட்சி நடக்கிறது. அங்கே வருகின்ற ஒவ்வொரு மசோதாவும் பப்ளிக் ஒபினியனுக்கு விட்டுத்தான், அவர்கள் அபிப்பிராயம் கேட்டுத்தான் நிறை வேற்றப்பட்டு வருகிறதா என்கிற விளக்கத்தை உறுப்பினர் மூலம் அறிய விரும்புகிறேன்.

**திரு. சா. மெய்யப்பன்:** மற்ற மாநிலங்களைப் பொறுத்து, எங்கள் கட்சி என்ன செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டியதில்லை. கொள்கை யளவில் என்னைப் பொறுத்தவரையில், பொது மக்களுக்குத் தகுந்த பொதுக் கருத்தாக இருக்கவேண்டுமே அன்றி, காபி அடிக்கும் பண்பு என்னிடத்தில் இல்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரிசாவில் இது தோன்றாமல் இருக்கலாம். இந்த சூழ்நிலை ஏற்படாமல் இருக்கலாம் மாண்புமிகு உறுப்பினர் ஹாஜி பீர் முகம்மது அவர்கள் சொன்னார்கள். சட்டத்திலே இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்று. என்னுடைய திருத்தத்தில் "இந்துக்கள்" என்பதை எடுத்துவிட்டால், அதற்கு வழிவகை செய்தால், அப்பொழுது முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் பொருந்தும். சுதந்திராக் கட்சியைப் பொறுத்தவரையில், எல்லா ஜாதியையும், மதத்தினரையும் ஒன்றாகப் பாவிக்க வேண்டும் என்பதுதான். இந்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில், பார்ட்டிஷன், ஜாயிண்ட் பாமிலி ஸிஸ்டம் என்பதெல்லாம் அவர்களுக்கே தனிப்பட்ட ஒரு கொள்கை, அது சட்டமாக இருக்கிறது.

முஸ்லிம்களுக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ, சிறுபான்மையோர்களுக்கோ பொருந்த வேண்டும் என்றால், இந்துக்களுக்குத் தனிச் சலுகை வேண்டாம் என்று சொல்லிவிட்டால் அப்பொழுது அது எல்லோருக்கும் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று கூறுவேன்.

அதன் பிறகு இன்னொன்றையும் சொல்ல வேண்டும். லிமிடெட் எஸ்டேட்ஸ் என்று இருக்கிறது. ஏற்கெனவே 1945-லேயே இவ்வளவு முற்போக்கு சக்திகள் வரும், சட்டம் வரும், என்று தெரியாத அளவில் ஒரு கிழவி தன் மகளுக்கு தன்னுடைய 40 ஏக்கர் நிலங்களை எழுதி வைத்துவிட்டு, அவள் இருக்கும் வரையில் அதை அனுபவித்துவிட்டு, தனக்குப் பிறக்கும் பையன்கள், பெண்கள், பேரன், பேத்திக்கு சொந்தமாகட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிருஷ்ட வசமாகவோ, அல்லது துரதிருஷ்டவசமாகவோ, 1945-ல் எழுதி வைத்த அம்மையார், இப்பொழுது இறந்துவிட்டாலும், யாருக்கு அந்த அம்மையார் எழுதி வைத்தாரோ, அந்த மகள் இன்னும் இருந்துகொண்டு இருக்கிறாள். இன்றைக்கு உச்சவரம்பு 30 ஏக்கர் என்று சொல்லும்போது, அவளுடைய 40 ஏக்கரில், 30 போக, 10 ஏக்கர் சர்ப்ளஸ் என்று எடுப்பார்களா? கூடுதலாக நிலம் என்று எடுப்பார்களா?

ஆகவே சர்ப்ளஸ் நிலங்களில், லிமிடெட் எஸ்டேட் உள்ளவர் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று தெரிவிக்கிறாரோ, தன்னுடைய மகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று முதல் கட்ட உரிமையாளராக இருக்கும் அம்மையார், கிழவி எழுதிவைத்திருக்கிறார்களோ, அந்த அம்மையாரின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அந்த அம்மையாரின் பேரன், பேத்திகள் நிலம் இல்லாமல் இருந்தால் லிமிடெட் எஸ்டேட்டில் உள்ள ரைட்டை சரண்டர் செய்யலாம் என்று புரொவிஷன் இதில் வேண்டும் என்பதற்காகத்தான் லிமிடெட் எஸ்டேட் என்று சொல்லி வைத்தேன். இல்லாவிட்டால் அப்பாவி அம்மையார் தன்னுடைய சொத்துக்களை தன்னுடைய பேரன் பேத்திகளுக்குக் கொடுக்க என்ன வழிவகை செய்திருக்கிறீர்கள்? அவர்கள் விவசாயிகள் இல்லையா? அவர்களும் விவசாயத்திலிருந்து பெறவேண்டிய நன்மை இல்லையா?

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அளவுக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே உழுகிறவனுக்குத் தான் நிலம் கிடைக்க வேண்டும். ஆனால் நிலம் இல்லாத ஏழைகளுக்குப் 15 ஏக்கருக்கு மேல் இருப்பவனிடமிருந்து எடுத்துக்கொடுக்கப்போகிறீர்கள். நிலம் இல்லாத ஏழை உழத் தெரியாதவனாக இருக்கலாம். ஆனால் அவனுக்கு நிலத்தைக் கொடுத்து புதிய நிலச்சொந்தக்காரர்களை உண்டாக்கப் போகிறீர்கள். அவனிடத்தில் வேளாண்மை செய்ய பலர் வருவார்கள். இப்படி வழிவழியாக போய்க்கொண்டிருக்கும். உச்சவரம்பு 9 அடியாக இருந்ததை 6 அடியாகக் குறைப்பதைப் போல, நாளைக்கு வேறு ஆட்சி வந்தால் மக்களுடைய ஆதரவு, அனுசரணை வேண்டும் என்பதற்காக ஏதாவது செய்வோம் என்று 6 அடி என்பதை 3 அடியாக ஆக்குவோம் எல்லோரும் டிஸ்பாரிடி ( Disparity ) இல்லாமல் குனிந்து செல்ல வேண்டும், நிமிர்ந்து நடந்துசெல்லக்கூடாது, ஆகவே 9 அடியை மூன்று பங்கு ஆக்கினால் ஆளுக்கு மூன்று அடியாகும் என்று..........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் தவறான உதாரணத்தைச் சொல்லி, அதையே திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டுவருகிறார்கள். 9 அடி என்று வீட்டைக்கட்டி உச்சவரம்பு செய்து, அதில் 6 அடி என்றும் 3 அடி என்றும் பிரித்ததாகப் பத்திரிகையில் வந்த கார்டூனை—அந்தக் கார்டூன் அர்த்தம் இல்லாதது—அதை வைத்துக்கொண்டு திருப்பித்திருப்பிச் சொல்லி வருகிறார்கள். 9 அடியை 6 அடியாகக் குறைப்பது அல்ல. ஒருவரிடத்தில் 9 இருப்பதை எடுத்து 9 பேருக்குத் தருவது.



**திரு. சா. மெய்யப்பன்:**—நில உச்ச வரம்பு என்று சொல்லும்போது, ஒருவரிடத்தில் 9 இருப்பதை எடுத்து 9 பேருக்குக் கொடுப்பது என்பதை தலைவணங்கி ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் ஒருவர் தலை இடிக்காமல் போகும் அளவுக்கு இருக்கவேண்டும் என்பதைத் தான் நான் வலியுறுத்துகிறேன். உச்சவரம்பு என்பதை பிரத்வைஸ் (Breatdhwise ஆக கன்சிடர் ( Consider ) செய்யக் கூடாது. வெர்டிகல் ( Vertical ) 9 ஹைட்டில் ( Height ) கன்சிடர் செய்ய வேண்டும். என்பது பரந்து கிடந்தால் அதைப் பிரித்து வைத்துக் கொள் என்று சொல்லலாம். நமக்குள் இருக்கின்ற மனவேற்றுமை உயரத்தில் போவதா அல்லது படர்ந்து போவதா என்பதில்தான். உச்ச வரம்பு என்பது உயரத்தைக் கணக்கிட்டுச் செய்யவேண்டும், அகலத்தை கணக்கிட்டுச் செய்யக்கூடாது. ஆகவே கார்டூன் புரியாததாக இருந்தாலும் சரி என்னுடைய பேச்சு புரிந்ததாக இருந்தாலும் சரி, புரிய வைக்க முடியாததாக இருந்தாலும் சரி..............

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தமிழக அரசு கொண்டுவருகிற சீர்திருத்தத்தின் மூலம் எதிர்பார்ப்பது எல்லாம் வீட்டுக்குள் குனிந்து செல்லுகின்ற விவசாயி நிமிர்ந்து செல்லவேண்டும் என்ற முறையில்தான் செய்யப்படுகிறது. நாங்கள் மாத்திரம் நிமிர்ந்து சென்றுகொண்டிருப்போம், நீ குனிந்து சென்று கொண்டிரு என்று மிராசுதார் தோரணையில் பேசுவது நல்லது அல்ல.

**திரு. சா. மெய்யப்பன் :** கருத்து வேறுபாடே ஒழிய வேறு ஒன்றுமில்லை. அதற்கு நாங்கள் ஒத்து வருகிறோம் என்று சொல்லிவிட்டேன். அந்த அளவில் பார்க்கும்போது நீங்கள் அதற்கு மேல் வீடுகட்ட வேண்டுமே ஒழிய, அதையும் பிரிக்கவேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். தலைகுனிந்து போகவேண்டாம், தலை நிமிர்ந்தே போகட்டும். அதற்கு அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி மேல்மாடிகள் கட்டுங்கள் என்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இங்கேதான் என் வழிக்கு வருகிறீர்கள். மேல்மாடி கட்டவேண்டும் என்றால் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தவேண்டும் என்கிறீர்கள். அதற்கு பிரித்துத்தான் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தவேண்டும்.

**திரு. சா. மெய்யப்பன் :** நான் சொல்லுவதெல்லாம் பொதுக்கொள்கையாக, மாடிவீட்டில் இருப்பவனை நீங்கள் கீழே இறக்கவேண்டாம், மாடிவீட்டில் இருப்பவனை மாடியிலேயே இருக்கவிடுங்கள்; கீழே இருப்பவனை மாடி வீட்டுக்குக் கொண்டு செல்லுங்கள் என்று சொல்லுகிறேன். அந்த மாடி வீட்டைக் கட்டித் தருவது யார் என்பதுதான் பிரச்னை. அதற்கு என்ன வழி?

(ஓர் உறுப்பினர் : நீங்களே சொல்லுங்கள்.) நீங்களே சொல்லுங்கள் என குரல் எழும்பி வருவது எனக்கு கேட்கின்றது. சொல்லுகிறேன் வழி. இதுவரையில் நீங்கள் சிந்திக்காமல் இருந்தால் வழியைச் சிந்தியுங்கள். அதற்குத் தான் சொல்லுகிறேன், மக்கள் அவ்வளவு பேரும் சேர்ந்து நிலத்தின் வளத்தைப் பெருக்க, காட்டு நிலங்களை வளமாக ஆக்க அவைகளைக் கொடுங்கள். ஒருவர் உரிமையைப் பறித்து மற்றவர்களிடம் கொடுக்காதீர்கள். என்னுடைய தலைவர் சொல்லியிருக்கிறார், கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதீர்கள் என்று. அந்த மாதிரி செய்தால் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தால் பிரச்னைகள் எழும். பல கட்சிகளில் பல அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்கள் சொல்லுவதெல்லாம் வேத வாக்கு........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உங்கள் கட்சித் தலைவர் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கவேண்டாம் என்று தான் சொல்லியிருக்கிறார். நாங்கள் கடைத்தேங்காயை வாங்கித்தான்

உடைக்கின்றோம். தேங்காயை வாங்கி பிள்ளையாருக்கு உடைப்பது பக்தன் செய்வது. கடையில் தான் வாங்கி உடைக்கவேண்டும். இதில் என்ன தவறு?

**திரு. சா. மெய்யப்பன் :** ஒரு முழுத் தேங்காய் விலை ஒரு ரூபாய். (ஓர் உறுப்பினர் : 40 காசு). சரி 40 காசு என்றால், 40 காசு கொடுத்து வாங்கப்போகிறீர்களா? அல்லது 40 காசுக்கு 5 காசு தான் தருவோம், நாங்கள் சர்க்கார் என்று கேட்கப் போகிறீர்களா? அப்படிக் கேட்டால், அந்த மாதிரி விஷயம் வந்தால் விவாதம் செய்யமாட்டோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எப்படியும் பக்தன் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்துத் தீருவான். வியாபார தந்திரமாக விலையை அதிகமாகச் சொன்னால் அதைக்கண்டு ஏமாறமாட்டான்.

**திரு. சா. மெய்யப்பன் :** தந்திரமாக விலையை அதிகமாகச் சொல்லும் வியாபாரியை நாங்கள் வியாபாரியாகக் கருதுவதில்லை. அவன் கொள்ளைக்காரன் என்று கருதும் கட்சியைச் சேர்ந்தவன் நான். அதே சமயத்தில் நியாயமான விலையை இது அநியாயமான விலை என்று சொல்லி அரசின் அதிகாரத்தை உபயோகப்படுத்தினால் மக்களுடைய பாடு என்ன ஆகும்? அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

நீங்கள் உங்களுடைய ஸ்டேட்மெண்டு ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்வில் கொடுத்திருக்கிற பைனான்ஷியல் ஸ்டேட்மெண்டில் சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் எவ்வளவு நிலம் வரும் என்று தெரியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். எவ்வளவு பணம் கொடுக்கப்படும் என்று தெரியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். சாதுர்யமான வார்த்தைகளைப் போட்டிருக்கிறீர்கள்.

நாங்கள் ஏதாவது சொன்னால் எந்த ஆதாரத்தை வைத்துப் பேசுகிறீர்கள் என்று கேட்கிறீர்கள். ஆகவே நாங்கள் மிகவும் ஜாக்கிரதையாகப் பேசவேண்டியிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் தான் எங்களுக்கு ஆதாரம். எங்களுடைய காதுகள் தான் எங்களுக்கு ஆதாரம். எங்களுடைய மனதுதான் எங்களுக்கு ஆதாரம். உங்களிடத்தில் பல செயலர்கள் புள்ளிவிவரங்களை எடுத்துக்கொடுக்க இருக்கிறார்கள். எங்களுக்கு அப்படி கிடைக்கக்கூடிய காலம் வருவதற்கு இன்னும் எவ்வளவோ ஆண்டுகள் பிடிக்கும். எங்களைப் பொறுத்தவரையில் எந்த ஆதாரத்தைக் கொடுக்கிறோம் என்றால், காதால் கேட்கிற ஆதாரங்களை, எங்கள் மனதில் ஒப்பிட்டுப் பார்த்து நியாயம் என்று நிதானிக்கிறோம். நாங்கள் சொல்லுவது நியாயம் என்பது எப்போதாவது மக்களுக்குப் படட்டும் என்பதுதான். மக்களுக்குப் புரிய எவ்வளவோ ஆண்டுகள் பிடிக்கலாம். எத்தனையோ பேர்கள் சாத்வீக முறையில் சொல்லிச் சொல்லி ஏமாறலாம். ஆனால் நாங்கள் நியாயத்தைச் சொல்லியிருக்கிறோம் என்பது பதிவேட்டில் இருக்கட்டும். அதிலே இருந்தால் போதும். சுதந்திராக் கட்சி என்பது விவசாயியின் தோழனா, அல்லது ஜாலங்கள் செய்பவர்கள் விவசாயிகளின் தோழனா என்பதை உணர காலம் ஆகும் என்று சொல்லிக்கொண்டு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-00. **திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அவைமுன் வந்திருக்கும்படியான நில உச்சவரம்பு திருத்த மசோதாவின் கீழ் என் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவன எல்லாம் கால வகையினாலே, என்று ஆறுமுக நாவலர் நன்னூலில் குறிப்பிட்டிருப்பதாக எனக்கு ஞாபகம். ஆகவே, காலத்திற்கேற்றபடி, மனதிற்கேற்றபடி, நாமோ, சர்க்காரோ திருந்த வேண்டியது இன்றியமையாத காரியமாக



இருக்கிறது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இன்றைக்கு நில உச்ச வரம்பு வேண்டுமா, வேண்டாமா, திருத்தம் கொண்டு வந்தது சரியா, இல்லையா என்ற சட்டப் பிரச்சினை இருந்தாலும்கூட, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினம் சட்ட அமைச்சர் அவர்கள் பேசியபோது, "நாங்கள் மூலச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரவில்லை. நாங்கள் திருத்தச் சட்டமாகவே கொண்டு வந்திருக்கிறோம். அப்படி கோர்ட்டுக்குப் போய் அடிபட்டாலும், இந்தச் திருத்தச் சட்டம்தான் அடிபட்டுப் போகும். ஆனால் காங்கிரஸ்காரர்கள் செய்த பழைய சட்டம்—மூலச் சட்டம்—அப்படியே இருக்கும்" என்று சொன்னார்கள். திருத்தச் சட்டம் அடிபட்டாலும், பழைய சட்டம்—காங்கிரஸ்காரர்கள் செய்த சட்டம்—அப்படியே இருக்கும் என்று இப்போதாவது உணர்ந்தார்களே அதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ்காரர்கள் ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள்தான் எல்லாவற்றையும் செய்து வருகிறோம் என்று சொல்லிவந்த நிலைமை மாறி, அந்த நிலையை உணர்ந்தார்களே, அந்த உணர்வுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்கமுடியாது.

அடுத்தபடியாக, உச்சவரம்புச் சட்டம் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். "ஆசைக்கோர் அளவில்லை" என்ற பழமொழிபோல் ஒவ்வொருவரும் கணக்குப் போட்டுப் பார்த்து, அவர்கள் பாதிக்கப்படுகிறார்களா இல்லையா என்ற கணக்குப் பார்த்தால் இது எதிலே போய் நிற்கும் என்பது தெரியமுடியாது. இந்த நேரத்தில் ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது. நாம் ஒன்றைப் பார்த்தால் மன நிம்மதியுடன் இருக்க வேண்டும். ஒருசில காரியங்களைப் பார்த்து பொறுமைப்படவேண்டும் என்ற அளவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது,

"தம்மின் மெலியாரை நோக்கி தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க
தம்மின் கற்றாரை நோக்கி கருத்தழிக........"

என்று செயல்பட வேண்டுமென்பது ஒரு பாடல். நம்முடைய நிலையை விட்டுவிட்டு, நம்முடைய கீழ்த்தட்டில் இருப்பவர்களைப் பார்த்து, "நாம் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கிறோம், எவ்வளவு சிறந்த நிலையில் இருக்கிறோம், எவ்வளவு நல்ல நிலையில் இருக்கிறோம்" என்று எண்ணுகின்ற மனப்பான்மை இருக்க வேண்டும். இன்னொன்றைப் பார்த்து நாம் பொறாமைப்பட வேண்டும். அதாவது, நம்மைவிட அதிகமாகப் படித்திருக்கிறார்கள், அதிகமாகக் கற்றிருக்கிறார்கள், அவர்களுக்கு முன்னால் நம்முடைய அறிவு என்ன? நாம் அவர்களைப்போல் அதிகமாகக் கற்க வேண்டும் என்று பொறாமைப்பட வேண்டும்.

இந்தமாதிரியான நிலைமைகளையெல்லாம் எடுத்துப் பார்த்து இப்போது கொண்டு வந்திருக்கும் உச்ச வரம்புச் சட்டத்தை ஆதரிப்பதிலே எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. சட்டம் கொண்டுவந்ததிலே, திருத்தம் கொண்டு வந்ததிலே இருக்கும்படியான தகுதி, திறமைகளைப்பற்றிப் பேச விரும்புகிறேன். உச்சவரம்புச் சட்டம் எந்த அளவில், எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் பின்னால் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் இந்தமாதிரியான சட்டம் கொண்டுவருவோம் என்று தேர்தல் வாக்குறுதியிலே சொன்னோம். இப்போது அதைச் செய்திருக்கிறோம் என்று நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

தேர்தல் நேரத்திலே எத்தனையோ வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள், அவற்றை எல்லாமா நிறைவேற்றிவிட்டீர்கள்? ஐந்து ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருப்பவர்களிடம்தான் கொள்முதல் செய்வோம், அதற்குக் கீழே நிலம் வைத்திருப்பவர்களிடத்தில் கொள்முதல் செய்யமாட்டோம்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஏப்ரல் 9

என்று தேர்தல் வாக்குறுதி தந்தீர்களே, அப்படியா இப்பொழுது செய்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லையென்று சொல்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர்கள் இப்படிச் சொன்னால் பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவர நேரிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் ரொம்ப நாளைக்கு மக்களை ஏமாற்ற முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எல்லாவற்றையும் சொல்லிவிடுவது, பிறகு இல்லையென்று மறுத்துவிடுவதா? இவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, பின்னர் இதையும் செய்திருந்தால் சரி என்று சொல்லலாம்.

1967 தேர்தல் விக்ஞாபனத்திலே என்ன சொன்னீர்கள்? "உச்ச வரம்பு சட்டத்திலே இருக்கும்படியான பொத்தல்கள் அடைபடும்" என்று தான் சொன்னீர்கள். 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைப்போம் என்று தேர்தல் வாக்குறுதியில் இருப்பதாக எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது என்ன என்னவோ சொன்னார்கள்? அப்பொழுது சொன்னது எல்லாம் வெறும் ஓட்டுக்கா? அப்பொழுது 30-லே பாதி என்று சொன்னீர்கள்? இந்தக் குறைப்பு அவசியமா? இல்லையா என்ற பிரச்னைபற்றி என் கட்சிக்கு ஆட்சேபணை இல்லை. அவர்கள் வேண்டுமானால் பெருமைப்பட்டுக் கொள்ளட்டும்.

இந்தச் சட்டத்தை அவர்கள் எந்தச் சூழ்நிலையில், எப்படிப்பட்ட நிலைமையில் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இதைச் சட்டபூர்வமாகக் கொண்டுவந்தது மட்டுமல்ல, சட்டம் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைக் கொண்டுவர ஒரு தேதியைக் குறிப்பிட்டார்கள். ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். தேதி குறிப்பிட்டதில் பலப்பல சந்தேகங்கள் வருகின்றன. ஒரு தீர்மானம் அமைச்சரவையில் தீர்மானம் செய்து, பிறகு அதிலே ஒரு தவறு ஏற்பட்டால், ஒரு ரகசியம் வெளியே தெரியுமானால், ரகசியம் வெளியானதற்கு அவர்கள்தான் பொறுப்பு ஏற்கவேண்டும். ஏன் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் கொண்டுவரப்படுகிறது என்பதைப்பற்றி மேல்சபையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**'Why has the date been advanced from February 26, 1970 to February 15, to give effect to the legislation reducing the ceiling on land holdings from 30 to 15 standard acres ?**

**The Law Minister, Mr. S. Madhavan, giving the reason in the Legislative Council, today said the date was changed to February 15, because it was on that day the Cabinet took its decision on this question.**

**The Minister was replying to the point of information raised by Mr. G. Swaminathan.'** கேபினெட்டில் ஒரு டெசிஷன் 15-ம் தேதி எடுக்கப்பட்டது என்று சொன்னால், அதற்குப் பிறகு 24, 25, 26 தேதிகளில் சில மாவட்டங்களில் ரிஜிஸ்தர் ஆவதற்குப் பத்திரங்கள் வந்திருக்கின்றன. சில இடங்களில் பத்திரமே கிடைக்கவில்லை. இதைப்பற்றி நான் கேள்வி போட்டிருந்தேன். சாதாரணமாக ரிஜிஸ்தர் நடந்திருக்கிறது என்றால் பரவாயில்லை. கேபினெட்டில் எடுத்த முடிவு தெரிந்து சிலர் செய்திருக்கிறார்கள். 15-ம் தேதி எடுத்த டெசிஷன்படி, **Now the Cabinet decided to reduce the ceiling** என்று போட்டிருப்பார்களானால் நன்றாக இருந்திருக்கும்.

காபினெட் டெசிஷன் எடுப்பதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. மேல்சபையில் சொல்லிவிட்டு, 26-ம் தேதி அசெம்பிளியில் பட்ஜெட்டில் அனௌன்ஸ் பண்ணவிட்டுச் செய்வதில் அமைச்சரவையிலிருந்து ரகசியம்



1970 ஏப்ரல் 9] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வெளியாகியிருக்கிறது, அதை ஒருசிலர் பயன்படுத்தியிருக்கிறார்கள், பயன்படுத்தியவர்கள் தப்பித்துக்கொண்டார்கள் என்று எண்ண இடம் ஏற்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டிற்கு அமைச்சர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதை உதவி சபாநாயகர் அவர்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் மத்திய அரசிலே அமைச்சராக இருந்தபோது, திரு. ஜி. டி. நாயுடு அவர்களுக்கு ஏதோ "ஆன்ட்டி டேட்" போட்டு, விதிவிலக்கு கொடுத்த காரணத்தால், அவர் அமைச்சர் பதவியையே ராஜினாமா செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்த உச்சவரம்பு எல்லாம் ஒரே குழப்பமயமாக இருக்கிறது. 26-ம் தேதிக்குப் பிறகு ரிஜிஸ்டரான எந்தப் பத்திரமும் செல்லாது என்று சொல்கிறார்கள். சிலர் தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி ரிஜிஸ்தர் செய்திருக்கிறார்கள். இதிலே அமைச்சர்கள்கூட ஈடுபட்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் என்று நான் குறிப்பிடும்போது இந்த அவையிலே இருக்கின்ற அமைச்சர்கள் அல்ல, மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த "ஹோம் மினிஸ்டர்" அவர்கள் ஊருக்கு வந்து மார்ச் மாதத்தில் முதல் வாரத்தில் ரிஜிஸ்தர் பண்ணிவிட்டுப் போயிருக்கிறார். 25 ஏக்கர் அசல் நஞ்சை, ஒவ்வொன்றும் 20 ஆயிரம் ரூபாய்க்குப் போகும்—ரிஜிஸ்தர் பண்ணியிருக்கிறார். இதுமாதிரியான தவறுதல்கள் நடந்திருக்கின்றன. இவர்கள் எல்லாம் முற்போக்கு சக்திகள், என்று சொல்லப்படுவதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவர்களுடைய பாணியில் சொன்னார்கள். இந்த அவையிலே இருக்கின்ற எந்த மந்திரியும் உச்ச வரம்பினால் பாதிக்கக்கூடிய அளவிற்கு நிலம் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. இந்த அவையிலே பேசும் போது கொஞ்சம் ஜாக்கிரதையாகவும், ஆதாரத்தோடும் பேச வேண்டும். எங்கே செய்யப்பட்டது, எப்படி செய்யப்பட்டது என்று குற்றம் சாட்டுகிற நேரத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். திரு. மாரிசாமி அவர்கள் ராஜ்ய சபையிலே, இந்த பேரவை உறுப்பினர்களைப்பற்றித் தவறாகக் குறிப்பிட்டதாக விளக்கம் கோரி நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். அதே போல மத்திய அமைச்சர் அவர்களைப்பற்றிப் பேசுகின்ற நேரத்திலே ஏதாவது உரிமைப் பிரச்சினை எழாதவகையில் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஏதோ அமைச்சர், அமைச்சர் என்று சொல்கிறாரே, இந்த அமைச்சர்களைப் பார்த்துச் சொல்கிறாரா என்று பார்த்தேன். அப்படிப்பட்டவர்கள் யாரையும் இங்கே காணோம். பிறகுதான் அவர் மத்திய அமைச்சர் என்று குறிப்பிட்டார்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். ஒரு அமைச்சர் அல்லது மற்றவரைப் பற்றிக் குற்றம் சாட்டுகிற நேரத்தில் தக்க ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். பொறுப்பான விஷயம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, விஷயத்தை எடுத்துச் சொன்னால்—பாணி—வாணி என்றால் என்ன செய்வது. அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது எந்த பாணியில் சொன்னார்களோ அந்த பாணியில்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய உதவி அமைச்சர் கோயம்புத்தூருக்கு வந்து சப் ரிஜிஸ்திரரை வலியுறுத்தி மார்ச் 9-ஆம் தேதியில் பத்திரப் பதிவு செய்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. எப்படியும் அது அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பிறகுதானே வருகிறது, அது செல்லுபடியாகாதே, எதற்காக சப் ரிஜிஸ்திரரை வலியுறுத்த வேண்டும் என்கிற விவரங்களைச் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை விவரமாகச் சொல்லத்தான் வருகிறேன். அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு செய்கிற பத்திரப் பதிவுகள் செல்லாது என்றாலும், சட்டம் தெரிந்தவர்கள்—இந்தச் சட்டத்தை முறியடிப்பதற்காகவே—இதைப் பொய்யாக்குவதற்காகவே பலர் செய்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த உதாரணத்தைச் சொன்னேன். அரசாங்கம் இதைப்பற்றி விசாரிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பழைய பத்திரத்தில் மார்ச் 9-ம் தேதி அவருக்கு உடந்தையாக சப்ரிஜிஸ்திராரும் இருந்துகொண்டு பழைய தேதியிட்டு தவறாக ரிஜிஸ்தர் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்களா? எதற்காக சப்ரிஜிஸ்திராரை வலியுறுத்த வேண்டும்? விவரமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் விசாரணை செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அவர்கள் எல்லாம் ரொம்ப தீவிரவாதிகள்—ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியிலேயே இருந்தவர்கள். ஸ்டாலின் படத்தை வைத்துக் கல்யாணம் செய்தவர்கள். இப்போது மத்திய உதவி அமைச்சராக இருக்கிற திரு. கே. எஸ். இராமசாமி அவர்களைத் தான் சொல்கிறேன். பாருங்கள், எல்லா பாங்குகளையும் தேசியமாக்கி விட்டோம் என்று சொல்கிற முற்போக்குவாதிகள்.

**திரு. என். சங்கரய்யா :** கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர், ஸ்டாலின் படத்தை வைத்து கல்யாணம் செய்தவர் என்கிறார். இப்போது உள்துறை உதவி அமைச்சராக இருக்கிறார் என்கிறார்..........

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைப்பற்றி நீங்கள் பெருமைப்படுங்களேன். உங்கள் ஆட்கள் எல்லாம் எங்கெல்லாம் ஊடுருவியிருக்கிறார்கள் என்பது தெரியும். ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்தவர்தான்.

**திரு. என். சங்கரய்யா :** காங்கிரஸ் கட்சி பிளவுபடுவதற்கு முன்னால் அவரைப் போற்றிப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். இப்போது பிளவுபட்டவுடன் அவரைப்பற்றி இப்படிப் பேசுகிறார்களா? முன்பு உங்கள் காங்கிரஸ் கட்சிதானே அவரை அரவணைத்துக் கொண்டது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பலருக்கும் சமயத்தில் வாழ்க்கையில் அடிபட்ட பிறகே புத்தி வருவது உண்டு. (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களது பேரைச் சொன்னார்கள். அவர் சொன்ன குற்றச்சாட்டு மார்ச் 9-ஆம் தேதி சப் ரிஜிஸ்திராரை வலியுறுத்தி கட்டாயத்தின் பேரில் பதிவு செய்திருக்கிறார் என்பதாகும். அதற்கு சப் ரிஜிஸ்திரார் உடந்தையாக இருந்தாரா? மார்ச் 9-ஆம் தேதி செய்யப்பட்டது என்றால் செல்லுபடியாகாதே, அப்படியானால் பழைய தேதியில், பழைய பத்திரத்தில் செய்யப்பட்டதா? அதை எல்லாம் ஆதாரத்தோடு சொல்வார்களேயானால் விசாரித்து ஏற்ற நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படி பல தவறுகள் நடந்திருக்கின்றன. எல்லாவற்றையும் விசாரணை செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். யார் யார் பெயரிலேயோ எழுதி வைத்திருக்கலாம். இப்படி எல்லாம் எதற்காக மாற்றம் நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

பிப்ரவரி 15-ஆம் தேதி மந்திரி சபைக் கூட்டம் நடந்திருக்கிறது. அந்த மந்திரி சபைக் கூட்டத்தில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றால் அன்றைக்கே அதை அறிவித்திருக்க வேண்டும். அது இல்லாது 24, 25,



26-லே நான் பல கேள்விகளை சந்தேகத்தின் பேரிலேதான் போட்டேன். அப்படிப் போட்டதனாலே இன்றைக்கு அந்தச் சட்டத்தை 15-ஆம் தேதிமுதலே கொண்டு வந்ததாக திருத்தம் கொடுத்தால் நான் ஜனவரி மாதத்தில் இருந்து என்று கேள்வி போட்டிருந்தால் 1969 டிசம்பர் 31-இல் இருந்து இந்தச் சட்டம் வந்ததாக அறிவித்திருப்பார்களா? இது எனக்காகச் செய்வதா?

ஆக அவர்களுக்கே சந்தேகம். 15-ஆம் தேதி அமைச்சரவையில் செய்யப்பட்ட தீர்மானம் வெளியாகியிருக்கிறது. வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அப்படி வெளிப்படுத்தப்பட்ட காரணத்தினால்தான் பலவிதமான ரிஜிஸ்திரேஷன்கள் ஆகியிருக்கின்றன. இதற்கெல்லாம் பொறுப்பை இந்த அமைச்சரவைதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் அமைச்சர் யார் இரகசியத்தை வெளியிட்டதற்குக் காரணமாக இருந்திருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சார் ஆன் பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் இதுவரை லேசாகப் பேசிக் கொண்டிருந்தார். இப்போது சொல்வது மிகமிகப் பெரிய விஷயம். இந்த மந்திரிசபை மீது குற்றம் சாட்ட அவருக்கு உரிமை உண்டு. அதை மறுக்கவில்லை. ஆனாலும் அவரது உரிமையும் ஒரு வரம்புக்கு உட்பட்டதுதான். எதிர்க்கட்சித் தலைவர் என்பதனாலோ, மன்ற உறுப்பினர் என்பதனாலோ வரம்பு மீறிய உரிமை கிடையாது. அவரது குற்றச்சாட்டு மந்திரி சபையின் முடிவு லீக்கேஜ் ஆகிவிட்டது எனபதாகும். அவரைக் கேட்டுக் கொண்டு அமைச்சராக வரவில்லை. அவர் சொன்னவுடன் வெளியே போகப் போவதும் இல்லை.

நூற்றுக்கணக்கான டாக்குமெண்டுகள் இந்தத் தேதிகளில் ரிஜிஸ்தர் ஆகியிருக்கின்றன. எப்போதும் இயற்கையாக நடக்கக் கூடியவைகள் தான் இவை. உச்சவரம்புச் சட்டத்தினால் ஏற்பட்டவை அல்ல. மசோதாவின் கொள்கையை முறியடிக்க யார் எப்படி ரிஜிஸ்தர் செய்திருந்தாலும், அது செல்லுபடியாகாது என்பதற்காக இந்தச் சட்டத்தில் வகை செய்யப்படும். Provision will be made even with regard to advancing the date என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் தேதிகளில் ரிஜிஸ்தர் ஆன பத்திரங்களைப் பார்க்கிறபோது தூக்கநாயக்கன் பாளையத்தில் அரியண்ணன் என்பவர் 70 ஆயிரத்திற்கு பத்திரப் பதிவு செய்திருக்கிறார். திரு. கருத்திருமன் அவர்கள்தான் தூக்கநாயக்கன் பாளையம் தங்கள் ஊர் என்றார். அரியண்ணன் யார் என்றதற்கு தமது உறவினர் என்று சொன்னார். அப்படியானால் நிதி அமைச்சரோ, முதல் அமைச்சரோ உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவரிடம் சொல்லிவிட்ட காரணத்தினால் அவர் தமது உறவினருக்குச் சொல்லி இதுபோல ரிஜிஸ்தர் ஆகிவிட்டது என்று சொல்லி விட முடியுமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்படிச் சொல்லியிருந்தால் அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இன்னும் கோபிச்செட்டி பாளையத்தில் 24 ஆயிரத்திற்கு நடந்திருக்கிறது. இதைக் குறை என்று சொல்லவில்லை. தற்செயலாகவும் நடந்திருக்கலாம்.

அவர்கள் அமைச்சர்களோ அல்லது மற்றவர்களோ லீக்கேஜ் பண்ணி நடந்திருக்கிறது என்று சொல்வார்களானால், ஆதாரங்களோடு நிரூபிக்கிற வகையிலே இருந்தால் சொல்லலாம். அப்படியில்லாமல் சம்பந்தமில்லாத விஷயத்தைத் தொடர்புபடுத்திப் பேசுவது, குற்றச்சாட்டு வேண்டியவர்

களுக்கு பேவரிடிஸம் காட்டப்பட்டு இருக்கிறது, தாறுமாறாக நடந்திருக்கிறது என்று சில பொறுப்புகளை நாங்கள் சரிவர நிறைவேற்றவில்லை என்ற முறையிலே சொல்வது நானோ அல்லது மற்ற அமைச்சர்களோ ஆளாகிற பெரிய உரிமைப்பற்றிய பிரச்சினையாகும். அவர்கள் இதை மிகச் சாதாரணமாக நினைக்கக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம், ஆதாரமற்ற, அபத்தமான, அபாண்டமான காரியங்களை, கட்டுக் கதைகளை—மன்றத்திற்கு வெளியிலே இருக்கிறவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், இந்த அரசாங்கம் முற்போக்குக் கொள்கையைக் கொண்டு வருவதால் மனம் புழுங்கியவர்கள் அவர்கள் வேண்டுமென்றால் சொல்லலாம்—மக்களிடையே எங்களுக்கு இருக்கிற நல்லெண்ணத்தைத் திசை திருப்புவதற்காக கட்டுக் கதைகளைச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் மிகப் பொறுப்பானவர், ஒன்றை நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன். அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டும், என்னைப் போன்றவர்கள், ஏழை எளியவர்கள் இதுபோன்ற பொறுப்புக்களை வகிக்கக்கூடாது என்று தைரியமாக தாராளமாகச் சொல்லட்டும். அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்கிறார்கள், இங்கே இருக்கிற 200 பேர்களுக்கு சொன்னோம் என்று பொருளா? நான்கு கோடி மக்கள் எங்களைப் போன்ற சாதாரணமானவர்களிடம் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்களே அது பாவம் என்று அவர்கள் தைரியமாகச் சொல்லிவிட்டும். அப்பட்டமான அபாண்டங்களைச் சொல்வதாக இருக்கிறார்கள். ஒன்று அவர்கள் இதை நிரூபிக்க வேண்டும். அவர்களுக்கு இது சாதாரணமான விஷயமாக இருக்கலாம், சிரிப்பாகக்கூட இருக்கலாம். நாங்கள் தமிழ் நாட்டு மக்களோடு 30 ஆண்டுகள் தொடர்பு கொண்டவர்கள், எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது இதிலே லீக்கேஜ் என்று இருந்தால் அதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையென்றால் நான் மிக மரியாதையோடு பணிவோடு வருத்தப்படாமல் கேட்டுக்கொள்வதுஎல்லாம், மன்ற நடவடிக்கையிலிருந்து அவற்றை எடுத்துவிட வேண்டுமென்பது தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மேல் சபையிலே அமைச்சர் அவர்கள் பதிலை வைத்து ஆதாரமாகச் சொல்லியிருக்கிறேன். 15-ஆம் தேதி காபினட் டெஸிஷன் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சட்ட மன்றத்திலே 26-ஆம் தேதி தான் சொல்லியிருக்கிறார்கள்.

**The Hon: Thiru K. A. MMATHI ALAGAN** where has the leakage occurred?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? நான் கேட்டது. எல்லாம் 15-ஆம் தேதி காபினட் டெஸிஷன் ஆகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் தேதியிலே சட்டம் ஏன் முதலிலே கொண்டு வரவில்லை, எங்கே ஆதாரங்கள்? அபாண்டம் அபாண்டம் என்று சொல்கிறார்கள். அபாண்டம் சொல்ல வேண்டுமென்பதில்லை. நாங்களும் பொறுப்புள்ளவர்கள்தான், சாதாரண மக்களிடம் பழகித்தான் வந்திருக்கிறோம். இதிலே சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது. பூராவையும் நான் சொல்லவில்லை. அவர்கள் என்னுடைய உறவினர் என்று எல்லாம் சொன்னார்களே, நான் சொல்ல முடியாதா? டி. பெரியசாமி கவுண்டர் லட்சக்கணக்கான அளவிலே செய்திருக்கிறார்கள், உங்களுடைய நண்பர் என்று சொல்லி நான் குற்றஞ்சாட்டலாம்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்:** பெரியசாமி கவுண்டர் என்று தவறாகச் சொல்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள்** சொல்கிறார்கள், நான் **ஏன் சொல்லக் கூடாது?**





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிய பெரியசாமி கவுண்டர் என்னுடைய நண்பராக இருக்கலாம். கருத்திருமனும் என்னுடைய நண்பர். அவர் தேர்தலிலே நின்று தோற்றுப் போனவர். உடுமலைப்பேட்டையிலே பெரியசாமி கவுண்டர் இருக்கிறார். அவர் யார் என்று திரு. சாதிக் பாட்சா பார்த்துகூட இருக்க மாட்டார்கள். அவரும் 40 ஆயிரம் ரூபாய்க்கு செய்திருக்கிறார்கள். என்னுடைய மனைவியின் ஊரிலே கூட—அமைச்சர் மனைவிக்குச் சொல்லி மனைவி மாமனாருக்குச் சொல்லியிருக்கலாம்— அப்படிச் செய்திருக்கலாம் என்ற அளவுக்கு உங்கள் அரசியல் போனாலும் போகலாம். நான் அதற்கெல்லாம் பயப்படவில்லை. அவர்கள் பொறுப்பு வாய்ந்த இடத்திலே இருக்கிறார்கள். நான் மிகுந்த மரியாதையோடு கேட்டுக் கொள்கிறேன். இதில் கோபம் இல்லை, தாபம் இல்லை. மிகப் பெரிய புரட்சிகரமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம், நாங்கள் ஏழைகளாக இருக்கிறோம். இந்தப் பொறுப்பான பதவிக்கு லாயக்கு இல்லை என்று சொல்லிவிடட்டும். இப்படி பொது வாழ்க்கையிலே ஈடுபட்டுள்ள அவர்கள் இந்தமாதிரியெல்லாம் பேசக் கூடாது. அவை தற்செயலாக இருக்கலாம், அல்லது திட்டமிட்டு இருக்கலாம். திருவாடானையிலே ஒருவர் செய்திருக்கிறார், கரியமாணிக்க அம்பலம் அவர்களோடு போட்டியிட்டுத் தோற்றவர்; அதைப்போன்ற இளையாங்குடியிலே ஒரு பெரியசாமி கவுண்டர் இருக்கிறார், அவர்கள் எல்லாம் சொல்லிக் கொடுத்து உங்களுக்கு அனுபவம் இருக்கலாம், செய்திருக்கலாம். ஆகவே தற்செயலாக நடைபெறுகின்ற சம்பவங்களை அமைச்சர்களோடு தொடர்பு படுத்தக்கூடாது. அப்படி இருக்கிறது என்றால் தஸ்தாவேஜுகளைக் காட்டுங்கள். ஆதாரமில்லாமல் மந்திரிகளாக இருக்கின்ற காரணத்தினால், நாங்களும் சட்ட மன்ற உறுப்பினர்கள்தான், முதலிலே சட்ட மன்ற உறுப்பினர், ஆதாரமில்லாமல் சொல்லக் கூடாது. சொல்லலாம் ஆதாரங்களோடு. சதாரணமாக புகார்கள், வதந்திகள் இவையெல்லாம் மைதானத்திற்குரியவை. சொன்னால் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள், இது கூடாது. பொறுப்பில் உள்ளவர்களிடம் இப்படி பெரிய வீணான பழிகளைச் சொல்லக் கூடாது. இவ்வளவு பெரிய அபாண்டத்தை சொல்லக் கூடாது. ஆயிரக்கணக்கான ரகசியங்கள் இருக்கின்றன, நாட்டு மக்கள் பொறுப்பை எங்களிடத்திலே ஒப்படைத்து இருக்கிறார்கள். அவர்கள் இப்படிச் சொல்வதால் நாங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலிருந்து தவறியிருக்கிறோம் என்று சொல்லுமாதிரிச் சொல்கிறார்கள். ஒருவருடைய நாணயம் என்பது ஒருவர் சொல்வதாலேயே வருவதில்லை, வேண்டியவர் வேண்டாதவர் என்று வருவதில்லை. அமைச்சர் பொறுப்பிலே ரகசியங்களை வெளியேற்ற விட்டார் என்ற முறையிலே பழி சுமத்தக் கூடாது. அதனுடைய தன்மையைத் தெரிந்து சொல்கிறார்களா அல்லது தெரியாமல் சொல்கிறார்களா என்பது தெரியவில்லை. நடந்திருந்தால், ஆதாரமிருந்தால் நாங்கள் நானோ அமைச்சர்களோ எந்த தண்டனைக்கும் பின்வாங்கவில்லை, நாங்கள் பயந்தவர்கள் அல்ல. இதிலே கோபமும் இல்லை, தாபமும் இல்லை. நம்முடைய கடமைகளை நாம் சரிவர நிறைவேற்றுகின்ற வகையிலே நம்முடைய பண்புக்குகந்ததாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்த ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் டாகுமெண்ட்ஸ் இயற்கையாகவும் நடந்திருக்கலாம், தவறாகவும் நடந்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தவறு என்றால் எஸ்டாபிளிஷ் செய்யுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** விசாரணை நடத்துங்கள் என்று நான் ஆலோசனை சொல்லக் கூடாதா? கிடைத்த தகவல்களை வைத்து இப்படி நடந்திருக்கலாம் என்னும்படியாகச் சொன்னேன். இதிலே பைனான்சியல் கமிட்மெண்ட் ஒன்றும் கிடையாது. பூமி மாறுவதுதான்.

வரி போடுவதவாக இருந்தால் இதிலே பைனான்சியல் கமிட்மெண்ட் வரும். இதிலே குற்றஞ்சாட்டுவது என்னவென்றால், தவறுகள் நடந்திருக்கலாம். காபினட் டெஸிஷன் 15-ஆம் தேதி எடுத்திருப்ப தாக அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் சட்ட மன்றத்திலே 26-ஆம் தேதி அறிவித்து இருக்கிறார்கள். சட்ட சபையிலே வந்த அந்த தேதியைப் போட்டிருக்கலாம், ஏன் ஆண்டி-டேட் போட்டார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆண்டி-டேட் போடக் கூடாது, 26-ஆம் தேதிதான் போட வேண்டுமென்று சொல்கிறார்களா?

முற்பகல் 10-30 **திரு. பி. ஜி. கருத்திருமன்:** சிலர் தப்பித்துக் கொள்ளக்கூடும். மேல் சபையில் அமைச்சர் அவர்கள் சொல்லாமலிருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்க முடியாது. 26-ம் தேதி என்று அறிவித்திருக்கிறீர்கள் சட்டமன்றத்தில். சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவதுபோல் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சந்தேகத்திற்கு எள்ளளவும் இடம் இல்லாமல் நடந்து கொள்கிறோம் என்பதற்காகத்தான் அதற்கு அடையாளமாக 15-ம் தேதியிலிருந்து என்று போட்டிருக்கிறோம். எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இன்னும் விரும்புவார்களேயானால், இன்னும் முன்கூட்டியே முன் தேதி போட தயாராயிருக்கிறோம். எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து, இப்படி சிலர் செய்திருக்கக் கூடும், அல்லது செய்திருக்க முடியும். ஆகவே இன்ன தேதி என்று போட வேண்டும் என்று சொல்லுங்கள். அப்படி திருத்தம் கொண்டு வாருங்கள். மாறாக 26-ம் தேதி என்று வைத்துக் கொள்ளவேண்டும், 15-ம் தேதி என்று வைக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். தூக்கநாயக்கன் பாளையத்தில் ஒருவர் ரெஜிஸ்டர் செய்திருக்கிறார். 26-ம் தேதி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் 26-ம் தேதி என்று சொல்கிறார்கள். ஆகவே இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது உள்ளபடியே கவலையாக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஏழைகள் வர வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் ஏழைகள், ஏழைகள் என்று ஏன் எப்போதும் சொல்கிறீர்கள்? காமராஜ் பணக்காரரா? உங்க ளுக்கு உள்ளது கூட அவருக்கு இல்லை. மக்கள் ஆதரவு பெற்றவர்கள் வரட்டும். எப்போது பார்த்தாலும் நாங்கள் ஏழைகள், சாதாரண மக்கள்" என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனக்கு என் பொறாமை?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சந்தேகம் இருந்தால் தாராள மாகச் சொல்லுங்கள். ஒரு ஆண்டுக்கு முன்கூட்டி வேண்டுமானாலும் சொல்லுங்கள். அந்தத் தேதியைப் போடத் தயாராயிருக்கிறோம். காங்கிரஸ் சர்க்கார் 1961-ல் மசோதாவைக் கொண்டு வந்தது. ஆனால் 1960-ல் இருந்து என்று போடப்பட்டது. அப்படிச் செய்தது, ஒரு வருட காலத்தில் லீக்கேஜாகிவிட்டது என்பதற்காகவா? அப்படி ஒரு வருடத்திற்கு முந்திப் போட்டதற்கு, யாரோ பார்த்து வெளியே சொல்லிவிட்டார்கள் என்று சொன்னோமா? அதை பத்து ஆண்டு களாகச் சொல்லிச் சொல்லி, பிறகு வந்ததால் லீக்கேஜ்க்கு எந்த விதமான வாய்ப்பும் இல்லை.

இப்போதும் நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வ தெல்லாம், அவர்கள் குறிப்பிட்ட பெரியசாமி கவுண்டர் 25-2-1970-ல் பதிவு செய்திருக்கிறார்கள், கிட்டத்தட்ட லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்களை. ரெஜிஸ்டர் ஆபீஸில் ரெஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவது தூக்கநாய்க்கன் பாளையத்தில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தொகுதியில் உள்ள ஊரில் அத்தியண்ணன் என்பவர் 70,000 ரூபாய் அளவில் ரெஜிஸ்டர்



செய்திருக்கிறார்கள், 25, 26-ம் தேதியில். ஸீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்று சொல் வார்கள். சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் 15-ம் தேதி என்று போட்டிருக்கிறோம். பெப்ரவரி 1-ம் தேதியிலிருந்து போட வேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்தால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராகயிருக்கிறோம். அந்தளவிற்கு அவர்கள் யோசனை சொன்னால் அரசு சார்பிலேயே திருத்தம் கொண்டு வருவதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம். ஆனால் அவர்கள் 26-ம் தேதி என்றுதான் இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுவதில்தான் எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களுக்கு எதிலும் சந்தேகம்தான். ஆகாத மனைவி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று சொல்வார்கள். அதுபோல்தான் இருக்கிறது இவர்கள் சந்தேகப்படுவது. 1960-ல் இருந்து ஏன் கொண்டு வந்தார்கள் என்றால் சட்ட மன்றத்தில் அப்போது அறிவித்திருக்கிறார்கள் லாண்ட் ஸீலிங் வரும் என்று. அந்த அளவிற்குத்தான் அது அப்படிக் கொண்டுவரப்பட்டது. அறிவிக்காத தேதிக்கு முன் கொண்டுவரப்படவில்லை. அறிவித்த தேதியிலிருந்து கொண்டுவர வேண்டும். யார் ரிஜிஸ்டர் செய்திருந்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அறிவித்த தேதிப்படி 26-ம் தேதி என்று தான் இருக்க வேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. திருச்சியில் சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால், தமிழ்நாடு சர்க்காருக்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவிலிருந்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாகக் குறைக் கும் உத்தேசம் கிடையாது, இதைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன், உறுதி யாகச் சொல்கிறேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். அறிவிக்கவில்லையா? சொல்லவில்லையா? என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்படி கொண்டுவரப் போகிறேன், எல்லாவற்றையும் பிரித்துக் கொள்ளுங்கள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள், முற்போக்கு எண்ணம் படைத்த எந்த அமைச்சரும் அப்படிச் சொல்லமாட்டார்கள். இப்போது உத்தேசம் இல்லை என்று சொன்னேன். அப்படி என்றால் அதை அந்த மாதம் என்றுகூட வைத்துக் கொள்ளலாம். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டுவரப் போகிறோம், உஷார், உஷார், பராக், பராக் என்று எல்லோரும் பிரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் அளவிற்கு நாங்கள் அசடுகள் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்கள் வாய்மையைப் பாராட்டுகிறேன். எவ்வளவு வாய்மை. தெனாலிராமன் கதை ஒன்று சொல்ல ஆசைப் படுகிறேன். ஒருவனிடம் ரூபாய் கொடுத்து மூன்று கட்டு விறகு வாங்கி வரச் சொன்னார்கள். மூன்று நாளாகியும் அவன் வரவில்லை. பின்னர் ஒரு நாள் ஒவ்வொரு குச்சியாக மூன்று கட்டு போட்டுக்கொண்டு வந் தானாம், அதுமாதிரியிருக்கிறது முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது. ஒரு முதல் அமைச்சர், நான்கு கோடி மக்களின் பிரதிநிதியாக இருப்பவர் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவிலிருந்து 15 ஆக குறைக்கும் உத்தேசம் கிடையாது என்று சொல்லிவிட்டு, நான் சொன்ன நேரம் வரை அதுதான், அடுத்த நாளில்தானே செய்தேன், அந்தத் தேதியிலிருந்து இல்லையே என்று சொன்னால் அதில் எவ்வளவு வாய்மை இருக்கிறது? பொது மக்கள் அதை உணர்ந்து கொள்வார்கள். தவறான பாதையில் சென்று, முதலில் ஒன்றை அறிவித்துவிட்டு, பின்னால் வேறு விதமாகச் செய்தால் அதைப்பற்றி பொதுமக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. நாளுக்கு நாள் இதற்கு திருத்தங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. எங்கள் கட்சி சார்பாக இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டும் என்று சொல்கிறோம். பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு ஆராய்ந்து பார்க்க

வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். நிலத்திற்கு உச்சவரம்பு வரட்டும், யார் உற்பத்தியைப் பெருக்குகிறார்களோ அவர்களிடம் நிலம் இருக்க வேண்டும். உற்டத்தியைப் பெருக்குகிறவன் உழவன் மட்டுமல்ல. அதுபற்றி ஆராய்ச்சி செய்து உற்பத்தியை இரண்டு மூன்று மடங்கு பெருக்குகிறார்களோ அவர்களிடமும் நிலம் இருக்க வேண்டும்.

நல்ல முறையில், ஜனநாயக முறையில், நீதியின் அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். நீதி என்றால் இன்று நாட்டில் பலவித கோஷங்கள் எல்லாம் வருகின்றன. நாங்களே போய் ஆக்கிரமித்துக் கொள்கிறோமே, இதற்கு எதற்கு சர்க்கார் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் சிலர். இது எங்கள் பக்கத்திலிருந்து வரும் கூச்சல், கோஷம் அல்ல. உங்களைச் சார்ந்த கூட்டணியில் இருப்பவர்கள் இரண்டு துருவங்களாக இருக்கிறார்கள், ஒன்று வட துருவம், மற்றொன்று தென் துருவம். ஒரு கட்சியினர் இது கூடவே கூடாது, ஆண்டவன் கட்டளைப்படி ஏழை ஏழையாகத்தான் இருக்க வேண்டும், பணக்காரன் பணக்காரனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒரு கட்சி கூறுகிறது. இன்னொரு கட்சி......

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எந்தக் கட்சி அப்படிச் சொல்கிறது? உங்களுக்கு சுதந்திராக் கட்சியின் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது. ஏழைகளும் பணக்காரர்களாகும் விதத்தில் பொருளாதாரத் துறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று தெளிவாக எங்கள் 21 அம்சங்கள் கொண்ட அறிக்கை இருக்கிறது. எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அதை தெரிந்து கொள்ளவில்லை என்றால், நாளை நான் அதைத்தர தயாரா யிருக்கிறேன். ஆகவே அந்தப் பிரசினையை இங்கு இழுக்க வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களுக்குத் தெரிந்த பொருளாதாரத்தை ஆண்டவனால்கூட புரிந்துகொள்ள முடியாது. கருத்திருமன் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? தனிப்பட்ட பொருளாதாரம் அவர்களுடையது. ஆண்டவன் படைத்தது, ஏழைகள், பணக்காரர்கள் அப்டடியே இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட விசித்திரமான பொருளாதாரத்தைக் கொண்டவர்கள்தான் இங்கே எங்களுக்குத் தோழர்களாக இருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகிறீர்களே, ஆனால் அகில இந்திய ரீதியில் அவர்கள் உங்கள் தோழர்களாக இருக்கிறார்கள். அதுகூட செகண்ட் ஓட்டு போட்டு அவர்களை ஆதரித்திருக்கிறீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் முதல் ஓட்டையே போட்டபோது நாங்கள் செகண்ட் ஓட்டுப் போட்டதிலே என்ன தப்பு ? ஐயோ போய் விடுவாரே என்று. எனவே அப்படி உதவியதற்கு நன்றி சொல்ல வேண்டாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆனால், அவர்களுடைய செகண்ட் ஓட்டு இல்லாமலேயே திரு. மாரிசாமி அவர்கள் 24 ஓட்டுகள் வாங்கியிருக்கிறார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் 23 ஓட்டுகள்தான் வாங்கியிருக்கிறார்கள். எனவே, செகண்ட் ஓட்டு இல்லாமல் அவர் வெற்றி பெற்றிருக்க முடியும். ஆனால், அவர்கள் நீங்கள் ஃபர்ஸ்ட் ஓட்டைக் கொடுத்தீர்கள், நாங்கள் செகண்ட் ஓட்டைக் கொடுத்தோம் என்று சொல்லுகிறார்கள், எப்பொழுதுமே நாங்கள் ஃபர்ஸ்ட், நீங்கள் செகண்டிலேயே இருங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுதுதான் இரகசியம் வருகிறது. சுப்பிரமணியத்திடம் என்னென்ன பேசினார் என்று. 23, 24 என்று சொல்லுகிறார்கள். நாங்கள் போடாமலிருந்தால் நிலைமை வெவ்வேறுகப்



போயிருக்கும். ஆகவே, இப்பொழுது நீங்கள் சொன்னதைப்போல், எங்கள் ஓட்டு செகண்ட், உங்கள் ஓட்டு ஃபர்ஸ்ட் என்று சொல்லுவது எப்படியென்றால், கூட்டணி என்று சொல்லிக் கொண்டு, எல்லாக் காரியத்தையும் பார்த்துக்கொண்டு, மிச்சம் மீதி சொச்சம் இருந்ததை கொடுத்திருக்கிறீர்கள். அவர்களுக்கு வெட்கம் இல்லை. எங்கள் ஆதரவு இல்லாமல் வெற்றி என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களுக்கு வெட்கம் இல்லை என்று சொல்கிறீர்களே, யாருக்கு ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களிடத்தில் வாங்கியவர், எங்களிடத்தில் வாங்கியவர்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களின் இந்தப் பொன்னான வாசகத்தை அப்படியே திரு. இராஜாஜி அவர்களின் மலரடிகளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் சமர்ப்பிப்பீர்கள். பிணைத்தலும், பேணிக்கொளலும் என்பது போல் எந்தெந்த இடத்திலே பிரிக்க வேண்டுமோ பிரித்து, எந்தெந்த இடத்திலே சேர்க்க வேண்டுமோ சேர்த்து செய்வதைப் பற்றி வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே, அந்த வழியில் வந்த சிஷ்யகோடிகள் அல்லவா நீங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எப்பொழுதுமே கூட்டணி இருக்க முடியாது. பிரிய வேண்டிய இடத்தில் பிரிந்து, கூட வேண்டிய நேரத்திலே கூட வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எப்பொழுதுமே இப்படி நடத்திக் கொண்டு இருக்காதீர்கள். கூட வேண்டிய சமயத்தில் கூடாது, கூட வேண்டாத சமயத்தில் கூடுவது ஆபத்தானது. எப்பொழுதுமே இந்தத் தந்திரம் நீடிக்காது.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** இந்த சாஸ்திரங்களையெல்லாம் நான் இரகசியமாகப் படித்திருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இராஜாஜியின் சிஷ்யகோடிகள் அல்லவா நீங்கள், அவர்கள் எங்களோடும் இருந்தார், இப்பொழுது உங்களோடும் இருக்கிறார். எங்களையெல்லாம் தொலைத்தார், இப்பொழுது உங்களையும் தொலைத்து விடுவார்.

ஆகவே, ஒரு கட்சிக்காரர் ஒரு துருவம், இன்னொரு கட்சிக்காரர் இன்னொரு துருவம். இவர்கள் கூட்டணியில் இருப்பவர்கள். இது என்ன சர்க்கார் சட்டத்தைச் செய்வது, நாமெல்லோரும் போய் ஆக்கிரமித்துக் கொள்ளலாம். உடனே எல்லாவற்றையும் உழவனுக்கே நிலம் சொந்தம். சட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது, அரசியல் சட்டத்தைச் செய்தவர்களெல்லாம் பணக்காரர்கள் என்று சொல்லுபவர்கள், இவர்களெல்லாம் அரசியல் சட்ட அமைப்பிலே தேர்தலுக்கு வந்து நின்றுவிட்டு வன்முறை இல்லை. நாங்கள் ஜனநாயகத்தில் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படி வருவதோடு மட்டுமல்ல......

**திரு. என். சங்கரய்யா :** இந்த மன்றத்திலே எத்தனையோ முறை விளக்கியாகிவிட்டது. தமிழ்நாட்டில் ஏற்பட்டது ஒரு கூட்டணி அல்ல என்று. தொகுதி உடன்பாடு என்றும், ஒரு திட்டம் அடிப்படையில் ஏற்பட்டது அல்ல என்றும் மேற்கு வங்காளத்தைப் போல், கேரளாவைப் போல் ஐக்கிய முன்னணி ஆட்சி அல்ல, நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறோம் என்றும், கூட்டணியில் இருந்தால் நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்க மாட்டோம், ஆளுங் கட்சியிலே சேர்ந்திருப்போம் என்று எத்தனையோ முறை விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவரவர்கள்

திருப்பித் திருப்பி கூட்டணி, கூட்டணி என்றே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த சந்தேகம் வேண்டியதில்லை. நாங்கள் ஒவ்வொருவரும் சுயேச்சையான தனிக் கட்சி. பிரச்சினையின் அடிப்படையில் ஒன்றுபட முடிந்தால், ஒன்றுபடுகிறோம், மாறுபடும் நிலையில் மாறுபடுகிறோம். இந்தக் கூட்டணி தமிழ்நாட்டிலே இருந்ததுமில்லை. இப்பொழுதும் இல்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வன்முறை, ஜனநாயகம் என்றெல்லாம் பேசினார்கள். சட்டத்திலே பல முறை மீறியது காங்கிரஸ் கட்சி, அந்தக் காலத்திலே தேசீய விடுதலை இயக்கம் நடந்தபொழுது, நாங்களும் அதில் பங்கு கொண்டோம். இப்பொழுது மக்களுக்கு விரோதமாக இன்றிருக்கும் உத்திரவுகளை மீறுவது தவறு அல்ல என்பதுதான் கருத்து. ஆனால் இப்பொழுது அரசியல் சட்டத்தின்படி தேர்தலுக்கு நிற்பதும், தேர்தலுக்கு நின்ற கட்சிகள் கிளர்ச்சிகள் நடத்துவதும், சிறைக்குச் செல்வதும் இந்த நாட்டில் அரசியல் வரலாற்றிற்கு முரண்பாடு அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நேற்றுத்தான் அவர் கட்சியைச் சார்ந்தவர் சொன்னார், பெருந்துறை தேர்தலில் ஆதரித்துப் பேசப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எதிர்க் கட்சி என்று இப்பொழுது சொல்லுகிறார்கள். நேற்று அந்தக் கட்சியைச் சார்ந்தவர் பெருந்துறை தேர்தலுக்குக் கூட........

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு இது கூடப் புரியவில்லை என்பதற்காக வருந்துகிறேன். காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் அங்கே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக எங்கள் கட்சி நிச்சயமாகப் போகிறது, பேசப் போகிறது, ஆதரித்துப் பேசப்போகிறது என்றால், கூட்டணி என்று அர்த்தம் அல்ல. அந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் முரண்பாடான கட்சிகள் முறியடிக்கப்பட வேண்டியது தமிழக அரசியலுக்கு அவசியம் என்று கருதித்தான் போகிறோம். போகப் போகிறோம். இது புரியவில்லை எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு.

**திரு. என். சங்கரய்யா :** பெருந்துறை தொகுதியைப் பொறுத்த வரைக்கும், ஒரு குறிப்பிட்ட தொகுதியை மட்டும் ஆதரிக்கிறோம். நாகர்கோவிலில் எதிர்க்கிறோம். பெருந்துறையிலே அவர்கள் கட்சி நிலை என்ன என்று இன்றைக்காவது அவர்கள் சொல்லுவார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களின் நிலையில்லாத புத்தியைத் தெரிவித்து விட்டார்கள். இங்கே இப்படி, அங்கே அப்படி என்று. நாலாம் தேதி இந்த பீச் கூட்டத்திலே திரு. ஏ. கே. கோபாலன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும் பேசியதை இந்தத் திருக் காதால்தான் கேட்டேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நான் இந்தச் சட்ட மன்றத்திலே அங்கம் வகிக்கும் பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர்; சர்க்காரைப் பற்றியும், வன்முறையைப் பற்றியும் எவ்வளவு கேவலமாக..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்ன சம்பந்தமா ? இதெல்லாம் லேண்ட் ரிபார்ம்ஸில் வருகிறது. யார் இந்த முதலமைச்சர் என்று....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** லேண்ட் என்றால் நிலம், அது ரிபார்ம்ஸில் இதெல்லாம் வரலாம் !

**திரு பி. ஜி. கருத்திருமன் :** லேண்ட் ரிபார்ம்ஸ் பற்றி ஊர்வலம் போனதால் குறிப்பிடுகிறேன். இதெல்லாம் மக்களுக்கு எப்படித் தெரிய முடியும் ? நேற்று கூட முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கூடப் போய்க் கேட்டேன். போய்ப் பார்த்து, கூட்டத்திலேயிருந்து கேட்கும்



பொழுது, அவர்கள் பேசும்படியான பேச்சுக்களைக் கேட்டால் , அரசாங்கம் நடக்கிறதா என்னும்படியான பேச்சுக்கள், எப்படித் தவறாகத் தூண்டப் படுகின்றனர் தெரியுமா ? இவர்கள் சட்டம் செய்தால் அனுமதிக்க மாட்டோம் என்று வெளியிலே சொல்வது, சட்டசபையிலே கேட்டால் இல்லை என்று சொல்வது, கடைசியில் ஆதாரம் கொடுங்கள் என்று சொல்வது, அது மட்டுமல்ல, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். "உலக மக்களே ஒன்றுபடுங்கள்" என்று போட்டு அதில் மேலும் போட்டிருக்கிறார்கள். . . .

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, அவர்கள் வாசிக்கக் கூடியதைத் தங்களிடத்திலே காட்டினார்களா ? வாசிப்பது எது என்று தெரியாமல் வாசிப்பது முறையாகுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்குள்ளே இவர் அவசரப்படுகிறார். இம்மாதிரியான நோட்டீசிலே கம்யூனிஸ்டுகள், அது எந்த ஜாதியோ, வலதோ, இடதோ, நக்சல்பாரி என்று நினைக்கிறேன், தீ. கம்யூனிஸ்டுகள் என்று.......

**திரு. என். சங்கரய்யா:** தீ. கம்யூனிஸ்டுகள் என்றால் தீவிர கம்யூனிஸ்டுகள். நக்சல்பாரி என்று போட்டிருக்கிறார்கள் என்றால், அவர்களைப் பற்றிச் சொல்லுங்கள். ஆனால், இதைக் கொண்டுவந்து மார்க்சிஸ்ட் கட்சியைப் பற்றிச் சொல்லும்பொழுது கூறுவது ஹவுஸை மிஸ்லீட் செய்வதாக ஆகும். அதனால் தவறான அபிப்பிராயங்கள் ஏற்படும்.

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவரவர்களே எந்த ஒரு நோட்டீசையோ அல்லது வேறு பேப்பர்களையோ வாசிக்கும்பொழுது ஹவுசிலே வாசிக்கும் பொழுது அவைத் தலைவரின் அனுமதியில்லாமல் வாசிக்கக் கூடாது. இதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த நோட்டீஸை அவைத் தலைவரிடத்திலும், அதற்கு முன்னாலே என்னிடமும் காட்டியிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவ்வளவு தீவிரமாக நோட்டீசுகளைப் போட்டு, அழகு அச்சகம் என்று போட்டு, சிதம்பரத்தில் விநியோகிக்கப் பட்டிருக்கிறது. இந்த சர்க்கார் அதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏழாவது எட்வர்ட் சிலையில் கொடியைக் கையில் கொடுத்து, மன்னரிடம் போகக் கூடாது என்று சொல்பவர்கள், மிகச் சிரமப்பட்டு, கொடியைக் கையிலே கொடுத்த காட்சியைப் பார்க்கிறோம். எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவர்களுடைய கட்சி.......

**திரு. என். சங்கரய்யா :** அரசரிடம் போகக் கூடாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அரசரின் சிலை இந்த நல்ல காரியத்திற்காகப் பயன் பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதிலே திரு. சங்கரய்யா அவர்கள் சொல்வதை எற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், வைக்கப்பட்டிருக்கும் சிலைகளுக்கு மதிப்புத் தருவது, கௌரவம் தருவது நம்முடைய கடமையாகும். ஒரு கிளர்ச்சி நடக்கின்ற நேரத்திலே, நீங்கள் போய் ஏழாவது எட்வார்ட் சிலையில் ஒரு செங்கொடியை வைத்தால், பிறகு இன்னொரு கட்சியினர் இன்னொரு கொடியை வைப்பார்கள், இப்படியே போனால், பிறகு கொடிதான் தெரியுமே தவிர, சிலை மறைந்துவிடும்.

அது மட்டுமல்ல, அந்தச் சிலையிலே கொடியை நட்டது தங்களுக்கு உடன்பாடு அல்ல என்று திரு. சங்கரய்யா அவர்கள் சொல்லியிருந்தால் உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன். திட்டமிட்டு தலைவர்களே

சொல்லி அப்படிச் செய்திருக்க மாட்டார்கள், தொண்டர்கள் செய்திருப்பார்கள். எனவே, யாரோ தொண்டர்கள் செய்திருப்பார்கள், அப்படிச் செய்தது சரியல்ல. அதை நாபகள் கவனிக்கவில்லை என்று சொல்லியிருக்க வேண்டுமே தவிர, அப்படி வைத்தது சரி என்று வாதாடுவது சரியல்ல.

**திரு. என். சங்கரய்யா :** நாங்கள் அப்படிச் செய்யவில்லை. திட்டம் போட்டுச் செய்யவில்லை. அப்படி வைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் வந்துவிட்டது. அதை அவர்கள் ஏதோ எடுத்து பெரிதுபடுத்திப் பேசிய காரணத்தினால்தான் நான் இதைச் சொல்ல வேண்டி வந்தது.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** போட்டோ வந்திருக்கிறது. அண்ணா துரை சிலையில் கூட நாளைக்கு ஒரு கொடியைக் கட்டிவிடுவார்கள். பிறகு அவர்கள் அந்தக் கட்சியில் சேர்ந்துவிட்டார்களோ என்று பயப்பட வேண்டியதாக இருக்கும். மாசு கற்பிக்கிற நிலையில் மகாத்மா காந்தி சிலையில் கூட கொடியைக் கட்டிவிடலாம். கட்சிசார்பில் இருக்கக் கூடிய விஷயங்கள் கொடியை ஏந்திக்கொண்டு போவதில் ஆட்சேபணை கிடையாது. வன்முறையைத் தூண்டக் கூடிய நிலை ஏற்படும் இது மாதிரி செய்தால்.

சமீபத்தில் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் காட்டினேன். இது ஒரு போஸ்டர். இதை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

> " சீனாவிலே ஓர் யேனான் ; வங்கத்திலே ஓர் நக்சல்பாரி ; பீஹாரிலே ஒரு முஷாகரி ; ஆந்திரத்திலே ஓர் சீகாகுளம் ; தமிழகத்தில்.. ........ ?"

இது மாதிரி வன்முறை செயலின் மூலம், வன்முறையின் மூலம்தான் இந்த நிலச் சீர்திருத்தத்தை நாம் கொண்டுவர முடியும் என்று சொல்வார்களேயானால், இந்த சர்க்கார் அது பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

தி.மு.க. சர்க்கார் நாங்கள்தான் இதைக் கொண்டு வந்தோம் என்ற பெருமையை எடுத்துக்கொள்ளட்டும். 30 ஏக்கரை 15 ஏக்கராவாகக் குறைத்தது இந்த சர்க்கார்தான், இந்த சர்க்கார்தான் அதற்கன சட்டத்தைக் கொண்டு வந்தது என்ற பெருமையை எடுத்துக் கொள்ளட்டும். அதில் எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது. இப்படிப்பட்ட நிலையிலே என்னுடைய காங்கிரஸ் கட்சி சார்பாக நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். ஏழைகளுக்கு பூமி கொடுக்க வேண்டும் என்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் ஆதரிக்கிறோம். சட்டத்தைப் பண்ணி அதை அமல் நடத்துகிற நேரத்தில், ஜனநாயக முறையில், வன்முறை இல்லாத நிலையில் அதை அமல் நடத்த வேண்டும்.

எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி, தி.மு.க. சர்க்காராக இருந்தாலும் சரி, வன்முறை இருக்கக் கூடாது. இப்பொழுது நம் நாட்டில் போகக் கூடிய போக்கு வன்முறை அல்லது ஆக்கிரமிப்பு, நீங்கள் போய் ஆக்கிரமிப்பு செய்துகொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறது. அந்த நிலையைத் தடுக்க வேண்டும். அந்த நிலையில் போய்க்கொண்டிருந்தால், " மைட் இஸ் ரைட் " என்ற அளவில், யார் சக்தி உள்ளவர்களோ அவர்கள் எடுத்துக் கொள்வார்கள், யார் சக்தி இல்லாதவர்களோ அவர்கள் தள்ளப்படுவார்கள். சக்தி இல்லாதவர்களுக்கு, உரிமை உள்ளவர்களுக்குத் ஜனநாயக முறையில் பயன்படத்தக்க வகையில் சட்டத்தை அமல் நடத்த வேண்டும். எல்லோரும் அமைதியான முறையில் வாழவேண்டும் என்ற நிலையில் சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும்.



இந்த நிலையில் சர்க்கார் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கூட்டணியில் இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். தேர்தலில் ஆதரவு கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். தேர்தலில் ஆதரவு என்றால் என்ன தெரியுமா ? சில பேர்கள் விரோதமாக இருப்பதைவிட, சிநேகமாக இருந்து உங்களைப் பதம் பார்க்க திட்டம் போடுவார்கள். நண்பர்களில் இருவகை உண்டு. உண்மையான நண்பர்களும் உண்டு. கூடச் சேர்ந்து கெடுக்கும் நண்பர்களும் உண்டு. ஆகவேதான் இந்தச் சமயத்தில் சர்க்காரை எச்சரிக்கிறேன். தாங்கள் அமைச்சர் அவையிலே இருக்க மாட்டோம் என்று சொன்னார்கள். வங்காளத்தில் என்ன நடந்தது ? முதல் அமைச்சர் அங்கே பட்ட பாடு என்ன ? அவர்கள் அங்கே உண்ணா விரதம் இருக்கக்கூடிய நேரத்தில் கூட, அவர் பேரில் கல் எறியப்பட்டதைப் பார்த்தோம்..........

**திரு. என். சங்கரய்யா :** தமிழ் நாடு விஷயத்தில், கூடஇருந்து ஆதரிப்பவர்கள் கெடுப்பார்கள் என்று சொல்லுகிறார். தி.மு.க.வோ, நாங்களோ, யாரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்ளவில்லை. சில அம்சங்களில் கருத்து ஒற்றுமையில் ஒன்றுபடுகிறோம். மற்ற விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் அப்படிப்பட்ட பிரச்சினைகளில் சர்ச்சைகள் நடக்கின்றன. கூட இருந்து கெடுப்பது என்ற பேச்சே இல்லை. நாங்கள் அவர்கள் கூட இல்லை. அரசாங்கத்திலே இல்லை. அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு ஏற்பாட்டிலும் இல்லை. ஒரு நேரத்தில் ஒன்று சொல்வார்கள், அவர்கள் கூட இருந்து ஒழிக்கப் பார்க்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இரண்டும் தவறு.

நான் தெளிவாகச் சொல்லுகிறேன். எந்தப் பிரச்சினையும், மக்களுக்கு அது நன்மை பயக்கும் எங்களுக்குத் தோன்றினால், அந்தப் பிரச்சினையில் நாங்கள் அரசாங்கத்தை ஆதரிக்கிறோம். எங்களுடைய அபிப்ராயத்தில் அரசாங்கத்தின் கொள்கை தவறு என்று படுமேயானால், அதைப்பற்றி விமர்சனம் செய்கிறோம். யார் உண்மையான நண்பர், எதிர்க்கட்சித் தலைவர் உண்மையான நண்பரா என்பது தி.மு.க. புரிந்துகொள்ளவேண்டும். எனக்கு அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

**திரு. பி.ஜி. கருத்திருமன் :** நான் அவர்களுக்கு உண்மையாக நண்பரா, இல்லையா என்பது வேறு விஷயம். என்னை நண்பர் என்று எடுத்துக்கொண்டிருக்கிறாரா, இல்லையா என்பது வேறு விஷயம். அது போகப் போகத் தெரியும். நீங்கள் வந்து இங்கே டபிள் கேம் ப்ளே பண்ணாதீர்கள். இரட்டை வேஷம் போடாதீர்கள்.......

**திரு. என். சங்கரய்யா :** ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். ஒரு கட்சியைப் பற்றி டபிள் கேம் ப்ளே பண்ணுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது முறையல்ல. அதை அவர்கள் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதை நடவடிக்கை குறிப்பிலிருந்து எடுத்து விட வேண்டும். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் பொதுவாகச் சொல்லுவது இன்ஸினுவேஷன் ஆகிறது. அதை வாபஸ் பெறவேண்டும். தாங்கள் அதுபற்றி தீர்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, அதாவது இரண்டுவிதமான கொள்கை இருக்கும்படியான நிலையில், டபிள் கேம் என்று சொன்னேன். தப்பு அபிப்ராயத்தோடு சொல்லவில்லை. ஒரு சமயத்தில் ஆதரிக்கிறேன் என்று சொல்வது, ஒரு சமயத்தில் எதிர்க்கிறேன் என்று சொல்வது, ஒரு சமயத்தில் அதைப் பண்ணுவேன் என்று சொல்லுவது, இதைப் பண்ணுவேன் என்று சொல்லுவது, ஒரு சமயத்தில் முற்றிலும் துறந்த சன்னியாசி என்று சொல்லுவது, ஒரு சமயத்தில் வீரத்தோடு இருப்பேன் என்று சொல்வது............(ஆரவாரம்)

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட அருமையான நடிப்புக் காட்சிகளை படம் எடுக்க ஒரு நாளைக்கு செய்தித் துறையிலிருந்து ஒருவரை உள்ளே அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (ஆரவாரம்).

**திரு கொ. இர. ஞானசம்பந்தம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, தெளிவாக எங்கள் கட்சிக் கொள்கை என்னவென்பதை கூறிவிட்டோம். தி. மு. க. வோடு தேர்தல் உடன்பாடு என்பதைப்பற்றி எங்கள் தலைவர் விளக்கி விட்டார். இதை எதிர்க்கட்சி தலைவர் திருப்பிவிட்டு, தன்னுடைய கருத்துக்கு ஏற்ற விதத்தில் பேசவேண்டும் என்ற முறையில், டபிள் ஆக்ட் என்று கூறுகிறார்கள். நிச்சயம் சொல்லுகிறேன். டபிள் ஆக்ட் என்று கூறுவது, வேண்டுமென்றே எங்கள் கட்சியை இழிவுபடுத்தக்கூடிய நோக்கத்தோடு கூறுவதால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும், அல்லது, அம்மாதிரி வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது.என்று சபை நடவடிக்கை குறிப்பிலிருந்து அவைகளை எடுத்து விடவேண்டும். அது பற்றி தாங்கள் தீர்ப்பு கூறவேண்டும். தெளிவாக ஒப்புக்கொண்ட அறிவித்த ஒரு கொள்கை இருக்கும்பொழுது, வேண்டுமென்றே இழிவுபடுத்துவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அப்படிப் பேசியதை நீங்கள் அனுமதிப்பது சபையின் மரபுக்கு நல்லது அல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படிப் பேசுவதில் ஒன்றும் தவறில்லை.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் சாமர்த்தியமாக இருக்கிறார்கள் என்று சொன்னால் கூட அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. நவரசம் இருக்கிறது. நவ ஆக்ட்கள் இருக்கின்றன. டபிள் கேம் என்பது மோஸ்டு பார்லிமெண்ட்ரி டேர்ம். ஏன் அவர்கள் தவறாக நினைக்கவேண்டும் ? அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பற்றி நான் சொல்லுகிறேன். அவர்களுடைய திறமையை நான் புகழ்கிறேன். இதெல்லாம் மக்களுக்கு நன்மையாக இருக்க வேண்டும், மக்களை ஏமாற்றுவதாக இருக்கக்கூடாது. மக்களுடைய அமைதியைப் போக்குவதாக இருக்குமானால், சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

அமைதியான முறையில் சட்டம் கொண்டு வாருங்கள். நாமெல்லாம் மக்களெல்லாம் அமைதியான முறையில் அனுமதிக்கவேண்டும். வன்முறை இருக்கக்கூடாது. ஜனநாயகத்தின் அடிப்படையில் கான்ஸ்டிட்யூஷனை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் ஆகவேதான் இதற்கு சில திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். சர்க்காரும் சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவசர அவசரமாக ஒரு வாரத்திற்குள் இவ்வளவு திருத்தங்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நிலை இருக்கும்படியான காரணத்தினால், இதை கொஞ்சம் நிதானமாக பரிசீலனை செய்யவேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் சில சமயங்களில் சில குறிப்புகளைக் கொடுத்தார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். கேரளாவில் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர் முதல் அமைச்சராக இருந்த சமயத்தில் அங்கே இருக்கக் கூடிய சலுகைகள்தான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் சொன்னால் மட்டும் அது வேதவாக்கா, வேறு யார் சொன்னாலும் அது ரொம்ப மோசமா ?



**திரு என். சங்கரய்யா :** நான் நேற்றே குறிப்பிட்டேன். திரும்பவும் நான் இன்றைக்கு அவர்களிடம் விளக்கம் கேட்க விரும்புகிறேன். கேரளாவில் வந்திருக்கக்கூடிய சட்டம் என்னவென்றால், நிலம் யாருடைய பொசெஷனில் இருக்கிறதோ, அவர்களிடமிருந்து அது மடத்திற்கு சொந்தமாக இருந்தாலும் சரி, நிலப்பிரபுவுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அதை அவர்கள் ரெஸ்யூம் பண்ண முடியாது. வேண்டுமானால் பர்சேஸ் ப்ரைஸ் வாங்கிக்கொள்ளலாம் தங்களுடைய நிலத்தை அரசாங்கத்திடம் வெஸ்டு செய்துவிடவேண்டும். டென்லிபீபினுக்கு Possession உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது அங்கே. அங்கே கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய சட்டத்திற்கும், இங்கே உள்ள சட்டத்திற்கும் அடிப்படை வித்தியாசங்கள் இருக்கின்றன. எந்தக் காரணத்தைக்கொண்டும் ஒரு குடும்பத்திற்கு 20 எக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது. அங்கே நிலத்தை நிலப்பிரபுக்கள் ரெஸ்யூம் செய்ய முடியாது. டெனன்ஸ்ட்ஸுக்கு முழு உரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. இங்கே அதைத் தான் சொன்னேன். அதில் என்ன தவறு இருக்கிறது ? ............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றுதான் விளக்கம் கொடுத்ததாக ஒத்துக் கொள்கிறீர்களே. இப்பொழுது மறுபடியும் வேண்டாம். முற்பக 11-00

**திரு பி. ஜி. கருத்திருமன் :** சர்க்கார் • கொண்டு வரும்போது மற்ற மாநிலச்சட்டங்களைப பார்த்துச் செய்வதற்காக என்னுடைய பாராட்டுதலைச் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது. பல சட்டங்களில் அவரவர்கள், எழுதி வைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறது. அதற்குப் பின்னால் " ரெஸ்யூம் " பண்ணக் கூடாது என்ற கேரள சட்டத்தில் இருப்பதாக ஞாபகம். இங்கேயும் ரெஸ்யூம் பண்ண முடியாது. அதே மாதிரி கேரளாவில் ஒரு எக்கர் "பெப்பர்" போட்டால், அது இங்குள்ள 30 எக்கர் வருமானத்திற்குச் சமம். கேரளாவின் ஒரு எக்கர் இங்குள்ள 6, 8 எக்கருக்குச் சமமாக இருக்கும், உயர்ந்த நிலத்திற்கு அங்கே 15 எக்கர் என்றால், இங்குள்ள 60, 70 எக்கருக்குச் சமமாக இருக்கும். விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்து, நியாயம், சமூக நீதி ஏற்படவேண்டும் என்ற அடிப்படையில் நில உச்சவரம்புச் சட்டத்தைக் காங்கிரஸ் சர்க்கார் அப்பொழுது இருந்த சர்க்கார் கொண்டு வந்தார்கள். அதை இந்த சர்க்கார் 15 எக்கருக்குக் குறைத்திருக்கிறது. வேறு மாறுதல் இல்லை என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். எதிர் காலத்தில் இவைகளையெல்லாம் பார்த்துக் கொள்ளலாம் என்று விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒரே நாளில் இப்படிச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, கஷ்டங்கள் இருக்கும் என்பதை என் கட்சியில் சார்பின் சொல்லுகிறேன். செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, வெகு சீக்கிரத்தில் ஒரு "காம்ப்ரஹென்சிவ் பில்"லாக கொண்டு வரலாம், ஒரே காலத்தில் பார்த்துச் செய்ய வேண்டியவற்றையெல்லாம் ஒன்றாகச் செய்ய வேண்டும் என்பது மிக அவசியம் என்கிற ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். ஆகவே, இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, எல்லோரும் உட்கார்ந்து ஆலோசனை செய்து, மேல்சபை உறுப்பினர்களும், நாமும், அட்வகேட்-ஜெனரல், இன்னும் ரெவின்யூ செக்ரடரி, லா செக்ரடரி எல்லோரும் உட்கார்ந்து, ஒரு வாரம் சென்னையிலேயேஉட்கார்ந்து செய்யலாம். ஊர் ஊராகப் போய்க் பார்க்க வேண்டும் என்கிற அவசியம் கூட இல்லை. ஆகவே, நான் சொல்வதெல்லாம் கொண்டு வரும்படியான சட்டம் ஓட்டை உடைசல் இல்லாமல் எல்லோருக்கும் நல்ல சட்டமாகக் கொண்டு வர வேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன். இப்படிச் சட்டத்தைக் கொண்டு வருவதில் பெருமைப்படுகிறேன். . " செய்வன திருந்தச் செய் " என்பார்கள்,

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்பது போல, இழுக்கு இல்லாமல், பழுது இல்லாமல் நல்ல சட்டமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, அந்த நிலையில் சர்க்காருக்கு உதவிசெய்வதில், எதிர்க்கட்சியில் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆகவே தயவு செய்து இந்த மசோதாவை நல்ல முறையில் ஆராய்வதற்காகப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, சட்டமாக வருமேயானால், அது நல்ல முறையில் அமையும், சர்க்காருக்கும் பெருமையாக இருக்கும் என்பதை எதிர்க் கட்சியின் சார்பில் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டதாகவும் இருக்கும் என்று கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** :பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் நடைபெற்ற இந்தப் பொது விவாதத்திற்குப் பதில் அளிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் மட்டுந்தான் சொல்வதற்கு இங்கே நின்றுகொண்டு இருக்கிறேன்.

பின்னால் திருத்தங்கள் வரும்போது, அந்த அந்த வாதத்திற்கும், நான் கொண்டு வருகின்ற திருத்தங்கள் பற்றியும் விளக்கங்களை அப்பொழுது சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த இரண்டு நாள் விவாதத்திலேயும், மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல வகையிலே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது எனக்கு ஆனந்தம் தருகிறது. அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு நான் சார்ந்திருக்கும் கட்சிக்கோ எனக்கோ உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். சிலவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கலாம். சிலவற்றைக் காலங்கடந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைகள் இருக்கலாம் ; ஆனால் பொதுவாக எந்த ஒரு நோக்கத்தோடு இந்தச் சட்டம் இந்த மாமன்றத்தில் முன்னால் இருக்கிறதோ அதில் நல்ல விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. சிந்தனையைத் தூண்டியிருக்கிறது, கருத்துக்களை உந்தியிருக்கிறது என்பது தெளிவு.

இந்த மாமன்றத்தில், நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த மூன்று ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளில், மாமன்ற உறுப்பினர்கள் மிகுந்த அக்கறையோடு, கவனத்தோடு—மற்றவைகளிலும் இருந்திருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை—ஆனால் இந்த ஒரு காரியத்தில் நம்முடைய மேம்பாட்டிற்காக, மக்கள் நலனுக்காக, அக்கறையோடு நடந்து கொண்டதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய இந்தப் பதில் உரையில், சில அடிப்படை, பொது அம்சங்களைப் பற்றியும், சில கருத்துக்களையும் கூறலாம் என்றிருக்கிறேன். அரசின் கருத்தையும், நான் சார்ந்திருக்கும் கட்சியின் நோக்கத்தையும், நானும் சட்ட அமைச்சர் அவர்களும் அவ்வப்பொழுது விவரங்களைச் சொல்லலாம் என்று, மிக முக்கியமான பொது அம்சங்களைப் பற்றிமட்டும், மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக இன்றைக்கு நாட்டிலே ஒரு எழுச்சி இருக்கிறது. காலக் குறி அது. காலம் மாறுகிறது. முன்னாலே இருந்தது என்று ஒன்றை ஏற்றுக் கொள்ள முடியாது ; நெடுநாட்களாக இருக்கிறது என்று தள்ளிவிடவும் முடியாது. இன்றைக்கு சமுதாயத்தில் ஒரு பரபரப்பு, அப்படிப்பட்ட சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தி, முன்னேற்றம், இல்லாதவனுக்கும், இருப்பவனுக்கும் இடையே உள்ள தாரதம்மியத்தைத் தகர்த்து எறிவது போன்ற சித்தாந்தங்களில் ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது. காகிதப்பூ வேலை



செய்வது இல்லை. எந்த ஒரு பெரிய சீர்திருத்தமானாலும், பொருளாதாரச் சீர்திருத்தமானாலும், வேறு எதுவாக இருந்தாலும், மக்களின் மனப் பக்குவத்தை, அவர்களுடைய ஆயிரக்கணக்கான உணர்வுகளை, அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரசாங்கம் நடந்து கொண்டால்தான், நிலைத்திருக்க முடியும் , இல்லையென்றால், அது செத்து ஒழிந்து விடும், புறக்கணிக்கப்படும் என்பதில் சந்தேகமேயில்லை.

நிலச் சீர்திருத்தமாகட்டும் வேறு எந்தச் சீர்திருத்தமாகட்டும், எந்த மக்களுடைய நலனுக்காக நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோமோ, எவர்களுடைய துயர்களை துன்பங்களைப் போக்க ஈடு பட்டிருக்கிறோமோ, அதற்கு உகந்த முறையில் அமைய வேண்டும். இன்றைக்குக் கொண்டு வந்திருக்கும், பெரிய புரட்சிகரமான திட்டத்திற்கு நான் உரிமை பாராட்டிக் கொள்ளவில்லை. இந்தச் சீர்திருத்தத்திலே சகல காரியங்களும் நிறைவேறிவிடும் என்பதில்லை. ஆனாலும் அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி சொன்னது போல், எத்தனை பேர்களுக்கு நிலம் கிடைத்துவிடப்போகிறது என்றார்கள், அது போல இல்லாதவனுக்கும் இருப்பவனுக்கும் இடையே உள்ள தாரதம்மியம் ஒழிந்துவிடும் என்று சொல்லவில்லை. ஒழித்துவிடப் போவதில்லை என்பதை வணக்கமாகச் சொல்லுகிறேன். ஆனாலும் போராட்டம் நடைபெறுகிறது. இல்லாதவனுக்காக இருக்கும் கட்சி இன்றைக்கு பொறுப்புக்கு வந்திருக்கிறது. அதனால் முடிந்த மட்டும், முயற்சிகளை, ஆயத்தங்களை அந்த அந்தக் கால கட்டத்தில் செய்யும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நேற்று அவர்கள் பேசியதைக் கேட்டபோது, நான் கல்லூரி நாட்களில், ஐரோப்பிய நாட்டில், பிரெஞ்சு கோமான்கள், நிலப் பிரபுக்கள் இவர்களைப் பற்றிப் படித்தது போல், அந்தத் தொனி தென்பட்டது. அவர்கள், "எங்களுக்கு நிலம் இருக்கட்டும், ஏழை பாழைகளுக்கு வேண்டும் என்றால் மாடு கொடுங்கள்" என்றார்கள். அவருடைய சிந்தனை அது. தவறு என்று சொல்லவில்லை. சீன நாட்டுக் குடியானவன் மாடு ஒன்று இறக்க, குடியானவன் மகனை இன்னொரு மாட்டிற்குப் பதிலாக ஏர் இழுக்கட்டும் என்று சீன நாட்டுச் சீமான், நிலப் பிரபு கூறியதாக அந்த நாட்டு கவிஞன் வடித்திருந்தான். அதுதான் 1970-ம் ஆண்டு இங்கே நாம் உட்கார்ந்து கொண்டு கேட்கிறோம்.

"கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதா" என்று சொன்னார்கள். வழிப் பிள்ளையார் இல்லை, இந்த நாட்டின் விவசாயிகள். அந்தக் கடைத் தேங்காயை வளர்க்க, தங்கள் உயிரைத் தந்தவர்கள் அவர்கள். சேற்றிலேயும், சகதியிலேயும், ஆண்டு ஆண்டு காலமாக உழைத்தவன் ; அந்த உழவன் பேச ஆரம்பித்தால், எத்தனையோ கதையினைச் சொல்லக் கூடும்.

இன்றைக்கு வந்திருக்கும் நிலச் சீர்திருத்தத்தின் விளைவாக, அங்கேயிருக்கும் நண்பருக்குக் கூட ஒரு எண்ணம், இவ்வளவு புரட்சிகரமாக இருக்கிறதே, அவர்களுக்கே கிராக்கி இல்லாமல் போய்விடுமோ என்று. நான் கொஞ்சம் கூட தவறு என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா கூடச் சொன்னார்கள். அவருக்குக் கூட கோபம். என்ன போட்டிருக்கிறது இந்த மசோதாவில் ? இதற்கு முன்னால் ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனால் இருக்கின்ற டிஸ்பாரிடி (disparity) போகவில்லை. நிலங்கள் சிலரிடத்தில் குவிந்திருப்பதை இன்னும் பரவலாக்கவேண்டும் "The concentration of lands in fewer hands" இருப்பதால் அதற்காக "it is a further step in land reform" என்று

போட்டிருக்கிறது. எல்லோருக்கும் நிலம் கொடுப்பது என்பதில்லை. நிலம் கிடைக்காமல் போய்விடட்டும். அதைப் பற்றி கவலைப் படமாட்டேன். சில பேரிடத்தில் நிலங்கள் குவியக்கூடாது.

நிலம் என்பது சொத்துக்கள் அல்ல. நிலம் என்பது உற்பத்திச் சாதனம் இன்ஸ்ட்ருமெண்ட் ஆப் ப்ரொடக்ஷன் (instrument of produetion). ஏதோ 4,000 ரூபாய் விலை மதிப்பு உள்ளது என்பதல்ல. உற்பத்தி சாதனம். அந்த உற்பத்திச் சாதனங்கள் நாட்டு உடைமையாக இருக்கவேண்டும். உற்பத்திச் சாதனங்கள் சகலருக்கும், எந்தவிதமான தாரதம்யம் இல்லாமல் நாட்டு மக்களுக்குப் பொதுவாக வேண்டும் என்ற சமதர்ம சித்தாந்தத்தை நோக்கி நடைபோடுகின்ற காலத்தில் இந்த அரசுக்கு அதிகப் பொறுப்பு உண்டு.

இன்றைக்கு இந்தத் திருத்தத்தின் மூலமாக ஒரு சிறு முயற்சியைத் தான் செய்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அடக்கத்தோடு சொன்னார்கள். எங்களுக்குத் தகுந்ததை நாங்கள் செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை ஒரு வெற்றி என்றால் வைத்துக்கொள்ளுங்கள். அப்படி ஏற்றுக்கொள்ள விருப்பம் இல்லை என்றால் விட்டுவிடுங்கள்.

இந்த மசோதாவின் மீது எவ்வளவோ கருத்துக்களை இங்கே நாம் கேட்டோம். மாண்புமிகு அங்கத்தினர்களின் சிந்தனையை இந்த மசோதா கிளறியிருக்கிறது. நமது மாண்புமிகு அங்கத்தினர்கள் திரு. சங்கரய்யா, எங்கள் ஊரைச் சார்ந்த திரு. கிருஷ்ணசாமி கவுண்டர், மற்றும் திரு. சீமைச்சாமி ஆகியவர்கள் பேசிய பேச்சைப் பார்த்தால் இதெல்லாம் நிலப்பிரபுக்களுக்கு, நிலச் சொந்தக்காரர்களுக்கு அனுகூலமான சட்டம் என்று யாராவது இங்கே மன்றத்திற்கு வராமல் இருப்பவர்கள் கருதுவார்கள் ? பொதுவாக இதனுடைய அர்த்தம் நிலக்குவியல் இருக்கக்கூடாது, நிலக்குவியல் உடைபடுகிறது என்றுதான் பொருள். இரண்டாவதாக இந்த உற்பத்திச் சாதனங்களைப் பெருக்குகின்றோம். மூன்றாவதாக நான் இன்றைக்கு தைரியமாகச் சொல்லுகிறேன். இந்த சட்டத்தால் எவ்வளவு நிலம் கிடைக்கும் என்ற பெருமைக்குப் போகவேண்டியதில்லை. இந்தச் சட்டம் இல்லாமலேயே நான் ரெவின்யூ அமைச்சராக ஆனபிறகு $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கராக்கள் புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான்கூட கொஞ்சம் ஏமாந்துவிட்டேன். எங்களுடைய அதிகாரிகளின் சாமார்த்தியத்தை சற்றுக் குறைவாக மதிப்புப் போட்டு விட்டேன். இந்த வருடம் 1 லட்சம் ஏக்கர் கொடுங்கள் என்று சொன்னால், ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ஏக்கர் கொடுத்திருக்கிறார்கள். இது வரையில் $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் கொடுத்தாகிவிட்டது. இந்த நாட்டில் நாம் எவ்வளவோ பொருளாதார மாற்றத்தை விரும்புகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. பொ. சிவஞானம் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். அனுபவம் முதிர்ந்த வார்த்தைகளில் சொன்னார்கள். பண்டைக் காலத்திலேயே பட்டா என்பதில்லை. பட்டா இருப்பவர்கள் என்றால், அந்தப் பட்டாக்கள் நிரந்தரமானவையல்ல என்று சொன்னார்கள். யார் காலத்தில் வந்தது ? சிவகங்கை ராஜாக்கள், இராமனாதபுரம் ராஜாக்கள், சேத்தூர் ஜமீந்தார்கள், இன்னும் இருக்கிற பெரியவர்கள் எல்லாம் களத்துமேட்டில் பாடுபட்டு, நிலத்தில் உழுது உரிமையாளர்கள் ஆனார்களா என்று அவர்கள் நன்றாகக் கேட்டார்கள். பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் இன்றைக்கு நிலமற்றவர்கள் இருக்கிறார்கள். நாம் சமதர்ம சமுதாயத்தை நிறுவ ஆசைப்படுகிறோம். அதற்கான முயற்சிகள் இல்லாதவர்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் ஏற்படக்கூடாது. எந்த மாதிரியான சட்டமும் நமக்குப் பலன் அளிக்கப் போவதில்லை என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. அதுதான் முக்கிய அம்சமாகும்.



சமதர்ம சமுதாயத்தை அமைக்கத்தான் இருக்கிறோம் என்ற நமது உறுதியை, துணிவை, திட்டவட்டமான எண்ணத்தை, நம்மை யார் ஆளுபவர்கள் என்று ஏற்றுக் கொண்டார்களோ அந்தப் பிரதிநிதிகள் உள்ளத்தில் பதிய வைக்கும்படியான பெரு முயற்சிதான் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம். இதுதான் அதன் அடிப்படை அம்சம். சமதர்ம சமுதாயம் என்று சொல்லிக்கொண்டு, ஒரு பக்கம் ஏழை, அவனுக்குப் பக்கத்தில் மிராசுதார்கள், அவர்களுடைய பங்களாக்கள், நாய்க்குட்டிகள், பளபளப்பான கார்கள் என்றிருந்தால், ஏழை களத்துமேட்டையும் கூலியையும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்றால், சமதர்ம சமுதாயம் என்பது சாதாரண வர்ண சாலங்கள், வார்த்தைக் குவியல்கள் என்றுதான் ஏற்படும்.

அதுமட்டுமல்ல ; மாண்புமிகு திரு. சிவஞானம் அவர்கள் இங்கே ஒரு எச்சரிக்கையைத் தெரிவித்தார்கள். இங்கே பேசிய எதிர்கட்சித் தலைவர்களும் சொன்னார்கள். சமுதாயத்தில் எவ்வளவோ இக்கட்டான உணர்வுகள் பீரிடுகின்றன. இந்த நிலைமையில் மக்கள் ஏமாந்திருக்கின்ற நேரத்தில், புலி வேஷம் போடுகின்றார்கள். அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்ற சூழ்நிலை இருந்தால், ஏழையாக இருக்கின்ற மக்கள் எழுந்துவிட்டால் சமுதாய அமைதி இருக்காது என்றார்கள். அந்த சமுதாய அமைதி ஓங்க, பரபரப்பைக் குறைக்க வேண்டும் என்றுதான் இந்தச் சட்டம் இன்றைக்கு வருகிறது. இவைகளைத் தாமதப்படுத்தக் கூடாது. நான் இவைகள் இன்றைக்கே கூட வரவேண்டும் என்று சொல்லுவதற்குக் காரணம், ஏற்கனவே 61-ம் ஆண்டிலிருந்து இதுவரை அவகாசம் இருந்திருக்கிறது. இன்னுமா அவகாசம் தேவை ? என்ன பெரிய சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம் ? 30 ஏக்கராவிலிருந்து 15 ஏக்கராவாகக் குறைத்திருக்கிறோம். இதற்கே கஷ்டப்படுகிறார்கள் ; வருத்தப்படுகிறார்கள். அதிலும் எடுக்கப்படும் நிலங்களுக்கு மார்க்கெட் மதிப்பு கொடுக்கப்பட வேண்டுமா, சாதாரண மதிப்பு கொடுக்கப்பட வேண்டுமா என்று ராஜப்பாளையத்தாருக்குக் கவலை. வியர்வையைக் கொட்டி, உழைப்பைக் கொடுத்து, வாழ்க்கையைக் கொடுத்த கோடிக்கணக்கானவர்கள் நிலம் இல்லாமல் வெளியே இருக்கிறார்கள். ஆகவே நாம் யாருக்காக பேசுகிறோம் என்பதும் இதில் முக்கியமான அம்சமாகும்.

இந்த மாறுதல்களை நாம் தாமதப்படுத்தக் கூடாது. அவைகள் தவிர்க்கப்படக் கூடாது. அவைகள் தவிர்க்கப்படுமானால், எதிரே இருக்கிற உங்களுக்கு மட்டுமல்ல, இங்கே இருக்கிற எங்களுக்கும், ஊரில் உலகத்தில் இருக்கின்ற எல்லோருக்கும் நாம் தவறான காரியத்தைச் செய்து, எங்கும் அமைதியின்மை, குழப்பம் என்ற நிலை ஏற்படும். இதைச் சமூக நீதி ( Social Justice ) என்று "காங்கோ" கட்சித் தலைவர் அவர்கள்—"காங்கோ" கட்சி என்று பத்திரிகையில் அழைக்கிறார்கள்—சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்தக் காரியத்துக்காகத்தான் இன்றைக்கு இந்தச் சட்டம் வருகிறது. வாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த அரசைப் பொறுத்த வரையில் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் இந்த நோக்கத்தை நிறைவேற்றப் பல்வேறு சட்டங்களை மேற்கொண்டிருக்கிறது.

நான் சுருக்கமாக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டம் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிலச் சீர்த்திருத்தத்தின் பல அம்சங்களில் ஒன்றாகத் தான் இந்த உச்ச வரம்பு குறைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாங்கள் பொறுப்பு ஏற்ற பிறகு, கீழ்த்தஞ்சை வாய்க்கால்களில் ரத்தம் ஓடுகிறது, வைக்கோல் டோர்களில் தீப்பொறி பறக்கிறது என்று எல்லாம் பத்திரிகைகளில் எழுதினார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சரின் சாமர்த்தியத்தால், சமாளிக்கின்ற திறமையினால், ரத்தக் களறியாக இருக்கிறது என்று சொல்லப்பட்ட கீழ்த்தஞ்சையில் இன்றைக்கு மரகதக் கம்பளங்களை விரித்தாற் போன்ற அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்